13

ஸ்ரீ

ஸ்ரீ பக்த விஜயத்துள் ஒன்றாகிய

ஸ்ரீமத்-துக்காராம்

ஸ்வாமிகள் சரித்திரம்.

ஸ்ரீ ஹரிநாம ஸ்தோத்திரப்பா

ஸங்கீர்த்தனம்.

வேலூர்
ஜவுளி-கரூர். இராமகிருஷ்ண முதலியார் குமாரர்,
கரூர். மு. ரு. நாராயணசாமி முதலியாரவர்களால்
வெளியிடப்பட்டன.

இதன் விலை ரூபா 2-0-0.

10919

உ 10919.

[illegible].

மாசிலாமணி தேசிக

ர. சண்முகம்.

திருப்பனந்தாள்

24. 3. 63

இன்று [illegible]

பணி [illegible]

[illegible]

[illegible]

பதவியோ என்ன கேட்டேன்

இருவரும் கேட்டு மகிழ்ந்து

[illegible] தந்தான் கேட்டேன்

வாழ்க [illegible] —


கோஷ்டிகள், குருகாஸ்வாமிகள்.
கோஷ்டிகள்.

ஸ்ரீ
ஸ்ரீமத்துக்காராம்ஸ்வாமிகள் திருவடிகளேசரணம்.

ஸ்ரீபக்தவிஜயத்துள் ஒன்ருகிய

ஸ்ரீமத்- துக்காராம்

ஸ்வாமிகள் சரித்திரம்.

ஸ்ரீஹரிநாம ஸ்தோத்திரப்பா,

ஸங்கீர்த்தனம்.

இவை,
வேலூர்
ஜவுளி கருர் முநிஸ்வாமி முதலியாரவர்களால்
மஹாராஷ்டிரபாஷையினின்று
தமிழில் வசனரூபமாக மொழிபெயர்த்தியற்றப்பட்டு,
ஸங்ககிரி புரமு
குருஸ்வாமிநாயுடவர்களாலும்
ஸ்ரீலோகரஞ்சனி பத்திரிகாசிரியர்
சி. கோ. அப்புமுதலியாரவர்களாலும்
திருத்தப்பட்டன.

திரு. வி. உலகநாதமுதலியாரவர்களால்
முன்பதிப்பித்தபிரதிக்கிணங்கப்
பரிசோதிக்கப்பட்டு,
மேற்படி கறர் முநிஸ்வாமி முதலியாரவர்கள் குமாரர்
ம-஗-஗-ஸ்ரீ,
ஜவுளி கருர் இராமகிருஷ்ணமுதலியார் குமாரர் ஜவுளி
கருர் நாராயணசாமி முதலியார் அவர்களால்
வெளியிடப்பட்டன.

நான்காம்பதிப்பு.

PRINTED AT THE VICTORIA PRESS,
VELLORE.

1930.
REGISTERED COPY-RIGHT.

விலை ரூபா.—2 தபாற்கூலி அணு ௫.

ஸ்ரீ

விஞ்ஞாபனம்.

அருமணி கொழிக்கும் பெருநீர் வைப்பின்கண் விளங்கும் நவதீவினுட்பெருமை பொருந்திய இந்நாவலந்தீவின் உத்தரதிக்குப் பாரிசந்தன்னில், ஆஸ்ரித பக்தவத்ஸலனாகிய ஸ்ரீமத்பாண்டுரங்கப் பெருங்கடவுளினது அடிமலர் துவண்டு, அந்தமில் பேரின்ப நாட்டை யாண்ட ஸ்ரீமத் பகவத்தாஸ சிரேஷ்டர்கள், எம்போலிய பக்தசேதனர்களுய்யும் வண்ணம், ஜகதீசனாகிய எம்பெருமான் கீர்த்தியையும், அவனது அடியார்களின் கீர்த்தியையும், வெள்ளென அநுஷ்டித்து உணர்த்திக்காட்ட அவதரித் தெழுந்தருளிய பக்த விஜயர்களின் சரித்திர கர்ணாமிர்த பிரபாவங்களை, வடதேச பக்த சிரோமணிகளா யெழுந்தருளியிருந்த ஸ்ரீமந் - நாபாஜிதாஸ ஸ்வாமிகள் அபாரவார கருணைகொண்டு குவாலர் பாஷையில் கரதலாமலகம்போற் கடைந் தீந்தருளினர். அவை அக்குவாலதேயத்தாரன்றி, மற்றையத்தேயத்தார் படனஞ்செய்து அநுஷ்டிக்கக் கூடாமையையுணர்ந்த ஸ்ரீ பகவத் பிரீதியடைந் தெழுந்தருளியிருந்த ஸ்ரீமத மகிபதிதாஸ ஸ்வாமிகள் கிருபைகூர்ந்து மகாராஷ்டிர பாஷையில் சுருக்கமாகத் திரட்டி யருள்வாராயினர். அப்பக்தவிஜய சரித்திரங்களினுள் ஒன்றாகிய, ஸ்ரீமத் பாண்டுரங்கப் பெருமான் பிரத்தியக்ஷ சேவிதராயும், பரம பாகவத சிகாமணிகளாயு மெழுந்தருளியிருந்த ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகள் விஜய : திவ்வியசரித்திரத்தை, மஹாராஷ்டிர பாஷாஜ்ஞாநிகளாகிய பெங்களூர் சின்னப்பேட்டையில் ஸ்ரீமத விடோபா காலக்ஷேப பராராயெழுந்தருளியிருக்கும் சிங்காடே அனந்தப்பா அவர்கள், வேலூர் ஜாதவ, அநுமந்தராவு அவர்கள் இவர்கள் முன்னிலையில் முற்றும் சிற்றறிவினை யுடையேனாகிய அடியேன், தக்ஷிண இந்துதேசத் தமிழ் நாட்டார் யாவரும் தெள்ளிதினுணரவேண்டி தமிழ்நடையில் மொழிபெயர்த்து, ஸ்ரீமான்களாகிய வேலூர் உபாத்தியாயர் திருவேங்கட முதலியாரவர்கள், 28-வது பட்டாளம் பிஞ்சன், சுபேதார், சுப்பராய முதலியாரவர்கள், 27-வது பட்டாளம் ஸ்கூல் மாஸ்டர் இராமஸ்வாமி நாயுடவர்கள் இவர்கள் வேண்டுகோளிதற்பொருட்டு, ஸ்ரீமான்களாகிய சென்னை சிந்தாதரிப்பேட்டை ஜவுளி பெருமாள் முதலியாரவர்கள் புத்திரர்களாகிய பேஎக்ஜாமினர்ஸ் ஆபீஸ் சின்னப்பா முதலியாரவர்கள், ஜவுளி முருகேச முதலியார் அவர்கள், கமிசேரியேட் எக்ஜாமினர்ஸ் ஆபீஸ் பத்பநாப முதலியாரவர்கள் இவர்கள் நன்முயற்சியால் அச்சிற்பதிப்பித்தனன்.

விதேயன்,

வே[illegible]ர்-ஜவுளி-கரூர்-முனிஸ்வாமி முதலியார்.

ஸ்ரீ

அறிக்கை.

இந்தத் துக்காராம் ஸ்வாமிகள் சரித்திரக் கிரந்தம் வேண்டுபவர் பிரதி ஒன்றுக்கு ரூபாய் (2-0-0) இரண்டு கொடுத்து அடியிற் குறித்தவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தபாற்கூலி அணு 3.

ஒரேகாலத்தில் மொத்தமாக 10 புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு ஒரு புத்தகம் இனாமாகத் தரப்படும்.

ஜவுளி - கரூர் - மு. இராமகிருஷ்ண முதலியார்,
வேலூர்.

ஸ்ரீ

ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகள் சரித்திர

விஷய சூசிகை.

பக்கம்.

அணகடசா பக்கீர் சிந்தாமணி தேவரிடம் யாசித்தல் ... 323
அணகடசா பக்கீர் துக்காராமர் குமார்த்தியிடம் யாசித்து துக்காராமரைச் சேவித்தல் 323
புணு அதிகாரி துக்காராமருக்கு அடிமையாதல் 422
அம்மாபாயிக்குப் பகவான் உத்தரகிரியை முடித்தல் 41
அம்மாபாயின் பிள்ளைகள் முடிவைப் பகவான் சொற்பனத் திற் கூறல் 29
அம்மாபாய் சொற்பனத்தைப் பிள்ளைகளுக்குரைத்தல் 30
அம்மாபாய் தன் பக்திநிலை கூறல் 23
அம்மாபாய் பிள்ளைகளுக்குப் புத்தி கூறல் 24
அவமானப்படுத்த எண்ணியபிராமணஸ்திரீ துன்பமடைதல். 395
ஆகாயவாணி யுரையின்படி துக்காராமர் வைகுந்தபுரம் சென் றதை யெழுதி வைத்தல் 465
ஆக்கிரதாசருக்குப் பகவான் சேவை சாதித்தல் 10
ஆத்மாவை ராமனென்று போதிக்கவந்த அந்தணனை அடிமை கொள்ளல் 388
ஆரணியத்தில் துக்காராமர் தேகத்தை வால்கொசுக்கள் கடிக் கப் பண்டரிநாதன் வேடனுய்வந்து காத்தல் 244
இரங்கநாதன் படேலுக்குச் சொப்பன காக்ஷி தரல் 167
இராமநாமத்தால் பிரமராக்ஷசியைத் துரத்தல் 369
இராமானந்தசுவாமிகள், நாபாஜிதாஸர் இவர்கள் வரன்முறை யுரைத்தல் 8
இராமேஸ்வர பட்டருக்குப் பகவான் புத்திகூறல் ... 364
இராமேஸ்வர பட்டன் துக்காராமரைக் கிராமம் விட்டேகச் செய்தல் 295
இராமேஸ்வர பட்டன் பக்கிரியால் சாபம் பெற்றது 307
இருப்புக்காரையை மறையோனுக்குத் தங்கமாக்கி யீதல் 360
இருப்புத் துண்டுகளை ஜோகிக்குத் தங்கமாக்கிக் கொடுத்தல். 391
இறந்த பிள்ளையை யெழுப்பித் தரல்.... 394
ஈயப் பொதிகளை வெள்ளியாக்கினது 334
ஊமைப் பிள்ளையை பஜிக்கச் செய்தல் 362

பக்கம்.

கங்கை துக்காராமர் கீர்த்தனையைப்பெற்று பொற்காசுதந்தது 425
கருடாழ்வான் பகவானளித்த நிரூபத்தை துக்காராமரிடமளித்தல் 374
கபாசேட்டுக்கும் பாகவத கோஷ்டியாருக்கும் துக்காராமர் காக்ஷி தந்தது 472
கள்வர் துக்காராமருடைய மாடுகளைக் கொண்டுபோக பகவான் மீட்டுவந்தது 228
காசியாத்திரை புரிந்த மறையோன் துக்காராமரிடம் பொய்யுரைத்துத் துக்கித்தல் 428
காலக்ஷேப கூட்டத்தில் துக்காராமர் தேக ரூபம் சோதி ரூபமாய் நிற்றல் 431
கானயாவாகிய தம்பி புலம்பல் 467
காஞோபாவுக்குச் சுவாமி சேவை சாதித்தல் 144
கீரைக்காயால் ஊமைப் பிராமணனைப் பேசவைத்தல் 353
சர்ப்பத்தாலிறந்தவனைத் துக்காராமர் எழுப்புதல் 326
சன்னிதானத்தில் துக்காராமர் புகுந்து தனது ஆர்த்தியைப் பகவானுக்குத் தெரிவித்தல் 393
சன்னியாசிகளுக்குத் துக்காராமர் சங்குசக்கர தாரியாய் காக்ஷி தரல் 414
சன்னியாசிகளைத் தண்டிக்க வேண்டாமென்று அதிகாரிக்குத் தெரிவித்தாண்டல் 415
சிந்தாமணிதாசர் முதலாகிய பரிஜனங்களுக்குத் துக்காராமர் கற்பகத்தரு, காமதேனு இவைகளைப்போல் சாமக்கிரிகையளித்தல் 358
சிந்தாமணி தேவருக்குத் துக்காராமர் தன் குணநிலையை யறிவித்தல் 442
சிவபிரான் துக்காராமரிடம் புசித்தல் 366
சிவபிரான் துக்காராமரைப் பஜனையில் ஆலிங்கனஞ்செய்தல் 409
சிவாஜி ராஜனும் அதிகாரியும் வர்த்தகாளும் விடைபெறல் ... 423
சிவாஜி ராஜனனுப்பிய குதிரையைத் திருப்பிவிடல் 340
சிவாஜி ராஜனடிமையாகுதல் 341
சிவாஜி ராஜனுக்கு நீதியுரைத்து சிம்மாசன மேறச்செய்தல் 347
சிவாஜி ராஜனுக்குப் புத்திர பாக்கியமும் நித்திய அப்பமும் ஈந்தது 354
சிவாஜி ராஜன் ஜீஜா அம்மாளைச் சேவித்தல் 470

பக்கம்.
ஜலத்தில் துக்காராமருடைய கவிகள் மிதந்து வருதல் ... 310
ஜனங்களுக்குத் தன் மனோபாவத்தைத் தெரிவித்துப் பரம பதஞ் செல்ல உத்தரவு கேட்டல் 460
ஜன்ம கர்மியானவன் கடூர தபஞ்செய்தும் பலனை யிழத்தல் 285
ஜீஜாபாய் காலில் தைத்த முள்ளை பகவான் வாங்கல் 175
ஜீஜாபாய் பகவானுக்குப் பாலூட்டல் 238
ஜீஜாபாய் பகவானை நிந்தித்தல் 171
ஜீஜாபடைத்த வுணவை பகவானும், பிராட்டியு முண்ணல் 383
ஜீஜாபாய் துக்கித்தல் 463
ஜீஜாபாய் புருடனுக்குப் பிரமாணஞ் செய்து கொடுத்தல் 262
ஜீஜாபாய் கல்லேந்தி பகவான் பாதத்தை நறுக்க வருதல் 271
தந்தை மொழிப்படி துக்காராமர் வர்த்தகத்திற் குடன்படல் 62
தன்னையகியை அழைத்துவரத் துக்காராமர் திட்டஞ்செய்தல் 460
தன்னைக் கடித்த நாய்க்குப் பரமபதம் கடாக்ஷித்தல் 361
துக்காராமரும் அவர் தம்பியும் பாகப் பிரிவு செய்தல் 147
துக்காராமரைச் சேவித்த பிராமண ஸ்திரீயின்பேரில் சுவரு விழாமல் காத்தல் 293
துக்காராமரைச் சேவித்த மறையோன் இம்மை சுகமும் மறுமை சுகமும் பெற்றது 287
துக்காராமர் அசுத்த விடத்தில் பஜித்ததைப் பற்றிய பெருமையுரைத்தல் 190
துக்காராமர் கனகாபாய் கெர்ப்பத்தி லுதித்தல் ... 53
துக்காராமர் சன்னிதானம் கட்டல் 166
துக்காராமர் சோளக் கொல்லையைக் காத்தல் 153
துக்காராம் செய்த கவிகள் யாவையும் பிரவாகத்தில் விடல் 298
துக்காராமர் தனது குமார்த்திகளுக்கு மணமுடித்தல் ... 284
துக்காராமர் தன் தேகத்தை அறுத்துக் காட்ட வெண்பஞ்சாயிருப்பதை யறிந்த மறையோன் வந்தனம் புரிதல் ... 442
துக்காராம் பருவதத்தின் மீதிலேறி துதிக்க பாண்டுரங்கன் ஆதரித்தல் 139
துக்காராமர் பிரம்ம சாதனை கூறல் 148
துக்காராமர் பிள்ளைக்கு நோய் வந்ததைப்பற்றி ஜீஜாபாய் பண்டரிநாதனை பிச்சுவாவினுல் குத்த வருதல் 245
துக்காராமர் பேரால் அன்ன வஸ்திர மளித்தல் 469
துக்காராமர் மனைவி கடன் பெற்று புருடனிட மளித்தல் ... 116
துக்காராமரும் மனைவிகளும் ஜீவனத்தைப்பற்றி யோசித்தல் 103

பக்கம்.
துக்காராமர் மிளகா வர்த்தகம் செய்தல் 88
துக்காராமர் வனத்திலிருக்க கண்ணன் வழியாளாக வருதல் 84
துக்காராமர், விநாயகர், பாண்டுரங்கர் இம்மூவரும் பிராமண பந்தியில் புசித்தல் 276
தேவர்கள் துக்காராமர் கடைசி காலக்ஷேபத்தில் வந்திருத்தல் 457
நாபாஜி தாசர் தன்னாசாரியருடன் வார்த்தையாடுதல் 10
பகவானிடம் துக்காராமர் வைராக்கியஞ் செய்து இருத்தல் 304
பகவானுடன் துக்காராமர் கோதுமை சுவைகொண்டு வந்து புசித்தல்... 208
பகவானும் அம்மாபாயும் வார்த்தையாடுதல் 34
பகவானும் பிராட்டியும் துக்காராமரின் க்ஷேமம் விசாரிக்க வருதல் 378
பகவானும் ருக்மணி பிராட்டியும் அம்மாபாயிக்கு 12-வருடம் சிசுரூஷை செய்தல் 36
பகவான் ஜீஜா கூடையில் அறுவித பதார்த்த முண்டாக்கி பக்தருட னுண்ண, தேவர்கள் வாழ்த்துதல் 182
பகவான் துக்காராமருக்கு ஆசாரியனாய் வருதல் 256
பகவான் துக்காராமருக்குச் சுரங் கண்டதைப்பற்றி கருடாழ்வானை அனுப்புதல் 370
பகவான் துக்காராமருக்குப் பாடும்படியான கிருபை புரிதல் 215
பகவான் வேடம்பூண்டு துக்காராமர் பிதுர்க்கடனை நடத்தல் 204
பஜனைக் கூட்டத்தார் வைராக்கியஞ் செய்ய துக்காராமருடைய வஸ்திரமும் தாளமும் ஆகாய மார்க்கமாய் சபையில் வந்தது 468
பஜனையிலிருந்த மறையோனுக்குக் காசி யாத்திரைக்காக ஒரு காசு தந்தது 423
பஜனையில் சிவாஜி ராஜனைக் குதிரைவீரர் வளைத்ததைப் பகவான் வீரரைத் துரத்தல் 419
பட்டருக்குத் துக்காராமர் ஆசீர்வாதத்தால் சாபம் நீங்கல்.... 314
பண்டரிநாதன் ஜீஜாபாய் வாங்கிய கடனுக்குப் பொருளளித்தல் 121
பக்ஷிகள் துக்கா தேகத்தில் சஞ்சரித்தல் 437
பாண்டுரங்கரை விடோபாவென்னும் பிள்ளை துதித்தல் 44
பாண்டுரங்கனும் சிவபிரானும் துக்காராமர்கூட புசித்தல் ... 97
பாண்டுரங்கன் துக்காராமர் சேவகனாக பணம் வசூல் செய்தல் 91

பக்கம்.

பாலைக்காய்த்துச் சுடவூட்டிய ஜீஜாபாயைப்பற்றி துக்காராம ரிடம் பண்டரிநாதன் முறையிடல் 241
பிரயோசனமில்லாத ஜலத்தைப் பிரயோசனப்படுத்தல் 388
பிராட்டியார் ஜீஜாபாய்க்குச் சேலைதால் 196
பிராமணஸ்திரீக்கு எண்ணெய் வாங்கிக்கொடுத்தல் ... 200
பிராமணன் துக்காராமரை முள்தடியாலடித்தல்... 221
புனு துளபவனத்தில் துக்காராமர் பசனை செய்தல் ... 404
புனுவதிகாரி துக்காராமரை வரச்செய்தல் 401
புனுவிற்குத் துக்காராமர் கோஷ்டிகளுடன் புறப்படல் 402
புஷ்பக்காரனைத் துக்காராமர் சகோதரனென்னல்.... 350
புஷ்பகவிமானத்தைச் சந்தைஜனங்கள் தரிசித்தல் 463
பொருளுக்காக தபமியற்றிவந்த பிராமணனுக்குப் பரிசவேதி அளித்தல் 329
போஜனகாலத்தில் தீபத்திற்கு எண்ணெயில்லை யென்று விய சனமுற்ற மறையோனுக்கு எண்ணெ யுண்டாக்கினது. 390
போலோபா பக்திக்ரங்கி திரிமூர்த்திகள் தோன்றல்.... 48
மருமகனுக்குத் துக்காராமர் கீதையை வாசிக்கவுரைத்தல் .. 363
மனைவிக்குத் துக்காராமர் நிராசை தத்துவமுரைத்தல் ... 265
மனைவிவஸ்திரத்தைத் துக்காராமர் பிராமணஸ்திரீக்கு தானஞ் செய்தல் .... ••• 194
ருக்மணிப்பிராட்டியும் கண்ணனும் தேவுகிராமத்தில் பூமியி லிருந்து அர்ச்சாவதாரர்களாய் வருதல் 18
ருக்மணிப்பிராட்டி கிரகம்வந்ததைக்குறித்து போலோபா பக்தி சோகமடைதல் 57
ருக்மணிப்பிராட்டி துக்காராமரைத் தொட்டிலிட்டு நாமகரண மிடல் 56
வர்த்தகாள் அஞ்ஞானபக்தி கூறல் 73
வளையல்காரன் துக்காராமரை நிந்தித்து அடிமைபூண்டது.... 332
விஸ்வநாதர் துக்காராமர் கீர்த்தனைகளைக்கேட்டு ஆனந்திக்க, ஆகாயவாசிகள் புஷ்பமாரிபெய்தல் 427
விஷ்வம்பரருக்கும் பகவானுக்கும் தத்துவவாக்குவாதம் 15
விஸ்வம்பரர் பரமபதம் பெறல் 21
விஷமூட்டிய ஸ்திரீயை துக்காராமர் காத்தல் 335
விரகவிருப்பங் கொண்டுவந்த ஸ்திரீயை விலக்கல்.... ... 327
வெல்லம்விற்ற தொகையைப் பிராமணனுக்குத் தானமளித்தல்.120

பக்கம்.

வைகுந்தபதி துக்காராமரை அழைத்துவர யோசித்தல் ... 456
வைகுந்தபதி நித்தியசூரிகளோடு ஆலோசித்தல் 49
வைகுந்தபதி நித்தியசூரிகளுடன் தேவுநகர்வந்து ஸ்ரீலக்ஷ்மிதேவியால் துக்காராமரைப் பூசித்தல் 453
வைகுந்தபுரம் வாருமென்று பகவான் துக்காராமரை அழைத்தல் 457
ஸ்ரீபாதசன்னியாசிகள் அதிகாரியிடம் துக்காராமர்பேரில் குற்றங்கூறல்.... 396

ஆ சரித்திரம் - 133

ஸ்ரீ

ஸ்ரீஹரிநாம ஸ்தோத்திர ஸங்கீர்த்தனங்களின்

அட்டவணை.

	பக்கம்.
ஸ்தோத்திரம்.	
அகவல் ...	3
அபயப்பத்து ...	12
அருட்பத்து ...	13
கூட்டுப்பத்து ...	15
வைகுந்தப்பத்து ...	16
ஸங்கீர்த்தனம்.	
அடிமையாக்கும் ஆதிமூலமே ...	52
அண்டநிறைந்தவெங்க ...	70
அபயங்காரய்யா ...	35
அம்மம்மா ஈதென்ன ...	58
அன்புகொண்டெனை ...	32
அன்னைசொற்றவருத ...	22
ஆதிமூலசர்வேசனடி ...	63
ஆதிமூலமேயென்று ...	54
ஆயர்பாடிதனிலமர்ந்த ...	66
ஆயர்பாடியிலமர்ந்தவீசனே ...	63
உச்சிதபாண்டவரங்கா ...	68
உண்டோவுண்டோ ...	43
உலகளந்தவனடி ...	62
உளத்திலுன்னைத்துதிக்க ...	27
உன்னைவிடமுதலுண்டோ ...	33
எந்தநாடனிலுன்னிட ...	59
எந்தன்குலதெய்வமே ...	39
என்னகுற்றஞ்செய்தாலும் ...	41
என்னேரமுமுனது ...	42
ஒருமொழிபுகலாய் ...	34
கண்ணன்மங்களங்கொண்ட ...	25
கண்ணாநின்கழலிணை ...	72
கண்மணியென்மணியே ...	37
கரிராஜனேவரந்தாராய் ...	53
கருணாகரனே ...	69
கருணையம்பதிவாசா ...	27
காமஜனகசுகுமாரா ...	61
காலகாலகண்டாகரப்பதி ...	51
கொண்டானடிக்கிறார் ...	64
கோபமேனருளே ...	38
சோர்ந்துபோகாதே ...	23
ஜயவிஜயவிலக்குமி ...	19
தரணிபன்வாசனே ...	59
தாமோதராவுந்தன் ...	40
திருமலைநாதா ...	70
தீனதயாபரனே ...	54
தீனரக்ஷகநாயகா ...	29
துரிதமாய்வந்துநின் ...	31
நந்தன்வீட்டில்வளர்ந்த ...	28
நாராயணமந்திரங் ...	45
நாராயணனடிசேவிக்க ...	55
நாராயணாநமஸ்தே ...	20
நாராயணாவென்றால் ...	47
நாராயணாவென்னுமனமே ...	51
நிறைந்தமாதவத்தோர்கள் ...	49
நினையாநினைத்து ...	57
நினைவினிலிருந்து ...	71
பசுக்குலங்களைமேய்த்தோ ...	60
பட்டுபட்டதுபோதும் ...	36
பதிதபாவனஜகநிர்த்தனா ...	48
பரமன்றுதிதனைப்புரியுங் ...	44
பன்னகசயனாவெனை ...	31
மங்களம்ஜயமங்களம்? ...	75
மண்கொண்டுபோகுமே ...	24
மதுசூதாநின்மனமதுகல்லோ...	38
மனிதரைத்தொழுமனமே ...	65
முரஹரிமுரஹரிமுரஹரி ...	56
ரக்ஷாஎன்மேல்கக்ஷிசெய் ...	30
ராமசீதாவந்தனம் ...	50
ராமராம ராமசீதா ராமவாராய்.	29
ராமராமராமராமனே ...	67
லக்ஷ்மிநாயகா ...	23
வாரிஜநாப வரதாவாரும் ...	46
வாழிவாழிவாழிவாழி? ...	76
விட்டுவிடாதேமனதே ...	46

ஸ்ரீ

சிறப்புப்பாயிரம்.

அருட்பெருஞ்சோதி.

உத்தரஞான சிதம்பரமென்றும் ஞானசித்திபுரமென்றும் பரவியலாலும், மஞ்சக்குப்பஞ் ஜில்லா கூடலூர் தாலுக்கா வடலூரென்றும் பார்ப்பதிபுரமென்றும் உலகியலார் குறிக்கப்பட்ட தெய்வத் திருப்பதியின்கண் வசிக்கும் ஷடாந்த சமரச சுத்தசன்மார்க்கசங்கத் தடியார்களிலொருவராகிய

வேலூர்-நாகப்பிள்ளையவர்க ளியற்றியது.

நேரிசையாசிரியப்பா.

அலைகட லுடுத்த வம்புவி பரப்பிற்
பலதிர வியங்களும் பலித்துநின் றோங்கு
முத்தர திசையி லுயருடைத் தாயச்
சித்தர்கண் முத்தர்கள் செறிந்திடு கின்ற
மாராட தேசத்தின் மாதங்கங் காக்கக்
கராவினைத் தடிந்த கருணை மூர்த்தித்
திருமகள் காதலன் தீன ரக்ஷகன்
பெருமைகொ ளுத்தவம் பேரவதாரம்
பொருந்தி யளவிலாப் புண்ணியர் களுக்குத்
திருந்திய பத்தியின் றிறத்தினைக் காட்டியும்
பண்டரி புரத்திற் பகர்நாம தேவா
யண்டர்கள் வியப்ப வாடல்கள் புரிந்துந்
தீமைகள் சேராத் தேவூர் தன்னில்
வாமந் தருசீர் வைசிய குலத்தில்
விசுவம் பாவா வென்றபி தான
முசிதமா யுற்ற யோகியின் றனது
வேழாம் பௌத்திர ராகவே யிசைந்துப்
பாழாம் வல்வினைப் பாறிடக் கலியி

விற்பன விவேகிகள் மிகவதி சயிக்கப்
பொருவரு நித்திய புண்டரி காக்ஷ
னருவமு முருவமு மாகிய வமலன்
மலரடி வணங்கு மாதவ ருடனே
புலவர்கள் சூழப் பொற்றே ரேறிப்
பஞ்சமி சேர்ந்த பண்புள திங்களி
லெஞ்ச லிற் காலை யிருநான்கு கடிகையிற்
பூதகா ரியமாய்ப் பொருந்திய வுடலுடன்
சீதர னுலகிற் சேர்ந்தன ரெனவே
யவாவறு நாபாஜி யடிக ளாராய்ந்து
குவாலர் பாஷையிற் கூறிய சரிதையை
மகிபதி தாசர் மராட்டிய பாஷையில்
வகுத்தன ரிந்த மாசரித் திரத்தைத்
தென்றிசை வழங்குந் திராவிட மாக
வன்புட னுரைத்திடென் றனுகினர் கேட்கச்
சான்றோர் பலருந் தகவாய்ப் புகல
வூன்று கோலாகு முத்தமர் சரிதையைச்
செய்யென வண்டுழாய்த் திகழ்ந்திடு மார்ப
வையனுணர்வினின் றறிவித்த வண்ணமே
வனுமந்த ராவ் மான்ம நேயரையும்
பனுமனந் தப்பாப்பரம சாதுவையுந்
தருமிவர் சகாயச் சார்பினுன் மராட
முகந்திடு பாஷைக் குரையிடத் தமிழால்
விளம்பிய வாறே விவரமதாக
வளம்படப் புனித வாசக மாகச்
சொன்னயம் பொருணயந் துன்னியே விளங்கக்
கன்மனத் தவர்க்குங் கனிவை யுண்டாக்கத்
தருமார்த்த காமஞ் சார்ந்திடு வீட்டின்
பெருமார்க்க மெல்லாம் பிறங்கிட யார்க்கு
நேயம் விளைந்திட நின்மலன் சரிதையைத்
தூயராய்ப் படித்தவர் சுகமிகப் பெருக
வுலகியற் பரவிய வுண்மை தோன்ற

வலகிலாப் பரபதத் தாசைமீக் கொள்ள
வகுத்தனர் வேலூர் மன்னி வாழ்ந் திருக்குஞ்
சகப்பிர சித்த சாதுவாய் நின்றவர்
துளுவ வேளாளத் தொன்மர புடையார்
தெளிவுள நெறியைச் சிந்திப் பவராய்
வர்த்தகத் தொழிலில் வாய்ந் திருந் தானு
மர்த்தாதி யீடணை யணுகிடா வளத்தரா
யகம்புற மிரண்டினு மணுவள வேனு
மிகந்திடுங் குற்ற மிலாதவ ராகி
யாவர்க்கு நேயரா யினிய வாசகராய்ப்
பாவபுண் ணியங்களின் பகுப்பினை யறிந்துப்
புண்ணிய வழியிற் பொருந்டு பவரா
யண்ணினர் யாரையு மாதரிப் பவராய்
நாரண னடியை நாடிடு கின்ற
காரண காரியக் காட்சியுள் ளவராய்
மனமொழி மெய்யாய் வழங்கு முக்கரண
மினம்பெற வொருங்கே யியன்ற கருத்தராய்ச்
சத்திய வசனமுஞ் சாதுக்க ணேயமும்
பத்த வச்சலனைப் பாடும் பண்பு
மனைவி மக்களுடன் வாழ்ந்திடு பவரா
யினமெனத் தாசரை யேய்ந்த வியலரா
யிவைமுதற் சாந்த வியற்கையை யுளரா
யுவமையில் பதத்தை யுன்னிடு கின்ற
முனிசாமி தாசர் மொழிந்தன ரவரே
கனிவொடு மச்சிற் கனம்பெற வியற்றின
ரிதந்தரு சரிதையை யாரும் வாசித்துப்
பதமெலாங் கடந்த பரம பதத்தின்
மன்னி யெந்நாளு மகிழ்ந்துத்
துன்னி யானந்தச் சுகம் பெறுகுவரே.

மதுரை ஹைஸ்கூல் உபாத்தியாயர்

வித்துவான்-சபாபதி முதலியாரவர்கள்

இயற்றியது.

நேரிசையாசிரியப்பா.

பூவரு நான்முகப் புத்தேண் முதலாந்
தேவரு முனிவருந் திப்பிய மறையொடு
மிருதி புராணம் விளங்கிதி காசமுங்
கருதிநின் றுணர்வருங் கரையிலாச் சோதியை
அருவா யுருவா யருவுரு வாகியும்
உளதா யிலதா யுளதில தாகியும்
ஞாதிரு ஞான ஞேய மாகியும்
ஓதுறு முற்குணத் தொன்றே யாகியும்
வந்தனை புரியு மந்தமி லடியார்
பந்தம தகற்றிப் பரகதி யதனிடை
மாறிலா வின்ப வாரிதி மடுக்க
ஈறிலா வருள்வடி வாகியு மிலங்குஞ்
சச்சிதா னந்தத் தனிமுதற் பொருளை
மெய்துன் று மறைபுகழ் வைகுண்ட மதனின்
மாணிக்க வெயில்விரி யாணிக் கனக
மருவிய கோயிற் பெரிய வத்தாணி
மண்டபம் பானு மண்டில மநந்தம்
ஒருங்குதித் தாங்கு நெருங்கொளி வீசும்
எரிமணித் தலத்தி னரவணை மீது
மரகத மலையெனப் பரவ வீற்றிருந்து
திங்களு மிரவியுந் தங்குமற் றதினெனச்
சங்கமுந் திகிரியுஞ் செங்கையி னணிந்து
பூமக ணிலமக ளாமிரு மாதரும்
பொருந்திரு பானு மிருந்து நனி பொலிய
வாணியு மிந்தி ராணியும் புடையுறீஇக்

கவரிகா லசைப்ப விவரியி னியம்பட
விண்ணர மடந்தையர் நண்ணினர் நடிப்ப
அரிய திருவடி யருருவாய் புதைத்துப்
பெரிய திருவடி பேணி நின்றேத்த
விடுவச் சேனனுட் படிமைத் தொழில்செயச்
சங்கரு டணன்முதற் சாற்றிடும் வியூக
புங்கவர் முத்தொழி லருளினிற் புரிதர
நித்திய விபூதிக ணித்திய சூரிகள்
எத்திக்கும் புகழ்த் தித்திக்குந் துதி
பாடினர் பரவ நாமெம் பிரானை
ஆதி மூலமா யமர்தரு மமலனை
நிச்சய பத்தி நெறியினி லடைந்து
மனமொழி மெய்களி னுடொறும் வழுத்தி
அநகரா மடியவ ரற்புத சரித்திர
நிதியா மறிவி னிருப்பினுக் கமுங்கப்
பொதிதரு மலத்தினைப் போக்குநன் மருந்தாம்
அன்பினர் மயிரினை யகமெனும் புலத்தில்
இன்புற வளர்க்கு மெழிலியா மெனவும்
மதித்துல குறுபயன் மன்னுமா நினைத்திட்
டதிமகிழ் வொடுமெவ் வடியவர் சரித்திரம்
பொற்புறத் திரட்டி யற்புறு மனத்தின்
எத்திசை யோரு மேத்துதற் குரிய
பத்த விசய மெனப்பெயர் பகர்ந்து
குவாலர் பாடையிற் குலவுறத் தந்தனன்
அவாவுற வுயிர்கட் கருணணி பொருந்திக்
கோபா னலமுதற் குற்றங் கடிந்த
நாபாசி தாச னெனுநற் குணக்குன்
றஃதினுக் கிசையமா ராட்டிரத் தமைத்தமு
திஃதெனச் சுருக்கியன் பியைதரு மகிபதி
தாசனன் கியம்பித் தந்தன னந்தத்
தேசுறு நூலிற் கூறுறு சரிதம்
பற்பல வவற்று ணற்கட லமுதினை

சிறப்புப்பாயிரம்.

நேரவக் கதைகளின் சார மெலாமோர்
முடிவுறத் திரண்ட படியெனச் சொலுந்தற்
புக்கார்க் கருளுந் துக்காரா மெனுந்
தாசனற் சரிதந் தனைப்புல வோர்தமால்
ஆசறத் தமிழின் மொழிபெயர்த் தளித்திவ்
வுலகுறு பயன்பெற நிலவுவித் தனன்பின்
அவ்விய லாவினைச் செவ்விதி லுணர
அச்சிடு வித்திட் டிச்சகர்க் கருளெனப்
பல்லோர் நண்பினர் சொல்லவவ் வாறே
பழுதிலா தாய்ந்திட் டெழுதிலா வெழுத்தில்
விரசுறு வித்துப் பிரசுரஞ் செய்தனன்
மாதவி வகுளந் தாதகி கூவிளை
சந்தன முதலா நந்துறு பொழிலுங்
கன்னற் கழனியுஞ் செந்நெற் செறுவும்
மாவிரி வேய்தரு பூவிரி யோடையும்
புடையுறச் சூழு மடைவுடைத் தாகும்
வேலூர் வாழ்தரு மாலோ னனையான்
வணிகருட் சிறந்த மணிநிகர் வள்ளல்
இலகினி லெவரு மலகிலாப் புகழ்சொல்
நிரூரிவன் போலெனுங் கரூர்முனி சாமிக்
காவல னென்னுங் கற்றுணர்
பாவலர் புகழும் பண்புடை யோனே,

சிறப்புப்பாயிரம் முற்றும்.

ஸ்ரீ

உபகாரஸ்மிருதி.

சென்னைபுரியைச்சார்ந்த சிந்தாத்திரிப்பேட்டை
செந்தமிழ்க்கவிஞர்

மே. பே. அண்ணாஸ்வாமி முதலியாரவர்கள்

இயற்றிய

அஷ்டகம்.

கழிநெடிலடி யாசிரியவிருத்தக் கீர்த்தனம்.

தரு - கலியாணிராகம் - ரூபகதாளம்.

பூமகடன் றிருவுளத்தி லிடையறாக் களிப்புறச்செய் புனிதவேலூர்

முடுகு.

பொருந்தி வருந்தி திருந்த வருந்தவம் பொங்கிய நந்திசுகர்
புலத்திய ரகத்தியர் தலத்தி லிலாப்புகழ் பொருதிரு மூலரருட்
போதனர் சாதனர் கீதனர் மாதனர் புகழ்பெறு சகலர்களும்

பல்லவி.

பார்க்கப்பார்க்க ஆனந்தம்பெருகுமே
பாகாயுளமுருகுமே.

அநுபல்லவி.

ஏர்க்கமுத்திக் கிதுகா ணடத்தையுந்
தீர்க்கத்துக்காரந் திருவுரு படத்தையும்

பார்க்கப்.

(விருத்தத்தி னிரண்டாமடி.)

நாமகட னகங்களிக்க மெய்புளகாங் கிதங்கள்கொள நவிலுங்கியான

முடுகு.

நற்பல னுற்பவ தற்பர சிற்சுக ஞானனு பவங்களெலாம்
நண்ணிய புண்ணிய கண்ணிய ரெண்ணமிகு ஞாலமுளார்களுட
நாவிலும் பாவிலும் யாவிலு மேவிட நாட்டிய பாட்டகரும்

பார்க்கப்.

(கீர்த்தனத்தி னிரண்டாமடி.)

சரணங்கள்.

திருமறைமுடி திகழ் அரும்விசிஷ்டாத்வைதத் தேனெனும்வைணவ
தெள்ளமிர்தைத்தா புந்தியிற்சிந்தித்த திருகுருபரமபத [மாந்]

ஒருதனிக்கடவு ளுந்தியில்வந்தவர்க் குபதேசித்தவணம்
உண்டாக்கியமே லண்டத்துள தேவரும்
பிண்டாண்டத்துள மண்டலர் யாவரும்
பார்க்கப்.

(விருத்தத்தின் மூன்றாமடி.)

மாமகட னருணிறைந்து பாகவத ரடிப்பொடிசேர் மகுடம்பூண்டு

மூடு து.

மதிவெண் கரிபரி குடைகுவ ளைத்தார் மணிமுரசுங் கவரி
மங்கள வங்கி யலங்கிர்த செங்கை வளர்கங் காகுலனே
வாழிபொன் மேழிநீடூழிபா லாழியாய்வழுத்திய வாக்கியமெலாம்
பார்க்கப்.

(கீர்த்தனத்தின் மூன்றாமடி.)

வேதனோதிய நான்கிலும் ஆறிலும் விரித்துள பதினெட்டிலும்
வீறுமுப்பத் திரண்டறு பத்துநால் விளிர்தொண் ணூற் றாறினிலும்
பாதந்தொட்டு முடி மேலுளமகிமையைப் பகுத்துப் பகுத்துரைத்த
பன்னிரண்டு ஆழ்வார்களுஞ் ஜீயரும்
உன்னதகயிங்கர்ய சந்நதி நேயரும்
பார்க்கப்.

(விருத்தத்தி னான்காமடி.)

கோமகட னகங்களித்துத் துக்காராம் சரித்திரத்தைக் குலாவல்கொ
[ள்ள

மூடு து.

கூறிய கரூர்முனி சாமி முதலியாங் குபேரா தீனசீரார்
குலமுந் தலமும் பலமும் நலமுங் குடிகோத் திரங்களுநற்
குணமும் மணமும் பிரியா வணமாய்க் கொஞ்சுக கொஞ்சுகண்
பார்க்கப்.

(கீர்த்தனத் தினான்காமடி.)

மோனமந்திர மொழிகரூர் முனிசாமி முதலியாரரிதான [களும்
மராட்டியபாஷையி லிருப்பதைத்தமிழினில்மொழிபெயர்த்தியாவர்
ஞானபான்துக்கா ராமவர்சரித்திர நடை யடைவீர்களென
நவரசவுச்சித மெச்ச வுதித்ததை
எவர்களுங்கைக்கொள அச்சிற்பதிப்பித்ததைப்
பார்க்கப்.

ஸ்ரீலோகாரஞ்சனி, வேலூர் ஜநாநுகூலினி
பத்திரிகைகளின் ஆசிரியர்
சி. கோ அப்புமுதலியா ரென்று வழங்குகின்ற
சென்னை-சிந்தாதிரிப்பேட்டை
ஸ்ரீவிஸிஷ்டாத்வைத ஸித்தாந்த ப்ரபோத ஸங்கத்தாரி லொருவராகிய

கோவிந்தஸ்வாமிமுதலியா ரவர்கள்

இயற்றிய

பஞ்சகம்.

நேரிசைவெண்பா

சீலமுறுந் துக்காராஞ் சிந்துநிகர் சீராற்றின்
மேலவருங் கீழவரு மூழ்கவே—ஞாலமதிற்
றெல்லார் முனிசாமித் தோன்ற றமிழியம்பச்
சொல்லுமே யென்றுத் துணிந்து.

கட்டளை மண்டலக் கலிப்பா.

அணிபொருந்திய பூமணிமண்டப
மார்ந்திலங்கும் பரமபதத்திடை
அணிபொருந்திய மூமங்கைநித்தரு
மகமகிழக் குலவும்பிதாம்பரன்
அணிபொருந்திய பத்தர்களுய்ந்திட
வலகில் பொன்னடி யார்களகலிடம்
அணிபொருந்திய வுத்தரவம்பரத்
தவதரித்தருள் பெற்றிகண்முற்றுமே. (௧)

நலநிறைந்திடும் பத்தவிசயமா
நளிகொழித்திடும் பேரின்பநூல்வயின்
நலநிறைந்திடு நாபாசிதாசரு
நன்கமைப்பக் குவாலர்நடையினில்
நலநிறைந்திடு மற்றையதேயத்தர்
நயந்துமேயுண ராவகைநோக்கியே
நலநிறைந்திடுந் தாசர்மகிபதி
நாட்டிளூர்மகாராட்டிரத்தன்னிலே. (௨

திருவுலாவிய லீலாவிபூதியில்
சேதனர்ப்புன் னெறியி லுழன்றமே
திருவுலாவிய மோக்கமுறுவணஞ்
சிதையுற லுணர்ந் தாளவே தேவூர்வாழ்
திருவுலாவிய விசுவம்பாவாவின்
செழுவமிசத்திற் றோன்றிடுந்துக்காராம்
திருவுலாவிய சரிதைத்தொண்டர்கள்
தெய்வவெற்றியி லொன்றாய் விளங்குமே. (௯)

கோலங்கொண்டவத் தொண்டர்தஞ்சீலத்தைக்
குணக்குச்சேர்ந்த தெறைதுனன்னுட்டினர்
கோலங்கொண்டப் பகன் றிடும்பான்மைபோற்
கோதிலாத்தமிழ் வாசகக்கோவையிற்
கோலங்கொண்டமா ராட்டிரமோதினர்
கூறவேசெவி யார்தரவுண்டுமே
கோலங்கொண்டநற் பண்ணைக்கதிர்நகக்
குளிருஞ்சோலைசூழ் வேலூர் மகிபனே. (௪)
சீர்பொலிவுறு நந்திபர்வதமுந்
திரளும்பாலி நதிவெண்புரவியுஞ்

சீர்பொலிவுறும் வெண்குடைக்குவளை
சேர்த்தமாலைவெண் பீலிமுரசமுஞ்
சீர்பொலிவுறும் யானையுந்தாற்றுக்கோற்
சிறப்புறுமெழிக் கொடிக்கங்கைக்குலஞ்
சீர்பொலிவுறும் வேளாண்மரபினற்
றிகழ்கருர்முனி சாமிசொற்றனனே. (●)

வஞ்சிவிருத்தம்

முனிசாமி மொய்ப்பதம் வாழ்கவாழ்
முனிசாமி துக்காராம் வாழ்கவாழ்
முனிசாமி மணநூல் வாழ்கவாழ்
முனிசாமி யண்ணலும் வாழியே.

சாத்துக்கவிகள்.

வேலூர் இந்து யூநியன் ஹைஸ்கூல் செந்தமிழ்த் தலைமைப் பண்டிதர்

கிருஷ்ணய்ய ரவர்கள்

இயற்றியது.

எண்சீர்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

கோலத்தண் பொழில்வளர்ந்த வேலைநக ரமர்ந்த
குலவிம்மை மறுமை வீடுகட் குறுதியாக
ஏலக்கொள் புகழுற ஞானங்க ணிரம்புற்ற
வினியஜவு ளிக்கரூர் முனிசாமிக் குரிசில்
தாலத்துப் புகழ்மகாராட் டிரபாஷை யமைந்த
தக்கதுக் காராம்சரிதத் தண்கதலிக் கனியைச்
சீலச்செந் தமிழ்வசனத் தீம்பாலிற் பெய்து திகழ்
சிறார்க்கும் புகட்டி சிறுமை தவிர்த்தனனே.

வேலூர் சர்ச் ஆப் ஸ்காட்லண்டு மிஷன் ஹைஸ்கூல்
தமிழ்த் தலைமைப் பண்டிதர்

இரத்தினவேலு ஐயரவர்கள்

இயற்றியது,

எழுசீர்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

வானுலாங்குயின் மேவுசோலை வளர்ந்தவேலை நகரினை
கானுலாங்குவ லயமணிந்தவன் கருதுகங்கை குலத்தினன்
மீனுலாங்குவ ளைமடந்தையர் மேனிராசை புரிந்தவன்
தேனுலாங்குயி லன்மருதவன் திகழுநாற்கவி வலவனே,

கலி நிலைத்துறை.

தருநிக ராங்கை கரூர்முனி சாமித் தாசன்றான்
திருவுறுமாராட் டிரமாம் பாஷையிற் செறிகின்ற
வருபுகழ் துக்கா ராம்சரி தந்தனை மகியோருக்
குருவளர் செம்மொழி யாந்தமிழ் தன்னி லுரைத்தானே.

வேலூர் லேட் முனிசிபல் காஷியர் வே. இரத்தினமுதலியார்
ஜேஷ்ட சோதரராகிய
லேட் ஓவர்சியர் அப்பாசாமி முதலியார் புத்திரரும்,
மேற்படியூர் வித்தியாபிவிர்த்திச் சங்கத்திற்கு முன்காரியதரிசியும்,
சர்ச் ஆப் ஸ்காட்லெண்டு மிஷன் ஹை ஸ்கூலின்
திராவிடப்புலவருமாகிய

வே. அருணாசல முதலியார் அவர்கள்

இயற்றியது.

பன்னிருசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

உலகிலுயர் மணிமாட மாளிகை துவன்றிமே
லோங்குமா வேலைநகர்வாழ்
உற்றவே ளாளர்தங் திணையினி லுதித்தவ
னொப்பில்குவ லயமணிபவன்
விலகில்கக பதிவா கனக்கடவு ளடிமலர்
விரும்பிநாளும் பணிபவன்
வியன்வசுதை நிகழலக் கொடியினன் கவிவாணர்
வெஃகுநூற் பலவுணர்ந்தோன்
அலகில்புகழ் சேர்கமுர் முனிசாமி நாவலவ
னளிபக்ள ஞானமுருவென்
றறையுமுத் தரதிசையி லுறையு மகிபதிதாச
னன்றன்பி னேடியற்றும்
இலகிடா ரணநிகர்த் தொளிரு மகாராட்டிர
மென்னுநற் பாஷைதன்னி
லியங்குபக வத்பக்தி யுடைய துக்காரா
மிருஞ்சரித் திரமதனையே.

நேரசைக்கட்டளைக்கலித்துறை.

காதலித் தேதமிழ்ச் செய்தன னற்கடங் காலியார்
பாதலத் தோர்கண் டகமகிழ் கொள்ளவும் பண்பினர்சேர்
பூதலத் தோர்களும் செய்யப்பெறுமென்று போற்றிடவு
மீதலத் தோரிஃ தோர்ந்தில்லை யில்லைமே லென்னவுமே.

வேலூர் அமெரிகன் மிஷன் பாலிகா பாடசாலை உபாத்தியாயர்

உ. ப. திருவேங்கடம் பிள்ளையவர்கள்

இயற்றியது.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சேயபொன் மணிமலியும் வேலைமா நகரினிற்
றினகரன் போற்றுலங்கிச்
செப்புபல நூற்கடல் கடந்தவன் றேவர்க
டினம்பரவுந் தேவகிதனக்
காய பீதாம்பரன் பதயுகள கோகநக
மலரிதய கமலம் வைத்தோன்
அகிலமா மேருநிகர் சாந்தநற் குணமாதி
யாவும்பொருந் தியல்பினன்
நேயமுறு சாதுசன சமுகத்தி லுறைகின்ற
நேசனிச வுரைமொழிபவன்
நீங்கரிய கீர்த்திப் படாமணி கரூருடைய
நிபுணன்முனி சாமிகவிஞன்
தூயமா ராட்டிரப் பாஷையில் விளங்குதுக்
காராம் சரித்திரத்தைத்
துங்கமுள கவிவாணர் கண்டுகளி கூர்ந்திடச்
சொற்றனன் றமிழின்மாதோ.

வேலூர் ஹிந்து பாலிகா பாடசாலை செந்தமிழ்த் தலைமைப்புலமை நடாத்தும்

உ. மே. கிருஷ்ணசாமிப்பிள்ளை அவர்கள்

இயற்றியது.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஏர்பெற மராடப் பாடையாமணிக
ளியற்றமிழ்ச் சாணையிற்பிடித்துக்
கார்பொழில் வேலூர் கவிஞராம் வணிகர்
கருத்துடன் மதித்து மேற்கொள்ளப்
பேர்பெறுங் கங்கைக் குலமதிற் றிலகன்
பெட்புறுங் கரூர் முனிசாமிச்
சீர்பெறுந் துக்கா ராம்தேவு சரிதைச்
செப்பிநற் புகழடைந்தனனே

கலிவிருத்தம்.

அக்காரம் மாவமு தடிசிலெனத்
துக்காராம் சரிதையைச் தொல்புவியின்
மிக்காரம் தமிழென மேற்கொளவும்
புக்காரம் முனிசாமி புலப்படவே.

குடியாத்தத்திலிருக்கும்

பட்டணம் வக்கீல் பவார் கிருஷ்ணஜிராவு அவர்கள்

இயற்றியது.

கட்டளை கலித்துறை.

ஏர்தாங்கு தண்பொழில் சூழ்வேலை மாநக ரில்வதியும்
நேர்தாங்கு கல்வி யறிவோ டொழுக்க நிரம்பவுற்ற
நார்தாங்கு முள்ளக் கரூர்முனி சாமி நலநிறைந்த
பார்தாங் குறுமகாராட்டிரப் பாடைப் பாவையுள்ளே,
தோய்ந்து கிடந்த துக்காராம் சரிதமென் றாயமுத்தைப்
பாய்ந்த நயத்தமிழ் வாசக மாய பதச்சரட்டில்
ஆய்ந்த திராவிடந் தோர்க்கணி யாக வமைத்துநிலை
வாய்ந்த புகழுரு வங்கொடு மாநில மன்னினனே.

வேலூர் சர்ச் ஆப் ஸ்காட்லண்டு மிஷன் ஹை ஸ்கூல்
தமிழ்த் தலைமைப் பண்டிதர்
இரத்தினவேலு ஐயரவர்கள் மாணாக்கராகிய

கி. ஸ்ரீநிவாசப்பிள்ளையவர்கள்

இயற்றியது.

கலிவிருத்தம்.

உலகுளோரெலா மோதற்கருநுதற்
றிலகமாமகாராட்டிரப் பாடையி
லிலகுதுக்காராம் தேவின் சரிதையை
மலிகவெண்டமிழால் மொழிபேர்த்தனன். (க)
சோலைவாவி நதிப்புனற்சூழ்ந்திடும்
வேலையம்பதி வாழ்பவனுமிகு
நூலை யோதிய நுண்ணியபுத்தியால்
மாலைபோற்றுங் கரூர் முனிசாமியே. (உ)

இராம்தாஸ் — துகாராம். வால்மீகி — வியாசர். பகீரதர். (நாபாஜி) (ஞானேஸ்வரர்.) (முக்தாபாயீ.)
நாமதேவ்.

ஸ்ரீ

ஸ்ரீபாண்டுரங்கபரப்ரஹ்மணேநம:

ஸ்ரீமத் துக்காராம்சுவாமிகள் சரித்திரம்.

நூன்முகம்.

நேரிசை வெண்பா.

ஞானம் படிமிசையோ நல்லுருக்கொ டார்ந்தொளிரும்
கோனவனுந் துக்காராம் கோற்றேணை—நானிலத்தில்
வாழ்வார்க் குணவா வழங்கற் கருட்கணிப்பாய்
தாழ்மையிலா வங்குசத்தாய் நன்கு.

பராபரன்.

கலி விருத்தம்.

எவனுல குயிர்கட் குயிரெனக் கரப்பவன்
எவனுயர் மறைமுடிப் பொருளெனத் திகழ்பவன்
எவன்கலை யலர்மகன் முதலினர்க் கரியவன்
அவனடி யணிகலன் முடிக்கணி மனனே.

ஸ்தோத்திரங்கள்.

ஜயஜயபாண்டுரங்கா! ருக்மணீரமணா! ஜயஜயவிட்டலசொரூபா! ஜயஜயாநந்தாமூர்தஸாகரா! ஜயஜயபக்தவச்சலா! பதுமநாபா! அசலா! நிருவிகாரா! லீலாமாநுஷவேஷா! கருணாகடாக்ஷா! ஆதி புருஷா! அமலா! திவ்வியமங்களவிக்கிரகாகாரா! சருவேசுவரா! ஆதி நடு வந்த மிலா வச்சுதா! சச்சிதானந்தா! விமலா! ஆபத்பாந்தவா! சருவஜகத்காரணபூதா! உனது கல்யாணகுண விசேஷங்களுக்கேற்ற

கீர்த்திகள் அநந்தம்; அவற்றை வேதமும், வேதபுருஷனும், வேதம் வல்ல நான்முகப்புத்தேளும், சென்றால் குடையாகவும், இருந்தால் சிங்காசநமாகவும், நின்றால் மாவடியாகவும், நீள்கடலுளென்றும் புணையாகவும், மணிவிளக்காகவும், பூம்பட்டாகவும், புல்குமணையாக வும், இப்படி சருவதேச சருவகால சருவாவஸ்தைகளிலும் உனக்குக், கைங்கரியஞ்செய்கையே சொரூபமன்றிப் பிறிதோர்சொரூப மில்லை யெனக்கொண்டு திகழும் அரவரசப் பெருஞ்சோதி யநந்தனும் பரிச் சேதிப்பான் முனைந்தும் அவ்வெல்லாருடைய மநோவாக்குக்களுக் கும் அடங்கப்பெறாமல் மீளவும் உன்னையே நோக்காநின்றன எனின், சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து சுரிகுழல் மடந்தையர் திறத்துக் காதலே மிகுத்துக் கண்டவாறு திரிதராநிற்குந் தீயனேன் கழறல் வசமோ! அன்பினை அகலாகவும், ஆர்வந்தன்னை நெய்யாக வும், இன்பமிகுசிந்தை திரியாகவுங்கொண்டு, நலமுருகி ஞானச்சுடர் விளக்கேற்றி, ஞானக்கவிபுனைந்தருளா ஞாலத்தீசர்கள் நன்கு குற் றேவல்நாடு நாதனே! நிஜபக்தர்களுக்காக அநந்த அவதாரங்களைச் செய்தருளி, நின்னுடைய ஆசிரிதவிரோதிகளாகும் அரக்க ரசு ரரைச்சங்கரித்து, ஸஜ்ஜந ஸம்ரக்ஷணம் பண்ணியருளினாய், பண்ண வும் நிற்கின்றாய். அன்றியும், கலிதிகழ் இந்நாளிலும் புண்டரீக பக்த ருக்காக பீமாதீரத்தில், பண்டரிபுரம் என்னும் க்ஷேத்திரத்தில் செங்கல்லின்மீது ஸமசரணனாய்நின்று, ஸமதிருஷ்டியுடனிடையின் பேரில் திருக்கைகளை யமைத்துக்கொண்டு, கருணைமிர்தம்பொழியுங் கடைக்கண்ணோக்காய் பக்தஜநங்களை ரக்ஷிப்பான் தரிசனமருளி, அன் னோரைப் பவசாகரத்தினின்று கரைமரஞ்சேர்ப்பித்து, தெவிட்டா இன்பசாகரத்திற் படிவித்து, ஆராவமுதன்ன நிற்கின்ற ஆதியஞ் சோதியனே! சதுர்த்த சவித்தியாபாரங்கதராய், குணலயமாய்,சதுர் ப்புஜதாரியாய், பாசாங்குசமாம் வேத்திரத்தண்ணலாய், மோதக ஹஸ்தராய் ஸப்பிரேமையாகுங் கணபதியும் நீயே. அன்பர்களுக் கருட்சுவையூட்டுமாறு நீ நிர்த்தநம்புரிய அதிற் னகலையங்கிரியண் ணல் ஈடுபட்டு ஆநந்த பரவசராயினர்; கலைகளும், வேதமும், நீதி நூலும், கற்பமும், சொற்பொருள்தானும், மற்றநிலைகளுமெல்லா மோதி நன்குணர்ந்து மூர்த்தீகரித்த விபுதர்களும் உனது ஸஸம் பிரம நிருத்த கீதங்களைச் சேவிக்கப்போந்து, கைகளில் தாளங்களை

யேந்தி, இசையொத்த கானங்களைப் பின்னின்று சேவிப்பவர்களாய் ஆநந்த வெள்ளத்தழுந்துகின்றார்கள். அவர்களைப்போல யானும் உனது குணரூப சேஷ்டைகளாம் ஆரணத்திற்படிந் துண்டு களிக்கலாமென்றால் மநத்திலோர் தூய்மையில்லை; வாயிலோ ரின்சொல்லில்லை; சினத்தினாற் செற்றநோக்கி வாளாத் தீவிளி விளியா நிற்கும் எனக்கு அக்கதி யெங்ஙன் சேரும், புனைதுழாயலங்கலாய்! அஃது சேரப்பெறாப் பாவியேனும், அடியார்க்காட்படுத்தும் விமலன் நீயானமையால் உனதருளின் இனிமையையே கொண்டு, உன் மெய்யடியார் பலருள்ளும் ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகளுடைய சரித்திரந் தன்னையோதி உள்ளம்பூப்ப ஆவல்மிகக்கொண்டமையால், என்னையாளுடைய கோவே! என்னுள்ளத்துள்ளு நாவினுள்ளுமுறைதந்து, சரிதந் தன்னை நிருவிக்கிநமாகப் பூர்த்தியுறச்செய்தருள்வாய்.

நமோபாரதீ! அமிசவாகநீ! பிரமநந்திநீ! சரகதி! சுப்பிர வஸ்திராலங்காரிணீ! அர்த்தகுங்குமதாரிணீ! நாராயணீ! சுரிமென்குழலீ! திவ்வியபுஷ்பமாலிநீ! பிரமணைவீணையைக் கையிலேந்தி சதா பகவத்குணகீர்த்திகளை வருணித்துப்போகும் வாணீ! உனது அற்ப அருளின் மகாத்மியத்தால் போதாயந - திரமூடசாரிய - குகதேவ - பாவருசி - டங்காசாரிய - பிரமாநந்தி - காளிதாசப்பிரபுருதிகளும், கம்பநாட்டுக் கவிச்சக்கரவர்த்தியும், புகழேந்தியென்னும் புலவர்பிரானும், ஒட்டக்கூத்தப்புலவரும், மதுரை முதலிடைகடைச் சங்கத்தவரும், பரிமேலழகரும், சேனாவரையரும், இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும், அங்கவர்போல் எண்ணறுந் தவத்துளாரும், திடம்பெறு செந்தமிழ்ச் செழுங்கலையோடு வடநூற் கடலையும் நிலைகண்டுணர்ந்து, சூரியசந்திரர்களுள்ளளவுங் கீர்த்திநிலைக்கப்பெற்றார்கள். அவர்கள் இயற்றிய காவியங்களோ எண்ணத்தொலையா ஏட்டிலுமடங்கா; அவர்கள்பால் வைத்த கருணாமிர்தத்தில் அணுவளவுமாத்திரம் இவ்வேழையின்மீது வைத்துச் சந்தசரித்திரங்களை விளக்குவித்து, நாவிலிருந்து இந்தச் சரித்திரம் முற்றுப்பெறச் செய்வாய்; ஹே சுபகுணாகரீ!

வேதவேத்தியனாகும் ஸ்ரீமந் நாராயணன் இராமாவதாரஞ்செய்யாமுன்னமே அவனைக் கீர்த்திக்கும் வேதத்தை இராமாயணமாகச்

செய்தருளி, உலகத்தை வாழ்வித்தருளின ஸ்ரீமத் வால்மீகி பகவானுடைய திருவடிகளுக்கு நமஸ்காரங்கள் புரியாநின்றேன்.

வேதங்களைவியசித்து, அவ்வேதவேதாந்தங்களின் சாரார்த்தங்களைக்கொண்டு பக்தர்களுக்கு அமுதென்ன ஐந்தாம் வேதமாக ஸ்ரீமத் பாரதமென்னும் இதிகாசம் செய்தருளி, லோகோத்தாரணஞ் செய்தருளின ஸ்ரீமத் வியாசபகவானது ஸ்ரீபாத கமலங்களுக்கு நமஸ்கரியா நின்றனன்.

வேத வேதாந்தங்களின் மறைபொருளாகும் தத்துவ ஹிதபுருஷார்த்தங்களை வெளியிடற்காய் வியாதமுநிபால் கிள்ளைவடிவுடையராய்த்தோன்றி, அவற்றை ஸ்ரீமத் பாகவதபுராணமாகச் சாதித்தருளின சுகப்பிரமயோகிகளுக்கும், எந்தவமிசத்தில் யானவதரித்தனனோ அந்த வசிஷ்டபகவானுக்கும் நமஸ்காரங்களியற்றுநின்றனன்.

மேலும், கலியுகத்தில் திருவவதாரஞ்செய்த சந்தஜநங்களுக்கு அநந்தந் திருநாமங்களுண்டு; அவர்களில் ஞாநதேவுசுவாமிகள் சாக்ஷாத் விஷ்ணுமூர்த்தியின் அவதாரம். விஷ்ணுமூர்த்தி யானவர் கண்ணனுயவரித்தபோது ஸ்ரீமத் கீதையைப் பிரசாதித்து லோகத்தை வாழ்வித் தருளினதுபோல இந்த ஞாநதேவின் அவதாரத்திலும் "ஞாநேசுவரி" என்னும் பெயரால் மஹாராஷ்டிரத்தில் ஓர் சாத்திரம் இயற்றி வெகுஜனங்களைக் கடைத்தேற்றுவித்தார். இந்த ஞாநதேவுசுவாமிகள் பயிட்டநம் என்னுங் கிராமத்தில் எருமைக்கடாவாக்கிலிருந்து நான்கு வேதங்களையும் உதகரிக்கச்செய்தார். இவரைப் பரிசோதித்தற்காக சாங்கதேவு என்பவர் புலியின்மீது ஏறிக்கொண்டு, சருப்பத்தைச் சவுக்காகப்பிடித்துக்கொண்டு இவர்முன் உலாவி வந்தபோது இஞ்ஞாநதேவுசுவாமிகள் அந்தக் காலத்தில் தாம் வீற்றிருந்த குட்டிச்சுவரினை நடத்திக்காட்டி சாங்கதேவை மோகிப்பித்தார். இவருடைய தமையனர் சங்கருடைய அவதாரபூதராகும் நிவர்த்திநாதர்; தம்பியானவர் பிரமாவின் அவதாரமாகும் சோபாநதேவு; தங்கை ஆதிமாயாவதாரமாகும் முக்தாபாய் ஆகிய இப்புண்ணியசீலர்களுக்கும், சாஹாத் உத்தவருடைய திருவவதாரமாய்க் கொண்டு சதகோடி அபங்கங்களைச் செய்தருளின நாமதேவு ஸ்வாமிகளுக்கும், பகவானே பக்தி பரவசத்துக்கிரங்கி பன்னிருவரு

ஷம் பிராமணரூபங் கொண்டுவந்து, காவடி தீர்த்தம் சுமந்தவொரு கருணைவிசேஷத்துக் கிலக்கான ஏகநாத்ஸ்வாமிகளுக்கும், ஸ்ரீ முகுந்த ராஜயோகிகளுக்கும், தாசோபந்துவுக்கும், மாருதியின் அவதாரபூதராய்த்தோன்றி தாசபோதாமிர்தங்கள் அநந்தந் தந்தருளின ராமதாசஸ்வாமிகளுக்கும், மற்றைய முக்தேசுவரகவி - வாமநஸ்வாமி - ஸ்ரீதரஸ்வாமி முதலிய சிரேஷ்டர்களுக்கும், பிரகலாத - நாரத - பராசர - புண்டரீக - அம்பரீஷ - ஸௌநக - பீஷ்ம - ருக்குமாங்கத அருச்சுந - பலி - விபீஷணாதி புண்ணியாத்துமாக்களுக்கும் எண்ணறு வந்தனை வழிபாடுகள் புரியாநின்றேன்: பிரபுக்களை யாச்சிரயித்த ஓர் ஏழையின் மணத்திற்கு ஒவ்வொரு பிரபுவும் ஒவ்வொரு வஸ்து உபகரித்து அவ்வேழையின் மணம் சம்பிரமமாக முடிக்கப் பார்ப்பது போல இவர்களெல்லாரும் என்பால் கருணை கூர்ந்திருந்து, தங்களுக்குத் தெரிந்துள்ள வமிசங்களிற் சிறிதுபாகம் ஒவ்வொருவரும் நினைப்பூட்டுவார்களாகில் அவ் வல்லபங்களையெல்லாந் திரட்டி இச்சந்தசரித நிறைவுபொருத்திக் கொள்ளலாமென்னும் அவாமிக்கது.

அதனால் இப்படிக்கெல்லாம் மகராஷ்டிர கிரந்த கர்த்தாவாகும் மகிபதிதாசர் பிரார்த்தித்து, அநந்தரம், தம நிஜகுருவாகும் ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகளைத் துதிக்கத் தொடங்கினர். இக்கலியுகத்தில் மிருத்தியு லோகத்தின்கண் அவதரித்து, உபாயங்கள் ஐந்தினும் நடுநாயகமாய்நின்ற பக்தியோகந்தன்னை யுலகத்தாருக்குத் தெரிவித்து, இந்த பக்தியோகத்தாலல்லாது யாகம், தபம், தாநம், விரதம், யோகம் முதலான வுபாயாந்தரங்களால் மோக்ஷம் ஒருக்காலும் லபியாது. ஸ்ரீஹரிநாம சங்கீர்த்தநமே பகவத் பிராப்திக்குரிய முக்கிய சாதநம் என்னுங் கருத்திசைத்துக்காட்டி, தாம் பெறும்பேற்றுக்கு உலகத்தவர்களையும் இலக்காக்கத் தாம் பக்தியோக நிஷ்டாபர தந்திரராய்த் தங்காயத்தைப் பிரமரூப மாக்கியருளின காரணகுருவாகுந் துக்காராம்ஸ்வாமிகள் தம்முடைய கருணைகடாக்ஷம தனால், சூதனாய், தூர்த்தனாகி, மாதரார் கயற்கண் ணென்னும் வலையுட்பட்டு அழுந்தும் என்னுடைச்சொப்பநத்தில் எழுந்தருளிச் சிலவற்றை யுபதேசித்தருளினர். அக்கருணையங்கடல் என்னையும் ஓர் பொருளென மதித்துச் சில வுபதேசித்த அவ்விசேஷ மதனால், ஸ்பரிசவேதியின் ஸ்பரிச மாத்திரையானே செம்பு முதலாம் உலோகங்கள் களிம்பு நீங்கித் தங்கமானதுபோலும், அக்கினியின் ஸ்பரிசத்தால் ஈரம் புலர்ந்து தாணுக்கள் நீறானதுபோலும் யானும் தேகாத்தும பாவங்களைப் போக்கி, நானெனதென்னு மகங்கார மமகாரங்களி லிருந்து நீங்கி, காம-குரோத-லோப - மோக - மத-மாச்சரியங்களாகு மரிஷட்வருக்கங்களை வேரறுத்து, சதா ஹரிவிட்டலா! என்று துதிபுரியுந் தன்மையனாயினேன். இங்ஙனமெல்லாம் என்னைத் தங்கருணை வீக்ஷண்ணியத்தால் தடுத்தாட்கொண்ட காரணாசாரியஸ்வாமி

துக்காராமானவர் மற்றுஞ்சொல்ப கருணைகொண்டு, என்னுள்ளத் துறைந்து யானுய்த் தம்மைத்தாம்பாடி, தமது சரித்திரத்தைச் சம்பூரணஞ் செய்துகொள்வான் அவருடைத் திவ்விய பாதாம்புயங் கட்கு அநந்தங்கோடி சரணங்கள் இயற்று நின்றனன்.

எனக்கோ! சப்த - தருக்க - மீமாமிசைகளில் ஒன்றுந்தெரியாது; கவியின் இலக்கணங்களுந் தெரியாது; பதங்களின் விற்பத்திகளுந் தெரியாது; சந்தச்சரித்திரஞ் சொல்லவேண்டும் என்கிற ஆசைமாத்திரம் அதிகமாயிருக்கிறது. பிச்சையேற்றுண்டு களிக்குமொருவன் எல்லாப் பிரபுக்களையும் ஆசிக்குந் தன்மையினால் அவனுக்கு இராஜபோஜநமுங் கிடைக்கக் குறையில்லையாமாறு போலே கல்வி கேள்விகளிற் சிறிதும் பயின்றிலா நாயேன், பேராளன் பேரோதும் பெரியோர் புகழைப் புகலற்கென்றே ஆசைமீறினவனுகையாலே அப்பெரியோர்களாகும் சந்தஜநங்களே தமது திருவடி மான்மியத்தால் எனக்குக் கல்விபிச்சையும் புத்தியுமீந்து, தங்களில் ஒருவராகிய ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகளுடைய கீர்த்திப் பிரதாபங்களை யான் கொண்டாடி மகிழுமாறு செய்யக் குறையில்லை.

மேலும், பகவான் ஸ்ரீமத்கீதை பன்னிரண்டாவது அத்தியாயத்தில், சாதுஜநங்களுடைய சொரூப குண நன்மைகளை விளங்கவுரைத்தருளினதுபோலும், ஸ்ரீ சுகப்பிரமரிஷியில் அலந்தர்ப்பவித்திருந்து ஸ்ரீமத் பாகவத மியற்றி, அதில் பதினோராவது ஸ்கந்தத்தில் பகவத்குணைக நிஷ்டர்களுடைய முப்பதுவகை குண ப்ரபாவங்களை விளக்கியருளினதுபோலும், அவன்றனே ஸ்ரீ பண்டரீநாதனுய் என்னுள்ளுந்தனது கருணைலேசத்தால் ஸ்புரித்திருந்து, சந்தஜநங்கள் இந்தக்கலியுகத்தில் அவதாரஞ்செய்து, பிரகிருதிவாசநாருசியில் மண்டித்திரியும் ஜநங்களில் நடுவிருந்துகொண்டே பிரத்தியக்ஷ நடை பாவனைகளாலே பாவிகபக்தர்களுக்குக் காட்சியாகி, அபாவிகர்களுக்கு ஸ்தூலவடிவினராய்த்தோன்றி யுலகத்தில் நன்மை கொண்டாடி யவற்றையெல்லாம் எனக்குணர்வித்து, என்மூலமாக, "பக்தவிஜயம் - சந்தலீலாமிர்தம் - பக்தலீலாமிர்தம்" என்னும் பெயர்களால் மூன்றுகிரந்தங்களை யுண்டாக்கி, லோகத்தில் மற்றவர்களுங் கொண்டாடிக் கிருதார்த்தர்களாகும்பொருட்டு அந்தச் சந்தஜநங்களுடைய திருவிளையாடல்களை வெளியிட்டருளினன்.

ஸ்தோத்திரங்கள் முற்றிற்று.

ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகள் திருவடி சேர்ச்சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீ பாண்ரேங்கபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமத்
துக்காராம்சுவாமிகள் சரித்திரம்.

முதலத்தியாயம்.

ஸ்ரீய:பதியான சருவேசுவரன் சுடரொளியாய்நின்ற தன்னுடைச்சோதித் திருநாடாகிய வைகுந்தத்திலே, திருமாமணி மண்டபத்து அந்தமில் பேரின்பத்திலே, இரண்டு விபூதிகளுந் தொழிலாக வகுப்புண்ட கோப்புடைய சீரிய சிங்காசநத்திலே, அதிதேஜோரூபமாய், ஆயுதகோடிகளாலும் ஆபரணகோடிகளாலும் பிரகாசமாய், சுந்தர-சுகுமார-லாவண்ணிய-யௌவநாதி அபரிமித உதாரகுணநிதியான திவ்வியமங்கள விக்கிரகவிசிஷ்டனாய்க்கொண்டு வீற்றிருந்து, ஏழுலகுந் தனிச்செங்கோல் செல்ல நடாத்தும் அவ்வாநந்த அதிசயங்களை "அயர்வறு மமரர்களாகு" நித்தியசூரிகளும், முக்தர்களுமே யநுபவித்துப் போருமதில் திருப்தியுறாமல், இந்த நித்திய முக்தர்களைப்போல் மற்ற லோகங்களிலுள்ள சமுசாரிகளுங்கண்டு அநுபவித்து, எனது கைங்கரியமாகிற மகாசம்பத்தைப் பெற்றுவாழ்தல் பிராப்தமாயிருக்க அங்ஙன்செய்யாது இவற்றை யிழந்திருப்பதேன்? என்று மிகவுங் கிலேசித்து, மானைப்பிடிப்பவர் மானைக்காட்டிப் பிடிப்பதுபோலே மநுஷிய சஜாதீயரான சந்தஜநங்களைவிட்டு சமுசாரிசேதநர்களைத் திருத்தி யருளவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி, நித்தியசூரிகளை நோக்கி, நீங்களெல்லீர் நம் பூலோகத்திற் பல்லிடங்களிலும் அவதரித்து, என்னுடைய சுத்த சத்துவகுண கீர்த்திகளைக்கொண்டாடி, "என்னுடைய திவ்வியநாம சங்கீர்த்தநமல்லால் வேறுசாதநமில்லை; என்பால் புரிய வேண்டிய பக்தியோகமல்லால் வேறுஉபாயமில்லை! இவையொழிந்த வேறுவகை சாதநங்களால் ஒருபோதும் சற்கதிப் பிராப்தியாக மாட்டாது" என்று சமுசாரிசேதநர்களுக்கு என்னுடைய சகுண

பக்தி மார்க்கங்களை விளங்கவுரைத்து, அவர்களைத் திருத்தியென்பால் பணிகொண்டு வாருங்களென்று திவ்வியாஜ்ஞையிடலும், அவ்வந்தமில் பேரின்பத்தடியார்களும். ஆதியஞ்சோதியின் அருண் மொழிக்கிசைந்து, திருவடிகளை நமஸ்கரித்து, அங்குநின்றும் பிரயாண கதியடைந்து, பூலோகத்தின்கண் வந்து திருவவதாரஞ் செய்தருளினார்கள்.

இந்தச் சந்தஜன சரித்திரங்களை, இவர்களது திருவவதாரங்களுக்குமுன்பே, துவாபரயுகத்தில் வியாதமுனிவர் பவிஷியோத்தர புராணத்தில் விளம்பரித்தனர். அந்தப் புராணத்தைக் கைலையங்கிரி நாதராகிய பரமசிவன் தம்திடஞ் சேமித்து வைத்துக்கொண்டனர்; அஃதெவ்வாறு வெளிவந்து உங்களுக்குத் தெரிந்தது? எனின்; இந்துஸ்தான்தேசத்தில் நாபாஜி என்னுந் திருநாமம்பெற்ற ஓர் வைணவ மெய்யடிகளிருந்தனர்; அவர் குவாலர்பரிஷையில் அநேக சந்தசரித்திரங்களைச் சாதித்திருந்தார்; அவைகளை யாதாரமாகக் கொண்டு யானும் இந்தச் சந்தலீலாமிர்தத்தை வருணிக்கலாயினன்.

அந்த நாபாஜி என்பவர் யாவர்? எந்த தேசத்தவர்? குலகோத்திரங்களெவை? அவருடைய நுஷ்டானம் - நடக்கை - மகத்துவங்களெத்தகையன? எனில்; முன்னாளில் ஆநந்தவநம் என்னுங் காசி க்ஷேத்திரத்தில், இராமாநந்தஸ்வாமிகள் என்னுஞ் ஜிதேந்திரரிருந்தார்; அவருடைய பிரியசிஷ்யர் ஆநந்தாநந்தஸ்வாமி; அவ்வாநந்தாநந்தஸ்வாமிகளுக்கு அநந்தசிஷியர்களிருந்தார்கள்; அவர்களில் முக்கியர்கள் ஆக்கிரஜி - ஹரிதாஸ். இவ்விருவரினும், பிரதமர் ஆக்கிரஜி என்பவர்; இவர் மகாவிரக்தர்; சம தமசாந்தியாதி நற்குணங்களையே சதா பூஷணமாக அணிந்திருப்பவர்; ஆத்துமஜ்ஞானத்தில் அதிநிஷ்டை யுடையவர்; பூதாத்தும சமத்துவா பேதபாவங்களை யொழித்துச் சமபுத்தியைக்கொண்டு பகவச் சரண சமாசிரயணத்திற் குறப்பாக்கி, ஸ்ரீ ஹரிநாம சங்கீர்த்தநங்களை சமஸ்த ஜநங்களுக்கு முணர்த்தி, சன்மார்க்க நிலையிலிருந்தார். இவருக்கு சாக்ஷாத் பகவானனவர் நிஜதரிசநந்தந்து, இவரெங்கெங்கு செல்கின்றாரோ அங்கங்கெல்லாங் கூடச்சென்று, கண்களை யிமை காப்பதுபோல் காத்துவந்தார். இவருடைய விருத்தியானது, நிஜபக்தியால் இரவும்பகலும் ஸ்ரீமந்நாராயணனை பஜிப்பதும், அவனுடைய கல்யாணகுணங்களைப் பாடுவதும், பிறருக்குப்போதிப்பதும், சகுண வாராதநத்தாலன்றி அன்னிய சாதநங்களாகுந் தீர்த்தம் - யோகம் - யாகம் - தவம் - கல்வி முதலான வற்றாலென்றும் பகவத்பிராப்தி கிட்டமாட்டாதென்றும், திவ்விய நாம சங்கீர்த்தநமே பகவானுக்குப் பிரியமென்றும் அறியவோதுவதுமா யிருந்தது.

இப்படி நடந்துவருங்காலத்தில், க்ஷாமகாலம் வந்தவாறே ஜநங்கள்வெம்பசிநோயால் வாதைபடைந்து, உதராக்கினியின்துன்பத்துக்

குப் பொறுக்காமல் வநங்களுக்குச் சென்று அலைந்து, காய் கிழங்கு தழைகளைப் பறித்துண்டு வருங்காலத்தில், ஒரு ஸ்திரீயானவள் தன்னுடைய புத்திரனை யழைத்துக் கொண்டுவந்து, கங்கைக்கரையருகில் தனியே விட்டுவிட்டு மறைவா யெங்கேயோ போய்விட்டாள். அந்தக் குழந்தையானது தாயைக்காணுமல் அலறிக்கொண்டு அவ்விடத்திலேயே யோடித்திரிந்து அலையும்போது, ஆக்கிர தாஸரானவர் கங்கைக்கு நீராடச் சென்று, தமது நித்திய கருமாநுஷ்டாநங்களை முடித்துக்கொண்டுவர, அவரெதிரில் இக்குழந்தை யானது, அம்மா! என்னும் ஆர்வத்தோடு வரக்கண்டு தாஸர் இரக்கமுற்று, மிகு ஆதரத்துடனே பயப்படாதே! என்று தேற்றி, தம்மோடு அழைத்துக்கொண்டுவந்து, தம் மடத்திற்கெதிரில் ஓர் சிறியவீட்டில் வைத்து, வேண்டிய வுபசரணைகளோடு ஆதரித்து வந்தார். 'பயப்படாதே' என்று தாசருரைத்த காரணத்தால் அந்தக் குழந்தைக்கு அதுவே நிரூபகமாக 'நாபாஜீ' என்னுந் திருநாமம் விளங்கலாயிற்று. மஹாராஷ்டிர பாஷையில் நாபி என்றால் பயப்படாதே என்று பொருள்.

அநந்தரம், ஆக்கிர தாஸர் நித்தநித்தந் தம்முடைய மடத்திற்குத் திவ்வியதேச யாத்திரா வாசிகளா யெழுந்தருளும் பாகவதர்களை, வெகு விநயத்துடன் ஆராதித்து, அறுசுவையோடு கூடின பிரஸாதங்களைப் பிரஸாதித்து வருவதுண்டு. நாபாஜி என்னுஞ் சிறுவன், ஆக்கிர தாஸருடைய ஆதரணைக்குட்பட்ட நாள்தொடங்கி தாஸர் திருமடத்துக்கு எழுந்தருளும் சாதுக்களாகும் பகவத் தாஸர்களுக்குத் தீர்க்கதண்டமிடுதலும், உபசரித்தலும், திருவடிகள் விளக்கு ஜலமீதலும், தாமே சோதித்தலும், அவர்கள் பகவானுக்குத் திருவாராதநங் கண்டருளச் செய்தால் எதிர்நின்று சேவித்தலும், அவர்கள் பெருமானுக்கு அமிசைபண்ணி சுவீகரித்த பிரசாதத்தின் சேஷத்தைமிகு ஆதரத்தோடு பெற்றுக்கொண்டுபோய்க் களிப்புடன் உண்டலும், பாகவத சேஷமல்லால் மற்ற அந்நாதிகளை யுண்ணாமையும், பற்றுன விடங்களுக்குச் சாணமிட்டுச் சுத்தி செய்தலும், மற்றும் அந்த பாகவத கோஷ்டிக்கு வேண்டிய சிசுருஷைகள் செய்தலும் ஆகிற சத்விருத்தியிலிருந்தார். இப்படிக்கெல்லாஞ் செய்துவந்த விசேஷத்தாலும், பாகவத உச்சிஷ்டம் பொசித்துவரும் மான்மியத்தாலும்

அந்தப் பிள்ளைக்குத் திநம்திநம் ஞாநம் அபிவிருத்தியாய், மூன்று காலவர்த்தமாநங்களும் அறியுந்தன்மை வாய்த்திட்டது.

இப்படியிருக்க, ஆக்கிர தாஸர் ஒருநாள் தம்முடைய நித்திய கருமங்களை முடித்துக் கொண்டு, மடத்துக்குள் யாரையும் விட வொட்டாமல் திட்டஞ்செய்து, வாயிற்படியில் நாபாஜியைக் காவல் வைத்து, தாம் தன்னந்தனியே யிருந்து சகுணப் பிரமயோகமார்க்கமாய் மாநச பூசைபண்ணி, தோத்திரங்கள் பலசெய்தும், பகவானாகிய ஸ்ரீமந் நாராயணன் எழுந்தருளி சேவை தராமைக்காக மாளாத்துயரமுழுங்கி வாட்டங் கொண்டிருப்பதை வாயிலிற் காத்திருந்த நாபாஜியறிந்து, தாஸரைச் சேவித்து, ஸ்வாமி! ஒரு வர்த்தகன் சமுத்திரத்தில் கப்பல் மார்க்கமாய் வரும்போது கப்பல் சேதப்பட்டுத் தன் சரக்குகளுடன் அவ்வர்த்தகன் மூழ்கப்போகுஞ் சமயத்தில் பகவானை நோக்கித் துதித்து, "நானும் என்சரக்குகளும் இவ்வாபத்திலிருந்து மீளுவோமாகில் உன தன்பர் ஆக்கிர தாஸருக்கு இந்தச் சரக்குக் கிரையத்தில் ஐந்தில் ஒருபாகங் கொடுப்பேன்" என்று பிரார்த்தித்துக் கொண்டான். அவனுடைய பிரார்த்தனைக்கு இரங்கி சருவஸ்வாமி அவ்வர்த்தகனை யாபத்தினின்று மீட்பிக்க எழுந்தருளி யிருக்கின்றாராகையால் தேவர் பிரார்த்தனைக்கு இதுகாறுஞ் சேவை சாதித்திலர்; இன்னும் ஒருநாழிகைக் குள்ளாகச் சேவை கிடைக்கப்பெறும் என்றனர். ஆக்கிர தாஸர் இவர் மொழிகளைக்கேட்டு லக்ஷியமுறாமல் முன்போல் தியாநயோகத்தில் இருந்தார். பக்தவச்சலனாகிய பரந்தாமன் ஒரு நாழிகைகழித்துச் சேவைசாதிக்கத் தாசர் தீர்க்க தண்டப் பிரணாமங்கள் செய்து, நாமம் ஓராயிரம் நின்றேத்தி, இன்று நாழிகை பொறுத்துச் சேவை சாதித்ததும், திருவரையிற் சாத்திய பீதகவாடை யீரங்கொண் டிருப்பதும் யாதுகாரணமோ? சாதித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தலும்; ஜகந்நாதன் தனது திருப்பவளச் சோதிவாய் திறந்து, 'சமுத்திரத்தில் ஒருவர்த்தகன் தன் கப்பல் சரக்குகளோடு மூழ்கப்புகுந் தருணத்தில் என்னைநோக்கிப் பிரார்த்தித்து, உனக்கும் ஐந்திலொருபங்கு தன் சரக்குக்கிரையத்தில் தருவதாகக் கோரிக்கொண்டான்; ஆகையாலே, நான் சமுத்திரத்திற் சென்று, என் முதுகின்வழி கப்பலைத் தாங்கிக் கொண்டுவந்து கரை சேர்த்தேன்; உனக்கும் உன்மடத்தில் சாதுஜநங்களுக்காகப் பொருள் மிகுதியுஞ் செலவாகிறது; அதற்கும் உதவக் கூடுமென்று எண்ணிப் போந்தேன்; இதுவன்றி வேறுகாரணம் ஒன்றுமில்லை' என்று பிரசாதித்து மறைந்தருளினார். அவ்வளவில் தாஸரானவர், நாபாஜியுரைத்ததும் பகவான் சாதித்தருளினதும் விஷயம் சரியொத்திருக்கக்கண்டு, அதிசயங்கொண்டு, நாபாஜியைத் தம் அருகிலழைத்து, அப்பா! உனக்கு இவ்வாச்சரியமான சங்கதி யெவ்வாறு தெரிந்தது? என்று வினவ; அவரும், என்னை யடிமையிற் குடிமைகொண்டு ஆண்

டவா! தேவருடைய கிருபாநோக்கம் அடியேன்மீது பூரணமாயிருக்கின்றமையாலும், இவ்விடம் எழுந்தருளிச் சேவைசாதித்துப் போகும் பாகவதர்களுடைய திருவடி பலத்தாலும், அன்னோர் உச்சிஷ்டத்தின் மகத்துவத்தாலும் அறியலானேன்; இந்தப் பேதையைக் கைசோரவிடாமல் மீளவுங்கடாக்ஷித்து அருளல்வேண்டும்; நாதனே! என்று தீர்க்க நமஸ்காரஞ்செய்ய, அவரை வாரியெடுத்து மடியின் மீது உட்கார வைத்துக்கொண்டு, "வளர்த்ததனால் பயன்பெற்றேன்; பெரியோரை வணங்கினதால் பெரும்பேறு பெற்றவராயினீர்; இனி சந்தஜனங்களாகும் பகவத்தாசர்களுடைய திருவவதாரம், திருவிளையாடல் முதலிய மான்மியங்களை யிதயத்தறிந்து, கிரந்தரூபமாக இயற்றி, உலகத்தாருக்கு வழங்குவீராக" என்று திவ்வியாஜ்ஞை யிட்டருள, அவ்வாசாரிய நியமநத்தை நாபாஜிதாஸர் சிரமேற்கொண்டு, சடைமுடி யண்ணலாகுங் கைலைப்பதியினிடமிருக்கும் பவிஷியோத்தர புராணத்தில் அடங்கிய பாகவதர்களுடைய சரித்திரங்களைத் தமக்குக் கைவந்திருக்குந் திரிகால ஞானவிசேஷத்தால் குவாலர் தேசபாஷையில் அமைத்தருளினர். இன்னும் அநந்தம் பெரியோர் அநந்த கிரந்தங்களிற் சொல்லியும் இருக்கின்றனர். அவற்றை யெல்லாம் ஆதாரமாக வைத்துக்கொண்டு, அவற்றிலுள்ள சந்தசரித்திரங்களை மஹாராஷ்டிர பாஷையில் எழுதலாயினேன். இதனைப் படிக்குமவர்களுங் கேட்குமவர்களுந் திடதரசித்தம் உடையரா யிருப்பின் ஈசுவரனுடைய முகோல்லாசமுண்டாய், அதனால் மோக்ஷ சாம்ராஜ்ஜியத்துக்கு இலக்காவார்கள்; நானும் உற்சாகமுற்றுக் கவிரசத்தில் விருத்தியடைவேன்; விகல்ப சித்த முடையராய்ப் படிப்பினுங் கேட்பினுஞ் சமுசாரமாகிற பெருந்தூற்றில் அழுந்துவார்கள்.

விஷயமோ பாகவதவிஷயம்; அவர்களோ பகவத் கலியாண குணமாகும் அமுதத்தை யுண்டு களிக்குஞ் சுரும்பினமொத்தவர்கள்; அன்னோர் கீர்த்தி சல்லாபங்களைச் சொல்லப் புகுந்தயானோ அஜ்ஞன் அசக்தன்; இத்தகைய யான் சொல்லத்துணிந்த சிலவற்றில் ஏதேனுங் குறைவுபாடுகள் உண்டாயிருப்பின் க்ஷமித்து, குற்றங்களைந்து கோதாட்டும் அன்னைமார்போல ஆதரம்புரிவீர்களென்று மஹாராஷ்டிர கிரந்தகர்த்தா பிரார்த்தித்ததுபோல யானும் பிரார்த்தியாநின்றேன்.

முதலத்தியாய முற்றும்.

ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீ பாண்டுரங்கபரப்ரஹ்மணேநம.

ஸ்ரீ மத்

துக்காராம் சுவாமிகள் சரித்திரம்.

—:o:—

இரண்டாமத்தியாயம்.

காப்பு.

கலிவிருத்தம்.

பற்குநன்றன் றேர்கடவிப் பாஞ்சாலி துயரிகந்து
விற்குனித்துச் சீதைமணம் விரும்பிசிலை யெனக்கிடந்த
நற்குலத்துப் பெண்மணியை நல்லுருவ தாக்கியருள்
சிற்குணவா ரிதிசெய்ய மலர்த்தாளென் சென்னியதே.

ஸ்தோத்திரங்கள்.

ஜயஜய பாண்டுரங்கா! ருக்குமணிரமணா! உபேந்திரா! சேஷசயனா! செல்வராஜா! ஜகதவிலாசா! சத்துவகுணசீலா! சச்சிதாநந்தா! சதோதயா! சாந்தரூபா! சான்றோர் உளம்பூத்த தயாகரா! சகல பூதநாதா! ஆண்டவா! எங்கு நிறைகொள் இறைவா! ஏழையேனுள்ளத்தில் இன்பமுடன் இனிதமர்ந்து, எழிற்கொள் சோதியாம் நின் இன்பவிளையாட்டல்லால் பிறிதொன்றுக்கும் இணங்குறு மெய்யடியார் குழாத்துள் ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகள் கீர்த்திகளைக் கழறச்செய்து, அவர்தந்திருத்தாள் தாமரைக்கு ஆட்படுத்தாய்; தயாநிதி! தீநபந்து! என்று தியாநித்து, சரித்திரஞ் சொல்லத்தொடங்குவாராயினர்.



ஸ்ரீ·பண்டரிபுரம் யாத்திரைவாசிகள்

சரித்திரம்.

இங்ஙனம் மகிபதிதாசர் தமது ஞானவிசேஷத்தால், கைலேயங்கிரியண்ணலிடத்திருந்த பவிஷியோத்தர புராணத்தின் வரலாற்றையும், மற்றும் பெரியோர் உரைத்து வைத்த வாய்மைகளையும் நன்கறிந்து, சந்தஜந சரிதங்களைக் கிரந்தரூபம் அமைத்து, உலகத்துக்கு உபகாரந்தேடிவைத்ததில், ஸ்ரீய:பதியான சருவஸ்வாமியின் நிஜவடியார் பலருள்ளும் முக்கியமாய், பிரியபக்தி பாரவசியராய், தம்ம பக்திவிசேஷத்தால் ஸ்ரீ வைகுந்தநாதனையே வசீகரப் படுத்திக் கொண்டவராய், சூத்திரகுலத்திலே ஸ்ரீ பாண்டுரங்க நாதனையே குலதெய்வமாகக் கொண்டு, என்றும் ஆராதித்தும் வார்க்கரி சந்ததியிலே, தேஹூகாம் என்னுங் கிராமத்திலே திருவவதாரஞ்செய்தருளினவரான ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகளுடைய மெய்ம்மைசேர் சரிதத்தின் பூருவ விருத்தாந்தம் யாதெனில்:—

தேஹூகாமில் ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகளுடைய பாட்டனார் "விசுவம்பர பாவா" என்பவர் ஒருவரிருந்தார்; அவர் மெய்ப்பக்தியுஞ் சற்புத்தியும் வாய்ந்தவர்; பஜனை காலக்ஷேப பாரில் சதா பகவந் நாமோச்சாரணஞ் செய்துகொண்டிருப்பவர்; பிராமணோத்தமர்களுடைய பூஜாதுரந்தரர்; தாந தரும பரோபகாரங்களையுடையவர்; ஜீவகாருண்ணியம் உடையவர்; இவருடைய நிஜபக்திக்குத் தோற்று ஜனார்த்தநன் தேஹூகாமென்றவூரில் கருடவாகநாரூடனாய் எஞ்ஞான்றும் சேவையளித்து வருதற்குத் தங்கியருளினான். இத்தகைய புண்ணிய மேம்பாடரை, செய்தவங்கள் முற்றுஞ் செய்து பெறலரும் இப்புதல்வரைப், பெற்றெடுத்த அன்னை நோக்கி, குழந்தாய்! நமது முன்னோர் பண்டரீபுர நாதனுக்கு அடிமைகளாய், வார்க்கரி விருது பூண்டு, சதா பண்டரீபுரம் யாத்திரை செய்துக்கொண்டிருந்தார்கள். அந்த வமிசம் விளங்கத்தோன்றிய நீயும் அப்பிருதினைத் தவிர்க்காமல் வார்க்கரியாய், பண்டரீபுரத்திற்கு சாதுகோடிகளுடன் யாத்திரைசென்று, ரங்கநாதனைத் தரிசித்து, அவனுடை யரிய அருளைப் பெற்றுவருவாய் என்றுரைக்க, விசுவம்பரபாவா மிகு களிப்பெய்தி, மெய் புளகாங்கிதங்கொள்ள ஆநந்த பரவசமுற்று, ரங்கநாதா! என்று கூப்பிட்டுக் கூத்தாடி, தாயின் அடியிணைகளுக்குத் தீர்க்க பிரணாமங்கள் செய்து, நியமநம் பெற்றுக்கொண்டு, என் பாக்கியமே பாக்கியம்! என்று தம்மைத் தாமே வியந்துகொண்டு, ஊரைவிட்டுப் புறப்பட்டுப் பண்டரீபுர மார்க்கம் எகும்போது, வழியில் பஜனை செய்துகொண்டு வராநின்ற வார்க்கரிகள் பலரையுங் கண்டு, அவர்களுடைய திருவடிகளில் வீழ்ந்துவீழ்ந்து நமஸ்காரங்கள் அநந்தஞ்செய்தெழுந்து, ஆநந்தபரிதராய் நிர்த்தநஞ் செய்துகொண்டு, அவ் வார்க்கரிகளுடனே பண்டரீபுரம் சேர்ந்து, சந்திரபாகா நதியில் நீராடி, ஊர்த்துவ புண்டரங்களைச் சார்த்திக்கொண்டு, புண்டரீகரைத் தரிசித்து,

க்ஷேத்திரப் பிரதக்ஷணம் பண்ணி, மகாத் துவாரமடைந்து, சாஷ்டாங்க நமஸ்காரம் புரிந்து, கருட மாருதிகளை வணங்கிநின்று, ஆங்குச் சந்நிதியில் ஸ்வாமிசேவையின் ஈடுபாட்டால் மெய்மறந்து பஜித்து, ஆனந்தக் கூத்தாடாநிற்கும் வைஷ்ணவ வீரர்களோடு ஒக்கத் தாமும் ஆனந்தக் கூத்தாடி, ஸ்வாமி திருவடிகளுக்கு அருகேசென்று, மெய்புளகிக்க, மயிர்க்குச்செறிய, நாயேனையும் ஒரு பொருளாக்கி மநுஷியனைச் சிருட்டித்து, உன்னுடைய திருவடிகளைச் சேவிக்க வைத்தனை; நாதனே! "நாலுவித நரகம்புகும் பாவஞ்செய்த பாவியேன்; நின்பாலும் நின்னடியார்பாலுஞ் சற்றும் நலமில்லா நீசனேன்; நிறையொன்றுமிலேன்; என்கண் பாசம் வைத்த ஹே பரஞ்சுடர்ச்சோதீ! எனது தீயகுணநீர்மைகளை நன்கறிந்துள்ளாய்; இத்தகைய பாவியேனும், நின் மெய்யடியார்களாகும் வைஷ்ணவசிரேஷ்டருள் ஒருவனெனத் தீர்மானம் பூண்டுவந்து உன்னைச் சேவிக்கலானேன்; என் குற்றங்களை நீக்கிக் குணங்கொண்டு ஸ்ரீ பாதசேவையில் ஈடுபடுத்தியருளாய்" என்று இருகரங்களையுஞ் சிரசின்மீது உயரவெடுத்துக் கூப்புவார்; செங்கல்லினைப் பதுமமாகக் கொண்டு நின்றதொரு நீர்மைக்கு வியந்து சிரமசைப்பார்; இரண்டு திருக்கைகளையும் இடையின் மீது அமைத்துள்ளதற்கு ஆநந்திப்பார்; கதம்ப கஸ்தூரி துளபங்களைச் சாத்துவார்; ஆலாத்தி யெடுப்பார்; ஹே! ரங்நாதா! பலபிறவிக்கு நோற்ற நோன்பினாகிய பாவியேன் நின் ஸ்ரீபாதங்களைச் சேவிக்கக் கூடுமோ! என்று, பயந்துபயந்து திருவடிகளைத் தீண்டிக் கும்பிடுவார்; இப்படி ஐந்துநாள் பரியந்தம் சந்நிதானத்தில் இரவும் பகலுஞ்சேவையில் ஈடுபட்டு, ஆகார நித்திரைகள் ஒன்றுமின்றி ஆநந்த வெள்ளத்திலழுந்தி யிருந்து, சுவாமியிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு, தம் ஊரை நோக்கிப் புறப்பட்டுப் பகவானைவிட்டுப் பிரிய மநமில்லாமல், தாயைப்பிரியுங் கன்றுபோல் திரும்பித் திரும்பிச் சேவிப்பதும் பகவானுடைய திருமேனி திருவடிகளுடைய சுகுமார சுந்தரங்களை நினைந்துநினைந்து உள்கரைந்துருகி யாநந்தக் கூத்தாடுவதுமாக வந்து தமது ஊர் சேர்ந்து, மாளிகையிற் பிரவேசித்துத் தமது மாதாவைக் கண்டு மிகவும் ஆநந்தங்கொண்டு, சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து, தாயே! உமது அநுக்கிரகத்தினாலே பாண்டுரங்கநாதனைச் சேவித்து வந்தேன்; அவனுடைய சேவா மக

த்துவத்தையும், திருமேனி திருவடிகளின் லாவண்ணியத்தையும் என்னென்றுரைப்பேன்! தேவ ருஷியாதிகளாலேயே சொல்லமுடியாதென்றால் யான் சொல்ல சக்கியமோ! என்று தம்மைவிட்டுப் பிரிந்த நாள்முதல் நடந்த சவிஸ்தாரங்களை விளங்கவோதி, ஆடுவதும், பாடுவதும், சுவாமீ! என்று கைகூப்புவதும், பகவானது திருக்கோயில் எழுந்தருளியுள்ள திசையை நோக்கி நமஸ்கரிப்பதும், கன்றீனது அம்மா! என்னும் ஆர்வத்தொனிகொண்டு தாயைக் கூப்பிடுவதுபோல, ராதாருக்மணீரமணா! என்று கூப்பிடுவதும், ஜாக்கிர சொப்பந அவஸ்தைகளிலும், உண்டு உடுக்குங் காலங்களிலுங்கூட "அன்னையும் அத்தனுஞ் சுற்றமுங் குருவுநீயே" யென்று புகழ்வதுமாய்க்கொண்டு காலங் கடத்தி வந்தார்.

இப்படி யிருக்குங் காலத்தில் மறு தசமிநாள் வந்தது. அப்போது தாயினிடஞ் சென்று சேவித்து, அம்மணீ! பண்டரீநாதனைச் சேவிக்க நியமநஞ் சாதித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து விடைபெற்றுக் கொண்டு, தம்பூர் கையிலேந்தி, பெருந்தேவன் புகழோதும் பெரியோராகிய சாதுக்களுடன் கலந்து, பகவந் நாம சங்கீர்த்தநங்களைச் சொல்லிக்கொண்டு பண்டரீபுரம் சென்று, பீமாநதியில் ஸ்நானம்பண்ணி, ஊர்த்துவ புண்டரங்களையணிந்து, தெவிட்டா இன்னமுதாகும் இராம நாமாமிர்தத்தைப் பாநம் பண்ணிக்கொண்டு வந்து, சந்நிதாநம் புகுந்து, பேரருளாளனை முன்போல் சேவித்து, கண்களிலிருந்து ஆநந்தநீர் வெள்ளமிட்டோட, இருகைகளையும் முடிமிசையேந்திக் கும்பிட்டு நட்டமிட்டாடி, ஹேவிடோபா! உன் திருவடியல்லாற் பிறிதோர் புகலிடம் உண்டென்று மதியா ஏழையேனை யினியுன் திருவடி நிழலைவிட்டு அகல்விக்க வேண்டாம்; உன்னைப் புடைபெயர்ந்த அந்நாழிகை பல்லூழி காலமா யிராநின்றது; மநமும் தத்தளிக்கின்றது என்றிவ்வாறெல்லாம் சிந்திக்க, லக்ஷ்மீ ரமணனாகிய ஸ்ரீமந் நாராயணன் திருவுள்ளம் இரங்கியருளி, அவரை நோக்கி, ஏ - விசுவம்பர! ஆகாயம் - காற்று - அக்கினி - ஜலம் - பூமியாகும் இவற்றை யாசிரயமாகக் கொண்டு, முற்றுமுள்ள பௌதிக பதார்த்தங்களுமெல்லாம் நானும்படி யவற்றிற் குபாதாநமாய், சரீரத்தில் ஆத்துமாவியாபிக்குமாபோலே அந்தந்த பதார்த்தங்கள்தோறும் நான் வியாபித் திருக்கின்றேன். அன்றியும், பரந்து தண்மையாயிருந்துள்ள சமுத்திரத்தில் அதிசூட்சுமமான ஜலபரமாணுக்கள் தோறும், மகா ஆகாசமான இவ்வண்டத்தில் இருக்கின்றாப்போலே வியாபித்திருக்கின்றேன்; இப்படி பூமி ஆகாசங்களில் ஒன்றொழியாமல் அதிசூட்சுமமாய் அல்பமான ஸ்தலங்கள் தோறும், அந்த ஸ்தலங்களிலே திகழும்படியான ஆத்தும வஸ்துக்கள் தோறும், எங்கும் வியாபகனா யிருக்கின்றேன்; சூரியனானவன் பூமியின்கண் வியாபித்து ஒளிதந்தாலும் அவ்வியாபகத்துக்கு அங்கமான கிரணங்கள்

அந்தச் சூரியனிலேதானே பொடுங்குமாபோலே நான் எங்கு நிறைந் தவனுனாலும் என்னுடைய வியாபகம் என்னுள்ளேயே யொடுக்க மாம்; பிறருக்குத் தோன்றாது; உன்னுள்ளும் நான் வியாபித்திருக் கின்றேன். உன்னுள்ளும் உன்னைப்போன்ற சஜ்ஜநருள்ளும் உறை யும் என்னிருப்பானது அன்றலர்ந்த தாமரையின்மீதிருக்கும் இருப்பாகும். சமுசாரி சேதநர்களாகுந் துர்மானுஷியர்களுடையிரு தயத்திலிருக்கும் என்னுடையிருப்பு முள்மேலிருப்பதாகும்; பொன் ஒன்றேயாம், பூண்பவர்களால் வெவ்வேறாக ஆபரணங்கள் ஏற்படுமா போலே எங்கும் நானேயாய் வியாபகங் கொண்டிருந்தாலும் அஜ்ஞாந அந்தகாரத்தில் மூழ்கிக்கிடக்கும் பக்தசேதநர்களால் வெவ்வேறாகப் பரிணமிக்கப்பட்டு இருக்கின்றேன்; ஆபரணங்கள் பலவுந்தந்தம் உருவுகளை மாறப் பெற்றபோது பொன்னாகவே திகழுவதுபோல் அப் பத்தாத்துமாக்களால் வெவ்வேறாகப் பரிணமிக்கப்பட்டவை யழியப் பிரளயகாலம் வாய்த்தவாறே நானொருவனே நாசரகிதனாய்த் தனியே நிற்கின்றவன்; என்னுடையிந்த ஐசுவரிய யோகமானது வேத வேதாந்தங்களில் விஸ்தாரமாய்க் கூறப்பட்டிருக்கு நிர்க்குண யோக மாகாநின்றது. இவ்விஷயங்களை நீர் இருதயத்தில் வைத் துக் கொண்டு உமது நாடுபோய்ச்சேர்ந்து, இருந்த இடத்திலிருந்தே யென்னை சாக்ஷாத்கரித்துக் கொண்டிரும் என்று பகவான் புகலலும் விசும்பரபாவா வானவர் சுவாமியை நோக்கி தண்டப்பிரணாமஞ் செய்து, ஏ - ஜகந்நாதா? இப்போது நீ யுரைத்த ஆத்துமஜ் ஞானமானது எனக்கோர் பிரியம் உண்டாக்கினதில்லை; என்னு டைய பிரீதி யானது சகுண யோகமாகுந் திருவவதாரங்களிலும், அருச்சா சமாதியிலும் ஊன்றி யிருக்கின்றதே யன்றி நிர்க்குண யோகத்திற் செல்லவில்லை; நீ சருவத்தையும் வியாபித்து, லோகமெ ன்றுசொல்லப்பட்ட சராசர மயமான பிரபஞ்சத்திலும் பதின்மடங் கதிகமாய், பூத பவிஷியத் வஸ்து சாதநங்களாய்க்கொண்டு புரு ஷோத்தமனாய், விராட்டென்று சொல்லப்படு மவ்வியக்த சரீரகனாய் நிருவிகாரனாக இருந்தாலும், அந்தவுன்னுடைய சொரூபமானது மந மாதி கரணங்களுக்கும், மெய்யாதி இந்திரியங்களுக்கும் ஒருக்காலு மறியப்படா தாகும்; வேதங்களுக்கே விள்ளாதது என்னும்போது இந்தச் சொரூபம் என்னால் விளங்கவசமோ? அத்திமரத்தில் தொத் திய எண்ணறு கனிகளில் ஒன்றினுள் உறைகின்ற சிற்றுயிர்களாகு

மருமான்கூட்டத்தில் ஒன்று அம்மரத்தினேர்மை யறியாதது போலேயுனது அந்தவிராட்டுருவத்தின் எண்ணறும் உரோமமொழுக்குகளில் உண்டாகும் இலக்கமில்லாத அண்ட சமூகங்களில் ஒன்றினிடத்துத்தோன்றிய அநந்த ஆத்துமகோடிகளில் ஒருவனுகும் அடியேன் அவ்வுருவங் காணுதல் அம்மா! அரிதுஅரிது!! ஏ ஜகத்காரணபூதா! ஒருவேளை, நானே யுனக்கு நிவாச தீபம்போல் சலநமில்லா மநோநிலை தந்து எனது விராட்டுருவத்தின் அவ்வியக்த சேவையையும் அருளுவெனென்பாயேனும், நீ தரும் அந்த நிச்சலமநமே யொன்றையுணர வொட்டாததாகும், ஆமிடத்தில் ஒன்றை யுணர வொட்டாத நிச்சலமநத்தால் நீயே சாதித்தருளும் அந்த அவ்வியக்த சேவையை யெங்ஙன் சேவிப்பேன்? அந்த சேவையால் உண்டாகும் ஆநந்தாதிசயங்களை யெத்தால் எதைக்கொண்டு அனுபவிப்பேன்? நிச்சலமநமுடையவன் ஆனபோதே யற்றமநத்தனுவேன். அற்றமநத்தன் ஆனபோதே நானும் அற்றவனுகிறேன். அதினளவில் உன்னுடைய பிராப்தியும் இழந்தவன் ஆகின்றேன். ஏ! இறைவா! இத்தகைய அருளெனக்குப் பிரசாதித்து அருளவேண்டாம். அன்றியும், என்னுடைய ஐசுவரிய யோகமானது நிர்க்குண ரூபமென்று அருளினீர்; நிர்க்குணரூப ஐசுவரியமாயின் எந்த குண ரூபங்களால் அறிவது? எந்த குண ரூபங்களை மநதிற் பதிந்து சாக்ஷாத்கரிப்பது? எந்தகுணங்களைச் சொல்லித் துதிப்பது? அல்லது, நீ சமசரணனுய்க் கொண்டு இடையில் திருக்கைகளை யூன்றினவனுய்ச் செங்கல்லின்மீது நின்று நின்று தரா நிற்கும் அச்சேவையிலாவது ஈடுபடலாமென்றல் அதற்கும் விரோதமுண்டாக நிச்சலமநதை யருளுவதாகச் சாற்றியருளினீர். அந்த மநமாதிகள் ஒன்றிலொன்று அடங்கி நிச்சல தசையடையுமிடத்தில் வேறெந்த மநதினைக்கொண்டு அத்திவ்விய திருவுருவத்தைதக் காணு நிற்பேன்? மநமற்றபோது உன் பக்தியை யெப்படிச்செலுத்துவேன்? இருதயமற்றபோது உன்னையெப்படி தியாநிப்பேன்? வாயற்றபோது உன்னை யெப்படி கீர்த்திப்பேன்? கண்ணற்றபோது உன்னை யெப்படிச்சேவிப்பேன்? காதற்றபோது உன் பிரபாவங்களை யெப்படிக்கேட்பேன்? கையற்றபோது உன்னை எப்படித்தொழுவேன்? காலற்றபோது உன் கோயில்வலம் எப்படிவருவேன்? இவற்றை யெல்லாம் நினைக்குந்தோறும் உன்னுடைய நிர்க்குண ரூப ஐசுவரியத்தினிடத்தில் ருசியுண்டாகா நின்றது. ஆதலால் விசுவேசா! அவற்றிலென்னைப் புகுதவொட்டாமல் தடுத்து, உன்னுடைய சகுண யோகத்தில் அழுந்துவிப்பாய்; என்று பிரார்த்தித்துநிற்க, ஜகதீசனு—

கும் பாண்டுரங்கன் புன்னகைகொண்டு, அப்பா குழந்தாய்! உனது மொழியில் அமுதரசம் ஒழுகாநின்றது; நீ பிரார்த்தித்தபடியேயாகுக; நீயெந்தவிடத்திலிருந்து என்னைப் பஜிக்கின்றாயோ அந்தவிடத்தில் நானிருந்து கடாக்ஷிப்பேன்; ஆனாலுனக்கு ஓர்வகை திருஷ்டியுண்டாகும்; அதனை நான் கழித்துவிடுவேன்; அதற்கு நீ யஞ்சவேண்டாம் என்று சந்தோஷசித்தராய், அவர் முடிமீது தமது பாரளாவிய திருக்கைகளை வைத்து ஆசீர்வதித்து, உபதேசரூபமாக ஸ்ரீ ஹரிநாமாமிர்தத்தையூட்டி, தமதூருக்குப் போக விடைகொடுத்தருளினான். விசுவம்பரபாவாவும் சருவசுவாமியின் நியமனத்தின்படியே தமதூருக்குத் திரும்பிவந்து, சதா ஸ்ரீ ராமநாமாமிர்த பாநீயராய்ச் சுகமாக வாழ்ந்துகொண்டிருந்து, பக்ஷத்துக்கு ஒருமுறையாக ஏகாதசிதோறும் பண்டரிபுரம் சென்று சேவித்துவரும் விரதமுடையவரா யிருந்தார்.

இங்ஙனிருக்க, தேவுகாமிலிருக்கும் ஜநங்களெல்லாம் விசுவம்பர பாவாவின் பிரமஜ்ஞாநசம்பத்தையும், நன்னடக்கைகளையுங்கண்டு ஆச்சரிய அதிசயங்கள்கொண்டு, இவர் சமுசாரத்தைவிட்டுப் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை பண்டரிபுரம் போவதும் வருவதுமா யிருக்கின்றார். பாண்டுரங்கன் திறத்தில் பிரேமை யிருந்தால் அந்த ஸ்தலத்திலேயே யிருந்துவிடலாமல்லவா? இங்கு சமுசாரத்தில் இச்சை விடாததினாலல்லவோ வருவதும் போவதுமா யிருக்கின்றார்; இவரைச் சமுசாரவிச்சையும், சருவேசுரன் இச்சையும் ஆக விரண்டும்பற்றி வலிக்கின்றன. "இருபாடெரியுங் கொள்ளியி னடுவிற்சிக்கிய எறும்புபோல் தவித்து அலமருகின்றார் என்பார்சிலரும், இவர் மகாநுபாவர், இவர்திறத்தில் அபசாரப் படலாகா தென்பார்சிலரும், இவரைப் போன்ற பக்திமான்களை நாம் காண்கிலோம்" என்பார் சிலருமா யிருந்தார்கள். இவற்றை யெல்லாம் பாவா கேட்டுங் கேட்காதவரைப்போலிருந்து தமது நெறியைத் தவிர்க்காமல், மாந அபிமாநங்களற்று, பாண்டுரங்கநாதனுடைய திவ்விய திருவடிகளைத் தமது இதயத்திற் பதித்துக்கொண்டு பக்தியுக்தரா யிருந்தார். இவ்வகையாகக் கார்த்திகை மாசமுதல் ஆனிமாசம் வரையிலுங் கூடிய மாதங்கள் எட்டு பரியந்தமும் வைராக்கியங் கொண்டு விடாபக்தி செய்துகொண்டிருக்கவே அப்பக்தி மிகுதிக்கு ஸ்ரீ வைகுண்டநாதன் ருணஸ்தனாய்க்கொண்டு ஒன்பதாமாதத்தில் அஷ்டமி யிரவில், விசுவம்பர பாவாவினுடைய சொப்பநத்திலெழுந்தருளி, என் பிரியனே! எனக்கு நீ சேவைசெய்து என்னையே ருணஸ்தனாக்கிக் கொண்டாய்; நான் உன்னூருக்கு வந்துவிட்டேன்; இனி நீ பண்டரிபுரம்

யாத்திரை செய்யவேண்டா; இதுபரியந்தம் நீ செய்திருக்கிற பக்திக்கேபதிலுபகாரம் யான் செய்யக்கூடாதவனாய் ருணஸ்தனானேன்; நானுனக்காக இங்கேயே குடியிருந்து, உன்னைக் கிருதார்த்தனாக்க வந்தேன் என்று பிரஸாதித்து, அருகிலிருந்த மாந்தோப்பினுள் புகுந்தருள, பாவாவுந் துயில் விழித்துக் கொண்டு, சொப்பனத்திற் கண்டகாக்ஷியை நினைந்து நினைந்துருகி, நாமோச்சரணங்கள்செய்து, ஆவா! ருக்குமணீ நாதனே பிரத்தியக்ஷமா யெழுந்தருளி சேவை தரப்பெற்ற என்னுடைய பாக்கியமே பாக்கியம்! என்னைப்போன்ற பாக்கியவந்தர்கள் இவ்வுலகினில் யாரிருப்பார் எனத் தம்மைத்தாமே வியந்து, ஹரிவிட்டலா பாண்டுரங்கா! என்றடிக்கடி ஸ்மரித்து, அங்குள்ள பெரியவர்களாகும் சாதுக்களுக்குத் தமது சொப்பன விருத்தாந்தத்தை யுரைக்க, அவர்களும் வியந்து, ஹரிவிடேல்! பண்டரீநாதா! பதிதபாவனா! என்று பலபல நாமங்கள் கொண்டேத்தி, நிருத்தங்களுஞ் செய்யலாயினர். பக்தியின் தன்மையறியா மூடரும், அவித்தியாருசி சம்பந்திகளுமாவார் சிலர், இது சூது, சொப்பனத்திற் கண்டது பொய்யேயல்லால் மெய்யாகாதென்று உரைத்தார்கள். இவ்விதமாய் அவ்வவர்களுக்குத் தோன்றியபடியெல்லாங் கூறிக்கொண்ட வசநங்களை லக்ஷிய முறுத்தாமல், தாஸர் கையில் தம்புரையேந்திப் பாடுவார், ஆடுவார், தம்பித்து நிற்பார், ஹரிவிடேல்-பாண்டுரங்கா! என்று பஜிப்பாராய் இருக்கக்கண்ட சாது ஜநங்கள் பஜநகோஷ்டியாராய், அவ்வூர் வாசிகளும், தாஸருடைய அதிசயங்களைக் கேட்டுச்சேவிக்கவந்த அக்கம்பக்கங்களிலுள்ள வூர்ஜநங்களுஞ்சூழத்திரண்டு, ஸ்ரீ ஹரிநாம சங்கீர்த்தநங்கள் செய்துகொண்டு அவ்வநத்திற்குச் சென்றபோது, அவ்விடத்தில் ஓர்புறங் குளிர்ந்தவிடத்தில், கதம்ப கஸ்தூரிகளுந் துளபமாலைகளுங் குவியல் குவியலாகக் குவிக்கப்பட்டுப் பரிமளம் வீசக்கண்டு, ஓ! ஓ!! விசுவம்பர தாசர் உரைத்தது சரியே! அவருக்குக் காட்சி தந்து பேரருளாளன் இவ்வநத்தில் எழுந்தருளி யிருக்கிறான்; நாம் பாபிகளும் பக்தியில்லாப் பாமரர்களுமாகையாலே யவ்வாதியஞ்சோதி நமக்கெல்லாஞ் சேவை சாதித்தருளாமல் மறைந்திருக்கிறான்; விசுவம்பர தாஸரே யவனுடைய சேவைக்குகந்தவர் ஆவர்! அவருடைய பாக்கியம் என்னென்போம்! மகாத்துமா! என்றிப்படியெல்லாஞ் சாது கூட்டமும் ஊர்ஜநங்களும் வியப்புற்றிருக்குந் தருணத்தில் ஆகாயவாணி யந்தரத்தி லிருந்து கொண்டு அசரீரியாக, ஓ ஜநங்களே! சருவசுவாமியும், சருவலோக நியந்தாவுமான ஸ்ரீமந்நாராயணன் இராத்திரி மகாத்துமாவாகிய விசு

வம்பரபாவாவினுடைய சொப்பநத்தில் சேவை சாதித்தருளி யிவ் விடம் எழுந்தருளினது உண்மையே! ஐயுறவேண்டாம், அந்தப் பரிமள திரவியங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடத்தில் ஆயுதங்களாலன்றி கைகளாலே மண்ணைக் கிளறிப் பார்க்கவேண்டியது; மேலும், இந்த விசுவம்பர தாஸருடைய சந்ததியில் சுகுணமுள்ள ஓர் ஸ்ரீ வைஷ்ணவ சிரேஷ்டர் அவதரிக்கப்போகின்றார்; அவருடைய கீர்த்திப் பிரதாபத்தாலும் மாகாத்துமியத்தாலும் உலகு உத்தரிக்கப் போகின்றதென்று உரைத்து மறைந்தது. அவ்வாக்கிய அதிசயங்களைக்கேட்ட கோஷ்டிகளுந் தாஸரும் ஆநந்தபரிதர்களாய், கைகொட்டி ஸ்ரீராம நாம சங்கீர்த்தநஞ் செய்துநிற்க, விசுவம்பர தாசர் வாணியின் வாக்கிய பரிபாலநத்திற்காக, அந்த வாசனைத்திரவியங்கள்வைக்கப்பட்டிருந்த பூமியைத் தமது திருக்கைகளால் கிளறிக் கிளறி யெடுக்கத் துளப ஹாரமும், புஷ்பமாலைகளும், கதம்பப் பொடியுமாய் வரக்கண்டு அதிசயங்கொண்டு, ஹரிவிடேல்! பாண்டுரங்கா! என்று பாடி, அந்த வாசனைத் திரவியங்களை யெல்லாம் பறித்துப் பறித்து வெளியிற் சேர்த்துக்கொண்டு,வராநிற்கையில்தாஸருக்கு மெய்ம்மறதியும்,மநஸ் தம்பநமும் உண்டாயிற்று. அப்போது சர்ணியன், இடப்பாகத்தில் ருக்குமணீ பிராட்டியும், சாமளத் திருமேனியும், கழுத்தில் துளப மாலையும், பீதாம்பர தாரணமுங் கொண்ட மூர்த்தீகாரமாய்க் காட்சி தந்தருளினார். அந்த மெய்க்காட்சியைக் கோஷ்டியிலிருந்தார் ஒவ்வொருவருங் கண்டு ஆநந்தங்கொண்டு பாடுவார் சிலர்; தங்களை மறந்து ஆடுவார் சிலர்.; உகந்து ஆலிப்பார் சிலர்; விழுந்து சேவிப்பார் சிலர்; நாம் எத்தவஞ் செய்தோமோ! என்று தங்களைத் தாங்களே வியப்பார் சிலர்; நாம் நமது அஞ்ஞாநத்தால் இந்த விசுவம்பர தாஸரை மநுஷியரென்று எண்ணியிருந்தோம்! அவர் மநுஷியரல்லர் உம்பருள் ஒருவரே யென்பார் சிலர்; இவருடைய திருவடி சேவைசெய்யப்பெற்றால் பாமரத்துவங்களெல்லா பாரிப்பறந்துபோய். என்றுந் தெவிட்டா ஆநந்த அமுதசாகரத்திற் படிந்து குளிர வாழலாமென்பார் சிலர்; இவ்விதமாகக் கோலாஹலத்துடன் ஸஸம்பிரம நிருத்த கீதங்கள் பண்ணி, உண்பன வுடுப்பனவற்றிற் சற்று மநமியலாமல் ஈசுவரேகத்தியாந பாரணர்களாய் நாடுநகரு நன்குற்றுத் தெளிந்தோதற்குரியரா யிருந்தார்கள்.

விசுவம்பர தாசரும் அந்த ஆதியஞ்சோதியின் திருவுருவத்தைத் திருக்கைகளில் ஏந்திக் கொண்டு, பஜனை கோஷ்டிகள் பஜிக்கவும், பலபல வாத்தியங்களிசைக்கவும், தேவுகாமுக்கு அருகிலிருக்

கும் இந்திராணி நதீ தீரத்தில் ரம்மியமான ஓரிடத்தில் வந்து, வேண்டிய சாமக்கிரியைகளைச் சேகரித்து, வேத வேதியர்களாகும் பிராமணோத்தமர்களைக்கொண்டு சம்புரோக்ஷணைக்கு வேண்டிய கிரியைகளெல்லாம் நிறைவேற்றி, சம்புரோக்ஷணை முடித்து, வேதோக்த மந்திரங்களையும் பூரித்து, திருவாராதநங் கண்டருளச் செய்து, பஞ்சாமிர்த முதலியவற்றால் திருமஞ்சனமாட்டி, ஈரம்புலர்த்தி, பீதாம்பரம் சாத்தி, காதுக்குக் குண்டலமும், கழுத்துக்கு மணிகளொளி பணிகளும், தோளணிகளும், மார்புக்குப் பொற்புரிநூலும், இடைக்குத்தங்கக் கச்சமும், தோள்களுக்கு வளையமும், முன்கைகளுக்குப் பொற்கங்கணங்களும், திருவடிகளுக்குச் சலார்ச் சலாரென்று ஆர்க்குஞ் சிறு சதங்கையுமிட்டு, பூமாலை திருத்துழா யலங்கல் முதலானவற்றால் அலங்கரித்து, பூரணப் பொற்குடங்களும், மங்கல தீபங்களுமேந்தி, ஆசிகள்கூறி, மங்களார்த்திகளோடு கும்பார்த்திகளுமெடுத்து, "நெய்யிடை நல்லதோர் அடிசிலும்" அப்ப வருக்கங்களும், பரிபி, பேணி, தூத்பேடா முதலிய மிட்டாய் வர்க்கங்களும், திருக்கண்ணமுது, அக்காரவடிசில் முதலானவையும் அமிசை கண்டருளப் பண்ணி, திருச்சுருள் சமர்ப்பித்து, "மெய்யிடை நல்லதோர் சாந்தமணிவித்து" பலபலவுபசாரங்கள் கண்டருளப் பண்ணி, தத்சேஷங்களைக்கொண்டு பிராமண சந்தர்ப்பணங்களுந் ததீயாராதநங்களுஞ் செய்து, இதுவே வைகுண்டம் என்னலாம்படி யெல்லா அலங்காரங்களும் பொருந்தவைத்து, ஆநந்த பரவசராயிருந்து வாழ்ந்துவந்தார்.

இப்படி நாள்தோறும் நடந்து கொண்டு வராநிற்க, விசுவம்பரதாஸரானவர், ஒருநாள் பேரருளாளனுடைய சேவையிலீடுபட்டு, இரு கைகளையுஞ் சிரசின்மீது எடுத்துக் கூப்பிக் "கும்பிட்டு நட்டமிட்டாடித்துதிகள் பலசொல்லி நிற்கக்கண்டு" பாண்டுரங்கமூர்த்தி தாஸரைக் கடாக்ஷித்து, உனக்கென்ன வேண்டும்? என்று தம் அமுதவாயலர் அலர்த்திப் பிரஸாதிக்கவும், தாஸர், சுவாமின்! தேவர் பிரஸாதத்தால் அடியேனெல்லா பாக்கியங்களையும் பெற்றவனாயினேன்; ஒன்றாலும் அடியேனுக்குக் குறைவில்லை; அடியேனுடைய கால் வழியில் பின்னாக வருமவர்களுக்குங்கூட சற்புத்தியும், உன்னையே துதிக்கு மநமும், உனது நிஜபக்தியுந் தந்து காப்பாற்றி யருளவேண்டும்; அம்மா! ஈதொன்றே யடியேன் வேண்டுவது! வேறொன்று நாடிலேன் என்று விண்ணப்பம் பண்ணி, பற்பலவகை துதித்து நிற்க, அத்தனுந் திருவுள்ளம்பூத்து, உன்னிஷ்டத்தின்படி வரமளித்தேன்; அஞ்சன்மின்! இதோ ஆதிவாகிகளால் விமாநங் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதிலேறி, எனது மோக்ஷ

வீடாகிய திவ்விய ஸ்ரீ வைகுண்டம் போய், நித்தியவாழ்வில் இனிது வாழ்ந்திருப்பாயாக; என்று அநுக்கிரகித்தருள, தாஸரும் சந்தோஷசித்தராய், பேரருளாளனையும், விமானத்தையுஞ் சேவித்து, தமது ஸ்தூல தேகத்தை யங்கேயேவிட்டு, சூட்சுமசரீரம்பெற்று, விமானத்தில் ஆரோகணித்துக்கொண்டு, ஆதிவாகிகள் விமான நடத்தப்போய், "தெளிவிசும்பு திருநாடடைந்தனர்" இவ்விசேஷங்களையெல்லாம் நன்கறிந்திருந்த ஸஜ்ஜநகோஷ்டிகளும், அவ்வூர் ஜநங்களும் தாஸருடைய திருமேனியை விதிப்படி திருப்பள்ளிப் படுத்தினார்கள்.

விசுவம்பரதாஸரானவர், திருநாட்டுக்கு எழுந்தருளவே, அவருடைய தேவியாரான அம்மாபாயம்மாள், தந்நாயகரிருந்த நெறிவழி நின்று, இரவும் பகலும் பக்திசெய்து, சேஷசாயியாகும் பெருமாள் திருவாராதந முதலியவை நடாத்துவித்து, 'ஹரிநாதன்' என்றும், முகுந்தன்' என்றும் நாமங்களைப் பெற்றிருந்த இரண்டு புத்திரர்களையும் பாதுகாத்துக்கொண்டு, சுகுணவதியாய், குடும்ப வழியிலிருந்து, பரமனையே பஜித்து வருவாராயினர். இப்படி நிஜபக்தியுடன் ஸ்ரீ ஹரிமலர்ப்பாதமே தஞ்சமாகக் கொண்டு பணிந்துவரும் அம்மாபாயவர்கள் சொப்பநத்தில் பதிதபாவநனாகும் பாண்டவர்சகாயன் எழுந்தருளி, ஏ! அம்மா! என்னால் ஆகவேண்டிய காரியங்கள் ஏதேனு முண்டாயிருப்பின் சொல்லக்கடவாய்; நான் அவற்றை முடித்துவைப்பேன் என்று கூறலும், அம்மாபாயம்மாள், அடியற்றமரம் போல் பூமியிற் படிந்து நமஸ்காரஞ்செய்து வணங்கிநின்று, சுவாமின்! இராதா ருக்குமணீரமணா! தீநபந்தோ! தேவர் அடியாளையும் ஓர்பொருளெனத் திருவுள்ளமிரங்கித் திருவடிசேவை தராநிற்கையில் அடியாளுக்கு வேறு பிரார்த்தனையும், குறைவுபாடும் உண்டாகுமோ! உம்பருக்குமறியா வொப்பில் பாக்கியம் உடையேனாயினேன்; இனியென்ன குறைவுண்டு இவ்வடியாளுக்கு? பச்சைமேனியனே! பவளவாயா! பதுமக்கண்ணா! அச்சுதா! அமரரேறே! ஆயர்குடிக்கரசே! என்னு மிச்சுவை தவிர்த்து இகபரசுகங்களில் வேறு விரும்பிலன்; ஆதலால், இக்குணமாத்திரம் என்று மாறுவகை காத்தருளல்வேண்டுங் கருணையங்கடலே! கார்நிறத்தெந்தாய்! என்று, பலபல துதித்துப் பிரார்த்தித்துப் பூமியில் மறுபடியும் வீழ்ந்து சேவிக்கவும், செல்வநாரணன் அவ்வம்மையைத் தனது திருக்கைகளால் வாரியெடுத்து மார்பிலணைத்துக்கொண்டு, அம்மணீ! அஞ்சவேண்டாம்! உனது இஷ்டத்தின்படிகாக்கிறேனேன்று அநுக்கிரகித்துமறைந்தருளினன். பிறகு அம்மாள் சொப்பநந்தெளிந்து ஜாக்கிரதையடைந்து, தம்

சொப்பநத்தில் ரக்ஷகனெழுந்து பிரஸாதித்தவற்றையெல்லாம் எண்ணியெண்ணி, பெருமூச்செறிந்து, பண்டரிநாத! பக்தசஹாயா! அடியாள் திறத்தில்தேவர்காருண்ணியம்உண்டாய் அபயப்பிரதாநஞ் செய்யுங்கைம்மாறியாதோ அறிகிலேன்; கமலைத்துறைவாள் உறை மார்பா! என்று மெய்சோர்ந்து வாடி, தம்மில் தாமே தெளிவுகொண்டு நெஞ்சால் நினைப்பதும் வாயால்புகழ்வதும், நேர்ப்பட்ட கைங்கரியங் களைச் செய்வதுமாயினர். இவ்வாறாக இவ்வம்மாபாய் நிஷகாம கருமங்களைச் செய்து, ஒன்றிலும் அபேக்ஷ வையாமல் பக்தி பரவசையாயிருந்தமையால், இவருக்கு வேண்டிய அபீஷ்டங்களையெல் லாஞ் சருவேசுரன் குறைவற நடாத்தி வந்தான்.

இப்படியாக நடந்துகொண்டு வருங்காலத்தில், விசுவம்பரதாஸ ருக்கு அம்மாபாயம்மாள் திருவுதரத்திலே தோன்றின புத்திரர் களாகும் ஹரிநாதன், முகுந்தன் என்னும் இரண்டு பாலியர்களுங் கூடி யோர்நாள் யோசித்ததாவது: நமது தாய் தந்தையர்கள் தங்கள் காலமெல்லாம் ஸ்ரீ ஹரியினிடத்திலே பக்தி செலுத்தி, உலக வாழ்க் கைச் சுகங்களை யெண்ணமல் அதற்கேற்ற பொருளையுஞ் சம்பா திக்காமல் சாதாரண குடும்பஸ்தராக இருந்து காலங்கழித்தார்கள்; நாமும் அவ்வாறிருப்பது தகுதியன்று; இராஜனைக்கண்டு தரிசித்து, பாரி யுத்தியோகங்களைப் பிரார்த்தித்துப் பெற்று, விசேஷமாய்ப் பொருள் சம்பாதித்து, ஆனை - குதிரை - தேர் - சிவிகை முதலியவை யேறித்திரிந்து, இகலோகசௌக்கியங்களை நன்றாய் அனுபவிக்கக்கட வோம்; இதற்கு மிஞ்சின சுகங் கிடையவே கிடையாது; இதை விட்டு இரவும் பகலும் பண்டரிநாதனை பஜித்துத் திரிவதில் பயன் சிறிதுங் காண்கிலம்; சுகமுங் கிட்டாது என்று இருவருந் தாயினி டம் வந்து வணங்கி, நாங்கள் தகுந்த வுத்தியோகங்களைச் சம்பா திக்க இராஜாங்கத்திற்குச் செல்கின்றோம்; விடை கொடுக்கவேண்டு மென்று பிரார்த்தித்தார்கள். தாயான அம்மாபாயம்மாள் தங்குமா ரர்கள் சொன்னவற்றைக்கேட்டுப் புன்னகைகொண்டு, அப்பா குழ ந்தைகாள்! உங்களுக்கு இந்த விபரீதபுத்தி சுயமாயுண்டானதா? அல் லது யாவரேனும் போதித்து வந்ததா? அல்லது உங்கள் பூருவ கரும சம்பந்தமானதா? உங்கள் வார்த்தைகளைக் கேட்க ஆச்சரியமாயிரா நின்றது; ஆகிலும்பெரியோர்களும், இருடிகளும், புராண இதிகாசங்க ளும், வேத வேதாந்தங்களுஞ் சொல்லுஞ் சிலவற்றை நான் தெரிந்த மட்டிலே சொல்லுகிறேன் கேட்பீர்கள்; "மண் - பொன் - பெண் என்னு மூன்றாசைகளும் பற்றாக வுடையவர்கள் அருநரகத்திற்கு

ஆளாவார்கள்; அம் மூன்று பற்றுக்களையுந் தவிர்ந்து நின்றால் முகுந்தனுகும் சருவேசுவரனுக்குப் பிரியர்களாய், முப்பத்துமுக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணுயிரம் இருடியர்களும், கருட - கந்தருவ - சித்த - வித்தியாதரர்களும், நவப்பிரஜாபதிகளும், ஏகாதச ருத்திரர்களுந் தேடிக் காணுப்பரமபதப் பிராப்தி பெற்று இனிதாக வாழ்ந்திருப்பார்கள். அன்றியும், அத்தகைய மகான்கள் இன்னும் ஏதேது அபேக்ஷிப்பார்களோ அவற்றை யெல்லாந் தந்தருள்வேன்'' என்று விருதுகூறி, துஜஸ்தம்பமும் நாட்டியிருக்கின்றான் நமது பண்டரீபுரநாதன்; அதன்படியே உங்கள் தந்தை முதலிட்ட சாதுக்களுக்குத்தனது சாலோக-சாமீப-சாரூப-சாயுஜ்ஜியங்களாகும் பதவிகளைத் தந்து நித்திய முக்தர்களோடு சேர்த்துத்தனது வாழ்வினைப்பெற்று வாழ அருளியிருக்கிறான். இது பரமாநந்த சுகவாழ்வுக்கு நீங்கள் இப்போது கருதிநின்ற இச்சுகம் அணுமாத்திரமும் ஈடுகொள்ளாது; ஸஜ்ஜநங்களாகுஞ் சாதுக்களுடைய சேவையினால் சிருஷ்டி-ஸ்திதி-சம்மார - திரோதய - அநுக்கிரகங்களாகிற பஞ்சகிருத்தியங்களும் உண்டாகும்; அஷ்ட சித்திகளும் பெறக்கூடும்; இவையெல்லாந் தம்ம சொகாரியங்களாலே வரக்கடவனவாயிருக்க இவற்றைவிட்டு அல்ப ராஜனிடஞ் சேவகஞ்செய்து, அவன் தரும் சொல்பதிரவியத்தால் மலமூத்திரங்களில் துவளும் ஊனுடை யாக்கைகளை வளர்த்து, மதோன்மத்தர்களாய், நானெனதென்னும் அகங்கார மமகாரங்களில் மண்டி, யமகிங்கர வசியர்களாய் இரௌரவம் - கும்பீபாகம் - பூதி-மாபூதி யாதியான நரகங்களுள் தள்ளுண்டு அழியவா இச்சித்தீர்கள்! ஆவா! குழந்தைகாள்! தீர்க்காலோசனைசெய்து நல்வழிக்குப் பாத்திரர்களாகுங்கள்; வீணே அழியப் பாராதீர்கள்! என்று பல பல புத்திகள் கூறியுங் கேளாமல், தம் பிடிவாதமே பற்றிநின்ற சிறுவர்களைப் பார்த்து மறுபடியுந் தாயான அம்மாபாய், அப்பா! இனியு நானென் செய்யமாட்டுவேன்? தாஸ் குடும்பத்திற் பிறந்த வுங்களுக்கு இத்துர்ப்புத்தி யாகாது, துர்ப்புத்தி தன்னைக் கொண்ட வுங்களுக்கு இத்தனைசொல்லியும் பயனில்லையாகும். கொடியவனுகிய துரியோதநன், விதுரர் -பீஷ்மர் -துரோணர் -ருஷிகள் முதலான பெரியோர்களும், சாக்ஷாத் கிருஷ்ண பகவானுஞ் சொல்லியும் கேளாமல், தனது நூறு தம்பிகளோடும், பந்துஜனங்களோடும் மடிந்தான்; இராவணனும், மாரீசன் முதலானுரும் சாக்ஷாத் லோகஜநநியாகிய ஜநககுலநந்தநியும் எவ்வளவோ புத்திசொல்லியுங்கூடக் கேளாமல், தன்பிள்ளை சோதர பந்துவர்க்கங்களோடு மடிந்தான்; இன்னும்

வாணாசுரன், கஞ்சன், சுமாலி மாலியவான் முதலானவர்களும் அப்படியே மடிந்துவிட்டார்கள். நாயின்வாலை நீளக்கட்டிவைத்து அவிழ்த்தாலுந் தன் கோணல் நீங்காததுபோலே கருமத்தாலே பிணைப்புண்ட வுங்களுக்கு எவ்வளவு சொன்னாலும் புத்திதிரும்பாது; நோய்கொண்டவர்களுக்கு அமுது கசக்கும்; உங்கள்கருமத்தை நீங்களே யநுபவிக்க வேண்டுமல்லால் பிறர் அநுபவிக்கப் போகிறதில்லை; அநுபவித்தாலொழிய தெரியாது; பின்னால் எவ்வெவை யநுபவிக்க வேண்டியவர்களாயிருக்கிறீர்களோ! சருவேசுவரனேயறியவேண்டுமல்லாமல் யான் கிஞ்சித்தும் அறியேன்; ஆகையால், சுகமாகப் போய் வாருங்களப்பா என்று விடையளித்தனர். அவ்விரண்டு சிறுவர்களும் பிரயாணப்பட்டு புனாதேசமடைந்து, அவ்வூர் அரசனைக் கண்டு வணங்கித் தங்களுக்குத் தகுந்த வுத்தியோகங்களைத் தரவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். இப்படிப் பிரார்த்தித்து நின்ற சிறுவர்களுடைய முக தேஜஸ்ஸையும், சௌரிய-வீரிய-பராக்கிரம-தைரிய - நன்னடக்கைகளையுங் கண்டு அரசனும் மநமகிழ்ச்சி கொண்டு தக்க உத்தியோகங்களைக் கொடுத்து ஆதரித்து வந்தான்.

இவ்வாறாக நடந்துவரா நிற்கையில், ஒருநாளளவிலே ஹரிநாதனும் முகுந்தனுங் கலந்து யோசித்தவர்களாய், அரசனிடஞ்சென்று வணங்கி' தேவுகாமிலிருக்குந் தங்கள் தாயையும் மனைவிகளையும் வரவழைத்துக்கொள்ளவேண்டியதென்று பிரார்த்தித்தார்கள், அரசனும் சந்தோஷித்து, தனது சேவர்களை யழைத்து, ஆனை குதிரைகளோடும், சில காலாள்களோடும், சிவிகைகளோடும் போய் தேவுகாமிலிருக்கும் அவர்களை யதிக விநயத்துடன் அழைத்துக்கொண்டுவரும்படி யுத்தரவு அளித்தனன். சேவகர்களும் அரசன் கட்டளைப்படி சகல பரிவாரங்களுடனே தேவுகாமுக்குப்போய், ஹரிநாதன் முகுந்தன் என்பவர்களுடைய தாயாராகிய அம்மாபாயம்மாளைக் கண்டு வணங்கி, தங்கள் குமாரர்கள் இருவரும் அரசனும் தங்களையுந் தங்கள் மருமக்கள்மாரையும் அழைத்துக்கொண்டு வரும்படி கட்டளையிட்டார்கள். ஆகையால் அம்மணீ! இதோ இருக்குஞ் சிவிகைகளின் மீது ஏறியருளவேண்டுமென்று வருந்தி நின்றார்கள். இந்தச்சேவகர்களையும், ஆனை குதிரை காலாள் முதலிய சேனைகளையுங் கண்டு, அம்மாபாயம்மாள் அதிசயங்கொண்டு, சுவாமிசந்நிதிக்குச் சென்று, கண்ணுங் கண்ணீருமாய் நின்று, தாயைப்பிரியுங் கன்றுபோல் கதறி சுவாமி சருவலோக சரண்ணிய! சகலாதாரபூத! உன்னை விட்டுப் பிரியுங் காலம் வாய்த்தது. எந்தக்காலம் உன்னையினிச் சேவிக்கப்

போகின்றேன்? நீ செய்யாநின்ற இன்பவிளையாட்டுகளை யாவரறிய வல்லார்? இதுவும் உன்னுடைய லீலைகளேயன்றி வேறன்று. இனி யென்னென்ன என்பால் நடத்த இருக்கின்றாயோ நீயேயறிவாய் மாதவா! எந்தவகையிலும் என்னை ரக்ஷித்தருளவேண்டுமென்று பல வாறாக ஸ்துதித்து விடைபெற்றுக்கொண்டு, பிரிந்துவர மநமில்லா மல் ஒருவாறுதெளிந்து, திரும்பித்திரும்பிப்பார்த்துக்கொண்டு வீடு வந்துசேர்ந்து, மருமக்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு, இராஜ படர்கள் கொண்டுவந்த சிவிகைகளிலேறி, சேனைகள் வழி நடத்த வந்து, தமது புத்திரர்களிருக்கும் ஊர்சேர்ந்து, திருமாளிகையடை ந்து, சுகமாக இல்லற தருமங்களை நடாத்தி வாழ்ந்துவந்தார்.

இப்படி தம்புத்திரர்களால் சகல போக பாக்கியங்களை யநுப வித்துக்கொண்டு வந்தாலும் ·தநலுப்தனானவன் பல்லிடங்களில் அலைந்து திரிந்தாலும் அவனுடைய மனமானது வீட்டில் ஓர்புறத் தில் வைத்திருக்கும் தநத்தின் பக்கலிலேயே கிடக்குமாப்போலே இந்த அம்மாபாயம்மாளுடைய மநமானது பாண்டுரங்கனுடைய சுந் தர - சுகுமார லாவண்ணிய - தேஜசுக்களோடு கூடிய திருமேனி யை மறவாமல், என்றுந் தியாநபராயணையாயிருந்தார். புத்திரர் களோ! தநார்ஜிதத்தில் ஆசக்தர்களாய், விஷயபோகங்களில் மிகு பிரேமையுடையவர்களாயிருந்தார்கள். சிலநாள் கழித்து, சாரங்க பாணியாகும் சருவேசுவான், அம்மாபாய் சொப்பநத்தில்தோன்றி, ஹாரகேயூர மகரகுண்டல பீதாம்பர தாரியாய், சியாமள ரூபாராய், திருத்துழா யணி திவ்விய விலாசத்தைச் சேவிக்க விட்டுநின்று, அம்மாபாய்! நீ புத்திரர்களுடைய வாஞ்சையால் என்னை மறந்தனை; உன்பர்த்தா விசுவம்பர தாஸருக்கு நானளித்திருந்த வாக்கியத்தின் படி யுங்களெல்லாரையும் இரக்ஷிக்கும்படி வேவுகாமில் சந்நிதிகொண் டிருக்கிறேன்; உனக்கும் சொப்பநத்தில் காட்சியளித் திருக்கின் றேன்; நீ யென்னை மறந்து சுத்த சமுசாரத்தில் சுகமுற்றிருக்கின் றாய்; இவ்வல்ப அஸ்திரபோகத்தையொழித்து நமது ஊராகிய தேவு காமுக்கு வருவாயாக என்று சொல்லி மறைந்தனன், அம்மாபா யம்மையும் நித்திரைதெளிந்தெழுந்து, சொப்பநத்திற்கண்டவற்றை யும், சருவ லோகராட்டியன் சேவையும் நினைந்து நினைந்து உருகி, பாண்டுரங்கா! என்று துதித்து, தமது புத்திரர்கள் இருவருக்கும் இராத்திரி சுவாமி சொப்பநம் ஸாதித்தருளின விசேஷங்களைச் சொ ல்லி, அப்பா! இந்திராணி தீரத்தில் தேவுகாம் க்ஷேத்திரத்தில், உங் கள் தந்தையின் நிஜ பக்திக்காக ஸ்ரீமத் பாண்டுரங்கன் திருக்கோ

யில்கொண்டு எழுந்தருளியிருந்து, அவருக்குப் பரமபதப் பிராப்தி கடாக்ஷித்தருளினன்; அவன்றானே யென்னையுந் தனது திவ்விய க்ஷேத்திரத்துக்கு வரும்படி சொப்பனம் ஸாதித்தருளினன்; உங்கள் அபிப்பிராயம் ஏதோ தெரிவியுங்கள் என்றவளவிலே அவ்விருவரும், அம்மா! கனவு நினைவால்வருவது; அது பொய்யேயன்றி மெய்யாகாது. உண்ணல் உடுத்தலில் சீர்மைபெற்றிருந்து அண்டினவர்களை யாதரித்து, இரந்தாருக்கிட்டு, மற்றும் பலதானங்கள் செய்து, பகவான் ஒருவன் உண்டென்று மநதிலெண்ணி, இருந்தஇடத்திற்றானே யிருந்து தியாநஞ்செய்தால் அந்தபகவான் காக்கமாட்டிலனோ? என்று உரைக்க, அவற்றைக் கேட்டிருந்த தாயானவர் வியந்து மநஞ்சோர்ந்து, ஆ! பண்டரீநாதா! பரமபுருஷா! பரஞ்சோதீ! என்று பகவானைத் துதித்து, பிள்ளைகளுக்கு வேறொன்றுஞ் சொல்லக் கூடாதவராய் மௌநமா யிருந்துவிட்டார், நான்குநாள் சென்றபிறகு, புத்திரர்களும் அம்மாபாயம்மாளும் ஒரிடத்தில் வீற்றிருந்து, இன்பமாய் வார்த்தையாடிக்கொண்டு இருக்கும்பொழுது, புத்திரர்கள் தாயை நோக்கி அம்மா! உமது சுவாமி யிப்போதென்ன உரைக்கின்றார்? என்றுகேட்க; தாயும், அப்பா! இந்தக் குடும்ப பாரத்தை நிவர்த்தி செய்துகொண்டு, தேவுகாமுக்குத் தன்சந்நிதாநத்திற்கு வரும்படி யாஜ்ஞை செய்தருளினன் என்றார். அதற்கு அப்புத்திரர்கள் இருவரும், சுவாமியானவர் அருபி; ரூப குண நாமங்களொன்றும் அவருக்கில்லை; ஆகையாற்றான் ஒருவராலுங் காணக்கூடாதென்று வேதபுருஷன் சொல்லியிருக்கிறான்; அப்பேர்ப்பட்ட ஈசுவரனை மல ஜலங்களில் துவக்குண்டு அலையுந் தேகிகள் காணவசமோ? என, கேட்ட தாயானவர், அப்பா! அண்ட பிண்ட சராசரங்களுக்கெல்லாம் ஆதிமூலமாயும், அணுவுக்குள்ளும் அணுவாயும் விளங்கும் ரக்ஷகன், நிஷ்காமம், தபம், பொறுமை, கிருபை, சந்தோஷம், வாய்மை, அறிவு, அடக்கம் என்னும் எண்குணங்களையுடைய பாகவதோத்தமர்கள் உள்ளங்களில் பூரணமாய்க்குடிபுகுந்திருந்து ரக்ஷித்தருளுவன். இத்தகையார்கள் எவ்வெவை விரும்புகின்றார்களோ அவ்வவற்றை யளித்துநிற்பன். மாஹாத்துமியம், தைரியம், வீர்யம், தேஜசு, ஞாநம், பலங்களாகிற ஆறுகுணங்கள் உடையவனாகையாலே அவன் பகவான் என்னப்படுகின்றான்; எப்போது தான் பகவானென்று அழைக்கப்படுகின்றானோ அப்போதே குணமுடையவன் என்பது சித்தமாயிற்று அணுவுக்குள்ளும் அணுவாயிருப்பவன் என்றபோதே வியாபகம் விளங்குகிறது; அந்த வியாபகதசையிலுங்கூட பரமாணுவாக இருக்

கின்றுன் என்றபோது பரமாணுவாகாரந்தோன்றுகிறது; அவ்வாகாரத்தாலே ரூபம் உண்டெனநன்கு பெறப்பட்டது. அன்றியும் அவனுடைய வியாபகத்துவம் தன் பரசொரூபங்கள் ஐந்தினுள் ஒன்று; வியாபகமாகும் அந்தரியாமித்துவம் ஒழிந்த மற்ற நான்கும் பரத்துவம், வியூகம், விபவம், அர்ச்சாவதாரங்கள் என்னப்படும்; இந்நான்கினுள்ளும் ரூபமில்லையென்று அநுமானித்தற்குச் சற்றும் இடமில்லை; இப்படி சருவவிதங்களாலும் ரூபவானென்பதே திண்ணம்; குணவானென்பதுஉமப்படியே; இனி. வேதபுருஷன் 'அறியேன்' என்று சொன்னமைக்குக்காரணம் யாதென்பீர்களேல்; அவ்விறைவனுடைய திருவிளையாடல்கள் இவைதானென்று அளவிட்டுச் சொல்ல முடியாது. சேதந அசேதந வஸ்துக்களைத் தனக்குச்சொத்தாகப் படைத்தவனுகையால், எந்தெந்த காலத்தில் எந்தெந்த சேதநரையெந்தெந்த விதமாய் ரக்ஷிக்க வேண்டுமோ, அல்லது சிக்ஷிக்க வேண்டுமோ அவ்வவைகளுக்கு ஏற்றபடியெல்லாந் தோன்றி, அந்தந்தக் காரியங்களைப் பண்ணியருளுகின்றுணுதல்கொண்டு அவனுடைய குணங்களும்,கீர்த்திகளும், லீலைகளும் புகழற்காய் வேதமானது முணைந்தவிடத்தும் அவ்வேதந் தனக்கும், அதனைச்சொல்லியருளின புருஷனுக்கும் எட்டாமல், பிரம ருத்தி ரேந்திராதிகள் தொடங்கி பிபீலிகை யீறுயுள்ள ஆன்மாக்களளவுஞ்சென்று பரிச்சேதிக்க முடியாமல் அவ்வாதியஞ்சோதியின் புறந்தானே திரும்பிற்றுத் தன் லீலாதிசயங்கள். ஆகையால் தான் வேதபுருஷனுங் கூட அளவிட்டுச் சொல்லத் தன்னுல் முடியால், 'நானு மறிகிலேன்' என்றுரைத்து வைத்தனன். "அன்னமாய் நின்றங் கருமறை * பகர்ந்தாய்" என்றும், "அன்னமா யருமறைக ளறைந்தாய் நீ" என்றுஞ் சொல்லுகிறபடி, சருவேசுவரன் தானே அன்னவடிவாய் நான்முகனுக்குச் சேவை சாதித்து, நான்கு வேதங்களையுஞ் சொல்லியருளினதாக இருக்கைக் காண்கிறேம்? என்பீர்களாகில்; "தன்பெருமை தானறியாத் தன்மையன்" என்றும் உள்ளமையாலே, இக்காலத்தில் இதுநடக்கும், அதற்காக நாமிதுவே செய்யக்கடவோமென்று முன்னிட்டே யோசித்துச் செய்யவேண்டியவன் அன்றுகையாலும், தான் சருவசக்தியாதலால் தனது சங்கல்பத்திற் கொண்டபடியெல்லாஞ் செய்யக்கடவனுகையாலும், தன்பெருமை யின்னதுதானென்று வருவனவற்றையும் உன்னிச்சொல்லிக்கொள்ளாமலேயே யப்போதைக்கப்போது வேண்டியவற்றைச் செய்து, தன்னுடைய சொத்துக்களை நஷ்டப்படுத்தாமல் காப்பாற்றுகிறு ணுகையாலே, தானுந் தன்பெருமை யறிந்து

சொல்லவல்லான் அல்லன் என்பதே கொண்டு வேதபுருஷன்றானும், 'நானுமறியேனென்றான்' இத்தனை; சருவேசுரனுடைய கலியாண குணங்களையே சொல்லப் போந்த வேதமானது ஸ்ரீமந் நாராயணனுடைய சொரூப-ரூப-குண-சேஷ்டிதங்களைச் சொல்லி யவ்வளவோடே விடாமல் " హ్రీశ్చతేలక్ష్మీశ్చపత్న్యౌ " ஹ்ரீச்சதேலக்ஷ்மீச்சபத்நௌ" என்று, ஸ்ரீதேவியும், பூதேவியும் அவ்வரும்பெறல் அடிகளுக்குத் தேவிமார்களென்றுஞ் சொல்லி, "వైకుంఠే తు పరేలోకే శ్రీసహాయో జనార్దనః" ఉభాభ్యాంభూమి నీళాభ్యాం సేవితః పరమేశ్వరః" வைகுண்டேபரேலோகே ஸ்ரீஸஹாயோ ஜநார்த்தந; உபாப்யாம் பூமிநீளாப்யாம் ஸேவித: பரமேச்வர:" என்று வைகுண்டமாகும் பரலோகத்திலே, ஸ்ரீயாகிய லக்ஷ்மீஸஹாயனாய் ஜநார்த்தநனாகும் பரமேசுவரன், பூமி நீளைகளாகுமற்ற தேவிமாராலே சேவிக்கப்பட்டு விளங்குகின்றான் என்றும் முறையிடுகின்றமையாலும், அவ்வாதியஞ்சோதிமயன் சருவ வகைரூபவானும் குணவானும் என்பதுவே சத்தியம். இவற்றையெல்லாம் நன்கறிந்து, அவனல்லால் கதிவேறில்லையென்று அடங்காமல் வாயில் வந்தமட்டிலுஞ் சொல்லி யிகழ்வது மௌட்டியம். அந்தப் பரஞ்சோதி யாத்துமன் பண்டு எங்குமுளன் கண்ணனென்ற பிரகலாதாழ்வானுக்காக நரசிங்கமாய் இங்கில்லையா என்று இரணியன்புடைத்த கல்தூணிலிருந்து அங்கப்பொழுதே அவ்விரணியன் வியத்தோன்றியருளினான்; முதலைவாய்ப்பட்ட கஜேந்திராழ்வானுக்காக நிஜவடிவோடு எழுந்தருளி சத்துருவைச் சங்கரித்து, சிரமத்தையுந் தீர்த்தருளினான்; தந்தைதாயல்லால் தெய்வந் தவம் பிறிதில்லையென்றெண்ணி நிஜபக்தி செலுத்திப்போந்த புண்டரீகருக்காகப் பண்டரீபுரத்தில் கோயில்கொண்டு, பணிவாருக்கெல்லாம் காட்சியளித்துக் கொண்டிருக்கிறான். அந்தப் புண்டரீகவரதன் தானேயுங்களுடைய தந்தையின் நிஜபக்திக்கு இரங்கியருளி, தேவுகாமிலும் திருச்சந்நிதி பண்ணி, அவருக்குச் சேவைதந்து, பேரின்பமும் சாதித்தருளினன். இத்தகைய கருணாமிர்த சாகரந்தன்னில் படிந்து இன்பப்பேறாகிய திருநாட்டினையடைவது சுகம். அதையொழித்து மற்றபோகங்களை யிச்சித்து அருநரகிற்கு ஆளாவது மீளாத்துயரேயாகும். மெய்ப்பக்தியும், சத்தியமநமும் இல்லாதவர்களுக்கு அம்மேகவருணன் தோன்றான்; அழுக்குஜலத்தில் பிரதிபிம்பம் தோன்றாததுபோலே கருமபூரிதர்களாய்க் கொண்டு காம-குரோத-லோப-மோத-மத-மாச்சரியங்களாகிற ஹரிஷட் வருக்

* பயந்தாய் என்றும் பாடமுண்டு.

கங்களில் படிந்துழலும் பாமரர்களுக்குக் கடவுள் தன்மையும், பிரபாவமும் விளங்கமாட்டா. உண்டல் உடுத்தலே யுடலுயிர் ஆவியென்று உகக்கும் பாவிகளுக்கு அவ்வுண்டுடுத்துக் களிக்கும் அற்பபோகமே கடவுள் சுகமல்லால் வேறுகடவுளின் சுகமேற்காது. இத்தன்மைகளைக் கொண்டேயாக்கும் நீங்களும் என்னை 'உன்சுவாமியென்னுரைத்தார்' என்று பரிகாசமாய்க் கேட்டீர்கள். கெடுமதிகண்ணுக்குத்தோன்றுது; இத்துர்ப்புத்திகளை யினியாவதொழித்து, பாண்டுரங்கனை பஜித்து, திருவடியில் சரண்புகுந்து சுகமடைவீர்களாக என்று பலபல புத்திகள் தாய்கூறியும் கேளாமல் தமது இல்லறலௌகிகங்களுக்கு வேண்டுவனவற்றிற் படிந்திருந்தார்கள்.

மறுபடியுஞ் சிலநாள் சென்று பண்டரீபுரநாதனுகிற பாண்டுரங்கன் அம்மாபாயம்மாள் சொப்பநத்தில் எழுந்தருளி, 'நாளைவிடிந்த இரண்டு ஜாமங்களுக்குமேல் உன்னுடைய குமாரர்கள் இருவரும் மடியப் போகின்ருர்கள்; உங்களுடைய ஐசுவரியங்களெல்லாம் பராதீநமாகப் போகிறது' என்று சாதிக்க, அந்தம்மாள், அழுதகண்ணுஞ் சிந்தையுங்கொண்டு ஓ! என்று அலறி, தேவரே யிப்படி சாதித்தருளினல் அடியேனென்ன மறுத்து விண்ணப்பஞ்செய்யப்போகின்றேன்? அடியாளுடைய கதியாதோ அறிகிலேன்? என்று பூமியிற்படிந்து சேவித்து நிற்கக்கண்டு தனது திருப்பவளச் சோதிவாய் திறந்து, 'உன் பின் சந்ததியாரைரக்ஷிக்க எனக்குத் தெரியும், உன் பர்த்தாவுக்குப் பிரதிக்ஞை செய்து அளித்திருக்கின்றேன்; உனக்கும் பரமபதம் பிராப்தமாகும்; விசநமுற வேண்டாம்' என்று மறையவே, இந்தம்மாள் நித்திரை தெளிந்தெழுந்து சொப்பநத்தை நினைத்து, ஓ! என்ற சத்தத்துடன் அழத்தொடங்கினர். அதனைக்கேட்ட பிள்ளைகள் இருவரும் தாயாரிடம்வந்து, அம்மா! உங்களுக்கு அழத்தக்க விகநம் வருவானேன்? காரணம் உரைக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, அம்மபாய் குழந்தைகளைப் பார்த்து மிகவும் வியாகூலப்பட்டு, அப்பா புத்திரர்களே! இராத்திரி ஜாநகீரமணன் கனவில் தோன்றி, விடிந்த இரண்டு ஜாமங்களுக்குமேல் நீங்கள் இருவரும் இறக்கப்போகிறீர்கள் என்றும், உங்கள் ஐசுவரியம் நாசமடையப் போகிறதென்றும் சாதித்தருளினர்; அதனல் என்வயிறு குழம்பியழாநின்றேன் என்று சொன்னதற்கு அவர்கள், அம்மா! கனவு பிராந்தி யென்று முன்னமே சொன்னேம்; ஒருவேளை நிஜமே யாயினும் நாமென்ன செய்யமாட்டுவோம்? "ஜாதஸ்யமரணந்த்ருவம்" "ஜாதஸ்யமரணம்த்ருவம்" என்றபடி, பிறந்தபோதே சாவு நித்தியம்; அதற்கு

நாம் அச்சப்படுவதிற் பயனில்லை, நாய் உயிருடன் இருக்கும்போது உண்டுடுத்து அநுபவிக்கும் அநுபவங்களே நாம் காணுவது; இதை விட வேறுசுகம் ஓர் சற்றுங் கிடையாது என்று, அச்சம் சிறிதுமில் ல்லாமல் தைரியஸ்தர்களாயுரைத்து, பொழுது விடிந்தவுடனே நித்தியக்கடன்களை முடித்துக்கொண்டு தாயாரிடம்வந்து, அம்மா! இன்று தங்கள் கைகளால் அன்னமிடப் புசிக்க விரும்புகின்றோம் என்று சொல்லி, அந்தம்மாள்பரிமாறிய அறுசுவையோடுகூடின அன்னமுண்டு, தாம்பூலம் அணிந்துகொண்டு இருக்கையில், இராஜாவினுடைய சேவகன் ஒருவன் அரசனளித்த காகிதங்கொண்டுவந்துகொடுத்து, சுவாமி! வேற்றரசன் படையெடுத்து வந்து நம்முடைய கோட்டையை முற்றுகை போட்டிருக்கின்றானுகையால் தங்கள் இருவரையுந் தண்டுதளங்களுடனேபோய் உயுத்தஞ்செய்துவரும்படி நமமரசன் ஆஜ்ஞையளித்திக்கின்றான் என்றனன். அதனைக் கேட்கவே இருவருந் திகிலடைந்து, தாயார் கண்ட கனவை யெண்ணி, இன்று நமக்கு முடிவு நாளென்பது நிச்சயந்தான்; இல்லையாகில் தாய்கண்ட கனவின்படி என்றுமில்லாத சத்துரு இன்று படையெடுத்து வருவானு! இனி நாம்யோசிப்பதிற்பயனில்லை. இதுவரையிலும் அரசனுடைய அன்னம் புசித்து இப்போது பின்னடைவது நன்றன்று. இராஜன் ஆஜ்ஞை கடப்பதிலும் யுத்தகளத்தில் மடிவதே யுத்தமம் என்று மநந் தெளிந்தவர்களாய், தங்கள்தங்கள் ஆயுங்களை இடுப்பிலுந் தோள்களிலுங் கட்டிக்கொண்டு யுத்த சன்னத்தராய், தாயாரிடம் வந்து தீர்க்கதண்டம் ஸமர்ப்பித்து, நடந்தவற்றைச் சொல்லி, இதுபரியந்தந் தாங்கள் எவ்வளவோ சொல்லியுங் கேளாமல் எங்கள் மநம்போன படியெல்லாம் நடந்தோம்; முடிவில் தங்கள் வாக்கியம் பலிக்குங்காலம் வந்தது; ஆகிலும் நம்மை நம்பின அரசனுக்கு இநதச்சமயம் மோசஞ் செய்யலாகாது; எங்கள் பிழைகளை மன்னித்து விடைகொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்து விடைபெற்றுக் கொண்டு; தேவிமார்களுக்கும் இதங்கூறிவிட்டு, இராஜசபைக்குப்போய் இராஜனை வணங்கி யவனிடம் விடைபெற்று, இரத கஜ துரக பதாதிகளாகும் சதுரங்க சேனைகளுடனே போய் எதிர் அரசனோடு சருவவித வுபாயங்களைக் கொண்டு போர்செய்தும் வெற்றியானது எதிரிகளுக்கே விஞ்சி வருவதைக் கண்டு, நம்முடைய தாயாருக்கு ஸ்ரீ பண்டரீநாதன் சொன்னபடியே நமக்கின்று முடிவாவது சித்தம்; இன்றளவு நம்முடைய வாழ்வை வீணாக்கிப் பெண்டிரார் சுகங்களுய்த்துப் பெரியனவாய இடும்பைகள் பூண்டு நாநாவித நரகமே புகும் பாவிகளா

னேமேயன்றி நம்முன்னோர் வழிநின்று முகுந்தனது மொய்பூங்கழ லிணை கிட்டற்குரிய சாதநமொன்றுஞ் செய்தோமல்லோம். நம்மு டைக் கொடுவினைக்கு இரங்கிய அன்னையும் மநம் இரக்கமதனாற்கூறிய நன்மொழிகளையாவது ஏற்று அந்நிலை நின்றோமல்லோம் என்று ஏங்கியேங்கி விசநமுற்று, மறுபடியுந் தெளிவுகொண்டு போர்முன் சென்று, வீராவேசங்கொண்டு யுத்தஞ்செய்துவருகையில், இவர்க ளுடைய சேனைமுற்றுமடிந்து, தாங்களும் எதிரிகளுடைய ஆயுதங்க ளால் மெய்நோகப்பெற்றுப் பிராணன் நீங்குஞ்சமயம் வாய்த்துவிட் டது. அத்தருணத்தில் ஹரிநாதனும், முகுந்தனும், ஹரிஹரீ! பாண்டுரங்கா! பரந்தாமா! பக்தவத்சலா! பரஞ்சோதீ! ஆபத்ஸகாயா கஜேந்திரவரதா! அடிமையிற் குடிமைபட்டு உகந்தவன்பர் குடிபிறப் பாளரேனும் ஆதியஞ்சோதியே! நின்னருள் துறந்து, குடிமையில் அடிமை பட்டிட்ட குக்கரா மடியோங்கள் அடிவீட்சி விண்ணப்பம்; அவத்தமே பூண்டு, பிறரைக்கிட்டி தொண்டுபட்டு, உறவு சுற்றமென் றுள்ள எல்லாம் ஒண்கூந்தல் மடவாரே யென்று அவர் திறத்துக் காதல் தன்னால் பொன்னைத்தேடி யுழன்று போந்த அகமதனால் உன்னை மறந்தோம்; மறந்தோமே யென்கிற நினைப்பையுந் துறந் தோம்; அன்னைமொழி யிகழ்ந்தோம்; அத்தன்வழி தவிர்ந்தோம்; அகில புவநேசுவரா! இப்போது தவிக்கலுற்றோம்; இவ்வமயம் நின் னலால் திக்கு வேறு காண்கின்றிலோம். பண்டு அடியோங்கள் தந் தைக்குத் திருவுள்ளமிரங்கி, நின் குடிகுடி யாட்புகக்கொண்டு ரக்ஷிப் போமென்று அருள் சுரந்தவகையே! ரக்ஷித்தருளல் தேவர்கடனே யாகும்; இறையுங் கைவிடேல் எந்தாய்! என்று பலபல்துதிகள் துதி த்து இரங்கலும், பக்தபோஷகனும் பதுமதளாக்ஷனும் இவர்களுக்கு இரங்கியருளி காக்ஷிதந்து, உங்கள் தந்தைக்கு வாக்களித்தபடி இதோ புஷ்பவிமாநம் வந்திருக்கின்றது; அதிலேறிக்கொண்டு இருவரும் வைகுண்டஞ் செல்லுங்கள் என்றுரைத்து மறைய, அவ்விருவருந் தம் ஸ்தூல சரீரங்களை யங்கு ரணக்களத்தில் தானே பொகட்டு, சூக் சும சரீரங்களைப் பெற்று விமாநரூடர்களாய் வைகுண்டம் போய்ச் சேர்ந்தார்கள். இச்சங்கதி யாவும் சாங்கோ பாங்கமாகக் கேட்ட அவர்களுடைய தாயாராகிய அம்மாபாயம்மாளும், மனைவிமார் இருவ ரும், ஓ! என்றலறி மூர்ச்சித்துப் பூமியில் வீழ்ந்து, அங்குள்ள அன் னியர்கள் தேற்றத் தேறியெழுந்து புலம்பினர்கள். "கடந்த ஞானி யுங் கடப்பனோ மக்கள்மேற் காதல்" என்கிறபடியே அம்மாபாயம் மாள் பரந்தாமன் பதம்பணியும் பாக்வத சிரேஷ்டையாயிருந்தும், குடல் துடக்கால் வந்த சம்பந்த விசேஷமும், பிரகிருதி வாசனையும்

முற்று நீங்கப்பெருக் காரணத்தாலும், அபலையாதலாலும் புத்திர சோகமிஞ்சி, ஆவா புண்டரீக வரதா! என்வயிற்றில் இரண்டு புத்திரர்களைத் தந்து, அவர்கள் பக்கல் பாசமூட்டி, அநந்தரம் அவர்களை யகால மிருத்துக்களாக்கினாய்; அதனைக்கேட்க மனந்தத்தளியா நின்றது; ஆயினும் அடியேனால் ஆகுவதியாது; சருவசக்தியும், சருவலீலா விநோதனுமாகும் உனது இன்னருளால் இப்படிக்கெல்லாம் நடவா நின்றது என்று இவ்வாறெல்லாம் அவனையே நோக்கித்தொழுதழுது சோர்வுற்றனள். மூத்தவனாகும் அரிநாதனுடைய மனைவி கர்ப்பவதியாயிருந்தமையால் அவள் தவிர மற்ற இளையவனாகிய முகுந்த நாதனுடைய மனைவி அக்கினிப் பிரவேசஞ் செய்து, தன் புருஷனுடன் கலந்து வைகுண்ட மடைந்தாள். அவர்களுக்குண்டான தநசம்பத்துக்கள் யாவும் வேற்றரசனால் கொள்ளை கொள்ளப்பட்டமையால் அம்மாபாயம்மாள் தனது மூத்த மருமகளையழைத்துக்கொண்டு தேவுகாம் என்னுந் தமது பூருவ வாசஸ்தலமடைந்து, சுவாமியினுடைய சந்நிதிக்குள் புகுந்து, சுவாமியை மார்போடு கட்டியணைத்துக்கொண்டு, திருவடிகளில் தனது முடியைப்படிவித்து, என் ஆராஅமுதே! என்னைப் பிணைத்திருந்த சமுசார பந்தத்தைப் பாறக்கைத்து, நீதந்த புத்திரர் இருவரையும் ரணக்களத்தில் மடியவைத்து, மறுபடியும் உன் திருவடியிற் கொண்டுவந்து என்னைச் சேர்த்துக்கொண்டாய், அருட்பெருஞ்சோதி நீயாகையால் நீ செய்த நன்றிக்குக்கைம்மாறு ஒன்றுமிலேன்; உன்னை பஜிக்கும் நிஜ பக்தர்களுடைய பாசபந்தங்களைப் போக்கித்தெவிட்டரிய தெள்ளமுதூட்டுமவன் நீயென்று உண்மை யறிந்துகொண்டேன்; உன்னையே சதா பஜித்திருக்கும் பரமசிவனைக் "காடுடைய சுடலையிற் கொண்டுபோயமைத்து, விஷய சுகங்களை மறைக்கவைத்து, வைராக்கியத்தோடு ஒரு கோவையாக்கி வைத்தாய்; சநக சநந்தனாதி நால்வரையும் நின்னைத் துதிசெய்யும் ஸ்திதிக்குக்கொண்டு வந்து அநந்தரம் சிரஞ்சீவிகளாய் வசிக்கவிட்டாய்; அன்றியும் வீரவைஷ்ணவராகும் நாரதமாமுநியைத் திரிலோக சஞ்சாரியாக்கினாய்; மேலும் ஏகாதசிவிரதம் அநுஷ்டித்த ருக்குமாங்க மகாராஜனையும், அப்பட்டண வாசிகளையும் வைகுண்டஞ் சேர்ப்பித்தாய்; விபீஷணனுக்காகத் தமையன் இராவணனை வேட்டையாடி லங்காபுரியை யவருக்குப் பட்டங்கட்டி, உதார சீலனென்று புகழ்படைத்தாய்; "எங்குமுளன் ஈசனென்ற" ஜன்ம வைஷ்ணவராகும் பிரகலாதாழ்வாருக்காக அவர் தந்தை இரணியன் புடைத்த தூணில் அப்பொழுதே தோன்றியவனது அகல்

மார்பம் இருபிளவாக்கியருளி, அடியார்க்கு அருள் செய்யும் விமலன் என்றும், எங்கு நிறைந்த பிரணன் என்றும் விளங்கினாய்; இன்னும் அபரிமிதமான அதிமானுஷ சேஷ்டிதங்களைச்செய்தாய்;இத்தகைய நீ பேதையரில் பேதையாம் இப்பெரும்பேதையேனுடைய புத்திரர்களைக்கொன்று, எனக்கு வேறு ஆதாரமில்லையாக்கி, உன்னுடைய சிசுருஷைக்கு என்னை அடிமைப்பட விட்டருளினாய்;நானோ வார்த்திகமதனால் நரம்பு தளர்ந்து, மெய்சோர்ந்து, உன்னைத் துதிக்கவுஞ் சக்தியில்லாதவளாய்விட்டேன்; புத்திரர்கள் இருப்பார்களாகில் சற்றுதரமுண்டாகலாம்; அவர்களையும் வானேற்றிவிட்டனையே; இனியடியாள் செய்யலாவதென்னை? என்று பலபல வித சோகங்களைக் கொண்டனள். அவற்றை யெல்லாம் இறைவனீசன் திருச்செவி சாத்தி; அவ்வம்மாபாயம்மாளை மார்புடன் தழுவி, அம்மா! பயமுறுதே, முடியுங் கரும முடிந்தது, இனி நடப்பதை சிந்தியென்று ஆதரித்தருளினான். அம்மாபாயம்மாளும், மருமகள் கர்ப்பவதியாயிருத்தலால் அவரைத் தந் தாய் அகத்திற்கு அனுப்பிவிட்டுத்தாம் சுவாமி சந்நிதானத்திற்றானே வாசம் பண்ணிக்கொண்டு வந்தார்.

இங்ஙன் செல்லாநிற்க, அம்மாபாயம்மாளுக்கு மூப்பு அதிகரித்து, புத்திரசோகமு மீறி அத்தால் மெய்நரம்புறிகள்போலெழுந்து, ஊன் தளர்ந்து, உள்ள மெள்கி விதிர் விதிர்த்துக் கண் சுழன்று நடுக்கங் காணவும், மிக வியாகுலித்துச் சிந்திக்க ஸ்ரீராமநாதன் பிரஸந்நனாகி, அம்மா! உன் வயிற்றிற் பிறந்த பிள்ளைகள்தானா வுனக்கு உரியவர்கள்? நான் உனக்குப்பிள்ளையெனல் உரியதன்றோ? நீ கொண்ட பெண்பிள்ளைதானா உனக்கு மருமகள்? ருக்குமணி யுனக்கு மருமகளல்லவா? அதவா உனக்குப் புத்திரர்கள் திறத்தில் வாத்ஸல்யமுண்டாயிருந்தால் அவர்களைத்தர என்னைக் கேட்கலாகா? நான் அவர்களை யுயிர்மீட்டுத் தரவல்லவனல்லவா? வேறு ஏதேனும் அபீஷ்டமாயின் என்னைக்கேட்டால் அளிக்கமாட்டேனா? சென்ற துவாபரயுகத்தில் நான் கண்ணனா யவதரித்தபோது என்னுடைய யாசாரியன் சாந்தீபன் புத்திரர்களை மீட்டுத் தரவில்லையா? வைதீகன் புத்திரர்களையும் அப்படியேசெய்யவில்லையா? அவர்களைப்போல் நீயும் விரும்பியிருந்தால் இறந்த உன் குமாரர்களை மறுபடியும் உயிர்ப்பித்துத்தரேனா? என்னை பிரார்த்தியாவிடினும் ருக்குமணியையாவது கேட்டிருந்தால் அவளெழுப்பி தருவளே; அதுவுஞ் செய்யாமல், என் திருஷ்டி நன்றாகவேணும் மற்ற அபீஷ்டங்களும் வேண்டுமென்று என்றும் விரும்பாமல், நிஷ்காமியா யிருந்துவிட்டு, உன்னைக்

காண வருபவரிடமெல்லாம், பகவானை நினைத்தால் இந்தக்கோலமென்று வீணை நிந்திக்கின்றாய்; இனியாவது உனக்கு யாதுவேண்டுமோ கேட்டுக்கொள்ளென்ன, அதற்கு அம்மாபாயம்மாள், சருவஜீவ தயாபரமூர்த்தியே! ஆதிமூலனே! காரண காரியங்கள் இல்லாக் கருணையங்கடலே! இப்பேதையையொருபொருட்டாயெண்ணி, இச்சிறு குடிசைக்கு மூவுலகளந்த பொற்சேவடி சார்த்தி யெழுந்தருளி காக்ஷி தந்து உனக்கென்ன வேண்டும்? கேட்பாயென்று திருப்பவளச் சோதிவாய்திறந்து அருளிச்செய்த அப்பிராக்ருத திவ்விய மதுராமிர்தத்துக்கு அடியாள் வேறுயாது நிகருண்டென்று கேட்கத்துணிவேன்? உனது இன்னருளால் வாய்த்த இப்பாக்கிய விசேஷமே தேவர்களுக்கும் எட்ட அரிதாயிருக்க, இதனினும் பிறிதோர் பாக்கியம் அடியேனுக்கு விருப்புளதோ? இவ்வருஞ்செயல் பிராபித்த பின்னர் இல்லாக்குறைகளும் இல்லா வஸ்துக்களும் உண்டாமோ? பூருவத்தில் என்கணவன் விசும்வம்பரருக்கு வைகுண்டம் பிரசாதிக்குந்தருணத்தில் அடியாளுக்குஞ் சில இதஞ்சொல்வான், 'உனக்கு யாது வேண்டும்' என்று கேட்டருளியபோது, அடியேன் 'திருவடி ஸேவை யல்லான் மற்றுமோர்விருப்புக்கொள்ளேன்' என்று விண்ணபித்துக்கொண்டவழி நிற்கின்றேன்; அதூஉம் நினது இன்னருளேயாம்இத்தனைஎன்று, சருவலோக சரண்ணிய னுடையசரணாரவிந்தங்களில் தமது சிரந்தாக்கத் தீர்க்கமாய் வீழ்ந்து சேவித்தல் செய்தனர். அவருக்கு உகந்தருளின ஆதியஞ்சோதி அவ்வம்மாபாயம்மாளை வாரி யெடுத்துத்தழுவி நிற்கவிட்ட அக்கணத்திலேயே அவர் தம் நேத்திரங்கள் இரண்டுந்தம் அந்தகாரநீங்கிப்பளிங்கென எதிர்நின்ற பதார்த்தங்கள் யாவும் நன்கு தோற்றக் கண்டனவாயின. அவ்வருஞ் செயலினைக்கண்ட அம்மாபாய் மிகு ஆச்சரியங்கொண்டு, ஹரி ஹரி; பக்தஜநபால! பரமேஷ்டி! பாண்டுரங்க! பண்டு பசுவினங்களை மேய்க்கவுங் காக்கவும் உகந்து திருவாய்பாடியில் கண்ணனெனத் திருவவதாரங் கொண்டருளினபோது, ஆயர் சிறுமியரோடு குணலை கொண்டு கண்மூடு ஆட்டம் ஆடா நிற்கையில், ததிபாண்டம் என்பான் ஓர் யாதவகுலத்துப் பிறவிக்குருடன்; நீ மறைதற்கு ஒளித்திருந்த பண்டம்கள் சேமிக்கிற குதிரினை வாய்மூடிக்கொண்டு,எனக்கித்ததி கண்ணறை போக்கி யொளிதந்தாலன்றி விடேன்' என்ற அரற்றற்கிரங்கிக் கண்கொடுத்தருளின கபடநாடகனே! நினக்குமங்களம் உண்டாகுக; ஐவர்காதலி, அச்சுத ஓ! என்றழைப்ப இரங்கி ஆடை சுரக்கவிட்ட ஆதியஞ்சோதியனே! வந்தநம்; ஆதிமூலமே

என்றலறிய ஆனையின் இடர்கடிந்து அபயந்தந்தாண்ட அகதிலையே! நமஸ்காரம் என்று நட்டமிட்டாடுவார்; ஆலிலையில் துயின்றருள் ஆதி நாராயணா என்று பாடுவார்; இருடிகட்கு இறைவா! என்று இணைக் கைகளை முடிமிசை கூப்பிக் கும்பிடுவார்! தயரதன் பயந்த மரதகத் தடமே! என்றுகந்து தம்பித்து நிற்பார்! உலகுதன்னைப் படைத்த ஒப்பறு அன்னையாகும் ருக்குமணியே! நின்னடைக்கலம் என்றோடி சந்நிதானத்திற் புக்குச் சேவிப்பார்; போதில் வருநங்காய்! பொன் னொத்தநின்பாதங்களல்லால் புகலிடம் பிறிதொன்று காணேம்என்று புத்தேளிர்கள் எல்லாரும் போற்றற்கு அவாக்கொள்ளும்போதன்ன பாதங்களில்விழ்ந்து நமஸ்கரிப்பார்; நான் கண்படைத்தநாள் தொட் டுக் கண்ணறையாம் பரியந்தம், விதி சிவாதியர்களது மநோவாக்குக் களுக்கு எட்டவரிய திவ்வியதேஜஸ்ஸாகிய உங்கள் இருவரதுஸௌ ந்தரியமென்ன, ஸௌகுமாரியமென்ன, லாவண்ணியமென்ன, இவ ற்றை யென தூண்கண்ணால் சேவித்துச் சேவித்துக் களிகொண்ட தற்கு ஓரளவின்றேலும், ஆரவமுதாய்க்கொண்டு அவற்றைச் சேவிக் குந் தோறும் ஆசை மிஞ்சுமில்லாமல் தெவிட்டாதென்னுந் திருவுள ளக் கருத்தா யடியாளுக்கு ஒளிதரச் செய்தீர்கள். ஆ! என்பாக்கி யமே பாக்கியம்! யான் பெற்ற நன்மை யிவ்வுலகில் யார் பெறுவார்? என்று சிரங்குனிப்பார்; ஞாலத்திற் கண்படைத்தாள் யானே மற்றி யாருமில்லை என்று தோள் குலைப்பார்; கண்ண நற்சீர் மதுசூதா! காகுத்தா! பாவியேன் வாழ்வுவந்து எண்ணரு கிருபை செய்தாய் என்று ஏங்கிச் சுணங்கை யெறிப்பார்; அடிசேர் முடியினராவார்; மிக்கனே! மறையாய் விரிந்தவிளக்கே, என்னுள்புக்கு உகந்து ஆண் டானே! புகழார்பொலிகின்ற பொற்குன்றே! போதவட்கு உகந்த பொலிவே! காயோடு கானச் சருகுண்டி வீசு சுடுங்கால்நுகர்ந்து ஐந்து தீயோடு நின்று நெடுங்கால மலை முழைஞ்சில் யோகுபுரிந்தும், ஊன்வாட வுண்டிதுறந்து உயிர்காவலிட்டுடலையகலா ஐம்புலனொ ந்து தாம்வாடப் பல்லூழிகாலந் தலைக்கீழிருந்து இருடியர்கள், தவமி யற்றியும் அவர்கட்கும் எட்டாஇன்னமுதே! யானெத்தவம்புரிந்தன னுகக்கெண்டோ ஆண்டென்னை யடிமைகொண்டனை? ஊனமரோ டொன்றேந்தி யுலகெலாம் பலிதேர்ந்துண்டு கானமே மனையாக் கொண்டான் கடுந்துயரிகந்தவெங் காகுத்தா! நினக்கு இத்தனை சிர மந்தரச்செய்தபேதையேனது குற்றங்களைப்பொறுத்து ஆண்டருள் வது நின்கடனும்! என்று இன்னனவாய பலதுதிகள் துதிப்பாராயி னர். அவற்றிற்கு அகிலலோக காரணனாகும் ஸ்ரீமந்நாராயணன்

திருவுள்ளங்கனிந்து, அம்மாபாயம்மாளை நோக்கி, 'அம்மா! உன்னுடைய மருமகள் ஆண்மகவைப் பெற்றுள்ளாள்; இன்னுஞ் சிறிது திநங்களுக்குள் வருவாள்; அதுவரையில் நானும் ருக்மணியும் உனக்கு வேண்டிய சிசுருஷைகள் செய்து போருவோம்; எதற்குநீ யஞ்சவேண்டாம்' என்று பிரஸாதித்து மறைந்தருளினன்.

அவ்வளவில், புண்டரீக வரதனும் ருக்குமணியும், பேரனும் மருமகளுமே யென்று எல்லாரும் மதிப்பதாக வடிவெடுத்து வந்து அம்மாபாயை வணங்கி நிற்க, அவரு மநமகிழ்ச்சிகொண்டு, பேரனையும் மருகளையுந் தழுவி, மார்போடு மார்பிணைய அணைத்துக் கொண்டு, க்ஷேமங்களை விசாரித்து, அவர்கள் கொண்டுவந்த சுவைமிகு பண்டங்களைப் பேரன் கையால் வாரித்தர வுண்டு, தாமுந் தங்கையால் பேரனுக்கு அவை யூட்டிக் களித்திருந்தார்.

இவ்வாருக, பக்த பராதீநனுகும் பகவான், விடியற் காலையெழுந்து, பாட்டியாருக்கு மெய்யில் நோயிருப்பின் அகலக் கால்கைகளைப் பிடிப்பதும், எழுந்தபின்னர் தந்தசுத்திக்கு ஜலந்தருவதும், இன்னும் எவ்வெக்காலத்திலெவ்வெப்பணிகள் விரும்புவாரோ அவ்வவற்றை யப்போதைக்கப்போதே செய்து முடிப்பதுமாயும், சகல லோக மாதாவாகியபிராட்டி,மாமியாருக்குஉகப்பவைக்றையில்துயில்நீத்து, வாசல் விளக்கிச் சாணமிட்டு, பாண்டங்களைச் சோதித்து, நீராடி, சமையல் காரியமுடித்து,மாமியாரையெழுப்பி, தீர்த்தமாட்டுவித்து, ஈரம்புலர்த்தி, வேறுஆடை யுடுத்துவித்து, திருமண்காப்பிட்டு, திருவாராதநஞ் செய்வித்துப், பீடகத்திலிருத்தி, அறுசுவை பதார்த்தங்களோடு அந்நமுண்பித்து, ஜலமேந்திக் கால் கைகளைச் சோதித்து, தனது முந்தானையால் ஈரம்வாட்டு, வேறு ஆஸனத்திலிருத்தி, பரிமள மிளிருஞ் சுருளமுது இடித்துத் தந்து, க்ஷாமரை வீசி, பேரனோடு ஒக்கத் தானும் அடிவருடுவதாயுமாய்க் கொண்டு பல்லாண்டுகளாகப் பணிவிடை செய்வாராயினர்.

இப்படி, இவ்வம்மாபாயம்மாளுக்குப் பேரனெனவும் மருமகளெனவும் வாய்த்து இக்குற்றேவல்கள் செய்துமகிழும் கோவலர்தங் குன்றேறும் பொற்கொடியும் யாவரென்பீரேல், யாவனொருவன் தன் உந்தீப்பூ பூத்தவில் இருந்து மூழ்த்த்நீரும் உலகமெலாம் படைத்தற்காகப் பிரமனை முதல் முன்னம்படைத்தனனே; யாவனொருவன் அந்நான் முதன் முதற் படைத்தவிரிஞ்சனிலிருந்து அரன்,இந்திரன், யமன், வருணன், ஏகாதச ருத்திரர்கள், பர்ஜந்நிய தேவதைகள் முதலானோரையும் படைப்பித்தனனே; அப்படிப்பட்டசகலவுலகங்

களுக்கும் உயிர்களுக்குந் திதி சங்கார கர்த்தாயாவனே; யாவனொரு வனில் சகலமான சப்த ஜாதங்களுஞ் சென்று நிலைபெறுமோ; யாவ னொருவன் சராசர ராத்துமகமான ஜகத்துக்குக் காரண பூதனைக் கொண்டு கால பரிச்சேதம், தேக பரிச்சேதம் ஒன்றுமில்லாமல் அதிசூட்சுமரூபனுப், எள்ளுக்குள் எண்ணெயைப்போல் யாவற்றுள் ளும் உறைகின்றனனே; யாவனொருவன் நேர் நிறையற்ற அப்பிரா கிருத ஜோதிமயனாய், சூரிய சந்திர அக்நிகளுக்குப் பிரகாசனாய் நிற்கின்றானே ; யாவனொருவன் எல்லா வுயிர்களுக்கும் ஓஷதிகளைக் கொண்டு ஜீவனா யிருக்கின்றானே; எவன் அமுதமாய் தேவர்களா லும், பிதுர்க்களாலுந்தினந்தோறும் உண்ணப்படுகின்றானோ? எல்லா தேவதைகளுக்கும் முகமாயிருந்து ஹவ்வியமும், எல்லா பிதுர்க்க ளுக்கும் முகமாயிருந்து கவ்வியமும் உண்ணும் அக்நிசொரூபனான பரமாத்துமா யாவனோ எவன் காலரூபியாய்க்கொண்டு பகலினை முதல் ரூபமாகவும், இரவினை இரண்டாம் ரூபமாகவும், சந்தியை மூன்றும் ரூபமாகவும் வகிக்கின்றானே; யாவன் சூரியாத்துமனைக் கொண்டு உஷ்ணமாகித் தன் கிரணங்களாலே உலகுசூழ் அந்தகாரத் தைப் போக்க, ஆகாசத்திற் பிரகாசிக்கச்செய்து, தாப - சைத்திய- ஜலாதிகளுக்குக் காரணமா யிருக்கின்றானே ; யாவன் பூமிசொரூப மாகும் கடின ரூபியாய், சப்த-ஸ்பரிச - ரூப -ரச - கந்தங்களுக்கு ஆசிரயமாய் விளங்காநின்றவனே; யாவன் வாயுசொரூபமாய் நின்று, பிராண அபாநாதி ரூபங்களாகச் சரீரங்களிலே யிருந்துஎப்போதும் சுவாசம் விடுதல், உள்ளுக்கு வாங்குதல் முதலிட்ட செய்கைகளைச் செய்கின்றானே; எவன் ஆகாச ரூபியாய், அந்தந்த மூர்த்தியாய், சுத் தமா யிருந்துகொண்டு எல்லா பூதங்களுக்கும் மஹத் பூதமாய் அவற் றிற்கு அவகாசங் கொடுத்து வருகிறானே ; ஜகத் கர்த்தாவாய், இந் திரியங்கள் எல்லாவற்றிற்கும் ஆசிரயமான சப்தாதி விஷயாத்துமக னவான் யாவனோ; யாவன் க்ஷர ஸ்வரூபங்களான அசேதனங்களில் பிரதாநமான பிரகிருதிக்கும், அக்ஷர ஸ்வரூபங்களான பத்தசேதந வஸ்துக்களில் பிரதாநனைகிற ஹரசப்தவாச்சியனுக்கும்நியாமகனான ஏகதேவனோ; இந்திரியங்களாலே கிரகிக்கப்பட்ட சப்தாதி விஷயங் களை ஆத்துமா அறிதற்குக் கருவியாகநின்ற மநம் - புத்தி-சித்தம்- அகங்காரங்களென்னும் அந்தக் கரண சொரூபவான்எவனோ; எவன் பிரகிருதி ரூபவானைக் கொண்டு தன்னிடத்தில் எல்லாபிரபஞ்சங்க ளும் இருக்கின்றனவோ ; எவனிடத்தில் இருந்து உண்டாயிற்றோ; எவனிடத்தில் அவை லயிக்கின்றனவோ ; பிராகிருதமான சத்து வாதி குணங்களின்றிக்கே சுத்தனாயிருந்தும் பிரகிருதி சம்பந்தமத

னால் அந்த சத்துவாதி குணங்கள் உள்ளவன்போல் பிராந்தியால் தோன்றும் ஜீவாத்துமாக்களுக்கு இருப்பிடமாய் விளங்குமவன் யாவனோ; ஞாநம் விரிதலும் சுருங்குதலுமாகும் விகாரங்கள் இல்லாதவனும், பிறப்பிலியும், சுத்தாத்துமகனும், பிரகிருதி குணசம்பந்தம் இல்லாதவனும், பிரகிருதி புருஷர்களைக் காட்டிலும் மிக்க சிரியனுமாய், தனக்கொரு காரணமும், தன்னிலும் வேறான தேஜசும் இல்லாதவனாய், பிராந்தி - பயம் - நித்திரை - ஆஹாரம், ஜரை - மரணம், சோகம் - ஜிகிச்சை - பாசம் முதலியவை யில்லாதவனாய், சத்திய சங்கல்பனும், சத்திய காமனுமாம், அமிர்தமயனாய், தனக்கோர் ஆசிரயமில்லாமல் தானே எவ்லாவற்றிற்கும் ஆசிரயனாய், அயன்-அரன் இந்திராதியர்களதும், இருடி கணங்களதும் மனோ வாக்குகளுக்கு எட்டப்படாதவனாய், வேத வேதாந்தங்களாலும், வேதபுருஷனாலுங் கீர்த்திக்க முடியாதவனாய் விளங்குமவன் யாவனொருவன்; முடிவற்றதும், தாண்ட முடியாததும், காமக் குரோத லோப மோகாதிகளாகுந் திமிங்கலங்களாலே பீடிக்கப்படுவதும், பயங்கர மானதுமான சமுசார சாகரந் தன்னைக் கடப்பதற்கு ஒப்பறு தெப்பமாகுமவனும், அச் சமுசாரமான பெருங்கடலுக்குப் பரமமான முடிவா யிருக்குமவனும் யாவனோ; யாவனொருவன் ஆத்துமாக்களையும், அசித்துக்களையும் சொபாவ ஐசுவரியமாகவுடைய காரணத்தால் 'ஈசுவரன்' என்றும், விருத்தி யடைவதும் அடைவிப்பது மாகலானும், விருத்தாசார குணங்களுக்கு ஆசிரயமாகலானும் 'பிரமம்' என்றும், சருவமும் அறிபவன் தானொருவனே யாகையாலே 'சருவஜ்ஞன்' என்றும், சேதந அசேதநங்களாலே விளங்கப்படும் பிரபஞ்சந்தன்னைத் தனக்கு விளையாட்டுக் கருவியாய்க்கொண்டு கிரீடிக்குமவனாகையாலே 'தேவன்' என்றும் அந்த சர அசராத்துமக மானவற்றைத் தனக்குச் சொத்துக்களாகப் படைத்தவனாகையாலே 'சுவாமி' என்றும், மாஹாத்துமியம் - தைரியம் - வீரியம் - தேஜசு - சம்பத்து வைராக்கியங்களாகும் இவ்வாறு குணங்களை யுடையனாய்க்கொண்டு 'பகவான்' என்றும் அழைக்கப்படுகிறானோ; எவன் பரமப்பிராப்பியமாய் விளங்குகிறானோ அவனாகும் சருவ லோக சரண்ணியன் ஸ்ரீமந் நாராயணனும்;

சகல லோகங்களுக்கும் ஒப்பறு தாயாய், திருப்பாற்கடலில் திருவவதரித்தவளாய்க் கொண்டு ஜகந்நாதனுடைய திருமார்பில் இறையும் அகலகில்லாது வசிப்பவளாய், செந்தாமரைமீதுறைபவளாய் தாமரையொத்த திருமுகமும், தாமரையொத்த திருக்கண்களும், தாமரையொத்த திருப்பவளமும், தாமரையொத்துத் தாமரைதாங்கிய

கைகளும்உடையவளாய், உந்தியில்தாமரை பூத்தவனது திருவுள்ளத்துக்கு உகந்தவள் எவளோ ; உலகம் யாவையும் பரிசுத்த மாக்கும் மங்கள சொரூபியாய் ஆத்துமவித்தியை யஜ்ஞவித்தியை தொடக்கமான எல்லா வித்தியைகளுக்குங் கடவுளாய்க்கொண்டு சாந்தமாயும் அசாந்தமாயும் இருந்துள்ள ரூப பேதங்களைக் கொண்டு மூன்று லோகங்களிலும் நிறைந்திருக்கின்றவள் எவளோ ; எவளுடைய கடாக்ஷம் நீங்கியபோது ஈரேழுலகங்களும் நாசமடைந்தன வாமோ; மறுபடியும் எவளுடைய நுக்கிரகம் பெற்று அவை யுண்டாய் விருத்தியடைந்து சௌபாக்கியங்களைப் பெறுமோ;யாருடைய கிருபாரசம் நிரம்பிய கடைக்கண்ணோக்கு தன்னால் பிராணிகள் தந்தம் பாரியா புத்திர மித்திர களத்திரர்களோடு மருவி களிகொள்ளுமோ ; எவளுடையருட்பார்வையால் பிராணிகள் தேகாரோக்கியமும், அதிகாரமும், சுகமும், சத்துருஜயமும் உண்டாகப் பெறுமோ; எவளுடைய கருணாரசத்துக்குப் பாத்திரபூதரானோர் சிலாக்கியதையும், குணசிலமும்,புண்ணியமும், கீர்த்தியும், சௌரிய பராக்கிரமங்களும்பெற்று உலகில் புகழெய்து வார்களோ; உபய விபூதிக்கும் அலங்கார பூதமாயுள்ளவள் எவளோ ; ஜகதாதாரனுக்கு மஹிஷியாய்க் கொண்டு சேதநர்கள் அநாதிகாலந் தொட்டு சஞ்சரித்துவரும் சமுசார தாபங்களால் அடிகொந்தளிக்கப் பெற்று, பகவத் விஷயத்துக்கு உடன் பட்டாலல்லது தரிக்க வகையில்லாத தசை வாய்த்த காலத்தில் பகவானை யாராதியாது ஆர்த்தரும் மூர்க்கருமாய்த் திரிந்தபோது தாங்கள்பண்ணின அக்கிருத்தியகரணம் - கிருத்தியாகரணம் - பகவதபசாரம்-பாகவத அபசாரம் முதலான அபராதவிசேஷங்களையும், ஈசுவரனுடைய நிரங்குச சொதந்திரமதனையும் எண்ணி, பீதியும் ஏக்கமும் கொண்டு தன்னைக் கிட்டி, தனது நிரவதிக காருண்ணியாதிகுண நன்மைகளைப் பலவகையானுங் கீர்த்தித்துத் தங்களது குறைகளை விண்ணப்பம் பண்ணிக்கொள்ளுமவற்றைக்கேளா நிற்பவளாதற்கொண்டும்; அவ்வாறுசேதநர்களுடைய குறைகளைக் கேட்டுச் சகியாதவளாய்க்கொண்டு, தனக்கும் உலகுக்குந் தனிநாயகனுக்குந் தாமோதரனுக்கு அக்குறைகளைக் கேட்பித்து, அந்த சருவஜ்ஞன் றானும் நிருத்தரனாம்படி புருஷகாரம்பண்ணி, சேதநரை யங்கீகரிக்க விடுக்குங் காரணங்கொண்டும் ஸ்ரீ எனத் திகழுபவள் எவளோ; எவளுடைய புருஷகாரமில்லாவிடில ஆத்மாக்களுக்கு கதயந்தரம் இல்லையோ அவளாகும் சருவஜகன்மாதாவுமென்று அறியக்கடவீர்.

இப்படி ஸ்ரீ ஸ்ரீயஃபதிகளிருவரும், அம்மாபாயின் நிஜபக்தி வைராக்கியங்களுக்குத் தோற்றுப் பணிசெய்தார்கள் என்றால் ஆத்

தகையினரால் பணிகொண்ட அவ்வம்மாபாயின் புண்ணியகீர்த்திகளை வருணிக்க யாரால்முடியும்? நாக்கள் ஆயிரமுடைய நாக அரசனாலும் முடியாதென்னக் குறையென்? அன்றியும், பாரதயுத்த முதல்நாளில், பாண்டவ கௌரவர்களுடைய இரண்டு சேனைகளினடுவே தேரினைக் கொண்டுபோய் நிறுத்தியபோது, இருவர்சேனைகளையுங் கண்டு சஞ்சல சித்தனாகி யுத்தம்பண்ண மாட்டேனென்று வெருண்ட பார்த்தனுக்காக அந்த ரணக்களத்தின் மத்தியில் தானே தனது விசுவரூபத்தைக் காட்டி, பதினெட்டு அத்தியாயங்களாக அருச்சுநனுக்கு இதஞ்சொல்லித் தேற்றியருளின ஸ்ரீமத் கீதையில்தானே தேவாதிதேவனனவன், "ஞாநிகள் என்னுடைய ஆத்தும சமராவார்கள்" என்று அருளிச்செய்த படியே, ஞாநியர்க்கு அரசியாகிய அம்மாபாய் தங்களுடைய ஆத்துமமே என்பது தோன்ற அவர் தமக்கு இத்தனை பணிசெய்யலாயினர். மேலும், பழுத்த கதிரினைக் கைப்பற்றச் சூழ்தருஉங் கிள்ளைகள்போல்,பொறுமை,கிருபை,சாந்தம் நிராசை, தவம், அறிவு, வாய்மை, அடக்க முதலான நற்குண நற்செய்கைகளிற் பழுத்துள்ள அந்த ஞானத்தலைவியை யன்னோர் அடைந்தது ஓர் வியப்பன்று. சாது போஷணத்திற்கென்றும், துஷ்ட சங்காரத்துக்கென்றும், தருமசம்ஸ்தாபநத்துக்கென்றும் பிருது பூண்டவனாய், சங்கம், சக்கரம், தண்டு, வாள், கோதண்டங்களாகிற ஐந்து ஆயுதங்களைத் தரித்தும், பிறப்பில் பலபிறவி பிறந்தும் உள்ளவனாகையால்.

இப்படி எம்பெருமானும் எம்பெருமாட்டியும் அம்மாபாயம்மாளுக்குச் சிசுரூஷை செய்துகொண்டுவரும் இவ்வதிசயத்தை யூரார றிந்து கொள்ளாமல், அம்மாபாயின் பேரனும், மருமகளுமே யென்று எண்ணியிருந்தார்கள். அநந்தரம் சிலகாலங் கழிந்தபிறகு அம்மாபாயின் பௌத்திரனாகிய அப்பாரந்தாமன், எப்போதும்போலே ஒரு நாள் தன் பாட்டியாருடைய சிரசைத் தனது துடைகளின் மீது வைத்துக் கொஞ்சி விளையாடிக்கொண்டிருக்குந் தருணத்தில், பாட்டியாரும் அம்மாபாயைப்பார்த்து, அம்மா! இதோ வைகுண்டத்திலிருந்து திவ்விய விமாநம் வந்திருக்கின்றது; இனி யாலசியஞ் செய்யாமல் ஏகலாம் என்று சொல்லி அவளுடைய பிராணனை ஆக்கிராணித்து, சூட்சுமதேகம் அளித்து, விமாநத்திலேற்றி, வைகுண்டத்திற்கு அனுப்பிவிட்டு, அவளுடைய தூலசரீரத்தை ஊராருடன்கூடி அக்கினி சமஸ்காரஞ்செய்து, உத்தரக்கிரியை முதலியவையும்விதிப்பிறழாமற் செய்துமுடித்து, எல்லோராலும் நல்ல பிள்ளையென்று பெயருங்கொண்டான்.

இங்ஙனிருக்க, நவலகே என்னுங் கிராமத்தில் இருந்த அம்மா பாயின் மருமகளுக்கும், பேரனுக்கும் அம்பாபாய் பரமபதமடைந்த சங்கதி கேள்வியுற்று' அதிவிசநத்தோடு பிரயாணமாய் வந்து தேஹூ காம் அடைந்து, தங்கள் வீட்டில் புகுந்து, அக்கம் பக்கங்களில்உள்ள வர்களை அம்மாபாய் இறந்தமை விசாரிக்கப்புக, அவர்கள் எல்லோ ரும் ஆச்சரியங்கொண்டு, நீங்கள் இருவருமே யிருந்து சகலகாரியங் களையும் நடாத்தினவர்களாயிருக்க, இப்போது ஒன்றும் அறியாத வர்களைப்போல் கேட்கின்றீர்களே என்ன, அவ்விருவரும் பிரமை கொண்டு, ஆ! இவ்வதியம் பகவானுடைய திருவிளையாடலே, ஐய மில்லை! என்று ஊராருடன் தாங்களும் மகிழ்ந்து, ஆநந்த பரவசர்க ளாகி, சிரங்களின் மீது கரங்களைக் கூப்பி சந்நிதாநத்தை நோக்கி தீர்க்கதண்டம் புரிந்து, ஹரிவிடேல்! பாண்டுரங்கா! புண்டரீகவரதா! என்று ராமநாம சங்கீர்த்தநஞ் செய்து ஆடியும், பாடியும், மெய் விதிர்த்தும் பரவசர்களானார்கள். அவ்வூரிலிருந்த மற்றவர்களோ! தேவு என்னும் இந்தக் கிராமம் விசுவம்பர பாவாவினாலும், அவரது சந்ததியாராலும்புநிதமாயிற்று; இது வன்றோ ஊரினதும் ஊராரதும் பாக்கிய விசேஷம்! என்று வியந்து கொண்டாடினார்கள்,

ஸ்ரீ ஹரீ! ஜெங்மோஹநாகாரா! கோபிகாவல்லபா! ஆபத்பாந் தவா! பீமாதீர நிவாசா! புருஷோத்தமா! ருக்குமணீ ரமணா! அடி யேனுடை யுள்ளத்தில் உறைதந்து இச்சந்த சரிதம் எழுதுவிக்கும் ஆதியஞ் சோதியே; உனது திவ்விய திருவடித் தாமரைகளுக்கு அநந்த வந்தநம் அடியேன் தந்தனன்.

இரண்டாமத்தியாய முற்றும்.

ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீ பாண்டுரங்கபரப்ரஹ்மணேநம.

ஸ்ரீ மத்

துக்காராம் சுவாமிகள் சரித்திரம்.

——:o:——

மூன்றுமத்தியாயம்.

காப்பு.

கலி விருத்தம்.

சங்குசக் கரமொள்வாள் தண்டுசார்ங் கங்களேந்தி
மங்கலஞ்சேர் பொற்கொடியை மார்பினிடை வாழவைத்துப்
பொங்கரவிற் கடலிடத்துப் புவிநீளை சூழதுயில்
செங்கண ரணனலர்சேர் திருவடியைப் போற்றுதுமே.

ஸ்தோத்திரங்கள்.

ஜயஜய க்ஷீராப்திசயநா! தேவகீ புத்திரா! ஜகத்விலாசர்லீலா! மாநுஷவேஷா! அகண்டாகாரா! கருணாநிதீ! காளிநதி மதகருவ பஞ்ஜநா! காயாம்பூ வண்ணா! பாரளந்த பதுமபாதா! பரமேஷ்டீ! பக்தபரிபாலா! வந்தநம் வந்தநம். பண்டு ஓர் அரசனுடையநீராட்டற் கென்று பரிசாரகர்கள் பெரியதொரு கடாரத்தில் ஜலம் நிறம்பப் பெய்து காடாக்கினியா யெரித்தும் ஜலம் சற்றுஞ் சூடுகொள்ளாமல் தண்ணென்றிருந்த அதிசயத்தை அரசனுக்குத்தெரிவிக்க, அரசனும் அங்குவந்து, வெகுநேரமாய் ஜலத்தைக்காய்ச்சியும் ஜலம்சற்றும் சூடு கொண்டிலதென்று கேட்டு, ஈதென்னவிந்தை யென்று வியந்து, கொப்பரை ஜலத்தைக் கவிழ்க்கவிட, அதிலிருந்து ஓர்தவளை புறப்பட்டு, ஹரிவிடேல்! பாண்டுரங்கா! என்றுகூப்பிட்ட அதிசயந்தனைக்கேட்டுங்கண்டும், அரசனும் பரிசாரகர்களும் ஆச்சர்யப்பட்டு நின்னைத் துதிக்கத் தொடங்க, நீயும் அந்தத் தவளைக்கு மீளா

இன்பவீடாகும் மேல்நாடு அளித்தனை, இத்தனை துதிப்பார்க்கும் இரங்கியருள் எழிற்பெருஞ்சோதியே! நினது கருணைரசம் ஒழுகு கடைக்கண்ணேக்குச் சற்று இந்நாயேன் மீது உறுமாகில், சூரியனது கிரணங்களால் கங்குல் நீங்கிப்பெருவெளிச்சமுண்டாவது போலும், பரிசவேதியால் செம்பின் களிம்பு அகன்று செம்பொன்னுவது போலும், என்னை அநாதிகாலந்தொட்டு நலியவிடுத்திருக்கும் பாவ வினைகள் யாவும்நீங்கிக் கிருதார்த்தனுவேன். பண்டரிபுர நிவாசா! பாவியேனையும் பணிகொள்ளுவது உன் பாக்கியமாகும்! என்று பிரார்த்தித்தல் செய்து, இப்பக்தலீலாமிர்தத்தின் விருத்தாந்தஞ் சொல்லத்தொடங்கினுர் மகிபதிதாசர்.

அம்மாபாயம்மாளுடைய பரமப்பிராப்தியைக் கேட்ட மருமகள், தன்பிள்ளையோடு தாய்வீட்டினின்றும் தேவுகாமுக்கு வந்து அங்குள்ளாரால், பேரருளாளனும் பெருந்தேவித்தாயாரும் பலநாள் அவருக்குப் பணிசெய்திருந்து, அந்தியத்தில் செய் கருமமுடித்து, ஊர் விருந்துஞ் செய்துவைத்து, தங்கள் வரவுக்குமுன் மறைந்தருளின விருத்தாந்தம் யாவுங்கேட்டு, ஆநந்த பரவசர்களாயங்கு வாழ்ந்து வருங்காலத்தில், ஓர் நாளடைவில், அம்மாபாயின் பேரனுகிய விடோபா என்னுஞ் சிறுவன் தன் தாயரைப்பார்த்து, அம்மா! நாம் ஊரிலிருக்க, பண்டரீநாதன் பத்நியோடு பாட்டியாருக்கு ஏவல் செய்துகொண்டிருந்து, முடிவில் பேறுமளித்து, நாம் வருந்தருணத்தில்மறைந்தனனே! இப்படிசெய்வதற்குக்காரணம் யாதோ! விளங்கவில்லை; எனக்கறிய விளம்பவேண்டும் என்று பிரார்த்திக்க, அந்தம்மையும், அப்பா! உனதுபாட்டனுர் விசுவம்பரபாவா என்பவர் சதாகாலமும் பண்டரீநாதனைத் தரிசித்துக்கொண்டு, தமது உடல்-பொருள் - ஆவிகள் யாவும் அவ்வரங்கன் ஆதீநமாக்கி, நிஜபக்தியோடு வைராக்கிய சீலராயிருந்து, கடைசியில் தம்பின் சந்ததியாரையெல்லாம் பண்டரீநாதன் காக்கவேண்டு மென்னும் உறுதியான வரமும் பெற்று வைகுந்தம் புகுந்தனர்; அவருக்கு 'ஹரிநாதன்' என்றும், 'முகுந்து, என்றும் இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள்; அவர்களில் மூத்தவராகிய ஹரிநாதன் என்பவரை நான் மாலையிட்டேன்; முகுந்து என்பவருக்கும் வதுவை நடந்தது. நாங்கள் சககுடும்பஸ்தர்களாய் வாழ்ந்துகொண்டிருக்கும்போது உன் தகப்பனும் சிறிய தகப்பனும் உலக இன்பங்களுக்கு ஆசைபட்டு வேருேர் அரசனிடஞ் சேவகர்களாக அமர்ந்திருக்கும்போது நீ என்கருப்பில் தரித்தனை; அவ்வளவில் வேற்றரசன் படையெடுத்துக்கொண்டு ராஜாவின்

மங்களஸ்திரீகள். கணிகையர். மங்களஸ்திரீகள்.

மீது யுத்தத்திற்குவர, அந்தச்சமயத்தில் இருவரும் மடிந்துபோனார்கள்; உன்சிறியதாய் தன்கணவனுடன் உடன்கட்டை யேறினாள்; அப்போது நீ என் கருப்பத்தில் தங்கியிருந்தமையால் நானுமப்படி யேறாமல், மாமியாருடன் கலந்து இவ்வீட்டித்திற்கு வந்து, உன்னைப் பிரசவிப்பதற்காக ஊருக்குப்போய் அங்கே உன்னைப்பயந்துவளர்த்து வந்தேன்; இப்போதுவர இவ்வதிசயங்கேட்டோம்; இவ்வளவன்றி வேறொன்றும் எனக்குத்தெரியாது என்றனள். விடோபா என்னுஞ் சிறுவன் இவற்றை யெல்லாங் கேட்டுக் கோபம்மூண்டவனாய்ச் சரேலென்றெழுந்து சந்நிதாந நோக்கிப்போய்ப் புகுந்து,கிரமப்படி சேவித்தெழுந்து, ஹரிஹரி! பாண்டுரங்கா! பாரளந்தமாயா! என்பாட்டனாராகிய விசுவம்பரருக்கு, உன்சந்ததியாரைக் காக்கிறேன் என்று அபயந்தந்து விட்டு, அவருடைய பிள்ளைகளாகும் ஹரிநாதன் முகுந்தன் என்பவர்களையே காக்காமல் ரணக்களத்தில் மாளவைத்தனை; இதுவும் நீ கொடுத்தருளின வரத்திற்கேற்ற அழகுதானோ? தீநபந்து என்றும், பக்தபாலன் என்றும் உனக்கு வாய்த்த இன்ன பெயர்களுக்குத் தக்க குணம் நின்மாட்டிருக்க வேண்டாமா? அந்நாமங்களுக்கேற்ற குணங்களும், வரமளித்தற்கேற்ற நடக்கையும் இல்லாவிடில் பழியேற்காயா? நாங்களோ! நீயே சருவ வகைகளாலும் ஜகத்ரக்ஷகன் என்று எண்ணி, உன்னையல்லால் திக்கற்றவர்களாயிருக்குமவர்கள். இப்படிப்பட்ட எங்களையே ரக்ஷிக்காவிடில் யாரைத்தான் இனி ரக்ஷிக்கப் போகின்றனை? உன்னுடைய தாஸ குடும்பஸ்தர்களென்று இருக்கும் எங்களுக்கு உன்னுடைய ரக்ஷணம் இல்லாவிடில் ஊர் பழிக்குமாதலால், அப்படி பழியேற்பதைவிட பிராணத்தியாகம் பண்ணிக் கொள்ளுவது நலம்; இன்றுஞ்சாவே நாளையுஞ் சாவே; இதற்கு அஞ்சேன் இனி என்று சொல்லி, இடையில் கட்டியிருந்தவாளாயுதத்தை யுருவிக்கொண்டு, தன்னைத்தானே வெட்டிக்கொண்டு மடியத்தேட, மெய்யடியார்க்கு அருட்சுரக்கும் முகுந்தன் அப்பிள்ளையின் கைகளைப் பிடித்துக்கொண்டு, அப்பா! நில்லு நில்! வீணில் உயிர் மாய்த்துக்கொள்ளுவதில் பயனில்லை; உயிரை வைத்துக்கொண்டு எவ்வளவேனுஞ் சண்டை செய்யலாம்; உயிர் மாய்த்துக் கொண்டபின் செய்யப்படுவது ஒன்றுமில்லை; அவசரப்பட வேண்டாம்; என்மீதில் எவ்வளவு கோபமிருந்தாலுஞ் சற்று அடக்கி நான்சொல்லுவதைக் கேட்டுத்தெளி; உன்பாட்டியாரைக் கொண்டு உன் தந்தைமாரிருவருக்கும் புத்தி சொல்வித்தேன்; தொண்டக் குலத்தில் உதித்த நீங்கள் பத்தகுலத்தவர்போல் பிறருக்குச்சேவகம் செய்யலாகாது ;

இகத்தின்போகங்களெல்லாம் அதி அல்பங்கள்; அவற்றிற்குஆசைப் பட்டுக்கொண்டு இகலோக கீர்த்தியும்; பரலோகப் பிராப்தியும் இழப்பது தகாது ; வீணில் அல்ப சுகங்களுக்குக் கரைந்து மடியவேண்டாம் என்று ; அவர்கள் அவ்வுரைகளைக் கேளாமல், கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்னுந் துர்அபிப்பிராயங் கொண்டு வேறூருக்குப் போய், அரசனிடம்சேவகம் அமர்ந்தார்கள் ; கடைசியில் அவர்கள் எண்ணிய எண்ணங்கள் வீணாய், எதிரிகளால் கொல்லப் படப்போந் தருணத்தில், தாயின்சொல் நம்பாமல் வந்து மாய்ந்தோம் என்று ஏக்கங்கொள்ள, நான் பண்டு உன்பாட்டனாருக்களித்த வாக்கின்படி அவர்கள்முன் பிரசந்நனாய்த் தோன்றி, அவர்களுக்கும் என்னுடைய பரமபதம் அளித்தேன்; இதுசங்கதிகள் உன் தாய்க்குத் தெரியும், போய்க் கேட்டுக்கொள்! என்று அருள்சுரந்து விடைகொடுத்து அனுப்பினர்.

விடோபா என்னும் அப்பிள்ளையும் தன் தாயிடந் திரும்பிவந்து, விசுவேசுவரன் பிரசாதித்த எல்லாவற்றையுந் தாய்க்குரைத்து, இவையுண்மைதானா? சொல்லென்று வணக்கத்துடன் கேட்க, அவ்வம்மாளும் குழந்தையை நோக்கி, பிள்ளாய் ! ஜகதாதாரனை சுவாமி உன் பாட்டியாரிடந் தன் குமாரர்களைச் சேவகத்தில் விடவேண்டாம் என்று உரைத்த சங்கதி யெனக்குத்தெரியாது; ஆனால் உன் தகப்பன்மாரிடம் உன்பாட்டியார், சேவகவேலை யுங்களுக்குத்தகாது நீங்கள் போகவேண்டாமென்று பல்காலும் மறுத்ததுமாத்திரம் எனக்கு நன்றாய்த் தெரியும். அவர்கள் தாயின் வார்த்தை கேட்காமல்போய் உத்தியோகம் அமர்ந்த சங்கதியுந்தெரியும் ; அவனோ ! கபட நாடக சூத்திரன்; மாயனெனப் பெயரும்படைத்தவன்; பூருவம் தன்வரத்தால் தேவர்கள் ஔஷதிகளைத் திருப்பாற்கடலிற் பெய்து, மந்தரந் தன்னை மத்தாக்கி, வாசுகியென்னும் அரவைக் கயிறாக்கி, தலைப்புறம் அசுரர்களும், மற்றப்புறம் சுரர்களுமாய்ப் பற்றிக் கடைந்தெடுத்த அமுதத்தை, தேவ பக்ஷபாதியாய்க்கொண்டு மோஹினி என்னும் நாய்ச்சியார் திருக்கோலங் கொண்டுவந்து, சுரர்க்கு அமுதமும், அவுணர்க்கு மையலு மூட்டி வஞ்சித்தவன்; அந்த மோஹினி திருக்கோலந்தனை மறுபடியும் சேவிப்பான் எண்ணி சிவபிரான் பலவகையாகப் பிரார்த்தித்த பொழுது இரங்கி, ஜகந் மோஹநாகாரமாகிய அத்திருவுருவத்தால் அவர்முன் கோடிசூரியப் பிரகாசத்துடன் விளங்க, அச் சடைமுடியண்ணல் சேவித்து விரகதாபமீறி, பொறுக்க முடியாமல் அணைவதற்காக வோடோடியும் வர, தான் அவர் கைக்கு

அகப்படாமல் சற்ருேடி மறைய, அவ்வளவில் சகிக்கவொண்ணுத காம விகாரத்தால் இரேதசந் தன்னடையே பெருகித் துடைவழி வார, அகனேக் கையினுல் ஏந்திய போழ்து, வீரியம் வீணிலாகா தாகையால் ஓர் சிசுவாகக் கையிலிருக்க, அதுவே நிரூபகமாக அச் சிசுவுக்கு 'ஸாஸ்தா' என்ற பெயர் விளங்க அருளினவன். அன்றி யும், ஆயர்பாடியில், அசோதை தன் குட்டனுய் கண்ணனென்னுங் கருந்தெய்வந் தோன்றி பாலரசங்களே நடாத்திப்போரா நிற்கையில், கஞ்சனுல் ஏவப்பட்ட பூதகியாகும் பேய்ச்சி, நல்லாயர் குலக்கொடி யன்ன ரூபத்துடன், குடமொத்த கொங்கைகளில் விடப்பால் விளங்க வைத்துக்கொண்டு வந்து வலிய பாலமுது உண்ணென ஏந்தி முலே கொடுக்க, அம் முலே வழியாகத்தானே உயிர்செகவுண்டவன்; இவன் ஒன்றைக்காட்டி ஆத்துமாக்களுடைய கருமங்களின்படி யொன்றை முடிப்பவன்; நான் உன்னேப் பெறுவதற்காக என் தாயகம்போயிரு ந்த போது, உன்னேப்போன்ற ரூபத்துடன் தோன்றிவந்து உன்பாட் டியாருக்குச் சிசுரூஷை செய்தவன்; இவனுக்கு மஹிஷியாய்ப் பக் கத்தில் அமர்ந்து நிற்கும் ருக்குமணியோ! அண்ட சராசரங்கள் யாவைக்கும் அருமைத் திருத்தாய், அடியாருளம்பூப்ப அமருமவள், தன் கருணு நோக்குதன்னுல் பிரமன் - இந்திரன் - ஆதித்தன் - அம் புலி - வருணன் - வாயு - குபேரன் - நிருதி - வாசவன் - வசு முதலா ஞேரை யந்தந்த நிலேகளில் இருத்துமவள், பிரகிருதியிற் பட்டு மாய் குநரைக் காத்தருளும் பெருந்தேவி, எனக்குமாருக உன்பாட்டியா ருக்கு மருமகளாய் வந்து பணிசெய்து மகிழ்வித்தவள்; இவ்விருவ ருடைய குணகீர்த்திகளே வருணிக்க யாவரால் முடியும்? அளவில் லாத ஆச்சரிய குணசேஷ்டிதனுகிய மாயன், பாண்டவர்களேக்காத்த பரமேஷ்டி, சான்ருேரேத்துந் தண்சுடர்க்கொழுந்து, ஒப்பில் தற்ப ரன், சச்சிதாநந்த சுயஞ்சோதி, திருவேங்கடத்து எழில்கொள் சோதி; அவன்ருனே திருப்பவளச் சோதிவாய் திறந்து சாதித்தரு ளினவை பொய்யாமோ? நமக்குத் தெரியாமல் உன் பாட்டியாரை யெப்படிக்காத்தனஞே? அவர் முடிவில் சரமகாரியங்களேத் தானே யெப்படிசெய்து முடித்தனஞே, அப்படியே யுன் தந்தை இளந்தங் ஞதகளேக் காக்குமாறு உன் பாட்டியாருடன், அவர்களே யுத்தியோ கத்துக்குப்போய் அமரவிடாதே என்று சொல்லியேயிருப்பான்; உன் பாட்டி பலதரஞ் சொல்லியுங் கேட்கவில்லே; அசத்தியவான் ஞக்கு அகப்படாதவனுகையால் அங்ஙன் நிகழ்த்தினுன்; நாம் அவ் வரும்பொருளுடைய நியமநத்தின்படிக்கும், அலர்மேன்மங்கையி

னுடைய நியமநத்தின்படிக்கும் நடந்துகொள்வதே கடமை; நம் முன்னோர்கள் யாவரும் அவர்களுடைய ஆஜ்ஞை கடவாது இருந்தமையால் இக போகங்களும் பரசுகங்களும் அநுபவித்தார்கள் என்றுரைத்தலும், விடோபாவாகும் சிறுவன் பயபத்தி விசுவாஸங்களோடு கேட்டு, தாய்க்கு வந்தநமியற்றி, தாயே! உனது இன்னருளால் உலக பிதாவும் உலக மாதாவுமாகிய ஸ்ரீ - ஸ்ரீய:பதிகளுடைய திருவடி வணங்கி, என்று மறவாது துதிப்பவனுயினேன்; இனியென்றுஞ் சோர்வுறேன்; அவர்கள் பணிக்கும் வார்த்தைகளும் பணிகளுமே தஞ்சமாகக் கொண்டு வாழ்வேன்; பிறிதோர் வாழ்வை வாழ்வென மதியேன்; என்று இவ்வாறெல்லாம் மிகுதியும் விநயமாய்ப் புகன்று, சுவாமி சந்நிதி யண்டி, கைகளைக் கூப்பிக்கொடு நிற்கக் கண்ட நேமி நெடுமாலானவன், தன் கருணாமிர்தம் அவிழுங் கடைக்கண்ணுல் குளிர நோக்கியருளி குழந்தாய்! உன் தந்தை - தாதை - மூதாதையர்கள் பண்டரீ நாதனுக்கே வகுத்த அடிமைகளாகி, வார்க்கரிபிருது பூண்டு, தங்கள் தங்கள் வாழ்நாளெல்லாம் பண்டரீபுர யாத்திரையிலேயே கழித்தார்கள்; அதுபோல் நீயும் வார்க்கரியாகி, வருடத்திற்கு ஒருமுறை யிருமுறையாவது உன் தாயுடன் பண்டரீபுரம் போய், பக்தபராதீனனை பஜித்துத் தொழுது வந்து, உன் முன்னோர்கள் வாழ்ந்த இத்தேவுகாமில் உங்கள் வீட்டில்தானே குடியிருந்து, குலாசார தருமந் தவறவிடாது விவாகமும் முடித்துக்கொண்டு இல்லற நடத்தி, மற்றக்காலங்களில் என் சந்நிதிக்கு வந்துகொண்டிருப்பாயாகில் உன் முன்னோர் பெற்ற பேறு நீயும் பெறுவாய் என்று நவின்றருளினன்.

விடோபாவும்,தன்னியனேன்! என்று மகிழ்ந்து, அவ்வருமைத் திருவாக்கின்படியே கல்யாண முடித்துக்கொண்டு, வார்க்கரியாய், பண்டரீபுர யாத்திரையும் தேவுகாம் வாசமுந் தவருமல் இல்லற நடத்தி வாழ்ந்துவந்தனர். சிலநாள் கழித்து அவ்விடோபா 'பதாஜி', என்னுங் குழந்தையைப் பெற்று, தம் மூதாதைபெற்ற வரத்தின்படி திவ்விய விமானாரூடராய் பரமபதஞ் சேர்ந்து வாழ்ந்தனர்.

இந்த பதாஜிக்கு சங்கரனும், சங்கரனுக்கு காஞேபாவும், காஞேபாவுக்கு போலோபாவும் உற்பந்நமானுர்கள். இப்படி, விசுவம்பரர்முதல் போலோபா வரையிலும் உண்டானஏழுதலைமுறையளவும் ஆண் பெண் அடங்கலாக சதா பண்டரீநாதனைப் பஜித்து, அவனுக்கே அற்றுத்தீர்ந்த தாஸகோடிகளாகி யிருந்தார்கள். இவர்களில் யாருக்காவது இராகத் துவேஷாதிகள் தலையெடுத்து நடையாடுமாகில்

சந்நிதி புகுந்து, சருவேசுவரனிடம் விண்ணப்பம் பண்ணிக்கொண்டு அவனால் கழிக்கப் பெறுவார்கள். சருவாந்தரியாமியும் அந்தக் குடும்பமென்னும் வலையிற் சிக்கியிருந்தான். எற்றுக்கெனின் இவ் வேழு தலைமுறையளவும் உள்ள ஸந்ததியாரெல்லோரும், காம - குரோத - லோப - மோக - மத - மச்சரங்களாகும் இவ்வாறு ஹரி வர்க்கங்களின் நசையற்றவர்களாய், சம தம சாந்திகள் உடையவர் களாய், பக்திஞாநங்களே சொரூப மெனக்கொண்டொழுகு மவர் ளாய், நிஷ்காமர்களாய், தொண்டக்குலமென்று உலகு துதிப்பினும் அத்துதியேற்கு மநமில்லாதவர்களாய், சாதாரண சமுசாரிகளினுஞ் சாதாரண சமுசாரிகளென்னலாம் சத்தியத்தைத் தவிர்க்காது, பகவத் பாகவதர்கள் திறத்தில் அன்பும் பிரேமையும் மிகுத்துள்ளவர்களாய்க் கொண்டு வாழ்ந்து வந்தமையால் சருவேசுவரன் அவர்கள் திறத்திற்பட்ட அடிமையாயிருந்தான்.

இஃது இங்ஙனிருக்க, போலோபாவானவர், தம் தொண்டக் குல மான்மியத்துக்கு உகப்ப வார்க்கரி விருதுபூண்டு, வருடத்திற் கொருமுறை யிருமுறை பண்டரீபுர யாத்திரை செய்வதும், பாண்டுரங்கனைச் சேவிப்பதும், மறுபடியுந் தம் அகமடைந்து பக்ஷத்துக்கு ஒருதடவையாக வரும் ஏகாதசிகளின் விரதம் விதிபிறழாது அநுஷ்டிப்பதும், சதா சத்துவகுணமே பூர்த்தி கொண்டவராயிருப்பதும், தயை முதலிட்ட நல்லற வழிநிற்பதும், பகவானைத் துதிப்பதும், கீர்த்தநங்களைப் பாடுவதும், தம்மில்தாமே ஆநந்தங்கொள்ளுவதும், ஒருசமயம் துருவனுக்குத் தொல்புகழ் வானவரீசன் அநுக்கிரகித் தருளின பதவியை நினைந்து நினைந்து உருகுவதும், ஈசுரனுடைய அநுக்கிரகத்தால் பாலினசையு மாறப்பெறுச் சிறுவனாகிய துருவன், விரிஞ்சன் கிரீசன் முதலானோரும், சத்த இருடிகளும், நக்ஷத்திரங் களும் எல்லாருந் தொழுதேத்து நிலையினைப் புதிதாய் சிருஷ்டிக்கப் பெற்றடைந்தமையாகும் இந்தப் பிரபுத்துவ அதிசயத்திற்கு மகிழ் வதும், உபமந்நியு என்கிற பிராமணச்சிறுவனொருவன், தன் அன்னையை வருந்தி ஓர் கிண்ணம் பால் அளிப்பாயென்று கேட்க, அவள் ஒரு கிண்ணம்பால் என்னிடங் கிடையாது; பாற்கடல் நாதனும் பதுமதளாக்ஷனைக் கேட்டால் அவன் அளிப்பானென்று சொல்ல, சிறுவன் உபமந்நியு, அவ் வாக்கியத்தின்படியே ஸ்ரீமந் நாராயணனை நோக்கி, அழுதகண் ணுங்கண்ணீருமாய் நின்றுபிரார்த்திக்க, அதற்கு இரங்கியருளிபேராளன் பிரசந்நனாய், உனக்குக் கிண்ணம்பாலென்ன க்ஷீராப்தியே கொடுத்தேன்; உண்பாயாக என்று அநுக்கிரகித்து அருளினமையைச் சிந்திப்பதுமாயிப்படி சருவதேச - சருவகால - சருவா வஸ்தைகளிலும் அவ்விறையின் குணகீர்த்திகளைக் கொண்டாடி, அழுதல் - தொழுதல் - ஆடியாற்றுதல் - பாடிக்காண்டலாகும் பக்தி காரியங்களில் நாற்பதுவருஷம், சற்றும் ஓய்வும் ஆறுதலுமின்றி பஜித்துவந்தார். அவருடைய மனைவியாகிய கனகாபாயம்மாளும்பர்த் தாவுக்கேற்ற பதிவிரதையாய்க்கொண்டு, கணவன்போலவே காகுத்

தன் திறத்தில் திடபக்தியும், பதியின் திறத்தில் விசுவாச பய மரியாதைகளும் உள்ளவளாயிருந்தாள்.

இவ்வகை தம்பதிகள் இருவரும் பகவானை யன்புடன் வந்தநஆராதநாதிகள்செய்து சதா கீர்த்தித்து வராநிற்கையில், ஒருநாளிரவில், இப் பகவத் தாசராகிய போலோபாவினுடைய சொப்பநத்தில் விஷ்ணு-விரிஞ்ச-கிரீசர்களாகும் திரிமூர்த்திகளுந் தோன்றி, உன்னுடைய எண்ணம் யாது? உனக்கு வேண்டும் வரம் கேட்பாயாகில் தரக்கடவோம்! என்று உரைக்கலும், பகவத் குணசீலர் சற்று பயந்து மும்மூர்த்திகளுக்கு வந்தனை வழிபாடுகளால் நமஸ்கரித்து, ஸ்வாமிகாள்! நான் சமுசாரியாதலால் எனக்கு மகப்பேற்றின்மீது மிக்க அவாவுள்ளது, மற்றொன்றினுங் குறைவிலேன், பிரஸாதித்தருளல் வேண்டுமென்று பிரார்த்திக்க, பிரம ருத்திரர்கள் இருவரும், உன் மநோரதம் சித்திபெறக்கடவது என்று மங்களாசாசநம் அமைத்து மறைந்தனர்கள். அவ்விருவர்க்கும் நடுநாயகமென்ன நின்ற ஸ்ரீமந் நாராயணன், தம் அடியவரைக் குளிர கடாக்ஷித்து, உனக்கு எத்தகைய புத்திரன் வேண்டும்? என்ன ஸ்வாமின்! சருவலோக சரண்ணிய! உமது பிரபாவாதிசயங்களால் கீர்த்தித்து அறியாதவனும், ஸ்ரீ வைஷ்ணவனும், உலகு தன்னை வாழ்விப்பவனுமாவான் ஒருபுத்திரனைத்தந்தருளல் வேண்டுமென்ன, ஆயினும் யாரையொத்தவனா யிருத்தல்வேண்டும்? என்ன, தேவரீர் மீளா இன்னருளால், பண்டு தாமுசேட் என்பவருக்கு, அவர் மனை குணபாயம்மாள் வயிற்றில் பிறங்குவித்தருளின 'நாமதேவரை' யொத்தவனா யிருத்தல் வேண்டுமென்று விரும்ப, அப்படியே தந்தோம்! என்று தாமோதரன் நவின்று மறைந்தருள, அவ்வளவில் போலோபாவும் சொப்பந நீங்கி ஜாக்கிரதராய்த் தந்தேவியைத் தட்டி யெழுப்பி தாம் கண்ட கனவினைச் சொல்ல, அந்தம்மையும் அதுவே தருணத்தில் அதுவே கனுக்கண்டமை கணவனுக்குச் சொல்ல, இதுவென்ன ஆச்சரியம்! என்று வியந்து, வேதவேத்தியன் தன் அருள்வினையைக் கொண்டாடினார்கள். சிலநாள் சென்றவாறே அந்தக் கனகாபாயம்மாள் கர்ப்பவதியாகிப் பூரணநாள் வாய்த்து ஒரு வரனைப்பெற்றனள். அக்குழந்தைக்கு 'ஷாவஜி' என்று நாமகரணஞ் செய்து நாளொரு மேனியாக வளர்த்து வந்தார்கள்.

இங்கிப்படியிருக்க, ஸ்ரீவைகுண்ட திவ்யநகரத்தில் ஸ்ரீமத் பரவாசுதேவன், சாக - சநந்த - சநற்குமார - சநற்சுஜாதிகள் நால்வரும், நாரத - கிந்நர - கிம்புருட - சித்த - வித்தியாதர - கெருட - கந்தருவரும், பிரகலாத - பராசர - புண்டரீக - வியாச - அம்பரீஷ - சுக - சௌநக - பீஷ்ம - ருக்குமாங்கத - அருச்சுந - துருவ - பலி - விபீஷணாதி புண்ணியாத்துமாக்களும், நிவர்த்திநாதர் - ஞாநதேரு - சோபாநுதேவு - முக்தாபாய் - நாமதேவு - கபீர் - பாநுதாஸர் - சாங்கவடேசுவரர் - சாவந்தாமாளி - நரகரிசோனர் - விசோபாகேசரி - ஏகநாத் - சேநாநாவி - சௌகாமீள் - கோராகும்பார் - லங்கா

10919

தாஸர் - பைராதாஸர் - பிஷாதாஸர் - பரிஷாபாகவதர் - துளசிதாசர் கமா-காநோபாத்திரர்-சூரதாஸர்-நாமதேவு-புத்திரர்கள்-மஹாதேவு நாராயணன் - கோவிந்து. விடோபா - நரசிம்மமஹந்து - இராமதாஸர் - இராமாநந்த - சந்நியாசி - ஜோகாதாஸர் - உலோகிதாஸர் - நாகநாத் - விசுவம்பரர் முதலிட்டபக்திபரவசரும், கேசவ சைதந்நியர்-இராகவசைதன்னியர் - அம்மாபாய் குணபாய் - மீராபாய் முதலான ஞாநசிலரும் சூழ்ந்ததொரு பெருத்த திருவோலக்கத்தின் நடுவில், கிரகமண்டலத்தில் சந்திரன் பிரகாசிப்பதுபோலும், தபோநிதிகளுக்குள் பிநாகபாணி பிரகாசிப்பதைப்போலும், சித்தஜெநங்களுக்குள் அநுஜா குமாரராகும் தத்தாத்திரேயரைப்போலவும் கோப்புடையசீரிய சிங்காதநத்தில், திருமகள் - பூமகள் - ஆயர்குலமகள் இருமருங்கும் அடிவருடவீற்றிருந்து, முக்தர்கட்குஆநந்தமாம் அமுதூட்டி யுகப்பித்து வரா நிற்கச்செய்தே, சருவலோக நியந்தாவாகும் சருவ ஸ்வாமி, அத் திருக்குழாத்து அன்பர்களைக் குளிர நோக்கி, "தேவுகாமில் நமது அன்பனுகிய போலோபாவுக்கு, நல் விவேகமும், எனது பக்தியும், ஆதரமுமுள்ள ஓர் புதல்வனைத் தருவோமென்று வரமளித்திருந்தோம். அந்த வரம் ஸ்பலமாகும்படி இந்தத்திருவோலக்கத்திலுள்ள வுங்களில் யாராவதுபோய் போலோபாவாவுக்குப்புத்திரராக அவதரிக்கும் விரகுண்டோ?" என்று வினவலும், அப் பரமப் பிரயோஜநமான கைங்கரியத்துக்கு அக் குழாத்துள்ள எல்லோரும், நான் விடைகொள்ளுகிறேன்! நான் விடைகொள்ளுகிறேன்!! என்று துரிதங்கொண்டு முனைய, அவ்வளவில் ஸ்வாமி, "பண்டு வால்மீகிபகவான் ஸ்ரீமத் ராமாயணமதனை சதகோடி கிரந்தங்களாகச்செய்து உலகத்தை வாழுவித்ததுபோலநானும் சதகோடி அபங்கங்கள் செய்யக்கடவேனென்று பிரதிஜ்ஞைசெய்த நாமதேவானவர் அந்தப் பிரதிஜ்ஞையில் நின்றுந் தவறி யிருக்கின்றார்; அந்தக் குறைதீர அவர் தாமேபோய் போலோபாவாவுக்குக் குமாரராக அவதரித்து, என்வந்தநவழிபாடுகளால் புகழெய்தி குறைந்த அபங்கங்களைப்பாடி யுலகத்தாருக்கீந்து, அவர்களை வாழுவைத்து, அநந்தரம் என் இன்ப சுகங்களை முன்போல் அநுபவிக்கலாம்" என்ன, அதற்கு அங்குள்ளார் எல்லோரும் ஆநந்தங் கொண்டாடி, ஜெயஜெய! என்று மங்களங்கள் பாடித்துதித்தார்கள்.

அவ்வளவில் நாமதேவரும், ஸ்வாமியினுடைய குண கீர்த்திகளைக் கொண்டாடி, அடிவீழ்ந்து நமஸ்கரித்து, பெரிய நாயகனே! பெரியவர் கூட்டத்துள் அப்பெரியவர்க்கு ஆட்பட்ட பேதையேன் பெரியவர்கள் பெறுப்பேறுபெற்ற நன்மை யாதென்பேன்? ஆகிலும் பூலோகத்தில் போலாபாவாவுக்குப் புத்திரனுக நான் அவதரிப்பின் என்னைப் பிரகிருதியின் வாசனை நலிவுறுவகை தடுத்தாட் கொள்ளல் வேண்டும்! என்று பிரார்த்திக்க, அத்தயா சமுத்திரனுகுந் தாமோதரன் அவரைநோக்கி, நீர் அஞ்சன்மின்! உம்மைவிட்டு இங்குளனக்கொரு காரியமும் இலது; உம்மைவிட்டிருக்க இஷ்டமுமிராது; இறை

யும் பிரியகில்லேன் உம்மைவிட்டு, பூருவம் பெரியவர்களெல்லாரும் ஒன்றுசேர்ந்து வெகுநாள் தவமியற்றியும், 'ஞானம்இன்னவிதமென்று நாங்கள் அறியோம், அதனை இன்னதென்று அறிவிக்க வேண்டும்' என்று நிருமலசித்தர்களாய்ப் பிரார்த்திக்க, அவர்கட்கும் அவர்களுடைய தபத்திற்கும் பிரார்த்தனைக்கும் இரங்கியருளிய நான் அசரீரியாய் நின்று, "ஸ்ரீமத் தசரத சக்கரவர்த்திக்குத் திருக்குமாரனாக அவதரிக்கப்போகிறேன்; அப்போது உங்களுக்கு விஸ்தரிப்பேன்" என்று பிரசாதித்தபடியே; அந்த ராமாவதாரஞ் செய்தருளின பதினாறுவது வயதில், முன் தவமிருந்தும் பிரார்த்தித்துமுள்ள இருடியர் சூழ்ந்ததொரு திருச்சபையில், வைராக்கியப் பிரகரணம் என்கிற கருத்தால் முன் விஷயங்களை வெளியிட்டேன்; அன்றியும், அறிந்திருந்தும் உணரவில்லை என்ற பெரியவர்களை நோக்கி, இருந்தும் இல்லாமையாவது யாது? என்று யான் வினவ, அதற்கு அந்தப் பிரமருஷிகள், ஐந்துலக்ஷ கிரந்தமாக அவ்விஷயத்தை விஸ்தரித்தனர்கள்; அக்கருத்தும் நானறிவித்த கருத்தும் ஒத்திருக்கச்செய்தேயே அதனைப் பகுத்தறியுந்தன்மையில்லா மற்றுஞ்சிலர் என்னை நோக்கி, நீவிர் திருவாய்மொழிந்தபடி அநுஷ்டித்துக் காட்டவேண்டுமென்று கேட்க, கிருஷ்ணாவதாரஞ் செய்த ஞான்று அதனையும் அனுஷ்டித்துக் காட்டினேன். யாவருக்கு யான் ஞானம் இன்னதென்று அறிவித்தனனோ, அறிவித்த அவ்விஷயம் அனுஷ்டித்துக் காட்டினனோ அம்மேன் மக்கள் குழாத்துள் நீயும் ஒருவனா யிருந்தனை; இப்படியென் அவதாரங்கள்தோறும் உன்னை விட்டுப் பிரிந்திலன்; உத்தமன் என்கிற பெயரால் நீ என்னுடன் கூடவிருந்து கிருஷ்ண லீலாமிர்தசாகரத்தில் படிந்திருந்தபோது யானுனக்கு ஸ்ரீமத் பாகவதம் பதினோராவது ஸ்கந்தத்தில் போதித்த அநுபவங்களை, இப்போது போலோபாவுக்குச் செல்வ சுதனாகக் கனகாபாயம்மாள் வயிற்றில் தோன்றி, தான தரும பரோபகாரங்கள் இன்னவையென்று உலகம் யாவும் சற்கதியடையப் போதித்து வாழ்விப்பீர் என்று அருளலும், நாமதேவும், நளினத்தவள் கேள்வனை நோக்கி தீர்க்கதண்டமியற்றி, சருவ ஜீவதயாபர! தான தரும பரோபகாரங்கள் தேவர் திருவுருவாகவும், நன்னடக்கையாகவுமிருக்கு மவை யென்று மூதுணர்வினர் உரைக்கக் கேட்டிருக்கின்றேன்; அவற்றை நன்காய்ந்தவர் ஜநக சக்கரவர்த்தியொருவரேயென்றும் அறிந்துள்ளேன்; தேவரீரும் தேவர்களது வேண்டுகோளின்படி பூபாரந்தீர்க்க தேவகி தன்வயிற்றில் தோன்றி கண்ணனென்னுங் கருந்தெய்வமாக அமர்ந்தபோழ்து, அத் தான தரும பரோபகாரங்களை நடித்துக்காட்ட, சில மந்தமதிகள் உம்மைப் பொய் நடையினர் என்றே தம் அவித்தியா கரும வாசனையால் புறங்கூறினார்கள். இங்ஙன்தேவரே நேர்நின்று அநுஷ்டித்தும் உலகில் காரியம்பெறாதிருக்க, சிற்றறிவு உடையோரிற் சிறுமைபட்ட சிறியனேன் அவற்றை நிலைபொறுத்தல் வசமோ? கலியின் சாம்மிராச்சியந திகழ்தரு காலமாயிருத்தலைப் பற்றி தேவருடைய திரு

வடிச் சேவையையன்று, காமக் குரோதாதிகளின் மயக்கிற் சிக்கி, தேவரது திவ்விய தரமான சேவையை மறப்பேனாகில் கற்பாந்த காலம் மறுபடியும் அச்சேவை கிடைத்தல் அரிதாய் முடியும்; ஹே! தீநதயாபரமூர்த்தி! தீநரக்ஷக! ருக்மணீரமண! இதற்கு என்செய் வேன் என்று ஆர்வத்தொடு கதறக்கண்டு, அவரை மார்புடன் அணைத்து, மாரனார்தாதை, அப்பா நாமதேவு! நீ கலியுகமாயிற்றே என்று அஞ்சுகின்றனைபோலும்; கலிதருமம் பின்னறிவுள்ளோர்க்கே யன்றி முன்னறிவினருக்கு பற்றாகாது; மநோவேகத்தைப்பின்னுறவைத்து அறிவினை முன்னாகக்கொண்டு, சஜ்ஜந சங்கமத்திற் சங்கமித்திருக்கும் நல்லோரை யெஞ்ஞான்றும் கலிநசை நலிவியாது; கிரேதாயுகத்தில் அறுவகை விகாரங்களால் நலியப்பட்டுள்ள குணமுடையோர் இல்லையா? இக்கூட்டத்தில் உள்ளார் எல்லாரும் இந்தக் கலியுகத்தில் தானே பூலோகத்தில் அவதரித்து, அகப்பற்றுடைய அஜ்ஞருக்கு வேண்டிய பக்திமுக்திகளைப் பிரசாதித்துத் தேற்றவில்லையா? உத்தவருடைய மறுபிறப்பளாராகிய நீர் பண்டரீபுரத்தில் அவதரித்து உலகத்தோர்க்கு பக்தியுண்டாகச் செய்யவில்லையா? கலிதருமம் இற்றை ஞான்றுதானா வுண்டாயிற்று? நீ சதகோடி அபங்கங்களைச் சொல்லுவேனென்று கூறிய சபதத்தினின்று தவறினமையாலும், முக்திக்கு சாதநம் பக்தியென்று மூர்க்கர் அறியாமையாலும், உலகில் முழுமூடர் சில்லோர் தங்களை ஞாநிகளென்று உலகத்தார் மதிக்கப் போய் வேடம்பூண்டு, டம்பாகாரர்களாய், நாங்களே ஞாநிகள், மற்றவர்க்கு என்ன தெரியும்? என்று அகங்கார மமகாரங்களில் மாழ்கி நரகத்துக்கே யுரியவர்கள் ஆகின்றமையாலும், அவ்வாறு பிரகிருதி வாசனையுறுப் பாவிகளாயிருந்தும், நாங்கள் ஞாநிகளானோம்; நாரணன் எங்களைக் காக்காது ஒழிந்தானென்று என்னை வீணில் தூற்றுகின்றமையாலும், அவர்கள் எனக்குப் புத்திர சம்பந்தம் உடையவர்களாகையால் அவர்கள்படு நரகவேதனையை ஸாக்ஷிபூதமா யிருந்துபார்க்க என்னால் சகிக்கமுடியாதாகையாலும், நீர் எனக்குப் பறிவ ராகையாலும், நீரே சென்று பேலோபாவுக்குப் புத்திரனாய்ப் பிறந்து, சதகோடி அபங்கங்களைப் பூர்த்தியாக்கியும், பக்தி ரூபத்தையும், தாநதரும பரோபகாரங்களாகும் நல்லறஇயல்புகளையும் நடத்திக் காட்டியும் உலகத்தை வாழ்வித்து மீளவும் என் வீடடைவாயாக; இதற்கஞ்சேல் கண்டாய்! நிஜ பக்தியோடு உன் சொல்லை யார் விருப்புடன் கேட்கின்றார்களோ அவர்களுக்கும் உன்னைத் துதிப்பவர்களுககும் வைகுண்டத்தில் இடங்கிடைக்கும்; நீரும் பஞ்ச கிருத்தியங்களை யுடையவரா யிருப்பீர்; என்னை நினைக்குந்தோறும் உம்மருகில் யான் குடிபுகுந்திருப்பேன்; உமக்கு யாதொரு தீங்கும்வராமல் காத்துநிற்பேன்; போய்வாருமென்று விடைகொடுத்தனுப்ப, நாமதேவும் நாரணன்றன் நளினபாதங்களுக்கு நமஸ்கார மியற்றி, "ஆசைவாய்ப்பட்ட சிந்தையனாகி அன்னை யத்தன் புத்திரன் பூமி வாசவார்குழலென்னும்" இம்மயக்கில் என்னை நலியேன்

மின் கண்டீர்! என்று பிரார்த்தனையுஞ் செய்து, அந் நல்லோர் கூட்டத்தினின்று பயணமாய் தேவுகாமில், போலோபாவின் செல்வப் பெண்டாட்டியாகிய கனகாபாயம்மாளுடைய கருப்பத்தில்வந்து ஆவிர்ப்பவித் துகந்தனர். இப்படி கனகாபாயம்மாளாகும் குணதிசையிலே நாமதேவாகும் பூரணசந்திரன் தோன்றிய அத்தோற்றமானது கனகாபாயம்மனுக்குமாத்திரம் தோன்றாச் சுடர்த் தோற்றமாயிருந்தது. அக் கருப்பம் நாளுக்குநாள் வளர்ந்து தோன்றுந்தோறும் கனகாபாயம்மாளுக்கு பகவத் பக்தியும், பாகவதாராதனமும், நிராசையும், பூஜாசக்தியும், சாதுஜன சேவையும், பய மரியாதைகளும், திருநாம சங்கீர்த்தநமும், நவவிதபக்திசிரத்தைகளும் அபிவிர்த்தியாய்க் கொண்டிருந்தன. இவ்வகை யொன்பதுமாதங் கடந்து பத்துமாதம் ஆனவாறே, சுவாதி நக்ஷத்திரமமைந்ததொரு சுபதிநத்தில், ஓர் குளிர்ந்த மின்னலைப்போல் கனகாபாயின் திருவயிற்றிலிருந்து வெளித்தோன்ற அக்குழந்தையின் முகத்தையுற்றுப்பார்த்து, ஓகோ! ஈதென்ன அதிசயம்! இக்குழந்தை சாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணனுடைய திவ்விய முகார விந்தத்தோடு ஒத்து சுத்த சத்துவமே போலவும், பிரம ருத்திரர்கள் போலவும், இந்திராதியர்கள் போலவும், மற்றும் எந்த வுருவை நினைப்பினும் அவ்வதற்கு ஒத்திருக்கின்றது! என்று தனக்குத் தோன்றாநிற்கும் அக் குழந்தையின் காக்ஷிகளை வியந்து மோகித்து நாதாந்தங்கடந்த நல்லோர் மயங்கிநிற்கும் நிலையொத்துத் தம்பிதமாயினள். அக் குழந்தையும் சுத்த சத்துவமயனாய், ஸ்ரீமந்நாராயணனுடைய இன்னருளால், கலி சாம்ராஜ்ஜியம் பண்ணும் இந்த இருள் தருமாலத்தின் கலியிருள் நீங்கிக் கிருதயுகமென்னப் பேரின்ப வெள்ளம் பெருகும்படி பாரெல்லாம் உய்விப்பான் தோன்றின தாகையாலே முலையுண்ணுமலும், உரோதநம் பண்ணுமலும், மல மூத்திரங்களை விசர்ஜ்ஜநம் பண்ணுமலும் பகவத் குணம் ஒன்றையே தாரகமாய்க்கொண்டு, இட்டகால் இட்ட கைகள் அசைவற்றிருந்தது. அவ்வளவில் திருவேங்கடத்து எழில் கொள்சோதி யெந்தை யெம்மான், அக்குழந்தையைப் பிரகிருதி வாசனா சம்பந்தத்தினின்றுந் தடுத்தாட்கொள்ளுங்கடமை தனதானமை நேக்கி அக்குழந்தை முன் தோன்றியருளி, குழந்தாய்! அஞ்சன்மின்! மங்களங்களும், சுகங்களும் எல்லாம் உனக்கு உண்டாகுக! என்று ஆசிவாழ்த்தி மறைந்தருள, ஆவினைப் பிரிந்த கன்றேபோல் இறைவனைப் பிரிவாற்றகில்லாமல் குழந்தை கடுரோதநஞ் செய்ய, அருகிருந்தமருத்துவமாதர் முதலினர்குழந்தையின் ஆர்த்தநாதங்கேட்டு, அதிப்பிரீதராய்க் குழந்தையை யெடுத்து அழுக்குப் போக்கி, வேண்டும் உபசாரங்கள் செய்துதர, தாயானவள் மிகு வாதரதத்தோடு உத்தாநஞ்செய்து ஏந்தி, தனக்கென்று வட்டமிட்டோங்கி விம்மிச் சுரந்து ததும்பு வனமுலை கொடுத்துச் சீராட்டினள். அயல் அத்துச் சுமங்கல மாதர்களும், சுற்றத்தவர்களும் எல்லாரும் குழந்தை பிறந்தமையைக் கேட்டுக் காணப்புக்குக் கண்களாரநோக்கி,

குழந்தை வடிவழகினுக்கும் தேஜசுக்குந் தோற்று மயங்கி, அறிவழிந்தனராய்க் கொண்டு அவ்வரிவைமார் எல்லோரும் செறிமென் கூந்தலவிழ, கச்சணிமுலைசோர, மருங்கமர் மேகலைதாழ, முன்கை வளைகழல, மெய்விதிர்ப்பப் பாடுவார்; பல்லிசை கூறநின்றாடுவார்; ஆதியான் அருள் ஈதென்று ஆலிப்பார்; அம்மா! அழகிதென்றோடுவார்; இவனோர் கண்டிலமென வுகந்து விழுவார்; கண்ணபிரானே! நின்கருணையல்லாமல் உறுமோ இப்பாவியோமுக்கு இவ்வொளியுருவென்றுகண்பனிப்பாராயினர். மற்றுந்தெரிவைமார் சிலருடன் ஆடவர்களுஞ் சிலர் கலசி அம்மவோ! "இக்குழந்தை இருடீகேசனேயாகுமென்பார்; சிலர் காமனே காமுறுங் காமனெனென்பார்; சிலர் இந்திரைகோன் இவ்வுருவுடன் அமர்ந்து உதித்தனனென்பார்; சிலர் முளரிபூத்தோன் என்பார்; சிலர் பிரமன் பயந்தெடுத்த பிஞ்ஞகனேயென்பார்; சிலர் பாண்டுரங்கனே யாவானெனென்பார்; சிலர் புவியிணிடர் தொலைக்கவந்த புண்ணியன் என்பார்; சிலர் எழில்கொள் சோதி மேனியனும் இவனைப் பெற்றவயிறுடையாள் என்ன நோன்பு நோற்றாள்கொலோ" என்பார். இப்படிப்பலரும் பலபல முறைகள் கூறிக்கொண்டாடி, கண்ணெச்சல் வாராமைக்காக முத்தார்த்திகளெடுத்து, அப்ப வர்க்கங்களை வழங்கினார்கள்.

பத்துநாளுங் கடந்த இரண்டாநாள் எத்திசையின் உறவின் முறையோருக்கெல்லாம் அறிவித்து வரவழைத்து, பன்னீரால் வெந்நீர் வைத்துக் கடாரத்திற் பூரித்துக் குழந்தையின் கையுங் காலு நிமிர்த் தாட்டிப், பசுஞ் சிறுமஞ்சளால் பைய நாவின் அழுக்கையகற்றி, ஈரம் புலர்த்தி, கண்ணுக்கு மையும் நெற்றிக்குச் சாந்தமுமிட்டு, மார்புடன் சாத்தி, முக்காடிட்டு சருவவகை மங்களவாத்தியங்களு முழங்க, மலர் மழைபொழிய, மங்கலஸ்திரீகள் பூரண கும்பங்களேந்தி மங்களாசிகள் கூறிக்கொண்டு முன்னணியாக வழிநடத்தச் சென்று சந்நிதிக்குள் புகுந்து, பாரளந்தருளின பதுமபாதங்களில் குழந்தையைக் கிடத்தி, ஸ்வாமின்! சருவலோக சரணிய! உம தருமையின்னருளால் பிரஸாதித்த இக்குழந்தைக்கு நீரேயன்றி மாதா பிதா பிராதாக்கள் யாங்களன்று; சொத்துடைய நீர் எது செய்யினுந் திருவுள்ளம், இன்றளவும் ஆகவேண்டியவையாயிற்று; இனி நாமகரணம் ஊசல்வைபவ முதலான சற்சடங்குகள் நடக்க வேண்டியிருக்கிறது; அவற்றிற்குத் திருவுள்ளம் இரங்கியருளி, எவ்வகை செய்யவேண்டுமோ கட்டளையிட்டுக் காரியமுடிப்பித்தல் கடமை; ஹே! கன்று குணி லாவெறிந்து கனிவீழ்த்தி யுண்ட கருணையங்கடலே! கார்நிறத் தண்ணலே! காகுத்தா! காளநன்மேகமனேயானே! என்று கனகாபா யம்மனும், போலோபாவுந் தம் சுற்றத்தார் சிநேகர் முதலிட்டாருடன் பிரார்த்தித்து, பின்னும் ருக்குமணீதேவியாரையும் வணங்கி, இராஜ ராஜேசுவரீ! சருவலோகஜநநீ! உனது அருள்விழி நோக்கால் வந்த குழந்தையைக் காத்தல் நினது பாரமுமாகும் என்று கைகளைக் கட்டிநின்று தொழலாயினார்கள்.

அவர்கள் தொழுதமைக்கு உவந்தருளி அணுவிற்குள் அணுவாய் நிறைந்திருக்கும் ஆதிமூலப் பழம்பொருளாகும் அம்போருகாக்ஷனும், அம்போருகத்தில் உறைவாளாகும் அம்மையும் இதங்கள் பலவுரைத்தருளி, பின்னர் ருக்குமணீ பிராட்டியை நோக்கி லோகநாதன், நமது அருளால் உதித்த இக் குழந்தைக்கு நாமேயுகந்து வேண்டுவன செய்யவேண்டி யவர்களா யிருக்கின்றோ மாதலால் நீர் அக்குழந்தையை யெடுத் துபலாலித்து, அவர்களகமே சென்று, தாசிய நாமமிட்டு, தொட்டிலும் அமர்த்தி தாலாட்டி வாருமென்று அருளப்பாடிட; அந்தச் சருவலோக சுந்தரியும், ஆம்! என்று களிப்புடனிசைந்து, பிராமணச் சிறுமியன்ன திருக்கோலத்துடன், மிகுப் பிரேமையராயச்சேயினைத் தமது சுந்தரந் தங்கிய மலரொத்த திருக்கைகளால் வாரி யெடுத்துக்கொண்டு, கதம்ப கஸ்தூரிகளால் கூட்டப்பட்டுள்ள சந்தநக்காப்பிட்டு, லாலநஞ்செய்து, கனகாபாய் அவர் பந்து வருக்கத்துள் தாமுங் கலந்து, முன் வாத்தி யாடம்பரங்களுடனே பொற்பூவொத்த பொரையடிகள் பூமியிற்பட நடந்து வந்து, போலோபாவாவின் மாளிகை புகுந்து, விபூஷித மாதர்களைக்கொண்டு முன்னியற்ற வேண்டிய பூஜா காரியங்களை நடத்துவித்து, பண்டரீநாதன் பஜனையையும் பண்ணுவித்து, "துக்காராம்" என்று நாமகரணஞ் செய்து, தொட்டிலில் இட்டு, ஜயஜய விட்டலா; என்னுங் கோஷத்துடன் அக்ஷதை தூவி, தொட்டில் பூட்டிய சங்கிலிகளில் ஒன்றை, தெய்வநாயகனைத் தழுவுந் திருக்கைத் தாமரையால் தாங்கி, அலர்மேன்மங்கை,ஊசற்பாட்டோடு தாலாட்டும் திருப்பவள வாயாற் பாடத்தொடங்கினார்.

அப்பாட்டுகளின் கருத்தாவது :—

குழந்தாய்! நீஅழாதே; சிறுவரோடு உறவுதவிர்த்துச் சிறுமாமணிசராகுந் தெள்ளியோருடன்கலந்து, பேரின்பவிளையாட்டு விளையாடி, கனவிலும் உலகவாழ்க்கை விரும்பாமல், பிரகிருதிவசன் ஆகாமலும், பெரியவர்கள் சிசுரூஷையும், மூர்த்திகள் சேவையும், திவ்வியநதீஸ் நாநமும், திவ்வியக்ஷேத்திரவாஸமும் செய்துகொண்டு, பிரணவார்த்த சொரூபவாணயிருந்து நித்திரைசெய்வாயாக என்றும்;

ஜாக்கிரத் தசையில் உலக வியாபாரங்கள்யாவும் நடத்தாது நடத்தி, அகப்பற்றுப் புறப்பற்றுக்களற்று, சொப்பந தசையில் ஜிதேந்திரியனாக இருந்து,ஆநந்தாதிசய நித்திரைசெய்வாய் என்றும்;

மநோவேகத்தைப் பிரணவாகாரமாக்கி, அம்மநதினைத் தசவிதநாதத்திற்சேர்த்து, உனதாயிருக்கும் சுகாதீதவீட்டில் நித்திரை புரிவாய் என்றும்;

சத்துச் சித்தாநந்தமாகும் உலகியல்பில் தங்கி, அவஸ்தாத்திரையங்களைத் தவிர்த்து, சுத்தஜ்ஞாநரூபியா! யிருந்து, இயலாக கொள்வாய் என்றுமாம்.

இவ்விதமாக ஜெகன்மாதாபாடிய பாட்டுகளுக்குச் சுபமங்கலிகள் பின்முறையாய் ஜெயமங்களங்கள்பாடி, ஆநந்தபரவசங்கொண்டு ஒருவர்மீது ஒருவர் சந்தந புஷ்பங்களை வாரியிறைத்துக் குதூஹலித்தார்கள். அவ்வளவில் மஞ்சள், புஷ்பம், பழம், தாம்பூலம், சருக்கரை, கற்கண்டு, மிட்டாய்வகைகள்முதலிய மங்கலத்திரவியங்களைவழங்கி, நல்விருந்துமளித்து, அவ்வவர்கள் மனைகளுக்குப் போகவிடுத்தார்கள், ருக்குமணீபிராட்டியும், தம்மைத்தொழுது நின்ற கனகாபாய்க்குக் குழந்தையின் நல்வாழ்க்கை யாவுமுரைத்து மறைந்தருளினர்.

போலோபாவானவர் இவ்வதிசயங்களையெல்லாம் உற்றுநோக்கி ஆநந்தாப்தியிற் படிந்தவராய்க்கொண்டு, ஓஒ! ஈதென்ன அதிசயம்! நாமென்ன நமது யோக்கியதையென்ன நம்பக்கலினுஞ் சற்றருள் சுரந்து, ஜநககுல சுந்தரியாகிய ஜகத்மாதா நமது குடிலுக்கு எழுந்தருளி, குழந்தையைத் திருக்கைகளாலேந்தி உபலாலநஞ்செய்து, நாமதாரணம்பண்ணி, நம்ம சுற்றத்தரிவையரைத்தோழமைகொண்டு குழந்தையைத் தொட்டிலில் இட்டு, பிரமாநந்தரசம் நிறைந்த கீதங்கள்பாடி, எல்லாருள்ளத்திலும் இன்பமூட்டி, மற்றும் உள்ளனவாய சீர்ச்சடங்குகள் யாவுநடத்தி எழுந்தருளினமைக்கு நாமென்ன தவஞ்செய்தோம்? மநத்திலோர் தூய்மையும், வாயிலோர் இன்சொல்லும் இருக்கப்பெறு நாம் தவத்துளார் தம்மில் ஒருவனல்லோம்; தநம் படைத்தாரினும் இல்லோமோ! இத்தகைய நமக்கு நம்மையாளுடைய கோவுங் கோமாட்டியும் வலியவந்து ஆட்படுத்தியது ஆச்சரியத்தினும் ஆச்சரிய மாயன்றோ காணவடுப்பது? சநக-சநந்தந-சநற்குமார-சநற்சுஜாதியர் நால்வர் உளத்திற்கும், மற்றும் இருடியர்க்குந் தவவாய்மையானுங் காணவரிய தளிர்புரையுந் திருவடிதாழத் திருநடைநடந்து தமியேன் குடிசைக்கு எழுந்தருளின அதிசயத்தையென்னென வியந்துகூறிக்கொண்டாடுவோம்? செய்தவங்கள்செய்து அத்திருவடிகளை யருச்சித்தமையாலன்றோ சிவமூர்த்தி சிவனையினர் பிரமனும் படைப்புக்கு உகந்தான்; இந்திரனும் திரிலோகாதிபத்தியம்பெற்றான்; அத்தகைய அருமைத்திருவடி அவாருளால் எளிதிற்சேவைதரப்பெற்றும், நாம் மந்தகதிகளும் அஜ்ஞருமா யருத்தியாதொழிந்தனமே! ஈதென்ன நமது துர்ப்பாக்கியம்? ஜநக சக்கரவர்த்தி திருமாளிகையும், நாரதாதியர் உள்ளமும் புகுதக்கடவதல்லால் பிறிதோர் ஆன்மாவுக்குந் தோன்றவும்படாச் சுடர்ச்சோதி பாதங்கள் தொல்வினையரோமுக்குச் சுலபமாய்த் தோன்றியுங் கடுவினைப் பயனால் துறந்து மரமென நின்றன மாயினேம்; சிச்சீ! நங்கொடுமை

தீயினுங் கொடிது! அவ்வெழில்கொள் சோதிபாதம் அருச்சிக்க மறந்தனமேனும் தின்பண்டங்களிலாவது சிறிது சமர்ப்பித்து உபசரித்தோமா? அதுவுமன்றி அவ்விறைவி யெழுந்தருளும்போது சுவரென நின்றிருந்தோமே; அவனிடஞ் சென்றனையே யேதேது உபசாரங்கள் செய்து, எவ்வெவற்றைச்சமர்ப்பித்தானென்று கருணாநிதியாகுங் காகுத்தன் கேட்க, அவனோர் உபசாரமும் பண்ணினவனல்லன், ஒரு பண்டமும்ஈந்திலன்என்று உரைப்பாராயின் இறையினிருதயம் இளைத்தருளுமே! இதற்கு என்செய்ய அடுப்போம்? அவன்றனே முனிந்தால் இனிக்காப்பாரார்? துருவசக்ரவர்த்தியைப்போல் ஊன்வாடக் காயோடு கனிகிழங்கு சருகுகள் உண்டு கடுங்கால் நுகர்ந்து உயிர் காவலிட்டு, புலனைந்துமேயும் பொறியைந்தடக்கி, நீயோடுநின்று நெடுங்காலந் தவஞ்செய்ய வசமோ? செய்யினும் ஸ்ரீ-ஸ்ரீதரர்களுடைய கருணை பெறுவேமெனல் நிஜமோ? இனியாவது ஒரு மூட்டை சிற்றுண்டி கொண்டுபோய் சமர்ப்பிப்போமா? சமர்ப்பித்தால் அங்கீகரிப்பார்களா? முன்னமேயளிக்க மனமில்லாதவன் இப்போது கொடுக்கவந்தால்அங்கிகரிக்கமாட்டோமெனத்திரஸ்கரித்துச் சீறினால், அச்சீற்றத்திற்கு இலக்காதல் யார்வசம்? அயன் அரன் இந்திரனுதியராலும் பொறுக்க முடியாதெனில் நாமெவ்வளவு வெந்த மடிச்சிலைப்போல் ஆகுவமே; இதற்கு என்செய்யக்கடவோம்? பிரமருத்திரர்களையாவது வேண்டி, நம்மைப்பற்றி நாரணனிடஞ்சில இதங்களைச் சொல்ல விடுவிப்போமென்றாலும் அவர்களை நோக்கியும், பகீரதாதியர்போல் பல்லூழிகாலந் தவஞ்செய்ய நம்வசமன்று; புருஷகாரஞ் செய்தலல்லால் பிறிதோர் சொரூபம் இன்றெனப்பிருது பூண்டிருக்கும் பூவின்மிசை நங்கையின் திறத்தில் அபசாரப்படாது இருப்போமாயினும் அவராவது அருள்விழியழகற்குச் சில நன்மையெடுத்தோதி மீளவும் அங்கீகரிக்கச் செய்தருளுவார்; நாமோ! முந்துற அவருக்கே அபசாரஞ் செய்தவரானோம்; நமக்கினி புகல்யாது? சூதனைத் தூர்த்தனுகி நமக்குநாமே தீங்கு வருவித்துக்கொண்டோம்; நம் முன்னோர்க்கும் முகுந்தன்செய்த நன்மைகள்யாவும் மறந்தோம்; நாம் பெற்றவருளையுந் துறந்தோம்; ஐயோ! நமது எழுதலைமுறையாக ஈசற்காட்பட்டு நங்காலத்தில் விரோதம் விளைவித்துக் கொண்டனமாயினம்; நமது பாட்டியாராகிய அம்மாபாயம்மாளுக்கு இவ்விருவருமே யிரங்கி உண்பன வுடுப்பனவாயவற்றிற் குறைவற அளித்து, பணிவிடைகளுந் தாங்களே நேர்நின்றுசெய்து, முடிவில் அந்திய கருமாதிகளுஞ்செய்துவைத்தார்கள்; இத்தகைய கருணையங்

கடவுளர்க்கு மநமிளைக்கச்செய்துவிட்டோம் என்று இவ்வாறெல்லாந் தம்மில்தாமே சிந்தனைக்கொண்டு நொந்து, ஒருவாறு தேர்ச்சியடைந்து தீநதயாபரமூர்த்தியாகும் ஸ்ரீமந் நாராயணன், திருவுள்ள மகிழ்ச்சியோடு நமது பாட்டனாருக்கு, அவர்தம் பின்னணி சந்ததியாரைக் காத்தல் செய்வேனென்று சபதமளித்திருக்கின்றான்; அந்தத் திருவாக்கியத்திற்கு ஏற்ப நம்பாட்டியாரைச் சருவ வகையானும் இரக்ஷித்திருக்கின்றான்; ஆகையால் நம்மைத்துறிக் கைசோரவிடான் என்று துணிந்து, ஹரி ஹரீ! பக்தவத்ஸல! பரமேஷ்டி! பாண்டுரங்கா! அடியேன் தீவினைப்பயனால் திகைத்து, என் அன்னையின் திறத்தில் ஆதரமொன்றுஞ் செய்யாமல் பாவியானேன்; என்னை அடிமைகொண்ட ஆண்டவா! என் குற்றங்களைந்து குணமாக்கியருளவேண்டும் என்று இன்னன பலதுதிகள் துதித்துப்பின்னையும், அவ்வாதி மூலப் பழம்பொருள் அகிலபுவநேசுவரியாகும் ருக்குமணியோடு தந்திறத்தினும், தம்மனை கனகாபாயம்மாள் திறத்தினும், தம் அருமைப்புதல்வன் துக்காராம் திறத்தினுஞ் செய்தருளின அருட்பெருஞ்செயல்களுக்கு வியந்து கொண்டாடி, ஆவா! நாம் என்ன நோன்பினர் கொலோ; நாதனருளால் வாய்த்த நம்பெறலரும் புதல்வனும், நளினத்தாள் தன்நலமந்தமில்லதோர் கைகளாலெடுத்து உபலாலிக்கப் பெற்றமைக்கு அந்தோ! எத்தவப்பேற்றினளவையோ? சூரியசந்திரர்கள் உள்ளளவுங் கீர்த்திவகிக்கப் பெற்ற நாம் இனியும் எவ்வெவ்வதிசயசேஷ்டைகள் அடைவமோ? என்று தம்மில்தாமே மகிழ்வெய்திக் கூத்தாடி குனிந்து பணிவார்? இப்பிள்ளையும் பெருமானது பேசருளால் ஏதேது சுகாநந்தங்களைப் பெறுமோ! என்றுன்னி, தமக்குத் தாமேவியந்து சிரந்துளக்குவார்! "இவனைப்பெற்ற வயிறுடையாள் என்ன நோன்பு நோற்றாள் கொலோ"! என்று உலகினர் அதிசயிக்கவும்; "வளர்த்ததனால் பயன்பெற்றான் இவன்றாதை யொருவனே" என்று கொண்டாடவும் இசைத்துவைத்த நம்பெறலரும்அடிகளுக்கு யாது கைம்மாறு செய்யவல்லோம்? என்று ஏங்குவார்; நாம்பெற்ற நன்மை யிவ்வுலகினில் யார்பெறுவார்? என்பார்; இப்படி போலோபாவானவர் ஆநந்தாப்தியிற் படிந்து, இரவும் பகலும் இறையை நினைந்துருகி பஜித்துவரா நிற்பவராயினார்.

இங்ஙனிருக்க, இவர்தம் அருமைத் திருக்குமாரராய், உலகினரது நீங்கா உள்ளிருள் நீங்கி வற்றாப்பிறவிக்கடல் வற்றி, பூவா இதயப்பூ பூக்கும்படியுதித்த துக்காராம் என்னுஞ்சிறுவன், போலோபாவானவர் அங்நப் பிராசநாதிகள், அவ்வந்தக்காலங்களில் பெருவிழா

யென்னலாய் குலாசாரப் பிரகாரத்திலேசெய்து, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்கத்தளர்ந்து, மாணிக்கக்கிண் கிணியார்ப்ப, மருங்கினில் ஆணிப்பொன்மணியும், பொன்னரை நாணுந்துலங்க, நெற்றியிற்சுட்டி யசைந்தாட, கையினிற் கடகம் விளங்க, பல்மணியாரமும் பருத்த முத்துப் பதக்கமும் பளபளப்பச் சப்பாணிக் கொட்டியும், உடலிலிடுபணிகள் ஒளிர்ந்தாரவாரிப்பத் தளர்நடைநடந்தும், மண்ணுலகொடு விண்ணுலகு மகிழ்வெய்த மதலைசொற் சொற்றும்; இவ்வாறு தலைவளரும் அம்புலிபோல் வளர்ந்து வந்தார்.

சிறிதுநாட்சென்றபிறகு மறுபடியும் ஓர் ஆண் மகவைப் பிரமாவின் வரமதனால் கனகாபாயம்மாள் பயந்தனள். அக்குழந்தைக்கு 'கானயா' என்று பெயரிட்டனர். இக்குழந்தைகள் மூவரும் நன்கு வளர்வதையும், குணங்கள் அதிசயித்திருப்பதையுங் கண்டுவரும் போலோபாவாவும் அவர் மனைவியுங் குழந்தைகளின் திறத்து அதிசயித்தவர்களாய், திரிமூர்த்திகளுடைய வரப்பிரசாதத்தால் வாய்த்தவர்களாகையால் இக்குழந்தைகள் மூவரும் நற்குண, நற்செய்கை, நன்னடக்கை, நல்வாய்மைகளை யுடைத்தானவர்கள் ஆகின்றார்கள் என்றறிந்து, "ஏவாமக்கண் மூவாமருந்து" என்ற பழமொழிநினைந்து சந்தோஷித் திருந்தார்கள். அயலாரும் உறவினரும் பிள்ளைகளுடைய அற்புதகுணங்களுக்கு ஆச்சரியப்பட்டு, "தவத்தளவே யாகுமாந் தாம்பெற்றசெல்வம்" என்று தந்தை தாயர்களைக் கொண்டாடி மகிழ்ந்தார்கள். ஸ்ரீமத்பாண்டுரங்கனது பகரும் அருட்பார்வைதன்னால் அவர் மனையில் தந தானியங்கள் குறைவற்றிருந்தன. ஆநிரையும் அசங்கியேயங்களாய் நிறைந்தன. அன்னோர்வாழும் ஊரிலும் மாத மும்மாரிபெய்து, செந்நெல், கோதும்பை முதலியவை செறிந்து விளைந்தன.

இங்ஙனம் நடவாநிற்கையில் பிள்ளைகள் மூவருக்குந்தக்க வயது வாய்த்தவாறே, சுற்றத்தார் எல்லோரும் விவாகங்களை விரைவில் முடித்துவைக்கக் கேட்டுக்கொண்டபடியே போலோபா, மகவுகளுக்கேற்ற மனையாட்டிகள் மூவரையும் மணம்பேசி, சுபமுகூர்த்தமிட்டு குலவிதி வழுவுறாது, பாளைகமுகுகளால் பசும்பந்தல் அலங்கரித்து, மத்தளங்கொட்ட, வரிசங்கமூத, திருச்சின்னங்கள் பரிமாற, சங்க முதலியன ஆரவாரிப்ப, சுற்றத்தார் அல்லாதார் மனைகள்தோறும் சுபமாதர்கள் மங்கலகீதங்கள் இசைத்துச்சென்று மணஞ்சொல்லவிடுத்து, நற்றீர்த்தங் கொணர்வித்துப் பிள்ளைகள்மூவருக்கும் பெண்

களுக்கும் மங்களஸ்நாநஞ்செய்வித்து, காப்புக்கட்டி, வேதம் வல்லார் வாழ்த்தி வழங்கிய மந்திரக்கோடி யுடுத்துவித்து, சதிரிளமங்கையர் கலசமுடன் கதிரொளி தீபமேந்த, மாங்கலிய தாரணஞ் செய்வித்து, பெருபெருத்த கலியாணம் முடித்துவைத்து, பிள்ளைகள் மூவரும் இல்லறங்களை வழுவாது நடத்திவராநிற்கையில், மூவரையும் கூட வைத்துக்கொண்டு வியாபாரம் பரக்கச்செய்து பிரபுத்துவம் நடாத்தி வந்தார். இப்படி பிரபுத்துவம் நடவாநிற்பினும், போலோபாவானவர் நிலையில்லாக் காயமென்றெண்ணி, இராகத் துவேஷாதிகளினும், அகங்கார மமகாரங்களினு மநஞ்செல்லவிடுக்காது, புலனைந்துமேயும் பொறியைந்தையுமடக்கி, இத்தநதாநிய சம்பத்துக்கள் யாவும் கரும பயனால்வருவன; இவற்றிற்கு மகிழ்ந்து செருக்கடைவோமாகில் ஸ்ரீதரன் நம்மைக் கைசோரவிடுவான்; நரகத்துக்கே யாளாகவேண்டி முடியும் என்றுன்னி, நீறுபூத்த நெருப்பன்ன தாம் பிரபுத்துவம் உடையாரென்று சங்கல்பிக்காமலேயே அவற்றின்பக்கல் விரக்தி பூண்டு, சற்குணம் வழுவாது சதா சாதுசேவைசெய்யும், சருவேசுவர பஜநம்பண்ணியும், விருந்தினர்க்கும் விருப்பினர்க்கும் வேணு அந்நமளித்து, பகவத்பக்தி பிறழாது பாரித்து, ஸ்ரீமந்நாராயணனுடைய திருவிளையாடல்களை நினைந்து நினைந்துருகி, தினமும் பிரேமை வகிப்பவராய், எல்லாம் அவன் செயலேயெனக்காலங்கழித்துவந்தார்.

இவர்க்கு வாய்த்துள்ள இப்பெறலரும்பேறு அவித்தியாசம்பந்தர்களாகும் பத்தான்மாக்களுக்கு எஞ்ஞான்றும் வாய்க்ககில்லாது; எற்றுக்கெனின்; சுத்தமாய், நாசமில்லாததாய், பசி தாக முதலான ஷடூர்மிகள் அற்றதாய், சத்துவாதி குணரஹிதமாய், பிரகிருதியைக் காட்டிலும் வேறுபட்டதாய், சகலப் பிராணிகளுக்குள்ளும் அவ்வந்தத் தேகங்களைப்போல் வெவ்வேறு அமிசங்களாயிராமல் ஓரே அமிசமாய், வளர்தலுந் தேய்தலும் இல்லாததாய் ஞாநகுணகமானதான ஆத்துமாவினிடத்தில் தேகபுத்தியும், அசுத்தமாய், நாசமுள்ளதாய், பசிதாகமுதலானவை யுற்றதாய், சத்துவாதி குணங்கள் உள்ளதாய், பிரகிருதியில் வேறாமல் அப் பிரகிருதி மயமானதாய், ஆத்துமாவைப்போல் ஓரே அமிசமாயிராமல் அநேகாமிசமா யிருப்பதாய், வளர்தலுந் தேய்தலும் உள்ளதாய், அஞ்ஞாந குணகமான தேகத்தினிடத்தில் ஆத்துமபுத்தி பண்ணியும், அந்தத் தேகத்தினிடத்தில் அபிமாநப் பிராந்தி கொண்டும், சருவேசுவரனை வணங்கக்கொடுத்தகரணங்களைக்கொண்டு தங்களையும், தங்களையொத்தபிறரையும் வணங்கியும் ஆக்கையின்வழி யுழன்று, சப்தாதி விஷயங்களுக்கு உழப்பாகி

யும், டம்பம் அசூயைமுதலிட்ட தீமைகள்கொண்டும், நானெனதென னும் அகங்காரமமகாரங்களால் ஆரோபிக்கப்பட்டும் உண்பதும்உடுப் பதுமே கண்டகாட்சி; உகந்து அநுபவிப்பனவே கொண்டகோலம் என்று தேகமெடுத்ததற்குப் பயனுஇசைத்தும், இப்படி பலபிறவிக் காக நோற்கவேண்டிய நோன்பினை இப்பிறப்பில்தானே நோற்குமவர் களாய், அந்தக் கருமப் பிரவாகத்தாலே பிறவியென்னும் பெருங்கட லிலே படிந்து அனர்த்தப் படுகிறார்கள். இத்தகைஞர்க்கு இறைவ னருள் எவன் வாய்க்கும்? பெறலரும்பேறு பெறுவதெங்ஙன்? இவ ரோ! மாயவன்தன்னை வணங்கவைத்த காணங்களைக்கொண்டு அம் மாயன்றன் தேனே மலருந் திருத்தாளில் துவண்டு நாள்தோறும் நாடாத மலர்நாடி நாரணன்றன் வாடாத மலரடியில் வைக்க வகுத்து; துயராறு அச் சுடரடி யல்லால் துணைவேறு காண்கிலராய்க் கொண்டு கீழிற் கூறிய பிரகிருதி வாசனையிற் சிக்காதவராய், நானென தென் னும் அகந்தைகளை யகற்றி, இல்வாழ்க்கையிலும், உலக நடக்கை யினும் இருப்பவரேயாயினும் அவ்விருப்பு முள்மேல் இருப்பாய்க் கொண்டு தாமரையிலைத் தண்ணீர்போல் தத்தளிப்பவராய், கழைக் கூத்தன் கம்பத்தின் மீதிருந்து காணுமவர்கள் உளங் களிகொளப் பல்வகை நடிப்புநடித்து வராநிற்பினும் நினைப்புமாத்திரந்தன்பிராண பயத்தைவிட்டு அகலாததுபோலே இவர், குடும்ப போஷணுதி காரி யங்களில் புக்கவரே யாயினும் புருஷோத்தமனது பக்தியை மாத் திரம் மறவாது இருப்பவராகையால் இவருக்கு அப்பேறு எளிதென் பதில் ஐயமென்?

இவ்வாறு போலேபா காலங்கழித்து வராநிற்கையில் வார்த் தீகம் மேலிடலும், தமது மூத்தகுமாரனாகிய ஷாவாஜியை யருகி லழைத்து, அப்பா! எனக்குப்பின் நீ இந்தக் குடும்பத்திற்கு மூத்த வனாக இருக்கின்றாய்; மேலும் எல்லா சாத்திரங்களையுமோதி, எல்லா வுபாயங்களிலும் அதிகரித்தவனையும், புத்திமானையும் இருக்கின்றனை; எனக்கோ வார்த்திக்கிய மேலிட்டிருக்கின்றது; இனி என்னால் வர்த்தகக்காரியம் நடத்தவும், குடும்பபோஷணுதிகளைச் செய்யவும் சக்தியில்லை; மூத்தவனுதலைப் பற்றி இந்தக் காரியங்களை யெல்லாம் நீயே யேற்றுக்கொண்டு உன்குடும்பத்தைப் பாதுகாப்பாய் என்று வேண்டினார். அதற்கு ஷாவாஜீ தந்தையைப்பார்த்து வணங்கி, என் பிதாவே! என்னெண்ணமெல்லாம் திவ்விய க்ஷேத்திரயாத்திரையி லும், புண்ணிய தீர்த்தஸ்நானத்திலும் திவ்வியமூர்த்தி சேவையிலும் சாது சங்கமத்திலும் இருக்கின்றது; ஜாக்கிரம் - சொப்பனம் -

சுஷுப்திகளாகும் மூன்று அவஸ்தைகளினும் அவ்வெண்ணத்தை மறக்கக்கூடவில்லை; ஆகையால், தேவரீர் இச்சிறுவன் திறத்தில் சீற்றமுறாமலும், சம்சார சம்பந்தத்தில் என்னைத்துவட்டாமலும் அநுக்கிரகிக்கவேண்டும் என்று வேண்டிநிற்க; தந்தையும், உன நிஷ்டமென்று இரண்டாவது சுதனாகிய துக்காராமரை யழைத்து அப்பா சுதனே! நீயாகிலும் இவ் வர்த்தகத்தொழிலுங் குடும்ப போஷண காரியமும் ஏற்றுக்கொண்டு, மிகு வார்த்திக்கிய மடைந்த என்னை யவற்றினின்று விடுவிப்பாயா? என்னலும்; துக்காராம், "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" என்னு முதுமொழிக்கிணங்கி தந்தையைவணங்கி 'தேவரீர் திருவுள்ளக் கருத்துக்கிசைய மாட்டேனென்பனோ; எதுபணித்தாலும் அப்பணிகளைச்செய்வதேயென் கடனாதலால் கருணைகூர்ந்து யான் செய்யவேண்டியதை யனுக்கிரகித் தருளல் வேண்டும்' என்று பிரார்த்திக்க, போலேபா மிகு சந்தோஷங் கொண்டவராய், தமது இருப்புப்பொக்கிஷமும், வர்த்தகத்தில் செல்லாநிற்குங் கொடுக்கல் வாங்கல் முதலானவற்றையும் எல்லாம் அவருக்கு ஒப்புவித்துவிட; துக்காராமரும், அன்றுதொடங்கி கனத்த வர்த்தகம் நடத்தி, தந்தையினும் அதிகக்கியாதி சம்பாதிப்பவராயினார்.

இவற்றையெல்லாங் கண்டுங் கேட்டும் உவந்த தந்தைபோலேபா, ஸ்ரீயபதியாய், ஞானாநந்த சொரூபனாய், ஞான சக்தியாதி கல்யாண பூஷிதனாய், சகல ஜகத் ஸர்க்க ஸ்திதி சம்மார கர்த்தாவாய், தரும - அர்த்த - காம மோக்ஷங்களாகும் நான்குவித புருஷார்த்தங்களிற் பற்றுள்ள நால்வகை புருஷர்களாலும் அர்த்திக்கப் படுமவனாய், தருமம் - அர்த்தம் - காமம் - மோக்ஷம் என்னும் நான்குபலங்களையும் அருளுந்தன்மயனாய், விலக்ஷணமான விக்கிரக யுக்தனாய், லக்ஷ்மீ . பூமி - நீளாநாயனாய், யோகிகளால் நினைக்கப்படுபவனாய், சகல ஜகந்மோகனாகாரனாய், சுத்த சத்துவாத்துமகனாய், திவ்வியாத்தும சொருபத்துக்குப் பிரகாசனாய், நித்தியனாய், ஏகரூபனாய், நேர் நிறைபில்லா தேஜோரூபனாய், நித்திய முக்தர்களாலே யநுபவிக்கப் படுமவனாய், சர்வ ரக்ஷகனான ஸ்ரீமந் நாராயணனது திவ்விய வரப்பிரஸாதமகதனால் பிறந்தவ னாகையாலே, நம்பேச்சுத்தவறாமல், நம் வர்த்தகக்காரியங்களை யேற்றுக்கொண்டு, மிகு சாமர்த்தியனாய், நம்மிலும் அதிகமாக வியாபாரத்தொழில் நடாத்தா நின்றான். இவனை பிணையில் பேரருளால் பிறப்பித்தவெம்மான், பண்டு ஞானசொரூபத்தின் நலம் நாட்டாருக்கு அறிவிக்க வடமதுரையில் வசுதேவன் சுத

ஞய், தேவகிதேவியாம் ஒருத்தி வயிற்றிற் பிறந்து, அன்றுடனே திருவாய்ப்பாடியில் நந்தகோபனணிசிறுவனாய், யசோதையாம் ஒருத்தியிடம் ஒளித்து வளர்ந்தருளிய ஞான்று, திருவாய்ப்பாடியினும், பிருந்தாவநத்தினும், ஐந்துலக்ஷம் குடிப்பெண்களுடனும், பதினாறுமாயிரவர் கோபநாய்ச்சிமாருடனுங் குரவைகோத்தல் முதலிட்ட பல திருவிளையாடல்களை விளையாடி, பிறரிற் செய்யவரிய பற்பல அற்புத லீலாரசங்களை நடாத்திப்போந்தும் யான் ஒன்றுமறியேன் என்றுதம் அறியாமையே காட்டி, பிரமசாரித் தலைவனென்னும் பிருதுவகித் துள்ளதை வெளியுறுத்தற்கு ருக்மணியுடன் கங்காதீர்த்தந் திரட்டிக்கொடுவந்து தருமபுத்திரருக்கு அபிஷேகமுஞ் செய்வித்து உகந்தானன்றோ? தேவ இருடியாகும் நாரத மாமுனிவர், ஆயர்பாடிபுக்கு ஆயர் குலக்கொழுந்தாம் அச்சுதனைச் சேவித்து, உனக்குள்ள பதினாறாயிரம் பெண்களில் ஒருத்தியை யெனக்கு அருளல்வேண்டுமென்று வேண்டிநிற்க, அம்முனித்தலைவரைநோக்கி மொய்குழல் அசோதை தன் குட்டன், நான் எவளிடத்தில்லாது இருக்கின்றனனோ அவளை நீர் அழைத்தேகலாம் என்ன, அருமந்தப்பெண்கள் இருக்கும்மனைகள் தோறும் புகுந்துபார்க்க, கிருஷ்ணனையின்றி தனித்திருக்க ஒரு பெண்ணையுங் காணப்பெறுமல் தியங்கி, ஒ ஒ! ஈதென்ன அதிசயம்! இதுவும் நினது விளையாட்டேயன்றி வேறன்று; உன் தன்மை பிரமாதியர்க்கும் அறிய வசமன்றென்னும்போது இவ்வதிசயம் நினக்கு வலிதோ! என்று வியந்து கொண்டாடிச்சென்றனர். அன்றியும், இவ்வதிசயக் காட்சிகளையெல்லாங் கேட்ட பிரமனவன், அறிவழிந்தனனாய்க்கொண்டு, சோதிப்பான் மாறுருவனாய் பிருந்தாவனத்திற்கு வந்து, அங்கு காடுகளில் மேய்ந்தும் மேய்ப்பித்தும் போரும் ஆநிரைகளையும், அவற்றின் கன்றுகளையும், ஆயர் சிறுவர்களையும் மாயஞ் செய்து கொண்டுபோய்த்தன்னுட்டில் மறைத்துவைக்க, இதனைக் கண்ட சருவஜ்ஞன் புன்னகைகொண்டு, அந்தந்த கோக்களைப்போலேயும், அவ்வவற்றின் கன்றுகளைப்போலேயும், இடைப்பிள்ளைகளைப் போலேயுந் தாமே உருவெடுத்து, அவைகளின் எஜமான்களுக்குச் சற்றும் ஐயந்தோன்றாமல், அது அது செய்யுங் காரியங்களில் குறைவில்லாமல் தானே நடத்திவந்தான். அவ்வளவில் பிரமன்வெட்கி, ஆகா! இவ்வதிசயம் என்னென்பேன்! ஆதிசேஷன் பலராம ரூபத்துடன் அருகிலிருக்கச் செய்தேயே அவனுக்கும் அறியாமல் இவ்வற்புதம் நடத்தாநின்றான்; இனித் தாமதிக்கலாகாது என்று அச்சங்கொண்டு, கோக்களையும், கன்றுகளையும், கோபாலர்களையும்

அழைத்து வந்துவிடுத்து, கண்ணனைத் தன்னபசாரம் க்ஷமிக்குமாறு பணிந்துகொண்டாடிச் சென்றனன். இவ்வாதிமூலப் பழம்பொருள் அருளாலுதித்த நமது புத்திரன் துக்காராமும் அதிசயிக்கத் தகுந்தவனாயிருக்கின்றான்; இவனால் இவ்வதிசயமாத்திரமன்று; இன்னும் அநந்த அற்புதங்கள் விளையப்போகின்றன என்று மநமகிழ்ச்சியடைந்து, மூத்த புதல்வனையெண்ணி, இவன் உருத்திரமூர்த்தியின் வரப்பயனால் உதித்தவனாகையால், அந்த ருத்திரமூர்த்தி எலும்புமாலை யணிந்து, பாம்பைப் பூஷணமாகப் பூண்டு, புலித்தோல் ஆடையுடுத்து, ஆலரசு அத்திகளின் பாலால் உதிர்மயிர்கொண்டு ஒட்டித் திரிக்கப்பட்டுள்ள சடைதாங்கி, காடுடைய சுடலைப் பொடி பூசி, சுடுகாடே ஆலயமாக்கொண்டு வசித்து, கையில் மண்டையோடு ஏந்திப் பிறர்மனை திரிதந்து பலியேற்று உண்டலே தொழிலாக வகுக்கப்பட்டுள்ளதுபோல் தானும் அதற்கேவகுக்குண்ண விரும்பினான்; இதுவும் நமது அருமைப் பாக்கியந்தானென்று மகிழ்ச்சியடைந்தார்.

ஆத்தும சொரூபத்தினதும், ஞாந சொரூபத்தினதும் தன்மைகள் இன்னின்னவையென்று இகத்துள்ளாருக்கு அறிவிக்கத் திருவவதரித்தவனாகையாலே, தேவகிசுதன் கீழிற்சொன்ன அற்புதங்களை நடாத்திவராநிற்கையில், மலைவனங்களில்வசித்துப்போரும்இருடிகள் பலரும், தங்கள் அகவிருள்மாய அவ்வவ்வற்புதங்களைக் கண்டாலன்றித்தரிக்காக்காதல்மீற, மறைவிலும்எதிரிலுமிருந்து சேவித்துப்பலபலதோத்திரங்களால் தோத்தரித்துக்கொண்டாடி மகிழ்வெய்தியதுபோல் தேவுகாமிலுள்ளாரும், பிரதேசத்தாரும், உறவினரும் துக்காராமருடைய ஞாநகுணகமாயதிசயமான நன்னடக்கை காரியங்களைக் கண்டாலன்றித் தரிக்காக்காதல்மீறி வந்து சேவித்து ஆச்சரியமுற்று அவரைப் பெற்றோராகும் கனகாபாய் போலோபா இவர்களைக்கொண்டாடி, "எழுபிறப்புந்தீயவை தீண்டா பழிபிறங்காப்பண்புடை மக்கட்பெறின்" என்று, பழிக்கப்படா நற்குணங்களை யுடைய புதல்வனைப் பெறுவானாயின் எழுவகைப்பிறப்பிலுந் துன்பங்கள் அணுகாது என்னும் வாய்மை இந்தக் கனகாபாய் போலோபாவா இருவருக்கேயமைந்ததாகுமென்று கீர்த்தித்தார்கள்.

இப்படி ஊரும் நாடும் உகந்து கொண்டாடத்தக்க அதிசயபுத்தியுடையவராய், நாளுக்கு நாள் பெருத்த வருத்தகம் நடத்தி, கீர்த்திபரவ இககாரியங்களிலும், பரகாரியத்திலும் குறைவறமநம் பாரித்துச்செய்து வருகிறநாளில், இத் துக்காராமருடைய தேவியாராகும் ருக்குமாபாயம்மாளுக்கு இரைப்புநோய் சொபாவமாயிருந்தால்,

அவ்வம்மையின் சம்மதங்கொண்டு கனகாபாயும் போலோபாவாவும், புணவில் குளிவையா-ஆபாஜீ சேட்டினுடைய தவப்பெண்ணாகிய ஆவலி ஜீஜாபாயைத் துக்காராமருக்கு இரண்டாவது மணமுடித்து வைத்தார்கள். துக்காராமரும் அவ்விருமனையாட்டிமாருக்குத் தக்க படி நடந்து போஷித்துக்கொண்டுவந்தார்; இதனையுங்கண்ட அயலார், இந்தத் துக்காராம் இளைஞராயிருந்தும் இரண்டு மனைவியார்க்கும் ஒத்துமையாகவும், இக பர சுகங்களுக்குக் குறைவிலராகவும், செய்தொழிலில் வலியராகவும், பகவத்பிரீதியில் வழுவாதவராகவும், சாதுஜந சேவையில் பிரீதராகவும் இராநின்றார். இவரைப்போல் நாமென்றுங்கண்டிலம்! எங்குங் காணவுமாட்டோம்! என்று வியப்புடன் புகழ்ந்து கொண்டாடினார்கள். இவர் அவதார புருஷரேயாவர்; இவரிடத்தில் அற்புதங்கள் வர வரத் தோன்றா நின்றன! என்று அதிசயாநந்த பரவசங்களைக்கொள்வார் சிலபெரியோர். இவருடைய குடியின் வளப்பமும் நாளுக்குநாள் விருத்தியடைந்து, எத்தானுங் குறைவற்றிருந்தது.

ஸ்ரீ புண்டரீகாக்ஷா! புருஷோத்தமா! சகல லோகேசுவரா! நின்னருளால் இந்த பக்த விலாச முடிக்க அவாக்கொண்டு வணங்கா நிற்கும் இவ்வேழையின்மீது இரக்கங் கொண்டருளல் வேண்டுவது நின்கடனேயாம்.

மூன்றாமத்தியாய முற்றும்.

ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகள் திருவடிகளே சரணம்.

துக்காராம். மௌனகோபொதி. மௌனகாவாஸ்தும்ஸ்திரிகள்.

ஸ்ரீ

ஸ்ரீ பாண்டுரங்கபரப்ரஹ்மணேநம:.

ஸ்ரீமத்

துக்காராம் சுவாமிகள் சரித்திரம்.

நான்காமத்தியாயம்.

காப்பு.

எண்சீராசிரியவிருத்தம்.

தேனவிழுந் துழாயலங்கற் றேவ தேவன்
சித்திரகூடத்தரவிற் றுயில்கொள் சோதி
வானவர்த மனத்துளென்றும் வழுவா வள்ளல்
வாமனனாய் மாவலிபால் மண்ணிரந்தோன்
ஆனைமுறை யிடக்கேட்டவ் வண்ட சத்தி
னங்கமிரு பிளவாக வாழி தொட்டு
ஊனமற வுடனேயங் கோசித்துக் காத்தா
னுபயசர ணலர்முடிமேல் கொண்டு வாழ்வாம்.

ஸ்தோத்திரங்கள்.

ஜயஜய சார்வபௌம! சகலாத்துமகாம! தளிர்மிளிரும் ஆலவிருக்கமதனை யடக்கியவித்தென அண்டமெலாம் எளிதில் அழகுருவயிற்றிடை யடக்கி யளிப்பவனே! ஆறரைக்கண்ணிணையொ டாறுமுகற்குங் கோலமலர் மகவுக்குங் குலமறை நான்கினுக்குங்கோப்புடையமரர்க்குமெலாம் ஆதிமூலமா மாதவனே! சிருஷ்டி, சம்ரக்ஷணம், சங்காரம் என்ற முத்தொழிலை லீலையாய்க்கொண்டு, முகமோர்

நான்குடையானுள்ளும்ஐந்துடையானுள்ளும் அந்தர்ப்பவித்திருந்து அம் மூன்றின் முன்னும் பின்னுமாயுள்ள இருவினைகளையும் நடத்துவிக்கின்றனை; நடுநாயகமென நிற்குமற்றொன்றினைப் பிறர்பால் விடுப்பின் இயலாதென்று உகந்து, நிச்சயமாகிய நின் வடிவால்அன்னோர் நடு விருந்து நடத்துகின்றனை! அன்றியும், அம்மூன்றினுள் ஈற்றினுறை தொழிலாற்றி ,சேதநமுதல் யாவையும் நின்னுளடக்கி, விரிபுனல்நல்கி, ஓர் ஆலிலையிற் சோதிவடிவாகிய பாலனு யறிதுயின் மேயினை. இத்தகைய பரஞ்சோதியாம் நின்னடைந்த ஜீவனது கருமமல்லது மற்ற ஜீவரது கருமந் தொலையப்பெறு காரணம் யாதெனில்; வானவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரங்களென்ற சிருட்டி வேறுபாடுகளுக்கு ஏதுவிலது. ஆகலான், நாதனே! நின்னிடத்து லயமாகிற்குஞ் சேதநங்களின் கருமம் பக்குவமெய்த ஞான்று, சிருஷ்டிசெயல் வேண்டுமென நீதிருவுளம் பாரிப்ப உந்தி மரையினின்றும் விரிஞ்சன் தோன்றிவந்து, நெடும்புனலேயன்றி மற்றொன்றுங் கானப்பெறுது திகைத்து, மீண்டும் அவ்வழி புகுந்து உழைந்துபோந்துஒன்றுந் தெரிகிலானுகி,நான்யாவனுவனே? என்னைப் பயந்தவன் எவனுவனே? யானியற்றுங் கருமம்யாதாமோ? எனத் திகைப்புண்டனன். அற்றை ஞான்று, நாரங்களாம் ஜீவஸமூகங்களுக் கயநமாய் நிற்றலால் நாராயணனெனுந் திவ்விய திருநாமத்தனும் நினது அநுஞ்ஞையால் "தப-தப" என அசரீரிதோன்றியது; அவ்வருமைத் திருவுரையைக்கேட்டு அலராசநன் உவப்பெய்தி ஆயிரந் தெய்வமாத அருந்தவமாற்ற, பற்பபாதனே! பகரறும் அருளால், பரமாமிச ரூபங்கொண்டு அன்னவன்முன் பிரசந்நனுய்த்தோன்றியருளி, அருமறை யுபதேசித்துப் படைப்புத்தொழிலையும் பயிற்றுவித்தனை. அத்தொழின்மேவிய அயன்,அண்டசமூகங்களையெல்லாம் படைத்து உலகில் நிகரில் புகழெய்தினன். இத்தனையருள்பெற்றுற்கண்ட சிருஷ்டித்துவம் எளிதில்வாய்த்ததெனின், அருண்மிகுதியால் நீயே புகக்கப்பெற்ற ஸ்ரீமத்துக்காராம் எத்தகைஞர் ஆதல் வேண்டும்? ஆதற்கொண்டே, அருட்பெருஞ் சோதியோ! அவர் புகழலாது உளம் பூக்கவில்லாது அல்லும்பகலும் அவன் இனிமையை இசைக்கா நின்றனன், அவ்விசைபாட்டுக்கு ஓர் சிறிதுந் தீங்கு வாய்க்கா வகை மநம் பாரித்தருள்வாய்! என்று தோத்திரித்து, மகிபதிதாஸர் சரித் திரந்தன்னைத் தொடங்கநுதலினர்.

என்னைத் தன்னுடைமையென அடிமைகொண்டு உவந்த ஸ்ரீமத் **துக்காராம் ஸ்வாமிகள், எக்குலத்தவரும் எக்குணத்தவரும் எவ்வியல்பினரும் அதிசயமும் ஏக்கமும் கொள்ளத்தகுந்தகுணமுடையராய்**

இருமனைவிகளுடனுங் கலந்து, மனையறம் வழுவுறாது நடாத்திப் போரா நிற்கையில், அவர் அன்னை தாதைகளாகுங் கனகாபாயும் போலேபாவும் இவ்வரும்பெறன் மகவின் நன்னடக்கைகளையும், நற்குண வொழுக்கங்களையும் நித்த நித்தங்கண்டு களிப்பெய்தி, ஓ ஓ! புத்திரனைப் பெற்றார் உலகில் நாமே யல்லால் மற்றில்லை! இவனைப் பெற நம்வயிறு செய்த பாக்கியந்தான் என்னை! என்று தங்களில் தாங்களே வியந்து, இருபுய நான்காகப் பூரித்தனர்களாய்க் கொண்டு காலங்கடத்தி நிற்கையில், அன்னவர்க்கு மூப்பு நித்தநித்தம் அதிகரித்துவர, அவ்வளவில், சொப்பநத்தின் நிதிபோலும், நீர்க்குளெழு குமிழிபோலும் இவ்வாக்கை நிலையிலதென்றுன்னி யுயிர்துறந்து வைகுந்தம் புகுந்தனர்கள். அவர்களது பிரிவில் மநமாற்றாதவர்களாய்க் கொண்டு, சுபுத்திரர்கள் மூவருங் கடுரோதநஞ் செய்து, அயலார் தேற்றத்தேறி, அவர்கட்குச் செய்யவேண்டிய கரும சடங்குகளைக் குலாசாரத்துக்கு வழுவிலாது முடித்து, முன்போலவே மனைவாழ்க்கைக் குரிய மாணறங்களைக் கிரமமாகச் செய்து போருகையில், அம்மூவருள்ளும் நடுநாயகமனையராய் ஸ்ரீமத் ஸ்வாமிகள் - துக்காராம், குடும்ப போஷணத்தை நடாத்திவர தாய் தந்தையர் நியமநம் பெற்றவழி நடத்துவிப்பவராகலான், அவர்க்கு அஃதின் திறத்தில் வெறுப்பும் அருசியுந்தோன்றி யழுங்கிய மநத்தராய், குடும்பவாதரணையிற் புந்தி செலுத்திப்போந்த அன்னையும் அத்தனும் நந்தலைக்குப் பெருஞ்சும்மை யெனச்சுமத்திப் போயினார்கள்; நாமும் இச்சமுசார வலையிற் பல்லாண்டு பட்டிருப்பினும், சூரியனைக்கண்ட இருள்போல் நமது:இறுதிநாள் கண்டு இறப்பதே நிஜம்; இதுவல்லால் நாங்காணும் பயன் வேறிலது என வெருவித் துயருற்றுக் குமிழ்நீருண்ணுங் காலத்தில், அவர் தமையனார் மனைவியும் மேல்நாடடைய, அவருக்குஞ் செய்யவடுத்த கருமங்களைச் செய்துவைத்து, தமையனுக்கும் ஷாவுஜி தம்மைநோக்கி, அப்பா! எனக்கிருந்ததொரு விலங்கு நீங்கியது, இனி நான் தந்தையிடம் பிரார்த்தித்தபடி சாது சங்கமத்தில் ஒருப்பட்டவனா யவர்களுடன்கலந்து, திவ்ய தீர்த்தஸ்நானமும், புண்ணிய க்ஷேத்திர வாசமும், புருஷோத்தமன் - புண்டரீக வரதன்முதலிட்ட புண்ணிய மூர்த்தங்களின் சேவையுஞ் செய்யப்போகின்றேனென்று உரைத்து, ஆனந்த வநமென்னுங் காசிக்ஷேத்திரத்திற்குச் செல்லப்பெற்று, ஆவா! இதுஉமொரு நல்ல கொடுமைதான், தாய் தந்தையர் நம்மை விடுத்துப் பரலோகம் அடைந்ததொரு துயரை யிவரைக் காணப் பெற்றுத் தீர்த்து வந்தோம்; இவருஞ் சற்றேனும் ஈ விரக்கமில்லாமலும், தாக்ஷணியம் இல்லாமலும், தம்பிகளென்

கிற வாஞ்சையும் இல்லாமலும் நம்மைத் துறந்து,தாமாத்திரஞ் சுக
முற யாத்திரைக்கு ஏகினர்; இனி நாமிக்குடும்பத்தின் திறத்து
யாது செய்யக்கடவோம்? எப்படி போஷித்து வருவோம்? என்று
வெந்துயர்மாழ்கி, இரவும்பகலும் ஈதேயேக்க மல்லான் மற்றொன்று
மின்றியெல்லாவற்றையும் அகற்றினவராய் பண்டைநாள்போல் வர்த்
தகத்தொழிலை நடத்தத் திருவுள்ளம் இல்லாதவராய் ஸதா ஸ்ரீபாண்டு
ரங்கனையே நினைந்து நினைந்துருகித் திளைக்குமவராய், வெகுசுருக்க
மாக வியாபாரஞ் செய்துகொண்டு போருவராயினர். இவர் தம்
வியாபாரத்தொழிலிலும் விற்பனை கிடையாது; தம்மிடத்திற் கடன்
பெற்றாரோ! பெற்ற கடனைத் திரும்பக்கொடாமல் “துக்காராம் மிகு
நல்லவர், மகராஜர்,ஜீவகாருண்ணிய மூர்த்தியாகையால் நாங்கொடுக்க
வேண்டிய கடனுக்குக் கசக்கிலர்; இவரிடத்தில் கடன்பட்டால் அக்
கடனை மறுபடியுங் கொடுக்கவேண்டுமே என்கிற சிந்தையே நம்மில்
வையாதவர்; தம்பொருள் நம்பொருளென்றே நாம் எண்ணிக்கொள்
ளத் தக்கவள்ளல்” என்றிவ்வாறெல்லா மெத்துகள் புகழ்ந்து எய்ப்
பர்களேயன்றிச் சற்றும், சாதுவும் பகவத்பாகவதருமாயிற்றே! இவ
ரை நாம் வஞ்சிப்போமேயாகில் இறைவன் தம்மை யிகபரங்களில்
இமிசிப்பனென்றும்,பிறர்பொருள் கவர்தல்பஞ்சமாபாதகத்துள் ஒன்
றாகையால் நரகத்துக்கு ஆளாகவேண்டுமென்றும் எண்ணுமவர்களே
யல்லர். பிறர்பொருள் கவருவதே பாபகாரியம் என்னும்போது,
ஸ்ரீமத் பகவானுடைய அடிமை சொத்தாகவே யுள்ளபடி தம்மை
நினைத்து, இரவும்பகலும் அவன் பத்தியிலல்லால் வேறுவகையில்
காலங்கடத்தாது, “உண்ணுஞ்சோறும் பருகுநீரும் தின்னும் வெற்
றிலையுமெலாங் கண்ணனெம்பெருமான்” என்ற ஞானதேசிகனாகுந்
திருக்குருகூர் இரத்திநத்தினது திவ்விய திருவாக்கின்படி, எல்லாம்
அவ்வெழில்கொள் சோதியேயெனக் கொண்டு, தமக்கு தாரகம் -
போஷகம் - போக்கியங்களும் அவனேயென்னும் யதார்த்தஜ்ஞானத்
தால் “మాతాపితా భ్రాతనివాసశ్శరణం సుహృద్గతిర్నారాయణః” “மாதாபிதா
ப்ராதநிவாஸச்சரணம் ஸுஹ்ருத்கதிர்நாராயண:” என்றபடி தந்தை
தாய் தமையன் சுற்ற மற்றுமெல்லாம் அந்நாராயணனே யென்று
நம்பியிருக்கும் இந்த பக்திபாரவசியஜ்ஞாநி - துக்காராம்ஸ்வாமிகளு
டையசொத்தைக் கவர்ந்தவர்கள் மற்றெந்தெந்தபாபகாரியங்கள்செய்
யாத பாபாத்துமாக்கள் ஆகமாட்டார்கள்? எந்தவகை பாபத்துக்குத்
தான் அஞ்சுவார்கள்? எந்த நரகந்தான் இவர்களையகற்றப்பார்க்கும்?
இத்தகைய துராத்மாக்களுக்குப் புண்ணியமென்றும் பாபமென்றும்
ஸன்மார்க்க மென்றும் துர்மார்க்கமென்றும், மோக்ஷமென்றும் நரக

மென்றுமுண்டோ? பொருள் கொண்டவிடத்தில் புகழும், இஃதல்லாவிடத்தில் இகழுஞ் செய்யுமவர்கள் அநாதிகருமமாகுங் கடுஞ்சேற்றில் தள்ளுண்டு கிடக்கும் இத்தோஷகாரிகளுக்கு ஸாதுக்களுடைய ஸத்துவாமிசங்கள் எப்படி தெரிந்துகொள்ளும் சக்திபுண்டாகும்? ஸத்துவாமிசங்கள் தெரிந்தாலல்லது சத்துக்களுக்குத் துரோஹங்களைச் செய்யாதொளியார்கள்; இந்தக்கரும சண்டாளர்கள், ஊரிலுள்ள கற்றறிவுடையார்கள் எண்ணினதுபோல் தாங்களும் ஸ்ரீமத்துக்காராம் ஸ்வாமிகளை ஸாதுவென்று நினைந்தவர்களேயானாலும், அவர்கள் எண்ணின சாதுத்துவம் தங்கள் பரப்பேற்றிற்கு ஸாதநமாகா; இவர்கள் எண்ணின ஸாதுத்துவம் தங்கள் இகப்பேற்றிற்காகப் பொருள் கவர்ந்தாயினுந்தேடி வயிறு நிறப்புவோம்; மக்களுக்காஸ்தி வைப்போமென்கிற தீர்மானத்திற்கு ஸாதனமாக ஆதரற்கொண்டேயாக்கும்; ஸாதுவென்று நினைத்தும் அவர் சொத்தையேயபகரிக்கக்கூசாது துணிவுற்றது. இவ்வகைஞரிற் சிலர், தாங்கள் கடன்பெற்ற தொகையை யொருக்காலேனுங் கேட்டால் அவருக்கென்ன நாம் உத்தரவு சொல்லுவதென்று எண்ணி அவர்கண்ணில் தென்படாமல், அவர்கடையில் சாமான்களை வாங்குவதே யொழித்தார்கள். எங்கேனும் ஸ்வாமிகளைக் கண்டதுண்டானால் பல நைச்சியங்கூறிப் பல்லைக்காட்டிக் கொண்டாடிப்போவார்கள். மற்றுஞ்சில துணிந்த விநாசர், ஸ்வாமியிருந்தபோது அவர்கடைக்குள் வந்து, ஸ்வாமின்! வீட்டிலின்று மிளகாயில்லை, அல்லது புளியில்லை, அல்லது மற்றொன்றில்லை, அதனைத் தரவேணுமென்று வேண்ட, அவரும் இரக்கங்கொண்டு, ஐயோ! ஒருபிராணி கேட்பதேயரிது; நாமில்லையென்பதடாது, எல்லாம் ஈசுவரனுடைய சொத்து, ஈசுவரனுக் கடிமையான ஒருவன் எவ்வளவோ பாதைபட்டு இங்குவந்து கேட்டால் எப்படி யில்லையென்பதென்று எண்ணி, உனக்கு வேண்டுவன கொண்டுபோ! என்று உத்தரவளிக்க, அதுவேசாக்கென்று துணிந்து, வேண்டிய தினுசுகளில் ஒவ்வொரு மூட்டையாகப் பேர்த்துத் தூக்கிக்கொள்ள, ஸ்வாமிகள், அப்பா! இவ்வளவு வேண்டுமோ! என்றொருவேளை கேட்டதுண்டானால், ஐயா! எங்கள் வீட்டில் நித்தநித்தம்வேளைக்கிருபது முப்பதுபேர் சாப்பிடவேண்டும்; அவர்களுக்கு இரண்டுவேளையே காணும் இச்சரக்கென்று சொல்ல, ஆ! அப்படியா நீரத்தனையும் தூக்கவல்லீரோ வென்று கேட்டேன், சுகமாகக்கொண்டுபோம்! என்பர். இவ்வளவு கருணைகொண்டு நாட்டு மானிடத்தார்க்கெல்லாம் ஓர் பேயரென வழங்கப்படும் இம்மகாநுபாவருக்கு நஷ்டம்வரக் கேட்பானேன்!

இப்படி, துர்மானுஷியரால் தம்சொத்து முற்றுங்கவரப்பெற்று எல்லாவித நஷ்டங்களும் அடைந்த ஸ்வாமி - துக்காராம், இதுவும் அவனது இன்பவிளையாட்டல்லான்மற்றன்றென்று எண்ணி, "దారిద్ర దుఃఖస్థి మోక్షహేతుః" "தாரித்ர து:கஸ்தி மோக்ஷஹேது:" என்றுள்ளபடியால் சருவேசுவரன் நம்மைச் சோதிப்பான் இங்ஙநஞ் சொத்தைக் கவர்கொள்ளப் பிறர்க்கு மநமளித்தான்; ஆதலால்தான் அவர்களும் நம்மை இவ்வழியாக்கினர்கள்; எல்லாச் சொத்துகளும் உலகிலுள்ளவை; அவைகட்கு உகந்த ஸ்வாமியாகிய தனக்குச்சொத்துக்களாகத் தானுண்டுபண்ணி வைத்திருக்க, அவற்றிற் சில நம்மதென்று வகித்து அபிமாநங் கூறித் திரிந்தால் அந்தச் சொத்துக்களைப் படைத்த ஸர்வநாதனுக்குக் கோபம் வராதோ! இஃது அறிந்திருந்தும், நாம் அவன் சொத்துக்களிற் சிலவற்றை, அவன் நம்மசொத்தென்று உள்ளபடிவழங்கி வருகிறுப்போலே நம்மசொத்துக்களென்று அறிவிலியாய் வழங்கிவந்தமையால், சொத்துடைய தான் அவற்றைத் தனக்கென்று விநியோகங் கொண்டு, நம்மை அவற்றினின்று துறக்கவிட்டான்; இதற்குநாங்கரையலாகாது என்று, உபாயஜீவநபரராய் வாழ்ந்துவந்தார். இடையில் ஓர்கால் சில தநிகர்களிடத்திலிருந்து சொல்ப திரவியங் கடன்வாங்கி சவுளி வர்த்தகத்திலிட்டு நடத்திப் பார்த்தார்; அதுவு முன்போலவே நஷ்டமாய்விட்டது. ஏதுக்கெனின்; ரொக்கம் போட்டுக்கொண்டு விற்பவர்கள் இவரிடத்தில் வந்து வாங்குதலே கிடையாது; கடனுக்கு வாங்குகிறவர்கள் மாத்திரம் இங்கு வந்து அநேக இனிய வசனங்களைச் சொல்லிக் கடன்கேட்டு, வேண்டிய சரக்குகளைக் கொண்டுபோய் விற்று லாபத்தையும் முதலையுந்தங்கள் சொந்தம்போல் அநுபவித்துக்கொள்வார்களே யல்லது மறுபடியும் அவருக்குக்கொடுத்து, அவருக்கு நஷ்டம் உண்டுபண்ணுது இருப்போமென்று நினைப்பாரே கிடையாது; அப்படி தம்முடைய சொத்தைக் கிரகித்துக்கொண்டு போவதே சரியென்று துணிந்து வந்து பிரார்த்திக்குங் காதகர்களேனும், ஸ்வாமிகளை நேரில்கண்டு கபடோக்திகள் சொல்லி, தங்களுக்கு இன்ன சரக்குகள் வேண்டுமென்று கேட்டால் ஒருக்காலும் அவர்களுக்கு இல்லையென்று சொல்லுந் தன்மையே ஸ்வாமிகளுக்குக்கிடையாது; ஆனல் அவர்களுக்குக் கொடுக்கும்போது ஸ்வாமிகள் ஒன்று மாத்திரஞ் சொல்லுவதுண்டு; அதாவது ஏதோ கொண்டு போகிறீர்கள்; அதின் கிரயத்தைக் கொடுத்தால் போச்சுது; கொடாவிட்டால் மறுஜந்மத்தில் மாடாயும் பேயாயும் பிறந்து அடிமைகளாய்பலஅவஸ்தைகள் படுவீர்கள் என்று, இவ்வுரைகள், பாபபுண்ணியங்களுக்குச்

சற்று மஞ்சாத பாமரர்களுக்கு லக்ஷியமோ? அதனை லக்ஷிய முறுத் தாமலேயே, தங்கள் பாபகாரியமாகும் பிறர் பொருள் கவர்தலில் அஞ்சாமல் துணிவெய்தி, பின்னும் பின்னும் ஸ்வாமிகளுக்கு நஷ்டமே விளைவித்தார்கள். இதனால் நஷ்டமாத்திரமல்லாமல்கடன்கொடுத்தாருடைய பாதைகளும் வரவர அதிகமாய்க் கொண்டிருந்தன. அவ்வளவில் ஜவளி வியாபாரத்தை நிறுத்திவிட்டு, தாம் கடன்பெற்றிருந்த சௌகார்களைத் தம்மகத்திற்கு வரழைத்து, மீதியிருந்த ஜவளி தினுசுகளையும், தம்மனையாட்டிகள் இருவரும் பூண்டிருந்த பொன் வெள்ளி நகைகளையும், வீட்டிலிருந்த பித்தளை செப்பு சாமான்களையும், மற்றும் உள்ளனவற்றையும் பங்கிட்டு அவர்களுக்குக்கொடுத்து, பிறர் தம்மிடங் கடன் பெற்றதற்காக அவரவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருந்த தஸ்தாவேஜுகளையும் அவ்வவர்க்குத் தக்கபடி பகிர்ந்து கொடுத்து, நான் தங்களுக்குக் கொடுக்கவேண்டிய கடனுக்காகஇவற்றைப்பெரியமனதுபண்ணிப்பெற்றுக்கொள்ளுங்களென்று நாநாவித இதவுகள் சொல்லி வருந்த, அந்தச் சௌகார்களும் இந்த ஸ்வாமியினுடைய நீர்மைகளையும், எளிமைகளையும், நல்லுபசாரங்களையும், மரியாதையு முகண்டு மநமிரங்கி, அவரளித்த சொத்துக்களை மதிப்பிட்டு, மொத்த தொகையாக்கிப் பார்க்கத் தங்கள் தங்களுக்குச் சேரவேண்டிய பாக்கிகளுக்குக் கால் அரைக்கால்பங்குங் கிட்டாதிருக்கக்கண்டு, அவர்களிற் சிலர் "இந்தத் துக்காராம் குற்றமொன்றுஞ் செய்தவரல்லர்; தாம் வீண் செலவுகள்செய்து நஷ்டம் விளைவித்துக் கொண்டவரல்லர்; வர்த்தகத்தொழில் அறியாதவரு மல்லர்; வாசிப்புத் தன்மையில் மிகுந்தவர்; வெகு சாந்தசிலர்; எல்லாத் தொழில்களினும் வல்லவர்; இவர் ஒன்று பத்து நூறு ஆயிரங்களாகக் குமஸ்தாக்களை வைத்துக்கொண்டு எந்த வியாபாரமேனுங்குறைவறப்பார்க்கும் சக்திவான்; இவ்வுலகுக்கு முடிசூடி வைப்பினும் நன்காளத் தக்கவர்; அளவில்லாக் குணநன்மைகள் உடையவர்; இத்தகையினரைப் பண்டரிநாதன் பற்றி தமக்கடிமை யாக்கிக்கொண்ட காரணத்தால் இவ்வல்ப வர்த்தக மிரட்டாநின்றது; நஷ்டமும் உண்டு பண்ணிற்று; பாருங்கோள்! பண்டரி நாதனைப் பற்றினருக்கு இப்பாழ்மை வாய்ப்பது ஸித்தம்" என்றும்; சிலர், "இவர் இரவும் பகலும் ஓய்வு ஒழிச்சலுமில்லாமல் 'பாண்டுரங்கா - பாண்டுரங்கா' என்று சப்தமிட்டுக்கொண் டிருக்கிறார். இவ்வோசையை நினைத்து வர்த்தகத்தை மறக்கின்றார்; வர்த்தகத்தொழிலில் இருக்குமவர்க்கு இப்புத்தி கூடுமா? இதுவே யேக்கம் எப்போதும் இவருக்கு இருக்குமாகில் வர்த்தகத்தை யின்ன நன்மைவகையால் நடத்தவேண்டு

மென்று யோசித்துச்செய்வதெவன்? வர்த்தகத்தை மதியாமல் வாசுதேவனது நன்னாமங்களை யுச்சரித்தலில் இருந்த காரணத்தினாலே தான் இவருக்கு இவ்விமிசை வாய்த்தது! அற்றேல் இவரினும் சௌகாரெங்கு கிடைக்கப் பெறுவார்; இவரைவிட ப்ரபு யாரிருப்பார்? வர்த்தக நடவாநிற்கும் இடங்களில் எப்போதும் மாயவன் பெயர் சொல்லலேயாகாது; சொன்னால் அப்பெயரே துடைத்துவிடும்; உழுகிற காலத்தில் ஊர் திரியப்போனால் அறுக்கிறகாலத்தில் அழுதுதான் தீரவேண்டு மென்பதுபோல வர்த்தகஞ்செய்து சம்பாதிக்கவேண்டிய காலத்தில், வாமநா! மாதவா! கோவிந்தா! பாண்டுரங்கா! என்று துதித்துக்கொண்டிருந்தால் செலவுகள் செய்யவேண்டிய காலத்தில் தீராத் துயர்கொண்டுதான் தீரவேண்டும்; இனியேனும் இந்த துக்காராம் அப்பெயர்களை யெல்லா மறந்துவிட்டு, நம்மைப்போல் இராப்பகல் முற்றும் வர்த்தகத்திற் சிந்தைவைத்து நடத்துவராயின் சீர்படுவார்; இவரினும் வர்த்தகரை வேறுகாணமாட்டோம்” என்றும் வார்த்தையாடிக்கொண்டார்கள். மற்றுஞ் சிலர் “ஆதியில் நாங்களும் இவர்போன்றே சில சோம்பேறிகளுடன் சேர்ந்து, அவர்கள் வார்த்தைகளில் மயங்கினவர்களாய், ஹரிவிடேல்! பாண்டுரங்கா! என்று அல்லும் பகலும் அலறிக்கொண்டு திரிந்தோம்; அதனால் எங்கள் முன்னோர் சம்பாதித்துவைத்த திரவியங்களையெல்லாம் இழந்தோம் மனை மனையாட்டிமார்களைத் துறந்தோம்; அஷ்டதரித்திரர்களாயலைந்தோம்; இப்படித்தரித்திரத்தால்படாத இமிசைகளெல்லாம் பட்டுக் கடைசியில் எங்கள் நற்காலப்பயனால் ஓர்கருணையுடைய பெரிவரைக் கண்டு, எங்கள் தரித்திரங்களைச் சொல்லிக்கொண்டோம்; அவர் எங்கள்மீது இரக்கங்கொண்டு, எந்நேரமும் நீங்கள் இறைவனை நினையாதீர்கள்; அதனால்தான் உங்களுக்கு இத்தரித்திரம் வாய்த்துள்ளது; யாவரந்த ரங்கனை யிசைத்து வருகிறாரோ அவருக்கு இந்த ரங்கநாதனே தரித்திரம் உண்டுபண்ணி யலையவிட்டுச் சீக்கிரத்தில் இறக்கவுஞ்செய்து வைக்கின்றான்; ஆகையால் எம்போதும் அவனை நினையாமல்வதோகைகால்நோய்வுறுஞ்சமயங்களிலும், ஆபத்துவந்ததருணங்களிலும், பண்டிகை முதலான விசேஷகாலங்களிலும், நல்ல சுற்றத்தார் அல்லது சிநேகிதரைக்கண்டபோழ்தும், தேவாலயங்களுக்குப் போயிருந்த சமயங்களிலும், இராஜாங்கத்துப் பெரிய உத்தியோகஸ்தர்களைக் கண்டகாலத்தும் அவன் பெயர்களைச்சொல்லிக்கொண்டால் சற்று நன்மையுண்டாகும்; பார்க்குமவர்களுக்கும் இவன் பக்திமானென்று மதிப்பேற்கும்! அதனால் அவர்களுக்கு நாம்பூஜ்ஜியராவோம்; நம்முடைய படாடோபங்களுக்கு மயங்கி மற்றவர்களும் நம்மைப்

பெரியவரென்று மதித்துப் பூஜித்துக் கொண்டாடுவார்கள்; பக்தி மான்கள் என்கிற பிரஸித்தமும் வகிப்போம்; திநதிநங் கீர்த்தநங்களை யுரக்கப்பாடி, பலருங் காண ஆராதநஞ்செய்து, நல் அறுசுவையோடு கூடின வுண்டிகளை யுண்டு வருவோமாகிலுஞ் சற்றுக் கீர்த்திக்கப் பெறுவோம்; பெண்டிர் புத்திரர் முதலானோர் எல்லோருநம்மைமதித்துப் பக்திமான்களென்று எண்ணிப் பிறர்க்கும் நம்முடைய புகழைச் சொல்லிக் கொண்டாடுவார்கள்; அவர்கள் சொல்லக்கேட்ட பலருந் தங்களுக்கு நல்லகாட்சி வாய்க்குமென்றுஎண்ணி, நம்மை சுவாமியாக மதித்து, நம்முடைய காலில் கண்டகண்ட இடங்களிலெல்லாம் வீழ்வார்கள்; இப்பேர்ப்பட்ட அரியகண்காட்சிகளெல்லாம் இதனுணுண்டாகும்; இப்பிரத்தியக்ஷாநுபவங்களை யொழித்துப் பெருந்தரித்திரராயலைந்தால் நம்மையாவர் பேணுவார்? சுகம் ஒருநாளும் அடையமாட்டீர்; என்று பலபல முறைமைகளாக வுபதேசஞ் செய்யலாயினர். நாங்களும்அவருடையபேச்சுகளைப் பரமமான குரோபதேசமென்று எண்ணி அவ்வழியே நின்றோம்; எங்களுக்கு இப்போது ஒன்றுலுங் குறைவில்லாமல்சருவவிதஆநந்தங்களும் உண்டாயிருக்கின்றன; அவ்வருமை வழிகளை மர்க்கடம்போல் பற்றியயாங்கள் மாத்திரமன்று, பிறருக்குமதுவே யுபதேசம் உபதேசித்துப் பலரையும் இவ்வழியில் நிறுத்திவைத்திருக்கின்றோம்; அவர்களும் எங்களைப்போல் எல்லா மேன்மைகளையும் அடைந்தவராய்க்கொண்டு சுகவாழ்வில் ஆழ்ந்து இருக்கின்றார்கள்; அவர்களோடு நாங்களும் பரமனையே பாடும் பல பிரபந்தங்களையோதியுணர்ந்து, பிரபந்நர்களென்று பிறர்கொண்டாடவாயினோம். பிள்ளைப்பூச்சி சேற்றிற்பதிவிருந்தும் அதுவெளிப்படுங் காலத்திற் சற்றுஞ் சேற்றின் பற்றில்லாமல் சுத்தமாயிருக்கின்றது போலே நாங்களும் சமுசாரத்திலிருந்தும் பற்றற்றவர்களாயிருக்கின்றோம்; ஆதலால்தான் எங்கள் வியாபாரங் குன்றுதலில்லாமல் நடவாநின்றன; எங்கள்பெரியோர் எங்களுக்கென்று சம்பாதித்த பெருந்திரளான திரவியத்தை யிழந்தோமே அவைகளையும் சம்பாதித்து, அவற்றிற்குமேல் இருமடங்கு அதிகமாகவுஞ் சேகரித்துக் கொண்டோம்; இடம் - பொருள் - ஏவல் - என்னுமிவை குறைவற்றுண்டாயின; பொன்னிலமாதரார் போகசுகங்களும், வாகநாதிகளும் அபரிமிதமாய்ப் பெற்றன மாயினோம்; காலத்துக்கு உணவும் அறுசுவையோடு உண்டு களிக்கின்றோம்; எங்களையடுத்து, எங்கள் திருவடிகளில் தஞ்சமென்றுகிடப்பார்க்குப் பரபோதநங்களும்போதித்துவருகின்றோம்; அவர்களுடைய தரித்திரங்களைப் பாறிப் பறக்கச்செய்கின்றோம்; இத்தகைய போராதரவு எங்கள்முன் செய்பலனுல் வாய்த்

தது; இம்மைமறுமைச் சுகங்களில் எங்களுக்குக் குறைவில்லை; இந்தத்துக்காராம் ஹரிநாமஸ்மரணையை விட்டுவிட்டு, எங்களையடைந்து, எங்கள் பேச்சுகளைக்கேட்டு, அவ்வழி நிற்பாரேயாகில் அநந்த ரகசியங்களை யாங்கள் போதித்து, எங்களைப்போல் இவரையும் ஆக்கிக்கொண்டு, இம்மை மறுமைப் பயன்களுக்கு உள்ளாக்குவோம், என்றும் புகலலும், துக்காராம் ஸ்வாமிகள் இவற்றையெல்லாம் உணரக்கேட்டு, மெலிவெய்தி, மாழ்கின மநத்தராய் நின்று ஸ்ரீ மஜ்ஜகதேககாரணா! சீதாநாயகா! செம்பொன்செய் கோயில் திருவரங்கத்துச் செல்வா! பாவியேனுக்கும் பண்பல்லாதன கேட்பிக்கத் துணிந்தோய்! பாதப்போதல்லாமல் சரண்மற்றில்லேன் கண்டாய் பக்தபரிபாலா! நீயே நின்னடியான் திறத்து இது விளைவிக்கத் துணிந்தால் விரும்பிநின் றேத்து மதியிலேனுக்குக் கதிவேறு என்சொல்லாய்! காகுத்தா! கோவர்த்நகிரி யென்னுங் கொற்றக்குடையோய்! எட்டுணையு மநத்தில் தூய்மையிட்டறியா ஏழையேனை யடிமையிற் குடிபுகுதவிட்டு ஆண்டவா! சரணம்; கோபகுலமணியே! சரணம்; குஞ்சரங்காத்த கோவே! சரணம்; புண்டரீகாக்ஷா! சரணம்; பூமகள் கேள்வா! சரணம்; சாந்திபன் துயரிகந்த சருவேசா! சரணம்; சருவகுணலயா!சரணம்;பாவியேனையிப்பலபலதுயரில்பட்டு மாயவிடாதே கண்டாய்! நானோ மாயாசம்பந்தமுடைய தேகமுடையேன்; புந்தியோர் சிறிதும் ஓராதவன்; இத்தனையுந் தூய்மையில்லா என்னை யிவ்வர்த்தகர்களுக்குள் சிக்கவிட்டு நலியுறுத்துவது உன் புகழ்க்கு அழகாமோ! என்னை நின்னடியானென்று பிறரெல்லாம் பேசாநிற்க, யான்றானும் பேணாநிற்க, இடையே சிலவவத்தியங்களை யேறிட்டிவர்களெல்லாரும் ஏசாநிற்பார்களாயின் நின் சீர்த்தகுண நன்மை கட்கேயன்றோ குறைவு விளைவது? இவ்வர்த்தகர்களால் எனக்குப் பேச்சு விளைந்துதரச் செய்யாதே சுவாமின்! தீநபந்தோ? தீநதயாபரமூர்த்தி! தேவகீமைந்தா! என்றோடியும், பாடியும், துதித்தும் நிற்பாராயினர், இவற்றை யெல்லாங் கேட்டிருந்த வர்த்தகர்கள், இது பண்டரீநாதனுடைய பண்புள இன்ப விளையாட்டல்லால் வேறல்ல; இவ்வின்பத்திருவிளையாடல்களை நம்போல்வார்க்குஉணரவசமாகாது, இவரோ! விசால குணநன்மைகளை யுடையவர்; நாமோ! சிற்றறிவுடையோம்; இவர் திறத்தில் துர்ச்சேட்டைகள் ஒன்றுஞ் சென்றுஞ்செய்யக்கடவோம் அல்லோம்; பெரியவர் மநநொந்தக்கால் பெருநரகுபெறுவோமாகுவோம் என்று பயங்கொண்டவர்களாய், பரிதாபமுற்று, துக்காராம்ஸ்வாமிகள் தத்தங்கடனுக்கென்று பகிர்ந்துகொடுத்து உன்னனவற்றை யெடுத்து, ஸ்வாமிகளுடைய தேவிமார் இருவ

ருஞ்சார்த்தியிருந்த திருவாபரணங்களில் ஒன்றொழியாமல் திரும்பக் கொடுத்து, செலவுகளுக்குஞ்சிறிது திரவியமீந்து பன்முறை ஸ்வாமிகளுக்கும் தேவிமார் இருவருக்கும் பணிந்து பணிந்தெழுந்து, கொண்டாடி, விடைபெற்றுக்கொண்டு தங்கள் தங்கள்மனைகளுக்கேகினார்கள். ஸ்வாமிகளுந் தஞ்செலவுகளுக்கென சௌகார்களால் ஈயப்பட்டிருந்த சொல்ப திரவியத்தைக்கொண்டு, மறுபடியும் வர்த்தகஞ் செய்யக்கடவோமென்றெண்ணி, அத்திரவியத்தையெடுத்துக்கொண்டுபல்தேசங்களிலுங்கூடுஞ் சந்தைகளுக்குப்போய், வேண்டுமான சரக்குகளில் கொஞ்சங்கொஞ்சமாக வாங்கி, அவற்றைத் தம்முதுகில் கட்டித்தூக்கிக்கொண்டு வந்து தம்மூரில் விற்பனைசெய்து, அதில்வரும் அல்பலாபங்களைக்கொண்டு கஷ்டஜீவனஞ் செய்து காலங்கடத்திவந்தார். அதில்வரும்வரும்படி குடும்பபோஷணத்திற்குப் போதாமையாலே, அந்தத்திரவியமும்நாளுக்குநாள்குறைந்துகொண்டேவந்துவிட்டது. பகவந் நாமத்தைமாத்திரம் வெளிசஞ்சார சமயங்களினும், வர்த்தக நடாத்துங்காலங்களினும் மறந்தாயினும்உச்சரிக்கத்தவிர்ந்தவரல்லர்; பக்தியும் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வந்தது; பக்திக்குத் தோழமையான நிராசை-பொறுமை-சாந்தம்-கிருபை-வாய்மை-சந்தோஷம்-அறிவு-அடக்கம்- அவாவறுத்தல் முதலியனவும் அபிவிர்த்தியாய்க் கொண்டிருந்தன; சாது ஜநங்களில் தம்மினுந் தரித்திரர்களாக வருமவர்கட்குத் தம்மால் இயன்றவளவும் உபகரித்தலுஞ் செய்வார்; இந்நல்லற மாண்புகள் மிகுதியும் ஓங்க வோங்க சமுசாரத்தில் அருவருப்பும் குடும்ப போஷணத்தில் வெறுப்பு மிகுந்து கொண்டேயிருந்தன; அவற்றைத் தவிர்த்துக்கொள்ள எண்ணியுஞ் சொல்ப ஹேதுக்களால் கூடப்பெறாமல், இனித் தந்திரமாகவேனுங் காலம் போக்குவோமென்று எண்ணினவராய், பலசரக்கு வர்த்தகஞ் செய்பவரிடம் யோசித்து, அவர்களிடத்திலிருந்து கொஞ்சங் கடன் பெற்று, நான்குமாடுகளை வாங்கி, சந்தைகள் தோறும்போய் பலசரக்குகளை வாங்கிப் பொதிமாடுகளின்மீது சுமைபோட்டுக் கொண்டு வந்து விற்கத்தொடங்கினார். அது சிலநாள் நடந்துவாநிற்கையில், மூன்று மாடுகளோராறொருநாள் நிர்மித்தமாக வீழ்ந்திறந்தன. அவ்விஷயத்தில் ஸ்வாமிகள் வெகுவாய் நைந்தவராய், ஐயோ! நம் வேண்டுகோளுக்கு இரங்கிக்கடன்கொடுத்தாருக்கு இனிநாம் என்ன பதிலுத்தரஞ் சொல்லக்கடவோம்? இனி யொன்றாலு நம்மை நம்ப மாட்டார்களே! இக்கருமத்திற்கு என்ன செய்யமாட்டுவோம்? என்றேங்கித் திகைத்து, தமக்குநேரிட்ட நஷ்டகஷ்டங்களைச் சிலருடன் சொல்லி முறையிட, அவர்களும் வர்த்தகர்களாகையால் இரக்கங்

கொண்டு ஸ்வாமிகளுக்குத் தைரியமும் இனிமையுஞ்சொல்லி, மீதியா யிருக்கு மற்றொருமாட்டை யழைத்துக்கொண்டு எங்களோடு சந்தைகள்தோறும் வருவீராகில், ஏதோ நமது அதிருஷ்ட வசத்தால் கிடைக்கப் பெறுமதனைக்கொண்டு ஜீவனஞ்செய்து வாழ்ந்துவரலாம்; மிகுதியைக் கொண்டு கடனையுங் கழித்துவிடலாம் என்று தைரியங் கூறினார்கள். ஸ்வாமிகள் அதூஉம் உண்மைதானென்று எண்ணி, தமக்கு மீந்திருந்ததொரு மாட்டை யோட்டிக்கொண்டு, அவ்வர்த்தகருடன் கலந்து சந்தைகளுக்குப்போய், ஒருமாடு சுமக்கத்தக்க சுமைக்குச் சரக்குகளைக் கிரயஞ்செய்து, மாட்டின்பேரில் பொதி தூக்கி நடாத்திவித்துக்கொண்டு வரும்போதும், வழிகளில், வர்த்தகர் மற்றுள்ளோர் செவிகள் செவிடுபட, ஸ்ரீ பாண்டுரங்கா! புண்டரீகவரதா! புருஷோத்தமா! போதின்மங்கைமணாளா! பூவைப்பூவண்ணா! ஓ! என்றரற்றி வருவதைக்கண்டு, அவ்வர்த்தகரிற் சிலர், நீர் கடன்பட்டும் நஷ்டமடைந்தும் இருப்பதைப்பற்றி விசனஞ் சற்று மில்லாமல், வழியெங்கும் மாயவனைக் கூவிக்கொண்டேவருகின்றீர்! நாங்களும் குடும்பத்தொல்லையில் நைந்தவர்களாகையால் அதுவேயேக்கம் அல்லும்பகலும் மாறலுறாது, அத்தொல்லைக்கு யாதுசெய்யவல்லோமென்று ஏங்கிச் சிந்தித்துக்கொண்டு வராநிற்போம்; உமது கூக்குரலால் எங்களுடைய சிந்தனை தவறுகின்றது; ஆகையால் சற்றிரைச்சல் செய்யாமல் எங்களோடு உமதுமாட்டை யோட்டிக்கொண்டு வாருமென்று சொல்ல, அவற்றைக்கேட்டும் ஸ்வாமிகள் அச்சமும் அடக்கமுங் கொள்ளாமல், மீண்டும் உரத்த தொனிகொண்டு, ஹரி ஹரீ - ஆதிமூலா ஓ! ஆபத்பாந்தவா ஓ! அநாதபந்து ஓ! அலர்மேன்மங்கை மணாளா ஓ! அப்பிரமேயா ஓ! அசலா ஓ! ஆவினங்காத்த ஆயர்குலக்கொழுந்தே ஓ! மாயாமாநுஷவேஷா ஓ! ஆய்ச்சியர் காதல்தீர்த்தவநந்தா ஓ! தாமரைத்தாளா ஓ! தனிமுதற்காரணா ஓ! தாமரைக்கையா ஓ! தசரதன்மைந்தா ஓ! தாமரையாள் மார்பா ஓ! ஜானகிமணாளா ஓ! தாமரைக்கண்ணா ஓ! தமியேன் துயர் தீராயோ! என்று கூவிக் கூவி புலனைந்து மேயும் பொறியைந்தையும் உள்ளடக்கி, ஏக சித்தமுடையராய் நிருத்தமுஞ் செய்வாராயினர். இதனைக் கண்ட வர்த்தகர் வெறுப்பெய்தி, ஈதென்ன பயித்தியம்? இவர் பித்துற்றவரென்று யாங்கள் அறிந்திருந்தும் இவரை யழைத்துக்கொண்டு வந்தது பெருங்குற்றமாய் முடிந்தது; காசிக்கேகியுங் கால்மாடு தலைமாடு காண்கிலமென்பார்போல் இவருடைய நடவடிக்கைகளைச் சற்றும் ஓராமல் அழைத்து வந்ததே நமக்கபசாரம்; கிரககிருத்தியங்களில் நஷ்ட கஷ்டங்களை யோசித்துப் போருஞ் சமயம்

நமக்கு இதுவேயாகையால் அவைகளை யொருவரோடொருவர் கலந்து யோசித்துக்கொண்டு ஆற்றிக்கொள்ளும் உபாயந் தேடுவோமென்றால் இம்மகாநுபாவர் நல்லவர்போல் வந்து நம்மில்கூடி, இப்போது பெருங்கூச்சலிடுகிறார்; இதற்கென்ன செய்யலாம்? இவர் ஒருபக்கம் இவர்மாடு ஒருபக்கமாக இருக்கிறார்கள்; மாட்டைக் கிரமமாக வோட்டிக்கொண்டுபோய் சீக்கிரமேயிருப்பிடஞ் சேருவோமென்கிற நினைப்புங்கிடையாது; இவருக்கேனும், இவர் மாட்டுக்கேனும், மாட்டின்பேரில் சுமைத்திருந்துள்ள சரக்குகளில் ஏதுக்கேனுங் குறைவு வருமாகில் நமக்கெல்லாங் கெட்டபெயர் வந்துவிடும்; உலகநிந்தைக்குடன்பட நாமெல்லோருமாயினோமே; என்று தங்களைத்தாங்களே நொந்துகொண்டு வழிநடந்தார்கள்.

அவ்வர்த்தகர்கள், ஜன்ம கரும பரம்பரையிற்சிக்கி, அதனால் மலங்கொண்ட மநத்தர்களாதற்கொண்டு அன்னவர்க்கு எங்ஙன் ஹரி பக்திவாய்க்கும்? அந்தர்மலின சித்தர்களுக்கு அச்சுதன் பக்தி யருசியே யாமல்லவா? நாயின்குடலுக்கு நறுநெய் தொங்காததுபோல நாழ்மைகொள் இந்நலமில்லாதாருக்கு நாரணன் நன்னுமம் எவன் கேட்பித்து இதயத்திற் றங்கவிடும்? தவமும் தவமுடையார்க்கேயாம்; அஃதிலார்க்கு அவமேயன்றோவிளைவது? இவர்களுடைய எண்ணம் பெண்டு பிள்ளை பதார்த்த மனைமாடுகளின்மீது பற்றெனநின்றது; கடந்த ஞானியும் இவற்றைக் கடத்தல் அருமையென்றால் உண்டியே யுடையேயென மண்டலமுற்று முகந்தோடி, பெண்டுபிள்ளைகளல்லால் பேறுவேறு அறிகிலாரா யவர்களையே தாரகமென்றெண்ணிச் சமுசாரசாகரமாகும்பெருங்கோரத்தின்மாழ்கிக்கிடக்கும் பெத்தாத்துமாக்களுக்குளளிதெனல் அடுக்குமோ? வேதவேதாந்தங்களை யெல்லாமுற்றும்படித்தும் உணர்ந்தவர்களுந் தாங்கள் கற்றவழி நிற்றல் செய்யாமலும், இராமநாமாமிர்தம் உண்ணுமலும், சஞ்சல மநத்தர்களாய்வெவ்வேறு விஷயங்களிற் புத்திசெலுத்தி, வாயில்வந்தவற்றைப்பிதற்றிக்கொண்டு எங்களைவிட ஞானிகள் கிடையாரெனப் பிரமைகாட்டி வருகின்றார்களென்றால் இவர்கட்குக் கேட்பானேன்?

ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகளோ! உடல்பொருள் ஆவிமூன்றையும் பகவானுக்குப் பிரீதிசெய்து, கங்குலும் பகலும் கண்ணபிரான் கனைகழலேயெமநத்திற் பதியவைத்துக்கொண்டு, அதனுற் பெருகிவழியும்அருள்உள்ளடங்காமையால் காநடனங்கள்செய்து போருமவராகலால், அவ்வார்த்தைகள் குழறுபாடுகளை லக்ஷியமுறுத்தாமல் முன்போல் பிர்மாநந்தத்தில் அழுந்தினவராய் தட்த்தில்நடந்துகொண்டிருந்தார். இங்ஙனம் ஸ்வாமிகளும் வர்த்தகர்களும்நடந்து நடந்து

வந்து, ஓர்தோப்பினிடையிருந்த சத்திரத்தைக்கண்டுள்ளேபுகுந்து, மாடுகள்மீதிருந்த பொதிகளையிறக்கி, மாடுகளுக்கு நீரருந்துவித்து, கட்டவேண்டிய இடத்திற்கட்டி, புல்மேயவிட்டு, தாங்களுங்கொண்டு வந்த அந்நங்களை வயிருறப் புசித்து, இளைப்பாறச் சற்றுத்துயின்று எழுவோமென்று எல்லோரும் பூமியில் தலைசாய்த்தார்கள்; அவ்வளவில் ஸ்வாமிகள் முன்நடத்திற்போல் பகவந்நாமத்தை மிகுகோஷத்துடன் உச்சரிப்பதும், ஆடுவதும், அரற்றுவதுமா யிருந்தார்; தாம் அந்நமுண்ணும்போதும் தண்ணீரருந்தும்போதுங் கூடத் தவிர்க்குமவ ரன்று! தம்மோடு வந்தவரெல்லார்க்கும் ஞானஞ் சிறிதுமில்லாமையினால் அவர்கள்இராம நாமோச்சாரணை யின்றியிலே புசிக்கக் கண்டு, அவர்களைநோக்கி, நீங்கள்உண்ணுஞ்சோறு மலத்தோடொக்கும் என்றுஅன்னோரைச்சீறுவார்; தாந் தம்ம பரவசத்தால் பரமனை ஸ்மரிக்கும்போதும், நடமிடும்போதும் யாரேனும் பார்த்ததுண்டானால் அவர்களை நோக்கி, நீங்களும் என்னைப்போல் ஏன்செய்யாமல், மரம்போல் வலிய நெஞ்சத்தவர்களாய் நிற்கின்றீர்கள்? என்று கோபிப்பார்; இப்படி யிவரெல்லா அமயங்களினும் பகவத் சொரூப-ரூப - குண - சேஷ்டிதங்களில் மநமொன்றுவித்துக் குதூகலித்து வருமது மற்றவர்க்கரிதாயும், அவற்றின் தன்மைகள் உணர்தலும் பிறருக்கு அருமையாயும் இருந்தன. ஆதற்கொண்டேயாக்குங் கூடப் போந்த வர்த்தகர்களுக்கு இவர்வாய்மை யெளிதாகக் காணப்பட்டு அவமதித்தல் செய்ய நுதலினர் இத்தனை.

அநந்தரம், துக்காராம் ஸ்வாமிகளானவர் தம்மோடு சந்தைகளுக்குவந்த வர்த்தகர்கள் அந்நமுண்டு ஆனவுடனே தத்தம்படுக்கைகளை விரித்துக்கொண்டுபடுத்தும் நித்திரைவராமற் புரண்டுகொண்டிருக்கக்கண்டு, அவர்கள் பெயர்களையிட்டழைத்து, ஓ ஓ! தோழர்களே! நீங்கள் நித்திரிக்கத்தேடினும் நித்திரையுங்களுக்கு வாய்த்திலது! அங்ஙனிருக்க, வீணே புரண்டு புரண்டு காலங் கழிப்பதில் உங்களுக்குப் பயனென்ன? இவ்வேளையிலாவது சருவேசுவரனைநோக்கிக் கூடியவரையினுங் கூப்பிடுடல் ஆகாதோ! எழுந்திருங்கோள்! உங்கள் பிறவித்துயர் தீருங்கோள்! என்னினும் வலியரா யவனுமங்கூறிக் கூவுங்கோள்! என்றுசொல்லித் தாம் உரத்ததொனியெடுத்தவராய்க் கொண்டு,

எழுசீராசிரியவிருத்தம்.

அன்னமாய் விசும்பி லயர்வுமீக் கூர்ந்த
வலர்மகற் கருமறை பகர்ந்தோ
யென்னையாண் டிட்டென் மனங்குடி புகுந்த
வெளிமையை யெங்ஙன மறப்பேன்

முன்னமா ளரியா யவுணன தாக
முகரநே ருகிர்கொண் டுகுத்த
கன்னலே யமுதே கங்கையைப் பயந்த
கழலனே காத்தனின் கடனே.

மங்கையோர் பாகங் கொண்டுநின் கழனீர்
வளரிளம் பிறையொடு முடிமேல்
தங்கவிட் டுயர்ந்த சதுமுகன் பயந்தான்
சழக்குநாக் கொடுநினைத் துதிப்பச்
செங்கையார் மண்டை யையிரு நூறுச்
செகுத்தருட் சுரந்தசே வகனே
பங்கயச் செல்வி பதுங்குநன் மார்பா
பாவிய னேனையாண் டருளே.

திருமக ளருளா லாண்டுகொண் டிங்ஙன்
றீயனேற் கினிதுபல் காட்டிப்
பெருமிதங் கொண்டா நந்தமே தருநின்
பெருமையின் மிக்கதொன் றுளதே
மருவளர் மார்ப மாமுகி னிறத்து
மாயனே வானவர்க் கரசே
பொருதிரை மருவி யறிதுயின் மேவு
புண்ணியா போழ்க்கனேற் கருளே.

பாம்பணைத் துயின்ற பரமனே வானோர்
பன்னெடுங் காலநிற் காண்பா
னேம்பலித் துழல வென்னுளத் துறைந்த
வினிமையை மறக்ககிற் பேனோ
பூம்புனற் பொய்கை முதலைவாய்ப் பட்ட
பூட்கையோ வென்றல றிடக்கேட்
டோம்புதல் செய்வான் விரைவினின் மேவு
மொருதனி முதல்வகாத் தருளே.

இந்திரன் பிரம னீசனு டுகளி
லெவர்களுந் தொழுதெழற் கென்றோர்
பைந்தலை யரவைப் பச்சிலை யாக்கொடு
பாற்கடற் றுயின்றபண் ணவனே

எந்தையுந் தாயு மக்களு மனையு
மெத்திசைச் சுற்றமு மாயென்
சிந்தையை நினக்குக் கோயிலாக் கொண்ட
சீதரா தேவர்கோ மானே.

என்றின்னன துதிகள் பலதுதிக்கவும், அவ்வர்த்தகர்கள், ஈதேது பெருமோசமாயிற்று; நம்மைச்சற்றும் விடாமல் வாதைக் குள்ளாக்குவார் போல் காணுகிறது; நடந்துவந்த அலப்புத்தீர நித்திரைகொள்வோ மெனினுங் கொள்ளவொட்டிலர்; இவரோடு நாமுங் கலந்தால் அவதிக்கு ஆளாவோம்; மெய்நோயு மிகுத்துச் சாவோம். அவரைப்பற்றி நமக்கென்ன? தனியே போவோமாகில்சற்று நன்மை கிடைக்கும்; இவரோடு உள்ளளவும் நம்மைப் பிழைக்கவிடார்; இவர் பிழைத்தாலென்ன மாண்டால்தான் நமக்கென்ன; நம்பிள்ளை பெண்டாட்டிகள்; பிழைப்பதற்கு நாமல்லவோ வுபாயந்தேடவேணும்; வீணில் இவரைக் கட்டிக்கொண்டழுதால் யாருநம்மை மதிக்க மாட்டார்கள்; நாமும் இவரைப்போல் அலைச்சற்படவேண்டி முடியும் என்றெண்ணி, கோபங் கொண்டவர்களாய்ச் சரேலென எழுந்து, தங்கள் தங்கள் மாடுகளின்மீது பொதிகளைப்போட்டுச் சுமத்திக்கொண்டு, துக்காராம் ஸ்வாமிகளுடைய மாட்டின்மீதிலும் அவருடைய பொதியைப்போட்டுவிட்டு, அவருடன் சொல்லாமலேயே போய்விட்டார்கள் ஸ்வாமிகளுந் தம்மாட்டை யடிக்ககாமலும் அதட்டாமலும் அதுபோனவழியாகவே விட்டுப் பின்னாலே ஸ்ரீ ஹரியை பஜித்துக்கொண்டு வந்து, சூரியன் அஸ்தமிக்கிற சமயத்திலோர்பெருத்தஆரணியத்தை யடைந்தார். அவ்வாரணியத்தில் வாசம்பண்ணுகிற புலி கரடி முதலிய துஷ்ட மிருகங்களின் ஓசையைக் கேட்டுப் பயந்த மாடானது முன்னுக்குப்போக அஞ்சிப்பொதியைக் கீழே தள்ளிவிட்டு, ஓர் மரத்தின் புதரில் பதுங்கிக்கொண்டது. மறுபடியும் பொதியைத் தூக்கி மாட்டின்பேரில் ஏற்றத்தகும் உதவிகிடையாது; தாஸரும் அதைவிட்டுப்போகாமல் அங்கேயே நின்று கொண்டு, பயஞ் சற்றுந்தோன்றப்பெறாமல், தம்மசரீரத்தையும் இயல்புகளையும் எல்லாமறந்து மறந்தோமென்னும் நினைவுமின்றிக்கே, நாம் பகவானுக்கு தாஸனாகாமல் இகசுகங்களையும் அநுபவிக்காமல் மத்தியகதரா யிருந்து காலங்கழிப்பதில் பயனென்னை? தேகத்தைச் சுமந்தும் பிரயோஜனமில்லாமல் வாழ்நாளை வீணாளாக்கிக்கொள்ளுகிறோம்; குடும்பத்தைப்பற்றி யவ்லவா நமக்கிப்பாதை வாய்த்தது? குடும்பத்திற்கும் நமக்குமென்னை பற்றிருக்கிறது? இப்பிறப்பில் இவர்கள் நங்கருமத்தைப்பற்றிய சுற்றத்தவராகக் காணுகிறார்களன்றி வெவ்வேறு பிறவிபிறந்தால் அவை

களினும் இவர்களே நங்கூடப் பிறப்பார்களோ? “அப்ப னெத்தனை யெத்தனை யப்பனோ - அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ - பெண்டி ரெத்தனை யெத்தனை பெண்டிரோ-பிள்ளை யெத்தனை யெத் தனை பிள்ளையோ” என்ற முதுமொழியின்படி, பிறவிகள்தோறும் அப்பனும் அன்னையும் பெண்டிரும் பிள்ளைகளும்உண்டாகின்றார்கள். கருமவயத்தைப்பற்றிவெவ்வேறு ஆத்துமாக்கள் அவ்வப்பிறவிகளில்; அவர்களை யெல்லாம் இப்போது தழுவி நிற்கின்றேமோ? இந்தச் சரீரத்தைச் சுமந்திருக்கு மளவும் இச்சரீரத்தைப் பற்றிய சுற்றத் தாரையே பெருஞ்சுற்றமென மதித்து, மாயாசம்பந்தத்தில் மாழ்கின வர்களாய், பிறவி பிறந்தனைய புண்ணியம்பெறாமல் வீணேபுரண்டு போவதால் பயனென்றுங் காணுதலரிது; இச்சுற்றத்தாரும் மக்கள் மனைகளுமெல்லாந் தென்புலக்கோனிடம் நாமேகும்போதும் நங்கூட த்தொடர்ந்துவந்து, நந்தீவினைப்பயனால் அவன் தண்டிக்குந் தண்டனை யைத் தாங்களேற்று, நம்மை யத்தண்டனைத் துயரினின்று மீட்பிப் பார்களோ; ஈதெல்லாம் வீண்பிதுக்கம்; இவற்றையெல்லாம் பற்று அறவொழித்துவிட்டு, இறைவனையே யிறையுமறவாது ஏத்திநிற்போ மாயின் இம்மைப்பயனும், மறுமைச்சுகமும் பெற்று இனிது வாழலா மென்று தம்மில்தாமே மதித்தவராய்க்கொண்டு, முன்போலவே அக் கடுங்கானகத்திடை தன்னந்தனியே யிருந்துகொண்டு புகரிழந்து தம்மைமறந்து,

ஸ்துதிகள்.

ஹரிகோ விந்தா வமலனே சரணம்
ஆயர் பாடியி லமர்ந்தவா சரணம்
ஆயர் சிறுமியர்க் கன்பா சரணம்
ஆய்ச்சி தருபா லருந்தினாய் சரணம்
பேய்ச்சி தருமுலை யுண்டவா சரணம்
அன்பர்க் கமுதென நிற்பவா சரணம்
உலகுக் கொருதனி முதலே சரணம்
விரிபொழின் முழுதுமாய் விரிந்தவா சரணம்
பந்தமும் வீடும் படைத்தவா சரணம்
அருமறை துதிக்கு மன்பா சரணம்
மாப்பெருங் கருணைக் கடலே சரணம்
அச்சமொன் றில்லா வழகனே சரணம்
வேரிமா றுவலர் மேவினாய் சரணம்
பூமகள் கேள்வா புண்ணியா சரணம்

தவத்துளார் தம்முடைத் தனமே சரணம்
சிவனயற் கெட்டாச் சேவகா சரணம்
யாவரும் பெறவுறு மீசா சரணம்
அந்தமு மாதியு மகன்றவா சரணம்
வெஞ்சா வெவ்வினை வீய்ப்பாய் சரணம்
செஞ்சுடர்ச் சோதி சீதரா சரணம்
வினைவீழ்த் துவிக்கும் விமலா சரணம்
பத்திமை யிற்படு பண்பே சரணம்
நளினத் தடியுள நாட்டினய் சரணம்
பரமனே பாற்கடற் பள்ளியாய் சரணம்
ஐவர்க் குத்தொண் டமர்ந்தவா சரணம்
கல்லைப் பெண்ணுரு வாக்கினய் சரணம்
கொடியெனை யாண்ட கோவலா சரணம்
குஞ்சரங் காத்த கோவே சரணம்
கோதிலா குணப்பெருங் குன்றே சரணம்
மாதுநா ளும்வாழ் மார்பனே சரணம்
அடிமையிற் புகுத்தி யாண்டவா சரணம்
கடைஞரிற் கடையனைக் காத்தருள் வாயே.

என்று ஸ்துதிப்பாராயினர்.

இங்ஙன் ஸ்துதியாநிற்கும் துக்காராமருடைய வார்த்தநாதத்தைக் கேட்டருளின அன்பர்சகாயனும் ஸ்ரீமந்நாராயணன், நமது பாலன் பரதவியாநின்றனென்று திருவுள்ளம்பாரித்து, வழிப்போக்கனும் கூலியாளனும்போல் உருவெடுத்துக்கொண்டு வந்து, அவ்வர்த்தஜாமத்தில் தாஸர்முன்னின்று, இந்த மிருகங்கள் சஞ்சரிக்கும் அடவியில் இந்நிசிராத்திரியில் தனியேயிருந்து கொண்டு இராமா-கிருஷ்ணா-கோவிந்தா என்று பெருஞ்சத்தமிட்டுக்கொண்டு இருப்பதற்குக் காரணமென்னை ? என்று வினவ; தாஸரும், ஐயா ! யான் சிலவர்த்தகர் கூட வியாபாரஞ் செய்யவந்தேன்; என்னைத் தன்னந்தனியே விட்டு விட்டு அவர்களெல்லாரும் போய்விட்டார்கள் ; இதோ மரத்தினடியிற் பதுங்கி யிருக்கு மாடு பொதியைக் கீழே புகட்டிவிட்டுப் பதுவியிருக்கிறது ; மறுபடியும் தன்மேல் பொதியைத் தூக்கலாமென்றால் கூடச்சகாயமாய்ப் பிடிப்பாரை யிச்சமயம் இங்கு யாரையுங்காணேன்; அதனால்தான் இவ்வாரண்ணியத்திலேயே இருக்கிறேன் என்று சொல்ல; இதைக்கேட்டருளின சருவஸ்வாமியாகும் வழிபோக்குக் கூலியாள், இந்தப் பொதியை நீர் ஒரு

பக்கம் நானும் ஒருபக்கமாகத்தூக்கி மாட்டின் மீது கிடத்துவோம் வாருமென்று, மாட்டைப்பிடித்துக் கொண்டுவந்து பொதிக் கருகில் நிறுத்தி விட்டு, தாஸரொருபுறமும் தாளுெருபுறமுமாகப் பொதியைப்பற்றித் தூக்கி மாட்டின்மீது சார்த்தி, மாட்டின்வயிற்றுக்கச்சமிறுக்கிக் கட்டி, நடவென்று சொல்ல; எனக்கு இவ்வழி தெரியாது; என்றும்வந்தவனல்ல; நீயறிந்தவனுகையாலே முன்செல்லுவாயாகில் நானும் மாட்டையோட்டிக்கொண்டு பின்னணியாக வருவேனென்று தவப்பேற்றினர் உரைக்க; ஆம், அப்படியேசெய்யக்கடவேனென்று அவ்வழிப் போக்கனுகும் ஜகந்நாதன் முன்னே நடந்து வழிகாட்ட, துக்காராமரும் அவரடிமேல் அடியை வைத்தாப்போல் மாட்டையோட்டிக்கொண்டு பின்னுலே வர, அவ்வளவில் தாஸருடைய ஊர் சமீபித்து, இந்திராணிநதி கடக்கவேண்டியதால் அந்நதி கரை புரண்டு போவதைக் கண்டு, கூலியாளாகுங் கோபிகா ரமணன், தான் முன்னுகப் போய் பிரவாகங்கொண்டு ஓடும் நதியின் ஆழங்கண்டு வந்து, துக்காராமரையும் அழைத்துக்கொண்டு முன்போன்றே முன்னுக வழிகாட்டிக்கொண்டு, ஆற்றில் அந் நல்லிருளில்தானே போகாநிற்கையில்,மாநத்தில் ஓர்மின்னல் மின்னிற்று; அம்மின்னலின்வெளிச்சத்தால் ஸாதுத்தலைவர், தமக்குக் கூலியாளாய்க் கானகத்தில் தோன்றி வழிகாட்டிக்கொண்டு முன் ஏகாநிற்கும் அவனைப்பார்த்தபோது அரையிற் சார்த்திய வந்திபோல் நிறத்த பீதக வாடையும், அதன்மேல் அயனைப் படைத்ததோர் எழில் உந்திப்பூவும், கச்செனவிறுகக்கட்டியுள்ள திருவயிற்றுதரபந்தநமும், அகலகில்லேன் இறையுமென்று அலர்மேன்மங்கை வாழ் மார்பும், திவாகரர் ஆயிரவரையொருங்கே யுருக்கிவார்த்தாலென்ன வொளிதரு திருக்கவுத்துவ வநமாலைகள் தியங்கும் திருமார்பும், மல்லாண்ட திண்டோளும், வாயுவாதிகளின்வேகங்களைக்கடந்து அந்தமோக்ஷங்களுக்குத் தனிக்காரணமாயிருந்துள்ள மநோதத்துவத்தின் நிஜவடிவாம் ஸ்ரீ மதருளா:ர்ச்சுட*ராழியையும், தாமஸாஹங்கார தத்துவத்தின் நிஜவடிவாம் படைபோர்புக்கு முழங்கும் ஸ்ரீ†பாஞ்ச சந்நியத்தையும், சாத்விகாஹங்கா தத்துவத்தின் நிஜவடிவாம் ஸ்ரீமச்‡சார்ங்கத்தையும், புத்திதத்துவ மகத்தத்துவங்களின் நிஜவடிவாம் ஸ்ரீ§கௌமோதகியையும், ஞாநவித்தியையின் நிஜவடிவாம் நிருமல சோதிமயமான ஸ்ரீ¶நாந்தகத்தையும், மாணிக்கச் செப்பிலே அபாஞ்சியிட்டு அழகுக்கு அழகு உண்டாக்குவதுபோல் தாங்கி, அத்தால் பொலிவு

* ஆழி - சக்கரம். † பாஞ்சசந்நியம் - சங்கம். ‡ சார்ங்கம் - வில். § கௌமோதகி - கதை. ¶ நாந்தகம் - வாள்.

விஞ்சி நிற்கும், வடிவார்சோதித் திருக்கைகளும், அண்டரண்ட பகிரண்டத்தொரு மாநிலமேழு மால்வரைமுற்றுமுண்டு உமிழ்ந்த திருக்கண்டமும், பவளம்போன் மிளிர்தரு திருவதரச்செய்யவாயும், தொங்குகின்ற செண்பகப்பூப்போன்ற திருமூக்கும், கனத்த மகரகுண்டலங்களைத் தாங்கித் தளர்ந்து தோளளவும் வளர்ந்து தளதளென்று தொங்காநின்ற திருச்செவிகளும், கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய தண்டாமரைக் கண்களும், குனிவடிவாற் சார்ங்கவில்லின் நிஜவடிவொத்து ஒல்லாதாரை வென்று மெள்ள வளைந்துநின்ற திருப்புருவ வட்டங்களும், ஆயிரத்தெட்டு மாற்று அபராஞ்ஜியின் தகட்டில் நீலமணிப் பதிந்தாலன்ன பொலிவு தருங் கஸ்தூரி பொட்டணி திருநுதலும், நீட்சிபெறவளர்ந்து உருண்டுருண்டு முடிகூடி விளங்குகின்ற அழகுடைத் திருக்குழலும், உபய விபூதியையும் ரஞ்சிக்கவிடுத்து நன்னீதி சொல்லாநிற்கைக்குக் கோப்புடைய சீரிய சிங்காசநத்தில் வீற்றிருந்து, ஏழுலகுந் தனிச்செங்கோலோச்சுதலில் சூசனை நன்குவிளக்குவான் அணிந்த மாண்ட மணிமுடியும், பின்னெடுத்த பிடரியும், குலமொடு செல்வந்தந்து, அடியார் படுதுயராயினவெல்லாம் நிலந்தரஞ்செய்து, வலமொடு மற்றுந்தந்து, பெற்றதாயினு மாயின செய்து, நீள்விசும்பருளி, அருளொடு பெருநிலமளித்து நலந்தரும் அந்நாராயணன் நன்னுமமல்லாமற் காலங்கடத்தா நான்மறை யாளர்கள் சென்றுசேர் பெருவிசும்புத் திருநாட்டில் முன்னிலும் விஞ்சிய அழகதாய்ப் பணிந்துபணிந் தாறப்பெறு திருமுதுகுஞ் சோபநீயமாய் நன்கு விளங்கக்கண்டு தியங்கி மயக்கமெய்தி, பிரமையேற்றுப் பயந்து, இருகைகளையும் முடிமிசைகூப்பித், துதிக்க வாயெழாது குழறிக்குழறி,

எழுசீராசிரியவிருத்தம்.

செங்கணு போற்றி செம்பது மத்தாள்
திகழ்தரு மார்பனே போற்றி
எஙகணு ரணனே யெவ்வுயிர்க் குயிரா
யிலகுநல் லிறைவனே போற்றி
வெங்கணு கத்தின் வெவ்விய பகைதீர்
வீரநன் கெய்தவா போற்றி.
எண்கணு தரத்தா விடைவழி காட்டி
யென்மநங் கவர்ந்தவா போற்றி.

கன்றினைக் குணிலாக் கொண்டுநல் விளவின்
கனிவிழ வெறிந்தவா போற்றி

குன்றினைக் குடையாக் கொண்டுகோ வலர்க்காய்க்
குளிர்மழை தடுத்தவா போற்றி
என்றினை.யளவு மில்லதோர் நன்மைக்
கிரங்கியாண் டிட்டவா போற்றி
வன்றுணை யாக்கஜன் வழியினைக் காட்டி
மகிழ்ந்தமா மாயவா போற்றி.

வேறு.

வாழிவாமனு வாழிமாதவா வாழிமங்கைம ணாளஓ
வாழிசீதரா வாழிசேவகா வாழிசெம்மைகு ணாளஓ
வாழிமாயவா வாழிமாலவா வாழிவாழும ணாளஓ
வாழியாண்டவா வாழிகேசவா வாழியருமைவி ணாளஓ.

என்று இன்னபடியெல்லாம் வாழ்த்திப் பின்னையுந் துதிக்கலாயினார்;—"ஸ்ரீ ஹரீ! கோவிந்தா! கோபகுலதிலகா! கோவர்த்த னோத்தாரனு! கோபிகாரமனு! கோமன்னர் குலக்கொழுந்தே! துஞ்சினார் சொல்லுந் தொன்னெறிகேட்டுத் துலங்கி நெஞ்சினால்நினைந்தும் வாயினான்மொழிந்தும் நீதியல்லாதன செய்து, நமன்தமர்செய்யும் வேதனைக்கஞ்சாது, சூதினைப்பெருக்கிக் களவினைத்துணிந்து சுரிகுழன் மடந்தையர் திறத்துக்காதலே மிகுத்துக் கண்டவகைதிரிதந்து இடும்பையால் அடார்ப்புண்டு இரந்தவர்க்கு இனிதாக என்று முரைக்காமல் இல்லையேயென்று நெடுஞ்சொலான் மறுத்த நீசனேனைத் துக்கச் சுழலையாகச் சூழ்ந்துகிடந்த வலையை யறப்பறித்துப் புக்கினிற் புக்குன்னைக் கண்டுகொள்ளுமாறு கனவிருட்சூழ்ந்த கடுராத்திரியிற் கானகத்திடை கபடத்திருமேனியனு யிக்கருமவயத்தனேன் முன் தோன்றி காருண்ணியத்தோடு அழைத்துவந்து இங்குவிட ஆறுகடத்தி வழிகாட்டிச் செல்கின்ற தீநபந்தோ! ஜகந்மோகநாகாரா! ஜாநகீரமனு! ஜகத்போஷனு! மிருபூஷனு! பகைதூஷனு! வெகுமோகநா! ககவாகநா! சுக நாரனு! வாக்குத்தூய்மை யிலாமையினாலே ஹேமாதவா! உன்னை வாய்க்கொள்ளமாட்டாச் சழக்கு நாக்கொடு புன்மொழி புகன்றேன், ஏ! சங்குசக்கரமேந்து கையனே! பிழைத்தாயினு நின்னடியான்சொற் பொறுப்பது - பெரியோய்! நின்கடனன்றே! கண்ணு! உந்திமேல் நான்முகனைப் படைத்தானே! உரகணைத் துயின்றானே! காரனு! கரியதிருமேனியனே! கரிகோள் விடுத்தானே! களிறட்டபிரானே! உம்பர்கோமானே! உலகேழ் அளந்தானே! ஊழியானே! ஆழிப்படையங்கையானே! வண்ணமால் வரையைக் குடையாகக்கொண்டு மாரிதடுத்தவனே! மாமாயு

னே! மதுசூதனே! நம்பனே! நரசிங்கனே! நவின்றேத்த வல்லார்கள்நாதனே! எம்பிரானே! இறையுமறவாதார் தம்பிரானே! என்னையாளுடைத்தேனே! ஏழையேன் இடரைக்களையாயே! என்பனவாதியாக.

இப்படி பரமபாகவத சிகாமணியாகும் துக்காராம் ஸ்வாமிகள் ஸ்தோத்திரங்கள் பலவிசைக்கலும், இவருக்குக் கூலியாளாய்த் தோன்றி வழிகாட்டிக்கொண்டு முன்னடந்து போந்த குவலயத்தொரு தனி முதற்கிழங்காகும் ஸ்ரீமந்நாராயணன் இவரைச்குளிரக் கடாக்ஷித்து மறைந்தருளினர். அவ்வளவில் விஷ்ணுபதகமல சேவநீயராகும் இவ்வீர வைஷ்ணவர் வேந்து, தமது ஊன்மலிந்த கண்ணிணையாலே காணப்பெற்றதொரு காட்சிவிசேஷத்தை யடக்கப்பார்த்தும் உள்ளடங்காமல் பொங்குகிறமையாலே அடிக்கடி வியப்பும் ஆநந்தமுமெய்தி, கடைசியில் ஓர்வகையாகப் புந்தி தெளிந்து, தமது தேவுகாமென்னு நகருள் புக்கு, மனையுட்சென்று, மாட்டின்மீதிருந்த பொதியையிறக்கி, மாட்டை மனையாட்டிமார்வசம் ஒப்பித்துவிட்டுத் தாந்தனியே வீற்றிருந்து, சருவேசுவரன் காட்டியருளின அருமைக்காட்சிகளை நினைந்து நினைந்து குணநுபவம் பண்ணிக்கொண்டிருந்தார்.

அன்றிரவு நீங்கிப் பொழுது விடிந்தவாறே இந்தப் பரமபாகவதருக்குக் கடன்கொடுத்திருந்த சௌகார்களிற் சிலர், இவரது வரவைக் கேட்டு இவரைக் காணவந்து தங்கள்தங்கள் கடன்களைக் கேட்கலுற அவர்கட்கு அந்தஸ்வாமிகளுந் தக்கஇதவுகள் கூறி, இன்னஞ்சிறிது நாள் கெடுவிட்டு அவர்களை யெல்லாம் அனுப்பி விட்டு, தம்மை யடிமைகொண்டு ஆண்ட ஆண்டவனைத் தொழுது, ஐயோ! நமக்கிரங்கிக் கடனீந்தார் எல்லாரும் இப்படி யலைகின்றார்களே, இவர்கட்கு எவ்வகையில் நாம்திரவியஞ் சேகரித்தளித்துக் கடன் தீர்க்கவல்லோம்? வாங்கின கடனைத் திரும்பக் கொடாவிட்டால் மறுஜெநநம் மாடாயும் ஏவலாளியாயும் பிறந்துஉழைத்துத் தீர்க்கவேண்டி முடியுமே; இதற்கென்செய்யக் கடவோமென்று சிந்தைநொந்து, தமது மாளிகையிலிருந்த பித்தளைச் சாமான்களை யெல்லாஞ் சுமைகட்டி, கடைக்குக் கொண்டுபோய் மதிப்பிட்டு விற்பனை செய்து, அந்தத் திரவியத்தை மிளகாய் விற்பவரிடம் கொடுத்துப் பழைய பாக்கியிற் செல்லெழுதுவித்து, மூன்றுபொதி மிளகாய் கடன்வாங்கி, மூன்று மாடுகளின்மீது தூக்கிக்கொண்டு, கோகனநாட்டிற்குக் கொண்டு போய், அங்கு சிவாலயமும் ஆலரசு விருக்கங்களும் அமைந்த நதிக்கரையில் மூன்று மிளகாய்ப் பொதிகளையும் இறக்கி, ஒருபை மிளகாயவிழ்த்துக் கீழேகொட்டி, நீராடற்கும் ஜலந்திரட்டற்கும் போகிற

வருகிற ஜனங்களை நோக்கி, வேண்டியவர்கள் மிளகாயைக் கிரயத்திற்கு வாங்கலாம் என்று சொல்ல, அவர்களிற் சில பெண்டுகள் கூடி, ஐயா! மிளகாய் வீசை யொன்றுக்கு என்னகிரய மாகிறது? என்று கேட்க; அதற்கு இம்மாட்சியாளர் உங்களுக்கு எந்த விலைசம்மதியோ அந்த விலைக்குப் பெற்றுகொண்டு போகலாமென்றுரைத்து, தமதியல்வு பக்திக்குரிய காரியமாகும் பஜனையை நினைந்து, ஹரிவிடேல்! பாண்டுரங்கா! புண்ணியசீலா! பரஞ்சோதீ! பக்த போஷகா! என்று கீர்த்திக்கலாயினர். மற்றொருபெண்ணணங்கு, மடியில் ஒருபடி யமுது கொண்டுவந்து கொடுத்து, இதற்கேற்ற மிளகா யீவீராக என்று கேட்க அவளைத்தன் இஷ்டத்தைப்படி கொண்டு போக வுத்தரவளித்தார்; அவளுந் தன்னிஷ்டத்தின் படி கொண்டு போயினள்; இதனைக் கண்டிருந்த வேறொரு பெண் ஆறுகாசு கொடுத்து மிளகாய் கேட்க, அவளுக்கும், வேண்டியது கொண்டு போகலாம் என்றுத்தரவீய, அவளுமப்படியே தன் மனங்கொண்ட அளவு கொண்டுபோயினள். இவ்விந்தையைக்கேட்டு அவ்வூர் ஜனங்களிற் சிலர் வந்து, கடனளிப்பீரா என்று கேட்க, அவர்களில் கால் அரை முக்கால் ஒருவீசை இரண்டு மூன்று வீசைகள் அளவுங் கேட்டவர்களுக்கெல்லாங் கடன் கொடுத்துவர, அதனைக் கண்ட மற்றுளோரும் மேல்வீழ்ந்துவந்து "திருட்டுத் தாநியத்திற்கு மத்தளமே மரக்கால்" என்றபடி, கருணையெள்ளளவு மில்லாக் கயவர்களாகையால் கைக்கொண்டபடி சேர்த்துக்கட்டி, என்புகண்ட நாய்கள்போல் ஒருவரோடொருவர் சச்சரவு செய்து, மடியில் வைப்போரும், முதுகிலணைப்போரும், தோளில் தூக்குவோரும், தலைமீது சுமப்போருமா யொருவிதை யளவுஞ் சிந்தவிடாமல் இரண்டுபொதி மிளகாயைக் கொண்டார்கள்.

மீதியாயிருந்த மற்றொருபொதி மிளகாயை அபகரிக்க எண்ணி, மூலப்பிருகிருதியும் பாபசமூகங்களுமே திரண்டோருருவாய் வந்ததொத்த அடியனொருவன், அவ்வூர் ஜனங்கள் இருந்தவளவும் பொதியின்மீது உட்கார்ந்துகொண்டு எல்லாரும் போய்விடுமளவுங்காத்து, ஒருவருமில்லாமல் துக்காராம் ஸ்வாமிகள் தனித்திருக்கும் சமயத்தில் அவர்திருவடியில் தீர்க்கமாய் தண்டம் சமர்ப்பித்தெழுந்து, கைகளைகூப்பி நின்று, ஸ்வாமீ! அடியேன் பெருத்தகுடும்பி, ஆசாரியாநுஷ்டாந ஸம்பந்நன், மெத்தவும் பாண்டுரங்கன் திறத்தில் பக்திபுடையவன், சதா சஜ்ஜந சகவாச முள்ளவன், தேவரைப்போன்ற பெரியோர்களல்லாமல் பிறரைத் தொழாதவன், இத்தகைய அடியேனுக்கு ஓர்மாதம் உதவும் இம்மிளகாய், ஆதலால் என்னை யாண்டவா!

என்பேரில் ஆதரமிகுத்து இந்தப்பொதியை யநுக்கிரகித்தருளுவீராகில், தேவரீரிடம் இப்போது கடனுக்கு மிளகாய் வாங்கினவர்கள் தந்தம்பாக்கிகளைக் கொடாமுன்னமே இதின்கிரயத்தைத் தேவருக்குச் செலுத்திவிடுவேன், என்று கபடயெத்துக்களால் வேண்ட, ஸ்வாமிகளும் அவனெத்துலைக் காணாமல் அவனது வஞ்சநா மொழிகளுக்கிரங்கி, கொண்டுபோகக் கடவீரென்று பிரஸாதித்த மாத்திரையானே அக்கிராத காதகத்தடியன் பளுவுக்கும் அஞ்சாது முதுகின்மீது கோணியுடன் தூக்கிக்கொண்டமைக்கு ஸ்வாமிகள், ஐயா! மிளகாயைக்கொண்டுபோம் பையை நிறுத்தி விடுமென்ன, அவனும், ஸ்வாமிகளே! மிளகாய் கொட்டி வைக்கவனமில்லையாகையால் இப்பொதிப்பையையுங் கொண்டனன்; மிளகாயின் கிரயம் வரும்போது இக்கோணியின் கிரயமும் வரும் என்று சொல்லிக்கொண்டேபோய் விட்டான். துக்காராம் ஸ்வாமியும், நாம் வந்த வர்த்தகக்காரியம் ஸபலமாயிற்று, சீக்கரமே விற்கலானோம் என்றெண்ணி ஆநந்தமெய்தினவராய், விட்டலநாம பாராயணஞ்செய்து அந்நாட்டிலே தானே வசித்துவந்தார்.

இந்தத்துக்காராம் ஸ்வாமிகளுக்கு இவ்வுலகவாழ்வானது எவ்வகையாகத் தோன்றிநின்றதென்றால்;—சிறு குழவிகள் தெருப்புழுதியைக்கொண்டு சிற்றில் இழைத்தாலும், அச்சிற்றில்லில் தட்டுமுட்டுச்சாமான்களாக அப்புழுதியினாலேயே செய்து நிறப்பி, புழுதியில் ஒவ்வொருகுவியல் அவற்றிற்பெய்து, இவை அநந்தம் பதார்த்த முதலியவையென்று ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருபெயரிட்டு, அவற்றைத்தாங்கள் உண்ணுதல்போல் அபிநயித்து நாக்கைத் தட்டிமகிழ்தலும், ஒருவர்க்கொருவர் மணமுடிப்பதுபோலே சிறு சடங்குகள் செய்துகொண்டாடுதலும், விவாகமுதலான சமயங்களில் ஒருவரோடு ஒருவர் பிணக்குற்றுக் கொள்ளும் பாவநையைக்காட்டி மறுபடியும் பிணக்கு நீங்கிச் சமாதானப்பட்டு நல்விருந்து அருந்துதல்போலும் இந்திரஜால வித்தை போலுமா மித்தனை. இவரைப் பிரகிருதி சம்பந்தமான மாயாவஸ்தைகளில் ஓர்சற்றும் பற்றினதன்று. இவர் ஸதோதயமான பிரமநிஷ்டை கைவந்து ஆத்துமேசுவரனும் அந்தரியாமியை யல்லும் பகலும் இடைவிடாது சாக்ஷாத்கரித்துவரும் சத்புருஷராயிருந்தார்; ஆதற்கொண்டேயாக்கும் மிளகாய் கடனுக்குப் பெற்றோர் எல்லாரும், இவருடைய வுள்ளத்திற்குப் பண்டரிநாதனாகவே தோன்றியிருந்தது. எத்பாவம் தத்பவதி என்னலும், பாத்திரத்தில் இருப்பதே அழப்பைக்கு வருவதென்னலும் போலும். இவர் பரமாத்துமசொரூபத்தோடொக்க ஆத்மசொரூபமும்பிரபஞ்சசொரூ

பமும் உள்ளபடி விசதமாகத் தரிசித்துள்ளவ ராகையாலே, ஆத்மாவுக்குவாய்த்துள்ளநிஜரூபத்தின்படிஆத்மாவைப்பரமெனக்கொண்டு ஈசுவர அடிமையாக்கி, சரீரத்தை மாத்திரம் உலக வியாபாரங்களிற் பற்றுடையவரென்றே கண்டோர் எண்ணங் கொள்ள நடத்துவிப்பவராயிருந்தார் துக்காராம் சுவாமிகள். இவர் கருவிலே திருவுடையவராதலால் ஸ்ரீருக்மணீரமணர்கள் தத்துக்கொண்டார்கொலோ! தாமேபெற்றோர்கொலோ! என்ற அதிசயிக்கத்தக்க புத்திரவாஞ்சையுற்று அவர்கட்கே யற்றுத் தீர்ந்த அடிமையு மாயினது. இவ்வதிசய சம்பந்தங்கள் ஆத்மாக்களுக்கும், பரமாத்துமாவுக்கும் உள்ளனவாகையால், அவ்வுள்ளச் சம்பந்தங்களை நினைந்து ஆத்துமாவுக்குதன்னடையே யுண்டாயிருக்கும் ஞாநியர்க்கரசாகி விளங்கும் துக்காராம் சுவாமிகள், கோகனநாட்டில் இரவும் பகலும் ஓய்வின்றிபஜித்து வருவதற்கு இரங்கிய பகவான், அந்நாட்டுக்கு எழுந்தருளி, வாகுவலயம், தோமரம், ஈட்டி, எறிவாள், பிசுவா, கத்தி, வளையம் முதலானவைகளை யிடையிற் சுற்றிலும் கட்டிக்கொண்டு, கச்சிறுக்கி, கோர மீசைமுறுக்கி, கண்கள் வெண்டையங்கள்போற் சுழலத்தக்க ஆடைகளையுடுத்தி, துக்காராம் சேட்டினுடைய சேவகன் நானென்று தமோகுணப்பிரியர்போல்படபடப்புடன் வீதியாரநடந்து, ஒருவீட்டில் நுழைந்து, அம்மா! இவ்வீட்டிலிருக்கும் புண்ணியவதியார்? என்னுடை யெஜமான் துக்காராம் சேட்டினிடங் கடனுக்கு மிளகாய்ப் பெற்றனையல்லவா? அதின்பாக்கி கொண்டுவா? என்று கேட்கலும், அதற்குஅப்பெண்பிள்ளை, நீ யார்? அவன்பேரென்ன? எந்தவூர் உன்னை முன்பின் பார்த்தவரார்? மிளகாயைநிறுத்து எனக்குக்கொடுத்தவனார்? என்பேரென்ன? எவ்வளவு மிளகா யான் வாங்கினேன்? எவ்வளவுபணம் நான் பாக்கி? இவற்றை யெல்லாம் விளங்க வுரைப்பாயென்று கேட்கத் தலைப்பட்டாள். அதற்கு அந்தத் துக்காராமருடையசேவகன், நான் துக்காசேட்டினுடைய குமஸ்தா; என்பெயர் விடோபா என்பார்கள்; உன்னுடைய கணக்கு இதோவிருக்கிறது; உன்பெயரின்னது; நீ கடன்வாங்கின மிளகா யிவ்வளவு; அதற்குக் கிரயமிது; இதனை யிப்போது நீ கொடுக்கவேண்டும் நாங்கள் சீக்கிரமாகப்போகவேண்டியவர்களாக யிருக்கின்றோம்; சீக்கிரமே கொண்டுவாவென்று சாங்கோபாங்கமாகச் சொல்லிமுடிக்க; அப்பெண்கொடியும், இப்போது என்னிடமில்லை; இந்தத் தேதியில் கொடுப்போமென்கிற வாக்குறுதி யப்போது ஏற்படவில்லை; ஆகையால் இன்னுஞ் சிலநாள் கழித்துக் கொடுப்போம் என்றார். அதற்கு ஜகந்நாதனுஞ் சேவகன், உள்ளூராரிடத்தில் கடன்வாங்கி யிருப்பீர்களாகில் நீங்கள்

காலங்கழிக்கலாம்; இன்று தவறின் நாளைக்காவது அவர்கள் பெற்றுக் கொள்ளலாம்; நாங்களோ அசலூரார் அதிலுந் தொலைதூரத்தார்; எங்களிடத்தில்கடன்வாங்கினுல்சூரியன் அஸ்தமிப்பதற்குள்ளாகவே கொடுத்துவிடவேண்டுமல்லவா? இப்புத்தியுங்களுக்குத் தெரியாதா? வீண்பேச்சுகள் எதுக்கு? எவ்வகையிலாவது பணத்தைச் சேகரித்துக் கொடுத்து விட்டு மறுகாரியம் பார்க்கவேண்டியதென்று உருட்டிப் பார்த்து கடுமுகமாகச் சொல்லவே; அப்பெண்பிள்ளை, தம்மோடிருந்த வேறு பெண்களைப் பார்த்து, அடியம்மா! இவன்யாரோ தெரியாது; இவனைப் பார்க்கும்போதே வயிறு குழம்புகின்றது; அஷ்ட குலாசலங்களும் நிகராகத் திண்டோளனு யிருக்கின்றுன்; இவனைத் தங்கவைத்திருந்த இவன் தாயின் கருப்ப மெப்படித்தாங்கியிருந்ததோ அறியோம்; இவ்விடத்தில் ரூப லாவண்ணியங்களால் விஞ்சிய நாமெல்லோரும் இங்கிருக்கும்போழ்து கிஞ்சித்தும் நம்மைக்கணித்து அஞ்சுதலடையாமற்படிக்குத் தன் எஜமானனுடைய துட்டின் மேலேயே லக்ஷியம் வைத்திருக்கின்றுன்; ஒருகோடி சேவகர்கள் இருப்பதில் காட்டிலும் இவனொருவனே யிருந்தால் போதும்; நான் இவனை யென்நேசன் போலையும், கணவன் போலேயும், பிதாவைப் போலேயும், அன்னையைப் போலேயும், சோதரன் போலேயும், மற்றும் எவர்களைப்போலேயு மெல்லாம் நினைக்கின்றேனே அவ்வவர்களைப்போலே ரூபமுடையவனுகை விளங்குகின்றுன். இது என்ன வியப்பு? மண்டல புருஷனே யாகவேணும், இல்லையாயின் இவ்வளவு அதிசயங்கள் இவனில் எவ்வாறுவிளங்கும்? என்று சொல்ல; அக்கூடவிருந்த பெண்களும், ஆமாடியக்கா! எங்கள் கண்களுக்கும் அப்படியே தோன்றப் படுகின்றுன்! எங்கள் மனங்களையெல்லாங் கொள்ளைகொண்டவனு யிருக்கின்றுன்; இவனைத் துக்காசேட் எங்கே கண்டுபிடித்தாரோ தெரியாது; என்று ஆச்சரியங்கொண்டவர்களா யவ்வதிசயம் ஊர் முழுதிலுந் தெரிந்து, யாரார் எத்தனை யெத்தனை மிளகாய் கடன்பட்டு வாங்கினுர்களோ அத்தனை யத்தனை விகித பாக்கியும் ஏககாலத்தில் எல்லாருங்கொண்டுவந்து அவ் வாள்வீரச் சேவகனிடங்கொடுத்து விட்டார்கள்; ஒரு மாசளவேனும் பாக்கிவைத்திருந்தவர்களே கிடையாது. ஆண்பிள்ளைகளுட் சிலர் மாத்திரம், இவன் இந்நாட்டு மநுஷியனல்லன்; குறிஞ்சி நிலத்தான்போல் காணுகிறது; வெகு குரூரனுய்க் காணுகிருன்; இத்தகைஞனைத் துக்காசேட் தமக்காளாக வைத்துக்கொள்ளமாட்டார்; அவரோ சுத்த சத்துவகுணமூர்த்தி; எந்நேரமும் பாண்டுரங்கா - பாண்டுரங்கா! என்றிருக்கின்றவர்; நாமெல்லாம் எளியவ

ரென்றெண்ணி நமக்கு மிளகாய் வேண்டுமான வரையிலீந்தார். அவ ரீந்தது உபகாரத்துக்கேயன்றித் தாம் நம்மிடத்திலிருந்து பணம் பெறவன்று; பணத்துக்காக நமக்கீந்திருப்பாராயின் நமக்கு வேண்டியவளவு கேட்டு நிறுத்துக்கொடாரோ? கொடுத்த மிளகாய்களுக்கு அவ்வவர்கள் பெயர்களைக்கேட்டுக் கணக்கெழுதி வைக்கமாட்டாரா? இவற்றையெல்லாம் யோசிக்கும்போது இந்தச்சேவகன் யாரோவழிப் போக்கன்; துக்காசேட்டானவர் நமக்கெல்லாம் மிளகாய்க் கொடுத்துக் கொண்டிருக்கும்போது பதுங்கியிருந்து பார்த்திருக்கவேணும்; இப்போது நம்மை யெல்லாம் ஏமாற்றிப் பணம்பறிக்க எண்ணங் கொண்டு இவ்வேஷந்தரித்து வந்திருக்கின்றான்; இவனை நன்றாயாராய வேணும் என்று ஒருவரோடொருவர் கலந்து பேசிக்கொண்டவர்களாய், அந்தச் சேவகனைப்பார்த்து, தங்கள் தங்கள் அநுமானங்களை யெல்லாஞ் சொன்னார்கள்; அதற்கு அச்சருவலோக சுந்தரனுகும் ஜனார்த்தனன் அவர்களைப்பார்த்து, ஐயமாரே! என்னுடைய யெஜமான் பெயர் 'துக்கா' என்று அழைக்கப்படுமதற்குக் காரணந்தெரியுமா? உங்களுக்கு; இவர் யாதொரு வஸ்துவையுந் தங்கைகளால் நிறுத்துக் கொடுக்காதவர்; யாரேனும் சரக்கு வேண்டுமென்று கேட்பாரேயாகில் அவர்களை நோக்கி, உங்கள் இஷ்டத்தின்படியேகொண்டு போகக் கடவீரென்று உத்தரவளிப்பவர்; ஆகையால்தான் இவருக்குத் 'துக்காசேட்' என்னும் பெயர் வாய்த்துளது; இவருடைய ஏழுதலைமுறையோர் எல்லாருக்கும் என்னுடைய ஏழுதலைமுறையோரெல்லாரும் அடிமைகளாகவே யிருக்கின்றார்கள்; அவர்களோடு நானுமோரடிமை யிவருக்கு; நானோ என்எஜமானுடைய குறிப்பறிந்து நடந்துகொள்ளத்தக்க சேவகன்; உங்களுக்கெல்லாம் மிளகாய் கடன் கொடுத்துவிட்டு, அந்தச் சங்கதி யெனக்குத் தெரிவித்தார்; நானும் என்னுடைய சேவக முறையின்படி இதோ பாக்கிபணத்தை வசூல்பண்ணிக்கொண்டு வருகின்றேன்; இதோ என்னுடையசேட் யாராருக்குக்கடன் அளித்திருக்கின்றாரோ அவர்களுடைய கடனெல்லாம் இப்புஸ்தகத்திற் பதியப்பட்டிருக்கின்றன; ஆகையால் உங்களுங்கள் பாக்கிகளை தாமதப்படுத்தாமல் கொண்டுவந்து செலுத்திவிடுங்கள்; எங்களுக்கு இருட்டாகிறது; நாங்கள் துலைதூரத்துக்குப் போகவேண்டியவர்கள் என்று நிர்ப்பந்தித்தான். இவனுடைய பேச்சுகளின் இனிமையையும், எத்துகளையும், சபாரஞ்ஜநத்தையுங் கேட்ட அன்னோர், இவன்மிகு சதுரன்; ரஞ்ஜநமாய்ப் பேசுகின்றான்; புத்தியும் உயர்ந்ததாகத்தான் காணுசிறது; ரூபத்தைப்பார்த்தால் மாத்திரம் கோரதரமா யிராநின்றது; இவன் நம்மூர் அரசனிடம்

போவானேயாகில் இவனுக்கு அரசன் தளவாய்ப்பட்டங்கொடுத்து, நல்ல நல்ல நாடுகளையும் அளிப்பான்; இவன் தன் ஏழுதலைமுறையாகத் துக்காசேட்டுக்கு அடிமையென்று சொன்னலல்லவா; அந்த அபிமாநம் விடுவானெனல்மாத்திரந் தோன்றவில்லை; எப்போது அடிமைத் தொழிலை விசுவாசத்தால்விடாமலிருக்கின்றானோ அப்போதே எவ்வளவு பெரிய ஹோதாவிலிருக்க வைத்தாலும் இருக்க இயலான்; ஆயினும் நாமென்ன செய்ய வல்லோம்? இவனுக்குச் சேரவேண்டிய பாக்கியைமாத்திரந் தடை படாமல் கொடுத்துவிட வேண்டுமென்று எண்ணி அவர்களுங் கொடுவந்து கொடுத்து விட்டார்கள். அநந்தரம் இச்சேவகன், பண்டு காத்திருந்து ஒருபொதி மிளகாயைக் கோணியும் மீதியாக்காமல் தூக்கிக்கொண்டுபோன காதகனுடைய வீட்டில் நுழைந்து, அய்யா! நான் துக்காசேட்டினுடைய சேவகன், நீ யொருபொதி மிளகாய்க் கடன் வாங்கினையே யென்னெஜமானிடத்திலிருந்து, அதின்கிரயமும், கோணியின் விலையுஞ் சீக்கிரமாகக் கொண்டுவா! நாங்கள் கடுகப்போகவேண்டும்! என்று கேட்டான்; அதற்கு அப்படுபாவி,இரக்கமில்லாதவனும்,பழியஞ்சாதவனுமாகையால், மீசை துடிதுடிக்க கண் நெருப்புப்பொறி பறக்க, தடிமனாயிருந்த தேகம் படபடவென்று அதிர்ச்சிகொள்ள, நீயாரடா இங்கு வந்து கடன்பணங் கேட்கிறாய்? உன்முகங் கண்டவனெவன்? உன்னிடங் கடன்வாங்கினவன் எவன்? எங்கேயோ தூங்கிக்கொண்டிருந்து இப்போது வசூல்பண்ண வந்தனையோ? நான் மிளகாய் வாங்கிக் கொண்டு வரும்போது உன்னை நான் அங்குகண்டதே கிடையாது; அந்தத் துக்காராமருக்கும் எனக்கும் பாலிய சிநேகம்; நாங்களிருவரும் ஓராசாரியனிடம் உபதேசம் பெற்றோம்; எங்களிருவரில் நான் முன் சிறந்தவன்; அந்தவிசேஷத்தாலும் சிநேகத்தாலும் எனக்கவர் விசேஷமா யாதரித்து ஒருபொதி மிளகாயைத் தந்தருளினார்; நீ யெங்கேயோ அநாமதேயனா யிருந்துவிட்டு இப்போது பணங்கொடு என்று கேட்கின்றனை; உனக்கு நான் கொடுக்கமாட்டேன்; நான்கடனாக வாங்காமல் அவரே மனங்கொண்டு கொடுத்ததற்குப் பணம் எவ்வகை யளிக்கக்கூடும்? வா அவரிடம்போய்க் கேட்போமென்று சரேலெனப் புறப்பட்டான்; அதற்கு அம்மடயனை நோக்கி அருண்மிகு சோதி வானத்தீசனும் சேவகன், ஹே - மூர்க்கா! உன் பின்னாலே வர நானுன் சேவகனல்லன்; நான் துக்கா சேட்டுக்கேயடிமை; நீ யழைக்கும் இடங்களுக்கு ஒருபோழ்தும் வரமாட்டேன்; முன்னதாக வுன் பாக்கித்தொகையைச் செலுத்திவிட்டு பிறகு எங்கேயாவது போய் முறையிட்டுக்கொள்ளு; அதுவரையிலும் உன்னைப்

போகவொட்டேன்; இவ் வாயலையுங் கடக்கவும் விடேன்; உன்மடி யிற் கையைப் போட்டுக்கொண்டு வீதிக் கிழுத்து, கண்டாரெல்லாங் காறி யுமிழும்படிச் செய்வேன்; உன் துஷ்டத்தனம் இங்கே செல்லாது; வீணே யேன் அவமானப் படுகின்றாய்? சீக்கிரமாய்ப் பணத்தைக்கொண்டுவந்து செலுத்திவிடு என்று, மார்நெளிய, மீசைதுடிக்க, கண்பொரிபறக்க அதட்டினான்; அந்தத் தடியன் சற்றும் அவ்வுரைகளுக்கும் முருட்டுகளுக்கும்அஞ் சாமலும் அச்சங்கொள்ளாமலும் அச்சேவகனைப்பார்த்து, அடேபோடாபோ! உன்னைப்போல் ஆயிரம் பதினாயிரம் சிப்பாய்களைக் கண்டிருக்கிறேன்; நான் கண்ட சிப்பாய்களில் நீ எவ்வளவு? நீ யொரு கொதுகுபோன்றவன்; எமனிடஞ் சிக்கிய ஜீவன் மீண்டாலும் என்னிடஞ் சிக்கியபண்டம் மீளாதடா! இன்றளவும் என்கையிற்பட்டபொருள் பிறர்கையிற்போனதே கிடையாது; உனக்கஞ்சிக் கொடுத்து விடுவேனோ? உன்னாலான சாமர்த்தியங்கள் எல்லாம்பார்! எப்படியென்னிடத்திலிருந்துபணம் பெறுவாயோ சற்றறிகின்றேன்! என்றனன். அதற்குச் சேவகனும் செய்ய தாமரைத் தாளினன், வீதிக்குவந்து, ஜனங்களைக் கூட்டி, என்னெஜமான் துக்கா சேட்டினுடைய பொருள்களைக் கொடுக்கமாட்டேனென்று வம்புகள் ஆடுகின்றான் இம்மதிகேடன்; இவ்வூரில் என் சேட்டினிடங் கடன்பெற்றோர் எல்லாருங் கூவாமல் கேட்டமாத்திரையானே கொடுத்து விட்டார்கள்; இந்தத் தூர்மார்க்கன் மாத்திரம் வல்லடி வழக்காடுகின்றான்? தோரு வழக்கனா யிருக்கின்றான்; இவனுடைய வீட்டுவாசலில் கழுத்துக்குக் கயிறுபோட்டு இழுத்துக் கொள்ளுகிறேன்; நீங்கள் இவற்றையெல்லாம் அறிந்திருங்கோள் என்று கூக்குரலிட்டு, அந்த லுத்தனுடைய வாசற்கூரையில் ஓர் கயிறு தொங்கக்கட்டி தன்கழுத்தில் மாட்டிக்கொண்டான்; அதைக் கண்டும் அந்தக் கசடன் சிறிதும் மனமிளகாமல், இரும்புபோல் வலிய நெஞ்சத்தவனா யிருக்கக்கண்டு அவ்வூர்ஜனங்கள், அடா பஞ்சமாபாதகா! வாங்கினகடனைக் கொடாதகாரணத்தால் ஓர் பிராணன் வீணில் மாயப் போகிறதே! அடாதூர்த்தா! கொடுத்துவிடு! என்று நானாவிதபழிகள் சொல்லியுங்கேளாமல் அவனிருக்கக்கண்டு, சேவகன், அடடா பாதகப்பதரே! உன்னை ராஜதண்டனைக்கு உள்ளாக்கி உன்வீடு வாசல் மனை மக்கள் சொத்து முதலானவை தீக்கொளுவிவேகச்செய்கிறேன்; சற்றுநேரம் பார்த்துக்கொண்டிரு வென்று சொல்லி, தன் கழுத்திற்பூட்டியிருந்த கயற்றின் முடியைக்கொஞ்சம் பிகுபடச்செய்து, கண்விழிகள் வெளியிற் பிதுங்கவைத்து, மடிபவன் போல்பகட்டிக்காட்ட, அதற்கங்குள்ளவூராரெல்லாம்அஞ்சி, கொடும்

பாதகா! ஒருபிராணி யிப்படியாகும்படிச் செய்தனையே! அரசன் கண்டு உன்னைச் சும்மா விடப்போகின்றானா? உன்னையும் இவ்வாறே தூக்கிவிட்டு, உன் வீடு வாசலை யெல்லாந் தீயிலிட்டுக் கொளுத்துவானே! என்று கூக்குரல் இட்டுக்கொண்டிருக்க, அப்போது அந்தப்பயன், அச்சமும் நடுக்கமும் கொண்டவனாய், அந்தச்சேவகன் கழுத்தில் இறுக்கியிருந்த முடி மற்றுமிறுகாமல் தாங்கிப் பிடித்துக்கொண்டு, என்னிடம் இப்போது பணமில்லை; உன் சேட்டுக்கொடுத்த மிளகாய்ப்பொதியைக் கொண்டுபோம்! என்று சொல்ல, நான் மிளகாயை மறுபடியுந் தீண்டேன்; பணமேயெனக்கு கொடுக்க வேண்டியதென்று தொங்கிக்கொண்டிருந்த சேவகன் சொல்ல, அதற்கு அங்கிருந்தவர்கள் எல்லாரும், அவன் கொடாகண்டனாயிருக்கின்றான்; இவனும் விடாகண்டனாயிருக்கின்றான்; நாமாவது அந்தப் பொதி மிளகாயைப் பங்கிட்டுக்கொண்டு அதற்குச் சேரவேண்டிய பணத்தைச் செலுத்திவிடுவோம்! என்று ஒருவரோடொருவர் பேசித் தீர்மானித்துக்கொண்டு, சேவகன் கழுத்திலிருந்த கயிற்றின் முடியை யவிழ்த்துவிட்டுக் கீழே யுட்காரவைத்து, அந்தத் தூர்மார்க்கனிடம் இருந்த மிளகாய்ப்பொதியை வரவிட்டு, தங்கள் தங்களுக்கு வேண்டியவளவு நிறுத்தெடுத்துக்கொண்டு, அவ்வந்நிறைக்கேற்ற பொருள்களைத் திரட்டி மொத்தம் சேர்த்துச் சேவகனிடங் கொடுத்து விட்டார்கள்.

விடோபா என்னுஞ் சேவகன் அந்தப்பணத்தை யெல்லாங் கோணிப்பையில் முடிந்து தூக்கிக்கொண்டு, துக்காராம் ஸ்வாமிகள் வீற்றிருந்த பீமாநதிக்கரைக்குவந்து, வீரவைணவச்சிரேட்டராகும் தாஸரைக்கண்டு வணங்கி, ஐயா! நீர் இவ்வூரில் மிளகாய் கடன் கொடுத்திருந்தீரே அவர்கள் எல்லாரிலுமிருந்த பணம் வசூல்செய்துகொண்டு தந்திருக்கின்றேன் பெற்றுக்கொள்ளு மென்றுரைத்து, பணப்பையை யவர்முன்னே வைக்க, அவரும் அதிசயமுற்று, அய்யா! நீர் யார்? நான் கடன்கொடுத்திருந்தபணத்தை நீர் வசூல் செய்வானேன்? என்று வினவலும், சேவகன், நான் இவ்வூர் அரசனிடம் சௌதரியாகச் சேவகஞ் செய்பவன்; யாராவது வெளிதேசத்து வர்த்தகர்கள் இங்குவந்து இவ்வூர்குடிகளுக்குக் கடன்கொடுத்திருப்பார்களாகில் அதனைப்பிறர் சொல்லாமுன்னமே நானே வசூல் பண்ணிக் கொடுக்கவேண்டுமென்று ராஜ ஆக்கினை; அதற்கென்றே புரவலன் என்னைநேமித்துவைத்திருக்கின்றான்; ஆதலால், என்கடமைதீர நான் வசூல்பண்ணிக்கொண்டு வந்து கொடுத்தேன் என்ன, அதற்கு ஸ்வாமிகள், ஆம்! நாமென்றும் உம்மிடமாவது உமது அரசனிட

மாவது சொல்லிக்கொள்ளவில்லையே யிவ்வூரில் மிளகாயைக் கடன் கொடுத் திருக்கிறேன் அதனை வசூல்பண்ணித் தரவேண்டுமென்று ; எந்த நியாயத்தை முன்னிட்டு வசூல் பண்ணினீர் ? என்றுகேட்க ; சேவகனாகும் விடோபா அவரைப்பார்த்து, ஐயா! இவ்வூர் செழுப்பில் மிகுந்தது ; குடிகளுக்கு ஒன்றானும் குறைவில்லை ; இப்பேர்ப்பட்ட வூரில் ஏதேனும் மோசங்கள் நடக்குமென்றெண்ணி அரசன் என்னைச் சௌதரியாக நியமித்து, ஒருவனென்னிடம் முறையமிடா முன்னிட்டே நீயுண்மையறிந்து, கடன்பெற்றார் இடத்திலிருந்து பணம் வசூல் பண்ணி கொடுத்தவருக்குச்சேர்ப்பித்து விடவேண்டும்; கடன்பெற்றவன் கொடாமல் மோசம் பண்ணுகிறானென்று யரேனும் இங்கே வந்து முறையமிட்டாலும், நீவசூல்பண்ணித் தரவில்லையென்று நான் கேட்கப்பெற்றாலும் என்னை முதலில் தண்டிப்பேன் என்று கட்டளையிட் டிருக்கின்றானகையால் என்கட்டளைப்படி, நீர் சொல்லிக்கொள்ளா முன்னிட்டே வசூல்செய்து கொண்டுவந்து கொடுத்தேன் இத்தனை என்றான். இதற்கு ஸ்வாமிகள் மிகவும் மகிழ்ந்து, ஐயா ! தளிகை முடிந்தது, நெய்யமுது இங்கு கிடைக்குமோ ? கிடைக்கும் பக்ஷத்தில் ஆறுகாசுக்கு வாங்கிக்கொண்டு வருவீரா? என்று சொல்லிப் பையை யவிழ்த்து ஆறுகாசு எடுத்து அவன் கையிற் கொடுத்தார்; சேவகன் அக்காசுகளைக் கொண்டுபோய், ஒரு செம்பு நிறைந்த நெய்யமுது கொண்டுவந்து தாஸர் கையிற்கொடுக்க, அதனைக்கண்டு, அப்பா! இதேது செம்பு நிறைய இருக்கிறது? நான் அளித்தது ஆறு காசுதானே ! என்று தாஸர்கேட்க, ஆம் ! இவ்வூர் மிகு செழித்ததென்று முன்னமே சொன்னேன் ; நெய்யுற்பத்தியும் இங்கு மிகுதியாகையால் இவ்வளவும் ஆறுகாசுக்குக் கிடைக்கப்பெற்றது என்றான். தாஸர் மிகுசந்தோஷமுற்று, நன்மையோர் சற்றுமில்லா என்திறத்து இவ்வளவு உபகாரியான நீரிப்போது என்னோடுகூடவிருந்து பிரஸாதம் ஸ்வீகரிக்கவேண்டும் ; தடையொன்றுஞ் சொல்லலாகாது ; காலமும் அதிகமாயிற்று ; போஜனவேளை யுமக்குந் தவிர்ந்துவிட்டது வாரும் பொசிப்போமென்று வேண்ட; அதற்குப் பாரிடந்து பாரையுண்டுபாருமிழ்ந்துபாரளந்துபாரையாண்ட பாராளனாகும் விடோபா இசைந்து கால்கரம் சோதித்துக் கொண்டுவந்து துக்காராம் ஸ்வாமிகளோடு பொசிக்க உட்கார்ந்துக் கொள்ளலும், இவற்றையெல்லாம் அத்தீரத்திற் கோயில் கொண்டிருந்த செஞ்சடை வேணியனாகுஞ் சிவபெருமான் கண்டிருந்து இப்பாகவத கிரேஷ்டருடை அன்னம் எவ்வளவு திவ்விய தரமானதோ ! அந்தப் போக்கியவுணவை நாமும் அருந்துவோமென்று சிந்தித்து லிங்கரூபத்திலிருந்து ஜடாமகுட

தாரியாய், துல்லிய விபூதி சாத்தினவராய், தவவேடம் பூண்டு தாஸ ரிடம்வந்து நானுமொரு அதிதி, எனக்கும் உங்கள் அன்னங் கிடைக் கப் பெறுமோ என்றிரக்க, அதற்கு அந்த தாஸர் மனமுருகி, ஐயா! வாரும் மூன்றுபேரும் சாப்பிடுவோம் என்றழைத்து கூடவுட் காரவைத்துக்கொண்டு மூவருமாய் அவ்வன்னத்தை யுண்டார்கள். உண்டுமுடிந்த பின்னர் தாம்பூலத்திற்கு மாருக தாஸர் திருத்துழா யீந்து உபசரித்தார். அதிதிவேடம்பூண்டுவந்த அருட்பெருஞ்சோதி யான் துளபத்தைப்பெற்றுக்கொண்டு, துக்காராமரைநோக்கிநித்திய பிரமானந்தனு யிருப்பாயென்று பல்லாசிகள்கூறி மறைந்தனர். அவ ருக்குப் பின்னுகைவே சவுதரிவேஷம் பூண்டுவந்த விடோபாவும் மறைந்தனர்.

அநந்தரம் அவ்வூர்வாசிகள் ஆற்றங்கரைக்கருகில்போகவா இருந் தவர்களிற் சிலர் ஆவா ! இந்தத் துக்காராம்சேட் மேலுக்கு வெகு நல்லவராகக் காணப்படுகிருரேயன்றி வெகு குரூரர் ; தம்மிடமொரு கொடிய சேவகனை மறைவாக வைத்துக்கொண்டு தம்மிடங் கடன் பெற்ற ஏழைகளையெல்லாம் மிகுதியும் இமிசித்துவிட்டார். இவர் கொக்கைப் போன்றவரென்று வார்த்தையாடுவதைக் கேட்ட தாஸர் மனங்கலங்கி ஏதுக்கு இப்படியெல்லாஞ் ஜனங்கள் உரைப்பானேன் என்று விசாரிக்கப்புக, சேவகனெருவன் வந்து இமிசித்துப் பணம் பெற்றமையும், அவனிந்த நாட்டானல்லனென்றும், அவன் ரூபமும் கேட்டு•இதுபரமேசுரனுடைய பாண்டுரங்கனது காரியமேயாகவேண்டு மென்று துணிந்து ஆச்சரியங்கொண்டு, லோகபிரானுடைய மாயா விலாசங்களை யுணர யாவருக்கும் அரிதாகுமென்று உன்னித் துதித் துக்கொண்டு நிற்பவராயினர்.

ஸ்ரீயஃபதி ! ஸர்வ லோகநாயகா ! ஆரணங் கிளத்தும் ஈறிலீ ! அண்டகோடிகளெல்லாம் அமர்ந்த மணிவயிறு! அன்னம் பரிமுதலாம் அருமைவடிவெடுத்து அயனுக்கு ஆரணமருளிய அழகா ! புகரிலீ ! புங்கவர் யாவருக்கும் புல்லாக்காரணு! பூவைப்பூ வண்ணத்து நாரணு! அடிமைக்கொண்டு அடியேனை யாண்டிட்டானே ! உலகெலாம் நிறை ந்ததொரு பழம்பொருளே ! ஊழிதோ றாழியானே ! ஒப்புயர்வில் லானே ! உயர்வற வுயர்நல முடையானே ! வெடிபடுகொடிய விடைய புன் பேயாய், வீய்தகு பேராசையுட்கொண்டு அடிமையிற் குடிமை பூண்டு, அழுங்குதம் உதாவழல் தணிப்பான் எனைமயக்குந் துடி யுடைக் காதலர் ஆசைவாய்ப்பட்டு; "பீளைசேர் நயநம் பிறங்குவேலெ னவும் - பிணங்கு பல் என்பு முத்தெனவும் - ஈளை சோர்வாம் நீர் இன்னமுதெனவும் - எழுதசை முலை மலையெனவும்-ஊளைநாறுடலம்

உயர்கரும்பெனவும்" உகந்து உகந்து, அழல்படு மெழுகதுபோல் உருகி யுருகி யிளைத்து, அலமருமென்னை நீயலால் யாரே குறைய றிந்து அணைகிற்பார்? ஆயிரம் பணமுடி யரவுபாயலாய்! பாற்கடல் நடுவுள்ள பள்ளிமேல் அறிதுயிற் பரமா! பச்சைமேனியனே! கன்று தன் அன்னையைக் காணுமாறு உள்ளங் கசிந்துறல்போல் என் கருத் தும் உன்தமரடிமேற் கசிந்து அவர் சீர்த்தி புனுற்றுவான் ஆவல்மிக் குளதால், இருவகைப் பற்றற் றிலங்கும் மெஞ்ஞாநம் எய்தினர் எய் தரு விமலனுகும் அருள்வளர் துக்காராமர் வண்புகழை வன்மை யேன் அறைந்திடற்கு அருட்கண்பாராய் என்னை யாண்டருள் சோதியானே!

நான்காமத்தியாய முற்றும்.

ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீ பாண்டுரங்கபரப்ரஹ்மணேநம:.

ஸ்ரீமத்

துக்காராம் சுவாமிகள் சரித்திரம்.

ஐந்தாமத்தியாயம்.

காப்பு.

எழுசீராசிரியவிருத்தம்.

ஏகநா யகனை யிமையவர்க் கரசை
　யென்னுளங் கோயில்கொண் டானைப்
போகநா யகனைப் புயனிறத் தவனைப்
　பொன்னன தாகமீர்ந் தானை
மேகநா யகன்றன் விழுமிய சாபம்
　வீழ்தர மேவினான் றன்னை
யோகநா யகனை யிதயத் திருத்தி
　யூகித்தல் செய்துவாழ் குதுமே.

ஸ்தோத்திரங்கள்.

ஜயஜய சாநகீரமணா! ஜகதுதரதாரணா! பண்டு நீ கஜேந்திரனைக் காத்திடுமதனால் உன்னை யொப்பறு தனிமுதல்வனெனக் கண்டனன்; கண்டாகன்னற்கு அருள்செய்திடலால் யதிதபாவநனெனக் கண்டனன்; கனகன் பெற்றிடு மதலையின் கடுதுயர் கடிந்ததனால் பூரணன் நீயெனல் கண்டனன்; ஆயினும் என்மநக்கோள் துறக்கும் உபாய

பிரும்ணாபோஜநம்.

13919

மாத்திரங் காண்கிற்பவனல்லேன்; ஹே - கபடநாடகசூத்திரனே! நசித்திடுவிஷயங் கிடைத்திடில் மகிழ்வும், அது நழுவிடில் அழுகையுஞ் சோர்வும், முசித்திட வொருவர் பழித்திடில் சினமும், புகழ்மொழிந்திடில் இறுமாப்பும் பெற்று, பசித்தார்க்கு என்றேனும் இனிதாகவும் உரைத்தறியாமல், நாலுவித நரகமேபுகும் பாவியாய்த் திகழும் நாயேற்கு உன்னலாற் குறைகளைகிற்பாரார்? எந்தையே! நீ மகிழின் உலகெலாமகிழும்! நீ விடின் பிறிதோர் புகலிடம் பெற்றிலேனுவேன்! புருஷோத்தமா! புண்டரீகாக்ஷா! அருண்மறை முடியே! அடியேனதாவியே! அறிவே! ஆதியே! அமுதே! அமலருள் நிறைவே! ஆதியு நடுவு முடிவுமில்லாத சோதியே! சுடரே! சுகவாரிதியே! சூழொளிவிளக்கே! சுயம்புவே! உன்னடியவரென்று உகந்தேனல்லால் ஒருநாளும் இறைஞ்சினேனல்லேன்; பொன்னடியிரண்டால் மூவுலகளந்த பொலிவுறு பெருமானே! பொல்லா வினையினேன் புன்மைகள் எத்தனையென்று எண்ணிட்டு உரைப்பேன்? தினையளவும் நன்மை கண்டில்லாத் தீயனேற்கும் உன்னடியாரில் தலையாம் ஸ்ரீமத் துக்காரம் ஸ்வாமிகளுடைய நற்சரிதம் உணர்வித்து, அப்புகலரும் பெற்றியாரது புகழ்களைப் புகல அருளாய்! பொன்பூத்தகஞ்சம் பொலிதரு வுந்தியானே! என்று ஸ்துதித்து, சரிதஞ் சொல்லத் தொடங்கினார்.

பரப்பிரம மூர்த்தியாகும் பரந்தாமன், தனது பக்தருக்காகப் பணி செய்வோன் கோலங்கொண்டு, ஸ்ரீமத் துக்காரம் ஸ்வாமிகள் கோகன நாட்டில் மிளகாய் கடன் கொடுத்திருக்க, அவைகளின் கிரயங்களை வசூல்பண்ணித்தர அங்கெழுந்தருளி, பக்தபாமரர்கள் பக்கல் படாதனவெல்லாம் பட்டுப் பணத்தைத் தண்டிக்கொடுத்ததுந் தவிர அவரளித்த அமுதுமுண்டு களித்து மாயமாயினரே சிவ பிரானோடு; அவ்வருமைச் செயலுக்குக் கரைந்து, கைகளை யுயரக்கூப்பி,

எழுசீராசிரியவிருத்தம்.

மூவுல கெங்கு மிடர்செய் யரக்கர்
முடிபொடி படச்சிலை குனித்திட்
டோவென வலறு முனிவர்சீ ரேற்ப
வொப்பறு கடைவிழித் தாண்டாய்
பாவமே பெருக்கிப்பழுத்தவென் மனதைப்
பாழ்மையிற் புகட்டுறு வண்ணங்
காவதற் காப்பல் கபடுகள் செய்யுங்
கண்ணனே கபடநா டகனே.

உண்டியு முடையு முகந்துகந் தோடி
யுழன்றனெ னலாற்பிறி தொன்றும்
கண்டன னல்லேன் சுணங்குபோ லலைந்தேன்
கருவிழி மாதரா ரின்பங்
கண்டுதேன் சினி மாவருக் கையினற்
கனியென வுண்டுளந் தடித்தேன்
அண்டினே னென்னை யாண்டரு ளற்கா
யருஞ்செய லாற்று மென் னுயிரே.

என்பன ஆதியாகத் துதித்தாடியும் பாடியும் அரற்றியும் அழுதுந் தொழுதுந் தேர்ச்சி யடைந்து, அங்கிருந்த மிளகாக் கோணிகளை யொன்றுகச் சேர்த்துக்கட்டி, பணப்பையோடு ஒக்கமாடுகளின் மீது ஏற்றிக்கொண்டு, தம்மூர் நோக்கி வராநிற்கையில், வழியிற் சில சூதர்கள் இவர் பணங்கொண்டு போவதையறிந்து, அவரருகில் வந்து தீர்க்கநமஸ்காரமியற்றி, பக்திமான்கள்போல் நடித்துக்காட்டி, ஸ்வாமிகாள்! தாங்கள் குடும்ப போஷணத்திற்காக மிகவுஞ் சிரமப்படுவதாய்க் காணவருகிறது; தேவர்க்கித்தனை சிரமம் வருவதடாது; ஆயினுங் கருமா நுகுணமாக வருவதற்கு யாவர் எதுசெய்யக்கடவர்? அவ்விஷயத்தில் அடியோங்களாற்செய்ய அடுத்ததொன்றுண்டு; அதனைத் திருவுள்ளம் பற்றியருளவேண்டும்; அதாவது:—அடியோங்களிடத்தில் தங்கக்காப்பு ஒன்றிருக்கிறது; அதனைச் சமர்ப்பிக்கின்றோம்; ஆனல் அதற்காக இங்கு சிலருக்குச் சிலபணங் கொடுக்கவேண்டி யிருக்கிறதால் அதனைத்தாங்கள் பெற்றுக்கொண்டு தங்களிடமிருக்குஞ் சொல்பத் தொகையை மாத்திரங்கொடுத்துவிட்டால் அதனைக்கொண்டுஅப்பாதையைநாங்கள் நிவர்த்திபண்ணிக்கொள்ளுகின்றோம்; தாங்களும் அக்காப்பை விற்று, தங்களுக்குரிய பாதைகளை நிவர்த்தி யாக்கிக்கொண்டு களித்து இன்புறலாம்; அடியோங்களாலான வுபகார மீதளவே! என்று கபடோக்திகள் கூற; ஸ்வாமிகளும் அவர்களைப் பரிஉடையார் என்று எண்ணி, அவர்களே யுகந்தீயப் பிரார்த்திப்பதால் நமக்கொரு பாபமும் அணுகாதென்று எண்ணி, தமது மாட்டின்மீது சுமத்தியிருந்த பணப்பையை யெடுத்து அவர்கள் கையிற் கொடுத்து, அவர்கள் ஈந்ததொரு காப்பினைப் பெற்றுக் கொண்டு,வழிகடந்து மாடுகளை யோட்டிக்கொண்டுவந்து, தமதூர் சேர்ந்து, மாளிகையுள் புகுந்து, சொஸ்தமாய் அன்று இராத்திரி ஈசுவர குணாநுபவத்தாற் காலங்கழித்தனர். மறுநாள் சூரியோதய மானவாறே, இப்பகவத்குண நிஷ்டருக்குக் கடனளித்திருந்த சௌகார்கள், இவரது வரவைக்கேட்டு மாளிகைக்குவந்து, தாஸ

ரைச்சேவித்துநிற்க, அவரும் அவர்களை வெகுவாயாதரித்து உட்கார வைத்து, ஏழையேனை யேழ்மையினின்று அகற்றுவான் ஆதரித்துப் போரும் இஷ்டர்களே ! நான் கோகனநாட்டிற்குக் கொண்டுபோன மிளகா யங்குவிற்று விட்டுப் பணந்தூக்கிக்கொண்டு வருகிறபோழ்து வழியிற்சில வைஷ்ணவோத்தமர்கள் என்னைப் பலவகையாலும் உப சரித்து, என்கஷ்டம் நிவர்த்தியாகும்படி எனது சொல்ப திரவியத் தைப் பெற்றுக்கொண்டு, உயர்ந்த தங்கக்காப்பு ஒன்று அளித்தனர் கள்; அதனைத் தருகிறேன், கொண்டுபோய்விற்று, உங்கள் கடனுக் குச் சேரவேண்டியதனை நீங்கள் ஒவ்வொருவரும் எடுத்துக்கொண்டு மீதியை யளிப்பீர்களாகில் இக்குடும்ப போஷணத்திற்கு உதவும் என்று சொல்லி, அந்தக்காப்பைக் கொண்டுவந்து அவர்கள் கையில் கொடுக்க, அவர்கள் அதனை யுரைகல்லின்மீது உரைத்துப்பார்க்கும் போது பித்தளைக்காப்பா யிருக்கக்கண்டு, யாரோ சூதர்கள் இவரது ஏழ்மையைக்கண்டு ஏமாற்றி விட்டார்கள் ; இவரோ ! சுத்தசாது ; சூதுவாது கபடங்களொன்றும் இவருக்குத்தெரியாது; இதைப்பற்றி நாமினிச் சிந்திப்பதில் பயனில்லை ; இனி இவரை நங்கடனைப்பற்றி யென்னென்று கேட்பது ? இவருடைய மனம் நோகவிடக் கூடாது ; இவர் மநங் கலங்கினுல் நாம் விருத்திபெறமாட்டோம்; இவர் எந்நேர மும் இறைவனீசனையே சிந்திக்கும் மநத்தரா யிருத்தலால் இவரித யத்தை மாற்றவல்லவரார் ? விடோபாவே தீர்த்தாலன்றி முடியாது ; என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு தந்தம் இருப்பிடங் களுக்குப் போய்விட்டார்கள். ஸ்வாமிகளும் இவ்விபரீத விஷயசேஷ் டைகள் ஒன்றையுந் திருவுள்ளத்து உண்ணாதவராய், முன்போலவே மனைவாழ்க்கைக்கு உகந்து நன்கு வாழ்ந்து வருபவராயினர்.

இங்ஙனிருக்க துக்காராம் ஸ்வாமிகளுடைய தேவிமார் இருவ ருங் கலந்து யோசித்தவர்களாய்க்கொண்டு, அவர்களில் மூத்தமனைவி யாராகும் ருக்குமா பாயம்மாள், ஓரால்ஒருநாள் தங்காவலரைநோக்கி, ஸ்வாமின் ! எனக்கு இரைப்புநோய் இயல்பா யிருப்பது தங்களுக்குப் பண்டைநாள்தொட்டுத் தெரிந்தவிஷயமே! இங்கோயோடு நான் பட் டினியாய்ச் சாவது நன்மையோ ! நாங்கள் எப்படி யிந்தப் பஞ்சக் காலத்தில் ஜீவிப்போம் ? எத்தனைநாள் அயலாரிடத்தில் அமுதும் மற்றபண்டங்களுங் கடன்வாங்கி யுண்போம் ? எத்தனைநாள் பிழைத் தாலும் பஞ்சைபிழைப் பாயிற்றே யன்றி நல்குடி வாய்மையல்ல ; ஊரிலும் இனியெங்களை நம்பிக் கடன்கொடுப்பாரேகிடையாது; கால மும் பஞ்சமா யிருக்கிறது; இனியெப்படிப்பிழைப்போம்?வீணில்பட் டினிப்பட்டு மடியுங்காலம் வாய்த்துவிட்டதே! எத்தனைநாள் இப்படி

பட்டினியோடு ஜீவிப்பது ? இவையெல்லாந் தங்களுக்குத் தெரிந்திருந்தும் எங்களை வீணாய் மடியவைப்பது தங்களுக்கழகோ ? நாங்களாவது எதேனும் பேரம்செய்து பிழைக்கலாமென்றால் பேரத்தின் தன்மைகளை முன் பின் தெரியாதே ! என்னசெய்ய வல்லோம் ? என்று ஏங்கித் துக்கிப்பவராய்க்கொண்டு முறையிட்டனர். இளைய மனையாட்டியாராகிய ஆவலிஜீஜீபாயம்மாளும் தன் நாயகரைக்கூவி, ஸ்வாமின் ! எனது அக்கையார் உரைத்தனவெல்லாம் சத்தியமே ! நான் தங்களை மணம்புணர்ந்து இவ்வீட்டிற்கு வந்தபோது இவ்வீடு அஷ்ட லட்சுமிகளால் அலங்கரிக்கப்பட்டது போன்றே அஷ்டலட்சுமீ விலாசம் பெற்றிருந்தது; தநதாநியாதி பாக்கியங்களிற் சற்றுங் குன்றாது பால்பொங்கியதுபோல் பொலிவு பொங்கியிருந்தது ; வரவர நீவிர் தலையெடுக்குந்தோறும் அவ்வஷ்டலட்சுமீ விலாசங்களெல்லாம் அடியோடு அகன்றனவாயின ; லட்சுமிகளுந் துறந்தேகினார்கள் ; மனையிலிருந்த பண்டங்கள் எவ்வழியால் போயிற்றென்று எண்ணவும் முடியாததாயிற்று; இப்போது லட்சுமி குடிபுகுந்திருந்த வீட்டில் அவள்தமக்கை தாக்கணங்கு புகுதலாயிற்று; வீடுந்தரைப்பட்டு வெறு வீடாயிற்று ; என்னுடைத் தாய்தந்தையர் அளித்த ஸ்ரீதநமும் இவ்வழியேயாக்கினீர்; இப்போது இவ்வளவு அந்நத்திற்கேங்கி நிற்கின்றோம் ; நீரோ ! பாண்டுரங்கா பக்தவற்சலா ! பரந்தாமா ! என்று பகலுமிரவும் பாழுக்கு அழுதுகொண் டிருக்கின்றீர் ; நீரழுந்தோரும் நாங்கள் பாழ்மைப்பட்டு ஒழிகின்றோம்! நீர்-பாண்டுரங்கா! பாண்டவர் தூதா! பரஞ்சோதி ! பதுமநாபா ! என்று அழுவதெல்லாம் நாங்கள் பாழாதற்கென்றேயாமித்தனை ; உம்மால் கண்டசுகம் எங்களுக்கு இத்தனையல்லாமல் வேறொருகாட்சியுமில்லை; இங்கு வந்திருந்த வர்த்தகர்கள் உரைத்தவை யறிகிலீரோ ? அவ்வுரை நுமக்கு ஏற்கவில்லையோ ? பண்டரீ ஜநார்த்தநன்றன்னைப் பஜித்தவர்களுடைய பாடெல்லாம் இதுவேயன்றோ ! அவனைப் பஜித்வர்களில் யார்தான் சுகமுற்றார்கள் ? பிள்ளை பிரகலாதன் அவனை நம்பினதாலன்றோ ! அரக்கர் அசுரரால் படாத பாதைளெல்லாம் பட்டுந்தீர்ந்தான்; பாண்டவர்கள் அவனை நம்பினமையாலல்லவோ? தங்கள் வாழ்நாளை வீணாளாக்கிக் காடு வநம் வநாந்திரங்களில் சஞ்சரித்தார்கள் ; இளைய பெருமாளாகும் லட்சுமணமூர்த்தியும் அவனை நம்பியேயாக்கும் ஊரு நாடுந் துறந்து, பதினான்காண்டு உறக்கமும் ஆகாரமுமில்லாமல் காட்டிற் கனரோதநத்தோடு காலங்கடத்தி, கடுந்துஷ்டராமாயாவிகளால் வாதை யேற்றது ! அவர்களைப்போல் நீரும் அவனடிமையாகியன்றோ இத்துயர் அநுபவிப்பது ? இனியேனும் ஈசனை

பஜியாது ஒழிவீராகில் சற்றுச் சுகம்பெறலாம்; அற்றேல் இந்த வோடுங் கிடைக்கப்பெருது ஒழிவோம்; ஒருநாயகமாயோட வுலகினையாண்ட மன்னர்கள் அநந்தம்பேர் அவனை நம்பினவர்களாய்க் கொண்டு தந் தந்நாடுகளிலிருந்து துறத்தப்பட்டு, முடிவில் கருநாய் கவர்ந்த காலராய், சிதைகிய பானையராய், பெருநாடுகாண இம்மையிலே பிச்சைகொண்டமை நாம் கேட்டிலோமோ? அவர்களுக்கே யக்கேடு வாய்த்ததெனில் நமக்கும் கேட்கவேண்டுமோ? அவனைப் பஜித்தவர்களுக்குச் சிதைந்த பானையின் ஓடுதானே ஸித்தம்? நீர் இரவும்பகலும் கூவித்திரிவது யாரைநோக்கியோ, அவன் பொருமை பூத்த பொய்வேஷதாரி; அஷ்டலட்சுமிகளுக்கு நாதன் தானெனமை பற்றி, வேறு யாரிடம் அவ்வஷ்டலட்சுமிகள் குடிபுகுதுகிருர்களோ அவர்களுக்குத் தன்பால் பக்திபுண்டாக்கி, அஷ்டலட்சுமிகள் இவர்கள்பால் குடிபுகுந்ததால் தனக்குவந்த குறைதீர அவர்களிடத்திலிருந்து அந்த லட்சுமிகளை யகற்றுவிப்பது அவனுக்கு இயல்பேயாகும்; இப்பேர்ப்பட்டவனை நீபட்டதோ நான்பட்டதோ என்று கட்டியழுவதால் பயனென்? அன்பரை யாதரிப்பவனுயின் தன்னைப் போல் அகில ஐசுவரியங்களையும் அநுபவிக்கச் செய்யமாட்டானே? ஊரும் நாடுமுகந்து வீட என்பழியேற்கின்முன்? அவனை நினைக்கவென்முல் உலகமே நடுங்குகிறதே! இவையெல்லாம் அறியாதவரல்லரே நீவிர்! எல்லாம் அறிந்திருந்தும் அவனுக்கே யழுதழுது நஷ்டமும் கஷ்டமும் அடைய விதியோ? உலகில் நான்மறையாளர்களிலும், பண்டிதர்களிலும், சாதுக்களிலும், புத்திமான்களிலும் அநந்தம்பேர், தம்மைக்காட்டிலும் வேருேர் ஈசுவரனுண்டென்று மதியாமல் தாங்களே ஈசுவரர்களென்று பெருமிதமாய் மதித்து, தங்களுக்குத் தாங்களே யுண்டு களிப்பெய்தலைக்காண்கின்றேமல்லவா? அவர்களைப்போன்ருகிலும் பாவித்து, உமது நன்மைகளுக்கு நீரே தேடியடைந்து, ஈசுவரனுக்குவிநியோகிக்குமதற்கும் அவனடியார்களுக்கு விநியோகிக்குமதற்கும் மாருக நீவிரே விநியோகங்கொண்டால் தேகந்திளைக்குமா? பார்ப்பவர்களுக்குங்கண்ணியமாயிராதா? நல்லஆடைகளும் அணிகளும் அணிந்துஉலாவலாகாதா? இப்போது நம்மையாரும் மதிப்பாரில்லையே! மாநத்தில் மிகுநோக்குடையவரா யிருந்தும், நீர் நல்லவரென்றுங் கெட்டவரென்றும் அறிந்துக்கொண்டு வியாபாரம் பண்ணுமல், கண்டவர்களையெல்லாம் நல்லவர்களென்றெண்ணி அவர்கள் எல்லாரையும் நம்பிக் கடன்கொடுத்து, மோசம்போய்ப் பணத்தையெல்லாம் அழிக்கின்றீர். "உலகத்தோ டொத்துவாழ்" என்கிற நீதிமொழியின்படி, உலகத்தில் உலகத்தாரைப்போல் உலகத்தா

ரில் ஒருவராய்ப் பிறந்தும், உலகத்திலேயே வளர்ந்தும், உலகத்தில் தானே சஞ்சரிக்கும் நாம் இவ்வுலகத்தாரது நடவடிக்கைகளுக்கு ஒத்து நடக்கவேண்டாமா? "மாதர்க்கிதங் கவிவாணர்க்குச் சால வணக்கங் குரு - நாதர்க்கு நீதியோடாசார நண்பினயந்தவர்க்குக் - கோதற்றவாசகம் பொய்க்குப் பொய் கோளுக்குக்கோ ளறிவி - லாதர்க்கிரட்டிப்பறிவுடையோர் செய்யுமாண்மைகளே" என்கிற சான்றோர்வாய்மையின்படி, உலகில் இருக்குந்தனையும் அவ்வவர்க்குத் தக்கபடியெல்லாம் இருக்கவேண்டாமா? அதுவே யன்றோ அறிஞர் காரியம்? அதையொழித்து, நாங்கொண்ட முசலுக்கு மூன்றேகாலென்று ஒரே பிடிவாதங்கொண்டால் இவ்வுலகுக்கு அடுக்குமா? நாட்டில் பொய்மை மிஞ்சியிருப்பதால் நாமும் அவ்வவர்களுக்கு ஏற்றபடியெல்லாம் இருந்தால்தானே இம்மையில் நன்மைபெறுவோம்? அவ்வாறு இருந்தாலொழிய நாமுலகில் நன்கு ஜீவிப்பது அரிதாமல்லவா? தலைவனொருவன் கைக்கீழ் உத்தியோகமிருந்து ஜீவிக்கலாம்; வர்த்தகத்தொழிலும் *அமைச்சும் - அரசுரிமையும் நடத்துவது வெகுகஷ்டங் கஷ்டம்! அவை நடாத்துங்கால் அவற்றிற்கேற்ற தந்திர வுத்திகள் இருக்கவேண்டாமா? காலமறிந்து - ஆங்கிடமறிந்து - செய்வினையின் மூலமறிந்து - வினையறிந்து - மேலுஞ் சூழ்வனசூழ்ந்து - துணைமை வலியறிந்து அவ்வருமைத் தொழில்களை நடாத்த வேண்டியதுகடமையல்லவா? அதுவன்றோ அறிவுள்ளார்இயற்றும் அருமைத்தொழில்கள்? இவற்றையெல்லாம் ஒழித்து, கல்லைக் கட்டிக்கொண்டு கடலைநீந்துவாரைப்போலவே கடவுளை நினைந்துநினைந்து உலகவாழ்க்கையை நீந்தலாமென்றால் முடியுமா? இந்தச் சிறுவயதில் தானே ஓடிப்பாடிப்பணஞ்சம்பாதித்தால்அல்லவாசுகமுறலாம்? இவ்வயதில் அநுபவிக்காத சுகம் எப்போது அநுபவிக்கப்போகின்றோம் பகவத் வர்த்தகமும், உலகவியாபாரமும் இரண்டையும் நீர்விரும்பி நடத்துவதால் இருமருங்கும் உமக்குச் சுகங்கிடைத்திலது; நமக்கோ இச்சிறியவயதில் கஷ்டப்பட்டுண்ண விதிநேரிட்டமையால் அதற்கேற்றபடி நடந்துக்கொள்ள வேண்டாமா? மனிதர்களுடைய மாயாவிலாசங்கள் உமக்குச் சற்றுந்தெரியாது; தெரியாதபோது அவர்களால் ஏமாற்றப்படுவதில் சந்தேகமுண்டோ? என்னுடைய மாமிமாமன்மாருடைய தேட்டை மாயாவிகளாகுஞ் சூதர்களேயல்லவா கொள்ளைகொண்டார்கள்? இருந்தவற்றையெல்லாங் கொள்ளைகொடுத்துவிட்டுஇப்போதுஉண்டியேஉடையேயெனவுகந்து மண்டலமெங்கும் அலையலாயிற்று; அப்படியலைந்து சம்பாதிக்கும் அவைபும் அவ

* அமைச்சு - மந்திரித்தொழில்

தியாளர்களுக்குத்தாரைவார்த்துவிட்டு அந்நமோராமசந்திரா!என்று அலையலாச்சுது; நாளொருவண்ணமாய்ப் பட்டினியாகக்கிடந்து சாகவுங் காலம்வந்து விட்டது; இதற்கென்ன செய்யவல்லோம்? எனது அக்கையாரும் நானுமாய்க்கூடி யேதாவது வியாபாரமோ கைத்தொழிலோ செய்து ஜீவிக்கலாமென்றால் அவற்றில் நாங்கள் பழகினவர்களல்ல; கூடியவளவில் செய்யலா மென்றாலுங் கண்டோர் பழிப்பார்கள்; இவற்றை யெல்லாம் நினைக்குந்தோறும் எங்களுக்குத் துயரடைக்கக்கூடாதது தோன்றுகின்றது; நன்றாயுண்பவர்களையும்உடுப்பவர்களையும் பார்த்துப் பார்த்து வீங்கும்படியான காலம் எங்களுக்கு ஈசுவரன் வாய்க்கவைத்தான் என்று இவ்வாறெல்லாந் தங்குறைபாடுகளைச் சொல்லிக் கடுரோதனஞ் செய்யலாயினர்.

அத்துயர் கூறியவற்றை யெல்லாம் விசதமாகக் கேட்டருளின துக்காராம் ஸ்வாமிகள் அவ்விரு மனையாட்டிமாரையும் பார்த்து ஏ! பாவைகாள்! நரர்கள் பூருவஜந்மத்தில்செய்த புண்ணிய பாபரூபங்களான கருமங்களின்படி யிப்பிறப்பில் சுக துக்கங்களை யநுபவிப்பார்கள்; இப்படித் தந்தம் பூருவஜந்ம கருமங்களின்படி யநுபவிக்கும் அநுபவங்களைவிட விசேஷ அநுபவங்களை யநுபவிக்க வேண்டுமென்றால் எப்படிக்கிடைக்கும்? பூருவ சற்கருமம் இருக்கவேண்டுமல்லவா? எவ்வளவுதான் அநுபவங்களை யநுபவிக்க வேண்டுமென்று ஆசைகொண்டாலும் வியர்த்தமே! நரர்களுக்கு எந்தக்காரியத்திலாவது சொதந்திரமுண்டா? எப்போதும் பிறர்செயலை நோக்கிப்பரதந்திரனாயிருக்கிறவன்றானே நரன்; சருவசொதந்திரபரன் சருவலோகத்திற்குங் கர்த்தாவாகிய சௌரீ யொருவன்றானே? அவனொருவன்றானே ஜகத்தை யுண்டுபண்ணவும் ரக்ஷிக்கவுமுள்ள சொதந்திரபுருஷன்? ''సర్వం విష్ణుమయంజగత్'' ''ஸர்வம் விஷ்ணுமயம்ஜகத்'' என்று பிரமாணங்களும் முறையிடா நின்றனவே; தநஞ் சேர்ப்பிக்கவேண்டும், நல்லுணவு அளிக்கவேண்டும் என்று நினைத்து அவற்றைச் செய்பவன் ஸ்ரீராமேசுவரனொருவனே யாகவேண்டும்; கடுங்காட்டில் சஞ்சரிக்கும் மிருகாதிகளுக்கு அந்நபாநங்கள் யாரளிக்கின்றார்? அவன்றானே; அவையளிக்கப்பெறுவதும் அந்தந்தக் காட்டு மிருகங்கள் வேண்டியா? சுயேச்சை யாகத்தானே யளிக்கின்றான்; கல்லுக்குள்ளுறை தேரைக்கு ஆகாரமளிப்பவரார்? தேரைக்கேயென்றும் அவ்வளவு ஆகாரம்வைத்திருக்கும் சௌரிபிராணிகளுக்குஅவ்வளவு வைக்க மறப்பனோ?'' ''ఆయురన్నం ప్రయచ్ఛతి''''ஆயுரந்நம் ப்ரயச்சதி'' என்றபடி,பிழைத்த அந்நாளளவும் அவ்வளவு அந்நமிட்டேயிருக்கின்றான்;கண்ணிமையொத்த காதலிகாள்! நீங்கள் என்னைநோக்கி

தநம்ரொம்பவுஞ் சம்பாதித்து எங்களைக்காப்பாற்ற வேண்டுமென்றீர்கள்; நீங்களார், நானார்? உங்களுக்கு எப்படி நான் போஷக கர்த்தாவாவேன்? நீங்களெப்படி போஷிக்கப்பட்டிருக்கின்றீர்களோ அப்படியே நானும் அந்த ஸ்ரீ வரதனாலேதான் போஷிக்கப்பட்டு வருகின்றேன்; உங்களுக்கும் எனக்கும் மற்ற பிராணிகளுக்கும் போஷக கர்த்தா புண்டரீகாக்ஷன் ஒருவனே; "నహిపాలనసామర్థ్యమృతే సర్వేశ్వరాత్ హరేః" (நஹிபால நஸாமர்த்ய ம்ருதே ஸர்வேச்வரோக்ஷரி:) என்று சாத்திரமுஞ் சொல்லிற்று; "యతో వా ఇమాని భూతాని జాయన్తే। యేన జాతాని జీవన్తి" (யதோவாஇமாநிபூதாநிஜாயந்தே யேநஜாதாநிஜீவந்தி) என்று, ஆன்மாக்களெப்படி யந்தப்பிரஹ்மத்தால் உண்டாயினவோ அப்படியே அப்பரவஸ்துவாலேயே ஜீவிக்கவும் படுகின்றன; அஜ்ஜீவனங்களில் உயர்வு தாழ்வுகள் மாத்திரந் தந்தம் பூருவ கருமவசங்களின் அளவுகளுக்கேற்றது ; ஆகையால், "అవశ్యమనుభోక్తవ్యం కృతం కర్మ శుభాశుభం" (அவச்யமநுபோக்தவ்யம் க்ருதம் கர்ம சுபாசுபம்) என்றபடி, பூருவஜந்மங்களில் செய்துள்ள புண்ணிய பாபகருமங்கள் இந்த ஜீவர்களை யணுகியிருந்து சுகதுக்கங்களை யநுபவிக்கும்படிசெய்யும் ; அதனால்தான் பிராணிகள் இம்மையில் சுகம்அநுபவிப்பாரும், துக்கம் அநுபவிப்பாருமாயிருப்பது ; முன் ஜெநநத்தில் புண்ணிய கருமஞ் செய்து இப்போது சுகம் அநுபவிப்பவர்களை துக்கம் ஓர்போதும் நலியவிடாது; முன் பாபகருமம் இயற்றி அதனால் இப்பிறப்பில் துக்கம் அநுபவித்து வருபவர்கள் ஓர்போதும் சுகத்தைப் பெறார்கள் ; சுகிர்தத்தாலேஐசுவரியமும், துஷ்கிருதத்தாலேஇத்தனைவறுமையும்உண்டாகின்றது; இந்தப்புண்ணியரூப பாபரூப கருமங்கள் இரண்டையும் மோக்ஷார்த்திகள் விரும்பமாட்டார்கள் ; புண்ணியரூப கருமம் பொன்விலங்கும், பாபரூப கருமம் இருப்புவிலங்கும் ஆகாநிற்கும் ; இவ்விரண்டும் மோக்ஷஸாதநத்துக்கு விலங்குகளாகையால் இரண்டையும் கொள்ளார்கள்; இவ்விரண்டும் பரமபதப் பிராப்திக்கு பாதகங்கள் ; பாபரூப கருமத்தால்தான் தரித்திரம் ஸித்தமாயிற்றே ! புண்ணியரூப கருமத்தால் சொர்க்காதி ஐசுவரியங்களை யனுபவிப்பதாயினும், அவ்வனுபவமும் தாஞ்செய்த புண்ணியம் எதுபரியந்தம் இருக்குமோ அதுபரியந்தம்அநுபவிக்கக்கூடும்; "క్షీణే పుణ్యే మర్త్యలోకం విశన్తి" (க்ஷீணே புண்யே மர்த்யலோகம்விசந்தி) என்றபடி, தாஞ்செய்திருந்த புண்ணியம்நசிக்கப்பெற்ற மாத்திரையானே ஊர்த்துவலோகத்திற்கு சூக்ஷ்ம சரீரத்தோடே தள்ளிவிடப்பட்டு அங்கு சில காலம் வர்த்தித்திருந்து, ஆதித்தனாலே தன்கிரணங்களால் கிரகிக்

கப்பெற்று, மேகத்தை யுபாதாநப்பண்ணி அம்மேகத்திலே புகவிட அம்மேகமண்டலத்திலே மேகங்கள் வருஷிக்குமளவுந் தங்கியிருந்து, வர்ஷதாரைகளோடே பூமியில் படியப்பட்டு, அந்தஜலம்சசியத்துக்கு தாரகமாய்ப் புகும்போது அதின்வழியாய் சசியத்திலே புகுந்து, அந்தச் சசியமும் பக்குவமாய் அந்நமாக மாறுமளவும் அந்தச் சசியத்திலேதானே தங்கியிருந்து அந்தச்சசியமானது அந்நமானவாறே அதின்வழியாய் புருஷகர்ப்பத்தில் புகுந்து, சுக்கிலமாமளவும் அப்புருஷகர்ப்பத்திலேதானே குடியிருக்கப்பெற்று, சுக்கிலமானபிறகு ஸ்திரீ புருஷ சையோகத்திலே சுக்கிலவழியாக ஸ்திரீகர்ப்பத்திலே புகுந்து, முன்னூறுநாள் கர்ப்பமாய்ப் *பரிணமித்து, அந்தக் கர்ப்பவாசத்தில், "అత్యామ్లకటుతీక్ష్ణోష్ణలవణైర్మాతృభోజనైః। అతితాపిభిరత్యర్థం వర్ధమానాతివేదనః" (அத்யாம்ல கடுதீக்ஷ்ணோஷ்ணலவணைர் மாத்ருபோஜநைஃ-அதிதாபிபிரத்யர்த்தம் வர்த்தமாநாதிவேதநா:) என்று, தாயின் போஜநத்திற் சேர்ந்த குரூர திரவியங்களினுடைய் கைப்பு - புளிப்பு- துவர்ப்பு - இனிப்பு - உவர்ப்பு - கார்ப்புகளாலே சகிக்காமல், காய்ந்த ஈயத்தில் தள்ளுண்டவன் துடிக்கும்போலே துடிதுடித்து, கர்ப்ப †துந்தமாகிறபையிலே கால்கைகளை நீட்டவும்முடக்கவும்மாட்டாதே கட்டுண்டுகிடந்து, முன்னூறுநாளும் முடிந்தபிறகு ஓர் விநாடியுந் தங்கவிடாமல் ‡அபாநவாயுவானது கீழேயுதைத்துத் தூக்கத் தூக்குண்டு, கம்மியனது கப்பியச்சின் சிறுதுளைவழியாகத் தங்கக்கட்டி யிழுக்கப்படுவதுபோல் யோநியாஞ் சிறு துவாரத்தின் வழியாகப் பூமியில் தள்ளப்பட்டு, பாலனாய்க்கிடந்து, அந்தப் பாலியதிசையில் மலமூத்திராதிகளில் புரண்டு கிடந்து, "కణ్డూయనేపి చాశక్తః పరివర్తేప్యనీశ్వరః। స్నానపానాదిచాహార మవాప్నోతి పరేచ్ఛయా" (கண்டூயநேபிசா சக்தஃ பரிவர்த்தேப்ய நீச்வர: - ஸ்நாநபாநாதிசாஹார மவாப்நோது பரேச்சயா) என்கிறபடி, தின்றவிடத்தைச் சொரியவும், கடித்தவிடத்தைத் துடைக்கவும் சக்தியில்லாமல், உயிர் நிலைக்குத் §தாரகமாகும் பால் முதலியவை கேட்கவும் எடுத்துண்ணவுங் கூடாமல், பிறர் கொடுப்பனவற்றைத் தாரகமாகக்கொண்டு, இப்படி ¶கிலேசத்தாலே அப்பாலியதிசை கழித்து, தன்னிச்சையாகவே யொருகாரியஞ்செய்ய சக்தனான அளவிலே, "బాల్యే క్రీడనకాసక్తాః" (பால்யேக்ரீடநகாஸக்தா:) என்று சிறு வீடு கட்டல், புழுபூச்சிகளைக் கொல்லல் முதலிய பாலக் $கிரீடைகளிலே காலங்கழித்து, யௌவந அவஸ்தைவந்து

---

* பரிணமித்தல் - மாறல். † துந்தம் - கருப்பப்பை. ‡ அபாநவாயு - கீழ்நோக்கும் வாயு § தாரகம்-ஆதாரம். ¶ கிலேசம் - துன்பம். $ கிரீடை - விளையாட்டு.

வாய்த்தகாலத்தில் மறுபடியும் முன்போல் புண்ணியகருமமே செய்யத் தொடங்குவாராய்க்கொண்டு, இப்படியே பலபிறவியினும் புரண்டு திரிவார்கள். அந்தயௌவநதிசையில் துன்மார்க்கர்களோடு சகவாசம் பண்ணுவாராயின், * நிரையத்திற்கே ஹேதுக்களான விஷயாந்தரங்களில் ஆழ்ந்து, ஆழ்ந்தோமேயென்கிற துயரமும் இல்லாமல், கங்குலும் பகலும் பெண்டிரார் சுகங்களுய்ப்பான் பெரியதோர் இடும்பைபூண்டு கிடந்து, வாணிலாமுறுவல் சிறுநுதல் பெருந்தோள் மாதரார் வநமுலைத்தடந் தழுவுதலே தாரக - போஷக - போக்கியங்களாகப் போறப்பேணித்திரிந்து, அந்த யௌவநத்தைக்கழித்துவிட்டு ஜாரையிலகப்பட்டு, பகவத்மார்க்கத்தில்காலத்தைப்போக்க சக்தியில்லாதவராய், பகவானென்கிறநினைவுமில்லாமல் முற்றமூத்து - உறிகள்போல் மெய்நரம்பெழுந்து - ஊன்றளர்ந்து - உள்ளமெள்கி - கண்சுழன்று - கோல்துணையாக முன்னடிநோக்கி வளைந்து - விதிர்விதிர்த்து - மேற்கிளைகொண்டு இருமி - பீளைசோரக் கண்ணிடுங்கி - கால்கள்நோவத் தள்ளிநடந்து அயர்வுறுங்காலத்திலும் பண்டு தாங்கள் காமிகளாய்த் திரிந்தவற்றையும், பாவையர் வாயமுதமுண்டு, அவர்தந்த கலவியின் அநுபவ சாரங்களையும், தம்வாழ்வுகளையும் நினைந்து நினைந்து துயர்கொண்டிருந்து, மறுபடியும் மரணம் வாய்த்தவாறே, "𑌕𑍍𑌲𑍇𑌶𑌾𑌨𑍁𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌯𑌾𑌮𑍍𑌯𑌕𑌿𑌙𑍍𑌕𑌰𑌪𑍀𑌡𑌿𑌤𑌃" (க்லேசாநுத்க்ராந்திமாப்நோதி யாம்யகிங்கர பீடிதஃ) அந்தக் கிலேசத்தாலேயே உயிர்துறந்து, யம † கிங்கர வசியனாய்க்கொண்டு யாதநாசரீரம்பெற்று யமனுடைய நாடடைந்து, குரூரனையமனுக்கும், படர்களுக்கும், அவர்களுடைய ஆயுதங்களுக்கும் நல்விருந்துகளாய், நாநாவித நரகங்களில் புரளுண்டு கிடந்து, தங்கள் பாபவினைகள் தீர்ந்தவுடனே முன்போல் தள்ளுண்பார்கள். ஸத்ஸாம்பிரதாயத்தில் ஈசுவர ஜாயமாந கடாக்ஷத்தாலே யூன்றி, ஸத்துக்களாய், பரம பாகவதர்களாய், சதாநுஷ்டாந ஸம்பந்நர்களாய், வையத்தேவரென்று வானவரும் முனிவர்களும் வணங்கி வாழ்த்தாநிற்கும் அவரோடு, யௌவநதிசையில்சிநேகித்துத் தழுவி நிற்பாராயின், "𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌃 𑌪𑌰𑌃" (ப்ரக்ருதேஃபரஃ)என்கிறபடியே, பிரகிருதிக்கு அப்புறப்பட்டதென்றும், "𑌆𑌤𑍍𑌮𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑍋𑌽𑌮𑌲𑌃" (ஆத்மாஜ்ஞாநமலோமயஃ) என்று, அவ்வாத்துமா (ஜ்ஞாநமலத்தையே மயமாகவுடையதென்றும் அந்த பரமகாருணிகர்களால் விளங்க வுரைக்கப்பெற்று, அதனால், 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑍇𑌷𑍋𑌹𑌿 𑌪𑌰

* நிரையம் - நரகம். † கிங்கரர் - படர் - தூதர்.

మాత్మనః'' (ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மாசேஷோஹிபரமாத்மநஃ) என்று, ஜ்ஞாந ஆனந்தங்களேயே மயமாகவுடைய இவ்வாத்மா பரமாத்துமாவுக்கு *சேஷமென்றும், ஆத்துமாவாகிற சேஷவஸ்துவுக்குப் பரமாத்துமாவே சேஷியென்றும் உள்ளபடியறிந்து, அம்பொன்னரங்கற்கும் ஆவிக்கும் அந்தரங்கச் சம்பந்தங்காட்டி - தடைகாட்டி - உம்பர்திறம் என்னும் வாழ்வுக்குச்சேர்ந்த நெறிகாட்டவல்ல நல்லாசாரியனையடைந்து, "తాపఃపుణ్డ్రస్తథానామమన్త్రోయాగశ్చపఞ్చమః। అమీఃపరమసంస్కారాః పరమైకాన్త్యహేతవః" (தாபஃபுண்ட்ரஸ்ததாநாம மந்த்ரோயாகஞ்சசஞ்சமஃ - அமீஃ பரமஸம்ஸ்காராஃ பரமைகாந்த்யஹேதவஃ) என்றபடி †ஸம்ஸ்காரங்கள்ஐந்தையும்பெற்று, தத்துவரகசியங்களையெல்லாமறிந்து, அறிந்தவழி நின்று, இந்த லீலாவிபூதியில் இருந்தநாள் ஸத்காலக்ஷேபத்தில் ஈடுபட்டவராய், மற்றோர் தெய்வம் பாடியாடிப் பணியாதே, தக்கவனுய்வேதவிமலனையேமேவுபவராய், அறிவிலாமனிதராயிராதே திவ்விய ஜ்ஞாநியராய், மாரனார் வரிவெஞ்சிலைக்கு ஆட்செய்யாதே மாதவற்கே யாட்செய்து, பாவையர் வாயமுதம் உண்ணுதே தொண்டுபூண்டு அமுதமுண்டு, அல்பசாரத்தைச் சுவைக்காதே அதிசாரதமமானதைச் சுவைத்து, ஆக்கையின்வழி யுழலாதே உருவார் சக்கரஞ் சங்கு சுமந்தங் கொருபா டுழன்று, எண்ணுருத் துயர்விளைக்கும் உலகியற்கைக்கு வெருவி, ஓ ஓ! உலகினதியல்பு உயிர்மாய்த்தலென்று அதற்கு ஆற்ருதே நாட்டாரோடு இயலொழித்து, தனக்கென்று ஒன்றைக் காமுருதே தன்னோடொக்க மற்றவையும் அவன் பரமேயெனக் காமுற்று; என்னையாளும் பரமராய்வாழ்ந்து, முடிவில் ஆதிவாகிகளால் கொண்டுவரப்பெற்றபிரணவ விமாநத்திலே ஸூக்ஷ்ம சரீரத்தோடு ஏறிக்கொண்டு, அவர்கள் வழிகடத்த அண்டகடாகங்களைப் பேதித்துக்கொண்டு அவ்வந்த மண்டலத்தார் ஆதரத்துடன் வணங்க மண்டலங்களைக் கடந்துபோய் விரஜையைக்கிட்டி, அதில் மூழ்கி, அமாநவ கரஸ்பரிசத்தால் திவ்வியதர சரீரம்பெற்றுப் போய் வைகுந்த நன்னுடடைந்து இனிதாக வாழ்ந்து வருவார்கள். "జాతస్య మరణంధ్రువమ్" (ஜாதஸ்ய மரணத்த்ருவம்) என்றபடி, சரீரதாரிகளுக்குப் பிறந்தபோதே மரணம் நித்தியங்கள்; நிலன் - நீர் - தீ - கால் - ஆகாசங்களாகும் ஐம்பூதமயங்களாகும் இச்சரீரங்கள் ஒருவர் உடைமைகளல்ல; தெய்வயோகத்தாலே இருக்கையும் போகையுமாம்; இப்படிப்பட்ட துர்த்தசைகள் ; மநுஷ்யர்களுக்கு விகரிக்க யாவர்வசம்?

---

*சேஷம் - அடிமை. † ஸம்ஸ்காரங்கள் ஐந்தாவன - சங்குசக்கரலாஞ்சனம், திருமண்காப்பு, தாஸ்யநாமம், மந்திரம், திருவாராதநங்கள்.

இவற்றையெல்லாம் கண்டுணராதே வீணில் கரைந்தால் என்னபயன்? பண்டு குசேல முநிவருக்கு உதவினர் யார்? இருபத்தேழு பிள்ளைகளும் மனைவியுந் தாமுமாய் அலைந்துக்கொண்டிருந்த காலத்தில் அவர் படும் இமிசைகளுக்கு இரங்கி ஈசுவரனே ஐசுவரியம் அளித்தனனு? அல்லது அவர்தாமே ஐசுவரியங்களைவர்த்தக முதலானவற்றால் பெருக்கினரா? இது நிற்க, உலகில் நான்மறையாளர்களிலும், பண்டிதர்களிலும், சாதுக்களிலும் புத்திமான்களிலும் அநந்தம்பேர் தம்மைக் காட்டிலும் வேறு ஈசுவரனில்லையென்றும், தாங்களே அவ்வஸ்துவென்றும் நினைத்திருக்கிறதாகச் சொன்னீர்கள். அவர்கள், உணவுக்கு ஒன்றுங் கிடைக்கப்பெறாத இடத்தில் கிடந்து உதராக்னியால் நலிவுபட்டவன் இதுண்ணலாம் இதுண்ணல் ஆகாதென்று பசிதீருமளவு அறியமாட்டாமல் தன்னுடம்பைத் தானே பிடுங்கித்தின்று ஜீவிக்குமாபோலே, ஸம்சாரமாகிற ஊழித்தீயாலே தகிப்புண்டதாங்கள் அந்த ஸ்ம்ஸாரதுக்கங் கழிகைக்கு உறுப்பாக, சகவாசதோஷத்தாலும் அஸத் சாத்திரங்களைப் படித்ததாலும் வந்த ஞானத்தாலே பிரகிருதியேயாகுந் தேகங்களை யாத்துமாக்களென்று எண்ணி, தேகமானது துக்கத்துக்குக் கொள்கலனுய், ஹேய வஸ்துக்களோடு கூடியதாயிருக்கிற ஆகாரத்தையும், ஆத்துமாவானது பிரகிருதிக்கு வேறுபட்டவனுய், தனக்குத்தானே பிரகாசனுய், தனக்குத்தானே சுகியாய், நித்தியனுயிருக்கிற ஆகாரத்தையுமே நினைந்து நினைந்து, இவ்விரண்டுக்கும் வேறுபட்டதொருவுணர்வுக்குமுழுநலமான பரமாத்தும வஸ்து உண்டென்று நினைக்கவுஞ் செய்யாதே, அம்மட்டிலேகண்டு நின்றவர்களாய், முன்பு தாங்கள் பட்டதுக்கத்தின் கநத்தாலே இவ்வல்ப சுகத்திலழுந்தி, அமுதவெள்ளத்தானுகுஞ் சிறப்பினை யிழந்து அந்த ஆத்துமலாபத்துக்குச் சாதநமான ஞானயோகமொன்றின் அளவிலேயே நிஷ்டனுய் அவ்வியோகத்தின் பலமான ஆத்துமானுபவமாத்திரத்தையே புருஷார்த்தமாயநுபவித்து, பிறகு சம்சாரஸம்பந்தம், பகவத்பிராப்திகளாகும் இரண்டையும் இழந்து, ஆத்துமாக்கள் உள்ளளவும் அசரீரிகளாய், இதோர் வஸ்து உண்டென்று தோன்றவும் பெருதே, ஒருசுகமும் தாங்கள் அனுபவித்து ஆனந்திக்கவுஞ் செய்யாதே, கண்டதேகாக்ஷி என்னும் பாலைநிலத்திலே திரிவார்கள். அவர்கள் காணும் பலம் தங்களைத் தாங்களே கொன்று நிற்பதல்லால் பிறிதொன்று மில்லை; இவர்கள் நஞ்சினும் மிகக்கொடியர்; இவர்களோடு சகவாசங்கொள்ளுதலும் விநாசகாரியமாகும்; நஞ்சாகிலும் உடம்பைக் கொல்லும், இவர்களோ உயிரையே கொல்லு மவர்கள்; "స్వత్వమాత్మనిసఞ్జాతం స్వామిత్వం బ్రహ్మణి స్థితమ్" (ஸ்வத்வமாத்ம நிஸஞ்

ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணிஸ்த்திதம்) என்றதின்படி, ஸர்வ ஸ்வாமியாகிற பரமாத்தும வஸ்துவுக்கு இவ்வாத்தும வஸ்து சொத்து என்பது விளங்காநிற்க, அந்த பரமாத்துமாவினுடைய சொத்தாகிற ஆத்துமாவை அவனிடச் சொத்தன்றென்றும், தங்களுடைய சொத்தென்றும் வழங்கினால், "యోన్యధాసన్తమాత్మానమన్యధా ప్రతిపద్యతే। కింతేన నకృతంపాపం చోరేణాత్మాపహారిణా" (யோந்யதா ஸந்தமாத்மாந மந்யதா ப்ரதிபத்யதே - கிம்தேந நக்ருதம்பாபம் சோரேணாத்மாபஹாரிணா) என்கிற ஸ்ரீமத்கீதாவாக்கியத்தின்படி, அவர்கள் ஆத்துமாவைத்திருடின திருடர்களேயாய்க்கொண்டு அத்தால் என்னென்ன பாபங்கள் தான் அவர்களால் செய்யப்படமாட்டா? அப்பாப சமூகங்களால்என்னென்ன நிரயங்களிற்றான் புரள மாட்டார்கள்? ஆதற்கொண்டே யாக்கும் இவர்களது மாபாதகங்களுக்கு யமபுரத்திலுள்ள நரகங்கள் தக்கவை யன்றென மதித்து, சருவ நியந்தாவாகும் ஜகந்நாதன் காளக்கூட்டமென்னும் மாநரகினை யுண்டாக்கிவைத்தது! அன்றிக்கே "ఈశ్వరోహం" (ஈச்வரோஹம்) என்று தன்னைத் தானே மதித்துத் தன் செங்கோலின்கீழ் நிலாவுவாரை யெல்லாந் தன்னையன்றி மற்றோர் தெய்வந் தொழவொட்டாமற் செய்து திரிந்தஹிரணியனும், "వాసుదేవోహం" (வாஸுதேவோஹம்) என்று தன்னைத்தானே போற மதித்து, திருத்துவாரகையில் சாதுக்களை ரக்ஷித்து, உலகில் தருமங்களை ஸம்ஸ்தாபிக்குமாறு திருவவதரித்தருளின ஸ்ரீகண்ணபிரானுக்கு அந்த வாசுதேவப் பெயர் தகாதென்று புறங்கூறித் திரிந்த பௌண்டரக வாசுதேவனும் தந்தந் தீயசிந்தனைகளின்படி ரக்ஷித்துக்கொண்டமை யறியோமோ? இவற்றையெல்லாங்கேட்டிருந்தும் அறிவிலா மனிதர் அவ்வழிவை மறக்காமல் கொள்கின்றார்கள். அந்த ஹிரணியன் பௌண்டரக வாசுதேவன் முதலானோருக்கே அக்கேடு வாய்த்ததெனின் இவர்களுக்குக் கேட்பானேன்? இவர்களையா நீங்கள் நான்மறையாளரென மதித்தீர்கள்? இவர்கள் நான்மறையாளர்கள் என்பது உண்மையாயின் தங்களையும், தங்களைச்சேர்ந்து வினைகளைந்துகொள்ள அவாக்கொண்டவர்களையும் முடியப்பார்ப்பார்களா? இத்தகையார் பாண்டியத்துவ பிர்மக்கியானங்களைக் காணும் ஒரு மல பரிபாகத்தான், இவர்கள் குருசீலராயிருக்கிறார்கள்; நம்மை வைகுண்டபுரம் சேர்ப்பார்களென்று இவர்களது திருவடியில் சேவிப்பானேல், தான் பிரமமென்று அவர்களால் தெரிந்துகொண்டு இராகத்துவேஷாதிகளில் சிக்கி முடிவில் எமவாதைக்குள்ளாவன். எவ்வாறென்னில், "குட்டித் திரட்காடி யாரொழுகக் கோன்குதித்துக்,கட்டிப் புரண்ட கதையாகுந் - துட்டமலப், பித்திலே மூத்தவர்கள்

பேய்பிதற்றும் பேதயர்க்குள், புத்திபோல் காட்டும் பொருள்" என்று ஒழிவிலொடுக்கத்தார் உரைத்தபடி கரடியும், இடையனும், மாண்டதுபோலாகும். சிலரைச் சாதுக்களென்றும் புத்திமான்களென்றும் மதித்தீர்கள். அவர்கள் விடாய்த்தவன் கங்கைப்பெருகியோடுவதில் அள்ளிக்குடித்து சுகம்பெறாமல், அவ்வாற்றங்கரையிலே குந்தாலிகொண்டு கிணறுவெட்டித் தன் விடாய்க்குதவநாக்குநனைக்க இருக்குமாபோலே, பிராப்தனும், சுலபனும், நல்லாராத்யனுமான ஸ்ரீ பரவாசுதேவனைவிட்டு அப்பிராப்தமும், துர்லபமும், துராராத்தியமுமான விஷயங்களில் மண்டித்திரிவதும், இவையெல்லாம்ஞானஞ் சிறிதும் ஓரா விபரீதர்களுடைய சேஷ்டைகளேயன்றி ஞானாநுஷ்டான ஸம்பந்நர்களுடைய காரியமன்று ; ஞாந ஸம்பத்துடையார் அவனையன்றி மற்றும் பேசுவரோ? அவனையொழியத் தாங்களே தமக்கு நன்மை தேடுவரோ? தமக்குத்தாமேநன்மைதேடுவதும்முலையுண்குழவியை யதின்றாய் தந்தைகளுடைய கையிலிருந்து வாங்கி சற்றும் ஈவிரக்கமில்லாக் கிராதகனாகும் ஊன்விற்பவன் கையிலே கொடுப்பதோடொக்கும்; இங்ஙனிருக்க, என்னையும் அத்துயரிலே மூட்டி நாசமடையவா செய்யப் பார்க்கின்றீர்கள்? அணுவுக்காக ஆத்துமாவையே பிடித்துக்கொள்ளும் புத்திமான்களும் உண்டோ? பிரளயாநந்தரம் இவ்வாத்துமாக்கள் சிறகிழந்த பக்ஷிகள்போல் தந்தஞ் சைதந்நிய காரியங்கள் ஒன்றுஞ்செய்ய வலியரன்றாய், மெழுகிலொட்டின பொன்போல் இருந்த விடத்தையும் நினைக்கப்பெறாதே உருமாய்ந்து கிடக்குந் தசையில், சருவஸ்வாமியாகும் ஸ்ரீமந் நாராயணன் தனது பரமகிருபையாலே, "కరణకళే భర్తుర్ఘటయితుం దయమానమనాః", (கரணகளே பரார்கடயிதும் தயமாநமநா:) என்று கரசரணாதி அவயவங்களோடு கூடின சரீரங்களைக் கொடுத்தருளினதற்குக் காரணம், "மாயவன் தன்னை வணங்கக் கொடுத்த காரணங்களிவை" என்கிறபடியே தன்னை வணங்கி யுய்தற்கென்றே. அப்படிக் கொடுத்த கரணங்களே பரங்களைக்கொண்டு அக்கருணையங்கடலுக்கு வந்தநவழிபாடுகள்செய்து, அவ்விறைவனது திருவுள்ளக்கருத்துமுடியவைத்து மோக்ஷவீடு அடைவது பிராப்தமாயிருக்க அது செய்யாதே, சமிதை கொய்யக்கொடுத்த கத்தியைக்கொண்டு சமிதை கொய்யாதே பசுவின்வாலை யறுப்பதுபோலும், களைகொத்தக் கொடுத்த கோலைக் கொண்டு களையைப் பிடுங்காதே கண்ணைப் பறித்துக் கொள்வது போலும், அவன் தன்னைவணங்கக்கொடுத்த அவயவங்களைக்கொண்டு சப்தாதி விஷயங்களைப் பெருக்கி அருநரகுக்கே யாளாகக் கொழுத்தல் நன்மையோ? இவற்றையெல்லாம் நன்றாயறிந்திருக்கிற நாமும்

ஈசுவரனுக்கு இஷ்டமில்லாத காரியங்களைச் செய்யலாமா ? தாஞ்சாக மருந்துண்ணுவார்உண்டோ? அதுபோல் தன்ஆத்துமாவைத் தானே பாழிற்புகட்டிக் கெடுப்பதுந் தகுமோ அறிவுடையார்க்கு ? எனக்கு ஆத்துமவிநாசத்திற்கு ஏதுவான காரியங்களை நினைக்குந்தோறும் மநந்துடிதுடியா நின்றது என்று இவ்வாறெல்லாம் போதிக்கத் தொடங்கினர்.

இவ்வருமைத் திருவாக்குகளை மிகுகவநமாய்க் கேட்டுக்கொண்டிருந்த ஸ்வாமிகளுடைய மனையாட்டிமாராகிய ருக்குமாபாயம்மாளும், ஆவலி ஜீஜீபாயம்மாளும் உற்றுநோக்கித் தங்களில் தாங்களே நீட்சியான யோசனை யோசித்ததாவது :— இவரோ மிகுசாது. ஸ்ரீ பாண்டுரங்க நாதனுடைய அடிமைக்குடியிற் பிறந்தவர். பிறக்கும்போதே வயிரம்பற்றிப் பிறக்கும் பதார்த்தம்போலே தாயின் குடல்விளக்கஞ்செய்த அந்நாள்முதல் ஞாநமே குடிபுகுந்து ஆளப்படுமவர், ஓதாது ஓதியுணர்ந்தவர், இவருக்கறியாத வேறு விஷயமும் உலகிலுண்டாகாது ; எல்லாம் வல்லவர்என்பது இவரொருவருக்கே தகுமல்லது பிறருக்கு ஒவ்வாது. இவரைப்போன்ற தெள்ளிய ஞாநியை யாரும் கண்டேயிருக்க மாட்டார்கள்; உலகிலெங்கு முள்ளார் இவருக்காக வியக்கின்றார்கள்; இப்பேர்ப்பட்ட புண்ணிய புருஷரை நாம் நம்முடைய நற்கரும பயனால் மாலையிட்டோம் ; "கல்லா ஒருவன்றோள் சேர்தலினுங் கற்றானோ டல்லற்படுவதழகு" என்றுள்ளபடியால் இத்தகையினரைச் சேர்ந்தநம் புண்ணியம் பிறர்களுக்கு அருமையானதே; புண்ணியப்பயனால் இவ்விஷேசஞ்ஞருக்கு மனைவிமார்களென்று பலருங் கூறப்பெற்ற அஃதே நந்திறத்திற் போதுமான காட்சி; இவர் பாதப்பொடி நித்த நித்தம் நம்மீது பட்டு வருதலே நம்முடை யடங்கா நெடும்பிறவிக்குக் கடுநஞ்சாகும், "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்கிற திருக்குறள் வாய்மையின்படி, தன்னைக் கற்பிலிருந்து காத்துத் தன்கணவனைக் காப்பாற்றி நற்குண நற்செய்கைகளை மறவாதிருப்பவளே மனையவளாகையால், நாம் எவ்வளவு தான் அல்லற்பட்டாலும் நங்கணவனைக் காப்பாற்றாமல் தூற்றலாகாது; "பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப் புத்தேளிர் வாழுமுலகு" என்றபடி, நாம் நம்முடைய நாயகனை வணங்குவோமாயின் தேவர்களால் சுவர்க்கத்தில் வணங்கப்பெறுவோம் என்னற்கு ஐயமில்லை; "இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ னில்லவன் மாணக்கடை" என்று மனைவி, நற்குண நற்செய்கைகளையுடையவளாயின் இல்லாததொன்றில்லை. நற்குண நற்செய்கைகளையில்லா

தவளாயின் உள்ளதெது? என்கிறபடி, நாம் நல்லவர்களா யிருந்தால் இல்லாததும் நமக்குண்டாமோ? நற்செய்கைகள் நம்மில் இல்லாத காரணத்தால் நமக்கு இம்மையில் ஒன்றும் இல்லாதிருக்கின்றது. "ஏர்பிடித்தவனென்செய்வான் பாணிபிடித்தவள் பாக்கியம்" என்கிற பழமொழியை நாங்கேட்டே யிருக்கின்றோம் அல்லவா? இவற்றையெல்லாம் அறியாதே அவரைத் தூற்றினால் பலனென்னை? அவர்தான் என்செய்வார்? நம்முடைய நலனுக்கென்று தானே இங்கும் அங்கும் ஓடிப்பாடி வர்த்தக நடாத்துகின்றார்? உண்பவர்களாகிய நம்முடைய துராதிருஷ்டாநுகூலமாகப் பலருமவரை யேமாற்றுதலும், வழியிலவருடைய தன்மைகளைக்கண்டு மோசஞ்செய்தலுமாயிருக்கின்றார்கள்; வழியில் இவர் பணங்கொண்டு வருவதைக்கண்டு யாரோ சில துர்ஜ்ஜனர்கள் அப்பணத்தைக்கொள்ளைகொள்ளுவதாகப் பித்தளைக்காப்பொன்று முலாம்பூசி வெகுவிநயத்துடன் வைணவபக்ஷபாதிகளாய்வந்துபரிதாபப்பட்டு, இதனைக்கொண்டுபோம்உமக்கிருக்குஞ் சிரமந்தீர்த்துக் கொள்ளுமென்று சொல்லி யீந்து, இவர் பணத்தைப் பறித்துக்கொண்டபோழ்து இவரும் நம்முடைய சங்கடங்கள் நிவர்த்தியாகுமென்று எண்ணித்தானே அதனை யவர்கள் பிரார்த்தனையின்படி பெற்றுக்கொண்டார்? இப்படி மோசஞ்செய்பவர்களென்று அறிந்திருந்தால் அதனை வாங்குவாரா? மோசந்தான் போவாரா? இவைகளெல்லாம் நம்முடைய பாபப்பயனேயன்றி அவருடைய துர்நடக்கையன்று; வீணில் அவரை நிந்தித்து மீளா நரகுக்கு ஆளாவது தக்கதன்று; வெறுக்கில் நாமே துன்பமடைவோம்; என்று இவ்வாறெல்லாம் யோசித்தவர்களாய், இளையவராகிய ஆவலிஜீஜீபாயம்மாள் அவ்வூரிலிருந்த ஓர் பெரிய சௌகாரிடம் நேரில் போய், அவனைக் கண்டு, ஐயா! நாங்கள் பூருவமிருந்த விருப்பும், இப்போது எல்லாந் தோற்றுவிட்டு வெறுங்கையரா யிருப்பதும், இத்தசையிலுங்கூட அடைந்துவரும் நஷ்டமுந் தங்களுக்கு நன்றாய்த் தெரிந்தே யிருக்கலாம்; என்கணவனார் யாரிடமாவதுபோய்க் கடன் கேட்க அச்சமுறுகின்றார்; தாங்கள் தயவுசெய்து இருநூறு ரூபாயை மாத்திரங் கடனாகக் கொடுப்பீராகில் அதற்கு நான் சாசனம் எழுதிக் கொடுத்து, இரண்டொரு மாதத்தில் வட்டியும் முதலுமாகச் செலுத்தி விடுகின்றேன் என்றுகேட்டார்; அந்தச் சௌகாரும், இந்தம்மாள் புனாவிலிருக்கும் ஆபாஜிகுளவே என்னும் சௌகாருடைய குமார்த்தி, இவரை நம்பிப் பணங்கொடுத்தால் பழுதில்லாமல் நம்முடைய பணம் வட்டியுடன் சேருமென்று எண்ணி, இந்த ஆவலிஜீஜீபாயம்மாளிடத்திலிருந்து தஸ்தாவேஜு எழுதி வாங்கிக்கொ

ண்டு இருநூறுரூபாய் கொடுத்து அந்தம்மாளைப் போகவிட்டான். அந்தப்பணத்தை இவ்வம்மாள் கொண்டுவந்து தமது நாயகரிடங் கொடுத்து, இந்தப்பணம் சௌகாரிடத்தில் தஸ்தாவேஜு எழுதிக் கொடுத்து, கடன்வாங்கிக் கொண்டுவந்தேன்; இதனைப் பேச்சுத்தவருமல் கொடுத்துவிடவேண்டும்; இதனை முன்போல தாரைவார்க்கப் போகிறீர்; இதனைக் கிரமமாக வைத்துக்கொண்டு இவ்வூரில் வர்த்தகர் உப்புக்காகப் போகின்றார்கள்; அவர்களோடு நீரும் போய் உப்பு வாங்கி விற்றால் ஏதேனும் லாபங்கிடைக்கும்; அந்த லாபப்பணத்தில் நாம் ஜீவநஞ் செய்யலாம்; முதல்பாட்டுக்கு அழிவின்றி யிருக்கும்; தூண்டிமுள்காரனுக்கு எப்படியானால் தக்கையின்மீது கியாபகம் இருக்குமோ அப்படியே முதலின்பேரில் மிகவும் கியாபகம் வைத்திருக்கவேண்டும் என்றுசொல்ல, தாஸரும், ஆம் ஆம்! இனி அப்படி யொன்றுஞ் செய்யேன்; பழுதின்றி யுன் பணத்தைக் சேர்ப்பிப்பேனென்று அவ்வம்மையாருக்கு இதங்கூற, அவரும், தமது கணவரோடு கூடவிருந்து பணத்தைப் பொதியிற்போட்டு, மாட்டின் மீது எடுப்பித்துக் கட்டி, உப்புவாங்கி விற்கப்போகும் மற்ற வர்த்தகர்களைப் பார்த்து, ஐயமாரே! இதோ என்னுடைய கணவரும் உம்மோடு வருகின்றார்; அவருக்கும் நீங்கள் வாங்குவதுபோல் இருநூறு ரூபாய்க்கு உப்புவாங்கிக்கொடுத்து; நீங்கள் விற்பனை செய்யும் இடத்திலேதானே அவரையும் அந்த உப்பைக் கிரமமாக விற்கச் செய்து, ஏதோ உங்களுக்குக் கிடைத்தாற்போலே அவருக்கும் ஏதேனும் லாபங் கிடைக்குமாயின் லாபத்தையும் முதலையும் பத்திரமாகக் கொண்டுவந்து வீடுசேர்க்கும்படிச் செய்யவேண்டியது உங்கள் பாரம்; உங்களையே முக்கியமாக நம்பி இருநூறுரூபாய் கடன் வாங்கிக் கொடுத்து என்நாதரை யுங்களோடு அனுப்பி யிருக்கின்றேன்; எப்படி விட்டாலும் உங்கள் பாரந்தான்; இவருடைய நடக்கைகளோ உங்களெல்லாருக்குந் தெரிந்தவைதான்; வழியிலே பணத்தை யேதாவது தாநதருமஞ் செய்துவிடுவார்; அப்படி யொன்றுஞ் செய்யவிடாமல் நீங்களேதான் காப்பாற்றவேண்டுமென்று உரைத்து மறுபடியுந் தமது பர்த்தாவைப் பார்த்து, பணம் பத்திரம்! வழியில் ஏதாவது தாநதருமஞ் செய்துவிட்டு வரப்போகிறீர்! சௌகார் என்னைச் சும்மாவிடான்; வீணிலென்னைக் பழிக்காளாக்க வேண்டாம்; ஏதெப்படி யானாலும் முதலைமாத்திரம் காப்பாற்றிக்கொள்ளும்; அதைக்கொண்டு கரையேறலாம்; இந்தவர்த்தகர் சொல்பிரகாரம் நடந்துகொள்ளுவீராகில் உமக்கு நஷ்டகஷ்டங்கள் ஒன்றும் வராது; வழியில் ஏமாற்றவும் படமாட்டீர்! என்று பலபல புத்திகள் கூறிக் கொண்டே சற்றுத் தூரம்போய் வழிவிட்டு வந்தனர்.

அவ்வளவில் தாஸர், கூடவரும் வர்த்தகர்களுடன் கலந்து போய், உப்பு நயமானவிடங்களில் வாங்கி மாடுகளின்மீது ஏற்றிக்கொண்டுபோய் பாலகாடு பிராந்தியங்களில் விற்று, அவ்விடத்திலிருந்து பெல்லம் பரிதிசெய்துகொண்டு பொதிகளில் மாடுகளின்பேரில் ஏற்றிக்கொண்டு நமது நாடுநோக்கிச் செல்லாநிற்கையில் மார்க்கத்தில் தாஸருக்கு ஸ்ரீ பண்டரீநாதனுடைய நினைப்பு வந்துவிட, ஹரி பரந்தாமா! அலர்மேல்மங்கை மணாளா! அச்சுதா! ஐவர் காதலினுடைய ஆபத்துத்தீர்த்த ஆயர்குலக்கொடியே! என்று ஆடுவதும், பாடுவதும், இருகைகளையுஞ் சிரமேற்றாக்கிக் கும்பிடுவதும், கோவர்த்தநத்தை யோர் விரலிற்றாக்கிச் சுமந்து கோக்களையுங் கோபாலர்களையுங் காத்தவா! என்று ஆநந்த பரவசங்கொள்ளுவதும், நாமங்கள் பலபல நவில்வதும், கீர்த்தநங்களைப் பாடுவதும், வெள்ளியங்கிரியோ னேத்தும் வீவிலின்பவிளக்கொளியே! என்று புகழுவதுமாய்க் கொண்டு மநமாதியாம் இந்திரியங்களை வேறுவகையினிற் செல்லவொட்டாமல் திருநாரணனது தேனேசொரியுந் திருவடியிணையையே சூழ்தரவிட்டுப் பெருமிடறு செய்து கீர்த்தித்து வராநிற்கையில், தடத்திருபுறமும் மலைகளும் வநங்களுமாயிருத்தலாலே இவர், ராமா! கோவிந்தா! மாதவா! கேசவா! என்று ஒலிக்குமதுபோலவே அவையும் மாற்றோசையாக ராமா! கோவிந்தா! கேசவா! என்று ஒலிக்கக்கேட்டு, இருபுஜம் நான்குபுஜமாகப் பூரிக்கப்பெற்று, ஆவா! ஈதுமொரு விந்தை யிருந்தபடிதானென்? சுத்த அசேதநங்களாகிற இம்மலைகளும், வநங்களும், காடுகளு மெல்லாம் ஸ்ரீ ஹரியை யொலித்து நின்றனவென்றால் இத்தனையும் அறிவில்லா மானிடர்களை யென்னென்று அழைப்பது? இவ்வசேதநங்களுக்கு இருந்ததொரு நற்புத்தியில் தினையளவும் ஆத்துமாக்களுக்கு இல்லாமற்போயிற்றே! அறிவில்லா மனிதரானாலும் அச்சுதவோ! என்று அழைப்பாராகில்பொறியில் வாழ் நரகமெல்லாம் புல்லெழுந்து அன்றேயொழியுமே! இவ்வளவு புத்தியில்லாமல் வீணேமாய்கிறார்களே! என்று இவ்வாறெல்லாம் இழிமந மாந்தரை யிகழ்ந்து கொண்டு, எம்பிரானெந்தையைப் பாடிக்கொண்டு, இன்பசாகரத்தில் ஆழ்ந்துகொண்டு, இணையில் குணலக் கூத்திசைத்துக் கொண்டு வராநிற்கையில், அவித்தியா சம்பந்தபரர்களாகும் வர்த்தகர்கள், கூடப்போனவர்கள், இவருடையஇசைப் பாட்டைக்கண்டு ஆச்சரியமுற்று, ஆநிரையோடு ஆனையையுங்காத்த ஆதிமூலப் பழம்பொருளின்மீது இவர்க்கு ஆநந்தம் பெருகிவிட்டது, ஆர்தான் அதையடக்கவல்லவர்; ஆவலி ஜீஜீபாயம்மாள் இவற்றையறியாமல் கடனுக்குப் பணம்வாங்கிக் கொடுத்து நம்மோடு இவரை

யனுப்பினுர்;நமக்கும் இவர்பைத்தியக்காரரென்று தெரியாமற்போய் விட்டது; அந்த பாந நித்திரைகளிலும் அலைப்பாற்றிலும் இவருக்கு இஷ்டமில்லாமல் அநந்தபதுமநாபன் மீதிலே தானே இஷ்டமிகப் பெருகி யிராநின்றது; அவனை யார்நினைக்கின்றுர்களோ அவர்களுக் கெல்லாந் தன்னைப்போல் வெளிப்படும் மநமுண்டாக்கு கின்றுன்; வேறொரு சிந்தனையும் வைக்கிறதே யில்லை; பிரியமாய்ப் பால் அருந்துவிக்கவந்த பூதகியினுடையஸ்தநங்களைப்பற்றி யுரிந்துஉயிர் செகவுண்டான்; இப்பேர்ப்பட்ட மாயனை இவர் நம்பிக்கையோடு பஜித்தலால்,தான் நம்முடன்கலந்திலர்; நாம் உப்புவிற்ற தேசத்தில்நம் நாட்டில் அகப்படாத அருமையான பண்டங்களைப் பெண்டு பிள்ளைகளுக்கு உகப்பாகுமென்று எண்ணி நாமெல்லாரும் வாங்கினுப்போலே தாமுந் தம்பெண்டாட்டிமாருக்கு வேண்டுமென்றெண்ணி யேதாவது ஒருகாசளவுக்கேனும் வாங்கினதுண்டா? இத்தகைய முதிர்ந்த பயித்தியக்காரரைச் சீக்கிரமாகக் கொண்டுபோய் ஜீஜீபாயம்மாளிடஞ் சேர்ப்பித்து விடவேண்டியது; இனி நம்மோடு இவரை யழைத்துக் கொண்டு வரலாகாதென்று எண்ணினவர்களாய், மாடுகளைச்சீக்கிரமா யோட்டிக்கொண்டு ஷெயர் என்னும் பட்டினம்வந்து, அங்கிருக்கும் வர்த்தகர்களுக்குகொண்டுவந்த பெல்லமெல்லாம்விற்றுவிட்டு,அதின் கிரயங்களைப் பெற்றுக்கொண்டு, தங்கள் தங்கள் மடிகளில் கட்டிக் கொண்டு, தாஸர்பணத்தையும் அவர் மடியில் கட்டி விட்டு, கடைத் தெருவுக்குப் பக்கமாக இருந்த விருக்ஷங்களில் மாடுகளைக் கட்டி, நிழலில்தங்கி யிருந்தார்கள்.

அவ்விடத்திற்கு ஓர் பிராமணன், தீக்ஷைபெற்று சோர்வு மிக வெய்தினவனுய்த் தன்மனையாட்டியோடு கடைவீதியில் திரிந்து திரிந்து காசு இரந்தும் அதனுல் அவ்வந்தணற்குத் திருப்தியில்லாமல் மநக்கவலையுடன், துக்காராமர் வீற்றிருந்த விருக்கத்துக்கு அருகில் வர, அவனைத் துக்காராம் நோக்கி, ஐய! நீர் தீக்ஷைபெற்று இப்படி கடைகள்தோறுந் திரிவானேன்? என்று வினவலும், அந்தப்பிராமணன், நானொரு கிராமத்துக்கு அதிகாரி, என் தாயாதிகள் அரசுரிமைக்குச் செலுத்துவதற்காக நான் முடிப்பிட்டிருந்த கிராமதண்டல் பணத்தில் இருநூறுரூபாய் களவு கொண்டார்கள்; அதனுல் அரசன் என்னைத் தண்டித்து, முடிவில் சங்கிலியொன்று எனக்குப்பூட்டி, அந்தப்பணத்தை யெந்தவகையிலாவது சம்பாதித்துக்கொண்டுவந்து கொடுத்தால்தான் சங்கிலி கழற்றப்படும்; இல்லாவிட்டால் உமதாயுள் உள்ளவரையிலும் ஈதே தண்டனையாகும் என்றனன்; நானும் பன்னிருவருஷமா யித்தீக்ஷையேற்று, மனையாட்டியோடு ஊரும்நாடும்

அலைந்தலைந்து படாத துயரமெல்லாம் பட்டுத் தீர்ந்து, ஆங்காங்கு இரந்து சென்றாலுங் கிடைக்கும்பணம் அன்றன்றாடம் வயிறு நிறப்பிக்கொள்ளுமட்டேயன்றி இதுவரையிலும் அவ்வளவந்நம்போய் காசளவும் மீந்தபாடில்லை; என்கடன் கழிந்தபாடுமில்லை; இராஜதண்டனை விட்டபாடுமில்லை; அதனால் மருங்குழம்பாநின்றது என்றனன். அவ்வளவில் புண்ணியசீலரில் தலைபாகும் துக்காராம் ஸ்வாமிகள் திருவுள்ளம் இளகினவராய், தம் மடியிலிருந்த திரவியத்தில் இருநூறு ரூபாயெண்ணிக்கொடுத்து, அந்தணனையும் அவன் மனையாட்டியையுங் கூட அழைத்துக்கொண்டுபோய் ராஜனுடைய கொலுமண்டபம் புகுந்து அங்கிருந்த பொக்கிஷதாரரிடம் அப்பணத்தைக் கொடுப்பித்து, அவரிடமிருந்து ரசிதொன்று வாங்கிக்கொடுத்து, சிறை நீக்க வைத்து, அந்தப் பிராமணன் வீட்டுக்குப்போய் க்ஷவரகனை யழைப்பித்து, தீக்ஷையை விடுவித்து, நீராடச்செய்து, அந்தப்பிராமண தம்பதிகளுக்கு வேஷ்டியுத்தரீயமுஞ் சேலையும் வாங்கிக்கொடுத்து உடுக்கவிட்டு, ஒருபது பிராமணர்களுக்கு அவர்கள் கையால் அறுசுவையோடு அந்நமிடுவித்தற்குச் சிலபணங்கொடுத்து, அடிசில்காரிய முடிந்து பிராமணர்கள் அமுதுண்டான பிறகு, சற்காரியத்தில் பொருள் செலவானமைக்கு மிகுசந்தோஷங்கொண்டு, அவர்களிடத்திலிருந்து உத்திரவு பெற்றுக்கொண்டு வருகையில் அவர்கள் இவருடைய உதாரகுண மேன்மையையும், எளிமையையுங்கண்டு, இவர் மகாநுபாவர், இவர் சாக்ஷாத் ஈசுவரனுடையவும் ஈசுவரியினுடையவும் அருள்பெற்றவர்; இவரொரு அவதாரபுருஷர்போல் காணுகின்றார். பொடிமூடு தணல்போன்றே தம்பெருமை தோன்றுவியாது சமுசாரத்தில் வசிக்கின்றார்; இவருடைய பிரபாவம் இருக்க இருக்க நன்கு விளக்கமாம் இவ்வுலகத்தவருக்கு; இப்பேர்ப்பட்ட திவ்வியபுருஷருக்கு நாம்செய்யுங் கைம்மாறு வேறொன்று நமக்குக் கிட்டாதாயினும் இவருக்கு உலகத்தாரது கண்ணெச்சில் வாராமைக்காக மங்களாசாரணையே அக்கைம்மாறாகக்கொண்டு வாழ்த்துவோமென்று உவந்து, பகவத் தியாநபூருவகமாகப் பலபல வாழ்த்துகள் வாழ்த்தி, சொஸ்திமங்களங்களும் சாந்திமங்களங்களும் உரைத்துப்போகவிடுத்தார்கள். தாஸரும் உள்ளங்குளிர்ந்து, உலகமுண்ட பெருவாயனும் உலப்பில் கீர்த்திமாயனை நினைந்துதொழுது, சௌகாரிடம் கடன் பெற்றுவந்து உதவின தம்மனையாட்டி கோபிப்பாள் என்பதைச் சற்றுன்னி, கூடவந்த வர்த்தகரோடு கலந்துகொண்டிருந்தார்.

இங்கிப்படியிருக்க, ஜீவதயாபரனும், ஜெகத்ரக்ஷகனும், ஜெகந்மோகநாகாரனும், சேஷ சயநனும், சுகாதீதப்பழம்பொருளும், தீந

ரக்ஷகனுமான செல்வநாரணன், தனது அன்பராகிய துக்காராம், பிராமணோத்தமர்கள் திறத்தில் அன்புமிகுத்துச்செய்த நல்லுபகார அருமைச்செயல்களுக்குச் சந்தோஷங்கொண்டு, இவர்மனைவி யறியா முன்னம் இவர்பட்ட கடனைச் செலுத்திவிட வேண்டுமென்று திருவுள்ளம்பாரித்து, துக்காவைப்போல உருவெடுத்துக்கொண்டு, ஆவலி ஜீஜீபாயம்மாளுக்குக் கடன்கொடுத்திருந்த சௌகாரிடம் போய், ஹரிவிடேல்! பாண்டுரங்கா! என்று உட்கார்ந்துகொண்டு, என்மனைவி உமக்கெழுதித்தந்த தஸ்தாவேஜைக் கொண்டுவாரும், இதோபணங்கொண்டுவந்திருக்கிறேன்; வட்டியுடன் பெற்றுக்கொள்ளும் என்றுரைத்து, பணத்தையெண்ணி,இருநூறுரூபாய் முதலும், அதற்கேற்ற வட்டியுங் கீழேவைத்துவிட, அந்தச்சௌகாரும் அப்பணத்தை யெடுத்துகொண்டு, ஜீஜீபாயம்மாள் எழுதிக்கொடுத்த தஸ்தாவேஜில்செல்லுஎழுதித்தர, அந்ததஸ்தாவேஜையும், அதோடு கூட ஐந்துவராகனையும் அந்தச்சௌகாரிடமேகொடுத்து, நீரே கொண்டுபோய் இவற்றை என்பெண்ஜாதியிடங் கொடுத்துவாரும், நானின்னுஞ் சற்றுநேரம் பொருத்து வருகிறேன் என்று சொல்லி அங்கேயே யுட்கார்ந்திருக்க, சௌகாரானவன் தஸ்தாவேஜையும், ஐந்து வராகனையுங் கொண்டுபோய், ஆவலி ஜீஜீபாயம்மாள் கையில் கொடுத்து, உன்கணவர்எனக்குச்சேரவேண்டிய தொகையையும் வட்டியையுங் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, தஸ்தாவேஜையும், இந்த ஐந்து வராகனையும் உம்மிடங் கொண்டுபோய்க் கொடுக்கும்படிச்சொல்லி, என்வீட்டில் தானே பஜனைசெய்துகொண்டு இருக்கின்றார் என்று உரைத்துத் தம் இருப்பிடத்திற்குத் திரும்பி வந்துவிட்டார்.

ஜீஜீபாயம்மாள், தங்கணவர் இராத்திரிக்கு வருவாரென்று நற்சுவை பதார்த்தங்களோடு அடிசில் சமைத்து வைத்துக்கொண்டு வெகுநேரங்காத்தும் அவர் வரக்காணாமையாலே, சௌகார் வீட்டில் தான் பஜனைசெய்துகொண்டு இருப்பார் என்று எண்ணி, சௌகார் வீட்டிற்குப்போய் அவரைக்கேட்க, அம்மா! நான் தங்களிடம் வரும் போது இவ்விடத்தில் பஜனைசெய்துகொண்டிருந்தார்; தங்களிடத்திலிருந்து திரும்பிவந்து பார்க்க இங்கவர் இல்லை எங்கேயோ போய் விட்டார்; ஒருவேளை கோயிலுக்குப் போயிருக்கவேண்டும் என்றனன். அந்தம்மாளும், சந்நிதிக்கே போயிருக்கவேண்டும் என்று அங்கேபோய் சுற்றிலும் பார்த்துங் காணாமையாலே, தமது வீட்டுக்குவந்து அவர் வரவுக்கு எதிர்பார்த்திருந்தார். துக்காராமரும் மூன்றுநாள் பொறுத்து வர்த்தகர்களோடு வந்து ஊர்சேர்ந்து, திருமாளிகையில்புகுந்தமாத்திரையானே ஆவலிஜீஜியைப்பார்த்து விய

பாரிகள், அம்மா! உம்முடைய கணவரை இருநூறுரூபாய் கடன் வாங்கிக்கொடுத்து எங்களோடு உப்பு வர்த்தகத்துக்காக அனுப்பினீர்; நாங்கள் இன்னின்னபடி வியாபாரம் பண்ணினோம்; அதில் இத்தனை லாபங்கிடைத்தது; உமது கணவனார் வழியில்ஓர்பிராமணன் இருநூறுரூபாய்க்காக ராஜதண்டனையேற்றுச்சிறையிலிருக்க, அவனை மீட்பிக்குமாறு இருநூறு ரூபாயைக் கொடுத்து, அவன் தீக்ஷை விடுவித்துப் பிராமண சந்தர்ப்பணமும் பண்ணினார்; அதனால் கையிலிருந்த பணமெல்லாஞ் செலவழிந்துவிட்டது; நாங்கள் எவ்வளவோ புத்திசொல்லிப்பார்த்தோம்; எங்கள்சொல்லைக்கேட்காமலேயே பணத்தை விரயம்பண்ணிவிட்டார்; இவ்விஷயத்தில் எங்கள்மீது குற்றம் ஒன்றுமில்லை; உமது புருஷனுடைய புத்தி அவ்வளவா யிருந்தது; சற்றும் சமுசாரத்தில் நோக்கே யில்லை; பிறர்சொல்லைக் கேட்குந் தன்மையரேயல்லர் என்று சொன்னார்கள். அதற்கு இவ்வம்மையார் அதிசயங்கொண்டு, ஈதென்ன ஆச்சரியம்! மூன்றுநாளைக்கு முன்னதாக, நான் எந்தச்சௌகாரிடங் கடன்பட்டேனோ அந்தச்சௌகாருக்கு எனது நாயகர் நேரிலேபோய் வட்டியும் அசலுங் கொடுத்துவிட்டு, நானெழுதிக்கொடுத்த கடன்பத்திரத்தில் சௌகார்கையெழுத்துடன் செல்லெழுதுவித்து அந்தப்பத்திரத்துடன் வீட்டுச்செலவுகளுக்காக ஐந்து வராகனையும் என்னிடத்திற்கு அந்தச் சௌகார் வசமேயனுப்பிவைத்தார்; இதோ அந்தப்பத்திரமிருக்கிறது பாருங்களென்று சொல்லிப் பத்திரத்தை யவர்களுக்குக்காட்ட, அவர்களும் ஒருவர்முகத்தை யொருவர்பார்த்துப் பிரமையடைந்து, அம்மா! நாங்கள் பொய்யுரைத்தோம் அல்லோம்; இவரும் இன்றளவும் எங்களை விட்டுப் பிரிந்திருந்ததே கிடையாது; ஏதோ மாயாகாரியமா யிரா நின்றதென்று சொல்லி, தங்கள் தங்கள் வீடுகளுக்குப் போய்விட்டார்கள்.

தாஸர் இவற்றையெல்லாங் கேட்டிருந்து, ஓ ஓ! ஒப்பறு கருமணி மேனியானது உகந்த திருச்செயலே யீதாகவேண்டும். என்று உன்னி, கேசவா! கிளரொளிமூர்த்தீ! கேடிலீ! கிருபையங் குன்றே! புண்டரீகருக்காகப் பொலிவுறு கோவில்கொண்ட புருடோத்தமா! புராணபுருஷா! பூமியையளந்த பூம்பாதமுடைப்புண்ணியா! பூவைப் பூவண்ணா! போதில்வரு நங்கை மணாளா! காசினியோர்க்கு அறிவரிய கருணையங் கடலே! கபடநாடகனே! இத்தனை யடியரானார்க்கு இரங்கியருளும் இறையே! எந்தை யெம்மானே! என்மனையாட்டி பட்டதொரு கடனுக்காக ஏழை யேதிலேனுடைய ரூபத்தால் அக் கடனளித்த சௌகாரிடம் எழுந்தருளிக் கடன் தீர்த்துக் கடுங்கபடு

கள் இழைத்த கருணையானே! காகுத்தா' கஜேந்திரனைக் கடுதுயரினின்றும் கரையேற்றியருளின கமலக்கண்ணு! என்று இறைஞ்சி, கண்களிலிருந்து ஆநந்தநீர் வெள்ளமிட்டு ஓட, மயிர்ச்சுணங்கையெறிய, தோள்துலுக்கப் பரவசமடைந்து, ஆநந்தவெள்ளத்திற் படிந்து, வேறு சிந்தை கலத்தலில்லாத மநத்தராயிருந்தார்.

கூடப்போயிருந்த வர்த்தகர்கள் இவ்வற்புதச்செயல்களைக்கேட்டுத் தங்கள் தங்கள் வீடுகளுக்குப் போய், பெண்டுபிள்ளைகளுக்கும், அக்கம் பக்கங்களில் இருந்தவர்களுக்கும் அறிவிக்க, அவர்களுந் தங்கள் தங்களிஷ்டர்களுக்கு அறிவிக்க, இப்படியே ஊரும் நாடுமெங்கும், பரவிப்போய், அங்கங்கு ஜநங்கள் கூட்டங் கூட்டமாய்க் கூடிப் பேசிக்கொண்டதாவது:—பெம்மான் பெருமையோதும் பெற்றிமையாளருடைய பிரபாவம் இம்மட்டோ! இன்னும் அநந்தம் உண்டாகலாம்; இவ்வண்டங்களை மாற்றவெனினும் அவர்களால் முடியுமென்னும்போது இந்தக்காரியம் அருமையோ! தேவுமற் றறியாதார்திறத்தத்தேவே யன்றோ தீராத்துணையாவது? இத்துக்காராம் ஞாநியர்க்கு அரசானமைகொண்டு ஞாநப்பிரான் தமரையாளுவான் அவர்போன்ற திருவுருவங் கொண்டுவந்து துணைசெய்தனன் என்றும், இவர் இந்திர மகேந்திரங்களாகும் மாஜாலங்களைக்கற்றவர், ஆகையால்தான் இப்படி பிறரால் செய்ய அரியனவற்றைச் செய்கிறார் என்றும், மேலுக்கு இவர் நல்ல ஞாநியெனப் பகட்டுக் காட்டிக்கொண்டு, உள்ளுக்குள் பலபல வகையாலும் பணஞ் சம்பாதித்துப் பிறர்க்கு அறியவொட்டாமல் பெண்டு பெண்டாட்டிகளுக்குப் பெருநிதி சேர்த்து வைக்கின்றார். இவர்கொண்ட ஞாநவேடம் ஊர்மயங்குவதற்காக; இதனை யறிந்துகொள்ளாமல் எல்லாரும் மயங்கி ஞாநியென்று கொண்டாடுகிறார்கள் இத்தனை; பொருள்சம்பாதிக்க வேறு உபாயமின்மையில் இவர், அல்லும்பகலும் ஹரிவிடேல்! பாண்டுரங்கா! என்றிருந்தால் நம்மை ஞாநியென்று உலகத்தார் மயங்கி நமது பேராசைக்கேற்ற பொருளீவார்; மேலும் முன் நாம் பட்டகடன் தீர்க்கவேண்டுமே அதற்காகவும் இந்தச்சாதகம் பயனுகும், இந்தக் கோலங்கொண்டிருந்தால் கொடுத்தவர்கள் இவன் பாசகன் என்று மதித்துக் கடன்கேளாமல் விட்டுவிடுவார்கள் என்றெண்ணித் திருட்டுவேடம் பூண்டிருக்கின்றார்; இவ்விஷயங்களைக்கொண்டு அவரைநம்பக் கூடாது; ஞாநிக்கு இரண்டு மனையாட்டிகள் எதுக்கு? என்றும், நாங்கள் திருமண்குறி கனக்கத்தீட்டி, திருவிளச்சினை தொடக்கமான தீக்ஷைகளெல்லாம் ஆசாரியனால் பெற்று, இணையில்லாத பிரபந்நர்களென்று நாடும் நகரமும் நன்கறிந்து மதிக்க இருக்கின்றோம். நாங்

கள் படித்த சாஸ்திரங்களோ அளவில்லன; வேதங்களில் சிறிதும் பாக்கியில்லாமல் படித்துக்கொண்டோம்; நாங்களறியாத ரகசியம் ஒன்றுமேயில்லை; எல்லாவற்றையும் நாங்கள் கரைகண்டு விட்டோம்; பிறப்பிலும் நல்குடி பிறந்தோம்; மதஸ்தாபக விஷயங்களும் அநந்த மறிவோம்; தருக்க மீமாஞ்சைகளில் எங்களுக்கு இணையில்லை; ஆசார அநுஷ்டாநங்களிலுந் தேர்ச்சியடைந் திருக்கின்றோம்; சாமாநிய ஜநங்களுடைய ஸ்பரிசமே யெங்களுக்குக் கிடையாது; ஆசாரிய பதம் நிருவகித்து வருகின்றோம்; ஈஸ்வரநிஷ்டையிலும் ஆத்துமநிஷ்டையிலும் எங்களுக்கு நிகரில்லை; ஜோதித் தரிசநத்திலுஞ் சிறந்தவர்களாகின்றோம்; இப்படிப்பட்ட எங்களுக்கில்லாத ஞாநமா இவருக்கு இருக்கப் போகிறது? நாங்களே யொன்றும் அறியாதவர்கள் போல் மூலையிற் பதுங்கியிருக்கின்றோம்; ஒன்றிலும் யோக்கியமற்ற இவர் ஊர்பகட்டுக்காக ஞாநியெனத் திரிந்தால் ஞாநியாய்விடுவாரோ? இவருக்கொரு சாத்திரமாவது தெரியுமா? அல்லது ஞாநயோக்கியமான ஒன்றிலும் பயிற்சியுண்டா? இவர் சூத்திராயிற்றே? இவருக்கு எப்படி ஞாநப் பயிற்சியும், அதனைப் பயிலும் வேதமுந் தெரியக் கூடும்? ஞாநியர்க்கே யறியப்படாத நாராயணன் இவர்க்கு எப்படி யறியப்பட்டான்? இவைகளெல்லாம் பிராந்தியின் வீண்காரியங்கள்; அநந்த கலியாண குணங்களையுடைய அவ்வாதியஞ் சோதியானுக்கு உருவேயில்லை யென்று உபநிடதங்கள் ஓதாநிற்க; இவனெப்படி உருவெடுத்துக்கொண்டு சௌகார் வீட்டிற்கு வந்தான்? அப்படி வந்திருப்பானாயினும் அவன் கடவுளாவனா? இந்தத் துக்காராமரே நேரில் போயிருந்து பிறகு மூன்றுநாளளவு மறைந்திருக்க வேண்டும்! இல்லாவிடில் இவருக்காக ஈசுவரன் இவருடைய ரூபம்பெற்று வருவதென்ன! இவைகளெல்லாஞ் சேராச்சேர்த்தியான விந்தைகள்; சுவாமியே சௌகார்வீட்டிற்கு வந்தது உண்மையாயின் அவனது கால்கள் பட்டவிடமெங்கும் சொர்ணமயமா யிருக்கவேண்டுமல்லவா? சௌகாருக்கு ஒன்றுலுங் குறைவற்றிருக்கவேண்டுமே? அப்படிக்கு ஒன்றும் விளங்கக் காண்கிலோமே; சிறுபிள்ளைகள் பூச்சிகாட்டுவது போல் இவர் நமக்குப் பிரமை காட்டுகின்றார்; இவைகள்யாவும் நம்பப்படாதன; இவையெல்லாம் துக்காராமருடைய இளையபெண்டாட்டியினுடைய சாதுரியமல்லது வேறொன்றுமல்ல; தான் சௌகாரிடம் பணத்தைக் கடன்வாங்கினதோ உண்மைதான்? அந்தப்பணத்தைத் தமது தகப்பனாரிடத்திலிருந்துவரவழைத்து, அசல்அறியாதே வேற்றொருக்குத் தந்நாயகனைப்போல் வேஷம்போடுவித்துப் பணத்தை யவன்கையில் கொடுத்துச்சௌகாரிடம் அனுப்பி, தன்முதலும் வட்டி

யும் போக மீதியான ஐந்துவராகனையும் தஸ்தாவேஜையும் அவனே கொண்டுவந்து தன்னிடந் தரச்செய்து, ஊரிலுள்ள நாமெல்லாம் மயங்குமாறு, கடவுளேவந்து பணங்கொடுத்தாரென்று வெளிச்சம்போட்டு, இனி யாரிடமாவது கடன்கேட்டால் இவ்வதிசயத்தைக்கண்டு எல்லாருங் கேட்காமுன்னிட்டே ஆயிரம் பதினாயிரமாகக் கடன் கொடுத்து விடுவார்கள் ; அவைகளை மோசம்பண்ணி யபகரித்துக் கொண்டால் பிறகு சுகிக்கலாமென்று எண்ணினார். இதுஜீஜா கட்டிவிட்ட கட்டு; நாங்களோ துக்காராமரை வைஷ்ணவரென்று மதிக்கவே மாட்டோம்; அவர் சுத்த சாமாநியர்; தேகசுத்தி யில்லாதவர்; தேகமே சுத்திபெறாதபோது ஆத்துமா எப்படிசுத்திபெறும்? தன் கஷ்டங்கழிய கூக்குரல் இடுகின்றாரேயன்றி உண்மையாகவன்று; முதலே திருமண் இடுகிறதற்குச் செவ்வையாய்த் தெரியாது; நல்லாசாரியனையடுத்தவரல்ல; திருமந்திரம்முதலான ரகசியங்களொன்றுந் தெரியாது. இவர் தான்தோன்றியாய்த் திரிபவரேயன்றி சத்சாம்பிரதாயம் ஒன்றுந்தெரியாது ; இருமனையாட்டிகளையுஞ் சுகமாக வைத்துக் காப்பாற்றி, அவர்கள்தரும் இன்பவெள்ளத்தில் அழுந்தி நிற்கப் பார்க்கின்றார். பிக்ஷைக்காரர் வயிற்று ஜீவனார்த்தம் கோவிந்தா! ராமா! மாதவா! மதுசூதா! என்பதுபோல், இவரும் பொறிபுலன் நுகரும் போகத்தைப் பெருக்குவதற்காகப் பெண்டாட்டிகளைப் பேணிப்போர இவ்வேடம் பூண்டனர்இத்தனை; இவர்சந்தைகள் தோறும் போய் பணஞ்சம்பாதிப்பதற்காகக் கூவிக்கூவி யலறினும் இவரிஷ்டத்துக்கேற்ற பணமெங்குங் கிடைத்திலது; இவர் சுத்தபடி; இச்சாமாநியருடைய முகத்தில் விழிக்கவே யாகாது; இவ்வூரில் சதாசாரியனுடைய அருளால்ரகசியசாரங்களை யெல்லாமறிந்த பெரியோர்களாகிய நாங்களிருக்கும்போதே, இந்தத் துக்கா தமக்கு ஈடானவர்கள் யாருமில்லையென்று தாந்தோன்றியாய்த் திரிகின்றார்; நாங்கள் திருமந்திரார்த்த ரகசியங்களில் ஒருகேள்வி கேட்கின்றோம், அதற்குமாத்திரந் தக்கசமாதானஞ்சொல்லுவாராகில்சரிதான்,அவர்க்கென்ன தெரியும்? நாங்களோ எங்களாசாரிய நியமநத்திற்கு அஞ்சியிருக்கின்றோம்; இவர் ஆசாரிய நிஷ்டையுடையவரல்ல; எங்களுக்குக் காமாதிகள் தலையெடுக்குமாகில் ஆசாரியர் கற்பித்துக்கொடுத்த மந்திரத்தை யுச்சரித்த மாத்திரத்தில் அகன்றுவிடும்; அவருக்கு வரின் அநுபவித்தாலல்லது தீராது; நாங்கள் அறுசுவையோ அடிசிலைப் பெருமாளுக்கு அர்ப்பிதமாக்கி யுண்போம்; இவரோ கீரையும் ரொட்டியும் பெருமாளுக்குச் சமர்ப்பிக்கின்றார்; அதனால் பெருமாளுக்குக்கோபமேயொழிய யுகப்பன்று; இது அவருக்குத்தெரியாது;

தெரியாமையினால் அப்படிச் செய்து வருகின்றார்; இனிமேல் யாராவது துக்காராமருக்கும் அவர் மனையாளுக்குங் கடனளித்தால் மறுபடியும்வாராது; ஜீஜாவின் தந்தை யெவ்வளவுதான் இவர்கள் இழவுக்கு அளித்துத் தாரைவார்ப்பான்? எத்தனை தடவைதான் கொடுப்பான்; மகளுடைய பித்தலாட்டங்களை அறிந்துகொண்டிருப்பான்? என்று இவ்வாறெல்லாம் பல்பல வழங்குப்பாடுகளை வழங்கிக்கொண்டார்கள். அவற்றிற் கேட்டோரிற் சில்லோர், இவர்கள் பிரபந்நர்கள் என்பதிற் சந்தேகமில்லை; பேராளன் பேரோதும் பெரியோரிவர்களே; இவர்களறியாதது உலகில் ஒன்றுமில்லை; இவர்கள் படிக்காத சாத்திரமுமில்லை ; இவர்களைச் சுலபர்களென்று எண்ணலாகாது; இவர்கள் வார்த்தைகளையுந் தடுக்கலாகாது ; இவர்கள் சொல்லுவதெல்லாம் வேதவாக்கியங்களோடு ஒக்கும்; இவர்களுக்கு ராஜாங்கத்தில் பெருபெருத்த வுத்தியோகஞ் செய்பவர்களும், பெருத்த வியாபாரிகளும் சிஷ்யர்களாயிருக்கின்றார்கள்; இவர்களுடைய வீடுகளிலும் வெள்ளிச் சங்கிலிகள் பூட்டிய ஊஞ்சலில் குழந்தைகள் விளையாடா நிற்கும்; இவர்களும் தேவிகளும், நவரத்தின கசிதமான பூஷணங்களைப் பூட்டிக்கொண்டு, இழைஆயிரம்பொன்பெற்ற ஆடைகளையுடுத்திக்கொண்டு, கதம்பகஸ்தூரிகளை யணிந்து, தங்கச் சங்கிலிகள் பூட்டிய ஊஞ்சலில் இன்பமாய் விளையாடுவார்கள்; இவர்கள் சொல்லும் வார்த்தையே நமக்குக் கர்த்தவ்யம்; அவற்றை நம்பினால் பரமபதம் நமக்கு எளிதில்கிடைக்கும்; பொருளும்விரையமில்லாமலேயே நமக்குப் போதிப்பார்கள்; இதுவே நமக்கு நலமாகும்; ஆகையால், இவர்கள் நமக்கு ஆஜ்ஞையளித்தபடி இன்று தொடங்கி துக்காசேட்டுக்கும், அவர் பெண்டாட்டிகளுக்கும் நம்மில்யாருங் கடன்கொடுக்கலாகாது என்று திட்டஞ்செய்துகொண்டார்கள்.

இப்படியிருக்க, சிலநாள் சென்றபிறகு ஊரில் * க்ஷாமம்வந்து, பஞ்சை பநாதிகளோடு பணக்காரரோடு பேதமில்லாமல் அமுதுக்கு அலைந்தும், அழகிய மாரி சொரியாமல் நிலனெங்குந் தீக்கொளுவி வெந்ததொத்துப் புல்பூண்டுகளென்னும் பெயரேயொழிந்து, வெறுந்தரையானமையால் மாடுமுதலிய நாற்கால் ஜீவன்களில் ஒன்றொழியாமலிறந்தன; இப்படிப்பிராணிகள் மிகுதாபப்படுங்காலத்தில் ஸ்வாமிகள் இவற்றையெல்லாங் கண்டு சகியாமல் பகவானை பஜித்துப் பொழுதுபோக்கி வராநிற்கையில், இவர் மாளிகையிலிருந்த பெண்டாட்டி பிள்ளைகளுக்கும் அப்பஞ்சத்தால் வெம்பசிநோய் மிஞ்சி, அஞ்சலின்றி வீடுகள்தோறும் போய் பல்பன்னிரண்டுங்காட்டி கெஞ்

* க்ஷாமம் - பஞ்சம்.

சிக்கெஞ்சி அமுது இரப்பினும் உதவுவாரில்லாமல், இக்குடும்பத்தாரை முன்னெல்லாஞ் சமாநித்துப் போந்தவர் இஞ்ஞான்று அவமாநமுறப் பேசுபவராய், ரூபாய்க்கு இரண்டுமரக்கால் தாநியமுங் கிடைக்கப்பெருக் காரணத்தால், எத்தனை திரவியங் குவியல் குவியலாகக் குவித்துவைத்து இருப்பவர்களுங்கூட ஒரு ஆத்துமத்தளவிலேயும் ஆதரிப்பதற்கு அஞ்சுந் தன்மையுடைய காலவிசேஷத்தால் சற்றும் ஆதரிப்பாரின்றிக் கடுந்துயர்கொள்ள; அதனைக்கண்டு ஸ்வாமிகள் மநமெள்கி, தாமே அவ்வூரில் பண்டு தமக்கு உபகாரிகளாயிருந்தார் பலர் வீடுகளிலுஞ்சென்று கடன்கேட்டும் ஓர் காசளவேனும் பெருமல் அலைந்து தம்மினத்தார் வீடுகளிற்புகுந்து அந்நமிரக்க, அவர்களிற் சிலர், ஏது இப்பஞ்சத்தில் இவரும் நம்மைப் பாதியாநின்ருரென்று எண்ணி, ஓய்! இனி யெங்கள் வீட்டிற்கு வரவேண்டாங் காண்! என்று, இவர் கைகளைப்பற்றி வெளியேகொண்டுவந்து விட்டுக் கபாடம் அடைத்துக்கொண்டார்கள். இவருக்கு இவ்வூரிலுள்ளார் யாரும் இனியுதவக்கூடாது என்கிற கட்டுப்பாடு முன்னுண்டாயிருந்தமையால் இவர்க்கு வாய்த்த துயருக்கு அளவின்று.

இந்தத் துக்காராமர் வெகுவிரக்த ராயிற்றே, எவ்வளவுதான் பஞ்சம்வரினும் பிறர்வீடுபோ யலையலாமா? இரக்கலாமா? அவர்களும் அபசாரத்துக்கு அஞ்சாமல் நிராகரித்து இவர்கைப்பற்றி வெளியில் விடும்படிச் செய்துகொள்ளலாமா எனின்? ஈயைத்தின்றவன் வாந்திசெய்யுங்கால் கண்டவருண்டாளுல், நான் ஈயினைத்தின்றதால் இவ்வாந்தி வரப்பெற்றதென்று உரைக்காமல், ஏதோ மார்பிலொரு குற்றமிருந்து வாந்திபண்ணினேன் என்பதுபோல சாதநசதுஷ்டயங்களின் மிக்கோர் தமக்குக் கைவந்திருக்குஞ் சாதநங்களால் தங்களைத்தாங்கள் வெளிபுறுத்திக்கொண்டு, அத்தால் பிறரால் பூஜாடம்பரங்களைப் பெறற்குவெருவி, பிறருக்குத் தம்மறியாமையையே காட்டி வருவது ஸித்தம். இதையொழித்து யார் தங்களை விசேஷஞ்ஞுரென்று வெளிப்படுத்திக்கொண்டு பாமரஜநங்களால் மதிப்படைந்து பூஜாதி டாம்பீகங்களைக் கொள்ளுகின்ருர்களோ அவர்கள் வயிறு கடத்தற்குப் பூண்ட வேஷதாரிகளேயன்றி தீவிரதரர் அன்று. அறிவின் முதிர்ச்சியுள்ளார் ஆடம்பரங்களுக்கு அஞ்சுவார்கள். அதுபோல் துக்காராமரும், ஸாதந சதுஷ்டய ஸம்பந்நரும், அறிஞரில் தலையும் ஆனமையால், ஈசுவரனுகும் ஸ்ரீமந்நாராயணனை யிருமுறை தாம் பிரத்தியக்ஷமாகச் சேவிக்கப்பெற்று, அதனுல் உலகில் கீர்த்திகிளர்ந்தோங்கியதும் மறைவு படுமாறு மிகு எளியவர்போல் நடைகாட்டி, பிறர் விசேஷஞ்ஞர் என்று மதிக்கச்செய்யாமல் எல்லாவகை

யாலுந் தாழ்ந்தவரென்று நாட்டார் கொள்ளுவதற்காகத் தம்மைத் தாழ்மைபடுத்திக்கொண்டே வந்தனர் இத்தனை. ஆத்துமாக்களுக்கு தாஸத்துவமும் நைச்சியமுமே சற்கதிக்குரிய சாதனங்களாகையால் அந்தப்படியைத் தவிர்த்தல் செய்யாமலிருந்தார். மேலும், வேத - வேதாந்த - இதிஹாஸ புராணுதிகளைப்படித்து யாரேனும் பண்டிதர் கருத்துகள் விளங்க வுபந்நியஸித்ததுண்டானல் அங்கெல்லாம் போய், ஒன்றுந்தெரியாதவரைப்போல் கேட்டுக்கொண்டிருந்து முடிவில் ஆநந்தங்கொண்டு, உபந்நியாஸபரரையும்வணங்கிவியப்பதெய்தி வருவார்; யாரேனுங்கூடி தம்மையே நிந்தித்ததுண்டானல் அங்கவர்களைக் கிட்டி, ஐயா! எனக்கு இவ்வளவு புத்திசொல்லும் உபகாரிகள் இவ்வுலகில் யாரிருக்கின்றார்? இன்று உங்களுடைய புத்திகளைக் கேட்டேனே நாளைதொடங்கி யுங்களுக்கு என்மீது இத்தனை கோபமுண்டாக நடந்துகொள்ளமாட்டேன்; ஈதளவும் யான் தங்களுக்குத் தெரியாமற்செய்த குற்றங்களைப் பொறுக்கவேண்டும் என்று வீழ்ந்து வீழ்ந்து பணிந்து க்ஷமிக்கப் பிரார்த்திப்பார். இப்படியெல்லாம் நடந்துகொண்டமையால் தான் இவருக்கு இராகத் துவேஷங்கள் அடியோடுமாண்டு, அகங்கார மமகாரங்கள் அடங்கி, ஈசுவரபக்தியும் நாளுக்குநாள் மிஞ்சியது. இவ்வழி நிற்றிலராயின், இராகத் துவேஷாதிகள் வலிவேற்று, அகங்கார மமகாரங்கள் தலைமண்டை கொண்டு, அருள்கெட்டு, மருளடைந்து, வீண்வேஷதாரியாய்ப் புரண்டுபோகவன்றோ அடுக்கும்?

இங்ஙனம்நிற்க, துக்காராமர் பஞ்சகாலத்தின் பண்பால் தாமும் மனைபாட்டிகளும் மக்களும் நைவதிற்சகியாமல் தமக்கு நெருங்கின பாத்தியஸ்தர்கள் வீடுகளுக்குச் சென்று, நாங்களிந்த க்ஷாமத்தால் வீணில் மடிந்து போகின்றோம்; பிள்ளைகள் பெண்டுகளோடு பட்டினியாய்க் கிடக்கின்றோம்; இச்சமயம் உங்களால் தோன்றினவளவு கடனுதவிக் காப்பாற்றுவீர்களாகில் க்ஷாமம் நீங்கி க்ஷேமமான வுடனே ஏதாவது கஷ்டப்பட்டு உங்களுடைமையைச் செலுத்திவிடுகிறேன் என்று இரந்து கேட்டும், ஒருகாசளவேனும் பிறவாமலேயே போயிற்று; தாம் போய்க் கேட்டஇடங்களில் கேட்ட வஸ்து பிறக்காத குறைமாத்திரமன்று; அத்தோடு வைவாரெத்தனை அவ்வசை மொழிகளை யெல்லாம் லக்ஷியப்படுத்தாமல் இருப்பார்; சிருஷ்டி - ஸ்திதி - சம்மாரங்களைச் செய்யவெனினும் எளிதிற் செய்யக்கூடிய அநுக்கிரகம்பெற்றவரேயாயினும்தம்பக்ஷம் விரோதிகளாவார்க்குஞ் சிறிதுந் தீங்குசெய்யக் கினவிலும் நினைத்தவரன்று; "தான் கெடினுந் தக்கார்க்கேடெண்ணற்க" என்றபடி, தாங் கெடினும் பிறர்கெடாமல்

நன்மையாயிருக்கக்கண்டால் அதுவே தம்நல்வாழ்க்கையென்றுஎண்ணிவாழ்வார். தங்கள் நாயகரைவிட தெய்வம் தவம் வேறுளதென்றும் மதியா மங்கைமார் சிந்தைபோன்ற தூயதாய மநமதிற் சற்றும் மாறுகொண்டிலர். நிறைக்காக்குங் காப்பினைத் தலையாகக் கொண்டு மனைத்தக்க மாண்புடையளாகித் தன்னைக்கொண்டவன் வளத்தக்க வாழ்க்கையுடைய கற்புமகள், தன்னுடலில் அமைந்த வுருப்புகளனைத்தையுந் தன் கொழுநன் ஒருவனுடைய இஷ்டத்திற்கே வழங்க அழைத்துக்கொண்டவளாதல்போல இவரும், தமது எண்பதுகோடி ஸங்கற்பங்களையும் இறைவனுகும் ஸ்ரீ விடலதேவனுக்கே உரியனவாக்கி, வேறு வகைகளில் அவற்றை விநியோகங் கொள்ளாமல் மெய்ம்மையினராய் விளங்குவதினுல் இராஜஸ தாமஸங்கள் எவ்வளவுங் கலவாமல், ஞாநம் - அருள் - தவம் - பொறை - வாய்மை - மேன்மை - மௌநம் - பொறி யடக்கலாகும் எண்வகைச் சத்துவ குணங்களை யாளுந் தன்மையராய் விளங்குவராயினர். ஆதற்கொண்டே யிவரை யெண்குண மூர்த்தியென்று வழங்கிவருவது- அகலியை, சீதை, தாரை, மண்டோதரிகளோடு சேர்த்துப் பஞ்சகன்னிகைகளெனப் படிக்கப்பட்டிருக்குந் துரோபதா தேவியைக்கண்டு, கருந்தேவனுங் கண்ணபிரான் பண்டு கானகத்திடை, உதிர்ந்த கனி மறுபடியும் விருக்ஷத்தில் ஒட்டும்படிச்செய்வாய், ஏ! பாஞ்சாலன் பயந்தெடுத்த பெண்ணணங்கே! நீபதிவிரதையென்பது உண்மையாயின் இக்கருமம் ஆற்றுவாயாக! என்று புகலலும், துரோபதை தொல்புகழ் வானவரீசனை நோக்கி, நான் கற்பினளென்று; அன்றோர் தன்மை அடியாளுக்கு எப்படிவாய்க்கும்? என்னைக் கற்புப் பெண்ணெனமதித்தலடாது;எவ்வமயம் அவரைக்கருதினறே அறிந்துரைக்கிலேன் என்றுரைத்தது அறிந்தேயுள்ளேமன்றே! அவ்வகை யுரைத்தது தம்மை வியக்குருமல், "தம்மின் மெலியாரைநோக்கித் தமதுடைமை, அம்மா பெரிதென் றகமகிழ்க - தம்மினங், கற்றுரைநோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம், எற்றே யிவர்க்குநாமென்று" என்கிற நீதிநெறியின்படி தம்மை மதித்ததன்றே? அஃதன்றே அறிஞர்க்கொள் ஆதிக்கியம்? இன்பம் நயவாமை நன்றுதல் போல தன்னை வியவாமையன்றே வியப்பு? அதுபோன்றே கண்டீர் இவருந் தம்மை வியவாமைக்கு உறுதிகொண்டது. "அடக்க மமரருளுய்க்கு மடங்காமை யாரிருளுய்த்துவிடும்" என்று, தாமடங்குந்தோறுந் தன்மைவிளங்கும்;ஆனைக்குந் தன்பலம் அறியவரிது, "தன் பெருமை தானறியாத் தத்துவன்" என்று ஜகந்நாதனுந் தண்ணியரால் புகழப்பட்டுள்ளான். இவற்றையெல்லாம் நன்கோர்ந்துள்ள தாம்

அவ்வோர்த்தற்கிணங்கி யொடுங்குதல் பெருது நிற்பரோ? ஆங்கு அடக்கங்கொண்டு நிற்றலால் இவர்க்கொரு குறைவுபாடு வரவற்ளுே? துரௌபதை தன்னை அபதிவிரதையென்று கூறிக்கொண்டவளவில் அபதிவிரதையாய் விடுவளோ? அவள் அபதிவிரதையாயின், ஆண்டுக்கு ஒருமுறை ஐவரில் ஒருவரிடத்திலிருந்து வேஞெருவருக்கு அடிமைசெய்ய மாறப்பெறுந் தருணத்தில் தீக்குண்டத்திலாடி வேறுரு கொள்ளவல்லளோ? பண்டு ஜமதக்கிநி பகவானுடைய தேவி ரேணுகை என்பவள், தனதுகணவனது திருவாராதநத்திற்கு நித்த நித்தம் கங்காஜலத்தைத் திரளுவித்து வெறுங்கையில் தூக்கிக் கொண்டு வருவதுபோல், ஒருநாளடைவிலே திரட்டிக் கொண்டிருக்கையில் கார்த்தவீரியார்ச்சுநன் தேர்நடாத்திக்கொண்டு ஆகாயமார்க்கஞ் செல்லாநிற்க, அவனுடைய அழகமர் உருப்புகளை யந்தஜலத்திற் கண்டு, ஆவா! இத்தகைய காந்திபுருஷனும் உலகிலுண்டாமோ! என்று மயங்கி அவன்மீது மையல்கொண்டமையால் ஜலமானது முன்போல் திரளாமல் இருக்கக்கண்டு வியாகூலமுற்று, அக்கங்கை கரையிலேதானே கலங்கியிருக்க, பூசைகாலம் தவிர்ந்துவிட்டமையால் தம்மனைவி யென்னுயினளோ என்று ஞாநதிருஷ்டியால் ஜமதக்கிநி நோக்குற்று, அந்த ரேணுகையினது தீமைகளை யறிந்து, தமது குமாரனுகிற பரசுராமற்கு அவளைக் கண்டிக்குமாறு ஆஞ்ஞையிடலும், பரசுராமனும் தந்தைமொழி கடத்துவான் கங்கைக்கரைக்கெய்தி, தன் தாயைவதைசெய்து, அதுவே காரணமாகஇருபத்தொரு தலைமுறை ரவிகுலத்தரசரைக் கட்டழித்தனனே; அதுபோன்றன்ளுே பாஞ்சாலியும் அபதிவிரதையாயின் ஏதேனும் ஒரு துஷ்கருமம் உண்டாகஏது? அங்ஙனென்றுங் கண்டிலமே! மேலும், அஸ்திநாபுரியில் பாஞ்சாலி *ருதுஸ்நாதையா யிருந்தகாலத்தில் கொடியபாதகனுகும் துரியோதநனுல் ஏவப்பட்ட துர்மார்க்கன் துர்ச்சாசநனைவன் மாநபங்கம் பண்ணுவான் துயிலைப்பற்றியுறிய, அவ்வளவில், பேதைப் பெண்ணுனமையால் ஒன்றுஞ் செய்து மாநங்காத்துக் கொள்ள விரகில்லாதவளாய்க்கொண்டு, "మహత్యాపదిసంప్రాప్తే స్మర్తవ్యో భగవాన్హరిః"(மஹத்யாபதிஸம்ப்ராப்தேஸ்மர்த்தவ்யோபகவாந்ஹரிः என்று, மகத்தான ஆபத்துவரின் பகவானுகிற ஸ்ரீஹரியை ஸ்மரிக்க சாத்திரங்கள்சொல்லாநின்றமையறிந்தவளாகையாலே, "శంఖచక్రగదాపాణే ద్వారకానిలయాచ్యుత। గోవిన్దపుణ్డరీకాక్ష రక్షమాంశరణాగతం" (சங்கசக்ரதாபரணே த்வாரகாநிலயாச்யுத - கோவிந்தபுண்டரீகாக்ஷ ரக்ஷமாம்

---

* ருதுஸ்நாதை - மாதவிடாய்த்தவள்.

சரணுகத)என்று இறைஞ்சி நின்றபோது, இறையின் நன்ஞமமாகாத் துமியத்தால் துயில்வளர்ந்து நிற்கவில்லையா? பன்னீராயிரம் பிராம்மணர்களுக்கு விருந்திட சூரியபகவான் அளித்த பாத்திரத்தைக்கையிலேயேந்தி துரோபதாதேவி அவர்கட்கு அறுசுவையோடு உண்டி பகர்ந்தில்லையா? மாபாபியான கீசகன், பாஞ்சாலியைப் பற்றுதற்காகப் பகற்காலத்தில் துரத்திக்கொண்டு வரும்போது தருமதேவதை காற்றுருவெடுத்து வந்து அப்பாபாத்துமாவைப் பறக்கடித்துக் கொண்டுபோய் நெடுந்தூரத்தில் தள்ளவில்லையா? இவற்றையெல்லாம் யோசிக்கும்போது, பாஞ்சாலி பதிவிரதையேயாய், நிறைகுடம்ஓசைதராதுபோல தனக்குள்ள கற்பின் பூர்த்தியானதைத் தானே விளக்கிக்கொள்ள மநங்கொள்ளாமல் தாழ்வு சொன்னதாகக் காணவருதல் போன்றே இத்துக்காராம் ஸ்வாமிகளும், ஞானம் - அருள் - தவம் பொறுமை-வாய்மை-மேன்மை முதலிட்ட சத்துவத்தின் நற்குணங்கள் எட்டையுந் தமக்கு உறுப்புகளாகக் கொண்டதொரு கோலத்தால் எவ்வுயிர்க்கும் இறைவனும் ஈசன் இரங்கிப் பன்முறை ஸேவை தந்தருளினதும், தானே சேவகனய் வந்து பணந் தண்டிக்கொடுத்ததும், தனது அன்பரோடு உருத்திரமூர்த்தியுந் தானுமா யமுதுண்டதும், கடுங்காட்டிற் கூலியாளாய்த்தோன்றி வழிகாட்டினதும், கடன் கொடுத்த சௌகாருக்குக் கடன் தீர்க்க இவர் உருக்கொண்டதுமாகிய இச்செயலருஞ் செயல்களைச் செய்யச் செய்தது. இத்தகைய புண்ணிய சீலர்க்குத் தீய நினைவுகளுந் தோன்றகிற்குமோ? தோன்றின் அவ்வெண்வகைச் சத்துவகுணங்களும், அருளாழிச் செல்வனது அருளும் அமையுமோ? "நாம்பெரிய ரென்னுமதை நாடாதடக்குமவர், தாம்பெரிய ரென்றுமறை சாற்றியிடும் - தாம்பெரியா,ரென்பார் சிலபே ரிவரலா தவ்வுலகிற், றுன்பார் சுமப்பார்கள் சொல்" என்று சான்றோருஞ் சொல்லியிருக்கின்றூர். அவ்வாய்மையின்படி தம் பெருமை தாமே வெளியுறுத்திக்கொள்ளும் தன்மையினர் அன்றுதற்கொண்டு இஞ்ஞானவடிவினர் எல்லார்க்கும் எளியராய் நடித்துக் காட்டினர் இத்தனை. இவ்வாறு மிகுசுலபரா யிருந்தமையின் நன்மையறியா மூடர்கள் பலரும் இவர் திறத்தில் தீய எண்ணங்களைக்கொள்ளலானூர்கள். ஆயினும், "ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட, மீச்செலவு காணி னனித்தாழ்ப - தூக்கின், மெலியது மேன்மேலெழுச்செல்லச் செல்ல, வலிதன்றே தாழுந் துலைக்கு" என்றபடி, துலாக்கோலில் நொய்யபொருளுள்ள தட்டு மேல்மேல் உயர்ந்து செல்லுந்தோறும் திண்ணியப்பொருள் உள்ளத் தட்டுத் தாழ்வது போல் அறிவுமுதலிய நற்செல்வங்களைப் பெற்றிராத மூடர் வரம்

பிகந்த அன்னடத்தையைச் செய்யக்கண்டு அறிவின் மிக்கோராம் இவர் தாழ்ந்தேபோவர். "திறனல்லதற் பிறர்செய்யினு நோநொந் - தறனல்ல செய்யாமை நன்று" என்று குறளாசிரியருஞ் சொல்லி வைத்ததற்கு இணங்க, இவர் தன்மைகளைப் பல்காலும் அன்னோர் கண்டிருப்பவரேயாயினும் கண்ட அத்தன்மைகளுக்கு ஏற்ப நடக்க விடுமோ அவரது அஞ்ஞானம்? "கண்கூடாப்பட்டது கேடெனினுங் கீழ்மக்கட் குண்டோ வுணர்ச்சி" என்று கேடு கண்ணுக்குப் புலப் பட்டதாயினும் மூடருக்கு அக்கேட்டில் ஒழிதற்கு அறிவுண்டா காதுபோல.

அப்படி அறிவு உண்டாகாததற்கு யாதுகாரணமெனின், மலிநம் நிரம்பிய சித்தத்தாலே யாகுங்கண்டீர்! இந்தத்துக்காராமருக்கோ எனின், ஸ்ரீபரவாசுதேவன் நித்திய வாசம் செய்யும் பரமவியோமத் திற்கும் தாமிருக்கும் இடத்திற்கும் கூக்குரலிட்ட தூரம். அவரு டைய அருளைப் பெறுவதற்கு ஞானப்படிகள் ஏழுண்டு; அவற்றுள் சுயேச்சை, விசாரணை, தநுமாநஸி என்கிற மூன்றும் முறையேமுதற் படியாம்; இவைமூன்றும் சாதனபடிகளாகும். இவற்றில் முதற் படிகளாகிய சுபேச்சையைக் கடந்தவர்கள் மற்ற ஆறுபடிகளையுங் கடந்தவர்களாவதுமன்றி, மறுபடியும் இச்சைகொள்வார்களேயாகில், அவற்றில் எந்தப்படியிலேனுஞ் சஞ்சரிக்கவும், அவற்றையொழித்து முதல்படிக்குத் திரும்பிவரவும் சக்தராவார்கள். அந்தச் சுபேச்சை, விசாரணை, தனுமானஸி என்னும் மூன்று படிகளையும் இந்தத்துக் காராமர் ஒருவரே கடந்துநிற்பவர். அவற்றில் முதல் ஞானபடியாகிய சுயேச்சையை யடைந்தவர்களுக்கே சக்தியாதிக்கியங்களும் உண்டா மென்றால், மூன்றுபடிகளையுங்கடந்துநின்ற இப்பெரியார்க்கு எவ்வெ வைதான் உண்டாயிராது. அம்முதல்படியினருடைய முக்கியமான சாதனம் யாதெனில். நிராசை, தவம், பொறுமை, கிருபை, சந்தோ ஷம், வாய்மை, அறிவு, அடக்கமென்னும் எண்குணத்தை வகித்து ஸ்ரீபரந்தாமனை பஜித்தால்அவருடைய செவிக்கெட்டித் தாசர்களைத் தன்னடியில் சேர்ப்பார்; பஞ்சகிருத்தியமும் தந்துகாப்பார். இக் குணம்பெறுமல் அஸ்டமா சித்திகள், யோகதாரணைகள் செய்து அண்டாண்டங்களில் உழன்றுலும் ஆதிமூலன் அருள்கிட்டாது. முதற்படியாகிய சுபேச்சை ஒருவனுக்கு உண்டாயிருக்கையும்இல்லா மையும் அவன் சொப்பனமுகத்தால் கண்டுகொள்ளலாம். அவை யுண்டாயிருக்கும் அவனுக்குச் சொப்பனுவஸ்தையில் ஸ்ரீமத்பகவத் பாகவத ஆசாரியர்கள் சேவையும், அவர்களுடலே சம்பாஷணமும் தீர்த்த ஸ்நானமும், தேவ-தானவ-கருடகந்தருவ-ஸித்த-வித்தியாத

ரர்களுடைய தரிஸனமும், சகவாஸ யோக்கியமுமே யுண்டாயிருக்கும். இவை யுண்டாயிராதவர்களுக்கு இம்மையிற் கண்டதேகாக்ஷி கொண்டதே கோலமாகக்கொண்டு மூன்றாசையும் மிகுத்து, பெண்டு பிள்ளைகளோடு இன்பம் நுகர்ந்து, மடவார்தரும் போகத்திற்படிந்து, அவர்கட்கே யற்றுத்தீர்ந்த அடிமையாய், அவர்கட்கே வேண்டிய பணிகளைச்செய்து, அவர்கள் வயிறு வளர்த்தற்காகத் தான் உடலுக்கே கரைந்து நைந்து, ஊருநாடுமெங்கும் ஓடிப்பாடி பணஞ்சம்பாதித்து, அச்சம்பாதனையில் அகங்காரமமகாரங்கள் அதிகரித்து அதன் வழியாக இராகம், துவேஷம், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம், ஈரிஷை, டம்பம், அசூயை, தற்பம், அகங்காரம் என்னும் இப்பதின்மூன்றையும் உடையராவார். அவையாங்ஙனமெனின் :—

இராகமாவது: தன் தாரத்தைத்துறந்து வேற்றுமங்கையரைஇச்சித்திருக்கை. துவேஷமாவது: யாரேனும் ஓர்வித அபசாரந்தனக்குப் பண்ணினால் அதற்குமாறு அபசாரம் பண்ணவேண்டுமென்கிற சித்தம். காமமாவது: மனை, மான்னியம், கிராமம், தநம், தான்னியம் முதலானவற்றை மென்மேலுஞ் சம்பாதிக்க வேண்டுமென்று ஆசைகொள்ளுஞ்சித்தம். குரோதமாவது: தான்தேடிய தேட்டுக்கு யாரேனுந் தடைபண்ணினர் உண்டாயின் அவர்களைச் சீறுஞ்சித்தம். லோபமாவது: தன்வஸ்துகளில் அற்பமேனுங் கேட்டால் ஈயாதிருக்குஞ்சித்தம். மோகமாவது: தன்கைப்பட்ட பொருளில் அதிக ஆசை வைத்திருக்கிற சித்தம். மதமாவது: ஐசுவரியத்தாலும் வித்தியா சம்பத்தாலும் நற்குடி பிறப்பாலும் ஆணவமிகுத்து, செய்யத்தக்கது செய்யத்தகாதது என்றறிவறியாமல் நடக்குஞ்சித்தம். மாற்சரியமாவது: யாரேனுந் தன்னில் மிகுத்துள்ளவரிருந்தால் அவர்கள் மீது பொறாமை கொள்ளுஞ் சித்தம். ஈரிஷையாவது: தனக்குவந்த துக்கம் பிறருக்கும் வாராதோ என்று சிந்திக்கும் சித்தம். டம்பமாவது: தானடத்துங் காரியங்கள் பிறர்பார்த்துமெச்சி, தன்னைத் துதிக்கவேணுமென்று எண்ணிப் பகுட்டுக் காட்டுஞ் சித்தம். அசூயையாவது, தனக்குவாய்த்த சுகம் பிறருக்கு வாய்க்கலாகாதென்று எண்ணி நடக்குஞ்சித்தம். தற்பமாவது: நானே பெரியவன் எனக்கு மிஞ்சினவனில்லையென மதிக்குஞ் சித்தம். அகங்காரமாவது: நானே ஐசுவரிய சம்பன்னன், நானே ஸித்தன், நானே நற்குடிபிறப்பாளன், நானே பலவான், நானே சுகி, நீ என்முன்னால் எவ்வளவு யென்று தன்னை வியந்து பிறரை யிகழ்ந்துகொள்ளுஞ் சித்தம். இவற்றை விகாரங்களென்றும் உட்பகைகளென்றும் உரைப்பார்கள்.

இவற்றுள் காமம், குரோதம், லோபம், மோகம், மதம். மாற்சரியம் ஆகுமிந்த ஆறுவிகாரங்களை ஹரிஷட்வர்க்கங்கள் என்னப்படும். இப்பதின்மூன்று விகாரங்களினுள்ளும் இராகத்திற்பட்டு முடிந்தவன் ராவணனென்றும், துவேஷத்திற்பட்டு முடிந்தவன் இரணியனென்றும், காமத்திற்பட்டு முடிந்தவன் நரகாசுரனென்றும், குரோதத்திற்பட்டு முடிந்தவன் பகாசுரனென்றும், லோபத்திற்பட்டு முடிந்தவன் துரியோதனனென்றும், மோகத்திற்பட்டு முடிந்தவன் வாணாசுரனென்றும், மதத்திற்பட்டு முடிந்தவன் கார்த்தவீரியார்ச்சுநனென்றும், மாற்சரியத்திற்பட்டு முடிந்தவர்கள்சிசுபாலதந்தவக்கிரர்களென்றும், ஈரிஷையிற்பட்டுமுடிந்தவன் அருணைட்சனென்றும்,டம்பத்திற்பட்டு முடிந்தவன் மாபலி என்றும், அசூயையிற்பட்டு முடிந்தவன் பௌண்டரீக வாசுதேவனென்றும், தற்பத்திற்பட்டு முடிந்தவன் சதகண்டராவணனென்றும், அகங்காரத்திற்பட்டு முடிந்தவர்கள் மதுகைடபர்களென்றும் அவ்வவர்களுடைய சரிதைகளால் கண்டுதெளியலாம். இந்த இராகத்துவேஷாதி குணங்கள் பதின்மூன்றும் ஜீவனுக்குத் தலைமண்டைகொண்டு மாறிமாறிப் பல பிறப்பும் பிறத்தற்காய், இம்மையிலேயே நோக்கவேண்டிய நோன்புகள் அத்தனையும் நோற்றுத் தீர்த்து, முடிவில் மாளாநிரயத்துள் மீளாதுறைதற்காகத் தள்ளுண்ணுந் திறங்கள்சாக்கிராவஸ்தையில்உண்டாயிருத்தல்போன்றே,சொப்பனத்திலும் அவ்வவஸ்தா பேதங்களல்லால் பிறிதொன்றும் உண்டாகமாட்டாது. ஒருவேளை யாருக்கேனும் பூருவத்திய சற்கருமப் பயன்சிறிதால் இகத்தில்நற்சகவாசம், வித்தை,பக்தி, சாத்திரசோதனம் முதலியவை யுண்டாயிருப்பினும் அவற்றை விபரீதத்திற் புகுவித்து மாறுடித்திரிவார்கள். சாத்திரங்களைப் பயின்றதால் பயன். விபரீத அர்த்தங்கொள்ளத் தேடலேயாக நிகழ்த்துவார்கள். பூசைகள் புரிவது பிறர்மெச்சும் நிமித்தமாகக் கொள்ளுவார்கள். "திடம்பெற மெய்ஞ்ஞானங் கற்பினுமென்று. மடங்காதாரென்று மடங்கார்-தடங்கண்ணாய், உப்போடுநெய்பா றயிர்காயம் பெய்திடினுங், கைப்பறு பேய்ச்சுரையின் காய்" என்றபடி எவ்வளவுதான் சற்கருமம் இயற்றப் பார்ப்பினும் அவித்தியா சம்பந்தத்தின் மணங்கமழாது ஒழிதல் அரிதரிது. இவை யெத்தனைதான் பொருந்தி விளங்கினும் ஈசுவரனுடைய நிர்ஹேதுக கிருபையொன்று மாத்திரமில்லையாகில் அத்தனையும் பயனிலவேயாகும். பொருந்திய எல்லாவற்றோடு ஈசுவரனுடைய ஜாயமான கடாக்ஷம் சிறிதளவேனும் உண்டாயிருப்பின் பொன்மலர் நாற்றமுடையதுபோல் பிரகாசித்திருக்கும்.

இவை நிற்க, துக்காராம் சுவாமிகள் க்ஷாமகாலத்தின் கொடுமை யால் தமது சுற்றத்தார் மனைகளிற் புகுந்து யாசிக்க, அவர்களில் ஒரு குரூரன் இவரது கைகளைப்பற்றி கொண்டுவந்து வீதியில் விட்ட பிறகு, ஹரிவிடேல்! பண்டரிநாதா! பக்தச்சகாயா! என்று ஓலமிட் டுக் கொண்டுபோய் வீட்டிற்புகுந்து இறந்துபோன தமது மாடுகளி னுடைய பொதிப்பைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு சிரத்தின் மீது சுருளையாக வைத்துத் தூக்கிக்கொண்டு, கடைத்தெருவில் விற்று அதில் வந்த பணத்திற்கு எட்டுசேர் தான்னியம் வாங்கிக் கொண்டுவந்து மனையாட்டிமார் கையில் கொடுத்துச் சமைக்கச்செய்து தாமும் மக்களும் மனையாட்டிமார் இருவருமுண்டு களித்தார்கள். இவ்வண்ணமே தங்கள் நாள்களைக் கழித்துக்கொண்டு வராநிற்கை யில், தூர்க்கால க்ஷாமம் வரவர அதிகரித்து, "விண்ணின்று பொய்ப் பின் விரிநீர் வியனுலகத்-துண்ணின் றுடற்றும் பசி" எனறபடி, பிராணிகள் சிலர் பசிதாகங்களுக்குப் பொறுக்காமல் நைந்து உயிர் களைத் துறந்தார்கள். சிலர் கிடைத்தபோது ஒவ்வொருவேளையாக வுண்டு குற்றுயிரோடு பிழைத்திருந்தார்கள். சிலர் அந்நமும் நீரு மென்று அலைந்தலைந்து அவாவுடன் அரற்றி அந்தகனூடு அடைந்தார் கள். இப்படி மாரிவளங்குன்றி விட்டமையால் மண்டலத்து உயிர்கள் அல்லோலக் கல்லோலப்பட்டு மங்கைதங்கு மார்பனை வாழ்த்தி அவ னருளுக்கு நாடிநிற்கும் காலத்தில், துக்காராமருடைய மூத்தபெண் ஜாதி ருக்குமாபாயம்மாள் மேல்நாடடைய, சுற்றத்தாரும் அயலாரும் வந்து கருமச்சடங்குகள் முறைமை பிறழாது நிறைவேற்றிவிட்டு, இச்சதாநந்த சாதுவைநோக்கி, நீர் எந்நேரமும் பாண்டுரங்கனைத் தியாநித்துவருகையில் குடும்பத்தில் நற்செல்வங் குறைவெய்தியது. அம்மட்டிலே நில்லாமல் இப்போதுவெம்பசிநோயால் மனையாட்டி யும் உயிர்துறந்தாள்; இப்படி ஒவ்வொன்றாய் க்ஷீணித்துவரின் பார்ப் போர்பழிக்கக் கேட்பானேன்; இனியாவது தக்கமுயற்சிகளை முய ன்று, குடும்பபோஷணஞ் செய்யற்குத்தக்க திரவியம் சம்பாதித்துச் சுகமடைவாயாகில் .புகழ்பெறுவா யென்றார்கள். அவர்களை ஸாதுத் தலைவர்நோக்கி, "நான் நான்முகனார் நற்றாதையாகும் நாராயணனைத் தியானிப்பதால் இவ்விடையூறுகள் வந்தன என்றீர். தியாநியாதநீங் கள்பட்ட சுகமும் சாகாதிருக்கையும் எங்கே? எல்லாருக்கும் பிறந்த போதே சாவு நிச்சயமாகையால் ஒருநாளடைவில் ஒவ்வொருவருஞ் சாகத்தான் போகின்றார்கள்; இவைகளையறியாமல் நிந்தைகள் பிறர் மேல் சுமத்துவது தகாது; ஆகையால் இனியாவர் திறத்தினும் இம் மொழிகள் மொழியாதீர்கள்" என்று சொல்ல, அவர்களும், இவர்

ஞானசீலர், இவரை வெல்வது பிறர்க்கு அசாத்தியமேயாகும் என்றெண்ணி தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குப் போய் விட்டார்கள்.

சிலநாள் கழிந்தபிறகு ஸ்வாமிகளுடைய குழந்தையாகியசந்தோபாவும் பரலோகமடைந்தனர். ''கடந்தஞானியுங்கடப்பளோ மக்கள் மேல் காதல்'' என்றபடி, இவருக்கு அம்மகவின் மீதில் இருந்த பிரேமை மிகுதியால் சிறிது கலக்கங்கொண்டு, மறுபடியும், பிரபஞ்சந்துக்கரூபம் என்பதும், புத்திரப்பேறு பிரபஞ்ச மயக்கத்தாலென்பதும், அநுஷ்டாநரூபமா யறிந்தவராகையாலே தெளிவடைந்து, "பிரபஞ்சத்தின்பக்கல் அநுதாபமும் பயமும் பிறந்து வெருவி, அதனைத் துறக்குமாறு பகவானே துக்கரூபமான மநதையுண்டாக்குதல் சித்தமாகையாலே, சாதுகூட்டத்தாருக்கு இத்தகைய துயர்வருவது இயல்பேயாகும். இந்தப் பிரபஞ்சமாகிற துயர் நீங்குவதும் பகவந்நாமோச்சாரணத்தாலேதான். பண்டுதேவர்களுக்கு அமுதளிக்கத்திருப்பாற்கடலைக் கடைந்தபோது அதினின்றும் பிறந்த ஆலகாலவிஷத்தின் கொடுமையைச் சகியாத தேவர்கள் சிவபிரானை நோக்கி முறையிடலும், அவர் அவ்விஷத்தை யுண்ணக் கையிலேந்தியவளவில் காடாக்கி நிச்சுவாஸைவீசுதலால் அதற்கஞ்சி, கையிலேந்திய வண்ணமே ஸ்ரீராம நாமத்தை யுச்சரிக்கத்தொடங்கிய மாத்திரையானே அவ்விஷத்தின் குரூரங்கள்யாவும் அடங்கி தணிமையா யிருக்கக்கண்டு புசித்தனர். பாண்டவர்கள் இவ்வுலகில் அநேக ஆபத்துகளால் படாதனவெல்லாம் பட்டுத்தீர்ந்து முடிவில் கண்ணபிரானது கீர்த்திகளைக் கீர்த்தித்து க்ஷேமம் அடைந்தார்கள். குழந்தை பிரகலாதனும் தந்தையால் ஆபத்துகள் அநந்தமடைந்து அவற்றை ஸ்ரீராமநாமபாராயணத்தால் கழியப் பெற்றனன்'' என்று தம்முள்தாமே பலபலஎண்ணி; சிச்சீ ! இவ்விம்மைச்சுகம் கொடிதுகொடிது ! நம்தாய் தந்தையர்கள் பதின்மூன்றும் வயதில்தானே சமுசாரபந்தத்தில் நம்மைப் பிணைக்கவிட்டார்கள். பதினேழாவது வயதில் அவர்கள் பரலோகப்பிராப்தர்களானார்கள். பதினெட்டாவது வயதில் தமயனார் மனைவி காலஞ்சென்று, தமயனுந் தவத்திற்குச்சென்றான். இருபதாவதுவயதில் பஞ்சம் மிஞ்சி பெண்டாட்டியும் பிள்ளையும் மடிந்தார்கள். இவற்றால் பந்துக்களும் சினேகிதர்களும் நிந்தித்துத் திரிகின்றார்கள். அஞ்ஞாநமாகிற ஸ்திரீயும், மோகமென்னும் பிள்ளையும் மாய்த்துவிட்டமையால் கக்கினதைக் கவ்வும் நாய்போல் இனியும் அவற்றைக்கொள்ளாமல், அவித்தையாம் இரவுநீங்குமாறு உதித்த ஞானமென்னுஞ் சூரியனைவிட்டு அகலகில்லாமல்அந்த ஞாநமென்னுஞ் சூரியனது பேருதவியால் ஆநந்தசுகங்கள் இன்னின்னவையெனத்தெளிந்து அநுபவித்

தலே நமக்குக் கடமை, அவ்வநுபவத்திற்குச் சாதநம் நாமபஜனை யேயாகும். கிருஷிஜீவநபரன் வெகுநாள் கஷ்டப்பட்டு விழுது விதைத்து ஜலமிரைத்து அதனுடைய பலனை அநுபவிப்பதுபோலும், தயிரை வெகுநேரங் கஷ்டப்பட்டுக் கடைந்து அதிலிருந்து*நவநீதமெடுத்து உண்பதுபோலும், நாமோச்சாரணஞ் செய்யச்செய்ய, அக்கினியாற்றில் தோலினுல் பாலங்கட்டி அவ்வாற்றைக் கடத்தல்போல நமக்குக் கைக்கூடியிருக்கும் சுபேச்சை, விசாரணை, தநுமாநசி என்னும் அருமையான ஞாநப்படிகள் மூன்றும்போக மற்றைய படிகளிலும் ஏற வழிகிடைக்கும். அதுவே ஆத்தும லாபத்துக்குரிய பிராப்தம் என்று எண்ணினவராய், பாம்பநாத பருவதத்தின் மீதிலேறி, வெகு தீவிரதாராய் ஒன்றுபட்ட மனங்கொண்டு ருக்குமணீரமணனாகும் ஸ்ரீ ராமபத்திரனை நினைந்து நைந்து உள்கரைந்து உருகி பஜிப்பாராயினர். என்போலவெனின் :—

புண்டரீ கக்கட் புண்ணியா போற்றி
அண்டர் காணு வச்சுதா போற்றி
காளிங் தியினுயிர் காத்தவா போற்றி
காயாம் பூநிறக் களிறே போற்றி
பண்டரீ புரத்தமர் பண்பே போற்றி
தொண்டர்க் கமிதெனத் துலங்குவாய் போற்றி
தற்பர கற்பகத் தருவே போற்றி
சிற்குண வாரிதி சீதரா போற்றி
தீயனேன் படுதுயர் தீர்ப்பாய் போற்றி
தீனரட் சகசுக தேவா போற்றி
மாயச் சகடு வதைத்தவா போற்றி
தீயவா ணன்றோட் சிதைத்தவா போற்றி
திருப்பாற் கடற்றுயிற் செல்வா போற்றி
மருப்பொசித் துகந்த மாதவா போற்றி
புண்ணிய சொருபப் பொலிவே போற்றி
நண்ணிய நாகத் தணையினுய் போற்றி
காவி யிதழ்மரைக் கண்ணு போற்றி
தூவிரி மலர்மக் டுணையே போற்றி
அண்ட சராசரத் தமர்ந்தவா போற்றி
பண்டை வினைகெடப் பாற்றுவாய் போற்றி
நிமலநின் மலசுடர் நேமியாய் போற்றி
கமலநா ளுஞ்சுவை கனியே போற்றி

* நவநீதம் - வெண்ணெய்.

அன்றல ரலாம ரடியினாய் போற்றி
குன்று குடையாக் கொண்டவா போற்றி
விமலமோ கினியுரு மேவினாய் போற்றி
அமரர்க் கமுதீந் தாண்டவா போற்றி
அசோதைதன் குட்டனா யமைந்தவா போற்றி
நிசாசரர் பொடிபட நிகழ்த்தினாய் போற்றி
எறும்பீ ருமுயிர்க் கிறைவயே போற்றி
உறியமர் வெண்ணெ யுண்டவா போற்றி
ஆதிமூ லப்பொரு ளாயினாய் போற்றி
சோதியா நந்தச் சுடரே போற்றி
அகலிகை சாப மகற்றினாய் போற்றி
சுகவா ரிதிசுயஞ் சோதியே போற்றி
காங்கே யன்றோர் கடத்தினாய் போற்றி
ஓங்கா ரத்துறை யொளியே போற்றி
எம்பிரா னெந்தை யீசா போற்றி
உம்பருக் கெட்டா வொருவனே போற்றி
சச்சிதா நந்தத் தனியனே போற்றி
உச்சித வுருபல நச்சுனாய் போற்றி
சபரியெச் சிற்கனி சுவைத்தவா போற்றி
தவத்துளார்க் கிரங்கு தயாபரா போற்றி
குட்சியி லுலகெலாங் கொண்டவா போற்றி
பட்சிவா கனபர மேட்டியே போற்றி
பாருண் டுமிழ்ந்த பராபரா போற்றி
பாரினை யாண்டருள் பாவனா போற்றி
நம்பினார் துயரிக ளுதனே போற்றி
அம்பிகா பதிதுய ரகற்றினாய் போற்றி
அட்டலட் சுமிகட மழகனே போற்றி
துட்டவி லங்கைமன் றொலைத்தவா போற்றி
இட்சுவா குக்குலத் தொளியே போற்றி
பட்சம்வைத் தென்னையாள் பவனே போற்றி
அயோத்திக் கொப்பறு வரசே போற்றி
பயோததி பள்ளிகொள் பாலகா போற்றி
ஆபற் பாந்தவா வநாதியே போற்றி
தாபத் திரயந் தணிப்பவா போற்றி
கணக்கிலா வடியரைக் காத்தவா போற்றி
பிணக்கிலாப் பெற்றியோர் பேறே போற்றி

சங்குசக் கரமமர் தலைவா போற்றி
சங்கைதீர் சுந்தரத் தாளா போற்றி
தசரத சுதனே தயாநிதி போற்றி
பசுநிரை மேய்த்தப் பாலகா போற்றி
நீச்கொணு நிறைவே நின்மலா போற்றி
ஆக்கங் கொளாவகை யாள்பவா போற்றி
போற்றி போற்றி புங்கவா போற்றி
மாற்றமின் மநத்துண் மன்னிறைய் போற்றி
கடையருட் கடைபடு கடுநெஞ்சி னேனைக்
கடையினின் றகற்றுவான் கைதூக்கி யருளி
காத்திடல் வேண்டுங் கபடநா டகனே
சேர்த்திடல் வேண்டுநின் சேவடி நிழலில்
நின்னலா லுயிர்க்கொரு நெடுந்துணை காணேன்
நின்மலா நெட்டுயிர்க் குருதுணை நீயே
நிகரிலாப் பெருமைதேர் நீதியி னொளியே
நித்தமெய் யடியார் நினைவினு ணிறைவே
சோதியே சூழ்தரு சுடரொளி விளக்கே
ஆதியே யன்பருண் ணுரா வமுதே
சோதியா தென்னைச் சுகப்பட விடுவாய்
பாதக மனைத்தையும் பாரக் கைப்பாய்
வேறு பிறப்பினில் வீழ்த்தா தருள்வாய்
வீவிலின் பந்தரு விமல நாரணனே.

என்பனவாதியாக இப்படி பாம்பநாத பருப்பதத்தின்மீது நின்றுகொண்டு, இரண்டுகைகளுங் கூப்பிய முடியினராய், கண்களை மூடிக்கொண்டு, புலன்களிற் பொறிகளைமேயவிடாமல்ஈசுவரனுடைய திருவடித்தாமரையையே பற்றின மநத்தராய், சலநஞ் சற்றுஞ்சாரா மல் காவலிட்டுத் துதிசெய்து, பின்னையும் வேங்கடங்கள் மெய்மேல் வினைமுற்றற்குத் திருவேங்கடங்கோயில்கொண்ட தீநதயாபரா! தேவா திதேவா! திவ்வியதேஜோமயரூபா! தேவகிநந்தநா! செய்யமலர்மகள் மணாளா! உன்னையேத்தும் வழியறியேன்; தரிசிக்கும் மார்க்கமுங் காணேன்; யானோ சிறியரிற்சிறுமைபட்டவன், அஞ்ஞன், அசத்தன், கொடியன், தூர்த்தன், நலமில் மநத்தன்; நீயோ பெரியவர்க்கெல்லாம் பெரியவனாய் நிற்கும் பெற்றியோன், ஸர்வஞ்ஞன், ஸர்வசக்தி, குணசீலன், தூயன், நலமந்தமில் மநத்தினன்; இப்படி என்னையும் என்னியல்பையும் பார்த்து, உன்னையும் உன்னியல்பையும் பார்க்கும்போது உன்னையல்லால்ரக்ஷகம் வேறுகிடைக்கப்பெறுவேனல்லேன்;

ஆதற்கொண்டே, "பொன்னைக்கொண் டுரைகல்மீதே நிறமெழ வுரைத்தாப்போல-உன்னைக்கொண் டென்னாவகம்பால் மாற்றின்றி யுரைத்துக்கொண்டேன்- உன்னைக்கொண் டென்னுள்வைத்தே னென்னையு முன்னிலிட்டேன்-என்னப்பா யென்னிருடிகேசா யென்னுயிர்க் காவலனே" என்கிற ஸ்ரீ விஷ்ணுசித்தர் திருமொழியின்படி, உனக்கே யற்ற பாதந்திரனாயிருத்தல் என்சொரூபமானமையால் அதற்கேற்ற என்நாவின்பாலும், உள்ளத்தின்பாலும், பிராகிருதமான பொன்னை மாற்றெழ வுரைப்பதுபோலல்லாமல், அப்பிராகிருத திவ்வியமங்கள விக்கிரகனை வுன்னை மாற்றெழாமல் உரைத்துவைத்துக்கொண்டனனாய் என்னுள் மன்னவைத்தேன். அவ்விசேஷத்தால், அடியேனும், இவனுமொருவன் நமக்குளன் என்று நீயும் உகக்கும்படி என்னையும் உன்னிலிட்டுவைத்தேன்; அத்தனாய், அன்னையுமாய் நின்று என்னை யாண்டிடுந் தன்மையானே! ஆவிக்கு ஓர்பற்றாகிய வுனக்கும், பற்றல்லால் பற்றுமற்றில்லா ஆவியேனுக்கும் அநாதியாயிருக்கிற ஸம்பந்தங்களை நோக்கிய நோக்குதன்னால் என்னுடையஉள்ளத்தில் உன்னை யுறையவைத்தும், அதுபோன்றே உன்னுடைய உள்ளத்தில் என்னை யமரவைத்தும் இருக்கிற அப்பாகுபட்டுக்கும் நீக்கம் நினையேல்கண்டாய்! நேமிநெடுமாலே! நீயோ! அபாரமாயிராநின்ற உதார குணசீலன். உன்னையும் உன்னுடைய குணங்களையும், வேத வேதாந்தங்களும், வேதபுருஷனும், வேதபாரகனாகிய நான்முகக்கடவுளும் பரிசேதிக்கமுனைந்தும் முடியாமல்போயிற்றென்னும்போது, அஞ்ஞனும்அசக்தனும்சிறுமனிதரிற்சிறுமைப்பட்டோனுமாகிறநாயினேன் உணரவசமோ! பின்னும் நின்பெருமையைப் பிஞ்ஞகன் - வாசவன்- வசுக்கள் - ருத்திரர்கள் - ஐநிய தேவதைகள், யமன் முதலானோரெல்லாரும் உணரப்பெறாமல் அலைகின்றனர்கள். நினதருளால் ஆத்துமாவென்று பிறங்கப்பெற்ற அந்நாள்முதல் இன்றளவும் மானேநோக்கியர்தம் வயிற்றுக்குழியில்உழைக்கும் ஊனேராக்கை யுதவப்பல்பிறவி நோற்றனனாய், மண் நீர் எரி கால் ஆகாசமுமாம் புண்ணாராக்கை நண்ணி நின்னைமறந்து, மறந்த மதியில்லதோர் பாலகனா யிருந்த ஞான்று தெரியாமல் தீமைகள் பலசெய்து, பெரியேனாயினபின் பெண்டுபிள்ளைகளாம் பிறர்க்கே யுழைத்து ஏழையாய், பெற்றமக்கள் பெண்டி ரென்றிவர் பின்னுதவாமை யறிந்து பிரிந்து, நீ பணித்த அருளென்னும் ஒள்வாளுருவி ஐம்புலன்கள் இடர்தீர எறிந்துவந்து உன்னடியடைநதேன்விண்ணோர்நீள்சிகர விரையார் திருவேங்கடத்து மூவா! வானவர் முதல்வா! பதி கோள்விடுத்த தேவா! நின்னையடைந்தேன்; ஆறுவென்ரகத்து அடியேனை யிடக்கருதிக் கூறு ஐவர்வந்து

மீளவும் அழிக்காவகை யாண்டருள்வது உன்கடனும்! என்று இவ்வாறெல்லாம் இளகிய மநத்தராய், ஏழுநாள்வரையிலும் அந்நபாநாதிகளும் வேறு சிந்தையுமில்லால் ததேகததியாந நிஷ்டராய் அம்மலையின்மீதிற்றனே துதித்து நிற்பவராயினர்.

அவரது திடத்துக்கு இரங்கிய தீந தயாபர மூர்த்தியாகும் தேவதேவன் ஸ்ரீமந்நாரயணன், *கிருஷ்ணவர்ணமுடைய ஓர் பெருத்த சர்ப்பரூபத்தோடுவந்து, தவத்துள்ளார் தம்முள்ளுந் தலையென நின்று தவமியற்றுநிற்கும் துக்காராமரைச் சுற்றிக்கொண்டு, திருமேனி காவலாய்ச் சீறிக்கொண்டிருப்பதைத் தாமறியாமல் நிஷ்டைகூர்ந்திருக்கக்கண்டு, ஆகாசவாணி ஓர்பதைப்பெண்ணுருக்கொண்டு வந்து தவத்தில் அமர்ந்திருக்குந் தாஸர்முன்னின்று, "கண்விழித்துப்பார்ப்பாய்! உன்னைச் சர்ப்பமாய்வந்து சுற்றிக்கொண்டிருக்குமவன் சாக்ஷாத் சகந்நாதனேயாவன்; அயனையுன்னுமல் நீயுன்நிஷ்டாகாரியத்தில்தானே யிருக்கின்றனை" என்ன; அதற்கு அவ்வாணியை நோக்கி வந்தனமியற்றி, அம்மையே! நானிறைஞ்சி நின்று பிரார்த்திப்பது சர்ப்பாகாரம் வரக்கண்டு தரிசிக்கவன்று; ஸ்ரீ பாண்டுரங்கனது திருக்கோலமொன்றையே மெய்ம்மையாகாரமாய்வரப்பெற்றுத் தரிசிக்கவேயாகும்; ஆதலால் என் அபீஷ்டந் தலைக்கட்டாமற்போயினும்போகுக; என்னைமயங்ற் விப்பான் இத்தகைய விபரீதவுருக்கள் என்கண்முன் காணுதிருப்பதே என்னைக்காத்த அவ்வளவுபலன்; அதற்காகக் கும்பிடவுஞ்செய்கிறேன் என்று பிரார்த்தித்து மறுபடியும் முன்போல் கண்களைமூடிக்கொண்டு தியாநத்திலாழ்ந்த கருத்துடையராய் நின்றார். வாணியும் அந்தர்த்தாநமாயினள். அவ்வளவில் கரும்பாம்பன்ன வுருவத்துடன் வந்திருந்த கபடநாடகசூத்திரதாரியாகிய கருணையங்கடவுள் தாஸருடைய திருவுள்ளக்கருத்துமுடித்துவைக்க, பீமாநதீதீரத்தில் முன்பு புண்டரீகர் என்னும் பக்தருக்காகத் தந்த சேவைபோல், இம்முன்னும் அக்கோலங்கொண்டு சங்குசக்கர முதலிய ஆயுதங்களோடும் ஆபரண அலங்காரங்களோடும் அபயஸ்தனாய் வந்து சேவைதராயினன்; அவ்வதிசயமுள்ள திவ்விய தர தேஜோமயமான திருக்கோலத்தைக்கண்டும் தவப்பயனார் தம்மின் மிக்கோராகிய தாஸர் முன்போற் அசைவறுமநத்தராயிருப்பதை ஆதிமூலப் பழம்பொருள் அறிந்து ஆச்சரியப்பட்டு, தம்மருளால் அவ்வன்பர் உள்ளந் தெய்வருளனும் அவருந்தெளிவெய்தி, கண்விழித்துப் பார்த்து, ஓ! நம்முடையெண்ணப் பெரும்பாக்கியம் நம்முன் நிற்கக் காண்கிறோமென்று வியப்படைந்து, துதிகள் சொல்ல வாயெழா

*கிருஷ்ணவர்ணம் - கறுப்புவர்ணம்.

மல் குழறிக்குழறி கோவிந்த ஓ! என்றரற்றி, கைகளைச் சிரமேற் கூப்பி, தீர்க்கதண்டமியற்றி, மகிழ்ச்சியினால் எழுந்திருக்காமலேயே யிருந்து, இப்பூமியும் பூமியின் கண்ணுறை அண்டஜ - சுவேதஜ - உத்பிஜ - ஜராயுஜங்கள் என்கின்ற நான்குவித யோநிபேதங்களி னுள்ளும் உற்பத்தியான எழுவகைத் தோற்றத்தில் தெய்வபேதம் பதினொருலட்சமும், மானிடபேதம் ஒன்பது லட்சமும், மிருகபேதம் பத்துலட்சமும், பறவைபேதம் பத்துலட்சமும், நீர்வாழ்வனவற்றின் பேதம் பத்துலட்சமும், ஊர்வனபேதம் பதினைந்துலட்சமும், மரங் கொடி செடி மலை தாவரங்களின்பேதம் பத்தொன்பது லட்சமும் கூடிய எண்பதி நான்குலட்ச தேகபேதங்களும்நினதுசங்கல்பரூபங் களாயிருப்பினும், அவ்வப்பேதசரீரங்களைக் கண்டு நீயேயென்றுஉகக் கத் தகுமளவாய் ஞானம்படைத்தேனல்லேன். ஆதற்கொண்டே, நீ சர்ப்பவடிவாகவந்து என்னைச் சுற்றிக்கொண் டிருக்கின்றனையென்று ஆகாயவாணி யுரைத்தும் அச்சர்ப்பவடிவில் திறத்தில் ஆதரங்கொள் ளாமல் திரஸ்கரித்தேன். என்னை யிப்பிழையினின்றும் பொறுத்துக் காத்திடல் செய்வாய் கருணையாலே என்று பிரார்த்திக்க; சருவ லோக ஆராத்தியனாகும் ஜகந்நாதன் மனமிரங்கி அவரை வாரியெடு த்து மார்போடு மார்பு உறையத்தழுவியணைத்துக்கொண்டு, உட்கார் ந்து மடியில் அவரையுட்கார வைத்துக்கொண்டு, உச்சிமுகர்ந்து, முத் தமிட்டு, அவரது புழுதிபடிந்த தேகத்தைத் தமது திவ்விய தரபீதாம் பரத்தால் துடைத்து, உனக்கு வுலகில் ஏது குறையென மதித்துஇம் மலையின்மீது வந்து ஏழுநாள் அந்ந ஆகாரங்களின்றிக் கடுந்தவமிய ற்றுநின்றனை? உனது இல்லத்தில்இருந்தபடியேஎன்னைவரநினைப்பின் ஸேவையளிக்கேனா? வீணில் என்மேல் நிந்தை சுமத்துகின்றனை என்றதற்கு, தாஸர், ஸ்வாமின்! ஜநககுலசுந்தரி மனோஹரா! மநத் தின்கண் தூய்மை சிறிதும் அமைத்தறியாதனும், தூர்த்தனும், சூழ்வினையனும், நினது தூய அடிக்கு ஆட்புகுந்துகிடக்கும் மெய்த் தொண்டர் தாள்படியா மிகுபாவியேனுமாகிற அடியேன் நின்னை அவ்வளவு எளிதிற்கண்டு தரிசிக்க எளிதோ! இடையில், யான் ஊரி லிருந்தே யென்னென்னமோ துதித்தேன், அவையெல்லாந் திருச் செவிக்கு ஏலாமையாலன்றோ அப்போது இதுபோல் ஸேவைதரா தொழிந்தீர்! தேவர் திருவுள்ளமுகந்து ஸேவையளிப்பது ஸநகாதி நால்வர்க்கும், மற்றுந்தவப்பயனால் தடிப்பெய்திவரும் முனிகட்கும், நீக்கமில்மநத்தராகிய நின் அடியார்க்குமேயன்றி பிறருக்கு அருமை யன்றோ; நீயுறைவிடமுந் தூய்தாகிய அன்னோர் உளமேயன்றோ; என்று தாழ்வுகூற, உனக்கு என்னாலாகும் கியங்களைதோ

சொல்லவேண்டுமென்று தேவகீசுதன் கேட்க, ஸ்வாமி! அடியேன் பிறந்த இப்பிறப்பில்தானே நினது மெய்யடியார் கூட்டத்தில் ஒருவனு யமர்ந்து, அன்னவர் திருவடிப்பொடி யுகந்து மேனியெங்கு மாட அருள்புரிவாய்! எந்தாயீதொன்றே யடியேன் வேண்டிநிற்ப தல்லால் வேறொன்றுமன்று என்று தாஸர் விநயஞ் செய்துகொள்ளக் கேட்டு, தாமோதரன் இரக்கங்கொண்டு, நின்இஷ்டத்தின்படியே யாகுக என்று ஆசிகள் பலகூறிப் பின்னையும், நிர்க்குணனென்றும், நிர்விகாரனென்றும், நிர்மலனென்றும், சாஸ்திர கோடிகளில் சொல்லுகிறதற்கு இணங்கப் பிறரால் அரியவரியனுயிருப்பினும் உன்னைப் போன்ற மெய்யன்பர்க்காக ஸகுணரூபவானுய்ச் சேவைதருதல்என் கடமையா யிருக்கின்றது. சாதுக்களின் துயர்நீங்கிச் சமானிப்பதற் காகவும், துஷ்டரைச் சிட்சிப்பதற்காகவும் யுகங்கள்தோறும் எனது ஆதியஞ் சோதியுரு அங்குவைத்து இங்குப் பிறக்கின்றனன்; எனக்கு ஸாது சம்ரக்ஷணத்தைவிட வேறுதொழில் இருக்கக் காண்கிலேன்; புண்டரீகன் என்னும் பக்தனுக்காக பீமாநதிக்கரையில் நித்தியவாசம் பண்ணிநின்றேன்; அவ்வாசத்திலும் பாவமுடைய பக்தர்கட்காக இடையின்மீதுகரங்களைப்பொதிந்திருப்பவனுகின்றேன்; உன் பூர்வசந்ததியாரில் எட்டாவது பாட்டனுகிய விசுவம்பரருக் காக உன்னுடைய ஊராகிய தேவுகாமில், ஸேவிக்க மநமுடையோர்க் கெல்லாம் எளிதில் ஸேவைதர அர்ச்சாரூப சமாதியனுயிருக்கின் றேன்; யாவர் எவ்விதமாக நினைக்கினும் அவ்வத்திருக்கோலங்கொண் டும் உகந்து ஸேவைதாராநிற்பன்; இற்றைஞான்று நீ பண்டரீநாத னைப்போல்வரப்பிரார்த்தித்தமையால்இவ்வுருக்கொண்டுவந்து உனக் குஞ் சேவையளித்தேன் என்று இவ்வாறெல்லாம் உந்தவார்த்தைக ளாடிக்கொண்டு இருக்கையில், துக்காராமருடைய சகோதரனுகிய காஞ்ஞேபா என்பவன் ஏழுநாளாய்த் தமயனைக் காணுமல் அந்நபாநங் களின்றி ஊருநாடுமெங்கும் அலைந்தலைந்து, முடிவில் நமது தேகத்தை மாய்த்துக்கொள்ளுதலே நலம்; மூத்தவன் உயிருடனே காட் டுக்குத் துறவரம்பூண்டு சென்றுன்; இவரையாவது இருக்கப் பார்ப் போமென்றுல் இவரும் ஸமுசாரத்தில் ஆழ்ந்தாழ்ந்து துயரில் சிக்கி னவராய்க்கொண்டு வெறுத்து எங்கேயோ போய்விட்டார்; இவர்க ளெல்லாரும்போனபிறகு நாம்பிழைத்திருந்துஎன்னபயன்? இப்பாம் பநாத பருப்பதத்திற் சோதித்துப் பார்ப்போம்; அங்கு அகப்படா விட்டால் அம்மலையின்பேரிலிருந்தே யுருண்டு சாகுவோம் என்று துணிந்து, மலையின்மீதிலேறி, புதருகளிலும், முழைஞ்சில்களிலும், குகைகளிலும் புகுந்து புகுந்து பார்த்துக்கொண்டு கடைசியில்

தாமரைக்காடு பூத்ததொரு தடாகத்தினருகில் நற்குலவிருக்ஷங்கள் சூழ்ந்த வநத்தின் நன்னிழலில் சருவலோகநாதன் வீற்றிருக்கவும் அவனுடையமடியில் தனதுதமையனிருக்கவுங்கண்டு சோர்வெய்திய மநத்தனுய்க்கொண்டு உளம்பூப்ப, மெய்புளகிக்க, கால்பிணைப்பட, தனது தேகஸ்திதி மறந்து ஓடோடியும்வந்து, அவ்விருவர் திருவடிகளிலும் வீழ்ந்து தீர்க்கதெண்டனிட்டுத் திருவடிகளைப் பற்றிக்கொண்டு, அவ்வண்ணமே அசைவற்றிருக்கக்கண்டு, அவ்விருவரும் இக்காஹோபாவை வாழ்த்தி,எழுந்திருக்கும்படிச் செய்தவளவிலே காஹோபா கண்ணனுகுங் கருந்தேவனைநோக்கி, பதிதபாவநா! பரமபுருஷா!பதுமபத்திராட்சா! உன்னைத்துதிக்குமாறு ஒன்றுங்கற்றனனல்லேன்; அத்தோஷத்தால் இப்போது எந்த துதிகளையறிந்து துதிப்பேன்? நான் வீணில் ஜநநமெடுத்தவனுகின்றேன்; ஒன்றுமறியாதவனுயினேன்; இத்தகைய யெனக்குங் காட்சிபட இவண் கிடைத்தது என்தமையனூர்செய்த நற்றவப்பயனேயன்றிபிறிதன்று; பயிர்களுக்கிரைத்தநீர் வாய்க்காலோரங்களிலிருக்கும் புற்பூண்டுகளுக்கும்பாய்ந்துஆதாரமாவதுபோல என் அண்ணன்பால் நீர்பொருத்திய கருணை அவரது அருமைத்திருவருளால் நாயினேற்குங்கிடைக்கப்பெற்றது; இவ்வநுக்கிரகம் பிறர் யாருக்குண்டாகும்? தன்னியனுனேன்! தீநதயாபர! தேவதேவ! தேஜோமயாநந்த! மஹாநந்த! மாமுடிபூண்ட மாயவ; திருமாமகள் மணுள! மஹாதேவ! மாதவ! மதுசூதநா! மங்கை துரௌபதி மாநங்காத்த மலர்க்கண்ண! என்று ஆநந்தபாஷ்பங் கண்களிலிருந்து சொரியாநிற்கக்கண்டு நேமிநாதன், துக்காராமரை மடியினின்றுஇறக்கி, தம்மாளிகைக்குப்போய் முன்போல்இல்லறத்தில் வாழும்படி யுத்தரவளித்து மறைந்தருளினுர். துக்காராமரும் தம்பியோடு தாசரதியினுடைய குணநீர்மைகளையும், தங்களுக்குச் சேவையளித்த வெளி வரவையும், உதாரத்துவத்தையும் நினைந்து உள்ளுருகுதலும் வாழ்த்துதல் செய்தலுமாயிருந்தார்.

ஸ்ரீமந்நாராயணு! நளிநத்தாள் நன்குறைமார்பா! நின்னருட்சுரந்து அடியேனது பிரார்த்தனையைத் தலைக்கட்டியருள்வாய் தீநரக்ஷகா.

ஐந்தாமத்தியாயம் முற்றும்.

ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகள் திருவடிகளே சரணம்.

(கொல்லையும் பக்ஷி காறும்.) கழனி. கழனி. உழவன்.

ஸ்ரீ

ஸ்ரீ பாண்டுரங்கபரப்ரஹ்மணேநம:

ஸ்ரீமத்

துக்காராம் சுவாமிகள் சரித்திரம்.

ஆறுமத்தியாயம்.

காப்பு.

செங்கமல மாளிகையால் சேருந் திருமார்பத்
தங்கமலக் கண்ணரு வடியேனைப் - பங்கமலம்
தன்னினின்று கைதூக்கித் தாசர்க்கா ளாக்கிவைப்பான்
நின்னிய தாண்மேவி னேன்.

ஸ்தோத்திரங்கள்.

ஸ்ரீமந்நாராயணா! உன்னையும் உன்னுடைய தாஸர்களையும் கீர்த்திக்க வென்றால் அண்டசராசரங்களால் முடியாது; வேதங்களும்உன்னைத் துதிக்கக்கூடாமல் போயிற்று; உனது மெய்யடியார்களுடைய நல்லியற்கைகளையும் ஆர்த்திகளையுங்கண்டு மகிழ்வடைந்து, அவ்வவர்களுடைய சங்கற்பங்களின்படி நடாத்திவருகின்றனை; பிரமஞானிகளையும், யோகீசுவரர்களையும், அவ்வவர்களுடைய எண்ணங்களின்படி ரக்ஷித்துவருகின்றனை; அவர்களுடைய பெருமைகளையும், பிரபாவங்களையுங் கேட்டு ஆநந்திப்பதற்காக ஸநகாதியர் நால்வரும் நான்முகனுரைக்கேட்க, அவரும் தம்மாலும் விளக்கமுடியாமல் தியங்கிநிற்க, அவ்வளவில் நீ அன்னபக்ஷிஉருவோடு வந்துபிரசந்நனாய், நான்கு

சுலோகங்களாலே பாகவதகுணப் பிரபாவங்களை விளங்குவித்தனே; அந்த நான்குவசநங்களையுங் கேட்ட கமலோற்பவன், ஆநந்த பரவசனாய் நாரதமகாமுநிக்கு பத்துலக்ஷகிரந்தமாக வுரைக்க, அந்த நாரதமுநிவரும் இரவும்பகலும் ஓய்விலாமல் அப்பாகவதர் பெருமைகளைக் கீர்த்தநம் புரிந்துவருநாளில், தூயபானர் ஸத்பாவனையினாலே நாரதரைக்கண்டு அடிவீழ்ந்து வணங்கி தண்டனிட்டு, சுவாமின்! அடியேன் பதினெண்புராணங்களை யியற்றினேன்; இன்னும் அநந்தஞ் சாத்திரங்களைச்செய்தேன்; அவைசெய்தும் எனதுமநம் ஒருவழிப் பட்டிலது, சித்தமும் சாந்தமுற்றிலது, இதற்கு ஏதுகாரணமோ அருளல்வேண்டும்? என்றுகேட்க, அந்த வியாதமுநிவரைப்பார்த்து ஸந்தோஷசித்தராய் நாரதமுநி நூறுசுலோகங்களாக ஸ்ரீபாகவதத்தை உபதேசிக்க, அதை பராசபகவானுடைய புத்திரரானவியாசபகவான் பதினெண்ணாயிரங் கிரந்தமாக பாகவதஞ்செய்துமுடித்தனர்; அஃது கேவலம் உபநிடதார்த்தமாகும், வியாசமுநிகள் அதனைத்தமது புத்திரராகிய ஸ்ரீசுகப்பிரமயோகிகளுக்கு உபதேசித்தருளினார்; சுகப்பிரம இருடியும் பரீக்ஷிந்நரேந்திரருக்கு உபதேசித்தருளினார்; அது முதல் அநேக சாதந சதுஷ்டயங்களையுடைய ஸத்துக்கள்பகவத்பாகவததர்மங்களையநுசரித்துமுக்தியடைந்தார்கள். அவர்களை யெண்ணமுடியாது; ஹரிஹரீ! ஸ்ரீவைகுண்டநாதா! மெய்யடியார்களுக்கு மெய்ம்மையானே! பாகவத தர்மங்களை யோர்படவாக்கி, பவஸாகரத்தில் மூழ்கவிடாது உனதுமெய்யன்பர்களை இரக்ஷிக்கின்றனே. இந்த பாகவதத்தின் ஞாநாமிர்தம் கலிபுருஷர்களுக்குக் கொள்ள சாத்தியப்படாது. சந்தஜநங்கள் அவதரித்து பிராகிருத வாக்கியங்களினாலே தெரிவித்து யாவரையுங் கடைத்தேறும்படிச் செய்தார்கள். இந்தச் சந்தஜநங்களுடைய நாநாவிதத் திருவிளையாடல்களை நீயேயெனது உள்ளத்திலிருந்து வர்ணிக்கின்றனே. எனக்குப் புத்திசுவதந்திரியமில்லை. கிளிக்கு மொழிகளைக் கற்பித்துக்கொடுத்து அதன்மொழியைக்கேட்டு இன்பமடைவதுபோல் இம்மந்த புத்தியேனுக்குப் பிரகாசமளித்துச் சந்தஜநங்களினுடைய சரித்திரத்தை முடித்துவைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

பாம்பநாத பருவத்தில் துக்காராம்ஸ்வாமிகள் இருக்குங்காலத்தில்இவருடைச் சகோதரராகிய கானோபாஎன்பவர் தந்தமையனாரையும் ஸ்வாமியையுங்கண்டு ஸேவித்து மகிழ்வெய்தியபின் ஸ்வாமி மறைந்தருள, கானோபாவானவர் ஸ்வாமியெழுந்தருளித்தங்கியிருந்த விடத்திற் குறிப்புக்காகக் கற்களைக்குவித்து, சிறு ஆலயம்போற் கட்டி, ஸ்வாமியினது பாதுகை யவ்வாலயத்தில் வைத்துப் பிரதிஷ்

டைசெய்து, தமையனுரோடு தாமுந்தேவுகாம் நோக்கிவந்து, இந்திராயணி நதியையடைந்து, ஸ்நானஞ்செய்து நித்திய கருமாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, ஏழுநாள்வரையில் அந்த ஆகாரங்களில்லாமல் பகவானை நோக்கித் தவம்புரிந்திருந்தமையால் அன்று சூரியோதயத்திற்குள்ளாகப் பாரணை செய்தார்கள்.

இரண்டாறுகச் சிலநாள்கழிந்தபின் தம்பியைநோக்கி ஸ்ரீமத்துக்காராம்ஸ்வாமிகள், தமது தந்தை நடாத்திவந்தவர்த்தகத்தில் பாக்கிதாரர்கள் தஸ்தாவேஜுகளைக் கொடுத்திருந்தார்களல்லவா; அந்தத் தஸ்தாவேஜுகளிற் செப்பிய பாக்கிகளை அவ்வவர்கள் மறுபடியுங் கொடுப்பார்களென்று எண்ணுவது யாதுபோலாமெனின்; சாத்திரங்களை வாசித்தவர் அநுபவங்கள் ஒன்றுமில்லாமல் வாசித்த அவ்வளவிற்றனே ஞானிகளாய்விட்டோமென்று தங்களைத்தாங்களேமதித்து அகங்கார ஸந்தோஷங்களையடைந்து மகிழ்வதுபோலாகும். நாம் நமக்கு இவ்வளவுதொகை தஸ்தாவேஜு மூலமாக வரவேண்டுவதென்று எண்ணங்கொள்வதைவிட இந்நதியில் அந்த தஸ்தாவேஜுகளைவிட்டுவிடலாமென்று உரைக்க, அதனைக்கேட்டசகோதரர் உணர்ந்து, தமையனுர் பாதத்தில்வீழ்ந்து சேவித்து, தமதுள்ளம் விரக்தியடைந்தது. அடியேன்உள்ளத்தின்கண் பிரபஞ்சமயக்குகள்தொடர்ந்தே யிருக்கின்றன; நமக்குச் சந்ததிகள் சிறுவர்களா இருக்கின்றுர்கள்; தங்களுக்குத்தெரியாத வுலகவழக்கங்களை அடியேன்தெரிவிக்கச் சக்தியனல்லேன். எனது பிரார்த்தனையின் தோஷங்களைமன்னித்தருளவேண்டுமென்று வந்தநஞ்செய்ய; ஸ்வாமியும் சரேலெனத் தமது அகம்புகுந்து, பெட்டியிலிருந்த தஸ்தாவேஜுகளையெல்லாம் தம்பிகையில் கொடுத்துவிட்டார். காளுேபாவுந் தமையனுரது பாவமறிந்து அந்த தஸ்தாவேஜுகளையிரண்டாக பாகித்துத் தம்பாகத்தைத் தாமெடுத்துக்கொண்டு, மற்றொருபாகத்தைத் தமையனுர் கையிற்கொடுத்தார். அவருந்தம் பாகாசாரம் வந்த தஸ்தாவேஜுகளையெல்லாம் இந்திராயணி நதியிற்போட்டு எனதுள்ளத்தில் அடங்கிய மாயாசம்பந்தங்கள் யாவும் இன்றோடு துறக்கவிட்டேன்; இனி உய்ய விருத்திசெய்து ஜீவிப்பதில் யாதொரு தடையுமிராது; நீ உத்தியோகமுதலியவைசெய்து ஜீவிக்குமவன்; அதற்குத்தக்கபிரயத்திநம் செய்தால் பிரபஞ்சம் உனக்குவசப்படும். பிரபஞ்சத்துக்கும்பரமார்த்தத்துக்கும் எப்பொழுது ஒற்றுமை யாகபோகிறதே யில்லை. வாச்சியார்த்தத்தில் கிருஷிவர்த்தக முதலியவைசெய்து பரமார்த்தத்தையடைவது அருமையென இருடியர் அறைந்திருக்கின்றுர்கள் என்றுரைக்க, தம்பி காளுேபா தன் சமுசாரத்தை வேறுபடுத்திக்கொண்

டார். மெய்யன்பராகியஸ்வாமி நிருவாணத்தியாகங்கொண்டு, லஜ்ஜை யும் லௌகிகமும் விட்டு, சித்தத்தைச் சிந்தனையிலமைத்து, விரக்தி யினுடைய பலத்தால் இந்திரியங்களையொடுக்கி, அற்ப ஆகாரங்களை யுண்டுவருவதால் இந்திரியங்கள் ஒடுங்கப்பட்டன. நித்திரையும் சோம்பலும் வரவிடாமல், முதுகுபிடித்துக்கொண்டவன் சுடுஜலத் தைத் தேடுவதுபோல் சதாபஜனைசெய்து, பிராதக்காலத்தில் ஸ்நாந ஸந்தியாதி கருமங்களை முடித்துக்கொண்டு, பாண்டுரங்கமூர்த்தி யினுடைய ஸ்தலத்திற்சென்று அர்ச்சந நமஸ்காராதிகள் செய்து, வனங்களிற் புகுந்தவராய் தனிசஞ்சாரஞ்செய்து வருபவராயிருந்து சிலநாள்கழித்து, தேவுகிராமத்திற்கு மேற்புறத்தில் மூன்றுகாத தூரத்திலிருக்கும் பாண்டார் பருவதத்தின்மீதிலேறி, அங்குஏகாந்த ஸ்தலமொன்றில் வசித்துக்கொண்டுவந்தார்.

இஃதிப்படியிருக்க, இக்கிரந்தகர்த்தாவை நோக்கிச் சிலர் இந் தத்துக்காராம்ஸ்வாமிகள்சர்வசங்கபரித்தியாகம்பண்ணிப்போய்தன் னந்தனியிடத்தில் இருந்துகொண்டு தவமியற்றி வருங்காலத்திலும், இதற்கு முற்பட்ட காலத்திலும் பகவான் நேரில்வந்து காட்சியளித் திருக்க, இப்போது இத்துக்காராம் இந்திரிய நிக்கிரகஞ்செய்து பண் டார்மலையில் தவமியற்றச் சென்றாரென்று அறிவித்தமை சங்கையாக இருக்கின்றது. இச்சங்கையைத்தவிர்க்குமாறு தெளிவுறுத்தவேண்டு மென்று கேட்க, அப்புண்ணியப்பிரவர்த்தகர்களைநோக்கி கிரந்தகர்த் தாவானவர் சொல்லுவதாவது: துர்நாற்றமுடைய வெங்காயம் கழு வக்கழுவத் தன் அசுத்தமும் துர்நாற்றமும் நீங்காததுபோல இந்தத் தேகத்தை யபிமாநித்திருக்கும் ஜீவபுருஷனுக்கு ஆறுகோடி மாயா சக்திகளுண்டு. ஜீவபுருஷன் அன்றன்றுடம் ஆறுகோடி மாயாசக்திக ளுடன் அறுபதுநாழிகையில்கூடிஎண்பதுகோடி பிள்ளைகளைப்பெற்று சுக துக்காதிகளை யநுபவித்து வருவான். இந்த எண்பத்தாறுகோடி மாயாசக்திகள்நீங்கி விவேகபுருஷனான காலத்திலல்லவோ ஜிவன், சர்வசங்கபரித்தியாகி என்றும், இந்திரியநிக்கிரகன் என்றும் அழைக்கப்படுவான்? இங்ஙன் எறும்பூரக் கல்தேயுமாபோலே இரவு பகல் அறுபதுநாழிகையும் நிஜபக்தியும் சக்தியபுத்தியுங்கொண்டு, காலன்வருவானே வீணாக நாள்கழிகிறதே என்று துயர்மேலிட்டு, பகவந்நாமமாகும் பிரணவத்தைஆராதித்துவருவானாகில்சுத்தசங்கல் பமுண்டாய், விவேகபுருஷன் வெளிப்பட்டு எண்குணமாகிய வாச்சி யார்த்த லட்சியார்த்தங்களுக்கு வருவான். பிரணவ வாச்சியார்த்த மும், வாச்சிய லட்சியார்த்தமும் முதிரமுதிர நாதலட்சியார்த்தத் துக்கு வருவான். இம்மூன்றும் முதிரமுதிர சொரூப லட்சியார்த்தத்

துக்கு வருவான். இந்நான்கு லட்சியார்த்தங்களும் பொருத்தமாய் வரவர ஜீவசங்கல்பம் நீங்கி விவேக சங்கல்பமுண்டாய், நிவாததீபத்தின் நிலைமையொத்து நிகழுவான். இந்த அநுஷ்டானங்கிடைப்பது மிகுதியுமருமை. இத்தகைஞர்களைத்தான் மூன்றுலோகங்களுக்குந் தனிஞானி எனக்கூறப்படுவது. இப்பதத்தினை யுடையவர்கட்கே ஜன்ம ஜன்மாந்தரங்களிற்செய்த தவப்பயனுல் இந்திரிய நிக்கிரகஞ்செய்யும் உபாய சூட்சுமம் தெரியும். பெண்டு பிள்ளை பண்டு பதார்த்தங்களுடனே கூடியிருப்பினும் இந்திரியஜயம்பண்ணும் முறைமையும், சாக்கிராவஸ்தையிற் காணும் அவித்தியா சம்பந்தங்கள்யாவும் சொப்பநாவஸ்தைக்கு வரவொட்டாமல் காக்குங் காவல்தன்மையும் அவர்களுக்கே விள்ளும். நான்காவதுபடியாகிய பிரமவித்துவரையில் ஜீவன் தொடர்ந்திருப்பதினுல் ஸாதகருக்கு முதற்படிமுதல் நான்காம்படி வரையிலும் ஸர்வ சங்கபரித்தியாகி என்றே நாமம்விளங்கும். முதற்படியாகி சுபேச்சை என்பதே கிடைப்பது அருமை. அது கிடைக்கப்பெற்ருேர் இரவு பகலும் நற்குண நற்செய்கை நல்வாய்மை நற்பக்திகளை யநுஸரித்து உலகத்தினிடங் கூடியுங் கூடாதவர்களாய் எவ்வாறு சஞ்சரிப்பார்களெனில் "நடைதளர்ந்து மெய்மறந்து நாணமழிந்து, உடற்றளார்ந்து கீழ்குரலிட் டுன்போய் மடலெடுப்பாய், சத்தாதிகெட்டுமனந்தாக்கற்றுச் சத்தழிந்த, பித்தர்க்கு மாகாப் பிணி" என்று கூறியிருப்பதினுலும், அறிவு முதிர்ந்தவர்கள் எமவாதைக்குப் பயந்து இரவும் பகலும் ராமநாமத்தைப் பஜித்து, காமக் குரோத லோப மோகமத மாச்சரியங்களைவெறுத்து, தான் பக்திமானென்று, ஆசாரிய அநுஷ்டானம் பெற்ருேமென்றும், இதரஜீவர்களுக்குக் காட்டாமல் தான் சாமாநிய தருமம்பூண்டு சுபேச்சை என்னும் முதற்பூமிமுதல் நான்காம்பூமியாகிய பிரமவித்துவரையில் தன்னை யாவரும் கீழோனென்று எண்ணும்படி அவரவர்கள் அபிப்பிராயத்திற்குத் தான் கீழ்ப்படிந்திருப்பதுபோல தேகநயிச்சியமும் வாக்குநயிச்சியமும், காட்டி உள்ளத்தினிடம் ராமநாமத்தை அனல்போல் மூட்டி, பவசாகரம் எப்போதுநீங்கி, சுத்தசத்துவமாகிய பரன் ஆட்கொள்ளும் திநம் எதுவோவென்று கலங்கிவருவார்கள். அது எவ்வாறிருக்குமெனில் "முலைமுதிர நாண முதிர்ந்தடங்கி மூடி - கலவியிலே நக்கினத்தைக் காட்டும்" என்பதுபோல சிறுபெண் சிற்ருடைகட்டி வரவர நாணமேலிட்டு, தன்னைவளர்த்த தந்தைக்கும் சகோதரர் சுற்றம் இவர்களுக்கும் தன்தேகக்குறி காட்டாமல் தன்னை விவாகம் புரிந்தநாயகனுக்கே காட்டி, சுகத்தை அநுபவித்து வருவதுபோலும், ஓர் சுதனை இரண்டுசுதர்களை யீன்றபின் மணுளன் சுகம்வேண்டியதில்லை என்று

தள்ளாமார்க்கம்போதும், ஸ்ரீ துக்காராம் ஸ்வாமிகளும் பலமுறை பக வான்வந்து தம்மோடு கலந்து வார்த்தையாடியிருந்தாலும், பஞ்ச கிருத்தியம் பெற்றிருந்தாலும் மூன்று பூமிவரையில் சாதனை இருப்ப தினால் ஜீவசங்கல்பம் நசியுந்தனையும் ஸாதகர்கள் அடங்குவது இயல் பாகையாலும், பிறருக்குத் தம்முண்மை தோன்றுவித்திலர், முதல் பூமிகிடைப்பதுவே துல்லபம்; "நாலாம்பூமி வருமுன் மூன்றுபூமியு மடைந்துநடந்து மாண்டோர்,மேலான பதமடைந்து பிறந்து மெள்ள மெள்ள வந்து வீடுசேர்வார், மாலான பவத்தில்விழார் முதற்பூமி கிடைப்பதுவே வருத்தமைந்தா. காலான முதற்பூமி கைவந்தால் முத்தியுங்கை வந்ததாமே" என்று பெரியோர் சாற்றியிருக்கின்றார். "அடக்கம் அமரருளுய்க்கும்" என்றபடி, ஸ்ரீ துக்காராம்ஸ்வாமி கள் நிராசைஎன்னும்ஆபரணம்பூண்டுஉலகத்தாருக்கு சுளுவாகபரம பதம் கிட்டவேண்டி தாம்தம் அடக்கத்தை அகத்திலுறையும் ஈச வரனறிய தனியராய் சஞ்சரித்தது; இவர் புறபாவனைகொள்ளாமல் அகபாவனைகொண்டு முதல்பூமியாகிய சுபேச்சையை இடைவிடாமல் மூன்றும்பூமிவரையில் சாதனைசெய்துவந்ததில் ஸ்ரீ ஹரியானவர் மூன் றவஸ்தைகளிலும் காட்சிதந்து, வேண்டியவரங்களையும்,அஷ்டஸ்த்தி களையும், பஞ்சகிருத்தியங்களையும் ஈந்து ரட்சித்துவருவார். தேவ லோகத்தில் உள்ளவர்களும் முதற்படி யேறினவர்களைக் குறித்துச் சந்தோஷித்து, சாக்கிரத்திலும் சொப்பனத்திலும் அவர்கள்முன் காட்சிதரத்தோன்றி ஆசீர்வாதங்கள்செய்து போவார்கள். முதல்படி கிடைத்தால் முடிவாகும் ஏழாம்படி கிடைத்ததென்றே யெண்ண வேண்டியது. முதல்படி கிடைக்கப்பெற்ற மூர்த்திகளது பெரு மையை வருணிக்க வேதவேதாந்தங்களாலும் முடியாது. பிரகலாத னுக்கு ஐந்துவயதில்தானே பகவான் அநந்ததிவ்விய சொரூபகாட் சிகளைத் தந்து தரிசிக்க வைக்கவில்லையா? இரணியன்செய்த கொடிய தீங்குகளை மாற்றவில்லையா? இவ்வகையாக பகவான் காட்சிதந்து ரக்ஷி த்து வருவதைக்கண்டு சாதநசதுஷ்டய ஸம்பந்நர்கள், இனி நமக்கு என்ன குறைவு, சுவாமியைக்கண்டு ஸேவித்து வார்த்தையாடினோம் என்றெண்ணுவார்களாகில் முதற்படியாகிய சுபேச்சையும் இழந்து, அந்தகாரமாகிற அருநிரயத்துள் படிவிக்கும் அந்தப்படிக்குவருவார் கள். முதற்பூமிக்கே பூரணபாத்திரரல்லாத சாதநசதுஷ்டய ஸம்பந் நர்கள்,எண்டா தாதா ஆண்டியானு யென்றால் இதுவுமொரு கந்தாயம் என்பதுபோல் தனக்குக் கீழ்ப்பட்ட புத்திமான்களைச் சேகரித்துக் கொண்டு அவர்கள் சந்தோஷிக்க, தனக்கு பகவான் காட்சியாயிருக் கின்றாரென்றும், இராத்திரி சொப்பநத்தில் போளியும் ஆமைவடை

யும் பொசிக்கக்கண்டபடி விடிந்ததே எனது சிஷியன் வந்து எனக்கு தீர்க்கதண்டம்புரிந்து போசநத்திற்குப் பிரியங்கொண்டழைத்தபடி சென்றேன்; பாத்திரத்தில் போளியும் ஆமைவடையும் நிறைப்பிவைத்திருப்பதை யுண்டேன்; ஸ்ரீமந்நாராயணன் நமக்கு காட்சியளித்தாரென்றும், ஒரு அழகில்சிறந்த ஸ்திரீயானவள் என்னை வலுவிலழைத்து நீர் சந்நியாசியாயிருப்பதினால் உமதுபேரில் எனக்கு மோகமுண்டாகிறது சந்தோஷிக்கச் செய்யவேண்டுமென்று கேட்க, இதுவும் நமது பெருமாளுடைய கிருபைஎன்று அவளுக்குச் சந்தோஷம் ஊட்டினேன்; நான் வாசிக்கும்போது தீபத்தில் எண்ணெயில்லாமலிருந்தது; வாசிப்புக்குக் குற்றம்வருமென்று எண்ணினவுடன் மனைவி எண்ணெவார்த்தாள்; இதுவும் பகவான் செயலென்றே சந்தோஷித்தேன் என்று இவ்வாறு பலபல விதங்களாக வுரைத்துக்கொண்டு தாம் பகவானுக்கு உரியவர்களென்று கூட்டங் கூடிக்கொண்டு இன்னின்ன பிரபந்தத்தில் இன்னவிதம் சொல்லுகின்றது என்று பகடு காட்டி ஜீவிப்பவர்கள் வார்த்தையை நம்பினவர்களும் யாதுகதிபெறுவார்களோ அறியேன். இப்படிப்பட்ட அவித்தியா சம்பந்தமான ஆசாரியனைச் சேராமல் வித்தியா சம்பந்தமான ஆசாரியனைச் சேர்ந்தால் நீதிமார்க்கங்களைப் போதித்து பகவத்திருவடிக்குப் பாத்திரமாகச் செய்வார்கள். முதற்பூமிமுதல் நான்காம்பூமிக்கு வருகின்றவரையில் அறிவின்மிகுந்த ஸாதகர்கள் தாழ்மையே சொரூபமாகப் பூண்டு சத்தசாமான்னியராய் பகவானுக்குரிய பிள்ளைகளாவார்கள். இதன் பெருமையைப்புகல ஆதிசேஷனாலும் முடியாது.

இந்தத் துக்காராம்ஸ்வாமிகளோ லக்ஷியார்த்தங்கள் நான்கையும் உடையவராதலால், இந்தச்சமயம் சொரூப லக்ஷியார்த்தத்தின்பேரில் பிரியங்கொண்டு, பண்டார்பருவதத்தின்மீதில்ஏறிச்சென்று, ஆரோக்கியம் அமைந்ததோரிடத்தில் தங்கி, சுத்தசத்துவாம்ஸம்உடையவராய ஸ்ரீமத்புண்டரீகவரதனைஉள்ளத்தில்பதியவைத்துக்கொண்டு, நிவாததீபம்போல் அசைவற்ற நிலையிலிருந்தார். இந்தப்பிரகாரமே ஸ்ரீபிரகலாதாழ்வானும் பகவானுடைய காட்சிகளையெல்லாங்கண்டும்காணாதவர்போல்நடித்து, தாழ்மையே மிகக்கொண்டவராய், பாகவதப்பிரியராய், ஸர்வஸ்வாமியினாலும் இந்திராதிதேவர்களாலும், நாரதர்முதலான மாமூர்த்திகளாலும் சகலசாம்ராச்சிய பட்டாபிஷேகமாமாறு முடிசூட்டப்பெற்று, சீரிய சிங்காசநத்தில் இருக்கச்செய்தும் அதின்பேரில்வெறுப்புற்று அல்லும்பகலும் ஈசுவரன்பேரில் ஊன்றிய மநத்தராய், முப்பத்தாறுவருஷம் இடையறாச் சித்தசுத்தியினராயிருக்கவில்லையா? இவ்வரிய ஆநந்தாதிசயம் அவருக்கும் ஆதியஞ்சோதிக்

குமே தெரியுமல்லது எனக்கெவ்வாறு தெரியவசம்? விஷவெரியில் முதிர்ந்தோர் அவ்விஷத்தையநுபவித்தும் அதைவிட்டு அகற்றமநங் கொள்ளாதது போலும், தநத்திலாசை மிகுத்துள்ளவர்கள் தநஞ் சேரச்சேர இன்பமிகுதியும் பெருகிவரக்கொள்ளுவதுபோலும், பரப் பிரமமாகிய லட்சுமீ ரமணனுடைய ஆநந்தசுகங்களை யநுபவிப்பவர் களுடைய மீளா இன்பத்தேர்ச்சிகளை அளவிடுவதற்கு வேதபுருஷ னும் ஆகாதென்று சாத்திரங்கள் ஓதாநின்றன. இந்த வைஷ்ணவ வீராகிய துக்காராமருக்குதேவாதிதேவன்பிரசந்நனுகியும் யாதோர ருளும் அடையாதவர்போல் நடைகாட்டி, பகவானுடைய சேவைக்கு எதிர்நோக்கிக்கொண்டு இருப்பவர்போல் தாழ்வுகாட்டுமவராய், தம் முள்ளத்தில் ஸ்ரீமத் பண்டரீநாதனுடைய திருவடித்தாமரைகளை ஸகுணயோகமார்க்கமா யாராதித்துப்பஜித்து வருபவராயினர். நான் எனது என்னும் அகங்கார மமகாரங்களற்று, ஜெநவிஜெநங்களைச் சமாநமாக எண்ணி, சமுசாரபயம் வேருடன் களைந்தெடுத்து, சுத்த சத்துவத்தோடுவிளங்கி, ருக்குமணீகாந்தனை நினைந்து, ஏகாந்தத்தில் இரண்டுகைகளையுங் கூப்பினவராய், உனது நாமமே யெனது தவநிலை, நாமமே மித்திரன், நாமமேஜபம், நாமமே நிச்சயம், நாமமே குலதரு மம், உனது நாமத்தை விட ஆதாரம் வேறென்றும் எனக்கில்லை; தந தாநிய ஸம்பத்துக்கள் உன்னைவிட வேறுண்டென்று நினைக்கவும் உரைக்கவும் எனது நாவரவில்லை, ஹரிவிடோபா; இந்த பவஸாகரத் திலிருந்து என்னைக்கரையேற்று; உன்னுடைய நாமத்தைப்பஜித்து சங்கரமூர்த்தியானவர் சத்துவாமிசம்பெற்றார்; உனது நாம மான் மியத்தை ஸ்ரீமத்வால்மீகிபகவான் கதாரூபமாகச்செய்து நற்கதி யடைந்தார்; உன்னுடைய நாமத்தின் பெருமை ஸந்த ஜநங்களாகிய வைணவச் சிரேஷ்டர்கட்கே தெரியும்; உன் நாமத்தினது வலிவு துருவ சக்கரவர்த்திக்கே தெரியும்; உன்னுடையநாமத்தால் உபமன் னியு பக்தர் கடைத்தேறினர்; ஸ்ரீ விபீஷணுழ்வானும் மேன்மை யோடு லங்கா பட்டாபிஷேகமும், சிரஞ்ஜீவித்துவமும் பெற்றதுநின் நாம மாகாத்துமியத்தாலாகும் என்று இவ்வாறெல்லாம் திநதிநம் மெய்யன்பர் நினைந்து ஏகாந்தத்திலிருந்து, கருணாநிதி! என்று சோர் வுற்ற மநத்தராய் ஸ்மரித்து வந்தார்.

இப்படி நித்தநித்தம் மலையேறி ஏகாந்தமாயிருந்துகொண்டு ஏகாக்கிரசித்தராய் தியாநபரவசராய் ஆநந்தக்கடலில்அழுந்திக்கிடப் பதும், சூரியன் அஸ்தமாகிற தருணத்தில் மலையிறங்கிவந்து நதியில் அநுஷ்டாநங்களை முடித்துக்கொண்டு ஸ்வாமி ஸந்நிதிபுகுந்து பலபல துதிகளைத்துதித்து பூசனையாற்றித்தொழுதுஎழுந்து ஆநந்தபாஷ்பங்

கண்களினின்று ஒழுகவிடுத்துக் கூத்தாடிக் களிப்பதுமாயிருந்தார். அவ்வூர் ஜனங்கள் இவ்வருமைச் செயல்களைக்கண்டு, துக்காராமருக்குப் பித்தம் முழுதிலுமுதிர்ந்து இரவும் பகலும் ஓய்வுவொழிச்சலில்லாமல் சமுசாரத்தைவிட்டு ஜனார்த்தநனை பஜித்து வருகின்றார் என்றும், சிலர் வர்த்தகத்தில் நஷ்டம்நேரிட்டபடியால் அதுவே யேக்கங்கொண்டு வாயில்வந்தபடி யெல்லாம் பிதற்றித் திரிகின்றார் என்றும், சிலர் தஸ்தாவேஜுகள் கணக்குகள் முதலானவைகளை இந்திராயணி நதியில் விட்டுவிட்டபின் பிரபஞ்சத்துஉறவைவிட்டுப் பரமமானஉறவினைப்பற்றி அவ்வழியேநிற்கிறாரென்றும், சிலர் பிள்ளைபெண்டாட்டிகளைவிட்டு, பிரபஞ்ச வாழ்க்கையுந் துறப்பதற்காகக் குன்றேறிக் கோவலனைப்பஜித்து, குக்ஷிபாதை யாரையும்விட்டு அகன்றதல்லவே அப்பாதைக்காக மறுபடியும் இங்குவருகின்றாரென்றும், சிலர்கோவிந்தனைப் பஜிப்பதல்லால் வேறொன்றினுங் காலங்கடத்தாத காரணத்தால் விரக்தியுண்டாயிற்றென்றும் இவ்விதமாகப் பேசிக்கொண்டார்கள். இவருக்குத்தேகத்தின்திறத்தில் அபிமாநபுத்தியில்லாமல்தேகியின்பால் மாத்திரம் அபிமாநபுத்தி யிருத்தலினாலேதான் ஆநந்தமேரூபமாகவுடையவராய் சஞ்சரித்துவருவார். இராஜவீதிகளில் தனது கம்பீரநடையுடன் யானை செல்லாநின்றால் அதனைப்பார்த்து எத்தனையோ நாய்கள் குறைக்காநின்றன, அதில் அவ்வியானைக்கு ஒரு லக்ஷியமுண்டாகுமோ? சமுத்திரமானது எவ்வளவு ஓசைசெய்யின் அதற்கு குறுமுநியாகும் அகஸ்தியர் அச்சமுறுவரோ? அதுபோல் இந்தத் துக்காராமருடைய திருவுள்ளமானது விக்ஷேபமில்லாமல் சஞ்சரித்து, ஜனங்கள் நிந்திப்பதெல்லாந் தமக்கு அநுகூலமென்றே சாந்தமுண்டாக நினைத்து, காமக்குரோத லோப மோக மத மாச்சரியங்களென்னும் விகாரகுணங்கள் முற்றும் அகற்றிநின்றது.

இப்படியிருக்க, ஓர்நாள் பிரபந்நஜநாக்கிரேசர் இந்திராயணியில் நீராடி திருமண்காப்பு சாத்திக்கொண்டு, அந்நதிக்கரையில் இருக்கும் புங்கவிருக்ஷத்தின் கீழிருந்து, புத்தனென அவதரித்தருளின பூவின்மிசை நங்கை கேள்வனைப் புந்தியில் நினைந்து, மாநதபூசை செய்து வராநிற்கையில், அவருடைய அருகில் ஓர்குடித்தனக்காரன் தன்சோளக் கொல்லையில் பறவையினங்களைப் புகுதவிடாமல் காத்தற்காகப் பரணையொன்று கட்டி, அதின்மீதிருந்து கொல்லையைக் காப்பதற்காக ஆளொருவன் வேண்டிப் பார்த்திருக்கின்றவனாகையால் தனக்கருகில் பஜனைசெய்துக்கொண்டிருக்கிறஇவரைப்பார்த்து, ஐயா! உமக்கு அரைமணங்கு சோளந் தருகிறேன், அந்தப் பரணையின்மீதில்உட்கார்ந்துகொண்டு, இங்குசெய்கிற பஜனை அங்குசெய்து

கொண்டிரும்; அதனால் என் கொல்லையில் புள்ளினங்கள் புகுதாது; உமக்கும் சமுசாரத்துக்குச் சோளமுதவும்; குடும்ப போஷணமுமாகும்; உமது பஜனைக்கும் இடையூறுவாராது என்று வேண்டியிசைவித்து, பகவத்குண நிஷ்டரைப் பரணையின்மீது உட்கார்த்தி, கல்லெறியுங் கவுண்டையும் அவர்கையிற் கொடுத்துக் கொல்லையைக் காக்கச் சொல்லிப்போனான். தாஸருடைய தன்மை பேதைக்குழவியின் தன்மைபோலும், ஜலமானது எந்தெந்த வர்ணங்களிற் கலக்கப்படுகின்றதோ அவ்வந்த வர்ணத்தைக் கொள்ளுதல்போலும் இருப்பதாகையினால்யாரென்னவுரைப்பினும்அவ்வவர்உரைகளின்படியிசைந்துநடப்பதே திருவுள்ளமாகையால், கொல்லைக்காரன் சொன்னபடி பரணையின்பேரில் இருந்துகொண்டு ஸ்ரீமத் விட்டல னுமை பஜனை பண்ணிக்கொண்டு இருக்கிறவண்ணமே நாற்புறமுஞ் சுற்றிப்பார்த்து கதிர்கள் செழிப்பாக விளைந்திருக்கக்கண்டு ஆநந்தித்து, பறவைகள் ஏதேனுந் தின்பதுண்டோ என்று உற்று நோக்கும்போது சில்லிடங்களில் பக்ஷிகளிறங்கிக் கதிர்மணிகளை யுண்பதையறிந்து ஸந்தோஷித்து, அவற்றை யோட்டமனமில்லாமல், "யத்பாவம் தத்பவதி" என்றபடி தமதுபாவம் ஸ்ரீஹரியினுடைய திவ்யரூப மொன்றேயாகையால், "பார்த்தவிடமெல்லாம் பரமன்காணம்மானாய்" என்கிற சான்றோரிசைவின்படி கண்டகண்டவையெல்லாங் கடவுளேயென்று நினைக்குந் தன்மையினராகலான், ஈசுவரன் ஸகலரூபவானாயும் இருப்பதால் இந்தப்பக்ஷிகள் பசியுடன்வந்து புசிக்கின்றன. அவற்றின் பசிபாதை மேலிட அவற்றையோட்டுவது பாபம் என்றுன்னி, காருணிகராய் இன்னும் இவற்றைப்போல் பசித்த பறவையினங்கள் உண்டாகில் வந்து இச்சமயம் பசிதீர்ந்து போகலாமே என்றெண்ணி, உரத்த தொனியுடன் பஜனைபாடினால் பக்ஷிகள் பறந்தோடிப்போமென நினைத்து சத்தமிடாமல் மநதில்தானே பஜனை ஸ்மரிக்கலாயினார். அக்கம்பக்கத்துக் கொல்லைகளிற் காவலிருந்தவர்களெல்லாரும் இச்செயலினை யறிந்துகொண்டு, இந்தக் கொல்லைக்காரன் சுத்தபக்திவானாகிய துக்காவைக் கொண்டுவந்து காவலமைத்துப் போயினான்; இவர் ஹரிவிட்டலா பாண்டுரங்கா! என்று உச்சரித்துக்கொண்டு இருக்கின்றாரேயன்றி கொல்லையிலிறங்கிக் கதிர்களைப் பாழாக்கும் பக்ஷிகளை யோட்டுமவரல்லர்; சோளக்கொல்லை வீணே கொள்ளையாகிறது என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.

இங்கிப்படியிருக்க, துக்காராமருடைய திருமாளிகையில் அவர் மனைவி ஆவலிஜீஜீபாயம்மாளானவர் தமது நாயகன் சாப்பாட்டுவேளைக்கும் வரக்காணப்பெறாமல், தமது மாளிகைக்குவரும் பெண்பிள்ளை

கள் எல்லாரையும் பார்த்து, அம்மா! எனது கணவனுர் இதுவரையிலும் வரக்காணேன்; எந்தமலேயிலேயோ எந்தவநத்திலேயோ எங்கேயோ இருக்கின்றுர் அறியேன்; நானெந்தவிடங்கண்டு தேடுவேன்; எனக்கும் பசியாயிருக்கின்றது; அவர் அருந்தாமுன் யான் அருந்துவது கிடையாது; அவரிருக்குமிடம் உங்களுக்கு ஏதேனுந் தெரிந்திருந்தால் சொல்லுங்கள் என்றுகேட்க, அவர்களெல்லோரும் நாங்களறியோம் நாங்களறியோம் என்றுசொல்ல, தமது புத்திரியாகிய காசிபாயம்மாளே யழைத்து, அம்மா! உனது தந்தை இதுவரையிலும் வந்தவரல்லர்; எவ்விடத்தில் பசியுடன் சோர்ந்து கிடக்கின்றுரோ தெரியாது; எனக்கு மிகுபசியாயிருக்கின்றது; அவரிருப்பிடமறிந்து போய் அழைத்துக்கொண்டு வருவாயென்று அனுப்ப, அக்குழந்தை காசிபாயம்மையும், வீதிகளிலும், ஸந்நிதியிலும், மற்றவிடங்களிலும் எல்லாம் போய்பார்த்து அங்கு அவரைக்காணப்பெருமல், அவ்வந்த இடங்களில் வீதியாரப் போய்வரும் ஜனங்களேயெல்லாங்கேட்டு, அவர்களில் ஒருவரால் துக்காராம் இந்திராயணிக்கருகில் கொல்லேக்குக் காவல்செய்துகொண் டிருக்கின்றுரென்று சொல்லக் கேட்டு, அங்கு போய், தந்தையைக்கண்டு, சாப்பாட்டுக்கு வாருமென்றழைக்க, குமாரத்தியைப்பார்த்து, அம்மா! இந்தக்கொல்லேக்காரன் என்னேக் கொல்லேக் காவல்வைத்து, தானியம் ஒப்படிசெய்யும்போது அரைமணங்கு சோளங் கொடுப்பதாகச் சொன்ஞன்; அதற்காக இசைந்து நான் காவலிருக்கின்றேன்; என்னேநம்பி விட்டுவிட்டுப்போனுன் கொல்லேக் காரனுகையால் கொல்லேயைவிட்டு வரக்கூடாது என்று துக்காராமர் சொல்லியனுப்ப, குழந்தை காசிபாயம்மாளும் தனது வீட்டுக்குவந்து தாயினிடம் தந்தை சொல்லியவற்றைச் சொன்னுள்; ஆவலிஜீஜீபாயம்மாள் குமாரத்தி சொன்னவற்றைக்கேட்டு சந்தோஷங்கொண்டு ரொட்டியை அந்தக் குழந்தையின் கையிலேதானே கொடுத்தனுப்ப, குழந்தை காசிபாயும் அந்தரொட்டியைக் கொண்டுபோய் தந்தைக்குக்கொடுத்து உண்ணவைத்து, நீரும் மொண்டுகொடுத்துத் தனது மாளிகைவந்து தாயுந்தானுமாயருந்தி சந்துஷ்டரா யிருந்தார்கள்.

பிறகு துக்காராம் ஸ்வாமிகள், குடதிசையிற் சூரியன்மறைந்த பின்பு பக்ஷிஜாதிகளேப் பார்த்து, இதுவரையில் நீங்கள் சுவேச்சையாகமேய்ந்து பசியை யாற்றிக்கொண்டீர்கள்; இனி இரவு வருகின்றமையால்உங்களுங்கள்ஸ்தானங்களிற்சென்று தங்கியிருந்து, நாளே சூரியோதயமானவுடனே உங்களினங்களோடு வந்து வேண்டிமட்டிலும் தானியங்களேப் பொசித்துக் களிப்படையலாம் என்றுசொல்லி, தாமிருந்த பரணேயினின்று பகவந் நாமோச்சாரணஞ் செய்துகொண்டே

யிரவுமுழுதும் போக்கி, வைகறையில் பரணைவிட்டிறங்கி நதிக்குச் சென்று காலக்கடனைத்தீர்த்துக்கொண்டு நித்திய அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஸந்நிதிக்குப்போய், ஸர்வஸ்வாமியைக் கண்ணுறச் சேவித்துத் துதித்தெழுந்து, ஸ்ரீராம நாமோச்சாரணத்துடன் தன் காவற்கொல்லைக்குச்சென்று பரணைமீதேறி, முன்போல் ஆநந்த பரவசராய் கொல்லையைக் காவல்செய்து வந்தார். இவ்வாறே திநதிநஞ் செய்துவராநிற்கையில், ஓர்நாள் பக்ஷிகள்சூரியன் அஸ்தமிக்கிற காலத்தில் உதராக்கினிதணிய வயிருறவுண்டு களித்துத்தன்னினங்களோடு பறந்து தந்தம் இருப்புகளுக்குப் போய்க்கொண்டிருக்கையில் தாஸர் அவற்றைக்கண்டு, ஆவா! இந்தப் புள்ளினங்கள் தந்தம் பசிக் கொடுமைகளைத் தணித்துக்கொண்டு போம்போதும் இரவுக்கும் நாளைக்கும் வேண்டுமே என்னும்ஆசைநினைப்பால்ஓர்வித்தளவேனும் எடுத்துக்கொண்டு போகாமல் சும்மாபோகின்றன; இவையே பரிசுத்தமுள்ள ஆண்மாக்கள்; நமதுஜன்மம் ஆசாபாசங்களிற் பிணைப்புண்டு,சமுசாரச் சேற்றிலழுந்து, வீண்நாள்கழித்து யமனுக்கு வசியமாகின்றது! சிச்சீ! இப்பிறப்பு மிகக்கொடிது; பக்ஷிரூபமாகப் பிறந்திருப்போமாகில் பிறருடைய தயவுக்குச்சற்றும் எதிர்ப்பார்க்காமல் கிடைத்தபோது புசித்து சுகஜீவிகளா யிருக்கலாம்; பகவானை ஸ்மரிக்கைக்கும் உடலாயிருக்கும்; இப்பக்ஷிஜந்மமே மேலானஜந்மம்; எழுவகைத் தோற்றத்துள்ளும் எண்பதிநாலுலக்ஷ ஜீவபேதங்களுக்கெல்லாம் ஈசுவரனொருவனே படியளக்குமவன்; இத்தேக பேதங்களிற் சிறந்த மானிடதேகம் எடுத்தோருக்கு உதராக்கினி நிமித்தம் அநந்த பாடுகள்பட விதித்திருக்கின்றது; அப்படியே பட்டும்வருகின்றார்கள்; இம்மானிடப் பிறப்பினருக்கல்லவா திரவியத்தாலல்லது காரியநடவாது? மற்றபடைப்புகளாகும் ஆன்மகோடிகளுக்கு நாணயமும், நவரத்தினமிழைத்த நகைகளும் வேண்டியதில்லையல்லவா? பகவான் ஒவ்வொரு பிராணிக்கும் அவ்வவற்றில் எள்ளுக்குள் எண்ணெய்போல் கரைந்துறைந்து அவ்வவற்றைத்தனதுகருணைவிசேஷத்தால் காத்துவருகின்றான்; இங்ஙனிருக்கச்செய்த மானிடதேகம் விசேஷமென்பது எற்றுக்கு? இதனால் என்னபயன்? பக்ஷிகளாகப் பிறந்திருப்போமாகில் மானிடர்போல் பலசங்கற்பங்களுள் சிக்குறாமையினால் ஒரேசங்கற்பமேற்று பகவானைத் தொழுதுகொண்டு இருக்கலாமென்று உள்ளத்தில் ஆசைமிகுத்து, ஆநந்தமிகுந்தவராய், ஹரி ஹரீ! தேவாதி தேவா! திவ்விய தேஜோமய சொரூபா! வேங்கடத்தீசா! விட்டலா! வேதமூர்த்தி! வேதாந்த சொரூபா! விஞ்ஞாந சுக போதா! இந்தப் பக்ஷிகளைப்போல் என்னையும் ஆக்கற்கு உன்னைவிட

மற்றியாவர்திறம்? யாவர் அஃது செய்யவல்லவர்? நானென்னுஞ் சுதந்திரமற்று,நாமரூபவிபரங்களற்று, தேகாபிமானஞ்சற்றுமில்லாம லொழித்து, பந்துவர்க்கங்களும் சிநேகிதர்களும் அன்னியர்களும் தோன்றப்பெறுமல் தன்தேகம் பிரேதம்போல் தோற்றி, வாயுவின் வலியால் பழுத்த இலைகள் உதிர்வதுபோல் என்னுடைய சங்கற்பம் பாவாபாவத்தில் அழுந்தப்பட்டாலும் என்னளவிலேயே யானிருந்து உன்னுடைய ஸேவையைச் சதாசெய்யக் கிருபைபுரியும்; இத்தகைய வரப்பிரசாதம் எனக்கருளும்; பிரமாமுதல் பிபீலிகையீருன சேதநங்களுடைய சைதந்நிய சொரூபம்தோன்றும்படி அநுக்கிரகம்செய்யும்; சேஷசயனு! க்ஷீராப்திமதநா! பொன்னிலமாதராசை யென்னுள்ளத்தில் தங்கவிடாமல், அபசப்தங்களைக் கேட்டபோதிலும் யாவரேனும் என்னைத் துதிக்கக் கண்டபோதிலும் அவற்றைச் சமமாக நான்நினைக்கும் மநமருள்வாய். மாதவா! வாமனு! மதுசூதா! என்றுவந்து நித்தநித்தம் பிரார்த்தித்துவருங்கால், இவருடையஉள்ளத்தில் பண்டரீநாதன் முழுதும் வியாபகஞ்செய்து போந்ததனுல் சுயாநந்தபரிதராய் சோளக்கொல்லையினுடைய பரணைமீதிருந்துகொண்டு இரவில் காட்டுஎரிமுட்டைகளைச்சேர்த்து தீயிட்டு அவை யெரியக்கண்டு ஆநந்தமேலிட்டுக் கைகொட்டி நகைத்தாடுவதும், பாடுவதும், அரற்றுவதும், அச்சுத ஓ! என்றசைவதும், ஆநந்த மூர்த்தியினுடைய அடியிணைகள் யுள்ளத்திலமைத்து மாநச அர்ச்சனை பிரணவமலராற் பண்ணுவதும்,தமநிஜமறந்து தம்பிப்பதும், தமதுதேகத்தைத் தாமே மறந்து எங்கேபோயிற்று நம்முடைய தேகம் என்று ஆகாயரூபியாயிருந்து தேடி யதிசயிப்பதும், செடிகொடிகளைக்கண்டு வணக்கங்கள் செய்வதும், பத்துவிதங்களான நாதப்படிகளிலேறுவதும் எந்தெந்தச்சமயம் தந்தம் உள்ளங்களிப்பெய்தி பூரிக்கின்றதோ அததற்கேற்றமயங்களான அநுஷ்டாநங்களை யநுஷ்டித்து,நித்திரை சோம்பல்களை வரவொட்டாமல் தடுத்து, சதுதிந பஜனையிடையருது செய்துவருவதும், விடிந்தபிறகு இந்திராயணிக்குப்போய் நித்திய கருமாநுஷ்டாநங்களை முடித்துக்கொண்டு மறுபடியுந் தமது காவற் பரணைமீதேறி, பட்சிகள் சோளத்தைப் பொசிப்பதைக்கண்டு ஓர் தாதாவானவர் அந்நக்கொடிநாட்டி அந்நத்தையளித்து வருங்காலத்தில் பிரஜைகளருந்திச் செல்லுமதைக்கண்டு அடங்கா ஆநந்தத்தில் அழுந்துவதுபோல் சந்தோஷமடைந்துகொண்டு இருப்பதுமாயிருந்தார்.

இவ்வாறிருக்க, அக்கொல்லைக்குரியவன் துக்காராமரைக் கொல்லைக்காவலுக்கு அமைத்துவிட்டுத் தான் வர்த்தகத்துக்காக வெளியே

போயிருந்து ஒருமாசங் கழித்துவந்து கொல்லைக்குள் புகுந்து பயிரை ச்சுற்றிலும்பார்த்துக்கொண்டு வரும்போது பயிரின்கதிர்களில்தானி யங்கள்இல்லாமலிருக்கக்கண்டு வயிறெரிந்தவனாய், முகத்தைத்தொங் கவிட்டுக்கொண்டு, பற்களை நரநரவென்றுகடித்து, இவனைக்காவலிட் டதே நம்புத்திக்குக் குறைவென்றெண்ணி, இவ்வநியாயத்தை யாரு டன்சொல்லி யாறுவது என்று நாற்புறமுஞ் சுற்றி நோக்கிக்கொண்டு வரும்போது அக்கொல்லையில் சுயேச்சையாய் சஞ்சரித்து ஜீவித்துக் கொண்டிருந்த பறவைகள் பறந்தோடின. அஃதெவ்வாறு இருந்த தென்றால்: பிராமணகோஷ்டி அந்நமருந்துங் காலத்தில் சண்டாள னொருவன் அங்கு வருவானேயாகில் அவனைக்கண்டு பிராமணரெல் லோரும் அவ்வந்நங்களையுதறிவிட்டு ஓட்டம்பிடிப்பதுபோலிருந்தது. அவ்வளவில் அக்குடித்தனக்காரன் துர்ப்பாஷைகளால் வைதுகொண் டே துக்காராமரிருக்கும் பரணைக்கருகில் வந்து நின்றுகொண்டு, ஐயா! நீரேழையென்றும், இக்கொல்லையைப் பாதுகாத்தால் உமது ஜீவனத்திற்கு அரைமணங்குதானியங்கொடுக்கலாமென்றும்எண்ணி உம்மைக் காவல்வைத்து நம்பிப்போனதற்கு என்கொல்லையின் தானி யங்களையெல்லாம் பக்ஷிகள் கொள்ளையிட்டுக் கொண்டுபோகக் கண் குளிரப்பார்த்துக்கொண்டிருந்தீர். என்பெண்சாதி பிள்ளைகள் வாயில் மண்ணிட்டீர்; ஒருவருஷபலனை அநியாயஞ்செய்தீர்; எனக்கும் வெம் பசிநோ யுண்டாகச்செய்தீர் ; இனியும்மை யானெளிதில்விடேன் ; அரசுரிமையை யெவ்வாறளிப்பேன் ; மேலுக்கு பக்திவானென்றும் சத்தியவாதியென்றுந் தோன்ற நடித்து, என்னைக்கெடுக்கவே யெண் ணினீர் ; ஒருபட்சியையாவது ஓட்டாமலிருந்து அவை யிஷ்டம் போனபடியெல்லாம் புசித்துபோகக் களித்தீர்; அவைகளுக்கு நன் மைசெய்தீரேயன்றி எனக்குவருங் கெடுதியை யெண்ணாமல் போய் விட்டீர்; என்னைக்கெடுக்க எத்தனைநாளா யெண்ணியிருந்தீரோ அறி யேன்; உமக்கு அத்தாலென்ன கெடுதி? நானல்லவோ நஷ்டமடைந் தேன்! நீரோ உஞ்சவிருத்தியால் பிழைக்குமவர்; யானோ மாநமாகப் பெண்டு பிள்ளைகளை சௌரக்ஷணைசெய்து காலங்கடத்துமவன்; இவ் வநியாயத்தை யெவ்வண்ணஞ்சகிப்பேன்? இவ்வாண்டு பெண்டு பிள் ளைகளை யெவ்வாறுகாப்பாற்றுவேன்? என்று இரைச்சலோடு கூக்குர லிட்டு வயிற்றிற் கைகளால் மோதிக்கொண்டு, மிககோபத்துடன் மெய்யன்பர் கைகளைப்பற்றி வலித்துக்கொண்டு, கிராமாதிபரிடம் போகலாம் வாருமென்று கொண்டுபோகத் தொடங்க ; அவன்பின் னாலே போகத்துணிந்த விஷ்ணுவின் மெய்யடியாருடைய திருக்கோ லம் எவ்வாறுஇருந்ததென்றால்: சன்மார்க்கனுந் துர்மார்க்கனுங் கலந்

ததுபோலும், விஷமும் அமிர்தமுங் கலந்ததுபோலும், அன்னப்புள்ளும் இராஜாளியுஞ் சந்தித்ததுபோலும், பதிவிரதையும் பரஸ்திரீயுங் கூடியதுபோலும், ஆசாரமுடையவனும் அநாச்சார சம்பந்தனுஞ் சேர்ந்ததுபோலுமிருந்தது. துக்காராம் ஸ்வாமிகளுடைய கைகளைப் பற்றி வலித்துக்கொண்டுபோகிற குடித்தனக்காரன் சும்மாபோகாமல் வழியிற் கண்டபோரிடமெல்லாம் தன்குடியைத் துக்காராம் கெடுத்துப் பரதேசியாக்கிவிட்டார் என்றுசொல்லிப் பெருங்கூச்சலிட்டுக்கொண்டு கிராமாதிபரிடங் கொண்டுபோய் நிறுத்தி, வாயிலும் முகத்திலும் வயிற்றிலும் அறைந்துகொண்டு, பலபல விசனக் குறிகளைக் காட்டியழுது, ஐயா! என்னுடைய முறையைக்கேளுங்கள்; இந்தத் துக்காராமரை ஒருமாசம் காவல் என்னுடைய கொல்லையில் காத்தால் அரைமணங்கு சோளந்தருவதாகச் சொல்லிப்பேசி காவலுக்கமைத்து வைத்துக்கொண்டு, இவரைநம்பி என்னுடைய கொல்லையைவிட்டு நான் வியாபாரகாரியமாக வெளியே போயிருந்தேன்; இவர்காத்த ஒருமாதத்துக்குள்ளாக என்பயிரையெல்லாம் பட்சிகள் கொள்ளைகொள்ளும்படி யாக்கிவிட்டார். பறவைகள் மேயாமைக்காகக் காவலிடப்பெற்ற இவர்தாமே பட்சிகளுக்குத் தோழமை பூண்டு எத்தனை பட்சிகள் புசித்தாலுங் கேழ்வி முறை யில்லாமல் விட்டு அவையுண்பதில் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தாரேயல்லது ஓட்டினவரேயல்ல; விளைந்த சோளம்யாவும் பாழாகிவிட்டது; ஒருவருஷத்திய என்ஜீவனத்தை முழுமோசமாகக் கெடுத்து வைத்து, என்னையும் என் பெண்டுபிள்ளைகளையும் அலையவிட்டார்; இதற்கு யான் என்செய்யக்கடவேன்? எப்படி ஸர்க்கார் வாயிதாவைச் செலுத்தக்கடவேன்? இவராலே யெனக்கிவ்வளவு நஷ்டம் நேரிட்டுவிட்டது; இவ்விஷயத்தைத் தாங்கள் யோசித்துத் தீர்மானந் தரவேண்டியது; நானினி இவரைவிடேன் என்று வயிறெறிந்து சொல்லக்கேட்ட கிராமாதிபன் ஆச்சரியமுற்று, இவரைக் காவல் அமைத்ததற்கு இவர் பாண்டுரங்கநாதனது தியானத்தில் இருந்துவிட்டார்; பக்ஷிகள் தந்தம் சுவேச்சையாகக் கதிரின்மணிகளை யுண்டுவிட்டுப் போயின; இவ்விஷயங்களைத் தீரவிசாரிக்கத்தான் வேண்டியது என்றெண்ணி துக்காவைப் பார்த்து, ஐயா! குடித்தனக்காரன் சொன்னதெல்லாம் உண்மைதானா? என்று கேட்க துக்காராம் சுவாமிகளும், ஒருமாதம் என்னுடைய கொல்லையில் காவலிருந்து கள்ளர்கள் கொள்ளைகொண்டு போகாமல் பாதுகாப்பீராகில் அரைமணங்கு சோளந் தருவேனென்றது மெய்ம்மையே; இரவும் பகலும் பாதுகாக்கும்படிச்சொன்னதுபோலவே யான் பாதுகாத்துவந்தேன்; அக்

கம்பக்கத்துக் கொல்லைகளில் இருப்பவர்களைக் கேட்டால் அந்த வுண்மை தெரியும்; ஈ யெறும்பு கொசுகு பட்சிகள் உண்ணலாகா தென்று ஏதாவது என்னிடஞ்சொன்னதுண்டா? இவர் பட்சிகளால் நாசமாயிற்று என்பயிர் என்றுரே; ஒரு கதிரளவேனும் பட்சிகள்? கொண்டுபோனது உண்டா? அல்லது, மிருகங்களாலும் மனிதர்க ளாலுங் கொள்ளைபோனதுண்டா? இவை யேதேனும் உண்டாயிருந் தால் நானுத்தரவாதஞ் செய்வேன்; உலக நடவடிக்கையின்படி ஈ யெறும்புகளும் பட்சிகளும் உண்பதற்குக் காவலுண்டாமோ? நீங் களே இவற்றைத் தீர்க்காலோசனைசெய்து தீர்மாநம் அளிக்கவேண் டும் என்றுசொல்ல, கிராமத்தலைவர் கேட்டுப் பிரமையடைந்து புன் னகைசெய்து, துக்காராமர் சொன்னவற்றில் பிசகொன்றுமில்லை; ஈ யெறும்புகள் வரவொட்டாமல் காப்பதெப்படி? காவலிருப்பவன் களவாடாமலும், மிருகங்களால் சேதப்படாமலும், அன்னியர் கொ ள்ளை கொள்ளாமலும் இருக்கப் பார்த்துக்கொள்ளுவதேயன்றே காவலாளுடையகடமை? விளைவில் குறைந்தால் முதலாளிகளுடைய அதிஷ்டமென்றே நினைக்கவேண்டும். இவர்மீது ஒருகுற்றமுங்கிடை யாது; முதலாளி கருமத்துக்குக் காவலாள் என்ன செய்யலாம்? இவ ரென்னதோஷகர்? இதற்குஇவரை என்னசெய்யலாம்? என்று தீர்மா நித்தனன். இவற்றையெல்லாங் குடியானவன் கேட்டு, எரியுங்கொள் ளியை ஏறத்தள்ளினுப்போலும், பற்றி எரிந்துகொண்டிருக்கிற தன் வயிற்றில் மறுபடியுந் தீமூட்டினுப்போலும் எரியப்பெற்றுஓர்பெருங் கூக்குரலிட்டு, நீங்களெல்லாரும்ஒன்றுசேர்ந்து என்னைக்கெடுக்க உத் தேசித்தீர்கள்; நீர் பக்ஷபாதியாயிருந்து தீர்மாநஞ் செய்வதடாது; என்கொல்லைக்கு நாற்புறமும்இருக்குங்கொல்லைகளில் விளைந்தபடியல் லவா என்கொல்லையும் விளைந்திருக்கவேண்டும்? அப்படிக்கு இல்லா மற்போனமைக்குக் காரணமென்னை? மத்தியிலிருக்கும் நிலமாத்தி ரங் குறைவுபடுவானேன்? நீங்கள் சொன்ன தீர்மானத்தின்படி நான் அரசனிடஞ்சென்று முறையமிடுகின்றேன்; அதுபரியந்தம் இவரை விடப்போகிறதேயில்லை என்று சத்திக்கக்கேட்ட கிராமத்தலைவனு கும் படேலானவர் சற்று மநக்குறைகொண்டு, இவன்மேலானவிடஞ் சென்றுல் நமக்கென்ன தீங்குவருமோ! இங்கேயே யோர்வகை தீர் மானித்து விடுவோம் என்று எண்ணி, ஞானியர்க்கரசாகிய துக்காராம ரைப் பார்த்து, ஐயா! தாங்கள் உரைத்தனவெல்லாஞ்சரிதான்; அவன் பக்ஷிகளை யோட்டாமல் அவை சாப்பிட்டுப் போகட்டுமென்று சும்மா யிருந்தமையால் எனக்குஇவ்வளவு நஷ்டமாயிற்றுஎன்கின்றுன்; தாங் களும் வேறு ஆன்மாக்களைத் தங்கள் ஆத்துமத்தோடு ஒக்கஎண்ணி

யிருக்கும் கருணாநிதி ஆகையால் பக்ஷிகள் உண்ணக்கண்டும் ஓட்டாமல் இருந்துவிட்டீர். அதனால் நஷ்டம் அவனுக்கு நேரிட்டதென்பது உண்மைதான். அதற்கேற்றபடி நீர் நஷ்டங்கட்டிக் கொடுக்கத்தான்வேண்டும் என்றுசொன்னதற்கு ஸ்வாமிகளும் ஒப்புக்கொள்ள; படேல் கொல்லைத்தலைவனை நோக்கி வருஷமொன்றுக்கு அந்நிலத்தில் மாசூல் என்ன ஆகிறது? தருமமாயுரைப்பாயாக என்றுகேட்க; அவன் நாலுவருஷத்தில் விளைந்த அந்நிலவிளைவை சராசரியாயெடுத்துக் கணக்கிட்டுப் பார்த்து அதில் தேர்ந்ததை யங்கீகரியுங்கள். அநியாயமாய்ப் பிறருடைய சொத்து எனக்கு வேண்டாம். முன்சொன்ன சராசரிகணக்கில் வருஷமொன்றுக்குஇரண்டுபுட்டிதானியமாகிறது என்றுரைத்தான். படேல் அதைக்கேட்டு சுவாமிகளை நோக்கி, இரண்டுபுட்டி தானியம் அவனுக்குக் கொடுத்துவிடும். இல்லையாகில் பலானநாள் தருகிறேனென்று கெடுவிட்டு அவனுக்கு ஓர் தஸ்தாவேஜு எழுதிக்கொடும் என்று சொல்லக்கேட்டு, ஸ்வாமிகளும் படேல் சொன்னபடியே சாக்ஷிகளுட்பட தஸ்தாவேஜு ஒன்றெழுதிக்கொடுத்து அனுப்ப, அவன் தானும் மிகுசந்தோஷசித்தனாய், அங்குள்ள யாவரையும் வணங்கித் தன்னிருப்பிடத்திற்குச் சென்றான். அது எவ்வாறு இருந்ததெனின்: கானலை நீரென்று எண்ணியோடும் பேதமதியாளனைப்போலும், சாத்திரங்களிற் சிறிது வாசித்தவன் சகல கலைகளையுமறிந்து விட்டவன்போல் நடித்து தெய்வதூஷணை பெரியவர்கள்தூஷணை செய்து தனக்குத்தானே மகிழ்வதுபோலும், சுபேச்சை யென்னும்முதற்படியை யுணராதவன் ஏழாவதுபடியாகிய ஞானப்படி இன்னதென்றும், அவற்றினுடைய அநுஷ்டானமே தன்னதென்றும், பிரமமுந்தானுங் கலந்தே யிருக்கின்றானென்றும், தான் பிரபஞ்சனென்றும் எண்ணித் திரிந்து வயிறு வளர்க்கும் அகர்த்தபுருடன் அடையுங் களிப்புபோலும் இருந்தது, அந்தக் குடித்தனக்காரன் தான் தஸ்தாவேஜுபெற்றவிஷயத்தில். பஞ்சாயத்தார் துக்காவின் சார்பிலிருந்தார்கள். நம்முடைய வல்லமையினால் அதைத்திருப்பி தஸ்தாவேஜுபெற்றோம். நம்முடைய வல்லமையாலல்லவா இந்த நன்மை நாம்பெற்றோம். இதைக் கேட்போரெல்லாரும் நம்மைப்பற்றி இனி யச்சங்கொள்ளுவார்கள். வேறு யாரும் நமக்குத் தீங்குசெய்யவே மாட்டார்கள். நம்முடைய பெண்டு பிள்ளைகளும் நம்முடைய வலிமையைக்கண்டு வியப்பதுமன்றி நந்திறத்தில் அச்சமுங் கொள்ளுவார்கள் என்று எண்ணிக்கொண்டவனாய் மகிழ்வடைந்தான். கிராமாதிபனும் அங்கிருந்த மற்றவர்களும் தங்களுக்குத் தாங்களே யோசித்து, சோளக்கொல்லையைப் பார்க்கா

மல் இவ்விடத்திலிருந்தபடியே வாதியாகிய கொல்லைக்காரன் சொற்களைக்கேட்டு, ஸாதுத்தலைவரிடத்திலிருந்து கடனேற்படுத்தி தஸ்தாவேஜு வாங்கித் தந்துவிட்டோம். நாம்செய்த இந்த அநீதிகாரியத்துக்கு ஸ்ரீமத்பாண்டுரங்கநாதன் நம்மை யாது தண்டனைக்குள்ளாக்குவனோ அறியோம்! என்றெண்ணி, தங்கள் மநதில் அச்சங்கொண்டு அவர்களெல்லாரும் ஒன்றுசேர்ந்து கொல்லையைநோக்கிப் பிரயாணப்பட்டு, கொல்லைக்கு அருகில் வந்துக்கொண்டிருக்க, அந்தக் கொல்லையிலிருந்து சுகந்தங்கள் வீசவும், அந்நிலத்தில் விளைந்த சோளக்கதிர்கள் பெருத்த செண்டுகள்கொண்டு, வெண்முத்துகள் கோவையாகக் கோத்துச் சுருளிட்டு வைத்தாப்போல் காற்றும் நுழைய இடமில்லாமல் மணிகள் அடரகோக்கப் பட்டிருக்கவும் கண்டு, ஹரி - ஹரீ! விட்டலா! உனது மெய்யடியாராகிய துக்காராமருக்காக அருஞ்செயலாய்த் திருவிளையாடலியற்றி, எங்களையொத்த கருமம் நிறைகொண்டவர்க்கும் நினது திருநாமத்தின்பாலும், திருவடிகளுன்பாலும் எண்ணம் வரும்படி அநுக்கிரகித்தருளிணுய்! தேவதேவா! என்று அவர்களெல்லோரும் சுவாமியின் கிருபா விசேஷங்களை யெண்ணி யெண்ணி ஆநந்தங்கொண்டு, துக்காவையுங் கீர்த்தித்துக்கொண்டு இருக்குங்காலத்தில், குடித்தனக்காரனும் இவ்வதிசயங்களை யறிந்து, துராபேக்ஷை மேலீட்டால் அவர்களைநோக்கி, ஐயமாரே! தானியம் என்நிலத்தில் விளைந்ததாகையால் நான் இத்தானியங்களைக் கைக்கொண்டு, துக்காராமரிடத்திலிருந்து தாங்கள் எனக்கு வாங்கிக்கொடுத்த தஸ்தாவேஜை உங்களுக்காவது அவருக்காவது கொடுத்துவிடுகிறேன் என்ன; அந்த நியாயத்தவர்கள் அவனது துரபிப்பிராயமறிந்து, அவன் அத்தானியங்களைக் கைப்பற்றிவிடாமல், தாங்களே கூலியாட்களை வைத்துக் கதிர்களை யறுப்பித்து, ஒப்பிடிசெய்து அளந்துபார்க்கையில், இரண்டு புட்டி தானியம் சாதாரணமாய் விளைந்துகொண்டிருந்ததுபோய் பதினேழுபுட்டி தானியம் இருக்கக்கண்டு, என்றுமில்லா அதிசயமும் ஆநந்தமுங்கொண்டு, இரண்டுபுட்டியே சாதாரணவிளைவென்று குடித்தனக்காரன் முன் வாக்குமூலத்தில் சொன்னபடி அவனுக்கு இரண்டு புட்டி சோளம் அளந்து கொடுத்துவிட்டு, மற்ற பதினைந்துபுட்டி தானியத்தையும், ஞாநாமிர்தமுண்ட ஞாநமூர்த்தியாகும் துக்காராமரை நோக்கி, 'தங்கள் மாளிகை சேர்ப்பித்துக்கொள்ளலாம்' என்று பிரார்த்தியாநின்றார்கள். இவர்களனைவரும் ஒரே மனத்தராய்ப் பிரார்த்திக்கக்கண்ட சுவாமிகள் அந்தப் படேல் முதலானவர்களை நோக்கி, ஐய! ஆதியில் இவ்வளவு தானியத்திற்கு எனக்குப் பேச்சில்லை; அரைமணங்கு தானியந்தான் பேச்சு; அதுவும் அவரை அரைமணங்கு தானியம் கொடுக்க யான் வருந்தினவனல்லன்; இவராக என்னிடம்வந்து எனக்கு இச்சமயம் கொல்லையைக்காக்க யாரும்

உதவியில்லை. ஆளுக்காக இனிநான் வெளியூர்களுக்குப்போய்ச் சேகரிக்கவேண்டும். இப்போது நீரும் இங்குநின்று பஜனைசெய்துகொண்டிருப்பதால் இங்கிருந்து செய்யும் பஜனையை எனது கொல்லையிலிருந்து ஒருமாசஞ் செய்து வருவீரேயாகில் தானியம் ஒப்பிடியானவுடனே உமக்கு அரைமணங்கு தானியங்கொடுக்கிறேன் என்றார். நான் அதற்கிசைந்து 'உபகாரம்' என்னும் நீதிக்கிணங்க இக்கொல்லையில் இருக்கலாயினேன். அரைமணங்கு சோளத்திற்கும், இந்தப்பதினைந்துபுட்டி சோளத்திற்குமென்று யானிக்கொல்லையைக் காத்தவனல்ல. இந்தத்தானியம் எனக்கு வேண்டாம் என்றுரைக்க, அவர்கள் பிரமைகொண்டு, இவருடைய நடவடிக்கைகள் தரும சூட்சுமமாயிராநின்றன. எளிதிலுணர நம்போல்வார்க் கெட்டாது. இவருடைய வுள்ளக்கருத்து பகவானுக்கே தெரியும். விஷ்ணுமாயையை யாவரேயறிந்து அளவிடகிற்பார்? நிராபேக்ஷை என்பது வைராக்கியத்தின் லக்ஷியம்; வைராக்கியமானது நிராபேக்ஷையின் லக்ஷணமாகும்; நிராபேக்ஷையே சுஞ்ஞானம்; நிராபேக்ஷையே ஸாதகர்களுக்கு வேண்டிய அணிகலன்; நிராபேக்ஷையே ஸகுணபக்திக்கு ஆதாரம்; நிராபேக்ஷையாரிடமிருக்கின்றதோ அவரிடத்தில் சாந்திவிளைந்திருக்கும்; நிராபேக்ஷையுள்ளவர் விரக்தியடைந்திருப்பார்; நிராபேக்ஷையினால் வெறுப்படைந்து சந்தோஷம் உண்டாயிருக்கும்; நிராபேக்ஷையே உண்மையான விவேகம்; நிராபேக்ஷையுடைய புருஷர்களை நிராபேக்ஷையுடையர்களே அறியவேண்டுமல்லது பிறரால் அவர்களுடையபெருமை அறியவசமல்ல; நிராபேக்ஷையுடையோரிடம்ஸகல சித்திகளுந் தங்கியிருக்கும்; நிராபேக்ஷையினால் பக்தி வெளியுறக் காணும்; இந்நிராசையைவிட வேறுபெருமை உலகிலொன்றுமில்லை. இப்படிப்பட்ட பக்திவான்களுக்கல்லவா பகவான் பிரசந்நனாயிருக்க அடுப்பது? நிராபேக்ஷையில்லாத பக்தி பக்தியன்று; சுத்த டாம்பிகம்; இத்தனை நிராபேக்ஷையின் லக்ஷணங்களும் துக்காவுக்குப் பொருந்தி மேன்மேலும் அபிவிருத்தியாக வளர்ந்துவருவதினால் தான் ஸ்ரீநாதன் பிரத்தியக்ஷத்தில் இத்தகைய அருமைத் திருவிளையாடல்களை நடாத்திவருகின்றான்! என்று வியப்புடன் கொண்டாடினார்கள்.

அந்தக் கிராமவாசிகள், வேடிக்கையாகவந்து அவ்விடத்தில் இருந்தவர்களில் சிலர் பக்ஷிகளுக்கு இறையளித்தால் தானியம் கேடில்லாமல் வளரும் என்றும், சிலர் துக்காவினுடைய பிள்ளைகுட்டிகள் பஞ்சத்தில் வாதைப்படுகிறதென்று திருவுள்ளமிரங்கிசருவேசுவரன் துக்கா காத்தசோளக்கொல்லையில் தானியம் அபிவிருத்தியாக அறுக்

கிரகித்தானென்றும், சிலர் குடித்தனக்காரன் புண்ணியவான், அவனுடைய புண்ணியத்தால் இவ்வாறு விருத்தியாயிற்று என்றும், மற்றுஞ்சிலர், போபோ பைத்தியக்காரர்களே! துக்காசேட்டு மிகதரித்திரர், இவருக்கு பகவான் விளைவுசெய்வதென்ன? என்றும் இப்படிக்கெல்லாம் அவ்வவர்களுடைய புத்தி சூட்சுமங்கள் இருந்தவகை வார்த்தையாடிக் கொண்டார்கள்.

அநந்தரம் கிராமத்துப் படேல் முதலானவர்கள் ஒப்பிடியாக்கி, கொல்லைக்காரனுக்குச் சேரவேண்டிய இரண்டுபுட்டி தானியம்போக மற்ற பதினைந்துபுட்டி தானியத்தைக் கொண்டுபோகுவீரென்றால் சுவாமிகள் இசைந்திலர். இதற்கெவ்வாறு நடத்தலாம்? என்று யோசித்துக்கொண்டிருக்கையில், அவ்விடத்திய பாண்டியார் என்னும் படேல் மாதாஜிபந்து என்பவர் பூரண சற்பாவமுடையவராகையால், அந்தப் பதினைந்துபுட்டி சோளத்தையும் தமது கிருகத்தில் அடக்கஞ்செய்து வைத்துக்கொண்டு, தேவனது அருளால் உற்பத்தியானமையால் சத்விஷயத்தில் உபயோகிக்க எண்ணங்கொண்டவராய்; தாம் தம்மாளிகைக்கு எடுப்பித்துக்கொண்டுபோய் பத்திரப்படுத்தி வைத்தார்.

இவ்வருமைத் திருவிளையாடல்கள் தங்கிய இந்த லீலாமிர்தகிரந்தமானது யாவருக்குரியதென்றால், விஷ்ணு ஸம்மந்தமாகிற பாக்கியம் பெற்றதோர் வைஷ்ணவர்கள் உண்டு களிக்கத்தக்கது. பகவத்தூரமையுடைய மெய்யன்பர்களுக்கு இது ஆநந்தத்தைத்தருவது. பிரகிருதி ஸம்பந்தமுடையவர்களுக்குப் பொய்மையையே தருவது. யார் பக்தப்பிரியராக வேண்டுமென்று ஆசைகொள்ளுகிறார்களோ அவர்கள் சிரவணத்துக்கு இன்பந்தருவது. ஆதற்கொண்டே ஸந்தஜநங்களுடைய திருவடிகளை முடிமிசைகொண்டு, அதனால் ஆநந்தமீறி இந்நூலைப் புகலாநின்றேன். பெருநிதியுடையோன் தன்விரலில் பித்தளை பவித்திரம் அணிந்திருப்பனாகிலும் ஜநங்கள் அதைத் தங்கப்பவித்திரம் என்றே பிரமிப்பதுபோலே, ஸந்தஜநங்கள் பித்தளையோடொத்த என்னைத் தங்கத்தோடொத்த தாங்கள் தங்களறிவினால் ஆசிர்வாதங்கள் செய்வார்களாகில் எனது மலிநபுந்தியிற் குடிகொண்டிருக்கும் அஞ்ஞாநம்நீங்கி மேல் ஏழாவது அத்தியாயத்தில் நிகழும் ஸ்ரீமத் துக்காராம்சுவாமிகளுடைய திவ்விய சரித்திர சல்லாபங்களைப் புகலலாவேன். சுபம்! சுபம்!!

ஆறுமத்தியாயம் முற்றும்.

ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகள் திருவடிகளே சரணம்.

ஆவலிகாலில்தேவன்முள் வாங்குதல். துக்கா. ஆவலி. விஷ்ணு.

ஸ்ரீ

ஸ்ரீ பாண்டுரங்கபரப்ரஹ்மணேநம:.

ஸ்ரீமத்
துக்காராம் சுவாமிகள் சரித்திரம்.

ஏழாமத்தியாயம்.

காப்பு.

உந்திமலர் பூப்பவொரு நான்கு முகத்தானைத்
தந்தருளி யவன்வயிறைத் தரணிதந்த தாடாளா
சந்ததமு நின்னடியார் தாளிணைக்கீழ் குற்றேவல்
எந்தன்னைச் செயவிடுப்பா னெழிலடியை யேத்துவனே.

ஸ்தோத்திரங்கள்.

இச்சரிதம் பக்தலீலையானதால், "அவனருளாலேயவன்றாள் வணங்கி" என்றபடி, அப்பத்தருடைய அருளுடை யாசீர்வாதத்தால் வருணிக்க விருப்புறுகின்றனன். பிறிதோர் பிரதியுபகாரம் விரும்ப கில்லாது ஆத்துமாக்களுக்குதாரகமளிப்பதேபெரும்பயனாகஎண்ணி ஆகாயப் பெருவெளியிலிருந்து மேகம் வருஷிப்பதுபோலும் ஜலத்திலும் மண்ணிலும் விலையில்லாத உயர்ந்தரத்திநங்கள்உற்பத்தியாவது போலும், மாகத்தொடு பாரைவிழுங்கும் முகாந்தகாரம்போகக் கதிரோன் உதயஞ்செய்வதுபோலும், இரவினிருளை யோட்டற்குச் சந்திரன் தோன்றுவதுபோலும் சருவலோகஆராத்தியனது திருவாராதநத்திற்குஉபயுத்தமாக கமலயோநிஜனுகும்பிரமன்சுகந்தபுஷ்பங்களை

புண்டாக்கி வைத்ததுபோலும் இந்தச் சந்தசரித்திரமானது, ஸஜ்ஜநங்களுடைய சிரவணத்திற்கு ஆநந்தமுண்டாக்கி வைத்தற்கென்றே சாங்கியப்பட்டதாகும். சிரவண - மநந நிதித்தியாஸிதவ்வியங்களிற் பொலிவுற்றோங்கும் ஸத்துக்களுக்கு இதில் அநுபவம் பிரத்தியக்ஷ ஸாக்ஷாத்காரமாகும். எங்ஙனே? என்னில் :—

ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகள் பஜனைசெய்தபடியே கொல்லைக்குக்காவலிருந்ததும், பக்ஷிகள் தானியமுண்டதும், புண்டரீகவரதன் தானியத்தை அபிவிருத்தியாக்கினதும், பாகித்துத்தந்தசோஷத்தைப் பெறுமல் ஸ்வாமிகள் திரஸ்கரித்ததுவும் முன் அத்தியாயத்தில்விளங்கினதல்லவா! அவ்விஷயங்கள் யாவற்றையும் ஸ்வாமிகளுடைய தேவியாராகிய ஆவலிஜீஜீபாயம்மாள் சாங்கோபாங்கமாகக்கேட்டு, ஆவா! ஈசுவரனுடைய அருளால் கிடைக்கப்பெற்ற தானியத்தை வெறுத்தால் இந்தப் பிள்ளைகுட்டிகளை யெவ்வாறு காப்பாற்றலாம்? சமுசார துக்கத்தினின்று விலகி சருவேசுவரா! சச்சிதாநந்தா! என்றிருக்கின்றார். இனியான் எவ்வகையில் சமுசாரம் நடத்துவேன்? என்றுசஞ்சலசித்தராயிருந்தார். தாஸச்சிரேஷ்டர்இவைகளைப்பாராட்டாமல், நமதுபூர்வீகர்கள் ஏற்படுத்தின தேவாலயம் மிகவுங்கிலமாய் விட்டதே! என்று கிலேசங்கொண்டவராய், நாம் சுதாவில்தானே இக்கோயில்பணி முற்றுறச் செய்துவைக்கவேண்டியது என்றெண்ணி, களைக்கட்டுமண்வெட்டி தோண்டி முதலியவற்றைச் சேகரித்துக்கொண்டு, வேறு உதவியில்லாமல் கிலமான மதிளின்கற்களைச்சொப்பனிட்டு வருகிறதை சாக்ஷாத் பண்டரீநாதன்கண்டு இரக்கமுற்று, ஒருவர் உதவியில்லாமல் இக்கைங்கரியம் எவ்வாறு முடிவுறும்? என்று மாதாஜிபந்துவினுடைய சொப்பநத்திற்றோன்றி, பதினைந்துபுட்டி தானியம் உன்னிடத்தில் இருக்கிறதாகையால் அதை தேவாலயகைங்கரியத்துக்குச் சேர்ப்பிப்பாய்; என்றுரைக்க; மாதாஜிபந்துவும் சொப்பநம்விட்டகன்றுஜாக்கிரதைபெற்று, அவ்விடத்திய பெரியோர்களுக்குத் தாம்கண்ட சொப்பநத்தை விளங்க வுரைத்துக்கொள்ள, அவர்களும் அப்படியே யழைத்துக்கொண்டு ஸந்நிதாநம்வந்து பார்க்கும்போது, தாஸர் தன்னந்தனியாய் திருப்பணிகளைச் செய்து வருவதை யறிந்து, அதிசயங்கொண்டு, தாங்கள் அவருக்கு உதவி செய்ய வேண்டுமென்று எண்ணி, ஐந்து கூலியாட்களையும் ஒருமேஸ்திரியையும் வைத்து, சுண்ணும் செங்கற்களைக் கிரயத்திற்கு வாங்கித்தந்து ஸந்நிதியின் திருப்பணிகாரியங்களை முடித்துவைத்தார்கள். நிறைவேறினபின் தாஸருடைய உள்ளமானது களிப்படைந்து, தாசரதீ! கருணையோநிதி!! என்று புகழ்ந்து கொண்டாடியாடுவார்

பாடுவார், பஜிப்பாராய் சுவாமியைநோக்கி. நீவிர் ஒழுகலில்லாத வீட்டை யமைத்துக்கொண்டீர். அடியேனுடைய தேகமானது ஊனுடைச் சுவர்வைத்து - என்புதூணுட்டி - உரோமமேய்ந்து - ஒன்பது வாசலுண்டாயிருப்பதோடு நானென்னும் அகங்காரமும், எனதென்னும் மமகாரமுமாகிற பற்றுகளுமுண்டாகி, புலன்மேயும் பொறிகளின்வழி மனஞ்செல்லாநின்றது. இத்தேகமிழந்து,சற்கருமத்திற்குரிய தேகமெடுப்பித்து, அனலில்பட்ட புழுவதுபோல் வாடித் துடிதுடித்து அலமருகின்ற என்னை உன்மெய்யன்பர் திருவடிகளில் துவளவைத்து, என்றென்றும் அவர்களுக்குச் சேவகனுயமையவைத்துக், கிருதார்த்தனைக் கருணைசெய்வாய் கருணையங்கடலே! காகுத்தா! கரியகோவே! ஜகதீசா! அன்பர்நேசா! இதயமலர்வாசா! சுகதேஜா! பாபநாசா! ஜேஜேவிட்டலராஜா! என்று இருகண்களிலும் ஆநந்தபாஷ்பம்பெருகநின்று பலபல பஜனைகளை பஜித்து, இரவென்றும் பகலென்றுமில்லாமல், அன்ன ஆகாரங்களைத் துறந்து, சோர்வுறுமநத்தராய், சந்நிதாநத்தின் கட்டடகாரியம் சம்பிரமமாக முடிந்துவிட்டது; இனி சுவாமிக்குத் திருமஞ்சநம் கும்பாபிஷேகம் முதலியவை நடக்கவேண்டியிருக்கிறது; இதற்கென்ன செய்யலாம்? என்று ஏங்கியிருப்பதை, அடியருள்ளமென்னுந் தாமரையிற் குடிபுகுந்து இறையும் அகலாது ஒளிதரும் சருவபூதநாதன் அறிந்து, அவ்வூரின் படேலாகும் மாதாஜிபந்துவின் சொப்பநத்திற்சென்று, அடா படேல்! துக்காராம் சோளக்கொல்லையைக் காத்தகூலி அரைமணங்கு சோளம் நீ பெற்றுக்கொண்டாய்; அவருக்குக்கொடுக்கவேயில்லை; இது உனக்குத்தகுமோ? இதற்காகத்தானு இராஜாங்கத்தார் உன்னை விவேகியென்று மதித்து கிராமத்தலைவனென வைத்திருப்பது? இப்போது அரைமணங்கு சோளமும் அதின்வட்டியும் குடித்தனக்காரனிடத்திலிருந்து வசூல்செய்து, நமது தாஸர் அபிப்பிராயத்தின்படி கும்பாபிஷேகம், திருக்கலியாணம், பிராமணஸமாராதநம் செய்துவை என்று திவ்விய ஆஞ்ஞையிட்டு மறைந்தருளவும், மாதாஜிபந்து விழித்துக்கொண்டு, ஓகோ! துக்காராம்ஸ்வாமிகள் கிருபையினலே எவர்க்குமரிய இறைவனீசனைத் தரிசிக்கலானேன்; தெவிட்டா இன்னமுதினையுண்டேன்; என்பாக்கியமே பாக்கியம்! என்று குதூகலங்கொண்ட மநத்தராய், தமது சாவடிக்குவந்து, அவ்விடத்திற்கு வரத்தகுந்தவர்களையெல்லாம் வரவழைத்து, சோளம்பெற்ற குடித்தனக்காரனையும் வருவித்து, பூருவம் துக்காராமருக்குக் கூலி கொடுக்கவேண்டிய பாக்கி அரைமணங்கு சோளம் இருக்கின்றதல்லவா? அதோடு அதற்குரிய வட்டியுஞ் சேர்த்துக்கொண்டுவந்து

இச்சமயமே கொடுக்கவேண்டியது என்று உத்தரவுதர, அவனும் பயமுற்று மறுபேச்சுப் பேசாமலேயேகொண்டுவந்து செலுத்திவிட்டான். அந்தத் தானியத்தைப் பெற்றுக்கொண்டு, அங்கிருந்த ஜெனங்களைப் பார்த்து, படேல் தமது சொப்பநத்தில் சுத்தசத்துவத்தின் சோதி மயாநந்தமூர்த்தி யெழுந்தருளி ஸேவைசாதித்து அளித்தருளின திவ்வியாஞ்ஞையைச்சொல்ல, அவர்களெல்லோரும்உள்ளடங்கில்லா ஆநந்தத்தால் பரவசங்கொண்டு, ஹரிவிடேல்! பாண்டுரங்கா! பக்தபராதீநா! என்று கூப்பிடிட்டு, கொண்டாடி, ஸ்வாமிசந்நிதானத்தை நோக்கி தீர்க்கநமஸ்காரஞ்செய்து, பிறகு ஸந்நிதியின் கும்பாபிஷேகத்திற்கும், திருக்கலியாணத்திற்கும் பிராமண சந்தர்ப்பணத்திற்கும் வேண்டிய சாமக்கிரியைகளை அவ்வவர்கள் தங்கள் தங்கள் சக்திகளுக்கேற்றபடி பங்கிட்டுக்கொண்டு சேகரித்துத்தர வுத்தரவு பெற்றுக்கொண்டுபோய், தங்கள் தங்கள் பாகாசாரத்துக்கேற்ற சாமானகளைச் சேகர்த்துக்கொடுத்து வேதியர்களால் இடப்பெற்ற நல்முகூர்த்தத்தில் அவ்வூரின் பிரஜைகள் யாவருஞ்சேர்ந்து, பாளை கமுகு பரிசுடைப் பெருத்ததொரு பந்தல் அலங்கரித்து, கருடக் கொடிகளை நாற்புறங்களிலும் நாட்டிவைக்க; வார்க்கரிகளாகிய சாது ஜநங்கள் தங்கள் தங்கள் பஜநகோஷ்டிகளுடனே முப்பத்திரண்டு வகை வாத்தியங்கள் முழங்க பஜனை செய்துகொண்டிருந்தார்கள். ஊர்ஜெநங்களில் ஆண் பெண்ணடங்கலும் பீமாநதியில் நீராடி நல்ல அலங்காரங்களைச் செய்துகொண்டு, பயபக்திகளுடனே சந்நிதிவலஞ்செய்து ஸ்வாமிமுன்னின்று, கருணையானே! கஜேந்திரவரதனே! கபடநாடகனே! காளிந்தி கருவபங்கனே! கண்மணி அனையானே! போற்றி! போற்றி! என்று வணங்கியிருந்தார்கள். அவ்வளவில் வேதாந்தங்களில் வல்லவேதியர்கள் வேதபாராயணங்களையிசைத்து, தனது நீர்மையால் அர்ச்சாசொரூபமா யெழுந்தருளி யிருக்கிற தேவர்பிரானைத் தக்கதோர் சிங்காசநத்தில் ஏறியருளுவித்து, நெய்-தேன் - பால் - தயிர் - இளநீர் - புனுகு - சவ்வாது - அத்தர்முதலான வைதிக திரவியங்களாலும், பூரணப்பொற்குடங்களிற் பூரித்து மந்திரிக்கப்பட்டிருக்கும் சுத்தோதகத்தாலுந் திருமஞ்சனமாட்டி திருவபிஷேகங் கண்டருளுவித்து, ஈரவாடை நீக்கிப் பீதாம்பரத்தால் திருமேனியின் ஈரம்புலர்த்தி,வேறு பீதாம்பரம்உடுத்துவித்து, தங்கச்சரிகை யிழைத்த ஷாலுவை போர்த்து, நெற்றிக்குத் திலதக்காப்பிட்டு, விலையில்லா நவரத்திநங்கள் இழைக்கப்பட்டிருந்த திருமுடி சார்த்தி, ரத்திந ஆரங்களைத்திருக்கழுத்தில்அணிவித்துகாந்தியுள்ளதோர் குண்டலங் காதிலமைத்து, மார்புக்குத் தங்கக்கவசங் கவ

சித்து, புஜத்தில் சோபியாநின்ற புஜகீர்த்திகளையிட்டு, முத்தாரம் ஸ்ரீசாளக்கிராம ஆரங்களைச்சார்த்தி, வநமாலை - கௌஸ்து ஆபரணம் முதலியவற்றால் அலங்கரித்து, உலகத்துக்கு ஒப்பறுதாயாகிய ருக்கு மணி பிராட்டிக்கும் அதுபோன்ற திருமஞ்சனங் கண்டருள்வித்து, மணிமேகலை சார்த்தி, திருவாபரணங்களால் அலங்கரித்து, தொத்த லர் பூமாலைகளைச் சார்த்தி, தம்பதிகளாகும் ஸகலலோக பிதாவுக் கும், ஸகலலோக மாதாவுக்கும் கதம்ப கஸ்தூரிகள் அணிவித்து, சுத்த நிவேதநமாகும் விவிதசித்திராந்ந தளிகைகளைச் சமர்ப்பித்துத் திருவாராதநங்கண்டருளப்பண்ணி, தீர்த்தப்பிரஸாதங்களை அங்குள் ளார்க்கெல்லாம்பிரஸாதமாகப் பரிமாறி, ஈதல்லால் வேறு வைகுண்ட மில்லையென்றுசொல்லலாம்படி காட்சியாகக்கண்டு, ஜநங்களெல்லாருந் திரள்திரளாகத் திரண்டு, ஆநந்தபரவசர்களாய்ப்பெருவிழாக்கொண் டாடி, பஜனைகளைச் செய்துகொண்டு, வாத்திய விசேஷங்கள் தாம் - தாமென முழங்கத் திருவீதி மகோற்சவங் கண்டருளப்பண்ணின தின் வைபவத்தைச்சொல்ல என்னொருவனுடைய வாய்போதுமோ! தேவர்களும், கந்தருவ கிந்நர - கிம்புருட ஸித்தவித்தியாதரர்களும், இருடிகளும், நரலோகத்தவர்களும், திருவநந்தாழ்வானும் ஒன்று கூடி சொல்லப்புகினும் அவர்களுடைய வாய்களும் போதுமானவை யன்று, இப்படி துக்காராம்ஸ்வாமிகள் தொல்லைமூலப் பழஞ்சுட ருக்கு நடாத்தின ஸந்நிதிப் பிரதிஷ்டை கும்பாபிஷேகங்களின் மங் களாவகங்களைத் தரிசிக்கப் பேராவல்கொண்டு தேவ கந்தருவ சித்த வித்யாதரர்களும், முநீசுவரர்களும், ஸந்தஸநங்களும் அங்கடைந்து, நான்முன் நீ முன்னென ஒருவர்மீது ஒருவர்மோத, முடிகளிலணிந்த கிரீடங்கள் முதலிட்டவை தவறிச்சிந்த, மேல்வீழ்ந்துபோய் தரிசித்து ஆநந்தங்கொண்டார்கள். பிராமணர்களும், அறுசுவையோடு உண்டி முடிந்து, சந்தந புஷ்ப தாம்பூல தக்ஷிணைகளைப்பெற்று, சொஸ்தி சாந் திகளோடு பல்லாண்டுகளும்பாடிக்களித்துத் தந்தம் அகங்களுக்குப் போயினார்கள்.

இவ்வாறு விண்ணாட்டவரும் மண்ணாட்டவருங், தங்கள் தரிசந காரியங்களை முடித்துக்கொண்டவராய் தந்தம் இருப்புகளுக்குப் போய்விட்டபிறகு தாஸருள்ளமானது சுத்தவிரக்தியுடைந்து, சுயமா கக் கீர்த்தனைப்பாடியும், பெரியவர்களாகிற கபீர் - கமால் - நாம் தேவு - ஞானேசுவரர்-எக்நாத் முதலானவர்கள் இவ்விருள் தரு ஞால த்தை வாழ்விப்பான் இயற்றிவைத்தகீர்த்தனைகளையும், கண்ணபிரான் செய்த லீலா ரசங்களைப் போதிப்பதான ஸ்ரீமத்பாகவதம் முதலி யவைகளையும் பாடம்பண்ணியும், அவற்றை யெப்போதும் இடை

விடாமல்உச்சரிப்பவராய்க்கொண்டுஆநந்தப்பெருங்கடலில் அழுந்தி, நாட்டாரோடு உறவொழித்து, பகற்காலங்களிலெல்லாம்வநங்களிலும் மலைகளிலுஞ் சஞ்சரிப்பதும், இராக்காலங்களில் ஸந்நிதியிற்புகுந்து ஸ்ரீராமநாம பாராயணஞ் செய்வதுமாகக் காலங்கடத்திவந்தார்.

இங்ஙனிருக்க, கிரந்தகர்த்தாவை பக்தஜெநங்கள் நோக்கி, ஐய! உலகத்தில் அநந்தம்பேர், நான்குவேதம், ஆறுசாஸ்திரம், பதினெண் புராணம், முப்பத்திரண்டு உபநிஷத்துக்களையோதி, சரியை - கிரியை - யோகம் - ஞானம் என்னும் நான்கின் வழிநின்று அநுஷ்டித்து ஆசாரபதம் நிருவகித்துவாழும் பெரியோருக்கு பகவான் பிரஸந்நனாகாமல், ஸாதாரணகல்வி கேள்விகளையுடைய துக்காவுக்குமாத்திரம் ரக்ஷகன் பிரஸந்நனாவதற்கும், அவரிடம் விளங்கியிருப்பதற்குங் காரணமெதுவோ? அறிகின்றிலோம்; அதனை விசதமாக அறிவிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, கிரந்தகர்த்தா சொல்லத் தொடங்குகின்றார் :—

குலைக்கும்நாய் கடிக்கவறியாதுபோல எவ்வளவு வாசித்திருந்த போதிலும் எதி யிறையெந்தையெம்மானைத் திரிகரணசுத்தியோடு நின்றேத்தும் பக்திகிடைப்பது அரிதரிது. "ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தாமடங்காப் - பேதையரிற் பேதையாரில்" என்றுசான்றோர் உரைத்திருக்கின்றார்கள். அதன்படியே, அநந்த நூல்களை விரித்து விரித்து வாசித்துவிட்டோமென்று எண்ணுமவர் சாத்திரச்சும்மையைச் சுமக்குங் கழுதையோடு ஒப்பாவார். குங்குமத்தைச் சுமந்தாலும்கழுதை அதின்மேன்மையையறியாதுபோன்றே பலபுத்தகங்களை வாசித்துமுடித்தாலும்அவற்றின்பயனறிவதுகஷ்டம்.பயனறிந்தாலும் பரமாத்துமத்தையநுபவிப்பது மிகவுங்கஷ்டம்.பரமாத்தும அநுபவமில்லாதவரோடு நேசிப்பது, "குட்டித் திரட் கரடி யாமென்றுழுகக் கோன்குதித்துக் கட்டிப்புதைந்த கதையாகும்" என்றபடி, தன் குட்டிகளோடு கரடியை வெள்ளமடித்துக்கொண்டுவரக்கண்ட ஆட்டிடையன் இவைகளைக்குட்டிகளும்ஆடுமெனஎண்ணித்தழுவிப்பிடிக்க, அவை தங்களை மீட்போனென்றெண்ணி விடாப்பிடிபிடித்துக் கட்டிக்கொள்ள, கரடிகளும் இடையனுமாகப் புதைந்து மாண்டதுபோலாகும். அநாசாரிகளை ஆசாரிகளென்று பிரமித்துக் கல்வியிற்சில கேட்டால் தமக்குத் தெரிந்தவளவிற் சிலசொல்லிப் பிரமிக்கவைக்க, மருளுடைப் பேதைகளும் பிரமையுண்டு சகலகலைகளும் உணர்ந்தோரென்று உரைத்துத் திரிவார்கள். இவைகள் தம்மை வியப்பிப்பான் தற்புகழ் புகழ்தலேயன்றி மற்றொன்றுமன்று. முழுது மூடரை மூடர்கொண்டாடு முறையாகும். கல்வியானது அவ்வவர்கள் பயின்ற

பயிற்சிக்குத்தக்க பயனளிக்கும். இவற்ருற்பயன் சிறிதளவேனு மின்று. பிரமவித்தையிற் பயிலப்பயிலப் பெருப்பேறு பெறுவிக்கும் அண்டத்தில் திகழும் சராசரங்களில் சரங்களாகும் ஆண்மாக்களில் இரண்டேஜாதி; ஒருவர்முகம்போல் மற்றொருவருக்கு இருக்கமாட்டாது; ஒருவருக்குள்ள சாந்தமும் மற்றொருவர்க்கிராது. இவ்வகையேதான் நூல்களின் கருத்துகளும் தாநம் - தருமம் - பரம் - உபகாரம் என்னும் இந்நான்கின் கருத்துகளே நான்குவேதங்களா யமைந்திருக்கின்றன. அந்நான்கு வேதங்களின் கருத்துகளாகும் தாந தருமபரோபகாரங்கள் இத்தாஸருக்கு நன்குதெரியும். அவைதெரிந்த விசேஷத்தினாலேதான் ஈசுவரன்பால்மெய்ப்பக்தியும்,ஸத்தியபுத்தியுங் கொண்டு நல்லதோர் மார்க்கத்தில் நின்றவராயினர். அதுகொண்டே ஸாக்ஷாத் ருக்குமணீரமணனும் அவரைப் பிரபந்நராயிருக்க அமைத்தது. உலகில்பாமரர்களாகிற அவித்தியாசம்பந்திகள் மயங்கிக்களிக்க மடிகளைக் கட்டிக்கொண்டு, ஆசாரங்களில் மிகுந்தவர்போல், முன்னோர் பாடிவைத்த பாடல்களைப்பெருங்குரலுடன் பல அலங்காரராகங்களில் அமைத்துப்பாடி அல்லல்புகு பிராந்தர்கள் ஆராதநாதிகளைப் பரக்கச்செய்தாலும் ஈசன் பிரஸந்நனவனோ? உடல் பொருள் ஆவிகள் மூன்றும் ஒப்புயர்வற்ற பகவானுக்கு அர்ப்பணம்பண்ணி, தான் என்னும் சுதந்திரப் பற்றுநீங்கி, நிர்ச்சல பக்தியுக்தர்களாயிருந்தால் நேமிநெடியவனாகும் நாராயணன் தன்னுடைய பிரசந்நனாகி கோரிய வரங்களையுந் தந்தருளுவான். மெய்யடியார்களுடைய திருவாராதநமும் ஸித்தியாகும். இவை ஹித்தியானவாறே தனக்குநிகரற்றதொரு பரமபதமானது கையிலங்கு நெல்லிக்கனியென வாய்க்கும்.யாதொரு வகைமெய்ம்மையுண்டு; அஃதில்லையாகில் யமுனைத்துறைவனது அருளும் இல்லையாகுங்கண்டீர்! என்று சாதித்தனர்.

அநந்தரம், துக்காராம்ஸ்வாமிகள் கிரிக்கும் - வநங்களுக்கும் - ஸந்நிதிக்குஞ் சென்று சென்று, காலத்தை நல்லநெறியில் கடத்துபவராயிருந்தாலும் தம்முணவுமாத்திரம் தமதகத்தில்தானே புண்பவராயிருந்தார். குலாசார தருமங்களின்படி நடத்தவேண்டிய கிரியைகளை நடத்துவார். ஹரிதிநமாகிற ஏகாதசி விரதமநுஷ்டித்து, ஜாகரமுஞ்செய்து, துவாதசியிற் பாரணைமுடித்து, பிராமணர்களுக்குக் கிரமமாகத் தமக்கியன்றவளவில் ததீயாராதநம் நடத்தி, ஸ்ரீராமநாமத்தை ஸ்மரித்துக்கொண்டு, வியாதமுநிவராலும், ஞாநேசுவராலும் இயற்றப்பட்டிருக்கும் அற்புதசாத்திரங்களைத்தனியேபாண்டார் பருப்பதத்திலிருந்து ஸேவித்து, மநதில் அவற்றின் கருத்துகளைத் தங்கவைத்து, அவற்றின் நன்மார்க்கங்களைச் சிந்தித்துக்

கொண்டு வாழ்வார். "வெட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக்-கற்றனைத்தூறுமறிவு" என்கிற சான்றோர் வாய்மையின்படி, இவருக்கு ஞானம் மீதூறுந்தோறும் அந்நபாநாதிகளில் இச்சையற்று, இராமநாமாமிர்தமே நல்லுணவாகக்கொண்டு,பாண்டார்பருவதத்தில் ஓர்நாள் தங்கியிருக்க, அவர்மனைவி ஜீஜாபாயம்மாள், உண்ணுங்காலத்துக்கு இரண்டுஜாமம் அதிகமாயும் தங்கணவன் வரக்காணாமையாலே தாமும் உண்ணமல், பாம்பநாத மலையைப் பார்த்துக்கொண்டிருந்து, வெகுநேரங் கழிந்தமையால் மநதில் ஒருவாறு துயர்கொண்டு, இங்கு கோயில்கொண்ட கோவர்த்தநமேந்துங் கூத்தப்பிரான் நமது நாயகருடைய புந்தியிற்புகுந்து பேதமுண்டாக்கித் தனது தொழிலுக்கு அமர்த்திக்கொண்டான் இக்கொடிய கோலத்திற்காகத் தான்போலும் நமது ஏழாவது பாட்டனாகிய விசுவம்பரபாவா இக்கரியனை யிவ்வூரிற்கொண்டுவந்து சேர்த்து கோயிலும் அமைத்து வைத்தது. வேலிக்கு முள்போடக் காலுக்குத் தைத்ததுபோல் நமதகத்திற்கே தீம்பனாயினன்.நம்மனையிலிருந்தசகலபாக்கியங்களும் ஆனைவிழுங்கிய விளங்கனிபோல் மாயமாய்ப்போயிற்று. பிள்ளைகுட்டிகளும் நானுமாக நடுத்தெருவில் அலையுங்காலமாயிற்று. இவன் அதருவணவேதத்தில் வல்லவன்போல் காணுகிறது. நமதுபதியை விடியற்காலத்தில் எழுந்திருக்கவிட்டு இந்திராயணிநதியில் நித்தியகடன்களையும் ஸ்நாநஜெபங்களையும் முடிக்கவைத்துத் தன்னைவந்து ஸேவித்துக் காலங்கழிக்கும்படி யடிமைகொண்டான். ஸேவைகாரிய முடிந்தபிறகாவதுவீட்டிற்குவரலாமே. அதுவுஞ்செய்யவொட்டாமல், பிள்ளைகுட்டிகள் முகம்பார்க்கவொட்டாமல், அவர்களோடு ஒருநாழிகைப் போதாவது ஸல்லாப வார்த்தைகளாட வொட்டாமல், ஓர்காண்டி ஜலமும் அகப்படாத் தனிமலையாகிய பாண்டாரிற் சென்று அங்குந் தன்னையே நினைக்க வைத்துக்கொண்டிருக்கின்றான். இராக்களில் நான்கு நாழிகைக்குமேல் இறங்குவித்துத் தனக்கெதிரில்நின்றுகூத்தாட விட்டிருக்கின்றான். இவருக்கு ஏதோ அம்மான் பொடிதூவி, வலைவீசிப் பறவைகளைப்பிடிப்பதுபோலே தனது பாசவலையில் அகப்படுத்திக்கொண்டிருக்கின்றான். அவருஞ் சுத்தசாது, சூதுவாதுகளையறியாதவராகையாலே அக்கரிய கோலத்துக் கபடன்தூவிய சொக்குப்பொடிக்குச் சொக்கிப்போய்: நம்மைத்துறந்து அடிமையாயினர். இவ்வூரில் அநந்தம் வல்லமைசாலிகளிருக்கின்றார்களே! அவர்களைப் பற்றலாகாதா அவ்வாளரி? என்குடிக்குத்தானு தீங்குநினைக்கவேண்டும்? கெட்டகுடியேகெடும் என்கிற பழமொழி எனக்கேதானு திருஷ்டாந்தமாகவேண்டும்? நாங்கள்தானு இவனடிமைக்குரியவராவது?

இச்சிறுகுழந்தைகளுடைய முகங்களைப்பார்த்தாவது அவரையடிமையில் நின்றுநீக்கி எங்களுக்குக் கொடுக்கலாகாதா? என்குல தெய்வத்திற்கு ஏதோ மாயப்பொடி தூவியதால் அத்தெய்வமும் இவரை மீட்பிக்ககிலது. இவ்வூரி லுள்ளவர்க்கும் இவனடங்கினனல்லவே. இவரை மதிமயக்கி அடிமைகொண்டதுபோலவே என்னைமதிமயக்கி யடிமைகொள்ள இவனாலாகுமா? எனது பர்த்தா என்னோடு வார்த்தை சொல்லும்போது, நானென்னசெய்வேன்? யாரோ என்மதியைக் கலக்கியிருக்கின்றார். உன்னுரையை மாற்றக்கூடாதென்று எண்ணினாலும் தேகம் சுடுகாட்டுப் பங்காய்விடுமே என்கிற எண்ணம் - சாக்கிரதை - சொப்பநம் - சுஷுப்திகளாகிற மூன்றவஸ்தைகளிலும் விட்டுநீங்கிலது என்கிறார். ஜீஜா! என்று வாயாரப்பிரியமா யழைக்கின்றாரே; இவர்மீது பிசகொன்றுங் காண்கிலோமே. என்குடியைக் கெடுக்க வேண்டுமென்றே இவ்வூரில் குடிபுகுந்து, அழியாக் கல்வீடு கட்டிக்கொண்டு, தானும்பெண்டுருமாகப் பலபேரிடத்திலும் யாசித்துப்பெற்றவிலையில்லாப்பட்டுபீதாம்பரங்களும்ரத்நாபரணங்களும் அணிந்துகொண்டு, நல்லநல்ல வாகநங்களில் ஏறிக்கொண்டு, தங்களுக்கு இவ்வூரில் யாரும் நிகரில்லையென உலாவித் திரிகின்றார்கள். இக்கருமுகில் உருவினனாகுங் கபடனுக்குச் சமாந ஆஸ்திகர் இவ்வூரில் யாருமேகிடையாது. இவ்வூரிலாகும் அறுசுவையோடு கூடின அடிசில்முதலியவைகளை முதன்முன்னந் தானுந்தன்மனைவியுமுண்டு அவற்றின் திப்பிகளைப் பிறர்க்குக் கொடுக்கின்றார்கள். இவர்களிருவருக்கும் நினைத்தபோது வேண்டியசிறுதிண்டிகள் கிடைக்கின்றன. அத்தர் புனுகு சவ்வாது முதலியபரிமளதிரவியங்களுங் குறைவறக் கிடைக்கின்றன. இவர்களுடைய சல்லாப சயநங்களுக்கே ரத்நங்களிழைத்தகட்டிலும் கின்காப்பு மெத்தையுந் தலைக்கணைகளுந் தக்கபடி அமர்ந்திருக்கின்றன. இந்தப்போக பாக்கியங்களெல்லாம் ஜீஜாவினுடைய பாட்டனாராகிய விசுவம்பரரால் கிடைத்தவையென இப்போது எண்ணுகின்றார்களா? இவ்வூருக்கு வரும்போது ஒற்றைவஸ்திரமும், மனைவிக்கு மாற்றிக்கட்ட வேறுசேலையில்லாமலும் வந்தது போலவா இப்போதிருக்கின்றது? அவ்வுபகாரத்தை நினைப்பானேயாகில் என்குடித்தனத்தை யிப்படி பாழாக்குவானா? இவனைப்பெற்றவளாரோ தெரியாது. ஒருத்தி மகனாய்ப்பிறந்து ஓரிரவில் ஒருத்திமகனா யொளித்துவளர்ந்தவனென்று கேழ்விப்படுகின்றேன். ஆவாகரியா! உன்பெயரை யாவரும் பயத்துடன் உச்சரிக்கின்றார்களேயன்றி பயமில்லாமல் பிரபலமாக வுச்சரிக்க அஞ்சுகின்றார்கள். உன்மிரட்டுக்கு என்கணவனார் பயந்ததுபோல் யானும் பயப்படுவேன் என்

றெண்ணவேண்டாம். என்னால் கூடிய கஷ்டங்களெல்லாம்பட்டாவது என்பர்த்தாவையும் பிள்ளைகளேயுங் காப்பாற்றுவனே யல்லது, உன்னைப்போல் அபயமெனவந்து அண்டினவர்களே யாதரிக்காமல்கைவிடமாட்டேன். நீசெய்த கொடுமைகளை யெடுத்துச்சொல்லுவதால் என்பேரில் கோபமுண்டாய் என் நாதரிடங்குறைசொல்லிக் கொள்ளுவாய். அதனல்எனக்கொரு நஷ்டமும் கஷ்டமுமில்லை. உன்கோயிலுக்குமாத்திரம் வாரதொழிவேன். இத்தனையல்லதுவேறென்றும்உன்னாற்செய்ய முடியாது. என்குலதெய்வத்திற்கு நீ மிஞ்சினவனல்ல! காடுவாழ் ஜாதியன்; நீயொருதீங்குசெய்து நானென்ன அடைவது? உன்னாலான காரியங்களையெல்லாம்பார்! என்று ஜீஜாபாய் தனக்குத் தானேகடுஞ்சித்தங்கொண்டவராய்ப்பேசிக்கொண்டு, தன்குமாரத்தியாகிற காசிபாயம்மாளைக் கூப்பிட்டு, அம்மா! உன் தந்தைக்கொரு ரொட்டியும் சுரைகுடுக்கையில் ஜலமுஞ் சேர்த்து ஒரு கூடையில் வைத்து, நான் அவர்புசித்தபின் புசிப்பவளாதலால் நீயுண்டு அக்கம் பக்கங்களிலிருக்கும் வீடுகளுக்குப் போயலையாமல் வீட்டில்தானே பத்திரமாக இருஎன்று புத்திசொல்லி, கூடையைத் தூக்கித் தலையின்மீது வைத்துக்கொண்டு தமது கணவனிருக்கும் இடம்நோக்கிப் போகும்போது, கடும்பகலானதால் சூரியனுடைய தீக்ஷணியத்தால் இட்டஅடியெரிவதும், எடுத்தஅடி கொப்பளிப்பதுமாயிருந்ததோடு, பகைவர் கைவேல் நுனிபோன்ற பரல்கள் தைத்து மெல்லடிகளிலிருந்து குருதிசோருவதுமான வாதைகள் பட்டுக்கொண்டு; காடுவனங்களைக்கடந்து மலைசாரல்களிற் போம்போது யாதுநினைக்கின்றாரெனில்:—நமதுநாயகர் பசிதாகங்களுக்குப்பொறுக்கத்தக்கவரல்லவே; எவ்விடத்தில்எவ்வகையாகக்களைத்து வீழ்ந்திருக்கின்றாரோ? எங்கு இளைப்புற்றாரோ நமதுவரவையெதிர்பார்ப்பாரோ யேதோ அறியோமே!மெலிவுருதேகமுடையவராயிற்றே என்று புருஷனுடைய தேகத்திலூன்றின மனமுடையவராய்த் தம் வாதைகளை லக்ஷியம்பண்ணாமல், வியர்வைத்துளிகள் உடலிலிருந்துநிலத்தில் துளிக்க, அதிக விரைவாய்ச் சாரல்களில் வீழ்ந்து நடக்கிறபோது இவ்வம்மையார் கண்ணுக்குத் தோன்றாமல் ஓர் கிளாமுள்ளானது பாதையிலிருந்து பாதத்தில்ஆழத்தைத்து ஊடுருவிவிட்டது. அந்த முள் தைத்தவுடனே அலறிவீழ்ந்தார். சிரசிலிருந்தகூடையானது கீழேவிழுந்து, குடுக்கையிலிருந்த ஜலம்சிந்திவிட்டது. அந்தமுள்ளை மெதுவாகப் பிடுங்கியும்வாராமையால் பரிதவித்து, நமதூரில் குடிபுகுந்திருக்கும் நல்லிருள்போல் நிறத்தனுகும் நலனுஞ் சிறிதும் இல்லாதவன் செய்த வஞ்சனையோ; நாம் முன்செய்த கருமமோ; மற்றியாதோ அறியோம்.

கோடீஸ்வரனுக்குப் புத்திரியாகப் பிறந்து இக்கேடு நமக்கு வாய்த்தது. பிரமன் இப்படியும்எழுதுவனோ! எனது ஜீவன் இன்னும் நீங்காமலிருக்கின்றதே! மாதாபிதாக்கள் செய்த கருமம் மக்களைச்சாருமென்பதுபோல் அவர்கள்செய்தகருமத்தால் ஏதாவதிப்படியென்னை வாதிக்கின்றதா? புருஷனொருபக்கம்-புத்திரரொருபக்கம்-நாமொருபக்கமாக அலைந்து, பசியடர, வெய்யில்தேகமாதியந்தம் வேகுவிக்க, இக்கடுமலைச்சாரலில் பரிதவியாநின்றோம். முள்ளைப்பிடுங்கத்தகுந்த ஆயுதமும் நம்மிடத்திலில்லை. இவ்வாபத்தில் துணைசெய்வாரும் இக் கடுங்காட்டில் காண்கிலன். காலெடுத்தூன்றச் சக்தியில்லை. புருஷன் கதி யாதாயிற்றோ அதனையும் அறியோம். இச்சமயம் என்குலதெய்வங்கள்தான் என் பங்கிலிருந்து ஆபத்தைப்போக்கிக் காப்பாற்ற வேண்டும்! என்று மனோவருத்தத்துடன் வேண்டினவராய், தம் பாலிய திசையில் தமது தாய் தந்தையர்சீராட்டி, பாலமுதமூட்டி பக்ஷமாய் வளர்த்தெடுத்து, நல்லகுணமுடைய நாயகன் வாய்க்கவேண்டுமென்று பொழுது உதயமானவுடனே என்னையும் அழைத்துக்கொண்டுபோய், புண்ணிய தீர்த்தமாடுவித்து, விநாயகர் ஆலயத்தையும், நாகபாச பிரதிஷ்டை செய்திருக்கும் அரசவிருக்ஷத்தையும் வலம் வருவித்து,பெரியோரைவணங்குவித்து, தெய்வபூசைகளோடு சூரிய நமஸ்காரத்தையுஞ் செய்வித்தும், குலதெய்வங்களைத் தொழுவித்தும் விரதாதிகளை யநுஷ்டிப்பித்தும், இன்னும் அநந்த சற்கிரியைகளைச் செய்வித்து வந்தார்கள். அவர்கள் இஷ்டத்திற்குக் குறையில்லாதபடி துக்காசேட்டுக்கு என்னை மணம்புரிவித்தார்கள். எனது தவப்பயனால்வாய்த்த நாயகரும் நிகரில்லாநற்குணமுள்ளவரேயன்றி பிறிதன்று. துராசை துர்க்குண முதலியவைகளை யுடையவரல்லர். என்னை மணம்புணர்ந்ததுமுதல் இவரது பிரபாவகுண கீர்த்திகளுக்குக் குறைவு சற்றும் வாய்த்திலது. ஊரிலொண்டவந்த காளநன் மேகமனையானுடன் நேசம்பெற்றபின் பயித்தியக்காரனைப்போலாயினார். இதுவும் நாம்செய்த பாக்கியந்தான் என்றுன்னி, தம்குல தெய்வங்களை யெண்ணி ஏக்கமுற்று, கரியனுக்கு மாத்திரம் நமது துன்பங்களை யறிவிக்கவே யாகாதென்று நினைந்தனர்.

இங்ஙனிருக்க, அண்டசராசரங்களைப் படைத்துக்காத்து அளிக்குமவனும், தன்னால்படைக்கப்பட்ட அண்டசராசரங்களிலெள்ளுக்குள் எண்ணெய்போல் அந்தர்ப்பவித்திருக்குமவனும், அணுவுக்குள்ளும் அணுவாயிருக்குமவனுமாகிற ஆதிமூலப் பழம்பொருளாகும் அச்சுதன், அனைத்துலகுக்குக் தனித்தாயாகும் ஆதிலட்சுமி ருக்குமணிபிராட்டியை நோக்கி, உனது புத்திரன் துக்கா பசிவாதை

யடைந்து மெலிவுற்றிருக்கின்றான். அவனுடைய பெண்டாட்டி ரொட்டியும் ஜலமுந் தூக்கிக்கொண்டு மலைச்சாரலில் போகும்போது அவளுடைய பாதத்தில் முள் தைத்து ஊடுருவியது. அதனால் அந் தக்காட்டில் தானே மிகு கிலேசங்கொண்டு புலம்பாநின்றாள். நான் சீக்கிரம் போகிறேன்! என்று சொல்லிவிட்டு, ஜீஜாபாயம்மாள் இருக்குமிடத்திற்கு வந்து, அவ்வம்மையாரெதிரில் நின்று காட்சிதந் தருளினான். அப்படி காட்சிதந் தருளாநின்ற கருணையங்குன்றினை ஜீஜாபார்த்து. நம் கண்முன்னே இரத்நகிரீடமும், புஜபந்தும், கவசகுண்டலங்களும், வநமாலையும், கௌஸ்துவாபரணமும், நெற்றியில் திலமும், அரையில் பீதாம்பரமும் சார்த்திநிற்கின்ற புருஷன் யாவனோ அறியோமே! ராஜகுலத்தவனாயின் பரிவாரங்கள் இருக்க வேண்டுமே! பரிவாரங்களிருக்கக் காணாமையாலும், கரியமேனியனாயிருக்கையாலும் இவன்தான் அந்த விஷ்ணுவென்று அழைக்கப்படுபவன்போல் காணுகிறது; ஐந்துலக்ஷம் குடிப்பெண்களையும், பதினாறாயிரம் கோபஸ்திரீகளையும், எட்டு பட்டஸ்திரீகளையும் அநுபவித்து, உலகறிய பிள்ளைகுட்டிகளைப் பெற்றுக்கொண்டு பெரும் சமுசாரியாயிருந்தும், நான் ஒரேபத்தினி விரதனென்றும், பிரமசாரியென்றும் பெருத்ததோர் பச்சைப் பசும்பொய் யுரைத்து, நாட்டு மானிடரைமயக்கி வாழ்கிறவன் இவனே யாகவேண்டும்! அம்மம்மா! இவனேதான் நம்மூரில் அண்டவந்து நம்குடியைக் கெடுத்த குடிகேடன்! இவனைக் காணும்போதே என்குலை நடுங்கா நின்றது! இவன் எப்படி தெரிந்து இவ்விடத்திற்கு வந்தான்? சிச்சீ இவன் முகத்தில் முழிக்கவே தகாது! என்று தம்முகத்தைப் பின்புறத்தில் திருப்பிக்கொண்டார். ஸர்வபூதநாதனான சார்ங்கவிற்சேவகன், பக்த பராதீநனானதால், ஜீஜாமுகத்தைத் திருப்பிக்கொண்டும், அவர் முகந் திரும்பியிருக்கிற பக்கம் ஆவிர்ப்பவித்து நின்றான். அவ்வம்மையார் மற்றொருபக்கந் திரும்பினார்; அந்தப்பக்கமுஞ் சேவைதந்தான். மற்றொரு பாரிசம் திரும்பினார்; அங்குஞ் சேவைதந்தான். இவ்விதமாக நவகோணங்களிலுந் திரும்பத் திரும்ப அந்தந்தக் கோணத்திக்கிலெல்லாஞ் சேவை தந்தருளினான். ஆகாசத்தை நோக்கி நின்றார்; அங்குஞ் சேவைதந்தான். பூமியைப் பார்த்தார்; அங்கும் அச்சேவை விட்டதன்று. இவ்விந்தைகளைக்கண்டு ஆவலி ஜீஜீபாய், இவன் மந்திரவித்தையிற் சிரமைபட்டுத் தேர்ந்தவன்போல் காணுகின்றான். மாந்திரீகர்களுக்கெல்லாம் இவன் அரசன் போல் காணுகிறது. நமது தந்தையிடம் ஜாலவித்தைக்காரர் அநேகம்பேர் வந்துகொண்டிருந்தார்களே, அவர்கள் கண்காட்சியாகக் காட்டிய ஜாலவித்தைகளை

யுங் கண்டிருக்கின்றோமல்லவா ! அவர்களிலும் இவன் வல்லவன் போல்காணுகிறது. இந்த அருமையான ஜாலவித்தை கற்றுக்கொண் டிருப்பதால்தான் இவனை உலகத்தில் எல்லாரும் விரும்புகின்றார் கள். இவன் கற்றிருக்கிற ஜாலம் பிறருக்கு எளிதன்று. ஆயினும் இவனென்ன செய்கின்றானோ பார்ப்போம்! என்று தன்னிரண்டுகண் களையும் மூடிக்கொண்டார். பகவானும் இவ்வம்மையினுடைய மனோ பாவங்களையறிந்துகொண்டு, சந்தோஷமடைந்து, தான் மண்ணோருக் கும் விண்ணோருக்குங் கண்ணனையா லல்லவா கண்ணனென்னுந் திருநாமம் விளங்கியது? அத்திருநாமத்தின் மாகாத்துமிய மிலங்க, அவ்வம்மாளுடைய உள்ளமென்னும் அகக்கண்ணில் தன்னுரு விளங் கக் காட்டியருள, அம்மையும் இம்மாயமறிந்து கண்களைத் திறந்து பார்த்தவளவிலே கண்முன்னின்ற மாலின்மயக்கால், கற்கள், மரங் கள், புற்பூண்டுகள், மிருகங்கள், பறவைகள், கிரிமிகீடாதிகள்யாவும் அம்மாயா புருஷனுடைய திருவுருக்களாகக் காணத்தொடங்கின. தம்முடைய தேகமும் அவனுடைய ரூபமாகவே தோன்றிற்று. இப் படி கண்டவையெல்லாம் அவனுடைய திருவுருவாகத் தோன்றக் கண்டு, சற்று அச்சமுற்று இவன் மாயாவி; நம்போன்றாருடைய கடிந சித்தத்தையுங் கரையவிட்டான். இவனால் நமக்காகவேண்டிய காரிய மென்ன? நம்முடைய குலதெய்வத்தால் நமக்குக் காரியமல்லது இவ னால் நமக்கொன்றும்முடியாது என்று நினைத்து; அந்தக் கபடநாடக னைப் பார்த்து, ஐய! என்னுடைய ஏழாவது பாட்டனார் உன்னையும் உன்பெண்டாட்டியையுங் கொண்டுவந்து இவ்வூரில் சேர்த்தார். எங்க ளூரில் நீங்கள் சேர்ந்தபிறகு நீங்களிருவரும் அடைந்திருக்கிற சுகம் இந்த ஊராருக்கே நன்றாய்த்தெரியும். உனக்கிந்த ஊரில் நடந்திருக் கிற சுகம் பிறர் யாருக்குங் கிடையாது. உங்களை யிவ்வூரில் சேர்த்து இவ்வளவு சுகங்கிடைத்து அநுபவிக்கச்செய்த எங்களுக்கு இவ்வித தீங்குசெய்தனை. இன்னும் இன்றளவுந் தீங்கே செய்துவருகின்றா யல்லது நன்மை சிறிதுஞ் செய்தறியாய்; நீ சுத்ததீம்பன். நீ வந்து இவ்வூர் சேர்ந்ததுமுதல் எங்கள் ஏழுதலைமுறையும் அடிமையாகச் செய்துகொண்டாய். நாங்கள் உன்னைவிட்டு ஓட்டம் பிடிக்கலாமென் றாலும் முடியாத முசியாளர்களா யிருக்கின்றோம். இதைவிட வுலகில் வேறுகஷ்டம் யாதிருக்கிறது? தேகமெடுத்தபோதே மரணமுண் டென்பது எனக்குத்தெரியும். இவ்வுலகில் போகபாக்கியாநுபவங்க ளில் அநந்தசுகங்களை யநுபவித்தவர்களும், ஒருசுகமும் அநுபவியாத வர்களும் இறக்கவே போகின்றார்கள். நல்லார் பொல்லாரென்ற இர ண்டு மாத்திரம் உலகிலிருக்கும். நீயோ மாயாவி; உன்னையொத்த

மாயாவிகளை உலகில் யான் கண்டதேகிடையாது. உனக்கு எவ்வளவு சாமர்த்தியம் இருந்ததோ அவ்வளவு சாமர்த்தியமும் எங்கள்மீது காட்டி, யாரும் உலகில் பட்டறியாத கஷ்டங்களைப் படச்செய்தாய். நீ யெத்தனை செய்தாலுந்தானென்ன? எங்கள் குலதெய்வம் எங்கள் பங்கில் இருக்குந்தனையும் எங்களுக்கென்ன குறைவுவரும்? அஃதிருக்கட்டும்; நீ அவசரமாய்வந்து இந்தச் சுடுவெய்யலில் நின்றுகொண்டுவாய்திறவாமல் மௌநமாயிருப்பதற்குக்காரணமென்ன? என்று கேட்ட ஜீஜாபாயம்மனை நோக்கி ஜீவ ஆதார பூதனுன ஜெகதீசன் சொல்லத்தொடங்கினன்.

அம்மா! உனது பாட்டன் விசுவம்பரபாவா காட்டி லிருந்த எங்களை நாட்டிற்கொண்டுவந்து சேர்த்ததுண்மையே. எங்களுக்குத் தளிகைப் பிரசாதம் வஸ்திரம் முதலானவற்றிற்கு, சூரியசந்திரர்கள் உள்ளளவுங் குறைவின்றிநடப்பதற்காகத் தக்கஏற்பாடுகளைச்செய்து சாசநங்களையும்நிருமித்துவைத்ததும்உண்மையே; எங்கள்குடியிருப்புக்கு நல்லதோர் கல்வீடு கட்டித்தந்ததும் உண்மைதான். இவ்வுபகாரங்களையெல்லாம் நாங்கள் மறப்போமேயாகில் உண்டவீட்டுக்கு இரண்டகம் நினைத்தவர்களும், தாய்க்குத் தீங்குநினைத்தவர்களும், சினேகத்துரோகஞ் செய்தவர்களும், கடன்கொண்டு ஏமாற்றுமவர்களும் போகும் நரகத்திற் போகக்கடவோம். உங்கள்குடித்தனத்தை மேன்மையாக்கவேண்டு மென்றே நானும் ருக்குமணியும் விருது பூண்டிருக்கின்றோம் இதற்கு திருஷ்டாந்தம் யாதென்பாயேல்; உனது புருஷனுக்கு நாங்களடிமைகளன்றி எங்களுக்கு அவனடிமையல்ல. எப்படியென்றால்,—முதல்முதல் உன் கணவன் சந்தைபேரம் பண்ணிக் கொண்டிருக்கையில், படுமிரவில் கடுங்காட்டில் காற்று மழையுங் கலந்து அடித்துக்கொண்டிருக்கையில் தன்னந்தனியே யகப்பட்டுச் சிரமமடைந்துகொண்டிருக்கும்போது, ஐயோ! ஆதியில் நம்மையாதரித்த எஜமானுடையபிள்ளை காட்டில் தனியே சஞ்சலப்பட்டுக் கலங்கி நிற்கின்றானே! என்று பரிதவித்து, அதிசீக்கிரத்தில் தானே ஓர்கூலியாளாக ரூபந்தரித்துக்கொண்டுபோய், மாட்டின்மீது பொதியைத் தூக்கிக்கட்டி, நதியைக் கடத்துவித்து, உன் வீட்டு வாசலில் கொண்டுவந்து சேர்த்துவிட்டுப் போயினேன். இரண்டாவது மிளகாயை ஊராரெல்லாருக்குங் கொடுத்துவிட்டிருந்தபோது ஓர்சேவகனுக வடிவெடுத்து, மார்பில் பில்லை கட்டிக்கொண்டுபோய், துக்காசேட்டினுடைய ஆளென்று மிளகாய் வாங்கினவர்கள் எல்லாரிடத்திலுமிருந்து பணம் வசூல்செய்து கொடுத்தேன். மூன்றாவது நீ உன் னூரில் ஓர் சௌகாரிடத்திலிருந்து இருநூறு ரூபாய் கடன்

வாங்கி வர்த்தகத்துக்குக் கொடுத்ததையே அதனை உன்நாயகன் பிராமணருக்குத் தத்தஞ்செய்துவிட, சௌகார் இனியுன்னைத் தொந்தரவு படுத்துவனென்றெண்ணி நானே உன்புருஷனைப்போல் ரூபமெடுத்துக்கொண்டுவந்து, இருநூறு ரூபாயையும் அதின் வட்டியையுஞ் செலுத்தி, நீயெழுதிக்கொடுத்த தஸ்தாவேஜையும் ஐந்து வராகனையும் உன்னிடங்கொண்டுபோய்ச் செலுத்தும்படி அந்தச் சௌகாரையே அனுப்பிவைத்தேன். நான்காவது சோளக்கொல்லையை உன்கணவன் காத்திருந்ததற்காகப் பதினைந்துபுட்டி சோளத்தைக் கொடுப்பித்தேன். அதனை யுன்கணவன் தானே வேண்டாமென்று திரஸ்கரித்தான்? இதற்கும் நாமென்னசெய்வேன்? நான் காட்டுவேனேயல்லது ஊட்டவுஞ் செய்வேனு? இவைகளுமன்றி உங்கள் முன் சந்ததியாருக்கெல்லாம் என்னென்னபாடுகள் பட்டிருப்போம்? இவற்றாலே நாங்கள் உங்களுக்கு அடிமை என்பது வானநாட்டாரும் இந்நாட்டாரும் அறிந்திருக்க, நீங்கள் எங்களுக்கு அடிமையென்றது சேராது உனது நாயகனுவது நீயாவது வயிறுவளர்த்த இதுவரையிலும் ஏதாவது பிறரிடம் யாசித்தும் பிக்ஷைகேட்டும் பிழைத்ததுண்டா? ஏதோ உபாயமான கஷ்ட ஜீவநமாவது செய்து ஜீவித்து வருகின்றீர்கள். உங்களிலும் கீழ்மையராய் ஜீவிக்குமவர்கள் அநந்தமுண்டு. இப்படி இரவும் பகலும் உங்கள் குடித்தனத்தின் பேரில் எங்களுக்கு எண்ணமுண்டாயிருப்பதால் கஷ்டப்படுகின்றோம். நாங்கள் கஷ்டப்படுவது உங்களைக் கெடுக்கவன்று. இப்போது பிரத்தியக்ஷத்தில்பார்: இந்தக்காட்டில் உன்காலில் முள் தைத்ததை யாராவது எனக்குத் தெரிவித்தார்களா? நீபடுகிற பாதையைக் கண்டு நானே தானே வந்தேன். உங்களுக்கடிமைபட்டிருக்கிற நான் மந்திரவித்தை கற்றிருந்ததாலல்லவா இச்சுடுவெய்யலில் உன் ஆபத்தைத்தீர்க்க ஓடோடியும்வந்து நிற்கநேரிட்டது? உன்பர்த்தா என்னிடம் ஏன் வருகின்றானென்றால்:—எனக்குத்தெரிந்த அதருவண வேத வித்தைகளைக் கற்றுக்கொள்ளும்பொருட்டு வருகின்றான். என்னிடம் வரப்போக இருந்தால்தான் அவ்வித்தைகளைக் கற்றுக்கொள்வான். இவ்விஷயம் யாருக்குந்தெரியாது. இன்னுங் கொஞ்சம் திநத்திற் உன்கணவன் வெளிப்படுவான். உன்வீட்டுக் குலதெய்வமும் உன்நாயகனுக்கு அந்தவித்தை கற்றுக்கொடுக்க என்னைக் கேட்டுக்கொண்டதாலே கற்றுக்கொடுத்தேன். உன் கணவன் இறந்த பிணங்களையெழுப்ப எண்ணங்கொள்ளுவானுகில் அவையெழுந்திருக்கும் வித்தையும், தங்கமாக வேணுமென்று ஒருவஸ்துவின்பேரில் ஒருதுளி சிறுநீர் விடுவானுகில் அவ்வஸ்து தங்கமாகப்பேதிக்கப்படும்

வித்தையும், ஒன்றைச் சிருஷ்டிக்கவும் இரக்ஷிக்கவும் பக்ஷிக்கவுங் கூடிய முத்தொழிலில் நடாத்தும் வித்தையுங் கற்றுக்கொண்டான். தான்வநத்திலிருந்தாவது மலையிலிருந்தாவது அந்நம்வேண்டும்என்று எண்ணுவானேயாகில் அறுசுவை பதார்த்தங்களோடு தேவாந்நம் கிடைக்கப்பெற்றுப் புசிக்கும் வித்தையுங் கற்றிருக்கின்றான். ஆயிரத்தெட்டு அண்டங்களிலெல்லாம் போய் வசிக்க வெனினும் வசிப்பிக்கக்கூடியவித்தையும் பயின்றிருக்கின்றான். இன்னுந்தனது எண்ணத்தில் எவையெவை வேண்டுமென்று எண்ணுகின்றானோ அவையெல்லாஞ் சித்திபெறும்படியான வித்தையும் பயின்றிருக்கின்றான். என்னிடத்திலிருக்கிற அந்தவித்தையைக்கற்றுக்கொள்ளமுப்பத்து முக்கோடிதேவர்களும் - நாற்பத்தெண்ணாயிரம் இருடிகளும் - கெருட - காந்தருவ - சித்த - வித்தியாதர - தும்புரு - நாரதர்களும் - பிரமா விஷ்ணு மகேசுவரர்களும் எனக்கு ஏதேதோதொண்டுகள் செய்து வருகின்றார்கள். அப்படி தொண்டுசெய்தும் அவர்களுக்கு நான் கற்பித்துக் கொடுத்தவனல்ல. அவ்வவர்கள்பட்ட கஷ்டத்தினளவு என்வித்தைகளிற் சிறிது கற்றுக்கொண்டார்கள். எனக்குத் தெரிந்த அளவு முழுவித்தை அவர்கள் யாருக்குந்தெரியாது. அப்பேர்ப்பட்ட அருமையான வித்தைகள் எல்லாவற்றையும் உன்பர்த்தாவுக்குக் கற்பித்துக் கொடுத்திருக்கின்றேன். உன்புருஷன் ஒருவனுக்குமாத்திரம் என்முழுவித்தையுங் கற்பித்துக் கொடுத்ததற்குக்காரணம் ஏதென்பாயேல்: இரவும்பகலும் ஓய்வில்லாமல் அவ்வித்தைகளைக் கற்கவேண்டுமென்கிற ஆவலினால்எங்களையேசூழ்ந்திருந்தமையாலும், காட்டில் வாழ்ந்துக்கொண்டிருந்த எங்களை நாட்டில்கொண்டு வந்து சேர்த்து இடம்பொருள் ஏவல்களை எங்களுக்கமைத்து வைத்தவருடைய குடிபிறப்பாளராதலாலும் அந்நன்றியை நாங்கள் மறவாமல் அவருக்கு அருந்தொழில்களை நடாத்தும் வித்தைகளைப் பயில்வித்துக் கொடுத்தோம். அந்நன்றியை நாங்கள் மறவாத காரணத்தால்தான் உங்களுக்கு அடிமைகளாயிருக்கின்றோம். இப்படி இரவிலும் பகலிலும் ஓய்வொழிச்சல் இல்லாமல் காத்துவரும்போதே என்னைப் பலபல நிந்தாஸ்துதிகளால் நிந்தித்து வருகின்றாய். இதுவும் என்னுடைய கருமம்; நான்பிறந்த லக்கினத்தின் பலன் நீயென்னசெய்வாய்? உன்பேரில் நிந்தை சுமத்தலாகாது. ஆகிலும் தோஷமில்லை; உன்காலில் முள் எங்கேபட்டதோ காட்டு என்று ஸ்ரீபாரந்தாமன் உட்கார்ந்து, தனது துடைகளின்பேரில் ஜீஜாபாயின் திருவடிகளைத் தூக்கிவைத்துக்கொண்டு, தனது செம்பதுமக்கையால் அந்தமுள்ளை மெதுவாகப் பிடுங்கிவிட்டு, அந்த அம்மாளுடைய

தேகத்தைச் சிரசுமுதல் பாதம்வரையிலுந் தடவிக்கொடுத்து, இப்போது உன்தேக சவுக்கியம் எவ்வகையாயிருக்கிறது? என்றுகேட்க, மிகுதியுஞ் சௌக்கியமாயிராநின்றதென்று பிரதிஉத்தரஞ்சொல்லித் தன்கணவனை நினைந்துகொண்டு, கூடையைத் தூக்கித் தலைமீது வைத்துகொண்டு நடந்துபோகத் தொடங்கிய ஜீஜாபாயம்மையின் பின்னுகத் தானே ஜெகமெல்லாம் உண்டுஉமிழ்ந்த தேவதேவன் தொடர்ந்து போவதை அம்மலையின் மீதிருந்த மெய்யன்பர் துக்காராமர் அறிந்து, ஹரி ஹரீ! ஆதிமூலப்பழம்பொருளே! அடியேனுடைய பெண்டாட்டிமுன்னும் தேவர்பின்னுமாக வருவதைப் பார்த்தால் மிகுஆச்சரியமா யிராநின்றது. இவள் எத்தவம் புரிந்த பயனுள்ளவளோ அறியேன். இவ்வருகை இரவும் பகலுங் கலந்து வருவதுபோலும், புஷ்பமும் நாருஞ் சேர்வதுபோலும், கைப்பும் இனிப்புங் கலந்ததுபோலும் கண்காட்சியாகக் காணுநின்றது. பகவான் இப்பேதையென் பொருட்டு வெய்யிலில் மலைச்சாரலில் சிரமைப்பட்டுக்கொண்டு நடந்துவருகின்றார். இப்படி வருவதற்கு யாதுகாரணமோ அறியேன். என்று மனம்வெறுவி கைகளிரண்டையுஞ் சிரமிசை கூப்பின வண்ணமே நின்று, பண்டரீநாதா! பரமேஷ்டீ! விட்டலா? விஞ்ஞானசொரூபா! என்று பஜித்தும், ஆநந்தாப்தியிற் படிந்தும், இந்திரியங்கள் எல்லாவற்றையுந் தந்தம் போக்கின்வழிச் செல்லவொட்டாது அடக்கி ஈசுவர சொரூபத்தையே மனம் நாடும்படிச்செய்தும் குதூகலத்திலிருக்க; ஜீஜீபாயம்மாளும், திவ்வியாமிர்த தேஜோமயனும் அருகில்வந்து சேரக்கண்டு தாஸர் அவ்வமலனுடைய திருவடிகளில் அடியற்றபனைபோல் வீழ்ந்து ஸேவித்து, திருவடிகளைப்பற்றி சிரசிலொற்றிக்கொண்டு எழுந்திருந்துநின்று, இரண்டு கைகளையுங் கட்டிக்கொண்டு ஆடியும்பாடியுங் கொண்டாடி, ஜ்ஜா என்ன புண்ணியஞ்செய்தாளோ இவளால் எம்பெருமானைச் சேவிக்கப் பெற்றேன் என்று மிகுதியும் வணங்கி, தமதுநாயகியை நோக்கி, நமது கருணையங் கடவுளராகும் கபடநாடகனுக்கு முன்னதாகப் பிரஸாதமளிப்பாயாக என்று ஆஞ்ஞாபிக்க, அவ்வம்மையுந் தியக்கங்கொண்டு நாம் கொண்டுவந்தது ஒரே ரொட்டி; இரண்டுபேருக்கு எவ்வாறு பகிர்ந்து கொடுப்போம்? ஆயினும் நாயகன் உத்தரவின்படி நடக்கவேண்டியது பதிவிரதைகளுடைய கடமையாகையால் நமதுபுருஷன்நியமித்தபடியேசெய்வோமாகில் இக்கரியன் நம்நாயகரை விட்டுச் சாப்பிடுவானா? நல்லுணவைப் புசித்து வந்தவனுயிற்றே இவையும் எல்லாம் பொசித்துவிடுவானு? இதுதான் அவனுக்கு இன்பப்படுமா? நம்காலிலிருந்த முள்ளைப் பிடுங்கிவிட்டு அப்படியே போகாமல் நம்மைத் தொடர்ந்தே

வந்திருக்கின்றான் ஆகையால் இவனுங் கொஞ்சம் சாப்பிடட்டும். நமது நாயகரும் படைக்க உத்தரவுபண்ணி இருக்கின்றார். இவ்விடத்திலும் என் குடித்தனத்தின் நிருவாகத்தை வெளிப்படுத்த வந்திருக்கின்றான். இவனால் நமக்கு ஆகவேண்டிய காரியம் என்னவிருக்கின்றது? நாயகர் வாக்கியத்தைக் கடவாமையல்லவோ நமக்குவேண்டியது? என்று நினைத்து, தாம் கொண்டுவந்த ஒருரொட்டியைப் பாரையின்மீது தேக்கிலையில் வட்டித்தார். கோவினங்களையுங் கோகுலத்தவரையுங் காத்ததற்காகக் கோவர்த்தநம் ஏந்திய கையனாகிய தூயன் இவ்வம்மையின் நினைவையும், வட்டித்தமையையும் அறிந்து, இவளுடைய உள்ளக்கனிவு தன்நாயகன்மீது வெறுப்பு ஓர் சற்றுமில்லாமல், நம்மீது மாத்திரம் தங்களுக்குத் தரித்திரம் வந்ததென்று வெறுப்புகொண்டும் தன்புருஷனைவிட்டு நாம் புசிக்கமாட்டோமென்கிற நினைவாலே தான் கொண்டுவந்த ஒன்றையும் நமக்கே வட்டித்து வைத்தாள். நமது தோழனுக்குத் தொண்டராவோருக்கெல்லாம் மேல்நாடளிக்க நாமெண்ணங் கொண்டபடியே நமது தொண்டன் திறத்தில் மிகுவாதாரங் கொண்டவளாகிய இவளுக்கும் பரமபதம் அளிக்கவேண்டும். இப்போது இந்த ஜீஜாவையும் நம்மோடு உண்ண வைக்க வேண்டுமென்று திருவுள்ளம் பற்றினவனாய், அந்தம்மாள் கொண்டுவந்த கூடைநிறைய அறுசுவை பதார்த்தங்களோடு திவ்விய தரமான அந்நத்தை யுண்டாக்கிவைத்து. ஜீஜாவைநோக்கி, அம்மா! எனக்கு மாத்திரம் பரிமாறினால் எப்படி? உன்னுடைய நாயகனுக்கும் பரிமாறு என்று சொல்லக்கேட்ட ஜீஜா மனங்குன்றி, இவன் நம்முடைய மாநத்தை வாங்கத்தான் நம்மோடுகூட வந்தான்; குடித்தனத்தின் தருமமறியாதவன். தனக்கிருப்பதுபோலவே யெல்லாருக்கும் எல்லா பாக்கியங்களும் அமைந்திருக்குமென்று எண்ணியிருக்கின்றான். இதற்கென்ன செய்யலாம்? என்று கலங்கி, என்குலதெய்வமே! என்று கைகளைப் பிசைந்து கொண்டு, கூடைவைத்திருக்கிற இடத்தைத் திரும்பிப் பார்த்தாள். அக்கூடையின் பேரில்மூடிக்குவிந்திருந்த பழைய வஸ்திரமானது குமிழிபோல் மேலெழும்பியிருக்கக்கண்டு, ஆவலுடன் அருகிற்சென்று திறந்துபார்க்கையில், அறுசுவை பதார்த்தங்களும் அந்நமுங் கூடை நிறைந்திருக்கக்கண்டு களிப்பு மிகக்கொண்டு, ஆ! ஈது என் குலதெய்வங்களாகிற பயிரவன், கண்டோபா, பவானி முதலிட்டார் செய்த நல்லுபகாரமென்று எண்ணி, இவர்களுக்கு யானென்ன பிரதியுபகாரம் செய்யப்போகின்றேன்? என்று கொண்டாடித் துதித்ததைப் புண்டரீகாக்ஷனாகிய புருஷோத்தமன் அறிந்து, அம்மா! நீ எந்தத் தெய்வங்களைக்

குறித்து மநதில்தானே தொழுதுகொள்ளுகின்றனையோ அந்தத் தெய்வங்களெல்லாம் நான் தான்! என்னக்கேட்டு ஜீஜா, என்குல தெய்வங்களுக்கு இருந்த சக்திகள் உனக்கிருக்குமாகில் விதுரன்வீட்டில் நொய்க்கஞ்சி வாங்கிக்குடிப்பாயா? கன்றுகளை மேய்க்கும்போது ஆயர் சிறுவர்களை யேமாற்றி யேமாற்றி அவ்வவர்கள்கொண்டு வந்த கட்டமுது மூட்டைகளில் பேர்பேரிடம் யாசித்துப் பிடுங்கித் தின்பாயா? ஊறுகாய்களை விரல்சந்துகளில் வைத்துக்கொண்டு சிறங்கையில் கஞ்சிவாங்கி யுறிஞ்சுவாயா? சபரியின் எச்சிற்கனி வாங்கித் தின்பாயா. உன்னைப்போல் என்குலதெய்வங்களும் பிக்ஷையேந்தியுண்டதுண்டா? என்றுரைக்கவும் பரந்தாமன் புன்னகைகொண்டு, அம்மா! உன் புருஷனுக்குத் தளிகைவட்டிப்பாய்! என்றுசொல்ல, கூடையிலிருந்த பதார்த்தங்களையும் அந்நத்தையும்புருஷனுக்கும்புருஷோத்தமனுக்கும் வட்டித்துவிட்டுஎதிரில் நின்றாள். அவ்விருவரும் உண்ணும்போது ஜலம் வேண்டியிருக்குமே. முள் தைத்தவிடத்தில் நாம் கொண்டுவந்த ஜலம் கவிந்துவிட்டதே. இந்த மலையில் கரண்டி ஜலமுங்கிடைக்காதே என்ன செய்யலாம் என்று தியங்கி நிற்பதை தசரத சுதனறிந்து, அதோயிருக்கிற இடத்திற்குபோய் ஒரு கல்லைப் பேர்த்தால் கீழே ஜலமிருக்கிறது மொண்டுகொண்டுவா! என்று சொல்லக்கேட்டு அவ்விடத்திற்குப்போய் ஒரு கல்லைப்பேர்த்துப் பார்க்கையில் சுத்தஜலம் ஊற்றோடுவதைக் கண்டு அதிசயமுற்று சுரைக்குடுக்கையில் மொண்டுகொண்டவளாய் வந்து இருவர்க்குங் கொடுத்துவிட்டு, இந்தக்கரியனுக்கு மோகநவித்தைதெரியும்; அந்தத் தேவதையைப் பிரயோகம்பண்ணி ஜலம் உண்டாக்கி வைத்தான். நமது புருஷருக்கும் அந்தத் தேவதையையே பிரயோகம்பண்ணியிருப்பதால்தான் இவன் மாய்கைகளுக்குச் சிக்கியிருக்கின்றார்! என்று எண்ணியிருக்கக்கண்டு க்ஷீரஸாகரநிவாசன் ஜீஜாவைக்கூப்பிட்டு, அம்மா! நீயும் புசிக்கவேண்டும் என்று உத்தரவுபண்ண ஆவலியும் அவ்வுத்தரவின்படியே புசித்துக்கொண்டிருக்கையில் ஆதிமூலன் தனது திருக்கைகளால் ஒருகவளம் அந்நமேந்தி துக்காவுக்கு ஊட்ட, அந்தப் பிரமரஸ அந்நத்தை உட்கொண்டமாத்திரத்தில்துக்காவுக்கு ஸகல ஜீவகோடிகளும் சருவேசுவரனுடைய ரூபமாகக் காணக் கண்டு தானென்றும், மனைவியென்றும் வேற்றுமை தோன்றாமல் சுகப்பிராப்தியுண்டாய் ரக்ஷகா! என்றிருப்பதாகிய பேராநந்தத்தையடைந்தமையை ஆதிசேஷனாலும் அளவிட்டுச்சொல்ல முடியுமோ! என்பது சந்தேகம். இவ்வருமையான கண்காட்சியைக் காணுவதற்காக ஆசைகொண்டு, இந்திரன் முதலிட்ட தேவர்களெல்லாரும்

ஆகாயவீதியில் வந்திருந்து, வியப்பு மிகக்கொண்டவர்களாய், தங்கள் தங்கள் கைகளைக் கூப்பின முடியினராய், ஹரி ஹரீ!! அன்பர்க்கு அருளமுதூட்டிய ஆதிமூலமே! நான்கு வேதங்களாலுங்காணுதற்கரிய நளினபாதனே! நரஹரீ! பதிதபாவநா! நம்பினவரைக் காக்கும் நாதநாதனே! தயாநிதியே! நான்முகனைப் பயந்த நாபிக்கமல முதற்கிழங்கே நாராயணா! அண்ட பிண்ட பிரமாண்டங்களையெல்லாம் அளாவிய திருக்கையால் உனது அன்பராகிய துக்காராமருடன் வீற்றிருந்து அந்நமேந்தி யுண்ணும் அழகின் நற்சேவை கண்ணாரச் சேவிக்க நாங்கள் என்ன தவம்பண்ணினோம்? உனது விராட்சொரூபத்தை யாவரால் அளவிடக்கூடும்? உத்தம விலாசா! போகஸ்தாநமாகிற இந்திரபதமெனக்கு எற்றுக்கு! ககவாகநா! இந்தப்பதங்களெல்லாம் உனது திருவடித்தூசுக்கு இணையாகுமா? நாங்கள் தேவர்களாய்விட்டோம் என்று அகங்காரங்கொண்டு தீமையில் அழுந்தி முடிவில் எங்கள் பதங்களும் நசித்து நாங்களும் உனது திருவடித்தூசுக்கு அபாத்திரவான்கள் ஆகின்றோம். தேவதேவா! இந்தத்துக்காராமரும் ஆவலிஜீஜாவும் என்னதவம் புரிந்தவர்களோ என்னநோன்பு நோற்றவர்களோ அறியோம். பின்னைமா மரமேறிய பெரியோய்! சிறியரிற் சிறியராகிய எங்களையும் உமது பிரஸாதம் ஸ்வீகரிக்கச் சேர்ப்பீரா? ஜெகன்மோகநா! உமது திருத்தாளைப்பெற அதுவன்றோ நல்லுபாயம்? காட்டிலிருந்து கந்தமூலபலாதிகளை யருந்தியும், காற்றைப் பொசித்தும், தலைகீழாக இருந்தும், ஒற்றைக்காலினின்றும், யோகதாரணைகள் செய்தும், குகைகளிலிருந்து சுவாசபந்தநங்களைப் பண்ணியும், அஷ்டமா ஸித்திகள் செய்தும், அநந்தகற்பகாலந் தவமியற்றியும் வாழ்கிற பெரியோர்களுக்குங் காணவரியாத் திருவடி சருவஸாதாரணராய், பெண்டுபிள்ளைசுற்றமென்னும்பெரும் பற்றுக்களைப் பற்றி, பண்ட பதார்த்தங்களில் ஆசைமிகுத்து, கேவலம் இல்லறவாசியா யிருக்கிற துக்காவினுடைய வுள்ளம் இரவும் பகலும் உமது திருவடிகளின் பேரில் எவ்வண்ணம் இருக்கிறதோ அறியோம். ஆதனால்தான் அம்மெய்யடியாருக்குப் பல்முறை அந்நமூட்டினீர். இவருடைய புண்ணியமே புண்ணியம்! குசேலர் கொண்டுவந்த அவலில் ஒருபிடி யுண்டதற்காக அவருக்கு அஷ்டைசுவரியங்களும் உண்டாக்கிக் கிருபைசெய்தாய். அவற்றை அவருந் தமது சந்ததியாருக்கு ஒப்பித்து விட்டுத் தவமே பெரிதென்று காட்டிற்குப் போய் நிஷ்டை கூர்ந்திருந்தார். இத்தகைய பரமஸாதுவுக்குங் கூட நீரூட்டினது கிடையாது. இத்துக்காவுக்கு நீரே திருக்கைகளால் அந்நமூட்டினமையால் இவர் முடிவில் பெறப்போகிற ஆநந்தம் இன்

னதெனச்சொல்ல எங்களால் சக்கியமன்று. அதூஉம் இன்னதென அறியவுமாட்டோம். அறிவில் ஈனர்களாகிய நாங்கள் உம்முடைய அபாரமான மகிமைகளை யறிய சக்தரல்லோம். ஆதிசேடனாலேயே முடியாதெனின் நாங்களெவ்வளவு? தோவாதிதேவா! க்ஷீராப்திவாசா! வேங்கடமேய வித்தகா! விஞ்ஞாந சொரூபா! வேய்ங்குழல் இசைத்தவிமலா! வேதவேதாந்த ரூபா? வெண்ணெயுண்ட பெருவயிறா! மண்ணையுண்ட மாயா! மச்சாவதாரா! உனக்கு மங்களங்கள் உண்டாகுக! உண்டாகுக!! என்று பெருங்குரலுடன் ஸ்மரித்து வந்தநங்கள்கூறி, அவ்வெல்லாப் புத்தேளிர்களும் ஆகாயத்தில் திரண்டு, இந்தத் துக்காராம் பாக்கியமே பாக்கியம்! என்று அதிசயித்தவர்களாய் என்ன ஆசீர்வாதஞ் செய்கின்றார்கள் என்றால்:—முப்பத்துமுக்கோடி தேவர்களுடைய பதங்களும், நாற்பத்தெண்ணாயிரம் இருடியர் பதங்களும், நவநாயகர்களுடைய பதங்களும், அஷ்ட வசுக்களுடைய பதங்களும், ஸப்தருஷிகளுடைய பதங்களும், திரிமூர்த்திகளுடைய பதங்களும் உண்டாகி, பேராநந்த சுகஜீவியாய் விட்டார் இந்தத் துக்காராமர் என்று ஆசீர்வதித்து, ஜயவிஜயீபவ! என்று ஜயங்கொண்டாடி புஷ்ப வருஷங்களை வருஷித்து, தேவவாத்தியங்களை முழக்கி வாழ்த்தினார்கள். இவரைப் பெற்றெடுத்த மாதா பிதாக்களுடைய வங்கிஷம் ஈடேறிற்றென்றும், இவன் தங்கிய கிருகமும் உத்தாரண மாயிற்றென்றும், இவனிருக்கும் ஊரும் புனிதமாயிற்றென்றும், அந்தக்கிராமஞ் சுற்றிலும் எழுகாத விஸ்தீரணத்துக்குள் இருந்த புற்பூண்டுகளும், பசுபக்ஷிகளும் பாவநமாயிற்றென்றும், இவரைப் பக்தியோடு எண்ணுமவர்களும் ஈடேறுவார்களென்றும், இந்தப்பண்டார் பருவதமும் ஈடேறியதென்றும், தேவர்கள் யாவரும் வாயார வாழ்த்தி மற்றும் யோசியா நின்றார்கள். இந்தப் பரதகண்டத்தில் வசிப்போரிற்சிலர், அக்கியாந ஜந்துக்கள்போல் வேதசாஸ்திரங்களின் கருத்துகளை யாராய்ந்துணராமல், அநுபவமும் இல்லாமல், முற்றும் உணர்ந்திட்டவர்கள்போல் தங்களை யெண்ணிக்கொண்டு, சகுண ஆராதனைகளை யொழித்து நிர்க்குணப் பிரமயோகமே வேதமிசைக்கின்றதென்று தங்களையொத்த புல்லறிவாளர்க்கு உபதேசித்துக்கொண்டு திரிகின்றார்களல்லவா; அத்தகையவர்களுக்கெல்லாம் இந்த மெய்ப்பக்தியுக்தராகிய துக்காராம் ஆசாரியராகவிருந்து, சகுணப் பிரமயோகத்தை விளங்கவைத்து, சந்மார்க்கத்தில் நின்று தெரிசித்துத் தொழவைத்து, முடிவில் அவர்களோடு மற்றுந் தம்மையடைந்தவர்களையும்பரலோகப்பிராப்தர்கள் ஆக்கவல்லாரென்று நினை

ந்து ஆசீர்வதித்து, தங்கள்தங்கள் இருப்புகளாகிய பதங்களுக்குச் சென்றார்கள்.

பிறகு தேவர்கோமான் தனது திருக்கைகளால் ஊட்டிய அந்நத்தையுண்ட பிரபந்நச்சிரேஷ்டருக்கு, தாமென்றும்தேவனென்றும் வேறுபாடில்லாமல்ததேகநிஷ்டராய் சங்கற்ப விகற்பங்களற்று,காண்பான் காட்சியுமற்று பரமசுகாநந்தத்திற் படிந்தவரா யிருப்பதை ஆநந்தத்திற்கும் ஆநந்தமாயிலகும்ஆதிமூலப்பழம்பொருளுணர்ந்து, இவனுக்குச் சித்தத்திலிருந்த பிரமைகள் யாவும் நீங்கிற்று ; புத்தி தெளிவடைந்தது; நமது பாலகனாகிய இவன் அபாவ பரமசுகாநந்தந் தன்னைப்பெற்றான். இவனைக்கொண்டல்லவா இனி உலகத்தில்பாமரர்களைச் சீர்படுத்த வேண்டியது? என்றுன்னி, காருண்ணியதரனாகிய கடவுள் தனதுள்ளத்தைப் பாவப்படுத்தினான். அப்போது துக்காராமருடைய வுள்ளம் பாவப்பட்டு, தமக்கெதிரில் நிற்கும்தசராதாத்துபஜனை நோக்கி, ஹரிகிருஷ்ணா! வாசுதேவா! மாமலராள் கேள்வா! மாயவா! மதுசூதா! என்று தேட்டருந்திரட்டேனினைக்கதுவுதெய்வநன்மலரன்ன திருவடிகளில் வீழ்ந்து, தமது சிரசை யவனடிகளில் ஒற்றிக்கொண்டு எழுந்து நின்று கைகளைக்கூப்பி—

தேவாரம்.

வானவர்க் கரசே போற்றி வாரிசு நாபா போற்றி
வேனவிழ் பதுமை நாதா செங்கதி ரவனே போற்றி
தானவர் காலா போற்றி தயைதிகழ் கடலே போற்றி
மோனசுந் தரவிலாச முரகரி போற்றி போற்றி. (க)

வேதனை யீன்றாய் போற்றி வேய்ங்குழை இசைத்தாய் போற்றி
வாதனை தீர்த்து காக்கும் வைகுந்த பதியே போற்றி
ஆதவ னனாய் போற்றி யாழியங் கையா போற்றி
மூதறி வாளரேத்து முரகரி போற்றி போற்றி. (உ)

கரியிடர் தீர்த்தாய் போற்றி கமலைவாழ் மார்பா போற்றி
பரிமுக முவந்த தேஜ பரமசற் குருவே போற்றி
பிரிவிலா வருளே போற்றி பேய்முலை யுண்டாய் போற்றி
முரித்தல் செய்வினை கெடுக்கு முரகரி போற்றி போற்றி. (ங)

வாமன ரூபா போற்றி வார்கடல் கடைந்தாய் போற்றி
காமனைப் பயந்த வேதக் கனகமால் வரையாய் போற்றி
சோமசூ ரியனேர் கண்ணா சோதிசிற் சுடரே போற்றி
மூமறைத் தருள்கிற் குஞ்சீர் முரகரி போற்றி போற்றி (ச)

ஆகம விநுதா போற்றி யாருயிர்த் தலைவா போற்றி
ஏகமாய் நிறைந்த வெந்த னிறைவனே யெழிலாய் போற்றி
சாகரந் தனிற்று யிற்கொள் சச்சிதா நந்தா போற்றி
மோகமற் றௌிரு வேத முரகரி போற்றி போற்றி. (ரு)

ஆலிலை துயின்றாய் போற்றி யநாதரட் சகனே போற்றி
பாலனு யமர்ந்து வெண்ணெய் பருகுபூண் வயிறு போற்றி
கோலமா முகிலே போற்றி கோதண்ட தீட்சா போற்றி
மூலகா ரணனாய் நின்ற முரகரி போற்றி போற்றி. (சா)

தசவித நாதா போற்றி தணிந்தப்ர தாபா போற்றி
குசலனை யீன்ற ஞான குணப்பெருங் குன்றே போற்றி
சுசரோ ருகநன் னூபா சுருதியின் முடியே போற்றி
முசுகுந்த னவனை யாண்ட முரகரி போற்றி போற்றி. (எ)

மன்னவர் மன்னு போற்றி மந்திர சொரூபா போற்றி
கன்னித்தௌ பதையைக் காத்த கமலசே வடியாய் போற்றி
தன்னிக ரில்லாய் போற்றி தானேதா னானாய் போற்றி
முன்னிலை யில்லா நேச முரகரி போற்றி போற்றி. (அ)

கருடவா கனனே போற்றி காளிங்க நடநா போற்றி
துருவனைக் காத்த தூயா துடியிடை மார்பா போற்றி
பெருகிய வமிர்தா போற்றி பெண்ணுடை னலியே போற்றி
மருவுசுந் தரவிலாச முரகரி போற்றி போற்றி. (கூ)

நரகரி ரூபா போற்றி நளினசெங் கண்ணு போற்றி
குறைவிலா நிறைவே குன்றைக் குடையெனக்கொண்டாய் போற்றி
கரன்முடி தறித்தாய் போற்றி காயாம்பூ வண்ணு போற்றி
முரன்பட வாழிதொட்ட முரகரி போற்றி போற்றி. (ம)

என்பன வாதியாகத் தோத்திரித்துநிற்க துங்கனாகிய ரங்கபிரான் திருவுள்ளமுகந்து தனது தாஸரை நோக்கி, உனதுதேவி இக்கிரிக்கு வரப்போகவென்றால் சிரமமடைகின்றாள்; நீ யேகாங்கியாக இங்கு வசிக்கவேண்டாம்; எவ்விடத்தில் இருந்தாலும் நீ யேகாங்கியே; ஜீஜாவை யழைத்துக்கொண்டுபோய் இல்லஞ்சேர் என்று புத்தி கூறிவிட்டுத் தான் மறைந்தருளினான். அந்த சருவசுவாமி நியமித்தபடியே தாஸரும் தமது மனையாளுடனே திருமாளிகைவந்து சேர்ந்தார்.

இதன் திறத்தில் தமது அபிப்பிராயஞ் சொல்லத்தொடங்குகிறார்:—இக்கிரந்தகர்த்தா ஸ்ரீமத் துக்காராம்சுவாமிகளுடைய இத

யகமலத்தில் ஸ்ரீஹரி வண்டுபோல் தங்கியிருக்கின்றார். நிஜபக்தர் களுடைய இருதயம் சாகரம்போன்றது. அதில் மச்சரூபமாக இருந்து சருவேசுவரன் அபாவமென்னும் சங்காசூரனைச் சங்கரித்தார். அதுபோல் துக்காவின் உள்ளத்தில் வசித்திருந்தமையால் காம - குரோத-லோப-மோக-மத-மாச்சரியங்களைவரவிடாமல், அபாவமென்னும் பிரசாதீகவழியில் ஏகாங்கியாகிற துக்காராமர் தங்கியிருந்தார். இக்கருத்துகள் தமது கிரந்தங்களில் அடங்கியிருக்கின்றன. இக்கருத்து உணர்ந்தோர் மஹாரிஷிகளென்று புகலப்படும். நிரூபலக்ஷணத்திற்கு உபமானம் நிரூபமே. அற்புத பக்திபிரமையினால் புருஷோத்தமன் வசமானான். அவன் கலியுகத்தில் கலிதருமங்களுக்காக பௌத்தாவதாரஞ் செய்தருளினானென்று புராணாதிகளிற் புகலப்பட்டிருக்கிறது. மெய்பக்தர்களுக்கு நான்கு யுகங்களுஞ் சுகமே. துக்காராமருடைய உள்ளம் பூரணமாகு நிமித்தம் தேவதேவன் சகுணவானாக வரலாயிற்று. காமதேநுவின் கன்று அக்காமதேநுவின் அமிர்தத்தையே யுண்டு ஜீவிப்பதுபோல் பக்தர்கள் பகவானுடைய பக்தியென்னும் அமிர்தத்தையே யருந்தி முக்தாத்துமாக்களாய் ஜீவிக்கின்றார்கள். கற்பகவிருக்ஷம் கேட்டதைத் தருவதுபோல பக்தர்கள் விரும்பியவற்றை பகவான் அளித்து வருகின்றான். பகவானுடைய பெருமையையும் பக்தர்களுடைய பெருமையையும் வருணிக்க இரண்டாயிரம் நாக்களுடைய ஆதிசேஷனாலேயே முடியாதென்றால் என்னொரு நாவால் வருணிக்க வசமாகுமோ! வாயுவானது சலித்து திரணங்களைப் பறக்கவிட்டு விருக்ஷங்களில் மோதுவித்துச் சத்தமுண்டாக்குவதுபோலே எனது தேகமென்னும் விருக்ஷத்தால் வாயுவாகும் பகவான் சலித்து திரணங்களென்னுந் தனது கருணாரசங்களைப்பறந்து படிய வீசி இச்சந்த சரித்திரந் தொனிக்குமாறு செய்வதால் இதனைப் புகலலாயினேன். ஸ்ரீ பாண்டுரங்கன் சகாயமுண்டாகுக.

ஏழாமத்தியாயம் முற்றும்.

ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகள் திருவடிகளே சரணம்.

(பிதுருக்கள் போஜனம்.) சுக்காவன் தீர்த்தனை செய்தல் ஜீதாவாய் ஸ்நானம்

ஸ்ரீ

ஸ்ரீ பாண்டுரங்கபரப்ரஹ்மணேநம:

ஸ்ரீமத்

துக்காராம் சுவாமிகள் சரித்திரம்.

எட்டாமத்தியாயம்.

காப்பு.

சுத்தசத்து வகுணத்துச் - சோதிமயா நந்தனருள்
பத்திமையாய்ப் பற்றியகம் - பாகவத ரடிபணிவாம்.

ஸ்தோத்திரங்கள்.

ஹரி ஹரீ! உனது திவ்விய நாமமல்லால் ஜெப தப அநுஷ்டாநாதி சாதநங்கள் பலவற்றுள்ளும் எனக்கு ஒன்றுந் தெரியாது. கிரமத்தின்படி விரதங்களை யநுஷ்டிக்கவென்றால் ஒருவேளை அங்கமில்லாவிடில் மநந் தத்தளிக்கின்றது. தீர்த்தயாத்திரைகள் செய்யவென்றால் தேகமானது சக்தியற்றதா யிராநின்றது. உன்னுடைய பிராப்தியாகச் சற்பாத்திர ராவாருக்கு இயன்றமட்டிலும் தாநமளிக்கவென்றால் தநம் விசேஷித்ததில்லை. சராசரங்களாகத் தோன்றா நிற்கும் ரூப நாமங்களெல்லாம் உன்னுடைய ரூபநாமங்களாக அநுஷ்டிக்க வேண்டுமெனில் குணதோஷங்கள் விடாமல் என்னைப்பற்றி வலிக்கின்றன. சமத்துவபாவனை சிறிதும் என்மனதில் தங்கக்காணேன். சுருதி - ஸ்மிருதி - இதிகாச - புராணாதிகளை அப்பியசிக்கலாமென்றால் பாலியருக்கிருக்கும் சூட்சும புத்தியுமில்லை. அத்தியாத்துமகக் கிரந்

தங்களைப் படிக்கலாமென்றால் மநது ஸ்திரமாய் நிற்பது காணேன். உனது பத்தியிற்ப திந்தபராமருடையசரித்திரசாரமாகும்மூட்டையை முதுகிற்றாங்கி யிருக்கின்றேன். இதனாலே பவசாகரத்தினின்று கரை யேற்றி உனது திருவடியில் என்னைச் சேர்ப்பிக்கக்கடவாய்! கருணை நிதீ! என்று ஸ்தோத்திரஞ்செய்து தொழுது, கதாஸாரமதனைச் சொல்லத் தொடங்குகிறார்.

முன் ஆவலியின் திருவடியில் முள்தைத்துப் பாதிக்கையில் அநந்தபற்பநாபனே நேரில்வந்து முள்ளைவாங்கிவிட்டு, அந்த அம்மை க்கும் அவர் கணவராகிய துக்காராமருக்குங் காட்சிதந்து மறைந் தருள, வைணவத்தலைவர் மலையைவிட்டிறங்கி, தாமும் மனைவியுமாகத் தமது மாளிகைவந்து சேர்ந்து, மனையறங்கள் வழுவுராது செய்து வாழுங்காலத்தில், ஓர்நாள் ஸ்ரீமத்துக்காராம்ஸ்வாமிகள் விடியோறை யெழுந்து இந்திராயணிநதிக்கு எழுந்தருளி, அங்கோரிடத்தில் கால பாதைக்கு உட்கார்ந்திருக்கையில், அங்கு அச்சமயமும் விடாமல் ஸ்ரீவிட்டல நாமத்தை ஸ்மரித்துக்கொண் டிருக்கையில், அம்மார்க்க மாகப் போய்க்கொண்டிருந்த அந்தணரொருவர் ஆசாரிய வமிசபரம் பரையினர், துக்காராமர் தேகபாதை சமயத்திலும் நாமஸ்மரணைபண் ணிக்கொண்டிருப்பதை யறிந்து, அங்குதானே நிற்க; துக்காராம் அவர் நிற்பதைக் கண்டெழுந்து தண்டம் சமர்ப்பிக்கக் கண்ட அந் தணர் துக்காவைப்பார்த்து, ஐய! இப்போது அசௌசமாய் அசங்கிய மான இடத்திலிருந்துகொண்டு பகவானை ஸ்மரிப்பது தகாது; பெரும் பாபம் விளையும் என்றுசொல்ல; தாஸர் மறையோனுக்கு வந்தநமிய ற்றி, ஸ்வாமிகாள்! அடியேனுக்குத் தெரியாமையால் அங்ஙன்செய் தேன்; இனிச்செய்யேன். இனி ஸ்நாநஞ்செய்துவிட்டு, மடிகட்டிக் கொண்டு ஆசாரத்துடன் பூஜைவீட்டில் நுழைந்துவிட்டலநாமத்தை ஸ்மரிப்பேன். இந்தக் குற்றத்தை மன்னிக்கவேண்டும் எனது ஆசா ரியனே! என்று பிரார்த்திக்க, வேதியரும் மநமகிழ்ந்து, துக்கா தெரி யாமலே செய்தான்; நாம் சொன்னமாத்திரையானே ஏற்றுக்கொண் டானென்று நினைத்துக் கொண்டிருக்கும்போது, எதிரில் நிற்கிற தாஸருடைய திருமேனியிலிருக்கும் ரோமங்களெல்லாம் விட்டல நாமத்தை ஆகாய பூமிகளெங்கும் அளாவத்தக்க பெருந்தொனியுடன் பஜிப்பதைக்கண்ட ஆசாரியபுருஷர் பயங்கொண்டவராய் ஆச்சரிய மேற்று, துக்காவுக்கு வந்தநஞ்செய்து, நான் உமது பெருமையறியா மல் உமக்குப் புத்திசொன்ன குற்றத்தை மன்னித்தருளவேண்டும். நான் உம்முடைய பிரபாவந்தெரியாமல் சொன்னேன். "ஞாநிதடை மீறினலுஞ் சதுராகும்" என்றபடி, தாங்கள் ஞாநித்தலைவரென

அறியலாயினேன். இப்பேர்ப்பட்ட உமக்கு நியதிகள் தவறினாலுங் குற்றம்வாரா. உமக்கு இன்னசமயம் இனியசமயம் என்பதில்லாமல் எச்சமயத்திலும் இறைவனெம்மானைப் பஜிப்பதில் தோஷமில்லை என்று பல்முறை நல்ல வணக்கங்களோடுரைக்க; தாசர் அவ்வேதியரைநோக்கி, ஸ்வாமின்! முன் தாங்கள் அநுசிதமான இடத்திலிருந்து அச்சுதனை பஜிக்கலாகாது என்று சொன்னபடி விட்டுவிட்டேன். இப்போது மறுபடியும் பஜிக்கலாமென்று ஆஞ்ஞையளிப்பதால்பஜிக்கின்றேன் என்று, ஆரவாரத்துடன் ஹரிவிட்டலா! வேங்கடத்தீசா! என்று பஜனைசெய்துகொண்டு நதியிலிறங்கி அநுஷ்டானங்களை முடிக்கச்சென்று, எல்லா கடன்களையும் முடித்துக்கொண்டு, முன்போல் தமது திருமாளிகைக்குரிய தருமங்களிலிருந்தார்.

இடையில் ஒருநாள் இந்த தாஸருக்கு, சந்த ஜனங்களுக்குப் பணிவிடை செய்யவேண்டுமென்று ஆவல்மிகுந்து, பஞ்சகிருத்தியங்களில் வல்ல பெரியோர்கள் செய்துவைத்த கிரந்தங்களைச் சேவித்து, அவற்றில் வேறுதலையான விசேஷ அநுஷ்டானங்களைத் தம்முடைய அநுபவங்களுக்கு சாக்ஷியிட்டு, சாக்ஷாத் ஸ்ரீ கண்ணபிரான் பூருவ ஜென்மத்தில் தமக்கு ஸ்ரீ பாகவதத்தினின்று போதித்தருளின தசமஸ்கந்தத்தின் அபிப்பிராயங்களை இத்தேகத்தோடு இருக்கும்போதே அநுஷ்டித்து சாதிக்கவேண்டும் என்று பூரண எண்ணமுடையவராய், அன்றுமுதல் பெரியோர்களைக் கண்டால் தீர்க்க நமஸ்காரங்கள் செய்து அவர்களால் ஆசிகளைச் சம்மானமாகப் பெற்று வருபவராயிருந்தார். பிராமணர்களைக் கண்டால் கண்ட க்ஷணத்தில்தானே அடியற்ற பனைபோல் பூமியில்வீழ்ந்து வீழ்ந்து ஸேவித்து அவர்கள் கோரிய இஷ்டங்களைத் தமது சக்திக்கேற்றபடி யுதவி உபசரிப்பார். தம்மிடம் இல்லையாகிலும் பிறரையடுத்து இரந்துவாங்கி அவர்களுக்களித்து வந்தநங்கள் செய்வார். வேதவேதாந்த சாரார்த்தங்களிற் கரைகண்ட பண்டிதர்கள் யாரேனும் எவ்விடமாவது பிரசங்கம் செய்தால் அங்குசென்று, அவர்கள் சொல்லுவதற்கு ஒன்றும் பதில் சொல்லாமல் சிரவணானந்தங் கொண்டிருந்து, அன்னோர் மொழிகளில் குற்றங்களிருப்பினும் அவற்றைக் குற்றங்களா யெண்ணாமல் குணமாகவேகொண்டு பிரசங்கமுடிவில் அவர்களைக் கீர்த்தித்து, ஸேவித்துக்கொண்டு வருவார். சாஸ்திர நியாயங்களைப் பயின்றறியாத மூடவித்துவான்கள் பிரசங்கிப்பினும் அந்தப் பிரசங்கத்தையும் ஆநந்தமாய்க்கேட்டு அவர்களையும் ஒன்றும் வினவாமல் முடிவில் நமஸ்கரித்து வருவார். படிப்பும் நீதியும் சற்றளவும் பயிற்சிகொண்டறியாத பாமரர்கள், எல்லாந் தெரிந்து கொண்டவர்களைப்போல்நடித்து,

தங்களுக்கேற்ற நேசர்களைச் சேர்த்துக்கொண்டு அவர்கள்முன் பிரசங்கங்கள் செய்யாநின்றாலும் அவ்விடங்களுக்குத் தாம்போக வாய்க்குமாயின் போய் அம்மூடர்களோடு தாமுங் கலந்திருந்து, நான் சுத்தபாமரன்; எனக்கொன்றுந் தெரியாது; உங்களைத் தொழுகின்றேன்; எனக்கு நல்லறிவூட்டிவையுங்கள் என்று அவர்கள் கால்களில் விழுந்து சேவித்து, புறம்பே யோரிடத்தில் ஒதுங்கிநின்று, கைகட்டிக்கொண்டு மிகு விநயராயிருப்பார். காட்டு மிருகங்களுக்கு ஒப்பான சாதாரண ஜநங்களைக் கண்டாலும் அவர்களுக்கு முன் நமஸ்காரங்கள் செய்து அவர்கள் பிற்புறத்தில் கைகளைக்கட்டி வாய்புதைத்துக் கொண்டு, அவர்கள் சொல்லுஞ் சொற்களைப் புன்னகையோடு கேட்டுக்கொண்டிருப்பார். மிருகங்களும் பக்ஷிகளும் அம்மா என்றும், மற்றுந் தந்தமக்கிசைந்தத் தொனிகளை தொனிக்கக்கண்டால் துக்காராமர் அவையிசைத்த திசைகளைநோக்கி, தமது மநதில்தானே வந்தநஞ்செய்து ஹரிவிட்டலா! இந்த மிருகங்களுக்கும் பக்ஷிகளுக்கும் உன்மீதிலிருந்த பிரியம் மானிடதேகமெடுத்த எனக்குச் சற்றுமில்லையே! என்று இரண்டு கண்களினின்றும் ஆநந்தபாஷ்பம் சொரியவிடுவார். மதவாதிகள் தம்மைப் பரிகசித்தாலும் அவர்களுக்கும் வந்தனங்கள் செய்து, அவர்கட்குப்பதில்சொல்லாமல்மௌநராயிருப்பார். உட்சமயத்தவரும் புறச்சமயத்தவரும், தந்தம் பண்டிகை உற்சவாதிகாலங்களில் பெண்டுபிள்ளைகளுடனே நல்ல ஆடையாபரணங்களை யலங்கரித்துக்கொண்டு வேடிக்கைகளுடன் வாகநாரூடர்களாகவும், பாதசாரிகளாகவும், தேவாலய முதலியவற்றிற்குச் சம்பிரமத்துடன் செல்லக்கண்டால் தமது நாயகராகிய விட்டலமூர்த்தியை மநதில் நினைத்துக்கொண்டு, ஹரிஹரீ! இந்த ஜநங்களாவது அச்சம் விட்டு, தேவனை பஜிக்கப்போகிறோம் என்னும் நிச்சயபுத்திகொண்டு வீதியாரச் செல்கின்றார்கள். யான் எந்தக்காலத்தில் லஜ்ஜையற்று உமது திருவடிகளைத்தொழ சுதந்திரனாவேன்? அவர்களுக்கு நீர் ஏதோ சில போதித்திருப்பதால் தான் உமபேரில் நீங்காப் பக்தி கொண்டு தொழுகின்றார்கள். அதுபோல் இப்பேதையேனுக்குஞ் சிலபோதித்து உம்மைத் தொழச்செய்யலாகாதா? உம்மைத் தொழ வேண்டுமென்று எனக்கு எண்ணமுண்டாயிருந்தாலும் பெண்டுபிள்ளைகளுடைய சுகதுக்கங்களானவை மநதில்பட்டு, பாவாபர்வமென்னும் வலையிற்சிக்கி உழல நேரிடுகிறது. மநதின் சஞ்சலத்திற்கு அடியேன் என்ன செய்யமாட்டுவேன்? காருண்ணியமூர்த்தி! என்று மயங்கி தியங்கி நிற்பார். பாகவதர்கள் சற்காலக்ஷேபஞ் செய்யுமிடங்களுக்குச் சென்றால், தாமொன்றுஞ் சொதந்தரித்துச் சொல்லாமல்,

ஒன்றுமறியாதவர்போல் அக்கோஷ்டிக்குத் தூரத்தில் கைகளைக் கட்டிக்கொண்டு நின்று வரப்பட்ட பெரியோர்களுடைய பாதுகைகளைக் காப்பாற்றி, அவர்கள் எழுந்தருளும்போது அவ்வவர்களுடைய பாதுகைகளை யறிந்து கொடுத்து வீழ்ந்து பணிவார். ஒவ்வொரு காலத்தில் பஜனைகோஷ்டியானது வெளிப்பட்டு வீதிவலம்வருமாகில் அப்போது தாம் முன்னுகச்சென்று, வழிகளில் கல்லுமுள்ளுகளைப் பொருக்கிக் கைகளாலெடுத்துத் தூரத்திற்போட்டுச் சுத்திசெய்துவிட்டு, தீவர்த்தியை யேந்தினவண்ணமே பஜனைபரர்களுக்கு வெட்டிவேர் விசிரியைக்கொண்டு விசிரி இளைப்பாற்றுவிப்பார். பஜனைகோஷ்டிகள் கீர்த்தனைகளைப் பாடிக்கொண் டிருக்கையில் தாம் அதற்கேற்றபடி நிர்த்தநஞ் செய்துக்கொண்டிருந்து, கீர்த்தனைமுடிவில் கட்டியங் கூறுவதுபோல் " மாயை மடிந்து விட்டது. மீந்தவன் துக்கா - இதினுடையநாமம் விடோபா - ஸகா !" என்று மொழிந்துகொண்டு வருபவராயிருந்தார்.

இவ்வரிநாமப்பிரியர் இங்ஙன் பல்முறை மொழிந்து வருவதைக் கேட்ட அக்கோஷ்டியிலிருந்த சிலர், இந்தத் துக்காராமருக்கு பகவற்பிரேமையென்னும் பயித்தியம் பிடித்தது. இரவும் பகலும் விட்டலா ! என்றே யிருக்கின்ருர். முடிவில் இப்பயித்தியம் என்னமாய் முடியுமோ ! பகவானிவரைக் காப்பாற்றுவார். இவர் மனையாள் மீதும் மக்கள்மீதும் வெறுப்புற்றவரா யிராநின்ருர். சத்தியவாதி, பரோபகாரி, பூததயாளு, ஸ்திரீகளாவது புருஷர்களாவது என்னவிதமான வேலையிட்டபோதிலுஞ் சலியாமல் செய்துமுடிக்கின்ருர். இவரிடமிருக்கும் வஸ்துக்களை யாரிரப்பினும் கொடுத்துவிடுகின்ருர். உடல் பொருள் ஆவிகளாகிய மூன்று கரணங்களாலுந் தேவகாரியம் வழுவுருமற் செய்துவருகின்ருர். சிலர் அகம்பிரமமென்று வாக்கால் சொல்லிக்கொண்டு காசுவிஷயத்தில் பிராணனைக் கொடுக்கின்ருர்கள். மாதாபிதாக்களுக்கு மண்ணையளித்து மனைவியர்க்குப்பொன்னையளிக்கின்ருர்கள். இத்தகைய துராசைகொண்டவரல்ல. எவ்விதஞ்சொல்லுகின்ருரோ அவ்விதமானநடையும் உண்டாயிருக்கின்றது. இவ்விசுவம் யாவும் இவருக்கு ஆத்தும சொரூபமா யிராநின்றன. தம் புதல்வரான போதிலும் அந்நியருடைய புதல்வரான போதிலும் சமமாக ஆதரிக்கின்ருர். தம்மைப் பிறர் துதித்தாலும் நிந்தித்தாலும் சமமாக பாவிக்கின்ருர். இந்தத் தேவுகாம் புநிதமாகி நல்புகழைப்பெற்றது! என்று அறத்தின் நன்மையறிந்தவர்கள் அறைந்தவர்களாயினுர்கள்.

அநந்தரம் ஒருநாள் ஸ்ரீநாதன் தன் திருவடிக்கு நிகரானஸாது தமது கைகளினிடை தாளங்களையேந்தி, கருணாசாகரசீலனைக் களிப்

புறப்பாடி, கவலையில்லாக் களிறதுபோல்காலபாசத்தின் களையறுத்த தாஸர், ஆலியிற்றுயில் அமலனையடைந்து, அர்த்தராத்திரிவரை அரிதனையரற்றி, ஆநந்தக்கீர்த்தநம் அநந்தமாய்பாடி, அச்சுதனடியிணைக்கு அன்புபாராட்டி, அங்குநின்று அகல்வான் அல்லலேற்றனராய், ஆவலி வசிக்கும் அருமனையடைந்து, அவளளித்திட்ட அந்நத்தையுண்டு, ஆயனை நினைந்தரும் பஜனைகள்பஜிக்க, நித்திரை வரக்கண்டுநீக்குதற் கெண்ணி, குஞ்சியாம் நீள்சிகை குச்சியில்மாட்டி, இவ்வண்ணம்நான் குநாள் சாதனைசெய்து வந்ததில் நித்திரையும் சோம்பலும் இவரை விட்டு நீங்கின. ஐந்தாநாள்காலை இந்திராயணிக்கேகி, நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு திரும்புங்காலையில், வழியில் பள்ளங்களிருந்ததால் ஜநங்களுக்கு பாதையாகுமென்று மண்ணைவாரிக்கொண்டுவந்து அப்பள்ளங்களிற்பெய்து சீர்ப்படுத்தி, நடக்கும் ஜநங்களுக்குச் சுகமுண்டாகச்செய்தார்.

யாத்திரைவாசிகளைக் கண்டால் அவர்களுக்கு வந்தநங்கள் செய்து, சத்திரங்களுக்கு அழைத்துக்கொண்டுபோய், அவ்வவர்களுக்குத்தக்க விடுதிகளைக் காட்டி, அவர்களுக்கு வேண்டிய உபசாரங்களைச்செய்வார். நோயாளிகளைக் கண்டால் வயித்தியர்களிடம்போய் நோய்க்குத்தக்க ஔஷதங்களை வாங்கிக்கொண்டுவந்து அவர்களுக்குக் கொடுத்து, அவர்களுக்கு அந்ந ஆகாரங்கள் இல்லாவிட்டால் அவற்றிற்குத்தக்க முயற்சிகளைச்செய்து குறைவறநடத்திசொஸ்தப்படுத்திஅனுப்புவார். காலையுமாலையும் சோளநொய் சம்பாதித்து எறும்பு புற்றுக்களிற்பெய்து, அவை அந்நொய்யைக் கௌவிக்கொண்டு போவதைக்கண்டு சந்தோஷிப்பார். சிறுபிள்ளைகள் வாசிக்கும்பொருட்டுத் தம்மிடம்வரின் அவர்கள் மநங் களிகொள்ளப் போதித்துப் பாடமாக்கியனுப்புவார். அந்தகர்கள் வழிதிகைத்து அலைந்தால் அவர்களுடைய தடிகளைப்பிடித்து வழிகாட்டிக்கொண்டுபோய் அவர்கள் இருப்பிடங்களிற் சேர்த்துவிடுவார். யாத்திரைசெய்துவருமவர்களுக்காக வழியில் தண்ணீர்ப்பந்தலிட்டு உபசரிப்பார். இவ்வாறு ஜெநங்களுக்கு வேண்டிய நல்லுபகாரங்களைச் செய்துகொண்டு வருங்காலத்தில், ஒருநாள் தமது மாளிகையின் வீதிப்புறத்திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருக்கும்போது ஓர்வார்த்தீகப் பிராமணஸ்திரீ அங்கு வந்துநின்று தாஸரைநோக்கி, ஐயா! நானும் எனது நாயகனும் மெத்த வார்த்தீகமும் ஏழைத்தன்மையும் உடையவர்கள். அரையிற் கட்டியிருக்கிற வஸ்திரந் தவிர வேறு வஸ்திரமில்லை. தயவுசெய்ய வேண்டும்என்றுகேட்க, தாஸரும் பரமதர்மீகப் பிரபுவாகையால்உள் வாசல் வழி நோக்குகையில் ஜீஜாபாய் ஸ்நாநஞ்செய்து உடுத்திக்

கொள்ள ஈரவஸ்திரத்தைப்பிழிந்து சுவறின்மீது வைத்திருக்கிறமை யறிந்து, அந்தப்பிராமணமாதுக்குக் குறிப்பாய்ச் சேலையைக்காட்டி, சந்தடிசெய்யாமல் அதனை எடுத்துக்கொண்டுபோ என்றுரைக்க, அந்தப் பிராமணக் கிழவியும் அவ்வாறே சந்தடிசெய்யாமல் சேலையை யெடுத்துக்கொண்டுபோய்விட, தாஸர் புன்னகையுடையவராய், இங்கிருக்கவொண்ணாதென்றுநினைந்து இந்திராயணிக்குச்சென்று, ருக்குமணீரமணருடைய திவ்விய திருநாமத்தை யுச்சரித்துக்கொண்டிருந்தார். ஜீஜாபாயம்மாளும் நீராட்டமானபிறகு சுவறின்மீது வைத்த சேலையையெடுத்து உடுத்திக்கொள்ளச் சேலையினிடம்போக, அங்கு சேலையில்லாததைக்கண்டு ஆச்சரியங்கொண்டவராய் யாது யோசிக்கின்றாரென்றால்,-நமது கருமமானது விபரீதமாயிராநின்றது. இங்கு வைத்துவிட்டு எங்கும்போகாமல் நாமிவ்விடத்தில் தானே ஸ்நாநம் பண்ணிக்கொண்டிருக்கின்றோம். நமது கணவனாரும் வீதித்திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருந்தார். 'பூபாய்' என்னும் வேலைக்காரியுமில்லை; அவளையுஞ் சாணத்துக்காக அனுப்பினோம் போயிருக்கின்றாள். சிரியபுத்திரியாகிய கங்காபாய் வீதியில்விளையாடிக்கொண்டிருக்கிறது. சிறிய குமாரன் விடோபாவும் பெரிய குமாரன் மகாதேவும் குளிக்குமாறு இந்திராயணிக்குச்சென்றிருக்கிறார்கள். பெரிய குமார்த்தியாகிய காசிபாயம்மாளும் இளையபுத்திரி பாகீரதியும் அவர்கள் மாமிமார் அகங்களுக்கேகினார்கள். அன்னியர்கள் யாரும் இங்கு வரவில்லை; ஈதென்ன அதிசயம்? நம்முடைய சேலை யெவ்வழிபோயிருக்கிறது? என்று தம்முள்தாமே யோசித்துக்கொண்டு மறுபடியும், வீதியில் நமது நாயகரிடம் யாரோவொரு விருத்த பிராமண ஸ்திரீ பேசிக்கொண்டிருந்தாளே; அவளேதாவது ஒருவேளை நமது நாயகரை வஸ்திரமில்லையென்று இரந்திருக்கவேண்டும். இவரும் பரிதாபதருமகுணங்கள்உடையவராதலால் நாம்களைந்துவைத்தஈரப் புடவையை யெடுத்துக் கொடுத்திருக்கவேண்டும். அல்லாவிடில் இந்தக்காலத்தில் எல்லோரும் இருக்கும்போதே யெந்தத்திருடன்வந்து தூக்கிக்கொண்டு போவான்? என்று நிச்சயித்துக்கொண்டு, தேளானது கொட்டிவிட்டு வேகமாக வோடுவதுபோல், இவர் நமது சேலையைப் பிராமணஸ்திரீக்குக் கொடுத்துவிட்டு, நங்குடியைக்கெடுத்த கரியனுடனிருக்க ஆற்றங்கரைச் சென்றார்போலும். நங்குலதெய்வமும் கரியன் பயத்திற்கு அஞ்சி யிராநின்றது. கெருடப்பார்வையுடைய காருருவனுகும் வெண்ணெய்க் கள்வன்பேரில் எண்ணமிக வைத்திருப்பதால் என்புத்தியும் மயங்கிவிட்டது. களவினர்க்குத் தோழனுதலால் என்குடித்தனம் நாளுக்குநாள் நலிந்துகொண்டுவரக்

காணுகிறது. என் குலதெய்வத்தை விரும்பாமல், பதினாயிரம் பெண்டுகளைச்சேர்ந்து பெருஞ்சந்ததி யுடையவனா யிருக்கும்போதே ஒருபத்தினியே யெனக்குண்டு என்று யாவருமறியப் பொய்ச்சத்திய ம்பண்ணின அசோதை மைந்தனை விரும்புவதால் இக்கேடு நமக்கு வாய்த்தது. குழந்தை குட்டிகளைப் பெற்றெடுத்த மனிதராகிய நமது நாயகராவது பிராமணஸ்திரீக்குச் சேலையைக் கொடுக்கிறேமே; வேறேசேலை இவளுக்கில்லையே இவளென்ன கதியாவது? எதையுடுத் திக் கொள்ளுவாள்? என்றாவது யோசித்தாரா. இவரை விவாகஞ் செய்துக்கொண்ட நாள்முதல் இன்றளவிலும் தம்சுதாவில் ஒருசேலை யாவது கட்டிக்கொள்ள வாங்கிக் கொடுத்திருப்பாரா? நமது தந்தை சொத்தை யநுபவித்துக்கொண்டிருக்க அதனையும் வைக்கவிடாமல் தானமளித்துவிட்டால் யானுங் குழந்தைகளும் என்னகதியாவது? எவ்வாறு ஈடேறுவது? இரந்த பிராமணஸ்திரீக்குப் பேசாமல் சேலை யை யெடுத்துக் கொடுத்துவிட்டு, இனிநாம் இங்கிருக்கலாகாதென்று ஒன்றும் அறியாதவரைப்போல் போய்விட்டார். இத்தருணம் என்னுடைய மானத்தைக் காத்துக்கொள்ள வேறே சேலையை வீட்டிற் குள்ளிருந்து கொடுப்பதற்கும் ஆள் யாருமில்லையே. நாமாவதுபோ யெடுத்துக்கொள்ளலா மென்றால் வீதிவழியாகப் போகுமவர்களுக் குத் தெரியுமே. இவ்விடத்தைவிட்டு நானெப்படி மானமில்லாமல் உள்ளே நுழைகுவேன்? ஓகோ குலதெய்வமே! என்று மிக விசன முற்று, தாம் குளித்தவிடத்திலிருந்த சதுரக்கல்லின்மீது அசைவற உட்கார்ந்துகொண்டிருக்கையில், அவர்களுக்குரிய பந்துக்களுடைய வீடுகளில் விவாகம் நடக்க அதற்காகப் போகும் புருஷர்கள் ஜீஜா வுக்குஞ் சொல்லிப்போவோமென்று ஜீஜா அம்மாள் வீட்டிற்குள் நுழைந்து, அம்மா ஜீஜா! பலானவர் விவாகத்திற்கு நீரும் வரவேண் டியது என்றுசொல்லி அங்கேயேநிற்க, இந்தம்மாள் மானமென்னும் பயாக்கினியால் சுடப்பட்டு, இருந்தவிடத்திலேயே இருந்து ஒன்றும் பதில்சொல்லாமல்ஸ்தம்பித்துச்சோர்வடைந்திருக்கையில், விடோபா வாகிய ஜெகத்ரக்ஷகி மநமிரங்கி, ஜீஜாபாயறியாதபடி ஓர் திவ்விய தரமான பட்டுவஸ்திரம் அந்த அம்மாளுடைய திருமேனியில் போர் வையாக இருக்கச்செய்தாள். இப்படி தம்மேனியில் ஒரு பட்டுவஸ் திரமிருந்து பிரகாசிக்கக்கண்ட ஆவலியம்மாள், வாடியபயிர் மழை துளிக்கக்கண்டால் எப்படி குளிர்ச்சியைப் பெற்றுத் தழைக்குமோ அதுபோல் உள்ளம்ஆநந்தம்நிறம்பப்பெற்றுத், ருக்குமணிபிராட்டித் தன்கணவனாகிய கரியனுக்குத் தெரியாமல் இச்சமயம் மானத்தைக் காத்தருளினாள் என்று நினைந்து, சேலையை பங்குதானே கட்டிக்

கொண்டு,ஸ்நாநம்பண்ணின இடத்தைவிட்டு வீட்டிற்குள் நுழையும் போது அங்கழைக்கவந்த பந்துக்கள் அந்தம்மாள் கட்டிக்கொண்டு உள்ளேபோன சேலையைக்கண்டு பிரமைகொண்டு, இப்பேர்ப்பட்ட உயர்ந்த பட்டு வஸ்திரத்தை நாம் யாரும் எந்த ஸௌகார் வீடுகளிலும், எந்த ராஜ அரண்மனையிலுங் கண்டதே கிடையாது. இவ்வஸ்திரம் சூரியப்பிரகாசம்போல் பிரகாசியாநின்றது. இழை யாயிரம் பொன்பெறும்என்று கேட்டோமேயன்றி கண்டோமல்லேமல்லவா? இச்சேலை யொன்றிற்கே அவ்வேற்றந் தகுமல்லது வேறொரு சேலைக்குத் தகாது. இதற்குச் சமாநமானதொரு சேலை யுலகத்தில் யாருங் கண்டேயிருக்கமாட்டார்கள். சாதாரணமான காலத்திலேயே இந்த ஜீஜாபாயம்மாள் இவ்வுயர்த்தியும் அழகும்வாய்ந்த சேலையைக் கட்டுமவளாயின் பண்டிகைமுதலான விசேஷகாலங்களில் இதனிலும் எப்பேர்ப்பட்ட சேலையை யுடுப்பாளோ அறியோம். அச்சேலை யெவ்வளவு அற்புதமா யிருக்குமோ அறியோம். இவர்கள் வெளிக்கு தரித்திரவேஷம்பூண்டு உள்ளுக்குள் நல்லஸௌக்கியங்களை யநுபவித்துக்கொண்டு, நல்லுணவுகளையுண்டு, ஸ்திரீ புருஷர்கள் இருவரும் ஒரு மனதுடையவர்களா யிருக்கின்றார்கள். துக்காவினுடைய தந்தை யிருந்த காலத்திலும் இப்பேர்ப்பட்ட வஸ்திரம் தரித்திருக்கக் காணோம். இந்த துக்காராம் எங்கேயோ தேசாந்தரங்களுக்கு வர்த்தகத்துக்கென்று போய், அங்கங்கிருக்கும் ஸௌகார் வீடுகளில் கன்னமிட்டு சொத்துகளைத் திருடியும், இவ்வூர் வியாபாரிகளுடைய சொத்துகளை மோசம்பண்ணியும் தனது பெண்டாட்டியிடங்கொடுத்துத்தான் தரித்திரனென்றுஎல்லாருமறிய வேஷம்போட்டுக்கொண்டு, அவ்வேஷத்துக்கு அங்கமாக ராம! கிருஷ்ண! கோவிந்த! என்று மேல்வெளிச்சமா யுச்சரித்துக்கொண்டு, பயித்தியக்காரனைப்போல் சஞ்சரிக்கின்றான். இப்படிப் பயித்தியங்கொண்ட பொய்வேஷதாரியாய்த் திரிவதினாலே இவர்களுடைய களவு வெளிகாணுகிறதில்லை. உள்ளுக்குள் இன்பசுகங்களை நன்றாயநுபவித்துக்கொண்டு குழந்தைகுட்டிகளைச்சீராகப்பெற்றுக்கொண்டு, சந்தோஷசித்தர்களாக இருக்கின்றார்கள். இவர்களை யோர்போதும் நம்பொணாது! என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு, அம்மா ஜீஜாபாய்! எங்களுக்கு நேரமாகிறது; விவாகத்துக்கு வருகிறீரா சொல்லுமம்மா! என்று கேட்க, அவ்வம்மையும் உள்ளிருந்தபடியே, ஐயமீர்! இந்தக்குடித்தன தருமங்கள் உங்களுக்கு நன்றாகத் தெரிந்தே யிருக்கின்றது. அவ்விடத்திற்கு வரவென்றால் தக்கவரிசை கொண்டுவரவேண்டும். இத்தருணம் நிருவாகந்தப்பி யிருக்கின்றது. என்னுடைய நாயகர்

இரவும்பகலும் சுவாமியைத் தியானித்துக்கொண்டிருப்பவராயினுரே யன்றி மனையறங்களுக்கு ஒன்றுஞ் சம்பாதித்துப் போடுமவரல்ல நீங்களெல்லாரும் போங்கள்; நான்வரவேண்டியதைப்பற்றி பின்னுல் யோசித்துக்கொள்ளலா மென்றுசொல்ல அவர்கள் போய்விட்டார் கள்.

விருத்தபிராமண ஸ்திரீக்குத் தம்பெண்டாட்டியினுடைய வஸ் திரத்தைத் திருடிக் கொடுத்துவிட்டு நதிக்கரைக்குச் சென்ற நாத னருள் வாய்த்த ஞானித்தலைவர், ஸ்ரீ பாண்டுரங்க மூர்த்தியை மநதி னிடம் தங்கவைத்து, ஹரி ஹரீ! பரந்தாமா! புண்டரீகவரதா! புரு ஷோத்தமா! உனக்கு வந்தனம்; மோகமென்னுமிருளே யோருரு வாகத் தடித்து இத்தேகமா யிராநின்றது. இத்தேகமானது யாவத் பாபங்களுக்கும் ஓரிராசியாயிருக்கின்றது; சமுசாரம் நிர்த்தூளியாய் விட்டது. மெய்ப்பக்தியில்லாமல் உனது சேவைக்குத் திருடன்போ லிருக்கின்றேன். இருபுறமும் உதவியில்லாதவனுகின்றேன்; உனக் கும் நன்றுவிளங்கும். அடியேனுல் இவ்வுலகில் என்ன செய்யக் கூடும்? தேவாதிதேவா! என்று சித்தத்தில் அநுதாபங்கொண்டு, பிரமாதிசயத்துடன் பஜித்துக்கொண்டு ஆற்றங் கரையிலிருக்கும் வநத்திலிருந்து, இரவான நாலுநாழிகைக்குமேல் ஸந்நிதானமடை ந்து, இரண்டு கைகளிலுங் கற்களையேந்தி தாளமாகத் தட்டிக்கொ ண்டு பாடல்களைப்பாடி நிர்த்தநஞ்செய்து வருவதை ஜீஜாபாயம் மாள் பிறரால் சொல்லக்கேட்டு, புத்திரியினிடம் ரொட்டியையுங் கீரையையுங் கொடுத்தனுப்ப, அவற்றைப் புத்திரி கொண்டுவந்து தேவாலயத்தில் பஜனை செய்துகொண்டிருந்த தந்தையிடங் கொடு க்க, அவற்றில் சொல்ப ஆகாரமுண்டு மறுபடியும் முன்போல் பஜனை செய்துகொண் டிருக்கும்போது அவர் பாடிக்கொண்டிருந்த ஹரி கீர்த்தனைகளை அச்சந்நிதி சேவையார்த்தம் வந்திருந்த பரமபாவீகர் கள் உற்றுக்கேட்டு வெகு ஆநந்தமடைந்தவர்களாய், இரண்டு ஜாமம் வரையில் கேட்டுக்கொண்டிருந்து போனுர்கள்.

இந்த தாஸர் நித்திரை செய்யாமல் ஏகாந்தராயுட்கார்ந்து பூரு வீகர்கள் பாடிவைத்த கீர்த்தனைகளைத் தாம் பாடம்பண்ணிவருவதில் நித்திரையும் சோம்பலும் அற்றுவிட்டன. இப்படியிருக்கத் தாம் அநுஷ்டானங்களையேன் அநுஷ்டித்து வந்தார்? சகலசித்திகளும் இவருக்கு விளங்கியிருக்கின்றனவோ? என்று அதிசங்கைபண்ணின வர்களைப்பார்த்துக் கிரந்தகர்த்தா சொல்லத்தொடங்குகிறுர்:—குய வன் சக்கரத்தைச்சுழற்றி பாண்டங்களைச்செய்து முடித்தபின்பும் சுற்றிய அச்சக்கரந் தானுய்ச் சுழன்று நிற்பதுபோலும், சூரியன்

அஸ்தமித்தும் இரண்டுநாழிகை பிரகாசமிருப்பதுபோலும், அநந்தங்கோடி ஜெங்மங்களாக ஜீவபுருஷன் இந்திரியங்களுடன் வில்வக்காயினைப்போன்ற ஒற்றுமையாய் ரமித்துக்கொண்டிருந்தவனுகையால், புளியம்பழத்தைப்போல் ஒற்றுமையுற்றும் உறுமலும்விவேகியாவது சாதகர்களுக்கு அருமையாயிருப்பதைப்பற்றி, சாத்தியர்களானலும் சாதகத்தை விடாமலேயே வருவது பிரமவித்துக்களுடைய இயற்கையாகையால் இந்தப்பிரபந்நரும் தமது சாதகத்தை விடாமலேயே பற்றிக்கொண்டிருப்பவராயினர். ஆதலால் பிறருடைய டம்பத்திற்கு இடங்கொடாமல் பூர்ணபாவமாய், ஈசுவரரூபத்தைப் பெற்றாரென்று உரைக்கக்கேட்டு அதிசங்கைபண்ணினவர்கள் ஆநந்தாதிசயங்கொண்டார்கள்.

இதுநிற்க, தாஸர் நித்திரையகற்றி, சொரூபலட்சியார்த்தத்தில் நிரந்தரமாய்த்தங்கி, சதாசகஜநிஸ்டாசம்பந்தராய்ஜீவன்முக்தராயிருந்துகொண்டு, உலகத்தாருடன் கலந்தேயிருந்தும் சருவசுவாமியினுடைய அர்ச்சநாதி கிரியா விசேஷங்களேயும் சத்தியபுத்திக்குரிய சந்மார்க்க நடக்கைகளேயும் விடாமல், பிறருக்குஉபகாரஞ்செய்ய இத்தேகமெடுத்ததென்று எண்ணி, வழிபோக்கரில் யாரேனுந் தந்தம் மூட்டை முடிச்சுகளே வெகுசிரமையோடு எடுத்துக்கொண்டு போகக்கண்டால் அவற்றைத் தாம்வாங்கித் தந்தலேமீது சுமந்துகொண்டுபோய் அவர்கள் இருப்புகளில் இறக்கிவிட்டுவருவார். மழையில் நனைந்துவந்தால்தமது வஸ்திரங்களே அவர்களுக்குக் கொடுத்து, அவர்களுடைய ஈரவஸ்திரங்களேயுலர்த்திவருவார். யாத்திரைசெய்புமவர்களில்யாருக்கேனும் நடந்த அதிர்ச்சியால் கால்கள் வீங்குமாயின் அவர்களுக்கு வெந்நீர்வைத்துக் கால்கள்மேலூற்றி கால்களேயுருவி யுபசரிப்பார். திக்கற்ற விருதாப்பிய கோக்களேக்கண்டால் அவற்றிற்குப் புல்கொண்டுவந்து மேயவிட்டு ஜலமும் அருந்தவிடுவார். ஸ்ரீமகாபாகவதத்தில் ஜடபரதர் எவ்வகை சாதித்தனரோ அவ்வண்ணமே தாமு நடத்துபவராயிருந்தார் கேவலம் பிராகிருத ஜெங்மங்களாகிற பக்தர்களுங்கூட யேதாவது வேலேயிட்டாலும் அவற்றையுந் தள்ளாமற் செய்பவராய் எல்லாராலுங் கொண்டாடப்பட்டிருந்தார்.

இங்ஙனிருக்க, இந்திராயணிதீரத்துக்கு அருகில் நவலகா என்னுந்தோப்பினிடம்வாரத்திற்கொருமுறை சந்தைகூடுவதுண்டு. அவ்விடத்திற்கு ஓர்நாள் இப்பரமசாது போய்க்கொண்டிருக்கும்போது மார்க்கத்தில் ஓர்பிராமண வார்த்திக்கியஸ்திரீ கையினிடம் கோலொன்று தாங்கி அதனே யூன்றியூன்றி நடப்பதை தாஸரறிந்து அந்தக் கிழவியிடம்போய், அம்மா! என்தோளின்மீது ஏறிக்கொள்ளுவீ

ராகில் நீர் போகிறசந்தையிற் கொண்டுபோய்ச் சேர்ப்பிப்பேனென்று வேண்ட, அந்தக்கிழவியும், அப்பா! நானுன்தோளின்மேல் ஏறமாட்டேன், இவ்விடமே யிருக்கின்றேன். எனக்குப் பதிலாக நீ சந்தைக்குப்போய் எனக்குவேண்டிய எண்ணெயை வாங்கிக்கொண்டுவந்து கொடுப்பாய் என்று தன்கையிலிருந்த பாத்திரத்தையும் பணத்தையுந் தாஸர்கையில் கொடுத்தனுப்ப, அவரும் அவற்றைப்பெற்றுக்கொண்டு சந்தைக்குள் நுழையவே, அங்கு கடைக்காரர்கள் எல்லாரும் இவரைக்கண்டு அழைத்து, தந்தங்கூடாரங்களையடிக்கச்செய்வாரும், சாமான்களைத் தரிவாரியாய்ப் பிரித்துக் குவிக்கச்செய்வாரும், மாடுகளின் மீதிலிருந்து பொதிகளை யிறக்கச்சொல்லுவாரும், மாடுகளுக்குத் தண்ணீர்காட்டி மரங்களிற் கட்டச்செய்வாருமாயிருக்க, அவ்வவர்களிட்ட வேலைகளெல்லாவற்றையுஞ் செய்துவைத்து, பிராமணக்கிழவி தந்தபணத்துக்கு எண்ணெய்வாங்கிக் கொண்டுபோய் கொடுத்துவிட்டு, மார்க்கங்களிலிருந்த கற்களையும் முட்களையும் வாரியெறிந்து வழிகளைச் சுத்தப்படுத்தி பள்ளங்களுக்கு மணல்பெய்து சமப்படுத்திவிட்டு, ஆநந்தங்கொண்டவராய், ஹரிவிட்டலனைத் துதித்துக்கொண்டு, இவ்வாறு பலநாளுநடாத்தி, திநதிநம் பகவற்பிரீதி மேலிடப்பட்டவராயிருந்தார்.

துக்காராம் ஸ்வாமிகள் சந்தையிற்புகுந்து எண்ணெய் வாங்கிக்கொடுக்கப் பெற்றுக்கொண்டுபோன பிராமணக்கிழவிமறுவாரம்எண்ணெயை வாங்காமல் பாத்திரத்திலிருந்த எண்ணெயையே வழங்கிக்கொண்டுவந்து மூன்றும்வாரம் சந்தை திநத்தில் எண்ணெய் பாத்திரத்தை யெடுத்துப்பார்க்கையில், தாஸர் எவ்வளவிற்கு வாங்கிக்கொண்டுவந்து கொடுத்தாரோ அவ்வளவிற்குக் குறையாமல் எண்ணெயிருக்கக்கண்டு, அக்கிழவி அதிசயமுற்று, பக்கத்து வீட்டிலிருந்த பெண்பிள்ளை யொருத்தியை யழைத்து அவளிடம், அம்மா! நான் துக்காவினிடம் மூன்றுவது சந்தையில் பணங்கொடுத்து எண்ணெயை வரவழைத்தேன். அன்றுதொடங்கி மூன்று வாரங்களாக வழங்கியும் எண்ணெய் சற்றுங்குறையாமல் பாத்திரத்தில் பூரணமாயிருக்கின்றது. இதென்னமோ மாயமாயிராநின்றது. இனி போகப்போக அவருடைய மான்மியங்கள் விளங்கும்போலிருக்கின்றது என்றுசொல்ல, அவளும் அதிசயமுற்று, நாமும் இவருடைய குணங்களைச் சோதித்துப் பார்ப்போம் என்று எண்ணி, அன்று சந்தை நாளாகையால் பணத்தையும் பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டுபோய் தாஸரைக்கண்டு அவர்கையில் கொடுத்து, எண்ணெய் வாங்கித்தாரு மென்றுசொல்ல, தாஸரும் அவற்றை வாங்கிக்கொண்டு

10919

போய் முன்போல் சந்தையில் நுழைந்து, கடைக்காரரிட்டவேலைகளை யெல்லாஞ் செய்துமுடித்து, முடிவில் அவ்வம்மை கொடுத்த பணத்திற்கு எண்ணெய் வாங்கிக்கொண்டுவந்து கொடுக்க, அந்த அம்மையும் அவ்வெண்ணெயைப் பழகப்பழக வளர்ந்தேறி வருவதைக்கண்டு, இவர் ஸ்ரீ பாண்டுரங்க மூர்த்தியேயன்றி பிறரன்று என்றுன்னி ஊரா ரெல்லாருக்கும் இவ்வதிசயத்தைச்சொல்ல, அவ்வெல்லாரும் சந்தைதிநம் பணமும் பாத்திரங்களுங் கொண்டுவந்து பகவத்பாகவதரிடங் கொடுக்க, அவர்களெல்லாருக்கும் எண்ணெய் வாங்கிக்கொண்டு வந்தீய, அவர்களெல்லாரும் எண்ணெயைச் செலவிட்டும் அதிகமாய் வளருவதைக்கண்டு, ஊர்ஜனங்கள் விசேஷமும் வரவர இவர் கீர்த்திகளைக்கண்டும் கேட்டும், சந்தைதினமாயின் குடுவைகளும், பணங்களுங் கொண்டுவந்து கொடுத்துஎண்ணெயை வாங்கி கொடுக்கப் பிரார்த்திக்க அந்தப் பணத்தையெல்லாம் ஓர் பையில் போட்டு, பாத்திரங்களுக்கெல்லாங் கயிறுகட்டி, தமது இடையிலும் கழுத்திலும், தோள்களிலுந் தொங்கவிட்டுக்கொண்டு, பணப்பையையுஞ் சுமந்துக்கொண்டு, ரதம் அலங்கரிக்கப்பட்டு நடப்பதுபோல்பகவற்பஜனை செய்துக்கொண்டு நிர்த்தநத்தோடு சந்தைக்குப்போய், எண்ணெய் வர்த்தகன்முன் பணப்பையைப் போட்டு, பாத்திரங்களையும் வரிசையா யிரக்கிவைத்து எண்ணெய் வார்க்கச்சொல்ல, அவ்வெண்ணெய் வாணியனும், ஐய! இப்படி மொத்தமாய்க்கொண்டு வந்து வைத்தால் எந்தப் பாத்திரத்தில் எவ்வளவு பிரமாணம் வார்த்துத் தருவது? என்ன, உனக்கு எப்படி யெப்படி தோன்றுகிறதோ அப்படியெல்லாம் வார்த்துக்கொடுமென்று சொல்ல, வாணியனும் பணத்தை மொத்தமாய் கணக்கிட்டுக்கொண்டு, தனக்குத்தோன்றினபடியெல்லாம் பாத்திரங்களில் அரைக்காலணா, காலணா, அரையணா, முக்காலணா, ஒருஅணா, அரைக்கால்ரூபாய், கால்ரூபாய், முக்கால்ரூபாய், ஒருரூபாய்க்கான அளவுகளாக எண்ணெயை விட்டுக் கொடுக்க, அவற்றையெல்லாந் தூக்கிக்கொண்டுவந்து, ஓர் மரத்தடியில் வைத்துக்கொண்டு கொடுத்தவர்களை யழைத்து, உங்களுங்கள் பாத்திரங்களையெடுத்துக்கொள்ளுங்கள் என்றுசொல்ல, அவர்களெல்லாரும் தந்தம் பாத்திரங்களையறிந்து எடுத்துப் பார்க்குமளவில் அவ்வவர்கள் அளித்த பணத்தளவில் எண்ணெயிருக்கக்கண்டு அதிசயங் கொண்டவர்களாய், அவர்களெல்லாரும் துக்காராம் வெகு நல்லவரென்று வாழ்த்தி தங்கள் தங்களில்லங்களுக் கேகினார்கள்.

இப்படியே பலவகைகளாக ஊராருக்காக வேண்டிய பிரயாசைகளைப் பகற்காலத்தில் பட்டுக்கொண்டு வருபவராயினும், சூரியன்

அஸ்தமித்தவுடனே சந்நிதானம்புகுந்து, இரவுஇரண்டு மூன்றுஜாமம் வரையில் பஜனை காலக்ஷேபமும், நிர்த்தநமுஞ்செய்து, மங்களார்த்தி மாமாயனுக்கும், மங்கை ருக்குமணிக்கு மானவுடனே சகோதய மநத்தராய், தமேகத்தியாநத்திலிருந்து, விடியற்காலத்தில் இந்திரா யணிக்குச்சென்று நித்தியகருமாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, பிராமண அக்கிராரவீதியாக வந்து, ஜலமெடுத்து வீடுகளில் தெளித்து, குப்பைச் செத்தைகளை வாரியெடுத்துத் தூரமாயெறிந்துவிட்டு பிராமணர்களுடைய தேவார்ச்சனைக்கு நல்ல புஷ்பங்களுந் திருத் துழாயுங் கொய்துவந்து கொடுத்து, அவர்கள் என்னவேலை யிடுகிறார்களோ என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்து அவர்களிட்ட வேலைகளைச்செய்து, பளுவுள்ள சுமைகளைச் சிரசின்மீது சுமந்துவார்களாகிலும் அவற்றைச் சுமந்துகொண்டுவந்து வீடுகளிற்சேர்ப்பதும், பிராமணர்வீட்டிலிருப்பவர்கள் கடைக்குச்சென்று சாமான்களைவாங்கிவரச்சொன்னால் அவர்களுக்காக வாங்கிச் சுமந்துகொண்டுவந்து சேர்ப்பதும், வேஷ்டிகளைத் துவைத்துக்கொடுப்பதும், குழந்தைகள் அழுதால் அவர்களை யெடுத்துக்கொண்டு உபலாலித்துத் தேர்த்தி விடுவதும், பாத்திர சாமான்களைச் சோதித்துத் தருவதும், பத்து பிராமணர்கள் சேர்ந்து வீற்றிருந்தால் அவர்கட்கு வெட்டிவேர் விசிறிகளைக்கொண்டு விசுருவதும், மற்றும் எத்தகைய அலுவலாவது யாரேனும் இடுவாராகில் அவற்றை மனங்கூசாமல் அப்போதைக்கப் போதே செய்து முடிப்பதுமாயிருந்தார். அவர்களிடத்திலிருந்து ஒருகாசளவாவது ஒருகவளம் அந்நமாவது பெற்றவரேயல்ல. இவருடைய எண்ணமானது ஜிதேந்திரியர்களுடைய எண்ணமாகவும், விதேயமாகவும் இருப்பதைப்பற்றி பாவ அபாவராகிதராய், "உபகாரார்த்தமிதம் சரீரம்" என்றபடி, தேகத்தினலாகும் உபகார காரியங்கள் எவையோ அவற்றைத்தள்ளாமற் செய்துகொண்டுவந்தார்.

இப்படி நித்தநித்தம் தாஸர் ஒய்வுவொழிச்சலில்லாமல் பரோபகாரஞ் செய்துவருதை மனையாட்டி ஜீஜாபாயம்மாள் அறிந்து, அவ்வூர் ஜனங்களைநோக்கி, எனது நாயகர் இவ்வூராருக்கு அடிமையாய்விட்டார்; இவ்வூரார் பாவபுண்ணியங்களுக் கஞ்சாமல் மாடுகளுங்கூட சுமக்காத சுமைகளைத் தலைமீது சுமத்தினல், ஒருவேளை கழுத்தொடியுமாகில் என்னை செளரக்ஷணை பண்ணுவாரார்? இறந்துவிடுவாராகில் என் மாங்கலியமல்லவா இழக்கப்படும்? அந்தக் காலத்தில் நானென்னென்ன துன்பங்களை யடையவிராது? இக்குடும்பத்தைப் பாதுகாப்போர் யாரிருக்கிறார்? இவ்வூரில் கல்வீடு கட்டிக்கொண்டிருக்குங் காதகனுகிய கரியன் என்பேரில் வைராக்கியங்

கொண்டு நடப்பதுபோல ஊரிலுள்ளாருமென்னைத் துயருக்குள்ளாக்குகிறார்கள். ஏழைகளாய்விட்டோமென்று யாவருக்கும் பரிகாசமாயிருக்கிறது. நாங்களடையுந் துன்பம் அவ்வவர்களும் அடையாமற் போகிறதில்லை என்று அழுது பிரலாபித்தலை ஊராரறிந்து, அம்மா! உன்புருஷராகிய தாஸர் சுத்த சாந்தமூர்த்தியாகையால் யாரேனும் வேலையிட்டால் அவ்வேலையைத் தள்ளாமற் செய்கின்றார். அவர் தள்ளாமற்செய்கின்ற காரணத்தால் ஊரிலுள்ளார் அவருக்கு வேலையிடுகின்றார்கள். செய்யமாட்டேனென்றால் கிட்டநெருங்குவார்களா? எவரிடமாவது வேலைசெய்து பொருளைப் பெறுகின்றாரா? அல்லது ஒருவேளை யந்நமுண்கின்றாரா? கிளிகளானவை சிலமொழிகளைக் கற்றுக்கொண்டு தனக்குத்தானே சத்தித்துக்கொண்டிருக்கையில் அம்மொழிகளைக்கேட்கஜனங்கள்பிரியப்படுகின்றார்கள். குரங்கானது ஆட்டுமவன் சொற்படி யாடுவதால் ஜனங்கள் ஆவலாய்ப் பார்க்கின்றார்கள். அவைகளைப்போல் இவர் யாரும் வேலை யிடாமுன் தாமே வலிவிற்சென்று ஏதேனும் வேலை செய்யவேண்டுமா? என்று கேட்டுச் செய்கையால் எல்லாரும் ஆவல்கொண்டு வேலையிடுகின்றார்கள். இவர் இருந்தவிடத்திலேதானே யிருப்பாராகில் யாவரு மிவருக்கு அலுவலிடார்கள். நீர் வீணில் ஊராரை கோபிப்பதில் பயனில்லை என்றுரைக்கக் கேட்டுக்கொண்டிருக்கும்போது வைஷ்ணவவீரர், யதேச்சையாக அவ்வூரைச் சுற்றிக்கொண்டு தம்மாளிகைக்கு வருவதை ஜீஜாபாய் பார்த்து, விடிந்ததுமுதல் இதுவரையில் கரியனுக்கும் ஊராருக்கும் தொண்டுபூண்டு பணிவிடைகள் செய்து அலண்டு வந்தீர். வெளியாருக்காகப் படுகிற கஷ்டம் இக்குடும்பத்துக் காகப் பட்டால் நானுங் குழந்தைகளுங் கடைத்தேறிப்போவோம். எங்களுக்காகக் கஷடப்பட்டு எங்களைக்கடைத்தேற்றுவிக்கலாகாதென்று கரியன் உமக்குக் கற்றுக்கொடுத்ததாலல்லவா நீருமிப்படி எங்களை நிராகரித்திருப்பது? இக்குடும்பத்தின்பேரில் உங்களுக்கேனோ இவ்வளவு மாச்சரியம்? நாங்கள் என்னபாபம் செய்தோமோ? இந்த வீட்டுக் குலதெய்வத்தையும் நீங்கள் வசப்படுத்திக்கொண்டீர்கள். என்பிள்ளைகளை நோக்கிப் பொசித்தீர்களா இல்லையா என்று கேட்பாரே கிடையாது. இதற்குத்தானா நான் பெண்ணாய்ப்பிறந்து உம்மைக் கட்டிக்கொள்ள பிரமன் விதித்தது? என்னைப்போன்ற படுபாவி இவ்வுலகில் கிடைப்பதே யருமை. மனைவியானவள் பிள்ளைகளை வைத்துக்கொண்டு சிரமப்படுகிறாளே அவளுக்குச் சற்றாகிலுஞ் சகாயஞ் செய்வோமென்று கிஞ்சித்தாகிலும் இரக்கமில்லாமற்போய் விட்டதே! வெளியார் மகிழ மகிழ ஓடியோடி வீண்பாடுபட்டு வரு

கின்றீரே; உமது தேகத்திற்கு ஏதேனுங் கெடுதலை சம்பவித்தால் அவர்களெல்லாருங் காப்பாற்றுவார்களா? விடிந்த மூன்று ஜாமம் வரையில் உம்மிடம் வேலைவாங்கிக்கொண்டு கடைசியில் போசிக்கிறீரா என்றாகிலுங் கேட்கின்றார்களா? இப்பேர்ப்பட்ட லுத்தருக்குக் கஷ்டப்பட்டு வருகின்றீர். இனி நீருண்பதெப்போழ்து அதன்பின் நான் புசிப்பதெப்போழ்து? உம்முடைய கௌரவங்களையெல்லாம் எங்கொளித்து வைத்தீர்? தூங்குகின்றவர்களை யெழுப்பலாம் முழித்திருப்பவர்களை யெழுப்பமுடியாது. உம்மிடமிப்போது வேலைபெறுமவர்கள் முடிவில் எந்தநரகத்தை யடைவார்களோ அறியேன்! என்று ஆற்றப்படாத் துயர்கொண்டு, கடினமான மனமுடையவராய் ஜீஜா சொல்லி; கால்கைகளைச் சுத்திசெய்துகொள்ள ஜலமீந்து, ரொட்டியையுங் கீரையையும் வட்டித்தார். அவைகளை பகவற்குணநிஷ்டர் அருந்தியானவுடன் அவரை நோக்கி, நாளைய திநம் உமது பிதுர்க்களுக்குச் சிரார்த்தம் அளிக்கவேண்டியதாகையால் வீட்டில் ஒருபண்டமுமில்லை; எப்படி சிரார்த்தகருமம் நடத்துவீரோ அறியேன் என்றுசொன்ன மனையாட்டியைப் பார்த்து, நீயுரைத்தவையெல்லாஞ் சத்தியமே; நானுதித்த லக்கினத்தின்பலன் அதுவாகவிருக்க நீஊராரைநோக்கி கலங்குவதில் என்னபயன்; பிதுர்க்கடனைக் கஷ்டப்பட்டாகிலும் நடத்தவேண்டும்; எதைவிட்டாலும் இதை விடலாகாது; கிருகத்தில் சாமக்கிரியைகளில்லையென்று எனக்குந் தெரியும்; மலையளவு தெய்வத்திற்கு பனியளவு சாம்பிராணியாவது இடவேண்டும்; இதைவிட்டால் தாநமுமற்று, தருமமுமற்று, குடும்பத்தில்சிறுவர் முதலானோருக்கெல்லாம் துன்பங்கள் விளையும்; குலதெய்வங்கள் நமதகத்தில் தங்கா; பேய்களுலாவும்; இதற்கென்ன செய்யலாம்? நாளை உதயத்திற்கு எழுந்திருந்து வீடுவாசல்களைச் சுத்திசெய்து, பிள்ளைகளை யிட்டுக்கொண்டுபோய் இந்திராயணியில் நீராட்டி, நீயும் ஸ்நானஞ்செய்துவந்து வீட்டிலிருக்கும் குலதெய்வங்களுக்கு அபிஷேகஞ்செய்து தயாராயிருப்பாயாகில் நான் சீக்கிரமாக வநங்களிற் சென்று கீரைகளைப் பறித்துக்கொண்டு வருகின்றேன். அவைகளைச் சமைத்து ஆராதிக்கலாம் என்றுரைத்து, தாஸர் விடியற்காலை யெழுந்துபோவது எவ்வாறிருந்ததென்றால்,—இருளில் வழிநடக்குமொருவன் எதிர்ப்பட்டவனை நோக்கி, கருநாயைக் கண்டீரா? என்று கேட்க, அவன் கானவில்லையென்று சொல்வதுபோல் இவர் காமாந்தகாரத்தைக் களைந்து, ஸ்ரீ ஹரியென்னும் ஞானசொரூபநிலையில் வசிக்கிற இவருக்குக் குடும்பமென்றுஞ் சிறுவர்களென்றும், வேற்றுமையேது? எவையும் இறைவனுடைத்திருவுருவங்களென அமைக்

கப்பெற்று, தந்தேகமுந் தமக்குத்தெரியாமல், சங்கற்பங்கள்யாவும் பிரணவமாய் விளங்கக்கண்ட சுத்தசத்துவ பக்தருக்குக் கிரியாதி கருமங்கள்யாவும் சுத்தங்களாகவேயிருக்கும். சுத்தமென்றும் அசுத்தமென்றும் மருள்கொண்டவர்களுக்கல்லவா எல்லா சுதந்திரங்களும் உண்டாவது?

இதுநிற்க, ஜிதேந்திரரில் தலையாகும் இந்தத் துக்காராமஸ்வாமிகள் இல்லம்விட்டு விடியற்காலை யெழுந்து வநத்திற்குப் போகும்போது ஹரிநாம ஸங்கீர்த்தநங்களைப்பாடி, தாமென்னும் அகப்பற்றும், பிறரென்னும் புறப்பற்று மற்று பஜித்துக்கொண்டு போகாநிற்கையில் அவ்வநத்தில் ஓர்புறம் கோதுமை அறுப்புச்செய்துகொண்டிருந்தார்கள். அந்தவிடத்திலிவர் பஜனைபாடிக்கொண் டிருக்கும்போது அந்நிலத்தையுடையவன் இவரைப்பார்த்து, ஐயா! அநந்தம் பேர் கோதுமை யறுத்துக்கொண்டிருக்கின்றார்கள்; நீரும் அவர்களோடு கலந்து அறுப்பீராகில் கிருகத்திற்கு உதவ கோதுமை தருவேன் என்ன, இவர் பிறர்மொழியா முன்னமே தேகசகாயஞ்செய்யும் இயல்பினராதலால் கோதுமையறுக்க ஆரம்பித்தார்.

இவரிங்ஙனிருக்க, சருவஜீவ தயாபர மூர்த்தியாகிய ஜநார்த்தநன், நமதன்பனாகிய துக்காராம்பிதுர்க்கடன் முடிப்பதற்காகக் கிரைகொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டுவந்து இங்கே கோதுமையறுக்கத் தலைப்பட்டான். இந்தச்சமையத்திலும் நம்மை மறவாமலேயே பஜித்துக்கொண்டிருக்கிறான்; இவனுடைய பிதுர்க்கடனை நாமேபோய் நிறைவேற்றவேண்டும் என்று திருவுள்ளத்தில் நினைத்து, துக்காவைப்போல் வேடம்பூண்டு, பெரியமூட்டை யொன்று சிரசின்மீதேற்றி, கழுத்தும் முதுகும் வளையமிடச் சுமந்துகொண்டு, அவ்வூர் ஜநங்கள்காண வீதிவீதியாகக்கடந்து துக்காவின் மாளிகைக்கெதிரில் வந்துநின்று, முழங்காலின்மீது மூட்டையை யிறக்கிக்கொண்டு, தள்ளாட்டத்துடன் மூட்டையைவீட்டிற்குள்கொண்டுவந்து இறக்கிவைத்து, தான் சோர்ந்தவன்போல் நடித்துக்காட்டி, வீற்றிருந்தான். ஜீஜாபாயம்மாள் தம்நாயகர் கொண்டுவந்த மூட்டையைப்பார்த்து ஆச்சரியமுற்று, ஈதென்னபெருமூட்டையாயிருக்கின்றது? என்று வஸ்திரத்தை விலக்கிப்பார்க்க, அதில் அறுசுவைக்குரிய பதார்த்தங்கள் இருக்கக்கண்டு ஆநந்தங் கொண்டு, நமது காதலர் திநதிநம் இவ்வூராரிட்ட வேலைகளைச் செய்துவருகின்றாராதலால் எந்தச் சௌகாரிடமோபோய் இன்று பிதுர்ச்சிரார்த்தமென்று சொல்லிக்கொள்ள அவர் வேண்டியவற்றை வாங்கிக் கொடுத்திருக்க வேண்டும். இனி கரியனுடைய பயித்யம் நம்நாயகரைவிட்டு நீங்

கிப்போகும்; குடும்பத்தின்மீது இச்சைபிறந்தது; இனி இவமிரவ்வாறிருப்பரோ பார்க்கவேண்டுமென்று மநம்பூரித்தவராய், மூட்டையையவிழ்த்து, அந்தந்த இனச்சாமான்களை வெவ்வேறு பிரித்துக்கொண்டிருக்கையில், பக்தருடைய வேடம்பூண்ட பக்தபராதீநன் ஜீஜாவைப் பார்த்து, இன்று நம்முறவினர்க்கும் அன்னியர்க்கும் போஜநமளிக்கவேண்டும். சமையல்செய்ய பித்தளைச்சாமான்கள் வேண்டியதாகையால் அவ்வவர்களுடைய வீடுகளுக்குப்போய் வேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு வருகின்றேன் என்றுபுறப்பட்டு, வீடுவீடாய் நுழைந்து வேண்டிய பாத்திரங்களை வாங்கிக்கொண்டு, அவர்கட்கெல்லாம், இன்று எங்கள் பிதுர்க்களுக்குச் சிரார்த்தமாகையால் நீங்களெல்லாரும் போஜநத்திற்கு எங்கள் வீட்டிற்கு வரவேண்டுமென்று தக்க மரியாதைகளுடனே விருந்துசொல்லி, பாத்திரங்களைச் சிரசின்மீதும், முதுகின்மீதும், தோளின்மீதும், கைகளிலும் எடுத்துக்கொண்டுவந்து ஜீஜாவிடஞ் சேர்ப்பிக்க, அவ்வம்மையும் சந்தோஷ சித்தத்துடன் பாத்திரசாமான்களைச் சுத்திசெய்து, நல்லறுசுவை பதார்த்தங்களையுஞ் சுத்தபாகமாகச் சமைத்துவைத்தார். அவ்வளவில், துக்காராம் ஸ்வாமிபோன்ற திருவுருவுடனெழுந்தருளி தனது நீர்மை காட்டாநிற்குந் தொல்புகழ் வானவரீசனுகும் இருடீகேசன் மறுபடியும் வீடுவீடாய்ச்சென்று அதிவந்தநங்களுடன் உறவினரைத் தன்மாளிகைக்கு வரச்செய்து, தானும் இந்திராயணிக்கேகி நீராட்டமுடித்துக்கொண்டு, திருநாமங்களைச் சாத்தி, மடிகட்டிக்கொண்டு, தன்வீடடைந்து, பௌரோகிதரை வரவழைத்து அவருக்கு வந்தநாதிகளியற்றி, ஆசநமளித்து, தானுமெதிரில் உட்கார்ந்துகொண்டு கணநாதர் பூசைமுடித்து, ஓமம் வளர்த்தி அக்கிநிபகவானுக்கும் நவநாயகர்களுக்கும் ஆகுதிகளீந்து, லக்ஷ்மீநாராயணனுக்கும் வந்தநங்கள்செய்து, பிதுரர்ப்பணஞ்செய்து, விரதம் வைத்திருந்த தன்னினத்தாருடைய அடிகளுக்குப் பூசனைபுரிந்து, தூபதீப நைவேத்தியங்களைச் சமர்ப்பித்து, அந்தப் பாதங்களிவிட்ட புஷ்பங்களைத்தான் சிரசில் தரித்துக்கொண்டு, அவர்களுக்கெல்லாம் தீர்க்க நமஸ்காரங்கள்செய்து, அவ்வவர்கள் ஆசீர்வதித்துப்போட்ட அக்ஷதைகளைச் சிரத்திலேற்று, புரோகிதருக்கும் வந்தநாதிகளியற்றி, சருவவுபசாரங்களுடனே அவரைப்போகவிட்டு, ஸ்தளசுத்திசெய்து, வாழையிலைகளைப் பரப்பி, பலகார வகைகளையும்பதார்த்த வகைகளையுந் தானேயெடுத்துக்கொண்டுவந்து வட்டித்து, ஹரிவிட்டல நாமத்தை எல்லாரும் பஜிக்குமாறு செய்து அவர்களை யுண்ணச்செய்ய, விருந்தினரும் ஒவ்வொரு பதார்த்தமாக வுண்கையில்

ஒவ்வொரு பதார்த்தமும் தேவாமிர்தமாக இருப்பதைக்கண்டு ஆச்சரியமுற்று இந்த ஜீஜா கோடீசுவரன் மகளாதலால் தன் தந்தை மாளிகையின் அநுபவத்தால்இங்ஙுந் தேவபாகஞ் செய்துவைத்தாள். இவ்வளவு ருசியமைந்த ஆகாரம் நாமெப்போதும் உண்டறியோம்! என்று பேசிக்கொண்டு அதியாவலோடு உண்டு, நீரருந்தி, கைகால்களைச் சுத்திசெய்துகொள்ளக் கொடுக்கப்பெற்ற ஜலத்தால் சுத்திசெய்துகொள்ள; தாஸர் உருவினனாகுந் தசரதசுதனும் அவர்களுக்கு ஆசநமிட்டு உட்காரவைத்து, சந்தந - புஷ்ப - தாம்பூலாதிகளைக் கொடுத்து உபசரித்து தனது கைகளால் வாசனைதங்கிய வெட்டிவேர் விசிரிகொண்டு அவர்களுக்கு விசிரி உண்ட இளைப்பாற்றி அவர்களைப் போகவிட, அவர்களெல்லாரும் போகும்போது ஜயஜயவிட்டலா! என்று விட்டலநாம சங்கீர்த்தன பரர்களாய்ப்போகத் தலைப்பட்டு, வழியில் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளுவதாவது—இந்தத்துக்காராம் இன்று நமக்குச் செய்துவைத்த விருந்துபோல் அரசர் வீடுகளிலும் நடவாது நடந்துமிராது. இவ்வளவு இன்பமான சாப்பாடுகளை யருந்துவதால் தான் தேகமிளைக்காமல் கல்லுருண்டையைப்போல் இராநின்றான். வெளியாருக்குப் பஞ்சைவேஷங்காட்டி உள்ளுக்குள் நல்லுணவு உண்கின்றான் எங்கேயோ பெருத்தநிதியைக் களவாடித் தன் பெண்சாதியிடங்கொடுத்துப் பத்திரப்படுத்திவைத்துக்கொண்டு தான் பகவத் பக்தன்போல் ராம - கிருஷ்ண கோவிந்தா என்று மிரட்சி காட்டுகின்றான்! என்று சிலரும், அவன் வீட்டு போஜநத்தையுண்டு அவனையே தீயனென்று பழிப்பது நீதியல்லவென்று சிலருமாய்ப் பேசிக்கொண்டு தங்கள் தங்கள் அகங்களுக்குப் போய்விட்டார்கள்.

அதன்பின் ஆவலியம்மாள் வீதியில் யாசித்துக்கொண்டிருந்த யாசகர்களுக்கெல்லாந் தக்கவாறு திருப்தியாக அந்நமளித்தும் சாதம் குறைவுபடாமல் வடித்த அளவிலேதானே யிருப்பதைக்கண்டு அதிசயங்கொண்டு, நங்குலதெய்வத்தின் செயலாக்கும் இப்படி அந்நமானது குறையாமல் வளர்ந்துவருவது என்று பிரமையடைந்திருக்க ஜகன்மோகநாகாரனாகிய ஜாநகீரமணன், வீடுகள்தோறும் நுழைந்து அடிசில் சமையலுக்காகத் தானிரவல் வாங்கிவந்த பித்தளைச் சாமான்களையெல்லாங் கொண்டுபோய் இந்திராயணி நதிக்கரையில் வைத்துத் தேய்த்துச் சுத்திபண்ணி யாவர் யாவர் எந்தெந்தசாமான்களைக் கொடுத்தார்களோ அவ்வவர்களுக்கு அந்தந்தச் சாமான்களைச் சேர்த்துவிட்டுத் தன்சந்நிதாநத்துக்கு எழுந்தருளிவிட்டான். இங்கு ஜீஜாபாயம்மாள், சூரியன் அஸ்தமித்தமையால் திருவிளக்கேற்றி

வைத்துக்கொண்டு, பாத்திரங்களைச் சுத்திபண்ணி, கொடுத்தவர்களுக்குக் கொடுத்துவரச்சென்ற தம் புருஷனுடைய வரவுக்கெதிர் பார்த்துக் கொண்டிருந்தார்.

இஃதிங்ஙனிருக்க, வைஷ்ணவோத்தமராகிய நிஜவடியார், தாம் கோதுமை யறுத்துக்கொண்டிருந்து சூரியன் அஷ்தமித்தவுடனே இருள்மூட அறுப்பை நிறுத்திவிடலும், அப்பயிருக்குத் தலைவன் இவர்பட்ட கஷ்டத்திற்கிரங்கி கோதுமையைப் பெருஞ்சுமையாகக் கட்டி அவர் சிரசின்பேரில் தூக்கிவைக்க, தாஸரும் அந்தச் சுமையைத் தூக்கிக்கொண்டு பளுவிறுகுவதைக்கண்டு இதுதான் பிதுர்க்கடன் என்றுள்ளத்திலெண்ணிச் சுமந்துகொண்டு வந்து மாளிகை வாய்வில் நுழையும்போது வாசல்பட்டு அம்மூட்டையிலிருந்து எண்ணறுங் கொசுகுகள் எழும்பி, தாஸருடைய திருமேனியெங்கும் மொய்த்துக்கொண்டு ரத்தங்குடிக்கத் தலைப்பட்டன, அப்போது தாஸரானவர் கொசுகுகளைப்பார்த்து. பிதுர்க்களே அவசரப்படாமல் என்னுடைய ரத்தத்தை சாவதானமாய் உறிஞ்சுங்கள்! என்றுரைத்து, அசைவற நின்றிருந்தார். இப்படி பரமேகாந்தியாகிய தாஸர், சுத்த சத்துவாத்துமகராய்க்கொண்டு கொசுக்கூட்டத்துக்குத்தம்மிரத்தத்தை விருந்தாக்கிச் சலநமில்லாமல் நிற்பதை ஸ்ரீவேங்கடேசுவரமூர்த்தியறிந்து, அக்கொசுகுகளை விலக்கவருளினன். கொசுகினமும் மாயமாய்ப் போய்விட்டது பிறகு பிரபக்நர் தாம் கொண்டுவந்த கோதுமைமூட்டையை வாயலினின்றும் இழுத்துக்கொண்டுவந்து, ஜீஜாவைப்பார்த்து, பிதுர்ப் பூஜைபண்ண கோதுமைச்சுமை கொண்டுவந்தேன்! இதைத் தட்டியெடுத்து மாவரைத்துப் பிதுர்க்கடனை முடித்துவை என்றுஞ்ஞாபிக்க, ஜீஜாவுமவ்வுரைகேட்டு, ஈதென்ன மாயமாயிராநின்றது? காலைமுதல் இதுவரையிலும் இங்கிருந்து வேண்டிய சாமான்களைத் தாமே தூக்கிக்கொண்டுவந்து கொடுத்து, பிதுர்க்கடனுக்கு வேண்டிய கிரியைகளை முடித்துவைத்து, உறவினருக்குந் தங்கையால் அந்நமளித்து, சமையலுக்காகத் தாமே வீடுவீடாய் நுழைந்து கொண்டுவந்த பாத்திரசாமான்களைச் சோதித்து அவ்வவர்களுக்கு கொடுப்பதற்காக அவற்றையெடுத்துக்கொண்டு ஆற்றங்கரைக்குப்போய் சுத்திசெய்து, அவரவர்கள் சாமான்களை அவரவர்களுக்குக் கொடுத்துவிட்டு எங்கு யாரோ உபகாரார்த்தம் தந்த கோதுமையைத் தூக்கிக் கொண்டுவந்துபோட்டு மறுபடியும் பிதுர்க்கடன் முடித்துவையென்று பரிகாசமாகச் சொல்லுகின்றார்; இது மிக்க ஆச்சரியமாயிருக்கின்றது. இவர் தமக்கு வாய்த்த கரியன் பேரிலிருந்த பைத்தியம் நீங்கிக் குடும்பதருமத்தில் இழிந்திருக்

கின்றுமென்று நாம் மனமகிழ்ச்சியோடு சந்தோஷித்தோமே; அப்படி யடைந்த நம்முடைய சந்தோஷம் வீணென்றே காணவருகிறது. இவரைப் பிடித்திருக்கும் பயித்தியத்தை விலக்க யாவரால் முடியப் போகிறது? என் குலதெய்வத்தாலும் ஆயிற்றில்லையே! என்று சொல்லுவதை யுற்றுநோக்கிய தாஸர், இவ்வீட்டில் நுழையும் போது சுகந்த பரிமளங்கள் வீசப்பட்டன; தீபாலங்காரமுஞ் செய் யப்பட்டிருக்கிறது; வண்டகச்சாலையில் பல பதார்த்தங்களையுந் தட்டு களில்சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் சவிஸ்தாரம் அறியவேண்டுமென்று தம்மனையாட்டியைக் கேட்க, அவரும் நடந்த விருத்தாந்தங்கள் யாவும் உரைக்கக்கேட்டு, கண்களினின்று ஆநந்த அருவி பெருகியோட, மயிர்க்கூர்ச்செறிய, மெய்புளகிக்க, ஹரி ஹரீ! பண்டரிநாதா! புருஷோத்தமா! புண்டரீகவரதா! பாவியேனைப் போன்ற உருக்கொண்டு இவ்வல்பன் மனைக்கெழுந்தருளி, சாமக்கிரி யைகளைச் சுமந்து கொண்டுவந்துபோட்டு, சுற்றங்களைத் தழுவி, பிதுர்க்கடனை நடத்தி, எல்லாருடைய திருவடிகளுக்கும் பூசனைபுரி ந்து, அவ்வெல்லாருக்கும் நின்மலர்போன்ற திருக்கைகளால் அந்நம் பரிமாறி, சந்தந புஷ்ப தாம்பூலாதிகளளித்து, விசிறிக்கொண்டுசைத் தியோபசாரமுஞ் செய்து, அவர்களுக்கெல்லாம் வந்தந நமஸ்காரங்க ளுஞ் செய்தனுப்பினீர். இத்திருவவதார வைபவமதனைத் தீயனேன் தரிசிக்கப் பிராப்தனல்லனோ? ஜீஜாவும் அவள் குழந்தைகளும் சுற் றத்தாருஞ்செய்த புண்ணியம் யான்செய்தறியேனோ? அடியேன் இவ்வளவு கருமமுடையேனோ? அவர்களையெல்லாம் நின்னெழில்வர வால் தாஸியப்படுத்திக்கொண்டதுபோல என்னையும் தாஸியனுக்கிக் கொள்ளலாகாதா? யான் நின் தாஸனுதற்குப் பாத்திரவானல்லவா? உனது நல்லடியார்கள் உன்னைநோக்கி நான் தாஸனுகமாட்டேன் என் றேதாவது கோள்சொன்னார்களா? அல்லது என்னைத் தாஸனுக்க வேண்டாமென்று தடுத்தார்களா? நான் எந்த ஜன்மத்தில் உனக்கினி தாஸனுவது ஹரீ! மாதவா! கிருஷ்ணு! மதுசூதா! கோவிந்தா! கோபிகாரமணு! கோபகுலதிலகா! உன்னைக் கண்களாரக்கண்டு தரி சிப்பதற்கு, தேவ - கின்னர - கருட - காந்தருவ - சித்த-வித்தியா தரர்களும், இருடிகளும், யோகிகளும் அநந்த கற்பகாலம் அருந் தவங்கள்செய்தும் அவர்களுக்குங் காட்சியாகாத் தரிசனைதந்து, மலர் புரையுந் திருவடி யடியேனது குடில்மேவ அநுக்கிரகித்தமை என்ன அதிசயம்? பிரமனைப் பயந்தெடுத்த பெருந்தேவனே! பேய்ச்சிமுலை யுண்ட பெம்மானே! நரகரிசொரூபனே! நடநவொய்யாரனே! நளின பாதனே! நாரணு! நாதனுதனே! உனக்கும் உன்னடிமலர் பத்திமை

செய் அடியார்க்கும் பல்வகை வந்தனங்கள் தந்தனன் என்றுஇரண்டு கரங்களையுஞ் சிரமிசைகூப்பி, பரவசமடைந்தவரா யிருக்கும்போது ருக்குமணீ மனோகரன் முடியிற் கிரீடந்துலங்க, புஜங்களிற் புஜாபரணங்கள் விளங்க, காதிற் குண்டலந்தொங்க, கழுத்தில் கௌஸ்துவாபரணம் வநமாலைகள்மின்ன, புன்னகையோடு துக்காராமர் முன்னேன்றி அவர் மார்பில் தன்மார்புபடத் தழுவி கட்டிக்கொண்டு, நீ நடத்தும் அலுவலை நான்நடத்தினேன்; இதற்காக நீர் கிலேசிப்பானேன்? வாரும் இருவருஞ் சாப்பிடுவோம் என்று தாஸர் கையைப் பிடித்து ஆசநத்திலுட்கார்த்தி தானுமுட்கார்ந்து, ஜீஜாபாயம்மாளை யழைத்து இருவருக்கும் அந்நம் பரிமாறும்படி திவ்வியாஞ்ஞையிட, அவ்வம்மையும் அதிசயாநந்தங்களைக்கொண்டு தேகம்நடுங்கப்பெற்று சுவாமிக்கும் தமதுநாயகருக்குந் திருவடி திருக்கைகள் சோதித்துக் கொள்ள தீர்த்தமளித்து, ஸ்தளசுத்திபண்ணி, வாழையிலைகளைப்பரப்பி, பலகார பதார்த்தவகைகளோடு அந்நம்வட்டித்து, அவ்விருகாருணீகர்களையும் உட்காரவைத்து உண்ணச்செய்து, தாமருகிலிருந்து உபசரித்து, உண்டிமுடிந்தபின் வேறு ஆசநங்களையளித்து, சந்தந புஷ்ப தாம்பூலாதிகளைச் சமர்ப்பிக்க, அவற்றையெல்லாம் பரமபோக்கியமாக அணிந்து ஸருவேசுவரன் மறைந்தருளினன்.

நளிநாஸநத்தால் நாதனுகும் நாராயணனது நளிநபாதங்களை நல்லிதயத்து நண்ணி, நல்லிரவும்பகலும் நட்டமிட்டுக்கொண்டாடும் நல்லஞானியர்க்கு, இந்த பக்தலீலாமிர்தம் ஞானபக்தி சிரத்தைகள் அமைந்ததோர் தடாகமாகும்; இத்தடாகத்தில் ஸ்ரீமத் துக்கா என்னுந் தாமரைத்தோன்றி, ஸ்ரீமந்நாராயணனுகும் சூரியனது தேஜஸ்ஸு கொஞ்சங்கொஞ்சம் பட்டுவர சொல்பசொல்பமாக மலர்ந்து கொண்டு வராநின்றது. அதினுடைய விரிவு பூரணமானபோது ரசமானது பெருக்கெடுத்தோடாநிற்கும். அப்போது சுரும்பினங்கள் போல்வராகிய ஸஜ்ஜநர்க்குத் தெவிட்டா உண்ணரும் அமுதமாகும். அவ்வுணவை ஆநிரைமேய்த்த அச்சுதனநந்தன் அதிசீக்கிரமா யுண்ணச்செய்வான்.

எட்டாமத்தியாயம் முற்றும்.

ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகள் திருவடிகளே சரணம்.



([illegible] எருமை செடிகளை மேய்கிறது)

அக்கானை [illegible]

ஸ்ரீ

ஸ்ரீ பாண்டுரங்கபரப்ரஹ்மணேநம:

ஸ்ரீமத்

துக்காராம் சுவாமிகள் சரித்திரம்.

ஒன்பதாமத்தியாயம்.

காப்பு.

தொண்டர்நற்சரிதந் - தொல்வினையேன்புந்தியுறப்
பண்டரீபுரத்தடிகள் - பதமலரைப்பணிகுதுமே.

ஸ்தோத்திரங்கள்.

அஞ்ஞான அந்தகாரங்களினின்று நீங்கப்பெறு நான் பாலியன்; குழந்தைகளின் குதலைச்சொற்களைக்கேட்டு மாதாபிதாக்கள் அக மகிழ்வதுபோல் நாயேன் எதித்தலைவராகிய ஸ்ரீமத்துக்காராம் ஸ்வாமிகளது எண்ணறு நற்குண கீர்த்திகளைச் சரித்திரமாயமைத்துவைக்கக் காதல்கொண்டு, அடியேனது அறிவீனத்தால் எத்தகைய குழறுபாடுகள் குழறினபோதிலும் அவைகளை யங்கீகரித்து, அச்சுதனுக்கும் அவனடியார்க்கும் ஆட்படுத்துவீர்களெனப் பிரார்த்திக்கின்றனன்.

முன், சருவேசுவரன் துக்காஜவப்போல் உருவெடுத்துவந்து, பிதுர்க்கடனை முடித்து, உறவினருக்கு நல்லுபசாரங்களுடன் உணவீந்து மறைந்தருளியும், மறுபடியும், இவ்வதிசயங்களைக்கேட்ட துக்காராமருடைய பிரார்த்தனைக்கிரங்கி தன்னிஜரூபத்துடன் ஸேவை

தந்து, ஜீஜாபாயுபசரித்த உபசாரங்களைப் பெற்று, தாஸருடன் அந்முண்டுகளித்து மறைந்தருளினமை உசிதமாகுமன்றோ? அநந்தரம், தமக்காக தாசரியானவன் திருமேனிநோக, படாதன பட்டமையை நினைந்து நினைந்துள்ளுருகி, சோர்வுறு மனத்தராய், விடியற்காலை யெழுந்து இந்திராயணிக்கேகி, ஸ்நானமுடித்து, திருமண்காப்பணிந்து, சந்நிதானத்திற்குள்சென்று, ஹரிபரந்தாமா! அச்சுதா! அப்பிரமேயா! என்று பஜித்துநின்று. பச்சைவண்ணா! பங்கயக்கண்ணா! ஆதிகேசவா! பாண்டுநாமதேவன் புத்திரர் உபவாசியாயிருப்பதையறிந்து, கேசவசெட்டியாக ரூபங்கொண்டு ராஜாபாயிடம்போய் தக்க விராகன் அளித்தனையன்றோ! ஜாதிகுலங்களை நோக்குறாமல் புலையனுகுஞ் சௌகாமேளனுடனுண்டு, அவனோடு மாட்டை யுரித்தனையல்லவா! கியானதேவ சுவாமிகள் பேரிலிருந்த பிரீதியினால் அவர்வீற்றிருந்த கட்டைச்சுவரினைக் குதிரைபோல் நடக்கச் செய்தனையன்றோ! பண்டரீபுரத்தில் தாசிலாகவிருந்த தாமாஜீபந்து என்பவர், பஞ்சத்தில் ஜனங்கள் அன்னத்திற்கலைந்து நைவதைக்கண்டு, தாசில்தார் சர்க்கார் தானியங்களை யேழைகளுக்குப் பங்கிட்டுக்கொடுத்துவிட அதனையறிந்த சர்க்கார், தங்களை நஷ்டப்படுத்தினதற்காக தாமாஜி பந்துவை பந்தீகானாவிலடைக்க, அப்போது நீ தோடிவேடம் பூண்டு, பணமுடிப்பை யேந்திக்கொண்டுபோய் அரசனுடைய கடன் தீர்த்து தாமாஜியை மீட்பிக்கவில்லையா! இராஜப்பெண்ணாகிய மீராபாய், உன்னையல்லால் பிறரை மணம்புரியேன் என்று உன்மீதில் தானே யேக்கங்கொண்டிருக்க, அவளது தந்தை கோபங்கொண்டு அவளைக் கொல்லத்துணிந்து விஷமூட்டியபோது, அவ்விஷத்தை யுண்ட மீராபாயம்மாளை நீ காக்கவில்லையா! வைஷ்ணவ திலகராகிய நரசிம்ம மகந்துக்காக உண்டிக்குப் பொருள்கொண்டுவந்து சேர்க்கவில்லையா! இவ்வளவு எளிவரவுடைய உன்னுடையபிரபாவங்களை வர்ணிக்க என்னால் கூடுமோ! உன்னுடைய பெருமைவாய்ந்த பக்தர்களுக்குமுன் நானெவ்வளவு? அதியல்பன், மூடன், மூர்க்கன்; ஆயினும் உன்னுடைய பிரேமையையே யிச்சியாநின்றேன் அல்லது பிறிதொன்றை யிச்சிப்பவனல்லன்; அரி கரி! அநந்தசயனா! ஆபற்பாந்தவா என்று இரண்டுகண்களினும் இருந்து நீரைத் தாரைதாரையாகப்பெருக்கித் துதித்துநின்ற துல்லிய சீலரை நோக்கி துளவநன்மாலையான், ஏ! துக்கா! நீ ஒன்றிற்கும் யஞ்சாதே! உனதுஎண்ணத்தில் உண்டாகும் எல்லாவற்றையும் உசிதமாய் முடித்துவைப்பேன்; விசனமுறாதே என்று அபயப்பிரதானம் ஈந்தருளினான். அப்படி ஈந்த அபயப் பிரதானமானது எவ்வாறிருந்ததென்றால்;—தேவனென்னும்

பக்தினென்றும் இல்லாமல், தானே யாவுமாய் நிறைந்து, துக்கா என்னுந் திவ்வியநாமமேற்று, தாஸர்கள் கடைத்தேறுநிமித்தம்வந்த அவதாரதுல்லியரானதால்தனக்குத்தானேயிந்துகொண்டாதாயிருந்தது.

எத்தகைய புருஷனேனும் ஸ்திரீகளின்மீது மோகங்கொள்ளுவானாயின் காமதுரந்தரனாய் மடலூருவது இயல்பாகையால், அதுபோல் இம்மெய்யடியாருடைய காமாதுரப்பட்ட உள்ளமானது ஸ்ரீ பாண்டுரங்கநாதனைச் சற்றுமகலவிடாதுபதிந்து,“காதலர் தொடுவுழி தொடுவுழி நீங்கி விடுவுழி விடுவுழி பயத்தலானேன்” என்று சங்கத்தாரும்,“புல்லிக்கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில், அள்ளிக்கொண்டற்றே பயிர்ப்பு” என்று நாயனாருங் கூறிப் போந்தபடி, அவனை மனத்தினின்று புடைபெயர்ந்த அந்நாழிகை பல்லுகங்களாயெண்ணி அச்சமேற்று, உலக வியாபாரங்களில் ஊன்றியநடை, ஸ்திரீகள் குடத்தில் ஜலந்திரட்டி தலைகளின்பேரில் தூக்கிக்கொண்டு கைகளையசைத்துக் கூடவந்த மாதரோடு பேசிக்கொண்டு வரினும் மநமானது குடத்தின்மீதில்தானே நோக்குவைத்திருப்பதுபோலே அமைந்த அவ்வருஞ்செயலால், தமது எண்பதுகோடி சங்கற்பங்களும்தயாபரமூர்த்தியின் பக்கல் தங்கவைத்துத் திகழுதலாலே விடலதேவன் இவருக்கு பகவானென்றும், விடலனுக்கிவர் பாலனென்றும், பெருமைசிறுமைகள் தோன்றுவியாமல் தானும் ருக்குமணியும் தாய் தந்தையர் போன்றே உரியனாயினன். இவரும், தாநம் - தருமம் - பரம் - உபகாரம் என்னும் நான்கு அமிசங்களையும் விடாமல்,பிறருக்குத் தந்தேகத்தாலாகும் உபகாரங்களைச் செய்தலே பெருந்தவமென்றுன்னி நடந்தமையாலே பெம்மானுக்கும் பெருந்தேவிக்கும் உரியவராயினர். உடல் - பொருள் - ஆவிகளாலும் சாக்கிரம்-சொப்பநம்-சுஷுப்திகளாகும் மூன்றவஸ்தைகளிலும் தத்தேகநிஷ்டாபாராய், ஆடிமாத கார்த்திகைளில் வார்க்கரி பிருதுபூண்டு, ஸ்ரீ பண்டரீபுரத்துக்கு யாத்திரைசென்று, சுவாமி விடலனையும், அங்குவரும் பெரியோர்களையுஞ் சேவித்து, ஆசீர்வாதங்களைப் பெற்றுவந்து மாளிகையடைந்து, சற்கிரியைகளை விடாமல், குலாசார தருமங்கள் வழுவுறுமல் நடந்துவருவதால் பார்க்குமவர்கட்கெல்லாம் மதிப்பற்று, மத்தரைப்போலவும்,பித்தரைப்போலவும்,பேயரைப்போலவும், பாலரைப்போலவுந் தோன்றப்படுவார். இவர் ஸந்நிதாநத்திற்சென்று கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டிருப்பாராகில் அவ்விசைக்கு மயங்கி எழுவகைத்தோற்றமும் உருகினமனத்தவாய், மநமாதி அந்தக்கரணங்களில் சலநம் சற்றுமில்லாமல் தம்பாகாரமாய் ஒருமித்து நின்று, ஹரி விட்டலா! என்கிற வொலியால் ஆகாயத்தை யண்ணுந்து பார்த்த

வண்ணமே யிருந்து, பார்த்தவையாவும் விட்டலரூபமாகவே விளங்கப்பெறும். இத்தொண்டர் நித்தநித்தம்ஸந்நிதானத்திற்கெழுந்தருளி கீர்த்தனைகளைப் பாடிவருவதால் இவ்வித ஆநந்தம் விளைவதைப்பற்றி, அவ்வூரில் வசிக்கும் பிரம-க்ஷத்திரிய - வைசிய - சூத்திரர்களாகும் நான்கு வருணத்தாரிலும் குழந்தைகள்முதல் விருதாப்பியரீறாகவுள்ளாரில் எல்லோரும், சூரியன் அஸ்தமிக்கிற ஐந்து நாழிகைக்குமேல் ஸந்நிதி வந்தடைந்து, கீர்த்தனைச் சாராமிர்தத்தைப் பாநம் பண்ணிக்கொண்டிருந்து, விடியற்காலை மூன்றுமணிக்கு மங்களார்த்தி நடக்குமதைச் சேவித்து, பிறகு தங்கள் தங்கள் வீடுகளுக்குப் போவார்கள். தாஸரோ நித்திரையும் சோம்பலும் அறத்துறந்தவராகையால் விடிகிறபரியந்தம் இராமநாமத்தைத் துதித்துக்கொண்டேயிருப்பார்.

இந்தக் கிரந்தகர்த்தாவைச் சிலர்நோக்கி, ஐயா! வைணவவாக்கிரேசர் விதேகபரராய், ஆரூடநிலைசவாயத்தவராயிருக்கஇவருக்குப் பரோபகாரத்தாலாகும்பயனென்ன? இதனைவிளங்கவுரைக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, அவர்களைப் பார்த்து கிரந்த கர்த்தா சொல்லத் தொடங்குகிறார்:—

நிராசை, தவம், பொறுமை, கிருபை, சந்தோஷம், வாய்மை, அறிவு, அடக்கம் என்னும் எட்டுக்குணங்களாகிற பிராட்டிமாரோடு கூடினவன் பகவான். இவ்வொன்பதின்மருடைய புத்திரர்களாகும் ஜீவர்கள். தாய்மாரெண்மரையும், தந்தையையும், சரணாகதியடைந்து வருவார்களாகில் இவர்களுக்கு எந்தக்காலத்திலும் எவ்வகைக்குறைவும் வாராமல்முடிவில் நிருத்தியசூரிகளாகவாழ்வார்கள். எட்டுத்தாய்மாரையும் விட்டு, தந்தைக்குமாத்திரம் தனிமையாக தாஸத்துவஞ் செய்வார்களாகில் அதுராக்ஷஸ கிருத்தியமாய் முடியும். அவ்வெண்மரில் ஒருதாயையாவது வந்தித்து அநந்தாம் தாமோதரனைவணங்குவார்களாகில் அவர்களே பாவநர்கள். அவர்களுடைய பெருமையைச் சொல்ல என்னாலும் முடியாது தேவர்களாலும் முடியாது. இந்தச் சாதுத்தலைவரோ எட்டுத்தேவிமாரில் ஒருவரையாவது விடாமல் பகவானோடாக பஜித்து வருவதால் ஸாக்ஷாத் ருக்மணீகாந்தற்குப் புதல்வராயினர். குபேரன் நவநிதிகளைப் படைத்தவனாயினும் மற்றுஞ் சில விசேஷ செல்வங்களில் ஆசைவைத்திருக்கின்றதுபோல், இவர் தாமும்உலகில் பிறரால் பெறவறியாப் பேறுபெற்றவராயினும் அவ்வளவிலேயே திருப்தியடையாமல் மேலுமேலும் பகவற் பாகவத குணகாரியங்களில் ஆசை பெருகக்கொள்ளுவார். இத்தகைய மேம்

பாடருடைய ஆநந்தாதிசயமுள்ள குணகீர்த்திகளை வருணித்துச் சொல்ல வசுதேவசுதனுகும் கண்ணபிரானுக்கல்லால் பிறருக்குச் சாத்தியமாமோ?

பிரபந்நர்களில் தலைவரான இவர், சுபேச்சை, விசாரணை, தநுமாநசி, பிரமவித்து, பிரமவான், பிரமவரியான், பிரமவரிட்டன் என்னும் ஏழுபடிகளிலும் சாதனை சாதித்துவந்தார். உபாசனையின்றேல் எவ்விதசாதனைகளும் சாக்ஷாத்காரமாக விளங்கமாட்டா. இதனை நன்குணர்ந்த விஷ்ணுபக்தர் சற்கருமத்தாலும், சகுணயோகத்தாலும், ஞாநதுல்லியத்தாலும் உபாசித்துப் போந்தார். தேகத்தினால் நடத்தப்படுவது கருமகாண்டத் தவம்; வாக்கினால் பகவற்குணநுபவங்களை வர்ணித்து, சத்தியநடையிலிருப்பது வாச்சியார்த்த தவம்; பூரணமான ஆத்துமஞ் ஞாநாநுபவ நடையிலிருப்பது ஞாநதவம் இம்மூன்று தவங்களினுடைய அலங்காரம் இவருக்கு ஆபரணங்களாக விளங்கிற்று.

'துக்கா' என்பது—தராசின் நடுமுள்ளுக்குப்பெயர், சுத்தசத்துவமூர்த்தியும், நிவாததீபம்போன்று சலநமில்லா மநநிலையருமாதலால் இவருக்கு அப்பெயர் விளங்கியது. அதுவும், கருவிலேயே திருவாகிய லக்ஷுமிக்கு நாயகனுகும் ஸ்ரீமந்நாராயணனுடையபூரண கிருபைபெற்றுவிளங்கினுராதலால், இவருதித்தபன்னிரண்டாம்நாள் ருக்குமணிபிராட்டி அந்தணமாதின் உருவங்கொண்டுவந்து, குழந்தையை யெடுத்து உபலாலித்துத் தொட்டிலில் வளர்த்தி, தத்துவார்த்தங்களமைந்த லாலிமங்களங்களைப்பாடி, அப்போதுதன் திருப்பவளச் செவ்வாயால் "துக்கா" என்று இத்திருநாமஞ் சார்த்தி யருளினமையாலே அந்நாமம் விளங்கியது. இத்தகைய பெறலரும் பெருமையைவாய்த்தபெருமையாளருடைய அநுபவங்களைச்சொல்ல யாவர்தாம்? என்று சொல்லக்கேட்ட சஜ்ஜநங்கள் திருப்தியடைந்தவர்களாய் பின் நடந்த விருத்தாந்தங்களைக் கேட்க ஆவல்கொண்டமை யறிந்து சொல்லத்தொடங்கினர்.

அநந்தரஞ் சிலநாள் கழிந்தபிறகு ஸ்ரீ வைகுண்டநாதன், நாமதேவை யழைத்துக்கொண்டு தேவுகிராமத்தில் துக்காவினுடைய மாளிகைபுகுந்து, துக்காராமருடைய சொப்பநத்தில் இரண்டு திருவுருவங்களையுங் காட்டி, அப்பா! இவர்தான் நாமதேவு என்பவர். இவர் சதகோடி அபங்கங்களைச் செய்வேனென்று உறுதி கூறிக்கொண்டு, முடிவில் தொண்ணூற்றினுலுகோடி ஒன்பதுலக்ஷ அபங்கங்களை முடித்துவைத்தார். அவற்றை நானே என்கைகளால் எழுதினேன். அவைபோக ஐந்துகோடி தொண்ணூற்றெருலக்ஷம் பாக்கி

யாக நிற்கின்றன. ஆதலால் அக்குறையை நீர் முழுத்துவையும் என்று கட்டளையிட்டு மறைந்தருள, தாஸருந் துயில்விழுத்துக் கொண்டு, சுவாமியும் நாமதேவும் சேவையருளினமை யெண்ணி ஆநந்தமுற்று, இவ்வல்பனை யோர்பொருளாக மதித்து சொப்பநந் திற் காக்ஷிதந்தீர்கள். நான்செய்த பாக்கியவிசேஷத்தை யென்னெ னச்சொல்லுவேன்! நாயேன்பெற்ற நன்மை இவ்வுலகினில்யார்பெறு வார்! தேவாதியராலுந் தேடிக்காணொணாத் திருப்பாதப் போதுகளை நீயே நீர்மையுடன்வந்து காட்டக்கண்ட நாயினேன் தீமைகளையகற் றிப் புநிதனாயினேன். இனியெனக்கு யார்நிகர் இந்நீள் நிலத்தே! உனதடியார்களுடைய திருவடிகளுக்கு எண்ணிலாவந்தநங்கள்செய் கின்றனன் என்றுஇருகரங்களையுங் கூப்பி பகவானுக்கு வந்தநங்கள் செய்து திருவுள்ளத்தில் என்ன யோசிக்கின்றாரெனில்:—நாமிது வரையிலும் பெரியோர்கள் பாடிவைத்த கீர்த்தனைகளைப் பாடஞ் செய்து பாடிக்கொண்டுவந்தோம்; இப்போது நம்மையே அபங்கங் களைப்பாடி கிரந்தங்களாக எழுதிவைக்கும்படி நியமித்தருளினார்;நம க்கோ சுயமாகப்பாடத் திறமையில்லை; நாமெப்படி பாடுவது? ஒரு வேளை நம்மைப்பாடும்படி நியமித்த தாமே சரசுவதிக்கும் நியமித்து நம்முடைய நாவில் ஒளிரும்படி செய்துவைத்தனரோ ஏதோ அறி யோம். கலைமடந்தையும் நம்முடைய நாவில் பிரவேசித்திருப்பதாகத் தான் காணவருகிறது; ஆயினும் சோதித்துப் பார்ப்போமென்று பாடத் தொடங்கியபோது பாட்டுகளுந் தட்டின்றி விளங்கக்கண்டு சந்தோஷமிகுத்தவராய், அந்தக் கீர்த்தனைகளையும் அபங்கங்களையும் மநநஞ்செய்துகொண்டிருந்து, சுவாமி ஸந்நிதாநத்திற்சென்று, ஆந ந்தபரிதராய் நின்று ஆராதித்து, அந்தக் கீர்த்தநங்களையும் அபங்கங் களையும் கல்லுமுருகப் பாடத்தொடங்கினார். அன்றுமுதல் நித்தநித் தம் புதிய கீர்த்தனைகளையும் அபங்கங்களையும் பாடிக்கொண்டுவந்த தால், பலதேசங்களிலுமிருந்த வித்துவான்களும் சாமானிய ஜநங் களும், துக்கா அபங்கங்களையுங் கீர்த்தனைகளையும் விநோதவிநோத மாகப் பாடிவருகிறாரென்று கேழ்வியுற்று, பலதூரதேசங்களிலிருப்ப வர்களும்வந்து, துக்காராம் வாய்மைகளைச்சிரவணாநந்தமாகக்கேட்டு, இது தேவவாக்கென்று மதித்து, அவற்றைத் தாங்களும் பாடஞ் செய்து பஜிக்க ஆரம்பித்தார்கள். சில அஸாம்பிரதாய வித்துவான் கள், பொறாமை பூத்தவர்களாய், இவர் பாடியவற்றில் குற்றங்களைக் கண்டு பிடிக்கவேண்டுமென்றெண்ணி, அவைகளைத் திருப்பித் திருப் பிப்பார்த்தும் ஓர் குற்றமேனும் அவர்களுக்கு அகப்படாமல், ஒவ் வொரு பாட்டும் சுருதி - குரு - சுவாநுபவங்களுக்குஒத்திருப்பதை

யறிந்து, தங்கள் தூர்மாநங்களை யொழித்துக்கொண்டாடி, தாங்களும் அவற்றைப் பாடஞ்செய்து படித்துவரலானார்கள். அக்கம் பக்கங்களின் கிராமவாசிகளில் பெண்களும் பேதைகளுங்கூட அவற்றைப் பாடம்பண்ணி, அற்புதம் அற்புதமெனக் கொண்டாடி, ஹரிதினமாகும் ஏகாதசிகளில் விரதங்களை யநுஷ்டித்து, இரவுகளிற்செய்யும் ஜாகரங்களில் விஷ்ணுபக்தர்களுடன்கூடி இவற்றையே யநுசந்தித்து, பரமமான ஆநந்தங்களை யநுபவித்து பாரணைவரையிலும் அநுஷ்டித்து வருவார்கள். அதுமுதல் வெவ்வேறு பாடல்களைப் பாடுதலையே சுத்தமாயொழித்தார்கள்.

இப்படி நாளுக்குநாள் அபங்கங்களும் கீர்த்தனைகளும், தேவாமிர்தம்போலும், நவரத்தினங்களால் இழைக்கப்பெற்றது போலும் விளங்கிவருவதை பக்தாக்கிரகண்ணியர்பலருங்கண்டு, ஆநந்தசாகரத்திற் படிந்தவர்களாய்க்கொண்டு அவற்றைப் பாடம்பண்ணி தங்கள் தங்கள் கிருகங்களிலிருக்கும் தாய் - தந்தை - தமையன் - தம்பி - மனைவி - மக்கள் - மற்றுஞ் சுற்றத்தாருக்கெல்லாம் போதிப்பார்கள். வைத்தியர்கள் தரும் ஔஷதங்களாலும், மற்ற மருந்துகளாலுந் தீராத வியாதியஸ்தர்கள் இந்த அபங்கங்களிற் சிலவற்றையும், கீர்த்தனைகளிற் சிலவற்றையும் வாப்படுத்திக்கொண்டு பாடுவார்களாகில் அவ்வவர்களுக்கு இருந்த வியாதிகள் தன்னடையே நீங்கி சுகமடைவார்கள். இவ்வருஞ்செயலைக் கண்ட பலரும் இது பெரிய ஔஷதமென்றெண்ணி, திருத்துழாய்த்தீர்த்தம்முதன்முதன்னருந்தி, பிறகு கீர்த்தனைகளையும் அபங்கங்களையும் பாடம்செய்துகொள்ளுவார்கள். புருஷர்கள் தங்கள் பெண்டாட்டி மக்களை யழைக்கும்போதும் பெண்டுகள் தங்கள் நாயகர் மக்களை யழைக்கும்போதும், மக்கள் தங்கள் தாய் தந்தை சகோதரர்களை யழைக்கும்போதும், அந்நமுதலியவை பரிமாறும்போதும் வீட்டு வேலைகளைச் செய்யும்போதும், குழந்தைகளைச் சமாதாநப் படுத்தும்போதும், ஏவலாட்களுக்கு வேலையிடும்போதும் கோவிந்தா! கிருஷ்ணா! மாதவா! மதுசூதா! கேசவா! வேங்கடத்தீசா, நாராயணா! என்றுஉச்சரித்து வருவார்கள். தங்கள் தங்கள் வேலைகள் முடிந்து ஓய்வுற்றிருக்கும்போது ஒருத்தருக்கொருத்தர் அவற்றைச் சொல்லிக்கொள்ளுவார்கள். அதனால் எல்லாருக்கும் கீர்த்தனைகளும் அபங்கங்களும் பாடமாகி சதா பஜிக்கலானார்கள். கிருஷி ஜீவநபர்களும், வர்த்தகர்களும், அடிமைத்தொழிலாளர்களும், யாசகர்களும் தங்கள் தங்கள் தொழில்களை நடத்தாநிற்குஞ் சமயங்களிலெல்லாம் இவைகளையே பாடிக்கொண்டு, விடலநாம பாராயணர்களாய் ஆநந்தமடைந்து வருவார்கள்.

ஆதரவற்றஏழைகள் காடு வநங்களிலிருந்து பெரிய விறகு சுமைகளையும், காய் - கனி - கிழங்குகளையும் சுமந்துகொண்டு வருபவர்களுங்கூட இவ்வபங்கங்களையுங் கீர்த்தனைகளையுமே பாடிக்கொண்டு கூட்டங்கூட்டமாய் வந்து விற்பனைசெய்து, க்ஷுபாதைகளை நிவர்த்திசெய்யச் செய்துகொள்ளும் தங்கள்தங்களுடைய உணவுகளை சந்நிதாநத்திற்குக் கொண்டுவந்து சுவாமிக்கு அர்ப்பிதஞ்செய்து, விட்டலா! என்னும் உச்சாரணஞ் செய்துக்கொண்டே அவற்றையுண்டு களிப்பார்கள். ஆடுமாடுகளை மேய்க்கும் இடைப்பிள்ளைகளும், அவற்றை மேயவிட்டிருக்குங் காலங்களில், இப்பிரபந்நரால் உலகோபகாரமாக அருளிச்செய்யப்பட்ட கீர்த்தனைகளையும் அபங்கங்களையும் வரப்படுத்திக்கொண்டிருந்து, சூரியன் நடுநிலைக்குவந்த மத்தியாநகாலத்தில் ஆடுமாடுகளை ஜலமருந்தவைத்து, குளிர்ந்த தோப்புகளில் நிறுத்தி, தாங்கள் கைதட்டி, பாடம் பண்ணி வைத்துக்கொண்ட கீர்த்தனைகளையும் அபங்கங்களையும் பாடிக்களிப்பதும், ஒருவர் கைகளை மற்றொருவர் பிடித்துக்கொண்டு ஆடுவதும், தும்பி பறப்பதுபோல் சுழலுவதும், கோவிநங்களை நடுவில் நிறுத்தி, அவற்றைச் சுற்றிச் சுற்றி பஜித்துக்கொண்டுவருவதும், இன்னும் அவ்வவர்களுக்கு ஆநந்தம் எவ்வெவ்வகை விளைகிறதோ அவ்வவ்வகையெல்லாஞ் செய்வதுமாயிருப்பார்கள். பசு - பக்ஷி - கிரிமி - கீடாதிகளும், ஜநங்கள்செய்யும் திருநாமோச்சாரணங்களால் இராமா! என்கிற சத்தம் ஆகாய வெளியெங்கு மளாவ, அத்தொநியைக்கேட்டு உடல்பொருள் ஆவிகள் மூன்றும் ஒற்றுமையாகச் தந்தம் மெய்களைமறந்து, தாங்களுங்கூட அந்நாம மான்மியங்களைக்கேட்ட மகத்துவத்தால் கிஞ்சித்து நல்லறிவுபெற்று இராமா! கோவிந்தா! என்று தங்கள் ஒலியாலொலித்து, இராக்காலங்களில் சந்நிதாநஞ்சேர்ந்து, தேவிட்டா இன்பசாகரத்தில் மூழ்கிவரும் ஞாநமூர்த்தி துக்காராம் ஸ்வாமிகள் திநநித்தங் காலக்ஷேபஞ் செய்துகொண்டுவரும் அதிசயத்தைச் சிரவணாநந்தமாகக் கேட்டு; ஆநந்தங்கொண்டனவாய்ச் செல்லும். புல்லறுத்து விற்று ஜீவிக்கும்படி யானவர்களுங்கூட, புல்லறுக்கும்போதும், சுமைகளைக்கட்டும்போதும், அவைகளைத் தூக்கிக்கொண்டு விற்கவரும்போதும் அவ்வபங்கங்களையும், கீர்த்தனைகளையுமே பாடிக்கொண்டிருந்து, அவற்றை விற்றுவிட்டுப் பண்டங்களை வாங்கிக்கொண்டு போய்ச்சமைத்து அவைகளை யெடுத்துக்கொண்டு ஸந்நிதாநம்போய் சுவாமிக்குஆராதித்து உண்ணும்போது, கவளத்திற்குக் கவளம் அரிநாமங்களைப் பாடிக்கொண்டே யுண்டு, ஜலமருந்தும்போதும் பாடி, இராக்காலங்களில் ஸந்நிதிக்குப்போய் பகவத்குணநிஷ்டர் பாடுமவற்

றைக் கேட்டு ஆநந்தித்துக்கொண்டிருப்பார்கள். அன்றுதிநமே குழந்தையைப் பிரசவித்தவளுங்கூட பிரசவித்த குழந்தையையும் ஏந்திக்கொண்டு சந்நிதிக்குப்போய் குணநுபவத்தில் ஈடுபடுவாள். அவளைநோக்கி, இன்றையதிநமே பிரஸவித்து, பிரசவித்த குழைந் தையை யேந்திக்கொண்டு ஸந்நிதி வரக்கூடுமோ? என்று யாரேனுங் கேட்டால், பிரசவித்தோமே என்கிற பாதையைப் பார்த்தால் இன் றைய திநத்தின் குணநுபவம் வீணேபோகிறது. நானுங் குழந்தை யும் ஸந்நிதிவருவதால் எங்களுக்கு ஒருதீங்கும் வரமாட்டாது. ஹரி நாம சங்கீர்த்தனை கேட்காதநாள் வீண்நாள். திநதிநங் கேட்பதே எல்லா பாக்கியங்களினுடைய அநுபவம் என்று சொல்லித் தனது ஆநந்தத்தில் அழுந்திநிற்பாள்.

இவ்வண்ணமாக தேவுகாம் கிராமவாசிகளில் நான்குவர்ணத் தாரும், பஞ்சமர்களும் தங்கள்தங்கள் வீதிகள்தோறும் பஜனை கால க்ஷேபகூட்டங்களை யேற்படுத்திக்கொண்டு, அல்லும் பகலும் துக்கா ராமர் தொல்புகழ் வானவரீசனருளால் பாடிவரும் அபங்கங்களையுங் கீர்த்தனைகளையுமேபாடி, இராதா ருக்குமணீ ரமணனை ஸ்துதித்து வரும் ஓசை அண்டகடாகங்கள் பேதிப்பதுபோல் கேட்காநிற்க, தேவர்களும் ஆச்சரியப்பட்டு, சதாஸ்ரீ ஹரிநாமத்தின் பாராயணங் கேட்காநிற்கும் இந்த நந்தேவநாடு ஸ்ரீ வைகுண்ட திவ்விய நகர மாயிற்றுஎன்றெண்ணி, இராவந்தவுடனேபிரதிதேவர்களும்தேவேந் திரனும் தேவுகிராமத்துக்கேற்ற ஆகாயவீதியில் வந்து நெருங்கி நின்று, அச்சுத பக்தியுக்தராகிய துக்காராம்ஸ்வாமிகள் செய்யுங் காலக்ஷேபத்தைக்கேட்டு, இளகியமநத்தராய் ஆநந்தங்கொண்டு,மங்க ளார்த்திகள் மாமாயனுக்கானவுடனே அவ்விடம் விட்டுப்பிரயாணப் பட்டுத் தங்களிருப்பிடங்களுக்குப் போவார்கள். கலிபுருஷனும் இவ்வதிசயமறிந்து, துக்காராம் இந்தக் கிராமத்திலிருக்கிறவரையில் நமக்கொரு வேலையுமில்லை என்று விலகிதூரதேசயாத்திரைவாணப் போய்விட்டான். யமதருமராஜனும் தமது தூதுவரைக் கூப்பிட்டு, தேவிகாம்என்னும் க்ஷேத்திரத்திற்கு ஏழுகோஸ் விஸ்தீரணத்திற் குள் அடங்கிய எழுவகைத்தோற்றத்து ஜீவராசிகளிடம் அணுகாதீர் கள். அவ்வுயிர்கள் யாவும் ஸ்ரீமத் பரமபதநாதனுக்குச் சுதந்தரப் பட்டவை. துக்காராம் இந்நாடுவிட்டு நீங்கியபின் நான் யோசித்துச் சொல்லுவேனேயன்றி இதனிடையில் அந்நாட்டுக்கு நீங்கள் போகவே வேண்டாமென்று ஆஞ்ஞாபித்தான்.

பிள்ளையின் குணத்தைத் தாய்தந்தைகளே யறிவதுபோலும், மீனின்பாய்ச்சல் மீன்களே யறிவதுபோலும்இந்தப் பக்தாக்ரே கண்

ணியருடைய திருவுள்ளத்தைப் பரமமான மூர்த்தியே யறியவேண்டு மல்லது பிறருக்குச் சாத்தியமன்று- இவருடைய பெருமையை வர்ணிக்க என்னொருநா சாத்தியமுருது.

இங்ஙனிருக்க, தேஹூகிராமத்துக்கு அருகாமையில் சிஞ்சவடி என்னும் ஓர் கிராமமுண்டு. அதில் மம்பாஜீ என்னும் பிராமணன் ஒருவனிருந்தான். அவன் திரியோதிரனுக்குச் சாமானமானவன். அவன் நான்குவேதம், ஆறுசாஸ்திரம், முப்பத்திரண்டு உபநிஷத்து, பதினெண்புராணம், மற்றும் உள்ளனவெல்லாங் கிளிப்பிள்ளையைப் போல் கற்றுக்கொண்டு, குடும்பத்தைத் துறந்து சந்நியாசம் பெற்றுக்கொண்டு, மகானென்று பெயரேற்று, தேஹூகிராமத்தில் மடமொன்று கட்டிக்கொண்டு, சிஷியபரம்பரைகளைச் சேர்த்துக்கொண்டு, அவர்களால் ஜீவனஞ்செய்துகொண்டு வருவான். இப்பேர்ப்பட்டவன் நாளுக்குநாள் துக்காராமருடைய பிரபாவம் அதிகரித்துக் கொண்டு வருவதைக் கேள்விப்பட்டுக்கொண் டிருப்பதால், தன்னுடைய பெருமைக்கு இழிவு வருகிறதென்று நினைத்து, அவர்மீது பொருமைகொண்டு, காண்பவரிடமெல்லாம், இந்தத் துக்காவுக்கு ஹரி - ஓ - நமஃ என்றுகூட வாசிக்கத் தெரியாது; மேலும் சூத்திர ஜாதிவணிகன் ; இப்படிப்பட்டவனுடைய மொழியைக் கேட்கலாகாதென்று வேதஞ்சொல்லா நின்றது. வித்தியா ஸம்பந்நனுயிராநின்ற என்னைப்போன்ற பிராமண ஸந்நியாசியை விரும்பாமல் இவ்வூரில் வசிக்கின்ற சுத்த பாமரர்கள் பிராமணர்முதல் சூத்திரர் பஞ்சமர்களெல்லாரும் அந்தச் சூத்திரனையே பணிகிருர்கள். நான்கேட்கும் ஒருவினவுக்கு அச்சூத்திரனுகிய துக்கா உத்தரந் தரமாட்டுவனு? இராமா கிருஷ்ணு கோவிந்தா என்பது சாமானிய தருமம்; பிரபந்நர்கட்குரிய விசேஷதருமம் அவனுக்கென்ன தெரியும்? என்று வெறிகொண்டவன்போல் சொல்லிக்கொண்டே வந்தான். இப்படி தாஸர் மீது எந்நேரமுந் தகாதன சொல்லிக்கொண்டுவரும் பிராமணசந்நியாசிக்கு அவ்வூர் சந்நிதியின் தென்புறத்து மதிள்பக்கம் ஓர் தோட்டமுண்டு. சந்நிதானத்தை வலம்வருபவர்கள் தன்தோட்டத்தின் மாசூலைப்பின்னப்படுத்துவார்களென்று அவ்வழியில்முள்ளுகளைப்போட்டு அடைத்துவிட்டான். ஏகாதசிநாள் விசேஷஜெநம் யாத்திரைவருவார்களாகையால் அவர்கள் பிரதக்ஷணம் வருவதற்கு இவ்வேலி தடையாகுமென்றெண்ணி துக்காராம்ஸ்வாமிகள் வேலியைப்பிடுங்கி வழியுண்டாக்கினுர். தெரிசிக்க வந்தவர்களும் தங்களுள்ளங்கள் களிப்படையத் தெரிசித்து, இடையூறின்றி வலம்வந்து ஆநந்தம்

கொண்டு ஏகினார்கள். ஸ்வாமி துக்காராம், வேலியைப் பிடுங்கி, தரிசிக்க வந்தவர்களுக்கெல்லாந் தடையின்றி ஆலயவலம் வரத்தக்க சந்தோஷமுண்டாக்கி வைத்தாரென்று கேள்விப்பட்டு, பாபந்தோன்றிய நாள்முதல்தோன்றிடு பழையோனாகிய அம்மடாதிபதி மம்பாஜி என்னுங் கோபந்தோன்றியநாள் முதல்தோன்றிடுங் கொடியோன் அங்கிருந்த வேலியின் முள்கொம்பைப் பிடுங்கித் தன்வலிவுள்ளவரையிலும் மோதி மோதி முகுந்தனுடைய அடியாரை அடிக்கத் தலைப்பட்டான். அதற்கு தாஸர் வேறொன்றுஞ்சொல்லாதவராய், ஹரி! கிருஷ்ணா? வாசுதேவ! என்று பகவானைத்துதிக்க; அப்பரம சண்டாளனுக்குப்பின்னுங் கோபம் அதிகரித்து, நீ சூத்திரஜாதிப் பயல் நானோ பிராமண சந்நியாசி; அதிலும் ஆசாரியபரம்பரையில் உதித்தவன்; என்முன்னாலே ராமா! கிருஷ்ணா! என்று சொல்லுகிறாயா! உனக்கு வரம்புகடக்கப் போதித்தவனெவன்? என்னுடையயேற்றம் உனக்குத் தெரிந்திருந்தும் நானிருக்கிற ஊரில் சற்றும் மதிப்பில்லாமல் பெரும்பேதைகளைக் கூட்டிவைத்துக்கொண்டு காலக்ஷேபம் பண்ணுகின்றாயா? உன்னுடைய காலக்ஷேபத்திற்கு இவ்வூரார் வந்தாலும் உன்னுடைய காலக்ஷேபத்தை நிறுத்தி என்னை வரவழைத்து என்காலில்வீழ்ந்து தண்டம் சமர்ப்பித்து எனக்குப் பரிவனாயிருந்தால் இக்கேடுஉனக்கு வராதல்லவா? எனக்கு மிஞ்சி காலக்ஷேபஞ் செய்ய உனக்கு எவன் போதித்தான்? இவ்வூரில் புலிபோல் நானிருக்கிறேனென்று கிஞ்சித்தும் அச்சமுறாமல் என்சிஷியர்களுக்கெல்லாம் துர்ப்போதனைசெய்து உன்வசமாக்கிக்கொண்டு, என்னுடைய வரும்படியெல்லாங் கெடுத்தாய். பெண்டுகளும் என்னை மதிக்காமல் செய்து வைத்தாய். இப்போது என் தோட்டத்திற்கு நான்போட்டு வைத்த வேலியையும் பிடுங்கிவிட்டாய். உனக்கிவ்வளவு அகங்காரம் யாவன் வரச்செய்தான்? என்று மறுபடியும் இரண்டு மூன்று முள் கொம்புகள் முறியும்படியாகவும், தனக்கே சலிப்புண்டாகும்படியாகவும் அடித்து, கொம்பை யெறிந்துவிட்டுத் தன்மடம்போய்ச் சேர்ந்தான்

இப்படி தாஸரை பாபிஷ்டனாகிய பார்ப்பார சந்நியாசி அடித்த சங்கதியை தாஸர் மனையாட்டியாகிய ஆவலி அம்மாளுக்கு யாரோ போய்ச்சொல்லிவிட, அவ்வம்மையும் அழுதக்கண்ணுங்கண்ணீருமாக வோடோடியும்வந்து, தந்நாயகரைப் பார்த்துத் துக்கித்து, முள்ளைப் பிடுங்கும் ஆயுதத்தைக் கொண்டுவந்து, உபத்திரவமிக ஆகவொட்டாமல் பிடுங்கிக்கொண்டு இருக்கிறபோது என்னசொல்லி துக்கித்துப் பிடுங்குகிறாரென்றால்:—இந்தக்கரியன் பண்டரீபுரத்திலிருந்து நம்முடைய குடித்தனத்தைக் கெடுக்கவும், கீழ்மைபடுத்தவும் இவ்வூருக்

குக் குடியேறினன். இக்கரியனை நீர் நினைத்துவருந்தோறும் இக்கதி தான். இந்தக்கரியன் தானே பிராமணன் சார்பாயிருந்து உன்னை முள்கொம்புகளால் அடிக்கவைத்து உபத்திரவம் உண்டாக்கினன். இதற்காகத்தான் இந்தக்கரியன் இவ்விடம்வந்து சேர்ந்தது. உமது பாட்டனார் இவனை யோக்கியனென்று கொண்டுவந்து சேர்த்ததற்காக அவருடைய குடும்பஸ்தருக்கே தீங்கு விளைவித்து விட்டான். இவன்செய்தது தீட்டினமரத்திற் கூருபார்த்த கெதியாயிற்று. இப்பேர்ப்பட்ட துரோகியின்மீது உமக்கிருக்கும் எண்ணம் மாறவில்லை. நம்மை நம்பினவனாயிற்றே என்று ஏதாவது வந்து முள்ளுகளைப் பிடுங்கினனா? ஏண்டா அடிக்கின்றாயென்று பிராமணன் கைகளைப் பிடித்துக்கொண்டானா? அல்லது கேட்டானா? எல்லாந் தனக்குத் தெரிந்திருந்தும் ஒன்றுந் தெரியாதவன்போல் மவுநமாயிருக்கின்றான். இப்பேர்ப்பட்டவனையே நீருங் கட்டிக்கொண்டழுகிறீர் என்று சொல்லிக்கொண்டே பிடுங்கிக்கொண்டிருக்க, தாஸர் இவ்வுரைகளையெல்லாஞ் செவியிலுங்கொள்ளாமல், அடிபட்டபாதை சகிக்கப்பொருமல், கண்களினின்று நீர்தாரைபெருக அழுதுகொண்டே சந்நிதிக்குள் புகுந்து சருவாந்தரியாமுயாகிய கண்ணபிராணடிகளில் வீழ்ந்து சாஷ்டாங்கமாக தண்டஞ் சமர்ப்பித்து, ஹரி ஹரீ! ஆதிமூலா! தேவதேவா! அடியேன் யாதுகுற்றஞ் செய்தேனென்று பிராமணன் உள்ளத்திற் பதிந்து என்னையடிக்கவைத்தீர்? எனக்கிப்பாதைசகிக்க முடியவில்லையே! நான்செய்த குற்றம் இன்னதென்ன எனக்கே விளங்கவில்லையே! என்னுடைய குற்றத்தை நிரூபித்து தண்டிக்க வைத்தாலும் மநமாறும். நிரபராதியாகிய என்னை வீணில் தண்டிக்க வைத்தனையே! என்று தளர்ந்த மநதுடையவராய் மொழிந்ததை தீநதயாபரமூர்த்திகேட்டுப் புன்னகை செய்து, தேட்டறும் அடியவருடைய திருமேனியைத் தமது தாமரையன்ன திருக்கையால் தடவிக்கொடுக்க, உடனே தாஸருடைய திருமேனியிற் பொதிந்திருந்த முட்களெல்லாங் கீழேயுதிர்ந்துபோய், பாதைகள்யாவும் நீங்கி, திருமேனியின் பாங்கு முன்னிலும் எண்மணங்கு அதிகமாயிருக்கக்கண்டு தாஸர், ஜேஜேவிட்டலா! என்று அநந்தக்கூத்தாடலாயினர். ஜீஜாபாயும், இவ்வதிசயத்தைக்கண்டு சந்தோஷமுற்று, ஆவா! இக்கரியனிடம் யாதோ வொரு அருமையான வித்தையிருக்கின்றது! ஏதோ ஒருமந்திரத்தை யுச்சரித்துக்கொண்டு தன்கையால் தடவிக்கொடுக்கவே நம்நாயகர் முன்னிலும் அதிகமான சுகத்தைப் பெற்றவராயினர்! என்று அதிசயங்கொண்டவராய் தமது மாளிகைபோய்ச் சேர்ந்தார்.

துளபநன்மாலையான் துல்லியராகும் துக்காராமரைப்பார்த்து, அப்பா! பிராமணன் முட்கொம்பால் அடித்ததற்காகவே என்னிடம் முறையிட்டுக்கொண்டனை. இரணியன் - இரணியாக்ஷன் - மாலி - சுமாலி - மாலியவான் - கம்சன் - சிசுபாலன் - தந்தவக்கிரன் முதலானோர் எவ்வளவெவ்வளவோ பாடுகளைப் படுத்தினார்கள். படாத இமிசைகளெல்லாம் படுத்தினார்கள். அவற்றிற்காக நான் யாவரிடம் முறையிட்டுக் கொள்ளுவது? எனக்குந் தாய் தந்தையரிருந்தால் அவர்களிடமாவது சொல்லியாறுவேன். நான் திக்கற்றவனாதலால் பிறரிடஞ் சொல்லிக் கொள்ள வகையில்லாமல், உன்னைப்போன்ற சாதுஜநங்களுடைய மங்களாசாசந பலத்தால் அவர்களுக்கு அஞ்சாமல், அவர்களிடம் அடிகளைப்பட்டாகிலும், ஜெயித்துக்கொண்டே வந்தேன். கருமம் நிறைந்தவர்களால் நானடைந்த சிரமைகளில் நீ எவ்வளவு அடைவாய்? என்று கோவர்த்தநதரன் சொல்லியவற்றைக்கேட்டு தாஸர் துதித்து நின்றவராயினர்.

இங்ஙனநிற்க, ஆசாரியமரபிலுதித்த பிராமணசந்நியாசியாகிய மம்பாஜி என்னும் மடாதிபதியானவன், சற்றும் ஈவிரக்கமில்லாக் கொடும்பாவியாகி, தாஸரை இமிசித்ததால் தீவினை மிகுக்கப் பெற்றவனாய், அதனால் தேகத்திலெங்குஞ் சூலங்களால் குத்துவதுபோல் நோக்காடடைந்து, சகிக்கமுடியாமல், அய்யோ! அப்பா! அம்மா! என்று, மாடு கதறுவதுபோல் கதறி பூமியில் வீழ்ந்து, பெருங்கூச்சலிட்டுக்கொண்டு புரண்டு புரண்டழுது, ஓ! என்றலறி, வேண்டிய பேர் உபசரணை செய்தாலுந் தீராமலலைந்து, பெண்டு பிள்ளைகளைத் தெருவில் விடுங்காலம் வந்ததே! எனக்கும் அகாலமரணம் ஸித்திக்கிறதே! தவப்பயனால் பெற்றெடுத்த புத்திரனுக்கு மணஞ்செய்து வைத்து இந்தமடாதிபத்தியத்தை அவனுக்குமுடிசூட்டலாமென்று எண்ணியிருந்தேனே! என்னெண்ணம் வீணாகுங்காலம் வாய்த்ததே! இன்று துக்காவை யானடித்ததற்காக என்பேரில் அவன் மந்திரபிரயோகம் பண்ணினான். சூத்திரஜாதியிற்பிறந்து ஓர் அறியாதவன் துக்கா; அவன் அதருவண வேதாங்கங்களைக் கற்றதுபோல்நாம் கல்லாமற் போனோமே! நான்கு வேதங்களையும், அவற்றின் அங்கங்களையுங் கற்றும் பயனில்லாமற் போய்விட்டதே! தேகமெங்குங் குத்தலும் எரிச்சலுமாயிருக்கின்றதே! நான் அவனையடிக்கும்போது ராமா! கிருஷ்ணா! கோவிந்தா! விட்டலா! என்றுகொண்டிருந்தானே யல்லது எனடிக்கிறாயென்று கேட்டவனேயல்லவே! அப்படி கேட்டிருந்தாலும் விட்டு விட்டு இருப்பேனே! என்னை யிக்கெதிக்காளாக்கிக் கெடுக்கு நிமித்தம் அடிக்கும்போது சும்மாயிருந்துவிட்டு

நான் திரும்பி வந்துவிட்டபிறகு தான்கற்ற அதருவணவேதாங்க பலத்தால் மந்திரத்தை யேவியிருக்கிறுன். இக்கருமத்திற்கு என் செய்யலாம்? என்று, அழுகியசேற்றையும், சாணத்தையும் மற்றுங் கண்ட கண்டவற்றையுமெல்லாம் வாரிவாரிப்பூசியும் அவ்வெரிச்சல் வாங்காமல், தெய்வமே! நானென்ன செய்யப்போகிறேன்? இப்படி சதிவந்து விளையுமென்று முன்னமே யறிந்திருப்பேனுகில் ஆதியிலேயே அதர்வண வித்தைகளைக் கற்றுக்கொண்டிருப்பேனே! என்று இவ்வாறெல்லாம்பிதற்றிக்கொண்டு, பிரகிருதியின் சம்பந்தமேபூரண ரூபங்கொண்டு வந்ததுபோன்றிருக்கும் இவ்வாசாரிய கோஷாய் பாதையிலுழன்று, புழுவினைப்போல் துடிதுடித்துப் பதறி, பரிதவித்துப் பெரும்வாதையிற் பொருக்ககில்லாமல் அலைந்துகொண்டிருந்தான்.

இவனிப்படி வாதையில் அழுங்கியிருக்கையில், அன்று ஏகாதசியாகையால் யாத்திரையாகவந்த சாதுஜெநங்களும் அவ்வூர்வாசிகளும் சந்நிதியிற்சென்று, பஜனை காலக்ஷேபங்களால் குணநுபவஞ்செய்து பரமாநந்தத்தை யநுபவித்துக்கொண்டிருக்கையில், அவர்களோடொருவராய் அவர்களின் நடுவேயிருந்து சுகாநந்தத்திலாழ்ந்திருந்த துக்காராம் ஸ்வாமிகள் சபையிலுள்ளாரைத் தமதுகடாக்ஷத்தால் சுற்றிலும் நோக்கிக்கொண்டு வருகையில், தம்மையடித்த மம்பாஜி என்னும் ஆசாரிய வமிசத்தர் ஒரு ஹரிதிநமாவது தவறுமல் சுவாமி சந்நிதாநத்துக்கு வந்துகொண் டிருப்பவர் அன்றயதிநம் வரக்காணுமையாலே அதற்கு காரணம்யாதோ தெரியாது; அவருக்கு என்ன தீங்குநேரிட்டதோ; அல்லது நாமென்னகுற்றஞ் செய்தோமோ; இவைகளைக் கண்டுதெளியவேணுமென்று கோஷடியைவிட்டுப் புறப்பட்டு, அந்தப் பிராமண சந்நியாசியின் மடத்திற்குவந்து, அங்கு பெரும்பாதையால் வதியப்பட்டுப் புரண்டுகொண் டிருக்குமவரைக் கண்டுசேவித்து, அவரடையுந் துன்பத்தைப்பார்த்து, ஹரி ஹரீ! என்னுலிவருக்கு இவ்வளவுகஷ்டம் நேரிடலாச்சுதே! என்று விசநமுற்று, தமது திருக்கைகளால் அவனுடைய பாதங்களைப்பிடித்துப் பிசைந்து, தேகத்தையுந் தடவிக்கொடுத்து, அடியேன்செய்த குற்றங்களை மன்னிக்கவேண்டும்; தேவர் அடியேனை அடித்த அடி அன்றே தேவராசீர்வாதத்தால் இலகுவாய்விட்டது. பிரதி ஏகாதசிக்கும் ஸந்நிதாநத்துக்கு எழுந்தருளிக்கொண்டிருந்த தேவர் இன்றெழுந்தருளிக் காணுமையால் அடியேன்செய்த அபசாரங்களை க்ஷமிக்கச் செய்து தேவரையும் எழுந்தருள்வித்துக் கொண்டுபோகலாமென்று அடியேன் இங்கு மடத்திற்கு விடைகொண்டேன்; அடியேனுடைய

அபசாரங்களையெல்லாம் க்ஷமித்து ஸந்நிதிக்கு எழுந்தருளி அடியேனை தன்னியனுக்கி யருளவேண்டும் என்று பிரார்த்திக்க, அந்த மம்பாஜி என்னும் சந்நியாசி அங்குள்ளவர்கட்கு துக்காவைக்காட்டி, இவன் நேற்றையபையன்;ஏதோசில ஜாலங்களைக் கற்றிருக்கின்றான்; அதனால் நம்முடைய தேகத்தை இவன் தொட்டமாத்திரத்திலேயே நம்முடைய தேகத்திலிருக்கும் பாதை சற்று லகுவாயிருக்கிறது. நாமோ கல்பசாதனையும், யோகசாதனையும் பகுசா சாதித்திருக்கின்றோம். அன்றியும், சாஸ்திரங்களையும் ஐயந் திரிபறக்கற்று அநந்தகோடி சிஷியர்களுக்கு போதித்திருக்கின்றோம். இவனைப்போல் அதருவண வித்தைமாத்திரங் கற்றுக்கொள்ளாமற் போய்விட்டோம். அதனையுங் கற்றிருப்போமாகில்ராஜாராஜர்களையெல்லாம்வசியப்படுத்திக்கொண்டு, திரண்ட பொருளைச் சம்பாதித்து, நமது மனைவி மக்களோடு நல்லுணவுகளுண்டு, நல்லாடை யாபரணங்களை யணிந்து, இஷ்டபோகங்களையும், தாசிகள் இன்பங்களையும் அநுபவித்து இன்புற்றிருக்கலாம். வேண்டியவர்களையெல்லாம் அடியார்க ளாக்கிக் கொண்டுஆசாரியபதம் நிருவகித்துக் கீர்த்திபெறலாம். அவ்வித்தை நம்மிடமில்லாததால் துக்கா இவ்வூரில் உயர்ந்துவிட்டான் என்று பொறாமையால் மனக்கொதிப்பு மாறாமல், நாலுபேர் தன்னைப் பெரியவனென்று கொண்டாடவேண்டி, பிறர் சம்மதியினால் துக்காவோடு கலந்து ஸந்நிதாநம்போய், மற்ற பாகவத கோஷ்டியோடு துக்கா கலந்து குணாநுபவங்களை காலக்ஷேபமூலமாய் அநுபவித்து வாநிற்க, தானும் அவர்கள்முன் தன்னைப்பக்திபரவசனென்று எல்லாரும் மதிக்குமாறு,இருகண்களையுஞ் சும்பளிக்கும் பூனையைப்போல் கண்களை மூடிக்கொண்டு. மௌனமாய் பெரும் யோகியைப்போல் மேலுக்கு நடைகாட்டிக்கொண்டிருந்தான்.

இப்படியிருக்க, இக்கிரந்தாதிபரை நோக்கிச் சில அறிவாளர்கள், ஐயா ! பிராமணகுலத்தில் பிறந்தவனும், ஆசாரிய வமிசத்தனும், மடாதிபதியாயும் சந்நியாசியாயுமிருந்த அக்கோஷாய் வேத வேதாந்தங்களையும் இதிகாச புராணங்களையுங் கரைகண்டவனென்று சொன்னீர். இப்பேர்ப்பட்டவன் பிரத்தியக்ஷப் பிரமாணமாக சாதுத்தலைவருடைய பிரபாவாதிசயங்களைக் கண்டுவரும்போதே அவர்மீது பொறாமைகொண்டு, எந்நேரமும் மாச்சரியப்பட்டிருப்பானேன்? அதனை விளங்க வுரைக்கவேண்டியதென்று பிரார்த்திக்க, அவர்களுக்குச் சமாதாநஞ் சொல்லத்தொடங்குகிறார்:—இவர்கள் வேதாதிகளை வாசித்தது பக்ஷிகள் சிலமொழிகளைக் கற்பதுபோல. வேதத்தின்சாரம் வேதபுருஷனே யறிவன். இவர்கள் தெரிந்தவர்களாக

நடிப்பது அரிச்சந்திரவேஷம் பூண்பதுபோல. இவ்விதமாக வேஷதாரிகள் சேர்ந்து தங்களைத்தாங்களே புகழ்ந்துகொண்டு, நாலிரண்டு மூடமதிகளைச்சேர்த்து அவர்கள்முன் கற்றசிலச்சொல்லி மயங்க வைத்து, அவர்களைத் தங்களுக்கு அடியார்களாக்கிக்கொண்டு,உடல் பெருக ஜீவிப்பார்களேயன்றிஉடலெடுத்ததின் பயனையறிந்து ஜீவிக்க மாட்டார்கள். இவ்வேஷதாரிகள் இருப்பதுமோர் நன்மையே. குண நன்மைகள் உடையவராய் பஞ்சகிருத்தியங்கள்வாய்க்கப்பெற்றபரம சாதுக்கள் மூன்றுலகங்களிலும் ஒரொருவர் உண்டாவதருமை; உண்டாயிருப்பின் அம்மகாநுபாவருடைய மேலானகுணத்தின் ஏற்றமானது தாழ்மையையிட்டுச் சீர்தூக்கினலல்லது விளங்காது. அத்தாழ்மைகுணம் விளக்குவதற்காகவே இவ்வேஷதாரிகளும் உலகிலிருப்பது நன்மையெனச் சொன்னது. இவ்வேஷதாரிகளையும் விமலர்களாய் வாழ்ந்திருக்கும் மேம்பாடர்களையும் வைத்துக்கொண்டுநடுநிலைமையராயிருந்து அவ்வவர்களுடைய குணங்களைச் சோதிப்பார்களாகில், அப்போது வேஷதாரிகளுடைய சிறுமையும் விஞ்ஞானமூர்த்திகளுடைய பெருமையும் விளங்கிவிடும். கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ? சிஷியர்களும் அப்படியே துல்லபம். மாணிக்கமெப்படி அருமையோ அப்படிப்போல நிஜபக்தியும் சத்தியபுத்தியும் வாய்த்த தாஸனிருப்பதும் அருமை. அடிமைபுண்டாயின் ஆள்பவனும் உண்டாவான். இத்தகையரல்லாதஎன்னைப்போன்ற பாமரர்களுக்கு வேஷதாரிகளாகும்ஆசாரியர்களே வாய்த்து, அவர்களால் சமயாசாரவிதிகளையே உபதேசிக்கப்பட்டு, டம்பங்களுக்கும் துராபிமாநங்களுக்குமென சரியை கிரியைகளில் மநமூன்றி நிற்பார்கள்; அவை முதிர்ச்சியாமாகில் யோகதாரணைக்கு வருவார்கள்; அவ்வியோகதாரணையில் அலையுமநம் அடங்குமாகில் ஞாநாநுஷ்டாநத்திற்கு வருவார்கள். இவ்வழிகட்கு வருவார்களென்கிற எண்ணங்கொண்டே பூருவீக சந்தஜநங்களாகிற மகத்துக்கள், வேஷதாரி ஆசாரியர்களை யேற்படுத்தி, குரங்கையொத்த மனதுடைய பாமரர்களுக்கு அவரவர்களுடைய மனச்சான்றுகளுக்கெல்லாம் ஒத்தபடி யின்பங்களுண்டாகப் போதித்து, அதனல் நீங்களும் ஜீவியுங்கள் என்று ஆஞ்ஞாபித்தார்கள். இந்த மம்பாஜி கோஷாயும் அவ்வேஷதாரி ஆசாரியர்களிலொருவனய், தன்புத்திக்கிசைந்த சிஷியர்களைச் சேர்த்துக்கொண்டு, அவர்கள்முன் தானெல்லாவற்றையுங் கற்றுத் தேர்ந்தவன் போல் நடித்து, அதனல் வயிறு கழுவுகிறவனேயன்றி வேறன்று. இவன் வேதவேதாந்தங்களின் கருத்துகளை யறிந்திருப்பானகில், உலகெல்லாமறிய ஈசுவரன்பால் மெய்யன்புசெலுத்தி பேறவறியாப்

புகழ் மேன்மேலும் பெற்றுவருந் தாஸரை முள்ளங்கொம்புகளைக் கொண்டு அடிப்பானு? பொறுமைகொண்டு வைவானு? அபசார தோஷத்தால் படாத இம்சைகளைப் படுவானு? இவன் பகவற் சந்நிதிக்குப் போவதும், பாகவதச் சிரேஷ்டராகிய துக்காராம் ஸ்வாமிகள் செய்யும் பஜனை காலக்ஷேபங்களை யின்பமாய்க்கேட்டு உஜ்ஜீவிக்கலாமென்றல்ல. ஊரிலுள்ள பாமரஜனங்கள், மெச்சுதற்காகவும், அவர்கள் ஆவா! நம்பெரிய சுவாமியானவர் தமது கல்விவல்லமையால் துக்காராம்செய்யுங் கீர்த்தனைகளிலும், அபங்கங்களிலுமிருந்து அபிப்பிராயங்களையெடுத்து அவரையே கேட்டுப் புரட்டி யெடுக்கிறுர்; என்னவல்லமை! என்னவல்லமை !! என்று அதிசயித்துக் கொண்டாடுவதற்காகவும், இந்தக் கௌரவம் சம்பாதித்தாலே நமக்குப்போதும் என்றே கோயிலுக்குப் போகின்றுன். மெய்தாஸர் செய்யும் அபங்கங்களுங் கீர்த்தனைகளும் மற்றவர்க்குஇன்பசாகரமாயிருக்கும். அந்தத் துராத்துமாவுக்கோ பூனைக்காஞ்சொறி யிலையை தேகத்தில் ஒத்தினதுபோலிருக்கும். ஜென்ம கன்மிகளுக்கு அமுதும் விஷம் போல்காணும். கீழ்மக்களுடைய குணம் — நல்லவரொருவருக்கு அநந்தம் நற்குணங்களிலிருந்து அவற்ருேடு அற்பதீயகுணங் கலந்ததாக அவர்களுக்குத் தெரியவருமேயாகில், அந்நற்குணங்களையெல்லாம் புறத்தொதுக்கி சுவல்பமாகவிருந்த தீமையையே பெருக்கிப் பெருக்கி வீடுவீடாய் நுழைந்துசொல்லி நிந்தித்துத் திரிவதுஇயல்பதாகும். பீஷ்மர் - துரோணர் - கிருபர் - அசுவத்தாமர் - விதுரர் முதலான சாதுக்கள் முன்னிலையில் சாக்ஷாத் ஜகதீசன், பாண்டவர்களுக்காக துரியோதனனைநோக்கித் திருக்கரங்களை யேந்தி பிக்ஷைகேட்டு அத்துர்மார்க்கன் சற்றேனும் இரக்கமுற்ருனு? அதுபோல் குசேஷ்டையாளர் சாதுகூட்டத்தில்தங்கியிருந்தாலும் தங்கள் குசேஷ்டைநீங்குமோ? யோகிகளைப்போல் அசைவற்றிருந்தாலும் கற்கள் யோகிகளாமோ? கழுதை சாம்பரிற் புரண்டாலும் பரசிவன் அருள் பெறுமோ? எலியானது வளைக்குள்ளிருந்தாலும் கையால் காட்டுவதை விட்டிருக்குமா? அதுபோல்பஞ்சகிருத்தியங்களில்வல்ல பரமபாகவதர்களது திருக்கூட்டத்தில் பஞ்சபூதங்களுக்காட்பட்டபத்த பாமரர்கள் கூடியிருந்தாலும் அவர்களுடைய பாஞ்சபௌதிக சேஷ்டைவிட்டுச் சும்மாயிரார்கள் என்று இவ்வுரைகளைக்கேட்டு, சங்கித்தவர்களுந் திருத்தியடைந்தவர்களாய் மற்ற சரித்திரங்களையுங் கேட்க ஆவலுற்றனர்கள்.

அநந்தரம், அந்த ஹரிவாசரத்தினிரவில் மெய்யன்பர், தாளம்-தம்புரு - மிருதங்கம் - சிட்கா - கஞ்சரி - சுதி முதலான நல்வாத்தி

யக்கருவிகள் இசைக்கநின்று அற்புதமான அருள்நிறைந்த கீர்த்தனை களையும் அபங்கங்களையும் பாடி, அங்கு வந்திருந்தவர்கள் எல்லாரும் தங்கள் இயற்கைகளையும் மெய்களையுமறந்து விஸ்மிருதியடையுமாறு பஜித்துவந்ததில் அவர்கள் எல்லாருமடைந்த ஆநந்தத்துக்கு அள வில்லாமல், தாஸரைப்போன்றே தங்களுக்கும் நித்திரை சோம்பல் கள் நீங்கி, விதேக நிலையடைந்தவராய், வானவர்களும் ஆச்சரிய முறத் தக்க ஆநந்தத்தில் அழுந்தியிருந்தார்கள். அந்தச் சமயத்தில் தாஸ ராணவர் தயாநிதியான தாசரதியை நோக்கி, கருமமென்னுஞ் சேற் றில் என்னை யழுந்தவிடாதே கண்டாய். கரும நிபந்தநமான சமுசா ரத்திலிருந்து என்னை வெளிப்படச்செய்வாய். காலசக்கரத்தில் அகப் பட்டஜீவர்கள் பிரமைகொண்டு கருமகதிகளை யநுபவிப்பதுபோலே என்னையும் அநுபவிக்கச்செய்யாமல் அவற்றை யறத்துறக்கச்செய்து உன்னுடைய ஆத்துமசமரான நல்லடியார்களுடைய திருவடிகளிற் சேர்த்து, அவர்கட்கு ஆளாகச்செய்வாய் தீநதயாபர மூர்த்தி! என்று பிரார்த்தித்து, ஆநந்தபரவசரா யிருந்தார்.

இவரிவ்வகை பிரார்த்தித்துக்கொண்டு ஆத்துமலாபத்துக்குரிய சாதனைகளிலிருக்க, இவருடைய பெண்டாட்டி ஜீஜாபாயம்மாள் தம் முடைய மாளிகையில் எப்போதும்போலே நித்திரைசெய்து கொண் டிருக்க, அன்றிரவில் இரண்டு கள்வர்கள் பிழக்கடை மார்க்கமாய் வந்து, பால்கறக்கும் இரண்டு எருமைகளைக் கட்டுத்தறியறுத்து, சந் தடிசெய்யாமல் ஓட்டிக்கொண்டு, ஊருக்கு மேற்புறம் கால்கோஸ் தூரத்தில் போய்க்கொண்டிருக்கும்போது, எள்ளுக்குள் எண்ணெ யைப்போல் எங்குமநிறைந்த ஏகநாயகனும் இறைவன் தன்னடியா ருடைய எருமைகளைக் கள்வர்கள் ஓட்டிக்கொண்டு போகிறார்களென் றறிந்து, ஆற்றங்கரைகளில்வாழ் வாள்வீரன் மன்னருசாமிபோன்ற பெருத்த உடலமுடைய ரூபமெடுத்து, தக்கதோர் தடியொன்று கையில் பிடித்துக்கொண்டு வந்து அவர்கள் முன்னிற்க அவர்களும் இந்த கோரரூபத்தைப்பார்த்துப்பயந்தவர்களாய், ஈதென்ன ஆச்சரி யமான ரூபமாயிராநின்றது! இங்குவசிக்கும் பேயோ, பிசாசமோ, வநதேவதையோ! அன்றி இவ்வெல்லை காக்கும் பூதமோ! மற்றியா தோ அறியோமே. நாம் மாடுகளை யோட்டிக்கொண்டு இவ்வழி யாகவே போவோமாகில் நம்மை யென்னசெய்யுமோ என்றுபயந்து வேறுவழியாக எருமை மாடுகளையோட்ட, அந்தவழியிலும் குறுக்க வந்து அவ்வுருநிற்க, இவ்வழியிலும் போகவிடவில்லையே என்று மற் றொருவழியில் போக அங்குமெதிர்நிற்க, நாம் அதிகநாள்களாகக் களவுசெய்து இவ்வழியே போகாநின்றோம். இவ்வளவு கோரரூப

மான உருவத்தை நாம் கண்டது கிடையாது. இன்றையதினம் நமக்குக் கெட்டகாலம் சம்பவித்ததுபோல் காணுகிறதென்றெண்ணி, அந்தவழியையும் விட்டு வேறேவழியில் எருமைகளைத் திருப்பிக்கொண்டுபோகத் தலைப்பட்டார்கள். அங்கும் அவர்கள் நேராகத் தடியை யூன்றிக்கொண்டு இருந்தான். இதைக்கண்ட கள்வர்கள் மற்றொரு வழியை நோக்கினார்கள்; அங்கும் அவ்வண்ணமே தடியை முன்னூன்றிக்கொண்டு நின்றான். இப்படி எட்டுத்திக்கிலுமிருந்த மார்க்கங்களுக்கெல்லாம் எருமைகளைத் திருப்பியோட்ட அங்கெல்லாங்கூட விடாமல் முன்னிற்பதைக்கண்ட திருடர்கள், நமக்கின்றோடே முடிவு காலம்; இந்தப்பூதம் இன்று நம்மை விடப்போகிறதில்லை. பக்தாக்கிரகண்ணியராகும் துக்காராமருடைய எருமைகளைக் களவில் நாம் கொண்டுவந்ததால் பகவான் நம்மைக்கொலைசெய்ய இப்பேயையேவினதாய்க் காணுகிறது. எந்தவழியிலாவது ஓடிப்போவோமென்று பார்த்தாலும் நமக்கு வழிவிடாமல் அடர்த்துநின்றது. இப்போது விடியற்காலமாகுந் தருணமுமாயிற்று. யாருக்காவது தெரிந்தால் நம்முடைய களவுக்காக இராஜாங்கத்திற்குக் கொண்டுபோய் தண்டித்துவிடுவார்கள். இருளிருக்கும்போதே எருமைகளை இருந்த இடத்திற்குக் கொண்டுபோய் விட்டுவிட்டால் நமக்கு அதன்மேல் அச்சமிராது தாராளமாய்ப்போகலாம் என்று எண்ணி அதிக துரிதமாக மாடுகளை வந்த வழியில் ஓட்டிக்கொண்டு திரும்பி தேவர்பிரான் அடியாருடைய திருமாளிகைநோக்கி நடவாநிற்க, பகவானும் தடியைத் தோளின்மீது சாத்திக்கொண்டு இவர்களுக்கு முன்பாக வழிநடந்துவர, அப்பேருடலைப்பார்த்த கள்வரிருவரும், இன்றுநாம் பிழைத்தது மிகு அருமை. தெரியாமல் இக்காரியம் செய்தோம். இனியும் நம்மையிப்பூதம் என்ன பாடுபடுத்துமோ அறியோம் என்று பயம் வரவர அதிகமாகப் பெருகப்பெற்றவர்களாய், எருமைமாடுகளை துக்காவினுடைய வீட்டுப் பிழைக்கடை வழியாகக் கொண்டுபோய், முன்னவை கட்டப்பட்டிருந்த தோழத்திற் கட்டிவிட்டு, வீதிவழியாகவந்து சந்துபொந்துகளில் நுழைந்து ஓடிப்போகப் பார்த்தார்கள்; அப்போதும் அந்தரூபமானது விடாமல் அந்தந்தச் சந்துகளில் குறுக்கே தடியை யூன்றிக்கொண்டு நிற்கிறதைக் கண்டு, அக்கள்வர்கள், ஈதென்னபாபம்? களவுசெய்த மாடுகளைக் கொண்டுவந்து கட்டிவிட்டும் நம்மைப் போகவிடாமல் வழிமறிக்கின்றது இப்பூதம்; இதேதோ இன்று நம்மை விடப்போகிறதில்லை; கொன்றே தீரும்போல் காணுகிறது; கடுகப்போய் நாம் களவாடிய சொத்துடையாருடைய கால்களில் வீழ்ந்து அபசாரத்தை மன்னிக்கக் கோரிக்கொள்ளுவோமாகில்

அவர்தான் நம்மைக் காப்பாற்றுவார். நாம் நடந்த சங்கதிகளை புண்மையாகச் சொல்லுவோமாகில் அதன்மேலவர் சிக்ஷித்தாலும் சிக்ஷிக்கட்டும் ரக்ஷித்தாலும் ரக்ஷிக்கட்டும். இப்பேயினிடம் இறப்பதிலும் அதுவே மேன்மை என்று ஒருவரோடொருவர் யோசித்துக்கொண்டு ஸந்நிதிமார்க்கமாய்த் திரும்பி வழிநடந்தார்கள். அப்போதும் பகவான் முன்போல் தடியைப் புஜத்தின்மீது தூக்கிக்கொண்டு அவர்கள் முன்னாக வழிநடந்து, ஸந்நிதிக்குச் சமீபத்திற்போய் மறைந்தருளினன். கள்வர்களிருவரும் கோயிலுக்குள் நுழைந்து, மெய்மறந்து பஜனை செய்துக்கொண்டிருந்த துக்காராம் ஸ்வாமிகளுடைய திருவடிகளில் அடியற்ற பனைமரம்போல் வீழ்ந்து தண்டனிட்டு, எங்களைக் காத்தருளல்வேண்டுங் கருணையானே! நாங்கள் கள்வர்கள், இவ்விராத்திரி தங்கள் கிருகத்தில் நுழைந்து இரண்டு எருமைகளைக் களவாடி யோட்டிக்கொண்டு போகாநிற்கையில் தடத்தில், பேயோ பிசாசோ அறியோம் ஆகாயமளாவத்தக்க பேருருவமெடுத்துப் பெருந்தடியொன்று கையில் பிடித்துக்கொண்டு எங்கள்முன் வழி மறித்துநிற்க, நாங்கள் அந்த கோரரூபத்தைக்கண்டு பயந்து நடுக்கங்கொண்டவர்களாய் மாடுகளை மறுபடியுந் திரும்ப ஓட்டிக்கொண்டு வந்து தங்கள்வீட்டுப் பிழக்கடையில் முன்னிருந்தபடியே கட்டிவிட்டு ஓடிப்போகப்பார்த்தோம்; அப்போதுமெங்களை அந்த கோரரூபம் போகவிடாமல் வழிமறித்தது. நாங்கள் அதற்கஞ்சி தங்களைச் சரணமடைந்து நாங்கள் செய்த குற்றத்தை க்ஷமிக்கச்செய்து அபயப்பிரதானம் பெறலாமென்று தாங்கள் பஜித்துக்கொண்டிருக்கும் இந்த ஸந்நிதானத்தை நோக்கிப் புறப்பட்டு வரலானோம்; அப்போதும் தடியை புஜத்தின்மீது ஊன்றிக்கொண்டு எங்கள்முன் வழி நடந்துவந்து, இக்கோயில் சமீபத்தில் வந்து அவ்வுரு மறைந்துவிட்டது. நாங்களிங்குவந்து தங்கள் திருவடிகளில் வீழ்ந்து ஸேவிக்கலானோம்; எங்களை மன்னித்து அபயப்பிரதானந் தந்து காப்பாற்றியருளவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். அப்படி அவர்கள் பிரார்த்தித்த பிரார்த்தனைகளைக்கேட்டு, ஆநந்த அமிர்த சாகரத்தில் அநுபவாதிசயங்களால் படிந்திருந்த சுவாமிகளும் மற்றஜெநங்களும் காலக்ஷேபங்களை நிறுத்தி, ஆச்சரியமுற்று, ஹரிவிடேல்! பாண்டுரங்கா! என்று எல்லாரும் ஏக கண்டமாகத் தொழலானார்கள். அவ்வளவில் தாஸர், சுவாமியானவர் இங்கு நமக்குச் சேவை யளித்துக்கொண்டிருக்கிற வண்ணமே யிருந்து வேறுருக்கொண்டுபோய் இரவுகளில் வெளிசஞ்சாரமும் பண்ணுகின்றார்; கள்வர்கள் சொல்லுவது யதார்த்தந்தான் என்று எண்ணி, அவனுடை யருளென்

னுந் தேஜசுக்கு மயங்கினவராய், ஆநந்தமானது மநதில் நிரம்பப் பெற்று, ஹரி ஹரீ! புண்டரீகவரதா! நீர் அண்டாண்ட சராசரங் களில் எங்கும் நிறைந்து அவற்றிற்கு அப்புறப்பட்டவனுகவும் இருக் கின்றீர்! உம்முடையபெருமை யளவிட அநந்தனாலும் முடியாதே னில் அஞ்ஞனுகும் அடியேனுல் அளவிட்டு முடிக்கவசமோ! உமது அருமை திருக்கோலத்தை உம்மையல்லாலறிய சந்தஜநங்களே அறி வார்களன்றி ஒன்றிலுஞ்சேரா நாயேனறிய வசமோ! இங்கெழுந் தருளியிருக்கும் உமதன்பர்களெல்லாரும், நீர் கள்வர்கட்காக எடுத்த திருக்கோலத்தைத் தெரிசிக்க ஆவல் மிகுத்தவர்களா யிராநின்றூர்க ளாகையால் நுமது கருணையால் அக்கோலந்தன்னைக் காட்டியருள வேண்டும் தேவகீநந்தனு! என்று பிரார்த்தித்துநிற்க, தேவதேவனு குந் தீநதயாபரமூர்த்தியானவன், அங்கிருந்த அன்பர்களும் தன துண்மை யடியாருங் கண்களாரச்சேவித்துக்களிக்குமாறுமுன்போல் பெரியகோலத்தை யெடுத்து பெருத்த தடியையும் ஏந்தினவனுய்ச் சேவைதர, அந்தப் பெரியகோலத் திருவுருவந்தன்னைக் கண்ட திரு டர்கள், முன்நடுங்கினவண்ணமே நடுங்கப்பெற்றவர்களாய், கண்களை மூடிக்கொண்டு, ஓகோ! ஈதென்ன அதிசயம்? இங்கும் எங்களை யடர வந்ததே இப்பெரும்பேய்! என்று வாயுளறலானுர்கள். மற்றவர் களோ! அத்திருவவதாரத்தைக்கண்டு, தெவிட்டாத் தெள்ளமுத முண்டு, வந்தன வழிபாடுகளால் ஹரிவிடேல்! பாண்டுரங்கா! என்று கீர்த்தித்துக் கைகளைக்கொட்டி *சசம்பிரமநிருத்தஞ்செய்து, ஆநந்த பாஷ்பங்கள் கண்களிலிருந்து பெருகக் கீர்த்தனைகளைப்பாடி, தந்தம் இயல்புகளை மறந்தவர்களாய் ஒருவர்சொன்னதை மற்றொருவர் சொல்லாமல் தங்கள் தங்களுக்குத் தோன்றினபடியெல்லாந் தோத் திரித்துக்கொண்டு சுற்றிச்சுற்றி விளையாடி, ஸ்மரணைகளை யிழந்தவர் களாய், அந்தப் பிரணவசொரூபவானைக் கொண்டாடினுர்கள். அங்கு அவர்களால் நடந்த ஆரவாரத்தைச்சொல்லவென்றுல்எத்தகையோரு க்கும் இவ்வகையென்று முதலெடுக்கவே வாயெழாது. அதின் பெருமையை, அவர்களுடைய உள்ளங்களில்தங்கி விளையாடுவிக்கும் ஆதிமூலப் பழம்பொருளுக்குஞ் சொல்ல சாத்தியப்படாததாகும். மேல்நாட்டு இமையவர்களும் இவ்வற்புத சேவைக்கும், அன்பர் செய் பக்திக்கும் மயங்கி, நம்போல்வாருக்கு இவ்வளவு சிரத்தை யுண்டா யிற்றில்லையே என்று ஏக்கங்கொண்டவர்களாய், துக்காவினுடைய பாக்கியமே மேன்மையான பாக்கியமென்று கொண்டாடி ஆசீர்வாதங் கள் செய்தார்கள்.

* சசம்பிரமநிருத்தம் - முறைபிறழ்ந்தநடனம்.

இவ்வதிசயங்களையெல்லாம் பார்த்திருந்த கள்வர்களிருவரும் தங்கள் பயந்தீர்ந்து, ஹரிகோவிந்தா ! இது என்னமாயம்! நாங்கள் பேயோ பூதமோ என்றெங்களுடைய அறிவீனத்தால் எண்ணி நடுக்கமுற்றோம். அந்தியத்தில் பார்க்கும்போது அச்சுதனாகிய நீயே நின் பக்தருடைமையைக் காப்பதற்காக அக்கோலங்கொண்டு எழுந்தருளினதாகக் காணவருகின்றது. உன் மெய்யன்பருடைய அநுக்கிரகத்தால் உன்னைச் சேவிக்கலானோம். இனி பொய்யாகிய உலகநடக்கையைத் துறப்போம். இதுபரியந்தம் அறியாமையால் செய்துகொண்டு வந்த பாபகாரியங்களைச் செய்யோம் என்று சுவாமியைநோக்கிப்பூமியில் விழுந்துவிழுந்து சேவிக்கலானார்கள். அப்படி சேவியாநிற்குங் கள்வர்கள் இருவரையும்பார்த்து துக்காராமரானவர் உங்களிருவருடைய அநுக்கிரகத்தால் இன்று நானும் நல்விதயத்து இவ்வடியார்களும் விடோபாவினுடைய திவ்விய திருக்கோலத்தைச் சேவித்துத் தன்னியர்களாயினோம். நீங்கள் எருமைகளின்பேரில்பிரியப்பட்டுவந்தவர்களாகையால் என்னுடைய குடிசைக்குப்போய் மாடுகளைப்பிடித்துக்கொண்டு உங்களுடைய யதாஸ்தாநத்திற்குப் போங்கள், பிறருக்கு அஞ்சவேண்டாம் என்றுசொல்ல, அவற்றைக்கேட்ட திருடர்கள் ஹரிஹரீ! இனி நாங்கள் அநந்தக்காரியத்திற்குப் பிரவேசிக்கவே மாட்டோம். எங்கள் பிராணனைக் காப்பாற்றியருளின தேவர்க்கு அடியோங்கள் ஜீவித்திருக்கிற பரியந்தம் அடிமைகளாய் தேவரே தஞ்சமென்றிருப்போம் என்று பலபலவகை கீர்த்தித்து, தாஸரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு தங்களிருப்பிடத்திற்குப் போய்விட்டார்கள்.

இங்ஙனம் நடந்த அற்புதக்காட்சிகளையெல்லாம், சந்நிதாநத்தில் சேர்ந்திருந்த காலக்ஷேப சபைஞரில் தானுமொருவனாகச் சேர்ந்திருந்த மம்பாஜிஎன்னும் பிராமண சந்நியாசியும், அக்கோஷ்டியாருடனே தானும் பிரத்தியக்ஷமாய்க் கண்டவனாகையாலே கண்ட அவ்வருமை கண்காட்சிகளாலுந் தெளிவுறாமல், மேல்வெளிச்சத்திற்காக மாத்திரம் இது மிகவாச்சரியமான அற்புதமென்றுசொல்லி, உள்ளுக்குள் யாது நினைக்கின்றானென்றால்—இவ்வளவு வித்தைகளைக்கற்று, பிராமணகுளத்தில்ஆசாரியசந்ததியில் பிறந்துசந்நியாசத்துவமும்பெற்ற நமக்கு இப்படிப்பட்ட மகிமைகளில்லாமையாலல்லவா தலையிறக்கம் வந்தது. நேற்றைய சூத்திரப்பையனாகுந் துக்காவுக்கு சுவாமி சிக்கிக்கொண்டதாலல்லவா இப்பேற்பட்ட அற்புதங்களையெல்லாங் காட்டி மேன்மையடைகின்றான். இனியும் வரவர இவனுடையபிரபாவங்கள் அதிகரித்துக்கொண்டே வருமல்லது குறையாது.நமது கௌரவமோ

குறைவுபட்டு நாமும் ஒருவராலுஞ் சிந்தப்பெறமாட்டோம் என்று கொண்ட பொருமையினின்று நீங்காதவனைப், உள்ளுக்குள்ளாகவே வேகத்தலைப்பட்டான். இவனுடைய துர்க்குணங்கள் மாருததது— பெருங்காயத்தை கங்காஜலத்தால் கழுவிக்கழுவி யெடுத்தாலும் அதின் துர்மனம் நீங்காதுபோலதாகும். ஸ்ரீபண்டரீநாதன் பக்தர்களுக்காகப் பிரத்தியக்ஷத்தில் திருவிளையாடல்களைச்செய்தும், அவற்ருல் அல்ப பரிபாகிகளுக்குப் பக்தி யுதியாமல் பொருமையே மிகுதியாய்வருவதற்குக் காரணம்—பக்தர்களுடையபெருமை நன்குதோன்றுதற்கே யாகும். இரத்தினங்களோடு கரப்போக்குக் கல்லுங் கலந்திருந்தால்தான் அதின்பெருமை நன்ருகவிளங்கிப் பிரகாசமுறும். யமலோக மொன்று இருப்பதாைல்தான் சுவர்க்கமும் ஒன்றுண்டென்று மதித்து அதனையடைய நல்லநடைக்குக் ஜநங்கள் வருகின்றுர்கள். தேகத்திற்கு மரணமில்லாவிடில் தேவாமிர்தத்தை விரும்புவாரே கிடையாது. இருளுண்டாவதிைல் தீபத்தை விரும்புகிருர்கள். இராவணனென்னுருவன் இருந்தமையால்தான் ராமனுடைய கீர்த்தியுந் தோள்வலிமையும் பிரகாசித்தது. துரியோதநன் ஐவர்காதலியாகிய திரௌபதையின் துகிலைஉரியவைத்ததிைல்தான் அவ்வம்மையினது பதவிரதாதருமமும்உலகினர்க்கு வெளிப்பட்டது. பவித்திரர்களான சாதுக்களை ரக்ஷிப்பதற்காகவும், சுதருமங்களை நிலைநாட்டுவதற்காகவும், பகவான் காலமென்றும் அகாலமென்றும் பாராமல் அந்தந்த சமயங்களுக்கேற்ற அவதாரங்களைசெய்து சம்ரக்ஷித்து வருகிருன். சருவேசுவரன் புத்தனுகவும் அவதரித்தானென்று சாஸ்திரங்களில் காணுநின்றது. தனது அடியார்களுக்காக, கலியுகத்தில் தன்னுடைய கியாதிதோன்ற அநேக அற்புதங்களையெல்லாம் நடாத்தியிருக்கின்ருன். அரணி என்னுங் கிராமத்தில், புஷ்பதோட்டத்தில் வசித்துக்கொண்டிருந்த 'சாவந்தாமளி' என்னும் திருநாமமுடைய ஓர்பக்தரிடம் பரமதயாளுவாகிய சுவாமி எழுந்தருளி, நான்சீக்கிரம் மறையவேண்டிய தாகையால் தகுந்த இடங்காட்டு என்றுகேட்க, என்னுடைய கர்ப்பந்தான் தகுந்தமறைவானவிடம் ஆகையால் வயிற்றில் மறையலாம் என்று சாந்தாமாளிசொல்ல, உடனே அவர்கர்ப்பத்தில் சுவாமிபுகுந்து மறைவுபட்டு இன்பமான மொழிகளைச் சொல்லிக்கொண்டிருக்கையில் நாமதேவரானவர் சுவாமியைக்காணுமல் துன்பமுற்று, சாவந்தாமாளியிடம்வந்துபார்க்க, சுவாமியினுடைய திவ்விய திருப்பீதாம்பரத்தின்முனைதொங்கக்கண்டு,இவர்கர்ப்பத்திற்பதுங்கியிருக்கிருரென்று அறிந்து,அப்பீதாம்பரத்தின்நுனியைப்பற்றியிழுத்து,பகவானை வெளிப்படச்செய்து, சுவாமியினுடைய அருமை தங்

கிய லீலைகளுக்காக ஆச்சரியாதிசயங்களுற்று, கொண்டாடி, தந்தையுங் குழந்தைகளுமாக விளையாடுவதுபோலே சருவேசுவரனும் அவ்விருதாஸர்களும் சற்றுநேரம் இன்பமரும் நல்விளையாட்டுகளை விளையாடி, ஆநந்தங்கொண்டவர்களாய், முடிவில் நாமதேவை யிட்டுக்கொண்டு ஆதிநாராயணன் சென்றனர். இப்படி, இக்கலியுகத்தில் பக்தருடைய வயிற்றிலே பரந்தாமன் சிறுவனெனத் தங்கியும் இருக்கின்றான். அந்தச் சாவந்தாமாளியினுடைய சரித்திரம் வெகு அற்புதமாயிருக்கும் என்றுசொல்லி, பின்னையும் துக்காராம் சுவாமிகள் பொழுது விடிகிறவரையில் பஜனை காலக்ஷேப நடத்தி, அங்கிருந்த கோஷ்டிகளைப் பார்த்து, சமுசாரமென்பது அல்பமும் அஸ்திரமுமானது. ஸ்ரீ ஹரியினுடையபஜனையில் யாவர் ஈடுபட்டு ரமித்திருக்கின்றார்களோ அவர்களுக்கு அச்சமுசார பாதைகள் நலிவுறுத்தாமல் பற்றற விலகிப்போகும். அவர்களைக் கலிபுருஷனும் சேரமாட்டான். எமனுக்கும் இவர்களிடத்தில் ஒருவேலையுமிராது. ஆகையால், யாவரும் பஜனைசெய்ய பிரியங்கொள்ளுங்கள்; மறக்காதீர்கள் என்று புத்தியுரைத்து, சுவாமிக்கு மங்களார்த்திசெய்ய, ஜநங்களெல்லாரும் எழுந்துநின்று, பக்தபாதீநனைச் சேவித்து, ஹரிவிடேல்! பாண்டுரங்கா! பண்டரீநாதா! புண்டரீகவரதா! ருக்குமணீரமணா! என்று ஸ்மரித்து, கரதாளங்களைப்போட்டு, ஆநந்தபரிதர்களானார்கள்.

ஸ்ரீ ருக்குமணீகாந்தா! உனது அன்பராகிய துக்காராம் ஸ்வாமிகளுடைய சரித்திரத்தை, என்னுள்ளத்தில் தங்கியிருந்து, இதுவரையிலும் முடித்துவைத்ததுபோல் மற்ற ரசபாகங்களையும் முடித்துவைத்து, என்னைக் கிருதார்த்தனாகச் செய்வாய், களரொழியங்கேசவா! கேடிலீர்!

ஒன்பதாமத்தியாயம் மூற்றும்

ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகள் திருவடிகளே சரணம்

விஷ்ணு.
அவலி.
துக்கா.
துக்கா.
விஷ்ணு
புரோகிபிராமணன்
துக்கா.
சோகத்ரு
கழலி.
அவலிகுழந்தை
அக்கம்பக்கம்ஸ்திரிகள்.

ஸ்ரீ

ஸ்ரீ பாண்டுரங்கபரப்ப்ரஹ்மணேநம:

ஸ்ரீ மத்

துக்காராம் சுவாமிகள் சரித்திரம்.

பத்தாமத்தியாயம்.

காப்பு.

மிக்காரொப்பார் - மேவலுறுநம
தக்காரக்கணி - அடியடைகுதுமே.

ஸ்தோத்திரங்கள்.

ஸ்ரீ தரா! க்ஷீராப்தி என்னுங் கருணாநந்தசாகரத்தில் சயநித்துக் கோலங்கொண்டு எழுந்தருளி யிருக்கும் தேவபிரானே! ஜெயலட்சுமீ மநோகரா! ஜெயஜெய விட்டலா! தேவகீதனயா! அபய வரதா! அடியார்கள் திறத்தில் அன்புபாராட்டிவரும் ஆதியஞ்சோதியானே! பேதையரிற் கடைப்பட்ட இப்பெரும்பேதையேனைப் பிரகிருதியின் மாயாசம்பந்தத்திற் சிக்கவிடாமல் காப்பாற்றி யருள்வாய் கருணையானே! உலகினருக்கு சுகுணமுடையஸ்திரீயை வாய்க்கச்செய்தால் அவள் மோகத்திலாழ்ந்து கெடுவார்களென்றெண்ணி துர்க்குணமுள்ள மாதர்கள் வாய்க்கும்படிச்செய்து உன்னை யெண்ணுவிக்கின்றனை. சற்புத்திரர்களையும், தந தான்னியங்களையுந் தந்தால் அகங்கார மமகாரங்களும் ஆணவமும் மிகுத்து நம்மைக் கனவிலும் எண்ணார்களென்றுன்னி, துர்மார்க்கப் புதல்வர்களையும், ஆதாரத்துக்குவேண்

டிய அளவு சம்பத்துமீந்து காப்பாற்றுகின்றனே. ஏ தயாநிதீ! துர்மார்க்க ஜெநங்களைக்கொண்டு சந்மார்க்கத்தை யவலம்பித்த சாதுக்களைப் பரிகாசஞ்செய்து வைக்கின்றனே. உன்பால் அன்பு மிகுத்துள்ள அடியார்கள் சத்துவாமிசங்களை யேற்றுச் சீர்மைபெற்றுஉன்னடிநிழலில் வாழ்ந்து வுய்வதற்காக இப்படியெல்லாம் பலபல விநோதங்களை நடத்துகின்றனே. சீர்மை நீ நினைத்தபடியே பெற்ற மேன்மக்கட்கு உன்னருமைத் திருநாட்டில் இடந்தந்து, நித்திய முத்தர்களோடு அவர்களையொன்றுவிக்கின்றனே. ஒப்பிலாத் தனிமுதல்வனே! வியாச-பாராசர-சுகநாராயணாதி பரம முநிகணங்களால் பாராயணஞ் செய்யப்பட்டிருக்கும் சகஸ்திர நாமங்களில்"பயகிருத்திய நாசநன்" என்றொரு திருநாமம் விளங்கிவருகிறது. அந்தத் திருநாமத்தால் தானே உன்னுடைய கீர்த்திப் பிரதாபங்கள் செவ்வையாய் விளங்குகிறது. சற்குணநிதியே! அத்தகைய அற்புதகுண சேஷ்டிதனை உனக்குத் திரிகரணசுத்தியாலும்வந்தனஞ்செய்யாநின்றேன்.என்னையும் ஒருபொருளாக எண்ணி, என்னிதயத்தில் உறைந்து, எவ்வுயிரினும் மிக்கசீரியராகிய உனதன்பின் மிகுந்த ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகளுடைய மேன்மைதங்கிய கீர்த்திகளை, சிறியராயிவ்வுலகில் அறிவின்றி வாழும் மானிடர்களுக்கு உண்டுகளித்து உய்தற்கேற்ற இன்னமுதாய் வழங்குமாறு வெளியிட்டருள்வான்கடைக்கண் பார்ப்பாய் கருணையங்குன்றே! வேதாந்த விழுப்பொருள்மேல் விளங்கியருள் விளக்கே! என்று பிரார்த்தித்து, சரித்திரஞ் சொல்லத்தொடங்குகிறார்.

ஸ்ரீ ஹரிவாசரமாகிய ஏகாதசியினிரவை, ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகள் நல்லிரவாக பஜனை காலக்ஷேபத்தால் கழித்து, பொழுது விடிகிற தருணத்தில் தீபாராதநமேந்தி தேவதேவனுக்கு மங்களங்களைப்பாடி முடித்து, அங்கிருந்தபக்தியுடையோர்கட்கெல்லாந் தக்கபுத்திகளைச் சொல்லி, துவாதசியின் பாரணைப்போது நெருங்கினமையால் எல்லாருக்கும் விடைகொடுத்து அனுப்பிவிட்டு, தாஸரும் இந்திராயணி நதிக்கெழுந்தருளி, காலக்கடனை முடித்துக்கொண்டு நீராடி, திருநாமமணிந்து அநுஷ்டாநம் முடித்துக்கொண்டு ஸந்நிதாநத்திற்குப்போய், பூஜாவிதிகளை முடித்துக்கொண்டிருந்தார். இங்கு ஜீஜாபாயம்மாள், விடியற்காலையெழுந்து, வீடுவாசல்களைச் சுத்திசெய்து, துவாதசி பாரர்யணத்துக்கு ஆகவேண்டிய அடிசில் சமைத்துக்கொண்டிருக்கிறபோது, பஜனைகாலக்ஷேபத்தில் அன்றிரா ஈடுபட்டிருந்தவர்களிற் சிலர்வந்து, ஜீஜாவைக்கண்டு வணங்கி, அம்மா! இராத்திரி யிரண்டு திருடர்கள் தங்கள் வீட்டில்நுழைந்து, எருமை

மாடுகளை யவிழ்த்து ஓட்டிக்கொண்டு போனார்கள். பகவான் அவர்களை வழிமடக்கி மாடுகளைத் திருப்பி மறுபடியுந் தோழத்திற்குக் கொண்டுவந்து கட்டும்படிச்செய்து அவ்வளவிலே அக்கள்வர்களைப் போகவிடாமல், அவர்களையுங் கொண்டுவந்து, உமது கணவனாராகிய தாஸர் திருவடிகளில் வீழ்ந்து அபசாரத்தை க்ஷமிக்கும்படிப் பிரார்த்தித்துக்கொள்ளவுஞ் செய்தார் என்று சொன்னார்கள். அவற்றைக்கேட்ட ஜீஜாபாயம்மாள் ஆநந்தமிகவுங்கொண்டு, ஓகோ! கரியன் இந்தக் குடித்தனத்தின்மீது இவ்வளவு கருணை வைத்திருக்கின்றானா? இவ்வளவு கிருபை எங்கள்மீதிருந்தபோதே நானும் குழந்தைகளும் இனி குறைவின்றி வாழுமவர்களாயினோம் என்று மநக்களிப்புற்று, பாரணைக்குரிய பாகங்களையெல்லாஞ் செய்துவைத்து, தமது நாயகரை அதிக விநயத்துடன் பாரணைசெய்துமுடிக்க வரவழைத்து, மிகுந்தவணக்க மரியாதைகளுடனேயும் உபசாரத்துடனேயும் ஒருசொம்பு பாலை முன்னதாகக் கொண்டுவந்து கொடுத்து, இதனை முன்முதல் அருந்தும்படி பிரார்த்தித்தார். பிரபந்நராகிய துக்காராமர், தம்மனையாட்டி என்றுமில்லா மரியாதை உபசாரங்களோடு உபசரியாநின்றாள்; இன்றளவு நம்மீது கடுகடுத்தவளாயும், சுளித்த முகமுடையவளாயும் இருந்ததன்மைகள் யாவும் ஒழித்தாள். இதற்குக் காரணமேதோ தெரியவில்லை. நம்பால் கருணை விளைந்தாப்போல் காணுகிறது என்று நினைந்து, தந்நாயகியைப் பார்த்து, எனக்கொருசொம்பு பாலைக்கொடுத்து உண்ணச்சொல்லுகிறாய். இப்படி நானுண்ணமாட்டேன். நித்தநித்தம் ஒவ்வொரு சொம்பு பாலமுதம் சுவாமிக்குக் கொடுப்பதாக உறுதிமொழி தருவாயேல் நான் உண்ணுகிறேன் என்று சொல்ல, அவ்வம்மையும் அவ்வாறே யாகுக என்று உறுதியாய்மொழிந்து, வேறொரு சொம்பு நிறைய பாலைக்கொண்டுவந்து, கொடுக்க, அதனை யேந்திக்கொண்டு சந்நிதாநத்திற்குவந்து, பகவானுக்கு ஆராதனைசெய்து வணங்கிஅப்பாலை யுண்ணும்படிப் பிரார்த்திக்க, பக்தபரிபாலனும் தாஸரீந்த பாலமுதையுண்டு அவரைப்போகவிட, துக்கா தமது மாளிகைக்குத் திரும்பிவந்து, பாரணைசெய்து, போஜனமுண்டு, ஆநந்தபரிதராய் முன்போல் வாழ்ந்துகொண்டிருந்தார். பிறகு தாம் தம்மனையாட்டியிடம்உறுதிபெற்றபடியே நிநதிநம் பாலமுதை பகவானுக்குச் சமர்ப்பித்துக்கொண்டிருக்கையில், இவ்விசேஷத்தை ஊராரும் மற்றவர்களுங்கேட்டு அதிசயித்தவர்களாய்க் கொண்டு, இவர் அவதார புருஷ சிரேஷ்டர்; இவருடைய பிரபாவம் வரவரதோன்றா நின்றது? இன்னும் எவ்வளவோ அற்புத மான்மியங்களெல்லாம் நடக்கப்போ

கின்றன. அவையெல்லாம் வெளிப்படக் காணலாமென்று யோசித்துக்கொண்டவர்களாய், தாங்களும் பகவத் விஷயத்திலும் பாகவத விஷயத்திலும் அன்பு பாராட்டிக்கொண்டு வந்தார்கள்.

சிலநாள் கழித்து ஆவலி ஜீஜாபாயம்மாள் யோசிப்பதாவது— நமதுகாதலர் சுவாமிக்கென்று பிரதிதினமும் பாலைக்கொண்டுபோகின்றார்; சுவாமியோ சிலாரூபமாயிருக்குமவர்; இவர்தரும் பாலையெப்படியுண்பார்? இது ஏதோ சூதாய்க்காணுகிறது; வேறுயாருக்கோ கொடுத்து சுவாமி யுண்கிறாரென்று நம்மிடஞ் சூளுரைக்கின்றார். இதனைச் சோதிக்கவேண்டும் என்று யோசித்து அக்கம்பக்கங்களிலிருக்கும் அவர்களுக்குந் தெரியச்சொல்லி, அவர்களுஞ் சந்தேகிக்கக்கண்டு, தமது குமார்த்தியாகிய பாகீரதியானவள் தனதுதந்தையுடனே தினமுங் கோயிலுக்குப் போய்க்கொண்டு இருப்பவளாகையால் அக்குழந்தையை யழைத்து, நல்ல வார்த்தைகளைச்சொல்லி, அம்மா! நீ உன்னுடைய தந்தையோடு பிரதிதினமும் கோயிலுக்குப் போகின்றனையே அங்கே உன் தந்தை பாலைக்கொண்டுபோய் என்னசெய்கின்றார்? என்றுகேட்க, அந்தக்குழந்தையுங் குதலைச்சொல்லால், என்னுடைய தகப்பனார் நித்தநித்தம் பாலைக்கொண்டுபோய் சுவாமிக்கு அமிசைபண்ணிக் கொடுக்கின்றார். சுவாமியும் சொம்பை கையிலேந்திக்கொண்டு பாலைக்கொஞ்சஞ் சாப்பிட்டு மறுபடியும் நாயனு கையில் சொம்பைக் கொடுக்கிறார். அதிலிருக்கும் மற்றப்பாலைத் தாமுங்கொஞ்சம் சாப்பிட்டு என்கையில்கொடுக்க நானும் மீதிபாலைக் குடிக்கிறேன். இப்படி மூன்றுபேருஞ் சாப்பிட்டுக் கொண்டு வருகிறோம் என்று சொல்லியது. அக்குழந்தை சொன்னவற்றைக் கேட்டு, இதுமிகவும் ஆச்சரியமா யிருக்கின்றது; பெண்ணுஞ் சாப்பிடுகிறதாகத்தான் சொல்லுகிறது; இதுபொய்யுரைக்குமா? இதை நாமேநேரில் பரிக்ஷித்தாலொழிய திருத்தியுறாது என்று எண்ணி, சிலநாள் கழிந்தபிறகு, தமது நாயகரைநோக்கி, இன்றையதினம் பாலமுதை நான்கொண்டுபோய் சுவாமிக்குச் சமர்ப்பித்து வருகிறேன் என்றுசொல்லி, காய்ந்துகொண்டிருந்தபாலைச் சொம்பில் மொண்டு ஏந்திக்கொண்டு கடுகடுத்த முகத்துடன் அதிகவேகமாகப் புறப்பட்டாள். இச்சங்கேதங்களை ஸ்ரீமந்நாராயணனறிந்து, ருக்குமணீ பிராட்டியைப் பார்த்து இன்று ஆவலி தன்கணவனுடைய திருட்டுத்தனத்தைப் பிடிப்பதற்காக வருகின்றாள். இவள் மகாக்ரூரமுங் கடினமும் உடையவளானதால் இவளுக்கு அஞ்சவேண்டியிருக்கிறது என்றுசொல்ல, ருக்குமணியும் நீர் அஞ்சவேண்டியது கடமையே! பாலர்கள் பிதாக்களைக் கிள்ளுவதும், அடிப்பதும், உதைப்பதும்,

பிதாக்களுக்கு உகப்பாகவிருக்கும். அதுபோல் ஜீஜாவுக்கு பயப்படாமல் மற்றியாருக்கு பயப்படபோகிறீர்? சூரியன் மின்மினிப்பூச்சிக்கு அஞ்சுவதுபோல் உமது மருமகளுக்கு நீர் அஞ்சவேண்டியதுதான். நீரே மருமகளுக்கு பயப்படும்போது உமது புத்திரனாகிய துக்கா எவ்வளவு பயமுறுன்? இப்பேர்ப்பட்ட பெண்ணை என் மணம் புணருவித்தீர்? மணம்புணர்வித்த தோஷத்தாலே எதுவந்தாலும் அநுபவித்தே தீரவேண்டியது என்று மாறுரைக்கக் கேட்ட மாதவன், நீயும் ஜீஜாவுடன் சேர்ந்தனைபோலும் என்று ஜெகந்மாதாவோடு பரிகாசம்பேசிப் புன்னகையினரா யிருக்கும்போது ஆவலியுஞ் சந்நிதியிற்புகுந்து, சுவாமிக்கெதிரில் நின்று பாலைக் கையிலேந்திக் கொண்டு, என்னுடைய நாயகர் வீட்டில் காரியமாயிருக்கின்றார்; இந்தப்பாலைச் சீக்கிரமாகக் குடித்துவிட்டுச் சொம்பைத்தாரும்! என்று சொல்லக்கேட்ட பகவான அசைவறவிருந்தார். இதை நோக்கி ஜீஜாபாய், நமதுபுருஷன் திநநித்தம் யாருக்கோ பாலைக்கொண்டுபோய் கொடுத்துவிட்டு பகவான் சாப்பிடுகிறார் என்று பொய்சொல்லுகிறார். யாரேனுங்கேட்டால் சுவாமியே வுண்ணுகிறாரென்று சொல்லும்படி, நம்முடைய பெண்ணுக்கும் சொல்லிவைத்தாப்போல் காணுகிறது. அப்படி சுவாமியுண்பது உண்மையாயின் நம்முடைய கையிலிருக்கும் பாத்திரத்தை வாங்கி யுண்ணுரா? இவர் சிலாரூபமாயிற்றே எப்படி யுண்பார்? வெளியைப் படிக்கொண்டளப்பதுபோல நம்ம நாயகரும் குழந்தையும் பொய்யே சொல்லுகின்றார்கள்; என்றும் பொய்யறியாதவர் பொய்யையுங் கற்றுக்கொண்டார். இதனைச் சற்றுநேரமிருந்தாவது சோதிக்கவே வேண்டும் என்று நினைத்து ஸந்நிதியிலே தானே தங்கியிருந்தார்.

அவ்வளவில், இருபதிநான்கு பிரகிருதி தத்துவங்களுக்கு சாக்ஷிபூதனும், ஜீவகோடிகளுக்கு ஆதாரனும் விளங்கும் அகிலலோகநாதன் என்ன நினைக்கின்றானென்றால்:—இவளுக்குப் பரவசமான பக்திகிடையாது; எப்போதும் நம்மீது பொறாமையும் குரூரமுங் கொண்டவளா யிருக்கின்றாள்; இப்பேர்ப்பட்டவள் கொடுப்பதை யுண்ணலாகாது; உண்ணுவிட்டாலோ நம்பக்தனை இமிசித்துவிடுவாள்; அவன்பரமபதம்வருகிறவரையில்இவளிருக்கவே வேண்டியது. ஆதியில் பிரமாவுக்கு நாம்போதித்த அநந்த சாகைகளின்படி இவளிடத்திலும் ஒருவித நியாயமிருக்கிறது. அந்த நியாயமாவது—பிரீதியுடனவது, பிரீதியில்லாமலாவது நம்மையும் நம்முடைய ரூபத்தையும் எண்ணினவர்கள் எண்பதுகோடி சங்கற்பங்களையும் நமக்கு ஒப்புவித்தவர்களாகின்றார்கள்; அவர்களுக்கும் பரமபதம் அருளுவே

னென்று போதித்தருளின நியாயமாகும். இவளும் ஜாக்கிரதை - சொப்பநம் - சுஷுப்திகளென்னும் மூன்று அவஸ்தைகளிலேயும் கொண்டிருக்கிற எண்ணமானது தன்னுடைய புருஷனை நான் கெடுத்தேனென்றும், நான் தன்னுடையகுடும்பத்திற்கு விரோதியென்றும் ஸ்திரமா யெண்ணப்பட்டிருக்கிறது. இப்படி துரெண்ணங் கொண்டவளாயினும் துராபிப்பிராயத்தாலேனும்சதா நினைத்துவருகையாலும் இவளும் ஓர்வித பக்தியுடையளென்னத் தடையிலது. ஆதலால் இவள் தரும் பாலமுதை யுண்பதில்குற்றமில்லை என்று சங்கல்பித்துக் கொண்டிருக்கும்போது இவ்வாண்டவனுக்கு எதிரில் நிற்கின்ற ஜீஜாபாய் என்ன நினைக்கின்றாள் என்றால்—இவர் ராஜாதிராஜரென்றுநம்முடைய தந்தையும் காதலருஞ் சொல்லக்கேட்டிருக்கின்றோம். இராஜாவுக்கு உபசாரம் ஏவலாளிகளால் எவ்வளவோ நடக்குமல்லவா? அவ்வளவு உபசாரத்துடனே உண்பவர் நாம்நம்முடைய மௌட்டியத்தால் உண்ணெனக் கொடுத்தால் கையில்வாங்கியுண்பாரா? இவர் உண்ணவேண்டுமாயின் ஏவலாளர்கள் ஊட்டினால்தான் உண்ணுவர். தகுந்த ஏவல் நாம் செய்யாமையினாலேதான் உண்ணாமல் மௌநமாயிருக்கிறார்போல் காணுகிறது. நாமாவது ஊட்டலாமென்று தமது கையிலிருந்த சொம்பைத் தூக்கித்திருப்பவளச் செவ்வாயில் திருவதரத்திற்படவைத்துச் சாய்ப்பாக ஊட்ட, அதனைக் கோகுலதிலகன் கொஞ்சம் உட்கொண்டு, சூடு அதிகமாயிருப்பதற்காகவென்று சிரமசைக்கி, சூடாயிருக்குஞ் சொம்புபட்ட திருவதரத்தினின்று ஒரு கொப்புளத்தையும் உண்டாகச்செய்தான். அதை ஜீஜாவறிந்துபயந்தவராய், அடியம்மா! இவனை நான் சிலாரூபவானென்று அறிந்திருந்தேன்; பிராணனிருக்கிறது. சொம்பின் சூடுபட்டவிடத்தில் கொப்பளமும் உண்டாகச்செய்து காட்டினான்; இவன் பூதகி முலைப்பாலுண்ட பிரானடீ! பதினாறாயிரங் கோபஸ்திரீகளுடனே கிரீடைகள் விளையாடி மகிழ்ந்திருந்தவனாகையால் இவனை நம்பப்போகாது. எந்தெந்தவேளைக்கு எப்படியெப்படி யிருக்கவேண்டுமோ அப்படி யப்படியெல்லாமிருப்பான். நமது நாயகருக்கு ஸ்தூல ரூபத்தைக்காட்டி, மற்றவர்களுக்கெல்லாம் சிலாரூபங் காட்டிக்கொண்டிருக்கின்றான். இதனாலேதான் எப்பேர்ப்பட்ட பெரியவர்களுஞ் சிறியவர்களும் இவனுக்கு அஞ்சுகிறார்கள். மற்றுஞ்சிலர் இவன் நாமஞ்சொல்லவே பயப்படுகின்றார்கள். இவனைப்பற்றி நாமும்பயப்பட்டே நடக்கவேண்டியதே என்று நினைத்துத் தமது மாளிகைவந்து சேர்ந்தார்.

இங்ஙனிருக்க, ஆவலி சுவாமிக்கும் பால்கொண்டேகின பிறகு அடியரில் தலையாகுமன்பர், மனையிலிருந்த வண்ணமே மாநசீகமாய்

மார்தவனைவணங்கி, அவனுடைய லீலாரசங்களில் ஈடுபட்டு ததேக நிஷ்டராய், நாதமியல்லையைக்கடந்து சொரூபமெல்லையில்இன்பங்களை யநுபவிப்பவராய் ஜாக்கிரச் சொப்பந தசையூன்றி நிற்கையில் ஒரு தனிமுதல்வனாகும் உபேந்திரன் அத்திசையில் தாஸருக்குப்பிரத்தி யக்ஷக்காட்சி தந்து, நீ யிவ்விடஞ் சௌக்கியமாயிருக்கின்றனை; உன் னுடைய பெண்டாட்டி கொஞ்சமேனும் இரக்கமில்லாமல் கொடுஞ் சூடானபாலைக் கொண்டுவந்து என் வாயில் வைத்து உண்பித்தாள்; நானும் ஒரு முனைருண்ட அளவிலே வாயுந்தொண்டையுஞ் சுடப்பட் டன; உதட்டில் கொப்புளமும் உண்டாகிவிட்டது. அந்தக்கொடிய சூடானபாலையுண்டானமாத்திரத்திலே தேகமெங்கும்வேர்த்து மிகு சிரமமடைந்தேன். என்சிரசுஞ்சூட்டைப்பொறுக்காமல் வளைவுகொடு த்தது. கொப்புளமும் பாதிக்கின்றது இதோ பார்! என்றுகாட்ட பிரபந்ந திலகரும் அவ்வடிவுகளைக்கண்டு கொலைநடுக்கங்கொண்டு துடிதுடித்து, சுபாவமானஜாக்கிரதையடைந்து பார்க்கும்போது எதி ரில் தம்மனைவி யிருக்கக்கண்டு, அவரைப்பார்த்து நீ மிகு சூடுள்ள பாலைக்கொண்டுபோய் சுந்தரேசுவரனுக்கு ஊட்டி அத்தால் சுவாமி தத்தளிப்புக் கொள்ளும்படியாகவும், அவருடைய சிரசுவளையவும், திருவதரத்திற்கொப்புளமுண்டாகவும், இப்படி அகிருத்தியங்களைச் செய்யலாமா? இது உனக்கு தருமமா? என்று கேட்டதற்கு ஜீஜா பாயம்மாளும் தன் நாயகரைப் பார்த்துச் சொல்லுகின்றார்:—

அந்தப் பாற்கடற் பள்ளியானுக்குச் சூடுள்ளபாலைக் கொண்டு போயூட்டினது உண்மையே; அவர்தலைவளைவுபட்டதும் உண்மையே; உதட்டில் தழும்பிண்டானதும் உண்மைதான். என்பாலால் தனக் கிவ்வளவு உபத்திரவங்கள் உண்டாயிற்றென்று நான் வராமுன்னிட் டே என்னிலும் முன்னாகவந்து இவ்வளவுசீக்கிரத்தில் கோள்சொல்லி விட்டுப்போய்விட்டானா? அவனுக்கென்பேரில் உண்டாயிருந்த மாச் சரியத்தைத் தன்னளவிலே போகவிடாமல் உனக்கும் என்பேரில் மாச்சரியம் உண்டாகச்செய்து வைத்துப்போனானா? அஃதிருக்கட் டும். கஞ்சனேவிய தாவாநலமானது தானின்றவிடத்திலிருந்து சுற் றிலுங் காததூரம் ஜ்வாலவீசி கோகுலத்தாரை பஸ்மீகரப் படுத் திக்கொண்டு வந்ததே; அப்பேர்பட்ட தீயவனலை யொன்றாகத்திர ட்டி விழுங்கினவனுக்கு என்பால் அதனினுஞ் சூடுண்டதாய்ச் சுட்டு விட்டதா? கொடுவிஷமுள்ள காளிந்தி என்னும் நாகமிருந்த மடுவில் குதித்து, அதனை வாலைப்பற்றி யிழுத்து முடிமேலடிகளை வைத்து நிர்த்தம்பண்ணி, அவனையடக்கி, அவனுடைய விஷஜ்வாலைகளை யுண்டு, அவனையும் அவனுடைய சந்ததியாரையும் அந்த மடுவைவிட்

டகற்றி, மடுவினைப் பரிசுத்தமாக்கி, அதின் ஜலத்தை யெல்லாரும உண்ணும்படி செய்து கீர்த்தி நிலைக்கப்பெற்ற கேடிலி, என்பாலின் சூட்டை பொறுக்கொணுமல் இதொருகோளமாக உம்மிடஞ் சொல்ல வந்தானே; இப்படிப்பட்டவனை என்னமாய் நம்புவது? இவன் சாதாரணமாய் வடவாநலம் எனனும் ஊழியத்தீயைக் கர்ப்பத்திலடக்கி க்ஷீராப்தியில் திருக்கண் வளர்ந்துகொண்டிருக்கிற இவன் இந்த ஊரில் குடியேறவந்து உமக்கும் எனக்குமே யாகவிடாமல் கலகங்கள் செய்யா நின்ருனல்லவா? இவனையா நாம் நம்புவது? இவ்வல்ப் சுடுகையைப்பொறுக்க முடிந்திலதென்று உம்மிடம் முன்னதாகவந்து சொல்லிவிட்டான். நீரும் அப்பெருங்கள்வனுடைய கள்ளத்தனங்களை யோசியாமல் என்னைத் தண்டிக்கவந்தீர். ஆகிலும், அடுப்பிற் காய்ந்துகொண்டிருந்த பாலைச்சொம்பில் ரொப்பிக்கொண்டுகையாளே தான் ஏந்திக்கொண்டுபோனேன். அதனாலென்னுடைய கையுங்கொப்புளிக்க வேண்டுமே? என்கையிலொன்றுங் காணேனே; நீர் பாரும் இரண்டு கையிலும் ஏதாவது கொப்புளமிருக்கிறதா? இப்படி யென் கையே பொறுக்கும்படி கொண்டுபோன பாலால் தனக்கு உபத்திரவங்களுண்டாயிற்றென்ருல் யார்தான் அதிசங்கை பண்ணமாட்டார்? புருஷனுக்கும் பெண்சாதிக்கும் ஆகவொட்டாமற் பண்ணுவோமே யாகில் எந்நேரமும் நம்முடைய காலிலே துவண்டு கிடப்பான் என்கிற எண்ணங்கொண்டு வேணுமென்றே கலகஞ்செய்திருக்கின்ருன். இல்லாவிட்டால் காலகூட விஷத்தையும், ஊழித்தீயையும் உண்டவன் என்னுடைய பாலின் அல்ப சூட்டினைப் பொறுக்கமாட்டானு? இத்தனையெல்லாம் எதுக்கு; உமக்கு அவன்பிரியன்எனக்குப் பிரியனல்லன்; அவனுடைய சூதுகளை நானறிவேன்; இவன் பாலியனுயிருக்கும்போது ஆய்ப்பாடியில் இடையர் வீடுகளில் விடியற்காலை யெழுந்துபோய் மாடுகளை யவிழ்த்துக் காடுகளுக்கு ஓட்டிவிட்டுவந்து இடையர்களையெழுப்பி மாடுகளறுத்துக்கொண்டு காட்டுக்குப் போய்விட்டதென்று ஒன்றும் அறியாதனைப்போல் சொல்ல, அவர்களுந்தொழுங்களில் மாடுகளில்லாமையைக்கண்டு அவைகளைத் தேடும்பொருட்டுக் காடுகளுக்குப்போக, அவர்களுடைய மனைவியர்களைத் தானிங்குதழுவி சுகாநந்தலீலையனுய் சந்தோஷித்திருக்குந் தன்மையினன். கன்றுகளின் வாலில் இடைப்பிள்ளைகள் தூங்குமவர்களுடைய குடுமிகளைக் கட்டிமுடிந்து இழுக்க வைக்குமவன். இப்பேர்ப்பட்ட அநந்தமாயங்களைத் திநதிநஞ் செய்துவந்தவனுக்கு நீரஞ்சவேண்டுமன்றி நானஞ்சமாட்டேன். என்சிரசுக்கு மிஞ்சின ஆஞ்ஞை யென்னசெய்யப்போகிருன்? தங்களுக்குப் பிறரால் மரண

மில்லாத வரப்பிரதானங்களைப் பெற்றிருந்து சுந்தோப சுந்தரர்களுக்காக ஒருபெண்ணை யனுப்பி, உயிரொன்று உடல்வேருயிருந்த அவ்விருவருக்கும் அந்தப்பெண்ணால் விரோதங்கள் உண்டாகும்படிச் செய்து, நொடிக்குள் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு இருவரும் சாகும்படிச்செய்தானே அதுபோல் உனக்கும் எனக்கும் வேறுபாடு உண்டாக்கிவைப்பான்; அதனால் நானுங் குழந்தைகளும் பரிதவிக்கப்போகிறோம்; இதுவல்லால் வேறென்ன செய்ய மாட்டுவன்? அப்பப்பா! அவனுடைய சூதுகளையறிய நான்கு வேதங்களை பல்லூழிகாலந் தவஞ்செய்யினும் அப்போதும் அவற்றிற்கும் எட்டப்படா! பிராணிகள் எவ்வெவ்வண்ணம் எண்ணுகிறார்களோ அவ்வண்ணமெல்லாமிருந்து அவர்களுடைய ரசஞ்ஞைகளை யிழுத்துக்கொண்டு, யாதினும் இல்லாதவன்போல் காணுநிற்கின்றான். இவனுடைய சூதுகளை யுணர்ந்து சிக்காமல் தப்பித்துக்கொண்டிருக்குமவள் யாரொருத்தியே; இனி பயப்படமாட்டேன்; எப்பேர்ப்பட்ட சூதுகளும் எனக்கு நிகரல்ல என்று இன்னம் அநந்தவகையாகச் சொல்லத்தொடங்கினாள்.

இவற்றையெல்லாம் சாங்கோபாங்கமாகக் கேட்டுக்கொண்டிருந்த தாஸர் பிரதியொன்றுஞ் சொல்லத் தகாதவராய், தமது அகத்தைவிட்டுப் புறப்பட்டு ஸந்நிதானத்திற்குள் வந்துசேர்ந்து, சுவாமியினுடைய தலை சாய்வுற்றிருப்பதையும், திருப்பவளத்திற் கொப்புளமுண்டாயிருப்பதையுங் கண்டு, இரண்டு கண்களிலிருந்து ஜலம் தாரைதாரைகளாக வடிய, தாயானவள் புத்திரனுக்கு அமுதமூட்டாமலிருந்தால் எப்படி கதறுமோ அதுபோல் ஓவென்று அலறி விம்மி விம்மி அழுது, இந்த அருமையான குற்றத்தை மன்னித்தருளவேண்டுமென்று கதகதத்த நெஞ்சினராய்ப் பிரார்த்திக்க, சுவாமியும், தன்னுடைய திருவதரத்திலிருந்த கொப்புளத்தை யுடனே மறைக்கவிட்டு, சிரசின் சாய்வு மாத்திரம் அவ்வாறே யிருக்கச் செய்தருளினான். சுவாமியின் திருமுடிமாத்திரம் முன்போல் நிமிர்ந்திராமல் சாய்ப்பாகவே யிருக்குமாறு ஏனருளினானெனில்:—ஆவலி ஜீஜீபாயம்மாள் உண்ணக்கொடுத்த பாலின் பெருமையையும், கொடுத்த ஜீஜாவின் ஏற்றத்தையும், உண்ட தனது எளிய நீர்மையையும் பின்புண்டாகப்போம் அடியார்களுங் கண்டு, தாங்களும் பக்திச்சிரத்தைகளில் மிகுந்து நற்கதிபெற்று வாழுகைக்கென்றே அவ்வதிசயத்தை அழியமாருமல் இன்றளவும் சாய்வுரு கழுத்துடையவனாக தேவுகாயில் விளங்கா நின்றான்.

இதுநிற்க, மற்றுஞ் சிலநாள் சென்றபின்பு, தேவர்பிரான் அருளுக்குப்பூரணபாத்திரராய்த் திகழ்தரும் இத்தெள்ளிய ஞானஸம்பன்னர் தன்னந்தனியராய் சாக்கன என்னும் ஆரணியத்திற்குப் போய், அங்கே ஞான சாக்ஷாத்காரங்கொண்டு தியானபரவசரா யிருக்கும்போது வால்முளைந்த கொசுகினங்கள் அவர் தேகமுழுதிலும் மொய்த்துக்கொண்டு தசையைப்பிடுங்கியுண்ணத்தலைப்பட்டன. அப்போது சுவாமிகள் காருண்ணியத்தை நினைத்தவராய் அவற்றையோட்டாமல், "உபகாரார்த்த மிதம்சரீரம்" என்னும் வாக்கியந்தன்னை நினைந்து, இந்தச் சரீரமானது பிறருக்கு உபகாரமாகவே ஜநித்தது. அது ஜநித்ததற்கு உகப்பாகப் பிறருபகாரத்துக்கு விநியோகப்படுத்தாமலும் ஈயெறும்பாதிகளுக்குப்பயன்படுத்தாமலும், நல்லுணவுண்டுபெருக்கவைத்து, ஆடையாபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு, நானென்றும் அகங்காரத்தை இதற்குக் காவல்வைத்து, நாட்டுமானிடரால் மதிப்பேற்றுத் திரிந்து முடிவில் நமனுக்குக் ஆளாய், கழுகு-காக்கை-நாய்-நரிகளுக்கு உணவாக்குதல் நமக்குத்தெரியாது. உடலையபிமானித்துக்கொண்டிருக்கும் இப்போதே தேகத்தை வேறு ஜீவன்களுக்கு உணவாக்கி அவைபோசித்து இன்புறக்காணுதல் எடுத்த சரீரத்தால் பெறும் நற்பயனுகும். இதுவல்லாம் வேறே தருமங்கிடைப்பதருமை என்று தமக்குள் தாமே மகிழ்ந்து புகவந்நாமத்தைப் பாராயணஞ்செய்து கொண்டிருந்தார். இவ்வதிசயத்தை அழகு திருவாளனுகிய அச்சுதனறிந்துகொண்டு ஓடோடியும் வந்து, வநங்களில் வசித்து வாழும் வேடுவனைப்போல் உருவெடுத்து, ஈச்சங் குருத்தொன்றைக் கையிலேந்திக்கொண்டு, வைஷ்ணவ வாக்கிரேசர் முன்னின்று, கொசுகுகளையோட்டி, வேண்டிய உபசாரங்களைச் செய்து, ஐயா! உம்மைப்பார்த்தால் சொகுசுடையவராகக் காணுகிறது. தேகத்திலெங்கும் கொசுக்கள் மொய்த்து எரித்துத் துன்பப்படுத்திவிட்டது. நான் வேடஜாதி, பரமசிவன் என்னுடைய குலத்திற் பிறந்தவர். இவ்வநத்தில் யாராவது வந்து சிரமையடைந்தால் அவர்களைத் தேற்றியனுப்புவது என்மரபினியல்பு. அப்படி யுபகாரஞ் செய்தலே யோர்பிழுதாக வைத்துக்கொண்டிருக்கின்றோம். ஆதலால் நான் உம்முடைய தேகத்தைப் பாதாதிகேசாந்தமாக என்னிருகைகளால் பிடித்துருவி உமது தேக பாதையைச் சௌக்கியப்படுத்துவேன் என்று தனது திவ்விய திருக்கைகளால் அமுக்குவதுபோல் தடவிக்கொடுத்து, கொசுகள் கடித்த பாதை நீங்கியதென்றெண்ணி மறைந்தருளினுன்.

அந்தச்சமயம் தாஸராகிய துக்காராம் சொரூப லக்ஷியார்த்தத்திலழிந்திருந்த சமயமாகையால் கொக்குகளும் மற்ற பிராணிகளும் விட்டலனுரும் விமலனது ரூபமாகக் காணவந்ததேயன்றி வேடரூபத்துடனே வந்து தமக்குபகரித்துத் தேற்றினவனுடைய சொரூபங் காணப்பெற்றவரல்லர். வேடனுடைய கரங்கள் இவர்தேகத்தில்பட்டவுடனே சொசங்கல்பமுண்டாய், சூரியன் அஸ்தமித்தானென்கிற கியாபகந்தோன்றி, அங்குநின்றும் பிரயாணப்பட்டு, தளர்ந்த நடையினராய் சந்நிதானம்வந்து, ருக்குமணீ ரமணர்களுக்குத் தீர்க்க நமஸ்காரங்கள்செய்து பிரார்த்திப்பதாவது—ஸ்ரீ ஹரீ! பாண்டுரங்கா! பதிதபாவநா! பயஹரணு! பவசாகரத்திலிருந்து என்னைக் கரை எற்றுவாய், என்னுடைய குடும்பம் வாழ்ந்தாலும் வாழ்வற்றாலும், சரீரத்திற்கு, நானுவித சௌக்கியங்கள் வந்தாலும் துன்பங்கள் வந்தாலும் உன்னுடைய சொரூப தெரிசனையை என்றும் மறவாமலிருக்கக் கருணைசெய்வாய், கஜேந்திரவரதா! ககவாகநா! கமலக்கண்ணு! இதனையல்லால் வேறொன்றும் என்மநமெண்ணகில்லாது. என்மநதினுடைய குற்றத்தை நானறிந்து, உன்திருவடியையெண்ணி நல்வழி நடக்க புத்தியைத் தந்துரக்ஷியும். சத்தியபாமை மநோல்லாசா! சச்சிதாநந்த போஜா! சான்றோரேத்துந் தேஜா! வேங்கடத்தெழில் கொளீசா! யாராவது என்னைநோக்கி உன்னுடைய பிரபாவாதிசயங்களைக் கேட்டால் என்னுடைய யிதயத்தில் தங்கியிருந்து, உன்னுடைய அருமையான கலியாணகுணங்களை யறிந்து அவர்களுக்கு உணரபோதித் தேற்றும்படியுஞ் செய்தருளவேண்டும். ஸ்ரீ இதரனே! கருணைகரனே! என்று தொழுது, அன்றிராத்திரி மூன்று ஜாமம் வரையில் வந்திருந்த பஜனைகோஷ்டிகளுடனே பஜனைகாலக்ஷேபங்களை நடத்தி, அவர்களுக்கெல்லாம் நல்லபுத்திகளைப் போதித்து, மங்களார்த்திசெய்து, அவர்களெல்லாருந் தங்களிருப்பிடங்களுக்குப் போய்விட்டபிறகு தாம் பதுமாசநமிட்டு உட்கார்ந்து பிரணவலக்ஷியார்த்தத்தை யநுபவித்துக் கொண்டிருந்தார்.

இப்படிக்கிருக்க, சிலநாள்சென்றபின் துக்காராமருக்கு மகாதேவனென்றும், விடோபா என்றும் இருந்த இரண்டு பிள்ளைகளில் மூத்தவனுகிய மகாதேவனுக்குநீர் துவாரத்தில் கல்லடைப்பு வியாதியைப்போல் கண்டு மிகவும் உபத்திரவமாகவிருக்க, அக்குழந்தையின் தாயாகிய ஆவலி, யாரென்ன சொல்லுகிறார்களோ அந்தந்தஔஷதங்களைக் கொடுத்தும், ஆயுள்வேத பண்டிதர்களைக்கொண்டு பார்க்கச் செய்தும், குலதெய்வங்களுக்குக் காப்புகள் கட்டியும் யந்திரங்கள் செய்யுமவர்களிடத்திற்கெல்லாங் கொண்டுபோய் மந்திரிக்கச்செய்

தும், விபூதியை மந்திரித்துப்போட்டும், சாந்திகள் கழித்தும் ஒன்றுனுங் குணமில்லாமல் நாளுக்குநாள் நோய் விருத்தியாவதை யறிந்து, மிகுதியும் வியாகூலப்பட்டவளாய், தன்னுடைய குழந்தை யிறந்து விடுவானென்று நிச்சயித்துக்கொண்டு, தன்தேகமும் மெலிவடைய ஆறு விசநமேற்று, என்ன யோசிக்கின்றாளென்றால்—சிச்சீ! நமது ஜெந்மமொரு ஜெந்மமல்ல; புருஷனைப்பார்த்தால் தேவபயித்தியம் பிடித்தவராயினர்; பிள்ளைகளாலேயாவது பிழைக்கலாமென்று பார்த்தால் அவர்களிலே யொருத்தனுக்குத் தீரா வியாதிசம்பவித்து மசாநஞ் சேருநாளுக்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். "கடந்த ஞாநியுங் கடப்பனோ மக்கள்மேல்காதல்" என்று சான்றோர் மொழிந்திருக்க எனதுநாயகர் எவ்வளவுதான் ஞாநவந்தரா யிருந்தாலும் பிள்ளைகள்பேரில் சற்றும் ஆவலில்லாதவராயிருக்கின்றார். ஒருபொழுதிலாவது பிள்ளைகள் எவ்விதமாயிருக்கிறார்களென்று விசாரிப்பதே கிடையாது. அவருக்கெண்ணமிருந்தால் அதருவண வேதாங்கங்களில் வல்லவனை கரியனுக்கறிவித்துப் பிள்ளைக்கு வந்தநோயைத் தீர்க்கச்செய்திருப்பாரே. பிள்ளைகளாலாவது ஜீஜா சுகப்படட்டுமென்கிற எண்ணமேனுங் கொண்டிருப்பாராகில் நமக்கு இத்துயரங்கள் வாராவே; அவ்வெண்ணமே அவருக்குக் கிடையாது; மடத்தாண்டிகள் அப்போதைக்கப்போது காலங்கழிப்பதற்காகக் களிப்படையும் வார்த்தைகள் பேசுவதுபோல் இவர் என்னிடம்வந்து அப்போதுமாத்திரம் மதுரமானமொழிகள் வசநித்து உடனே கரியனை மநதில் நினைந்துக்கொண்டுபோய் பஜனைசெய்வதுங் கூத்தாடுவதும் பாடுவதுமாயிருக்கின்றார். கரியன் சூட்டுப்பாலுண்டமைக்காக உதட்டில் கொப்புளங்கண்டதே அதற்காகமாத்திரம் உருக்கங்கொண்டவரா யென்னைத் தண்டிக்க முனைந்து, கண்களில் நீர்ததும்ப, தேக நடுக்கங்கொள்ள ஓடோடியும்போய் உபசாரங்கள் அநந்தஞ்செய்து, கொப்புளத்தைச் சுகப்படுத்திவிட்டார். அதுபோல இந்தத் தன் குழந்தையின் மீதும் விசுவாசம்வைத்து என்னநோய் ஏதுநோயென்று விசாரித்து ஏதாவது சிகிச்சை செய்கின்றாரா? இதோ இந்தவூரில் பெரியசுவாமிகள் என்று பேர்பெற்றிருக்கும் மம்பாஜி என்கிற பிராமண சந்நியாசியானவர் தமது மனைவிமக்களுக்கு நோய்வந்தால் தமக்கு வந்ததுபோலெண்ணி அது தீருந்தனையும் அந்ந ஆகாரங்களைக் கொள்ளாமல்.தகுந்த முயற்சிகளையெல்லாம் எடுத்துக்கொண்டு தீர்த்துவிட்டு அதன்மேல் மற்றகாரியங்களில் புகுவார். இவருக்கென்ன வாசிப்பு தெரியாதா. பூசைக்குத் தொடங்குவாராகில் மாலையில்தான் முடித்துப்புசிப்பார். இப்பேர்ப்பட்ட தெள்ளிய ஞாநிக்கே

பெண்டுபிள்ளைகள் திறத்தில் இவ்வளவு சிரத்தையிருக்கிறதென்றால் இவருக்கு எவ்வளவு இருக்கவேண்டும்? என் தலையிலெழுதிய எழுத்து என்னையும் குழந்தைகளையும் என்ன ஏது என்றுகூட விசாரிக்க அறியேன். இதற்குத்தானா என்னைப் பெண்ணாய்ப்பிறக்கவைத்தது பாழுந்தெய்வம்! என்றிவ்வாறெல்லாம் யோசித்து வியாதிஸ்தனாகிய பிள்ளையைப்பார்க்க வருமவர்களிடத்திலும் அக்கம்பக்கத்தாரிடத்திலும் எல்லாஞ்சொல்லி முறையிட்டுக்கொண்டு துயரமிகக் கொண்டதில் அவ்வூர் ஜெனங்களெல்லாம் தாஸருடைய பிள்ளைக்குத் தீராவியாதியுண்டாயிருக்கிறதென்று அறிந்து வந்துபார்த்து, குழந்தையின் துர்க்கதியைக் கண்டு, இவனினி பிழைக்கமாட்டான்; வீணிலேன் வைத்தியத்திற்கும் மற்றவற்றிற்கும் பணஞ்செலவு பண்ணுகிறீர் என்று புத்திசொல்லத் தொடங்கவே ஆவலித்து மறுபடியும் முன்னில்லாத் துயரமுமுண்டாய், ஓ! என்று கதறிவீழ்ந்து, இவ்வூரில்வந்திருக்கின்ற குலத்துரோகியாகியகரியனுடைய வஞ்சநாகாரியமாக இது காணப்படுகிறது. என்னுடைய குடித்தனத்தைத் தலையெடுக்கவொட்டாமல் செய்துகொண்டுவருவதுமன்றி என்பிள்ளையையுங் கொல்வதற்காகத் தீராரோயை யுண்டுபண்ணி யிருக்கின்றான். எங்களால் இவனுக்கு ஒரு துன்பமும் அணுகாதிருக்க இவன்மாத்திரம் பெருந்துரோகியாய் எங்களைத் துன்பப்படுத்திக்கொண்டுவருவானேன்? எங்கள் குடித்தனத்தின்பேரில் இவனுக்கேன் இவ்வளவு பொறாமை? நாங்கள் இவனுக்கேதாவது தீங்குகளைச் செய்தோமா? இவனை யாருங்கேட்பாரில்லையே! இச்சந்ததியைக் காப்பாற்றிக்கொண்டுவந்த குலதெய்வமும் இச்சதிகாரனோடேதான் சேர்ந்ததே! இப்போது வைத்தியர்களுங் கைவிட்டு விட்டார்களே! இனி என்ன செய்யப் போகிறேன்? என்று அலறியலறியழுது குழந்தையின்பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு பிரலாபித்து, பிள்ளையின் முகத்தில்தன்னுடைய முகம்வைத்துக் கண்ணீர் துளிக்கவிட்டு, உனக்கு என்ன வேண்டுமடா என்னருமைச்சுதனே! என்றுகேட்டு, அவன் மறுமொழி சொல்லாதிருக்க மீளவும் பெருங்குரலிட்டு விக்கிவிக்கியழுது, பிள்ளையின் கால்கைகள் வீங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்து, தீராச்சிந்தையினளாய், ஆ! தெய்வமே! எனக்குயாருந் திக்கில்லையே! மகனுக்கு மலஜலங்கள் பந்தப்பட்டு, உடலமெங்குழுதி, சுவாசமடங்கிவிட்டு, விக்கலும் உண்டாயிருக்கிறதே; இக்கொடுங் கோரங்களையெல்லாம்அநுபவிக்கப்பூருவத்தில்என்னபாபம்பண்ணியிருந்தேன்? சிசுவதைசெய்திருந்தேனோ?உண்டவீட்டில்இரண்டகஞ்செய்தேனா? பிறருடைமை யபகரித்தேனா? பொய் சூதுகளால் யாருடைய குடி

யையாவது கெடுத்தேனா? புருஷன் பிள்ளைகுட்டிகள் பட்டினியா யிருக்க நான்மாத்திரம் நல்லுணவுகளைச்செய்து உண்டுகளித்தேனா? மற்றியாதுசெய்தேன்? ஏதோ ஒரு தீக்காரியஞ் செய்திருப்பதினால் தான் இந்த ஜென்மத்தில் இந்த அலங்கோல துக்கங்கள் வாய்க்கப் பெற்று, கண்ணுங் கண்ணீருமாய் நின்று பரிதபிப்பது? இனி துக் கப்படுவதில் பயனில்லை. மஹாதேவன் பிழைக்கப் போகிறதில்லை; இன்னமொரு நாழிகைக்குள் இறப்பது நிச்சயம்; குழந்தைக்கு முடிவுநாள்வாய்க்கப்பெற்ற இச்சமயத்திலாவதுபெற்றதகப்பன்வந்து விசாரித்தாரா? பசியெடுத்தால்தான் வருகின்றார்; வந்தவராகிலுஞ் சற்று மனையில் தங்கவேண்டுமே அதுவுங்கிடையாமல், சாப்பாடு சாப்பிட்டுவிட்டுக் கை கால்களைச் சுத்திசெய்துக்கொண்டு வீதியிலே சென்று துடைத்துக்கொண்டே கரியனிடத்திற்குப்போய் கும்பைக் கூட்டிக்கொண்டு பாடுவதும் ஆடுவதுமாய் தம்முடைய கோலாகலத்தி லிருந்து காலங்கடத்துகிறார்; இப்பேர்ப்பட்டவரையும் எனக்குஆண் படையாளுகை வாய்க்கச்செய்யுமா பாழ்த்ததெய்வம்! கரியனுக்கும் அவன் தேவிக்கு மாத்திரம் ஏதாவது துன்பம் வந்ததாக இருந் தால் அப்போதிவர் அலையுமலைச்சலைச் சொல்லிமுடியாது. கடந்த மாதத்தில் யான் என் கைப்பொருத்த சூட்டையுடைய பாலைக் கொண்டுபோய் புண்ணியத்திற்காகக் கரியனுக்கு ஊட்ட அந்த மாரீ சக்காரன், அந்தபால் சூடாயிருக்கிறதென்று தலையைச் சாய்த்துக் கொண்டு, உதட்டில் கொப்புளத்தை யுண்டாக்கி, நான் வருமுன் னமே வந்து வீட்டிலிருந்த இவருக்கு அறிவித்துப்போக, இவரும் ஓடோடியும்போய் அவனடிகளில் வீழ்ந்து வீழ்ந்து சேவித்து, என் பெண்டாட்டிசெய்த குற்றத்தைமன்னிக்கவேண்டுமென்று கும்பைக் கூட்டிக்கொண்டு இல்லாத பாடல்களையெல்லாம் பாடவே அந்தக்கரி யன், கொப்புளத்தை மறைத்துக்கொண்டு, "ஆவலி சூடானபாலை யெனக் கூட்டினதால் தலை சாய்ந்துவிட்டது" என்றெல்லோருக்குங் காட்டி என்னை யவமானப்படுத்துவதற்காகவும், என்னை யெல்லோருங் கொடியவளென்று நிந்திப்பதற்காகவுமென்று. தலைசாய்ப்பைமாத்தி ரம் அவ்வண்ணமேயிருக்க வைத்திருக்கிறான். இப்பேர்ப்பட்ட சதி காரபாவிக்கு இவர் சகாயபாராயிருக்கின்றார். தன்கெர்ப்பத்தில் பிற ந்தபிள்ளை, சம்பாதிக்கும் பருவமுடையவன், இப்பேர்ப்பட்டவனுக் குக் கடுநோய்வந்தால் ஏனென்றுங் கண்ணெடுத்துப் பார்த்தவரல்ல. கரியனுடையபோதனையிலிருந்துகொண்டு பிள்ளையையும்மறக்கலாயி னார். என்குடித்தனத்தைக் கெடுத்து புருஷனுக்குந் தன்பைத்தி யம் உண்டாகச்செய்து, பிள்ளையையுங் கொல்ல எண்ணங்கொண்டு

வனு யிருக்கின்ருன். இப்பேர்ப்பட்ட காதகமுடைய கரியனை நான் விடமாட்டேன். நானே விட்டுவிடுவேனுகில் இந்த ஊரிலிருக்கும் மற்றவர்களையும் என்னைக்கெடுத்தாப்போலவே கெடுத்து, தான்மாத் திரம் உறம்பெற்றுவிடுவான். அவர்கள் குடித்தனங்களுக்கும் என் னென்ன தீங்குகள் விளையச்செய்து விடுவானே தெரியாது. என் பிள்ளையைக் கொண்டுபோய் அவனெதிரில் கிடத்திவிட்டு, சதிகார பாபீ! என்று ஒரே குத்தாய் அவனைக் குத்திவிட்டு, என்றென்றும் என் பேரிருக்கச் செய்துவருவேன் என்று அதிக ஆக்குருஷத் துடனே பிச்சுவாவை யொருகையிலேந்திக்கொண்டு, தன் நோயாளி யான குமாரனை மார்போடு சாத்திக்கொண்டு அதிகவேகமாகக் கோயிலைநோக்கி ஆவலிவரும்போது, ஜகதாதாரபூதனுகும் சருவேசு வரனறிந்து, திருவுள்ளத்தில் மிகுசந்தோஷங்கொண்டு, ருக்குமணீ தேவியைப் பார்த்து, இந்த ஆவலிஜீஜா என்னுல் தன்பிள்ளைக்கு நோயுண்டானதாயெண்ணி, என்னைக்குத்துவதற்காகப் பிச்சுவாவை யேந்திக்கொண்டு வருகின்ருள்; எனக்கு பயமாயிருக்கிறது. பூரு வம் சாதுகோடிகளை சம்ரக்ஷிப்பதற்காகவும், வேதாங்கங்களாகிற தரு மங்கள் முப்பத்திரண்டையும் சம்ஸ்தாபநம் பண்ணுவதற்காகவும், துஷ்கிருதர்களை விநாசப்படுத்துவதற்காகவும் கற்பங்கள் தோறும் அவதரித்துவந்தேனே! அந்த அவதாரங்களிலெல்லாம் இரணியன்- இரணியாக்ஷன்-இராவணன்-கும்பகருணன் - சுமாலி - மாலியவான் - சிசுபாலன்-தந்தவக்கிரன் முதலானுரெல்லாரும் ஈட்டி - தோமரம் - வில் - வாள் - கதை முதலிய ஆயுதங்களாலே என்னை இமிசிக்கத் தொடங்கியபோது நான் சற்றும் அவர்களுக்கு அஞ்சினவனும், மந தில் திகில்கொண்டவனுமல்ல. இக்காலத்தில் நமது பக்தனுகிய துக் காவினுடைய மனைவி யேந்திவரும் ஆயுதத்திற்கு அஞ்சாநின்றேன் என்று அமிர்தபாஷணங்களாகச்சொல்ல, ருக்குமணீபிராட்டியும் புன் னகைகொண்டு சொல்லத்தொடங்கினுள்.

தேவதேவோத்தமா! ஆவலியானவள் உன்னைக் குத்தநினைத் தது நியாயமே. இரவும்பகலும் ஓய்வு ஒழிச்சலில்லாமல், தீய அபிப் பிராயத்தாலேயாவது உம்முடைய சொரூபகுணநாமங்களை நினைந்து வருகின்ருள். அப்படியே அர்ப்பிதமும் பண்ணுகின்ருள். ஆகையி னுலேதான், காட்டில் இவள்காலில் முள்தைத்து வாதைபட நீர் போய் அதைப்பிடுங்கினீர். பிதுர்க்கடனுக்காகச்சாமான்களைத் தலை யிற் சுமந்துகொண்டுபோய் கொடுத்து, பிதுர்க்கடனை முடித்து, அவள்கையால் அந்நமுமுண்டீர். அவள் கொண்டுவந்தூட்டிய பாலை யருந்தி, சூடானபாலை மீந்தாளென்று அவள்பேரில் பழிசுமத்துவ

தற்காகத் தலை யிரங்கவைத்துக்கொண்டு இருக்கின்றீர். அவள் உம்முடைய பக்தனுக்கு அடிமையாயிருப்பவள், குடும்பத்தைத் சமாளித்துப்பிள்ளை குட்டிகளைக்காப்பாற்றும் வருத்தம் தனக்கேதெரியும். அதனால் அவள் படுந்துக்கம் பிறருக்குச் சகிக்கமுடியாது உம்முடைய பக்தன் எங்கேயாவது போய் கால்பணஞ் சம்பாதித்துக் கொண்டு வந்து அவள்கையில் கொடுத்துப் பிள்ளைகுட்டிகளைப் காப்பாற்றச் செய்கின்றானா? ஆண்பிள்ளையைப்போல் தானே வேண்டியவற்றைச்சம்பாதித்துக்கொண்டுதானே குடும்பபோஷணமும் பண்ண வேண்டியவளாயிருக்கிறாள். ஒரு குடும்பத்தைத்தாங்கியாதரிப்பது மானிடவர்க்கெளிதல்ல. இப்படி குடும்பத்தால் படாதபாடுகளெல்லாம் பட்டுக்கொண்டிருந்தும் உம்மை மறந்தவளல்ல. இரவும்பகலும் உம்முடைய திகிலும் ஏக்கமுமே பெரிதாய்க்கொண்டிருக்கின்றாள். இவற்றோடு தன்குமாரனுக்குந் தீராவியாதி சம்பவித்தால் எப்படி சகிப்பாள்? இந்தக்காலத்திலாவது உம்முடையடியான் பிள்ளையைப் போய்பார்த்துத் தேறுதலைச்செய்யாமல் உம்மையே சூழ்ந்துகொண்டிருந்தால் பெண்பிள்ளை யென்னதான் செய்யமாட்டுவாள்? தன்னாலும் பட்டுமுடியாமல், நீரிவ்வூரிலிருந்துகொண்டு தன்புருஷனைக்கெடுத்து, எந்நேரமும் உம்முடைய பயித்தியமே பிடிக்கவைத்திருப்பதினாலே உம்மைக் குத்தி மாய்த்துவிட்டால் தன்புருஷனுடைய துர்க்கெதிகள் நீங்கிவிடுமென்றெண்ணி குத்தி யிமிசிப்பதற்கு பிச்சுவா கொண்டு வருகின்றாள். உமதடியான் தான் உமதுபேரிலேயே யெப்போதும் வீழ்ந்து சாகுமவனைத் தீர்ந்தான். நீராவது நம்மதாஸன் எந்நேரமும்நம்மைத்தொழுதுகொண்டுதன் பெண்டுபிள்ளைகள் திறத்தில் லக்ஷியமில்லாமலிருக்கிறான். குடும்பம்போகிறகெதியென்ன என்கிற இரக்கஞ் சற்றாகிலும் வைத்து அவர் குடும்பத்துக்கு ஏதாவது உபகாரஞ்செய்து வருகிறீரா? இப்போது நோயில் கிடப்பன் உமது தாஸனுடைய மூத்தபிள்ளையாயிற்றே; அவன்படும்நோயின்பாதைக் காவது மனமிரங்கித் தீர்த்துவைத்தீரா? நீருமுமது தாஸரைப்போல் அந்தக் குடும்பத்திற்குச் சதிசெய்யத்தானே முனைந்தீர். உம்மைவிட வேறேதிக்கு அவனுக்கு யாரிருக்கின்றார்? விசுவம்பரன் முதல் எட்டுதலைமுறையும் உமக்கு அடிமையாகத் தானேயிருக்கின்றார்கள். எபபோது நமக்கடிமைகளாகின்றார்களோ அப்போதே தங்களுடைய சுக துக்கங்களில் தங்களுக்கு நசையில்லாமல் நம்முடைய சுகதுக்கங்களில் மநமூன்றினவர்களாகின்றார்கள். அங்ஙன் தங்கள் சுகதுக்கங்களில் ஊக்கந்துறந்து நமக்காகப் பாடுபடும்படியானவர்களுடைய சுகதுக்கங்களைப்பார்ப்பது நங்கடமையல்லவோ? பிள்ளை

1 0 9 1 9 1

யின் நன்மை தீமைகளைப்பார்ப்பது பிதாமாதாக்களுடைய கடமை யன்றோ? நமக்கடிமைகளானபோதே இச்சந்ததியாவும் நம்முடைய பிள்ளைகளல்லவோ? இவர்களுடைய துயரங்களைநாமோ பார்க்காவிட்டால் பிறர் யாவர் பார்க்கப்போகிறார்? செய்யவேண்டிய காரியங்களைச் செய்யாமல் தவிர்த்தால் யாவர்தான் வையார்? நீவிர் அறக்கைவிட்டதினாலல்லவா ஆவலி யுன்னைக்கண்ட கண்டவிடங்களில் வைதுதிரி கின்றாள்? நீர் நடத்தவேண்டிய காரியங்களையறிந்து நடத்தியிருந்தால் உம்மையவள் வையமாட்டாளல்லவா? அவள் வைதமைக்குமாத்திரம் மநஞ்சலித்துக்கொள்ளுகிறீர். இரணியன் முதலான ராக்ஷதர்கள் நாட்டை வளைத்துக்கொண்டு ராஜ்ஜியாபிஷேகம் பூண்டு, ஜெநங்களுக்கெல்லாம் தாங்களே பிரமங்கள்; தங்களைவிட வேறுபிரமமில்லை என்று துர்போதனைகளைப் போதித்து, உமதடியார்கள் இருடியர்களைக் கானகங்களிலோட்டி, அங்குந் தங்கவொட்டாமல் அலைச்சலுண்பித்து,உம்முடைய அவதாரரூபங்களைச்சித்திரங்களிலுமிருக்க விடாதே, முதலுக்கே மோசமாயுமது சொரூபங்களுக்குந் தீங்குகள் செய்து, உலகில் தாநதரும பரோபகாரங்களைப்பாழ்படுத்தி, ஞாநத்தையுங்கெடுத்து. தாங்களே சுயமானதேவர்களா யரசுசெய்து, உம்மைக்கொடிய ஆயுதங்களால் இமிசிக்கத்துணிந்து உம்மை வைத வசைவுகளுக்குக் கணக்கில்லை; அவ்வசைவுகளுக்கு மாத்திரம்மெச்சி யாவரும் பெறுதற்கருமையான உம்முடைய பதவியைக்கொடுத்துக் காப்பாற்றினீர். அந்தக்குரூரர்செய்த கொடுமைகளினுந்தீதா இவள் தன்னாற்றாமையால் மொழிந்த வசைகள்? அக்கொடியர்கள் செய்த கோரகிருத்தியங்களில் பத்துகோடியில் ஒருபங்காகிலும் யாரையாவது ஆவலிசெய்ததுண்டா? என்ன கெடுதியையாருக்குசெய்கின்றாள்? உன்பக்தன் போஜநஞ்செய்தபிறகுதான் புசிக்கின்றாள். அவன் காடுமேடுகளில் சஞ்சரித்துக்கொண்டிருந்தாலும் அங்கெல்லாம் அந்நஞ் சுமந்துகொண்டுபோய் உண்பித்துவந்து தானுண்ணுகிறாள். சுகதுக்ககாரியங்களில் இலகுதெய்வமே! குலதெய்வமே; என்றுமக்கே அர்ப்பிதம்பண்ணுகிறாள். தெய்வமில்லையென்றும் பெரியவர்களில்லை யென்றும் ஏதாவது துர்மாநங்களை யெண்ணினவளா? விரதங்களை யநுஷ்டிக்குமவளே? புருஷன் கால்பணமேனுஞ் சம்பாதிக்காமல் எந்நேரமும் உம்மையே பஜித்துக்கொண்டிருக்கிறானென்று ஏதாவது அவனைக் கடிகின்றாளா? அவனுக்கு நல்லுபசாரங்களைச் செய்கிறதில்லையா? அவள் இப்பேர்ப்பட்ட படாதபாடுகளெல்லாம் பட்டுக்கொண்டிருக்க நீருங்கண்ணெடுத்துப் பார்க்காமையாலும், தன்புருஷனுக்காவது போதித்து அவனைப்போய்ப் பார்க்கச்செய்யாமையாலும்

அவள் நீரே படாதபாடுகளையெல்லாம் தன்னை படுத்துகிறீரென்று பழியையுமதுபேரில் சுமத்தி, உமக்குக்கரியன் என்று பெயருமிட்டு வரும்வர் போமவர்களிடமெல்லாம் உம்மீது நிந்தைகள் சொல்லிக் கொள்ளுகிருள். தான் பலபல வகைகளாகச் சகிக்கக்கூடியவரையி லுஞ்சகித்துப்பார்த்தாள். முடியாத தருணமான திலைலே தன்குழந் தையைக்கொண்டு வந்து உம் முன்னிருத்திவிட்டு, இப்படியுஞ் செய் வாயா பாவி! என்று உம்மையுங்குத்த நினைத்தாள். அவ்வளவு வருத் தத்திலும் நீர் செய்ததாகவே எண்ணி, உம்முன் கிடத்தி, உம்மைக் குத்தப்பார்க்கின்ருளேயல்லது பிறர்செய்ததாகவும் பிறர்முன் கிடத் தவும், பிறரைக்குத்தவும் எண்ணினவளல்ல. இப்படி சருவப் பிர காரங்களாலும் உம்மையே நோகின்றதும் நினைக்கின்றதுமாயிராநின் ருளேயன்றி பிறரைநொந்து பிறரை நினைக்கக் காணேன். இப்போப் பட்ட தூய்மையுடையவள் உம்மைக்குத்தவேண்டியது தருமந்தான். போனதெல்லாம் போகட்டும் இனியாவது, 'என்னடியார்களுக்கு அடிமைகளாய்ப் பணிசெய்யுமவர்களை என்னைப்போலாக்கிக்கொள்ளு வேன்' என்று நீரே பாகவதத்திலும், உபநிடதங்களிலும் உரைத் திருக்கிறபடியே, உன்னிஜவடியாளுகிய துக்காவுக்குப் பணிவிடை களைச் செய்து காத்துவருங் இவள்மீதிலுங் கருணைவைத்து, இவள் பிள்ளையைத் துன்பத்திலிருந்து, தேற்றி முடிவில் சாயுஜ்ஜியத்தை யிவளுக்குங் கொடும் என்று கிளிமொழியாளாகிய ருக்குமணீதேவி சொல்ல, அவற்றையின்புறக்கேட்டுத்திருவுள்ளத்தில் மகிழ்வுபெற்று, நீயும் ஜீஜாவுடன் சேர்ந்தனை; உங்களிஷ்டத்தின்படி நடத்துங்க ளென்று ருக்குமணிக்குப் பரிகாசஞ்சொல்லி மெளநமாயிருந்தான்.

ஆவலியானவள் தன் புத்தரனை மார்போடே சாத்திக்கொண்டு, கடிநசித்தமுடையவளாய் கர்ஜ்ஜித்துக்கொண்டு, வேகநடையுடனே சந்நிதானம் வந்து உள்ளேபுகுந்து, பகவானும் பங்கயச் செல்வியும் வீற்றிருக்கும் கர்ப்பக்கிருகத்திற்கு அருகில் வரும்போது "இது என்ன ஆச்சரியம்? உன் பிள்ளைக்குச் சுகமுண்டாயிற்றுக்கொண்டு போ" என்று ஓர் சத்தமுண்டாயிற்று; இங்கே யார் சத்திக்கின்ருர்? கரியனும் அவன் பெண்டாட்டியுஞ் சிலாரூபங்களாக இருக்குமவர்க ளாயிற்றே என்று சுற்றிலும்பார்க்க ஒரு பிராணியும் இல்லாமலிருக் கக்கண்டு, கரியன் மாயந்தானிது என்றெண்ணிக்கொண்டிருக்கும் போதே மார்பிலே சாத்தப்பட்டிருந்த புத்திரனுக்குச்சிறுநீர் பெருக் கெடுத்து நிறைகுடம் துவாரமானலெப்படி நீரோடுமோ அதுபோ லோடி சந்நிதாநம் அசுத்தப்பற்ருவதைக்கண்டு வெளியே கொண்டு போய் குழந்தையை நிறுத்திவிட்டுவந்து, பரபரப்புடன் அசுத்தங்

களை நீக்கிச் சாணமிட்டுச் சுத்தஞ்செய்துவிட்டு, வெளியே நிற்க வைத்த குழந்தையைப்போய் பார்க்கிறபோது அக்குழந்தையான வன், ஜலமலங்களை நன்றாய்க்கழித்து, உடம்பிலிருந்த வீக்கங்கள் உடனே வாடப்பெற்று, சுநாயாச முடையவனாய் யதார்த்த ஸ்திதி யோடு நிற்கக்கண்டு, அவனை நடத்துவித்துக்கொண்டு வீட்டிற்குத் திரும்பிப் போம்போது வழியில் கண்டவர்களெல்லாம், இக்குழந் தைக்கு எவ்வாறு லகுவாயிற்று என்றுகேட்க, சுரியனுடைய சந்நி தானத்திற்குமுன் கொண்டுபோய்க் கிடத்தினேன்; உடனே குழந்தை சொஸ்தப்பட்டுவிட்டான் என்று சந்தோஷமா யவர்கட்குச் சொல் லிக்கொண்டு வீடுபோய்சேர்ந்து மகிழ்வடைந்திருந்தாள்.

இவ்வதிசயத்தைத் துக்காராம்ஸ்வாமிகள் கேள்விப்பட்டுஈசுவர னுடைய மாயாவிலாசங்களின்படி நடக்கும், யாருக்கும்; குறைவு செய்யமாட்டான் என்றுசொல்லி பகவானை ஸ்மரித்து, அன்றிரவில் நூதநகவிகளும் ஆரம்பித்து, கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டு வந்த தில்பின்பாடல் பாடிக்கொண்டுவந்த கெங்காதரன் என்னும் பிராமண னும், வாணியசந்தாஜீ ஜெகந்நாடா என்பவனும் என்றுமில்லா ஆந ந்தமேலிட்டவர்களாய், பகவத்பிரேமை யதிகரிக்கப்பெற்று. இரவும் பகலும் துக்காராமரை யுபலாலித்துச் சந்தோஷமுறுத்திக்கொண்டு, எப்போதும் தாஸரைவிட்டுநீங்காமல், ரதியாகிய அரசனதுகருத்தை முன்னமறிந்து சாரதி நடத்துவதுபோலும், புருஷனுள்ளமறிந்து பெண்டாட்டி நடப்பதுபோலும், தாஸருடைய திருவுள்ளக்கருத்தை யறிந்து வேண்டிய உபசாரங்களைச்செய்து, அன்றுதொடங்கி சுத்த அடிமைகளாயிருந்தார்கள்.

இப்படி தாஸர் திநதிநம் ஞாநாமிர்தந்தன்னை, பெருக்கெடுத் தோடுவதுபோல அபிவிருத்தியாய் உலகெங்கும் பரவச்செய்துமகிழ் வெய்தி வருங்காலத்தில் ஒருநாள் ஒப்பில் மணிவண்ணனைத் தமதவா மிகுதியால் கீர்த்தித்து நின்று, சருவலோக சரண்ணிய! உம்மைநோ க்கியான் அன்றன்று பஜித்துக்கொண்டு வருவதில் உமக்குஇவ்வேழை யின் மீது கிருபையும் பிரேமையுமுண்டோ இல்லையோ அறியேன். ஒருவேளை இவன் டம்பத்துக்காக நம்மை பஜிக்கிறனென்று எண் ணுவீரோ! முடிவில் நீபாடினதற்கும் நானுடினதற்கும் சரியாயிற் றென்றெண்ணி, உனக்கேதடா பரமபதம், என்றுகைநழுகவிடுவீரோ அப்படி நீரே செய்வதுண்டானல் அடியேன் எவ்விதங் கடைத்தேறு வேன்? என்னை அவத்தமே கைவிடாதே! என்னிறைவனே! ஈர்ஞ் சிறகுடைய யன்னவாகநனையீன்ற ஆதியஞ்சோதியே! என்னிதயம் பெண்டுபிள்ளை பண்ட பதார்த்தங்களை ஸ்திரமெனத் தன் சபலத்

தால் எண்ணுகின்றது. எதைநோக்கினுலும் அதிலிச்சைகொள்ளு கின்றது. உமதுண்மைத் தாஸர்களுடைய மநஞ்சலநமற்றிருப்பது போல் என்மநமுஞ்சலநமருது அநேகமெண்ணிச் சபலித்துக்கொண் டிருக்கின்றது; என்று கொலோ அவர்கள் உள்ளம்போல் எனதும் ஒருமைபட்டிருக்க வாய்ப்பது? உமது அநந்தகோடி சிருஷ்டிகளில் யாமொருவனே கடைப்பட்டவனென்று ஏதாவதுஉமது திருவுள்ளத் தில் தோன்றுகிறதோ யாதோ அறியேன். முதல்தரமுடைய அடி யார்களைக் காப்பதில் உமக்குப் பெருமையிராது; இக்கடையனேனைக் காப்பதில்தான் உமக்குப் பெருமை மிஞ்சுவது. நீரோ பிரமவித்துக்க ளுடைய கோஷ்டிகளிற் சஞ்சரிக்குமவர். சூத்திரஜாதியிற் பிறந்த சுத்த பாமரனை முறைகேட்டுவந்து ஆதரிக்கப்போகின்றீரா! உம் முடைய திருவடிசமுகத்திற் பெருஞ்சூட்சுமம் ஒன்றிருக்கிறதாம்; அஃதெனக்குத் தெரியவில்லை. உம்மையறிவதற்கு வேதங்களாலும் முடியாதென்று பெரியோர்கள் சொல்லக் கேட்கும்போதெல்லாம், நாமெவ்வாறு காணப்போகின்றோம் என்று மநம் பதைபதைப்புடன் துடித்து, தேகத்தில் அனலுண்டாக்குகிறது; மாதவா! பிரகிருதி சம்பந்தத்தால் என்னறிவு மறையப்படுகிறதே! என் தேகத்திலிருக் கும் ரத்தமாமிசங்கள் உமது அபாரகருணைக்கு இலக்கான திருவடி களை நினைப்பினுஞ் சுண்டப்படவில்லையே! எழுவகைத்தோற்றத்து ஜீவராசிகளும் உமது திவ்யரூபமாக மூன்றவஸ்தைகளில் ஒன்றிலே யும் எண்ணப் பொருந்தவில்லையே! பார்க்கும் ஜீவன்களெல்லாம் வேறுவேருகவே காண்கின்றனவே! பக்தியின் வாசனை சிறிதும் இவ னில்பொருந்தாமையால் இராகத்துவேஷாதிகள் மிகுதியுங்கூத்தாடா நின்றன. மதிலின்மீதேரி பூனைபோல் இலௌகீக விருத்தியிலும் உம்முடைய விருத்தியிலும் ஆகஇரண்டிலும்பட்டு, இவ்விரண்டுவகை களிலுந் தூய்மைகெட்டவனு யிருக்கின்றேன். சதாஉம்மையே ஸ்மரி த்துநிற்க மநம் ஒன்றக்காணேன். தேகத்தில்ஈயெறும்புகள்கடித்தால் மநம்பதைக்கின்றது. தேகத்தை ஆத்துமா நானென்று அபிமா நித்துக்கொண்டிருக்கிறது. தேகம் வேருகவும் நான்வேருகவும் எண் ணும் சகஜநிஷ்டை பொருந்தப்பெறும் வகையறியேன். இந்தஜெந் மத்தில் உம்மையறியும் பாத்திரவானல்லவோ? மற்றெந்த ஜெந்மத் தில் பாத்திரவானுவேன்? இதனையாவது தெரிவித்தால்சற்றுத்தைரி யங்கொண்டிருப்பேன். ஜெந்மம் எடுத்ததின்பலன் வீணில்கெடு கிறது. காலம் அவத்தத்திற் கழிகிறது. இகபரசுகங்கள் இரண்டி லுந் தீயனுகின்றேன்; ஒன்றிலேயும் அநுபவமில்லாதவனுகின்றேன். தந்தைதாய்சுற்றமற்றுமெல்லாம் நீயேயல்லால்மற்றுரெனக்குள்ளார்;

தீனபந்து! தீனநாதா! என்று இரண்டுகண்களிலிருந்து ஆநந்தபாஷ்பங்கள் சொரிய, தேகம் நடுக்கமுற தூக்கித்து வரும்போது தம்மில் தாமே தெளிவடைந்து அசைவறநின்று, வாத பித்த சிலேத்மங்களோடுகூடிய இந்நாற்றமுள்ள தேகத்திலிருந்துகொண்டு எண்ணுமவன் யாரோ; எண்ணுவிக்குமவன் யாரோ தெரியவில்லை என்றெண்ணி, தசவிதநாத எல்லையைக்கடந்து அப்பாலதாகிய சொரூப சுக எல்லையைச்சேர்ந்து நிவாததீபம்போல் சலநமற்றிருந்தார். இவ்வைக்கியபத லக்ஷணத்தைபகவானறிந்து, ஓ கோ! நம்மன்பன் தேகமென்றும் தேகியென்றும் சங்கல்ப வேறுபாடில்லாதவனாய், ஆசாரியன் என்றும் சிஷியன் என்றுமில்லாமல், பகவானென்றும் பாகவதனென்றும் இல்லாத சொரூப ஏகதேசத்தில் கலந்தவனாயினான் என்றெண்ணி, மறுபடியும் அவரைச் சங்கல்ப ஸ்திதிக்குக் கொண்டுவந்து உலகத்திலிருக்கும் பாமரர்களுக்கு பக்தாமிர்தத்தை யூட்டச்செய்து வைக்கவேணுமென்று திருவுள்ளத்திற் களிப்படைந்து, தனதிரண்டு திருக்கைகளாலும் தாஸரைப் பிடித்துக்கொண்டு ஆலிங்கநஞ்செய்து, மார்பைத் தழுவிக்கொடுத்தவுடன் தூக்காவுக்கும் சுவசங்கல்பமுண்டாய், எதிரில் தம்மைத்தழுவிநிற்கும் தாசரதியைப் பார்த்து பயந்து, தண்டஞ்சமர்ப்பித்து, ஹரி ஹரீ! விடோபா எனது சற்குருவே! சச்சிதானந்த மூர்த்தியே! சான்றோர் தழுவும் சதிரா! சத்விலாசா! பிருந்தாவநலோலா! சகலலோக சாம்மிராஜ்ஜிய பட்டாபிஷிக்தா! குணாந்தகா! வந்தநம்-வந்தநம்; வேங்கடவா! விஞ்ஞாந சொரூபா! விமலா! ஈசா! விப்பிரவரியா! ருக்குமணீபதி! உனக்கபயம்-அபயம்! என்று இறைவனது இரண்டு திருவடிகளிலும் வீழ்ந்து பற்றிக்கொண்டு, கீர்த்தனைகளைப்பாடி மங்களார்த்தி செய்து, கூடவிருந்தவர்கள் நீங்கித்தங்களிருப்பிடங்களுக்குஏகின பிறகு தாம் மாத்திரம் அங்குதானேயிருந்துகொண்டு பவசாகரத்தை யெவ்வாறு தாண்டமாட்டுவோம்? ஸ்ரீ ஹரியானவர் சாமோபாயங்களையுடையவர்; தம்முபாயங்களால் ஒன்றைக்காட்டி மற்றொன்றை முடிக்கு மியல்பினர்; நம்மோடு வார்த்தையாடியும் நம்ம சுகதுக்கங்களுக்கு ஈடுபட்டும் வருகின்றாரென்று யோசித்து சந்தோஷங்கொள்ளுவோமாகில் முடிவில் நீ என்னை பஜித்ததற்கும் நானுனக்குச்சகாயப்பட்டதற்கும் சரியாய்விட்டது என்று கைநழுக விடத்தக்கவர். இவ்வண்ணம் அநந்தகற்பங்களிலும் அநந்தம்பேரை ஏமாற்றி யிருக்கின்றார். நிஜமான பக்தியின்னதென்று ஒருவருக்குந் தெரிவித்திலர். நமது கருமமோ திநநித்தம் வேறுபாடுகளை யுண்டாக்குகின்றதேயன்றி எண்பதுகோடி சங்கற்பங்களுஞ் சுத்தமாகிப் பிரணவசொரூபமாயிற்

றில்லை. இப்படிப்பட்ட நமக்கு மெய்பக்தி யெப்படியுண்டாகும்? தேகம் நிலையில்லாததாயிற்றே; இம்மானிடதேகங்கிடைப்பது மிக வரிதென பண்டிதர்களுரைத் திருக்கின்றார்களே; இவ்வரும்பிறவி தப்பினால் வேறெந்தப்பிறவி வாய்க்குமோ அறியோமே; இதற் கென்ன செய்யலாம்? என்று யோசித்து விசனாக்கிராந்தராகி, யெளவ நமாதின்மீது காமுற்றுத்திரியும் விட புருஷன் மடலூர மடலூர அவ னுடைய தேகத்தில்எங்கும் இரத்தங்கெட்டு விந்தூறியிருப்பதுபோ லே இவருடைய மெய்பக்தியானது மேலிடாரசமூறி நிரம்பித் ததும்பு கொண்டு, ஆ! என்னும் ஆறுமையுடன் சாக்கிரசொப்பநத்திற்சொக்கி யிருந்தார். இதையறிந்த அநந்தனச்சுதன் அமலனாகும் ஆண்டவன், துக்கா இரவும் பகலும் ஓய்வில்லாமல், நிராசையையும் அடக்கத்தை யும் ஆபரணங்களாகப்பூண்டு, தபம்-பொறுமை-கிருபை-சந்தோ ஷம்-வாய்மை-அறிவு என்னும் மற்ற ஆறுகுணங்களையுங்கருவிகளாக அமைத்துக்கொண்டு, தாந தரும பரோபகாரங்களை நேசமாகபெற் றுச் சஞ்சரிக்கின்றான். கிஞ்சித்தாயினும டம்பவிருத்திகளை நினைப் பவனேயல்ல. இவன் பாமரங்களைச் சீர்மைபடுத்த வந்தவன்; அதை யொழித்துச் சொந்த விருத்தியிலிருக்கின்றான்; இவனுக்கும் அறி யாமல் பிரபுத்துவத்தையுண்டாக்கிவைத்து,பாமரர்களைச்சீர்படுத்தச் செய்துவைக்கவேண்டும் என்று தமது கருணையாலெண்ணி, ஸ்ரீ ருக் குமணீ தேவியைப் பார்த்து இந்தத் துக்காராம் பாமரர்களுக்குப் பக்திமார்க்கங்களைப் போதித்து அவர்களையெல்லாங் கடைத்தேற்று வதற்காகவென வந்தவன்; தான்வந்த காரியத்தை மறந்து சொந்த பிரயோஜநத்திலிருந்து தான் கடைத்தேறுவதற்காக வேண்டி பக்தி பரவசங்களிலிருக்கின்றான்; நானிவனுக்கு ஆசாரியனானால் அப்போ தாவது தெளிவடைந்து மற்றவர்களுக்குத் தானாசிரியனாய் அவர் களுக்குவேண்டிய இதவுகளைச் சுருதிகளுக்கு ஒற்றுமையாகப்போதி த்து நல்வழிக்குக்கொண்டுவருவான். உனதபிப்பிராயம் இவ்விஷ யத்திலென்னே? என்றுகேட்க, ஜெகன்மாதாவும், நீரேபோய் ஆசா ரியனென நின்று அநுக்கிரகஞ்செய்யும் பக்ஷத்தில் உடனே அவன் தன்தேகம் பிரணவாகாரமாகி தானுமமலனாய்விடத் தடையில்லை. நீர்செய்யும் உபகாரத்தால் அவன்காரியமுடியுமேயன்றி நீரபேக்ஷித்த காரியம் முடியப்போகிறதேயில்லை. இதை யோசித்து எப்படி திரு வுள்ளமோ அப்படி நடந்துகொள்ளலாம் என்று சொல்லக்கேட்ட சோதிமயாநந்தனாகுஞ் சுந்தரத்திருத்தோளன், கேளாய் லக்ஷ்மீ! மூன்றாவது ஜெங்மம் உத்தவனாய் யாதவகுலத்திலே இவன பிறந்த போது, மாமூர்த்திகளுடைய சாபத்தினாலேயாதவவங்கிசம் நசித்து

விட, இப்போது நானே இவனைக் காப்பாற்றி, ஆசாரியனாக நின்று பாகவத தருமங்களை யநுக்கிரகித்தேன். அதன்பின் நாமதேவாக உதித்தபோது ரிஷிபாகேசரியாக நானேவந்து அப்பாகவத தருமங்களையே மறுபடியும் போதித்து வைத்தேன். இந்தஜெந்மத்தில் நீயே யல்லவா துக்காவென்று பெயரிட்டனை! இப்போதும் நானேதான் ஆசாரியனாய்நின்று உபதேசிக்கவேண்டிய முறைமையும் இருக்கின்றது. உனது அபிப்பிராயத்தின்படி நானேதான் ஆசாரியனாய்நின்று போதித்து, ஆஞ்ஜநேயரைப்போலும், விபீஷணர்போலும் இவனுடைய தேகத்தைப் பிரணவாகாரமாக்கி அமலனாகச்செய்துவைப்பேனென்று சொல்லக்கேட்ட அகிலலோகமாதாவாகிய ருக்குமணியும் சந்தோஷித்ததை யறிந்த சரண்ணியன், மாகமாஸம்-சுத்ததசமி, குருவாரத்தில், ஓர் பிராமண மூர்த்தங் கொண்டவராய், துக்காவினுடைய ஜாக்கிரதா சொப்பநத்தில் எழுந்தருள, துக்காராமர்கண்ட காக்ஷிகளாவன:—தாம் இந்திரயாணியில் நீராடி அநுஷ்டாநங்களை முடித்துக்கொண்டு திரும்பிவரும்போது மார்க்கத்தில் அந்தப்பிராமண மூர்த்தியைக்கண்டு வந்தந வழிபாடுகளைச் செய்துநிற்க, அந்த மூர்த்தியும் ஆசீர்வதிக்க, தாம்கொண்டுவந்த திருத்துழாயை அவர் கையில்கொடுத்து, தேவர்யாரோ அடியேனுக்குத் தெரியாது; விளங்கவைக்க வேண்டுமென்று தாஸர் பிரார்த்திக்க பிராமணமூர்த்தியும், நான் பண்டரீபுரவாசி, என்பெயர் கேசவ ராகவ பாபாசைதன்னியர், உமக்குச் சில போதிக்கவேண்டி ஆசாரியனாகவந்தேன்என்று சொல்லக்கேட்ட துக்காராம் சந்தோஷக்கடலில் அழுந்தினவராய், தீர்க்கதண்டம் சமர்ப்பித்தெழுந்து வாயைப் புதைத்துக்கொண்டு நிற்க, அம்மூர்த்தியும் துக்காவின் சிரமேல் தமது கரத்தைவைத்து, ஸ்ரீராமகிருஷ்ண திமந்திரங்களையுபதேசித்தருள, தாஸருமவற்றைப் பெற்று மநநசீலராய் சந்தோஷித்துக் கொண்டிருக்கும்போது, பிராமணமூர்த்திகள் துக்காவை நோக்கி, அப்பா! என்மரபின் முதல்வர் கேசவ சைதன்னியர்; அவருக்குச் சரணமானவர் இராகவசைதன்னியர்; அவருக்குச் சரணமானவன் பாபாசைதன்னியன் என்னும் நாமமுடையநான், இந்த ஆசாரியபரம்பரைகளை மறந்துவிடாமலும், ஸ்ரீ பண்டரீநாதனுடைய உபாசனை மறவாமலும், இரவும்பகலும் சத்கோஷ்டியரோடு பஜனை காலக்ஷேபங்களைச் செய்வதை விடாமலும் இருப்பாயாகில் உனக்கு நற்பேறு கிடைக்கத் தடையில்லை என்று சொல்லக்கேட்டு, சுத்தபக்தர் அடங்கா ஆநந்தங்கொண்டு அஞ்சலியஸ்தராய் நின்று, குடிமைவிலேயே அடிமைபட்டுக் குக்கனாய்த் திரிந்தேனை நின்னடிமையில் குடிபுகுதுவித்து ஆண்டருளின என்னாண்

டவா! அடியேனுடைய குடிசைபாவநமுற எழுந்தருளி ஒருவேளைத் தளிகைபெற்றுச் செல்லவேண்டும் என்று துதித்துநிற்க, பாபாசைதன்னியராய் வந்த ஆசாரியஸ்வாமியும் துக்காவினுடைய பிரார்த்தனைக்கிசைந்து அவர்பின்பாகவே நடந்துவந்து வீட்டுக்குள் புகுந்து நிற்கையில் தாஸர் தம்மனையாளை நோக்கி, இவர் ஒரு ஆசாரியசுவாமி; இவருக்கு ஒருவேளை தளிகைக்காகவேண்டிய சாமக்கிரியைகளைக் கொடுத்து, பாவுசேர் நெய்யையுங் கொடுத்தனுப்ப வேண்டியது என்று சொல்லக்கேட்ட ஜீஜாபாய், சாமக்கிரியைகளையாவது எப்படியேனுஞ் சம்பாதித்துக் கொடுக்கலாம்; பாவுசேர் நெய்க்கு எங்கே போவேன்? எனக்கெவ்விதமாய் கிடைக்கும்? அடிக்கடி பிராமணர்களை யழைத்துக்கொண்டுவந்து அமுதும் சுயம்பாகமுந் தரும்படிச் சொல்லுகிறீர்; இந்தக்குடித்தனத்தின்ஸ்திதி யுமக்குத்தெரியவில்லை; வீட்டிலிருந்த செம்புதவலை தட்டுமுட்டுச்சாமான்களையெல்லாம்மாறி மாறி ஜீவநஞ்செய்ததாயிற்று; பிள்ளைகுட்டிகளை வளர்ப்பதே பெருங் கஷ்டமாயிருக்கிறது; இக்கஷ்டத்தில் பிராமணர்களுக்கு தருமங்களையும் எப்படி நடத்துவேன்? என்றுரைத்தார். இவ்வுரைகளைக்கேட்டுக் கொண்டிருந்த ஆசாரியமூர்த்தியாகிய பாபாசைதன்னியர் உடனே மறைந்தருளிவிட்டார்.

இக்காட்சிகளையெல்லாம், பகவத்குணைக நிஷ்டராகிய தாஸர் தமதுசாக்கிரதாசொப்பநத்திற்கண்டு, அத்தசையினின்றுநீங்கிசுத்த ஜாக்கிரதை பெற்றவராய், தாம் கண்டகாட்சிகளை யுற்றுநினைக்கிறபோது சாக்ஷாத்பண்டரீநாதனே பிராமணரூபங்கொண்டுவந்து ஆசாரிய மூர்த்தியாக நின்று மந்திரங்களைப்போதித்தாரென்று நினைத்து, அவர் போதித்த மந்திரங்களை மநநம்பண்ணி, ஆநந்தமும், பயமரியாதைகளுங்கொண்டு ஆடுவதும், பாடுவதும், ஹரிவிட்டலா என்றரற்றுவதும், அத்திசையைநோக்கிப் பணிவதுஞ்செய்து, கால்படி நெய்யளிக்கச் சக்தியற்றவனுப் விட்டனே என்று தம்முடைய துர்த்தசையை நினைந்து துக்கித்துக்கொண்டு இருகண்களிலும் ஜலம்வடிய, என்னையும் ஒரு மனிதனென வுலகில் வைத்திருக்கின்றாயே என்று தம்மைத்தாமே நிந்தித்துக்கொள்ளுவார். இக்குடும்பபாரத்தை யகற்றி என்னையும் ஆளாக்கினையே என்று கொண்டாடுவார். என்னைத் தாஸனுக்கிக்கொள்ள இன்று கருணை வந்து எம்பெருமான்றானே கேசவ-ராகவ-பாவாசைதன்னியரென்கிற நாமத்துடனே ஓர் திருக்கோலம் என்கண்முன் தோன்றுவித்து பவசாகரத்தைத் தாண்டுவிக்குந் தெப்பமாகிய தாஸத்துவத்தை எனக்குண்டாக்கி, இராமகிருஷ்ணுதி மந்திரங்களை எனக்குப் போதித்துப் போயினன் என்று ஆநந்

நித்து, சோர்வெய்திய மநத்தராய், ஹரி ஹரீ! என்று அடிக்கடி உச்சரித்துக்கொண்டிருந்து, தமக்கு உபதேசித்த விசேஷத்தை மூன்று அபங்கங்களில் அமைத்துப் பாடியருளினார். அம்மூன்று அபங்கங்களையும் பிரியமானபக்தி சிரத்தையோடு பாடுமவர்கள் யாவரேனும் ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகளுடைய அநுக்கிரகத்தைப் பெற்று, சொப்பநதசையில் பகவானே எழுந்தருளி சேவைசாதித்து, பரமாசாரியனைப்போல் போதிக்கும் நன்மைகளையுடையவர்களாய் பலபந்தத்தினின்று நீக்கப்படுவார்கள். இந்தச்சரித்திரத்தைப்பரம பாகவதர்களாய்க்கொண்டு சற்கீர்த்தனங்களால் காலக்ஷேபஞ்செய்து ஆநந்தமடையுஞ் சாதுக்கள் துதித்து வருகின்றார்கள்.

ஸ்ரீமத்துக்காராம்ஸ்வாமிகள்மீது பிரியமுள்ளவர்களுக்கு அவர்கள் தஞ்சொப்பநங்களில் துக்காராம்ஸ்வாமிகளே எழுந்தருளி கடாக்ஷித்து வருகின்றார். பகவானுந் தன்பக்தர்களுக்காகத் தன்தாஸருடையசரித்திரங்களைமுன்னின்றுவிவரித்துவருகின்றான். இதனைச் சிரவணஞ்செய்யுமவர்களுடைய மநோரதஞ் சித்திபெறும்.

பத்தாமத்தியாயம் முற்றும்.

ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீ பாண்டுரங்கபரப்ரஹ்மணேநம:

ஸ்ரீமத்

துக்காராம் சுவாமிகள் சரித்திரம்.

பதினோராமத்தியாயம்.

காப்பு.

வையமளந்தவன் - வாமனனலரடி
உய்யகிற்பானித - மோதுதிமனனே

ஸ்தோத்திரங்கள்.

ஸ்ரீஹரி! நான் அநாதை, சமுசாரபத்தன், ஈனன்; இப்படிப் பட்டவனாயிருந்தபோதிலும் உனக்கே அடிமையென்னும் தாஸத்துவமுடையவனாயிருக்கின்றேன்; என்பேரிலுஞ் சற்று அபிமானஞ் சாத்திக்கடைத்தேற்றுவி; பக்தியுஞ் சக்தியுமில்லாதவனும், கியாநஞ்சற்றுமில்லா அக்கியாநபூதனும், வைராக்கியங் கிஞ்சித்துங் கொள்ளகில்லாதவனுமாகிய அடியனேனை நீயல்லால் காக்குமவர் இவ்வுலகிலாருள்ளார்? அசுத்தஜலம் சிறிய கூபங்களில் வீழினும் அசுத்தமே; பெரியதோர் கங்கையிற் கலக்குமாகில் பவித்திரமாகி, இருடிகளும் முனிவர்களும் யோகிகளும் அங்கீகரித்து நமஸ்காரஞ் செய்யும் யோக்கியதையைப் பெறுகின்றது. அதுபோல் நான் பதிதனாகவிருப்பினும் பாவநனாகிய உன்னருளைப்பெறுவனேயாகில் பாவநதைப் பெற்று உன்னடியராலடிமையெனக் கொள்ளப்பெறுவேன். உன்னைத்



அக்கா. ஆவலி. சிந்தாமணிதேவர். சிந்தாமணிதேவர். துக்கா.

தொழுதேத்தும் அடியார்களை நீ யங்கீகரிக்கின்றனே. நீசனேனும் உன்னைப் பஜிப்பனுகில் வேதபுருஷனுலுந் தொழப்படுகின்முன். உன்னுலும் அங்கீகரிக்கப்படுகின்முன். நான் பக்தியில்லாப்பாமரனுகவும் பக்திபரவசர்களாகிற பரமர்களுடைய கடைத்தலையிலுஞ் சேர்ந்து வர்த்திக்க யோக்கியதை யில்லாதவனுகவும் இருந்தாலும் என்னையும் அங்கீகரித்து ரக்ஷித்தருளும் தேவதேவா! சராசரங்களுக்கெல்லாம் ஒப்பற்ற தனிமுதல்வனுகிய நீயே பரமாசாரியனென்றுணர்ந்து உன்னையே சரணமடைந்தேன். ஏழையேனுடைய பிரார்த்தனைகளையும் வந்தனங்களையும் அங்கீகரித்துக் காத்தல்செய்வாயோ செய்யாயோ அறிகிலேன். என்னைத் தொழுதேத்துமவர்களைக் காப்பாற்றி யீடேற்றுவேனென்று, பெரும்பிருதாக துஜஸ்தம்பம் நாட்டியிருக்கின்றனை ஆதலால், உன்னைவணங்கி, வழிபாடுகள்செய்து, உனதடியரில் தலைவராகிய ஸ்ரீமத் துக்காராமருடைய சரித்திரத்தில் பதிஞேராவது அத்தியாயத்தைச் சொல்லத்தொடங்குகின்றேன். முன்னின்று சம்பூரணமாக்குவித்துக் காப்பாற்றியருளும் கருணையங்கடலே! ருக்குமணீபதீ! என்றுவணங்கி,சரித்திரந்தன்னைச்சொல்ல ஆரம்பிக்கிமுர்.

முன்கூறியபடி, பீதகவாடைப்பிராணுகிய பேரருளாளன் பிரமகுருவாகவந்து உபதேசித்தருளின அதிசயங்களை துக்காராம்ஸ்வாமிகள் ஒருநாள் ஆரணியத்திற்சென்று எண்ணியெண்ணி, ஆருமை பட்டு, திருவுள்ளத்தில் நினைப்பதாவது—நாம் வேதம்சொல்லியபடி கிருகத்தில்தங்கி, சற்கருமங்களைச்செய்து, அதிதி அப்பியாகதர்களுடைய சேவையிலீடுபட்டு, அவர்கள்தரும் ஆசீர்வாதங்களையேற்றுவாழலாமென்முல்நமக்கு வாய்த்தமனைவி மிகவுங்கொடியவளாயிருக்கின்முள். சற்றும் ஒற்றுமையில்லாதவள். இப்படிப்பட்டபெண்டாட்டியாயின் துறந்து வநமேகுவது நலம் என்று அந்த வேதமே சொல்லுகையாலே நாமினி வீட்டினுசையை அறத்துறந்து, இங்குதானே பகலிற்சஞ்சாரஞ்செய்து காலங்கடத்துவது நலம் என்று எண்ணி, இரவு நான்கு நாழிகைக்கு ஆலயத்திற்பிரவேசித்து, கீர்த்தனைகளைப்பாடி, விடிய நான்கு ஜாமத்திற்குமுன் மங்களார்த்தி செய்து எல்லாரையும் போகவிட்டு, தாம் தனியாராய் ஆற்றுக்குச்சென்று, நித்தியகடனைமுடித்து நீராடி, ஜெபாதிசற்கருமங்களைச்செய்து தீர்ந்து, ஸந்நிதிபுகுந்து தேவதார்ச்சனைசெய்து, ஆரணியத்திற் பிரவேசித்து, அங்கு ஏகாந்தமான ஸ்தலத்தில் குணுறுபவஞ் செய்து கொண்டிருப்பார். அவ்விடமறிந்து பக்தர்களில் யாராவது ரொட்டியும் ஜலமுங்கொண்டுபோய் கொடுத்தால் சொல்ப ஆகாரமுண்டு, இரவானுல் முன்போல் கோயிலுக்குள்புகுந்து பஜனைகாலக்ஷேபங்களைச்

செய்து, விடிந்தவுடனே காட்டுக்குள் புகுவாரேயன்றி வீட்டுக்குப் போக மனங்கொள்ளிலர், வீட்டின்மீதிருந்த ஆசையை முற்றுந் துறந்தவராயினர்.

இப்படி இரண்டுமாச காலமாய் வீட்டின்மேரில் ஞாபகத்தை யொழித்து, தாஸர், பகற்காலங்களில் காடுகளிலும் இராக்காலங்களில் ஸந்நிதியிலுஞ் சஞ்சரித்துக்கொண்டு வராநிற்கையில், இவருடைய மனையாட்டி ஆவலிஜீஜீபாயம்மாள் மிகவும் விசனங்கொண்டு, அக்கம் பக்கத்துவீட்டுப் பெண்களுடன் என்ன உரைத்து முறைபமிட்டுக் கொள்ளுகின்றுளெனில்: என்நாயகன் இவ்வூரிலிருந்துகொண்டே வீட்டிற்குவராமலும், என்முகத்தில் விழிக்காமலும், பிள்ளைகுட்டிகளைப் பார்க்காமலும், பகலிலெல்லாம் ஆரணியத்தில் தங்கியிருந்து அஸ்தமித்த நான்குநாழிகைக்குமேல் ஸந்நிதிக்குவந்து காலக்ஷேபங்களைச்செய்துவிட்டு, பொழுதுவிடிந்தவுடனே மறுபடியும் வனத்திற் கேகிவிடுகிறுர். யாராவது உணவுகொண்டுபோய் கொடுத்தால் உண்கிறுர்; இல்லையாகில் சும்மாயிருக்கிறுர். இங்கு கோயில்கொண்டிருக்கும்கரியன்இப்பேர்ப்பட்ட தீராப்பெரும்பயித்தியத்தையுண்டாக்கி வைத்திருக்கிறுன். இதற்காகத்தான் இங்கேவந்து சேர்ந்தாப்போல் காணுகிறது ஆகிலும்இந்தக் கரியனை நான் விடப்போகிறதில்லை. இந்தக்கரியன் தன்சாமார்த்தியத்தால் என்னென்ன செய்கின்றுனே செய்யட்டும்என்று பலபலஎதிர்மொழிகளை மொழிந்துகொண்டிருக்கும்போது சிலநாள்கழிந்து, ஒருவிடியர்காலே, ஜீஜாபாய் குடமெடுத்துக்கொண்டு இந்திராயணி நதிக்குப்போய் ஸ்நாநஞ்செய்து, குடத்தில் ஜலமொண்டு தலையிலெடுத்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பி வரும்போது தாஸர் நித்தியாநுஷ்டாநத்திற்காக ஆற்றுக்குப்போய்க் கொண்டிருப்பதைக்கண்டு, குறுக்கேபோய் வழிமறித்து நிறுத்திக் கொண்டு,இரண்டு மாதகாலமாய் வீட்டிற்கு வாராமல், காட்டிலுங் கோயிலிலுஞ் சஞ்சரித்துக்கொண்டு வருகிறீர்; குழந்தைகுட்டிகளை யார்காப்பாற்றுவார்? அவர்களுடைய கதியும் என்கதியும் என்னுவது? உம்மைவிடஎங்களைக் காப்பாற்ற வேறொருபுருஷனுண்டோ? வேறொருபுருஷனுண்டு என்றுவது சொல்லும்; எங்களுக்கு ஓராதாரத்தைச் சொல்லிப்போம்; அதின்வரையிலும் நீர்போகக்கூடாது என்றுகடுகடுத்த வசநங்களையுரைக்க,வைணவவாக்கிரேசர்ஜீஜாவைப் பார்த்து மிருசாந்தியுடனே சொல்லுவதாவது—எனது எண்ணத்தின்படி நீநடவாமையினுலே நானெல்லாரையுந் துறந்து வநமேக நேரிட்டது; "பத்தாவுக்கேற்ற பதிவிரதையாமாகில், எத்தாலுங் கூடி யிருக்கலாம் - சற்றேனும், ஏறுமாறுக விருப்பாளே யாமாகில்

கூருமல் சந்நியாசங் கொள்'' என்கிற ஔவையார் வாய்மையின்படி, நீ நல்லவளாயிருந்தால் உன்னோடு கூடிவாழலாம்; நீ மிகவும் குரூரமுடையவளா யிருப்பதால் உன்னோடுகூடி வாழ்வதிலுங் காடாள்வதுமேலு; ஆகையால்தான் நான் உங்களெல்லாரையும் விட்டுக் காடு புகுந்தேன்; அதற்கும் நீ சிரமைதருவது உனக்கு தருமமல்ல; உன்னுடைய எண்ணம் உன்னைப்போல் என்னையுஞ் சமுசாரத்தில் அழுந்துவிக்கவேண்டுமென்றிருக்கிறது; நானோபிறந்த இப்பிறப்பால் நல்ல பயன்பெறவேண்டியவனாயிருக்கிறவனேயன்றி உன்னிஷ்டத்தின்படி சமுசார சாகரத்திற்பட்டு ஜநந - மரண - நரகங்களுக்கு ஆளாகேன்; வீணில் இன்னும் என்னையேன் உபத்திரவப் படுத்துகின்றாய்; என்னிஷ்டத்தின்படி நீயிருக்கப்போகின்றதில்லை: அப்போது நான் என்னிஷ்டத்தின்படி யிருந்தேயல்லவா என்காலத்தைக் கழித்துக் கொள்ளவேண்டும்? அதையறிந்து நானிருக்கவேண்டிய நீதியிலிருக்க அதற்குந்தீங்குநினைப்பதுனக்கு நன்றன்று; எல்லாரையும் ரக்ஷிக்கும் இறைவனொருவனுண்டு; அவனாலேதான் உலகிலெல்லாரும்ரக்ஷிக்கப் படுகிறார்கள்; அவனொருவனேஉன்னை ரக்ஷித்துவருவதுபோல என்னையும் ரக்ஷித்துக்கொண்டுவருகிறான்; அவனால் உன்னைப்போல் நானும் ரக்ஷிக்கப்படுமவனாயிருக்க அவனது ரக்ஷணைத்துக்குமேல் உன்னைநான் ரக்ஷிப்பவன் என்று சொன்னால் சருவரக்ஷககர்த்தா பொறுக்கமாட்டான்; அவனுடைய கோபத்துக்கு ஆளாகவேண்டிமுடியும். ஆகையால், என்னை நலியாமல் உன்னுடைய காரியங்களைப்பார்த்து நடந்து கொள் என்றுசொல்லவே ஜீஜாவுக்கு ஆறாத்துக்கம் மேலும் பெருக்கெடுத்து, இதற்காகத்தானாநான்பெண்ணாய்ப்பிறந்தேன்? இதற்காகத்தானா உம்மை மணம்புணர்ந்தேன்? இதற்காகத்தானா இத்தனைநாள் சிரமப்பட்டேன்? உம்மை வைத்துக்கொண்டுஉமக்கு வேண்டியபணிவிடைகளைச்செய்து வாழாமல் உம்மைக் காட்டுக்கு அனுப்பிவிட்டு நானாகவிருந்து சுகிக்கவா இத்தேகமுண்டானது? போனதெல்லாம் போகட்டும் இனி நானென்ன செய்யவேண்டுமோ சொல்லும் அதின்படியே நடந்துகொள்ளுகிறேன் என்று மிகவும் வருந்திக்கேட்க, ஜீஜாவைப்பார்த்து தாஸர், இனிநானெந்தச்சமயத்தில் என்னசொன்னபோதிலும் அந்தச்சமயமே அந்தக்காரியத்தை முடிக்கிறேன் என்றும், நான் செய்யுங்காரியங்களில் தடைசெய்வதில்லை என்றும் பிரமாணம் பண்ணிக்கொடுப்பாயேயாகில் நான்மறுபடியும் உன்வீட்டுக்கு வருகிறேன் என்றுசொல்ல, ஆவலியும் தனது நாயகருடைய அபிப்பிராயத்தின்படியே சத்தியம்பண்ணிக்கொடுத்தாள்.

பிறகு தாஸர், தமதுதேவியுடனே மாளிகைக்குச் சென்று, அன்று ஸ்ரீ ஹரி திநமாகிய ஏகாதசியாகையால் வீட்டிலிருக்கும்பிருந் தாவநத்துக்கருகில்வீற்றிருந்தார். ஸ்ரீ ஹரி திநத்திற்காக ஸந்நிதிக்கு வரும்படியான சாதுக்களும், அன்பர்களும், தாஸர்திருமாளிகைக்கு வந்திருக்கிறாரென்று கேழ்விப்பட்டுச் சேவிக்குநிமித்தம் அன்னோர் தாஸரகத்திற்குவந்து சேவித்து, இதவார்த்தைகளாடிகொண்டிருக் கையில் ஆவலி அவர்களெல்லாரையுங்கண்டு, இரண்டுமாசகாலமாக இவரிங்குவரா திருக்க அப்போதுயாரும்வந்து விசாரித்தவர்களில்லை; இப்போது நான்முயற்சிகள்செய்து அழைத்துக்கொண்டுவர நீங்க ளெல்லாருங் கூட்டங்கூட்டமாக வரத்தலைப்பட்டீர்கள் ; இப்படிநீங் கள்வருவானேன் ; என்று கடுகடுத்துரைக்கவே அவர்களெல்லோரும் ஒவ்வொருவராக நழுவிவிட்டார்கள். நிராசையில் மிகுந்த தாஸரும் தம்முடைய பெண்டாட்டியைப்பார்த்து, ஆர்வீட்டுக்கு ஆர்வருவார்? அவர்கள் வரும்படியானபாக்கியம் நீசெய்தவளல்லவே; பற்களைக் கடிப்பதும்,கடுஞ்சினமுற்று தூஷணவார்த்தைகள் உபயோகிப்பதும் உனக்குத்தருமமா ? இவ்வண்டமும் அண்டத்திலுறையுஞ் சராசர ங்களும் சருவசுவாமியாகிய ஸ்ரீமந்நாராயணனுக்குச்சொதந்திரமான வை; நானோ அத்தேவாதிதேவனுக்குப் பிரியன்; ஆனதைப்பற்றி இப்பிரபஞ்சத்திலுள்ளஎழுவகைத்தோற்றத்தினுள்ளும் எண்பத்தி னன்குலக்ஷஜீவராசிகளும் எனக்குப் பந்துக்களாயிராநின்றன;அந்த பாந்தவ்விய விசேஷத்தைப்பற்றி என்னிடம் பலரும் வருவார்கள் ; அப்படி வரத்தக்கவர்களோடு நல்ல இத வார்த்தைகளைப்பேசி உப சரித்தனுப்பாமல்தீயர்களுஞ்செய்ய அஞ்சும்படியான தீமைகள்செய் வதும், கடுத்துச் சொல்வதும், நிர்லக்ஷியம் பாராட்டுவதுந் தகாது ; என்னிடத்தில் ஈதொரு பெருத்த அவலக்ஷணமிருக்கிறது! அதாவது நல்லவார்த்தை சற்றுமின்மை; இதனாலேதான் உன்னுடைய மாமனா ருக்கும் மாமியாருக்கும் உன்மீது கோபமுண்டாய் உன்னைச் சிரமப் படுத்திக்கொண்டு வருகின்றார்கள்; இல்லாவிடில் உன்னை நன்மையுறச் செய்யமாட்டார்களா ? இந்தச் சூட்சுமம் நீயுணரவில்லையே; இந்தக் குணமுன்னிடத்தில்மிகுதியாயிருக்கக்கண்டதனாலேதானே நானும் உன்னைத்துறந்து காட்டேகெதியாய் வசித்துக்கொண்டிருந்தது; குரூர மொழிகளைமொழிவதில்பயனென்ன? நீஅவைகளைமொழிந்து என்ன தான் லாபமடைந்தாய்? வீணில் பாபங்களுக்கு உள்ளாகின்றனையே அதுதான் நீகண்டபலன்; அவரவர்கள் தங்கள்தங்கள் அலுவல்களை விட்டு நம்வீட்டுக்கு ஏதுக்காக வருகிறார்கள்? இதொரு பெருமை யா? பெருமைக்காக வருகிறார்களா ? வரப்படாத அவர்கள் வருவதே

நமக்குப்பெருமை; அந்தப்பெருமையையெண்ணாமல் அவர்கள்மேல் சீறிவிழுந்தால் அவர்கள் மறுபடியும் நம்மை லக்ஷியஞ்செய்வார்களா? எவ்வளவு சொன்னபோதிலும் உன்னுடைய சுயபுத்தியை நீவிடப்போகிறதே கிடையாது. இப்பேர்ப்பட்ட உன்னைநான்கட்டிக்கொண்டு இன்னம் என்னென்ன பாடுகள் படவிருக்கின்றேனோ அறியேன். காட்டிலிருப்பேனையாகிலும் இவைகளெல்லாங் காதில்படாமல் காலங்கழிக்கலாம். அதற்கும் விக்நஞ்செய்தாய் என்றுபலவாறு ஆற்றாமைகளைச்சொல்லி சலிப்படைய, ஆவலியும் பதிலொன்றுஞ் சொல்லாமல், ஏதேனுஞ் சொல்லுவோமாகில் முன்போலே காட்டுக்கு நம்மையுங் குழந்தைகளையுந் துறந்துபோவாரென்று மௌநமடைந்தாள்.

பிறகு தாஸர், தந்தேவியை நயவார்த்தைகளோடே யருகிலழைத்து, நான்சொல்லும் இந்தக் கீர்த்தனையைச் சற்று அன்புவைத்துச் சாவதாநமாய்க்கேள் என்றுசொல்ல, அவ்வம்மையும், இனி இவர்மொழியைக் கேளாவிட்டால் முன்போல் வநத்துக்கேகிவிடுவார். மறுபடியும் இவரை வீட்டிற்கொண்டுவந்து சேர்ப்பது கஷ்டமாய்முடியும் என்றுநினைத்து, தனது நாயகருக்கெதிரில் உட்கார்ந்தாள். அப்படியுட்கார்ந்த மனையாட்டியைப்பார்த்து தாஸர்சொல்லத் தொடங்கினர்:—

தேவுக்ஷேத்திரத்தைநீயுணர்வாய்! இந்தத் திவ்வியக்ஷேத்திரத்திற்குவந்து, முப்பத்துமுக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் இருடிகளும், சித்த-வித்யாதர-கெருட - காந்தருவ - தும்புரு நாரதர்களும், ஏகாதசருத்திரர்களும், நவப்பிரஜாபதிகளும், அஷ்டவசுக்களும், சப்த முநிகளும், மற்றுமநந்தம் பெரியோர்களும் நமதுருக்குமணீரமணனைச் சேவித்துகொண்டு போகின்றார்கள். இப்படி அவர்கள் சேவிப்பதற்குக் காரணம்—மரணமானபிறகு வைகுந்தம் பெறுவதற்காக; இத்தனை மேன்மக்களே இங்கெழுந்தருளிச் சேவிக்கின்றார்களென்றால் நாமெவ்வளவு? அவனைச் சேவிக்காவிட்டால்நமன் நம்மை விடப்போகிறதேயில்லை. எத்தனை காலமிருந்தாலும் ஒருநாள் அவன்கைக்கு அகப்படுவதே ஸித்தம். பிறந்தபோதே இறப்பு நமக்காகக் காத்திருக்கிறது. நீர்மேல்குமிழிபோல் இக்காயம் நிலையில்லாதது. இந்தப்பூமி எனது என்று ஆண்டுகொண்டிருந்த எத்தனையோ ராஜராஜாக்கள் மடிந்துபோனார்கள். அவர்களெல்லாரும் எனது எனது என்று அபிமானித்துக்கொண்டிருந்தபூமி அவர்களோடுபோகவில்லை. சரீரங்களையும் எனது எனது என்று அபிமாநித்துக்கொண்டிருந்தவர்கள் கோடாநுகோடிபேர் மாண்டார்கள். அவர்களுடைய

சரீரங்களோ மண்ணாகிவிட்டன. தேகம் அநித்தியவஸ்து. வாழ்வும் அநித்தியங்களே. இந்தவீடு - வாசல் பிள்ளை - குட்டிகளும், நீயும் நானும் நித்தியங்களல்ல. உன்னுடைய சக்களத்தி இறந்துவிட்டாள்; அவளோடு நீயும்நானும் இறந்துவிட்டோமா? யாருக்கு யார் சுதந்திரம்? இவைகளெல்லாஞ் சந்தைக்கூட்டம். தாயுண்டால் பிள்ளைவயிறு நிரம்புமோ? அவ்வவர்களுண்டால்தான் பசியாறுவது. அதுபோல் அவரவர்கள் பகவானைத்தொழுதால்தான் அவரவர்களுக்கு அருள்விளைவது. ஒவ்வொருவரும் அவனுடைய அருளைப் பெற்றால்தான் ஈடேறலாம். இல்லாவிடில் நரகவேதனையில் அகப்பட்டு, எந்தஜென்மத்திலுஞ் சுகங்கிட்டாமல் நாய்போலலைந்து பேய்போலுலாவி, வாதைகளுக்குள்ளாக முடியும். சுடுகாடு நம்மைவிட்டு அகலாது. சுடுகாட்டை நினைத்தாலும் பிராணிகளீடேறுதற்கு இனமுண்டாகும். இந்தத் தேகத்தைக் கழுவி ஆடையாபரணங்களைப் பூட்டி போஷிக்கலாமென்று நாமெண்ணுகிறோம். அதனைக் கழுகு நாய் நரிகள் தங்களுக்கு போஷகமாகுமென்று எண்ணுகின்றன. நாமோ நம்மையும் நம்முடைய தேகத்தையும் இவற்றின் சங்கற்பங்களையும் அறியாமல், தாய்தந்தையாது சுக்கிலசோணிதங்களால் பரிணமித்து தோல் - நரம்பு - மாமிசம் - ரத்தம் - எலும்பு - சீழ்களாலுண்டான இத்தேகத்தை நமதென்றும், தேகமே நாமென்றும் எண்ணி, காம - குரோத - லோப - மோக - மத - மாச்சரியங்களாகும் அரிவருக்கங்கள் ஆறினுடைய விகாரங்கள் மேலெழக்கொண்டு, ஆகாமிய சஞ்சித பிராரத்துவங்களுக்கு வசப்பட்டு நடந்து அழிகின்றோம். அந்நமயகோசம் - பிராணமயகோசம் - மநோமயகோசம் - விஞ்ஞானமயகோசம்-ஆநந்தமயகோசம் என்று சொல்லப்பட்டபஞ்சமயகோசங்களுக்கும் ஆநந்தமயனாய், சருவ அண்டசராசரங்களுக்கும் ஆதாரபூதனா யாவனொரு பரமபுருஷனுண்டோ, ஸ்தூலசூட்சுமாதி தேகங்களைக் காட்டிலும் விலக்ஷணமாயும், பரமமானதாயும், சாக்ஷிநிலையுள்ளதாயும், நித்தியமாயும், நிருவிகாரமாயும், சத்தியமாயும், தேகமுதலானவற்றோடு சம்பந்தப்பட்டதாயும், படாததாயும் விளங்குவதெதுவோ அந்தந்த நிலைகளுக்குச் சம்பந்தமானதென்று சொல்லப்படுகிறதெதுவோ அந்தச்சுத்தப்பிரமமே உன்னுடையதேகத்தை வீடாகக் கட்டிக்கொண்டிருக்கும் ஆன்மாவுக்கு யஜமானனாயிருக்கிறது. அந்த உன்னுடைய எஜமானனை யறிவதற்காகவே ருஷீசுவரர்கள், ரஜோ குணத்தாலே மறைக்கப்பட்டிருக்கிற ஞானத்தைச் சத்துவகுணத்தாலே துலக்கி சாக்ஷாத்காரமாய் விளங்கப்பெற்றவர்களாய்,மணிபூரகஸ்தாநத்தில் ஆநந்தமயமாய் விளங்கியிராநின்ற

பிரமத்தைத் தியாநித்துக்கொண்டிருக்கின்ருர்கள். அந்த ஞாநசம்பந்நர்கள் தங்களுக்குப் பிரமாதிருஷ்டாநமானவாறே பிரமரந்திரத்தைப்பற்றி நின்ற சுஷும்நிநாடியின் வழியாலேபிரமரந்திரத்தைப் போதித்துக்கொண்டு அருச்சிராதி வழியிலேபோய், மிருத்தியுவுக்கு ஹேதுவாகிற சமுசாரத்தில் திரும்பவும் விழவொட்டாமற் காக்கிற பரப்பிரமத்தையடைந்து, சதா ஆநந்தங்களை யநுபவித்துக்கொண்டிருக்கிருர்கள். தங்கள் தங்கள் கருமபலங்களால்வரும் பிரகிருதிமயமான தேகங்களிலிருந்துகொண்டு, தேகசம்பந்தங்களாகவருஞ் சுகதுக்கங்களைத்தாங்களே யநுபவிப்பதாய்மயங்கிக்கிடக்கிறஜீவதத்துவநிலையை நன்ருயறிந்த சத்துக்கள்ருக்குமணீரமணனுடைய திருவடிகளைச்சருவகாலமுஞ் சேவித்துக்கொண்டேயிருப்பார்கள். சற்றுமகலநில்லார்கள் உலகத்தின்கண் இந்நிலையே யுசிததருமமாக இருக்கிறது. அறியக்கூடாத ஆத்துமபரமாத்தும தத்துவங்களை யறிவதின்பொருட்டு, மகான்கள், தங்களுக்குத் தாய் தந்தை சுற்றம் மற்றுங் குருதெய்வங்களெல்லாம் இந்தக் கோபிகாகாந்தனென்றே மதித்து, சதா இவனுடைய பாதாரவிந்தங்களில் பணிந்து, திருநாமசங்கீர்த்தனைகளைப்பாடி, அமிசங்களைப்போல் ரமித்துக்கொண்டிருப்பார்கள். அந்தப் பரமபாகவத கோஷ்டிகளின் கடைத்தலையிலாவது சேர்ந்திருந்து அவர்களைப்போல் நாமஸ்மரணைகளைச் செய்துவருதலினல் பிராக்கிருதங்களான வீடுவாசல் முதலியவற்றைவிட்டு மோக்ஷத்தையும் விரும்பமாட்டார்கள். திருநாமோச்சாரணத்தால் உண்டாகுஞ் சுவையைத் தவிர்த்து முத்திப்பேற்றினை யபேக்ஷியாரென்பதற்குக் காரணம்—இதனுலுண்டாகும் இரசஞ்ஞதையே. அதை யபேக்ஷித்தே ஞாநதேசிகராகும் வகுளபூஷண பாஸ்கரர், "நல்வீடுபெறினுங்கொள்வதெண்ணமோ தெள்ளியோர் குறிப்பு" என்றருளிச்செய்தனர். அந்த ரசஞ்ஞதைக்கு மூலகாரணனகும் ஸ்ரீமந் நாராயணன் எவ்வாறு இருப்பானெனில்—எழுவகைத் தோற்றத்துள்ளும் எண்பதினன்குலக்ஷ - பேதங்களாயமைந்திருக்கப்பட்ட தேகங்கள் வாதபித்த சிலேத்மங்களை யாதாரமாகக் கொண்டிருப்பன. இம்மூன்றின் தடிப்பே தேகம். அவ்வாதபித்த சிலேத்மங்கள் வாயு - அக்கிநி - ஜலமயங்களாயிருப்பவை. இம்மூன்றினுக்கும் அதிஷ்டாநதேவதைகள் முறையே பிரமா - ருத்திரன் - விஷ்ணுக்களாவார்கள் என்று உபநிடதங்கள் சொல்லாநின்றன. இம்மூன்று அதிஷ்டாநதேவர்களுங்கலந்து அதிதயாயிருப்பதற்கு சுத்தப்பிரமமென்று திருநாமம்விளங்கும். ஆகவிவ்வைந்திலுக்கும் பிருதிவி - அப்பு - தேயு - வாயு - ஆகாசங்கள் பஞ்சீகரணப்பட்டு ரூநதிகொண்டதாக அவ்வுப

நிடதங்களின் தத்துவாமிசங்களிற் செல்லாநின்றது. முற்கூறிய வாயு - அக்கினி - ஜலமாகிற மூன்றும் அல்லது மூன்றிலொன்றேனும் விகல்பப்படுமோகில் அவற்றால் சமைப்புண்ட ஜடரூபம்மாறும். அம்மூன்று தேவதைகளிலும் சிவபிரான் தாமதகுணமிசனென்றும், பிரமன் இராஜதகுணமிசனென்றும், விஷ்ணு சாத்துவிக குணமிசனென்றும் மூன்று குணங்களையும் மூவர்க்குச்சொல்லப்பட்டன. இம்மூன்று புருடர்களுக்கும் அடிமையானல்தான் வைணவனென்கிற பதங்கிட்டும். இம்மூன்று அதிஷ்டாந தேவர்களுங் கலந்த நிலைக்கு சுத்தபிரமமென்று எவ்வாறு திருநாமம் விளங்குமோ அவ்வாறே அம்மூவர் பாலும் பக்தனானவனுக்கு வைணவத்துவம் ஸித்தமாகும். இப்பதத்தின் பெருமை மூவுருவந்தானாய் சுத்தபிரமமேயறியுமன்றி மற்றவர்களால் அறியப்படமாட்டாது. பிரபந்த ஜநகூடஸ்தராகிய ஸ்ரீ மத்சடகோபரும், "யானுந்தானா யொழிந்தானை யாதுமெவர்க்கு முன்னோனைத் - தானுஞ்சிவனும் பிரமனுமாகிப்பணைத்ததனி முதலைத் - தேனும்பாலுங்கன்னலு மமுதுமாகித் தித்தித்தென் -ஊனிலுயிரி லுணர்வினில் நின்றவொன்றையுணர்ந்தேனே" என்றும், "தெருளுமருளு மாய்த்துத்தன் திருந்துசெம்பொற் கழலடிக்கீழ் - அருளியிருத்து மம்மானை மயனுஞ் சிவனார் திருமாலால்" என்றும் சாதித்திருக்கின்றனர். இப்படிப்பட்ட அருமைநாயகனைச் சேருதலல்லவோ பரமப்பிராப்பியர்களுடைய சொரூபம்! இதை நீயுணர்ந்து, உனது பரமமான நாயகனைச்சேர்ந்து, அந்தச்சேர்த்தியாலுண்டாகும் இன்பங்கள் அநுபவிப்பாயாகில்,இவ்வண்டசராசரங்களில் மேன்மையரான சந்தஜெநங்களால் கொண்டாடப்படுவாய். அவனைச் சேருவதற்கு மார்க்கம் - ருக்குமணீரமணனை, சாக்கிரம் - சொப்பநம் - சுஷுப்திகளாகும் - மூன்றவஸ்தைகளிலும் இடைவிடாது தொழுதலேயாகும். அப்படி மெய்பக்தியுடன் தொழுதுகொண்டு வருவாயாகில் உனதுதேகத்தில் தங்கியிருக்கிற ஜீவன், அநந்தகற்பகாலமாய் ஜந்மஜந்மாந்தரங்களிற் செய்துவந்த பாபங்களினின்று விடுபட்டு, பிரகிருதி சம்பந்தங்களின் நசையற்று,"அவனருள்தன்னால் அவனடி வணங்கி" என்கிற சான்றோர் வசநத்தின்படி, உன்னெஜமானாகிற அவனது அருளின் நீர்மையால் அவனையே தெரிசித்துக் கிருதார்த்தனாகும். என்றென்றைக்கும் உனக்குச்சுகங்கிடைக்கும். அவனுடைய கருணையாலே எட்டுகுணங்களுமுனக்குண்டாய், பஞ்சகிருத்தியங்களினும் வல்லமைபெற்று, யதாலாபந்தன்னை யநுபவிப்பாய் என்றிவ்வாறெல்லாம் லோகோத்தாரணராயெழுந்தருளிய துக்காராம்ஸ்வாமிகள் போதித்த போதனைகளைக்

கேட்டுஉள்ளம்பூரித்தவளாய், பச்சைமரத்தில்ஆணிதைத்ததுபோல் அந்தக்ஷணத்திலே தானேபண்டரீநாதனுடைய திருவடிகளில்பக்தி யென்னும் ஆராமைமேலிட்டுத் துதித்துக்கொண்டிருப்பதை விதேக முக்தாறிந்து, இவளுக்குத் தோன்றியிருக்கிற பக்தியை நாளைமுப் பது நாழிகைக்குள்ளாக அறியவேண்டுமென்றெண்ணி, தாமிருந்த பிருந்தாவனத்தினிடமிருந்தேகீர்த்தனைகளையும்அபங்கங்களையும்பாடி ஹரிவாசர அநுஷ்டாநமுடித்து விடியற்காலே மங்களார்த்திசெய்து, இந்திராயணிக்கு நீராட்டத்திற்காகச் சென்றனர்.

விடிந்தபின் ஆவலி ஜீஜாபாயம்மாள், இராத்திரி தன்நாயகர் சொன்ன தத்துவஹிதங்களின் உண்மைநிலேயில் மநதைச்சேர்த்து நிலேநிறுத்தி, ஹரிவிடேல்! பாண்டுரங்கா! என்றுஸ்துதித்து, சோர் வெய்திய மநத்தளாய், நித்திரைதெளிந்தவனுக்குச் சற்றேமயக்க முண்டாயிருப்பதுபோல், குருபோதனையால்பேராசைதங்கி மயக்க மிகக்கொண்டவளாய்,பிராம்மண அக்கிராரத்திற்சென்று,இன்றுதுவா தசியாகையால் நான் தாநமளிக்கப்போகிறேன் எல்லாரும் வாருங்க ளென்று அவர்களை யழைத்துக்கொண்டு வந்து அவர்களுக்குத் தன் வீட்டிலிருந்த சொத்துக்கள் எல்லாவற்றையுந் தாநமாகவீந்து,பாண் டங்களையும், உலக்கை, உரல், மாவரைக்குங்கல், முறம், துடைப்பம் முதலானவற்றையும் வேண்டியவர்களுக்குக்கொடுத்துப் போகவிட; அவ்வூரிலிருந்த சந்நியாசிகள் இதனையறிந்துவந்து, அவள்வீட்டு அடுப்புகளிலிருந்த சாம்பலேயெல்லாம்வாரிவாரி தங்கள்தேகமெங்கும் பூசிக்கொண்டு, இது துக்காவினுடையவிபூதி ; இதுகிடைப்பது அரு மையென்று களிப்படைந்தார்கள். ஆவலி தன்மநதில் நிராசைமிகுக் கப்பெற்று,வேறுவிகல்பங்களொன்றுமில்லாமல்பிராமணர்களுடைய திருவடிஸேவைசெய்து, புண்டரீகவரதனைத் தியாநித்துக்கொண்டு, தேசும் அநித்தியமென்று தன்நாயகருரைத்த மொழிகளைநினைந்து, இனி நாம் ஆத்தும லாபத்துக்குரிய வழியிலிருக்கவேண்டுமென்று எண்ணியிருந்தனள்.

புராணவைராக்கியம், புருஷவைராக்கியம், மசாநவைராக்கியம் என்று சொல்லப்பட்ட மூன்று வைராக்கியங்களிற் பட்டவர்களைப் போல இந்தம்மாள், புருஷனருகிலுட்கார்ந்து, அவர்போதித்த வற் றில் மநம்வைத்துக் கேட்டதால் விரத்தியடைந்து, தனதுதேகந் தனக்குத்தெரியாமல் விஸ்மிருதியடைந்து, தோற்றங்கள்யாவும்பண் டரீநாதனகவேதோன்றியதால்,தனக்கென்று ஒன்றையும் வைத்துக் கொள்ளாமல் நிராசைமீறி, குடும்பத்திற்குஆதாரமாக வீட்டிலிருந்த எல்லாவஸ்துக்களேயும் தாநஞ் செய்துவிட்லாயினள். அந்த ஞாந

மயத்தோற்றத்தின் தசைநீங்கி, ஜீவன்பழையவாசநா சம்பந்தத்திற் பட்டவுடனே பூருவம்போல் நிலைபெற்று, பசிவேதனை யுண்டாய், தனது தோட்டத்தில் உலருவதற்காகக் கட்டியிருந்தசேலை யவ்விடத்திலில்லாமையறிந்து, இந்தச் சேலையைமாத்திரம் நாம்யாருக்குங் கொடுக்கவில்லையே என்னவழியாய்ப்போயிற்று என்றுயோசித்துத் தன்குமாரனைக்கேட்க, அவனும், அம்மா! இவ்விடத்திற்கு நீசஸ்திரீ யொருத்திவந்து சேலையைக்கேட்கஅவளுக்கு எனதுதந்தைஅவிழ்த்துக்கொடுத்துவிட்டாரென்று சொல்லக்கேட்டு நானெப்போது இக் கோலத்திற்காளாவேனோ என்று காத்திருந்தவராகையால் மறுசேலையும் இவளுக்கிருக்கலாகாதென்று கொடுத்துவிட்டார்; இனியென்ன செய்வது; வீட்டுக்குள்ளிருந்த சொத்துக்கள் யாவையுந் தத்தஞ் செய்துவிட்டோம். உடுத்திக்கொண்டிருக்குஞ் சேலைதவிர வேறொரு வஸ்துவும் நம்மிடத்திலில்லாமல் கொள்ளைகொடுத்துவிட்டோம்; கால்படி மாவுகூட மீறுமல் போய்விட்டோம். அடுப்பிலிருந்த சாம்பலோடுங்கூட எல்லாம்போயிற்று. எவ்வாரு இனி இப்பிள்ளைகளை வைத்துக் காப்பாற்றுவேன்; உஞ்சவிருத்திசெய்யவுந் தெரியாது. பிள்ளைகளும் அன்னியர் கிருகங்களுக்குப் போயறியார்கள். நமது புருஷன் காட்டில் சஞ்சரிக்கின்றுரேயென்று வீட்டுக்கு அழைத்துக் கொண்டுவந்து விட்டோம்; அவரும் ஏதோசில நமக்குச்சொல்ல ஆசைப்பட்டதினுல் அவற்றைக்கேட்கச் செவிகொடுத்ததற்கு நமக்குக் கேடுவந்தது; ஏதோ உபாயஜீவநமாவது செய்துகொண்டிருந்த நாம் சற்றுநாழிகைநம்மைவைத்துக்கேட்டதற்கே பயித்தியங்கொண்டு தரித்திரம் வாய்க்கப்பெற்று கஞ்சிக்கலைகிறேமே; இரவும்பகலும் அதுவேயேக்கம் பிடித்தவர்களுக்கு என்னென்ன தீமைகள்தான் வாராது; இனியென்னலென்ன செய்யக்கூடும்? எவ்வாறு மேன்மையடையப்போகிறேம்? பிள்ளைகுட்டிகளையெப்படி காப்பாற்றப்போகிறேம். நாம்பிறந்ததும் இவருக்கு வாழ்க்கைப்பட்டு நலிவதும் நன்மையாயிருக்கிறதா? மிஞ்சின காரியத்துக்கு இனியோசிப்பதில் பயனில்லை. முக்கியம் நம்புத்திமாராட்டம்; இன்றளவும் ஏமாறுமல் இப்போது ஏமாரிவிட்டோம்; ஏமாரிய நமக்குப் புத்திமாறுவித்தவன் கரியன்; அவனைக் கடவுளென்றெண்ணி சிறிதுநாழிகை துதித்ததற்கு இக்கெதியான காட்சியளித்துப் பநாதியாக்கிவிட்டான். எப்போதுமிவனை பஜிக்கின்றவர்களைப் பரதேசியாக்கி, மனைவிமக்களுடன் கலவாமல் மநம்போநபடியெல்லாம் திரியவைத்து, இடம்பொருளேவல்கள் அமைந்திருந்தாலும், இராஜனுயிருந்தாலும் துலோபியாக்கி, மலை - குகை - வநம் - குப்பைமேடுகளில் சஞ்சரிக்கவைப்

பான்; இவன்செய் சூதுகளைக் காண்பவர் தெய்வநாட்டிலுமில்லை, இந்நாட்டிலுமில்லை என்று தமோகுணமேலிட்டவளாய், பல்லைநறநற வென்று கடித்து, யாவருங் கரியனுடைய அடிகளையேத்துகின்றார்கள்; அந்த உபய திருவடிகளை யோர்பெரியகல்லைத் தூக்கிப்போட்டு நசுக்கிச் சிதிலமாக்கிவிடுகிறேன்; அப்படிச்செய்தால்இனியாரும்அத் திருவடிகளைக்தொழுது நினைக்கார்கள்; அதனால் கெடவுமாட்டார்கள் என்று எண்ணங் கொண்டவளாய், ஒருகுண்டுகல்லைச் சிரசிலேந்திக் கொண்டு சந்நிதானம்நோக்கி வரத்தொடங்கினாள்.

ஜீஜா தன்னுடைய திருவடிகளைச் சிதிலமாக்க ஓர்பெரியகல்லைத் தூக்கிக்கொண்டு வருவதை ஜெகந்மோகநாகாரன் கண்டு, புன்னகையோடு ருக்குமணிதேவியை நோக்கி, ஆவலி என்னிருசரணங்களையும் நசுக்கிவிடக் குண்டுகல்லேந்தி வேகமாகவருகின்றாள் என்றுரைத்துக்கொண் டிருக்கையில் சமீபமாக வந்துவிட்டவளை ஜகந் மாதாகண்டு, அடி ஆவலி! எங்கேவந்தாய்! என்று கேட்க, அம்மா! உன்னுடைய புருஷன் மெத்தவுங் காதகன், அவனுடைய திருவடிகளை நசுக்கிவிடக் கல்லொன்றேந்திவந்தேன்; என்னுடைய புருஷன் இராத்திரி நானுவித உபதேசங்களை யெனக்குபதேசஞ்செய்ய, அவ் வுபதேசத்தின் வழியேநின்று உன்புருஷனுடைய திருவடிகளை யிதயத்தில்நிறுத்த அவர்சொன்னபடியேநானும்அத்திருவடிகளைச்சற்று நேரம் இதயத்தில் தங்கவைத்துத் தியானித்திருந்ததற்கு எனக்குப் பைத்தியமுண்டாக்கி, ஏதோகஷ்ட ஜீவநத்திலாவது ஜீவித்துக் கிருகத்தில் வைத்திருந்த சொத்துகளியாவுங் கண்ட கண்டவர்களுக்கெல்லாந் தானங்கொடுக்கச்செய்து முடிவில் உடுத்தின வஸ்திரந்தவிர வேறொரு துரும்புமில்லாமல் செய்துவைத்தான். குழந்தைகளெல்லாரும் வெம்பசி நோயாலலைந்து பரிதவிக்கின்றார்கள். எனக்கோ ஜீவநஞ்செய்ய வேறேவகை கிடையாது என்புருஷனையும் விதேகராயாக்கிவிட்டான். இப்போப்பட்ட மாயாவியை நீயெப்படிதான் வைத்துக்கொண்டு சமாளிக்கின்றனையோ அறியேன். இத்தகைய பதங்களைப் பஞ்செனநருக்கி வானநாட்டிலும் இந்நாட்டிலும் பெயர்விளங்க வைப்பேன். இவ்வளவு கொடியனா யென்ஜீவநத்தைக் கெடுத்த பாவிக்கு அவனையுயர்த்திவரும் அப்பாதங்களைக் கெடுத்தால்தான் அவன்செய்த வுபகாரத்துக்கு மாறுபகாரமாகும் என்று ஜீஜாசொல்லியவற்றை ஜெகத்ரக்ஷகி கேட்டுப் புன்னகை கொண்டு இனியாதொன்றுக்கும் நீ அஞ்சாதே! என்று ஒருபட்டுச் சேலையையும், ஒருரவிக்கையும், ஒருபிடி தங்கவிராகனையுங் கொடுத்து போகவிட, அவற்றைஇரண்டுகைகளாலும்பெற்று,சருவரக்ஷகியையுச்

சேவித்து, அவ்விடத்திலேயே அப்பட்டுச்சேலையை வரிந்துகட்டிக் கொண்டு, ஆநந்தபரவசையாய், ஆவா! மாதாவாதலால் மகளுடைய சுகதுக்கங்களைக்கண்டு நடத்தினள்; மாடுமேய்த்தவனிப்படி நடத்து வானு? தன்பிள்ளைகளையெல்லாங் கொண்டுபோய் அருச்சுனனைவிட்டுக் கொல்லவைத்து, தானும் அவ்வருச்சுனனுக்கு உதவிசெய்த மாபாவி யாயிற்றே! நம்முடைய ஏழைபிள்ளைகள் பசியால் வதையடையுமே என்கிற இரக்கஞ் சற்றேனுமிருந்ததா? பிள்ளைகளைப்பெற்ற புனித வதியாகையால் இத்தருணம் நமது மானத்தைக்காத்தாள் என்று சந்தோஷங்கொண்டு, ருக்மணீதேவியைச் சேவித்து, தன் வீட்டுக் குத் திரும்பி வரும்போது, மெய்பக்தர் தம்மனைவி வருவதைக்கண்டு வெறுப்புற்று, சேலையொன்றுகிடைக்கவே மகிழ்ந்துவிட்டாள்; இரவு போதித்தவையெல்லாம் கானல் ஜலம்போலாயிற்று; சற்று நாழிகை தன்னை ஸ்மரித்தற்குமாயாமோகிதனிவளுக்கு ஒரு பட்டுச்சேலையை யும் பிடிவிராகனையுந் தந்து மதிமயக்கிவிட்டான்; இதில் நானும் அழுந்துவேனென்று பரீக்ஷை பார்க்கின்றான்; ஹரீ ஹரீ! ஆதி மூலமே! என்னைக் கைசோரவிடாதே பண்டரீநாதா! என்றுவெருவி, ஜீஜா கொண்டுவந்த பிடி தங்கவிராகனையும் வாங்கி பிராமணர்களுக் குக்கொடுத்துவிட்டு, ஆநந்தபரவசங்கொண்டவராய், உடல்பொருள் ஆவிகள் மூன்றையுமவனுக்குஅர்ப்பணம்பண்ணிக்கீர்த்தனைங்களைப் பாடிக்கொண்டிருந்தார்.

ஸ்ரீவைஷ்ணவதிலகர் தம்மனைக்குச்சற்றுநேரம் போதித்ததை யும், அவ்வளவில்ஆவலி விச்சிராந்தியடைந்து வீட்டிலுள்ள சொத்து க்களை தானஞ்செய்துவிட்டதையும், மறுபடியும் ஜீஜாவுக்கு மங்கை ருக்குமணீ பிராட்டிபட்டுச்சேலையும், பட்டு ரவிக்கையும், பொன்விரா கன்களையும்அளித்ததையும்,மற்றுமுண்டான தாஸருடையபிரபாவங் களையுமெல்லாரும் நாளுக்குநாள் தேசதேசங்களிலெல்லாம் பரவின தில் வெகுதூரதேசங்களிலெல்லாமிருந்துஜெநங்கள் இவரைச் சேவி க்க கும்புகும்பாய்க் கூடிவரத்தலைப்பட்டார்கள். அப்படிவருகிறவர்க ளெல்லாரும், எம்பெருமான் இவருக்காகநாநாவித திருவிளையாடல்க ளைச்செய்துவருதலைக்கேட்டுஎன்னயோசிப்பார்களென்றால்-சாக்ஷாத் பாண்டுரங்கமூர்த்தியே இவருடன்கூடவிருந்து புசிக்கிறாரென்றும், இவர் குடும்பஜீவநத்திற்காக அன்றன்றுடம் ஸ்ரீஹரீ உதவுகிறாரென் றும்,இவர் மனையாட்டி ஜீஜாபாயம்மாளுக்குச் சேலையும், ரவிக்கையும் விராகன்களையுந் தந்தாரென்றும், விசுவம்பரதாஸர்முதல்எட்டுத்தலை முறையாகக் காப்பாற்றி வந்ததிலும் இத்துக்காராமரை மிகுசீர்மை படுத்திக் காத்தல்செய்துவருகிறாரென்றும்,இவரைநாம்தெய்வமாகப்

பாவித்த நடப்பமேயாகில் இறைவனெம்மான் நமக்குத்துணைநிற்பாரென்று, துக்காராம்ஜிதேந்திரியராய் ஆரூடதிசைபெற்று, பஞ்சகிருத்தியங்களைச் செய்யத்தக்க ஆதாரபூதாரயிராநின்றாரென்றும்; இவருடைய திருவடித்தூசு நம்மீதுபட்டாலே நாம்ஜெந்மபாவநர்களாய் விடுவோமென்றும், தேவூகாம் என்னுங்கிராமம் என்ன புண்ணியஞ்செய்ததோ! என்றும் யோசித்து, ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு துதித்திருந்தார்கள்.

இப்படி வந்தவர்களில் மத்திமபுருஷர்களாயிருந்த கிரியாநிஷ்டர்கள் சிலர்! இவரை வைணவ வீரரென்று எப்படியுரைப்பது? இவருக்கு ஆசாரியனே கிடையாது ; ஓர் ஆசான்வழியாக எந்தக்கிரந்தமுஞ் சேவித்தவரல்ல; எந்த மதஸ்தர்களைப் பார்த்தாலுஞ் ஸேவிக்கின்றார் ; எந்தக்கோயிலுக்கும் கும்பிடுபோடுகின்றார் ; எந்தக் கோயிலிலும் நுழைந்து பஜிக்கின்றார் ; புலையர் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தாலும் அவைகளைத் தோள்களில் ஏற்றிக்கொண்டுபோய் பஜிக்கின்றார்; அஷ்டாக்ஷர திருமந்திரத்தைரகசியத்தில் அநுஷ்டிக்காமல் யாவருக்குந்தெரிய வெளிப்படுத்துகின்றார் ; சுத்தசாமன்னியர். யாரோ ஒருசாமான்னிய அத்துவைதி யிவருக்கு அகப்பட்டுப் போதித்ததினால் இவர்தாமும் மநம்போனதெல்லாம் போக்காகக்கொண்டிருக்கின்றார். எங்கள் ரகசிய மாந்திரார்த்த கிரந்தங்களுக்கும் இவருடைய நடைகளுக்கும் ஒற்றுமை கிடையாது. இவர் தமக்கு எதுவேண்டுமாயினும் இறைவனிடத்திலிருந்து பெறுகிறார். ஈசுவரனும் வேண்டியவற்றைக் கொண்டுவந்து கொடுக்கிறான் ! ஈது முதல் விநோதமான காரியம்; ஈசுவரனை ஆர்த்திசெய்ய வேண்டுமேயன்றி அவனைநோக்கி ஒருபலனையும் அபேக்ஷிக்கலாகாது என்று எங்கள் சாஸ்திரங்கள் கூறுநின்றன. இந்தத்தருமம் இவரிடத்தில் இல்லாமையைப்பற்றிபெருமாளையாராதிப்பதைப்போல் ஆசாரியனை யாராதித்தாலும் இவரை மதிக்க மாட்டோம் என்று வைதுத் தங்களைத் தாங்களே தங்கள் தருமங்களைப்பற்றி புகழ்ந்துகொண்டு அத்தால் களிப்படைந்திருந்தார்கள். மற்றுஞ் சில தமோகுணப்பிராயர்களான அதமர்கள் என்ன வுரைத்தார்களெனில்; இந்தத் துக்காராம் நேற்றையபையன் ; இவனைச் சுவாமியென்றும், ஆசாரியனென்றும் மூடமதியினருரைக்கின்றார்கள் ; இவன் சுவாமியாயிருந்தால் இவனுடைய பாதங்கள் பூமியில் தாங்கலாகாவே; பூமிக்கு மேல்ஜாணுயரத்திலல்லவா இருக்கவேணுமென்று நாங்கள் கண்ட கிரந்தங்களில் எழுதப்பட்டிருக்கிறது; இவன் நம்மைப்போன்ற அறுசுவையோடுகூடின அந்நமுண்கிறான் ; நீரருந்துகிறான்; மலஜல விசு

ர்ஜ்ஜநமும் பண்ணுகிறான்; உடுக்கிறான்; மனைவி போகத்திற்பட்டு சந்ததி உற்பத்தி செய்கிறான்; தன்னினங்களில் சுபாசுபங்கள் நடந்தால் போகவர இருக்கிறான்; இதுகலிகாலமானதால் எப்பேர்ப்பட்ட பெரிய மனுஷியர்களும் இவனுடைய கள்ளத்தனங்களைக் கண்டு பிடிக்காமல், இவனுடைய வேஷங்களுக்கு மயங்கி உத்தமனென்று கொண்டாடுகின்றார்கள். நம்மூரிலிருக்கும் காவிவஸ்திரதாரியாகிய மம்பாஜி என்னும் பிராமணசந்நியாசியிலும் இவன் சிறந்தவனா? அவர் கால்தூசு பெறமதிப்பும் இவன் பெறமாட்டான் என்று, தங்களை யொத்தவர்களோடு தங்களையொத்தவர்களுடைய குணங்களைப் புகழ்ந்து பேசிக்கொண்டார்கள்.

இதுநிற்க, தேஹுகாமுக்குப் பத்துகோசு தூரத்தில் சிஞ்சவடி என்னும்ஓர்க்கிராமமுண்டு, அதில் சிந்தாமணித்தேவர் என்னும் ஒரு பெரியவரிருந்தார். அந்தப் பெரியவர் துக்காராமருடைய பிரபாவாதிசயங்களை நாளுக்குநாள் கேட்டுணர்ந்து, மனதில் தீராக்களிப்படைந்து,இவரைத் தரிசிக்கவேண்டுமென்று ஆவல்மிகக்கொண்டவராய், அந்தஅக்கிராரத்திலிருக்கும்மற்றப்பிராமணர்களிடமும்இவருடைய பிரபாவங்களைச் சொல்லி அவர்களையும் இசைவித்து,தானும் அந்தப் பிராமணர்களும் ஏகோபித்து எல்லாருடைய கையெழுத்துகளுமிட்டு ஒருநிரூபமெழுதி துக்காராமருக்கு பிராமண ஆள்வசம் அனுப்பி வைத்தார், அக்கடிதத்தைக் கொண்டுவந்தபிராமணனும், துக்காவின் இருப்பிடத்தைவிசாரித்துக்கொண்டுவந்து; துக்காவைக்கண்டு, நிரூபத்தைக் கொடுத்தான். அதனை வாங்கி வாசித்துப்பார்த்து, தாஸர் ஆநந்தங்கொண்டு என்னையுமொரு மனிதனாக எண்ணி, பிராமணர்களாகிய நிலத்தேவர்கள் ஸ்ரீ முகம் அனுப்பினார்களல்லவா! நாம் அவசியம்போய் அவர்களைத் தரிசிக்கவேண்டுமென்று நினைத்து வந்தவருக்கு வந்தநங்கள்செய்து விடைகொடுத்தனுப்பிவிட்டு, மறுநாள் காலை புறப்பட்டு, சிஞ்சவடி என்னும் அவ்வூரைநோக்கிப் போகாநிற்கையில், இராமநாமாமிர்த கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டு பாதிவழி கடந்து போய்க்கொண்டிருக்க, சிஞ்சவடியிலிருந்து ஒருபிராமணர் தாஸர்வரவுக்காக எதிர்நோக்கிவந்து காத்திருந்து தாஸரைக் கண்டு பிரியமான வணக்கங்களுடனே அழைத்துக்கொண்டுபோய் சிஞ்சவடி சேர்ந்து, சிந்தாமணிதேவருடைய திருமாளிகையில் தாஸரை விடுத்தார். அந்தச்சமயம் சிந்தாமணிதேவர், ஸ்நாநமுடித்துக் கொண்டு பூஜாகிருகத்திற்போய், விக்கிநேசுரமூர்த்தியை மநோபாவத்திற் பதியவைத்து, இரண்டு நேத்திரங்களையுமூடி பூஜித்துக் கொண்டிருந்தார். இப்பூசைவேளையில் இவருடைய மகமானது—

இவருக்கிருந்த தோட்டத்திற்சென்று தோட்டக்காரனைக் கூப்பிட்டு, இந்தச்செடிக்குஜலமில்லை; இதற்குப்போதாது; இந்தச்செடி காய்ந்துவிட்டது; இவ்விடத்தில் அசுத்தமிருக்கிறது; இவ்விடத்தில்குப்பைசெத்தைகளிருக்கின்றன; இவைகளைச் சீர்படுத்துங்கள் என்று விசாரணைசெய்யலாயினதேயன்றி விநாயகபூசையில்ஒருமைப்பட்டதல்ல. மறுபடியுந் தம்மில்தாமே தெளிவுற்றவராய், நாம் விநாயகரைப்பூசித்துக்கொண்டிருக்கும்போதும் நம்மைப்பற்றிய அவித்தியா சம்பந்தமானது அற்பங்களிற் புத்தியைச் செலுத்தவிடுகிறது; நமக்கேனிந்ததுரெண்ணம்வருகிறது? என்றெண்ணி,முன்போல்மானதபூசைக்குத்திரும்பவும் ஆரம்பித்தார். இப்படி சஞ்சலத்துடனே பூசையைமுடித்து எழுந்து கற்பூர ஆலாத்திசெய்து நமஸ்கரித்து வெளியேவந்துபார்க்கையில் துக்காராம்சுவாமிகள் வந்திருப்பதறிந்து பார்க்கப்போக ஸ்வாமிகளும் சிந்தாமணிதேவருக்கு தீர்க்கநமஸ்காரங்கள்செய்து கைகட்டிக்கொண்டு எதிரேநிற்க, தம்மை நமஸ்கரித்துஎதிரேநிற்கிறவருக்கு நாம் பிரதிவந்தநஞ் செய்யவேண்டியது நம்கடமையாகையால் அப்படிச்செய்வோமாகில் நம்மை யிப்பிராமணர்கள்பழிப்பார்கள்; நாமோ பிராமணவருணத்திற் பிறந்துவிட்டோம்; ஆகிலும் இவருடைய சற்பாவங்களையறிந்து இவர்களுக்கும் அறியக்காட்டிபிறகு சேவிப்போம்; அப்போது இவர்களும் நம்மோடுசேவிப்பார்கள்; பழியும் நமக்குவாராது என்றெண்ணி, தாஸரைப்பார்த்து, நீரிவ்விடத்திற்குஎப்போதுவந்தீர்?என்றுவினவ, தாஸரும் நீர் விநாயகமூர்த்தியை மநதில்பதிந்து, நந்தவநத்தாள்களுக்கு அதிகாரஞ்செலுத்திவந்தீரே அப்போது தாஸன்வந்தேன் என்ன; அம்மொழியைக்கேட்டதேவர் பிரமைகொண்டு மநதில் கலக்கமுற்று, நாம் மநம்ஒருமைப்படாமல் உள்ளுக்குள்செய்த பூஜாகிரமத்தைச் சொல்லுகின்றாரே என்று அதிசயித்தவராய் பதிலொன்றுஞ் சொல்லாமல்சற்றுநேரம் மௌநமாயிருந்து, இன்னமிவருடைய மகிமைகளை யறிவோம் என்று எண்ணி குசலங்களை வினவி,அவரையுட்காரவைத்து, போஜனவேளையானதால் போஜனஞ்செய்யவாரும் என்று கூப்பிட, தாஸரும்சிந்தாமணிதேவரைப்பார்த்து,சுவாமிகாள்!பிராமணர்களுக்குத் தனிகையிலே வரிசையாயிடுவதில் எனக்குப் பிரத்தியேகமாகஇரண்டு இலைகளையதிகமா யிடவேண்டுமென்றுசொல்ல, தேவரும்மற்றபிராமணர்களுங்கேட்டு, ஓகோ இதென்ன ஆளுக்கு மூன்று இலைகளா? இவருடன்கூட யாராவது வந்திருக்கவேண்டும்; ஆகையால்தான் மூன்றிலைகளைப் போடச்சொல்லுகிறார்;இவர்வரும்போது தன்னந்தனிராகத்தானே வந்தார்; இப்போது மூன்றுபேர் எப்படியா

ஞர்கள் ; ஒருவேளை பின்னாலே வந்திருக்கவேண்டும் ; பார்ப்போமென்று வீதியில்பார்க்க யாருமில்லை.பிராமணர்கள் புசிக்கும்போது, தேசாந்தரிகள் - அப்பியாசதர்கள் - நியோகிகள் வந்திருக்கிறார்களா என்று விசாரித்து அவர்களுக்கு அந்நம்பரிமாறி பிறகு தாங்களுண்பது வழக்கம். அதின்படியாயும் அன்று யாரும் வரக்காணாமையையுணர்ந்து சிந்தாமணி தேவர் துக்காவைநோக்கி, ஐயா! இரண்டிலைகளை யதிகமாகப் பரிமாறச் சொன்னதற்குக் காரணமேதோ அறியேன்; விளங்கவுரைக்கவேண்டும் என்று கேட்க; தாங்கள் ஆராதிக்கும் விநாயகமூர்த்திக்கு ஒரு தளிகையிலை என்று தாஸருரைக்கக் கேட்டு தேவரும் பிராமணர்களும், இக்கேள்வி நாமென்றுங் கேட்டதேயில்லை; நடவடிக்கையும் விநோதமாக இருக்கிறது; விநாயகமூர்த்தியாவதுநரமனிதனோடுஉண்பதாவது? என்னஆச்சரியஞ்சொல்லுகிறார்? அப்பந்தோசை சிற்றுண்டிமுதலான பணியாரபலகார வருக்கங்களையும் தளிகைகளையுஞ்செய்து, சுவாமிக்கெதிரில் தளிகையிலைகளில் வட்டித்து, தூபதீபங்களைக்காட்டி, ஜலம்புரோக்ஷித்து ஆகுதி செய்து வருவதுவழக்கம்; நம்முன்னோர்களும் சந்நிதி அர்ச்சகர்களும் அப்படியே செய்துவருகிறார்கள். அப்படி அர்ப்பணஞ்செய்து வருவதால் அத்தேவதை ஆகுதியைக் கவளீகரித்துச் சந்தோஷிக்கிறது; அவ்வாகுதியே தேவஹாரம் ; தேவதைக்கு அர்ப்பிதமான பலகார அந்நாதிகள் நிருமாலியங்களென்றுசொல்லப்படும். நிருமாலியம்என்றால்—மலமாகாதது அல்லதுமலிநமில்லாதது என்று பொருளாகிறது. அவ்விசேஷம் வந்ததற்குக் காரணம் தேவனுக்கர்ப்பிதப்பட்டுதேவனால்ஆகுதிகொள்ளப்பட்டமையே. அவ்வாறுதேவனுக்கு அர்ப்பிதமா யாகுதிகொள்ளப் பட்டவைகளையே புண்ணவேணும் அவையன்றி புண்ணார்மேதாவியர். அவைகளையேஉண்கையால் உண்ணுமவர்களுக்கு நிருமலத்துவம் ஸித்தமாகும்; உண்ணுமவர்களுக்கு நிருமலத்துவஞ் சித்திக்கச் செய்யுமதான தேவனுக்கு அர்ப்பிதமா யாகுதியாகப்பட்ட அந்நிருமாலியத்தை நிருமலம் என்றும், சுத்தம் என்றுஞ் சொல்லுவார்கள். தேவனுக்கு அர்ப்பிதமானதும், தேவனால் ஆகுதிகொள்ளப் பட்டதுமானவற்றையே உண்ணவேணும் என்னும்போது தன்னடையே விளங்குகிறது. நாம் பரிமாறுமவை ஆகுதிகொண்டு கவளீகரமாய் அர்ப்பிதமாகிறதென்று இப்படியே நூல்களும், மேலோர் விதிகளும் இன்றளவும் அநுஷ்டாநமும் நன்குவிளங்கி வராநிற்க, விநாயகரே நேரில் வந்து வட்டித்தவைகளையே நம்பினவர்களுக்கு சேஷமுந்தராமல் உண்பாரென்பது அதிசயத்தினும் அதிசயம். அதவா அவர் பொசித்தாலும் தம்ம நிஜ

ரூபத்துடன் வந்து இலையருகில் வீற்றிருந்தல்லவா பொசிக்கவேண்டும்? அவராவது நாட்டு மானிடரவர்க்குத் தம் நிஜரூபத்தைக்காட்டவாவது; காட்டுவாரேல் அன்றே நாம் மோக்ஷவீடடையத் தடையென்னை; அவருடைய நிஜவடிவினைக்கண்டு நாமிடும் அந்நாதிகளையுண்பித்து அனுப்பும்போதே அவரோடு தொடர்ந்து போகலாமல்லவா? இந்த வைணவர் நூதநமான விந்தைகளை சொல்லுகிறார்; நம்பக்கூடியதாகக் காணவில்லை என்று நினைத்தவர்களாய், துக்காவைப் பார்த்து, தாங்கள் சொன்னது விநோதமான நூதந வார்த்தை, நம்பப்படாதது என்று சொன்னார்கள். அதற்கு தாஸர் சிந்தாமணி தேவரையும் மற்ற பிராமணர்களையும் பார்த்து, தாங்கள் பிராமணர்கள்;பிரமகுலத்தில்உதித்தவர்கள்; பகிர்ப்பூசையும்அந்தர்ப்பூசையும் ஒற்றுமையாக நடப்பிக்குமவர்கள்; உங்களுபாசனைக் கர்த்தாவாகிய விநாயகமூர்த்திக்கு நீங்கள் ஒற்றுமையாக திரிகரணசுத்தியுடன் பூஜித்து வருவது உண்மையாயிருந்தால் இலையிலிட்ட தளிகைப் பிரசாதங்கள் விநாயகரே நேரில்வந்து உண்ணவேண்டும்; அவர் நேரில் வந்து உண்ணுவிட்டால்செய்யும் பூசைகள் டம்பத்துக்காகவேசெய்யுமவை யென்றெண்ணப்படும் என்று சொல்லக்கேட்டு, சிந்தாமணி தேவர், இவரை நாம் பரிக்ஷிக்க வரவழைக்க இவரே நம்மை பரிக்ஷித்துவிட்டார்; இவரால் நாம் அவமானப்பட நேரிட்டது; இவருக்கிருக்கிற பக்தி நமக்கில்லாமற் போய்விட்டதா; நாம் தேவர் என்று கொண்டபெயர் வீணுக்கா; நாமேன் இவர்சொன்னபடி விநாயகமூர்த்தியை புண்பிக்கக்கூடாது; பார்ப்போமென்று அபிமாநமுற்று, தாம் தொழும்படியான விநாயகமூர்த்திக்கு எதிரில் கைகளைக்கட்டிக்கொண்டு நின்று தொழுது, சகஸ்திர நாமங்களாலும் அருச்சித்து, ஜலத்தைக் கையிலேந்தி வட்டித்திருக்கிற தளிகையிடம்வந்து புரோக்ஷித்து, அரோகர - சம்போ! மகாதேவா! விநாயகக்கடவுளே! உமக்காக வட்டித்திருக்கும் இவ்வந்நத்தைப் புசிக்கவேணும் சுவாமீ! என்று பிரார்த்தித்தும் இட்டஅந்நமானது அசைவுறுதிருக்க,தேவர் வெள்கி தியக்கெய்தினவராயிருக்கையைப்பார்த்து தாஸர், தாங்கள் தொழுந்தெய்வம்இவ்விடத்திலில்லை; கப்பலேறிசமுத்திரயாத்திரை செய்யும் ஒரு பக்தன் தன் கப்பல் கவிழுஞ் சமயமாயிருக்கக்கண்டு தன்னுபாசனை மூர்த்தியாகியவிக்நேசுவரரைப் பிரார்த்தித்தான். இவரும் அவனைக் காக்குநிமித்தம் சமுத்திரத்திற்கு போய் ஜலத்தில் மூள்கி, கப்பலை நிலைப்படுத்திவிட்டு, ஈரவாடை களையாமலேயே இதோ இப்போதுதான் வந்தார்; சோதித்திப்பாருங்கள் என்று சொன்னார். சிந்தாமணி தேவரும் மற்றவர்களும், விநாயமூர்த்தி

யின் பீதாம்பரத்தை யவிழ்த்துப் பிழிந்து பார்க்கையில் உப்பு ஜலம் வடியக்கண்டு, யாவரும் பயந்து, இந்தத்துக்காராம்ஸ்வாமிகளுடைய பிரபாவம் பலரால் கேட்டபடியே பிரத்தியக்ஷத்திலும் கண்டோம்; யாவராலுங் காணவரிய காட்சியுங் கண்டவாரானோம்; நமது ஜென்மம் சாபலியமாயிற்று; இனி விநாயகமூர்த்தி இவரோடுவந்து புசிப்பதைக் காணவேணும்; அவர்வந்து புசிக்காவிட்டால் இவரை யவமானப்படுத்தியனுப்பவேணும் என்று யோசித்ததை மெய்யடியாரறிந்து சொல்லுகின்றார்:—ஐயா; உமது பக்தி வெளியாயிற்று; அலங்காரமுடைய ஸ்திரீக்குப் புருஷனில்லாததுபோலும், திவ்வியமான கட்டடமமைந்த குளத்துக்குள் ஜலமில்லாததுபோலும், நல்லதோர் நாட்டுக்கு அரசனில்லாததுபோலும் நீர் அநந்தகாலமாய் விநாயகர் பூசை செய்து வந்தும் அருளில்லாதவரா யிருக்கின்றீர்; நீர் செய்து வரும் கணேசுவரபூசை சுத்த டம்பத்திற்காகவே என்பது விளங்கலாயிற்று; ஒருநாளாவது உடல்பொருள் ஆவிகளை தேவனுக்குஅர்ப்பித்தவரல்ல; திரிகரண சுத்தியோடு பூஜித்தது கிடையாது; அஞ்ஞாநாந்தகரான மூடஜெனங்கள் இவர் பூஜாதுரந்தரர் என்று மெச்சிக் கொண்டாடவும் நாவினைத் தட்டிதட்டி சுவைத்துண்டு தேகத்தைப் பெருக்கக் காப்பாற்றவுமே யுமது விநாயகபூசை; அல்பரிடஞ்சேவித்தாலுஞ் சொல்பலாபங் கஷடத்தளவு கொடுக்கிறார்கள், சேவகஞ் செய்யாமல் கூலிகேட்டால் யாரேனுங் கொடுப்பார்களா? அதுபோல் நீர்செய்புங் கிரமம் பிசகாமல் பக்தி செய்தால் விநாயகர் ஏன் உன்னிடம் வரமாட்டார்? பக்திமார்க்கங்களைக் கிரந்தங்களைச் சொல்லாநின்றனவே, அதின்பட யநுஷ்டித்தால் விக்நேசுவார் உன்னோடு வந்து ஏன் போசிக்கமாட்டார்? கிரந்தங்கள் கூறுவதெல்லாம் பொய்யா? உம்மிடத்தில் பக்தியின்நிலை யில்லாமையினாலே விக்நேசுவரர் வருகிலர் என்று இவற்றையெடுத்துச் சொல்லவே சிந்தாமணிதேவர் எங்களில் யாவருக்கும் விக்நேசுவரமூர்த்தியை வரவழைத்துப் புசிக்கவைக்கும் சக்திகிடையாது. தாங்கள் அத்தேவனை வரவழைத்துப் புசிப்பிக்கவைக்குங் காட்சியைக்காண மிகவும் ஆவலுற்றவனா யிருக்கின்றேன். தயவுசெய்து சீக்கிரத்தில் அவ்வாறு செய்யவேண்டுமென்று தாஸரைநோக்கிப் பிரார்த்திக்க தாஸரும், விநாயகருடைய ஸந்நிதாநத்துக்கு அருகில் போய் நின்றுகொண்டு, இறைஞ்சி ஓரபங்கம் பாடினார். அதின் கருத்தாவது—சுவாமி விநாயகமூர்த்தியே! நீரெப்பேற்பட்டவரென்றால்—நான்குவேதம், ஆறுசாஸ்திரம், பதினெட்டுபுராணம், முப்பத்திரண்டு உபநிடதங்கள், முப்பத்துமுக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் இருடிகள், கெருட-கந்

தருவ சித்த-வித்தியாதர-கிந்நர-கிம்புருடர்கள், ஏகாதசருத்திரர்கள் நவப்பிரஜாபதிகள், அஷ்டவசுக்கள், சப்தமுநிகள், இன்னம் அநந்தங் கோடி பெரியவர்கள் யாவரும் முன்னோரென்று தொழும்படியான வர். சகல ஆகமங்களுக்கும் மூலகாரணன். இப்படிப்பட்ட உன்னு டைய நிர்த்தநத்திற்கு யாழில்வல்ல நாரதாதியரே பின்னடைந்து விட்டார்கள்; வல்லபை மணாளா! அடியேனால் உன்னுடைய பெரு மையை வருணிக்க வசமோ? சத்தியமநோகரா! இத்தருணம் சங் கோசமில்லாமல் அடியேனுடைய பக்கத்தில் வீற்றிருந்து அமிசிக்க வரவேண்டும் என்று பிரார்த்தித்துப் பாடிய அபங்கத்தைக்கேட்ட விநாயகர், தம்முடைய நிஜரூபந்தோன்ற, தாஸருடையபிரார்த்தனை யின்படியே அவரருகிற் போட்டிருந்த இலையினிடம் உட்கார்ந்திருந் தார்.

சிந்தாமணி தேவர், கணேசுவர மூர்த்தியானவர் தமது நிஜதரி சநத்தைக் காட்டிக்கொண்டுவந்து தாஸரருகிலிருந்த மூன்றிலைகளில் ஒன்றினருகில் உட்கார்ந்துகொள்ளக்கண்டு, துக்காராம் ஸ்வாமியி னுடைய கிருபாகடாக்ஷத்தால் நீண்முடியும், சதுர்ப்புஜமும், நீண்ட துதிக்கையும், சிந்தூரத்திலதமும், பீதாம்பரமும் மோதகக்கையும், ரத்திநாபரணங்களுந் துலங்க கணநாதரைச் சேவிக்கப் பெற்றோம். கருமங்களை விட்டோம்; நாம்பெற்ற நன்மை யாவர் பெறுவார்? இப் படிப்பட்ட தெள்ளியஞானியைச்சூத்திரரென்றும்நாம்பிராமணரென் றும் எண்ணினோம். இப்போது இவருடைய கீர்த்திகள் வெளியா யிற்று என்று எல்லோருங் கொண்டாடி இனி எந்த ஜென்மங்களி லும் இக்கொடிய சமுசாரமென்னும் மாயா சம்பந்தகளிற் சிக்கியெங் களை நலியவிடாமல் தடுத்தாட்கொள்ளு நிமித்தம் இத்திருமேனிகொ ண்டு அவதரித்த எங்கள் குருஸ்வாமியே! உமது திருவடிகளுக்கு வந் தநம்; எங்கள் பிழைகளைப் பொறுத்தருளும் புண்ணியனே! வந்தநம்; எம்பெருமாற்கு உகந்த இன்பவெள்ளமே! வந்தநம் என்று பலவாறு துக்காவைத் துதித்து, பயபக்தி விசுவாசங்களோடு வாய்களைப்புதை த்துக்கொண்டு நின்று, ஸ்ரீபாண்டுரங்கநாதனையுஞ் சேவிக்க எங்களு க்கு ஆசை பெருகா நின்றது; மற்றொரு தளிகையிலையும்இருக்கிறது; எங்கள் பிறவிக்கடலுக்குத் தெப்பமென்னநின்ற தெளிவே! கடாக்ஷித் தருளவேண்டும் என்றுபிரார்த்திக்க, பிரபந்நோத்தமரும், சுவாமிசந்நி தாநம் எழுந்தருளியிருக்குந் திசையைநோக்கி நின்று, இருகரங்களை யுஞ் சிரமிசை கூப்பி சேவித்துத் துதிப்பதாவது - ஹரி ஹரீ? தீந பந்து! தீநதயாபரா! திநகரகோடி தேஜோமயாநந்தரூபா! சரணம்; ருக்குமணீகாந்தா! சரணம்; உருத்திரனேத்தும் ஒப்பில்மணிவண்ணா

சரணம்; இப்போது சிந்தாமணி தேவரும் மற்ற பிராமணர்களுந் தேவருடைய நிஜசொரூபத்தைக்கண்டு தெரிசிக்க ஆசைகொண்டு பிரார்த்திக்கின்றார்கள்; பிரார்த்தனைக்குஇரங்கிவந்து,தேவர்க்கென்று பரிமாறப்பட்டிருக்கும் அந்நத்தையுண்டு களித்தருளவேண்டும் காகுத்தனே! என்றுதுதிக்க, புருஷோத்தமன் புண்ணியசீலராகிய தமது அடியவருடைய பிரார்த்தனையைக்கேட்டு, இரத்திநகிரீடம் முடியிலும் காதுகளில் மகரகுண்டலங்களும், மார்பில் கௌஸ்துவாபரணமும், கழுத்தில் வநமாலையும் திருவரையில் பீதாம்பரமும், சங்கம் - சக்கரம் - சாரங்கம் - கதை-வாள் என்னும் பஞ்சாயுதங்களையணிந்த சதுர்ப்புஜமும் துலங்கவந்து தோன்றி தாஸருக்கும் சிந்தாமணி தேவருக்குமே சேவைகாண துக்காவுக்கு அருகிலிட்டிருந்த மற்றொரு இலையில் வந்து உட்கார்ந்துகொண்டார். இவ்வற்புதசேவையை தாஸரும், சிந்தாமணி தேவருங் கண்களாரக்கண்டு சேவித்து தீர்க்கதண்டங்கள் செய்து, அற்புதமற்புதமென்று பெருமிடறுசெய்ய, அங்கிருந்த மற்றவர்களும், ஹரிவிடேல்! பாண்டுரங்கா! என்றும் கோஷித்து, எல்லோரும் ஓரே பந்தியாயுட்கார்ந்து பொசிக்கலானார்கள். இறைவனும் விநாயகக்கடவுளும் உண்பது தாஸர்க்கும் சிந்தாமணி தேவருக்குமேயன்றி பிறருக்குத் தோன்றிலது. ஆனால் அவர்களெல்லோருக்கும் அவ்விரு இலைகளில் வட்டித்திருந்த அந்நங் காய்கறி முதலியவை கொஞ்சங்கொஞ்சமாகக் குறைந்துவருவது மாத்திரந் தோன்றிக்கொண்டிருந்தது. இவ்விருவரும் புசித்தானவுடனே கைகால்களைச் சோதித்துக்கொண்டு, தாஸரால் சந்தந - புஷ்ப-தாம்பூலங்களைக் கொடுக்கப்பெற்று அணிந்து மறைந்தார்கள்

அதன்பின்பு, சிந்தாமணிதேவருக்குஆநந்தமுண்டாய்,விஷ்ணு அடியாருடைய திருவடிகளில் வீழ்ந்துசேவித்துஉம்முடையபிரபாவ மகிமைகளையறியாமல் அகங்காரங்கொண்டவனாய்பரிக்ஷிக்கயெண்ணினேன். எனக்கிருந்த அகங்கார மமகாரங்கள்யாவும் உம்முடைய பாதசேவையினால் கழிக்கப்பெற்றுக் கிருதார்த்தனானேன். நான் தங்களுக்குச் செய்த குற்றங்களை மன்னிக்கவேண்டியது. இந்தக் கிராமமும், இந்த எனதுவீடும் தங்களுடைய திருப்பாததூசுப்பட்டமையால் பாவநமாயிற்று. நான் தங்கள் திருவடிகளைச் சேவித்துப் புநிதனாக பூருவ ஜெந்மத்தில் என்னபுண்ணியஞ் செய்திருந்தேனோ அறியேன்; இந்தப் பிராமணர்களும் என்னநோன்பு நோற்றிருந்தார்களோ! ஹரிஹரீ! உம்மாலே விக்கிநவிநாயகரையும், பண்டரீரங்கநாதனையுஞ் சேவித்துக்களிக்கலாயினேனென்று அருவாநந்தம் அடிக்கடி பெறுகப்பெற்று, தாஸரைத் தழுவிக்கொள்வதும், ஆலிங்கநாதி

களைச் செய்வதும், நமஸ்கரிப்பதும், தங்களைத் தாங்கள் மறந்து உச்சிராந்தியடைவதுமாயிருந்து மேலுஞ்சொல்லத்தொடங்கினதாவது— ஸ்ரீமத் விஷ்ணுபக்தர்கள் பஞ்சமகுலத்தில் தோன்றினவர்களாயிருந்தாலும் அவர்கள் வந்தநயோக்கியர்களென்று ஸ்ரீமத் பாகவதத்தில் கண்ணனே கூறினாராகையால், தாங்கள் எக்குலத்தவரேனும் பகவத் கிருபா:பிரசாதமும், பகவத்பக்தியும், அதினளவாலுண்டான மகாத்துமியங்களும் மிஞ்சி யிருத்தலினாலே எங்களால் வந்திக்கப்பட்டவராயினீர். நாங்கள் பிரமகுலத்தில் தோன்றினவர்களாயிருந்தும் பிரமவித்தைக்கேற்ற சத்துவாமிச சோரூபம் எங்களிடத்தில்லாமையால் இத்தேகமெடுத்ததால் பயன்பெற்றோமல்லோம். பருவதங்களுக்குள் இமாசலம்போலும், தபோதநர்களுக்குள் சங்கரமூர்த்திபோலும், சித்த புருஷர்களுக்குள் தத்தாத்திரேயரைப்போலும் தாங்கள் வைணவர்களுக்குள் சிறந்தவராதலால் நாங்கள் எல்லோருந் தங்களை வணங்கலாயினோம் என்று துதித்தார்கள். இப்படி அவர்கள் துதிப்பவைகளைகேட்டு தாஸர் நடுக்கமெய்தி, சிந்தாமணி தேவர் பாதங்களில் வீழ்ந்து சேவித்து, எழுந்துநின்று, கைகளைக் கட்டிக்கொண்டு எனதாசாரியரே! நானோ சூத்திரன்; பிராமணர்களுக்குத் தொண்டேசெய்யும்பாத்திரவான்; என்னைத்தங்களைப்போன்றஉயர்ந்தவர்கள் புகழல் நலமோ? என்னால் புகழப்பெறவேண்டுமன்றி, தங்களுடைய ஆசீர்வாதம் இருந்தால்தான் கீர்த்திவானாவேனேயன்றி ஆசீர்வாதமில்லையாகில் யாதொருக்காலும் ஈடேறமாட்டேன், ஓர்போதுஞ் சுகமுங் கிடைக்கமாட்டாது, பிரமகுலத்தோன்றலாகிய பிருகுமகாருஷி லக்ஷிமீகாந்தராகிய நாராயணனை மார்பிலுதைக்க, குலமான்மியத்தால், உதைத்த அவ்விருடியினுடைய திருவடிகளைப்பிடித்து, என்னையுதைத்ததால் நொந்ததோ இவ்வடியென்று அமுக்கித்தந்து வந்தநங்களுஞ்செய்தனுப்பினர். அப்பேர்ப்பட்ட ஏற்றமுடையபிரமகுலஸ்தராகிய தங்களுடைய திருவடிகளை நான் பூசிக்கவேண்டியதுகடமையாயிருக்க என்னைத் தாங்கள் கொண்டாடுவீர்களாகில் முறைமைக்கேலாது. எல்லாருடைய திருவடிகளிலும் வீழ்ந்துவீழ்ந்து சேவித்துக்கொண்டு அத்தால்தடிப்பெய்திய எனக்கும் ஒருவர் புகழேற்றலடாது என்று சொல்லி, அங்கிருந்த எல்லார் கால்களிலும் வீழ்ந்து வீழ்ந்து சேவிக்கலாயினர். அங்ஙன் சற்றும் அபிமானமில்லாமல் அங்கிருந்தவர்களையெல்லாம் பணியலுற்ற தாஸரைப்பார்த்து எல்லோரும்அச்சமுற்று, அவருடைய எழில் குணத்தைப் புகழ்ந்து, நமக்கு எக்காலம் இக்குணம் வாய்க்கும் என்று ஸ்ரீ ஹரியை நினைந்து, யாவரும் ஒருமநதுடையவராய், அக்ஷதைகளைக் கைகளிலேந்தி, வேதமந்திரங்க

ளால் சொஸ்திகளோதி, வாழ்த்துதல்செய்து, தாஸர் முடிமேல் இறைத்தார்கள். அந்த வைகுண்டபதியாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்திக்குச் சமமாக நீர் ஆகக்கடவதென்று ஆசீர்வாதங்களுஞ் செய்தார்கள். அவர்களால் ஆசீர்வாதங்களைப் பெற்ற தாஸர் உடனே அங்கு நின்றும் பிரயாணப்பட்டு தேஹூகிராமம் வந்து சேர்ந்து, பூருவம் போல் தமதுவிருத்தி காரியங்களிலிருந்தார்.

இஃதிவ்வாறிருக்க, கிரந்தாசிரியரைநோக்கிச் சிலசந்தஜெனங்கள் கேட்பதாவது:—துக்காராம்ஸ்வாமிகள், விஷ்ணுவுக்கு தாஸராய், விஷ்ணு ஆராதநமே செய்துகொண்டு வருகிறவர்; விநாயகருடைய ஆராதனை செய்தவரே யல்ல; இப்படியிருக்க, விநாயகரை யழைத்த போது அவரும் வந்து புசித்தார்; இவர்தானெப்படி வரலாம்? தாஸர் தான் தம்நாயகனைவிட்டு வேறொருவரையெப்படி தொழலாம்? இவைகளை விவரமாகச்சொல்லவேண்டும் என்று கேட்க மறுமொழி சொல்லலுறுகின்றார் கிரந்தகர்த்தா—நாயகன் என்பது-தெய்வத்தை,தெய்வமென்றால் - சகல அண்டசராசரங்களிலும் கிரீடைகளால் ரமித்துக்கொண்டிருப்பதென் சுருதிகள் சொல்லா நின்றன. மெய்யன்பர்களும் அதுவேசொல்லுகின்றார்கள். அப்பேர்ப்பட்ட தேவனையே நாயகனைக்கொண்டுவிட்டோம் என்று அதிக்கிரமித்து, நாங்களெல்லோரும்ஒன்றென்றெண்ணியிருக்குந் தேவனுடைய கருத்தறியாமல் பொய் வேடதாரிகள் இதர தேவதைகளை நிந்தித்துத் திரிந்தால்அத்தேவதைகள் இவர்களைச் சும்மாவிடுமோ? தங்கள் நாயகனும் பிரியப்படுவானோ? குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல், தங்களுடைய அவித்தியா சம்பந்தங்களைப் போக்கிக்கொள்ளவேண்டி தெய்வத்தைத்தொழப் பிராப்தர்களாகியும் வேறு தெய்வங்களை நிந்தித்துத் துன்பங்களை யேற்கத்தகுமோ? ஜெகத்ரக்ஷகனாகிய ஸ்ரீமந் நாராயணனை யுபாசிக்குந் தாஸர்களுக்கு எண்குணங்களும் அமைவதால், அந்நற்குணங்களைப்பெற்ற சத்துவநிஷ்டர் ஓர்போதும் தேவநிந்தனை செய்யவேமாட்டார்கள். எந்த தேவதையையுஞ் சமமாக எண்ணுவார். அப்படி எண்ணுகிற காரணத்தால்தான் எத்தேவனை எச்சமயத்தில் விரும்பினபோதிலும் அத்தேவன் அச்சமயத்தில் தானே வந்து காப்பது தேவர்களுக்குக் கடமையாயிருக்கும்; சற்குணமில்லாவிடில் நாராயணனுடைய கிருபையைப்பெறார். அநந்த தேவர்களால் நன்மையுமடையார். நாராயணனுடைய புத்திரனயிருந்தபோதிலும் சற்குணமில்லையாகில் யாவருமவனை விரும்பமாட்டார்கள். "அரசன் சேயேனு மறமது கற்கவேண்டும்" என்று பழமொழியுங் கூறுகின்றது. சந்மார்க்கமே எல்லாவற்றிற்கும் ஆதா

ரம். அஷ்டவசுக்களில் ஒருவராகிய பிரபாகரவசு தருமராஜனுக்கு பாகவததருமம் போதித்ததில்,—ஒருவன் ஸ்ரீவைகுண்டநாதனுடைய திருவடிகளைப்பெற எண்ணங்கொள்ளுவதுண்டாகில் அவன், தேவர்களுக்கும், ருஷிகளுக்கும், கெருட - கந்தருவ - சித்த-வித்தியாதர - பந்நகாதிகளுக்கும், உலகிலிருக்கும் பெரியோர்களுக்குமெல்லாம் அடிமையால், அவர்களெல்லாரையும் வணங்கி, அவர்களால் ஆசீர்வாதங்களைப் பெறுவானாகில் அப்போது ஸ்ரீ வைகுண்டபதி அவனை யங்கீகரித்து, தன்னுடையதிருவடி சமுகத்திற் சேர்ப்பார் என்று முதல் தருமமாகச் சொல்லியிருக்கின்றார். கருவிலே திருவுடையராய்க்கொண்டு துக்காராமர் இவ்வெல்லாத் தருமங்களையும்நன்குடையவராகையாலே, அவரழைத்தால் விநாயகமூர்த்தி தானே வருவார்! யாரைவர அவர் விரும்பினும் அவர் கூலியாள்போல் வரமாட்டாரா? சதாகாலமும் துக்காவைச்சூழ்ந்து, கண்ணை யிமைகாப்பதுபோல் தேவர்கள் காத்துவருகின்றார்களல்லவா? இவருடைய கீர்த்திப்பிரதாபங்களை யாரால் சொல்லமுடியும்; இமையவர் தம் நாயகனே முனைந்தாலல்லால்? என்றுசொல்லி முடிக்கவே மறுபடியும், ஐயா! நிராசையைப் பெற்று, சதா பகவத் பஜனை செய்தலாலே காலங்கழித்து, ஒருவரிடமும் ஒன்றுமாசித்துப் பெற்றறியாத இத்துக்காராம் ஸ்வாமிகள்; தம்முதாத்தினுதித்த சிறுவர்களுக்கு விவாகங்களை நடத்தியிருக்கின்றார்; அவ்விவாகங்கள் எவ்வாறு நடந்தனவோ சற்றருள் புரியவேண்டுமென்று பிரார்த்தித்தவர்களைப் பார்த்து மகிபதிதாஸர் சொல்லுதற்கு ஆரம்பித்தார்.—

கற்பகத்தருவினிடம் இருப்பவர்க்குக் குறைவுண்டோ! பாவாபாவங்களிற் பகுத்தரியும் அல்பபரிபாகிகளுக்குக் குறைவுநேறிடுமல்லது எதுவும் ஹரியாக பாவிக்குமவர்களுக்கு என்றும் எத்தாலுங் குறைவுநேரிடாது. அவர்களுக்கில்லாததுஒன்றுமில்லை "குலந்தரும் செல்வந்தந்திடும் அடியார்படு துயராயின வெல்லாம்--நிலந்தரம்செய்யும் நீள்விசும்பருளும் அருளொடு பெருநில மளிக்கும்—வலந்தரும் மற்றுந்தந்திடும் பெற்றதாயினுமாயினசெய்யும்—நலந்தருஞ்சொல்லை நான்கண்டு கொண்டேன் நாராயணா என்னும்நாமம்" என்று அருள்மாரியும் அருளிச்செய்திருக்கின்றார். இதுநிற்க, இந்தத் துக்காராம் ஸ்வாமிகளுக்கு காசிபாய் என்றும், பாகீரதி என்றும், கெங்காபாய் என்றும் மூன்று குமார்த்திகளுண்டு. அம்மூவரும் விவாகத்துக்குரிய பருவமுடையவர்களாயிருக்கும்போது, ஆவலி ஜீஜீபாயம்மாளாகிற தாஸர்பெண்ஜாதி தம்கணவரைப்பார்த்து, பெண்கள் விவாகத்துக்கு யோக்கிய பருவமுடையவர்களாயினார்கள். அவர்களுக்குத் தக்கவர்

களைத்தேடி மணம்புரிவிக்கவேண்டியதென்று சொல்லக்கேட்டு தாஸ ரொன்றும்பதிலுத்தரஞ் சொல்லாமல், வீதியில்வந்து தமது சோதந் தரபாத்தியஸ்தர்களில் யோக்கியர்களான மூன்று பிள்ளைகளை யழை த்துக்கொண்டுவந்து, பிராமணர்களை யழைப்பித்து, நல்ல முகூர்த்த வேளையைச்சோதிக்கச்செய்து, நலங்குமுதலிய சடங்குகளைநடாத்தி அந்நல்முகூர்த்தவேளையில் மாங்கலிய தாரணஞ்செய்துவைத்தார். மறு நாள், தம்மூருக்குஅருகாமையிலிருக்கும் ஜாம்பள என்னும் கிராமத் திலிருக்கும் மோக்ஷகாடே என்னும் நாமமுடைய சந்ததியாராகிய அப்பிள்ளைகளின் தாய்தந்தைமார், தங்களுடைய புத்திரர்களுக்கு துக்கா தமது புத்திரிகளைக்கொடுத்து, மாங்கலியதாரணம் பண்ணு வித்தாரென்று கேள்விப்பட்டு, அடங்காசந்தோஷம் அடைந்தவர்க ளாய், தங்கள் சக்திகளுக்குரிய சாமக்கிரியைகளையும் எடுப்பித்துக் கொண்டு, பந்துஜநமித்திரர்களையும் அழைத்துக்கொண்டு தேஹுகா மில் தாஸர்வீட்டுக்கு வந்துசேர்ந்து பார்க்கையில் அங்குள்ள சற்பாவ ஜெநங்கள், வந்த சுற்றத்தாருக்கும் தாஸருடைய சம்பந்திகளுக்குந் தக்க மரியாதைகளைச்செய்து, அவ்வவர்களுக்கேற்ற சன்மானங்களை, நடாத்தி உபசரிக்க, வந்தவர்களும் இவர்களுக்கு மரியாதை முன்னு கச் சன்மானங்களை நடாத்தி உபசரிக்க, இப்படி நான்குநாள் குலாசார விதிகளின்படி பெருபெருத்த கலியாணங்களைச்செய்து முடித்து, சந்துஷ்டர்களாய் தங்கள்தங்கள் வீடுகளுக்குச் சென்றார்கள்.

ஸ்ரீமத் உலகநாதன் எப்போது நேசரானரோ அப்போதேஉல கம் நேசமாயிற்று. ஓர்குடும்பியானவன் - தாய்-தந்தை-சகோதரர் - மனைவி - மக்கள் - சுற்றத்தார்-மற்றுமுள்ளவர்களுக்கு இன்பவானய் நடந்துகொள்ளுவானாகில், வீதி - நாடு - நகரங்களில் உள்ளவர்களுக் கும் அதுபோலவே நடந்துகொள்ளக் கேட்பானேன்! அவ்வெல் லாரால் தானும்சன்மானங்களையடையத்தடையென்ன? தாய்தந்தையர் வெறுப்படைந்து மநம்நோகும்படிச் செய்வானாகில்அவனுக்குஉலகம் யாவும் வெறுப்புற்று, மநம்நொந்து, துர்ப்பாவனைகளையுண்டாக்கி சுகங்கிட்டாமற்செய்யும். இந்தத் துக்காராம் யாவருக்கும் ஹிதமான வரென்று பலமேதாவியராலும், தேவர்களாலும், தேவதேவனாலும், பலமுறை ஆசீர்வாதங்களைப்பெற்றிருத்தலால் ஸ்ரீமந்நாராயணனாகிய பரமபிதாவும், ஸ்ரீமகாலக்ஷ்மியாகிய பரமமாதாவும் என்றும் இவ ருடைய உள்ளத்தில் குடிகொண்டார்கள். இப்படியிருந்தும் சுத்த லௌகீகப் பிரவர்த்தகர்களான பாமரர்களைச் சீர்படுத்த அவதரித்த வராகையாலே, தாமரையிலையில் ஜலம்போல் உலகவியாபாரங்களில் தத்தளித்துக்கொண்டிருந்தும், சத்தாசாமானிய தருமமாகிற தேக

புத்திதவிர்த்து, சொரூபலக்ஷியார்த்தத்தில் இருந்தவண்ணமேவிவாக சுபகாரியங்களை முடிப்பித்தார். இந்தப்பிரபு என்பேரிலுங் கருணை வைத்து ஆட்கொண்டார். இவரை வருணிக்க என்தரமல்ல? தேவர்கள்தான் வருணிக்கவேண்டும். இன்னம் இவருடையபிரபாவங்களைத் தெரியவோதுகிறேன் கேளுங்கள்என்று சரித்திரஞ்சொல்லத்தொடங்கினர்.

பீடு என்னுங்கிராமத்தில் தமோகுணப் பிரசுரனும், பேராசையின் மிகுத்தோனுமாய் தேசபாண்டியன் என்று ஒரு பிராமணனிருந்தான். அவன் பண்டரீபுரஞ்சென்று, விடோபாவின் சந்நிதானத்திற்கெதிரிற் ஊணுரக்கமில்லாமல் ஆசநமிட்டுக்கொண்டு தவநிலையினனாய் ததேகத் தியானத்திலிருந்தான். பத்தாநாள் விடலதேவன் இவனுடைய ஜாக்கிரதாசொப்பநத்திற்சென்று தோன்றி உனக்கென்ன வேண்டும்? என்றுகேட்க, அப்பேராசையோனும்சுவாமியைவணங்கி இம்மைபோகங்களும், மறுமைசுகமும், சாத்திர விற்பத்தியும்வேண்டும் என்று பிரார்த்தித்ததை யறிந்து பகவான், நீர் ஆளந்திக்கேகி ஞாநேசுவரரை யாராதிப்பீராகில் கிடைக்கும்; அவ்விடத்திற்குப் போம் என்று மறைந்தருளினர்; அவன்றானும் அத்திசையையகன்று சாக்கிரதையடைந்து, சுவாமியின் உத்தரவையெண்ணி மிகுசந்துஷ்டனாய், ஆளந்திக்குவந்து, ஞாநேசுவரசுவாமியை யாராதித்து, அங்கு சந்நிதாநத்துக்கெதிரில் முன்போல் யோகுபுரிந்திருந்தான். இப்படி நான்குநாளிருக்க ஞாநேசுவரரறிந்து, இவன்ஜென்ம கன்மி, அத்தோடு பேராசையும் பெருக்கக்கொண்டவன் என்றெண்ணி, அவன் சொப்பநத்திற்போய் தேஹூகாமில் துக்காராம்தோன்றி அநந்த திருவிளையாடல்களைச் செய்துக்கொண்டிருக்கின்றார்; அவரிடத்திற் போவையேயாகில் உன்கோரிக்கையீடேறும் என்றுரைத்து மறைந்தருளினர். பிராமணனும் விழித்துக்கொண்டு, ஞாநேசுவரர் உத்தரவுசெய்ததை நினைந்து, இவர்நம்மை துக்காவிடம் போகச்சொன்னர்; துக்கா சூத்திரஜாதி; அதிலும்வணிகன்; நாமோ பிராமண ஜாதியாயிற்று; உயர்ந்த குலத்தவராகியநம்மை இவரிடம் போயாசிக்க உத்தரவுசெய்தார். இதற்கென்ன செய்யலாம்?என்று சங்கைகொண்டவனாய், அவ்விடம்விட்டுப் புறப்பட்டு, தேஹூகாமுக்குவந்து, துக்காராம் ஸ்வாமியைக்கண்டு, இரண்டிடங்களிலும் நடந்த விருத்தாந்தங்களைத் தெரிவித்தான்; அவைகளைக்கேட்ட அன்பர் ஆச்சரியங்கொண்டு, ஞாநதேவுசுவாமிகள் என்னையுமொரு மனிதனையெண்ணி உம்மையனுப்பினரா! ஹரி ஹரீ! இவரோகாசிப்பட்டணத்துப்பிராமணர்கள் மெச்ச எருமைக்கிடாவாக்கினல் நான்கு வேதங்களையுஞ்சொல்லுவித்தார். சாங்கதேவுஎன்பவர் புலியின்பேரில்ஏறிக்கொண்டு தம்முன்வர இவருங் குட்டிச்சுவரேறி அதனைநடத்தி, புலிவாகனர் முன்னிருத்தி, அவரையடிமைகொண்டார். இப்பேர்ப்

பட்டவராயிற்றே இவர்! இப்போகமும், பரசுகமும் இவர் திருவடிகளில் காத்திருக்குமவை காமனையெரித்த காபாலி என்றும் இவரிடத்தில் இருக்கின்றார். இவரிடத்தில் தங்க அரசமரமும் இருக்கின்றது. இப்பேர்ப்பட்டவராகிய தாம் எதுசெய்யமாட்டார்? சருவசக்திகளையும் வாய்த்துள்ள இவர் இப்பேதையேனிடம் பிராமணரை யனுப்பினர். நான் நிஜதாஸனல்ல. ஜெனங்கள் தங்களறியாமையால்என்னை தாஸனென்று மதிக்கின்றார்களேயன்றி என்னிடத்தில் கிஞ்சித்தும் தாஸத்துவமில்லை. ஞாநேசுவரா! கருணாநிதி! இந்த வுபாதியை என்னிடத்திற்கு அனுப்பினீர். என்னை புயக்குச் செல்வதாஸனென்றுஏற்படுத்தி, அக்ஷரங்களை ஜோடித்துஎன்னிதயத்திலிருந்து போதிக்கும் சற்குருவே! தாயானவள் பிள்ளைக்கு அமுதூட்டுவது போல் இராமநாமாமிர்தத்தை யெனக்கூட்டிப் பெருமைபடுத்தியருளிய பேரன்பே!உம்மிடத்தில்எல்லையென்றெண்ணுவேன்! என்னை மன்னித்தருளும் என்று தியாநித்து, அபங்கமென்னுங் கவிகளில் பதினொன்றுசெய்து, எழுதுவித்து, அதற்கு ‘உத்தமஞாநக்கிரந்தம்’ என்றுபேரிட்டு, அப்பாடல்களையும் ஒருதேங்காயையும் வந்தபிராமணன்கையில் கொடுத்தார். அந்தப்பிராமணன் அவைகளை வாங்கிக் கீழேவைத்துவிட்டு, இவரிடம் வந்ததற்குபிராதிருத வாக்கியங்களால் பதினொரு பாடல்களைச் சமைத்துக்கொடுத்து, ஒருதேங்காயையும் அளித்துப் போகச்சொன்னார்; இதற்காகத்தானா நானிவ்விடம் வந்தது; என்று சொல்லிக்கொண்டேபோய் ஆளந்தியிற்சேர்ந்து, ஞாநேசுவரர் சந்நிதாநத்துக்கெதிரில் முன்போல்தவமிருந்து, நீரே என் மநோரதந் தலைக்கட்டவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டிருந்தான்.

இந்தப்பிராமணன், அபங்கங்களையும்தேங்காயையுங் கீழேவைத்துவிட்டுப் போய்விட்டபிறகு துக்காராம்ஸ்வாமிகள், பதின்மூன்று அபங்கங்களைப்பாடி எழுதிவித்து, ஞாநேசுவரர்சந்நிதிக்கு அனுப்பிவைத்தார். அந்த அபங்கங்களின் கருத்துகளாவன—இவன் ஜெந்மகன்மியென்று தாங்களறிந்திருந்தும் தாஸனிடமனுப்பினீர்; என் பேரில் சுமத்தியபளுவை யானறிந்துகொண்டேன்; பொய்யனுடைய நடைவடிக்கைகள் எங்கும் பொய்யாகவேமுடியும்; தங்களுடைய திவ்வியாஞ்ஞையை மீறாமல்நடத்தினேன்; அவன் பெறாமல், நான் கொடுத்த அபங்கங்கள் பதினொன்றையும், ஒரு தேங்காயுங் கீழே வைத்துவிட்டுப் போய்விட்டான் என்பவையாம். இவற்றை ஞாநேசுவரசுவாமிகள் படித்துப்பார்த்துக்கொண்டு, அந்தப் பிராமணனை அவன்றன் சொப்பநதசையிலெழுந்து நோக்கி, நானனுப்பினவிடத்திற்போய் அவரீந்த பலத்தை யங்கீகரிக்காமல் மறுபடியும்இவ்விடத்திற்குவந்தாய்; இனியுன்னெண்ணம் செல்லாது; இப்போதே ஓடிவிடு என்று கடிந்துகொள்ள, பிராமணனும் பயந்து சொல்லாமலே

யோட்டம்பிடித்தான். அவனுடையபிராரத்துவ கருமமானது அவன் கோரியதை யநுபவிக்கவிடாமல் நீங்கச்செய்தது. இது எவ்வாறிருக்கிறதெனில்:—கற்பகத்தருவின் நிழலில் தங்கியிருந்தும் பிச்சையெடுக்க ஜோளியைக் கேட்டதுபோலிருக்கிறது. பாபிகளுக்கு அமுதமும் அசுத்தஜலம்போல் காணும். தருமம் பெறவேண்டுமென்று தார்மிகரிடத்திற்குப்போனாலும் பாபிகள் அதருமத்தையே பெறுவார்கள். சன்மார்க்கர்களோடு சாங்கத்தியம் பண்ணாமலும் சாஸ்த்திரக்கருத்தை யுணராமலும் பேராசையேமிகக்கொண்டோர்ஜாதியபிமானப் பிராந்தர்களாய், இகபர சுகங்களையிழந்து, எந்தஜெந்மத்திலுஞ் சுகங்கிடைக்கப்பெறாமல் அலைந்தலைந்து, எமனுடைய தூதுவர்களுக்கு வசமாவார்கள்.

இதுநிற்க, மெய்பக்தரான துக்காராம்ஸ்வாமிகள் பிராமணனுக்காகப் பாடிகொடுத்த பதினொரு அபங்கங்களையும் மறுபடியுந் தாமே பார்த்து, பகவான்தானே நமதுள்ளத்திலிருந்து யாருக்காகவோ இவைகளை நிருமாணஞ்செய்து வைத்தான்; எந்தப் புண்ணியசீலனுக்கு இதுலபிக்கப்போகிறதோ! என்று யோசித்துக்கொண்டிருக்கையில், 'கோண்டோபா' என்னும் யௌவந பிராமணனொருவன், தேஹூகாமுக்கருகில் ஓர்தடத்தில் போகும்போது, துக்காராம் இங்கு தானிருப்பவராகையால் அவரைப்போய் செவித்துக்கொண்டு போகலாம் என்றுஊருக்குள்வந்து, தாஸரைக்கண்டு சாஷ்டாங்கமாய் நமஸ்காரஞ்செய்து எழுந்து, கைகளைக்கட்டிக்கொண்டு எதிரில்நிற்க; அவருக்கு தாஸர் முன்சொன்ன தேங்காயையும்பதினொரு அபங்கங்களையுங் கொடுத்தருளினார். அவைகளைப்பெற்ற கோண்டோபா என்னும் பிராமணச்சிறுவன் வித்தியாபயிற்சியேயில்லாதவனாயிருந்தும், அபங்கங்களாகிற கவிகளமைந்த ஏட்டை உற்றுப்பார்த்த மாத்திரத்தில்தானே, வேதவேதாந்தங்களை ஐயந்திரிபுகளறக்கற்றவன் எப்படி உச்சரித்து வியாக்கியானங்களைச்செய்வானோ அதுபோல படிக்கவும், அவற்றிற்குப் பொருள்விஸ்தரித்துச் சொல்லவுந் தலைப்பட்டான். இது தனக்கே அதிசயமாயிருந்து தேங்காயின் குணமென்னமோ சோதிப்போமென்று உடைத்தான்; அதில் நவரத்திநங்களிருந்து ஜொலிக்கத் தலைப்பட்டன. கோண்டோபா பிரமையடைந்து, ஹரி ஹரீ! என்று ஸ்மரித்து, பிரபந்நருக்குக் காட்டினான். தாஸரும், இவன் இந்நவரத்திநங்களையும் பார்த்துப் பயந்தவனாகின்றானென்று அவனுக்குத் தேறுதலைச்சொல்லி, சொத்து உனதாகையால் நீயே கொண்டுபோய் அநுபவி! என்று சொன்னவுடன் ஆநந்தங்கொண்டவனாய், துக்காராம் ஸ்வாமிகளுடைய திருவடிகளில் வீழ்ந்துசேவித்து விடைபெற்றுக்கொண்டு, ஜீவாஜிமஹாராஜா பண்டிதர்களைக் கொண்டுபுராண காலக்ஷேபஞ் செய்வித்துக்கொண்டு இருக்குமிடத்திற்குவந்து, காலக்ஷேபம்செய்யும் பண்டிதர் சாதித்துக்கொண்டு

இருக்குமவற்றைக்கேட்டு, இந்தப்பண்டிதர் நூலின்கருத்து ஒன்றிருக்கத் தாமொன்றுசொல்லிக் காலம்போக்குகிறார் என்று அரசனுக்குத்தெரிவிக்க, அரசனும் கோண்டோபாவைப் பார்த்து, அவர் சொல்லிக் கொண்டிருப்பவை நூல்கருத்துக்கு விரோதமென்று சொன்ன நீர் நூலின்கருத்தின்படி சொல்லிக்காட்டும் என்ன, கோண்டோபாவும் அப்பெருத்த திரளிலிருந்து புராணவாக்கியத்தைச்சொல்லி சாங்கோபாங்கமாகச் சரவருஷம் வருஷிப்பதுபோல் வியாக்கியாநஞ்செய்து, ஆழ்ந்த கருத்துக்களையெல்லாம் விவரித்துச் சொல்லத் தலைப்பட்டார். இவ்வற்புத வாக்கியங்களைக்கேட்ட அரசனும், பண்டிதர்களும், சபையார்களும் சந்தோஷ அதிசயங்களைக் கொள்ள; அவர்களில் ஜீவாஜீமஹாராஜா கோண்டோபாவைப்பார்த்து, நீரிவ்விடம் பலமுறை யாசகத்துக்காக வந்திருக்கின்றீர்; அப்போதெல்லாம் உமக்கு அசீர்வாதஞ்செய்யும் முறைமைகளே தெரியாது; இவ்வளவு சீக்கிரத்தில்உமக்கு இப்பாண்டித்தியம் உண்டானதெப்படி? இப்படி செய்துவைத்த ஆசாரியனார்? அவரை விளங்கச் சொல்லவேணுமென்று கோரிக்கொள்ள; கோண்டோபாவம் அரசனைப்பார்த்து ஆசீர்வாதங்கள்செய்து, நான் இன்றையதிநம் தங்கள் காலக்ஷேபத்திற்கு வந்து பரிசுபெறுவதாயெண்ணி வந்துகொண்டிருக்கும்போது வழியில் தேவுகாமில் துக்காராமரைச் சேவித்துப் போகலாமென்று அவரிடத்திற்குப்போய்ச் சேவித்துநிற்க, அவர் தாமும் என்னைக்கடாக்ஷித்து, நான் கல்வியில்லாதவனென்றறிந்து, பதினொரு அபங்கங்களைத்தந்தார்; அந்த எட்டைக் கையிலேந்திப் பார்க்கலாயினேன்; உடனே என்னுவிலிருந்து சரஸ்வதிவிளங்கி, வேதவேதாந்தங்களும், அவற்றின் விருத்திகருத்துகளும் அவர்முன்னேதானே சொல்லத்தொடங்கினேன்; தாஸரும்கேட்டு சந்தோஷித்து ஆசீர்வதித்தனுப்பினர்; அங்குநின்றும் பிரயாணப்பட்டு தங்கள் சமுகம்வந்தேனென்றுசொல்லக்கேட்டு அரசன்பிரமைகொண்டு, ஹரிஹரீ! அநந்த சயநா! ஆபத்பாந்தவா! ஆதிமூலமே! இன்றைய திநம் சுதிநமாகையால் உன்னுடையபக்தாது சுகீர்த்திகளைக் கேட்கலாயினேன்;பலராலும்பலநாளாய் துக்காராம்ஸ்வாமிகளுடையபிரபாவங்களைக்கேட்டும் அவருடைய திருவடிகளை இன்னுஞ் சேவிக்காத பாபியாயிருக்கின்றேன்; ஈஷணத்திரயங்களுடைய வலிமை என்னை நல்லவருடைய திருவடிகளுக்குக் கொண்டுபோய் விழவொட்டாமல் தடுத்துக்கொண்டிருக்கிறது; என்னை மன்னியும் மஹாநுபாவா! என்று, தேவுகாமிருக்குந் திசையைநோக்கி, தாஸரைநினைந்து வந்தநங்களைச்செய்து, கோண்டோபாவுக்குத் தங்கச்செங்கற்களும், ஆபரணங்களும், ஆடைகளும் பரிசாகக்கொடுத்து அனுப்பிவிட்டு, ஜீவாஜீ மகாராஜா தனியேயிருந்து யோசித்துக்கொண்டிருக்கின்றார்:—நாம் நம்மை யரசனென்று மதித்திருப்பதெல்லாம் அகங்காரங்களுக்கு

ஆதாரம்; அச்சுதனுடைய நல்லடியார்களைச் சேவிப்பதே தேகமெடுத்ததனாலாயபயன்; எப்போது துக்காவினுடைய சேவை செய்யப்போகிறோம்? எப்போது பிராப்தமோ அறியோமே! என்று இவரிங்ஙன் யோசித்துக்கொண்டிராநிற்க, இக்கிரந்தகர்த்தாவைநோக்கி சற்சநங்களிற் சிலர், சுவாமி! துக்காராம் ஸ்வாமிகள் தங்கருணையால் கோண்டோபாவுக்கு அளித்தவொரு தேங்காயில் நவரத்திநங்கள் இருந்ததாகச் சொன்னீர். அதில் இரத்திநங்களமைந்ததற்குக் காரணந் தெரிவிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க விடையளிக்கின்றார்:—

அமுதாபாத் என்னுமோரூரில், ஒரு சௌகார் தன்னுடைய இஷ்டகாமியம் நிறைவேறும்பொருட்டு, ஆளந்தியில் எழுந்தருளியிருக்கும் ஞாநேசுவரசுவாமிகள் திருவடிகாணிக்கையாக லட்சரூபாய் மதிப்புப்பெற்ற ரத்திநங்களைச் சமர்ப்பிப்பதாகப் பிரார்த்தித்துக் கொண்டான். அவனுடைய அபீஷ்டம் நிறைவேறினது. அவன் லக்ஷம்பொன் மதிப்புடையஉயர்ந்த ரத்திநங்களை யொருதேங்காய்க்குள் துளைசெய்துபோட்டு வாயடைத்து, தன்னூரைவிட்டுப் பிரயாணப்பட்டு ஆளந்திக்கு வந்து சேர்ந்து, ஞாநேசுவரசுவாமிகளுடைய சந்நிதிபோய்ச் சேவித்தான். அன்றிரவில் அவனுடையசொப்பநத்தில் ஞாநேசுவரர் தோன்றி, நீரிவ்விடத்திற்செலுத்துவதற்காகக்கொண்டுவந்திருக்கிற ரத்திநங்கள் நிறைந்த தேங்காயை, தேஹூகாமில் திருவவதாரஞ்செய்திருக்கிற துக்காராம்ஸ்வாமிகளிடங்கொண்டுபோய்ச் செலுத்தும் என்று சாதித்தருளினார். சௌகாரும் நித்திரைதெளிந்தெழுந்து சொப்பநத்தைநினைந்து, தேஹூகாமுக்கு வந்து, சுவாமி துக்காவைக்கண்டு வணங்கி, நடந்த சவிஸ்தாரங்களையுஞ் சொப்பந விசேஷத்தையுஞ்சொல்லி, ரத்திநங்களமைந்த அந்தத் தேங்காயை தாஸர்முன் திருவடிகாணிக்கையாக வைத்து, திருவடிகளில் தீர்க்கதண்டமிட்டு, விடைபெற்றுக்கொண்டு தன் நாட்டுக்குத் திரும்பிப் போய்விட்டான், அன்றையதிநமே, மாயாமயக்கிற் சிக்கிய மாயாவி தேசபாண்டியன் என்பவன் தாஸரைச்சேவிக்க. அந்தத் தேங்காயையே அன்னவனுக்குக் கொடுத்தருளினர். அவனுக்குப் பிராப்தியில்லாமையாலே பெறுமற் போய்விட்டான். கோண்டோபா பிராப்தியுடையவனாகையாலே பெற்றுக்கொண்டு ஏகினான்! என்று இவற்றைக்கேட்டு ஜநங்கள் சந்தோஷசித்தர்களாய்க் கொண்டாடினார்கள்

அநந்தரம், துக்காராம் ஸ்வாமிகள், கோண்டோபாவுக்கு அபங்கங்களையும், ரத்திநங்கள் நிறைந்த தேங்காயையும் பிரசாதித்தருளின அன்றையதிநமே தேஹூகாமைவிட்டு, ஞாநேசுவரசுவாமிகளைத் தரிசிப்

பதற்காக ஆளந்திக்குப்போய், அங்கு சந்நிதானவாஸலில் நின்று கொண்டு, ஆநந்தபரிதராய், கீர்த்தனைகளையும் அபங்கங்களையும் பாடி பஜித்துக்கொண்டிருக்கையில், யாத்திராவாசிகளா யங்குவந்திருந்த லோஹோகிராமத்தார் கண்டு துக்காராம் சுவாமிகளைச் சேவித்து, அவர் பாடிக்கொண்டிருந்த கீர்த்தனைகளையும் அபங்கங்களையுங் கேட்டு ஆநந்தக்கடலில் மூழ்கினவராய் பரவசங்கொண்டு சாஷ்டாங்க தண்டப்பிரணாமங்கள்செய்து, தேவர் எங்கள் கிராமத்துக்கு எழுந்தருளி, எங்கள் இல்லங்களைப்பாவநஞ்செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, அவர்களுடைய அபிப்பிராயத்துக்கு இசைந்து, அவர்களோடு செல்ல; வைணவவாக்கிரேசர் எழுந்தருளுகிற சேதியைக்கேட்ட லோஹோகிராமவாசிகள், தக்கதோரிடத்தில் பச்சைப்பந்தல் ஜோடித்து, வீதிகளில் எங்கணுமலங்காரஞ் செய்துவைத்து, எதிர்கொண்டு வந்து சுவாமிகளை யழைத்துக்கொண்டுபோய், பச்சைப்பந்தலில் சித்திராசநமிட்டு, வேண்டிய வுபசாரங்களைச்செய்து, பிராமண சமாராதநம் நடாத்திவைத்து, அன்றிரவில் தீபாலங்காரங்களை யலங்கரிப்பித்து, சந்தநபுஷ்ப தாம்பூலங்கள் அமைத்துவைத்து, சுதி-மத்தளம்-ஜாலர் - தம்புரு - கஞ்சிரு - சிட்கர முதலான வாத்தியக் கருவிகளை யமைத்துவைக்க, தாஸரும் அவ்வாத்தியங்களின் நடுவிலிருந்து, பிரமஞ்ஞாநரசமூற அபங்கங்களையுங் கீர்த்தனைகளையும் பாடி நடநங்களோடுவதைக் கண்டு அந்தரவாசிகளும், இதுவே வைகுண்டமாய்த் தோன்றுநின்றதெனக் கொண்டாடினார்கள். காலக்ஷேபக் கூட்டத்திலிருந்த யாவர்களும் மெய்மறந்து பிரமரசமீதூற, நாதப்பிரமாநந்தத்திற் சொக்கினவர்களாயினார்கள். அவ்வளவில் பொழுதுவிடியுஞ் சமயமானவாறே சருவலோக சரண்ணியனுக்கு மங்களார்த்திகளைச் செய்து, வந்தநப்பிரணாமங்களை யியற்றி, பிரசாதங்களைப்பெற்று சந்துஷ்டராயிருந்தார்கள்.

ஸ்ரீ ருக்குமணீரமணன் விலாசமுற்று என்னுடையிதயத்தில் தங்கி தன்னுடைய தாஸரில் தலையாகவும், லோகபாவநராகவுமிருக்கும் ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகளுடைய திவ்விய சரித்திரந்தன்னை வாழ்வோர்க்கு இன்னமுதமாக வழங்குவித்தருளுவான்.

பதினோராமத்தியாயம் முற்றும்.

ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகள் திருவடிகளே சரணம்.



அனாகடசா தோய்த்திருட்காருவது. இந்திராயனி நதி. கிணவுகண்டபர் கூவதர்கள்.

ஸ்ரீ

ஸ்ரீ பாண்டுரங்கபரப்ரஹ்மணேநம:

ஸ்ரீ மத்

துக்காராம் சுவாமிகள் சரித்திரம்.

பன்னிரெண்டாமத்தியாயம்.

காப்பு.

ஒன்றுமறியாத - ஊமையனேன் புந்திதனில்
நின்றுதன்னருள்சுரப்பா - னேமிநெடியவனே.

ஸ்தோத்திரங்கள்.

ஹரி ஹரீ பகவானே! நீ அநாதபந்து! ஆபத்ஸகன்! ஆயர் குலமதலையாயமர்ந்து ஆவிநங்களைக் காத்தருளின அருளுடையண்ணல்! ஆழ்ந்தமடுவில் முதலைவாய்ப்பட்ட யானையினருந்துயர்கெட ஆழிதொட்ட ஆதிமூலம்! உன்னுடைய அநந்தகலியாணகுணங்களமைந்த திருவிளையாடல்களின் பெருமையையும், உனக்கே மெய்ம்மையராய்த் தீர்ந்த தாஸகோடிகளுடைய குணகீர்த்திகளின் மேம்பாடுகளையும் உள்ளபடியுணர்ந்து உலகினர்க்குரைக்க எளியனேன் வசமன்று. பீமாநதீதீரத்திலிருக்கும் பண்டரீபுரத்தில், ஸ்ரீபாதங்களிரண்டையுஞ் சமமாயமைத்துக்கொண்டு செங்கல்லின்மீது நின்று சுகாநந்தரூபம் எல்லாருக்குந்தோன்ற இடையின்மீதில் இரண்டுகைகளையும் ஊன்ற வைத்துக்கொண்டு, அன்பு நிறைகொண்ட அன்பகளுக்கு அருள்நிறைந்த காக்ஷியளிக்கின்றனே. இந்தஉனதுகாருணை

அருமை திருக்கோலத்தைக் கண்ணாரக்கண்டுகளிக்கப்பெற்றகருணையாளராகிய சந்தஜெநங்கள், நின் திருவுருவத்தைவிட்டுப் புறஞ்சென்ற காலத்திலும் கண்டதொரு காட்சிதன்னை என்றுங் கண்டுகொண்டிருக்கின்றவர்களாகவே யிருக்கின்றார்கள். தங்களுக்குள்ள அருளால் தோன்றியுள்ள ஞாநக்கண்களின் மான்மியத்தால் நின்னன்பின் மிக்கோராகிய தாஸர்கள், உன்னைச் சேவிக்க ஆவல்மீறிய காலத்தில் நின்சந்நிதிக்குவந்து, திவ்விய பரிமளங்களமைந்த கதம்ப கஸ்தூரிப் பொடிகளைத்தூவி, உன்னுடைய திருவடிகளையும் மார்பையுந் தங்கள் சிரங்களிலொத்தி, நின்னையுந்தழுவி ஆலிங்கநஞ்செய்துகொண்டு ஆநந்திக்கின்றார்கள். பஞ்சமாபாதகர்களும் உனது பாததெரிசனை கண்டமாத்திரத்தில் தானே தங்கள் தங்கள் பாதகவிருத்திகளைத் தவிர்த்து உனக்கடியார்களாகி விடுகின்றார்கள். தாய்தந்தையரைத் தகாஇமிசைகள் செய்த புண்டரீகருக்குந் தரிசனைதந்துகாப்பாற்றியிருக்கின்றாய். சாதகர்கள் வைகுந்தஞ்செல்வது பிரயாசையாயிருக்குமென்று எண்ணி, இம்மிருத்தியுலோகத்தில் பூவைகுண்டமென்னும்பண்டரீபுரத்தில்நித்தியவாசம்பண்ணி, திரிலோகங்களிலுமுள்ள நாநாவித தீர்த்தங்களையும் சந்திரபாகைக்குப் பகற்காலங்களில் வரச்செய்து, மேல்நாட்டாராகிய இமையவர்களுக்கும்இந்நாட்டு மானிடவர்களுக்கும் தீர்த்தப்பிரசாதமா யருந்துவித்துக் கிருதார்த்தர்களாயாக்குவிக்குங் கேசவமூர்த்தீ!கிளரொளியுடையவனாய்த் தங்கியவேங்கடத்துப் பூர்த்தியே! உனதந்த திவ்வியக்ஷேத்திரத்தைப்போல் வேறொரு க்ஷேத்திரமுண்டென்று யாருமொழியக் காண்கிலேன். உனது திருவுள்ளங் களிகொள்ள உன்னிஜவடியாராகிய ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகளுடைய சரித்திரத்தை யென் எதமில் உள்ளத்திற் பொருந்திநின்று முடித்துவைப்பது மன்றி, அவ்வன்பருடைய அருமைத் திருவடிக்காளாக்கியும் வைத்தருள்வாய் பரம புருஷா! பாஞ்சஜந்நியமேந்தும் பற்பநாமா! என்றிவ்வாறெல்லாம் ஸ்தோத்திரங்கள்செய்து சரித்திரந்தன்னைத் தொடங்குகின்றார்.

ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகள், ஞாநேசுவரரைச் சேவிப்பதற்காக ஆளந்திக்கு எழுந்தருளியபோது, அவ்விடத்திற்கு யாத்திராபராக வந்திருந்த லோஹோகிராம வாசிகள்கண்டு சேவித்து, தங்கள் கிராமத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அவ்விடத்தில் பிராமண சந்தர்ப்பணங்கள் முன்னாகபஜனைகளைநடத்தி,பேராநந்தங்களையநுபவித்துக்கொண்டு வந்தார்களே! அவ்விருத்தாந்தங்களிருக்க, அந்தக் கிராமத்திலேயேவசித்துக்கொண்டிருந்த ஓர்வார்த்தீகப்பிராமணஸ்திரீ தாஸரிடம்வந்து வந்தநங்களைச்செய்து, ஸ்வாமீ! அடியா

ளுடைய குடிசைக்கு எழுந்தருளி ஒருவேளை தளிகை அமிசிக்க வேண்டும். அன்றிரவில் பஜனைகாலக்ஷேபம் அங்குதானே நடத்தி என்னைப் புனிதையாக்கி யருளவேண்டும் என்று பிரார்த்திக்க, தாஸரும், விருத்த பிராமணஸ்திரீயின் நல்ல அபிப்பிராயமறிந்து, அவளைப்பார்த்து, அம்மா! என்றுவரத் தாங்கள் சொல்லுகின்றீர்களோ அன்றையதினம் வந்து சேவிக்கச் சித்தமாயிருக்கின்றேன் என்று விடை தந்தனுப்பினதை பிராமணஸ்திரீ கண்டு களிப்புள்ளவளாய் தன்வீட்டுக்குப்போய், துக்காராம் ஸ்வாமிகளோடு பத்துபிராமணர்களுக்கும் தளிகை சாதிக்க வேண்டிய ஆவலாலே வேண்டியசாமான்களைச் சேகரித்துவைத்து, அண்டைவீட்டுக்காரனுடையமண்சுவறுகளின்பேரில் தான் சிறியவீடமைத்துக் கட்டிக்கொண்டு குடித்தனம் இருப்பவளாதலால், அந்தக்காலம் வருஷகாலமா யிருந்ததைப் பற்றி அந்தத் தன்வீட்டின் சுவறுகள் மழையால்நனைந்து சாய்ந்து நின்றன. அதையறிந்த பிராமணக்கிழவி, சுவாமிகள்வந்திருக்குந்தருணத்தில் என்னமோசஞ்செய்யுமோ இச்சுவறுகள் என்று பயந்து, துக்காராம் ஸ்வாமிகளிடம்வந்து அறிவிக்க, ஸ்வாமிகளும், அம்மா! நீபயப்படாதே; பிராமண சந்தர்ப்பணம் முடிகிறநாள்வரையில்சுவறுகள்விழா; விடோபா காப்பாற்றுவான்; தாங்கள் போங்கள் என்று சொன்னவுடனே கிழப்பிராமணத்தி தன் வீடுவந்துசேர்ந்து பார்க்குங்கால், நனைவால் மிகவுஞ்சாய்ந்தும் சுவறுகள் விழாதிருப்பதைப் பார்த்து, அங்கிருந்த ஜெநங்களுடனே தானும் ஆச்சரியங்கொண்டு, இவை பகவத்தாஸருடைய திருவருளால் நிற்கின்றனவேயன்றி பிறிதன்று என்று பாகவதருடைய குணங்களைக் கொண்டாடினாள். அதன்பின் நான்குநாள் கழித்து அந்தக் கிழவி பிராமண சமாராதநத்திற்கு ஆகவேண்டிய பலகாரங்களும், பதார்த்தங்களும் அடிசிலுஞ் சமைத்து சித்தப்படுத்திவைத்து, வைணவத்தலைவரிடம்வந்து, நமஸ்காரஞ்செய்து, எழுந்தருளப் பிராத்திக்கவே ஸ்வாமிகளும் தம்மோடு பத்து பிராமணர்களை யழைத்துக்கொண்டு, அவள்வீட்டிற்கு எழுந்தருளி, போஜநமருந்தி, சந்தந புஷ்ப தாம்பூலங்களைப் பெற்று ஆநந்தமேலிடப்பட்டு, அம்மாநீரும் சாப்பிடலாம் என்று ஆஞ்ஞாபிக்க, கிழவியும் உண்டு வெளியேவந்து ஸ்வாமிகள்முன் நிற்கக்கண்ட ஸ்வாமிகள் அந்தப் பிராமணக்கிழவியை நோக்கி, சாமான்கள் வீட்டிலுள்ளனவற்றை யெல்லாம் வெளியே கொண்டுவந்துவிடும் என்றுரைக்க அந்தக்கிழவியும் அப்படியே யாகுகவென்று வெளிக்குக் கொண்டுவந்து தக்கதோரிடத்திற் சேர்த்துவைத்தவுடனே அந்தச் சுவறுகள் விழலாயின. இதக்கண்ட ஜெநங்கள்

ஆச்சரியங் கொண்டவர்களாய் துக்காராம் ஸ்வாமிகளைக் கொண்டாடினார்கள். பிறகு சுவாமிகள் அவ்வூரதிகாரியை வரவழித்து, இந்தம் மாள் குடியிருப்புக்காக ஓர்வீடு சேகரித்துகொடும்என்று உத்திரவு செய்ய, அவ்வதிகாரியும் ஒருவீட்டைச் சித்தப்படுத்தி உடனே தர, அந்தவீட்டில் கிழப்பிராமணத்தியை குடியேற்றி, அன்றிரவில் அங்கேதானே பஜனைகாலக்ஷேபங்களை நடத்தியருளினார்.

இந்தச் சந்தஜெநங்கள், இந்த நரலோகத்திலே தருமசம்ஸ்தாபநஞ்செய்துவைப்பதற்காகத்திருவவதரித்து,பாபபுண்ணியங்களினின்றும்விடுபட்டு,பிரமாநந்தங்களில்மூழ்கினவர்களாய்ப்பிரகாசிக்குமவர்களாதலால், அவர்கள் எவ்விடங்களில் பிரவேசித்தாலும் அவ்விடங்களெல்லாம் பதிதங்கள் நீங்கிப் பாவநமாய், அவ்விடங்களில் வசிக்குமவர்களையும் புநிதர்களாயாக்குவது இயல்பதாகும். ஸ்ரீ ஹரியானவர் திருக்கையில் சுதரிசநமேந்தி, தனதன்பர்கள் கோரியவண்ணம் இரக்ஷிக்கிறது இயல்பாவதுபோல் இவ்வைணத்தலைவரும் லோகபாவநார்த்தந் திருவவதாரம் பண்ணினவராகையாலே நாளுக்குநாள்மகத்துவங்கள்மிஞ்சி அதிசயித்துக்கொண்டு இருப்பதைக்கண்ட லோஹோகாமிலுள்ளவர்கள், மூன்றும் பிறைமுதல் பூரணைநாள்வரையில் சந்திரன் தனது கலைகளைநாளுக்குநாள் உயர்வுறப்பெறுவது கள்வர்கட்கன்றி மற்றவர்கட்கெல்லாம் ஆநந்தமேலிடுவதுபோல் நாளுக்குநாள் அதிசயிதர்களாய் சுவாமிகள்திறத்திற்செய்யும்வந்தநவழிபாடுகளாலும், பூஜியதைகளாலும் ஸ்வாமிகளுடைய திருவுள்ளம் நாணமெய்தி, ஓகோ! இவர்களெல்லாரும் நாமிதுகாறுஞ்செய்த தபோபலங்கள் யாவற்றையுங் கொள்ளைகொண்டு பங்கிட்டுக்கொண்டு நம்மை ராகத்துவேஷாதிகளில் புகுதவிடுவார்கள்! என்றெண்ணி, ஹரிஹரீ! பரந்தாமா! பங்கஜாக்ஷா! பண்டரீநாதா! என்னையும் ஒருமனிதனாக இவ்வூராரெண்ணி, என்னுடைய வார்த்தைக்குக்கீழ்ப்படிந்து நடந்து எனக்குக் கௌரவத்தை யுண்டாக்குகின்றார்கள்; நானோ! உனது தாஸர்களுக்குத் தாஸனாய்க் கீழ்ப்படிந்தவனென்றென்னை யெண்ணியிருக்கிறேன்; தேவாதிதேவா! என்னை மன்னித்தருள்: என்சொரூபத்தைக்கண்டு நான் அடங்கியிருந்தாலும்,ஜெநங்களினுள்ளங்களில் நீ புகுந்து என்னை இன்னானென்று அவர்கட்கெல்லாம் உணர்வுண்டாக்குகின்றனை; முடிவில் என்னை யெவ்வாறு செய்வையோ அறியேன்! கோவர்த்தநமேந்தி கோபாலர்களைக் காத்தகோவிந்தா!என்று வெருவியவுள்ளத்தராய்பயந்து ஒருமாதத்தின்பின் அவ்வூரைவிட்டுப் பிரயாணப்பட்டார். இதையறிந்த அவ்வூரின் அன்பர்கள், துக்காராம் சுவாமியினுடைய குணமேம்பாடுகளையும் அருள் விசேஷத்தை

யும் வருணித்துக்கொண்டாடி, தொழுதுநின்று விடைகொடுத்து அனுப்பிவைத்தார்கள்.

அவ்வூரில்தானே யிருந்த சில கருமசண்டாளர்கள், ஜாதியபிமானங்களில் முதிர்ந்தவர்களாய்க்கொண்டு, இந்தத் துக்காராம் ஸ்வாமிகளுடைய நடைவடிக்கைகளே மேலானவையென்று நினைத்துஞ் சொல்லியும், துக்காராம் ஸ்வாமிகளைத் தொழுமவர்களிடத்தில் எதிருக்தமாகப்பேசிப் பழிக்கலாயினர்கள். சுரத்தால் அரோசிக்கப்பெற்றவனுக்கு அமுதமுங் கசப்பதுபோலும், சேற்றிற் புரளும்பன்றிக்குச் சந்தநக்குழம்பு விலக்காவதுபோலும். அந்தர்மலிந சித்தர்களாகிய இக்கொடியோர்க்கு அச்சுதபக்தியுக்தரான அவ்வருமையடியவர் குணங்கள் விபரீதமாகவே தோன்றுநிற்கும்.

இங்ஙனிருக்க, வாகோலி என்னுமூரில், சமஸ்கிருதத்தில் மிகு பாண்டித்தியமுடையராய், நான்குவேதம் ஆறுசாத்திரம்-முப்பத்திரண்டு உபநிடதம் பதினெட்டுபுராணம் - இதிகாசங்கள் - மற்றுமுள்ளனவாக சாத்திரங்கள் எல்லாவற்றையுமோதி, கரைகண்டவராயிருந்த 'ராமேசுவரபட்டர்' என்னும் பிராமணர், இராஜராஜர்களிடமெல்லாம்போய் நிகரில்லாக் கீர்த்தியைப்பெற்று அவர்களால் சம்மானமாகக் கொடுக்கப்பட்ட நல்லதோர் பரிசுகளையெல்லாக்கொண்டு பெருத்த பிரபுவாயிருந்தார். இவர் துக்காராம் ஸ்வாமிகளுடைய பிரபாவங்களையும் அருளின் திறங்களையும் நாளுக்குநாள் பலராலுங் கேட்டு, மனதின்கண் மாச்சரியமிஞ்சக்கொண்டவராய், இந்தத்துக்கா என்பவர் சூத்திரஜாதியில் பிறந்தவராயிருந்தும், தம்முடைய ஜாதி நியதிகளுக்கு நேர்விரோதமாக நடக்கின்றார். சூத்திரராயிருந்தும் நான்குவேதங்களின் கருத்துகளைக் கீர்த்தனைகளில் அமைத்துப் பாடி, பிராமணர்கள்முதல் எல்லாப் பெரியோர்களையும் மோகிப்பிக்கின்றார். பிராமணர்களுந் தம்மைத் தொழும்படியாக மோகந சங்கிதங்களை யமைத்திருக்கின்றாராம். அந்தப்பிராமணப் பேதைகளும் இவருடைய மாயமயக்குகளாகிற வலையிற்பட்டுக் கிடக்கின்றார்களாம். என்னையொத்த வித்வான்களுக்கெல்லாம் இது குறைவாயிருக்கின்றது. அவரை அந்தத்தேசத்திலிருந்து விலக்கித் தூலவுதேசத்துக்கு அனுப்பிவிடவேண்டும்; இல்லாவிடில் நமக்கில்லாத மாநக்கேடுகளுண்டாகும் என்றெண்ணி, அத்தேசாதிகாரியாகிய அரசனிடம்போய், தம்மை யவ்விராஜன் மதித்திருப்பவனுகையால் அவனுக்குத்தங்கருத்து விளங்கவுரைத்து, அவனிடத்திலிருந்து ஒருதாகீது, "துக்காராம்ஸ்வாமிள் தேஹூகிராமத்தில் குடியிருக்கும் இருப்பைத்தவிர்த்து, அங்குநின்றும் வேறே தேசங்களுக்குப்போக அனுப்பிவிட

வேண்டியது'' என்று தேஹூகிராமத்தின் தலைவனுக்குப்பெற்று, அந்தத்தாகீதை யனுப்புவித்தார். அந்தத் தாகீதைப்பெற்ற தேஹூகிராமத்தின் அதிபன் வாசித்துப்பார்த்து, பயங்கொண்டு நடுநடுங்கி,எவ்வாறு நாம் அப்புண்ணியவாளருக்கு ஊரைவிட்டுப்போக வுத்தரவு அளிப்போம்? என்று ஏங்கினவனாய், தீராதகாரியமாகத் தோன்றியிருக்கையினாலே அந்தத்தாகீதைக் கையிலெடுத்துக்கொண்டுவந்து, சுவாமிகளைச்சேவித்து, இதனைக் கையிற்கொடுத்தான். சுவாமிகள் தாகீதைப் பார்த்துப்பார்த்து, புன்னகைகொண்டு, ஐயா! நான்ராஜாவினுடைய ஆஞ்ஞையைக் கடக்கத்தக்கவனல்லன். ஆனால் நிரபராதியான நான் அந்தச் சிறந்த வித்துவானிடம்போய் க்ஷமைபெற்றுக் கொண்டு வருகின்றேன்; அதினளவும் என்மீது கிருபைசெய்துதாங்கள் பொறுக்கவேண்டியது என்று மன்னப்புகேட்டுக்கொண்டு பிரயாணப்பட்டு, வாகோலி என்னுந் தேசத்தையடைந்து, அதில்ராமேசுவரபட்டருடைய வீட்டை விசாரித்துக்கொண்டுபோய் உள்ளேபிரவேசித்து, அந்தவித்தியா சம்பந்நராகியபட்டர் ஸ்நாநமுடித்துக்கொண்டு, காயத்திரீ மந்திரஜெபத்தில் இருப்பதையறிந்து,இராமநாமோச்சாரணங்களைச்செய்வதுகொண்டேராமேசுவரப்பட்டரடிகளில் விழுந்து சேவித்து எழுந்திருந்து கைகளைக்கட்டிக்கொண்டு, பயமரியாதைகளுடனே யெதிரில்நிற்க. பட்டரும் துக்காராம்ஸ்வாமிகளைப் பார்த்து, உள்ளத்தில் களிப்படைந்தவராய், நீயோ சூத்திரன்,பிராமணர்களுக்கே அதிகாரமாயிருக்கும் வேதங்களையும், அவ்வேதங்களின் சிரமாகும் பிரணவத்தையும் அபங்கமென்பதிலும் கீர்த்தனைகளிலும் அமைத்துப்பாடிபிராமணர்கள்முதல்எல்லாஜாதியாருக்கும் போதித்துமயக்கி, அவ்வெல்லாஜாதியாரும் உன்னைத்தொழும்படிச் செய்திருக்கிறாய். சூத்திரன் வேதங்களை யுச்சரிக்கப்படாதென்றும், உச்சரித்தவனுக்கும் கேட்டவர்களுக்கும் பாபங்கள் அணுகுமென்றும், சூத்திரன் வேதத்தைக் காதாலே கேட்டாலும் கேட்ட அக்காதில்நாராசங்காய்ச்சி விடவேண்டியதென்றும் அவ்வேதமே சொல்லாநின்றது. அப்படியிருக்க, உன்மரபுக்குச்சேராதகாரியஞ்செய்கிறாய்; பெரியோர்களையெல்லாம் உன்காலில் விழும்படிச்செய்கிறாய்; என்னைப்போன்ற பண்டிதர்கள் இருக்கின்றார்களே! என்கிற அச்சமும் உனக்கில்லாமற் போய்விட்டது. ஆகையினால்தான், உன்னுடைய சேராச்சேர்த்தியான துஷ்காரியங்களை அரசனுக்குவிளங்கச்சொல்லி உன்னை யத்தேசத்திலிருந்து நீக்க உத்தரவனுப்பச்செய்தேன்.இனி நீ போகலாமென்று சொல்லக்கேட்ட பகவத்தாஸர் இராமேசுவர பட்டரைப்பார்த்து, ஐயா!இதற்குமுன் சந்தஜெநங்கள் அவதரித்து,

வேதவேதாந்தங்களையும், அவற்றின் நிஜகருத்துகளையும் அபங்கங்களிலும், கீர்த்தனைகளிலும் அமைத்துபாடினதில்லையா? அவற்றை இன்னார் இனியாரென்றில்லாமல் பிராமணர்முதல் எல்லாஜாதியாருக்கும் போதித்ததில்லையா? பிரத்தியக்ஷ சாக்ஷாத்காரமாக அற்புதங்களைக் காட்டினதில்லையா? அவற்றிற்கெல்லாம் என்ன செய்யலாம்? என்றுசொல்ல, ராமேஸ்வரபட்டரும், அவைகளையெல்லாம் உன்னை நான் கேட்டவனல்ல; நான் செய்பக்கூடாது என்கிற காரியத்தை நீ செய்யக்கூடாது; இதுவரையிலும் நீ செய்திருக்கிற கவிகளையெல்லாம் மூட்டைகட்டி, உன்னுடைய கையாலேயே கொண்டுபோய் இந்திராயணிநதியில் போட்டுவிடு; இனிமேல் கவிகளைப்பாடாதே. இப்படியெல்லாம் நான் சொல்லியபடி கேட்டு, நடந்துகொண்டால் தான் உன்னை யவ்வூரிலிருக்கவைப்பேன்; இல்லாவிட்டால் உன்னை யவ்வூரைவிட்டு ஓட்டுவது சித்தம்; கவனித்து நடந்துகொள்-போ! என்றுசொல்ல, தாஸர் அவ்வுரைகளையெல்லாங்கேட்டு, தாங்கள் உத்தரவு பண்ணின அவ்வாறே நடந்துகொள்ளுவேன் என்று சொல்லி, வந்தநாதிகளுஞ்செய்து, அவ்விடத்திலிருந்து பிரயாணப்பட்டுத் திரும்பிவரும்போது பகவத்குணநிஷ்டர்என்ன யோசித்துக்கொண்டு வருகின்றாரென்றால்: நம்மை அபங்கங்களுங் கீர்த்தனைகளுஞ்செய்து பாடும்படி யாஞ்ஞாபித்தவன் ஸ்ரீ பண்டரிநாதனே; அவன்றானே நம்முள்ளத்திலிருந்து பாடிவைத்து வருகின்றான். இப்படி அரும்பொருளாய், தானே யானாய் நின்று பாடிவைத்திருக்கும் அபங்கங்களையும் கீர்த்தனைகளையும் வீணில் ஜலத்திற்போட்டுவிடும்படி இந்தப் பிராமண பண்டிதர் இராமேசுவர பட்டருரைத்தார். அப்படிச் செய்யாவிட்டால் நம்மை ஊரைவிட்டுத் துறத்துவார். வீணிலிவருடன் வார்த்தைகளை யெதிர்த்தட்டாக ஆடிக்கொண்டிருந்தால் அகங்காரங்களுண்டாகும்; அவையுண்டாகவே அபிமாநகாரியங்களிற் புகுதவேண்டி முடியும்; ஆகையால், இதற்காக நாமென்ன செய்யலாம்? எல்லாக்காரியங்களுக்கும் பகவானே சாக்ஷிபூதன்; எப்படி செய்தாலும் அவன்பாரம் என்று நினைத்துக்கொண்டு, பஜனைசெய்தபடியே துரிதமாக தேவிகாமுக்குவந்து, ஸந்நிதிக்குள் புகுந்து சருவலோகநாதனுடைய திருவடிகளில் தீர்க்கதண்டமியற்றி யெழுந்துநின்று, இருகரங்களையும் சிரசின்மீது கூப்பி விண்ணப்பம் பண்ணுகிறதாவது: —

ஸ்வாமி! தேவர்பிரானே! இராமேசுவரபட்டர் என்னும் பெயருடைய பிராமண பண்டிதரொருவர் அபங்கங்களையும் கீர்த்தனைகளையும் அடியேன் செய்யலாகாதென்றும், இதுவரையிலுஞ் செய்திரு

க்குமவற்றை நதியில் புகட்டிவிடவேண்டுமென்றும், அப்படிச் செய்யாவிட்டால் ஊரிலிருந்து ஓட்டிவிடுவேனென்றும், என்மீது கோபங்கொண்டு சொன்னதுமன்றி, நீ சூத்திரன், வேதவேதாந்தங்களின் கருத்துகள் பொருந்தவைத்து அபங்கங்களையும் கீர்த்தனைகளையும் பாடி ஜெநங்களுக்குப் பக்திநிலை போதிக்கின்றனை; எல்லாரையும் மயக்கி உன்னைச் சேவிக்க வைத்துக்கொண்டனை; இக்காரியங்கள் உனக்குத்தகாது; இனியப்படிச் செய்யவேண்டாம். நாங்களெல்லாம் பண்டிதர்களா யிருக்கும்போது எங்கள் முன்னிலையில் செய்யத்தகாதவற்றைச் செய்தால் நாங்கள் சும்மாயிருப்போமா? என்று இப்படியெல்லாம் உத்தரவு செய்திருக்கின்றார்; அவர் உத்தரவின்படி இனி நடந்துகொள்ள வேண்டியவனாயிருக்கின்றேன்; இல்லாவிட்டால் ஊரைவிட்டோட்டுவார்; ஆகையால், அபங்கங்களையும் கீர்த்தனைகளையும் மூட்டையாகக்கட்டி இந்திராயணிமடுவில் கொண்டுபோய் விட்டுவிடுகிறேன்; அவர் செய்த ஆஞ்ஞைகளை தேவர்ஸந்நிதியில் விண்ணப்பம் பண்ணிவிட்டுப்போய் பிறகு அதின்படி செய்யவேண்டுமென்று வந்து விண்ணப்பம் பண்ணினேன்; அடியேன் சூத்திரஜாதி என்று தேவருக்குத் தெரிந்திருந்தும் தேவரே அடியேனுடைய சொப்பநத்தில் நாமதேவ சுவாமிகளுடனே யெழுந்தருளி சேவைதந்து, அபங்கங்களையும் கீர்த்தனைகளையும் புதியனவாய்ப்பாடிக்கொள்ள நியமித்தீர்; அந்நியமநத்தின்படியே முடியவைக்க அடியேன் உள்ளத்திலுமுறைந்து பாடுவிக்கின்றீர்; இப்படிச்செய்தருளுவானேன்? அடியேன் மூன்றவஸ்தைகளில் ஓரவஸ்தையிலாவது தேவரைநோக்கி, அடியேன் கவிபாடவேண்டும்; உலகத்தில் பெருமைபெற்று வித்துவானென்று திரியவேண்டும் என்று பிரார்த்தித்ததுண்டா? அல்லது நினைத்ததாவதுண்டா? எண்பதுகோடி ஸங்கற்பங்களிலும் தேவர் சிருஷ்டிக்கடங்கிய பிராணிகளைத் தேவராகவே மதித்துத் தெரிசித்துவாழ எண்ணங்கொண்ட அடியேனை, உயர்குலத்தோரிடமே வசிக்குந்தேவர் அவ்வித்துவானுடைய உள்ளத்திற்புகுந்து இவ்வூரைவிட்டு ஓட்டுவதற்காக எண்ணவைத்தனை; இப்படியுஞ்செய்யலாமா? அடியேனை ஊரினின்றுந் துறக்கவிடலாமா? அடியேனால் ஏதாவது குற்றமிருந்தால் தேவரேயல்லவா தண்டித்துப் புத்தியுரைக்கவேண்டியது? அதையொழித்து எதிர்பக்ஷஞ்சார்ந்து உன்னைச்சார்ந்த நாயேனுக்குத் தீங்கு வர நினைப்பிக்கத் தகாதே! என்று இவ்வகை விநயவார்த்தைகளையெல்லாம் விண்ணப்பஞ்செய்து, திருவடிகளில் வீழ்ந்து சேவித்துக்கொண்டு, ஸந்நிதியைவிட்டுப் புறப்பட்டு வீட்டுக்குவந்து, தம்மால் இயற்றப்பட்டிருந்த எல்லா அபங்கங்களையும் கீர்

த்தனைகளையும் எழுதிவைத்திருந்த ஏடுகளைக்கட்டுக்கட்டாகக் கட்டி, ஹரி! பாண்டுரங்கா! பக்தபராதீனா! என்று சொல்லிக்கொண்டே சிரசின்பேரில் தூக்கிவைத்துக்கொண்டு, வீதிவீதிகளெல்லாஞ்சுற்றி, கேட்டவர்களுக்குங் கேளாதவர்களுக்கும் எல்லாங்கேட்க, அபங்கங்களும் கீர்த்தனைகளும் நானாகிய சூத்திரஜாதியன்செய்தவை உயர்ந்த குலமாகிற பிரமகுலத்து மகாவித்துவசிரோமணி ராமேசுவரபட்டர், சூத்திரனாகியநான்வேதக்கருத்துகளை யமைத்துப்பாடிய அவற்றைத் தகாதென்றுசொல்லி இந்திராயணிமடுவில்போட்டுவிடும்படி ஆஞ்ஞை செய்திருக்கின்றார் அவருடைய உத்திரவின்படி நடவாமல் போனேனேயாகில் என்னை ஊரைவிட்டு ஓட்டிவிடுவதாக ராஜாவினிடத்தி லிருந்து தாகீதும்வாங்கி இவ்வூரதிகாரிக்கு அனுப்பியிருக்கிறார். ஆகையால் சருவலோக சரண்ணியன் யானைத் தன்னைத்தான் பாடிக் கொண்ட அபங்கங்களுங் கீர்த்தனைகளும் எழுதப்பட்டிருக்கிற இக் கட்டுகளைக் கொண்டுபோய், பட்டரது நியமனத்தின்படியே கல்லைக் கட்டி இந்திராயணீ நதியின் மடுவில் விட்டுவிடப் போகிறேன் என்று சொல்லிக்கொண்டே போகலாயினார்.

இப்படி, தாஸர் வீதிவீதியாக நுழைந்து சொல்லிக்கொண்டே போகும் ஆற்றாமையைக் கேட்டவர்களிற் சில உத்தமர்கள், இராமேசுவரப்பட்டர் தாம் பெரிய வித்துவானென்றும், இத்தயாமூர்த்தியாகிற தாஸர்முன் தம்கௌரவ்வியம் விருத்தியாகவில்லையென்றும், தம்பெருமை நாளுக்குநாள் குன்றுகிறதென்றும், அரசன் நமக்கு வேண்டியவனாகையால் அவனால் ஊரைவிட்டோடி விடவேண்டும் என்றும், இவர் ஊரைவிட்டுப்போய்விட்டால் தான் நமக்குக் குறை நீங்குமென்றும் எண்ணங்கொண்டு, முயன்றாப்போல் காணுகிறது. அவன்றான் பொறுமைகொண்டவனா யிருந்தாலும் அரசனும் நீதி நெறியைத் தவிர்த்து, அவன் பக்ஷபாதனாய் தாஸரை ஊரைவிட்டோட்ட இவ்வூரதிகாரிக்கு தாகீதனுப்பினது மிகவும் ஆச்சரியம். "அரசனன்றுகொன்றால் தெய்வம் நின்று கொல்லும்" என்பது பொய்த்துப்போகாது. காட்டியே தீரும் உயர்ந்தவைதாழும் தாழ்ந்தவை யுயர்வாகும். சருவவகைகளாலும் ஈசுவரனே தஞ்சமென்னநின்ற மெய்ப்பக்தருக்கு மானமும் அவமானமும், தூஷிப்பும் பூஷிப்பும்என்றுண்டோ? தூஷண பூஷணங்களிரண்டும் சமமாகவே யெண்ணுவார். இல்வுலகவாழ்க்கை அல்பமென்றிருப்பதோடு விளையாட்டாகவும் எண்ணி யிருக்கின்றார். தமக்கிவற்றில் பிரத்தியேக புத்தியின்மையால்தான் தெரிந்தவர்கட்குந் தெரியாதவர்கட்குந் தெரியவோதிக் கொண்டு போகாநின்றார் இவர் தம்மருளிச்செயல்களாகிற வற்றைக்

கங்கையிலெறியப் போவதால் என்னென்ன நன்மை தீமைகள் யாரா ருக்கு விளையப் போகின்றதோ அறியோம். என்ன திருவிளையாடல் கள் வெளியாதற்கோ கருணையங்கடவுள் இவ்வாறு தம்மடியார் திறத் தில் செய்துவைத்தது? அவனருளால் நடக்குமதை யவனால் தான் அறியப்படவேண்டும். இன்னும் என்னென்ன மான்மியங்கள் இந்த தாஸரால் நடக்குமோ அறியோம், இவர் லோகோத்தாரணஞ்செய்ய அவதரித்தவராகையால் உத்தாரணார்த்தம் வேண்டிய திறமைகளே முடியும் என்று ஒருவரோடொருவர் வார்த்தைசொல்லிக் கொண் டார்கள்.

மத்திம புருஷர்களாயிருப்பார் சிலர் பேசிக்கொண்டதாவது :— வித்துவானைக்கண்டால் வித்துவானுக்குப் பொறாமை. புதுவியா பாரியைக்கண்டால் பழையவியாபாரிக்குப் பொறாமை. வைத்தியன் வைத்தியனைக்கண்டால் பொறாமை. நாய் நாயைக்கண்டால் பொறா மை. அதுபோல், இந்நாடுகளில் பிரபல வித்துவானென்று இராஜ இராஜர்களெல்லாம் ராமேசுவரபட்டர் பெயர்பெற்றிருக்க, அவர் முன்பாகத் தானும் ஒருவித்துவானென்று இந்தத் துக்கா நடித்தால் அவர் சும்மாயிருப்பாரோ? அவர்முன் இவரெவ்வளவு? அவருக்கும் இவருக்கும் இருக்கிற தாரதம்மியங்கள் எணிவைத்துப் பார்க்க வேண்டும் என்றுரைத்துக் கொண்டார்கள்.

இவர்களினுந் தாழ்ந்த அதமர்களிற்சிலர் கும்புகூடி, ஒருவர் சொன்னதை மற்றொருவர் சொல்லாமல், மநம் போனபடியெல்லாம் பேசிக்கொள்ளுவதாவது :—துக்காவின் கருவத்தையடக்க நமது வித்துவசிரோன்மணியாகிய ராமேசுவரபட்டர் ஏற்பட்டார் அவரே ஏற்படாவிட்டால் இவனுடைய கருவம் அடங்காது. அவருடைய கல்வித்திறமை சூரியனைப்போல் தேசதேசங்களில் பிரகாசிக்கப்பட் டிருக்கிறது. துக்காராமுடைய கல்வி சூரியன்முன் மின்மினிப்பூச்சி யைப்போல்வதாகும். இதுவரையில் பட்டருக்குத்துக்காவினுடைய படோடோபங்கள் தெரியவராது. தெரியவருமாகில் ஆதியிலேயே இவ்வளவு கூத்தாடும்படிச் செய்துவைத்திருக்கமாட்டார். அப் போதே தலைநசுக்கியிருப்பார். இப்போது தெரியவந்தமையால்தான் ஊரைவிட்டு ஓட்டும்படி முயன்றார். அவருக்கு ராஜ ராஜர்களெல் லாங்கைகட்டிக்கொண்டு உத்தரவு சொல்லுகிறார்கள், பெருத்தவித்து வான்; தமக்கு நிகர் இவ்வுலகிலேயே கிடையாதென்னலாம். ஒருசப் தத்துக்கு ஆறுமாசகாலம் வியாக்கியாநம்செய்து புகழ்பெற்றார். இவ் வளவுவல்லமை யார்பெற்றிருக்கக்கண்டோம்? அல்லது கேட்டோம்? ஓராசான்வழி சாஸ்திர சாம்பிரதாயங்களிலுங்கரைகண்டவர். சிறந்த

109191

ஆசாரியரிடம் அநுக்கிரகம்பெற்றிருக்குமவர். சரஸ்வதியோ இவர்நாவில் என்றுமிருக்கின்ருர், கோடாநுகோடி கிரந்தங்களை அடுக்கடுக்காக நூதநமாய்ச்செய்திருக்கின்ருர். அவைகளை மற்றவித்துவான்கள் பார்த்துப்பிரமித்து, அவற்றின் கருத்துகள் தெரியாமல்மயங்கி,பட்டரையே கேட்டுத்தெளிந்து, அற்புதமாயிருப்பதால் சிரசாவகிக்கின்ருர்கள். ஞாநசூரியராகிய ராமேசுவரபட்டருக்குமுன் இந்தத் துக்கா எவ்வளவு? நமது சுவாமிகளாகிற ராமேசுவரபட்டருக்கு இடம்-பொருள்-ஏவல்களெல்லாம் அமைந்திருக்கின்றன; இவ்வெளிய துக்காவுக்கு என்னவுண்டு? பட்டரோ வெள்ளிச்சங்கிலிகள் பூட்டியஊசலில் நித்திரைசெய்கிருர். சமஸ்த தாநாதிபதிகளுக் கெல்லாம் லாபத்துக்காகப் பொருளளித்திருக்கின்ருர். திருமாளிகையில் பொன் வெள்ளி திரவியங்களும், இரத்திநங்களும் இராசிராசியாய்க் குவித்திருக்கின்றன. இப்படிப்பட்ட வித்துவானும் தநவானுமானவருக்குமுன் துக்கா சுண்டாங்கிதான்; இவனுக்கென்ன தெரியும்? எங்கே எந்த ஆசாரியனிடத்திலே கிரமமாக வாசித்தவன்? "ஆலையில்லா வூரில் இலுப்பப்பூ சருக்கரை" என்னும்பழமொழிக்கிணங்க, வித்துவஜ்ஜநங்கள் இல்லா இவ்வூரிலே, தன்னையொத்த கல்வியில்லாத சில மூடஜெநங்களைச் சேர்த்துக்கொண்டு, "ஊமைகளுக்குஉளறுவாயன் உற்பாதபிண்டம்" என்பதுபோல், அவர்களுக்குமுன், பத்தெட்டு பதங்களைக்கூட்டி ஓர்வித பாடலாகச்செய்துகொண்டு, அபங்கம் என்று பேரிட்டு,தம்புரு-மத்தள-தாளங்களைச் சத்தித்துக்கொண்டு, ஊர்தூக்கிக்கொண்டு போம்படி பாடிக்கொண்டு கூத்தாடி, நானுமொரு வித்துவானென்று அறிவில்லா மனிதரைமயக்கி, நைச்சியங்காட்டி,அம்மதியில்லாதாரைத் தம்மைச்சேவிக்கச்செய்து, பகவான் தமக்குப் பிரசந்நராய்விட்டாரென்று மாயங்கள் மாத்திரம் செய்துவருகிருன் இம்மாய மயக்குகள்மாத்திரம் ரொம்பவுந் தெரியுமிவருக்கு;இவைகளில் நிகரில்லாத வித்துவான்தான்; குறையில்லை. இவருடைய மாயசேஷ்டைகளால் இவ்வூரில் மடாதிபதியாய்ச் சிறப்புற்றிருந்த மம்பாஜி பாவாவை மூலையிலடக்கி, அவருடைய சிஷியர்களையெல்லாந் தம்பக்ஷமாக்கிக்கொண்டு, தமக்குப் பின்பாடல் பாடுவதற்காக வைத்துக்கொண்டார். யாவருந் தமக்கு நிகரில்லையென்று திரிந்தார். இவைகளெல்லாங் கேட்டால் யாருக்குத்தான் மநமெரியாது? ஆதற்கொண்டே ராமேசுவரபட்டர்சுவாமி அடங்கும் மார்க்கத்தைத் தேடினர்;இவ்வளவு செய்யாவிட்டால் அவரையும் ஏய்ச்சிவிடுவாரே! அவர் தெள்ளிய ஞாநியாகையாலே பின்வரப்போகிறதை முன்னமேயறிந்து, செய்யவேண்டிய காரியத்தைச் சாக்கிரதையாய்ச் செய்து

விட்டார். பூருவிக ஆசாரிய பீடஸ்தர்களெல்லாரும் பிரபந்நதருமங் களை யநுசரித்து, இருந்த இடத்தில்தானே யிருந்துகொண்டு, வே தோக்தமாக வேதவிகித தருமங்களைக்கொண்டு சற்காலக்ஷேபங்க ளைச் செய்துவருவதுண்டு. அவற்றை நம்போன்ற பிரபந்நர்கள் சேவி த்து. காலக்ஷேப ஸ்வாமிகள் வேதவிகிதமாகச்சொன்ன அர்த்த விசேஷங்களை நெஞ்சில் நிறுத்தி, வைஷ்ணவ ஆசாரத்தின்படி யநு ஷ்டித்து வருகின்றோம்; இதுதான் பிரபந்நர்கள் தருமம். இப்பிர பந்ந தருமங்களைவிட்டு, பிரபந்ந தருமங்களுக்கு நேர்விரோதமாகத் துக்காவானவன் சுத்த சாமானிய தருமமாகும் பஜனையொன்று ஏற் படுத்தி,ஆசாரிய அநுக்கிரகம்பெறாத தான் தன்னையொத்த ஆசா ரிய அநுக்கிரகம்பெற்றறியாப் பாமரர்களைத் திரட்டிக்கொண்டு,வீதி வீதியாகவும்,வீடுவீடாகவும்,ஊரூராகவும்,மலை காடுகளிலும், மற்றும் அசுத்தவிடங்களிலும் பஜனைசெய்துகொண்டு திரிந்து, அவ்வசங்கத பஜனையே மேலானதென்று பத்தாத்துமாக்களுக்கெல்லாந் தெரி வித்து,இப்படி தன்பெயரைப் பிரபலப்படுத்திக் கொண்டான். முடி வில்,பலநாளைய திருடன் ஒருநாள் அகப்படுவதுபோலும், ஜனப் பன் வீட்டுக்கோழி தானாய் விலங்கு மாட்டிக்கொள்வதுபோலும் நமது பெரியஸ்வாமியாகிய ராமேசுவரபட்டரிடஞ் சிக்கிக்கொண்டு பசபச என்று முழிக்கின்றான். அவர் வேதசாகைகளில் ஒருமொக் கை யெடுத்துக்கொண்டு கேள்விகேட்டதில் துக்கா பதில்சொல்லத் தெரியாமல் விழித்து, அவருடைய திருவடிகளில் சரணாகதியாக விழுந்ததினால் அவர் திருவுள்ளமிரங்கி, இனி கவி கள்செய்யாதே; உனக்குக் கவிகள்செய்ய என்னதெரியும்? இப்போது செய்திருக்கிற வற்றைப் பிறருக்குச் சொல்லிக்கொடுத்து நீ கெடுவதுபோல் அவர் களையுங் கெடுக்காதே. அவற்றையெல்லாங் கொண்டுபோய் ஆற்றில் எறிந்துவிடு என்று புத்திமதிகளைச் சொல்லி ஆஞ்ஞாபித்து அனு ப்பியிருக்கின்றார். அவ்வாஞ்ஞாபநங்களுக்குப் பயந்துதான் துக்கா நமக்குக் குருதசை யிருந்தவரையில் பெருமையடைந்தோம்? இப் போது குருதசைபோய் சனிதசையடைந்தோமாகக் காணுகிறதால் நமக்கினி பெருமைகிடையாது; நம்பெருமைநாள் போயிற்று என் றெண்ணி, தான்செய்த பாட்டுகளின் சுமைகளைச் சுமந்துகொண்டு ஆற்றில் வீசாட்டப்போகின்றான் ; சகலபக்ஷிகளுக்குங் கெருடன் அரசாயிருப்பதுபோல சகல வித்துவான்களுக்கும் அரசாயிருக்கிற ராமேசுவரபட்டர் இவ்வகங்காரியைக் கூடியசீக்கிரத்திலேதானேயட க்கிவிட்டார். மற்றவர்களுக்கு ஒருபோதும் இவன் அடங்கத் தகுந் தவனல்ல என்றிப்படியெல்லாம் பேசிக்கொண்டு, இருபுஜம் நான்கா

கப் பூரிக்கப்பெறத்தக்க சந்தோஷங்கொண்டு, இன்னமென்ன நடக்கிறதோ பார்ப்போமென்று துக்காராம்ஸ்வாமிகளுக்குப் பின்பாகவே நடந்து ஆற்றுக்குப் போனார்கள்.

தாஸரும், ஊரெல்லாஞ்சுற்றி, ராமேசுவரபட்டர் தந்த ஆஞ்ஞையை யெல்லாருக்குந் தெரிவித்துக்கொண்டே ஆற்றங்கரைசேர்ந்து, தமது சிரசின்மீதிருந்த கட்டுகளையிறக்கி பூமியில்வைத்து, பெரியதோர் கல்லைக்கொண்டுவந்து அக்கட்டுகளுடன் சேர்த்துக் கட்டி, ஹரி ஹரீ ! பண்டரீநாதா ! என்று பெருஞ்சத்தமிட்டு, அக்கட்டுகளை யொன்றாகச்சேர்த்துக் கல்லுடன்கட்டின பெருங்கட்டை ஜலத்திற்கொண்டுபோய் போட்டுவிட்டு, தமது கைகளைத் தட்டிக் கொண்டு, முன்னோர்கள்செய்த கீர்த்தனைகளைப்பாடி பஜனைசெய்து கொண்டு, தமது மாளிகைக்குத் திரும்பிவரலாயினர். முன் அதமர்கள் பார்க்கவந்தார்களே அவர்களே சுவாமிகள் பின்றொடர்ந்து போய்க்கொண்டிருக்கையில், சுவாமிகளது திருச்செவிகளில்படப் பேசிக்கொண்டு போவதாவது—பூருவத்தில் ஜெயமுநிவர்செய்த பாரதத்தை வியாசபகவான்சோதித்து, அஸ்வமேதபருவந்தவிரமற்றவைகளை ஜலத்திற் போட்டுவிட்டார். ஜைநியமதஸ்தர்கள், வேதத்துக்கு எதிருக்தமாக சமஸ்கிருதத்தில் அநேகநூல்களைச் செய்திருந்தார்கள். அவற்றையெல்லாம் சங்கராசாரியார் சோதித்து, அமரகோசம்ஒன்றைமாத்திரம் வைத்துக்கொண்டு மற்றவைகளை ஆற்றிற் புகட்டிவிட்டார். அவர்கள்செய்தவற்றிலாவது ஒவ்வொன்றை வைத்துக்கொண்டு மற்றவைகள் போடப்பட்டன. இந்தத் துக்காராம் எவ்வளவோ கஷ்டப்பட்டுச் செய்துவைத்த அபங்கங்கள் கீர்த்தனைகள் பலவற்றிலும் ஒன்றையாவது வைத்துக்கொள்ளாமல் சமூலமாக ஆற்றில் எறியும்படி வித்துவ சிரோமணியாகிற ராமேசுவரபட்டர் செய்தருளினர் என்று இவ்விதங்களாகப் பேசிக்கொண்டுபோவதை ஸ்வாமிகள்கேட்டும் அவ்விஷயத்தில் சற்பாவமாதல் துர்ப்பாவமாதல் திருவுள்ளத்திற்கொள்ளாமல், தமது திருமாளிகைபோய்ச்சேர்ந்து, தீநதயாபரமூர்த்தியைத் துதித்துக்கொண்டிருந்தார்.

பிறகு, ஐந்துநாள்கழித்தபின் சுத்தகுடில புத்தியுடைய பிராமணனொருவன், அன்னிய ஜாதியாரையெல்லாஞ் சேர்த்துக்கொண்டு துக்காராம்ஸ்வாமிகளுடைய வீட்டிற்குவந்து, நானாவித துர்ப்பாஷைகளால் ஸ்வாமிகளைத் தூஷித்துச் சொல்லுகின்றான் —நீ யுனது தந்தை சம்பாதித்துவைத்த திரவியங்களையும், லௌகிகவிருத்திகளையும், அநுதாபத்தை வரவழைத்துக்கொண்டு கெடுத்துக்கொண்டாய். இரவும்பகலும் ஓய்வொழிச்சலில்லாமல் அபங்கங்களையும் கீர்த்தனை

களையும் பாடிப்பாடிவைத்துக் கடைசியில் ஆற்றில்எறிந்துவிட்டனை. உனக்கு லோகார்த்தமும் பரமார்த்தமுமாகிறஇரண்டுங்கிடைக்கஇக பர செளக்கியங்கள் உம்மைவிட்டுத் தவிர்ந்துவிட்டன, இனியிந்த ஜென்மத்தை வைத்துக்கொண்டு இந்தஜெனங்களின் மத்தியில் உலாவுவதைவிட தேகத்தைமாய்த்துக்கொள்ளுதல் மிகுதியும் நலம் என்று சொல்லிவிட்டுத் தன்னிருப்பிடத்திற்குப் போய்விட்டான். இந்தப் பிராமணன் வைதவிஷயத்தில் மநமெண்ணுமல், முடிவிற் சொல்லிப் போனதைக் கேட்டமாத்திரத்தில் தமது நிருமலமநமானது இரண்டாகப் பிளவெய்ததுபோலாகி, பிராமணர் சொன்னபடி தேகத்தைப் போக்கிக்கொள்ளலாமென்றால் ஆத்துமாவுக்கு ஹிம்சையுண்டாக்கின பாபஞ்சேருகிறது. செய்துகொள்ளாவிட்டாலும் பொறுக்க முடியவில்லை; இக்கருமத்துக்கு என்னசெய்யலாம் ? என்று யோசித்து, மறுபடியும், சந்நிதாநம்போய் அங்கு சுவாமியினுடைய திருவடிக்கீழிருந்த பிராணனை மாய்த்துக்கொள்ளவேண்டுமென்று திடம் பெற்றுத் துணிந்து, சந்நிதி நோக்கிப்போய், தேவாலயத்துக்கு முன்பாக இருக்கும் பிருந்தாவநத்தின்கீழ் பரப்பியிருக்கப்பட்ட சதுரக்கல்லின்மீதில்உட்கார்ந்துகொண்டு, பதினெண்பதுஅபங்கங்களைப் பாடியருளினர். அவற்றின் அபிப்பிராயமாவது—ஹரி ஹரீ - பண்டரீநாதா!எனது பக்தியெனுங்கலசங் கீழேநழுகி வீழ்ந்துவிட்டது; நானிருக்கும் இடத்திற்குந் தோஷம் வந்துவிட்டது;ஏகாதசீஜாகரம் அநுஷ்டித்ததற்கும், கீர்த்தனைகளைப் பாடினதற்கும் பலன் உடனே வாய்த்தது ; சித்தம் சஞ்சலிக்கநேரிட்டது ; உன்னுடைய சேவை செய்ததற்குக் காட்சியாக ஜெநங்களுடைய முகங்களைப்பார்க்க லஜ்ஜையாய்விட்டது ; எனது சுதந்திர பாவனையைவிட்டு யாவுமுன்னுடைய பாவனையாக நடந்துவந்தேன் ; இனிநடக்கவேண்டிய மார்க்கமொன்றும் எனக்குத் தெரியவில்லை ; முன்நான் தன்னந்தனியனுக வநத்திற்சென்று அநாயாசமாக உன்னைத் துதித்துவந்தேன் ; அதுமாறினமையால் அதின்பலம் இப்போது ஆயாசமாகத் துதிக்க நேரிட்டது ; இதின் மெய்விளங்குகிறவரையில் உன்னைக் கீர்த்தநாரூபமாக வணங்க வரவில்லை; முன்போல் அபங்கங்களைப்பாட வெள்காநின்றது மநம்; எனதுள்ளத்திலிருந்து நீயேபாடிவைத்த அபங்கங்களையும் கீர்த்தநங்களையும் ஆற்றில்புகட்டிபரிக்ஷைபார்க்கின்றனை; இதுவரையிலும் இவ்வேழையேனைக் காப்பாற்றினுய் ; இனியென்னகாக நடத்த இருக்கின்றுயோ தெரியேன்; இப்போது பஜனைசெய்ய முகமில்லை; இத்தருணம் பக்திக்கு முடிவுதோன்றி விட்டதாகக் காணவருகிறது;உனது திருவடியன்றி வேறேகதி காணவறியேன் ;

என் வசனத்தில் ருசியில்லை; ஜநங்களுக்குப் பிரியப்பட்டேனேயன்றி உன்னருள்தனக்குப்பிரியப்பட்டேனல்லேன்; பெண்டுகள்மாவரைக்கும்போது பன்மைப்பொருள் அமைந்ததாகச் சிலபாடல் உன்மீது பாடி ஆநந்திப்பதுபோலாயிற்று என்னுடைய கெதியும்; எனது மநதிற்கொரு நிச்சயமுந்தோன்றவில்லை; புத்திசஞ்சலியாநின்றது; என்னுடைய பக்திகாரியங்கள் யாவும் உமியைப் புடைத்ததுபோல் ஆயிற்று; இனிமேல் நான்பாடல்எழுதுவதாகஎழுத்தாணியைக்கையிலே தீண்டமாட்டேன்; அநந்தவித மரியாதைகளோடு உனக்கு உபசாரங்களைச் செய்துவந்தாலும் முதுகுகாட்டியே நிற்கின்றாயல்லது முகங்காட்டினவனேயல்ல; இப்போது நடந்திருக்கிற விவகாரங்கள் யாவும் உன்னாலேயே நடத்தப்பட்டிருக்கின்றன; நீ இந்திர ஜாலவித்தை கற்றவனென்று எனக்கு நன்றாய்த் தெரியும்; நீ செய்யும் மாயக்கூத்துகளையறிய யாவரால்முடியும்; வேதபுருஷனே தன்னால்முடியாதென்று சொல்லிவிட்டான்; நானோ உன்னுடைய தாஸர்களுக்குக் கீழ்ப்பட்டவன்; அநந்தகோடி பக்தஜெநங்களைக் காப்பாற்றியருளிய உனக்கு இப்பேதையேனைக் காப்பாற்றுதல் அருமையல்ல; பவசாகரத்தில் மூழ்கிக் கிடக்கிற என்னைக் கரைசேர்க்க நீயறியாயா? தற்காலம் உன்னுடைய சித்தம் என்மீதிலில்லாத தோஷமே; இனி பக்தியென்னுங் கடையைத்திறந்து வியாபாரஞ் செய்யேன்; என்னுடைய மொழிகளாகிற சரக்குத் தீழ்மைபட்டுவிட்டது; நான் உன்னுடைய திருவடிகளைப் பற்றிக்கொண்டு எத்தனைதான் பஜித்தாலும் உனக்கு என்மீதில் கோபமே யிருக்கிறதன்றிக் கருணை இத்தனையும் உண்டாகிறதில்லை? இதுவும் உனது சுவபாவமான வழக்கம்; இதைப்பற்றி யாரென்ன செய்யக்கூடும்? ஒருவேளை நீ தாஸனல்லவாகையால் உன்னைப் புறம்பாக்கினேன் என்பாயோ! அதுவாகிலுஞ் சொல்லி, தாஸத்துவ லக்ஷணம் இன்னதென்று உணர்த்தினால் அதின்படியேயாவது நடந்துகொள்ளுகிறேன்; யாதொன்றுஞ் சொல்லாமல் குமிழ்நீர் முழுங்கி மௌநமாயிருந்தால் நாயேன் போகுங் கதியென்ன? யாவத்காரியங்களுக்குந் தாய் - தந்தை - குரு - தெய்வங்கள் நீயாயிருக்க, வேறெங்கேகிக் குறைகளைக் கூறிக்கொள்ளுவேன்? பிரபஞ்சமென்னுந் துர்த்தசையை யுனக்காகவென்றே விட்டேன்; குழந்தையைத் தாய் தந்தைகள் காப்பாற்றுவதுபோல உன்னுடையசரணமேசரணமென்றடைந்த சேயனேனைப் புறம்பேவிடாமல் காப்பாற்றி, சாதுத்துவத்திற் புகுதவை, தீநதயாளா! உனது கீர்த்திகளையும், எனது குறைகளையும், உன்னிடத்தன்றி மற்றியாரிடத்து உரைப்பேன்? இன்றளவுஞ் செய்த உன்னுடைய வர்த்தகத்தில் எவ்வளவு லாபந்தேறி

யிருக்கிறதோ தெரியாது. இனியென்றால் உன் வர்த்தகஞ் செய்ய முடியாது. யாவத் சக்தியுங் குன்றியது! எனது வலிவும்-புத்தியும்-பக்தியும் சற்றேனுஞ் செல்லுகிறது கிடையாது. எப்படி விட்டாலும் உன்னுடைய பாரமும் பாக்கியமுந்தான் என்று, இரண்டுகைகளையுஞ் சிரமேல்கூப்பி நின்று, கண்களிலிருந்து ஜலங் தாரைதாரைகளாகவடிய, ஸ்ரீ ருக்குமணீபதி! ஸ்ரீ விட்டலா! என்று துதித்துக் கொண்டிருந்த வண்ணமே, அங்கபாகங்கள் ஒன்றுமில்லாமல், அவ்வட்டப்பாரையின்மீது சயநித்துக்கொண்டார்.

இந்தத் துக்காராம்ஸ்வாமிகளுக்குப் பிரியராயும், பரிவாராயுமிருந்த பாஷிகஜெனங்கள் ஸ்வாமிக்குச் சம்பவித்த துயரங்களைக் கேட்டு, தங்கள் தங்க ளுள்ளங்களானவை கொந்தளிக்கப்பெற்று, தத்தளிக்குஞ் சித்தமுடையவராய், நமது ஸ்வாமிகளுக்குத் திருஉள்ளத்திற் கலக்கமுண்டாயிற்றுப் பார்த்தீர்களா! என்று விசநங் கொண்டவர்களாய், இனி நமக்கு நல்லுணர்வு போதிப்பாரார்? ஞாநமாகிற அமுதமூட்டுமவர் யாவர்? யார் நம்மை பஜனை காலக்ஷேபத்தில் இனி மூட்டி வைக்கப் போகின்றார்? பழம்பழுத்து வரும்போது அற்றுவீழ்ந்தது போலும், வெண்ணெய் திரண்டு வரும்போது சாலுடைந்ததுபோலுமாயிற்று நம்முடைய தூர்க்கதி! ஹரி ஹரீ! உம்முடைய மாயம் யாதோ அறிபவர் யாவர்? என்று வாட்டமிகக்கொண்டிருந்தவர்களாய் அந்த பாவசம்பந்நர்கள், ஸந்நிதாநத்தில் திருத்துளவமாடத்தருகில் வட்டப் பாரையின்மீது சயநித்துக்கொண்டிருக்கும் மெய்பக்தரிடம் வந்து தாஸருடைய நிலையினைக் கண்டு, உயிர் துறந்தாரோ அல்லது உயிருடனேதானே யிருக்கின்றாரோ என்கிற சந்தேகங் கொண்டவர்களாகப் போயினார்கள். தாஸருடைய சித்தமும் பகவத் சரணாரவிந்தங்களில் லயித்துப் போயிருந்தது.

இங்கிப்படி யிருக்க, வாகோலி என்னுங் கிராமத்தி லிருக்கும் பக்தத் துரோகியாகிறராமேசுவரபட்டர்என்பவன், துக்காராம்ஸ்வாமிகள் தன்னிடமிருந்து நீங்கினபின் சந்தோஷித்தவனா யிருந்து, புனாவில் நாகநாதசுவாமிகளை, பிரதோஷம் துவாதசி சோமவாரமாக வந்ததால் அந்தச் சுப திநத்திற்சேவிக்க எண்ணங்கொண்டு இரண்டு சிஷியர்களோடு புனாவுக்கு வந்து, ஓரிடத்தில் தங்கி, ஆசாரமாயுடுத்திக் கொள்ளுவதற்காகப் பட்டு வஸ்திரங்களை யெடுத்துக்கொண்டு, நல்ல ஆரோக்கியத்தைத் தரும்படியான சுத்த ஜலம் எங்கே யிருக்கின்றதென்று தேடியலைந்து, 'அனகடசா' என்னுமொரு பகீரியினுடைய ஆச்சிரமம் (மக்கான்) சேர்ந்து, அங்கிருக்கும் இரம்மியமான தடாகத்தைக் கண்டு சந்தோஷித்தவனாய் அந்நீரிலிறங்கி, கெங்

கா - யமுனை - சரசுவதி - கோதாவரீ - துங்கபத்திரா - நருமதா - காவேரி! என்று உரக்கக்கூவி, ஜலத்தை யிரண்டுகைகளாலும் வாரி சிரசின்மேல் கொட்டிக்கொள்ளலும், அந்தச் சத்தத்தைக் கேட்ட அனகடாசா என்னும் சித்தபுருஷர், யாரோ ஒருவன் நமதுகுளத்தி லிறங்கி, உரைக்கத் தகாதனவற்றை உரைத்துக்கூவி நான் நிமாஸ் செய்யும் ஜலத்தைக்கலக்கி, உன்னுத்தரவில்லாமல் ஸ்நாநம் பண்ணு கிறான்; இப்படிப்பட்டவனை விடக்கூடாதென்று அடங்காக் கோபங் கொண்டு, அதருவணவேத வித்தியையாகும் மந்திரத்தையுச்சரித்து, ராமேசுவரபட்டன்மீது ஏவினார். உடனே பட்டருடையபாதிதேகம் வரையில் ஆறுமெரிச்சலுண்டாய், தத்தளித்து, தன்னுடையசிஷியர் களைநோக்கி, என்தேகமெங்கும் பொல்லாவெரிச்சலா யெரிகிறது; ஜலம்மொண்டு என்மீதில் கொட்டுங்கள் என்று சொல்லித் தான் கரையில்வந்து உட்கார்ந்துகொண்டான். அவர்களும் ஜலத்தை மொண்டுவார்த்தும் எரிச்சலடங்காமல் இருக்கக்கண்டு, இப்படி என் தேகத்தில் பொறுக்கப்படாதஎரிச்சலுண்டாவதற்குக் காரணமென் னமோ தெரியவில்லை என்று சிஷியர்களைக்கேட்க, அவ்விரண்டு சிஷி யர்களும் பட்டனாகிய தங்களாசாரியனை நோக்கி, சுவாமி! இந்தவிடம் அனகடசா என்னும் பேரையுடைய பகீரியினுடைய மக்கான் அதா வது ஆசிரமம் நாம் அவருடைய அநுமதிபெறாமல் இவ்விடத்தில் வந்து ஸ்நாநம்பண்ணலானோம்; அதற்காக அந்தபகீர் ஏதோசெய் திருக்கவேண்டும்; இல்லாவிடில் நிர்நிமித்தமாக தேவர்திருமேனி யில் எரிச்சல் காண்பானேன்? ஆகையால் அவரிடம்போய்ச்சேவித்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டால் மன்னித்து, தேவருடைய சிரமங் களைத் தீர்த்துவிடுவார் என்று சொன்னார்கள். அதற்குப் பட்டரான வர், அவன் மிலேச்சன், நானோ பிராமணன், அவனிடம்போய் ஒருக் காலும் வந்தநஞ்செய்யேன்; புறப்படுங்கள் நம்முடைய நகரம்போய் சேருவோம் என்று பிரயாணமாகி, தாங்களிறங்கின இடத்திற்குப் போய், தன்னுடைய சாமான்களை யெடுப்பித்துக்கொண்டு, சிவமூர் த்தி தரிசநமுஞ்செய்யாமல் தன்னூரைநோக்கிப் போகும்போது, எரிச்சலானது வரவர விருத்தியாக, அவ்வெரிச்சலைத் தாளாமல், ஐயோ! அப்பா! அம்மா! இனிநான் பிழைக்கப்போகிறதில்லை; நடு வழியிலேயே யென்பிராணன் நீங்கிவிடும், பெண்டாட்டி பிள்ளைக ளுடைய முகங்களிலும் விழிக்காமல் நடுவழியிலிறக்கக் காலம்வாய்த் தது; வேதவேதாந்தங்களையெல்லாங் கரைகாண வாசித்தும் இறக் கும்படியாகவே நேரிட்டது என்று கண்களில் நீர்பெருக, மாடுகதரு வதுபோல கதறி, தநதாநியாதி சம்பத்துக்களை நினைந்து, பூமியிலே

விழுந்து,சிஷயர்கள் தேற்றத் தேறியெழுந்து,சற்றுத்தூரம் நடந்து, வழியிலேதானே மறுபடியும் உட்காருவதும் படுப்பதுமாய்ப் பேர வதிபட, சிஷியர்கள் வஸ்திரங்களை நனைத்துக்கொண்டுவந்து மடிப்பு மடிப்பாக மடித்து, அவருடைய தேகத்தின்மீது போர்த்து, மேலும் ஜலத்தை மொண்டுவந்து தெளித்துக்கொண்டிருந்தும் எரிச்சலடங் காமல் பரிதவிக்கின்றதை வழிப்போக்கர்கள் கண்டு, பகவத்பக்த ராகிய துக்காராம்ஸ்வாமிகள்மீது பொறாமைகொண்டு அவரை ஊரை விட்டு ஓட்டுவதற்காக ராஜாவினிடம் தாகீதுவாங்கியனுப்பியும், அவ ரியற்றியருளின அபங்கங்களென்னுங் கவிதைகளை யாற்றிலெறிவித் தும், இப்படி குரூரகிருத்தியங்களைச்செய்த கொடும்பாவியானதால், அவருடைய தீவினை வீணேபோகாமல் தீவினைபாய்ப்பற்றியெறிக்கா நின்றது. அனகடசா என்கிற சித்தபுருஷன் இவனுடைய தீவினைக் குக் காரணபூதராயினர். பூருவத்தில் விஷ்ணுபக்தராகிய அம்பரீஷ மகாராஜா நிரபராதியாகச் செய்தேயே அவர்மீது கோபங்கொண்ட தூருவாசமுனியையெரிக்க சருவேசுவரனுடைய திருவாழி யெவ் வாறு தோடர்ந்ததோ அவ்வாறே; சுத்தநிரபராதியாய் லோகபாவந ரான துக்காராம்ஸ்வாமிமீது வீணில் கோபங்கொண்டு துரோகஞ் செய்யநினைத்த இத்தீம்பனுக்கும் இராமேசுவரபட்டனையெரிக்க அன கடசாவின்மந்திரமாகிறசக்கரந்தொடர்ந்து,பெண்டுபிள்ளைகளுடைய முகத்திலேயும் விழிக்கவொட்டாமல் இத்தடத்திலேயே கொல்ல எரித்துவருகிறது; தன்னுடைய சம்பத்துக்களை நினைந்து ஜீவனை விடாதிருக்கின்றானேயல்லது எப்போதே இவனுடைய ஜீவன்போய் விட்டிருக்கும்; கொஞ்சத்தில் நீங்காது இவனுடையஜீவன்; பெண்டு பிள்ளை தந தானியங்களின் விஷயத்தில் ரொம்பவும் ஆவல்கொண்டவ னுகையால் அவனுடைய பிராணன் தத்தளித்துக்கொண்டாகிலும் இன்னும் நிற்கிறது என்று இவ்வாறெல்லாம் பேசிக்கொண்டார்கள். இவற்றையெல்லாம் தன்சிரமத்திலேயும் ஒருவாறு கேட்டுக்கொண் டிருந்த ராமேசுவரபட்டன், பின்னும் அடங்காத் துயரமுந் திகிலு மடைந்தவனாய், நாம் நாமலிங்கேசுவரரைத் தெரிசிக்கவந்தும் பிரா ப்தியில்லாமல் வினையால் மூளப்பட்டவராயிங் நடுக்காட்டில் பரி தவிக்கின்றோம்; நாம் சகல சாஸ்திரங்களையுணர்ந்தும் என்னலாபம்? சகலமான பண்டிதர்களாலும், எல்லாராஜர்களாலும் பூஜ்ஜியதைப் பெற்றும், எல்லா ஐசுவரிய சம்பத்துக்களிருந்தும் என்னபயனுக் காயின? சிஷியவருக்கங்கள் அநந்தங்கோடியிருந்தும் பிரயோஜந மென்னே? என்னுடைய வல்லமையை நானே மெச்சிக்கொண்டிருந் தேன்; இப்போது எனக்கே மீளாத்துயரம் வாய்த்தது; ஈசுவர

னுடைய திருவருள் எப்படியோ அறியோம் என்றிவ்வாறெல்லாம் பரிதபித்துச் சோர்வெய்தி, பின்னும் யோசிப்பதாவது—இந்த எல்லை ஞாநதேவுசுவாமிகள் இருக்கும் தேசத்தெல்லையாகையால், அவ்விடஞ்சென்று, வைராக்கியத்துடனே யிருந்துகொண்டு தபஞ்செய்தால் இந்நோய் நீங்கும்போல் காணுகிறது. ஆகையால்,இந்தநோய் தீர்ந்தாலுஞ்சரி தீராவிட்டாலுஞ்சரிநாமங்கேபோய்தவமியற்றவேண்டுவதுதான் சரியென்று யோசித்துத் தீர்மானித்துக்கொண்டவனாய், தன் சிஷியர்களோடு ஆளந்திக்குவந்து, ஞானேசுவரசுவாமிகள் ஸந்நிதாநத்திற்புகுந்து, ஸந்நிதிக்கெதிரிலிருக்கும் ஓராஜாநு விருக்ஷத்துக்கடியில் வீற்றிருந்து தவமிருக்கத் தொடங்கினன். அவனுடைய சிஷியர்கள், இவன் வீற்றிருப்பதற்கு மேற்புறமாயிருந்த மரத்தின் கிளையில் இவனுக்குநேராக ஜலம்நிறைந்த பாத்திரத்தைத் தொங்கக் கட்டி, அப்பாத்திரத்திலிருந்து ஜலம் எப்போதும் பட்டன்மீதுஒழுகிக்கொண்டேவரச்செய்து பாதுகாத்துக்கொண்டு வந்தார்கள்.

இங்கிவன் இவ்வகையிலிருக்க, அங்கு தேவூகாமில் அந்த ஆகாரங்களில்லாமல் பாராங்கல்லின்பேரில்சயநித்துக்கொண்டுகிடந்த துக்காராம்ஸ்வாமிகளுடைய முன்பில்சருவஸ்வாமி ஒருபாலியனைப்போல் எழுந்தருளி, தன்னுடையதாணியளாவிய திருக்கைகளால் துக்காவினுடையதேகத்தைத் தடவிக்கொடுத்துச் சிரமங்களைப்போக்கி,குழந்தாய்! உன்னைக் காப்பதற்காகச் சதா உன்னுடையமுதுகின் பின்புறமாகவே நானிருந்துகொண் டிருக்கையில் உனக்கேதுக்கு இவ்வளவு விசனம்? நிரந்தரம் என்னுடைய நாமத்தையே ஸ்மரித்துக்கொண்டிருந்த ஜெந்மவைஷ்ணவராகிய ஸ்ரீமத்பிரகலாதாழ்வான்மீது, அவருடைய தந்தையாகிய இரணிய கசிபும் ஆச்சரியங்கொண்டு, பலபல குரூரமானஇமிசைகளெல்லாஞ் செய்துவந்தமைக்காக அப்போதைக்கப்போது ரக்ஷித்துவந்து முடிவில் கல்தூணிலிருந்து நரகேசரிரூபங்கொண்டு தோன்றிப் புறப்பட்டு துஷ்டனாகிய இரணியனைச் சங்கரித்து, பிரகலாதனைத் துயரினின்று மீட்பித்துக் காக்கவில்லையா? அநிருத்தனுடையசௌந்தரியங்களைக்கேட்டமாத்திரத்தாலேயே மோகித்து, பாணாசுரனுடையபெண் (உஷா) என்பவர் தன்னுடைய தாதியாகியசித்திரரேகையைக்கொண்டு பிறரறியாவண்ணம்அநிருத்தனைத் தூக்கிக்கொண்டு வரச்செய்து, அவனை யார்கண்ணிலும் படவொட்டாமல் தன்னுடைய கன்னிகாமாடத்தில்தானே வைத்துக்கொண்டிருந்து, அவனோடு சரச சல்லாபங்களுடனே கிரீடாரம்பியங்கள் செய்துவாராநிற்க, அதனால் அவ்வுஷைக்கு கர்ப்பந்தாங்கி நாளுக்குநாள் வெளிப்படக்கண்ட பரிசாரகர்கள் அவளுடைய தந்தையாகிய

வாணாசுரனுக்குச்சொல்ல, அவனுங்குபிதனாய், தன்மகளிருந்த அரண்மனையைச் சோதித்துக்கொண்டு வரும்போது அநிருத்தன் இருக்கக் கண்டு, அவனைப்பிடித்து, தன் மாப்பிள்ளையாயிற்றே என்கிற தாக்ஷணியமில்லாமல் இமிசிக்கத்தொடங்கியபோது நான், கிருஷ்ணனாயிருந்த அக்கோபவேஷத்தோடு அவன்முன்சென்று, அவன் தலையில் பூவாடவொட்டாமல் காக்கிறேனென்றுசபதங்கூறிக்கொண்டு கோட்டை மதில்சுற்றிலுங் காவலிருந்தவர்களையெல்லா முதுகிட்டோடச் செய்து, வாணாசுரனையும், கள்ளிக்காடு சீப்பதுபோல் திருவாழியைக் கொண்டு அவனுடைய ஆயுரந்தோள்களையுஞ் சீய்த்து, அநிருத்தனைக் காக்கவில்லையா? இவைகளெல்லாம் உனக்குத்தெரியாதா? இவற்றையெல்லாம் நீசாஸ்திர மூலமாக நன்றாயறிந்திருந்தும் இவ்வல்ப விஷயத்துக்கு ஐயுற்று, உண்மையுளதோ இலதோ என்று சந்தேகிக்கலாமா? உன்னுடைய சத்தியவாய்மையான அபங்கங்களையுங் கீர்த்தனைகளையும் என்னுடைய கெர்ப்பத்தில் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டிருக்கின்றேன். அவற்றையும் இனிநடக்கப்போம் அதிசயங்களையும் நீயே பார்க்கப்போகின்றனை என்றுசொல்லி, தன்னுடைய திருக்கைகளால் துக்காவை வாரியெடுத்து மார்புடன் சார்த்தி, அஞ்சாதே கண்டாய்! என்று அபயப் பிரதானமும் தைரியமுந்தந்து, மறைமுடியினில் மகிழ்வுடன் விளங்கும் மாஞாலத்து ஒப்பில் தந்தை மாதவன் மறைந்தருளினார்.

தாஸர் ஸ்வாமி ஸந்நிதானத்தில் இருக்கின்றாரென்று அவ்வூர் ஜெநங்களறிந்து, திநதிநமும் அவர்களில் சற்பாவபக்தர்கள் வந்து சேவித்து, தாஸரிருக்கும் நிலையைக்கண்டு, இவ்வாநந்தமூர்த்தியை ஆதியஞ்சோதி காத்தருளுவார் என்று ஆசிகள் கூறிப்போவார்கள். தாஸர் சந்நிதிவிட்டுவெளியேவந்தவரல்ல; அந்ந ஆகாரங்கள்கொண்டவரல்ல; பஜனை காலக்ஷேபம் பண்ணினவரல்ல; தம்முள்தாமே பகவானைக் கீர்த்தித்துக்கொண்டு வருவார். இப்படி பன்னிரண்டுநாள் கழிந்தபிறகு, பதின்மூன்றாம்நாள் இரவில், பதிதபாவநனாகிற பாண்டுரங்கன் பக்தர்களிற் சிலருடைய சொப்பநத்தில்தோன்றி, துக்கா தான்செய்த அபங்கங்களையெல்லாங் கட்டாகக்கட்டி கல்லையுங்கூடப் பிணைத்து, இந்திராயணியின் மடுவில் போட்டுவிட்டான். அவை கட்டினகட்டோடு வெளியே மிதந்துகொண்டிருக்கும். நீங்கள் யாவருஞ் சென்று அக்கட்டை பயவிசுவாசங்களுடனே சிரமேற்றிக்கொண்டு வாருங்கள் என்று திவ்வியாஞ்ஞை யிட்டருளலும், அவர்களெல்லோருந் துயில்நீங்கி, தங்கள் சொப்பநங்களையெண்ணி, பொழுது விடிந்தவுடனே ஒருவரை யொருவர் கண்டுசேவித்து, தங்கள் தங்கள்

சொப்பநங்களைச் சொல்லிக்கொண்டு, எல்லோரும் பெருந்திரளாய்த் திரண்டு இந்திராயணிநோக்கிச்செல்லாநிற்க, இத்திரளைக்கண்டமற்ற ஊராரும், ஏதோ அதிசயம்நடக்கப்போகிறதாகையால் நாமும் அறிய வேண்டுமென்று சொல்லிப் பின்தொடர, இப்படி எல்லாரும் இந்திராயணியடைந்து, சுவாமி காட்டியருளின மடுக்குச் சமீபமேபோய்க் கொண்டிருக்கையில், அபங்கங்களின் கட்டு கல்லோடே சுரகுடுக்கை மிதப்பதுபோலே மிதந்துகொண்டிருக்கக்கண்டு, விச்சிராந்தியுங்களிப்புமடைந்து, தீர்க்கதண்டங்கள் சமர்ப்பித்து, ஹரி ஹரி! பண்டரீநாதா! பக்தபராதீநா! பக்தபரிபாலா! பாஞ்சஜந்நியக்கையா! பாண்டவர்சகாயா! பதுமவல்லி மநோகரா! என்று திருநாம ஸங்கீர்த்தநங்களைச் செய்து கூத்தாடி, சிலர் மடுகிலிறங்கிக் கட்டையேந்தி முடிமேல் தூக்கிக்கொண்டு கரைக்குவந்து சேர்ந்தார்கள். அங்கு வேடிக்கையார்த்தம் வந்த ஆண் பெண் சிறுவர்களுடங்கலும், எச்சமயத்தவரும், ஹரீ புண்டரீக வரதா! என்றே தோத்திரித்தவர்களாய், துக்காராம் ஸ்வாமியினுடைய பக்தியே பக்தியென்று பெருமிடறுடனே கொண்டாடி, கைகளைத் தட்டி, குதூகலங் கொண்டார்கள். இப்படி இவர்கள் குதூகலத்தால் செய்த பெருமிடறு, ஸந்நிதாநத்தில் எழுந்தருளியிருக்கும் துக்காராம் ஸ்வாமிகளுக்குக் கேட்டு, கண்களைத் திறந்து, உற்று நோக்கி ஜநவாக்கியங்களைக் கேட்டு கிஞ்சித் விஷயந் தெரிந்தவராய், சுவாமியைத் துதித்து, உடனே எழு அபங்கங்களைத் தமது கருணையாலே பாடி கொண்டாட்ட மிட்டிருந்தார்.

சத்ஜெநங்கள் யாவரும் மடுவில் நின்றெடுத்த அபங்கமென்னும் கவிகளினுடைய கட்டைச் சிரசினிலேந்திக்கொண்டு, பஜனைசத்காலக்ஷேபங்களுடனே வீதிகள் வலம்வந்து, சந்நிதாநம்போய் உள்ளே நுழைந்து, துக்காராம் சுவாமிகளைக்கண்டு வணங்கி, அவர்தம் அடங்காப்பெரும்புகழைக் கொண்டாடி, கட்டையிறக்கிவைத்து, பகவான், தேவரியற்றி மடுவில்புகட்டிய இக்கவிதைகளை ஜலத்தின்மீது மிதக்க வைத்து, எங்களுக்கும் வைகறையில் மடுக்குப் போய் அபங்கங்களின் கட்டைக் கண்டு எடுத்துக்கொண்டு போய் துக்காராம் ஸ்வாமிகளிடம் சேர்ப்பித்து விடுங்களென்று சொப்பநஞ் சாதித்தருளினார். அதின்படியே கொண்டுவந்து தேவர்முன் சேர்ப்பித்துவிட்டோம் என்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டார்கள். இப்பரமர்களுடைய வாக்கியங்களைக்கேட்ட பிரபந்நதிலகரானவர், ஹரிவிடேல்! பண்டரீநாதா! பரமேஷ்டி! பரந்தாமா! பாஞ்சாலி துயர் தீர்த்த பரமா! பரஞ்சோதீ! எனது குற்றங்களை மன்னித்தருளவேண்டும். அடியேனுக்காக தேவர் மிகுதியுஞ் சிரமையெடுத்துக்கொண்டதாகக்

காணுநின்றேன் இந்த ஜெனவாக்கியங்களாலே; சத்தியபாமை மனோ கரா! பதின்மூன்றுநாள் அடியேனுடைய தேகத்தை யெவ்வண்ணங் காத்தருளினீரோ அவ்வண்ணமே அபங்கங்களையும், அவற்றின் ஏடுகளாகுங்காகிதங்களையும், மேல்சுற்றியிருந்த வஸ்திரத்தையும் நனைய வும் விடாமல் காத்தருளினீர்; இப்படி இரண்டிடங்களிலுஞ் சிறுச் சேவகஞ் செய்தருளினமைக்கு அடியேனுலென்ன கைம்மாறு பெறப் போகிறீர்? ஈசுவரா! இருதலைக்கொள்ளியின் நடுவிற்பட்ட எறும்பு போல பாவம் என்றும் அபாவம் என்றும் சொல்லுகிற இருவகைப் பற்றிற்பட்ட பேதையேன், சுபுத்தியாலன்றி ஜெநங்கள் உம்மைப் பெருமிதையா யுரைத்துக்கொள்ளும் வார்த்தைகளை நம்பின அபிமாநத்தால் அடியேனுந் தொழிலாயினேன்; நீரும் அடியேனுடைய நேரிலேயே சதாயிருந்தால் அப்போது அடியேனுடைய கொள்கை தேவர்க்கர்ப்பிதமாகும்; அடியேனுடைய சங்கற்பம் வேறுபாடுருமல் தாமரையின் மதுவையுண்ட வண்டு அதினிடமே ரம்மியங்கொண் டிருப்பதுபோல, பேத அபேதங்களை நிவர்த்தித்து, சதா திருவடிகளிலேயே ரமித்துக்கொண்டு இருப்பவனுயினேன்; தேவர் சந்த ஜெநங்களில் எண்ணறும்பேரைக் காத்தல் செய்திருக்கின்றீர்; அப்படிப்பட்ட தேவரே யுனைத்தால் என்னைக் காப்பாற்றுதல்தானு அருமையாகும்? சமத்துவ புத்தி அடியேனில் தலையெடுத்திருக்குமாகில் இதாகிதங்களைத் தேவர்க்கு விண்ணப்பம் பண்ணமாட்டேன்; அஃதில்லாமையாலன்றோ சிரமந்தருவது? தேவரோ! தீநபந்துவும், ஜெகதாதாரபூதருமாயிருக்கின்றீரானதால் அடியேனுடைய முறைகளைக் கேட்டுக் காப்பாற்றி வருகின்றீர்; அப்படி தேவரே முன்னின்று ரக்ஷித்துக்கொண்டு வாரநிற்கச் செய்தேயும் பாவியேன் சிரமையுண்டாகச் செய்கின்றேன்; இப்படிப்பட்ட மாபாவி இருந்தென்ன போய்தானென்ன? சற்குணம் வாய்த்த பிள்ளையா பிருப்பின் ஈன்ற மாதா பிதாக்களுடைய உள்ளங்களை யறிந்து, அன்னேருகக்க பாத பூசைகளைச் செய்து, நல்லுணவுகளைத் தந்து காப்பாற்றி, அவர்கள் ஆசிர்வாதங்களைப் பெறுவான்; அவன்தான் சுபுத்திரன் என்னப்படுவான்; அப்படிக்கில்லாமல், இந்தஸ்தூலதேகத்தில் அபிமாநம்வைத்து அவனடித்தான் இவள் வைதாள் என்று சதா பிறர்பேரில் குற்றத்தைச் சாட்டிச் சொல்லித் திரிவது பேதைகளின் இலக்கணம்; அதனல் பெற்றவர்க்குச் சிரமமும், அவமாநமுமேயன்றி வேறு லாபமொன்றுங் கிடையாது; இப்படிப்பட்ட பிள்ளைகள்மேலிருந்த ஆசையுந் தாய் தந்தைகளுக்கு வெறுத்துவிடும்; இது தெரிந்தும் என்னுடைய தேகத்தில் அபிமாநம் நீங்காமையால் தேவருக்குச் சிரமமே

தருகின்றேன்; இனி யென்றென்றைக்கும் ஜெனங்கள் சொல்லும் யுக்தாயுக்தங்களைக் காதில் போட்டுக் கொள்ளாமல், யாவர் வாளைக் கொண்டு சிரச்சேதஞ் செய்ய வரினும் உத்தமமே யென்று இரங்கித் தருவேனல்லது எதிர்கொள்ள மாட்டேன்; இன்றளவுந் தேவர்க்குத் தந்த கஷ்டத்துக்காக க்ஷமித்தருளி, கடையேனை தேவரீருடைய தாஸர்களது திருவடிகளிற் சேர்த்துக் காப்பாற்றி யருளவேண்டும் கருணையங்கடலே! கார்நிற வண்ணா! காருத்தா! கரியவெங்கோவே! என்று பிரார்த்தித்துக்கொண் டிருந்தார்.

ஆற்றிலிருந்து அபங்கங்கள் அடங்கிய காகிதக் கட்டுகளைக் கொண்டுவந்த பக்தர்களும், பஜனை செய்துகொண்டு வந்த பஜனைபார்களும், வேடிக்கைப் பார்ப்பதற்காகக் கூடவந்த ஆண்பெண் குழந்தைக ளெல்லாரும் சந்நிதானத்துக்குள் நுழைந்து, சுவாமியையும், பக்தராகிய துக்கா ராமரையுங் கண்டமாத்திரத்தில் தானே தங்கள் தங்கள் தேகஸ்திதிகளை மறந்து, கைகளை முடிகளின்மேல் கூப்பிக் கொண்டு, விட்டலா! என்கிற சத்தத்துடனே ஆடுவாரும், பாடுவாரும், ஒருவரை யொருவர் ஆலிங்கனஞ் செய்துகொண்டு வணங்குவாரும், கதம்ப கஸ்தூரிகளைத் தூவுவாரும், திருத்துளபத்தைக் கொடுப்பாரும், கால்களில் கெஜ்ஜைகளைக் கட்டிக்கொண்டு சசம்பிரம நிருத்தம் பண்ணுவாரும், ஒருவர் பாதத்திலிருந்து கெஜ்ஜைகள் அவிழுமாகில் மற்றவரெடுத்து பிரபுவாயிருந்தாலுங் கட்டிக்கொண்டு ஆடுவாரும், ஒருவர் பாதத்தின் தூசை மற்றொருவர் சிரமேற் கொள்ளுவாரும், இது கிடைக்கப் பெறுமா! என்று ஆநந்திப்பாருமாய், என்றுங் கண்டறியாப் பேரின்பவெள்ளத்தில் மூழ்கிக்கிடந்தார்கள். மேலும் பஜனைகாலக்ஷேபபரர் பத்துபெயர் இருபதுபெயர் ஒவ்வொரு கூட்டமாகக் கூடி, மிருதங்கம் - தம்புரு - ஜாலர் முதலானவை கொண்டு பாடிவராநிற்க, துக்காராமருடைய திருமேனியின்சேவைகண்டமாத்திரத்தில் ஒருவர் பாடுவது ஒருவர்க்குத் தெரியாமலும், வாத்தியங்களை யொலிக்குமவர்கள் இன்னின்ன தாளத்துக்கொத்து வாசிக்கவேண்டு மென்கிற நினைவில்லாமலும், ஒருவர்க்கொருவர் நான் நீ என்கிற பேதமில்லாமல் எல்லாரும் சுவாமியாகவும் துக்காராமாகவும் மதிப்புற்றும், இப்படி தங்கள்தங்கள ஆநந்தங்களுக்கு எற்றபடி யெல்லாம் முறை பிரழ்ந்து, குதூகலித்தமையை தேவலோகத்தார் ஒன்றுகூடிச் சொல்லவெனினும் அவர்களாலுஞ் சொல்லமுடியாது. இவ்வாநந்தாதிசயங்களைக் காணவந்த மேல்நாட்டு உம்பர்களும் பரவசமடைந்தவர்களாய், ஸ்ரீவிஷ்ணுதாஸராகிய துக்காராம்ஸ்வாமிகளை வாழ்த்தினார்கள். அங்கு வந்திருந்த பக்தகோடிகள் எல்லாரும்,

துக்காராம்ஸ்வாமிகள் உரைத்த கீர்த்தனைகளையும், அபங்கம் என்னுங் கவிகளையும் புதையலில் பெருநிதி கிடைத்ததுபோலவும், சாக்கிரதையில் சாக்ஷாத் திரிமூர்த்திகளுடைய சேவைகிடைத்ததுபோலவும் எண்ணி, தங்கள் தங்களுக்கு நேரிட்டவரையில் கீர்த்தனைகளையும் அபங்கங்களையும் பெற்று, சிரங்களில் வைத்துக்கொண்டு, ருக்குமணீரமணனை ஸ்தோத்திரித்து, புண்ணிய மூர்த்தியாகிய துக்காராம் ஸ்வாமியைக் கண்படைத்ததின் பயனாக இன்றைய திநங்கண்டுசேவிக்கவும், அவர் பிரஸாதித்த கவிகளைப் பாடவும் பிராப்தி நேரிட்டது. நாமனைவரும் இனி பகவானைச் சேவிப்பதைவிட பாகவதோத்தமராகிய துக்காராம் ஸ்வாமிகளையே சேவித்து, அவருக்கே தாஸர்களாய் வாழுவது நலம் என்றெண்ணி, தங்கள் தங்கள் வீடுகளுக்குப் போய், ஸ்வாமிகள் இயற்றிய கீர்த்தனைகளையும், அபங்கங்களையும் பூஜா ஸ்தாநங்களில் வைத்துப் பூசித்துக்கொண்டு வந்தார்கள்.

தவத்திற் சிறந்த பாவிகபக்தர்கள், இந்தத்தேஹூகாம் நாட்டில் வசித்தும் வசித்துக்கொண்டும் வசிக்கவுமுள்ள ஜீவசொரூபங்களாகுமவை யெல்லாம் துக்காராம் ஸ்வாமிகள் இந்நாட்டி லவதரிக்க என்னென்ன தவங்கள் செய்தனவோ! இனி, சந்திர சூரியர்கள் உள்ளளவும் துக்காராம் ஸ்வாமிகளால் இங்குண்டா யிருக்கும் பகவத் பக்தி மாறவே பெறாது. இந்நாடு பூலோக வைகுண்டம் என்று எல்லாருக்குங் காட்சியாகா நிற்கும். இவ்விடத்தில் புல்லாய்ப்பிறப்பினும் புண்ணியம் வாய்த்துப் பரலோகங் கிடைக்கும் என்று கொண்டாடி வாழ்த்தினார்கள். இவ்வைபவங்களை யெல்லாம் மற்ற லோகத்தாருங் கேள்விப்பட்டு, துக்காராமரையும், ஸ்ரீ வைகுண்ட நாதனையும் புகழ்ந்து ஆநந்தித்தார்கள்.

இதுநிற்க, ஆளிந்தியில் ஞானேசுவரசுவாமி சந்நிதானவாயலில், விருக்ஷத்தினடியில் தவஞ்செய்து கொண்டிருக்கும் முறைமையராய், உடம்பெரிச்சலால்பொறுக்காத்துயரங்கொண்டு அந்தஆகாரங்களைத் துறந்துகிடந்தராமேசுவரபட்டர், அனகடசாதந்த சாபத்தைத் தவிர்க்கவேண்டுமென்று, ஞானேசுவரசுவாமியைப்பிரார்த்தித்துக்கொண்டிருக்க, சிலநாள் சென்று இந்த ராமேசுவரபட்டருடைய சொப்பநத்திலே ஞானேசுவரர் எழுந்தருளி, பூருவ ஜென்மத்தில் நாமதேவராக எழுந்தருளியிருந்த வைஷ்ணவவாக்கிரேசர் லோகத்தை உத்தரிப்பிப்பதற்காக இப்போது துக்காராம் என்னுந் திருநாமங்கொண்டு திருவவதாரம் பண்ணி யிருக்கிறார். அவர், தாம் பிறந்தமைக்குக் காரணமாகிற லோகோத்தாரண காரியங்களைச் செய்துவராநிற்க, அவரை நீ வீணில் மாச்சரியங்கொண்டு நிந்தித்தமையாலே நீ இன்றளவுஞ்செய்

திருந்த சுகிருதங்கள் யாவும் நாசமடைந்தனவாய் துக்காக்கிராந்தனாயினாய். அவரை இனியாவது சரணமடைகுவையாகில் உன்னைத் துன்புறுத்துங் கொடிய ரோகம் உன்னைவிட்டு நிவிர்த்தியாவதுமன்றி நீயும் பவசாகரத்தில் நின்று கரையேறி கடைத்தேருவாய். விஷ்ணு பக்தர்களிடம் அபசாரப்பட்டதனால் வரும்பாபம், தீர்த்தயாத்திரைகள் செய்தாலும், யக்ஞ - தான - தவங்கள் செய்தாலும் விலகாது; யாரிடம் அபசாரப் பட்டோமோ அவ்வடியாரே க்ஷமித்தருளினால் தான்விமோசநமுண்டு. அம்பரீஷ மகாராஜாவினிடம் அபசாரப்பட்ட தூருவாச மகாமுநிக்கு எந்தத் தேவர்களாலும், எந்த ருஷிகளாலும் விமோசநமாகாமல், சாக்ஷாத் விஷ்ணுமூர்த்தியாலும் முடியாமல், முடிவில் அந்த மெய்யடியாரையே சரண்புக, அவரநுக்கிரகத்தாலே தூருவாசர் தன்னிடர் களையப் பெற்றார். அதுபோல் நீயும் துக்காராம்ஸ்வாமிகளுடைய திருவடிகளில் வீழ்ந்து சேவித்துச் சரண்புகுவாயேல் அவரே க்ஷமித்து, உனது துஷ்கருமங்களைப் போக்கி விடுவார் என்றுரைக்க, இராமேசுவரபட்டரும் நித்திரை விழித்துக்கொண்டு சொப்பநத்தை நினைந்து, ஓகோ ஞாநதேவஸ்வாமி! இவ்வாருக வா என் கருமம் முடிந்தது? எனது கல்வியுங் கௌரவமும் வீணுக்கேயாகி, குங்குமஞ் சுமந்த கழுதையோடு ஒப்பானேன்; இந்தத் தரும சூட்சுமம் எனக்கு விளங்காமலேயே போயிற்று; நானென்னுஞ் செருக்கிலழுந்தி நாசமாயினேன்; நாட்டார் நகைக்க ஆளாயினேன்; நயநமிழந்த நாய்போலாயினேன்; நங்கைமார் மகிழ நானெனதென நவின்றிருந்துநாராயணனுடைய நளிநபாதங்களைநமஸ்கரித்தறியாது நலிவெய்தினேன்; சமுசார பாசத்திற் பிணைப்புறுவிட்டால் அநுதாபம் பிறவாது; அநுதாபம்பிறவாவிட்டால் பாபம் நீங்காது; நான் சரீரமெடுத்தது முதல் இன்றளவும் ஒருநாளிலாவது அநுதாபங் கொண்டு, அநந்த பற்பநாபனையாவது அவனடியார்களையாவது அடைந்து அன்புடன் துதித்தவனல்லன்; வித்தியா கெருவத்தால் நமக்கெல்லாச் சாத்திரங்களின் உட்பொருள்களெல்லாந் தெரியுமென்றும், அதினளவிலேயே நமக்குமோக்ஷம் ஸித்திக்குமென்றும் துரபிமாநங் கொண்டு வீணாள் கழித்துப் பாபியாயினேன்; மெய்யடியாரைப் பழித்த பாபிஷ்டி என்று உலகத்திலுள்ளாரெல்லாரும்பழிக்கப்பேரெடுத்தேன்; இனி எக்காலம் துக்காராம் ஸ்வாமிகளுடைய திருவுள்ளத்துக்கு உகந்தவனாய் அவருடைய அருளைப் பெறுவேன்? அவரும் எப்போது எவ்விதமாயென்னை யங்கீகரித்துத் தமது அன்பர்களோடு சேர்த்துக்கொள்ளுவார்? என்று துக்காக்கிராந்தனாய், அவரருளைக் கொண்டாடி, அவருக்கு யான் பெருத்த அபசாரஞ் செய்தவனாயிருக்

கிறேனுதலால் நேரில் நானே செல்லுவேனேயாகில் மநம் நொந்து வேறேவித சாபங்களைக் கொடுத்தால் என்னசெய்வது என்று, தான் செய்த கொடுமைக்காகப் பயந்து, தன்னுடைய சிஷியரிடம் ஒரு நிருபமெழுதிக் கொடுத்து, துக்காராம் ஸ்வாமிக்கு என்னுடைய வந்தநங்களைச் சொல்லி, இதனைக் கொடுத்து, பதில் என்ன ஆஞ்ஞாபிக்கின்றாரோ அதனைக் கேட்டுக்கொண்டு வாரும் என்றனுப்ப, சிஷியனும், அந்தக் கடிதத்தை யெடுத்துக்கொண்டு தேஹூகாமுக்கு வந்து, விஷ்ணுபக்தராகிய துக்காராம்ஸ்வாமியைக்கண்டுவணங்கி, கொண்டு வந்த பத்திரிகையைக் கொடுத்து, தாம் தம்ம ஆசாரியராகிய ராமேசுவரபட்டருடனே வாகோலியிலிருந்து நாகநாதசுவாமி தரிசநத்துக்காகப் புணுவுக்கு வந்ததும், அங்கே அனகடசா என்பவருடைய மச்கான் குளத்தில் நீராடினதும், அப்போது தம் ஆசாரியருடைய தேகமெங்கும் எரிச்சல் கண்டதும், அவ்விடத்திலிருந்து ஞாநேசுவரஸ்வாமி சந்நிதாநஞ்சேர்ந்து தவஞ்செய்ததும், சொப்பநத்தில் ஞாநேசுவரர் தோன்றி சாதித்தருளினதும், அநந்தரம் தாஸரை நினைந்து நினைந்து ராமேசுவரபட்டர் பரிதபிப்பதும், இவ்விடம்வர அச்சப்பட்டு விண்ணபத்தைத் தந்து ஸ்வாமியினுடைய கருணையைக் கண்டு தெளிந்து வாருமென்று அனுப்பினதும் சாங்கோபாங்கமாக துக்காராம் ஸ்வாமி ஸந்நிதியில் விண்ணப்பம் பண்ணினார்.

தாஸரும், ராமேசுவர பட்டருடைய சிஷியர் சொன்னவற்றையெல்லாங் கேட்டு, நிருபத்தையும் வாசித்துப் பார்த்து, ஹரி ஹரீ! ஞாநேசுவரா! இது என்ன அதிசயம்? என்னையுமொரு மனிதனுக்கும்பெருட்டு தேவர்திருவுள்ளத்திலெண்ணமுண்டாயிற்றோ? அல்லது டம்ப அகங்காரங்களிற்பட்டு மாளட்டுமென்கிற திருவுள்ளமுண்டாயிற்றோ? மற்றெதனை யெண்ணியோ தேவருடைய திருவடி ஸமுகத்திற்கு வந்தவர்களை அடியேனிடம் அனுப்பி வைப்பது? அடியேனோ மலமூத்திராதிகளிற் சம்பந்தப்பட்டவன்; தேகத்தில் முழுதும் அபிமாநமுடையவன்; இப்படிப்பட்ட கடையேனால் என்னகாரியங்கள் ஆகாநிற்கும்? மகாநுபாவா! என்னை ஒரு தாஸனுயெண்ணி, சகலசாஸ்திரப்பிரவீணராகியராமேசுவரபட்டரென்னும்சுசீலப்பிராமணப் பண்டிதர் ஸ்ரீமுகம் அனுப்பி யிருக்கின்றார்; அவருடைய வேதனையைத் தீர்க்க அடியேனாலாகுமா? அடியேனென்ன பண்டிதனோ? அல்லது சாத்திரபாரங்கதனோ? ஒன்றுமில்லா அடியேனையும் மதித்து இப்படிச் செய்விக்கலாமா? எல்லாந் தேவருடைய திருவருளே யன்றி மற்றொன்று மன்று என்று பலவகை யெண்ணி,

ஒரு அபங்கத்தையெழுதி, வந்தவரிடங் கொடுத்து, உமதாசாரியரிடங் கொடும் என்று ஆஞ்ஞாபித்து அனுப்பியருளினுர்.

சிஷியர், அதை இரண்டு கைகளாலுமேந்தி, தாஸருக்குத் தீர்க்க நமஸ்காரங்கள்செய்து, அங்குநின்றும் பிரயாணப்பட்டுப்போய்ஆளிந்தியடைந்து, தம்மாசாரியராகியராமேசுவரபட்டரைக்கண்டுவணங்கி ஸ்ரீ முகத்தைக்கொடுக்க, பட்டரும் அதனையேந்திப் பிரித்துப்பார்க்கையில் அதில் அபங்கம் என்னுங் கவிரூபமா யெழுதி யிருக்கக் கண்டு வாசித்து, ஓகோ! நாம் வேதவேதாந்தங்களையெல்லாங் கரை கண்டு விட்டோமென்றும், நமக்கு நிகரான கவியில்லையென்றும் வீணே அகங்கார பாவனைபண்ணி காலனுக்கு ஆளாயினோம்; இந்த ஒரு அபங்கத்தின் கருத்தே நமக்கு விளங்க சாத்தியமில்லை; அநுபவமும், போராது; இந்த ஒன்றினுக்கே உரைசொல்லப் புகுவோமாகில் ஒருவருஷஞ் சொல்லியுமுடியாது; நாம் இவருடையப் பிரபாவமும், இவரியற்றும் அபங்கமென்னுங் கவிகளினுடைய பெருமையுமறியா மூடனுகிப் பாபமூட்டையைச் சுமக்கலாயினோம்; இவ்வற்புதமான கவிகள் ஜலத்தில் கல்லைக்கட்டி புகட்டியும் மிதக்கலாயின; சத்தியமொருநாளும் அழியப்படாது; சத்தியமே ஜெயிக்கும்; அசத்தியம் அழிந்துவிடும். இதையுணராமல் அலைந்தோம் என்று இருகண்களிலிருந்து நீர்ததும்பத் ததளித்து, அவ்வபங்கத்தை அடிச்கடிச் சேவித்து, ஆச்சரியப்பட்டு, அவ்வபங்கத்தின்கருத்தை யறிவதாவது—" தனக்குச் சித்தசுத்தியுண்டாயிருக்குமாகில் சத்துருவும் மித்திரராவார்; வியாக்கிரங்கள் சமீபமாகவந்தாலும் சாதுத்துவமுள்ளனவா யிருக்கும்; சர்ப்ப சார்த்தூராதிகளெல்லாந் தொண்டுசெய்யும்; விஷமுண்டாலும் அமுதமாகும்; யாரேனுங் கெடுதிசெய்ய எண்ணி நடத்தினுலும் அக்கெடுதியே நன்மையாய்நின்று சுகந்தரும். துச்சங்களான மொழிகளாலே பிறர் பரிகாசங்கள் செய்தாலும் அவை விநய வசநங்களாயிருக்கும்; பிறர் தமக்குத் துக்கமுண்டாகச்செய்தால் அச்செயலே சந்தோஷத்தையுண்டாக்கும்; அக்கினி சுவாலையுஞ் சீதளமாகும்; தீநதயாளர்களுடைய அநுக்கிரகம் பெற்றுல் யாவத்ஜீவர்களிடத்திலும் ஏகபாவனையுண்டாய், தன்னுயிர் போலவே மன்னுயிர்களையும்பாவிக்க அடுக்கும். ஸ்ரீ ஹரியினுடைய பரமமான கிருபையுமுண்டாகும். இது தமக்குள்ளாகவே அநுபவத்திற்குவரும்" என்றிவ்வாறு கருத்தடங்கியிருப்பதை யறிந்து, மறுபடியும் அந்த அபங்கத்தை அடங்கா ஆவலால் வாசித்த மாத்திரத்திலே தம்முடைய தேகத்தில் தீப்பட்டு வேகிறுப்போலிருந்தஎரிச்சல் சற்றுமில்லாமல் உடனே யடங்கிவிட்டது; தேகமெங்குந் தண்

ணைக் குளிர்ச்சி யடைந்திருந்தது. இவ்வதிசயத்தைக் கண்ட ராமேசுவர பட்டர், அடங்கா ஆநந்தப்பெருக்கில் இனிதுடன் நீந்துபவராய், ஆச்சரியமுற்று, ஆவா! அனகடசா விடுத்த சாபாக்கினியானது இத்தனை நாளாக நம்மைத் தீக்கொழுவி வேகச்செய்யாநின்றதே; அஃது, ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகள் தம்அருள்பூத்ததோர் அபங்கத்தைக் கண்டமாத்திரையனே யெங்குற்றதோ! அறிவேமல்லேம் எனவியப்படைந்து, ஒன்றினும் மநஞ்செல்லப்பெறாமல், பொறிபுலன்களெல்லாம் தாஸரடிகளிலேயே பொருந்திநிற்க, தாமிருந்த விடத்திலிருந்து சுநாயாசமா யெழுந்துநின்று, கண்களில் தாரைவிட்டு நீர்பெருக. துக்காராம்ஸ்வாமிகளிருக்குந் திசையைநோக்கி, தீர்க்கதண்டன் சமர்ப்பித்து எழுந்து, தேஹூகாமுக்கு தாஸர் சேவையார்த்தம் சிஷியருடன் நடந்துவாலாயினர். இப்படி ராமேசுவரபட்டர் தம்மைச்சேவிக்குநிமித்தம்வருவதை ஞாநித்தலைவரறிந்து, எதிர்கொண்டு, அவர்கள் வரும்தடத்தில் நடந்து வந்துகொண்டிருக்குமதை ராமேசுவரபட்டரறிந்து, ஓடோடியும் ஸ்வாமி முன்வந்துநின்று, இருகரங்களையுங் கூப்பி அஞ்சலிசெய்து, சுவாமின்! அடியென் பிராமணஜெந்மத்தினால் கெட்டேன்; என்பிறப்பு பிரயோஜனமில்லாதபிறப்பாயிற்று; நீர் வைஷ்ணவ வாக்கிரேசரென்றும், விஷ்ணுமூர்த்திக்கு மிகுதியும் பிரீதராகிய அந்தரங்கரென்றும் உள்ளபெருமையைப் பாவியேன் உணர்ந்துகொள்ளாமல் பொருமை நிறைந்தவனாய், நீர் பரமமான கருணைகொண்டியற்றிய பாமாலைகளை வெள்ளத்திலிடச்செய்தேன்; உலகத்தாருக்கு நல்லறிவுண்டாக்கி, பக்தி என்னும்அமிர்தந்தன்னை யூட்டி கடைத்தேறுவித்தற்காகத் திருவவதாரஞ்செய்த தெள்ளிய பரமதயாளுவென்று அறியாமல் நிந்தித்தேன்; தங்களை யிந்நாட்டிலிருந்து அகற்றவும் யத்தநித்தேன்; அடியேனால் செய்யப்பட்டிருக்குங் குற்றங்கள் அநந்தமுண்டு; அவற்றையெல்லாம்மன்னித்தருளி, கடைப்தேற்றுவித்தல் நின்கடனேயாகும்! என்று பிரார்த்தித்துத் தொழுதுநிற்க, துக்காராம்ஸ்வாமிகளும், அந்தப்பட்டருக்கு நமஸ்காரங்கள்செய்து, ஸ்வாமீ! அடியேன் ஹீநஜாதியேன்; பாமரரினுஞ் சுத்தபாமரன்; உமது கிருபைக்குப் பாத்திரவான் ஆகவேண்டுமென்று இச்சை மிகக்கொண்டவனாகின்றேன்; அடியேனை க்ஷமித்தருளவேண்டும் என்று நைச்சிய வசநங்களை வசநிக்கக்கேட்ட ராமேசுவரபட்டர் நடுநடுங்கி, சுவாமீ! எனதருமையாசாரியனே! அடியேன் பிராமணன் என்று அபிமாநித்த அபிமாநத்தை மாற்றிக்கொண்டேன்; அந்த அபிமாநந் தலைக்கேறியிருந்தமையாலல்லவா தேவருடைய திருவடிசேவையிழந்து, இழந்தோ

மே என்கிற அநுதாபமுமில்லாமல், தீமைகளையேசெய்து தீமைக்காளானது? இன்னும் அவ்வபிமாநத்தையே கொண்டு எந்த நரகத்திற் புகுவேன்? தேவர் அடியேன் மீது கருணைபாரித்து அநுக்கிரகித்தருளின அபங்கம்என்கிறதிவ்வியகவியாகு மீர்வாளால், வித்தை-தநம்-நற்குடிபிறப்பு என்பவற்றின் அபிமாநத்தாலுண்டாகிய அகங்காரமென்னும்இருள்சூழ்ந்த காட்டைச் சேதித்துவிட்டேன்; அக்காடாந்தகாரத்தில் யான் சிக்கியிருந்தால் தேவருடைய பரமகாருண்ணியமானது, அனகடசாவின் சாபாக்கிநியை என்சரீரத்தில் மூட்டிவைக்க, அவ்வக்கிநியாலுண்டான பிரகாசமாகிற நோயினால் அவ்வந்தகாரத்தைப்போக்கப்பெற்றவனாய், தேவராகியபரமமூர்த்திவஸ்துவையறிந்துகொண்டவனாயினேன்; இனியும்மீண்டு அவ்வந்தகாரத்திற்பட்டு நைவேனோ? ஒருபோதும் தேவருடைய ஸமுகம்விட்டு அகலேன்! தேவரே அடியேனுக்குத் தஞ்சமாகிற தந்தை - தாய் - குரு - தெய்வம் - மற்றுமெல்லாம்! உமக்கடைக்கலம் புகுந்த ஏழையேனைக் கைசோரவிடேல் கண்டீர பரமமூர்த்தீ! என்று ஈடுபட்டிருந்தார்.

ஸ்ரீ ஹரிபரந்தாமனுடைய தெள்ளிய கலியாண குணங்களைக் கண்டும், அவனுக்கே அடிமைத்தொழில்பூண்ட மெய்யடியார்களுடைய அற்புத சேஷ்டைகளையும் நன்றறிந்து, சிரவணமநநாதிகளால் ஆநந்திக்குமவர்கள் சற்பாவமுடைய பக்தர்களேயல்லால் அடியேன் போன்றபத்தபாமரர்களன்று. அந்த அருமையாளர்களுடைய அருஞ்செயல்களைக்கண்டு ஆநந்திக்க அடியேன் வசமன்றாகிலும், முன்னோர் வாய்மொழிகளின்படியேயாவது, கிளிப்பிள்ளையைப்போல் அவர்கள் சொன்னவற்றைச்சொல்ல ஆவல்கொண்டமையால், ஆதியஞ்சோதி! எனது பிரார்த்தனையைத் தலைக்கட்டியருளுமாறு அவனுடைய தாமரைபோன்ற பாதங்களுக்கு வந்தநங்கள் இயற்றுகின்றேன்.

பன்னிரண்டாமத்தியாயம் முற்றும்.

ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீ பாண்டுரங்கபரப்ரஹ்மணேநம:

ஸ்ரீமத்

துக்காராம் சுவாமிகள் சரித்திரம்.

பதின்மூன்றுமத்தியாயம்.

காப்பு.

மாராமரமேழ் வீழசரம் வழங்கியமா மாயன்
வாலியைக்கொன்ற வன்பினுக்கு வாழ்வீந்த வள்ளல்
இராமனெனக் கோசலைத னீர்ந்தவயி றூர்ந்த
வெழிற்பேரெங் தாரகமா யிலகுசுடர்ச்சோதி
[illegible]ராமுதுபற் கடியுண்ட கரிராயற் கிரங்கிக்
கடுநடையோ டேகியங்கைப் பருதிதொடு கத்தன்
பராபரனற் பதமலரைப் பலகாலு முன்னிப்
பவக்கடலைக் கடந்துய்யப் பற்றுகிற் பேனே.

ஸ்தோத்திரங்கள்.

ஜேஜேவிட்டலர்! ஜெகதாதாரபூதா! ஜெயருக்மணீரமணு! செந்தாமரைமலர்புரையும் நின் திருவடிகளுக்கு அன்பேசெய்து வாழும் அன்பர்களுடைய பிறவிக்கடலைக் கடத்தற்கு ஒப்பறுதெப்பமாகின்றனை. அந்த நீயாகுந் தெப்பத்தையேறி, அக்கரையாகிற நினது இன்பப்பேற்றினையடைந்து, என்றென்றுமருப் பெருங்களிப்புகொள்ளுமவர்கள் அக்நண்ணியரேயன்றி மற்றவர் பிரமருத்திரேந்திராதி



ஊமையாயிருந்த பிராமணன். துக்கா சிவாஜிராஜா.) சிவாஜிராஜா தாயார்.

யரே யானாலுமன்று. பிரமருத்திரேந்தியாதிகளையும் நிகர்கொள்ளாத பெற்றிமையாளருடைய குணாநுபவங்களை வருணிப்பதே அடியேன் பெரும்பயனாவெண்ணியிருக்கின்றேன். அப்பயனையே தாரகமாகக் கொண்டவனாகின்றேன். தேக தாருட்டியமுள்ளவர்கள் ஹிமாசல முதலிய பருப்பதங்களிற்சென்று, சருகு முதலிட்டவற்றையும் காற்றையு முண்டு, இந்திரியங்களை உள்ளடக்கி தவங்களைச் செய்கின்றார்கள். அடியேனுக்கு அவர்கட்கு இருப்பது போன்ற தாருட்டியமில்லை; இந்திரிய ஜயம் பண்ணும் நிலைமையு மிருக்கவுங் காண்கிலன். ஆதற்கொண்டே, நின்னடியார்க்கு அடிமை பூண்டு, அன்னோரது மேம்பாடடைந்த சற்கீர்த்திகளையும், ஜயசீலத்துவத்தையுங் கூறிப் போதல் தவமென்றெண்ணினவனாகினேன். சிலர் நாசிகளைப் பிடித்துக்கொண்டு, ரேசகபூரகாதிகளின் சம்பவங்களின்படி யோகசாதநங்களைச் செய்கின்றார்கள்; சிலர் தீர்த்தயாத்திரை,க்ஷேத்திரயாத்திரைகளைச் செய்கின்றார்கள் ; சிலர் திரவியார்ஜநம்பண்ணி வேள்விகளைச் செய்கின்றார்கள்; சிலர் இதிகாச புராணாதிகளாகும் அத்தியாத்துமிகங்களைச் சேவிக்கின்றார்கள்; சிலர் பிராணாயாமஞ்செய்து யாவத் பூதராசிகளிடத்திலும் சமபுத்தி கொள்ளுகின்றார்கள்; சிலர் தேகவிதேயர்களாய் மாநத பூசை நடத்துகின்றார்கள்; சிலர் சற்குருவை யடைந்து, மந்திரங்களையும், மந்திராநுஷ்டாநங்களையும் பெற்று அவ்வநுஷ்டாந மார்க்கத்தில் நிற்கின்றார்களாய் சாயுஜ்ஜிய பதவி யடைகின்றார்கள். அவைகளைச் செய்ய அடியேனால் சாத்தியமன்று; உபபத்திகளும் இல்லாதவனாகின்றேன். அவை செய்யப் பெறாதவனென்றும், உன்னுடைய அடியார்களது புகழ்மலிந்த வாசகங்களைச் சொல்பவனென்று மெண்ணி கைசோரவிடாமல், குற்றங்களேனும் நற்றவங்களாக்கிக் காத்தருள் செய்வாய் கார்நிறத் தெந்தை கருணையானே! என்றுகனிந்தஉள்ளத்தராய்,மகிபதிதாசர்இருகரங்களையும்உயரக்கூப்பித்தொழுது, மேல்சரித்திரத்தைச்சொல்லத்தொடங்குவாராயினர்.

பிரபல வித்துவானாயும், இராஜ ராஜாக்களால்சேவிக்கப்பட்டவராயுமிருக்கும் ராமேசுவரபட்டர், துக்காராம்ஸ்வாமிகளுடைய அருமையான செயல்களுக்கும், குண கீர்த்திகளுக்குந் தோற்று தாஸருக்கு அடிமையாய், அங்கேயே நித்தியவாசம் பண்ணத்தொடங்கிய பின் துக்காராம்ஸ்வாமிகள், ஆளிந்திக்கு எழுந்தருளி, அங்கே ஞாநதேவுசுவாமி சந்நிதியிற்புகுந்து, சேவித்துக் கொண்டிருக்கும்போது அவ்வூரார் ஆண்பெண்ணடங்கலும் இவரது வரவைக்கண்டு மிகுசந்தோஷம் கொண்டவர்களாகி, கூட்டங் கூட்டமாக வந்து சேவித்து, துக்காராம் ஸ்வாமிகளால் ஆசீர்வாதங்களைப் பெற்றார்கள் ; ஸ்வாமி

களும் ஞானேசுவரரைச் சேவித்து விடைபெற்றுக்கொண்டு தேவுகார முக்குத் திரும்பி வந்து, யதார்த்தியாக சுவாமிக்கு நித்திய கைங்கரியங்களையும், ஆத்துமஞ் ஞான போதகங்களையுஞ் செய்துகொண்டிருந்தனர்.

பிறகு, தேசதேசங்களில் இருப்பவர்களெல்லாரும், ராமேசுவர பட்டர் துக்காவுக்கு அடிமையாய்விட்டாரென்றும், துக்காராம்ஸ்வாமிகளால் அநந்த அற்புதங்கள் நடந்து வருகின்றன வென்றுங் கேள்விப்பட்டுத் திரள் திரளாய்த் திரண்டுவந்து சுவாமிகளைச் சேவித்து, பஜனை கோஷ்டியிலீடுபட்டு, சற்கீர்த்தநங்களைப் பாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் கல்விவான்களாயும், சரிதை-கிரியை-யோகம்-ஞாநம் என்னுஞ் சாதந சதுஷ்டய சம்பந்நர்களாயுமிருந்தார் சிலர்; பஜனையான சற்கருமங்கள் முடிந்து ஒழிவுற வீற்றிருந்த காலங்களில் ராமேசுவர பட்டரை நினைந்து, நான்கு வேதங்களி லென்ன, அவற்றின் அங்கங்களாறிலுமென்ன, உபநிடதங்கள் முப்பத்திரண்டிலுமென்ன, இதிகாசங்களிலென்ன, புராணங்களிலென்ன, மற்றுமுண்டான சாஸ்திரங்களி லென்ன இவற்றி லெல்லாங் கரைகண்ட பண்டிதராயும், இராஜ ராஜர்களை யெல்லாம் அடிமை கொண்டவராயும், தேச தேசாந்தரங்களிலெல்லாம் புகழ் பெற்றவராயும், தமக்கு நிகர் யாருமே கிடையாதென்னும் மதிப்பேற்றவராயும், எங்கும் எவர்க்கும் ஆசாரியராயும், ஞாநத்தில் துல்லியராயும், தநதானிய சம்பத்துகளில் பூரண சமுர்த்திபெற்றவராயும், ஒன்றிலும் இகத்துக்கும்பரத்துக்குங் குறைவில்லாதவராயு மிருக்கும் ராமேசுவரபட்டர், தமது செல்வங்களையும், பெண்டு பிள்ளைகளையும் அறத் துறந்துவந்து, துக்காராம் ஸ்வாமிகளுக்கு அடிமையாய் விட்டது மிகுவாச்சரியம்! பூமண்டல மெங்கும் இவ்வளவு கீர்த்தி பரவப்பெற்ற பட்டரே தம்ம நிலைகளைக் குலைத்துக்கொண்டு அடிமையாயினரெனில் நாமெல்லாம் எவ்வளவு? மிகுபஞ்சைகள். நாம் துக்காராம் ஸ்வாமிகளுடைய திருவடிகளிலிருந்து உதிருந் தூசுபடிந்தாலே புநிதர்களாய் விடுவோம் என்றிவ்வகை யெல்லாம் பேசிப் புகழ்ந்தார்கள். அநந்த தேசங்களில் இருப்போர்களெல்லாம் இப்பரம தயாளுவினுடைய அற்புதங்களைக் கேள்வியுற்று, சேவிக்கவேண்டிய ஆர்த்திகொண்டு தங்கள் தங்கள் ஊர்களைவிட்டுப் பிரயாணப்பட்டு வந்துகொண்டு இருப்பவர்களும், பிரயாணத்துக்கு எத்தநித்துக்கொண்டு இருப்பவர்களுமா யிருந்தார்கள்.

இவ்விருத்தாந்தங்களை யெல்லாம் புனதேசத்திலிருக்கும் அனகடசா யென்னும் பகீரி கேட்டு, நாம் ராமேசுவரபட்டருக்கு இட்ட

சாபம் நிவர்த்தியாக்க இவ்வுலகில் யாவராலும் முடியாததாயிருக்க, துக்காராம் என்னும் வைஷ்ணவரொருவர், அந்த என்னுடைய சாபத்தை நிவர்த்தியாக்கி, பட்டரென்னும் வித்துவானையும் அடிமையாக்கிக் கொண்டாராமே இதுவென்ன ஆச்சரியம்! இப்பேர்பட்ட புண்ணியமூர்த்தியை நாமும்போய் தெரிசித்து வரவேண்டும் என்று தன்னுடைய மக்களைவிட்டுப் புறப்பட்டு வழிநடந்துவருகையில், மத்தியிலிருக்கும் சிஞ்சவடகிராமத்தில் அந்தச் சித்தபுருஷனுகும் அனகடசா என்னும் பகீர்புகுந்து, அங்கே கணபதிதாஸராகும் சிந்தாமணிதேவருடைய மாளிகையிருக்கிறதென்று கேள்விப்பட்டு, அங்குப்போய் வாசலில்நின்றுகொண்டு, பிச்சையிடுங்கள் என்று கூவலும், அந்தச் சத்தத்தைக்கேட்ட ஓர்பிராமணன் இரண்டு கைகளாலும் அமுதுபடி வாரிக்கொண்டுவந்து, பகீர்வைத்திருந்த மட்பாண்டத்திற்பெய்ய, அதுநிறையாமையால் மேலுமேலுங் கொண்டுவந்து பெய்யுந்தோறுங் குறைவாகவே யிருக்கக்கண்டபிராமணன் ஆச்சரியங்கொண்டு, பூசைசெய்துகொண்டிருக்கும் சிந்தாமணி தேவரிடம்போய், சுவாமி! யாரோ ஒருபக்கீர் பிக்ஷைகேட்டார்; கொண்டுபோய்போட்டேன், அவர் வைத்திருந்த சிறியமட்பாத்திரம்நிறையவில்லை; எத்தனை தடவை யெத்தனை யமுதுகொண்டுபோய்போட்டும் நிரம்பாதிருக்கிறது; இதென்னமோ அதிசமயம் அறியேன் என்றுசொல்ல, தேவரும் மூட்டைகளிலுள்ளனவெல்லாம் போடுங்களென்று உத்தரவளிக்க, அவ்வண்ணமே போட்டும் முன்போலவே குறைவாயிருக்கக்கண்டு மறுபடியும் சிந்தாமணிதேவருக்கு அறிக்கையிட, அவரும் ஆச்சரியப்பட்டு, பூசையை விட்டுவந்து தம்முடைய இரண்டுகைகளாலும் அமுதினை யளிக்கக்கொண்டுவந்துசித்தபுருஷனுகியபக்கீரியினுடைய பாத்திரத்தில்பெய்தமாத்திரத்தில் பாத்திரம்நிறைந்துபக்கிர் அங்குநின்றும் பிரயாணப்பட்டு தேஹூகாமுக்குவந்து, நேரே துக்காராம் ஸ்வாமிகளுடைய திருமாளிகையின் தெருவாசலில் நின்று, என்னுடையபாத்திரம் நிரம்பப் பிச்சைபெய்யவேண்டும்என்றுகேட்டார். அந்தச் சத்தத்தைக்கேட்ட தாஸர்மனை ஆவலிஜீஜாபாயம்மாள், எந்நேரமும் யாசகாளுடையபாதைபெரிதாயிருக்கிறதுஎன்று முகஞ்சுளித்துக்கொள்ள, அவருடைய குமார்த்தி கெங்காபாயறிந்து, தன் தாயாரரைத்துக்கொண்டிருந்த மாவில் ஒருபிடி யள்ளிக்கொண்டு பக்கீருக்குப்போடப் போகும்போது ஆவலிஓடிவந்து மகளைப்பிடித்துக்கொண்டு, இவ்வளவேன்? என்று, பிடிமாவில் பாதிவாங்கிக்கொண்டு மற்றதைக்கொடுக்க, அந்தக் குழந்தையும் அரைபிடிமாவைக்கொண்டுபோய் பக்கீரியினுடைய பாத்திரத்திற்பெய்தவுடன் பாத்

திரம் நிரம்பி வழியத் தலைப்பட்டது. சித்த புருஷன் இதையறிந்து திப்பிரமையடைந்து, தான்வந்து பிச்சைகேட்டதும், ஆவலிகோபித்ததும், பெண் மாவைக் கொண்டுவந்ததும், அதில் பாதி பிடுங்கிக்கொள்ள மற்ற பாதியைப் பாத்திரத்திற்பெய்ததும், பாத்திரம் நிரம்பித் ததும்பியதும் எண்ணி அதிசயித்து, இந்தப் பெண்தானே துக்காபாய்! என்று அதிசங்கை பண்ணி, அம்மா நீர்தானே துக்கா? என்று கேட்க, குழந்தையும், நீரென்ன பித்தர்போல் காணுகிறீர்; என் தந்தையின் பெயர் துக்கா; அவர் பிராதக்காலத்தில் இந்திராயணிக்குப் போய் தீர்த்தமாடி ஸந்நிதிக்கு எழுந்தருளி யிருக்கிறார் என்று சொல்ல, பக்கீர் குழந்தையின் திறமைக்கே ஆநந்தப்பட்டு, அம்மா! உன்னுடைய தந்தையைக் காண்பிக்கவா என்று கூப்பிட்டுக்கொண்டு அனகடசா என்கிற பக்கீர் சந்நிதாநம் வந்து, குழந்தையால் அதின் பிதாவாகிய துக்காராம் ஸ்வாமிகளைக் காண்பிக்கப்பட்டு, தாஸரிருக்கும் நிலையை நோக்கி சந்தோஷமுற்று, இவர் பிரமஞ்ஞாந பூரணராகவும், ஜநோத்தாரகராகவும், நிஷ்காம சித்தராகவும் இருக்கக் கண்டு, சாஷ்டாங்கமாக தீர்க்க நமஸ்காரஞ் சமர்ப்பித்து, நான்கு ஜாம பரியந்தம் நிற்க, அவரை இன்னாரினியாரென்று விசாரிக்காமலேயே தன் திருநாம சங்கீர்த்தநாநந்தத்தில் மூழ்கி யிருந்தார். அனகடசாவும் அங்கிருந்து புடை பெயராம லிருந்தார்.

அந்த ராத்திரி, துக்காராம்ஸ்வாமிகளுடைய காலக்ஷேபத்தைக் கேட்டு ஆநந்திப்பதற்காக அக்கம் பக்கத்துக் கிராமங்களிலிருந்து அநந்தம்பேர் வந்தார்கள். அவர்களில் ஐந்துபேர் ஒரு கூட்டமாய்க் கூடி மிகு ஆவலோடு காலக்ஷேபங் கேட்க வராநிற்கையில் அவர்களிலொருவர் வழியில் சருப்பந்தீண்டி இறந்துவிட்டார். மற்றவர் நால்வரும் என்னென்ன சிகிச்சைகள் செய்துந் தீராமையினாலே, மிகு துக்காக்கிராந்தர்களாய், தங்களுக்குள் தாங்களே தெளிவுற்று, நடந்துவிட்டமைக்கு யோசிப்பதில் பயனில்லை; இன்றைய திநம் நாம் ஸ்வாமிகளுடைய காலக்ஷேபங் கேட்காவிட்டால் நரகமே நமக்குப் பிராப்தமாகத் தடையில்லை; ஆகையால், ஆனதாயிற்று; இந்தப்பிரேதத்தைத் தூக்கிக்கொண்டு போய் காலக்ஷேபகூடத்தில் ஓர் மூலையில் கிடத்தி நாம் காலக்ஷேபங் கேட்டு, மங்களார்த்தியானவுடனே பிரேதத்தை மறுபடியுந் தூக்கிக்கொண்டுபோய் உடையவர்களிடஞ் சேர்த்துவிடலாம் என்று நிச்சயித்துக்கொண்டவர்களாய், பிரேதத்தைத் தூக்கிக்கொண்டுவந்துகாலக்ஷேபக்கூடத்துக்குள்யாருக்கும்பிரேதமென்றறியவிடாமல் ஒரு மூலையில் படுக்க வைத்துவிட்டு, அந்நால்வரும் ஸ்ரீ ஹரிநாம சங்கீர்த்தநங்களைக் கேட்டு ஆநந்தமடைந்துகொண்

டிருந்தார்கள். அவ்வளவில் நடுஜாம மாகவே, காலக்ஷேபஞ் செய்துகொண்டிருந்த துக்காராம்ஸ்வாமிகள், சுவாமிக்கெதிரில் நின்றுகொண்டு அவனுடைய கலியாணகுணங்களைச் சொல்லிக்கொண்டு வந்து, அங்குவந்திருந்த கோஷ்டியைப்பார்த்து, எல்லாரும் கைகளைத் தட்டிக்கொண்டு உரக்க விட்டலநாம சங்கீர்த்தநம் பண்ணுங்களென்றுரைத்து, ஒரு திவ்யதரமான நாமாவளியைப்பாட, எல்லாரும் ஸ்வாமி ஆஞ்ஞையின்படியே ஆகாயஞ் செவிடுபடத்தக்க கோஷத்துடன் கைகளைத்தட்டிக்கொண்டு ஒருமநதுடனே விட்டலநாம சங்கீர்த்தநம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். ஸ்வாமிகள் சுற்றிலும் அருள்நோக்கமுடையவராய் அவ்வெல்லாரையுங் கடாக்ஷித்துக்கொண்டு வராநிற்கையில், ஒருமூலையில் நாலுபேர் நிற்க ஒருமநுஷியன்நித்திரைசெய்துக்கொண்டிருக்கிறப்போலேஇப்பிரேதமானது ஸ்வாமிகளது திருக்கண்களுக்குத் தோன்றியது. அதைக்கண்ட ஸ்வாமி, இதுவென்ன அதிசயம்! இந்தச்சபைக்குத் தலைவனுயிருக்கிற நான் மூதேவிபோலிருக்கிறது; நான் நாராயணனுக்கும் அவன் மெய்யடியார்களுக்கும் தாஸனுகாதபடியினுல்தான் என்னைப்பற்றிய பீடை என்னைச் சார்ந்தவர்களையும் பற்றியது; இனி இதற்கென்ன செய்யலாம்? ஹரிஹரீ? பாண்டுரங்கா ! பக்தவத்ஸலா ! இக்கோஷ்டியில் எவருக்கும் நித்திரை சோம்பல்கள் வரவிடாமற்செய்து,என்னையுந் தாஸனுக்கி, உனதடிகளிற் சேர்க்க கருணைபாரும் கருணைக்குன்றே! என்று ஆநந்தபரிதராய் ராமநாம சங்கீர்த்தநஞ்செய்து முன்போல் யாவரையுங் கைகளைத்தட்டிக்கொண்டு, விட்டலநாம சங்கீர்த்தநஞ்செய்ய நியமித்து தாமும் அவர்களோடொக்கக் கைகளைத் தட்டி ஸ்மரித்தும் பிரேதம் முன்போன்றே அசைவற இருக்கக் கண்டு துக்காராம் ஸ்வாமிகள் சமீபமென அந்நால்வரிடம்போய் நின்றுகொண்டு கோஷ்டியில் எல்லாருமறிய அவர்களைப்பார்த்து, நீங்கள் நால்வரும் நிற்பதும், ஒருவர் சயநித்துக்கொண்டிருப்பதும் என்னகாரணங்கொண்டோ விளங்கச்சொல்லவேண்டும் என்றுகேட்டருள, அந்நால்வரும் அச்சமுற்றவர்களாய், ஸ்வாமி திருவடிகளில் வீழ்ந்து சேவித்துக் கைகளைக்கட்டிக்கொண்டு நின்று, ஸ்வாமின்! அடியோங்கள் ஐவரும் தேவருடைய திருவாக்கின் இன்னமுதையுண்ண ஆவல்கொண்டுவராநிற்கையில் வழியில்இவருக்குச் சருப்பந் தீண்டியது; அடியோங்களாலான சிகிச்சைகளெல்லாஞ்செய்துந் திரும்பப்பெருமல் மடிந்துவிட்டார்; இவரால் அடியோங்களுடைய குணுநுபவங் கெடுகிறதென்றெண்ணி, இந்தப் பிரேதத்தையுந் தூக்கிக்கொண்டுவந்து இங்கே வளர்த்திவிட்டு, அடியோங்கள் தேவரருளிச்

செயல்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம் என்று உரைத்தார்கள். அம்மொழிகளைக்கேட்ட அருளுடையஸ்வாமி — துக்காராமானவர் உடனே அங்குநின்றும் ஸர்வஸ்வாமியாகிற லோகநாயகனுடைய திருமுன்புவந்து அவர்கள் சொன்னவற்றை விண்ணப்பம்பண்ண, சரண்ணியனும் உனது எண்ணத்தின்படியே நடத்துக என்றுஅர்ச்சகமுகத்தாலே சாதிக்க, உடனே துக்காராம்ஸ்வாமிகள் கீர்த்தனை பாடத்தொடங்கி, தம்மோடு யாவரையும் பாடநியமித்து, அவர்களை நோக்கி இச்சபையின்கண் ஜாக்கிரததசையிலிருக்குமவர்களும், சொப்பந சுஷுப்தி அவஸ்தைகளுக்கு உட்பட்டிருக்குமவர்களும், மற்றும் விஷமுதலியவற்றால் தீங்குற்றுப் பிணமெனக்கிடக்குமவர்களும் இந்த பகவற்காலக்ஷேபத்தில் அவசியம் ஈடுபடவேண்டியது; அப்படி ஈடுபட்டவர்களை நம்மிறைவனுகும் விடோபா, பரமபதத்துக்காளாக்குவார்! என்றுரைத்து கீர்த்தனைகளைப்பாடி முடித்து, எல்லோரையும் ஹரிநாம சங்கீர்த்தநஞ்சொல்லி முன்போல் கைகளைத்தட்டும்படிச்செய்ய, அவர்களெல்லோருங் கைகளைத்தட்டிக்கொண்டு ஹரிநாம சங்கீர்த்தநம் பாடிக்கொண்டிருக்கையில், பிணமாய்க்கிடந்த அவருமெழுந்து நின்றுகொண்டு கோஷ்டியோடே தாமுமொருவராய் கைகளைத்தட்டிக்கொண்டு ஹரிநாம சங்கீர்த்தநஞ்செய்யத் தலைப்பட்டு, அந்நாம சங்கீர்த்தநம் முடிந்தவுடனே துக்காராம் ஸ்வாமிகளுடைய திருவடிகளில் வீழ்ந்து சேவித்துக்கிடந்தவண்ணமே கிடந்தார். ஸ்வாமிகளும் மிகு சந்துஷ்டராய் அவரையெழுப்பி ஆசீர்வாதங்கள் செய்து; காலக்ஷேபாநுபவங்களில் ஈடுபடவிருத்தியருளினுர். இவ்வதிசயத்தைக்கண்ட கோஷ்டியாரெல்லோரும் மிகுஆச்சரியமடைந்து, துக்காராம் என்னும் மகாபுருஷர் மண்ணுலகில் நின்று நம்மையெல்லாம் வைகுந்தத்திற்சேர்ப்பதற்காகஅவ்வைகுண்டத்திலிருந்தே எழுந்தருளினுர். ஆகையால்தான் நம்முடைய சுகதுக்கங்கள் தம்மதாக ஏற்றுக் காத்தல்செய்து வருகின்றார்! என்று அதிசயித்துக்கொண்டாடி, பகவந்நாம சங்கீர்த்தநங்கள் செய்து, விடிவோறை மங்களார்த்தியானவுடன் தங்கள்தங்கள் இருப்பிடங்களுக்குப் போயினர்.

இவ்வற்புதங்களையெல்லாங்கண்ணுரப்பார்த்திருந்த அனகடசா என்னும் பக்கீர் ஆநந்தக்கடலில் மூழ்கினவராய், துக்காராம் ஸவாமிகளுடைய திருவடிகளில் வீழ்ந்துவீழ்ந்து ஆறுமையடங்கச் சேவித்து எழுந்துநின்று, துதிகள் பல துதித்துக்கொண்டாட, ஸ்வாமிகளும் அவர்திறத்தில்மநமிரங்கியருளி,சம்மாந ஆதரணைகள்செய்து, க்ஷேமலாபங்களை வினவிக்கேட்டு மகிழ்வுற்றார். அனகடசாவும் மூன்

றுநாள் ஸ்வாமிகளிடம் விடைப்பெற்றுக்கொண்டு, புனாவில் தம்முடைய மக்கானுக்குப் போய்விட்டார்.

இப்படியிருக்க, நிதநிதம் மெய்யன்பரால் தேஹூகாமில் கீர்த்தனை காலக்ஷேபங்கள் நடந்துவருவதை யறிந்த அநேகப்பிரஜைகள் திநமும்வந்து ஈடுபட்டு ஆநந்தபரிதர்களாகி, மங்களார்த்தியானவுடனே தங்களிடங்களுக்கு போகுவதுண்டு. ஒருநாள் இவ்வண்ணமே நடந்தேறி,மங்களார்த்தியானவுடனே எல்லாருந் தங்கள் இருப்பிடங்களுக்குப் போய்விட்டார்கள். துக்காராம் ஸ்வாமிமாத்திரம் தன்னந்தனியராயிருந்தார். அப்போது அங்கே வந்தவர்களில் ஒரு அழகுடைய பாலியஸ்திரீயானவள் மற்றவர்களோடு போகாமலிருந்து, எல்லாரும் போய்விட்டபிறகு தனியேயிருக்கிற துக்காராம் ஸ்வாமிகளிடம்போய்ச் சேவித்து, வெகுநாளாய் தங்களைச் சேரவேண்டுமென்கிற ஆவல்கொண்டிருக்கின்றேன்; இன்றைய திநம் சமயமாயிருப்பதால் என்னுடைய கோரிக்கையாகிய காமேச்சையை முடித்துவைக்க வேண்டும் என்று பிரார்த்தித்தாள். அந்தப் பெண்பிள்ளையுரைத்தவற்றைக்கேட்க, துக்கா தேகத்தில் நடுக்கங்கொண்டு, ஹரிஹரீ! என்னவுரைத்தாய் தாயே! என்று வாய்குழறி, அச்சத்துடன், அம்மா! என்னுடையகாம - குரோத - லோப - மோக - மத - மாச்சர்யங்களாகும் அவற்றையெல்லாம்விடலனுக்கு அர்ப்பிதஞ்செய்திருக்கின்றேன், பிரகிருதி என்னைவிட்டு அகன்றிருக்கிறது; அன்னியஸ்திரீகள் எனக்குத் தாயென்றே பூரணமாய் மதித்திருக்கின்றேன்; அணிமாமுதலான சித்திகளை வெறுத்து இந்த பஜனையிலீடுபட்டு வருகின்றேன்; இப்படிப்பட்டநான் உனக்குத் தக்க புருஷனல்ல; என்னை மன்னிக்கவேண்டும் என்று வேண்டி புத்திகளைக்கூறி, இரண்டு அபங்கங்களை யெழுதிக்கொடுத்துப் போகச்சொல்ல, அந்தப் பெண்ணணங்கு அங்கு அந்த அபங்கங்களைப் பெற்றுக்கொண்டு, தன்னுடைய விகார குணங்களை மாற்றிக்கொண்டவளாய், ஸ்ரீஹரியைத் தியானஞ் செய்து, உனது மாயமா! அல்லது என்னுடைய கன்மமா! என்னைச் சோதிக்காதே பகவானே! என்று மெய்மறந்து அசைவற்றிருந்தாள். பிறகு தானே தெளிவடைந்து இருப்பிடமேகினாள்.

இதுநிற்க, லோஹோா கிராமத்திலிருந்து சில பக்தஜநங்கள் வந்து, தாஸரைக்கண்டு சேவித்து வணங்கி, ஸ்வாமி! தேவர் முன் ஒருமாதகாலம் அங்கிருந்து, எங்களுக்கெல்லாம் ஞாநமென்னும் அமிர்தந்தன்னை யூட்டிவந்தமையால் அடியோங்கள் அவ்வழிநின்று, பஜனை காலக்ஷேபங்களைத் திநமும் நடாத்திக்கொண்டு வருகின்றோம்; இன்னமொருக்கால் தேவரெழுந்தருளி சிலநாள் வாசம்பண்

ணவேணும் என்று பிரார்த்திக்க, அன்னோர் பிரார்த்தனைக்கு இரங்கியருளின தாஸரும், இராமேசுவரபட்டரையும், தம்பியாகிய கானோபாவையும், பிராமண கெங்காஜியையும், வாணிய சந்தாஜியையுங் கூடப் புறப்பட வைத்துக்கொண்டு, வழிகளிலும்கீர்த்தனை அபங்கங்களைப் பாடிக்கொண்டே லோஹோ கிராமத்துக்கருகில் போய்க்கொண்டிருக்கையில், அவ்வூரில் சாது ஜனங்கள் சுவாமி கோஷ்டியுடனே யெழுந்தருளுவதைத் தெரிந்து, பஜனையுடன் எதிர்கொண்டு வந்து தீர்க்கநமஸ்காரங்கள் செய்து, பகவந்நாம சங்கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டு ஊர்வலம் வந்து, தாஸருக்காக வென்று அலங்காரஞ் செய்துவைத்திருந்த நல்லதோர் மண்டபத்தில் சுவாமிகளையும் மற்ற நால்வரையுங் கொண்டுவந்து சேர்த்து, சற்றுநேரம் பொறுத்து சமாராதநத்துக்கு எழுந்தருளப் பிரார்த்தித்து, சமாராதநம் முடிந்தவுடனே நல்லுபசாரங்களைச் செய்து, இரவானவாறே காலக்ஷேபங்களுக்கு ஆரம்பித்து, மங்களார்த்தியானவுடனே தங்கள்தங்கள் வீடுகளுக்குப் போய், சூரியோதயத்துக் கெழுந்து நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு, வீட்டுக்கு ஒருநாள் யதாசக்தியாகப் பிராமண சந்தர்ப்பணங்கள் முடித்து வைக்கத் தீர்மானித்துக் கொண்டபடியே திநம் ஒவ்வொருவராக சமாராதநட் நடாத்தி, அன்றிரவு, அவர் வீட்டிற்குத்தானே எல்லாரும்போய் காலக்ஷேபம் நடத்துவித்து மகிழ்வடைந்தார்கள். எந்தவீட்டில் காலக்ஷேபம் நடந்தாலும் அந்தவீட்டுக்குத் தவறுமல் ஊர்ஜெனங்களெல்லாரும்போய், சுவாமிகளது காலக்ஷேபங்களில்• ஈடுபட்டு ஆநந்தமிகுந்தவர்களாய் நிர்த்தநஞ்செய்வதும், சுவாமிகள்பாடும்பாட்டுகளுக்குஉகந்தபடி கரதாளங்கள் போடுவதும், பின்பாட்டுகள் பாடுவதுமாய் நடித்துவந்தார்கள். இவர்கள் செய்யும் பஜனை சம்பிரமத்தினெலியானது தேவலோகத்துக்கும் அளாவக்கேட்க அவ்வுலகத்துஉம்பர்களும்,சித்தர்குழாங்களும்ஆகாயவீதியில் வந்துநின்று கண்களார அக்கோலாகலத்தைக் கண்டுமகிழ்ந்து, பக்தசிகாமணியை வாழ்த்துவார்கள்.

இவ்வண்ணம் துக்காராம் ஸ்வாமிகள், தமது கோஷ்டியாருடனே எழுந்தருளி லோஹோகிராமத்தில் அதிககோலாகலங்களைத் தரத்தக்க காலக்ஷேபங்களைத் திநநித்தம் நடாத்திக்கொண்டு வருவதை அவ்வூரில் வளையல்விற்பவன் ஒருவனறிந்து, துக்காவின்மீது பொருமையேற்று, நிந்திதமான வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு திரிவான், யாராவது காலக்ஷேபத்திற்கு ஏன்வருவதில்லையென்று கேட்டால், பகலில்வந்தால் ஜீவனங்கெடும்; இரவில்வந்தால் தூக்கங் கெடும்; அதனல் நோயுண்டாகும்;பிறகு வைத்தியனுக்குப் பொருள்

விரயம் பண்ணவேண்டியதாகும்; அதனால் நான் வருகிறதில்லை; வந்தால் உங்கள் வைணவர் பொருளளிப்பாரா? பகலுமிரவுமாகக் காத்திருந்தால் விடியற்காலை கொப்பரையும் கொஞ்சம் சருக்கரையுங் கொடுக்கிறார்; இதற்காகவா நான் வரவேண்டியது? போபோ பைத்தியக்காரர்களே! என்று அலக்ஷியமாகச் சொல்லுவான்.

இது நிற்க, புனாதேசத்தில் ஒரு பிராமணன் ஜவுளி வியாபாரஞ் செய்து பதினாயிரம்ரூபாய்வரையிலும்நஷ்டப்பட்டுவிட்டு, கடன்காரருடைய வாதை சகிக்காமல், ஆளிந்தியில் ஞானதேவசுவாமிகள் ஸந்நிதானஞ் சேர்ந்து, அந்ந ஆகாரங்களில்லாமல் ஆறுமாதந் தவஞ்செய்துகொண்டிருந்தான். அவனுடைய தவப்பயனுக்கு இரங்கிய ஞானேசுவரர் அவனுடைய சொப்பனத்திற் றோன்றி, நீர் கொண்டிருக்கும் எண்ணம் நிறைவேறும், துக்காவிடம் போம்! என்று பிரசாதிக்கக் கேட்டு விழித்துக்கொண்டு அங்கு நின்றும் பிரயாணப்பட்டு வந்துகொண்டிருக்கையில், துக்காராம் ஸ்வாமிகள் லோஹோகாமி விருப்பதாய்க் கேள்விப்பட்டு, அவ்விடத்திற்குப்போய், பகவற்குண நிஷ்டருடைய ஸ்ரீ பாதங்களில் வீழ்ந்துசேவித்து எழுந்து, பயபக்தி விசுவாசத்துடனே நின்று தான் வர்த்தகஞ் செய்து நஷ்டமடைந்ததும், கடன்காரர்பாதைசகிக்காமல் ஞானேசுவரர்சந்நிதானத்தில்ஆறுமாதந் தவஞ் செய்துகொண் டிருந்ததும், ஞானேசுவர ரிரங்கித் தம்மிடம் போக நியமித்ததும் எல்லாமுரைத்து அங்கேயே அவர் திருவடி சேவை செய்துகொண்டு ஒரு வருஷகாலம் காலக்ஷேபத்தில் ஈடுபட்டுக்கொண் டிருந்தான். ஒருநாள் இந்தப் பிராமணன், ஒரு வருஷகாலம் திருவடி சேவை செய்துகொண்டு வந்தும் திருவுள்ள மிரங்கி நமக்கொன்றும் செய்திலரென் றெண்ணி மநதில் துயருற்று, துக்காராம் ஸ்வாமிகள் முன்னின்று வந்தநஞ்செய்து, ஸ்வாமீ! கடன் என்னும் பாதை உள்ளத்திற்பற்றியது நீங்காமலிருக்கிறது, பணித்தருளவேணும்! என்று பிரார்த்திக்க உவந்த திருவுள்ளத்தவராய் ஸ்வாமிகள் அவ்விடத்திலிருந்த கோஷ்டியாரை நோக்கி, இவர் பொருள் விஷயத்தைப்பற்றி மநோசஞ்சலங்கொண்டு இவ்விடம்வந்திருக்கிறாராகையால், இங்கே நம்முடைய கோஷ்டியின் காலக்ஷேபத்திற்கு வராமல் நம்மேல் நிந்தைகளைச் சொல்லிக்கொண்டு திரிகின்றாரே வளையல் விற்கும் ஜீவாஜி அவரிடம் நீங்களெல்லாரும் போய், இவருடைய கடன் தொகையை யறிவித்து, அவரளிக்குமதை பெற்றுக்கொண்டு வாருங்கள் என்று ஆஞ்ஞாபித்தனுப்ப, அங்கிருந்த பெருந்தேவன் புகழ் போற்றும்பெரியோராகிய தாஸர்குழாம் ஸ்வாமிஉத்திரவின்படிபிராமணரை அழைத்துக்கொண்டு ஜீவாஜி என்னும்பெயரையுடைய வளை

யற்காருடைய வீட்டுக்குப்போய் அவரைக்கண்டு, பிராமணருடைய மனவருத்த மீதென்றும், சுவாமி உம்மைக் கேட்டு வாங்கிக்கொடுக்கச் சொன்னாரென்றுஞ்சொல்லி வருந்தினார்கள். வளையற்காரர் இக்கோஷ்டியாரைப் பார்த்து, நீங்களித்தனைபேரும் வேலையற்றுத் திரிகின்றீர்கள். யாரோ ஒரு சோம்பேறிப் பிராமணனைக் கூட்டிக்கொண்டு வந்தீர்கள். உங்கள் துக்காராம் எப்படி தந்தை சம்பாதித்து வைத்த பொருளைக் காப்பாற்றுமல் அழித்தாரோ அப்படியே இவனு மழித்துத் தலைமேல் கையை வைத்துக்கொண்டு அழுகின்றான். இந்தச் சோம்பேறிகளுடைய பேச்சைக்கேட்டுநீங்களுங்கூட ஒன்றாய்ச்சேர்ந்து வந்து ஏழையாகிய என்னிட மிரக்கின்றீர்கள்; என்னை யேளனம் பண்ண வந்ததாகக் காணுகிறது; நீங்கள் ஒவ்வொருவரும் லக்ஷாதிகாரிகளாக இருக்கின்றீர்கள் ; இந்தப் பதினாயிரம் பொன் உங்களுக்கொரு லக்ஷியமில்லை; துருண மாத்திரம், நீங்கள் முனைந்து பேருக்குக் கொஞ்ச கொஞ்சம் போட்டுக் கொண்டாலும் இந்தப் பிராமணனுடைய வருத்தம் நீங்கிவிடும் ; இப்படிச் செய்யாமல், ஏழையாகிய என்னிடம் திரவியாதிகாரிகளாகிய நீங்களே வந்து யாசகங்கேட்பது உங்கள் கௌரவத்துக்குக் குறைவு என்று மன வருத்தத்துடன் சொல்லி வீட்டிற்குள் நுழைந்து, பெட்டியிலிருந்த இரண்டு செம்பு துட்டுகளைக் கொண்டுவந்து வந்தவர்களிடங் கொடுத்தார். அவர்களுமந்த இரண்டு துட்டுகளை வாங்கிக்கொண்டு துக்காராம் ஸ்வாமிகளிடம்வந்து, அவ்விடம் நடந்த சமாசாரங்களைச்சொல்லி துட்டுகளைக் கொடுக்கவே, ஸ்வாமிகள் அந்தத் துட்டுகளைத் தன்கைகளில் வாங்கிக்கொண்டு உரைத்தார்; பத்தரை மாற்றுத் தங்கமாய் உரைப்பட்டது. அதனைக் கூட்டத்தி லிருந்தவர்கள் அனைவருங் கண்டு வியப்புற்று, ஜேஜே விட்டலா! என்று பஜித்து, பகவானுடைய பெருமையையும், அந்த பகவத்குண நிஷ்டராகும் பாகவதச்சிரேஷ்டருடைய திருவிளையாடல்களையுங் கொண்டாடி மகிழ்ந்தனர்கள். சுவாமிகள், தமக்கெதிரில் கைகட்டிக் கொண்டிருக்கும் பிராமணரைக் கூப்பிட்டு அவைகளையவர்கையிலளிக்க, அந்தப்பிராமணன் பெற்றுக்கொண்டு, மனதில் சந்தோஷமற்றவனாய், நமக்கிருக்கும் பதினாயிரம்பொன்கடனுக்கு இதெவ்வளவு? இதற்குத்தானா ஞானேசுவரர் ஸந்நிதியில் ஆறு மாசம் அந்நபானங்கள் இல்லாமல் தவமிருந்ததும், அங்கிருந்து இவரிடம் வந்து ஒரு வருஷகாலந் தொண்டுசெய்ததும்? நாம் கொடுத்து வைத்தது இவ்வளவுதான்; கன்மி எங்கேகினாலுந் தன் கன்மத்தளவல்லால் பயன் பெறான்; தாதாக்களிடஞ் சென்றாலும் இவனது கருமம் முன்னே போய் குறுக்கே நிற்கும்; இந்த ஸ்வாமிகளுக்கு கோடீ

சுவரர்களெல்லாரும் பிரத்தியக்ஷமா யிருக்கிறார்கள்; அவர்களில் ஒருவருக்கு நியமித்தாலும் பதினாயிர மல்ல லக்ஷமேனும் கொடுப்பார்கள்; நமது கருமம் அவர் திருவுள்ளத்தைத் தடுத்துக்கொண் டிருப்பதால் நமக்குச் சுகங் கிடைக்கவில்லை. என்னைப்போன்ற தரித்திரனாகிய வளையற்காரனை யாசிக்கச் செய்தார். அவன் பக்தர்களை யாசித்ததில் இரண்டு துட்டுகளையாவது கொடுத்தான்; நானோ சுதாவில் ஒருவனை யாசித்தால் ஒரு பலகரையுங் கொடான்; இப்பேர்ப்பட்டவனை யாசிக்கச்செய்ததில் என்னபயன்? இதற்கென்ன செய்யலாம்? எவ்விதமாய் நம் கடன்பாதை தீரும்? என்று, உள்ளுக்குள்ளாகவே சோர்வடைந்து அசைவற நிற்கக் கண்ட சுவாமி, நீ நிற்குங் காரணமேது? என்று வினவலும், பிராமணன் வாயைப்பொத்திக்கொண்டு, சுவாமி! அடியேன் வழிநடக்க வேண்டியவனாதலால் கையிலொரு பாத்திரமேனு மில்லையே யென்றெண்ணுகிறே னென்ன, சுவாமிகள், இவ்விடம் பாத்திரமேது இல்லையே என்றுரைக்க, பிராமணனும் அங்கு பூசைமாடத்திலிருந்தபஞ்சபாத்திரத்தைக்காட்ட, சுவாமிகள் அந்தப்பாத்திரத்தை அந்தப்பிராமணனையேவிட்டு எடுக்கவைத்துத் தம்கையில்வாங்கி, பக்கத்திலிருந்த தொரு கல்லின் மீதுஉரைத்தருள, அதுவுந் தங்கமாய்விட்டு இருந்தமையைப் பிராமணனும் மற்றவர்களுங் கண்காட்சியாகக் கண்டு, இதுவென்ன அற்புதம்? இவருடைய திருக்கைகளே ஸ்பரிசவேதி யாகாநின்றது; இவர் கைகளால் தீண்டிக்கொடுக்கும் வஸ்துக்களெல்லாம் உடனே தங்கமாய்க் காணுகின்றன! இவர் நம்மைப்போன்றே ஜெபதபங்கள் செய்தும், உண்டும், உடுத்தும், உறங்கியும், பெண்டு பிள்ளைகளோடு கூடியும் இருக்கின்றார்; இப்பேர்ப்பட்டவர் நடத்தும் நடவடிக்கைகளெல்லாம் ஒன்றுக்கொன்று அற்புதமாகவே யிருக்கின்றன; ஹரி ஹரீ! இந்தப் பிரபாவம் விள்ளவில்லை; பகவத் தாஸர்களுடைய கீர்த்திகளைச் சொல்ல வேதங்களாலும் முடியாதென்னுமது இப்போது பிரத்தியக்ஷ அநுபவமாகக் காணுகிறோம்! என்று ஆநந்தத்தில் ஆழ்ந்தவர்களாய், தங்கள் தங்கள் சிரங்களின்மீது கைகளைக் கூப்பித் தொழுது கொண்டாடினார்கள்.

அதன்பிறகு, தமக்கெதிரில் குதூகலப்பட்டு நிற்கும் பிராமணர் கையில் துக்காராம் ஸ்வாமிகள் அந்தப் பாத்திரத்தையுங் கொடுக்க, அதைச் சந்தோஷத்துடன் இரண்டு கைகளாலும் வாங்கிக்கொண்டு, அதனைப் பார்த்துப்பார்த்து என்ன யோசிக்கின்றாரெனில்:—இந்தத் தங்கப்பாத்திரமும் தங்கதுட்டுகளும் ஸ்பரிசவேதையையன்றி வேறல்ல; இவைகளைக் கொண்டுபோய் வீட்டில் பத்திரப்படுத்தி வைத்

துக்கொண்டு, ஒருமணங்கு தாம்பிரம்வாங்கி உருக்கி, அதன் உருக்குமுகத்தில் இவ்வேதையில் கடுகளவு செலுத்தினால் அவ்வெல்லாத் தாம்பிரமும் தங்கமாய்விடும்; இப்பேர்ப்பட்ட வேதையை நமக்குக் கொடுத்திருக்க இதைநாம் யோசியாமல், சொல்பப் பிரயோஜனத்தை யளித்தாரென்று நம்முடையமூடத்தனத்தால்வீணெண்ணங்கொள்ளலாயினோம். ஒருவருஷகாலம் அருமைப் புருஷருக்குத் தொண்டு செய்துகொண்டிருந்தும் நம்முடைய தீயவினையானது அவர் திருவுள்ளத்தின் எண்ணத்தைத் தெரிவியாமல் மனதைச்சோர்வுறச்செய்தது. இந்த நம்முடைய கருமத்தை யென்னசெய்யலாம்? ஹரி ஹரீ! உலகத்திலுள்ள செல்வவான்களுக்கெல்லாம் மேலான செல்வவானாக நம்மைச் செய்துவைத்த சீறியதாஸருக்கு நம்மாலென்ன கைம்மாறுசெய்யக்கூடும்? என்று தமக்குள்தாமே ஆருமைகொண்டு, வைணவ திலகருடைய திருவடிகளில் வீழ்ந்து சேவித்தெழுந்து விடைபெற்றுக்கொண்டு தன்னுடைய நாட்டிற்குவந்து சேர்ந்து, வீட்டிற்குப்போய் ஒருமணங்கு செம்பு வரவழைத்து, அதனைக் கொல்லுலையில் காய்ச்சியுருக்கி, அதனுருக்குமுகத்தில், முன்தாம் நினைத்தபடியே, துக்காராம் ஸ்வாமிகள் பிரஸாதித்தருளின துட்டுகளிரண்டிலும் ஒன்றிலிருந்து கொஞ்சம் வெட்டிப்போட்டுக் கீழே சாய்க்க அதெல்லாம் உயர்ந்த தங்கமா யிருக்கக்கண்டு மிகுவாநந்தம் அடைந்தவராய், துக்காராமைக்கொண்டாடி, இல்லற வாழ்க்கையை நடாத்திக்கொண்டிருந்தார்.

இங்ஙனிருக்க, இந்த லோஹோகாமிலிருந்த வளையற்காரராகிய ஜீவாஜியானவர், தாமளித்த இரண்டு செல்லாத்துட்டுகளும் வைணவத்தலைவருடைய திருக்கைகளின் ஸ்பரிசமாத்திரத்தாலே வேதையாய்விட்டமையைக் கேட்டு ஆச்சரியமடைந்து, ஹரி ஹரீ! இந்தத் துக்காராம் ஸ்வாமிகளுடைய மகிமைகளை யறியாமல், கருவத்தால் அவரை நிந்தித்துத் திரிந்தேன்; இவ்வூருக்கு அவர்வந்து ஒருவருஷமாகிறது; இந்த ஒருவருஷமாய் அனேகம் பெரியவர்கள் என்னைக் காலக்ஷேபத்திற்கு வரும்படி பலமுறை சொன்னார்கள்; தயாநிதியாகிய தாஸரும் சொல்லியனுப்பினார்; எனது பூருவாகிருகத்தால் உண்டாயிருக்கும் ஆணவ அகங்காரங்களாலும், எனக்குச் சம்பவமான துர்ச்சாவகாசத்தாலும், விவேகமுட்டுகைக்கொத்தவையல்லாத கிரந்தங்களைப்பார்த்த மூடத்தன்மையாலும் நான் அவர்களை லக்ஷியமுறுத்தாதிருந்து கெட்டேன். இப்புண்ணிய புருஷராகிய ஜெகதாசாரியரைத் தொழுது நன்மைபெறாமல்கழுதைகளுக்கு நிகரான மனிதர்களையே நம்பி தீயனானேன். இவ்வொருவருஷகாலம் இவருக்கு

அடிமைசெய்திருந்தால் இவர் கற்றிருக்கும் ஹேமவித்தையைக் கிரகித்திருக்கலாம். இவரிடத்தில் அவ்வருமையான வித்தையுண்டென யானறிந்திருப்பேனாகில் இவருடைய ஊராகியதேஹூகாமுக்கேபோய் இவருக்குவேண்டிய சிசுரூஷைகளைச்செய்து எவ்விதமாவது கற்றே யிருப்பேன். புத்திதெரிந்தநாள் முதல் இன்றளவும் போதைவெறி கொண்டவர்களை மகத்துக்களென்று எண்ணி, வீணில் தேசதேசங்களிலெல்லாந் திரிந்து அவ்வெறியர்களாகிய குடியர்களைத் தேடிக் கொண்டுவந்து வீட்டில் வைத்துக்கொண்டு, நல்லுணவுகளைத்தந்து, அவர்களென்ன அருமையான வஸ்துக்களை கேட்டாலும், எவ்வளவு உயர்ந்தவையானாலும் வாங்கித்தந்து, அவர்கள் மநங்கோணாமல் நடந்து, அவர்கள் சொல்லுகிறபடியெல்லாம் பலவிதபாஷாண வகைகளை வாங்கிவாங்கி இரவும்பகலும் அரைத்து அரைத்துப் புடங்கள்போட்டேன்; ஒருகாசளவு பொன்னையாவது கண்டறியேன்; இப்படிச் செய்தமையால் என்னுடைய செல்வமெல்லாம் புகைந்து நாசமாயிற்று; கண்களும் பாஷாணாதிகளின் புகையால்பஞ்சடையலாச்சுது. என்பணத்தைப் பரித்துண்ண வெளியிலிருந்து வரப்பட்ட மோசக்காரர்களாகியபொய்வேஷதாரிகள், என்னைச் சுவாமி என்றும் பக்தனென்றுங் கொண்டாடினமையை நானும் நமக்கவையொக்கும் என்றும், உலகில் நமக்குயார் நிகராவார் என்றும், நமக்குநாமே சமமான மெய்பக்தர் என்னும் துர்மாநம் மதித்து, அகங்காரம் அதிகரிக்கப் பட்டவனாய், உத்தமர்களையெல்லாம் வைதுகொண்டிருந்தேன்; அதனால் என்கைபோருள் கொள்ளையானது மன்றிக்கே, நல்லோர்களுடைய சாபமும், தரித்திரமும் வாய்க்கபெற்றேன்; இனியும் அவ்வாறு இருந்ததுங்கெடாமல் காருண்ணியமூர்த்தியா யெழுந்தருளியிருக்கும் ஸ்வாமிகளுடைய திருவடிகளைத் தஞ்சமெனப் பற்றிக் கொண்டு எனது தீவினைகளைப் போக்கிக்கொள்ளுவேன் என்று தீர்க்கபுத்தி நினைத்து, உடனே துக்காராம் ஸ்வாமிகளுடைய திருவடிகளில்வந்து விழுந்துசேவித்து, தேவா! என்னை யடிமைகொள்ளும் மஹாநுபாவா! என்னுடைய குற்றங்களை மன்னித்து குணமுண்டாகச்செய்யும்! என்று பிரார்த்தித்து, அன்றுமுதல்வைஷ்ணவவாக்கிரகண்ணியருக்கொருதொண்டராய் தொண்டேசெய்துகொண்டிருந்து, இரவுகளில் நடக்கும் காலக்ஷேபங்களில் ஈடுபட்டுத் தாமும் கீர்த்தனைகளைப்பாடி மநமகிழ்ச்சிகொண்டு, எந்தவகையில் ஸ்வாமி திருவுள்ளமிரங்கி ஸ்பரிசவேதிசெய்யு மார்க்கம் நமக்குக் காட்டியருளுவாரோ என்று உபசாரங்களைச் செய்துகொண்டு மிகு நைச்சியராயிருந்தார்.

இப்படியிருக்க, புனுவிலிருந்து ஒருசௌகாருடைய குமஸ்தாவானவன் முப்பத்தாறு பொதிமாடுகளை யேட்டிக்கொண்டு, ஈயம் வாங்கிக்கொண்டு போவதற்காக லோஹோகாமுக்குவந்து, வளையற்கார ஜீவாஜியைக்கண்டு தரகாளியாக ஏற்படுத்திக்கொண்டு, அவர் முன்னிலையில் பலவர்த்தகர்களிடத்திலும் வேண்டிய அளவு ஈயம் வாங்கி, தம்முடைய முப்பத்தாறு மாடுகளின்மீதிலுமேற்றி, அந்தந்த வர்த்தகர்கள் கொடுத்த ஈயத்துக்கேற்ற விலைகளையும், ஜீவாஜியினுடைய தரகுக்கொடுத்துவிட்டு, மாடுகளை யோட்டிக்கொண்டு புனுவுக்குப்போய். தம்முடைய சௌகாரிடம் அந்தப்பொதிகளை யொப்பிக்க, சௌகாரும் பொதிகளை யவிழ்த்துப் பார்க்குமளவில் அதெல்லாம் சுத்த பால்வெள்ளியா யிருக்கக்கண்டு, தன் குமஸ்தாவையழைத்து, நான் ஈயம் கரீதிபண்ணி வாங்கிவரச் சொன்னால் வெள்ளியைவாங்கிக் கொண்டுவந்தனையே யென்று கோபிக்க, அவனுந் திகிலடைந்து, நான்வாங்கினது ஈயமேயன்றி வெள்ளியன்று; என்னமோ இது மாயமாயிருக்கிறது! என்று சொல்ல, சௌகார் அந்த குமஸ்தாவை அழைத்து,வர்த்தகர்கள்தெரியாமல்வெள்ளியை யீயமென்று கொடுத்துவிட்டார்கள்; நமக்கிந்த சொத்துவேண்டாம்; நம்மைப்போன்ற வர்த்தகர் நஷ்டம் அடைந்துவிடுவார்; இப்போதே கொண்டுபோய், யாராரிடம் எவ்வளவு எவ்வளவு வாங்கினையோ அவ்வவர்க்குத் தசகபடி செலுத்திவிட்டு ஈயமே வாங்கிக்கொண்டுவாரும் என்று, வெள்ளிகளை மாடுகளின்மேல் பொதிகளிலேற்றி யனுப்பினான். குமஸ்தாவும், பொதிமாடுகளை யோட்டிக்கொண்டு திரும்ப, லோஹோகாமுக்குவந்து ஜீவாஜியைக்கண்டு, நீர் ஈயமென்று வாங்கிக்கொடுத்தவை வெள்ளியாயிருக்கிறது; என்னுடைய சௌகார் வர்த்தகர் நஷ்டமடைவதற்காக என்மீது ரொம்பவுங் கோபித்துகொண்டார்; ஈயமே வேண்டுமல்லது வெள்ளிவேண்டாமென்று திருப்பிவிட்டார். இவைகளை நீயாராரிடத்திலிருந்து வாங்கித் தந்தனையோ அவர்களுக்கு ஒப்பித்துவிட்டு, பதிலுக்கு ஈயமே வாங்கிக்கொடுஎன்றான். இம்மொழிகளைக்கேட்ட ஜீவாஜி ஆச்சரியங்கொண்டு, நான வாங்கிக்கொடுத்தது ஈயமேயன்றி வெள்ளியன்றென நான் நன்கறிவேன்; நீர்சொல்வது விந்தையாயிராநின்றது என்று பொதிகளைச் சோதிக்கையில் வெள்ளியாகவே யிருக்கக்கண்டு, வாங்கிய வர்த்தகர்களிடம் சென்றுகேட்க அவர்களும், நாங்களீயமே தந்தோமன்றி வெள்ளியைக் கொடுக்கவில்லை யென்று சொல்லிவிடக்கேட்டு மயக்கமடைந்து, தமதாசாரிய மூர்த்தியாகிய துக்காராம் ஸ்வாமிகளிடம் வந்து நடந்த சங்கதிகள்யாவும் விண்ணப்பம்பண்ண, சுவாமிகளும்

புன்னகைகொண்டு, அந்தவெள்ளி உன்னுடையசொத்து ஆகின்றது என்றுரைக்கக்கேட்டு ஜீவாஜி, ஸ்வாமியினுடைய திருவடிகளில் வீழ்ந்து சேவித்துநின்று ஸ்வாமீ! பொன் - நிலம் - மாதர் என்னும் மூன்றாசை இனி ஜென்மஜென்மாந்தரங்களில் வரவொட்டாமல் அறத் துறந்தேன்; தங்கள் திருவடிபெற விரும்பினேன்; ஆதுவல்லால் தஞ்சம் அடியேனுக்கு வேறில்லை; அடியேனை இவ்வாசையைக்காட்டி கைசோரவிடாதீர் கருணையாளரே! என்று அடிக்கடிவீழ்ந்து சேவிப்பவராயினர். சுவாமி ஜீவாஜயைப்பார்த்து. தானாகவந்ததை விலக்க வேண்டாம்; திரவியம் வந்ததால் கெடுதி சம்பவிக்காது; உன்னை அதென்னசெய்யும்? அதனைப் பெற்றுக்கொண்டு சத்விஷயத்தில் செலவிடு என்று வேண்டிய புத்திகளைச்சொல்ல,அவரும் அவைகளைச் சிரசாவகித்துக்கொண்டுபோய் வெள்ளிப்பொதிகள் முப்பத்தாரையுந் தன்வீட்டிலிறக்கிக்கொண்டு, அவற்றிற்கு ஈயம்வாங்கி பதில்செய்து அனுப்பிவிட்டு, அவ்வுயர்ந்த வெள்ளியை மாறிப்பணமாக்கி அந்தவூரில் பாடைக்கருகில் நந்தவநமும் அதில் நடபாவியும் உண்டாக்கி, அதின் ஜலம் எல்லாருக்கும் உபயோகமாகச்செய்து, பிராமணருக்கு எப்போதும் சமாராதநமும் தேசாந்தரிகளுக்குப் பிரஸாதமும் நடத்தி, அதெப்போதும் உண்டாவதற்குத்தக்க ஏற்பாடுகளை யேற்படுத்தி, மற்றுமுண்டான சற்கைங்கரியங்களுக்கு நாளாவட்டத்தில் விநியோகப்படுத்திக்கொண்டு, ஆசாரிய பக்திமேலிட என்றும் வைணவத்தலைவருடைய அருகிலிருந்துகொண்டே வேண்டிய தொண்டுகளைச் செய்துகொண்டுவந்தார்.

இவரிப்படி தாஸருக்குச் சதாதொண்டுசெய்துகொண்டு காலங்கடத்தி வராநிற்கையில் இந்த வளையற்கார ஜீவாஜியினுடைய மனைவியானவள் துக்கா இவ்வூருக்குவந்து சேர்ந்தபின் தன்கணவனை அடிமையாக்கிக்கொண்டு,இரவிலும் வீட்டுக்குவரவொட்டாமல், ஏங்நேரமுந் தனக்குத்தொண்டுசெய்தபடியே வைத்துக்கெடுக்கிறான் என்று நானாதுர்பாஷைகளாடி. வைத்துவர, ஒருநாளடைவிலே தமோகுணம் அதிகரிக்கப்பட்டவளாய், கோபமீறி, இந்தமாநக்கேடனை யென்னவைதாலும் நங்கணவனை விட்டுக்கு அனுப்புகிறதேயில்லை, இவனைக் கொன்றுவிட்டால் நம்நாயகன் நம்மருகிலேயேயிருப்பார் என்கிற துரெண்ணங்கொண்டு, விடியற்காலை பஜனை காலக்ஷேபத்தில் மங்களார்த்தியானவுடனே மற்றவர்களெல்லாரும் நித்திரையில் இருக்குந்தருணத்தில், ஸ்ரீராமநாமத்தைப் பாராயணஞ்செய்துகொண்டிருந்த தாஸருக்கருகில் தனியேபோய் வீழ்ந்து சேவிதது, மிகவும் பயபக்தியுடையவள்போல் நடைகாட்டி, அடியாள் வளையல்காரருடைய பெண்

ஜாதி, தேவர் இவ்வூருக்கு வந்து, தைலஸ்நாந மில்லாமல் நெடுநாளா யிருக்கின்றீர். அடியேன் தேவர்க்கு அபிஷேகஞ் செய்து வைத்து, ஒருவேளை தனியே பிரசாரம் பரிமாறவேண்டுமென்று ஆவல்கொண்டவளாகின்றேன். அடியாளுடைய பிரார்த்தனையை நாளை விடியோறைத் தலைக்கட்டி யருளவேண்டும் என்று பிரார்த்திக்க, ஸ்வாமியு மிரங்கி, நாளைய திநம்பிராதக்காலத்தில் வருகிறேனென்று போகவிட, அக்கொடியவளும் தாஸரைப்பிக்கொண்டமைக்குச் சாலமநமகிழ்ந்து, நமதெண்ணம் நிறைவேறியதென்று மறுநாள் அதிகாலை நான்கு கொப்பரைகளில் வெகுசூடாக ஜலங் காய்த்துவைத்து, அறுசுவைகளோடுகூடிய உண்டியுஞ்சித்தப்படுத்தி, அவ்வெல்லாவற்றிலும் பாஷாணங் கலந்து வைத்து, எண்ணெயிலும் பாஷாணஞ் சேர்த்துக் காய்ச்சி வைத்து எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஸ்வாமிகள் அதிகாலையில் மங்களார்த்தியானவுடனே யாருக்குஞ் சொல்லாமல் தன்னந்தனியராய்ப் பிரயாணப்பட்டு இவள் வீடடைய, இவ்வஞ்சகியும், மிகு ஆவலோடு தொழுது, எண்ணெயைக் கொண்டுவந்து வைத்து, வெகு நயமான வார்த்தைகள் பேசி, பீடமொன்று போட்டு, அதின் மீதில் உட்காரவைத்து, தன் கைகளால் தைலக்காப்புசெய்து, அரைப்புதேய்த்து, சூடாயுள்ள அந்நான்குகொப்பரை நீரையும் ஓய்விலாமல் பெய்துவர, ஸ்வாமிகளும் ஒன்றுஞ்சொல்லாமல், அக்கொதிப்புக்கு, ஹரி ஹரி! பண்டரீநாத! பரமதயாளா! என்று நாமஸ்வரணை செய்துக்கொண்டிருந்து, ஜலமெல்லாமாட்டி முடிந்தபின் இக்கொடியாள் ஈரத்தையுலர்த்தி, வஸ்திரம்உடுத்துக்கொள்ள விடுத்து, பூசைவிதியும் முடிந்தபின், பீடமிட்டு உட்காரச்செய்து, அவ்வந்நத்தையிட, தாஸரும் திருநாமோச்சாரணத்துடனே வைத்த அறுசுவையோடுகூடின அந்நமுண்டு, நீரருந்தி யெழுந்து கால்கைகளைச் சோதித்துக்கொண்டு, சந்தந-புஷ்ப-தாம்பூலங்களைப் பெற்றுக்கொண்டு தம்ம ஸ்தாநத்துக்கெழுந்தருளிவிட்டார்.

இக்கொடும்பாதகி, தான் தைலக்காப்பு தேய்க்கும்போதும், அந்நம் பரிமாறும்போதும் அதிக ஆவலுடையவளாய் ஊழியஞ் செய்துகொண்டிருந்தும் ஸ்வாமி எழுந்தருளும்போது இன்னுஞ் சாகவில்லையே என்கிற குரூரமாத்திரம் உடையவளா யிருந்தாள். ஸ்வாமி தலைவாசல் நீங்கி வெளியே புறப்பட்டவுடனே இவளுடைய தேகத்தில் நடுக்கமுண்டாகி, பின் சற்றுநேரத்துக்குள்ளாக பாதாதி கேசாந்தபரியந்தம் வீங்கி வெடிப்புகள்கண்டு. அவ்வெடிப்புகளிலிருந்து சீழும் இரத்தமும் குமிழிட்டுக்கொண்டு வடிந்து, துர்க்கந்த நாற்றமுண்டாய், அக்கம்பக்கத்து வீட்டாருக்கும், வழியாரப் போகு

மவர்களுக்கும் வீச, அவர்களெல்லாருஞ் சகிக்காமல் அசங்கியப்பட்டுப் பேசுவதை தானே கேட்டு, நம்ம வினை நம்மையே சூழ்ந்தது. மகத்துவ புருஷருக்கு விஷங்கலந்த அந்நமிட்டோம்; அவ்விஷம் நம்முடைய தேகத்தையே சுவாலைகொண்டு வீசித் தீங்கு செய்யாநின்றது. செய்யத்தகாத தீமைகள்செய்ய பகவற்புகழைத்தும் ஓர் பெரியவர் பாலெண்ணினதால் பகவான் நம்மையே கொல்லுமாறு இந்தப் பெரிய வியாதியை உடனே யுண்டாக்கி, நரகத்திலுழன்று, ஊரெல்லாங் காறியுமிழ சிரமைபட வைத்தான். இந்நாற்றம் எனக்கே சகிக்கக்கூடவில்லையே மற்றவர்கள் எப்படிச் சகிப்பார்கள்? என்று தன்னையே வெறுத்துக்கொண்டு, வீட்டிலோர் மூலையில் போர்வை போர்த்துக்கொண்டு, தன் நாயகனுக்காக எதிர்பார்த்துக்கொண்டு துக்காக்கிராந்தையாய்ப் படுத்திருந்தாள். வளையற்காரராகிய ஜீவாஜி, இராத்திரி முழுதும் பஜனை காலக்ஷேபத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்து, பொழுது விடிந்தவுடனே நந்தவனத்துக்குப்போய், அங்கிருந்த அலுவல்களை முடித்துக்கொண்டு, வீட்டிற்குப்போய் வருவோமென்று போய் வீட்டில் நுழைகையில் வீதிவாசலில்தானே கொடிய துர்க்கந்தம் வீசக் கண்டு, பயந்தவனாய், உள்ளே நுழைந்து பார்க்கையில் தம் மனையாள் அகப்படாமல், ஒரு கொம்பில் இரவு தரித்திருந்த சுவாமியினுடைய மாலையிருக்கப் பார்த்து, மறுபடியும் பார்க்கையில் ஒரு மூலையில் சயனித்துக்கொண்டிருக்கக் கண்டு, மூக்கைப் பிடித்துக்கொண்டே அவள் சமீபத்திற்குப் போய் விசாரிக்க, அவளும் ஆதியில் தான்மாச்சரியங்கொண்டதுமுதல் ஸ்வாமிக்குத்தான்செய்ததீங்கும் தனக்குவந்ததிண்ணமு மீறுகநடந்தஸவிஸ்தாரங்களையெல்லாஞ் சொல்ல, அவற்றைக் கேட்டுச் சோர்வுற்றவனாய்த் திகைத்து நின்று, அடி பாபி! என்னகாரியஞ் செய்தனை? ஸ்ரீ ஹரிவிட்டலரே ஜகதுத்தாரணஞ் செய்ய ஸ்தூல ரூபங்கொண்டு இங்கெல்லாம் எழுந்தருளி திருவிளையாடல்களைச்செய்துவரும்புண்ணியமேம்பட்டாருக்கேவிஷமிட்டாய்! அக் கருணைசீலரைக் கொல்லு நிமித்தம் நீயிட்ட விஷமே உன்னைப்பற்றிக் கொல்ல யத்தனித்துக்கொண்டிருக்கிறது; நீ பிறருக்குச் செய்த தீமை உனக்கே தீமையாயிற்று; இவ்விஷத்தின் கொடுமை நீங்கமாட்டாது; மணி - மந்திர - ஔஷதங்களில் ஒன்றாலுந் தீராது; எந்த ஜென்ம மெடுத்தாலும் அந்தந்த ஜென்மங்களிலுந் தொடர்ந்தேவரும்; உன்னை அம்மகான் என்செய்தாரென்று அவருக்குத் தீமைசெய்ய நினைத்தாய்? உன்னுடைய காமத்தைத் தணிப்பிப்பவன் நானாகவிருக்க வெளியாரைத் தூஷிப்பதால் என்ன பயன்? ஜென்ம ஜென்மாந்திரங்களுக்காக இந்த ஜென்மத்திலேயே நோற்று,

பாபங்களை மூட்டை கட்டிக்கொண்டு வேறு பிறப்பிலும் புருஷனை யிழக்கும்வகை செய்துகொண்டனை யல்லால் வேறு பயன் கண்டறியாய்; தெய்வசாக்ஷியாக உன்னை யான் மனைவியென்று ஏற்படுத்திக் கொண்ட தோஷத்தாலே இப்போது உன்னோடு சகிக்காத துர்க்கந்தத்திலிருந்து சகித்துக்கொண்டு வார்த்தை யாடுகிறேன்; இல்லையாகில் உன் முகத்திலேயே முழிக்கக் கூடாது; கொடிய பாபி, உன்னைப் பார்த்தாலே உன்னுடைய தோஷ மெனக்குஞ் சேரும்; இனியாவது நல்லறிவுகொண்டு, பரம தயாளுவாகிய சாக்ஷாத் ஞானதாசாரிய ஸ்வாமி துக்காராமருடைய திருவடிகளை மநதில் தியாநம் பண்ணிக்கொண்டிரு. உன்னுடைய தீவினைகளெல்லாம் நிவர்த்தியாய் சுகப்படுவாய் என்று புத்திமதிகளைச் சொல்லி அவளை யங்குதானே விட்டுத் தனியராய், ஸ்வாமிகளிருக்கும் மண்டபத்திற்குவந்து, சுவாமிகளுக்குத் தீர்க்க நமஸ்காரஞ் செய்து, எழுந்து, கைகளைக் கட்டிக் கொண்டு எதிரில் நின்று, தன் மனைவி பூருவத்தில் கொண்டிருந்த எண்ணங்களும், அவ்வெண்ணங்களால் சுவாமிக்குச் செய்த தீங்கும், அதனால் அவளநுபவிக்கும் விபத்துகளும் விளங்கவுரைத்து, க்ஷமித்தருளும்படி பிரார்த்திக்கவும், மெய்யடியார் அப் பிரார்த்தனைகளுக் கொன்றும் பதில் சொல்லாதிருக்க, ஸ்வாமிகளுக்குப் பிற்புறத்தில் கைகளைக் கட்டிக்கொண்டு நின்றிருந்த பிராமணகுல பண்டிதசிரோமணியாகிய ராமேசுவாபட்டர் ஜீவாஜியைப்பார்த்து, சுவாமிகளுக்கு அபிஷேகஞ் செய்த விடத்திலிருக்கும் மண்ணை வாறி உன்னுடைய மனைவியின் தேகமெங்கும் பூசுவாயாகில் அவள் செய்த தீமைகளால் அவளுக்கே வந்த துன்பங்கள் நீங்கி சௌக்கியமாய் விடும் என்று சொல்லக்கேட்டு அங்கு நின்றும் வீட்டிற்கு வந்து, அதின்படியே அபிஷேகமான இடத்திலிருந்த மண்ணை வாரி அவள் தேகமெங்குந் தடவினவுடன் வியாதிகள் நீங்கிப் பழைமையான வுடம்புபோலிருந்தது. அப்படி யிருக்கக்கண்ட அவ்விருவரும், ஆருக்களிப்படைந்து, ஜேஜே விட்டலா! என்று நாமசங்கீர்த்தநங்கள் பண்ணி ஆநந்தம் நிறைந்தவர்களாய், சுவாமிகளைச் சேவிக்க ஆவல் மிகுந்தவர்களாய், மறுபடியும் உடனே வீட்டைவிட்டுப் பிரயாணப்பட்டு மண்டபத்திற் கேகும்போது ஊராரில் ஆண்பெண் ணடங்கலும் எல்லாமிவர்களைப் பார்த்து, இதுவென்ன அதிசயம்? இந்த வளையல்காரன் மனைவி துக்காராம் ஸ்வாமிகளை நேற்றைய வரையிலுந் தூஷித்துக்கொண்டிருந்தாள்; நாமே கேட்டிருக்கிறோம்; இப்படிக்கிருக்க இன்றையதினம் தன் நாயகனுடனே கூடி. அவர் திருவடியே தஞ்சமென்று வெகு உச்சாகத்துடனே இருகரங்களையுஞ் சிரமேல் கூப்பிக் கொண்டு சங்

கோசமில்லாமல் போகாநின்றாள்! என்று அதிசயித்து, தாங்களுங் கூட அவர்களோடுநாமசங்கீர்த்தனங்களைப் பண்ணிக்கொண்டுபோகா நிற்கையில், வளையல்காரன் மனைவி மண்டபத்துக்குச் சமீபத்தில் போய்க்கொண் டிருந்தவள் மிகு ஆவலோடு எல்லாரினும் முன்னாக வோடி தாஸருடைய திருவடிகளைப் பற்றிக்கொண்டு, தேவா! அடியாள் செய்த பிழைகளைப் பொறுத்தருளி நின்னுடைய பக்தகுழாத்துள் ஒருத்தியாகச் செய்து காப்பாற்றியருள வேண்டும்; யானோ தேவருடைய புதல்வி; என்னுடைய நாயகரைத் திருவடிகட்கு அடிமைகொண்டதுபோலே அடியேனையுங் கொண்டருள்வது உமது கடமை; தெரியாப் பேதையானதால் தேவர்க்குத் தீங்கு செய்ய நினைத்தேன்; திருவடிகளில் அபசாரப்பட்டு விட்டேன்; ஜென்ம ஜென்மாந்தரங்களிலும் விடாது தேவர்பால் பட்ட அபசாரம்;அவைகளை யெல்லாம் மன்னித் தாட்கொள்ள தேவர் திருவடி யல்லால் கதி யில்லையெனக் கண்டுவந்து சரண் புகுந்தேன்; இரங்கியருள வேண்டும் எம்மிறையே! என்று பிரார்த்தித்தவளாய் நின் தாஸரால் க்ஷமிக்கப் பெற்று, அந்த திவ்விய திருப்பந்தலி விருந்துகொண்டே சுத்தி செய்தல், மெழுகல், கோலங்க ளிடுதல் முதலிய கைங்கரியங்களை யிடைவிடாது செய்துகொண்டு வந்தனள்.

இதுநிற்க, துக்காராம் ஸ்வாமிகள் இம் மண்ணுலகத்தில் திருவவதாரம்பண்ணி, அநந்தமான அற்புத திருவிளையாடல்களைச்செய்து வருமதின் அதிசய மான்மியங்கள் தேசதேசமெங்கும் பரவி நிற்கையில் புனாதேசத்தை யாசாண்டுவரும் சிவாஜி மகாராஜா கேட்டு, துக்காராம் நடத்துகிற அற்புதங்கள் ஒவ்வொன்றும் அதிசயமாக இருக்கிறதென்று ஆச்சரியப்பட்டு, நாளுக்கு நாள் அவர்மீதில் பிரேமை யதிகரித்துக்கொண்டேவர, ஒருநாளளவில்,துக்காராம்ஸ்வாமிகளைச் சேவித்து அடிமையாகவேண்டுமென்று மநதில் தீர்மாநித்துக்கொண்டவராய், காருபாரியையழைத்து, இப்போதுலோஹோகாமில்வாசம் பண்ணிக்கொண்டிருக்கும் துக்காராம் ஸ்வாமிகளுக்குக் காகிதமொன்று தருகிறேன்; அதனைப் பெற்றுக்கொண்டு, சில காலாள்முதலான சிப்பந்திகளுடனே ஒரு பல்லக்கையும் எடுப்பித்துக்கொண்டு, நீயும் தகுந்ததொரு குதிரையை யலங்கரித்து அதிலேறிக்கொண்டு போய் ஸ்வாமிகளைக் கண்டு வணங்கி, பயபக்தி மரியாதைகளுடனே நானளிக்கும் விண்ணப்பத்தை அவருக்குச் சமர்ப்பித்து, அவரைப் பல்லாக்கிலேற்றிக்கொண்டுஅழைத்துவாருமென்றுஉத்தரவுசெய்து, விண்ணப்பமொன்று எழுதிக்கொடுத்தனர். காருபாரியும் மகாராஜாவின் உத்தரவுபடியே சேனை முதலியவற்றோடு பிரயாணமாகி, லோ

ஹோகாமுக்குவந்து, தக்கதோரிடத்தில் தண்டிறங்கி, காருபாரிமாத் திரந்தனியனாய் அரசன்கொடுத்தவிண்ணப்பத்தையேந்திக்கொண்டு, ஸ்வாமிக ளிருக்குமிடத்தை விசாரித்துககொண்டுவந்து கண்டுசேவித்து, அவ்விண்ணப்பத்தைக் கொடுக்க, ஸ்வாமி அதனைக் கைகளால் வாங்கிக்கொண்டு பிரித்துப் படித்துப் பார்த்து, ஹரி ஹரி! பண்டரீ ராயா! இராஜபோகத்தைப் பன்றியின் மலத்துக்கொப்பென்று எண்ணியிருக்கும் அடியேனைப் பரிக்ஷிக்கவா இராஜ னிடத்திலிருந்து என்னைவர நிருபம் விடுவித்தனை! என்னையழைத்துக்கொண்டுபோகப் பல்லாக்கும் சேனையும் வந்திருக்கின்றதே! சகலமான ராஜர்களும் எனக்கு நீயாயிருக்க வேறொரு ராஜா எனக்குண்டோ? உன்னுடைய பேட்டியே யெனக்குத் தஞ்சமாயிருக்க வேறே ராஜபேட்டியும் எனக்கு வேண்டுமோ? எதுக்காக நான் ராஜனை பேட்டி காணுவது? டம்பதர்ப்பங்களைக் கொண்டு அழிவதற்கா? அல்லது, இராஜனால் வந்தநமஸ்காரங்களைக் கொண்டு அத்தால் கருவமிகுத்துக் கெடுவதற்கா? மற்றெதற்கு? சகலமானஎன்னுடைய அகங்கார விருத்திகளைஉனது திருவடிகளுக்கே அர்ப்பிதம் பண்ணிவிட்டவன் ஆகின்றேன்; இனியும் அவற்றை யேற்றுக்கொண்டழிய என்னைப் பிரபலப்படுத்தாமல், உனது தாஸர்களுக்கே கீழ்ப்படிந்திருக்கச் செய்துவை ஸ்ரீதரா! என்று தொழுது, இரண்டு அபங்கங்களை யெழுதி காருபாரியினிடமளித்து, நீ மாத்திரம் குதிரையின்மீதில் ஏறிக்கொண்டு வெகுவேகமாய்ப்போய் இக்கடிதத்தை உனது அரசனிடங்கொடு என்றுரைக்க, காருபாரியானவன் ஸ்வாமியை நோக்கி, ஸ்வாமி! அடியேன் ஏறிக்கொண்டுவந்த குதிரை மிகு துர்மார்க்கமானது; வழியில் கிரமமாக நடக்கிலது; இடக்குகளெல்லாம் பண்ணுகிறது என்று சொல்ல, ஸ்வாமியும் அந்தக் குதிரையினிடம் வந்து நின்று, தமது ஹஸ்தத்தால் அதின் வதநத்தைத் தடவிக்கொடுத்துப் போகவிட அந்தக் குதிரை மெத்தவும் சாந்தமுடையதாகி, காருபாரியை யேற்றிக்கொண்டுபோய் தன்னரசனுடைய முன்பாகவிட்டது. காருபாரியும் கீழே யிறங்கி, இராஜனுக்கு வந்தநங்கள் செய்து ஸ்ரீமுகத்தைக் கொடுத்து நடந்த விருத்தாந்தங்களை யெல்லாம் சொன்னான்.

சிவாஜி என்னும் புனதேசத்தரசன், தன் காருபாரி சொன்னவற்றைக் கேட்டு, அவன் கொடுத்த தாஸருடைய ஸ்ரீமுகத்தையும் வாசித்துப் பார்க்கையில், அபங்கங்களிரண்டு எழுதப்பட்டிருந்தவற்றின் கருத்துகளை யுணர்ந்தவராய் மிகுதியு மச்சங்கொண்டு, அந்த மஹாநுபாவருடைய இடத்திற்கு நானேபோய் தரிசிக்கவேண்டியது கடமையா யிருக்க, இராஜச் செருக்கால் அவரை வரும்படி காகித

மெழுதி ஆள்வசமனுப்பினேம். நம்முடைய மூடபுத்தியினலே செய்யாதகாரியஞ்செய்தோம். இது நம்முடைய முதன்மையான பெருங்குற்றம். இனி நாமேதான்போய்ச் சேவிக்கவேண்டியது என்று நினைத்து, தம்முடைய மந்திரிகள் சிலரையும், தம்மிடமிருந்த சில பெரியோர்களையுங்கூட அழைத்துக்கொண்டு, வேண்டிய முஸ்தீபுடனே, சுவாமிக்காகச் சிலபூஷணங்களையும், பாதகாணிக்கையையும் எடுத்துக்கொண்டு பிரயாணப்பட்டு வரும்போது, வழிப்போக்கர்கள் பலர் துக்காராம்ஸ்வாமிகளுடைய பிரபாவங்களைப் பேசிக் கீர்த்தித்துக்கொண்டு ஏகுவதைக்கண்டு, அரசன் பரவசராய் இப்பேர்ப்பட்ட புண்ணியசொரூபியை அருகில் வைத்துக்கொண்டு இடைவிடாமல் சேவித்துக்கொண்டிராமல் வீண்காலம் போக்கினேன்; தூரதேசத்திலெல்லாமிருந்துவந்த ஜெனங்கள் சேவித்துக்கொண்டு போகிருர்கள்; நான் இத்தனை சமீபத்திலிருந்தே சேவிக்காத பாவியானேன்; இராஜச் செருக்கிலேயே யிருந்தேன்; இந்த என்னிருப்பானது—முலையினருகிலிருக்கும் உண்ணியானது இன்னமுதாகும் பாலையுண்ணுமல் இரத்தத்தைப் பிரித்துக்கொண்டிருப்பதுபோலாகிறது; அரசனென்னும் அகங்காரம் மேலிட்டிருந்ததேயல்லால் சாதுபுருஷனைச் சரணடைய அவ்வகங்காரம் வழிவிட்டதில்லை; முன்ஜெந்மத்தில் சாதுஜெநபூசை செய்ததனுல்தான் இப்போது அரசனுயிருக்க வாய்த்தது. இந்த ஜெந்மத்தில் சாதுக்களைப்பூசியா தொழிவேனேயாகில் மறுஜெந்மத்தில் ஏழுவகைத்தோற்றங்களில் கடைசிதோற்றத்தில் தோன்றி கிரிமி கீடகங்களாய்ப் பிறக்கவேண்டியதாய் நேரிடும் என்று பயந்த எண்ணமுடையவராய் தமது பரிவாரத்துடனே லோஹொகாமுக்குச் சமீபமாய் வரும்போது, அங்கு மாடு ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தவர்களும், விற்றுப்பிழைப்பதற்காகப் புல்லறுத்துக்கொண்டிருந்தவர்களும், விறகுசுமந்தும்பாமவர்களும், சோம்பராய்த் திரியுமவர்களும், வர்த்தகத்துக்குப் போகவர இருக்குமவர்களும், பெண்டுகளும், பாலியர்களும ஏறுழுதுகொண் டிருப்பவர்களும் எல்லாரும் வசநிக்கும்போதெல்லாம் விட்டலா! என்றும், துக்காராம்! என்றுமே வசநமாக வசநிப்பதும், அபங்கங்களையும் கீர்த்தனைகளையும் பாடிக்கொண்டிருப்பதும், நான்குபேர் ஐந்துபேராய்க்கூடி கைகளைக்கோத்துக்கொண்டு கீர்த்தனைகளைப்பாடிப் பிருந்தாவநஞ் சுற்றுவதும், வியாக்கியாநஞ் செய்வதும், நிர்த்தநம் பண்ணுவதும், தும்பிபறப்பதுமாயிப்படி ஆநந்தித்துக்கொண் டிருப்பதைக்கண்டு வியப்படைந்து, இந்த பாகவத சிகாமணியாகிய துக்காராம் ஸ்வாமிகளால் இந்நாடு பூலோக வைகுண்டமாயிற்று. "எறியுநீர் வெறிகொள்

வேலை மாநிலத் துயிர்களெல்லாம் - வெறிகொள்பூந் துளபமாலை விண்ணவர் கோனையேத்த - அறிவிலா மனிதரெல்லா மரங்கமென் றழைப்பாராகில் - பொறியில்வாழ் நகரமெல்லாம் புல்லெழுந் தொழியுமன்றே" என்கிற ஸ்ரீமத் தொண்டரடிப்பொடியாரது திவ்விய ஸ்ரீசுக்தியின்படியே; இங்குள்ளவர்களில் பிரமகுலஸ்தர்முதல் கடைசியர் வரையிலும், இரவும் பகலும் எழில்கொள் சோதிவானவரீசனையே யேத்திவாக்காணுதலால் நலியும் நகரம் புல்லெழுநைந்து, நமனுக்கிங்கு யாதொருவேலையும் மின்றி யொழிந்து எந்தஜென்மங்களிலும் கண்டறியா இக்காட்சி இந்த ஜென்மத்திற்காணப்பெற்றும், இத்தனை நாளாக நமது கருமபயனால் இழந்திருந்தோம்; என்முன்னோர்கள் கொடுத்து வைக்காதவர்கள்; சிச்சி! எனது செல்வமும், இராஜ்ஜிய சம்பத்தும் பயனில்லாதது; பகவத்சேவை, பாகவத சேவைகளுக்கு மிஞ்சினபெருமை வேறு யாதொன்றுமில்லை; இப்பேர்பட்ட புண்ணிய சொரூபமூர்த்தியை நாமேவந்து சேவித்துப் பயன்பெறாமல் அழைத்துக்கொண்டுவர ஆளனுப்பினோம்;இக்குற்றம்எங்குதொலைப்பேன்? இவ்விடத்தில் அவருடையபெருமைகளைக் கேட்கும்போதே பரவசமுண்டாகிறது. நேரில் சேவிப்போமாகில் என்னமாயிருக்கப் பெறுமோ அறியோம்என்று அதிசங்கியைபண்ணினவராய்கொண்டு, ஊரினருகில் சேர்ந்து தமது பரிவாரங்களை முன்னிருந்த பரிவாரங்களோடு சேர்ந்திருக்கவிட்டு, தாமும் மந்திரிமாரும் கூடப்போயிருந்த பெரியவர்களுமாக ஸ்வாமியிருக்கும்மண்டபத்துக்குச்சென்று,ஸ்வாமிகளைக்கண்டு தீர்க்கநமஸ்காரங்கள் ஆறுமைமிகுதியாற்செய்துசெய்தெழுந்து நின்று, கைகளைக் கட்டிக்கொண்டு, பயபக்தி விசுவாசங்களுடனே நின்று,தாங்கொண்டுவந்த திருவாபரணங்களையும்,ஸ்ரீபாத காணிக்கையையும், பீதாம்பரத்தையும் தங்கத்தட்டுகளிற் சேர்த்து, சந்தந - புஷ்ப - தாம்பூலங்களுடனே ஸ்வாமி திருமுன்பேவைத்து, தீர்க்கநமஸ்காரம் மறுபடியுஞ்செய்து, பரிமள திரவியங்களைத் திருமேனியிற் பூசுவித்து எதிரேநின்றார்,

தொண்டர்தலைவராகும் துக்காராம்ஸ்வாமிகள் தம்மைவணங்கி, திருவாபரணம்,பீதாம்பரம்,ஸ்ரீ பாதகாணிக்கைகளை எதிரில் ஸமர்ப்பித்துநின்ற மன்னர்மன்னனை நோக்கி, நீர் பிரியமாய்க் கொண்டுவந்து ஸமர்ப்பித்த காணிக்கை முதலியவை என்னைத் துன்பத்துக்குள்ளாக்கும்; நீர் மன்னவரா யிருக்கின்றீர்; உம்முடைய கொடையின்கீழிருந்து வாழும் குடிகளுக்குத் தாந தரும பரோப காரங்களாகும் சற்கிரியா விசேஷங்கள் வளரச்செய்து, என்னைபோலொத்த ஏழைகள் பக்திநிலையில் நிற்பதற்குப் பெருந்தடையாயிருக்கும் புசி

யின்கொடுமைதீர இல்லையென்னுதே அன்னமளித்து,காசு அவர்களுக்குக் காட்டாமல் தேவஸ்தான திருப்பணிகள் விசேஷிக்கச் செய்து வருவதல்லவா இராஜதருமம்? இதையொழித்து, பெருபெருத்த தங்கத்தட்டுகளில் நிறைய தங்கக்காசுகளை நிரப்பிக்கொண்டு,நகைகளும் பீதாம்பரங்களுந் துலங்கவைத்துக்கொண்டு வந்தீர்; இவற்றால் எனக்கு அகங்கார ஆணவங்களை யதிகப்படுத்தி பிறவிக்கடலில் அழுந்துவிக்கவா ஏற்பட்டீர்? நீர் பிரபுவானதால் உம்முடைய பிரபுத்துவத்துக்கேற்ற மரியாதையாகக்கொண்டுவந்தீர் மெய்யே; ஆயினும் பாத்திரமறிந்தல்லவா செய்யவேண்டும்! கொடுத்தால் பெருமவரென்றும் பெருதவரென்றும் முன்னமேயறிந்து கொடுக்கவேண்டியது தருமம் சூரியனுடைய காந்தியில் இருப்பவர்களுக்கு தீபமேன்? இமாலயத்துக்குச் சாமரமேன்? க்ஷீரசமுத்திரத்துக்குப் பாலளிக்கும் பசுவேன்? அதுபோல், ஆத்மகோடிகளுக்கெல்லாம் அளவறு பெருநிதியாயிருக்கும் அச்சுதன் அநந்தசயனனை யடைக்கலம்புகுந்துகிடக்கும் எனக்கிந்நிதி யென்செய்ய? நீரெனக்கென்று கொண்டுவந்தஇத்தநம் யெனக்கு மாமிசத்துக்கொப்பாகத் தோன்றுநின்றது; உமக்குச் சமாதாநமாகவும், சந்தஜெநங்கள் களிக்கவும் ஒன்று சொல்லுகிறேன் கேளும்: அதாவது—துளவுமாலை கழுத்தில் தரித்திருக்கவும், ஏகாதசி விரதங்களை யநுஷ்டிக்கவும் ஒருவரைக்கண்டால் சற்பாவமுடைய சந்தஜெநங்களாகும் பெரியோர்கள் அவர்பேரில் திருப்தியுற்று மநமிரங்குவார்கள். இதை யுங்கள்சித்தத்தில் வதியவைத்துக்கொண்டு, என்றும்நீங்கள்விடோபாவினுடைய தாஸரென்றிருப்பதே எங்களுக்கு மேலானநிதி? மற்றவையெல்லாம் அஸ்திரங்கள்! என்றிவ்விதமெல்லாஞ் சொல்லி அரசனுக்குத் திருப்தியுண்டாகச் செய்தனர்.

அரசனும் அதிக ஆநந்தங்கொண்டவராய், துக்காராம் ஸ்வாமிகளுக்காகக் கொண்டுவந்தவற்றையெல்லாம்பிராமணர்களுக்குத் தாநமீந்துவிட்டு, அன்றிராமுழுதும் செகதாசாரியர் தமது திவ்விய திருவாக்கினுல் பாடியருளிய கீர்த்தனைகளை, மத்தளம், தம்புரு, தாளம், சிட்கா முதலியவற்றின் இன்னிசைகளோடு கேட்டு அடங்காக்களிப்படைந்து, கூடவந்தவர்களோடு பிரமாநந்தத்தில் அழுந்தியிருக்க, அந்தச்சமயத்தில் ஸ்வாமிகள் தம்மைத்தாமறந்து வியாக்கியாநஞ் சொல்லத்தொடங்கினதாவது—விட்டலராகிய பகவானே எனக்குத் தாய்தந்தை; அவரே பந்துவும் சிநேகிதமும்;தநதானிய சம்மத்துக்களியாகவும் அந்தவிட்டலனே; இவரெனக்குப் புராதீநநிதி; எனது ஜீவனுனது அவருடைய திருவடிகளில் தங்கியிருக்கிறது; அவ

ருக்கே எனது ஜீவனடிமை? என்னுடைய தியானமும் அவரதே; இவ்வண்ட சராசரங்களெல்லாம் விட்டலசொரூபமாகவேயிருக்கின் றன. அந்தத் தோற்றமெனக்கு எப்போதில்லையோ அப்போதே என்னிருகண்களும் வெடித்து அழியக்கடவன. விட்டலனைவிட வேறே துதிசெய்வேனாகில் என்னுடைய நாக்கு அப்போதே பீற்று விழக்கடவது, விட்டலனைவிட வேறொருவரை வணங்குமாகில் சிரசு அப்போதே வெடிக்கக்கடவது; பண்டரீபுரம் யாத்திரை நடக்கா விட்டால் என்னுடைய கால்களானவையன்றே முண்டிக்கக் கடவன; சாக்கிர - சொப்பன - சுஷுப்திகளிலும்விட்டலனுடைய திருவடிகளை மறக்கலாகாது என்று நம்புவதே மேலானசுகம்; பக்தியைவிட மேலானதொன்றும் உலகில்லை; காலனானவன் கிட்டியபோதும், தேகத்தில்பாதை சம்பவித்தபோதும் பக்திவராது; அவை வராமுன்னமே ஆணவம்-துராசை - அகங்கார முதலியவைவிட்டு ஸ்ரீஹரிவிட்டலனை பஜிக்கவேண்டும்; டாம்பீகத்திற்காக பக்திசெய்தால்துர்க்குணங்கள் நீங்கப்பெறாமல், குளிக்கப்போய் சேற்றில் புரண்டதுபோலாகும்; சாந்தகுணம் பிறப்பதருமை; நல்லுணர்வு வாராது; அடக்கமமை யாது; ஈசுவரமூர்த்தியை மறவாமலிருத்தலே வீரியம் என்றின்னன நீதிகளையெல்லாஞ் சொல்லி வியாக்கியானஞ் செய்யலாயினார். அப் போது இமையாநாட்டத்தவர்களாகிய தேவர்கள், தங்கள் தங்கள் சுயரூபங்களை மறைத்துக்கொண்டு, குப்தமானரூபமுடையவர்களாய் அச்சபையின் கண் வந்திருந்து, துக்காவினுடைய அமுதம்போன்ற வுரைகளைக்கேட்டு, குணத்தேர்ச்சிகள் சோபாபத்திலிருக்கப்பெறாத வர்களாய் ஆநந்தக்கடலில் படிந்தார்கள். அந்தச் சபையின்கண் இருந்த யாவர்க்கும் தம்மையொழிந்த பிறரும், மற்றவஸ்துக்களு மெல்லாம் விட்டல ரூபமாகவே விளங்கிற்று. அதனால் எல்லோரும் ஒரே காலத்தில் கைகளைத் தட்டிக்கொண்டு, ஹரி ஹரீ! என்று உத் கோஷித்தார்கள்.

இவ்வண்ணம் விடியற்காலே மூன்றுஜாமம் வரையில் காலக்ஷேபம் நடந்து, மங்களார்த்தியான பிறகு, அரசனுக்கு நிராசையானது பூர ணமாயுற்பத்தியாகி, மந்திரிகளை நோக்கி, எனக்கினி ராஜ்ஜியபாரத் தில் இச்சை யில்லை; இந்தச் செல்வம் அல்பம்; விடோபாவைச் சதா பூசித்துக்கொண்டு, அவர் திருவடிகளை விட்டு நீங்காதிருப்பதே மே லான செல்வம்; தேகமோ நீர்மேல் குமிழிபோல் நிலையில்லாதது; ஆகையால் நான் வனத்திற் கேகின்றேன்; நீங்கள் அவ்விடத்திற்கு வரவேண்டாம் என்றுரைத்து, தாம் அணிந்திருந்த ரத்தின கிரீடம் ரத்தினாபரணங்களையெல்லாங் கழற்றி மந்திரிகள் கையிற்கொடுத்து,

கட்டியிருந்த ஒற்றை வஸ்திரத்துடன் சென்று ஆரணியஞ்சேர்ந்து, தீப்பொறி கண்ட பஞ்சு பொதிபோலே இகபோகங்களை அல்லல் தரும் பிணியென அறிந்த தாம், ஹரி ஹரீ! விட்டலா! என்று ஓசையிட்டு, இருகண்களில் நின்றும் ஜலம் தாரைகளாகப் பெருகவிட்டுப் பரிதபித்து, அந்நபாநாதிகளைத் துறந்து, பாச அபிமாநாதிகளை மறந்து, என்னைக் காத்தருள்வாய் ஜெகதீசா! எனத் துதித்துக் கொண்டிருந்து, சூரியன் அஸ்தமித்தபின் காலக்ஷேபக் கூட்டத்துக்கு வந்து, தமதாசாரியராகிய துக்காராம் ஸ்வாமிகளுடைய திருவடிகளில் விழுந்து சேவித்து, இரவு முழுதும் காலக்ஷேபத்தில் ஈடுபட்டுக்கொண் டிருந்து விடியும்போது மங்களார்த்தியானவுடனே மறுபடியும் வநத்திற்கே செல்லலுற்றூர்.

இப்படி யிருக்க, மந்திரிமாரும் கூடவந்த பெரியோர்களும், இதென்ன அதிசயமாயிருக்கிறது? கிணறுவெட்ட பூதம் புறப்பட்ட கதைபோல், இவர் நம்மையெல்லாம் இவ்விடத்திற்கு அழைத்துக் கொண்டு வந்து ஜெகதாசாரியருடைய சேவை செய்வித்து, தாமுஞ் செய்து, முடிவில் நம்மிடம் கிரீடத்தையும், திருவாபரணங்களையும் கழற்றிக் கொடுத்துவிட்டு, தவத்திற்கெனக் கானகத்துக்கேகி விட்டார்; இந்தச் சமயம் அவருக்கு வேண்டிய இதவுகளைச் சொல்லித் தேற்றி அரசுக்கு மறுபடியுங் கொண்டுபோக நம்மால் முடியாது. இது சங்கதியை நம்மரசனுடைய தாயும், அந்நாட்டாருங் கேட்டால் நம்மை நிந்திப்பார்கள்; நாமே குற்றவாளிக ளாமேவோம்; பகற்காலங்களிலெல்லாம் வநங்களிலேயே யிருந்து இரவுகளில் இங்குவந்து துக்காராம் ஸ்வாமிகளைத் தரிசித்து, அவர் செய்யுங் காலக்ஷேபங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்து, மறுபடியும் பொழுது விடிவதற்குள்ளாகச் சொல்லாமலேயே வநத்துக் கேகுகின்றூர்; அவரிங்கு வருகிறபோது நாமெல்லோரும் சேவித்துக்கொண்டு எதிரே நின்றாலும், உங்கள் க்ஷேமமென்ன? எவ்வாறிருக்கின்றீர்கள்? என்று கேட்காமலும், ஏறெடுத்து நம் முகங்களைப் பார்க்காமலும், அதுவே பரப்ரஹ்ம லக்கங்கொண் டிருக்கின்றூர்; இதற்கென்ன செய்யலாம்? என்று விசநாக்கிராந்தர்களாகி, புனவிலிருக்கும் இவ்வரசனுடைய தாயாகிய ஜீஜாபாயம்மாளுக்கு, தாங்கள் வந்ததுமுதல் நடந்த ஸவிஸ்தாரங்கள் எல்லாவற்றையும் காகிதமூலமாகத் தெரிவித்தார்கள். அந்தக் காகிதத்தைக் கொண்டுபோன சேவகன் அவ்வம்மையைச் சேவித்து நின்று, தான் கொண்டுவந்த காகிதத்தைக்கொடுக்க, அதனைப் பிரித்துப் படித்து பார்த்துக்கொண்ட அரசனுடைய அன்னை மூர்ச்சித்து பூமியிலேவீழ்ந்து, மறுமகள் முதலானோர் தேற்றத் தெளிவடைந்து,

ஹரி ஹரி! விட்டலதேவா! ஜெகதுத்தாரணஞ் செய்யவந்த துக்காராம்! இந்த அரசுக்கு இவனொரே பிள்ளை; இவனுக்கின்னும் சந்ததியில்லை; பட்டத்துக்கொரு சந்தான முண்டானபிறகு தான் இவ்வழியாவது நீதி; அவன் கொண்ட எண்ணம் நல்லதேயன்றிக் கெட்டதன்று; இவன் எவ்விஷயத்திலிருந்தாலும் நற்குணமுற்றிருந்தால் அதுவே ராஜ தருமத்தின்படி தவப் பயனாகும்; சாயுஜ்ஜிய பதவியுங் கிடைக்கும். பூருவத்தில் ஹரிச்சந்திரன், நளன், மநுமுதலான சக்கரவர்த்திகள், செங்கோல்முறைமை வழுவுறாது, தான தரும-பரோபகாரங்களை முன்னிட்டுக்கொண்டு குடிபடைகளைக் காத்து, ஸ்ரீ ஹரியினுடைய திருவடி சாம்பிராஜ்ஜியத்தைப் பெறவில்லையா; இவைகளையறியாமல் நம் புத்திரன், புராண வைராக்கியங் கொண்டவன்போல சுத்த விரக்தனாய் வநத்திற்சென்றானும்; இதற்கென்ன செய்யலாம்? நாம் தாமதஞ் செய்யாமல் புறப்பட்டுப் போய், ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகளுடைய திருவடிகளில் சரணாகதியாக வீழ்ந்து முறையமிட்டுக்கொண்டால் அந்தத் தயாநிதியே அவனுக்கு வேண்டிய தருமங்களை யெடுத்தோதி மறுபடியும் இராஜரீகத்துக்கு அனுப்புவார்! என்று திடங்கொண்டு, நல்லதோர் சிவிகை வரவழைத்து அதிலேறிக்கொண்டு, லோஹோகாமுக்கு வந்து, தாஸருடைய மண்டபத்துக்கெதிரில் சிவிகையிலிருந்து இரங்கி, கண்களிலிருந்து ஜலம் வடிய தாஸருடைய திருவடிகளில் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து எழுந்து, முந்தாணியை யேந்திக்கொண்டு, அடியாளுக்குப் பிள்ளைவர மீந்தருள்வாய் பெம்மானே! என்று பிரார்த்தித்து அழுதுகொண்டிருந்த சிவாஜி மகாராஜாவின் தாயாகிய ஜீஜாபாயம்மாளை ஸ்வாமி துக்காராம் தேற்றி, அவ்வம்மையாருடைய அபிப்பிராயங்கள் முழுமையுங் கேட்டு ஆநந்தங் கொண்டவராய், அம்மா! பயமுறாதே; இவ்விடத்தில் தங்கியிருந்து, விடலேசுவரனை பஜித்துக்கொண்டிரும்; உன்னுடைய அபேக்ஷிதத்தை விட்டலதேவர் முடித்துவைப்பார்! என்று உரைத்தருளலும், அவ்வம்மாள் அங்கு ஸ்வாமிகளுடைய திருமண்டபத்தில்தானே தங்கி, ஸ்ரீ பாண்டுரங்கனைத் தியான பூருவமாக பஜித்துக்கொண் டிருந்தாள்.

அன்றிரவில், துக்காராம் ஸ்வாமிகள் நான்கு ஜாமத்துக்குள்ளாக கோஷ்டியா ரெல்லாரும் வரக்கண்டு காலக்ஷேபத்திற்கு ஆரம்பித்து, பஜனை செய்துகொண்டிருக்கையில், அரசனாகிய சிவாஜி வநத்தைவிட்டுப் பிரயாணமாய் மண்டபத்துக்குள்ளாக நுழைந்து, ஸ்வாமிகளுக்கு தீர்க்க நமஸ்காரஞ் செய்து எழுந்து, கைகளைக் கட்டிக்கொண்டு விநயராய் காலக்ஷேபத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்க, ஸ்வா

மிகள் அரசனுடைய வரவைக் கண்டு, அபங்கங்களைப் பாடி அவற்றுக்கு வியாக்கியானஞ் செய்யத் தலைப்பட்டார். அந்த வியாக்கியானமாவது :—

ஆதிமூலப் பழம்பொருளாகிய ஸ்ரீமந்நாராயணன், தனது உந்திபூத்ததோரமுகிய அம்போருகத்திலிருந்து ஆதிபுருடனாகிய பிரமனை முதன்முன் உண்டாக்கி, அவ்வலரவனுக்குச் சிருஷ்டிக்குஞ் சக்தியை அவனுள்ளிருந்து ஈந்து, அவன்முகமாக அண்டங்களையும், அண்டத்துக்குட்பட்ட அசேதந பதார்த்தங்களையும் உண்டு பண்ணுவித்து, சேதநர்களாகும் ஆன்மாக்களுக்கும் எழுவகைத் தோற்றத்தி லடங்கிய எண்பதினுலு லக்ஷ தேகபேதங்களைச் சிருஷ்டிப்பித்துக் கொடுத்து, இவ்வெண்பத்தினுலுலக்ஷந்தேகபேதங்களைப்படைத்தஜீவராசிகளுக்குள்ளும் மாநிடதேகிகளுக்கும் மற்றவற்றிற்கும் மிஞ்சிய அறிவீந்து, அவ்வறிவு மாயா சம்பந்தத்தால் விளங்காதிருப்பதை விளக்கிக் கொள்ளுவதற்காக வேத - சாஸ்திர - இதிகாச - புராணுதிகளையுண்டுபண்ணிக்கொடுத்து, அவற்றில்அவ்வேதபுருஷன்றனே தனது கருணையின் நீர்மையால், பிரம - க்ஷத்திரிய - வைசிய - சூத்திரர்களென்கிற நான்கு குலங்களுக்கேற்ற ஆசார அநுஷ்டானாதிகளின் விதிகளை இன்னின்னவை என்றேற்படுத்தி, தருமார்த்த காமமோக்ஷங்களென்கிற சதுர்வித புருஷார்த்தங்களையும், தாந தரும பரோபகாரங்களையும் பொதுவா யமைத்துவைத்து, இக்கட்டளைகளைத் தன் ஆஞ்ஞையாக்கி, அதனை உல்லங்கித்து நடக்குமவர்கள் தனக்குத் துரோகிகளென்றும், அதனுல் நரகப் பிராயர்க ளாவார்களென்றும், அந் நரகமும் இன்னின்ன கட்டளையை மீறினவர்களுக்கு இன்னின்னவை சித்திக்குமென்றும் தரும சாஸ்திரங்களில் தரும சமஸ்தாபந பூர்வகமாக விதித்து வைத்திருக்கின்றுன். அங்ஙன் உபகாரார்த்தம் ஜாதிகள் நான்கினுக்கும் ஏற்ற தரும சம்ஸ்தாபநங்களை விதித்து வைத்திருந்தும் மானிடர், அவற்றைக் கண்டுணர்ந்து, தங்கள் தங்கள் குலதரும விதிகளின்படி ஆசார அநுஷ்டாநங்களை யநுஸ்டியாமலும், எண்ணுமலும், அறிவின்மையாலே ஒரு ஜாதியானுக்கு விதித்த ஆசார அநுஷ்டாநங்களை மற்றொரு ஜாதியான் ஆசைப்பட்டு அது நலமென்று அநுஷ்டிப்பானுகில் அவ்வனுஷ்டாநம் அவனுக்குச் சித்தியாகமாட்டாது. என்போலெனில்;—ஜலம் நிறைந்த பாத்திரத்திலிருந்த மீனை நெய் நிறைந்த பாத்திரத்தில் விட்டால் மீன் ஜீவிக்குமா? ஆகாயத்தில் பறக்கும் பக்ஷிகளை வளைக்குள் ளிருத்தினுல் விர்த்தியாமா? வளைக்குள்ளிருக்கும் எலிகள் உலாவினுல் விருத்தியாமா? பாம்புகள் அந்நமுண்டால் விருத்தியாமா? காட்டில் கனி

கள் காய்க்கும் விருக்ஷத்தை அடியுடன் பேர்த்துக்கொண்டுவந்து இராஜமாளிகையில் வைத்துத் தண்ணீர்விட்டாலும் பிழைக்குமா? அவைகளைப்போலே, சுய தருமாநுஷ்டானங்களைத் தவிர்த்து அன்னிய தருமாநுஷ்டானங்களை வகிப்பானாகில் சுதருமபலனுங்கெட்டு பரதரும பலனுங்கெட்டு பிரஷ்டத்துவம் வாய்க்கும். இம்மையில் நிந்தையும், மறுமையில் பிரமசாபமும் ஹீநகுலாநுபவமும் அநுபவித்தே தீர வேண்டி முடியும். சுய தருமாநுஷ்டானங்களுக்கொத்து நடப்பதே பரமப்பிராப்பியம். அதுவே பரமபதப்பிராப்தியும், சாக்ஷாத் ஜெகதீசனே கோபகுலத்தில் கண்ணனாய்த் திருவவதாரம் பண்ணின போது இடைக்குலத்துக்கேற்ற தருமங்களைத் தவிர்த்தாரா? மாடு கன்றுகளை மேய்க்குமியற்கையை விட்டாரா? ஸ்ரீராமனாய்த்தோன்றியவனும் பகவான்றானே; அவ்வவதாரத்துக்கேற்றக்ஷத்திரிய தருமத்தையொழித்த தமது சுயமான பகவத்தருமத்தை நடத்தினாரா? திருவிக்கிரமனாய் வந்த ஸ்ரீதரன் யாசித்தலைவிட்டு க்ஷத்திரிய தருமத்தையாவதுமற்றவைகளையாவது நடத்தினானா? சிங்கரூபியாயாவிர்ப்பவித்த தேவதேவன் ஹிரணியனை நகங்களால் கிழித்தெறிந்தானேயன்றி வில்லம்புகளால் கொன்றானா? பூமியில் பல்வகை புல் - பூண்டு கொடி - செடிகள் தந்தம் பிரசஞ்ஞைகளின்படி பலங்களைக்கொடுத்து ஜீவகோடிகளைக் காப்பாற்றுகின்றனவேயன்றிஒன்று மற்றொன்றின்பலனைத் தருகின்றதா? பூமி - தன்சாரங்களைப் புற்பூண்டு முதலான ஓஷதிகளால் கிரகிக்கப்பட்டும் தனக்கொரு குறைவுமில்லாமல் இருக்கவில்லையா? இந்தப் பூமியைப்போல் புண்ணியசீலர்களாகும் பெரியவர்கள் எவ்வெந்தக் குலத்தில் உதித்தார்களோ அவ்வந்தக் குலத்தின் தருமங்களுக்கு விரோதமில்லாமல் நடந்து மோக்ஷவீடடையவில்லையா? பெரியோர்கள் மிருகங்களாயும் பக்ஷிகளாயும் பிறந்தபோது அந்த நடைகளின்படிநடந்து முக்தராகவில்லையா? மானெனப்பிறந்த ஜடபரதர் மானின்நடக்கையன்றி மற்றநடை நடந்தாரா? வேதவேதாந்தங்களெல்லாம் சுய தருமாநுஷ்டானங்களை யநுஷ்டிக்க அறைகின்றனவேயன்றி அவ்வவர்களிஷ்டம்போனபடியெல்லாம் தாந்தோன்றிகளாக நடந்துகொள்ளச் சொல்லவில்லை. தருமராஜருக்குப் பெரிய தந்தையாகிய திருதராஷ்டிர மகாராஜாவானவர், கண்ணன் தூதுபோனகாலத்தில் சஞ்ஜயனிடம், தன்னுடைய நூறுபிள்ளைகளுங் கன்மிகளாய் தவத்திற்கு அயோக்கியர்களா யிருக்கின்றமையாலே, சம - தமாதி குணநன்மைகளை யுடையவர்களாய், தவயோக்கியர்களாயிருக்கிற ஐவர், தவங்களைச்செய்து, தங்களிருபத்தொரு தலைமுறையாரை உத்தரிப்பிக்கச்செய்வது தருமம் ஆகையாலே,

அவர்களைக் காடேகச்சொல்லென்று சொல்லியனுப்ப, அந்த சஞ்சயனும் ஐவரிடம்வந்து, தங்கள் பெரியதந்தை சொன்னவற்றைச் சொல்லக்கேட்ட யுதிஷ்டிரர் சஞ்சயனைப் பார்த்து, சுயதருமாநுஷ்டாநம் ராஜ்ஜியமாளிகை; நாடாளுதலாகிற குலதருமத்தைவிட்டுக் காடாளுதல் தருமத்துக்கு நேர்விரோதம்; குலதருமத்தை நடத்துவதே பெருந்தவம்; இந்த நியாயந்தவிர்த்து எனது பெரியதந்தை அநியாயஞ் சொல்லியனுப்பினது சுத்த அசங்கதம் என்றுசொல்ல, அதற்கு அருகிலிருந்த கபடகாருண்ணிய கிருஷ்ணனுஞ் சரியென, ஒற்றுக்கொண்டனனல்லவா? இந்தத் தருமராஜனிடம்விடேலாகும் கோபாலன் என்றும் வசித்துக்கொண்டிருந்து, முடிவில் ஸ்தூலதேகத்தோடே தானே வானேற்றவில்லையா? எக்குலபிறப்பாளரேனும் அந்தக் குலத்தருமங்களை யநுஷ்டித்துக்கொண்டிருந்தது, நிராசை - தவம் - பொறுமை - கிருபை - சந்தோஷம்-வாய்மை - அறிவு-அடக்கம் என்னும்சற்குணங்களை யுடையவராய், சதாவிடேலுடைய திருவடிகளில்மநதை நிலையுறுத்தி ஆராதித்து வருவார்களாகில் சாக்ஷாத் விட்டலராயர் அவ்வவர்கள் இஷ்டகாமியங்களை யளித்து, முடிவில் பேரின்பவீட்டைத் தந்தருளுவான். இதற்கு சாக்ஷி—மநு - மாந்தாதா - ஹரிச்சந்திரன்-நளன்-தருமராஜன் முதலானவர்கள். ஸ்தூலம் பிரணவதேகமாகி அமலனுகின்றவரையில் குலதருமங்களை தவிர்க்கலாகாது; தவிர்த்தால் பிரமாக்கினையின்படி சாபமேற்பவனுவான் சுருதிமிருதிகளின் வாய்மைகளுக்கு விரோதமாக நடப்பானுகில்ஆக்கினையைச் சேதித்த பிரமத் துரோகியாய் தரித்திர இமிசைகளை அடைவான், பிரம - க்ஷத்திரிய - வைசிய சூத்திரர் என்கிற இந்நான்கு வர்ணங்களுக்குரிய ஆசாரங்கள் தவிராவண்ணங் காத்துவருபவனே ராஜராஜன். இதுவே அரசனுக்கு மேலானதவம். பகவானாலே யாவத்காரியங்களும் நடக்கின்றன என்றெண்ணி, அகங்காரப் பிரயுக்தபாவனைகள் இல்லாமல் என்றும் விட்டலனுடைய திருநாமங்களைபஜித்தலே மேலான புண்ணியம்; இப்படிப்பட்ட வர்த்தகத்தை விடாமல் சாதித்துவந்தால் விசேஷலாபம் பெறலாம். இவையின்றி அசத்தியவானயிருந்து பல்லூழிகாலங் கானகத்திலிருந்து தவமியற்றினும் நரகம்விடாது. நல்லெண்ண நன்னடக்கைகளுடனே குடும்பத்தோடு ஒத்திருந்தால் ஸ்ரீ ஹரி பிரஸந்நனுவான்! என்று இவ்வாறெல்லாம் பரமதயாமூர்த்தியாகிற தாஸர் வியாக்கியநஞ் சாதித்துக்கொண்டே வந்தார்.

துக்காராம்ஸ்வாமிகள் இப்படி பரந்தபடியாக வியாக்கியாநஞ் செய்துகொண்டு வந்தனே அங்கிருந்த அடியார்கள் யாவருங்கேட்டு

ஆநந்தத்தில் அழுந்தினவர்களாய்; மங்களார்த்திபாகக்கண்டு ஸ்ருக்கு மணீபதியை யெல்லாருஞ் சேவித்து மகிழ்ந்திருந்தார்கள். சிவாஜி அரசனும், ஸ்வாமிகள் உரைத்துப்போந்தவற்றை மநதில் பதியக் கேட்டு, கண்களிலிருந்து ஆநந்தபாஷ்பங்கள் பெருகவிட்டு, ஸ்வாமிக ளுடைய திருவுள்ளக்கருத்தை யறிந்து, தமது மந்திரிகளிடத்தி லிருந்து ஆடையாபரணங்களை வாங்கித்தரித்து, கிரீடமும் அணிந்து கொண்டு, தமதாசாரிய ஸ்வாமிகளுக்குத் தீர்க்கநமஸ்காரங்கள்செய்து நின்றார். அவருடைய தாயாகியஜீஜாபாயம்மாளும் ஸ்வாமிகளுடைய ஸ்ரீ பாதங்களில் வீழ்ந்து சேவித்தவளாய்நின்று, தேவா! தேவர் செய்த மகோபகாரத்துக்கு அடியாள் என்ன பிரதிசெய்ய மாட்டு வேன்? அடியேனால் ஸ்வாமிக்குநேரிட்ட சிரமைகளுக்காக க்ஷமித் தருளவேண்டும் என்று பிரார்த்தனைகள் பலபலவாறு பிரார்த்தித்து, அவ்விடம்பின்னும்நான்குநாள் தன்பிள்ளையோடு வசிப்பவளாயினாள்.

அந்தச் சமயத்தில், ஸ்வாமிகளுடைய காலக்ஷேபத்திற்குவந்து கொண்டிருந்தவர்களில் ஒருவராகிய புஷ்பதோட்டக்காரர் நாவாஜி என்பவர், லோகோஜ்ஜீவநகாமராகிய துக்காராம்ஸ்வாமிகள் கால க்ஷேபத்தில், ஒருநாளளவிலே சபையிலிருந்து எழுந்து ஆசாரி யருடைய திருவடிகளில் வீழ்ந்து சேவித்து கைகளைக்கட்டிக்கொ ண்டு, பயபக்திகளுடனேஎதிரில் அஞ்சலிஹஸ்தராய்நின்று, ஸ்வாமி கள்! தொண்டனேன் ஒருவனிருக்கதேவர்காலக்ஷேபஞ்செய்து சிர மமடைவானேன்? தேவர் சற்றேஆரோக்கியங்கொண்டால்அடியேன் தேவர்க்குச் சிரமந்தீருகிறவரையில் காலக்ஷேபஞ்செய்கிறேன்; தயவு வைத்து நியமநந்தரவேண்டும் என்று பிரார்த்திக்க, நாபாஜியின் குற்றமில் எண்ணத்தை ஸ்வாமி துக்கா அறிந்து சந்தோஷித்து, அப்படியேயாகுக! என்று மௌநமாயிருந்தார். இந்த நாபாஜியும், ஹரிவிடேல்! பாண்டுரங்கா! பரமதயாளா! பதுமதளாக்ஷா! பரஞ் சோதீ! வேங்கடவா! விண்ணோர்தலைவா! வேணுகாநலோலா! கோவிந்தா! என்று திருநாமங்களைப் பாடியும், கைகளைத் தட்டிக் கொண்டு ஆடியும், இப்படிதம்மைத்தாமறந்து பரவசமடைந்தவராய், சுதி தாளங்களுக்குச் சற்றுமொற்றுமையில்லாமல், சபையோருந் தாலரும் என்னென்றெண்ணுவார்களென்கிற சங்கோசமுமின்றி, சபையைச் சுற்றிச்சுற்றி, திக்குவாயுடன் பெருங்கோஷமிட்டுக் கொண்டு நான்குநாழிகைவரையில் பஜித்துக்கொண்டிருந்து, அதனால் அலப்புண்டவராய்நின்றவண்ணமே நின்றுவிட்டார். அதனையறிந்து கொண்டு துக்காராம்ஸ்வாமிகள்கீர்த்தனைகளைப்பாடி, பொழுதுவிடியுந் தருணத்தில் மங்களார்த்திசெய்து எல்லாரையும் போகவிடுத்தனர்,

10919

பொழுது விடிந்தபின் நாபாஜி தாஸர் தன் பூந்தோட்டத்திற் கேகி புஷ்பங்களை யெடுத்து, ஸ்வாமிக்கு ஒரு பருத்தி மாலையும், கோஷ்டியில் மற்ற பாகவதர்களுக் கெல்லாம் ஒவ்வொரு ஹாரமுமாகக் கட்டி சித்தப்படுத்தி வைத்து, இராவானவுடனே காலக்ஷேபத்து மண்டபத்திற்கு அவற்றைக் கொண்டுவந்து, துக்காராம் ஸ்வாமிகளுக்கும், மற்ற பாகவதர்களுக்குஞ் சார்த்தி சேவித்துக்கொண்டு அன்றிராத்திரியும் முன்போல் நடத்தினர். இவ்வண்ணம் ஸ்வாமிகள் சிரமம் நீங்கவேண்டுமென்கிற ஆவலாலே நித்தநித்தம் நாலுநாழிகை வரையில் தாமே பஜித்துக்கொண்டு வருவதை ஸ்வாமிக ளறிந்து, இவர் நமது சகோதரர், எனக்குமொரு சிரமமுண்டாகிற தென்று நோக்க முடையவராய், என் காரியத்தைத் தாம் செய்து எனக்கு ஆரோக்கியத்தை யுண்டாக்குகிறார் என்று அவர் முன்னிலையி லல்லால் அவர் காலக்ஷேப கூட்டத்திற்கு வந்துகொண்டிருக்கும்போது அங்கிருக்கும் மற்றவர்களோ டெல்லாஞ் சொல்லுவார். அவர்களும், ஸ்வாமிகள் நாபாஜியின் பேரில் சந்துஷ்டரா யிருக்கிறாரென்று தாங்களும் பிரியங் கொண்டாடுவார்கள்.

இப்படியிருக்க, ஒருநாள் நாபாஜிதாஸர் இந்திராயணியில் நீராடிக்கொண்டு இருக்கும்போது அவ்விடத்திற்குவந்த ஒருபிராமணன் அந்தநாபாஜியைப் பார்த்து, நீர் காலக்ஷேபத்திற்கு வந்தால் நாலு பேர்போலே வெறுமனேயிருந்து கேட்டுக்கொண் டிருக்காமல், எல்லாமறிந்து விட்டவன்போலேஉன்குழறுவாயில் வந்தஅபசப்தங்களையெல்லாம் சப்தித்துக் கத்துகின்றாய்; விசேஷபண்டிதர்களெல்லாரும் வந்து நிறைந்திருக்கிற சபையில் பண்டிதர்களாயிற்றே! என்கிற எண்ணமில்லாமல் தாறுமாறாய்க் கூத்தாடுகிறாய், அவைகளெல்லா என்னைப்போன்ற பிராமணர்களும் பண்டிதர்களுங் கேட்கக்கூடாது, இப்படியெல்லாஞ் செய்துவருவது உனக்கு நியாயமல்ல என்றுசொல்லக்கேட்டு நாபாஜிதாஸர் மிகுதியும் அச்சமுற்றவராய், ஸ்வாமீ! இனி அடியேன் அப்படி செய்யேன் தேவர் போன்றாருடைய மநதுகளுக்கு வெறுப்புண்டாக நடக்கமாட்டேன் என்று மிகுவிநயராய்ச்சொல்லி, ஸ்நாநமுடித்துக்கொண்டு தம்மாளிகைக்குப் போய்விட்டார்.

பின்பு, அந்தப் பிராமணன் நீராடி, ஜப தப அநுஷ்டாநங்களை முடித்துக்கொண்டு கிருகமேவின வுடனே அவருக்குத்தொண்டையடங்கிவிட்டது; சுத்த ஊமையாய்விட்டான். அதறிந்த தானே மிகு துக்கமும் அதிசயமுங் கொண்டவனாய், இதென்ன தெய்வமே நானூமையாய்விட்டேன்! இனி யென்ன செய்வேன்? புஷ்பக்காரனை நிரேதுவாகவைத தோஷம்போல் காணுகிறது; இந்தக் கருமம் எங்கேபோய்

தொலைப்பேன்? என்று அழுதகண்ணுங் கண்ணீருமாய்ச் சிந்தித்து, இது, துக்காராம்ஸ்வாமிகளுடைய திருவடிகளில்தஞ்சமெனப்போய் வீழ்ந்தால் நிவர்த்தியாகலாமேயன்றிப் பிறரெவராலும் நிவர்த்தியாக மாட்டாது; பாகவதாபசாரம் செய்தோம்; நான் ஒருவருஷகாலமாய் ஒய்வில்லாமல் நித்தியமும் காலக்ஷேபத்துக்குப் போய்க்கொண்டிருந்தும், பாடலின் சுரதாளங்களில் எண்ணங்கொண்டவனா யிருக்கின்றேனேயன்றி பகவந்நாமத்தில் எண்ணம்பிறக்கப் பெற்றவனைக் காண்கில்லேன்; பகவந்நாமத்தை மதலைச்சொல்லால் உச்சரித்த போதிலும் அமிர்தமாக பாவிக்காமல்விபரீதம் நினைந்ததால்இக்கேடு நமக்குவாய்த்தது; நாவாஜிதாஸர் சுருதிஞ்ஞானமில்லாமல் பாடியும் அது பகவானுக்குப் பிரியமாகவிருந்தது; பாகவதசிரேஷ்டரும் இந்தப்புஷ்பக்காரர் வரும்போதே என்னுடைய சிநேகிதர்வருகிறார்! என்சகோதரர் வருகிறார்! என்றிவ்வாறெல்லாம் அவர்மீதிலிருக்கும் பிரேமையை ஜநங்களுக்கு முன்சொல்லிக்கொண்டே யிருப்பார்; இவைகளைக்கேட்ட ஜெநங்களும் நாவாஜியைக்கொண்டாடி, கடைத்தேறிவிட்டார்; என்று ஆனந்தமடைந்தும் இருக்கிறார்கள்; இவ்வதிசயங்களைக் கேட்டிருந்தும் மதிமோசம்போய் நாவாஜியினுடைய உள்ளம் வெறுப்படைய வார்த்தையாடிவிட்டேன்; பிராமணனாகிய நான் தேவஸந்நிதானத்துக்குப்போய் பலபலகாலக்ஷேபங்களைக்கேட்டும், பல அற்புதங்களைக்கண்டிருந்தும் என்னுடையஊழ்வினையானது நல்லதோரெண்ணத்தில் புகுதவிடாமல் தீயஎண்ணத்திலேயேவிடுத்துத் தீமையையே யுண்டாக்கியது; பிராமண குலத்திற் பிறந்துதான் என்ன பிரயோஜநத்திற் காயிற்று இந்த ஜென்மம்? இனி துக்காராம் ஸ்வாமிகளுடைய திருவடிகளன்றி வேறே கதி காண்கிலேன் என்று மெலிவடைந்த உள்ளத்தனாய், தன்னுடைய வீட்டிலிருந்து வெளிப்பட்டு மண்டபத்துக்கு வந்து பரமாசாரியராகிய துக்காராம்ஸ்வாமிகளுடைய ஸ்ரீபாதங்களில் வீழ்ந்து சேவித்துநிற்க, ஸ்வாமியின் பின்புறமாய் நின்றுகொண்டிருந்த ராமேசுவரபட்டர் அந்தஊமையாயிருந்த பிராமணனைப்பார்த்து, இந்தத்தருணத்தில் யாது காரணத்தால் தண்டன் சமர்ப்பித்து நிற்கின்றீர்? என்று கேட்டருள, அவனும் ஊமையாய் விட்டதால் இராமேசுவர பட்டருடைய முதுகின்பேரில் நடந்த சவிஸ்தாரங்களை யெழுதிக் காண்பிக்க, பட்டரும்அவைகளைத் தெரிந்துகொண்டு ஸ்வாமிகளைநோக்கி, நமது நாவாஜிதாஸரை இப்பிராமணன் பழித்ததால் ஊமையானான் என்று நடந்த சவிஸ்தாரங்களைச் சொல்லக்கேட்ட ஸ்வாமிகளும், இன்னும் அநந்தம்பேர் அங்கிருந்தவர்களும் ஆச்சரியங்கொண்டு நகைத்தார்கள்.

இந்தச் சமயத்தில், அவ்வூரில் குடித்தனக்காரன் ஒருவன், துக்காராம் ஸ்வாமிகள் அவ்வூருக்கு வந்தநாள் முதல் அவர் மீது அதிக வாஞ்சை யுடையவனா யிருந்தவன், தன் தோட்டத்தில் விளைந்த கீரைக்காயொன்று இளம்பிஞ்சா யிருந்ததைக் கொண்டுவந்து, ஸ்வாமிகளைச் சேவித்துக் கொடுத்து, இதனை ஸ்வாமியே அமிசிக்கவேண்டும்! என்று பிரார்த்தித்தான். அவ் வெள்ளரிக் காயினை ஸ்வாமி மகிழ்வுடன் வாங்கி, நமக்காக இன்பமாய்க் கொண்டுவந்ததை அவசியம் உண்ணவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி, அந்தக்காயை நான்கு பாகமாக்கி, மூன்றுபாகம் தாமருந்தி, மற்றொரு பாகத்தைப் பக்கத்தில் வைத்தனர். அதனை வித்துவானாகிற ராமேசுவரபட்டர் தமக்களிக்கும்படி பிரார்த்தித்தார். இது உங்களுக் குதவாது என்று ஸ்வாமி கையிலே யெடுத்து, அதில் பாதி ஊமையாயிருந்த பிராமணனுக்குக் கொடுக்க, அவனும் மகா பிரஸாதமென வாங்கித் தின்றவுடனே பழையபடியே பேசத் தலைப்பட்டான். அவ்வாச்சரியத்தை இவ்விடங் கூடவிருந்தவர்கள் எல்லாருங் கண்டு மனமதிசயிக்கப் பெற்றவர்களாய் கொண்டாடினார்கள். மற்ற பாதி துண்டை ஸ்வாமி கிள்ளிக் கிள்ளி அங்கிருந்தவர்களுக் கெல்லாங் கொடுத்தருள, அவ்வெல்லாரும் பிரஸாதமென்று வாங்கிக்கொண்டு வாயிலிட அது கசப்பா யிருந்ததைப் பற்றி, அவ்விடத்திலேயே உமிழ்ந்து விட்டவரும், வெளியே துப்பினவர்களும், விழுங்கி விட்டவர்களு மாயினார்கள்.

இப்படி யிருக்க, அன்றிரவில் பஜனை காலக்ஷேபத்துக்குப் புஷ்பக்காரராகிய நாவாஜி வந்தார்; அவரை தாஸர் கண்டு, வாருமென் நேசரே! என் சகோதரரே! இப்போது நீர் காலக்ஷேபம் செய்யும் என்றுரைக்க,நாவாஜியும்,ஸ்வாமிக்குத்தண்டப்பிரணாமங்கள்செய்து, ஸ்வாமி! அடியேன்! இன்று முதல் காலக்ஷேபம் செய்யவே மாட்டேன்; யாரோ ஒரு பிராமணர் இந்திராயணியில் அடியேன் நீராடிக் கொண் டிருக்கும்போது வந்து, அடியேன் சுரக்கியான மில்லாமல் கீர்த்தனைகளைப் பாடுகிறேனென்று அசூயைப்பட்டார்; அடியேனும் இப்படி தேவர்க்கும் மற்றவர்களுக்கும் அசூயையுண்டாக இனிப் பாடேனென்று உரைத்தேன்! ஆகையால் அடியேனை மன்னித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார். அருள் தவமேற்ற தாஸர் அவரைப் பார்த்து அவருரைத்தது உம்மையன்று என்னை; நானுச்சரிப்பதும் பாடுவதும் அவருக்குச் சம்மதமில்லையாகையால், என்னேரில்சொல்ல சங்கைகொண்டு உம்மைக்கண்டு சுட்டாகச் சொன்னார்; நீர் அதைமன்னித்து காலக்ஷேபஞ் செய்யும் என்று ஆஞ்ஞாபித்தருள, நாவாஜி தாஸர் யதாப்பிரகாரமாக பஜனை கீர்த்தனைகளை யாரம்பித்துப் பாடத்

தொடங்கினார். அவைகளை அங்கு வந்திருந்த பாவிகபக்தர்கள்கேட்டு ஆநந்தித்து, தாஸருடைய ஸ்த்துவகுண கீர்த்திகளைக் கொண்டாடி, பயபக்திகளுடனே விட்டலனுடைய திருவடிகளுன்றின உள்ளத்த ராய் குணநுபவங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்து, மங்களார்த்தி யானவுடனே தங்க ளிருப்புகளுக்குப் போய்விட்டார்கள்.

சிவாஜி மகாராஜாவும் சூரியோதய மானவுடனே, ஸ்வாமிகளு டைய திருவடிகளில் வேரற்ற மரம்போல் வீழ்ந்து சேவித்துக்கொண் டெழுந்து, கைகளைக் கட்டிக்கொண்டு நின்று ஸ்வாமின்! தயாமூர்த் தியே! கருணாபூர்த்தியே! காரணக்கீர்த்தியே அடியேனுக்கு அரசில் சற்று மெண்ணமில்லை; அடியேன் எங்கே எவ்விடத்தில் சஞ்சரித் தாலும் ஒரு ரொட்டியும், பட்டத்தைப் பாதுகாக்க ஒரு குழந்தையும் வேண்டியது. அவைகளுக்காக அடியேனுக்குப் பிக்ஷை தந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, ஸ்வாமிகளும் திருவுள்ளத்தில் மகிழ் வுகொண்டு ஒரு ரொட்டியையும், ஒரு தேங்காயையும் அவருக்கீந்து, உன் னிஷ்டத்தின்படி நடக்குமென்று ஆசீர்வதித்து விடை தந் தருளினார். அரசனுடைய தாயாகிய ஜீஜாபாயம்மாளும், ஸ்வாமியை வணங்கி, சுவாமி! அடியாளாவல் நிறைவேற்றிய அடிகளே! எனது புத்திரனை மீட்டுத் தந்தீர்; பேரனையு மீந்தீர்; இராஜ்ஜியத்தை நிலை நிறுத்தி யருளினீர். இவ்வளவு கருணை செய்தருளிய தேவர் திரு வடிகளன்றி வேறு கதி காண்போ மல்லோம். என்றென்றும் இக் கருணையே யிருத்திக் காத்தல் செய்யவேண்டும் என்று பிரார்த்தித் துப் பிரிய மநமில்லாமல், மறுபடியுந் தொழுது ஸ்வாமிகளுடைய திருவடிகளை யெடுத்துச் சிரமேல் சற்றுநேரம் வைத்துக்கொண் டிருந்து விடை பெற்றுக் கொண்டாள்.

சிவாஜி மகாராஜா, ஸ்வாமிகளுடைய காலக்ஷேபத்தில் பின் பாடல் பாடுமவர்களும், மத்தளம் - ஜாலர் - சிட்கா - சுதி முதலிய வற்றைச் சேவிக்குமவர்களும், தாஸர் காநகம் - மலைகளுக்குச் சென் றால் கூடவே உபசாரத்துணையாகப் போகுமவர்களுமா யிருந்த பதி னறு பக்தசிரோமணிகளுக்கும், மற்றவர்களுக்கும் நமஸ்காரங்களைச் செய்து, சுவாமிகள் தரும் பிரமாநந்தத்தை யுண்டு களிக்குமவர்கள் நீங்கள்; யானோ ஜென்மகன்மியால் அரசென்னும் வலையில் பிணைப் புண்டு உழலுமவன். ஆதலால்தான் நீங்களெல்லாருங் கூடி யநுப விக்கு மநுபவத்தைத் துறந்தேகுகின்றேன். உங்கள் திருவடிசேவை இந்தத் துர்பாக்கியவானுக்குக் கிடைக்க வேண்டுமென்று நீங்களனை வரும் ஆசீர்வாதம் பண்ணுங்கோள்! என்று பிரார்த்தித்து நேமநம் பெற்றுக்கொண்டு, தாயார் - மந்திரிகள் - கூடவந்த பெரியோர்கள் -

சேனை முதலானவர்களோடு பிரயாணப்பட்டு, தம் ராஜதானியாகிய புனைவுக்குப் போய்ச் சேர்ந்தார்.

இந்தப் பக்தி லீலாமிர்தமாகிற திருப்பாற்கடலில் பராத்பரனாகிற ஸ்ரீ பரந்தாமன் பள்ளி துயின்று வருகின்றான்; இவ்விசேஷமுணர்ந்து அவன் கிடக்கும் திருப்பாற்கடலின் பாலமுதமாகும் லீலாமிர்தந் தன்னைப் பருகிக் களிகொள்ளுமவர்கள் உம்பர்திவமென்னும் வாழ்வுக்குச் சேர்ந்த நெறியினராய் நின்று, நித்தியாநந்தப் பெருவாழ்வினில் வாழ்வார்கள். பிராணிகள் அவ்வாழ்வினை யிழப்பச் செய்யுமதான பிரகிருதியின் நசை ஓரணுவளவும் இதைப் பருகின பின்னும் உண்டாகுமென்று அறையுதற் கிடமில்லை; அன்றே விலகிவிடுமென்றற்கு ஐயமில்லை. என்று பிரகிருதி சம்பந்தங்கள் அறத்துறந்தனரோ அன்று தொட்டுப் பிறப்பு-இறப்பு-நரகங்கள் கெடும்; அவை கெட்ட மாத்திரையானே அமலர்களாய் ஸாயுஜ்ஜியம் என்று சொல்லும்படியானதைப் பெறுகின்றார்கள்.

ஹரிவிட்டலா! வேங்கடவா! விண்ணோர் தலைவா! அடியேனை நினது தாஸர்களுடைய திருவடிகளிற் சேர்த்து வைத்தருள்வாய்! அன்னவ ரடிப்பொடியை முடிப்பட வைப்பாய். அப்பேறே அடியேனுக்குப் பெருவின்பப் பேறாகிற்கும். ஆதலால், நெஞ்சத்தில் அவர்கள்மாட்டு அன்பு கலக்கப்பெறு நீசனேற்கு அஃது கைவருமாறு கடைக்கணித் தருள்வாய் கபட நாடகனே! காகுத்தா! என் கரிய கோவே!

சுபம்! சுபம்!!

பதின்மூன்றமத்தியாயம் முற்றும்.

ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீ பாண்டுரங்கபரப்ரஹ்மணேநம:

ஸ்ரீமத்

துக்காராம் சுவாமிகள் சரித்திரம்.

பதினான்காமத்தியாயம்.

காப்பு.

ஆடகத்துச் சீர்வரைமே லழகலரோன் றலர்ந்ததுபோல்
நாடகத்துக் கபடனடி நாடோறு நண்ணுதற்குச்
சூடகத்துப் பெருமணியாந் துக்காவின் தொல்சரிதை
பாடகத்து ணிறைகொண்ட பாற்கடலா னடிபணிவாம்.

ஸ்தோத்திரங்கள்.

பொன்னின் மலைமேரு தாமரை பூத்தாப்போல் பொலிபவனே! ஸரஸிஜலோசநனே! சச்சிதாநந்தனே! சருவேசனே! சான்றோர்க் கருள் சுறக்கும் ஜகந்நாதனே! ஜாநகீ ரமணனே! பொங்குபாற் கடலுறை புராண புருஷனே! பிரமனைப் பெற்ற பேரொளியே! பிரகலாதற் கருளீந்த பெற்றியோனே! புகழ் கௌதமன் தேவியின் சாபம் போக்கிய புனிதனே! பொங்கரவில் துயிலமரும் புங்கவனே! போரேறே! பிரசண்ட கோதண்ட தீக்ஷனே! பீமாநதீதீர வாசனே! புல்லரையாண்ட வல்லவனே! வேங்கடேசனே! அல்லலில்லா ஆநந்தத் தழுந்திய ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகளுடைய திவ்விய சுப குண சரிதந்தன்னை அடியேனுடை யுள்ளத் துள்ளும் நாவினுள்ளும் விளங்கி அறைய வைப்பாய் ஆதியஞ் சோதியனே!

துக்கா. சிவன்.) துக்காவுடன் கோஷ்டி போஜனம். துக்கா.) கெருடன் மீதில் பெருமான் பிராயக்ஷ.

சிவாஜிமகாராஜா ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகளைச் சேவித்து விட்டுத் தமதுநாட்டுக்குப் போய்விட்டபிறகுஸ்வாமிகள், லோஹோ காமிலிருந்த பாகவதர்களைப் பார்த்து, நானிங்குவந்து நெடு நாளாய் விட்டது? விடோபாவைச் சேவிக்கவேண்டுமென்று அவர்களிடத் திலிருந்து விடைபெற்றுக்கொண்டு, தேஹூகாமுக்கு எழுந்தருளி, ஸந்நிதானம்புகுந்து, சருவநாதனையும் சருவமாதாவையுஞ் சேவித்துக் கொண்டு, அங்குநின்றும் தமதுமாளிகைக்கு எழுந்தருளி, இரவில் எப்போதும்போலே காலக்ஷேபம் நடத்திக்கொண்டிருந்தார்.

இப்படியிருக்க, சஞ்சவட அங்கிராரத்திலிருக்கும் விநாயக மூர்த்தியினுடைய உபவாசியாகிய சிந்தாமணிதேவர்என்பவர், தமது கோஷ்டிகளுடனே! பீமாசங்கரி என்னும் சிவக்ஷேத்திரத்தில் நடக் கும் உற்சவத்தைச் சேவிப்பதற்காகப் பிரயாணப்பட்டுச் செல்லும் போது நடுவழியில் தேஹூகாமிருப்பதை யறிந்து, இதில் எழுந்தருளி யிருக்கும் துக்காராம் ஸ்வாமிகளைச் சேவித்துப் போகலாம் என் றெண்ணி, தம்பரிவாரங்களுடனே தேஹூகாமுக்குள்ளேபோய் சத்தி ரத்திலிறங்கினர். இவருடைய வரவைக்கேட்ட துக்கா, இவரிறங்கி யிருக்கும் சத்திரத்திற்கு வந்து, சிந்தாமணி தேவரைச் சேவித்து நின்று, சுவாமி! அடியேன்பொருட்டு இவ்விடத்திற்கு எழுந்தருளின தாகக் கேள்வியுற்றேன்; அடியேனோ சூத்திரன்; மிகுவேழை; அடி யேனால் சிரமம் நேரிட்டது; அடியேனை மன்னிக்கவேண்டியது என்று பணியுமதைக்கண்ட சிந்தாமணிதேவர், துக்காராம் ஸ்வாமி களுடைய பிரபாவகுணங்களுக் காச்சரியப்பட்டு, ஐயா! உமது திருக் கைகளால் சாமக்கிரியைகளை யளிக்கப் பெற்று ஒருவேளை தளிகை செய்துண்டு போகலாமென்னும் ஆசைபெருக்காலே இவ்விடம் வந் தேன்என்ன, தாஸரும் அடங்காச் சந்தோஷங்கொண்டு, தமது திரு மாளிகைக் கெழுந்தருளி, ஒருவருக்காரும் சாமான்கள் யாவையுஞ் சேகரித்துக்கொண்டுவந்து சிந்தாமணிதாஸருக்கு அளிக்க அவரும் அவற்றைப் பெருநிதிபோலெண்ணிமிகுபிரேமையால்ஏற்றுக்கொண் டதைக் கூடவந்த மற்ற பிராமணகோஷ்டிகளும், சத்திரத்திலிறங்கி யிருந்தவர்களும் ஸ்வாமிகளைநோக்கி, எங்களுக்கில்லையா, நாங்கள் உங்களன்னத்தைப் புசிக்கக் கொடுத்துவைக்காத பாபிகளா! என்று கெஞ்சுவதைக்கண்ட துக்காராம்ஸ்வாமிகள், தமது காருண்ணியத் தால் மநமிரங்கி, ஹரி ஹரீ! அடியேன் என்னசெய்வேன், துர்ப் பாக்கியன்; இத்தனை பேருக்கும் அளிக்க வீட்டில் சாமக்கிரியைக ளில்லை; எப்படி இவர்களுக்குத் திருப்தியுறச்செய்வேன்? தெய்வமே! என்று ஸ்ரீபண்டரீநாதனை உள்ளத்தில் தியானஞ் செய்யலாயினர்.

அவ்வளவில் ஸ்ரீ பாண்டுரங்கமூர்த்தியானவர் தாஸர் திருவுள்ளக்கருத்தைப்பூர்த்திசெய்யத் திருவுள்ளம்பற்றி, நினைத்தமாத்திரத்தில்தானே, சத்திரத்தில் சிந்தாமணிதாஸரோடு வந்த பிராமண கோஷ்டிகளுக்கும், தேசாந்தரிகளாயிறங்கியிருந்தவர்களுக்கும் முன்பாக, ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு தளிகையிலேயும், அதில்வேண்டிய சாமான்கள் அவ்வவர்களுடைய விருப்பங்களுக்குத் தக்கவையாகவும் அமைந்திருந்தன, இவ்வற்புதங்களை அங்குள்ளார் அனைவருங்கண்டு அதிசயமுற்றவர்களாய், தாஸருடைய கீர்த்திகளையுந்திருவருளையுஞ் சிந்தித்திருந்தார்கள். சிந்தாமணிதேவரும், இதுவென்ன வியப்பு? நாம் கதைகளிலுங் கேட்டதில்லை; எந்தநூலிலுங் கண்டதுமில்லை; இந்தப்பிரபு நம்மைப்போன்றே ஸ்தூலதேகங்கொண்டு உலாவுகிறார்; இவர் செய்யும் அற்புதங்களோ பிறரால் செய்யவறியாதனவா யிருக்கின்றன; இவ்வளவு அருமைக்காரியங்கள் செய்தும் நாமெல்லாம் மனிதனென்றே எண்ணியிருக்கின்றோம்; தேவரூபமுடையவராகவும், அமலராகவுங்காணலாகிறது; வசிஷ்டருடைய ஆசிரமத்திலிருக்கும் காமதேநுவானது, தேவலோகத்தில் இந்திரன்முதலிட்டதேவர் குழாமெல்லாந் திரண்டு வீற்றிருந்து தன்னை நினைக்கப்போய், அந்தத் தேவர்கூட்டம் எவ்வளவு திரண்டிருப்பினும் அவ்வவர்களுக்கு எதிரிலிட்டிருக்குந் தளிகையிலேயில் தன்னுடைய பாதத்தையூன்றிச் செல்லும், அவ்வளவில் அந்தந்தஇலைகளில், அவ்வவர்கள்கோரின அறுசுவைபதார்த்தங்கள், பலகாரவருக்கங்கள், அந்நமுதவியவை யுண்டாக அவர்களுண்டு களிப்பார்கள்; அதன்பின் சந்தநபுஷ்ப தாம்பூலங்களும் அப்படியே யுண்டாகக் கண்டு பெற்று அணிவார்களெனச் சாத்திரங்களில் காணுகின்றோம்; இந்தத் துக்காராம்ஸ்வாமிகளோ! என்றால், காமதேநுவும் மற்றொன்றும் இல்லாமலேயே தம்முடையநினைப்புமாத்திரத்தில் அவ்வவர்கள் கோரின பதார்த்தங்கள் இலைகளுடனே யெதிரிலிருக்கக்கண்டோம்; இது புத்திக்கெட்டாத ஆச்சரிய காரியமாயிருக்கிறது; இவரல்லால் உலகில் இப்படிப்பட்டஅருமையான செயல்களைச் செய்தாரைக்கண்டதுங் கேட்டதுமில்லை; இனி காணப்போவதுமில்லை? அருமையான புருஷர் இவரொருவரே! கல்பகவிருக்ஷத்தின் நடையுடையவரா யிருக்கின்றார்; நாம் பிராமணகுலத்தில் பிறந்தும் என்ன பயன்? இந்தப் பிரபந்நத்தலைவர் ஸாக்ஷாத் ஸ்ரீ மந்நாராயணனுடைய குடல் தொடக்கமாய் வந்த புத்திரரென்றே எண்ணவேண்டியது; பிறர்யாருக்கு இவ்வரிய காரியம் உண்டாகக்கூடும்? என்று பலவாறு புகழெண்ணி, அந்தச் சாமான்களை அவ்வவர்கள் எடுத்துக்கொண்டு சமையல் செய்து, தங்

கள் தங்கள் உபாஸநாதேவர்களுக்கு அர்ப்பிதம்பண்ணி, பிறகு தாங்களுமுண்டு களித்து, இவ்வநநத்தால் எங்கள்பிராரத்துவ கன்மங்கள் கழியப்பெற்றோமென் றெண்ணி, வாசனைத் திரவியங்களணிந்து, பூமாலைகளைச்சூடி, கைகளைத் தட்டிக்கொண்டு ஹரிவிடேல்! பாண்டுரங்கா! என்று, அவர்களெல்லாரும் ஒன்றுகூடி உத்கோஷித்து, கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டிருந்து, இரவானவுடனே, வைணவவாக்கிரேசராகிய துக்காராம்ஸ்வாமிகள் காலக்ஷேபமியற்றும் ஸந்நிதாநத்துக்குப்போய், தாங்களும் ஸ்வாமிகளுடனேயொன்றி பஜித்துக்கொண்டிருந்து, பிரசங்கங்களைக்கேட்டு, ஆநந்தித்து விடியற்காலை நடந்த மங்களார்த்தியைத் தரிசித்து, பரமாசாரியராகும் துக்காராம் ஸ்வாமிகளுக்குத் தீர்க்கநமஸ்காரங்களைச்செய்து, உத்திரவு பெற்றுக்கொண்டார்கள், சிந்தாமணித்தேவரும், ஸ்வாமிகளுடைய நியமநங்கொண்டு பீமாசங்கரி க்ஷேத்திரத்துக்குத் தம்முடன்கூட வந்தவர்களுடனே போய்விட்டனர்.

இதுநிற்க, மற்றோர் பிராமணன் தனக்குப்பொருள்வேண்டி ஞாநேசுவரஸ்வாமி ஸந்நிதாநத்தில் வைராக்கியமுடையவனாய் தவஞ்செய்துகொண்டிருந்தான். அவனுடைய தவத்துக்கிரங்கினவராகிய ஞாநதேவு, சொப்பனத்தில் ஒருநாள் எழுந்தருளி, நீ துக்காராம் ஸ்வாமிகளிடஞ்செல்வாயாகில் உன்னுடைய எண்ணம் நிறைவேறும் என்று சாதிக்க, பிராமணனும் அவர் பிரஸாதித்தபடியே தேவுகாமுக்கு வந்து, துக்காவைக்கண்டு, தான் தவமியற்றியதும், ஞாநதேவர் சொப்பநத்தில் தோன்றிப் பிரஸாதித்ததும் விளங்கவுரைத்தான். அவற்றைக்கேட்ட பரமபாகவதர், இதுவென்ன அவ்வவர்களிஷ்ட காமியங்களை நிறைவேற்றுவதே நமக்குந் தொழிலாய்விட்டது? நானோ நன்மைதீமைகள் அறியாதவன்; என்னையேன் வெளியுறுத்துகிறார்? பஞ்சகிருத்தியங்களை யேனமைத்தனர்? ஹரிஹரீ! பண்டரீராயா! என்னை இப்பேர்ப்பட்டதொழில்களிலிருந்துமன்னித்தருளவேண்டும்! என்று தம்மைத்தாமே நிந்தித்துக்கொண்டு, பிராமணரைநோக்கி, அப்பா! லோஹோகாமில் வளையல்பேரஞ் செய்யும் ஜீவாஜி என்பவரிடம்போய் உம்முடைய அபீஷ்டத்தை பெற்றுக்கொள் என்று நியமித்தருள, பிராமணனும் லோஹோகாமுக்குப் போய் ஜீவாஜியைக் கண்டு, துக்காராம் ஸ்வாமிகள் சொன்னவற்றையும், பூருவம் நடந்த விருத்தாந்தங்களையுஞ் சொல்லிக்கொள்ளும் போது அந்த ஜீவாஜியானவர், பிராமணசமாராதநம் நடந்து, தக்ஷிணை கொடுத்துக்கொண்டிருக்குஞ் சமயமாதலால் அந்தப் பிராமணர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருந்த தக்ஷிணைகாரியத்தை முடித்து

விட்டு, வந்த பிராமணர் சொல்லியவற்றைச் சாவதானமாய்க்கேட்டு, துக்காராம் ஸ்வாமிகளைத் தியானித்துக்கொண்டு, வந்தபிராமணனுக்கு நான்கு இரும்பு காருகளைத் தந்து போய்வாருமென்றுவிடைகொடுத்தனுப்பினார். அந்தப்பிராமணன் இருப்பங்காருகளைக் கண்டதே மனந்தளர்ந்து சோர்வடைந்து, நாமென்ன கருமஞ்செய்தோம்? இரவு பகலாகத் தவஞ்செய்தும் ஊரூர்சுற்றியும் இரும்புகிடைத்தது; இவற்றைக் கொண்டுபோய் துக்காவிடங்கொடுத்துவிட்டு நம்முடைய தீராவிதியைத்தொலைத்துக்கொண்டுஊர்போய்சேருவோம் என்றெண்ணி இருப்பங்காருகளைக் கட்டிச் சுமந்துகொண்டு தேஹூகாம் நோக்கி வராநிற்கையில், பளுவுவரவர அதிகமாய்கழுத்தையிருக்க, அதற்குச் சகியாமல் கீழேயிறக்கி, வழியிலிருந்த தன்னியா ரேகையென்னும் மலையில் ஓர்சந்தில் மூன்றுகாருகளைப் பத்திரப் படுத்திவிட்டு, ஒரு காரைமாத்திரம் எடுத்துக்கொண்டு தேஹூகாமுக்குவந்து, துக்காராம் ஸ்வாமிகளைவணங்கி நடந்தசங்கதிகளைச் தெரிவித்து, இரும்புகாரினை அவர்முன்வைக்கப்புக அது தங்கக்காராயிருந்தது. அவ்வதிசயத்தைப் பிராமணன்கண்டு, ஹரி ஹரீ! இது துக்காதேவருடைய மகிமை! நானிதையறியாமல் ஞானேசுவரர்மீதும், இஞ்ஞானித்தலைவர் மீதும் நிந்தித்துக்கொண்டேன்; தீய எண்ணமுங்கொண்டேன்; எனது கருமத்தால் இம்மகத்துவந் தெரிந்துகொள்ளாமற் போனேன்; இரும்பென்றே மதித்திருந்தேன்; அந்த மதிப்பினாலேதான் மூன்று காருகளையும் மத்தியமார்க்கத்திலிருந்த மலையில் வைத்துவிட்டு வந்தேன்; நான் கொடுத்துவைத்தது இவ்வளவுதான்போலும்! என்று சிந்தித்து, அங்குநின்றும், முன் மூன்று காருகளை வைத்த மலைக்கு வந்து, வைத்த சந்தில் பார்க்கும்போது அவையில்லாதிருந்தமையறிந்து, ஆவா! நம்கைக்குவந்தும் கொடுத்துவைக்காத பாபியானேன்; பகவான் எனக்குத் தங்கத்தைத் தந்தருளினார்; அதனை என்னறியாமையால் இழந்தவனாயினேன்; பகவான் காட்டுவார் ஊட்டவுஞ் செய்வாரா? இந்தவிடம் மநுஷியசஞ்சாரம் இல்லாதவிடம்; நமது கருமமானது அவைகளைமறையவைத்தது. பாபிகள் கடுந்தவமியற்றி தேவனைப் பிரசந்நமாகக் கண்டாலும் தங்கள் கருமத்தளவில் பலன் கிடைக்கப் பெறுவார்களல்லால் அதிகமடையமாட்டார்கள். கும்பகருணன் வெகுகஷ்டமான தவங்களை யியற்றி பிரமாவை ஸாக்ஷாத்காரமாகத் தன்முன் வரப்பெற்றபோது அவரிடம் தன்னுடைய கருமத்தளவாய பயனால், நித்திய தத்துவத்தையடையவேண்டும் என்று சொல்ல அவன்நாவிலிருந்து குழறுபாடாகி நித்திரை தத்துவத்தையடையவேண்டும் என்றுண்டானமையால் அவனுக்கு அதுவேபலித

மாயிற்றல்லவா? அதுபோல் கருவிலே திருவிலாதாருக்குப் பேராசை மீறினும் தவத்தளவே தநமுண்டாகு மல்லது அதிகமுண்டாகாது! என்று தன்னைத் தானே நிந்தித்துக்கொண்டு, மீந்த ஒரு காசு தங் கத்தைப் பத்திரப் படுத்திக்கொண்டு, துக்காராம் ஸ்வாமிகளை மந தில் சிந்தித்துக்கொண்டே தன்னுடைய ராஜ்ஜியம் போய்ச் சேர்ந்து வாழ்ந்துகொண் டிருந்தான்.

இங்ஙன நிற்க, ஜீவந்முக்தராகிய ஸ்ரீமத்துக்காராம்ஸ்வாமிகள், ஓர்நாள் பீமாநதியின் முகத்துவாரத்தில் ஸ்நாநஞ் செய்ய எண்ணங் கொண்டு, ஸ்ரீ ஹரி விடேலனை பஜித்துக்கொண்டு ஆநந்தபூரிதராய் போய்க்கொண்டிருந்தபோது, மத்தியில் ஓராரணியமுண்டு; அதில் ஆட்டுமந்தைகள் விசேஷம் மேய்வதுண்டு. அந்த ஆட்டுமந்தைகளுக் காக அவற்றைப் படைத்த இடையர்கள் ஒரு கறுப்பு நாயைக் காவல் வைத்திருக்கின்றார்கள்; அந்த நாயானது தன்னெஜமான்களுக்குப் பயப்படாமல் அவ்வழியிலே ஜநங்கள் நடந்தால் அவர்களுடைய தொண்டையைத் தாவிக்கடிக்கும். அதற்காக அவ்வழியே ஜெநங்கள் போவது தவிர்த்து, சுற்றிக்கொண்டு வேறு வழியிலே நடக்கத் தொடங்கினார்கள். இதை மெய்யர் அறியாதவராகையால் நிஷ்கபட ராய்ப் போய்க்கொண்டிருக்கையில் அந்தக் குரூரமான நாயானது உறுமிக் கொண்டுவந்து எகிறி குரலைப் பிடித்துக்கொண்டது. இக் கோரத்தைக் கண்ட குருஸ்வாமி துக்காராம் நாயை நோக்கி, 'உனக் கிருக்கும் சேட்டுமம் எனக்கில்லை' என்றுரைத்தவுடன் நாயானது கடியைவிட்டுக் கீழேயிறங்கி, ஸ்வாமிகளுக்கெதிரில் சிரசைவளைத்துக் கொண்டு முன்பாதங்களிரண்டையும் நீட்டி நமஸ்காரம்பண்ணுவதா யிருந்தது. இதனைக்கண்ட ஸாதுத்தலைவர் புன்னகையோடு அதற்கு ஆசீர்வாதஞ் செய்துவிட்டு, அவ்விடமிருந்து பிரயாணமாகி பீமாநதி க்குவந்து தீர்த்தமாடி, செய்யவேண்டிய கிரியாதிகளைச்செய்துமுடித் துக்கொண்டு, அவ்விடத்தில் இருந்துகொண்டிருக்கிற சிவ ஸந்நிதா நத்திற் புகுந்து, ஓர்மூலையில் ருக்குமணீரமணனைத் தொழுதுகொண் டிருந்து, சூரியன் நடுநிலை சாய்ந்தபின் பிரயாணப்பட்டு வந்துகொண் டிருக்கும்போது, வழியில் 'ராஞ்சநி' என்னும் கிராமமிருக்க, அந்தக் கிராமத்தில் புகுந்து போகிறபோது முக்காடிட்டுக்கொண்டு அக்கிராம வழியாகப்போகாநிற்க, ஓர்பிராமணன், அன்று தன்கிருகத்தில்பிதுரு தருப்பணமுடித்து, தளிகையிலைகளைப் பரிமாறி, அறுசுவைபதார்த் தங்களையும், பலகாரவகைகளையும், அந்நத்தையும்வட்டித்து, நீபாரா தனை செய்து, அதிதி அப்பியாதர்கள் யாராவது வீதியில் வந்திருக் கிறார்களா பார்த்து வருவோம் என்று வீதிக்கு வந்து பார்க்கையில்

துக்காராம் ஸ்வாமிகள் தனியே முக்காடு போட்டுக்கொண்டு வீதி யாரப்போய்க்கொண்டிருப்பதைக்,கண்டு,ஆவனுடையவராகப் போய் வீதியில் வீழ்ந்து திருவடிகளைப்பற்றி சேவித்துக்கொண்டு, என்பாக்கியமே பாக்கியம்! பூருவம் நானும் எனது பெரியவர்களுஞ் செய்த தவப்பயனால் இன்று தங்களை இங்கு சேவிக்கப் பெற்றேன்; இன்று வீட்டில் பெரியோர்களுக்குப் பிதுர்க்கடன் நடத்தினேன்; இன்று அடியேனுடைய அந்நம் தேவர் கர்ப்பத்தில் சற்று தங்கவைத்தருள வேண்டும்; கருணையோடு வந்து என் கிருகத்தைப் பாவநமாக்கவேணும், என் புநிதமூர்த்தியே! என்று இரண்டு கைகளையுங் குவித்தவனாய், உள்ளும் புறம்பும் நிஜவிசுவாசத்துடன் அழைக்கலாயினன். அந்தப் பிராமணனுடைய உத்தம அபிப்பிராயத்தை யறிந்த உத்தமோத்தமராகிய ஸ்வாமி அவனது பிரார்த்தனைக் கிசைந்து, உள்ளே புகுந்து பிரசாதப்பட்டு, கால்கை சோதித்துக்கொண்டு, சந்தநபுஷ்ப தாம்பூலங்களைப் பெற்று,ஆரோக்கியமாயிருந்தார்.அந்தச்சமயத்தில் அந்தப்பிராமணன் தன்னுடையஎட்டுவயதுள்ளஊமைப்பிள்ளையைக் கொண்டுவந்து கிடத்தி, தானுந் தீர்க்கநமஸ்காரஞ் செய்து நின்று, ஸ்வாமின்! எதியரசே! அடியேனுக்கு இவ்வொருவனே பிள்ளை, எட்டுவயதாயும் உபநயநமில்லை; ஊமையாயிருக்கின்றான்; என்கருமத்துக்கு என்ன செய்வேனென்று முறையமிட்டனன். அதனைத் திருச்செவி சார்த்தியருளின ஸ்வாமி துக்காராம், தமது கருணை விசேஷத்தால் அந்தப் பிள்ளையைப் பார்த்து, ஹரிவிட்டலா! ஹரிவிட்டலா என்று உரைக்கலாயினர். அந்தச்சிறுவனும் தாஸர் மொழிக்கு மறுமொழியாக, ஹரிவிட்டலா! ஹரிவிட்டலா! என்றுரைத்து, உடனே கைகளைத் தட்டிக்கொண்டு, ஸ்ரீமந் நாராயணா! கோவிந்தா! மாதவா! மதுசூதா! கேசவா! என்று பஜிக்கத்தலைப்பட்டான். இத்தனையெளிதிற் குழந்தையின் ஊமைநீங்கி பஜிக்கும் அதிசயச் செயலைக்கண்ட தாய் தந்தையரும், ஊராருமெல்லாம் ஓடோடியும் வந்து, சுத்த சத்துவ சொரூபருக்கு வந்தநங்கள் செய்து கீர்த்தித்தார்கள்.

பிறகு ஸ்வாமிகள் அவர்களுக் கெல்லாந் தக்க ஆசிகள் சொல்லி அவ்விடத்திலிருந்து பிரயாணப்பட்டு முன்வழியிலேதானே வருகிறபோது, முன் நாயானது அவ்விடத்திலேதானே வெகு சாந்தகுணமுடையதா யிருந்து, ஸ்வாமிகளைக் கண்டவுடனே கால்களை நீட்டி தலையிறங்கி நமஸ்கரித்துக்கொண்டிருந்தது. இடையர்கள் நாயின் செய்கைகளைக் கண்டு ஆச்சரியப்பட்டு, ஸ்வாமிக்குத்தாங்களும்நமஸ்காரங்களியற்றி, ஸ்வாமி! இந்நாயானது இனி எங்கள் காவலுக் குதவாது; தாங்கள் அழைத்துக்கொண்டு போகலாம்! என்றுரைக்க,

ஸ்வாமிகளும் அவர்களுக்கு மறுமொழி சொல்லாமல் திரும்பி வரும் போது நாயுங் கூடவே தொடர்ந்து, தாஸரோடு அவர் திருமாளிகை சேர்ந்து, அங்குதானே வசித்துக்கொண் டிருந்து, தாஸர் காலக்ஷேப த்துக்கு எழுந்தருளினுல் கூடத் தொடர்ந்து போவதும், காலக்ஷே பத்தில் தூரநின்று கேட்டுக்கொண் டிருப்பதும், மங்களார்த்தியான வுடனே தனது முன்கால்களை நீட்டி தலை சாய்த்து நமஸ்காரஞ் செய்துவிட்டு மறுபடியும் ஸ்வாமிகள் திருமாளிகை வந்து சேருவது மாயிருந்தது. ஏகாதசியன்று ஜலமும் அருந்தாமல் உபவசித்துக் கொண்டிருந்து, இரவில் ஜாகரஞ் செய்து மறுநாள் பாரணை செய் துண்ணும். இந்நாயின் அரிய செயல்களைக் கண்ட ஜெகதாசாரிய ராகிய துக்காராம் ஸ்வாமிகளைக் கொண்டாடினார்கள்.

அநந்தரம், ஏலவடம் என்னும் கிராமத்தில் வசிக்கும் ஸ்வாமி களுடைய மருமகப்பிள்ளையாகிய மால்ஜி என்பவர், தமது மாமனுரா கிய துக்காராம் தேவர் திருவடியில் வந்து சேவித்து, என்னுடைய தேகம் நிலையில்லாததெனக் காணுகிறது; ஆகையால் தங்களிடம் பகவத்பக்தியி லீடுபட்டு உய்யவந்தேன்; கடாக்ஷித் தருளவேண்டும் என்று பிரார்த்தித்து நின்றனர். தாஸர் அவருடைய ஒருமைப்பாட் டைக் கண்டு, பகவற்கீதையை அவருக்குக் கொடுக்க, அவரும் அந் தக் கீதையைப் பெற்றுக்கொண்டு தம்முடைய வீடுபோய் சேர்ந்து, இரவும் பகலும் பாராயணஞ் செய்துகொண்டே யிருந்தார். இதனை அவருடைய கிருகபுரோஹிதர் பார்த்து, நீர் பிசக்காக வாசித்து வரு கிறீர்; அப்படிப் பிழையுற வாசிப்பதினுல் பாபமுண்டாகும் என்று சொல்ல மால்ஜிகேட்டு அச்சமுற்று, கீதை பாராயணத்தைத் தவிர்த் திருந்தார். அன்றிரவில் ஸர்வலோகசரண்ணியன் புரோகிதனுடைய சொப்பநத்தில் தோன்றி, மால்ஜி பாராயணஞ் செய்துகொண்டுவந்த லதத் தடுத்தீர்; இவ்வகைய பாராயணத்தால் தோஷமென்று உரைத் தமையால் அவரும் தவிர்த்தார்; அவருடைய பக்தியைக் கெடுத்து வைத்தீர்; உமக்கேனும் பிழையற வாசிக்கத்தெரியுமா? வேதக் கருத் தறிவீரா; வேதமே பகவானையறியாமல் மயங்கிநிற்க உனக்குளெல்லாம் தெரிந்ததுபோல் உரைக்கலாமா? விடிந்தவுடனே மால்ஜியினிடம் போய் முன்போல் கீதையைப் பாராயணஞ் செய்துகொண்டு வரும் படிச்சொல்வாய்! என்று சாதித்து மறைந்தருளினுர். புரோகிதனும், விடியற்காலை யெழுந்து சொப்பநத்தை நினைந்து பயந்து மால்ஜீ என் பவரிடம் வந்து, கீதையை விடாமல் முன்போல் பாராயணஞ்செய்து கொண்டுவாரும் என்றுரைக்க, அம் மால்ஜீ புரோகிதரைப் பார்த்து, ஸ்வாமி! நேற்றுவந்து கீதையைப் பாராயணஞ் செய்வதினுல் பாபம்

என்று சொன்னீர்; இன்றுவந்து விடாமல் பாராயணஞ் செய்து கொண்டுவா என்கிறீர்; இப்படிச் சொல்லுவதற்குக் காரணமேதோ தெரியவில்லை; அதனை விளங்கவைக்கவேண்டும் என்று விரும்பி நிற்கக்கண்டு பௌரோகிதர், ஸ்வாமி என்னுடைய சொப்பநத்திலே ராத்திரி தோன்றி, பகவற்கீதையை விடாமல் பாராயணஞ் செய்துவர உமக்கு அறிவிக்கச்சொன்னார் ஆகையால் சொன்னேன்; நீர் அதனை வாசித்துக்கொண்டுவாரும் நான் திநதிநம் வந்து பிழையின்றிச் சொல்லிக்கொண்டு வருகிறேன் என்று சொல்லி, நான்குமாச காலம் புரோகிதர் தாமேவந்து சொல்லிக்கொடுத்து, பூரணமாய்க் கற்பித்து வைத்தார். மால்ஜீயும் அந்தப் பாராயணத்தைச் சதா நிறைவேற்றிக்கொண்டிருந்தார்.

இவ்வாறிருக்க, மெய்யன்பினராகிய ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகள் அன்றன்றுடம் காலக்ஷேபங்களிலும் மற்றசமயங்களிலும் இயற்றி வரும்படியான அபங்கங்களை, ஸ்வாமியின் பிற்புறமே சதா வசித்துவாழும் பிராமணபண்டிதராகிய ராமேசுவரபட்டர் எழுதிக்கொண்டுவருவதுண்டு. ஒருநாள் தாஸர், ருக்குமணீபதியாகிய ஸ்ரீ கண்ணபிரானது திருக்கலியாணகுணங்களின் லீலைகளைவிலாசமாகச் சிறப்பித்து அபங்கங்களில் அமைத்துப் பாடிக்கொண்டுவரும்போது அவற்றையெல்லாம் எழுதிக்கொண்டே வந்து, ஒரு அபங்கத்தில் மாத்திரம், 'சுவாமியினுடைய திருவதநம் வதங்கி,மங்கலாயிருந்தது' என்று தாஸர் அமைத்துப் பாடினதில்,ராமேசுவரபட்டர்,பகவானுடைய திருமுகமானது எப்போதும் குளிர்ச்சிபொருந்தி விகாசமாயிருக்குமென்று வேதசாஸ்திரங்கள் சொல்லாநிற்க இந்தஸ்வாமி இவ்வகை சாதித்தருளினார். இதனைத் தெரியவிடாமலேயே திருத்தமாயெழுதி வைக்கவேண்டும் என்று எண்ணினவராய்க்கொண்டு,அடியரில்தலைவராகிய துக்காராமரைக் கேட்காமலும் அறிவிக்காமலும், "மாலின்னியமில்லாததாய் அன்றலர்ந்த தாமரைபோல் விகாசமுடையதான திருவதநம்" என்று திருத்தி அபங்கத்தை யெழுதிவைத்தனர். அன்றிரவில் மகாபண்டித ரத்தினமாகிய ராமேசுவரபட்டருடைய சொப்பனத்தில் சுயஞ்சோதியாகிய பண்டரீவாதன்தோன்றி, ஏ பண்டிதரே! நமது பாண்டித்திய விசேஷத்தால் நமது தாஸர் துக்கா செய்த அபங்கங்களில் ஒன்றைத்திருத்தி யெழுதிவைத்தீர்; அதாவது வதங்கிய மலிநமுகமென்றுள்ளதை மலிநமில்லா விகாச முகம் என்று திருத்தினீர்; அவருரைததசேரி; கிருஷ்ணனுயாம் திருவவதாரங் கொண்டபோது பாலியதெசையில் வீதியிலிருந்த மண்ணை யுண்ண, எனது தாயாகிய அசோதைப்பிராட்டி தம்மவிரல்

களை என் வாயில் நுழைத்து மண்விழித்தபோதும், வேம்புமஞ்சள் முதலியவற்றை யரைத்து வாயில்தடவி நாவினழுக்கங் கழற்றிய போதும் என்னுடையமுகம் வாட்டம்பெருது தழைதழைத்தாயிருந்தது? அந்தச்சமயங்களில் காலால்தள்ளுவதும், கையால் நூக்குவதும், உடம்பு திமிர்வதும், அழுவதுமாயிருந்தனனே; வாட்டமின்றிக் கூம்புமுகத்தனனுயின் இவற்றைச் செய்வனே? வாட்டமுற்றேயிருந்தேன்; தாஸர் பிரத்தியக்ஷமாய் சாக்ஷாத்கரித்தவர்போல்தமது தக்க ஞானக்கண்களாலே காண்பவராதலால் அம்மெய்ம்மை விளங்கவுரைத்தனர்; அதனை நீ மாற்றியதடாது; இனியவ்வாறு செய்ய வேண்டாம்;என்மீதுகொண்ட பேரவாவினராய்எதுரைப்பினும்பக்த கோடிகள் அவையெல்லாமொக்கும் எனக் கொள்ளுவேன்; ஆவல் மிகுக்காமல் சங்கீத சாகித்தியங்களோடு வீணை முதலானவற்றோடு எவ்வளவுதான் வருணிப்பினும் பிரியங்கொள்ளேன் என்று சாதித்து மறைந்தருளினர். உடனே பட்டரும் நித்திரைநீங்கி யெழுந்து உட்கார்ந்துகொண்டு, சொப்பனத்தை நினைந்தவராய் பயமிகவடைந்து என்ன யோசிக்கின்றரெனில்:—தருமஸமஸ்தாபநாதிகளுக்காகஸ்ரீமந் நாராயணன்செய்யும்அவதாரங்கள்தோறும்,இந்தத்துக்காராம்ஸ்வாமிகளுங் கூடவேதான் திருவவதரஞ் செய்து வருகின்றர்போல் காணுகின்றது. அதனால்தான் அச்சுதன் நமதுகனவில் எழுந்தருளி அவ்வாறுரைத்தருளினது. பாலியத்தில் கண்ணன்மண்ணையுண்டபோது ஏதோ யசோதாதேவியால் முகமிரங்கிக் கண்டதுண்மையே. இதனை நாம் யோசியாமல் அபங்கத்தைப் பிழையென எண்ணினோம். இனி, மெய்யராகிய விமலாத்துமசொரூபர் இயற்றுங் கவிகளையுள்ளபடியே முடிப்பதுநலம்; இவர் ஸாதிக்குமவையெல்லாம் ஸத்துடையனவாகவே யிருக்கத் தடையிராது என்று பெருமிதைநினைந்து, மநதில் திடப்படுத்திக்கொண்டு, கீழேதாம் அபங்கத்தின்கருத்தைப் பிசகெனநினைத்து மாற்றியதும், சொப்பனத்தில் தொல்புகழ் வானவர் கோமான் தோன்றி சிக்ஷித்ததும், அங்கிருந்த கோஷ்டியாருக்கெல்லாம் விளங்கச்சொல்லி, அவர்களோடொக்க ஆநந்தம் நிரம்பினவராயிருந்தார்.

பிறகு சிலநாள்கழித்து, கொத்தளேசுவரம் என்னுங்கிரியில் பார்வதிசமேதராய் நித்தியவாசம்பண்ணும் ஜம்புகேசுவரரைத் தரிசிக்க துக்காராம்ஸ்வாமிகள் ஆவல்கொண்டு, பிராமணகெங்காஜிமவாளியுடனும், வாணியசந்தாஜியுடனும் புறப்பட்டுப் போய்க்கொண்டிருக்கிறபொழுது, வழியில் இராவட்டமிறங்கும் சத்திரங்களில் கீர்த்தனைபாடி பஜனை காலக்ஷேபங்களைமுடித்து, விடியற்காலை மங்க

ளார்த்திசெய்துஉடனே அவ்விடத்தைவிட்டுப்புறப்பட்டுவழிநடந்து போவதுண்டு. இப்படி ஆறுநாள் நடத்திக்கொண்டுபோய் ஏழாவது நாள் கிரியின் சிகரம் காணப்பெற்று வீழ்ந்துசேவித்துக்கொண்டு, எது முதல்காணப்பட்டதோ அங்குநின்றும் பஜனை செய்துகொண்டே போய் மலையடிவாரத்தில் கணபதிபுரம் என்னும் ஸ்தலத்தைச் சேர்ந்து,அவ்விடத்திலிருக்கும் தடாகத்தில் ஸ்நாநஞ்செய்து,நித்திய விதிகளை முடித்துக்கொண்டு,தளிகைக்கெத்தநித்து, வாணியசந்தாஜி கடைக்குப்போய் சாமக்கிரிகைகளை வாங்கிக்கொண்டுவர, பிராமண கெங்காஜி தளிகைமுடித்து வைத்தார். அப்போது தாஸர் மஹா தேவருடைய பிரபாவங்களை வருணித்துக்கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில், அந்தக் கிரிவாசியாகிய சிவகாமிநேசராகும் நீலகண்ட மூர்த்தியானவர், ஜடாமகுடதாரியாய், திகம்பரரூபியாய்,மேனிவெங் குந்திருநீறுதுலங்க,பூரணசந்திரோதயம்போன்று திருவதநங்குளிர்ச்சிபெற்றுவிளங்க உருவெடுத்துக்கொண்டுவந்து தாஸர்முன்னின்று, சம்போ! மஹாதேவா! சாம்பசிவா! என்றுரக்கச் சத்தித்து, நமக்குப் புசிப்புக்கிடைக்குமா? என்றுகேட்க, இவருடைய வரவைத் தெரிந்து துக்காதேவர், எழுந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, சங்கரா! தேவோத்தமா! தாங்கள் அதிதி, இவ்விடம் போஜநஞ் செய்யலாம் வாரும் என்று உபசாரமரியாதைகளுடனே ஆதரித்து உட்காரவைத்து, கெங்காஜியைக்கொண்டு சாதம்பரிமாறச்செய்ய, அவரும் உபசாரத்துடனே பரிமாற, மூவருக்குண்டான அந்நமும், அதற்கேற்றபதார்த்தங்களுமுண்டு முடிந்தபின்னெழுந்து, தாஸரால் கொடுக்கப்பெற்ற ஜலத்தால் கைகால்களைச் சோதித்துச்கொண்டு, சந்தந-தாம்பூலாதிகளைப்பெற்று அணிந்துகொண்டு, ஹர! சதாசிவ! என்றுரைத்து, தாஸர்தமது பாதங்களில் வீழ்ந்துசேவித்து அடிகளை யெடுத்துச் சிரசில் வைத்துக்கொண்டு எழுந்துநிற்க அவர்பால் சந்தோஷங்கொண்டு, நீ என்றென்றும் நித்தியகலியாணகுணங்களை யநுபவித்துக்கொண்டே யிருப்பாயாக என்று ஆசீர்வாதஞ்செய்து போய்விட்டார். அவர் போய்விட்டபிறகு பிராமணராகிய கெங்காஜி யானவர் வாணிய சந்தோபாவைப் பார்த்து, நம்மூவருக்காகச் சமைத்து வைத்தவைகளில் ஒருபற்றுங்கூட இல்லை; எல்லாமவருக்குஅர்ப்பிதமாயிற்று என்று சொல்லவே சந்தோபாவும், வேறுதளிகைக்காகவேண்டிய சாமான்களைக் கடையில்நின்றும் வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தார். அவைகளைப் பெற்றுக்கொண்ட கெங்காஜியானவர் முன்தளிகைபண்ணினபாத்திரங்களைச்சுத்திபண்ணி, சீக்கிரமே மறுசமையல்பண்ணி ஸ்வாமிக்கு ஸாதிப்போமென்று நினைத்து

உள்ளேபோய் பாத்திரங்களைப் பார்க்கிறபோது, அந்தப் பாத்திரங்களிலெல்லாம் முன்செய்த பதார்த்தங்களும், அந்நமும் எவ்வளவோ அவ்வளவிற்குக் குறையாமல் பூரணமாயிருக்கக்கண்டு ஆச்சரியப்பட்டு, வந்தவர் பரமசிவமே என்று நினைத்து, ஹரி ஹரீ! என்றுச் சரித்துக்கொண்டு, இவ்வரிய இருப்பைப் பார்த்தீர்களா! என்று தாஸரிடமும் சந்தாஜியிடமுஞ்சொல்ல, தாஸரும் ஆநந்தங்கொண்டு, சிரத்தின்மீது இருகரங்களையுங்குவித்துக்கொண்டு,விட்டலா! உனது திருவிளையாடலைத் தெரிந்துகொள்ள என்னாலாகுமா! ருஷிகளும், முநிகளும் தேவர்களுமே நினது பெருந்தகைமைகளை யறிந்து கீர்த்திக்குமவர்கள்; யானோ அல்பன், அஞ்ஞன்; அடியேன்மீதும் பரமமான திருவருளிருத்தி, பரமசிவத்தின் திருக்கோலத்தால் சேவை ஸாதித்தருளினீர்; அந்நமுண்டேகினீர்; உமதுசுயமான ரூபத்தைக் கண்டு தெரிசிக்க அடியேன் பாத்திரவானல்லாமைக்காக மாறுருதரித்து சிவஞாநியா யெழுந்தருளினீர், அந்தக்காட்சி காணவிடுத்தீர்; கைவல்லியத்தண்ணலே! என்று கீர்த்தித்து, அவரிருக்கும் கோத்தளேசுவரமலையை நோக்கி தீர்க்கதண்டம் இயற்றியருளினார். கெங்காஜியும், சந்தாஜியும், வந்தவர் சடைமுடியண்ணலாகிய பரமசிவமென்று அறிந்துகொண்டு, நமதுஸ்வாமி துக்காராம் மறுவேஷத்துடன் வந்தபோதே அவரைப் பரமசிவமென்று அறிந்துகொண்டு தான்வேண்டிய வந்தனவழிபாடுகளெல்லாஞ்செய்து உபசரித்தருளினார். நமதுகருமம் நமக்குத்தெரியவிடாமல்போயிற்று; இவர்சாக்ஷாத் தேவசொரூபி; நம்மையும் இவ்வுலகத்தையுங் கடைத்தேற்றுவித்தற்காக, துக்கா என்னும் பெயரால் மானிடரூபங்கொண்டு வந்திருக்கின்றார்; இவ்வருமை சற்புருஷருடைய ஸ்ரீபாததூளி நம்மீது பட்டுவருவதும், ஸேவைகிடைப்பதுமே நாம்பூருவஞ் செய்த புண்ணிய பூஜாபலன்களாகும்; இவருடைய சேவையால் சகல தேவதைகளையுஞ் சேவித்தபலமுண்டாகும்; இவரால் நடந்துகொண்டுவரும் அற்புதங்களை நாம்கண்டதுங் கேட்டதுமில்லை என்றிவ்வாறெல்லாம் களிப்புடை யின்சொற்களைப் பேசிக்கொண்டு,ஹரிவிடேல்! பண்டரீநாதா! என்று ஸ்துதித்து, அமலராகிய தாஸர் நியமநத்தின்படி மூன்று தளிகையிலைகளையும் சமமாயிட்டுக்கொண்டு, மஹாதேவரால் பிரசாதிக்கப்பட்ட அந்நத்தையும் பதார்த்தங்களையும் பறிமாறிக்கொண்டு, நல்லுச்சாரங்களுடனே யுண்டு, கைகால்களைச் சோதித்துக்கொண்டு, சுவாமி ஜகந்நாதனை பஜித்து, கோத்தளேசுவர கிரிமேலேறிஸந்நிதாநத்திற்புகுந்து, ஐம்புலிங்கேசுவரரைத் தரிசித்துப் பணிந்து, காவடி அபங்கமென்னும் ஓர்விதக் கவிகளைப் பாடி ஆநந்த

பரிதராய், ஆலயத்தின் பிலத்துவாரத்தருகில் ஐந்துநாள்வரையில் வசித்திருந்து, பஜனை காலக்ஷேபங்கள் நடாத்தி, ஆறுவதுநாள் அங்கு நின்றும் பிரயாணப்பட்டு மூவரும் கிரமநடையுடன் வந்து ஊர் சேர்ந்தார்கள்.

உலக உத்தாரகராகிய துக்காராம் ஸ்வாமிகள் வரவைபாகவத கோஷ்டிகளும் ஊர் ஜநங்களுமறிந்து வந்து சேவித்துக்கொண்டு, அன்றிரவு பஜனை செய்துகொண்டிருந்தபோது, விதேகர் ஒரு அபங்கஞ் செய்து, அதின் வியாக்கியாநத்தை விசதீகரிப்பதாவது—பண்டரிநாதனை பயபக்திவிசுவாசங்களுடனே எண்ணி தங்கள் சங்கற்பங்கள் யாவையும் அவனுடைய திருவடிகளில் அர்ப்பனஞ் செய்தவர்களாய் தாங்கள் நடக்கும்போது அடிக்கடி விடோபாவை இதயத்திலெண்ணி, அவனுடைய திருநாமங்களைஉச்சரித்துக்கொண்டேநடப்பார்களாகில் அவர்களுக்கு ஓரடிக்கு ஒரு யக்கியத்தின் பலனுண்டாகும் என்று வியாக்கியாநஞ் செய்துகொண்டு வந்தார். அந்த வியாக்கியாந வுரைகளை அங்கிருந்து கோஷ்டிகளெல்லாருங்கேட்டுக்கொண்டு வந்ததில், அவர்களிலொருவராயிருந்த லோஹோகாம்வாஸிபிராமணரொருவர் ஆச்சரியங்கொண்டு, இதை எவ்வாறு பரிக்ஷிக்கலாமென்றெண்ணி, (சணற்பனுர்) கயிறுசம்பாதித்து வைத்துக்கொண்டு, தாம் நடக்கும்போதே விடோபாவினுடைய திவ்விய நாமத்தை உச்சரித்துக்கொண்டு நடந்து, ஒவ்வொரு அடிக்குஒவ்வொரு முடியாகப் போட்டுக்கொண்டே வந்து, முடிபோடுந் தொழிலுடையவராயினர்.

அந்தப் பிராமணன் இவ்வாறு செய்துகொண்டு வராநிற்க, வேறொரு நாட்டில் ஒரு பிராமணனைப் பிரமராக்ஷஸ்ஸு பிடித்து, மெத்தவும் சிரமைகளைப் படுத்திக்கொண்டு வராநிற்க, அவனுடைய பாத்தியஸ்தர்கள் அந்தப் பிரமராக்ஷிசி நீங்குமாறு தங்கள் குலதெய்வங்களுக்குக் காணிக்கைகளை யெடுத்துக்கட்டியும், தீர்த்தயாத்திரைகளையும்க்ஷேத்திரயாத்திரைகளையுஞ்செய்வித்தும்,சந்நிதானங்களின் வலம்வருவித்தும், நெய்தீபங்களேற்றியும், மாந்திரிகர்களைக்கொண்டு மந்திரிக்கச்செய்தும் அவற்றாலந்த ராக்ஷஸி நீங்காமல் அதிகபொருள் மாத்திரஞ்செலவானமைகண்டுவெறுத்து, ஹரிஹரேசுவரம்கொண்டு போய் விரதாநுஷ்டாநங்களோடு சேவிக்க வைத்துப் பார்ப்பது அங்குந் தீராவிட்டால் விட்டுவிடுவது என்றெண்ணி, ஹரிஹரேசுவரத்துக்குக்கொண்டுபோய் விரதத்திலிட்டு, அங்கெழுந்தருளியிருக்கும் சக்கரதரனைச்சேவிப்பித்தும்நீங்கினதல்ல. அவர்கள் மாளாத்துயரங்களிலாழ்ந்து மறுபடியும் தங்கள் கிருகத்திற்குக் கொண்டுவந்துவைத்துப் பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள். இப்படியிருக்க, சிலநாள்

போகவிட்டு அந்தப் பிரமராக்ஷசியானது அவ் வந்தணனி லிருந்தே ஆவேசமாய், "யஞ்ஞ பலன் சம்பாதித்திருக்கு மவர்கள் யாராவது தங்களது அந்த யாகபலனைக் கொடுத்தால் நானிவனைவிட்டு நீங்கிவிடு வேன்" என்று சொல்லியது. அதனைக் கேட்ட பிராமணனுடைய தாய் தந்தையர் சுற்றத்தார் முதலானவர்கள், இதற்கென்ன செய்ய லாம்? நம்முடைய பிரதேசத்திலே யார் எக்கிய பலன் சம்பாதித்த பிராமணர்க ளிருக்கிறார்கள்? எங்குதேடலாம்? என்று சிந்தித்துமுடி வுக்கு இதுவுமொரு ஆசை பார்ப்போம் எனத் துணிந்து சிலரோடு கூட்டி அவ்வாக்கசி பிடித்த சிறுவனை யனுப்பி, தேசங்களிலுள்ள அக்கிராரங்களில் ஒவ்வொரு நாளாய் தங்கி விசாரிப்பது பிறகு விதி யின்படி முடிகிறதென்று துணிந்தனுப்பினார்கள். அவர்களும் ஊரூரி லுள்ள அக்ராரங்கள்தோறும் போய் பிராமணர்களை விசாரித்தும் யாரும் யாகஞ்செய்து பலனைப்பெற்றவர்கள்காணுமையாலே முடிவில் லோஹோகாமுக்கு வந்து தங்கினார்கள். அவர்களையும் ராக்ஷசி பிடித்த பிராமணனையும் அந்த ஊர்பிராமணர்களெல்லாரும் பார்த்தது போலவே முன் துக்காராம் ஸ்வாமிகளுடைய வசநங்களின்படி விடோபாவை ஸ்மரித்துக் கொண்டு நடக்கும்போது ஒவ்வொரு அடி க்கு ஒவ்வொரு முடி போட்டுக்கொண் டிருக்கும் பிராமணரும் பார்த்து, அவர்களுடைய வாய்பிறப்பைக் கேட்டு, ஆவா! இது நல்ல தருணமா யிராநின்றது. நம்முடைய ஆசாரியசுவாமி துக்காராம் ஓர பங்கத்தின் வியாக்கியாநத்தில் சாதித்தருளின விசேஷத்தை இப் போது சோதித்துப் பார்ப்போம் என்று எண்ணினவராய், அவ்வாக் கசி பிடித்த பிராமணனிடம் போய், அதின் கொரேத்தைக் கண்டு இதக்கங்கொண்டு, தாம் முடிகள் போட்டுக்கொண்டுவந்த கயிற்றை யெடுத்து, துக்காராம் ஸ்மாமிகளை மநதில் நினைத்துக்கொண்டு, ஒரு முடியை யவிழ்த்து, ஜலங்கொண்டுவரச் சொல்லி இதில் வந்த யாக பலனை இந்தப் பிரமராக்ஷஸி யநுபவிக்கக்கடவதுஎன்று தாரைவார்த் தார். பிரமரக்ஷகம் அந்தப் பலனை யேற்றுக்கொண்டு உடனே சிறு வனைவிட்டு நீங்கிவிட்டது. சிறுவனும், நீங்காமல் நீண்டநாளாயிருந்த ராக்ஷஸி நீங்கினவுடன் மூர்ச்சைகொண்டு பூமியில் சாய்ந்து, தன்னை யழைத்துக்கொண்டு வந்தவர்கள் தேற்றத் தெளிவடைந்து, தம் முடைய பிரம ராக்ஷசியை விலக்குவித்த பிராமணரை வீழ்ந்து சேவித்துக்கொண்டு மற்றவர்களையும் அவ்வாறே பணிந்து சந்தோஷ சித்தரா யிருந்தார். இதனைக் கண்டவர்களுங் கேட்டவர்களும் ஆநந்த மெய்தினவர்களாய், ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகளுடைய பிரபாவ குணங்களைக் கொண்டாடினார்கள்.

இதுநிற்க பண்டரீபுரத்தில் ஆஷாடகார்த்திகை ஏகாதசிமஹோத்ஸவகாலம் நெருங்கியபோது துக்காராம் ஸ்வாமிகளுக்கு சீதச் சுரங்கண்டு அதனால் திருமேனி மிகவும் மெலிவுகண் டிருந்தது. ஆதலால் தமது வார்க்கரி பிருதுகொண்டு பண்டரீபுரம்போகத் தடையாயிருந்தது. அப்போது பண்டரீபுரத்து வார்க்கரிகளில் ஆயிரத்திஞ்னூறு பேர் கூடி விஷ்ணு தாஸரிருக்கும் தேஹூகாமுக்கு வந்து, இவரைச் சேவித்து, தாங்கள் வழக்கப்படி வரவில்லையா? என்று கேட்க, தாஸர் அவர்களைப் பார்த்து, இந்தத் தடவை விடோபாவின் தரிசனஞ் செய்யப் பாத்திரவா னாயினே னல்லேன்; இந் நோயானது உன்னைத் தரிசிக்க விடேன் என்று என்மீது துவேஷங் கொண்டிருக்கிறது; என்னுடைய கன்மம் என்னைவிட்டு நீங்கேனென் றிருக்கிறது; அதனால் பகவானைச் சேவிக்கப் பிராப்தனல்லா திருக்கிறேன்; இனி யென் செய்வேன்? என்று தத்தளித்து, இரண்டு கண்களிலிருந்து ஜலம் பெருகவிட்டு, ஆருமை மிகுத்தவராய், 'சந்திரனைக் காணுச் சகோர பக்ஷிபோலவும், மேகத்தைக் காணுச் சாதகப் புள்போலவும், தாயை நீங்கின குழந்தை போலவும், பொருளிழந்த உலுத்தன் போலவும் கதறி ஆயாசமுற்று, நம்முன்னோர் தொடங்கி வார்க்கரி பிருதுபூண்டு பெரியவர்களையும் பேரருளாளனையுஞ் சேவித்துக்கொண்டு வந்து, நம் காலத்தில் இத்தகைய சுத்த கார்த்திகை ஏகாதசியின் பெருவிழவைச் சேவிக்கத் தவிர்க்கப் பட்டது; புண்ணிய மில்லாத பாபியானமையால்தான் அப் பெருத்த சேவை யிழக்கப் பெற்றேம் என்று துக்காக்கிராந்தராய், இருபதினன்கு அபங்கங்களையும், ஒரு நிருபத்தையு மெழுதி வந்த வார்க்கரிகளிடங் கொடுத்தருளினர். அந்தக் கடிதத்தின் அபிப்பிராயமாவது,—

ஹரிஹரீ! ருக்குமணீரமண! எனது உடல் பொருள் ஆவிகள் மூன்றையும் உம்முடைய திருவடிகளில் ஸமர்ப்பித் திருக்குமதை நீயே நன்கறிவாய்; இப்போது சுரத்தால் வாதை யடைந்துகொண் டிருக்கின்றேன் நடந்து வந்து உன்னைச் சேவிக்க சக்தியில்லாதவனு யிருக்கின்றேன்; நீயோ! செங்கல்லின்மீது சமசரணுக நின்றுகொண்டு எண்பது லக்ஷம் வார்க்கரிகள் மீதெல்லாம் திருவுள்ளம்பாரித்து ரக்ஷித்து வருகின்றனை; அவர்களில் அடியேனு மொருவன்; திருவுள்ள முகந்து ஒரு படி யிறங்கிவந்து காட்சிதந்தருளப் பிரார்த்திக்கின்றேன்; உன்னைத் துதிசெய்ய சக்தனல்லேன்; மகாரிஷிகளெல்லாரும் வேதகீதங்களைப் பாடித் துதித்தும் அவர்களுக்கே துதியின் பூர்த்தி தலைக்கட்டவில்லையென்பார்கள்; உன்னுடையலீலாவிலாசங்களை யறிந்து கொண்டவர்கள் அல்லாதவர்களாயும் ஆகின்றார்கள்; அவர்

கட்கேயஃதாயின் பாமரனுகிய தமியேனுக்குக் கேட்பானேன்? அடியேனுக்கு தற்கால மிருக்கின்ற ஸ்திதி நீவிரேயறிவீர்; அநந்த ஜடங்களைப் பற்றியுள்ள ஜீவர்களுக்கு ஆதாரமூர்த்தியா யிருக்கின்ற நீவிர் அடியேனை மறந்திருப்பதற்கு ஏதுவறிகிலன்; இந்த சாது ஜெநங்களை யேதுக்காக அடியேனிடம் வந்து அழைக்கச் செய்தீர்? இதனுல் என் மநம் தத்தளியா நின்றது; இவ்வளவு சங்கோசமுடைய என்னை யேன் ஜெனிக்க வைத்தீர்; குழந்தை பரிதபிப்பதைத் தாய் தந்தையர் பார்த்துச் சகிப்பார்களா? தன் குட்டியானது பரிதபிக்கத் தாய்மான் ஓடித் திரியுமா? அதுபோல் அடியேனுக்குத் தாய்தந்தைக ளாகிய நீங்கள் அடியேன் பரிதாபங்கொண்டு அலைவதுகண்டு பொறுத்திருக்கக்கூடுமோ? உங்களையல்லால் தாய்தந்தைகளென்று வேறொருவரைச் சாருவனே? நீரையகன்ற மச்சம்போல் அலமருகின்றேன்; இவ்விண்ணப்பத்தைக்கொண்டு தேவரிடம் வரப்பட்ட சாதுக்கள் அனைவரும் அடியேனுடைய தேகஸ்திதியை நன்கறிந்தவர்களானதால் இவர்கள் சொல்ல அறியலாவீர்; அடியேன் தேவருடைய திருவடிநிழலில் ஒதுங்கியிருக்கப்பட்டவன்; இந்தச்சரணம் தேவர்க்கு அர்ப்பிதமாகக்கடவது என்று எழுதி, எழுந்து பூமியின்மேல் சாஷ்டாங்கமாக வீழ்ந்து சேவித்து, இருகண்களி லிருந்தும் ஜலம் பெருகவிட்டு, புரண்டு புரண்டு அழுது, ஹா! பண்டரீநாதா! பக்தவற்சலா! விடேல்! என்று குழறிக்குழறிச் சத்தித்து அலரினர். அந்தக்கோரத்தை வந்த வார்க்கரிகளாகிய சாதுக்கள் சகிக்கக் கூடாதவர்களாய், ஐயோ! நம்மாலிவருடைய பிணியைப் போக்கி சுவாமி சேவைக்கு அழைத்துப் போக முடியாதே! என்ன செய்யலாமென்று கண்களில் நீர்பெருகத் தாங்களும் தாஸரோடு துயர்கொண்டார்கள். அப்போது வைணவத் தலைவர், அவர்கள் கையில் தம்ம அக்காகிதங்கொடுத்து, தாங்கள் விடோபாவினருகிற் சென்று இவ் விண்ணப்பத்தை விளங்கவோதி, துக்கா தேவரீருக் கென்ன அபசாரஞ் செய்தான்; அவனை யேன் ஒதுக்கி வைத்திருக்கின்றீர்? என்று கேட்க வேண்டியது; அதற்கு அவர் பிரதி சொல்லுமதை அடியேனுக்குத் தெரிவிக்கவேண்டியது; ருக்குமணீரமணன் கிருபை செய்தருளுவா ராகில் அடியேனு மோடிவந்து அங்கெழுந்தருளி யிருக்கும் சந்த ஜெநங்களைச் சேவித்து ஆநந்தங்கொண்டு கீர்த்தனைகளைப் பாடி நிருத்தங்களுஞ் செய்வேன் என்று சொல்லி, வந்த அவ்வார்க்கரிகளுடைய திருவடிகளில் வீழ்ந்து சேவித்து விடையளித் தனுப்ப; அவர்களும் இவரைவிட்டுப் பிரியமநமில்லாமல் மெதுவாக நடந்து செல்லுமதை யறிந்த துக்காராம் சற்று அவர்களைத் தொடர்ந்து போய் தடத்தில் நின்று பண்டரீபுரத்தின்

திசையைநோக்கி நமஸ்கரித்தெழுந்து சுவாமியை மநதில் நினைத்து தியாநித்துக்கொண்டிருந்தார். ஆயிரத்தினூறு வார்க்கரிகளும் அவ்விடத்தைவிட்டு நீங்கிப்போம்போது தம்புரு - தாளம் -மத்தளம் முதலியவற்றைச் சேவித்துக்கொண்டு; ஆகாயமளவத்தக்க பெரு மிடறுகளால் கீர்த்தனைகளைப்பாடிநடநங்களைச் செய்துகொண்டு வழி நடக்கலுற்று, சுவாமி விட்டலதேவனுடைய திருக்கோபுரத்தின் சிகாதரிசநங்காணும் பிரதேசத்தில்கற்பூர தீபாராதநஞ்செய்து எல் லோரும் பூமியில் விழ்ந்துசேவித்து எழுந்து, ஒருவருக்கொருவர் ஆலிங்கநஞ்செய்துகொண்டு, கீர்த்தநங்களைப்பாடி நடத்திக்கொ ண்டே அவ்விடத்தைவிட்டுச் சென்றுசந்திரபாகாநதியடைந்து,தங் கள் நித்தியகருமங்களை முடித்துக்கொண்டு நீராடி,ஊர்த்துவ புண்ட ரங்களையணிந்து, அநுஷ்டாந முடிந்தவுடனேக்ஷேத்திரப்ரதக்ஷணம் வந்து,மகாத்துவார மடைந்து, சற்பாவனையால் தீர்க்கநமஸ்காரஞ் செய்து, உள்ளேநுழைந்து விட்டலேசுவரனைச் சேவிக்குங்கிரமந் தவறவிடாது சேவித்து ஆலிங்கநாதிகளுஞ்செய்துகொண்டு, விடோ பாவின் முன்னின்று ஸ்ரீமத்துக்காராம் ஸ்வாமிகள்கொடுத்தருளின நிரூபத்தை திருமுன்பே வாசித்துக்காட்டி, அவரெழுதித்தந்த அபங்கங்கள் இருபதினுன்கையும் நல்லிசைகளுடனே சேவித்துக் கொண்டு நிருத்தஞ்செய்து வராநிற்கையில், அங்கு சந்நிதாநத்திலிரு ந்து கேட்டுக்கொண்டிருந்தவர்க ளெல்லாரும் அவ்வபங்கங்களின் அபிப்பிராயங்களுக்குச்சோகமடைந்து, தங்கள்தங்களுள்ளங்களைப் பரிகொடுத்தவர்களாகிக் கண்களிலிருந்து ஆநந்தபாஷ்பங்கள்பெருக ஹரிவிட்டலா! ஓ! என்று எல்லோருங் கைகளைத் தட்டிக்கொண்டு பஜித்தவர்களாய், மெய்கள்புளகிக்க மங்களங்களைப்பாடி, வாழ்த்து தலுஞ் செய்துமகிழ்ந்தார்கள். துக்காராம் ஸ்வாமிகளுடையகோஷ் டியாரிலும் ராமேசுவரபட்டர், சந்தாஜி, கெங்காதரமவாளி, மற்று மநந்தம்பேர் முன் ஆயிரத்தி நானூறு வார்க்கரிகளோடு கலந்து பண்டரிக்குப்போயிருந்தார்க ளாகையால் அவர்களும் ஸ்வாமியைத் தரிசிக்கவேண்டிய கிரமத்திலே தரிசித்து எதிரில்நின்றுகொண்டு, தங்கள் ஆரியரான துக்காராம்தேவர்அளித்தநிருபத்தை அவர்களில் முக்கியராகிய ராமேசுவரபட்டர் படித்து, இருபதினுன்கு அபங்கங் களையும்பாடி, அவையெழுதியிருந்தவற்றை ஸ்வாமி திருவடியில் வைத்து,ஸ்வாமின்! தேவருடைய சுதராகியதுக்காராமருக்குத் திரு மேனியில் அசவுக்கியம் விளைந்திருப்பதால் இவ்விடம்வந்திலர். இரு பதினுன்கு அபங்கங்களையும்விண்ணபத்தையும்தேவர்திருவடிக்கு அர்ப்பிதப்படுத்தச் சொன்னார், அதின்படியே திருவடிகளில் சமர்ப்

பித்தோம். இனிதேவருடைய திருவுள்ளமியாதோ அறியோம்; பக் தவற்சலா! பரமதயாளா! என்று ஸ்துதித்து ஸ்வாமியினுடைய திருவடிகளில் தங்கள் சிரசுகள் படவைத்துத்தொழுது எழுந்து ஆலிங்கனஞ்செய்து பஜித்துக்கொண்டிருந்தனர்கள்.

அப்போது, தடவரைதோள் சக்கிரபாணி சார்ங்கவிற்சேவகனாகிய ஸ்ரீபாண்டுரங்கன் சருவலோகமாதாவாகிய, ருக்குமணீ தேவியாரைநோக்கி, நமதுபாலன் துக்காவுக்குச் சுரமுண்டாயிருப்பதைப் பற்றி தான்வராமல் தன்னுடைய சிஷியர்களிடம் இருபதிநான்கு அபங்கங்களையும், ஒருகடிதத்தையும் கொடுத்து அனுப்பியிருக்கின்றான். என்மநமானது அவனையே நோக்கிநின்றதல்லது இங்கில்லை; ஆதலால் உம்முடைய இஷ்டமெப்படியோதெரிவிக்கவேண்டுமென்று கேட்க, பிராட்டியும், எனக்கும் அவனுக்கிருக்கும் பாதைகள்தெரியும்; தேகம்நலிவெய்தி யிருக்கிறது; ஆத்துமத்துக்கொன்றுமில்லை; என்மநமும் அவனையே சார்ந்திருக்கிறது ஆயினும், உம்முடைய சேவைக்காக அநந்தம் மெய்யன்பர்கள் தேசதேசாந்தரங்களிலிருந்தெல்லாம் வந்திருக்கின்றார்கள்; இந்தச்சமயத்தில் நீரிங்கில்லாமல் துக்காவிடம் போய்விடுவீராகில் அவர்கள்எல்லாருந் தெரிந்துகொண்டு துக்கிப்பார்கள்; உமது ஸகுணரூபம் அவர்கள்முன் காட்சியாகவே யிருக்கவேண்டியது; நமக்கு துக்காராம் எப்படிசுதனுவனோ அப்படியே இவர்களும் சுதர்களன்றி வேறன்று; இந்தச்சமயம் நீரேகாமல் கெருடாழ்வானையனுப்பி, துக்காவைவரவழைத்துக்கொள்ளுமென்றுரைக்கலாயினர். அவைகளைக்கேட்ட ஆதிமூர்த்தி, கஜேந்திரனையழைத்து, ஒரு ஸ்ரீமுகத்தைக்கையில்கொடுத்து, நீர்தேஹூகாமுக்குப்போய் துக்காவைக்கண்டு இக்காகிதங்கொடுத்து, நான் கொண்டுவரச்சொன்னேனென்று உனது முதுகின்பேரிலேற்றிக் கொண்டுவா! என்றாக்கியாபித்தருள, கெருடபகவானும் சுவாமிக்கு வந்தநங்களியற்றி, அவ்விடத்திலிருந்து புறப்பட்டு தேஹூகாமுக்குவந்து, துக்காவினுடைய வீடுமுதலியவைகளில் தேடியும் அங்கு அகப்படாமையால் இருக்குந்திசையைமநோநோக்கால்நோக்கும்போதுபண்டரீபுரத்தின்பாதையிலிருக்கிறாரென்று காணவந்து, அங்குபோய் பார்க்கும்போது தடத்தில் பண்டரீபுரத்தைத் திசைநோக்கிய வதநந்தராய் உள்ளத்தில் பண்டரீநாதனையேயமரவைத்துக்கொண்டுஇருப்பவராய்த் தியானித்துக்கொண்டு, வேறுசிந்தையும் உடலசைவுமின்றி யிருக்கக்கண்டு கெருடமூர்த்தி அவரெதிரிலிறங்கி, நெடுநேரமிருந்தும் துக்கா தம்மைப்பார்க்காமல் பாவ அபாவங்கள் அற்றிருப்பதையறிந்து, எவ்வகையாலே இவருடைய சுயபுத்தி தெளிவுறச்செய்யலாம்? என்

றெண்ணிப் பகவானைத்தியானித்தனர்; அவ்வளவில் பகவானுடைய பேரருளால் துக்காவுக்கு சுயஞ்ஞாபகம் உண்டாகப்பெற்று, எதிரிலிருக்கும் ஆழ்வாரைத்தெரிசித்து தீர்க்கதண்டஞ்செய்து, எனதாண்டவன் ஒன்பதுலக்ஷம் வார்க்கரிகளாகிற சாதுக்களுடைய கூட்டத்திலிந்த அடியேனைமறந்தார்; அடியேனே அபாத்திரவான்; சாதுக்களிடம்,இருபதினான்குஅபங்கங்களையும்,ஒருவிண்ணப்பபத்திரத்தையுங் கொடுத்தனுப்பினேன்; அவற்றையாவது எண்ணிகருணாகரர் எழுந்தருளினவரல்ல. நானொருவன்வந்து சேவிப்பதால் என்ன லாபம், சேவிக்காவிட்டால் என்னநஷ்டந் தமக்கு? நான்வந்து சேவிப்பதில்தம்மமற்ற அடியார்களுக்குச்சம்மதமிராதென்றெண்ணி நீக்கினார்போலும்; இவரையன்றி வேறுதிக்கு அடியேனுக்கில்லை; சுவாமியினுடையபெருமை பிரபாவங்களைத் தங்களாலாவது கேட்க ஆவல்கொண்டவனாகின்றேன் சாதித்தருளவேண்டும்! என்று இருகைகளையுங் கூப்பினவராய் துக்காபிரார்த்திக்கலாயினார், வைநதேவர் துக்காவினுடைய குணங்களுக்கு ஆச்சரியமடைந்து, இதுவென்ன அற்புதநடை? பக்தியென்னும் வாரிதியில்தானே சதா அழுந்திக்கிடப்பவராகக் காணுகின்றார்! முடிவில்எவ்வாறாகமுடியுமோ! என்று சிந்தித்து, துக்காவைநோக்கி, புண்டரீகவரதன் பிரசாதித்த ஸ்ரீமுகத்தைக்கொடுத்து, தேவர்பிரானாகிய ஸ்ரீமனாளன் உம்மைக்காணாமல் விசனமுற்று, உமதுதேகந் தாருட்டியத்தைத் தவிர்த்திருப்பதால் உம்மைமுதுகின்மீதில் அணைத்துக்கொண்டு வரும்படி கட்டளையிட்டருளினார்; அதனால்தான் நானும்வந்தேன் சீக்கிரமாக வரவேண்டும் என்றுரைக்கலும் மெய்யன்பர்கேட்டு மெய்நடுக்கங்கொண்டு ஹரி ஹரி! என்னவார்த்தை யுரைத்தீர்? நாய்க்கு முழுதேங்காய் செல்லுமா? நமன் விஷ்ணுதாஸரை வெல்வானா? நலமில்மொழியாளன் நாட்டிற்குத் தலைவனாவானா? நடுபுதரில் வசிக்கும் நரி நாதர்களுக்கீடாகுமா? அதுபோல் அண்டங்களிலும்! அண்டாந்தர்வர்த்திகளான ஆத்துமாக்களிலும், அசேதநவர்க்கங்களிலும் எல்லாம் நிறைகொண்ட ஆதிமூர்த்தியை ஆரோகணித்துக்கொண்டு நொடிநேரத்தில் எங்குமெசல்லவெனினுஞ் செலுத்துவிக்குந் தேவருடைய திருவடித்துகளுக்கு இணையாகா நாயேன் தேவர் திருத்தோள்களின் மீதிலேறப் பாத்திரவானாவேனா? தேவதேவோத்தமா! அடியேனைச் சோதனைசெய்யவேண்டாம்! ஒன்பதுலக்ஷம் வார்க்கரிகளாகிற உமது தாஸர்கள் ஏககாலத்தில்வந்து சேவித்து ஆநந்த மீதூறும்படிச்செய்யும் உமது திருவடிகளில் அடியானொருவன்வந்து வீழ்ந்து, உம்முடைய அநந்தந்தாஸர்களில் ஒருவருடைய திருவடித்தூசுமெய்யில்

படிவித்து ஜென்மசாபல்யமடையப்பெறுவேனேயாகில் உம்முடைய சிருட்டிக்கிரமத்திற்குக் குறைவு வந்துவிடுமென்றெண்ணி இச்சமயம் கேட்டைத்தந்து நடக்கவொட்டாமற் செய்துவிட்டீர்; உம்முடைய அடியார்களில் யாரேனும், துக்கா எங்கே? என்று கேட்பரேயாகில் அவருக்கு, "நானென்செய்வேன்? கெருடமூர்த்தியையும் அனுப்பினேன் அவன் வரவில்லை; வரமாட்டேனென்று சொல்லியனுப்பினன்" என்று அவர்களுக்குச் சம்மதமுண்டாகவும் என்மீதில் பழிசுமத்தவும், எனக்கொரு அகங்காரமுண்டாக்கவும் போலும் ஆழ்வாரையனுப்பினீர்; உம்முடையசூதையறிவேன்; அரியாத்தன்மையால் ஆழ்வார்மீதில் ஏறுவனேயாகில் உமக்கும்பிள்ளையெனவாய்த்த பேரிழந்து எந்தஜென்மத்திலும் உம்மையும் உம்முடைய தாஸர்களுடைய திருவடிஸேவையுமிழந்து, அவத்திய வாணாய்விடுவேன்; அன்றியும், காம - குரோத - லோப - மோக - மத - மாச்சரியங்களாகும் அறுவகை விகாரங்களையேற்று, டம்பாதிகளில் சம்மதித்து, பாவ அபாவமென்னுஞ் சேற்றிலழுந்தினவனாய்ச் சோர்வடைவேன்; ஹரி ஹரீ! விட்டலதேவா! அடியேனை நீர்காக்கப் பிரியங்கொள்ளாவிட்டாலும் உமது தாஸருடைய திருவடிப்பொடியாவது என்மீது பட விடுப்பீராகவேண்டும்; அடியேன் ஏழை, ஏதிலன், கீழ்மகன்! அடியேனால் தேவருக்கு ஒரு பிரயோஜநமும் இல்லாவிட்டாலும் உமது தாஸர்களுக்காவது தொண்டுசெய்யும் பிரயோஜநமுடையவனாகச் செய்துவையும்; இப்போது உம்மைச் சேவிக்குமாறு எழுந்தருளியிருக்கும் அடியார்கள், தநகநகவஸ்துவாகநங்களில் நிறைவுற்றவர்களாயிருந்தும் அவற்றையெல்லாம் வெறுத்து நிர்ச்சிந்தையர்களாய் உம்மை வந்தடைந்திருக்கின்றார்கள்; அடியேன் அவர்களைப்போன்றவனன்றாகி, மலமூத்திராதிகளாகிய தேகத்தை மெய்யெனவும், மனைவிமக்களைச் சதமென்று இருப்பவனாதலால் என்னுடைய எண்ணத்தின்படி இந்நோய் நீங்ககில்லாதிருக்கிறது; அதனால் நீரென்செய்வீர்? உம்மீது யாதொருதோஷமும் உரைக்கவிடமில்லை; உம்மை வேதசாஸ்திரங்களும், பிரமருஷிகள் முதலிட்ட பெரியோர்களும்மதஸ்தர்களுமெல்லாரும்கருணைகரக்கடவுள் என்று உம்மைத் துதித்துவரக் காணுதலால், தேகாபிமாநியாகிய நாயேனும், எனது குற்றங்களை யோசியாமல் அவர்களைப்போல் துதிக்கலானேனேயன்றி சற்பாவனையால் துதிப்பவனல்லேன்; என்னுடைய பொய்ம்மையான துதிகளுக்கு நீர்மயங்குவீரா? நீரே என்னையாவர் கிட்டுகிறாரோ அவரையாதரிப்பேனென்றுஜெயக்கொடி நாட்டியிருக்கின்றீர்; உம்மையடையும்படியான சூட்சுமபுத்தி - கஜேந்திரன் -

பிரகலாதன் - துருவன் - துரோபதை-சித்தர்குழாம் முதலியவருக்கல்லால் அடியேன்போன்ற அல்பர்களுக்கு எங்ஙனம் வாய்க்கும்? அல்பனுதலால்தான் அடியேன் இப்பெரும்பெருத்த பிரமோற்சவத்தைச் சேவிக்கத்தகாத பாவியென்று புறம்பேயொதுக்கி வைத்திருக்கின்றீர்; நாமொருவன் வந்து உன்னைச் சேவிப்பேனுகில் உமது கௌரவத்திற்குக்குறைவுபோலும்; உம்மையான்செய்யவடுப்படுதென்னிருக்கிறது; யாதுசெய்யினும் உமதடைக்கலம்! என்று, பதியையிறக்கக்கண்ட சதியைப்போல் பூமியில் மூர்ச்சித்து வீழ்ந்தனர். இக்கொடுமைகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த புள்ளரசன் மிகுதியும் அதிசயங்கொண்டு நாமிதுவரையில் இத்தகைய மெய்பக்தி காரணமற்றுச் செய்தவர்களைக் கண்டேயறியோம்; இவர்திறத்தில் நாமுமென்றும் பயபக்தி விசுவாசங்களுடனே யிருக்கவேண்டுமென்றெண்ணி தாஸரருகில் வீற்றிருந்து, அவரை மெதுவாயெடுத்துத் தமது துடைகளின்பேரில் சாயவைத்துக்கொண்டு வாயுபகவானை நினைந்து தென்றல் வீசச்செய்து, களையாற்றி, அவர் தேறினபின் அவரைநோக்கி, உமது தந்தையுந்தாயும் அனுப்பியருளின நிருபத்தையுடைத்து வாசித்துப்பாரும்; அவர்கள் உன்விஷயத்தில் படுந்துயரைத் தேரும், வீணிலவர்மீது தோஷங்கூறுதல் தகுமோவோரும்; அவர்களுரைக்கிணங்கிச் சாரும் என்றுசொல்ல, தாஸரும் ஆமென்றெண்ணி, அந்தக் கடிதத்தை யுடைத்துப்பார்க்க அதிலிருந்த சங்கதிகளாவன:—

"ஸ்ரீவைகுண்ட - பிரமலோக - கைலாயங்களிலுள்ள வரையிலும் நீ சிரஞ்ஜீவியாயிருக்கக்கடவாய்; இந்த அண்டசராசர ரூபமான எனது ஐசுவரியங்களுக்கெல்லாம் நீயே அதிகாரி; உன்னைக்கண்டு வார்த்தையாடாமல் இவ்விடம் யானிருப்பது சகிக்கவில்லை; இவ்விடத்திய என்னிருப்பு முள்மேலிருப்பென இராநின்றது; நீ எவ்வாறு என்னைக் குறித்து அலறுகின்றனையோ அவ்வாறே நானுமுன்னைக்குறித்து அலமருகின்றேன்; அதினுண்மைஉன்னுடைய தாயைக் கேட்டால் இனிதுவிளங்கும்; நான் உன்னிடம்வரஎண்ணங்கொண்டதற்கு உன் தாய் தடுத்துவிட்டனள்; ஏனெனில்—இப்போது பிரமோற்சவத்திற்காக ஒன்பது லக்ஷம் மெய்யடியார்களாகிய வார்க்கரிகள் இவ்விடம் வந்திருப்பதால், அவர்களை விட்டு நான் வருவேனேயாகில் அந்த ஒன்பது லக்ஷம் வார்க்கரிகளும் எனக்காக அவ்விடமே வந்துவிடுவார்கள்; ஒரு பிரமோற்சவத்திற்கு அங்கு வருவார்களேயாகில் மறுபடியும் இத்திசை நோக்கவே மாட்டார்கள்; மிகுதியும் வைராக்கிய முடையவர்கள் அவர்களில் அநந்தம் பேருண்டு; இந்த

க்ஷேத்திரம் குறைவுபட்டுபோகும்; ஆதியில் புண்டரீகருக்காக இந்த ஸ்தலத்தில் குடியேறினேன்; இது தவிர்த்து இப்போது தேஹூகாமில் எனதிருப்பு வாய்க்குமாகில் அநந்தம் பெரியோர் நிந்திப்பார்கள்; அவர்களுடைய மநமெல்லாங் குன்றும்; பெரியவர்களுடைய நல்லெண்ணங்களால் கௌரவ்வியம் உண்டாகும்; உன் தாயும் இதுவே சொல்லித் தடுத்தனள்; துக்காவினுடைய வருத்தத்தை நான் தணிய வைப்பேன் என்றுஞ் சொல்லினள்; ஆகையால் மநஸ்தாபப்பட வேண்டாம்; கோபாலபுர உற்சவம் நாலுநாளும் இங்கிருந்து துலவிலெல்லாமிருந்து வந்திருக்கிற சாதுக்களை யனுப்பிவிட்டு, ஐந்தாவது நாள் நானும் உன்னுடைய தாயாருமாகக் கலந்து வந்து உன்னைக் காணுகின்றோம்; தற்காலத்தில் இவ்விடத்தில் தாஸகோடிகளுடனே கலந்து அநுபவிக்கவேண்டிய அநுபவங்களுக்கு மிகுதியும் நீயாசை பட்டிருப்பதால் கெருடனை யனுப்பி யிருக்கின்றேன்; அவன்பேரில் சங்கையில்லாமல் ஏறிக்கொண்டு, பண்டரீபுரம் வரக்கடவது'' என்றெழுதப்பட் டிருந்தது.

அதனை மெய்யன்பராகிய துக்காராம் ஸ்வாமிகள் கண்குளிரச் சேவித்து இருகண்களிலிருந்து ஜலம் தாரைகள் விட்டோடவிட்டு, கெருடபகவானை நோக்கி, ஸருவஸ்வாமியான விடோபா, என்னையும் ஒருபுனிதனென்றெண்ணி ஸ்ரீமுகத்தைப் பிரஸாதித்தருளினர்; அவருடைய திவ்வியகலியாணகுணங்களுள் உமக்குத்தெரியுமன்றிஉமது திருவடிப் பொடிக்குப் பாத்திரனல்லாத நாயேன் வசமன்று; அத்தகைய ஈநன் தேவர்மீதில் ஆரோகணிக்க மநங்கொள்ளிலன்; அடியேனை க்ஷமித்தருளி, தேவரெழுந்து பண்டரீராயருக்கு எனது ஆருத் துயரத்தைத் தெரிவித்து அவரை யழைத்துக்கொண்டுவந்து அடியேனுக்குச் சேவை சாதிக்கும்படி செய்தல் வேண்டும் என்னையாள்வானே! என்று தீர்க்க நமஸ்காரஞ்செய்து அவ்வண்ணமே பூமியிற்படிந்திருக்க அவ்வருளுடைய அடியார் நாயகந்தன்னை ஆழ்வானெடுத்து ஆதரித்து, உனதெண்ணத்தின் படியே யாகுக என்று வாழ்த்துதல் செய்து, துக்காவினிடத்தில் விடை பெற்றுக்கொண்டு சந்தோஷ சித்தராய் பண்டரீபுரத்துக்குப் போய், ஸ்வாமி முன் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்து, கைகளைக் கட்டிக்கொண்டு திருமுன்பே நின்று விண்ணப்பம் பண்ணிக் கொள்ளுவதாவது :—

ஜெயஜெய ஸ்ரீநிவாசா! தேவ தேவோத்தமா! துக்காராமரிடம் சருவ ஸ்வாமி நியமநத்தின்படி விடைகொண்டு ஸ்ரீ முகத்தைக் கொடுத்தேன்; அவருடைய ஆற்றாமையைத் தெரிவிக்க அடியேனால் முடியாது; அவருள்ளத்தில் ஸாக்ஷிபூதமாய் நிற்கும் தேவருக்கே

விளங்கியிருக்கலாம்; எவ்வளவு சமாதானங்கள் அடியேன் சொல்லியும் அடியேன் மீதில் ஏறேனென்று ஒரே சாதனை சாதித்துவிட்டனர்; அவர், தம் வீட்டில் தங்காமல் இப்பண்டரிக்கு வரப்பட்ட மார்க்கத்தில்தானே அந்த ஆகாரங்களைத் துறந்து, தேவரைச்சேவிக்கும் ஆவலுடன் காத்திருக்கின்றார்? இது அவரிடஞ் சென்றதால் அடியேனுணர்ந்து வந்து, விண்ணப்பத்தைத் திருவுள்ளம் பற்றி அடியேனுக்கு ஆஞ்ஞாபித்தருள வேண்டும் என்று ஒதுங்கிவிட்டனர்.

இவைகளை யெல்லாம் சாங்கோபாங்கமாகக் கேட்ட நாதன் தமது ருக்குமணீ பிராட்டிக்கு விளங்கத் தெரிவித்து, எனது மனந் தத்தளிக்கின்றது; ஆழ்வானை யனுப்பினதற்கு அவன் மீதிலேறேனென்று வந்தநங்களைச் செய்து அனுப்பிவிட்டான்; இனி என்ன செய்வேன்? என்று விசநமுற, சருவலோக சுந்தரியாகிய ல்ட்சுமியும், தமது நாயகருக்குத் தேறுதலைச் சொல்லி, நான்கு நாளில் ஒன்று முழுகிவிடாது; துக்காவை யான் காப்பேன், பொறும்! என்று கூறி, கோபாலபுர வுற்சவம் நான்குநாளும் மிகுசம்பிரமங்களாக நடந்தவுடன், மெய்யன்பர்க ளெல்லாரும் தங்கள் தங்கள் விருதுகளுடனே ஒன்று கூடி, பஜனை காலக்ஷேப நிருத்தங்களோடு வந்து சேவாக்கிரமங்களில் சேவித்து, சருவக்கியர்க ளாதலால் ஸ்வாமியினுடைய திருவுள்ளக் கருத்தறிந்து, ஸ்வாமின்! துக்காராமரிடம் தேவரெழுந் தருளலாம்! நாங்களும் அவரைச் சேவிக்க வருகின்றோம் என்று விண்ணப்பம் பண்ணி, தந்தம் பிருதுகளைப் பிடித்துக்கொண்டு பண்டரீபுரம் ஸந்நிதாநம் முதல் தேஹூகாம் வரையில் வேறு மநுஷியர்களுக்கு நடக்க இடமில்லாமல் இவ்வொன்பதுலக்ஷம் வார்க்கரிகளே மிகு சிரமையோடு நெருக்கங் கொண்டு, பஜனை கீர்த்தனைகளைக் கீர்த்தித்த வண்ணமே வந்து அருளுடைய துக்காராமரைச் சேவித்து நிற்க; தாஸரும் அவர்க ளெல்லாருக்கும் தண்டப் பிரணாமங்கள் செய்து, வெகுவிநயராய் முன்னோர்முன்னிற்க, அநந்தரம் ஒருவர்க் கொருவர் குசலப் பிரசிநங்களைச் செய்துகொண்டு, திருப்தர்களாய், அவரவர்கள் தூரதேசங்களுக்குப் போகவேண்டியவர்களாகையாலே விடை பெற்றுக்கொண்டு எல்லாரும் போய்விட்டபின் துக்காராம் ஸ்வாமிகளுடைய சிஷிய கோஷ்டிகளாகிய ராமேசுவரபட்டர் முதலிட்டவர்கள், தங்களுடைய ஆசாரிய சுவாமிகளைக் கண்டு சாஷ்டாங்க தண்டங்கள் செய்து நிற்க, துக்காராமரும் அவர்களுக்குத் தீர்க்க நமஸ்காரஞ்செய்ய, ஒருவர்க்கொருவர் லாப க்ஷேமங்களை விசாரித்துக் கொண்டு, ஆநந்தம் பூர்த்தியாக விளங்கப்பெற்றவர்களாய் விட்டல மூர்த்தியை பஜித்து, மங்களார்த்தி செய்து

முடிந்த பிறகு ராமேசுவர பட்டர் முக்தி தாயகராகிய தாஸருக்கருகில் வந்து நமஸ்கரித்து, தேவர் பிரஸாதித்த இருபதினுன்கு அபங்கங்களையும், விண்ணப்பப் பத்திரத்தையும் விடோபாமுன் ஒரு முறை சேவித்து, கமல நல்லடியிணைகளில் ஸமர்ப்பித்துப் பணிந்துகொண்டோம்; இன்றையதினம் தாம் எழுந்தருளுவதாகப் பணித்தருளினர்! என்று சொல்ல, தாஸரும், அடங்காத சந்தோஷமடைந்தவராகி என்னையும் லக்ஷியம்செய்து தாஸனென்றெண்ணி எனதாண்டவர் வருவாரா! இவ்வளவு பாக்கியம் யான் பெற்றிருக்கின்றேனு! என்று வியந்து, அவர்களை யெல்லாம் இருப்பிடங்களுக்குப் போக நியமித்து, தாம் இருந்த அவ்விடத்திலே தானே யிருந்து, திருவடிகளைத் தியானித்துக்கொண்டு அசைவற நின்றிருந்தார்.

இங்ஙன் தாஸர் நிற்பதைக் கண்டு தடத்தில் நடப்பவர்களெல்லாரும், இவர் நிவாத தீபமன்ன நிலையினரான பாவாபாவமற்ற பரமாசாரியர்! என்றும், இந்திரியங்களை நிலையுறுத்துந் தலைவராய்க்கொண்டு பாரிலுள்ள பாமரர்களைப் பதத்தேற்றப்பிறந்தபரிசுத்தர்! என்றும், பாஞ்சஜந்யதரனுடைய பண்புறு உள்ளங்களிப்பப் பாடல்பல பயின்று பத்தி என்னும் வலையில் பாரோரைப்படுவித்துப் பரமபதத்திற்கேற்றும் பரமர்! என்றும், பாரிலவர்போல் பத்தினியுடன்கலந்து பரிமாறிக்கொண் டிருந்தும் பற்று சிறிதும் பற்றப் பெறுமல் பண்டரீநாதனுடைய பங்கயபாதங்களைப் பற்றும் பற்றினராய் பஜித்திருப்பவர்! என்றும், இவரேதான் ஜீவன்முக்தர், இவரேதான் ஆரூடர், இவரேதான் விதேகர், இவரேதான் கைவல்லியர், இவரேதான் நிராசையுள்ளோர், இவரேதான்மெய்ம்மையாளர், இவரேதான் ஞாநி, இவரேதான் பெரியோர், இவரேதான் நிஷ்காமி, இவரேதான் சுத்தாத்துமர், இவரைப் பெற்ற வயிறுடையாள் என்ன நோன்பு நோற்றவளோ! தந்தை யெத்தவ மியற்றினவனே! என்றும், சிவாஜி மகாராஜா இவருக்கடிமையான நாள் லக்ஷாதிலக்ஷம் பொருளை இவர் திருவடிகளில் ஸமர்ப்பிக்க அவற்றை லக்ஷியம் பண்ணுமல் தாநம் பண்ணிவிட்டார்; இவருடைய திருவடியிருக்குமிடத்தில் அஷ்டமாஸித்திகளுங் காத்திருக்கின்றன! என்றும்; ஞானேசுவரசுவாமியிடம் சென்று வைராக்கியமாய்த் தவங்கள் செய்வோரையெல்லாம் ஸ்வாமி இவரிடமனுப்ப, இவர் அவர்களைச் சம்மாநித்து இஷ்டகாமியார்த்தங்களை யீந்து, மோக்ஷசித்தியும் பெறச் செய்கின்ற முமுக்ஷு! என்றும், இவர் பாண்டவர் சகாயனுக்குப் புத்திரராய், பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்யவல்லவர்! என்றும் இவ்வாறெல்லாம் சங்கீர்த்திகள் கீர்த்தித்துச் செல்லுவார்கள்.

இப்படி மார்க்கத்தில் வருமவர்களெல்லாரும் துக்காராம்ஸ்வாமிகளுடைய குணநீர்மைகளை வர்ணித்துச் சொல்லாநிற்க, தாஸரானவர் தசரதாத்துமஜராகும் சருவேசுவரன் இன்னமெழுந்தருளி ஸேவைஸாதிக்கவில்லையே! என்னுமேக்கத்தால், சூரிய அஸ்தமானத்தில், கன்று தன் தாயின் முலையுண்ண எப்படி அலையுமோ அதுபோல லைந்து, பத்தொன்பது அபங்கமென்னுங் கவிகளையியற்றி, தமது கோஷ்டியாருக்குப் பாடம் பண்ணுவதற்காக நியமித்து அளித்தருளினார்.

இவ்வாறு துக்காராம் ஸ்வாமிகள், தொல்புகழ் வானவர்கோமான்மீது ஆவலுற்றிருப்பதைத்திருவுள்ளம்பற்றிய தீநதயாபரமூர்த்தியாகும் ஸ்ரீ பண்டரீ வரதன், ருக்குமணீ தேவியோடு கெருடவாகநாரூடராய் ஆகாயமார்க்கத்தில் வருவதை அன்பின்மிக்கோராகிய தாஸரறிந்து, ஆநந்தபரவசராய்க்கொண்டுநின்றவிடத்தில்தானே நிர்த்தநஞ் செய்து, ஹரிஹரீ! என்று இரண்டு கைகளையுஞ் சிரசின்மேல் கூப்பி, தேவதேவா! உன்னடியார் குழாம் இப்போது தான் உம்மை வரவிடுத்தார்களோ! என்று தொழுதுகொண்டிருக்க, ஸ்வாமியும் தாயாரும் கெருடபகவானுடைய தோள்களினின்று இறங்கியருளி, சருவநாதன் துக்காவைத் தமது மலர்போன்ற திருக்கைகளால் வாரியெடுத்துத் தழுவி முத்தமிட்டும், எம்பருமாட்டி, துக்காவினுடைய புழுதிபடிந்த மேனியைத் தம்முந்தானையால் துடைத்துச் சீராட்டியும், இப்படி தங்கள் சுபுத்திரனுக்கு ஆதரணைகள் செய்து, பயப்படேல்; ஒன்பது லக்ஷம் வார்க்கரிகளோடு கூடி நானிருந்தும் எனது எண்ணமெல்லாம் உன்மீதில்தானே யிருந்தது; தன்புதல்வன் கூடாமல் தான் புசிக்கும் போகத்தால் தந்தைக்கு இன்புறாததுபோல இந்தத்தடவை உன்னைவிட்டுவிட்டு நான்பிரமோற்சவங்கண்டதில் எனக்குத் திருப்தியில்லை; மெய்யடியார்களுக்கு நான் அடிமைபட்டவனாதலால் தூரதேசங்களிருந்து வந்திருந்த சந்தஜநங்களுடைய அபிப்பிராயத்தின்படி நடந்துகொள்ளவேண்டி முடிந்தது என்று ஸ்வாமியுரைத்தருள, அவற்றைக்கேட்ட துக்காராம், சுவாமியின் திருவடிகளிலும், தேவநாயகியின் திருவடிகளிலும் ஆர்த்திதீரச் சேவித்து, அன்னர் திருவடிகளைத் தூக்கித் தமது சிரசின்மீது வைத்துக்கொண்டு, சற்றுநேரமிருந்தெழுந்து கைகளைக் கட்டிக்கொண்டு, தீநபந்து! தீநநாதா! என்று ஸ்தோத்திரித்துக்கொண்டிருந்தார்.

இவ்வற்புதலீலைகள் உலகில் யாவருக்கமையும்? பிறரால்காணுதற்குரிய லீலாமிர்தங்களைத் தம்மடியார்களுக்கு, கண்படைத்ததின் பயனாகுங் காக்ஷியெனக் காணுவித்த கருணாசாகராகிய ஸ்ரீமத் துக்

காராம்ஸ்வாமிகளுடைய அருமையானபிரபாவாதிசயங்களை, உலகத்தில்வாழும் பிராணிகளுக்கு நல்லுணவாம் இன்னமுதெனத் தருவதற்காக, எந்தை எம்பிரானாகிய கண்ணன், என்னுடைய சுற்றம், எனக்கரசு, என்னுடைய வாழ்நாளென முன்னின்று நடாத்திப் போருகின்றான்; மற்று முள்ளனவற்றையுங் குறைவின்றி விஸ்தரிப்பிக்கத் திருவுள்ளம் பாரித்தருளுவான். அவற்றையும் நீங்கள் எல்லீருங்கேட்டு, பரமான ஆநந்தப் பெருங்கடலில் படிந்தவர்களாய், நித்தியவாழ்வாகும் பேரின்பவீட்டினை யடைந்து உவப்பீர்களென நம்புகின்றனன்.

பதினொன்காமத்தியாயம் முற்றும்.

ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீ பாண்டுரங்கபரப்ரஹ்மணேநம:

ஸ்ரீமத்

துக்காராம் சுவாமிகள் சரித்திரம்.

பதினைந்தாமத்தியாயம்.

காப்பு.

ஸ்தோத்திரங்கள்.

அண்டபிண்ட மெவற்றினுக்கு மாதாரத் தத்தனெவன்
எண்டிசையு மெங்குநிறைந் திலருசுடர்ச் சோதியெவன்
புண்டரீகம் பெயரடியான் போற்றவுறற் காயிரங்கி
பண்டரீ புரத்தமைந்தான் பற்பபாதஞ் சிரத்தமைப்பாம்.

ஜெயஜெய பீமாதீரவாஸா! சச்சிதாநந்த சருவேசா! அடியார்கட்குஅருமைநேசா! சுயஞ்சோதிப்பிரகாசா! அண்டசராசரங்களுக்கெல்லாம் ஆதாரபூதனுய், எழுவகைத் தோற்றத்துள்ளும் எழுந்த எண்பதினுன்குலக்ஷஜீவராசிகளினுள்ளும், அசரங்களினுள்ளும் எள்ளுக்குள் எண்ணெய்போல் கரந்தெங்கும் பரந்துள்ள பரமசேதநா! ஜெகந்தன்னில் உனதுகீர்த்தி எங்கும் பிரகாசியாநின்றது. அந்த உமது கீர்த்தி வேதவேதாந்தங்களாலும், அவற்றில்வல்லமகான்களாலுங் கீர்த்திக்கப்பட்டு வருகின்றது. ஆயினும் அந்தக்கீர்த்திக்கோர் முடிபு, வேதங்களாலும் அவற்றை நன்குணர்ந்த வேதியர்களாலுங் காணுதலருமை யருமை; அடியேனோ மூடமதியினன்; எனது புந்தி நன்மை கடைப்பிடித்ததன்று; கீர்வாணத்தையும் பயின்றறி

துக்கா. தொண்டர்கள். உயிர்பிழைத்த பிள்ளை. யாதவன் லோகிதாஸ அதிகாரி ஜன்ம ஊர்த்தல்

யேன்; இந்தத் துக்காராம்ஸ்வாமிகளுடைய திவ்யசரிதந்தனைப் பூர்த்தியுறுத்த ஆவல்கொண்டவனாய் எண்ணுதெல்லாம் எண்ணுபவனாகின்றேன்; உன்னுடைய திருவருளையே பேராதாரவாயெண்ணி, எனது நலமில்கையில் யெழுத்தாணியையெழுதற்கெடுத்தேன்; எனது இதயத்துள்ளுறைந்து சாங்கமாக தாஸர்சரிதந்தன்னை முடித்துவைப்பது முகுந்தா! உனதுகடமை; ஏதேனும் பிழைபட எழுதுவேனாயின் அப்போதே சிக்ஷித்துச் சீர்படுத்தியருளல்வேண்டும் செய்யவள்சேர் திருமார்பா! மூலப்பிரகிருதியே அடியேனுடை யித்தேகமென்னத் தடிப்புற்றிருத்தலினாலே தற்சம்பந்தப்பயனால் தேவருடைய மெய்பக்தியாளரது சரிதஞ்சொல்வதில் அநந்த விக்கிநங்கள் சம்பவமாகிற்கும், அவற்றையெல்லாம்உன்னுடைய வலத்திருக்கையினிடத்துத் திகழ்ந்தொளிதரும் ஸ்ரீமச்சுதரிசநபிரானாற்போக்கி, நிர்விக்கிநம் சித்தியாமாறு திருக்கண்ணோக்கியருள்வாய் தீநதயாபரமூர்த்தி!

நூல்

ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகள் தமது அசக்தியால் பண்டரீயாத்திரையெழுந்தருளாமல்தேஹூகாமில்தானேபரிதாபப்பட்டுக்கொண்டு துயரிலழுந்தியிருக்கக்கண்ட ஸ்வாமி, தமது காருண்ணியத்தால் ருக்குமணீதேவி சமேதராயெழுந்து தாஸருக்குச் சேவை சாதித்தருளி, அவரால் பணியப்பெற்றபிறகு துக்காவின் கைகளைப் பிடித்துக்கொண்டு, குசலாதிசயங்களை வினவிக்கொண்டே நடந்து தாஸருடைய மாளிகை சேர்ந்து, வீட்டைக் கடாக்ஷிக்கும்போது அவ்வீடானது மழைபெய்புங்காலத்தில் ஒதுங்கத் தன்னில் இடமில்லாமல் வேறிடத்தைத் தேடத்தக்கதாயும், பகற்காலங்களில் சூரியனும் இராக்காலங்களில் சந்திரனும் சற்றும் மறைவுபெறாமல் பிரகாசிக்கத்தக்கதாயும் இருக்கக்கண்டு ஒன்றுஞ் சொல்லாதவராய்; நீரெழுதின பத்திரிகையைக் கண்டு போஜநமுமில்லாமல் வந்திருக்கின்றோம்; நீர் கிருகஸ்தராயிருக்கின் றீராகையால் வளவிலிருப்பதைதையேனும் சமைக்கவிடு நாங்கள் மிகுதியும் பசியராயிருக்கின்றோம்என்று தாஸருக்குச் சொல்ல, அவரும் மகாபாக்கியம் என்று தமது தேவி ஆவலி ஜீஜாபாயம்மாளைநோக்கி, நமது சரண்ணியனும், சரணாகதவற்சலையான ருக்குமணீபிராட்டியும் பசித்திருப்பதால் அவ்விருவர்க்கும் சுத்தமான நல்லெண்ணத்தோடு தளிகை ஸமர்ப்பிப்பாய்! என்று சொல்லக்கேட்ட ஜீஜாபாய், தற்காலம் கொய்யமுதும், சோளரொட்டியும், கீரையுமிருக்கிறதல்லால் வேறொன்றுமில்லை என்ன, தாஸரதைக் கேட்டுக்கொண்டுவந்து, சுவாமிக்கும் பிராட்டிக்கும் விண்

ணப்பம் பண்ண, அவ்விண்ணப்பங் கேட்கக்கண்ட தம்பதிகளும் சந்தோஷித்தவர்களாய்ப் பரிமாறச்செய்து, உண்டு களித்து, தாம் பூலத்துக்கு மாருகத் திருத்துழாய்ப்பெற்று, துக்காவிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு தங்களது ஸந்நிதாநத்துக்கு எழுந்துவிட்டார்கள்.

மறைகளாலும் மாதவர்களாலும் காணுத் திருவடி ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகளுடைய சிருகுடிலுக்கு, அவ்வடியார் ரத்திநத்தின் கைகளைக் கோத்துக்கொண்டுவந்து போஜநம் அருந்தியது வெகு அதிசயம்! வெகு அதிசயம்!! இருடிகள் யாகங்கள் செய்து அவிர்ப்பாகங்களைச் சமர்ப்பிக்கக்கொள்ளும் இருடீகேசன் இம்மெய்யடியார் நொய்யமுதும், சோளரொட்டியுங் கீரையுஞ் சமர்ப்பிக்கக் கொண்டது அதிசயமல்லால் யாதாகும்? சபரி எச்சிற்கனிகொடுக்க உண்டதனுக்கும், துரியோதனுடைய இராஜபோஜநத்தை விரும்பாமல் விதுரரளித்த கஞ்சி விரும்பியுண்டதனுக்குமொக்கும் துக்கா கொடுத்த நொய்சாதம், சோளரொட்டி, கீரை இவற்றை உண்டது, அவனுக்கவனே சாக்ஷிபூதனுகையால், இவ்வாதியஞ்சோதியினுடைய திருவுள்ளத்தின் நீர்மையான மகாத்துமியங்களை யுணரபிறருக்குச் சாத்தியமானவையன்று.

அநந்தரம், பொம்பாய்நாட்டில் ஓர்பிராமணன், முகுந்தராஜ யோகியால் உண்டுபண்ணப்பட்ட "விவேகசிந்து" என்னும் நூலை அப்பியாசம்செய்து, அந்நூலைக்கற்ற பயனுல் ஆத்துமாராமன்நானே என்றுசொல்லிக்கொண்டு வருவான். இவனிடம் வரத்தகுந்தவர்கள் துக்காராம்ஸ்வாமிகளுடைய பிரபாவமான்மியங்களைச் சொல்ல, அவற்றைக்கேட்கச் சம்மதியில்லாதவனுய், துக்கா சாஸ்திரங்களைச் சேவிக்காததோஷத்தால் ஆத்துமாராமர் தனக்குள்ளிருப்பதை யறியாமல் பண்டரீபுரத்தில் இருக்கின்ருரென்றும், எந்த எந்த சந்நிதாநங்களைக் கண்டாலும் அவற்றுளெல்லாம் இருக்கின்ருரென்றும், மலைகளிலும், வநங்களிலும், வெளிப்பிரதேசங்களிலும், ஜுளபவநங்களினும் பலஜாதி மநுஷியர்களையெல்லாஞ் சேர்த்துக்கொண்டுபோய், மத்தளம் - தாளம் - தம்புரு-சிட்காமுதலான கருவிகளைத் தட்டிக்கொண்டு பல பாடல்களைப் பாடி நிர்த்தநங்கள் செய்துகொண்டு திரிவது சுத்த சாமானிய லக்ஷணமல்லது ஆத்துமாராம லக்ஷணமல்ல. என்னை அவர் சரணுகதியடைந்தால் நானெளிதில் சீர்திருத்தி விடுவேன்; சற்குணபுருஷனென்று யாவருமுரைக்கின்ருர்கள்! அதனுலெனக்கு அவர்மீதில் இதக்கமுண்டாகிறது; நாலுநாள் பிரயாணம் கஷ்டப்பட்டுச் சென்று, என்னிடமிருக்கும் அபூர்வமாகிற "விவேக சிந்து" என்னுங்கிரந்தத்தின் தாற்பரியங்களை அவருக்கு போதித்து,

இப்போது நடத்திவராநிற்கும் சாமானிய தருமங்களை நிவர்த்தித்து அடிமை கொண்டால் உலக முழுதும் நம்மை துக்காராமருடைய ஆசாரியரென்று கொண்டாடி பல்லக்கு பிரதிஷ்டை செய்து வைப்பார்கள். அநந்தம் பொருள் ராசிராசியாகக் குவித்துவிடலாம் என்று பேராசை படைத்த பேயனாய், தன் நாட்டைவிட்டு, நான்கு நாள் பிரயாணம் வநங்களிலுழன்று தேலூகாம் சேர்ந்து, துக்காராமரை விசாரிக்கப்புக, அவர் நதிக்கு எழுந்தருளி யிருப்பதை யறிந்து தானும் நதிக்குப்போய், அங்கு நதிக்கரையில் ஸ்ரீ ஹரிநாமஸ்மரணை செய்துகொண் டிருக்கும் துக்காவைக் கண்டு, ஒருவர்க்கொருவர் வந்தந மரியாதைகள் செய்துகொண்ட பிறகு பொம்பாய் பிராமணன் தாஸரைநோக்கி, ஐயா! தங்களுடையசற்குண அநுபவங்களைக் கேட்கப் பிரியப்பட்டேன்; தங்களுக்கு ஆத்துமராமன் விளங்கியிருக்கும் ஸ்தாநந் தெரிந்திருந்தால் மலைகளிலும் வநங்களிலும் சஞ்சரிக்கையும், கும்பலைக் கூட்டிக்கொண்டு விடியற்காலம் வரையிலும் நித்திரை பங்கப்படுத்தி, சுத்த சாமானிய தருமமாய்க் கூத்தாடுகையும் விட்டு விடுவீர்; என்னிடத்திலொரு கிரந்த மிருக்கின்றது ; அதனை யொரு நாழிகை பார்த்து, யான் போதிக்கும் ரகசியத்தைச் சற்றுக் கேட்பீராகில் அண்ட பிண்ட பிரமாண்டங்க ளெல்லாம் தானாகவே காணப்படும்; தானாகிய ஆத்துமராமனைவிட வேறொரு தெய்வமில்லையென்று தன்னடையே விளக்கமாய்த் தோணப்படும்; ஜன்ம சாபல்யத்தால் ஷட்ருசிகளில் இச்சை கொண்டாலும் உலகத்தின் வியாபாரங்களை அநந்தம் இச்சித்தாலும் அவை பற்றின்றி,சேற்றினிடமிருக்கும்பிள்ளைப் பூச்சிபோ லிருக்கலாம்; இப்பேர்ப்பட்ட அருமையான ரகசியத்தை நீர் நல்ல பாத்திரவானென்று எனக்கரியவந்தமையால் உமக்கு போதிக்கலாமென்று தூரதேசத்தி லிருந்து சிரமை பட்டுக்கொண்டு வந்தேன்! என்றுரைத்தனன். அவ்வுரைகளையெல்லாம்சாங்கோபாங்கமாகக் கேட்ட வைஷ்ணவ வீரர் புன்னகை கொண்டு, ஹரிஹரீ! அடியேனென்ன புண்ணியஞ் செய்தேனோ! தேவர் என்னைப்போதித்துக் கடைத்தேற்றி ரக்ஷிக்க வேண்டுமென்னுங் கருணையால் அதிக சிரமைபட்டுவந்த இவ்வுபகாரத்துக்கு மாறு என்னசெய்யப்போகின்றேன்; எனக்குத் தாயும் தந்தையுமாவார் இவ்வளவு உபகாரார்த்தம் ஒன்றுஞ் செய்திலர் ; அடியேனை மன்னித்தருள வேண்டும் மறையவரே! என்று தீர்க்க நமஸ்காரஞ் செய்ய, அந்தணன் களிப்படைந்தவனாய், நாம் வந்தகாரியம் சித்திபெற்றது; இவனுக் கியாதொன்றுந் தெரியாது; பஜனைசெய்து கூத்தாடமாத்திரந் தெரியும்; ஒரு வருஷத்திற்கு முன்னிட்டே வராமல் போயினோம்; காரியம் மிஞ்சிவிட்டது;

இதுவரையிலும் இவனை நாம் தாஸனுக்கிக்கொண்டிருந்தால் அளவில்லாப் பொருள் சம்பாதித் திருக்கலாம்; மிஞ்சின காரியத்துக்கு என்னசெய்யலாம்? என்று சந்தோஷித்திருக்க, அந்தப் பிராமணனது முகவிலாசத்தைக் கண்டு துக்காதேவர்! இரு கைகளையுங் கூப்பி, என்னை யாட்கொள்ள வந்த தேசிகனே! எனக்குப்போதிக்கவேண்டியவை யெவையோ அவற்றைக் கிருபைசெய்தருள வேண்டும் என்று பிரார்த்தித்தனர். பிராமணனும் "விவேகசிந்து" என்னுங் கிரந்தத்தை முன்னிட்டு வாசித்து, அதனது தாற்பரியங்களைத்தெரிவித்த பிறகு ஆத்துமராமனைத் தரிசிக்கச் செய்கிறேன் என்ன, அவ்வாறே சாதியுமென்று பிராஞ்ஞர் அந்நதியின் மணல்மீது தமது பழம் பொந்தை வஸ்திரத்தைப் பரப்பி அதன்மீது பதுமாஸநமிட்டு உட்கார்ந்துகொண்டு, தேகமெல்லாம் வஸ்திரத்தால் மூடிக்கொண்டு, ஸ்வாமி தாங்கள் வாசிக்கலாமென்று உரைத்தருளினர்.

பிராமணனும் இதென்ன விந்தையா யிருக்கிறதென்றெண்ணி, என்னை வாசிக்கச்சொல்லி நீர் தேகத்தை மூடிக்கொள்ளுவானேன்? அதன் காரணத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்க ஸதாநந்தபரிதர் சொல்லலுற்றனர். யாதுக்குயான்தேகத்தைமூடிக்கொண்டனனெனில்:— தாங்கள் வெகுதூரப் பிரதேசத்திலிருந்து எனக்குப் போதிக்கக் கிரந்தங் கொண்டுவந்தீர்; அதை நான் கேட்கும்போது மநதை இந்திரியங்களின்வழியே செல்லவிடாமைக்காக விரல்களாலே துவாரங்களை யடைத்துக்கொண்டு மநம் நிறுத்தி, கண்களை மூடிக்கொண்டிருந்தால் நன்று யாவாகநமாகும் என்பதற்காகவே அங்ஙன் செய்தேன்; அதுவன்றிவேறுகாரணமில்லை எனச்சொல்லியருளலும், பிராமணன் சரியென் றிசைத்து, ஒரு ஜாமம் வரையில் தனக்குத் தானே அந்தக் கிரந்தத்தைப் படித்து, பிறகு அதற்கு வியாக்கியாநமுஞ் செய்துகொண்டு வருவதை தாஸர் சற்றேனுங் கவனியாமல் தம்முடைய குணநுபவங்களிலேநின்றநிலையினராயிருந்தார். அந்தப் பிராமணன் தவளைபோல் தனக்குத் தானே வெறுமனே கத்திக்கொண்டிருந்து, சூரியவெப்பம் மிகுதியுந்தீக்ஷணியமாய்க்கொளுத்தி வருகையாலே அதனையும் சகித்துக்கொண்டுபடித்து வந்தும் ஒன்றுக்கேனும் ஏன் என்னவென்று கேளாமல் பொந்தையை மூடிக்கொண்டிருக்கிறார்; தேகமுங்கூட அசையக் காணேம்; சித்திரப் பதுமைபோலிராநின்றார்; இதுவென்ன விந்தை? பார்ப்போமென்று மெதுவாக அவருடைய போர்வையைச் சற்று விலக்கிப்பார்க்கையில், கண் காதுகளை விரல்களால் மூடிக்கொண்டு ஹரிநாம ஸ்மரணை செய்துகொண்டிருப்பதை பிராமண ரறிந்து சோர்வுற்றவனாய், வெகுதூர

தேசத்திலிருந்து நாமேன் இவ்விடத்திற்கு வந்தோம்? வீண்தேகப் பிரயாசையெடுத்துக்கொண்டோம்; நம்மைப் படிக்கவிட்டு அதின் தாற்பரியத்தையாவ தறியாதே, தம்முடைய அநுபவத்திற் புத்தி செலுத்திக்கொண்டிருக்கின்றார்; இதுவீண்காரியம்; நாம்படித்த தால் பயனில்லை; இவ்விடம் வந்ததாலும் பயனில்லை என்று வெறுப் படைந்தனன். அவனுடைய வெறுப்பினையறிந்த வீரவைஷ்ணவர், அவன்நேரில்சொல்லாமல் தமக்குத்தாமே சில அபங்கங்களைப்பாடி னார். அவ்வபங்கங்களின் கருத்தாவது:—

வீண்வாதஞ்செய்யுமவர்கள் அநந்தம்பேருண்டென்று அறிந் தே கிருகத்தைவிட்டு வநங்களில் சஞ்சரிக்கின்றேன். நாமரூபா நுஷ்டாநங்களால் ஈசுவரன்பக்கல் பிரேமமென்னும் அமுதமுண் டாகிறது; அவ்வமுதம் ஊறவூற புத்தி நிஷ்காமமடைசிறது; புத்தி நிஷ்காமப்பட்டவாறே, "அஹம்ப்ரஹ்மாஸ்மி" என்னும் வாக்கியத் துக்குகப்ப ஈசுவரனுக்குரிய சைதன்னியகாரியம் பெறுகிறான்; அது கைவந்த மாத்திரையானே சமப்படுகின்றான்; இவைப்பிரத்தியக்ஷ அநுபவமாயிராநிற்க, இதையொழித்து வீண்வாதஞ்செய்யும் வம் பர்களாகிற அத்துவைதிகளோடு வீண்வார்த்தைசொல்வதில் பய னில்லை; இவர்களோடு வீண்வார்த்தை பேசுவதால் தேவ பக்த நியா யங்களுக்கு விகல்பங்களுண்டாகும்; தேவ பக்தர்களுக்குள் ஒருவரு க்கொருவர் வாதித்துக்கொள்ளுவதில் பயனில்லை; சிரமையுஞ்சிறுமை யுமே யுண்டாகும்; மநதிற்குத்திருத்தியில்லாக்காரியம் எப்போதும் அநுஸரிக்கக்கூடாது; முற்றுமறிந்திட்டவர்போல் வாக்காலே பிரமஞ் ஞாநஞ்சொல்லி, கவடி அதாவது பலகரைக்காகப் பிராணனைவிடுகின் றார்கள்; மாநத்தின்பேரில் திருஷ்டியில்லாமல் பஜார்களில் சண்டை யிடுகின்றார்கள்; யாவும் ஆத்துமரூபமாக விளங்கப்பெறுமவர்களுக் குத் தூரத்திலிருந்து வருவதுபோவது தோன்றுமா? சந்தோஷமும் விசநமும் ஆத்துமாவுக்கிருக்குமா? அது வருத்தமடையுமா? சத்த மும் எண்ணமும் ஒடுங்கிநிற்கவேண்டும். நிர்க்குணத்தினிடம் எது தானிருக்கக்கூடும்? தேவனென்றும் பந்தனென்றுமில்லை என்பவ னுக்கு மீளாநரகமே ஸித்தமாகும்; தேவ ஆக்கினையின்படி நடப்ப தே கருமம்; தவறுவானாகில் அத்தேவனுக்குத் துரோகியாய் விடு வான்; பிரமநிஷ்டனாய்நானிருந்தாலும் ஈசுவரனுடைய கிருத்தியங் களைப் பெற்றவனாதல் அருமை; காரணகர்த்தர்களாக மூவரிருக்க, அவர்களுடைய கிருபையைப் பெறுவிடில் எது கைவல்லியமாகும்? எதுவரையில் ஸகுணயோகமுண்டோ அதுவரையிலும் அந்நிலையில் நிற்கவேண்டும்; அத்துவித வசநம் பிரசங்கங்களால் பயனிலது;

இவற்றை புத்திமான்களெல்லாரும் யோசித்து நடக்கவேண்டும்; தங்களுக்குத் தாங்களே தீங்குசெய்துகொள்ளுமவர்களாகலாகாது என்பனவாம்.

இவற்றையெல்லாம் நன்குகேட்ட பிராமணன் பயமெய்தினவனாய், தாஸர் திருவடிகளில் வீழ்ந்து சேவித்து, என்னையுமாட்கொண்டருளவேண்டும் என்னிறைவே! யான் அறியாமூர்க்கனாய் அத்துவிதமார்க்கத்தை அவலம்பித்து அல்லல் படுமவனாயினேன்; இனி ஒருக்காலும் அவ்வழிச்சேரேன்; தேவர் திருவடிகளிலேயே துவண்டு கிடந்து, சதாகாலக்ஷேபத்திலேதானே ஈடுபட்டுக்கொண்டு கிடப்பேன்! என்று பிரார்த்திக்க, தாஸர் இவனுடைய பக்குவதரத்தையும், ஆர்த்தியையும், சத்துவகுணந் தலையெடுத்தமையையுங் கண்டு அநுக்கிரகஞ் செய்தருளினார்.

இதுநிற்க, லோஹோரா கிராமவாசிகள் சிலபேர் ஸ்வாமியிடம் வந்து வணங்கி, தங்கள் கிராமத்துக்கு எழுந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, தாஸருமநங்கொண்டு, வந்தவர்களோடு லோஹோராகாமுக்குப் போய்ச்சேர்ந்து, அங்குள்ள பாகவதர்களால் சம்மானிக்கப்பட்டவராய், பகற்காலங்களில் பிராமண சந்தர்ப்பணமும், இராக்காலங்களில் பகவத்பஜனை காலக்ஷேபங்களும் நடக்க ஆநந்தித்துக் கொண்டிருக்கும்போது அந்த வூரானது ஸ்ரீ வைகுண்டம்போல் இருக்கலாச்சுது. அவ்வூராரில் பேதைக்குழவிமுதல் எல்லாரும் என்றும் ஸ்ரீமந்நாராயணனையே இடைவிடாமல் பாராயணஞ்செய்து கொண்டிருக்குமவர்களாயினார்கள். குடங்களில் ஜலம் தூக்கிச் சிரசுகளின்மீது வைத்துக்கொண்டு கும்பல் கும்பலாகவரும் ஸ்திரீகளுங் கூடவிட்டலேசுவரனுடைய குணாநுபவங்களையே சிந்திப்பதும், ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளுவதுமாய்ச் செல்லுவார்கள். இப்படி தேவூகாம் பூலோக பரமபதமாய்த் திகழாநிற்க, ஒருநாளிரவில் காலக்ஷேபம் நடத்தி, விடியோறை மங்களார்த்தியானவுடனே பிரமநிஷ்டாரகிம் கண்ணியராகிய துக்காராம் ஸ்வாமிகள், அவ்வூரில் 'காசாரவீ' என்று பெயர்கொண்ட விசாலமான வோர் தூரவுவுண்டு. அதின் ஜலம் விசேடித்த வுப்பாகவும், ஓர்வகை தூர்வாசனை யுடையதாகவுமிருக்கும். அந்தத் தூரவுக்கு நேரேதுவாயெழுந்தருளி, ஸ்நாநசந்தியாவந்தநங்களை முடித்துக்கொண்டு வருவதை அவ்வூராரறிந்து, அந்த ஜலத்தின் துர்க்குணங்களைக் கேட்பித்தும் தாஸர் அவற்றை மதியாமல் தம்மகாரியம் முடிந்தவுடனே அங்கு நின்றும் வந்துவிட்டார். பிறகு சிலர் அந்த ஜலத்தை வாயிலூற்றிப் பார்க்க, கெங்கா

தீர்த்தம்போல் இனிப்பும் பரிமளமுங்கொண்டிருப்பதை யறிந்துஎல்லாருக்கும் அவ்வருஞ்செயல் தெரிவித்துக் கொண்டாடினார்கள்.

அன்றிக்கே, அடியரில் அதிபராகிய துக்காராம் ஸ்வாமிகள் லோஹோகாமில் வாசம்பண்ணி பகவத் காலக்ஷேபங்களை இடைவிடாது நடாத்திவருவதில் ஓர் பிராமணன், கௌமாரதசையினன், தாஸருடைய கீர்த்தனைகளைப் பாடம்பண்ணிக்கொண்டு இராக்காலங்களில் தாஸரோடொக்க காலக்ஷேபம் பண்ணிக்கொண்டு வந்ததில், நித்தநித்தம் அன்புமீதூரி பக்தி யதிகரித்துக்கொண்டே வந்து, முடிவில் பரமாசாரியராகிய துக்காராம் ஸ்வாமிகளுடைய திருவடிகளிலேயே புத்தி லயிக்கப்பெற்றவனாய்க்கொண்டு, வீடு வாசல்தாய் தந்தை சுற்றம் பெண்டாட்டி முதலானவர்களை யறத்துறந்து, அன்னோருடைய நினைப்புமில்லாமல், அவ்வெல்லாரும் துக்காராமரே யென்று, உடல் - பொருள் - ஆவிகள் மூன்றையும் அவர் பரமாக்கி தாஸரைவிட்டு அரைக்கணமும் பிரியாமலிருந்துகொண்டிருந்தான் அந்தப் பிராமணனுடைய மனையாட்டி மிகவும் சுந்தரமுடையவளும் யௌவநவதியுமாகையாலே தன்கணவன் வீட்டுக்கு வருதல், மற்ற சமுசார வியாபாரங்களை நடாத்துதல் முதலியவையின்றி என்றும் துக்காவினிடமே யிருந்து போதுபோக்குகின்றானென்கிற கோபத்தாலே, துக்காவைச் சின்னப்படுத்தவேண்டுமென்று எண்ணினவளாய், தன் நாயகன் வெளிப்பிரதேசங்களுக்குப் போயிருக்குஞ் சமயமறிந்து, ஓர்நாள் விடியுங்காலத்துக்குத் தனியே வந்து துக்காராமரைச் சேவித்து, நாளையொருவேளை போஜநம் தன் வீட்டிலுண்ணவேண்டுவதென்றுபிரார்த்தித்து அவரால்உத்தரவுபெற்றுக் கொண்டு வீடுவந்து சேர்ந்து, மறுநாள் கசப்புடைய பேய்ச்சுரைக் காயைச் சமைத்து மற்ற பதார்த்தங்களுடனே யொன்றாக, தன் வீட்டுக்கெழுந்தருளின துக்காராம் ஸ்வாமிகளுக்குப் பரிமாறினள், ஸ்வாமிகளும் அவளிட்ட அந்நம், காய்கறி பதார்த்தங்களோடொக்க பேய்ச்சுரையையுமுண்டு தமதிருப்பிடத்துக்குவந்துவிட்டனர். இவ்விருத்தாந்தங்களை ஸ்ரீமத்பண்டரீரங்கனறிந்து, கைப்பும் இனிப்புமென்று ருசியறிந்துண்ணுமவர்கள் என்னடியார்களன்றேயாகிலும் இவள் நமதருமை மைந்தனுக்கு வேணுமென்றே கைப்பிட்டனள் என்று கோபங்கொண்டு, அவளுடைய வாலிபதேகத்தின் தேஜஸ் கூமாரி, உடம்பெங்கும் கட்டிகளுண்டாகச் செய்தருளினான். இந்தப் பிராமணப்பெண்ணுந் தனக்குவந்தகேட்டைப்பொறுக்கமுடியாமல், அநேக வைத்தியர்களையும், இரணவைத்தியர்களையும் அழைப்பித்துப் பார்த்தாள்; சற்றும் நீங்கினதேயில்லை; சருவேசுவரன்மீது துவே

ஷங்கொண்டு அபசாரப்பட்டவர்களுக்கும் மோக்ஷங்கிடைத்திருக்கிறது; அவனடியார்கள்மீது துவேஷத்தால்அபசாரப்பட்டவர்களில் ஒருவரேனும் ஒருபோதும் நரகத்தைவிட்டுப் பிரிந்தவர்களேயில்லை தவம், தானம், க்ஷேத்திரயாத்திரை, தீர்த்தஸ்நானம் முதலியவற்றில் ஒன்றுனும் அன்னோர்க்குப் பயனில்லை.

இதுநிற்க, அந்த லோஹோகாமில்தானே சோமவாரவிரதத்தையநுஷ்டிக்கும் ஓர் பிராமணன், துக்காராம் ஸ்வாமிகள் அவ்வூருக்கு எழுந்தருளின நாள்முதல் ஒருவேளை தளிகை சாதிக்கவேண்டுமென்னும் அவாவுடையவனுய், ஒரு சோமவாரமிரவில் வந்து சேவித்து, தனது கருத்தை விளக்கி மிகு விநயங்களோடு துக்காவையழைத்துக்கொண்டு தம்வீட்டுக்குப்போய், பாரியையாலே கால் கைகளைச் சோதித்துக்கொள்ள ஜலம்தருவித்து, தானுஞ் சோதித்துக்கொண்டு, இருவரும் சமமாயுட்கார்ந்து, மனைவிபரிமாறினவற்றைச் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது திருவிளக்குக்கு எண்ணெயில்லாமல் திருபத்திக்கொண்டுபோனதை யறிந்து, ஹரிஹரீ! என்னசெய்யலாம்? தீபம் நின்றுவிடும்போல் காணுகிறதே; இந்தத் தருணத்தில் எழுந்திருக்கவுங்கூடாது; வட்டித்துக்கொண்டிருப்பவளும் வெளியேபோகக்கூடாது; வேறே யாராவதிருந்தாலும்கடைக்கனுப்பி, சீக்கிரத்தில் எண்ணெய் வரவழைக்கலாம்; யாருமில்லையே! என்னசெய்வேன்? என்று பிராமணன் தத்தளித்துக்கொண்டிருப்பதை ஸ்வாமி கடாக்ஷித்து, முன் தாங்கள் எண்ணெய் வைக்கும் பாத்திரத்தில் பாருங்கள் என்றுரைக்க, அந்தணர் மனையாட்டியும், எண்ணெய் சித்தையில் ஏதேனுமொரு துளியிருக்கக்கூடுமென்று சித்தையினிடம்போய் அதைச்சாய்க்கையில்வெற்றுச்சித்தை நிறைந்திருந்தமையைக்கண்டு ஆச்சரியமடைந்து, தீபத்திற்குவார்த்து அந்தத் தம்பதிகளிருவரும் வைணவச்சிரேஷ்டரைவாழ்த்தி, உண்டிமுடிந்தபிறகு கைகால்களைச் சோதித்துக்கொள்ளச்சொல்லி, பிராமணனுனுஞ் சோதித்துக்கொண்டு, சந்தந புஷ்ப தாம்பூலங்களை யளித்து, அவருடனுகவே அவ்விருவரும் பஜனை காலக்ஷேபத்துக்கு வந்து, அன்றிராமுழுதும் விட்டலநாம பாராயணத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்களாய் ஆநந்தமேற்றூர்கள்.

அதன்பிறகு ஓர்திநம், அந்தஊர்படேலுடையவீட்டிற்கெதிரில் சதுரமான கருங்கல்லொன்று போட்டிருக்கும். அந்தக்கல்லின்மீது காலைவேளையில் மெய்தாஸர் வீற்றிருந்தார். அப்போது, அவ்வூரில் சுரக்குடுக்கை தம்பூரை மீட்டுக்கொண்டு வீடுகள்தோறும்புகுந்து பாடிப் பிக்ஷையேற்றுப் பிழைக்கும் ஒருயாசகனுண்டு. அவன்,

ஜிதேந்திரர் வீற்றிருக்கும் அந்தப் படேலினுடைய வீட்டில் பாடிக் கொண்டிருந்து, தாம்பாடுமந்தப் பாட்டுகளைக் கவநமாய்க் கேட்கின் றுனென்றறிந்து துக்காராம் ஸ்வாமிகளிடம் வந்து, அவர்முன்பாடி நிர்த்தநமுஞ்செய்து, தன்சுரக்குடுக்கைநிறைய பிக்ஷைசெய்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனன். தாஸரும் அவன்பால் ஆதரம் பெருகிய திருவுள்ளத்தராய், அந்தயாசகனைநோக்கி, இதுவரையிலும் நீர் யாசித்துவந்தவற்றை யெல்லாம் இந்தப்பாரையின் மீதில் பெய்யும் என்றருளலும், அந்தயாசகன், அவ்வூரில் வீடுகள்தோறுமுள்ளவர் கள், இரும்புசன்னங்களை யெடுத்துக்காய்ச்சிக் கட்டிகளாக்கி விற்ப வர்களாதலால் அவர்களிடம் யாசித்த இரும்பு துண்டுகள் நிறைந்த குடுக்கையை தாஸர் அருளின்படியே பாரையின் மீதில் கவிழ்த்துக் கொட்டினுன். உடனே அவ்விரும்பு துண்டுகள் யாவும் மாற்றுயர்ந்த தங்கமாகிப் பாரையின்மீதில் பிரகாசியா நின்றன. அதைக்கண்ட யாசகன், வியப்புற்று தாஸருக்கு வந்தந நமஸ்காரங்கள் செய்து கொண்டாடி, மறுபடியும் அவற்றை யெல்லாம் சுரக்குடுக்கையில் சேர்த்துக்கொண்டு விடைபெற்றுப் போய்விட்டான். அந்தக் காலத் தில் அங்கிருந்து பார்த்துக்கொண்டிருந்த சிலர், இவர் வீற்றிருக்கும் பாரை பரிசவேதியா யிருக்கவேண்டும்; ஆனதால்தான் இரும்புகள் பட்டவுடனே உயர்ந்த மாற்றுள்ள தங்கமென மாறியது என்றெண் ணினவர்களாய், தாஸர் அந்தப் பாரையைவிட்டு நீங்கினவுடனே அவர்களெல்லாரும் ஒன்றிரண்டு கூடைகள் நிறைந்த இரும்பு துண்டு களைத் தங்கள் தங்கள் பேராசையால் கொண்டுவந்து அப்பாரையின் மீதில் கொட்டிப் பார்க்க, அவை கட்டழியாமல் இரும்பாகவே யிருக்கக்கண்டு வெள்கினவர்களாய் இது மெய்யன்பருடைய அருள் வழியென நினைந்து போய்விட்டார்கள்.

இது நிற்க, லோஹோகாமில் ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகளால் நித்த நித்தம் நடந்துவரும் காலக்ஷேபங்களுக்கு ஈடுபட்டிருந்த அநந்தம் பிராமணர்களி லொருவன், மெய்யன்பர்பால் அன்பு அதிக மும் அடைந்தவனாய்க் கொண்டு தன் கிருகக் கிருத்தியங்கள் யாவற் றையு மறந்து, எப்போதும் தாஸருடைய கீர்த்தனங்களையே பாடிக் கொண்டு, துக்காவோடு கூடவே பிரியாம லிருந்துகொண் டிருந்தான். இப்படி யிருந்துகொண்டிருக்கையில், அந்தப் பிராமணனுடைய வீட் டில் தன் மகனுக்கு வியாதிகண்டு அது நாளுக்குநாள் துர்ப்பலப் படுத்திக்கொண்டு வருகிறசேதியைத் தன்பெண்சாதிபலரிடம்சொல் லியனுப்பக்கேட்டும் கவனிக்காமல் யதாப்பிரகாரமாக தாஸர் காரியத் திலிருந்தமையால் அன்னேன் பாரியை, வைத்தியர்களைக் கொண்டு

பார்த்து, தெய்வப்பிரார்த்தனைகள் செய்தும் அந்நோய் தீராமல் குழந்தையிறந்துவிட்டான். அதைக்கண்ட தாய் அலறி பூமியில் வீழ்ந்து சோர்வுற்று, ஹா! புதல்வா! உன்னைப் பெற்று வளர்த்தது இக்கோலங் காணத்தானு! இதற்காகவா என் கர்ப்பத்தி லுதித்தனை? அறிவின் மிகுந்த அழகா! என் கண்மணியே! நீ இறந்தபிறகுங்கூட உன் தந்தைவந்து விசாரித்தவ ரல்லவே! என்னபாபம் பண்ணினேனே! தமக்கு மனைவி மக்களெல்லாரும் பஜனையே யென்றெண்ணி நம்மையெல்லாரையும் அடியோடே துறந்து விட்டிருக்கிறார்; நம்முடைய வார்த்தையையும் நம்மையுஞ் சற்றும் மதியாமல் துக்காராமரையே பரமபதவாசனென்று மதித்திருக்கின்றார். இவர் மாத்திரமேயன்று, இவ்வூரில் நான்கு வேதங்களிலும் பண்டிதர்களா யிருக்கும் நம்மவர்களும், சந்நியாசிகளுங்கூட துக்காவினுடைய மோகவலைக்குள் சிக்கியிருக்கின்றார்கள்; என்னாலென்ன செய்யக்கூடும்? என்று பேரிரைச்சலுடன் கடுரோதனஞ் செய்யத் தலைப்பட்டாள். எவ்வளவு தானமுதும் தன்னை யேனென்று கேட்பாரில்லாமல், ஊரார் சுற்றத்தாரெல்லாரும் துக்காராம் ஸ்வாமிகளுடைய காலக்ஷேபத்தில் ஈடுபட்டிருந்தார்கள். பிராமண ஸ்திரீயும், தன்னை யாரும் விசாரிப்பாரில்லாமல் தனக்குத்தானே தேறுதலடைந்து, கறந்தபால் முலைக்கேருதது போல் இறந்த இப்பிள்ளை மறுபடியும் உயிர்பெருது; பிள்ளை உயிர் மீண்டெழுந்து அம்மா! என்றழைக்க எந்தஜென்மத்திற் காணப்போகின்றேன்! இத்துக்காவை நம்ம நாயகர் நேசித்தநாள் முதல் வாராத துன்பங்களெல்லாம் வருகிறதேயன்றி இன்பஞ் சிறிதும் வரக்காணேன்; இவர் பெரியவரென்று மதித்து நானும் எத்தனையோதடவை இவருக்கு வந்தனங்கள் செய்திருக்கின்றேன்; இவர் தம்முடைய குடும்பத்தை யெவ்வாறு சிரமைபடுத்தி, தம் பிள்ளைக்கு நோய்வந்த காலத்திலும் என்ன ஏதென்று விசாரிக்காமலிருந்தாரோ அவ்வாறே தம்மை ஆசிரயித்தவர்களுக்கும் அந்தத் தன்னுடைய புத்தியையே போதித்து வைத்திருக்கின்றார். அதனாலேயே நம்மப் பிராமணரும் நம்மை யேரெடுத்துப் பார்க்காமலும், நம்மகுழந்தை யிறந்தமையை விசாரிக்காமலும் இருக்கின்றார்; பஜனையே தமக்குப் பிள்ளை பெண்டாட்டிகளா யிருக்கிறது; ஆயினும் இவர்களுடைய பக்தியின் திறமைகளை நானறிகிறேன்! என்று அதிக ஆக்குருஷத்துடனே தன் இறந்த பிள்ளையை யெடுத்துத் தோளின்மீதிற் சார்த்திக்கொண்டு பஜனை காலக்ஷேபம் நடக்கு மிடத்திற்குக் கொண்டுவந்து, அங்கு ஒரு பக்கத்தில் கிடத்தி, இவ்விறந்த பிள்ளையை யெழுப்பித்தருவாராயின் துக்கா மெய்பக்தி யாளரென் றெண்ணுவேன்; இல்லாவிடில்

பொய்பக்திமான் என்று ஊரெல்லாம்பறையறைந்தாப்போல் சாற்று வேன் என்று ஆரவாரத்துடன் உரைத்தனள். இப்பிராமணமாதின் ஆரவாரத்தையும், சவங்கிடக்கையையுங்கண்ட அங்குள்ளோர் திடுக் கிட்டவர்களாய்; இதுஎன்ன தஷ்டை நல்லதோர் சற்காலக்ஷேபவிடத் தில் பிணத்தைக் கொண்டுவந்து போட்டு அசுத்தமும் அசிங்கியமும் உண்டாகச்செய்தாள் என்பாரும், இந்தப்பிள்ளை மறுபடியும் உயிர் பெற்று எழுந்திருக்குமா! என்பாரும், நம்ஸ்வாமி சருவசக்திபாரா கையாலே எழுப்பிவிடுவார் என்பாருமாயிருந்தார்கள். அன்றையதி னம் ஏதோ சிலவிசேஷங்களால் இரண்டாயிரம் வார்க்கரிகளும், அக் கம்பக்கத்துக் கிராமவாசிகள் அளவிருந்தபேரும் வந்திருந்தார்கள். இவர்களால் அந்த ஊராரும் குழந்தைகள்முதல் எல்லாரும் அந்தக் காலக்ஷேப மண்டபத்திலிருந்தார்கள். இந்தப் பெருந்திரள் என்று மில்லாமல் வரக்கண்ட கைங்கரியபரர்கள் மண்டபத்தை முன்னமே சுத்திசெய்து, திருவிளக்குகள் எங்குமமைத்து, கொடிகள் தோர ணங்களால் அலங்காரப்படுத்தி வைத்திருந்தனர்கள். இப்படிரம்மிய மா யிருந்துள்ள அந்த மண்டபத்தில் எல்லாரும் ஒருமித்த மநதின ராயிருந்து ஸ்ரீவிட்டலநாம சங்கீர்த்தநஞ் செய்துக்கொண்டு வராநிற் கும் நல்லதோர் தருணத்தில் அந்தப் பிராமணஸ்திரீ இறந்துபோன தன் குமாரனுடைய களேபரத்தைக்கொண்டுவந்து போட்டமையை யும், அங்குள்ள பகவத்தாஸர்கள், இதென்னமோ! என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறமையையுங் கண்டபக்தசிரோமணியாகிய துக்காராம் ஸ்வாமிகள், வேறுவார்த்தைகளைத் தவிர்த்து, ஸ்ரீ பண்டரீநாதனை நிறுத்திய மநத்தராய் பரவசங்கொண்டு, யாவரையுங் கைகளைக் கொட்டி பஜிக்கச்செய்து, பிறகு, ஹரிஹரீ! விட்டலா! வேதவேத் தியா! விமலாநந்தசொரூபா! ஆதிமூலா! அநாதரக்ஷகா! ஆபத்பாந் தவா! அநந்தசயநா! அச்சுதா! அமலா! வைகுந்தவாசா! வேங் கடவா! வேயிசைலோலா! வேதனையீன்ற விமலா! உமது பற்ப பாதங்களைப் பணிகுதும்; இந்தக் காலக்ஷேபக்கூட்டத்தில், ஏழை யேதிலன்பால் மாச்சரியங்கொண்டு ஒருபெண்பிள்ளை தன்னுடைய இறந்துபோன குழந்தையின்பிணவுடம்பினைக் கொண்டுவந்துபோட் டிருக்கின்றாள். காலக்ஷேபத்தில் ஆர்த்திமிகுந்துவந்த நின்நிஜதாஸர் களும் மற்றுமுள்ளவர்களுமெல்லாம் இந்தக்குழந்தை உயிர் பெறா விடில் பக்தியென்பதே உலகில் பொய்யென மதிக்கப்படும்! என்று சோதிக்க முனைந்திருக்கின்றார்கள். தேவரும், தேவருடைய அடிமை யாளர்களாகிய சாதுஜெநங்கள் நினைப்பதெவ்வண்ணமோ அவ்வண் ணமே முடிப்பக் காத்திருக்கின்றீர். அடியேனே! செய்யப்படுங்

கருமமின்னதென்று உணரப்பெருமல், இருபாடெரியுங் கொள்ளியினிடைச் சிக்கப்பட்ட எறும்புபோல் ஏங்கிநின்றனன். அடியேன் பொய்யனேனும், சரியை - கிரியை-யோகம் - ஞானம் என்னுமிந்நான்கினும் பக்திசிறந்ததென்பது சத்தியமாயின், மேல்கூறிய தேவர்திருவுள்ளமும், தாஸக்கூட்டத்தாருடைய சோதநாபுத்தியும்; பிராமணமாதின் மாச்சரியவிலக்குந் தலைக்கட்டியருளும்; சபைஞரில் ஒருவனுயுயிர்த்தெழுந்து நின்றுஇந்தச் சிறுவனும் நின்னையேத்துதல்செய்து பஜிப்பான்! என்றுகூறிச் சிந்தித்துக்கொண்டிருந்தனர். அப்போது சருவஜீவ பாலகனுகிய விட்டலேசுவரன், தாஸருடைய திருக்கண்களுக்குமாத்திரம் தோன்றினவனுய் எதிரில் நின்று, அப்பா! முத்தொழிலுக்கும் அதிகாரம்பெற்றவனுய் நீ யிருக்க என்னைநோக்கிப் பிரார்த்திப்பானேன்? உன்னிஷ்டத்தின்படி நீயே நடத்திக்கொள்ளுவாயென்று ஆஞ்ஞாபித்து மறைந்தருளலும், ஆரூடஞானியாகிய துக்காராமர், எழுந்தருளியிருந்த இறைவனீசற்கு வந்தநமஸ்காரங்கள் இயற்றிநின்று, தீநபந்து! தீநரக்ஷகா! திவ்வியதேஜோமயாநந்தரூபா! திருவின்மணளா! ஜெகந்நாதா! வந்தநம் வைகுந்தமாபதிவாசா! வானவர்க்கொப்பில்நேசா! வாரிதியிற்றுயிலமரீசா! வழங்குமருளுடைச் சுப்பிரகாசா! வந்தநம்; எள்ளுக்குள் எண்ணெய்போல் கரந்தியங்குமெம்பெருமானே வந்தநம்;எட்டுணையேனும்நின்நன்மைகண்டேத்தா எளியனேனையும் இன்புமிகு நின்தாஸர் குழாத்துள் கடையனென ஆக்கியருளியவா! வந்தநம்; அடியேனுக்கு அன்னையாய்,அத்தனுய்; ஆரியனுய்,என்னையாண்டிடுந் தன்மையனுய்விளங்கிநிற்கும் அகிலபுவநேசுவரா! வந்தநம்; சுயஞ்சோதீ! வந்தநம்; தற்பரா! வந்தநம் என்று ஸ்துதிகளை ஸ்துதித்துக்கொண்டு, அநந்தம் மலிந்தவராய் சபையைச் சுற்றிச்சுற்றி பாடிக்கொண்டு வரும்போது, இரும்புபோல் வலியநெஞ்சமிறையிறை யுருகப்பெற்றதாய், தாஸரோடு உறவு நல்லுறவாகக்கொண்டு அங்கிருந்தவர்களெல்லோரும் மெய்கள் புளகாங்கிதமடைந்து, கண்களிலிருந்து ஆநந்தபாஷ்பங்கள் பெருக்கெடுத்தோட, தாங்களும் விட்டலநாம சங்கீர்த்தநங்களைப் பாட நுதலினர்கள். அத்தருணத்தில் இறந்துகிடந்த சிறுவன்,நித்திரைவிட்டெழுந்திருப்பதுபோல் எழுந்துநின்று தானும் கோஷ்டியரோடு ஒருவனகக் கைகளைத்தட்டிக்கொண்டு, ஹரிவிட்டலா! பாண்டுரங்கா! என்று பெருமிடறுசெய்து, பரமக்கிருபாளுவாகிய தாஸருடைய திருவடிகளில் அடியற்ற பனைபோல்வீழ்ந்து சேவித்துக்கொண்டு கிடந்தவண்ணமே கிடந்தான். துக்காராம் ஸ்வாமிகளும்

அவனை யெடுத்துப் பஜிக்கவிட, ஸ்வாமி பரமாசாரியரோடு பஜித்துக்கொண்டே யிருந்தனன்.

இங்நிகழ்ந்த அதிசயங்களெல்லாவற்றையும் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் எல்லோரும் விஸ்மிருதராய், தங்கள் தங்கள் மெய்களை மறந்து, ஹரி ஹரீ! விட்டலதேவா! என்று ஒரு பெருங்குரலிட்டுக் கூவி, எல்லாரும் ஸ்வாமிகளுடைய திருவடிகளில் வீழ்ந்து சேவித்துக்கொண்டு, இறந்த பிள்ளை உயிர் மீட்டெழுந்து தேவபஜனை செய்துகொண்டிருப்பதற்காகக் கொண்ட பரவசத்தால், ஆணென்றும் பெண்ணென்றுமில்லாமல் எல்லாருமொருமிக்கக் கலந்து லஜ்ஜையென்பது சிறிதுமின்றிக்கே கைகளைத் தட்டிக்கொண்டு ஆடுவாரும், பாடுவாரும், ஒருவரோடொருவர் உகந்தாலித்துக் கொள்ளுவாருமாய்க் கோலாகலங்கொண்டு, இது வைகுண்டமே என்னலாய் குதூகலமடைந்திருந்தார்கள். இந்தப் பரவசங்கொண்டவர்களிலிருந்து துரையே தெளிவடைந்த சிலர் மற்ற பரவசர்களுடைய குதூகலங்களைக் கண்டு, இது லோஹோகாமன்று, பரமபதமே! என்றும், துக்கா மானிடவரன்று; மன்னுபுகழ் நாராயணனாகிய பரப்பிரமமே! என்றும், இதுவரையிலும் நம்முடைய வாழ்நாள்களை வீண்நாள்களாக்கிக் கொண்டோம்; பகவத்பாராயணத்துக்குமிஞ்சின சுகமும் பெருமையுமில்லை; இனி இவ்வநுபவங்களை விட்டு மாறலாகாது; வைராக்கியங் கொள்ளவேண்டும் என்றும், துக்கா என்றிவரை எண்ணலாகாத; பகவானென்றே பூரணமாயெண்ணவேண்டும்! என்றும் இப்படி பலவிதங்களாகப் பேசிக்கொண்டு, ஆநந்த மேலீட்டால் எல்லோருக்கும் மெய்பக்தி தோன்றியதை வர்ணிக்க என்னொருவனாலாகாது! உலக முழுமையுங் கூடி, முனைந்தாலு மாகாது!! அவர்களுடைய ஆநந்தங்களை என்னென்றுரைப்பேன்? விட்டல நாமத்தை ஸ்மரிக்கின்றோமென்றும் இல்லாமல் சும்மா யிருக்கின்றோமென்றுந் தங்களுக்கே தெரியாமல், வாய்குளறி, நின்றவர்கள்நின்றபடியே இரு கைகளையும் அஞ்சலி கூப்பினவர்கள் கூப்பினபடியே, ஸ்தம்பம்போல் அசைவற நின்றவர்கள் அசைவற்றுநின்றபடியே யிருந்தனர்கள். பிள்ளையைப் பெற்றவளாகிய பிராமண ஸ்திரீயானவளும் மற்றவர்களோடே பரவசாநுபவங்களை யநுபவித்திருந்து தெளிவடைந்து, துக்காராம் ஸ்வாமிகளுடைய திருவடிகளில் வீழ்ந்து சேவித்து, தனது முடிமேல் அவருடைய பாதங்களைப் பொருந்த வைத்துக்கொண்டு, சற்றுநேரம் பொறுத்து எழுந்து நின்றுகொண்டு, எனது பிள்ளைகலி தீர்த்த பெருமானே! புத்திரபிக்ஷையீந்த புண்ணியனே! உமதுபிரபாவங்களை யறியாமல் இப்பேதையாள் குரூரமொழிகளை மொழிந்த

மைக்கு மன்னித்தருள வேண்டும்; இவ்வளவு பரமோபகாரஞ் செய்தருளின தேவர் திருவடிகளல்லால் அடியாளுக்கு வேறு தஞ்சமொன்றிலது; இன்றுமுதல் நானும் எனது நாயகர்போலவே உமது திருவடிகட்கு அடிமை யாயினேன்; பணித்தருளல் வேண்டும் பரம புருஷா! பரமதயாளு! என்று பலவாறு தோத்தரித்துக்கொண்ட விடமே வசித்துக்கொண் டிருந்தாள். பக்தர்களெல்லோருந் தாஸரை வணங்கித் தொழுதார்கள். இக்காணுக் கண்காட்சியைக் காணுதற்காகக் கண்ணிமையில்லாக் கடவுள ரெல்லாருங் காதலுடன் கலந்து வந்து கண்ணனல்லடியாரை வாழ்த்திச் சென்றார்கள். அந்நாள் நடந்த காலக்ஷேபத்தி லுண்டான பகவந்நாம சங்கீர்த்தனை நாதப் பிரமத்தில் லயித்திருந்தது. மூன்றாவது ஜாம முடிவில் தீபாராதந முடித்து, மங்களங்களைப் பாடி சபை கலைந்தது. ஜெநங்களுந் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குப் போனார்கள்.

இப்படியிருக்க, அன்று அந்தக் கோஷ்டியாருடன் கலந்திருந்த இரண்டு ஸ்ரீபாதசந்நியாசிகள், ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு போவதாவது:—இந்தத் துக்காராம் சூத்திரன், அதிலும் வணிகன், இவனுடைய பாதங்களில் பிராமண குலத்திற் பிறந்த நாம் வீழ்ந்து பணியலாமா? சூத்திரன் தேவகாரியங்களைச் சொல்லுவானாகில் கேட்கலாகாதென்று வேதோபநிஷத்துகளில் விளங்காநின்றது. இவன், கருமகாண்டம் - யோககாண்டம் - ஞானகாண்டங்களாகிற மூன்றையுமொழித்து பக்தி காண்டத்தில் நிலைத்திருக்கின்றான், பிராமணனுக்குக் கன்ம காண்டமே முக்கியசாதந மென்பது தனக்குத் தெரியும்; அவர்கள் உயர்குலத்தா ரென்பதுந் தெரியும்; தெரிந்திருந்தும் பிராமணர்கள் நம்மைச் சேவிக்கின்றார்களே அதை யங்கீகரிக்கலாமா என்றெண்ணாமல் சேவிக்குந்தோறும் சந்தோஷித்துக்கொண் டிருக்கின்றான்; பிரதி வந்தநமும் செய்கிறதில்லை; ஒவ்வொரு வேளை தனக்காயிஷ்டமிருந்தால் செய்கிறான்; ஸ்ரீபாத சந்நியாசிக ளாகிற பெரியோர்க ளெல்லாரும் இவ்விடத்திற்கு வந்திருக்க அவர்கள் முன் நாமேன் பவிக்கிறது என்றில்லாமல் தன் மனம்போனபடி யெல்லாம் இசைத்துக்கொண்டு பாடுவதால் எல்லாரும் அந்த நல்லிசைக்கு மயங்கிச்சொக்கிக் கிடக்கிறார்கள். இந்தப் பிரேதமும், காலக்ஷேபத்துக்கு வந்திருந்த பதினாயிரம்பேர்களில் நம்மைப்போன்ற புண்ணிய ஜெநங்களினுடைய திருவுள்ளங்கள் கனிவுகொண்டமையினாலே உயிர்பெற்றெழுந்தது; சூத்திரனுக்கு இவ்வதிகாரமேது? சூத்திரர் பிரமகுலத்தவருக்கு அடிமைசெய்வதே கருமமெனச் சாத்திரங்களோதாநிற்க, இவன் பிரமகுலத்தவர் முதல் மற்ற மூன்றுகுலஸ்தர்களையுந் தனக்கு

அடிமைகளாக்கிக் கொண்டிருக்கின்றான்; இத்தீமை யெங்கடுக்கும்? இவன் நீதிவானா? இவன் கருமபயிற்சியையும், யோகமுயற்சியையும், ஞாநமுதிர்ச்சியையும், அத்துவிதத் தேர்ச்சியையும் அறத்துறந்து, பக்தியேசிறந்ததென்று, தானும் தன்னையடுத்த பேதைகளும் அதில்தேர இராகங்களைப்பாடிப் போருகிறார்கள்; சாத்திரங்களைச் சோதித்தறியா முழுமூடர்களும், சோதித்தவர்களிற் சிலமதிகேடரும் இவனிசைக்கும் இராகங்களுக்கு மயங்கி இவனுக்குத் தொண்டு பூண்டவர்களாயிருக்கின்றார்கள்; இந்தக்கருவத்தை யடக்குவோம் பாருங்கள்! என்று பேசிக்கொண்டு, மச்சரமீதூறி யதிதீவிரமாய் நடக்கலுற்றார்கள். இங்ஙனிவர்களிருவரும் பேசிக்கொண்டு போவதை காலக்ஷேபத்திலிருந்து அவ்வழியே போய்க்கொண் டிருக்குமவர்கள்கேட்டு அதிசயித்தவர்களாய்க்கொண்டு; ஆவா! ஸ்ரீபாத சந்நியாசிகளாய், யாவரும் வணங்கத்தக்க யோக்கியதை பெற்ற இவ்விருவர், சுத்த சண்டாளர்களுக்குச் சமாநமான புத்தி படைத்திருக்கின்றார்களேயன்றி, பெற்ற தங்கள் நிலைமைகளைக் காப்பாற்றத் தக்கவர்களாய்க் காணவில்லை. மூடர்மெச்சுவதற்கே சந்நியாசம் பூண்டார்களல்லால் விவேகிகள் ஆயிரத்திலொருவர் பதினாயிரத்திலொருவர் உண்டாவதருமையென அறிந்த இவர்கள், அவ்வாயிரம் பதினாயிரம்பேர்களில் ஒருவிவேகியாக அருமையா யிருப்பவர்களால் நமக்கொரு காரியமுமில்லை; அவர்கள் நீங்கிய மற்ற அவிவேகிகளால் நமக்குக்காரியம். அம்மூடர் மயங்குவதற்காக என்ன உபாயஞ் செய்யலாம் என்று மந்திராலோசனை பண்ணி, "மூடரைமூடர்கொண்டாடிய முறைபோல்" என்றபடி, தங்களையொத்த சந்நியாசிகளைக் கொண்டாடி, அவர்களை யாசிரயித்தவர்களாய், அவர்களால் ஸ்ரீபாத சந்நியாசிகளென்று பேர்பெற்று, மாநமில்லாமல் திரிகின்றார்கள்; இவர்களுக்குச் சந்நியாசங்கொடுத்தவன், உடம்பிலிருக்கிற உரோமங்களைக் கழிக்கச் சொன்னமையினாலே இவர்களும் தேகங்களை மழுங்கச் சிரைத்துவிட்டிருக்கின்றார்கள்; அப்படிச் சிரைத்தவர்கள் புருவத்திலிருக்கும் உரோமங்களையுஞ் சிரைக்காமல் என்விட்டார்கள்? மறந்தார்கள்போலும்; ஆசாரத்துக்குப் பழுதென்று ரோமங்களைக் கழிக்கக் கருமகாண்டம் விதித்திருந்ததேயாகிலும், அவ்விதியின்படியே கழித்தவர்கள் புருவமாத்திரம் விட்டனர்; தாங்கள் மடிகளைக் கட்டிக்கொண்டு, பூசைசெய்யுமிடத்தில் உட்கார்ந்துகொண்டு, திருக்குறிகளை நெற்றியில் தீட்டும்போது தங்கள் புருவத்தின் மயிர்கள் தங்கள் கைவிரல்களில் படவில்லையா? அது தோஷமன்றா? கருமகாண்டத்தை யவலம்பிக்கிறோமென்று களிப்புறுமிவர்களுக்கே தங்

கள் தங்கள் நெற்றினிடம் இருக்கப்பட்ட தோஷங்களை யறிந்து கொள்ளத் தெரியாமல் நம்மபரமகுருஸ்வாமிகள்மீது குற்றஞ் சாற்றினார்கள்; இது மிகுதியும் அழகு! இவர்களுக்கு ஏதோ கேடுகாலம் சமீபித்தது; ஆதலால்தான் இப்படி அபசாரப்பட்டார்கள்; "கேடுவருமுன் மதிகெட்டுவரும்" என்கிற, பழைமொழியின்படி, பின்னேதோ கேட்டை யநுபவிக்கவிருப்பதால் முதலில் மதிகெடலுற்றார்கள். மலையைப் பார்த்து நாய் குரைக்குமாகில் நாய்க்குச் சேதமேயல்லால் மலைக்குச்சற்றுஞ் சலநமில்லை நமது துக்காராம் ஸ்வாமிகளுடைய ஒரு ரோமத்துக்கு ஸ்ரீ பாதசந்நியாசிகள் ஈடாகமாட்டார்கள் என்று பேசிக்கொண்டார்கள். பிறகு, அந்த இரண்டு ஸ்ரீபாதசந்நியாசிகளும் தங்கள் மடங்களுக்குப்போய், இராத்திரி மகாசபையில் தங்களை விரும்பி யாருஞ்சேவிக்கவில்லை யென்கிற பொறாமைகொண்டு, அந்நபாநாதிகள் சகிக்கப்பெறாமல் கொதிப்பேறிய மநத்தராய், அங்குநின்று இருவரும் பிரயாணப்பட்டு புனாதேசத்திற்குப் போய் மோகா என்னும் அதிகாரியைக் கண்டு, அவனோடு முறையமிடுவதாவது :—

தங்களுடைய செங்கோலின் கீழ்ப்பட்டகுடிகள், ஆக்ஞையின்படி பிரமக்ஷத்திரிய - வைசிய - சூத்திரர்களென்னும் நான்கு வகுப்பினரும் தங்கள்தங்கள் வருணாச்சிரம தருமங்களை வழுவுறுத்தாது எல்லாத் தேசத்தாரும் நடாத்திப் போருகின்றார்கள். லோஹோகாம் என்னும் தேசவாசிகள் மாத்திரம், தேஹூகாமிலிருந்து துக்கா என்னுமொரு சூத்திரனை வரவழைத்து வைத்துக்கொண்டு பதினாயிரம்பேர் அடங்கத்தக்க பெரிதோர் மண்டபம் அமைத்து அதில் அநந்தவிதமான அலங்காரங்களைச்செய்து, திருவிளக்குகளேற்றி வைத்து, அதிலிருந்து அந்தச் சூத்திரனாகிய துக்கா மத்தளம் - தாளம் - தம்புரு - முதலிய கருவிகளை வைத்துக்கொண்டு நானாவித இசைகளோடு கீர்த்தனைகளைப் பாடுவதும், அதற்கு மயங்கி அந்த ஊர்ஜெநங்களில்பிராமணர்கள் முதல் பஞ்சவர்கள்வரையிலும் அவன் காலில் வீழ்ந்துபணிவதும், அவனை சுவாமி என்று கொண்டாடுவதுமா யிருக்கின்றார்கள்; இப்படி சூத்திரனொருவனேற்பட்டுச் செய்துவருவதினால் குலாசார தருமங்களுக்கு வழுவுண்டாகிறது. அன்றியும், பிராமண தருமமாகிற கருமகாண்ட விதிகளும், யோக முறைமைகளும், ஞாநமார்க்கமும், அத்துவிதத்தின் நிலைமைகளுங் கிஞ்சித்தேனும் சீர்மைபெறாது கெட்டுவிடும்; இப்போதே அவை மிகுதியுங் கெட்டிருக்கின்றன; அந்தச் சூத்திரன், பக்திநிலையொன்றில்மாத்திரம்சற்றேநிலைத்தவனாய் அட்டகாசங்கள்பண்ணுகையாலே அங்கிருக்கும்பிராமணர்கள்முதலெல்லாரும்மயங்கிஅவனோடுசேர்ந்து

பாடுவதும், அவன்காலில் வீழ்வதும், அவனே சுவாமி என்றுகொண் டாடுவதுமா யிருக்கின்றூர்கள்; இதனுல் எங்களையொத்த பிரபந்நர்க ளாகும் ஸ்ரீபாத ஞாநிகளுக்கு அவமரியாதை யுண்டாகிறது; சாஸ் திர விதிகளுக்கும் விநாசமுண்டாகிறது; இந்தத் துக்காராம் என்ப வன் சூத்திரன், அதிலும் வணிகத் தொழில் செய்பவன்; இப்படிப் பட்டவன் ஜெநங்களை வசீகரப்படுத்திக்கொண்டு, நான்கு வேதங்களி லிணையில்லாப் பண்டிதர்களாயிருக்கும் பிராமணர்களையெல்லாம் தன் காலில் துவளுவித்துக் கொண்டிருக்கிறுன். சூத்திரன் பிரமவித்தை க்கு அதிகாரியல்லன் என்றும், வேத வாக்கியங்களைக் கேட்கவுங் கூடாதென்றும், கேட்கில் அவனுடைய கரணங்களில் நாராசங் காய்த்து விடவேண்டுமென்றும் பிரமாணமுண்டாகி யிருக்கிறது. இவன் சாஸ்திரஏற்பாடுகளைக்கொலைத்துக்கொண்டு அதிக்கிரமகாரியங்களைச் செய்துவருகின்றுன். இவனுல் பிராமணர்களுக்கும், தங்கள் தங்கள் கட்டளைகளை மீறிநடந்த பாபங்க ளுண்டாகின்றன! அவன், இரவு பகல் அறுபது நாழிகையும் ஓய்வில்லாமல் ஹரிவிட்டலா பாண்டு ரங்கா! என்று உச்சரித்துக்கொண்டு, அந்தந்த விதிகளுக்கு விதித் திருக்கப்பட்ட காயத்திரிமுதலிட்ட மந்திரங்களை இசைக்காதே எந் தக் காரியத்துக்கும் பாண்டுரங்க நாமமே உபயோகித்துக்கொண்டு வருகிறுன். மேலும், இராக்களில் நான்கு வருணத்தாரும் ஒன்று கலந்து, ஒருவர்மேலொருவர் உராய்ந்துகொண்டு பலபல கூத்துகள் நடிப்பதும், கைகளை வரிசையாகக் கோத்துக்கொண்டு சுற்றுவதும், ஜாதிபேதங்க ளில்லாமலும், அதிகாரி பேதங்களில்லாமலும் ஒருவர் காலில் மற்றொருவர் விழுந்தும் பிடித்துக்கொண்டும் உபலாலிப்பதும், மங்களார்த்திக ளானவுடனே பிரசாதங்களை யெடுத்துக்கொண்டு கண்டவர்கள் விநியோகஞ் செய்ய, அவற்றை யெல்லாம், எனக்கோ உனக்கோ என்று பிராமணர்மேல் சூத்திரர் சூத்திரர்மேல் பிராமண ராக வீழ்ந்து வாங்கிக்கொண்டு உண்ணுவதுமாக வரம்புகடந்த காரி யங்களைச் செய்துவருகின்றூர்கள். இவர்கள்தான் அவ்வாறு நடக் கின்றூர்க ளென்று பார்த்தாலோ! பெண்டுகளும் தங்கள் புருஷர் களைப்போலவே ஜாதிதருமங்களைத் தவிர்ந்துநடக்கின்றூர்கள்; அவர் களும் இராவிட்டாங் தவருமல் போய், ஆண் பிள்ளைகள் மத்தியில் லஜ்ஜை யில்லாம லிருந்துகொண்டு, கைகளைத் தட்டிப் பாடுவதும், மிஸ்மிருதிகொண்டு கூத்தாடுவதும், அவர்களுடும் விநியோகங்களை யுண்ணுவதும், சூத்திர ஸ்திரீ என்றும் பிராமண ஸ்திரீ யென்றும் பேதமில்லாமல் ஒருவர் காலிலே மற்றொருவர் விழுவதும், எல்லாருங் கலந்துபோய் சூத்திரனுகிய துக்காவின் காலிலே வீழ்வதுமா யிருக்

கின்றார்கள். சில பிராமணர்கள், தங்கள் தங்கள் பெண்டுபிள்ளைகளை விட்டு வெறி கொண்டவர்கள் போல அந்தச் சூத்திரனுக்கு ஏவல் செய்துகொண்டு, அவனுக்கே சரணாகதிகளாகக் கிடக்கின்றார்கள்; அன்னிய மதஸ்தர்களாகிய அவிந்தர்களும், தங்கள் மதாசார விதிகளைக் கைவிட்டு, தங்கள் பெண்டு பிள்ளைகளோடு இரவும் பகலும் காலக்ஷேபக் கூட்டமே கெதியெனக் கிடந்து, ஹரிவிட்டலா! என்றே பஜித்துக்கொண் டிருக்கின்றார்கள். ஆடு மாடுகளை மேய்க்குமவர்களும் காட்டிலுங்கூடத் தவிர்க்காமல், பெரியவர்களும் சிறு பிள்ளைகளும் ஆடுமாடுகள் மேய்ந்துகொண் டிருக்கும்போது ஒன்றுகூடி அந்நாமோச்சாரணம் பண்ணிக்கொண்டேயிருக்கிறார்கள்; சிற்சிலசமயங்களில், துக்காவின் கோஷ்டியார் எப்படி எப்படி கலந்தாடுகிறார்களோ அப்படியே மாடுகள் மேய்க்குமவர்களும் ஆடுகிறார்கள்; சூத்திரன் செய்திருக்கிற அபங்கம் என்னும் ஓர்வித கவிகளைப் பிராம்மணர்களும் மற்றவர்களும் படிக்கின்றார்கள். பிராமணர்களுக்கு வேதபாராயணங்கள்போய் துக்காபாடிய அபங்கங்களேவேதபாராயணங்களாய் விட்டன; மற்ற சமயிகளும், தங்கள் சமயாசார தருமங்களைக் கைநழுகவிட்டு, துக்காவின் வைஷ்ணவத்தையே கடைப்பிடியாகக் கொண்டார்கள்; லோஹோகாம் முழுதும் வைஷ்ணவமே நிறைந்திருக்கப்பட்டது; மற்ற மதங்கள் வேரோடே நாசமாய் விட்டன; இவ்வாறாக ஒருசூத்திரனாலே ஜநங்களெல்லாரும் அத்துமீறின காரியங்களைச் செய்யத்தலைப்பட்டார்கள்; வேறு மதங்களெல்லாம்நிர்மூலமாய்விட்டன; அநேக அற்புதங்கள் ஒரு சூத்திரன் நடத்துகிறான்; அதனால் எங்களுக்கு மிகவும் மானக்கேடாயிருக்கிறது; இராஜ தருமத்துக்கும் ஏற்காத காரியங்களிவை; உங்க ளதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டு நடப்பவர்கள் இப்படி அத்துக்கடந்து நடப்பார்களாகில் உங்களுக்குக் குறைவு சம்பவிக்கும்; குடிகள் தங்கள் வரம்புகளுக்கு மீறி நடப்பார்க ளாகில் பிறகு அதிகாரிகளுடைய காரியங்களிருந்தென்ன பயன்? சந்நியாசிகளா யிருக்கும் எங்களை ஏனென்று கேட்பாரே கிடையாது; சுத்த சமுசாரியாய், பெண்டாட்டி பிள்ளைகளை வைத்துக்கொண்டு, சம்பந்தாசம்பந்தங்களைப் பண்ணிக்கொண்டிருக்கும் ஒருவனுக்கு நடக்குஞ் சிறப்பு உங்களைப்போலொத்த அதிகாரிகளுக்கும் நடவாது; இப்படியெல்லாம் உங்கள் நாட்டில் நடப்பது ரொம்பவும்மானக்கேடு;இவற்றையெல்லாந்தீரவிசாரிப்பீர்களென்றே உங்களிடம் வந்து குறையைச் சொல்லிக்கொள்ளலாயினோம். ஆகையால், தாங்கள் தயவுசெய்து அந்தத்துக்கா என்பவனை வரவழைத்து நன்றாக விசாரணை செய்து, அவனைத் தண்டித்து, இனி அப்போர்ப்

109197

பட்ட வரம்பு கடந்த காரியங்களொன்றும் தங்கள் செங்கோலின் கீழ் நடவாமைக்காகத் திட்டஞ் செய்ய வேண்டியது. இது எங்கள் பிரார்த்தனை என்று இப்படிக்கெல்லாம் அந்த இரண்டு ஸ்ரீபாத சன்னியாசிகள் முறையமிட்டுக் கொண்டார்கள்.

இவ்விருவர் சொன்ன வாக்கியங்களை யெல்லாங் கவநமாய்க் கேட்ட அதிபர் சன்னியாசிகளை நோக்கி, நான் பிராமணன் என்றும், என்னிடத்தில் இவைகளைச்சொன்னால் பிராமண அபிமானங்கொண்டு நான் துக்காவை வரவழைத்துத் தண்டிப்பேனென்றும் எண்ணி என்னிடம் வந்து சொன்னீர்கள். ஆயினும், உங்கள் அபிப்பிராயத்தின் படியே துக்காவை வரவழைத்து விசாரணை செய்கிறேன். அவ்விசாரணையில் நீங்கள் பின்னடைவீர்களாகில் சிவஞானிகளென்று பார்க்காமல் உங்களைக் கடிநசிக்ஷை பண்ணிவிடுவேன்; இதனை யோசித்துச் சொல்லுங்கள் என்று சொல்ல, சன்னியாசிகளும் துக்காவோடு வாதத்திலாவது மற்றெதிலாவது பின்னடைவோமாகில் அவசியம் எங்களை தண்டிக்கலாம்; நாங்கள் தண்டனைக் குள்ளாகிறோமென்று உறுதி மொழி சொன்னார்கள். அதிபரும், அன்னோர் வாக்குதத்தத்தை நம்பாமல் அவ்விரு ஸ்ரீபாத சன்னியாசிகளிடத்திலிருந்து முச்சிலிக்காவைப் பெற்றுக்கொண்டு லோஹோகாம் தலைவனுக்கு யாதாஸ்து ஒன்றெழுதினான். அதின் கருத்தாவது :—துக்கா என்னும் ஒரு சூத்திரனை அங்குச் சேர்த்துக்கொண்டு, வருணாச்சிரம தருமங்களுக்கு விரோதமான காரியங்களைச் செய்வித்துக்கொண்டிருப்பதனால் உனக்கு ஐம்பதுரூபாய் அபராதம்விதிக்கப்பட்டிருக்கின்றது. இந்த யாதாஸ்தைக் கண்டவுடனே அந்த அபராதரூபாய் ஐம்பதை யெடுத்துக்கொண்டு, துக்காராம் என்பவனையுங் கையோடு இட்டுக்கொண்டு இங்கே அதிகார ஸ்தானத்திற்கு வந்து சேரவேண்டியது. உடனே வருவது! என்றெழுதி, தமோகுணத்தில் வீரமிகுந்த ஒரு சேவகனிடத்திற் கொடுத்தனுப்பினான். அந்தச் சேவகன், அதிகாரி கொடுத்த கட்டளையை யெடுத்துக்கொண்டு காடுவநங்களைக் கடந்து லோஹோகாம் வந்து சேர்ந்து, கிராம அதிகாரியைக் கண்டு யாதாஸ்தைக் கொடுக்க, அதனைப் பிரித்து வாசித்துப் பார்த்துக்கொண்டு, உள்ள சங்கதிகளைப் பற்றி வந்த சேவகனை விபரங் கேட்டு ஸ்ரீபாத சன்னியாசிகள் செய்த தீங்கென்று தெரிந்துகொண்டு, ஸாதுத் தலைவரை யாரென்னசெய்யக்கூடும்? ஆகிலும், நாம் அதிகாரஸ்தானத்தின் தாக்கீதின்படி நடந்துகொள்ளவேண்டியது நமது கடமையாகுமென்றுன்னி, அவ்வூர்படேல் அந்த ஊராரனைவருக்குந் தாக்கீதின் சங்கதிகளைத் தெரிவிக்க, அவர்களெல்லோரும் ஒன்றுகூடி, புணுதேசத்தா

சராகிய சிவாஜி மஹாராஜா சத்தாரா என்னுமூரைத் தமக்கு ராஜ தானியாக்கிக்கொண்டு புனாவை விட்டு சத்தாராவுக்குக் குடியேறினார். புனாவிற்குத் தாதுகோண்டதேவனை அதிகாரியாக்கி வைத்திருக்கின்றார். அந்த அதிகாரிக்கு நம்முடைய ஸ்வாமியினது பிரபாவங்களில் ஒன்றுந் தெரியாது ; ஆகையினாலேதான் அவ்வதிகாரி ஸ்ரீபாத சன்னியாசிகள் மாச்சரியத்தாற் சொன்ன சொற்களைக் கேட்டுத் தாக்கீதனுப்பியிருக்கிறான்; அவன் அதிகாரி, என்ன செய்வானோ அறியோம். ஆகிலும், நம் பரம மூர்த்தியாகிய துக்காராம் ஸ்வாமியை அவனென்ன செய்யக்கூடும்? நாமெல்லோரும் போய்ப் பார்ப்போமென்று பேசிக்கொண்டு, அநந்தம் பொதிகளின்பேரில் வேண்டிய சாமான்களைச் சேகரித்து ஏற்றிக்கொண்டு, துக்காராம் ஸ்வாமிகளிடம் எல்லாரும் போய் விண்ணப்பம் பண்ண, அவருமொன்றுஞ் சொல்லாமல் குணாநுபவஞ் செய்துகொண்டே புறப்பட்டார். அவ்வூரிலிருக்கும் பிராமணர்களெல்லோரும் ஒவ்வொருவர் ஒவ்வொரு பிருதாகப் பிடித்துக்கொண்டு, கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டே பிரயாணமாயினார்கள். வந்ததொரு தாமத குணமுடைய சேவகன் கூக்குரலிடுவதைச் சகியாமல் அந்த ஊர் படேலும் தனது முஸ்தீபுடன் புறப்பட்டான். இவர்களெல்லாரும் புறப்பட்ட விநோதங்களைக்காண அவ்வூரிலிருந்த மற்ற ஆண்பெண் குழந்தைகளடங்கலும் கும்பு கும்பாய் வந்து கண்ணாரக்கண்டு களித்து ஸ்வாமிகளைச் சேவித்துக் கொண்டார்கள். சுமங்கிலிகள் மங்களங்களை யிசைத்தார்கள். அக்கம்பக்கங்களிலிருக்கும் கிராமவாசிகள் இவ்விசேஷங்களைக் கேட்டு, தாங்களுங் கூடத்தொடர்ந்துபோக முனைந்தவர்களாய் வந்து கோஷ்டிகளுடன் கலந்து பஜனை செய்யத் தொடங்கினார்கள். இப்படி துக்காராம் ஸ்வாமிகள் தமது கோஷ்டிகளுடனே அதிகாரியின் சமுகத்துக் கெழுந்தருளுவதை, லோஹோகாமுக்கும் புனாவுக்கும் நடுபிரதேசங்களி லிருக்கும் கிராமங்களின் ஜெநங்களெல்லாருங்கேள்விப்பட்டு, தங்கள் கிராமங்களில் பந்தல்களிட்டுத் தோரண முதலியவற்றால் அலங்காரஞ் செய்து, சாலைகளில் தண்ணீர் தெளிக்கச் செய்து, பிராமண சமாராதநங்களுக்காக வேண்டிய சாமக்கிரியைகளைச் சேகரப்படுத்தி, பாதைகளில் தண்ணீர்ப்பந்தல்களை வைத்துக்கொண்டு, தாஸர் வரவுக்கும், அவர் கோஷ்டிகள் வரவுக்கும் எதிர் பார்த்துக்கொண் டிருந்தார்கள். புனாவி லிருப்பவர்களுக்கும் தாஸர் வருவது கேள்வியாகி, ஒவ்வொரு வீட்டுக்காரருந் தம்வீட்டை வெள்ளை முதலியவற்றால் சுத்தப்படுத்தி, வீதிகளில் ஜலந் தெளித்து, பிரதி வீடுகளிலுந் தோரணங்கள் கட்டி அலங்காரப்படுத்தி வைத்

துக்கொண் டிருந்தார்கள். இப்படி எங்குங் கோலாகலமாயிருக்க, ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகள், அநேகமாயிரம்பேர் திரண்டதொரு பெருந் திரளோடு லோஹோகாம் விட்டுப் பிரயாணப்பட்டு, ஸ்ரீமத் பண்டரீநாதனுடைய திவ்விய கலியாணகுணங்களைத் தாமுங் கோஷ்டியாரும் பலபல விதங்களாகக் கீர்த்தித்து, பஜனை செய்துகொண்டு போகும் வைபவமதனை விண்ணுட்டவர்களனைவருங் காதலராய் வந்து இமைத்தறியாத் தந்தங்கள் கண்களிப்புறக் கண்டு, இது பூலோக வைகுண்டமா யிராநின்றதெனை மகிழ்ந்து, தாஸரை வாழ்த்துதல் செய்தனர்கள். பாட்டைசாரிகள்கண்டு தாங்களும் என்ன சம்பிரமம் நடக்கப்போகிறதோகாண்போமென்று தங்களுடையபோகிறகாரியங் களைவிட்டு கோஷ்டியாருடனே கலந்து பஜித்துக்கொண்டே போனார் கள். மார்க்கங்களில் தண்ணீர்ப் பந்தல்களை வைத்திருந்தவர்களெல் லோரும், தங்கள் பந்தல்களில் சித்திரான்னங்களைத் தளிகை செய்து வைத்துக்கொண்டு, கோஷ்டியாரும் தாஸரு மெழுந்தருளினவுடனே பலவித வுபசாரங்களோடு எதிர்கொண்டு வந்து அழைத்துப் போய், வரிசையா யுட்கார வைத்து, சித்திரான்னங்களைத் தக்கபடி பரிமாறி, நீர்மோர், பாநகம், பழம் முதலியவை வழங்கி, சந்தந-புஷ்ப-தாம் பூலங்களைக் கொடுத்து, பனிநீர் தெளித்துச் சேவித்துக்கொண்டு, கோஷ்டிகள் அங்குநின்றும் எழுந்தருளும்போது தாங்களும் பின் னுகவே போனார்கள். பிராமண சமாராதநஞ் செய்ய முயன்றிருந்த வர்களும் அப்படியே எதிர்கொண்டு வந்து அழைத்துப்போய் உப சாரங்களைப் பண்ணி, பலகாரங்களோடு அடிசில் பரிமாறி, உண்டான வுடன் முன்போல் சந்தந தாம்பூலாதிகளைக் கொடுத்துத் தாங்களும் பின் சென்று போனார்கள். கோஷ்டிக்கு முன் பிடித்துக்கொண்டு போகும் மகரதோரணங்களைக் கண்டதே யாவரேனுங் கீழேவீழ்ந்து சேவிப்பதும், தீபாராதனங்கள் செய்வதும், தாங்களுங்கூடக் கைக ளைக் கட்டிக்கொண்டு, ஹரிவிட்டலா! பாண்டுரங்கா! என்று சத் திப்பதும், அவர்களோடே கலந்தேபோவது மாயினர்கள். கங்கா யாத்திரை போகுமவர்களும் இக் கோஷ்டியினுடைய வைபவசல்லா பங்களைக் கண்டும், புனவிற்கு தாஸரெழுந்தருளுவது கேட்டும் பின் னுகவேதொடர்ந்துபோகத் தலைப்பட்டார்களன்றி யாத்திரைகாரியம் மறந்துவிட்டார்கள். வழியில் எதிர்ப்பட்ட ஜெனங்கள், நடக்க இட மில்லாமல் திரும்பின வண்ணமே கோஷ்டியுடன் கலந்து சங்கீர்த்த நம் பண்ணிக்கொண்டே கூடப்போகத் தலைப்பட்டார்கள். இந்தப் பெருங்கூட்டத்தார் கைகளைத் தட்டிக்கொண்டு, பஜனைபாடிப் போகு மதின் பேரொலியை அக்கம்பக்கத்துக் கிராமவாசிகள்கேட்டு, தேவர்

கள்குழாங் கூடிவருகின்றார்களோ? அல்லது, வேற்றரசன் படை வருகிறதோ! என்று அச்சங்கொண்டவர்களாய்ப் பார்க்க வந்து பிறகு இவ்வைபவத்தில் நின்றும் பிரிய மனமில்லாதவர்களாய்க் கூடவே தொடர்ந்துபோனார்கள். என்றும் எக்காலத்திலுங் கூடியறியா இப்பெருங்கூட்டத்தைக் கண்ட தேவர்குழா முதல் மானிடர் யாவரும் அப்பா! இக்கூட்டந் தங்குவதற்காக புனாதேசத்தில் இடங் கிடைக்குமா! என்றையப்பட்டு, ஈசுவரனே இவர்களை யாதரித்து, நற்காட்சியுந் தந்தருளவேண்டும்! என்று ஆசிகூறினார்கள்.

இப்படிச் சருவ ஆடம்பரங்களுடனே ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகள் ஆங்காங்கு வழிகளில் அவரவர்கள் அமைத்துவைத்திருந்த மண்டபங்களிளெல்லாம் எழுந்தருளி, அவர்களால் சருவ உபசாரங்களோடு அளிக்கப்பட்ட பிரசாதங்களையும் மற்றவைகளையும் தம்ம கோஷ்டியாருடன் ஸ்வீகரித்து, ஆங்காங்கு பஜனை காலக்ஷேபங்களைச்செய்து, கீர்த்தனைகளையும் அபங்கங்களையும் இயற்றித்தந்து, அவ்வெல்லாருக்கும் சமுசார சாகரத்தின் துன்பங்களையும்,பேரின்ப வீட்டின் இன்பங்களையும் எடுத்தோதி, பக்திநிலை பொருந்துவித்துக்கொண்டு, நன்னிலைநிற்கப் பலவாறு போதித்துக்கொண்டு,ஆவல் மிகுதியால் தம்மை எதிர்சென்றுவந்து, தமது திருவடிகளுக்கு நமஸ்கரித்து, அபிஷேகஞ்செய்து, சந்தந புஷ்பங்களைச்சார்த்தி,கற்பூர ஆலாத்திகளெடுத்துத் தங்கள் சிரசுகளைப் படிவிக்கும் அவர்களுக்கெல்லாம் ஆசீர்வாதங்கள் செய்துகொண்டு, புனாநாட்டிற்கருகில் விசாலமாயிருப்பதொரு நந்தவனத்தில் தங்கி, நாமாவளியொன்று பாடி கைகளைத்தட்டிக்கொண்டு தம் பெருங்கோஷ்டியுடன் விட்டல நாமசங்கீர்த்தநம் பண்ணியருளினார். இவ்வுறத்த கூக்குரலைக்கேட்ட அவ்வூரார், நம்நாட்டைக் கொள்ளை கொண்டுபோக எவனோ அரசன் சேனைகளோடு வருகின்றானென்று திகிலடைந்தார்கள். அவர்களிற் சில புத்திமான்கள் கண்டு தெளிவோமென்று ஓடோடியும் வந்துபார்க்க, அஃது துக்காராம் ஸ்வாமிகளுடைய சாதுசங்கத்தார் செய்த திருநாம சங்கீர்த்தனையினொலி எனவறிந்து மறுபடியும் ஊருக்குள்போய், துக்காராம் ஸ்வாமிகள் திருநந்தவனத்தில் எழுந்தருளியிருக்கும் வைபவங்களை அங்குள்ளாருக்குச் சொல்லிவிட்டு, அங்கிருக்க மனம்பெறாமல் மறுபடியும் ஸ்வாமிகள் இறங்கினவிடத்திற்கு வந்துசேர்ந்து, தாங்களுங் காலக்ஷேபத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அவ்விசேஷங்களைக் கேட்ட குடிகளில் ஆண் - பெண் : குழந்தைகளனைவரும், தங்கள் குடிகளிலிருக்கத் தரிக்காமல், மிகு ஆவலுடனே விரதங்களைப்பூண்டு வீடுவாசல்களைச் சுத்திசெய்து, வீதி

களைத் தோரணங்களால் அலங்கரித்து, ஸ்நானங்களைச்செய்து ஆடை ஆபரணங்களையணிந்து அலங்கிருதர்களாய் ஆசாரத்தோடு சந்தநம் - புஷ்பம் - அத்தர் - பனிநீர் - மிட்டாய் தினுசுகள் - பழவர்க்கங்கள் - தாம்பூலங்கள் முதலியவற்றைத்தட்டுகளிலமைத்து ஏந்திக்கொண்டு, சருவவகை மேளவாத்தியங்களொலிக்க, ஹரிநாம பஜனைகளுடனே மிருதங்கம் - ஜாலர் - தம்புரு - சிட்கா - சாரங்கம் - முகவீணை முதலியவை சத்திக்க ஊர்கோலஞ் செய்துக்கொண்டு வருமவர்களும்; பக்தஜெநங்களா யிருக்குமவர்கள் தங்கள் தங்கள் பஜனை கோஷ்டிகளோடு மத்தள - தாள - தம்பூராதிகளைச் சேவித்து, நல்லிசை கீர்த்தநங்களைப் பாடிக்கொண்டும், ஆநந்தமேலீட்டால் ஆடிக்கொண்டும் ஹரிவிட்டலா! உனக்கு மங்களங்களுண்டாகுக என்று மங்களங்களையிசைத்துக்கொண்டு வருமவர்களும், துக்காராம் எழுந்தருளினார் என்ற நல்வரவைக்கேட்டமாத்திரத்திலே தாங்கள் செய்யவேண்டிய காரியம் இன்னதென்றுஉணரப்பெறுமல் மயங்கி, எப்போதுபோய்ச் சேவிப்போமென்னும் ஆர்த்தியின் அவசரத்தால் கால்கள் தடுமாற்றமடைந்து, இருந்தவர்கள் இருந்தவண்ணமே பிரயாணப்பட்டு வருமவர்களும், இந்த புனாடு என்னநோன்பு நோற்றது கொலோ! மறைகள் நான்கினுக்கும் தேவரறிவிற்கும் எட்டுதற்கரிய விடோபாவே, விண்ணுளார்க்கும் மண்ணுளார்க்கும் இணையும் நலமந்தமுமிலாப் பேரின்பமளித்தற்கென துக்காவாகிற இத்துலரூபத்துடனே இண்டைநேரிணையடிகள் நிலத்தில் தாவும்படி எழுந்தருள! நாமும் முன்ஜென்மங்களில் எவ்வெத் தவங்கள்செய்தனமோ! நம்ம உடலங்களிலும் முடிகளிலும் அவர்தம் அருமைத் திருவடிகளின் பொடியணிய! என்று சிலாக்கியமான புகழ்மலிந்த வாயினராய் வருவாரும்; சிலர் பெண்டு பிள்ளைகளை யழைத்துக்கொண்டுபோவதுசள்ளையென வெறுத்துத் தனியராய்ப் போகுமவர்களும், பெண்டு பிள்ளைகளுடனேபோகப் பிரியப்பட்டவர்களும் வழியிலவர்களுக்குத் துக்காவினுடைய கீர்த்திகளைப் போதித்துக்கொண்டு போமவர்களும்; எதிர்ச்சமயிகளாகிய * அவிந்தர்களும், தங்கள் மததருமங்களைத் தவிர்த்து, பூஜாதிரவியங்களைக்கொண்டு அன்புமிகுதியால் வருவாரும்; பிரம - க்ஷத்திரிய - வைசிய - சூத்திரர்களாகிற நான்கு வருணங்களிலுமுள்ள சண்மதஸ்தர்களுமொன்றுகூடி ஒருமனதுடையவர்களாய் பரமாசாரியரைச் சேவிக்கக் காதல்கொண்டு வருமவர்களுமாய் துக்காராம்ஸ்வாமிகள் எழுந்தருளியிருக்கும் திருநந்தவனத்துக்குட் சென்று, ஸ்வாமியைக்கண்டு அன்றளவுங்காணுமலிருந்த தொருகாதல்

* அவிந்தர்களென்றால் - துலுக்கர்களென்று அந்நாட்டில் வழங்குப்பாடு.

தீர ஒருமுறைக்குப் பல்முறையாய் வீழ்ந்து வீழ்ந்து சேவித்து எழுந்து, தாங்கள் தாங்கள் கொண்டுவந்த பூஜாதிரவியங்களால் துக்காராம் ஸ்வாமிகளைப்பூஜித்து, கோஷ்டியாரில் தாங்களுங் கலந்தவர்களாய், ஆணென்றும் பெண்ணென்றும் பேதவிகல்பங்களின்றிக்கே, கும்பு கும்பாகத் தனித்தனியே பஜனை செய்யத்தொடங்கினார்கள்.

இப்படி, துக்காராம்ஸ்வாமிகள் தம்ம கோஷ்டிகளுடனே ஒரு பக்கம், மற்ற கிராமாந்தரவாசிகள் தங்கள் தங்கள் கூட்டங்களுடனே ஒவ்வொருபக்கம், அந்தப் புறதேசத்து ஜெநங்கள் தங்கள் கூட்டங்களுடனே ஒவ்வொருப்க்கமாக நின்றுகொண்டு, தங்கள் தங்கள்மெய்களையும் மறந்த பரவசர்களாய், ஜயக்கொடிகளும், மகர தோரணங்களுங் கண்ட கண்டவிடங்களில் எங்குந்துலங்க கருவிகளொலிக்க பஜனைகாலக்ஷேபங்கள்செய்து, நடுநடுவே ஸ்ரீவிட்டலநாம சங்கீர்த்தநங்கள், ஆகாயமுகடுங் கிழிபடத்தக்கபேரொலியுடனே இசைத்துக் கொண்டிருந்தார்கள். இந்தக் கோலாகலத்தின் கோஷத்தையும், ஜெநங்கள் வீதிகள்தோறும் கும்புகும்பாய்க்கூடிப் போய்க்கொண்டிருப்பதையுங்கண்டமோகா என்னுமதிகாரியானவன், இதுவென்ன சமுத்திரத்தின் இரைச்சல்போல் என்றுமில்லாத இரைச்சல் கேளாநின்றது! வேற்றரசன்நம்மநாட்டை வெற்றிகொள்ளத் தனதுபெருந்திரளான சேனைகளுடனே வந்தானே! என்று முற்றும் பயந்தவனாய், தன்னுடைய மாளிகையின் மேற்சாரலிலேறிப்பார்க்க, தனது கண்ணுக்கெட்டினதூரம் வரையிலும் வெற்றிக்கொடிகளையும், மகரதோரணங்களையும் பிடித்துக்கொண்டு, நடனகோலாகலங்கள் செய்துகொண்டிருப்பதைக்கண்டுமற்றுந்திகிலதிகமாகக்கொண்டு,வேற்றரசன் தான் நிஜகோலத்தைமாற்றி, தானும் படைகளும் வேறுபக்தகோலம் பூண்டவர்களாய், நம்முடைய நாட்டை வஞ்சிக்க வந்திருக்கின்றான்; இச்சமயம்; நம் அரசனும் படைகளுமிங்கில்லையே என்னசெய்யலாமென்று தடுமாற்றமடைந்து, மாளிகையினின்றுங்கீழேயிறங்கி, வீதிவாசலுக்கு வந்து, அங்குள்ள சேவகர்கள் முதலானவர்களை விசாரிக்கப்புக, அவர்களெல்லாரும் கைகளைக் கட்டிக்கொண்டு, ஸ்வாமி! தாங்கள் லோஹோகாம் தலைவனுக்கு அனுப்பிய தாக்கீதின்படியே அந்தத் தலைவன் துக்காராம் ஸ்வாமிகளோடு, தனக்கு விதித்த அபராதத்தையும் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறான்; துக்காராம்ஸ்வாமிகளே அதிகாரஸ்தானத்துக்கு வரநேரிட்டமையால் அவருடைய அநேக ஆயிரம் சிஷியஜெநங்கள் பொதிமாடுகளின்மீது சாமான்களையேற்றிக்கொண்டு அவரோடுதொடர்ந்துவந்து, நமதூர் சங்கத்தினருகிலிருக்கும் திருத்துழாய் நந்தவநத்திலிறங்கி பஜனைகாலக்ஷேபங்

களைச் செய்துகொண்டிருக்கிறார்கள்; அந்தப் புண்ணியாத்துமாவின் வரவைக்கேட்ட நம்மூராரெல்லாரும், அவரைத் தொழுதற்காகக் கூட்டங்கூட்டமாய்க் கூடிப்போகாநின்றார்கள்! என்றுசொன்னார்கள் அவற்றைக்கேட்ட மோகா அதிகாரி அதிசயமும் பயமுங்கொண்டு, ஆகா! நாமென்ன காரியஞ் செய்தோம்? துக்கா இவ்வளவு மகாத்துமாவென்றறியாமல், மூடச்சன்னியாசிகளுடைய பேச்சைக்கேட்டு, நமக்கதிகாரமிருக்கிறதென்று அவரை வரச்செய்தோம். நம்முடைய அரசன் சிவாஜிமகாராஜா கேள்விப்பட்டு, விஷ்ணுபக்தர் என்னகுற்றஞ் செய்தாரென்றுகண்டுபிடித்து வரவழைத்தாயெனக்கேட்டால் அவருக்கு என்ன பதிலுத்தரஞ் சொல்லுவேன்? இவர் அரசுக்காவது, குடிகளுக்காவது தீங்கு செய்ய நினைப்பவருமல்ல; பக்திமார்க்கங்களைப் போதித்துக்கொண்டு வருகிறார்; அதனால் இவ்வுலகத்தின் ஜீவகோடிகளுக்கு நன்மையுண்டாய், இராஜவிசுவாசமும் தெய்வபக்தியுஞ் சிர்மைபட்டு, மாரிவளங்குன்றாது க்ஷேமமேயமையும்; மூட்ரிலுங் கேடாகிய வேட்டக்காரசன்னியாசிகள்பேச்சு நம்பிஇம்மகாநுபாவருக்குச் சிரமந்தந்தோம்; இந்த நம்செய்யவடாக் காரியமென்னமாய் முடியுமோ அறியோம்? ஹரிஹரீ விட்டலராயா! இந்தச் சமயம் என்னைக் காப்பாற்றவேண்டும்! என்று மநதில்தியாநித்துக்கொண்டு இனி நாம் ஆலசியம் பண்ணலாகாது, அதிசீக்கிரமாகப் புறப்பட்டுப் பாதசாரியாகவே போகவேண்டும் என்றெண்ணி, வீட்டுக்குள் நுழைந்து ஸ்நாநஞ்செய்து, நெற்றியிற்குறியணிந்து, பீதாம்பரங்களைத் தரித்துக்கொண்டு, ஆட்கள்தலைமீது பூஜாதிரவியங்களையெடுப்பித்துக்கொண்டு, அவ்வூரில் தனக்கு ஆப்தர்களாயும் புத்திமான்களாயும் இருக்கப்பட்ட சிலபெரியமனுஷியர்களைவரவழைத்து அவர்களோடு பிரயாணப்படுகையில், ஸ்ரீபாத சன்னியாசிகளிருவரும் அவ்வதிகாரியைப்பார்த்து, ஐயா! எங்களுக்கெல்லாம்நீர் அதிகாரியாயிருக்க, இந்தச்சமயத்தில் தனித்துத் துக்காராமரிடம் போகலாமா? இது தானா நடுநிலைமையோர்செய்கை? என்று சொல்ல; அவர்களைப் பார்த்து அவ்வதிகாரி, உங்களைச் சமாதாநம் பண்ணிவைக்க நான் போகிறவனல்ல; அல்லது அவர்புறஞ்சார்ந்து உங்களைக் கெடுக்க வேண்டிப்போகிறவனல்ல; அவருடன் எண்ணிறந்த ஆயிரஜெநங்கள்வந்து காலக்ஷேபஞ் செய்துகொண்டிருப்பதாலும், இப்பட்டணவாசிகளனைவரும் பூஜாத்திரவியங்களைக் கொண்டுபோவதினாலும், நானொருவன் போய் அவர் பாதபூசை செய்யாவிட்டால்உலகநிந்தையும் தெய்வகோபமும் உண்டாகுமாகையாலும், யாரேனும் மகாத்துமாக்கள் நாட்டுக்குவரின் அவரை யெதிர்கொண்டுபோய் வந்தநவழி

பாடுகளால் சம்மானிக்கவேண்டியது அதிகாரிகளுடைய கடமையாகை யாலும், இராஜாவினுக்கினையும் அதுவேயாகையாலும், "உலகத்தோ டொத்துவாழ்" என்கிற நீதிமொழியின்படி நடப்பது தருமமாகை யாலும் நான் போகத்துணிந்தேன். இதனால் உங்கள் வாதங்கெட மாட்டாது; நானும் கெடுக்க முயல்பவனல்ல; நீங்கள் வெற்றியடைய வேண்டிய காரியங்களில் முயன்று சித்தமாயிருங்கள். இவற்றையெல் லாங்கவனிக்கவேண்டாமென்று சொல்லி, அவர்களையுங்கூட அழைத் துக்கொண்டு, ஸ்வாமிகளிறங்கியிருக்கும் திருநந்தவநத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

அந்தச்சமயத்தில், விதேகமுத்தி நிஷ்டராகிய துக்காராம்ஸ்வா மிகளும், மற்றகோஷ்டியாரும் நீராடி, திவ்விய திருமண்காப்புகளை யணிந்து, தம்புரு - மத்தளம் - கஞ்சிரி - சுத்தி - தாளம் - சிட்காமுத லியவற்றையிசைத்துக்கொண்டு, புங்காநுபுங்கமாய்கீர்த்தனைகளையும் அபங்கங்களையும் பாடத்தொடங்கினதில் தாஸர் அவ்வாநந்தமேலீட் டால் பிரமாநந்தத்திற் சொக்கிய மநத்தராய், ஸ்ரீ விட்டலனுடைய திருவடித் தாமரைகளில் சிந்தை நிலைக்கப்பெற்று, கண்களி விருந்து ஆநந்தபாஷ்பம் பெருக்கெடுக்கத் துதித்துக்கொண் டிருந்தமையாலே பிறர் தம்மைத் தொழுவதுந் தமக்குத் தெரியாமலிருந்ததோர் நிலை யினராயினர். மற்ற ஜெநங்களும் பரவசமடைந்தவர்களாய், தங்கள் தங்களுள்ளங்களில் அன்னியசிந்தைகளொன்றுங் கலவாமல் ஸ்ரீஹரி யினுடையகீர்த்தனைகளேயேயமையவைத்துக்கொண்டு, அவ்வாநந்தத் தால் ஆடுவதும், பாடுவதும், அழுவதும், தொழுவதுமா யிருந்தார் கள். இவ்வற்புத ஆரவாரங்களைக் காணவந்த தேவர்களும், சித்தர் களும் ஆநந்தத்திற் பட்டவர்களாய், இந்நாடு வைகுந்தமோ - வைய மோ! என்று தேவர்களும், தேவநன்றோ! என்று மற்றவர்களும் மயங்கி, மங்களங்களைப் பாடினார்கள். முலையுண் சிறு குழவியும், ஹரிவிட்டலா! என்று சிறு கைகளைத் தட்டிக்கொண்டு பாடுமெனில் மற்றவர்கள் என்ன ஸ்திதியி லிருக்கவேண்டுமோ யூகித்துக்கொள்ள வேண்டியது.

இப்படி அருமைமிகுந்த அநந்த கோலாகலங்களுடனே, பகவத் தாஸரோடு மற்றவர்களெல்லாரும் பாவாபாவங்களைத்தவிர்த்து, சுத்த பிரமாநந்தத்திற் சொக்கி, விட்டல நாமத்தை பஜித்துக்கொண்டிருக் கும்போது, அவ்வெல்லாரோடும், அந்த நந்தவநத்தின்சுற்றுப்பக்கங் களிலிருந்த பசு பக்ஷிகளும், கிரிமி கீடங்களும், கற்களும், புற்பூண்டு மரங்களு மெல்லாங் கலந்து விட்டலநாமத்தை யொலித்து பஜிக்கத் தொடங்கிற்று. அது பெருங் கூட்டமாகையாலே அக்கூட்டத்திற்

களவாடலாமென்கிற புத்தியுடனேவந்த கள்வர்களும், தாங்கள்வந்த களவுகாரியங்களைச் சுத்தமாய் மறந்தவர்களாகி, தாங்களும் விட்டல நாமத்தைத் துதிக்கத் தொடங்கினவர்க ளாயினார்கள். ஆவலி நாயக ராகிய துக்காராம்தேவர் பஜனை பாடிக்கொண்டிருக்கும்போது இடை யிடையே, ஹரிஹரீ - விட்டலா! என்று உருகியவரா யுச்சரிக்க, கோஷ்டியரில் ஒருவர் தவருமல் அப்படியே ஹரிவிட்டலா! என்று மறு உச்சாரணமாக இளகி உச்சரித்துக் கொண்டே வந்து, தங்கள் தங்கள் தேகங்களும், பிறர் தேகங்களும் எதிரிற் காணநின்ற பதார்த் தங்களு மெல்லாம் விட்டலனுடைய திவ்விய தேஜோமய ரூபங்களா கக் காணப்பெற்றார்களாய், மிகுதியும் ஆநந்தத்திற் சொக்கியிருந்தார் கள். இவ்வாறு பிரமாநந்தத்தையே எல்லாருந் தங்களுக்குக் குண மாகக்கொண்டு அதில் சொக்கிக்கிடந்த தருணத்தில் முக்கண் மூர்த் தியாகிய சிவபிரான் ஜடாமகுடதாரியாய், திகம்பர வடிவினராய், பால்போலும் வெண்ணீறு துலங்கு மேனியராய், சாந்தகுணமூர்த்தி யாய், பூரண சந்திரோதயம் போன்ற வதநமுடையவராய், பளபளா காரமான காந்தியராய், புலித்தோ லாடையராய்த் தோன்றி, அநந்த ஆயிரம் ஜெநங்களின் நடுவே பஜித்துக்கொண் டிருக்கும் தாஸரைத் தழுவி, தம்மேனியி லணிந்த விபூதியை அவர் திருவுடம்பிற் பொரு ந்தவைத்து, "ஞால முண்டவன் தலைமிசை சுமப்பன் ஞானி வேண் டுவ தெல்லாம்-ஆல முண்டவ னவன்பினே திரிகுவ னவனடி தூசட் கென்றே-சில மன்னரு மற்றுள தேவருந் திசைதிசை நின்றார்ப்பக்- காலி ரண்டையுஞ் சென்னிமேல் வையெனக் கழறுவன் கமலநான் முகனும்" என்கிற சான்றோர் வாய்மைக்குகப்ப, எல்லாருங் காணும் படி துக்காராம் ஸ்வாமிகளுக்குச் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து வாழ்த்தி, ஆகாய மார்க்கமா யெழும்பி மறைந்தனர்.

இவ் வற்புதத்தைக் கண்ட பாவிக பக்தர்களும், மற்றவர்களும் ஆச்சரியமுற்று, ஹரிஹரீ! என்று தாடைகளி லடித்துக்கொண்டு, கரங்களைச் சிரங்கள்மேல்கூப்பித் தொழுதுநின்று, ஸ்ரீமந்நாராயணா! பக்தவத்ஸலா! பதுமநாபா! கோவினங் காத்த மாயா! கோவர்த்தந மேந்துங் கையா! வேங்கடத்தையா! அன்பர் நேயனாய் நிற்குந்தூயா! வேதங்களாலுங் காணொணு விமலா! சுஞ்ஞாந சொரூபா! அடியோங் களது இந்த வூன்கண்ணாலே அருமை மூர்த்தியாகிய சிவபிரானை இன்று கண்டு தரிசிக்கலாயினோம். இருடிகள், மலைகளிலும் வநங் களிலுமிருந்து, சருகு கனி காய்களைத் தின்றுகொண்டு அநேக கற்ப காலங்களாகத் தவங்கள் செய்கின்றார்கள்; அவர்களாலுங் காண அரு மையாயிருக்கப்பட்ட மூர்த்தியைத் தரிசிக்கப்பெற்ற எங்களது பாக்

கிய விசேஷங்களை என்னெனக் கூறிக் கொண்டாடுவோம்! இந்தப் பரமமூர்த்தியாகிய துக்காராம்ஸ்வாமிகளது ஸேவையின் மான்மியம் எங்களை முக்கட் பகவரையோ அல்லது தத்தாத்திரேய மூர்த்தியையோ சேவிக்க வைத்தது; நாங்கள் பெற்றவிப் பெரும்பேறு இவ்வுலகில் யார் பெறுவார்? விஷ்ணு பக்தருடைய திருவருளாலல்லவா எங்களுக்கு நவநாயகராலும் தேவர்களாலும் இருடிகளாலுந் தொழப்படும் நக்கபிரானது தரிசனை கிடைத்தது! இதனை யாருடைய புண்ணிய மேம்பாடென்போம்? இந்த வைணவத் தலைவருடைய மான்மியம் என்னென்போம்? ஆவா! இதுவரையிலும் இவ்வுலகில் இப்படிப் பட்ட விநோதங்கள் பிறர் கண்டதாகக் கேட்டே யறியோம்! இந்தக் காலத்தில் நாங்களனைவரும் காணலாயினோம்! என்றிவ்வாறெல்லாம் ஆகுலப்பட்டுக்கொண்டு, ஹரிநாம சங்கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டானடிப்பதும், கைகளைக் கோத்துக்கொண்டு பிருந்தாவனஞ் சுற்றுவதுமா யிருந்ததொரு பிரமாநந்தத்தைப் பிறராலெடுத்துரைக்க முடியாது. ஆயிரம் பணமுடிகளையுடைய அரவரசனுந் தன்னால் பூர்த்தியாகச் சொல்லப் பெறுன். இவ்விதங்களாக சருவ ஆடம்பரங்களுடனே ஜெநங்களிலிருந்து அநுபவித்து, முடிவில் துக்காராம்ஸ்வாமிகள் மங்களம் பாடி தீபாராதநஞ் செய்த பிற்பாடு தாங்கள் தாங்கள் கொண்டுவந்த பூஜா திரவியங்களாலே தாஸரைப் பூசித்து, விநியோகத் திரவியங்களை தாஸருக்கு ஆர்ப்பிதமாக்கி, எல்லா பாகவதர்களுக்கும் விநியோகப் படுத்தி, தாங்களும் பிரசாதமாகக் கொண்டு ஸ்வீகரித்து எதிரில் சேவித்துக்கொண் டிருந்தனர்கள்.

இப்படியாக நடந்துகொண்டிருக்கையில், தாதுகோண்டமோகா என்னும் அதிகாரியுப், தான் கொண்டுவந்த திரவியங்களால் துக்காராம்ஸ்வாமிகளுக்குப் பூசைபண்ணி, விநியோகங்களையெல்லாருக்குங் கொடுப்பித்து, ஸ்வாமிக்குத் தீர்க்கமாய் நமஸ்காரம்பண்ணி எழுந்து நின்று, கைகளைக் கட்டிக்கொண்டு, ஸ்வாமின்! தேவர் பொன்னடி அடியேனுடைய குடிசையிற் சார்த்தி புநிதமாக்கி யருள வேண்டும் என்று பிரார்த்திக்க, அவன்றன் பிரார்த்தனைகளின் இனிமையை ஸ்வாமி யறிந்துகொண்டு, அப்படியே வருவேனென்று விடைகொடுத்தருளினமை யறிந்த அதிகாரி, கோஷ்டியாரைப் பார்த்துச்சொல்லுகிறதாவது—கோஷ்டியா ரனைவருக்கும் வேண்டிய சாமக்கிரியைகள் அடியேனால் சித்தப்படுத்தப் பட்டிருக்கின்றன; வேண்டிய மட்டிலே குறைவறப் பெற்றுக்கொள்ளலாம்; தாங்களெல்லாரும் வரும்போது மாட்டுப் பொதிகளில் ஏற்றிவந்தவற்றைத் திருப்பிவிடவேண்டியது; அவற்றை யாளல்லாகாது என்று சொல்லி, தான் முன்னுக வந்து,

பெருந்திரளான கோஷ்டிகளுக் கிருக்க நல்ல மாளிகைகளை யேற் படுத்தி வைத்து, யாரென்ன வேண்டுமென்று கேட்கின்றார்களோ அவற்றை யுடனே தருவதற்காகத் தக்க ஏற்பாடுகளைச் செய்து வைத்து, சாமான்களையும் தருவித்து வைத்து, திரும்பவுந் தான் போய், ஸ்வாமிகளை பஜனையுடனே கோஷ்டிகள் சூழ்ந்துவரச்செய்து கொண்டு வந்து, சேகரித்து வைத்த விடுதிகளில் விட்டு, தளிகை களுக்கு யத்தநஞ் செய்ய நியமிக்க, கோஷ்டியாரும் தளிகைக்கு ஆரம்பித்துச் செய்துகொண்டு வந்தார்கள். அப்போது மோகா என்னும் அதிகாரி, நாமேன் இந்த மூதேவி சன்னியாசிக ளிருவ ரைத் தண்டிக்க வேண்டியது? மெய்யன்பரே தண்டிக்கப் போகிறார் என்றெண்ணி, லோஹோகாம் படேலை அழைத்து, உனக்கு விதித் துத் தாகீதனுப்பிய அபராதம் ரூபாய் ஐம்பதையும் மன்னித்தோ மென்று சொல்ல அவரும் சந்தோஷசித்தரா யிருந்தார்.

அவ்வூரிலுள்ள தநாட்டியர்கள், அன்றையதிநம் துக்காராம் ஸ்வாமிகளுடைய திருநாமத்தாலே ஒவ்வொருவர் ஆயிரம் இரண்டா யிரம் பிராமணர்களுக்குச் சந்தர்ப்பணைசெய்துவைத்தார்கள். மற்றக் குடிகளில் அனைத்து வீட்டுக்காரரும் தங்கள் தங்கள்சக்திகளுக்கேற்ற படியெல்லாம் அந்நதாநம் வஸ்திர தாநம் முதலியவற்றை வழங்கினார் கள். அன்று பகல்முழுதும் புனைபட்டணத்திலுள்ள நான்கு வருணத் தாரில் அனைவரும் தங்கள் சக்தியாநுசாரம் வேண்டிய தாநங்கள் துக்காராம் ஸ்வாமிகள் பெயராலே வழங்கி, திருவிளக்கு வைத்த வாறே காலக்ஷேபங்களைக் கேட்க ஆவலுடையவர்களாய், தங்கள் தங்கள் சமுசாரம் பிள்ளை குட்டிகளோடு கும்புகும்பாய்க் கூடி ஸ்வா மிகள் எழுந்தருளியிருக்கும் விடுதிகளுக்கு வந்துசேர்ந்தார்கள்.

இப்படியிருக்க, மோகா என்னும் அதிகாரி தன்னுடைய காரி யங்கள் யாவையும் பார்த்துக்கொண்டு, காலக்ஷேபத்துக்கு இஷ்டர் களுடனே பிரயாணப்பட்டு வரும்போது ஸ்ரீபாத சன்னியாசிகளிரு வரையும் வருவித்து, இதோ நீங்கள் கோரினபடியே சூத்திராகிய துக்கா வந்திருக்கிறார். அவருடைய காலக்ஷேபம் இப்போது நடக் கப்போகிறது; நீங்களிருவரும் வந்து, நீங்கள் சொன்னபடியே அவ ரோடு வாதஞ் செய்து ஜெயிக்க வேண்டியது; உங்களுக்குப் பேசச் சக்தி யில்லாவிட்டால் உங்கள் புத்திக் கேற்றவர்களைத் துணையாகக் கொண்டுவரலாம்; பின்னடைவீர்களாகில் உங்களைக்கழுதைகள்மீதே ற்றி ஊர்கோலங் காட்டப்படும்; உங்கள் முச்சிலிக்காவின்படி நடந்து கொள்ளுங்கள்என் றுரைத்தான்.மாநம்இன்னதென்றறியாதஸ்ரீபாத சன்னியாசிகளிருவரும், அதிகாரி சொன்னவற்றைக் கேட்டவுடனே

சந்தோஷித்தவர்களாய்ப் பிரயாணப்பட்டு, நாம் ஜெயித்தாலும் பிராமணர்களே தோற்றாலும் பிராமணர்களே! இந்தச் சூத்திரனாகிய துக்கா திநநித்தம் எவர்களைத் துதிக்கிறானோ அவர்களாகிற இராமன் கிருஷ்ணனே நமது குலத்துக்கு வணக்கஞ் செய்வார்களென்றால் இவன் செய்யமாட்டேனென்பானோ? இவற்றையெல்லாம் எடுத்துப் பேச எங்களுக்குத் தெரியாதோ? ஆயினும் ஒருகை பார்ப்போமென்று, தங்களுக்கேற்ற பெருஞ்சோம்பர்களாய், 'ஓரிலைப்பட்டன் ஈரிலைப்பட்டன் - மூவிலைப்பட்டன் என்று வழங்கப்படுகிற துஷ்ட பண்டிதப்போலிகளைத் துணைகொண்டு, அவ்வதிகாரியோடேபோய், இறுமாப்புடனே சபையின் நடுவில், லஜ்ஜையற்று, தாஸருக்கெதிரில் கனைத்துக்கொண்டே உட்கார்ந்தார்கள்.

காருண்ணிய மூர்த்தியாகிய துக்காராம் ஸ்வாமிகள், தமது உள்ளமானது பாவாபாவமற்றுச் சமரூபமாயிருப்பதால்அந்தச்சபையில் வீற்றிருக்குமவர்களெல்லாரும் பண்டரீநாதனென்றே எண்ணி வந்தநங்களைச் செய்து, ஸ்ரீபண்டரீநாதா! என்றுஸ்மரித்து,மிருதங்கம் முதலியவைகளைச் சேவிக்கச் செய்து, ஸ்தோத்திரபாடங்களைப் பாடிமுடித்து, அநந்தரம் சில கீர்த்தநங்களைப் பாடிமுடித்து, ஒரு அபங்கஞ் சொல்லி, அதற்கு வியாக்கியாநஞ் சொல்லத்தொடங்கினார் அந்த வியாக்கியாநமாவது:—

காமியத்தாலாவது, நிஷ்காமியத்தாலாவது ஸ்ரீபதியை பஜிப்பவர்களாகில் அவர் தம்முடைய சாயுஜ்ஜிய பதவியைக் கொடுத்தருள்வார். இந்தத்தேகம் நீரின்மேல் குமிழிபோல்நிலையில்லாதது. விநாடியளவிலேனும், நாழிகையளவிலேனும்,நாளளவிலேனும்,வார அளவிலேனும், மாதஅளவிலேனும், இந்தச்சரீரம் நிலைபெற்றிருக்குமென்று எண்ணக்கூடாது. தேகத்தின் நிழல் எவ்வாறு தேகத்தையே நோக்கிக்கொண்டிருக்கிறதோ அவ்வாறே யமனும் நம்மையென்றும் நோக்கிக்கொண்டிருக்கின்றான். எலியானது வளைக்குள்ளிருக்கிற பரியந்தம் தனக்கொரு துன்பமுமில்லாமல் சந்தோஷித்துக்கொண்டிருந்து, அச்சந்தோஷத்தால் பூனையைமறந்து வெளியில்வந்து உடனே பூனையினால் மாய்வதுபோலேயும், மீனானது கொக்கின் பயமில்லாமல் நீரில் மேய்ந்துகொண்டேயிருந்து முடிவில் தனக்கென்று அசைவற்றுக் காத்திருந்த கொக்கின் வாயில் படுவதுபோலேயும், காலனை மறந்து காயபோஷணாதி காயங்களில் இருப்போமாகில் நம்மை அக்காலன் விடப்போகிறதேயில்லை. ஸ்ரீஹரியை பஜிப்போமாகில்தான் அக்கால தண்டத்தைக் கட்டழிக்கலாம். மறுஜெந்மத்தைத் தவிர்க்கலாம்,என்றும் அழிவில்லாப்பேரின்பசாகரத்திற்படிந்

திருக்கலாம். பண்டு அஜாமீளனென்பான் ஒருபிராமணன், தன்னுடைய ஆசார அநுஷ்டானங்களைத் தவிர்த்து, நீசஸ்திரீயுடனே சேர்ந்து பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டு, அந்தப் பாசத்திலேயே பிணைப்புண்டவனாய், அவித்தியா சம்பந்தத்தால் அந்தப் புலைச்சியும் புத்திரர்களுமே சுகபோகங்களுக்கு உபகரணங்களென்றும், அவர்கள்தரும் போகங்களே சுகபோகங்களென்றும், அவர்களநுபவங்கள் கிடைக்கப்பெறும் இல்லமே சுகபோகஸ்தானமென்றும் எண்ணி, வாழ்நாளை வீணாகக் கழித்துக் கொண்டுவந்தான். இப்படியிருக்க, ஒருசாது திவ்விய க்ஷேத்திரயாத்திரைகளைச்செய்து கொண்டுவந்து ஓரிரவிருக்க அவ்வூரில் தங்கினான். அப்போது அந்த நீசப்பிராமணன் ஏதோ தனது பூருவத்திய சொல்பகருமத்தால் அந்தச் சாதுவைக்கண்டு சேவித்து, சேவித்த அவ்வளவிலேயே, "பக்ததரிசநம் பாபநாசநம்" என்றபடி, கிஞ்சித்து நல்லறிவு வுதயமாகப் பெற்றமையால் சாதுவை நோக்கி, தன்னுடைய வரலாறுகளை ஆதியோடந்தமாகச் சொல்லிக்கொண்டு விசநப்பட்டான். அதற்குச்சாது மநவிரக்கங்கொண்டு, உன்னுடைய கடைசிபிள்ளைக்கு 'நாராயணன்' என்கிறபெயரிட்டு, அழைத்துக்கொண்டேவருவாயாகில் நீ நற்பதவியடைவாய்! என்றுரைக்க, அதனைக்கேட்ட நீசப்பிராமணன் சாதுவுக்கு தீர்க்கநமஸ்காரங்கள்செய்துவீட்டுக்குப்போய், சாதுசொன்னபடியே இளையபிள்ளைக்கு நாராயணன் என்று பெயரிட்டு, அன்றுமுதல் கூப்பிட்டுக்கொண்டே வந்தான்; அதனால் பக்தசகாயனாகிய நாராயணன் முடிவில் அவ்வஜாமீளனுக்குத் தனது சாயுஜ்ஜியபதவியைத் தந்தருளினான். ஓரரசனுடைய ஸ்நாநத்துக்காகக் காய்ந்துகொண்டிருந்த ஜலத்தில், கிருஷ்ணநாம பாராயணஞ் செய்துகொண்டிருந்த தவளையிருந்தமையால் ஜலங்காயப்பெறுமலிருக்க, அரசன் அவ்விந்தையையறிந்து, ஜலத்தைக் கொப்பரையிலிருந்து கவிழ்த்துப் பார்க்கும்போது அதிலிருந்த தவளை கிருஷ்ணா! கிருஷ்ணா! என்று சத்திக்க, உடனே லக்ஷ்மீநாராயணன் கெருடவாகநாரூடனாய் வந்து, அந்தத்தவளைக்கு இராஜன் முதலானோர்காணக் காட்சி தந்தருளினான். ஒரு தாசியானவள் கிளிப்பிள்ளையொன்றை வளர்த்து, அதற்கு நிதநிதம் இராமநாமத்தைக் கற்பித்துக்கொண்டே வந்து, அவ்வழியாலே தாசியும் கிளிப்பிள்ளையும் மீளாப்பதவியடைந்தார்கள். ஆகையால், எல்லாரும் பகவந்நாம சங்கீர்த்தநங்களை இடைவிடாதுபாடித் துதியுங்கோள்! என்று வியாக்கியாநமுரைத்து, மஹாநுபாவராகிய துக்காராம் ஸ்வாமிகள், தம்முடைய தேகமிருக்கிறதென்றும் இல்லையென்றுந் தோன்றப்பெறுமல், பிரமாநந்த பரிதா

யிருந்தார். அச்சபையிலிருந்தவர்களெல்லாரும் கைகொட்டிக்கொட்டி பஜித்துக்கொண்டிருந்து, முடிவில் தாங்களும் மெய்களைமறந்து, பார்க்கும் மநுஷியர்களெல்லாம் ஒருவருக்கொருவர் விட்டலதேவாகக் காணப்பெற்றார்கள். அப்போது எதிரிலுட்கார்ந்திருந்த ஸ்ரீபாத சந்நியாசிகளுடைய கண்களுக்கு ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகளது சொரூபம், சதுர்ப்புஜம் - பஞ்சாயுதங்கள்-வநமாலை முதலியவற்றை அணிந்த ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியின் சொரூபமென்னத் தோன்றப்பட்டது. அப்படி தோன்றப்படவே அந்தச் சந்நியாசிகளிருவரும், ஹரி ஹரி! என்றுஎழுந்திருந்து, ஸ்வாமிகளைப்பிரதக்ஷணஞ்செய்து, கீழேவீழ்ந்து தீர்க்கநமஸ்காரங்களியற்றி நின்று, கைகளைக் கட்டிக்கொண்டு, பயபக்தி மரியாதைகளுடனே யிருந்தார்கள்.

அப்போது மோகா என்னுமதிகாரி, அந்தச் சந்நியாசிகளிருவரையுந் தன்னருகிலழைத்து நிற்கவைத்துக்கொண்டு, ஹே-சன்னியாசி வேஷதாரிகளே! பிராமணப்போலிகளே! முழுமூடர்களே! நீங்களிருவரும் பொறாமை நிறைகொண்டவர்களாய் வந்து, துக்கா சூத்திரன், வேதவைதிகச் சடங்குகளையும் குலாசாரதருமங்களையுங் கெடுக்கிறான்! பிராமணர்களுக்கெல்லாம் துர்ப்போதனை பண்ணுகிறான்! என்று பலபல துரபிப்பிராயங்களைச்சொல்லி என்னிடம்பிரயாது செய்தீர்கள்; உங்கள் பேச்சைநம்பி இந்தப் பரமமூர்த்திக்குச் சிரமந்தந்து வரவழைத்ததுமன்றி, இப்புண்ணியாத்துமாத்திரத்தில் ஆதரணைசெய்து போந்த லோஹோகாம் படேலுக்கும் ஐம்பது ரூபாய் அபராதம் விதித்தேன்! இப்போது நீங்கள் ஸ்வாமிகளுக்குச் சரணஞ்செய்யலாயினீர்கள்; உங்களுடைய குற்றம் உங்களுக்கே தலையிடியாயிற்று; சண்டாளர்களே! நீங்களும் பிராம்மணர்களென்றும், அதிலும் சன்னியாசிகளென்றும், சன்னியாசிகளிலேயும்ஸ்ரீபாதசன்னியாசிகளென்றும் பட்டந்தரித்திருக்கின்றீர்கள்; மலதேகங்களை வளர்க்கத்திரியும் மதியீநர்களே! உங்களையும், உங்களுக்கு உபகாரிகளாய்க் காக்கைகள்போலும்கழுதைகள்போலும்போராட்டஞ்செய்யவந்தவர்களையும் எளிதில்விடேன்; மகாபாவிகளாகிய நீங்கள் இராஜாங்கத்தின் எல்லைக்குள் இருந்தாலும் மழையின்றி நாட்டின் வளப்பங்குன்றி அரசுக்கே தீங்குதோன்றும். உங்கள் முகங்களிலேயே இந்நாட்டிலுள்ளார் விழிக்கலாகாது! என்று தீராக்கடுங்கோபங்கொண்டு, டலாயத்தாரை அழைத்து, க்ஷவரகனைக் கொண்டுவந்து இப்போதே இவர்களில் ஒவ்வொருவனுக்கும் மும்மூன்று பட்டைகளாகத் தலைமயிர் தீர்த்து; கழுதைகள்மேலேற்றி, ஊர்கோலஞ்செய்வித்

துக்கொண்டுபோய் இந்நாட்டுக்கு வெளியில் விட்டுவாருங்களென்று கட்டளையிட்டனன்.

அந்தக்கட்டளையைக்கேட்ட ஸ்ரீபாதசன்னியாசிகள் இருவரும் நடுநடுங்கினவர்களாய் நெஞ்சிடிந்தி, வாயுலர்ந்து, நாக்குழறி, ஐயா! இந்தத்துக்காராம் தேவரைச் சாதாரணமனிதரென்று நாங்கள் தங்களிடத்தில் பிரயாதுசெய்தோம்; இவர் சாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியென்று தெரியாதவர்களாயினோம்; இப்போது இவரை, சதுர்ப்புஜமும், துளபமாலையும், சங்குசக்கராதி ஆயுதங்களும், கிரீடமுதலியவையுந் துலங்கக்கண்டு தரிசித்தோம்; அதனால்தான்எழுந்து நின்று சேவித்தது; இப்பேர்ப்பட்ட பரமகாருண்ணிய மூர்த்தியைத் தரிசிக்காமல் வேறேயாரை தரிசிக்கப்போகிறோம்? நாங்கள் சன்னியாசிகளானமைக்குப் பலன்கிடைத்துவிட்டது; அவருடைய திருவடிக்கு அடிமையாய் விட்டோம். இனி நீங்கள் என்ன தண்டனை விதித்தாலும் இந்தச் சரீரம் போய்விட்டாலும் சம்மதியே! நாங்கள் அறியாத்தன்மையரானமையால் செய்தோம். அதுசெய்தமையால் தான் இவருடைய பூரணசொரூபத்தின் ஸேவைகிட்டியது! என்று புகல, அதிகாரியும், இப்பேதைகள் சமயத்துக்குத்தக்கவார்த்தைகளை மாத்திரங் கற்றுக்கொண்டார்கள்; இவர்களால் பக்திமார்களுக்கு இடையூறு வந்தபடியே யிருக்கும். தாங்கள் பிராமணர்கள் என்று அகங்காரங்கொண்டு, துரெண்ணங்கள்உடையவர்களாய், என்னுடைய புத்தியைபுஞ்சபலப்படுத்திவிட்டார்கள்; இவர்களைஎள்ளளவும் க்ஷமிக்கவேகூடாது; இட்ட ஆக்கினையின்படி நடத்திவிடவேண்டியது; அதனாலெனக்கும் பாபம்வராது; இப்படிசெய்தால்தான்மற்றுமுள்ள பொய்வேடதாரிகளாகிற துர்மார்க்கர்களுக்குப் புத்தியுண்டாகும்; என்றுகோபந்தீராமல்சொல்லி வாய்மூடுமுன்னமே அந்தச்சபைக்குச் சேவுகர்களால் அம்பட்டனையும் கழுதைகளையுங் கொண்டுவரப்பட்டமையைக் கண்டு, தயாசிந்துவாகிய துக்காராம் ஸ்வாமிகள் அவ்வதிகாரியை நோக்கி, இவர்கள் வேஷதாரிகளே யாயினும் அந்த இவர்களுடைய வேஷத்துக்காகவாவது மரியாதைகள் செய்யவேண்டியது கடமை; செய்யாவிடில் பண்டரீநாதனுக்குச் சம்மதமாயிராது; மரத்தின்கனி மரத்தின் கீழில்தானே வீழ்ந்திருக்கும்; இந்தக் காலக்ஷேபத்துக்கு வந்திருக்குமவர்களில் யாரென்ன குற்றஞ் செய்திருந்தாலும் தாங்கள் மன்னிக்க வேண்டியது; தங்கள் திறத்தில் அவர்கள் இன்று தொடங்கிக் குற்றஞ் செய்ய மாட்டார்கள் என்றுரைத்தருள, அம்மொழிகளைக் கேட்ட அதிகாரி, மகாபாக்கியம்! என்று வீழ்ந்து சேவித்து, அவர்களை மன்னித்து விட்டேனென்று கழுதைகளைப்

போகவிடுத்து, தனதுஸ்தானத்தில் வீற்றிருந்தான். இதைக்கண்ட ஸ்ரீபாத சன்னியாசிகள், எமன் கையிலிருந்து மீண்ட பிராணன்போல் நாம் விடுபட்டோம் என்றெண்ணி, சந்தோஷமேற்கொண்டவர்களாய் பிரபந்த ஜநத்தலையின் ஸ்ரீபாதங்களைப் பணிந்து வாழ்த்தினார்கள்.

உத்தம தருமாவாகிய ஒப்பிலா ஞாநநாதர், மறுபடியும் பஜனை செய்யத் தொடங்கிச் சம்பிரமநிருத்தம் செய்யும்போது அவர் திருவடிகளில் கட்டியிருந்த கெஜ்ஜையானது ஆகாயத்தை அளாவத்தக்க நல்லோசையைத்தர, அவ்வோசையைக் கேட்ட ஸ்வாமிகளும் பஜனை கோஷ்டியாரும், தந்தம் புந்திகள் மயங்கப் பெற்றவர்களாய் ஆநந்தத்தில் அழுங்கி யிருந்தபோது, பார்த்தவர்களெல்லாம் பண்டரீநாதனைகவே காணத்தோன்றி, தங்கள் தங்களை நோக்கத் தாங்களுந் தாங்களாக இருக்கப்பெறாமல் அவ்வாதியஞ் சோதியாகவே விதேகஸ்திதியில் இருக்கக்கண்டு பரவசத்திற் பட்டிருந்து, தெளிவுற்று சகுணஸ்திதிக்கு வந்தவாறே துக்காராம் ஸ்வாமிகள் மங்களார்த்திகள்செய்து, கபடநாட்டியனுக்கு நமஸ்காரங்கள்செய்து விநியோகம் நடத்தக் கட்டளையிட்டருளினார். சபையிலிருந்தவர்களும் விநியோகங்களை யெடுத்துக்கொண்டு எல்லாருக்குமீந்தார்கள்.

குன்றால்மாரி பழுதாக்கிக் கோவிநங்களைக்காத்தவா! கொடியேரிடை நம்பின்னைபொருட்டாகக் கொடுவிடையேழடர்த்தவா! பஞ்சவர்க்காய்த் தூதுசென்ற பெருமாமாயவா! கன்றால் விளங்காயெறிந்தகனிவா! கண்ணபுரந்தனிலமர்ந்த கட்டழகா! கபடச்சகடிறவுதைத்த காகுத்தா! தொண்டரும் - அமரரும் - முநிவரும் தொழுதெழ அண்டமொடு அகலிடமளந்தவா! அடியேன் நினது தூய குணங்களையேத்தி நினதின்னருளுக்கு இலக்காகும் விதியினேனல்லேன்; மதியுமில்லேன் ; என்னைப் பிணைத்துக்கொண்டிருக்கும் பாபராசிகளானவை நின்தொல்புகழ்களை நினைக்கச் செய்கின்றனவன்று; அவற்றைத் துடைத்தருளி, நினது மெய்மைசேரடியாரில் மெய்மையராய் விளங்கும் ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகளுடைய திவ்வியசரித்திரந்தன்னைத் தெளிவுறுத்திமுற்றுப்பெறச்செய்வாய் - மோகநாகாரா! மொய்குழல் அசோதைதன்சிறுவா! நினக்கு மங்களம் - மங்களம்!!

பதினைந்தாமத்தியாயம் முற்றும்.

ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகள் திருவடிகளே சரணம்.

துக்காவினிடத்தில் பக்ஷிகள் வசித்தல், கொண்டோபா, விட்டோபா சிவாஜியாய் வந்து பட்டாணிகளை எதிர்த்தல். பட்டாணிகள் சிவாஜியை பிடிக்க வருதல்.

ஸ்ரீ

ஸ்ரீ பாண்டுரங்கபரப்ரஹ்மணேநம:

ஸ்ரீமத்

துக்காராம் சுவாமிகள் சரித்திரம்.

பதினாறுமத்தியாயம்.

காப்பு.

வேத முதல்வன் வெண்புரிநூ லன்விமலத்
தோ முகினிறத்த னுபய வடியலரைக்
கோதழுங்கு நெஞ்சமதிற் குடியே றிடப்பெற்றுப்
பாத நிரையகலப் பணிந்துகரந் துய்குதுமே.

ஸ்தோத்திரங்கள்.

அச்சுதா! அநந்தசயனா! ஆதிமூலப் பழம்பொருளே! அநேக ஆன்மகோடிகளை உனது திருவடிகளின் நீர்மையால் தன்சாகரத்திலிருந்து மீட்பித்து மோக்ஷமென்னும்உன்னுடையபேரின்பவீட்டை யடைவித்தனை. நினது இன்னருள் மாரிக்குட் சிக்கிய ஆன்மாக்களில் அடியேனுமொருவனாய், நின்னலால் அறிகின்றிலனாய், வேம்பின்புழு அவ்வேம்பன்றி நுகராதுபோல உன்னையன்றித் தொழுதறியாதவனாய்க்கொண்டு உனது குணகீர்த்திகளாம் வன்புகழைமனத்தாலும் வாயாலும் என்றும் பேணிவாழும் பக்தாக்கிரகண்ணியர் அடிகளின்கீழ்க் குற்றேவல்செய்துகீழ்மைபட்டிருக்கின்றேன். இப்படிப்பட்ட அடியேனுடைய பிறவிக்கடலையும் வற்றுவித்துக் கிருதார்த்தனாக்கி ரட்சித்தருள்வாயிராஜீவலோசனா! உனது அபாரமான திரு

வருளால் நீயேயிரட்சித்தாலன்றி அடியேனுக்கு வேறிரட்சகம் கஷ்டம் அடியேனிடத்தில் ஸ்நாந - ஸந்தியாவந்தந - ஜப - தப - தர்ப்பண - பிதுர்தர்ப்பண அத்தியயநாதி அநுஷ்டானங்களில் ஒன்றுமில்லை; உன்னையருச்சிக்கவும் வகையறியேன், யோகம் - யாகம் முதலிய சற்கிருத்தியங்கள் செய்ய தாருட்டியம் தநமுதலியவை பெற்றில்லேன்; தீர்த்தயாத்திரை செய்யலாமெனினும் காலில் பலமில்லை; சற்பாத்திரவான்களுக்குத் தாநமளித்துப்புண்ணியம் சம்பாதித்துக் கொள்ள தான்னியம் தநமில்லை; துதிக்கவும் ஸத்துவகுணமில்லை தமோகுணமே அதிகரித் திருக்கிறது; இராஜஸகுணஞ் சற்றுப் போது கலந்திருப்பதாகவுங் காணுகிறது; ஸஜ்ஜந ஸேவையாவது செய்யலா மெனிலோ, சுத்த பாமரனாகிய அடியேனுடைய சேர்த்திக்கு அன்னோர் வெறுவி கடாக்ஷிக்கவுஞ்செய்ய மநமில்லாதவர்களாகின்றார்கள்; சற்குருசேவை கினவிலும் எனக்குக் கிட்டிலது. இப்படி யெல்லாவகைளாலும் உன்னுடைய அருளுக்குப் பாத்திரவானல்லேன். இனியென்ன கதியெனக் குண்டுகண்டாய் என்னையாளுடைய கோமானே! நீயே யுகந்தாண்டால்தான் அடியேனுக்குக் கதி; எல்லா பாபங்களுந் திரண்டுஒருருவாய்வந்தநாயேனிடத்திலிருந்த புண்ணியத்தை யெடுக்கவென்றால் மணல் சோற்றில் கல்லாய்ந்தாலெப்படியோ அப்படியேயெல்லா இராசியும்பாபவிராசியாயிருக்குமேயன்றிப் புண்ணியமிருக்கப் பொருத்தமில்லை. அவ்வென்னுடைய எல்லா பாபவிராசிகளாகும் திமிரங்கள் உன்னருளென்னும் பாநுஉதையமானால் அப்போதுதான் விலகிப்போகும். பதிதர்கள் எல்லாரிலும் அதிபதியனாகின்றேன். பதிதபாவனனென்கிறஉனதுபிருதாவளியைக்கேட்டு, சற்றுமநந்தெளிந்தவனாய் நின்னைச் சரணடையாநின்றேன், தீநபந்தோ! தீநதயாபரமூர்த்தீ! நீ நாயேனைக்காத்தருள்வது உண்மையாயிருந்தால் உனது மெய்யன்பருள்ளும்மெய்யராகிய ஸ்ரீமத்துக்காராம்ஸ்வாமிகளுடைய சரித்திரத்தின் மற்றபாகத்தையும் பூர்த்திபெறுமாறு செய்வான் எனக்குச்சக்தி தந்தருள்வாய் ஜாநகீரமணா! தசரததனயா! ஜகதாதார பூதா!

நூல்.

ஸ்ரீமந்நாராயணனுடைய திருவருளேயோருருவெனவந்ததாகப் பொலிவுறும் ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகள், முன் தமக்குவிரோதிகளாய்த் தீமைசெய்ய புனாதேசத்து அதிகாரியினிடம்பொறாமைபூத்த நிந்தைகளைச் சொல்லிக்கொண்ட குருநார்களாகியசன்னியாசிகளாலும் ஸேவிக்கப்பெற்ற பிறகு அவ்வதிகாரியாகிய தாதுகோண்ட தேவன்,

கீழத்தியாயத்திற்கண்டமகத்துவங்களையெல்லாம்தனது அரசனுகிய சிவாஜி மகாராஜா சதாராவிலிருக்க அவருக்கு விசதமாகத் தெரிவித்துக்கொண்டான். இதையறிந்த அரசன் உடனே சதாராவைவிட்டுப் புனுவுக்குவந்து, துக்காராம்ஸ்வாமிகளுடைய திருவடிகளில் வீழ்ந்து சேவித்து, பூஜைமுதலானநானுவிதவுபசாரங்களைச்செய்து, பயபக்தியுடன் ஸ்வாமிகளுடைய திருமுன்பே நின்றபோது, தயாநிதியாகிய வைணவத்தலைவர் இராஜனைக் கணிசியாமலே ஸுஸ்வரநாதகீதங்களொலிக்க, ஐம்பதுபேர் பின்புறம்நின்று இசையொத்துப்பாடத் தாம் கண்களிலிருந்து ஆநந்தபாஷ்பம் பெருகவும், மெய் புளகிக்கவும், அபங்கங்களையும் கீர்த்தனைகளையும் பாடி எம்பெருமானை யுகப்பித்துக் கொண்டிருந்தனர். அந்தச் சமயத்திலுண்டான பகவற் கீதாவொலியானது ஆகாயத்தளவு மளாவி, விண்ணேர் மண்ணேர் எல்லாருடைய மநமும் ஆநந்தமுறச்செய்து நின்றது. அன்று ஹரிதிநமாகிய ஏகாதசியாகையால் அந்தச் சுதிநத்தில் அளவிறந்த ஜெநங்கள் காலக்ஷேபம் ஸேவிக்க வந்து எல்லாருங் கைகளைக் கொட்டிக்கொண்டு கோவிந்த நாமனைத் துதித்து ஆநந்தத்தி லழுந்திக் கிடந்தார்கள். மெய்ம்மையோர் மேவும் மேதாவியராகிய தாஸரும் நிருத்தஞ்செய்து, பண்டரீநாதா! பரமதயாளா! பரஞ்சோதீ! பதுமதளாக்ஷா! பாண்டுரங்கா! என்று திருநாமோச்சாரணஞ் செய்துகொண் டிருந்தனர்.

இவ்வண்ணம் ஸ்ரீமத்பகவத்குணபாராயணம் நடவாநிற்கையில் சிவாஜிமகாராஜனும், மற்றவர்களைப்போன்றேபிரமாநந்தபரவசராய், நிச்சல சித்தராய், விட்டலேசுவரனுடைய திருவடித் தாமரைகளில் பதிந்த இதயத்தரா யினிது வசித்துக்கொண் டிருக்கையில் சாக்கனு தேசத்தை யரசாட்சி செய்துகொண்டுவரும் அவிந்த ராஜன், சிவாஜி ராஜன் புனுதேசத்துக்குவந்து பஜனையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற சேதியறிந்து, சிவாஜிராஜனைப் பிடித்துக்கொண்டுவர இரண்டாயிரம் துரகவீரர்களையனுப்ப, அவ்விரண்டாயிரவீரர்களும் தங்கள் தங்கள் குதிரையின்மேல் ஏறிக்கொண்டு புனுவிற்கு வந்து, புவிக்கு வாழ்வருளத் தோன்றிய புனிதராகும் துக்காராம் ஸ்வாமிகள் அநேக ஆயிரம் தாஸவருக்கங்கள் வாழத்தக்கதோர் விசாலஸ்தாநத்தில் காலக்ஷேபம் நடத்தாநிற்கும் இடத்தைச் சூழ்ந்துகொண்டு, சிவாஜி மகாராஜனெங்கிருக்கின்றுரோ என்று அப்பெருந்திரளில்உற்றுநோக்கிப் பார்க்கும்போது அவர்களில் ஒருவருக்கும் சிவாஜி ராஜனது உருவங் காணப்பெருமல் எல்லாருந் தியங்கிநின்றுர்கள். இந்தச் சங்கதி காலக்ஷேபம்சேவிக்கவந்தபக்தஜெநங்கள் எல்லாருங்கண்டு, இவ்வீரர்கள் சக்கரம்போல் நம் கூட்டத்தைச் சூழ்ந்திருக்கின்றுர்களே எவ்வாறு

நாம் தப்பித்துக்கொண்டு போவது? என்று ஒவ்வொருவரும் மனக் கலக்கங் கொண்டார்கள். இவ்வாறு கோஷ்டியார் ஒவ்வொருவரும் மனக்கலக்கங் கொண்டிருப்பதை அவரவர்களுடைய முகக் குறிப்பா லறிந்த தாஸர் மூன்று அபங்கங்களைப் பாடி, அவற்றிற்கு வியாக்கி யானமுஞ் செய்ய ஆரம்பித்தார்.

அந்த வியாக்கியானமாவது—ஹரி ஹரி! பண்டரீநாதா! ருக்கு மணீரமணு! எனது தேஹம் நீங்கிவிடுமென்று அச்சப் படவில்லை; இவ்விடம் வந்திருக்கும் உமது பக்தர்களுடைய உள்ளங்கள் கலங்கி யிருக்கின்றன; நான் அவர்களை யெவ்வகை யாதரிப்பேன்? கபட நாடகா! உம்முடைய திருவிளையாடல்களைக் காண நாரத அகஸ்தி யருக்குமரிது எனில் என்னால் வசமோ! பேய்முலை சுவைத்துண்ட பிரானே! பிரகலாதனைக் காத்த பெம்மானே! அண்டபிண்டம் நிறைந் துலாவு மாயனே! ஆய்ச்சிகள் பால் தயிர் வெண்ணெயுண்ட அழ கனே! அஷ்டலக்ஷ்மீ விலாசனே! உமக்கு வந்தநம் - வந்தனம்; ஆலிலை துயின்ற ஆதிமூலமே! பூதநாத நாதா! வந்தனம்; அமரர்க் கரசே! வந்தநம் என்பனவாம்.

இப்படி அபங்கங்களைப்பாடிவியாக்கியானஞ்செய்த தாஸருள்ளத் தில் தாஸாதி ஸாக்ஷாத்காரமாய்த் தோன்றி யருளி, அப்பா உத்தம னே! நீ யாதொன்றுக்கும் அஞ்சாதே! காலக்ஷேபஞ் செய்வதை விடா தே! உன்னிஷ்டத்தின்படியே அவிந்தர்களை விலகும்படிச் செய்கி றேன் என்றுரைத்து, சிவாஜி மகாராஜன்போல் உருவெடுத்துக் கொண்டு பிடிக்கவந்த குதிரைவீரர்முன் தோன்ற, அவர்களும் சிவாஜி ராஜா அகப்பட்டாரென்கிற மகிழ்வுடனே குதிரைகளை வேகமாய்த் துறத்திக்கொண்டு கைப்பிடியாய்ப் பிடிக்க நெருங்கும்போது சிவாஜி போல் உருவெடுத்துக்கொண்டுவந்த ஸ்ரீதரன் சற்று தூரமாக விலகு வார்; அவர்கள் இதோ தூரமாய் விட்டோமென் றெண்ணும்போது சமீபத்திலிருப்பார்; அசந்து பயத்தால் நிற்பதுபோல் காட்டுவார்; மறைவானவிடத்தில் பயத்துடன் மறைவதுபோல் காட்டுவார்; இவ் வாறு ஞானமூர்த்தி அவ்வவிந்தர்களை அலையவைத்து, காடு வனங்களி லெல்லாம் கல்லு முள்ளு கூபம் புதருகளென் றில்லாமல் சிரமப்பட வைத்து நெடுந்தூரத்திற் கொண்டுபோய் விட்டுவிட்டனர். வனத் திடை யகப்பட்ட குதிரைவீரர்கள், இது என்ன அதிசயம்? சிவாஜி ஒருவன், நாமோ இரண்டாயிரம் பேர்; அதிலும் அவன் கால்நடை; நாமோ குதிரைகள் மேலேறிக்கொண் டிருக்கிறோம்; இப்படிப்பட்ட நாம் இத்தனை பேருங் கூடிப் பாதசாரியா யிருக்கும் ஒற்றை மனி தனைப் பிடிக்கச் சக்தியில்லாதவர்களா யிருக்கிறோம்; வாளால் வீசி

விடலாமென்று லுந்துலவாகின்றான்; என்ன தந்திரங் கற்றிருக்கின்றானோ தெரியாது; நமது அரசன் இச்செய்திகளைக் கேட்பானேயாகில் நம்மைப் பரிகசிப்பது மன்றிக் கோபமுஞ் செய்வான்; நாமும் வீரர்களென்றெடுத்த பெயர் மாய்ந்துவிடும்; யாருமினிநம்மைவீரனென்று அழைக்கவே மாட்டார்கள்; நமது அஸ்வங்களில் அநந்தம் கூபங்களில் வீழ்ந்தன; கால்களொடிந்தன; புதருகளில் சிக்கிச் சேதமாயின; சில மிகவுமலைந்ததால் நடக்கச் சக்தியில்லாமல் இருக்கின்றன. இப்போது வநத்தில் இருபதுகோஸ் தூரம் வந்துவிட்டோம்; நாமும் வஸ்திரங்கள் கிழியப்பெற்றும், சரீரங்களில் முள் முதலானவற்றால் கடுங்காயங்களைப் பெற்றும், ஒருவர் போனவழி ஒருவர் போகாமல் அலைந்தும் பரிதவிக்கின்றோம்; நிலாமறைந்து அடர்ந்தகாரிருள் சூழ்ந்துகொண்டது; இவ்வநத்தில் துஷ்ட மிருகங்களுக்கு இரையாகக் காலம் வாய்த்தது; குதிரைகளும் நமக்கடங்காமல் நம்மை யெல்லாந் தள்ளிவிட்டு ஓட்டம் பிடித்தன; எவ்வளவு சந்துஷ்டராக வந்தோமோ அந்தச் சந்தோஷத்துக்கு நூறுபங்கு அதிகமான துக்கம் வாய்த்துவிட்டது; நிந்தையுந் தலைக்கேறியது; சிவாஜி அகப்பட்டிருந்தாலுகிலும் இவை லக்ஷியமில்லை; ஒரு மனிதனை இரண்டாயிரம் வீரர்கள் அஸ்வங்களுடனே போய்க் கொண்டுவரா விட்டால் இவர்களுடைய பராக்கிரமம் என்னென்று பெண்களும் நகைப்பார்கள்; சிவாஜி பஜனை காலக்ஷேபத்தி லிருந்தான்; அந்தப் பஜனைக்கு நாம் விக்கினஞ் செய்தபடியால் அந்தப் பாபம் நம்மைச் சூழ்ந்தது; இதற்கென்னசெய்யலாமென்று ஆரணியத்தில் அவ்வீரர்கள் துக்காக்கிராந்தர்களா யிருந்தார்கள். இது கபடநாடக சூத்திரனது திருவிளையாடல்களாகையால், மறைகளே அவனுடைய ஆச்சரியகுண சேஷ்டைகளைக் காணகில்லாவெனில் சுத்த அவித்தியாஸம்பந்நர்களான இவ்வவிந்தர்களறிய வசமோ! பண்டுகால யௌவநனைத் திருவிளையாடல் காட்டிக்கொண்டேபோய் குகைக்குள்ளிருந்த முசுகுந்த சக்கரவர்த்தியால் பஸ்மீகரப்படுத்தி, அம்முசுகுந்தராஜனுக்குப் பரமபதம்கடாக்ஷித்த பரந்தாமனை நம்பி பஜிக்கும் பக்தர்களுக்குப் பயமுண்டோ.

அறிவரிய ஆநந்தாதீதராய் நின்று பிரபந்நாக்கிரேசர் நிர்த்தநம் புரிந்து, சுவாமியினுடைய குணாநுபவங்களை வர்ணித்தபோது அந்தச் சமயத்திலே ஆநந்த அதிசயமேற்றுக் கேட்கும் ஜெநங்களுக்குத் தேகம் புளகிதமுற்று, மயிர்கூர்ச்செரிந்து, அவர்களுங் கைதட்டி நடநமிட்டுக் கொண்டாடுபவரும், நின்று பாடுமவர்களும், இது வைகுந்த நன்னகரென்று புகழ்பவரும், நம் வாழ்நாளை இன்றளவும் பகவானை பஜிக்காத வீண்நாட்களாகப் போக்கினோமே என்று துக்

கித்தவரும், ஹரி ஹரீ! இந்தத் துக்காராம் பாத சேவையைவிட வேறே யென்னதொழிலிருக்கிறது நமக்கு என்றெண்ணுமவரும், துன்மார்க்கர்களாகிய குதிரை வீரர்களைப் பண்டரீ நாதன் நெடுந் தூரங் கொண்டுபோய்விட்டு இமிசித்து வைத்தானென்றும், சிவாஜி மகாராஜன் சாதுபிரியனுய்ச் சேவைசெய்ததில் இந்தக் கொடிய துன்பம் நிவர்த்தியாயிற்றென்பாரும், இப்படி பலபலவிதமாய்ப் பகவானுடைய பிரபாவத்தையும், ஜெகதாசாரியராகிய ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகளுடைய புகலருங் கீர்த்திகளையும் மிகு சந்தோஷித்தனராய்ப் புகழ்ந்து, ஆநந்தமேற்கொண்டவர்களாய்ப் பஜித்துவரும்போது அங்கேயிருந்த தாவர பாஷாணுதிகளும், கநலிற்படு மெழுகதுபோல் உருகினவாய், அவையும் பஜித்துக்கொண்டிருப்பனபோல பிறருக்குத் தோற்றமுண்டாகியது, ஆத்துமவர்க்கங்களும் தந்தந் தூலரூபக்காட்சிகளற்றுயாவும்விட்டலரூபமாய்த் தோற்றத்தால்பஜிக்கத் தலைப்பட்டன. அந்தரவாசிகள் இவ்வற்புதங்களை யறிந்து கைகளைக் கூப்பிச் சரணங்களிட்டு, துக்காவுக்குக் கைபுகுந்திருக்கும் பக்தி யோகம் நமக்கு வரவில்லையே எனவேங்கி மயங்கினுர்கள். இப்படி ஆரூடஞாநி விதேகதசையடைந்து விமலநாராணனைக் கீர்த்தித்து வருவதை நவவியாகரணத்தில் நிபுணத்வம் வாய்த்துள்ள பெரியோருக்கும் உபமாநித்து உரைக்கமுடியாதென்று எண்ணுகிறேன்.

இவ்வாறு ஹரிதிநமிரவு நான்கு ஜாமம்வரையில் ஸ்ரீ விட்டல தேவருடைய பிரபாவங்களைக் கொண்டாடி பஜனை காலக்ஷேபங்களைச் செய்து, சூரியோதயமானவுடனே மங்ளார்த்தி நடத்தி, நடந்த பிறகு சிவாஜிமஹாராஜாவானவர் காருண்ணியமூர்த்தியாகிய துக்காராம் ஸ்வாமிகளுடைய திருவடிகளில் வீழ்ந்து சேவித்து,என்னையாட்கொள்ள வந்த தேசிகனே! உமது திருவடியின் நுண்துகளுக்கும் பாத்திரனல்லாத நாயினேன்பொருட்டுக்கிருபைபாலித்து, தனியனுயிருந்த என்னையடரவந்த குதிரைச்சேவகர்களைவாடி யேகச்செய்து, ஆண்டு எனக்குப் பரப்பிரமத்தினது ஆநந்த அமிர்தரசத்தை யூட்டி வைத்த திருவே! உமது திருக்கைகளால் பிரசாதம் பெறக்கோரிய ஏழையேனுக்கு அநுக்கிரகந் தந்தருளவேண்டு மென்னிறையே! என்று தீர்க்க நமஸ்காரங்கள் செய்து கைகளைக் கட்டிக்கொண்டெதிரில் நிற்க, அவ்வரசனுடைய கருத்தின்படி ஆதிமூலப் பழம்பொருளுக்குத் திருவாராதநமான பிரசாதத்தைத் துக்காராம் ஸ்வாமிகள் தமது திருக்கைகளாலெடுத்து அளிக்க, அதனை சிவாஜிமகாராஜன் இருகைகளாலும் ஏந்திக்கொண்டு, ஸ்வாமியைத் தொழுதவண்ணமேயிருந்தார். அப்போது கூடவந்திருந்த லோஹோகாம் வாசிகள்,

தங்களாசாரியராகிய துக்காராம்ஸ்வாமிகளுடைய திருப்பாதப்போது களைவணங்கி, தங்களுடைய கிராமத்துக்கு எழுந்தருளவேண்டி விடைதந்தருளப் பிரார்த்திக்க, ஸ்வாமிகளுமிசைய, அதனை தாது கொண்ட தேவாகும் அதிகாரியறிந்து, மெய்ம்மைதாஸர் திருவடிகளில் சாஷ்டாங்கநமஸ்காரம்புரிந்துநின்றுகைகளைக்கட்டிக்கொண்டு, இருகண்களிலும் ஜலம் ததும்ப, இப்பேதையேனுக்குத் தேவர்திருவடி வசிக்குமிடத்திற்கிட்டி என்றும் ஸேவித்துக் கொண்டேயிருக்க வேண்டியது கடமையாயிருக்க எனது கருமவினையினால் தேவர் திருமேனிவருந்த இவ்விடத்திற்கு வரவழைத்தேன்; தயாநிதியே! யான் செய்த குற்றத்தை மன்னித்துக் காத்தருளல்வேண்டுமென்றுபிரார்த்தித்து, தாஸருடைய திருவடியை யெடுத்துத் தனது முடிமேல் சற்றுநேரம் வைத்துக்கொண்டிருந்து, பிறகு ஆறுமையுடனே விடைகொடுத்தனுப்பினான். அவ்வூரிலுள்ள சந்த ஜெநங்களும் வர்த்தகர்களுமெல்லாரும் ஸ்வாமியைத் தொழுது விடை தந்தார்கள். இராஜஸ்திரீகள் யாவரும் அவ்வாறே தொழுது மங்கள வோசையுடனே விடைகொடுத்தார்கள். துக்காராம் ஸ்வாமிகளும் எல்லாரிடத்திலிருந்தும் விடைபெற்றுக்கொண்டு, அநேகமாயிரம் தாஸ ஜெநங்களுடனே கூடி பஜனை செய்துக்கொண்டே புறப்பட்டருள, கூடத்தொடர்ந்தவர்கள் வெற்றிக்கொடி முதலிய பிருதுகளை ஏந்திக்கொண்டே திருமேனிகாவலராய்ச் சென்றார்கள். இப்படி சருவகோலாகலங்களுடனே தாஸர் லோஹோகாமுக்கு வந்து சேர்ந்து, அங்குமுன்போல் நித்த நித்தங் காலக்ஷேபங்களை நடத்திக்கொண்டு இனிது வசித்து வந்தனர்.

இங்ஙனிருக்க, லோஹோகாமில் வசிக்கும் கோண்டோபா என்னும் பிராமணன் ஜீவன்முத்தர் பின்னாலிருந்து பாடத்தருந்தவன், ஓர்நாள் பகலில் ஆசாரியர் திருவடிகளில் வீழ்ந்து சேவித்து உரைப்பதாவது—ஸ்வாமின்! அடியேனுடைய வுள்ளம் திவ்யக்ஷேத்திர புண்ணிய தீர்த்த யாத்திரை செய்ய ஆவல்கொண்டிருக்கிறது; ஆகையால், தேவர் ஸேவைக்காகவரும் பொருளுடையோரிடம் ஆக்கியாபித்து வழிச்செலவுக்காக உதவி செய்வித்து அனுப்பவேண்டும் என்று பிரார்த்தித்தனன். ஸ்வாமியும் பிராமணருரைத்ததைக்கேட்டுப் புன்னகை செய்து, ஆஸநத்திலுட்கார்ந்திருந்த தம்முடைய துடையைச் சற்றே தூக்கி, அதன் கீழிருந்த ஒற்றை விராகனைக் தங்கக் காசையெடுத்துப் பிராமணன் கையில்கொடுக்க, வந்தனஞ் செய்து அவ்விராகனைப் பெற்றுக்கொண்டபிராமணன் மநதில் களிப்பில்லாமல், இவ்வொரு விராகனால் எவ்வாறு யாத்திரை செய்து தீரு

வேன்? என்றுரைக்கக்கேட்டுஸ்வாமிகள் அந்தப்பிராமணனைநோக்கி, இவ்விராகனைச் சில்லரையாக மாற்றி வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு ஸத்விஷயத்துக்கு உபயோகப்படுத்தி, சில்லரையில் ஒரு துட்டைமாத்திரம் மீதியாக்கி முடிபோட்டுவை; அதுமறுநாள் மூன் விராகனுயிருக்கும்; உன்யாத்திரையில் திநதிநம்ஒருவிராகன்செலவுக் குப்போதும்; இங்கே வந்தநாள் மறுபடியும் இந்தப் பொன்விராகனை யென்னிடங்கொடுத்துவிடும் என்றுரைத்து, மூன்று அபங்கங்களைப் பாடி பிராமணரிடமளித்து, இதை நீர்கெங்கையில் ஆராதிக்கவேண் டும் என்று திட்டப்படுத்திப் போகவிடுத்தருளினர். அந்தக் கெங்கா பாயின் அபங்கத்து உட்கருத்தாவது—

தீர்த்தங்களுக்கெல்லாம் அரசியாகிய தாயே! ஸகல பாபங்களை யும் நிவர்த்தித்து உனது சரணாரவிந்தத்தில் சேர்ப்பிக்கும் கருணை யாறே! பகீரதியே! பாரிலுள்ள யாவத்ஜீவகோடிகளுக்கும் அமுதந் தந்து ரக்ஷிக்கும் பத்நிநியே! உன்னை நினைந்தவர்களுக்கெல்லாம் அவ ர்களுடைய பாபங்களைப் போக்கி ஸத்துவகுணமளித்து பிரமாநந் தத்தை யளிக்கும் பெருமாட்டியே! அடியேனுடைய வந்தநத்தை யேற்றுக்கொள்ளும் ஆநந்தியே! அபூர்வகுணப்பெருமையே! உனது சந்தஜெநங்களுடைய வாக்குகளிலிருந்து அன்புடன் ஸ்ரீ ஹரிநாம த்தை அநந்தகோடிவிதமாகத் துதிசெய்ய மநம்பாரிக்கும் தூய வளே! உனது திருப்பாதங்களுக்கு வந்தநமியற்றினேன்; மன்னித் தருளுதி யம்மையே! என்பதொன்றின் கருத்தும்; விசுவேசுரமூர் த்தியின் அபங்கமொன்றின் கருத்தாவது—

ஓம் மஹாதேவா! விசுவேசுவரா! விராட்சொரூபா! உமது திருப்பாதங்களுக்கு வந்தநமியற்றுநின்றேன்; சற்பாபமுடைய சாது ஜெநங்கள் உமது அநந்தாயிரந் திருநாமங்களை யுச்சரித்துக் கீர்த்திக் கின்றார்கள், பார்வதிநந்தநா! யானோ அல்ப மதியீனன்; எனது வந் தனத்தை யங்கீகரியும் என்றும், மற்றொன்று கயாவில் திருச்சந்நிதி கொண்டெழுந்தருளி யிருக்கும் விஷ்ணுமூர்த்தியினது அபிப்பிராய மாவது —

ஸ்வாமி! தேவதேவா! உனது சரணாரவிந்தத்திற்கு அடியே னுடைய எண்பதுகோடி சங்கற்பங்களையும் ஸமர்ப்பணமாக்கினேன்; பிதுர்க்கடன் யாவு முடிந்தது; உத்திரகிரியையும் நடந்துவிட்டது; நானென்னும் பளுவைக் கழித்துவிட்டேன்; அரிஹர நாமத்தைக் கூக்குரலுடன் வர்ணித்துக் கொண்டிருக்கின்றேன். இனி யுமது திருப்பாதப் போதுகளே கதி என்றும்; ஆக விம்மூன்று அபங்கங் களையும் எழுதிக் கொடுத்து அனுப்பியருளினர்.

கோண்டோபா என்னும் பிராமணன் அவ்வபங்கங்களையும் பொற்காசையும் பெற்றுக்கொண்டு கவிகளைப் பாடமாக்கிக்கொண்டு, தங்கக்காசை அவ்வூரிலேயேசோதிப்பானெண்ணி, கடைக்குப்போய் மாற்றி கோதுமைமாவு-நெய்-சருக்கரை முதலியவற்றை யதேஷ்டமாய் வாங்கிக்கொண்டு, ஒருதுட்டுமாத்திரம் மீதியாக்கி முந்தாணியில் முடித்துக்கொண்டு, அன்றுவிசேஷ பலகாரங்கள்செய்துகூடவிருந்த தாஸஜெனங்களோடு உண்டுகளித்து, அன்றிராத்திரி பஜனை காரியங்கள் முடிந்தபிறகு சற்றுநேரம் படுத்திருந்து மறுநாளுதயத்தில் முடிந்த முடிப்பினைப் பார்க்கையில் முன்போல் பொன் காசாகவே யிருக்கக் கண்டு ஆச்சரியமும் சந்தோஷமு மடைந்து, தான்காசைப் பற்றி யெண்ணின எண்ணத்தையும், நடந்த விருத்தாந்தங்களையும் பிரபந்நருக்கறிவித்து, அவர் சேவைசெய்து விடைபெற்றுக்கொண்டு காசி யாத்திரைக்குப் பிரயாணமாகி வழி நடக்கும்போது மார்க்கத்தில் யாத்திரா வாசிகளுடன் கலந்துகொண்டு, திநதிநம் தங்குமூர்களில் மேற்படி விராகனைமாற்றி அதிதிகளுக்கு விநியோகப்படுத்திக் கொண்டு வருவதை அந்த யாத்திரைவாசிகள் கண்டு, இது என்ன ஆச்சரியம்? இவரிடத்தில் பொருள் மூட்டையில்லை; திநதிநம் தங்கவிராகனை மாற்றிச் செலவிடுகின்றார்; கிணறு சிறியதாயினும் ஜலம் மிஞ்சியிருப்பதுபோல இவரிடம் யாதோ ஒரு கிரியை யிருக்கிறதென்று எண்ணிக்கொண்டு வழிநடந்தார்கள். இவர் வழிகளிலுள்ள ஏழைகளுக்கு உதவிசெய்துகொண்டு, காசி நகரஞ்சேர்ந்து, அநேகாயிரம் ஜெநங்களுடன் கெங்காநதியைக்கிட்டி, கீழே வீழ்ந்து சேவாக்கிரமத்தாலே ஸேவித்து, ஸ்நாநசந்தியாதி கிரியைகளை முடித்துக்கொண்டு, பாகீரதியை நோக்கி, அம்மணீ! உமது திருவடிக்கு வந்தனம்; ஸகல தீர்த்த விசேஷங்களுள்ளுஞ் சிறந்தொளிருந் தாயே! வந்தனம்; பாப ராசிகள் எல்லாவற்றையும் நீக்கும் பரமையே வந்தநம்; யானோ லோஹோகாமி விருந்து வந்து உமது திருவடியில் சிரமமைத்துத் தொழுகின்றேன்; எனது ஆசாரிய ஸ்வாமிகளாகிற துக்காராம் தங்கள் திருவடிக்கு ஓரபங்கமெழுதி என்வசங் கொடுத்தனுப்பியதை இதோ தங்களிட மளிக்கின்றேன் என்று மிகு விசுவாசத்துடனே கெங்கையில் அந்த அபங்கத்தை விட்டனர். ஜெகத்பாப விநாசகாரியாகிய கெங்காபாயும் அந்த அபங்கத்தை இரண்டு கைகளாலும் ஏந்திக்கொண்டு, ஒரு தங்கக்காசைப் பிராமணருக்களிக்க, அதைப்பெற்றுக்கொண்ட பிராமணன்சிரசின்மீதில்வைத்துக்கொண்டு, ஹரி ஹரீ! அம்மணீ! என்னையுமொரு மனிதனாக வெண்ணி தங்களுடைய திவ்வியதரமான திருக்கைகளால் தங்கக் காசளித்தீர்; கோடிசூரியப்பிர

காசம் பொருந்திய உம்முடைய திருக்கைகளை இப் பேதையேன் சேவிக்குமாறு சேவை தந்தீர்; தன்னியனுயினேன் என்று ஆறுமை கொண்டு பிரார்த்திக்கவும், அம் மறையவரை அங்குள்ள ஜெனங்கள் யாவருங் கண்டு ஆச்சரியமுற்று, இந்தப் பிராமணருடைய புண்ணியத்தினுல் கெங்காபாயினுடைய திருக்கைகளைச் சேவிக்கலாயினோம்; இதைவிடக் காட்சி யாதிருக்கிறது! பகீரதன் அநேகாயிர வருடஞ் செய்தவங்களையெல்லாஞ்செய்து இப்புண்ணியவதியினுடைய பாதங்களைத் தரிசித்தான்; நாம் யாதொரு கஷ்டமுமில்லாமல் துக்காதேவருடைய மகிமையால் எளிதில் சேவித்தோம்; பண்டு வைணவாக்கிரகண்ணியருடைய கவிதைகளை மூட்டை கட்டி ஜலத்தில் போட்டுவிட்டதை இந்தத்தேவி அக்கவிகளுக்கொரு பின்னமுமில்லாமல் காப்பாற்றித்தந்தார்; இப்போதுதுதிகள்பொருந்திய பாடலைத்தமதுமலர் புரையுங் கைகளால் ஏந்திக்கொண்டனர்; இந்தத் தேவிக்கு விஷ்ணுதாஸராகிய துக்காராம் ஸ்வாமிகள் புதல்வர்போல் காணுகிறது; அன்புள்ளவிடத்தில்ஆண்டவனுண்டென்பதுபோல் பகவான்பக்கல் அன்பில்லாத நமக்கெல்லாம் இப்பரமேசுவரியினுடைய கிருபையெவ்வாறு கிடைக்கும்? என்று தங்களைத் தாங்களே நொந்துகொண்டு, நாமும், இராஜ ராஜாக்கள் அநந்தம்பேரும், மற்றவர்கள் கோடாநுகோடிபேர்களும் கெங்காபாயின் திருவடிகளில் படிவதுபோல் அவர் தம்மில் நீராடி, மாங்கலியம்-சேலை-இரவிக்கை-மஞ்சள்-குங்குமம்-புஷ்பம் முதலியவை சமர்ப்பித்துப் பூசிக்கின்றோம்; அப்படி ஸமர்பிக்கின்றவற்றில் ஒன்றையாவதுதேவிதமதுதிருக்கையைநீட்டிவாங்கினதுண்டா? கதையிலேயுஞ் சொல்லக் காணேம்; இன்றைக்கு இந்தக் கட்டத்தில் வந்த மெய்யன்பருடைய சிஷியராகிய அந்தணரால் காணொ அருமைக் கண்காட்சியுங் கிடைத்தது; தாஸராக்கி, உலகத்தவரைக் கடைத்தேற்றுவிப்பதற்காக திருவவதாரஞ் செய்தருளின ஜெகதாசாரியருடைய அதியிதமான குண கீர்த்திகளும் வெளிப்பட்டன. அவருக் கன்பரையுஞ் சேவிக்கலாயினோம் என்று, கெங்கையின் அறுபதிநான்கு கட்டங்களாலும் ஸ்நாநம் செய்யும் கோடாநுகோடி ஜெனங்களும், பட்டணத்து வாசிகளாகிய பிராம்மண-க்ஷத்திரிய-வைசிய-சூத்திரர்களாகிற நாற்பால் குலத்தவருங் கீர்த்தித்து மங்களங்களைப் பாடினார்கள்.

கொண்டோபா என்னும் அந்தணன் கெங்கையைத் தொழுது எழுந்து விசுவேசுவரர் சந்நிதாநமடைந்து, சுவாமியை ஆராதித்து, துக்காராம் ஸ்வாமிகள் தந்த அபங்கத்தை ஒருமுறை ஸேவித்துத் திருப்பாதத்தில் வைத்து, மறுபடியு மதனையே பலமுறை பாடிக்

கொண்டு வரும்போது அவ்விடத்தில் அந்தச்சமயத்தில் விசுவேசுவர மூர்த்தியைச் சேவிக்க வந்த ஜெனங்கள் யாவரும் இந்தக் கீர்த்தநா மிர்தத்தைக் கேட்டு, மநது அதிலேயே லயிக்கப்பெற்று, இட்டகால் இட்ட கைகளை யுடையவராய் நின்றுவிட்டார்கள். பாடிக்கொண் டிருக்கும் அந்தப்பிராமணருடைய உள்ளமும் பகவச்சரணாரவிந்தத் தில் சொக்கி, புளகாங்கிதமுற்று மெய் சோர்வெய்தியது. கைலாய பதியாகிய விசுவநாதருந் திருவுள்ள முருகப் பெற்றவராய் அப்போ தைக்கப்போது திருமுடியை யசைத்துக்கொண் டிருந்தார். அதனைக் கண் படைத்ததின் பெரும்பயனைக் கண்ட ஜெனங்கள், ஹர ஹர சம்போ! சாம்பசிவா! என்று தந்தம் மெய்யினியல்புகளை மறந்தவர் களாய் கரதாளங்களைச்செய்து, நிருத்தம்புரிந்து கொண்டாடினார்கள். அப்போதந்தச் சந்நிதாநமும், அதிலடங்கிய அநேக சிலாரூபங்க ளும், துவாரபாலகர்களும் அப்படியே சம்போ! சதாசிவா! என்றே வொலிக்கலாயினர் பத்துகோஸ விஸ்தீர்ணமாகிய காசிபட்டணத்தி லடங்கிய ஆண் பெண் ணடங்கலும், பசு பக்ஷிகளும் இப் பேரொலி யைக் கேட்டுத் தாங்களும் சம்போ! மஹாதேவா! சங்கரா! சதா சிவா! என்று சத்திக்கலாயினார்கள். அந்தக் கீத வொலியானது ஆகாய மளாவிக் கிளம்பியதின் பெருமை கேட்ட தேவர்களது உள் ளக் களிப்பை யென்னால் சொல்ல முடியாது.

இந்தப் பிரகாரம் துக்காராம் ஸ்வாமிகள் பாடிய கீர்த்தனையை கொண்டோபா பாடும் திறனைக்கண்ட சாக்ஷாத் பார்வதீரமணராகிய பரமேசுவரர் ஆநந்தங்கொண்டு நனி மகிழ்ந்ததை தேவ - தாநவ - யக்ஷ - கிந்நர - கிம்புருட - சித்த - வித்தியாதர , பந்நகாதியர்க ளுங் கண்டு, தாங்களுமவ்வாறே கைகளைக் கொட்டிக்கொண்டு, சம் போ மஹாதேவா! என்கிற கோஷத்துடனே புஷ்பமாரிகளைப் பெய் தார்கள். தேவ வாத்தியங்களையும் ஆகாயப் பெருவெளியிலிருந்து முழக்கினார்கள். ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகளுடைய பெருமைகளை யென்னென்று கீர்த்திப்போமென்று மயங்கி அவரிருக்குந் திசையை நோக்கி நமஸ்காரங்களுஞ் செய்தார்கள். இந்தத்தருணத்தில் கோண் டோபாவும் கருப்பூர ஆலாத்தி முடிக்க அதனைச் சேவித்துவிட்டு ஜெனங்கள் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குப் போய்விட்டார்கள். கோண்டோபாவும் விசுவேசுவரரை சாஷ்டாங்கமாகச் சேவித்து, அங்குநின்றும் புறப்பட்டு கயாவுக்குவந்து நித்தியகடனை முடித்துக் கொண்டு பிதுர்க்கடனுக்காகப் பிண்ட தர்ப்பணங்கள் செய்து முடி த்து, ஸ்ரீவிஷ்ணுமூர்த்தியின் ஸந்நிதிபுகுந்து, அவருடைய திருவடி களுக்கருகில் நின்றுகொண்டு, தமதாசாரியராகிய பக்தாக்கிரகண்ணி

யர் தந்த மற்ெறாரு அபங்கத்தை யொருக்கால்படித்து, திருப்பாதத்தில் வைத்துவிட்டு, அநேகமான அபங்கங்களைப்பாடித்தொழுதெழுந்து விடைபெற்றுக்கொண்டு, அந்த க்ஷேத்திரத்தில்தானே நான்கு மாசகாலம் வாசஞ்செய்து தம்முடைய நாட்டுக்குத் திரும்பிச்செல்ல எண்ணங்கொண்டு அங்கு நின்றும்பிரயாணப்பட்டுவரும்போதுவழியில் யாதுயோசிக்கின்றாரெனில்:—நாம் அநேகநாளாய் துக்காராம் ஸ்வாமிகளை யடுத்திருந்தமைக்கு யாத்திரைக்காக ஒரு விராகனை யளித்தார்; அதனால் ஒரு குறைவுமில்லாமல் யாத்திரை காரியம் முடித்துக்கொண்டு வந்தோம்; இனி அக்காசை மறுபடியும் அவருக்குக் கொடுத்துவிட்டால் நாமெப்படி பிழைப்பது? அது பரிசவேதியைப்போலிருக்கிறது; அல்பமான சிறியதோர்கால்வாயையிச்சித்திருப்பவர்க்குச் சமுத்திரங் கிடைத்ததுபோலும்! கல்விகற்க விரும்பினவர்களுக்குச் சரஸ்வதிவாக்கில் அமைந்ததுபோலும், உஷ்ணகாலத்தின் வெப்பத்தில் அகப்பட்டவர்களுக்கு இமாலயம்சமீபப்பட்டதுபோலும்,இருளில் தவிப்போர்க்குச் சூரியப்பிரகாசந் தோன்றினதுபோலும், சொப்பநத்தில் சுவாமியைத் தரிசிக்க எண்ணங்கொண்டவர்களுக்குச் சங்கு சக்ரகதாபாணியாகிய சருவேசுவரன் நேரில் ஜாக்கிரத்திலேயே ஸேவை தந்ததுபோலும் நமக்குக் கஷ்டமில்லாமல் கிடைத்தபொருளை யெப்படி மறுபடியும் இழந்துவிடலாம்? ஆதலால் நாமதை மறுபடியும் நம்ம ஆசாரியருக்குக் கொடுக்கலாகாது என்று மநதிலுறுதியாய்த் தீர்மானித்துக்கொண்டுவர,வழியில் லோஹோகாமுக் கருகில் நல்லதோர் குளிர்ந்தவிடத்தில்தாஸர்வீற்றிருப்பதைக் கண்டு, கொண்டோ பட்டர் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்து எழுந்து எதிரில் கைகளைக் கட்டிக்கொண்டு நின்று, அடியேன் தேவருடைய ஆசீர்வாத பலத்தால் மஹா யாத்திரை செய்து வந்தேன்;தேவர்பிரஸாதித்தமூன்றுகவிகளையும் மூவரிடமளித்தேன்; கெங்காதேவி எனக்கொரு தங்கக் காசளித்தாரென்றுரைக்க, அவனைச் சத்திய ரூபராகிய ஸ்வாமிநோக்கி நானளித்த காசு எங்கேயென்று கேட்க, அதனை மிகு பத்திரமாகப் பாதுகாத்து வந்தும் மாயமாய்ப் போய்விட்டது என்றுரைத்து விடைபெற்றுக்கொண்டு தன் வீட்டுக்குப்போய்ச் சேர்ந்து, முடிபோட்டிருந்த துட்டைப் பார்க்கும்போது முடியவிழாமலும் தங்கக்காசு அதிலில்லாமலும் இருக்கக்கண்டு வாய்வரண்டு, திப்பிரமையுற்று, நாமொன்றுநினைக்க தெய்வமொன்று நினைத்ததென்று ஏங்கித் தன்னெண்ணத்திற்குத் தானே நிந்தித்துக்கொண்டு என்ன யோசிக்கின்றாரெனில்:—

பஞ்சாக்கிரி வளர்த்தி அதினடுவிருந்து தவஞ்செய்வோரைக் கண்டிருக்கின்றோம்; சருகு - கனி - காய் - கிழங்கு - ஜலம் - வாயு முதலியவற்றை பக்ஷிக்குமவர்களையுங் கண்டிருக்கின்றோம்; விஷ்ணு தாஸர்களென்றும், சிவனடியார்களென்றும், சத்தியுபாசகர்களென்றும், ஆருதார பூசகர்களென்றும், தத்துவபரிசோதகர்களென்றும், அத்துவைதிகளென்றும், சகுணஆராதநபரர்களென்றும்யோகாப்பியாசிகளென்றும், நியாமவாதிகளென்றும்,பஞ்சமுத்திராபரர்களென்றும், தசவித நாதாநுஷ்டாநிகளென்றும், ஞாநவான்களென்றும், பெண்டு பிள்ளைகளைத்துறந்த அவதூதர்களென்றும், யாகவான்களென்றும், ஆசாரியர்களையடுத்துபாசபந்தங்களை விலக்கிக்கொண்டவர்களென்றும், இன்னும் அநந்தஞ்செய்கைகளைப் பெற்றிருக்குமவர்களையுங் கண்டிருக்கின்றோம். நிராசையில்மிகுத்த நமது துக்காராம் ஸ்வாமிகளைப்போல் ஒருவரையுங் கண்டது கிடையாது. இப்படிப்பட்ட புண்ணியசீலருடைய சேவையை நெடுநாள் செய்துகொண்டிருந்தும் எனது துர்க்குணம் நீங்காமல் துராசையே மேலிடலால் வைத்துக்கொண்டிருந்த துட்டை இல்லையென்று ஸாதித்தேன்; எனது துரெண்ணம் எனக்கே சாக்ஷியாய் நின்று கெடுத்தது; இம்மைச் சுகமும், மறுமைச்சுகமுங் கெட்டு நரகத்துக்கே பாத்திரவானுயினேன்; மகான்பக்கல் பொய்மொழிபேசியதால் மகாயாத்திரையின் பலன் நசித்துவிட்டது; இருந்த விடத்திலிருந்துகொண்டே ஆயாசமில்லாமல் எனக்குப் பேரருள் சுறந்து உபகாரஞ்செய்தனுப்பிய பெரியவராகிய ஸ்ரீஜாநாயகரிடமே கிஞ்சித்தும் யோசனை செய்யாமல் பொய்ம்மை பிதற்றினதால் நமது நற்பயன்யாவும் அவரையண்டிற்று; உண்டவீட்டிற்கு இரண்டகஞ்செய்த பாபம்எனக்குப்பலனுய்ச் சேர்ந்தது; இனியானெத்தனை ஜெங்மங்களெடுத்துத் தவங்கள பலசெய்தாலும்இத்தோஷமென்னைவிட்டு நீங்கமாட்டாது; பரமாசாரியருளத்தில் என்னைப்பொய்யனென்றுஎண்ணநேரிட்டது; ஸ்வாமி கேட்டபோதே பல் பன்னிரண்டையுங்காட்டி] அடியேனுடைய ஜீவநத்துக்கு ஆதாரந் தந்தருளவேண்டுமெனக் கெஞ்சியிருந்தால் அந்தப் பரமமூர்த்தியே திருவுள்ளமிரங்கி அதனை நமக்கே கொடுத்துவிட்டிருப்பார்; கெங்காமாது கொடுத்ததும் அதற்கீடல்லவே; பொய்மையால்கெடுத்துக்கொண்டே தவத்தையெத்தனைஜெங்மங்களெடுத்துக் கஷ்டப்பட்டாலும் மறுபடியும்மெய்மையாய்ப்பெறுவது கஷ்டமாய் முடியுமே; பகவதாராதனை - பெரியோர்பூசை - இவ்வியக்ஷேத்திரயாத்திரை முதலியசற்கருமங்கள்எத்தனைசெய்தாலும் மெய்மையோனென்பது விளங்காது; ஜெங்மங்களுக்கெல்லாம் அரி

தாகிய மானுடஜென்மமேயெடுத்து, அந்தந்த ஜென்மங்களில்புண்ணியங்களைச் சம்பாதித்து, நற்குணங்களெட்டிலும் ஒவ்வொன்றாய்ச் சம்பாதித்து, அவ்வெட்டுங் கைவந்தபிறகு வைகுந்தத்தின் படிகளில் முதல்படிக்கு ஆளாகிறானென்று பெரியவர்கள் சந்தோஷித்து ஆசீர்வாத முன்னிட்டால்அச்சுதனிடம்புருஷாகாரஞ்செய்தவார்கள்;எட்டிலொன்றாகிய மெய்மையைச் சம்பாதித்தும், எனது கருமத்தாலுண்டான துராசையால் அதைக்கெடுத்துக்கொண்டேன்; பஞ்சகிருத்தியத்தில்வல்ல இப்பேர்ப்பட்ட அபூருவ ஆசாரியர் கிடைத்தும், கெங்காமாதிளைச் சேவித்தும், விசுவநாதருடைய தரிசனைகிடைத்தும் என்னுடைய கருமமென்னைவிட்டு நீங்காமல், அல்பமானபொருளையிச்சித்துப் பொய்மொழியாளனாய்விட்டேன்; ஒரு குணத்தையே சம்பாதித்து நிலைநிறுத்திக்கொள்ள வகையில்லாதவன் மற்ற எழுகுணங்களையும் எந்தஜென்மத்திற் சம்பாதிக்கப் போகின்றேன் ? நானும் விஸ்ணுதாஸனா யாகப்போகிறேனா! என்று மூர்ச்சித்து மறுபடியுந் தெளிவடைந்து, இந்த ஜீவன்முத்தராகிய மகாநுபாவருக்குச் சிவாஜி மகாராஜன், தங்கத்தட்டு நிறையத் தங்கக்காசுகளும், இரத்திநங்களும், பட்டு ஷாலுவைகளும் தங்கச்சரிகையிழைத்த வேஸ்டி யுத்தரீயங்களையுங் கொண்டுவந்து ஸமர்ப்பித்து, இவைகளையெல்லாம் அங்கீகரிக்கும்படி யெவ்வளவோ பிரார்த்தித்தும் அவற்றைத் துரும்பென மதித்துபகவத்பக்தர் பிராமணர்களுக்குத்தத்தஞ் செய்துவிட்டனர். தாதுகோண்ட தேவனென்னும் புனாதேசத்ததிகாரி, தாஸரை வரவழைத்து வேண்டிய வுபசாரணைகள்செய்தார் ; அவரிடத்திலிருந்து வழிச்செலவுக்காவது காசளவேனும் பெற்றவரல்ல; புனாவில் அநந்தங்கோடி ஆஸ்திகளைப் படைத்த சௌகார்கள் வந்துசேவித்தார்கள், அவர்களிடத்திலும் ஒருதாம்பூலத்தளவும் பெற்றவரல்ல; சிவாஜிராஜன் இப்போது புனாவில் காலக்ஷேபத்தில்ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது அவனுக்குவந்த ஆபத்தைத் தீர்த்தாரே அதற்காக அவனென்னகேட்டாலுங் கொடுப்பானல்லவா? இந்தச்சமயத்தில் ஒரு கிராமமாவதுகேட்டுவாங்கினாரா? ஒன்றையும் அபேக்ஷித்தவரல்லவே இப்பேர்ப்பட்ட நிராசையும் எண்குணமும் வாய்த்துள்ள திவ்விய ஆத்துமாவை யெந்தஜென்மத்தில் கண்டு சேவிக்கப்போகின்றேன் ? அமுதங்கடையப்பட்டு வெண்ணெய்த் திரண்டுவரும்பதத்தில்சாலுடைந்ததுபோல ஜெகதாசாரியர் என்பாக்கியத்துக்கிசைந்தவராயேற்பட்டு என்மீது கருணைபாராட்டியும் என்னுடைய ஊழ்வினையானது அவ்வன்பினைக் கெடவைத்தது;ஒன்றிலும் சதமிலாப்பெண்டுபிள்ளைகளைச் சதமென்றெண்ணினதால் இக்கேடுகெட நேரிட்டது; இனி

யென்ன செய்வேன்? என்னைப்போல் காசாசைகொண்டு காலனுக்காளாகியும், அண்டினவருடைய பாக்கியம் பெறத்தக்க அநாசாரியர்கள் அநந்தம்பேர் நேரிடுவார்கள்; கடவுளுக்குச் சம்மதியான மெய்யன்பர் துக்காவைப்போல் ஜெந்ம ஜெந்மாந்தரங்களிலுங் கிடைப்பதருமை; இனி யெப்போது அவரால் சற்குணனென்று பேர்பெற்று ஆசீர்வதிக்கப்பெறுவேன்? எனப் பல்பலசிந்தைகளைக் கொண்டவனுய்த் தளர் வடைந்திருந்தனர்.

இங்கிவ்வாறிருந்த, குளிர்ந்த சோலையினிடந் தங்கியிருந்த அருட்ஞானி நெடுநேரமாய்க் காணப்பெறுமையால் ஊரிலிருந்த தன் பாடல்பாடும் பதினென்குபேர் ஸ்வாமியைத் தேடிக்கொண்டு வந்து அவ்விசாலமான சோலையினிடத்தில் கண்டு அடியற்ற பனைகளைப் போல் வீழ்ந்து ஸேவித்துநிற்க, தாஸரும் அவர்களைக் கடாக்ஷித்து, அவர்களுடைய பிரார்த்தனையின்படியே ஊருக்குள் எழுந்தருளி, பஜனைமண்டபத்தில் தங்கியிருந்து அன்றிரா எப்போதும்போலே பஜனை செய்துகொண்டிருந்தபோது அதிலீடுபட்டுக்கொண்டிருந்த எல்லாருடைய மநமும் ஒருமையடைந்து தேகஸ்மரணை யில்லாதவர்களாயினூர்கள். அப்போது தீவர்த்தி பிடித்துக்கொண்டிருந்த மசால் ஜீயினுடைய உள்ளமும் அதுபோலவே யொருமைபட்டு லயித்துவிட, தீவர்த்திக்குஎண்ணெய்விடபாவசங்கற்ப மில்லாமையால் தன் காரியத்தைமறந்து,சித்திரப்பதுமைபோல்நின்றநிலையிலேயேநின்றுவிட்டான். அந்தச்சமயத்தில் வெளிச்சமடங்கிவிட்டது. அப்போது, பரஞ்சோதி ரூபசம்பத்தன் துக்காராமருடைய திருவுள்ளத்தில் சுயஞ்சோதிரூபனுய் விளங்கிக்கொண்டிருந்ததால் தன்மயமாகவே, படிக மண்டபத்தில் தீபம் வைத்தாப்போல்மண்டபமெங்கும் பிரகாசிக்கத் தலைப்பட்டது. அந்த மகத்தான ஜோதி விளங்கியதால் ஒருவருக்குஞ் சலநமில்லாமலும், தீவர்த்தி நின்றுவிட்டதே யென்கிற நினைப்பும் இல்லாமலுமிருந்தது; யாவரும் யதாரீதியாய் பஜனை செய்துகொண்டே யிருந்தனர்கள்.

இவ்வதிசய சேஷ்டைக்குப்புராணிகர்சொல்லுந்தம்மபிப்பிராயமாவது—இந்த மஹாபுருஷ சிகாமணியாகிய தாஸருடைய திருவுள்ளத்தில் ஸ்ரீ ஹரியிருந்து பஜித்துக்கொண்டு வருவதில்அவர்மாயமுதாகத் திகழும் மொழிகள் சகுணமாகவும் விளங்குமவை; சுருதி குரு சுவாநுபவங்களுக் கொற்றுமையாக விளங்குகின்றன; அவற்றின் திறத்தில் ஸத்துவாமிஸத்தால் ஆர்த்திமேலிட்டுக்கொண்டு வரும்போது வேறொன்றிலும் எண்ணஞ்செல்லாது; மநமானது எவ்வழியில் தொக்கியிருக்கிறதோ அவ்வழியில்தானே நிற்கும்; அதற்கு

திருஷ்டாந்தம்-தன்னுடைய தேகத்தினிடம் எறும்பானது ஓடியுலாவித் திரிந்தாலும் மநமானது வேறொன்றினிடத்தில் நாடி லயித்திருக்குமேயாகில் அது தெரியாது; கடித்தபிறகுதான் லயங்கெட்டுத் தெரியும்; அதுபோலவும், தனது நேத்திரம் எதை நோக்குகின்றதோ அது தவிர வேறொரு நோக்கமில்லாத வஸ்துக்கள் தெரியாதது போலவும், ஸ்ரீதேவி நாயகனுடைய திருக்கலியாண குணங்களைச் சிறந்த ஞாநியர் துதித்துக்கொண்டு வரும்போது எல்லாருடைய உள்ளமுந் தூய்மையா யசைவற்ற தீபம்போ லிருப்பது தன்மை. சத்தியரூபிகளாகிய மெய்யடியார்களுக்குத் தேகத்தியாகம் வாய்க்குமேயன்றி சஞ்சலமணுகாது. சாதாரணமான பக்தபாமரர்களேனும் அவ்விடத்திற் கேகினல் அவர்களுக்கும் அக்குண முண்டாமோ என்னில்; உதராக்கினியா லுண்டாகும் பசி யாவருக்குமுண்டு; அதற்காக அவ்வவர்கள் கருமத்துக் கேற்றபடி கிடைக்கு மவைகளைப் புசித்து அதின் வேதனை தவிர்த்துக்கொள்ளுவது சுபாவம்; தெய்வகெதியா யிராஜபோஜனங்கிடைத்து ஒருவனருந்துவானாகில் அதனைச் சிறப்பித்து, தன்னுடைய தேகம் நீங்குமளவும் எண்ணி யெண்ணி வாயூறுவாரைப்போல் இவ்வைணவத் தலைவர் புகலும் வசநங்களானவை காம ஸம்பந்தமான இராஜாந்நத்தைப்போல் ஓராமொருவேளையேனுங் கிடைக்கப் பெறுமாகில் உள்ளளவும் அதனால் வாய்க்கப்பெறும் எண் குணமென்னும் அமுதப் பெருக்கை எண்ணுந்தோறுமூறப் பெறுகையாலும், கோதில் குணக்குன்றாகுங் கோவர்த்தநதரனைச் சாமவேதாங்கத்தின்படி சுரமொத்த கீர்த்தனை ரூபத்தில் துதிசெய்து வருகையாலும் பாமரர்களுடைய வுள்ளமும் ஒற்றுமையாகி, பாவ அபாவங்களற்றிருக்கத் தடையில்லை. இவ்விசேஷத்தால்தான் தீவர்த்தி வெளிச்சமுண்டென்றும்இல்லையென்றும்தெரியாமலிருக்க வாய்த்ததென்றது. யானையானது கருப்பந்தோட்டத்தில் நுழையுமாகில் தானுந் தன்குட்டிகளும் இனமும் அக்கரும்பையேதின்னும்; ஆடானது நுழையுமாகில் தானுங் குட்டிகள் முதலியவையுங் கரும்பை யிச்சியாமல் தழைகளைத் தின்னும். அதுபோல் மெய்த்தாஸர்களை யடுத்தால் மெய்மைசேர் பரமமூர்த்தியினுடைய திருவடிவாய்க்கும்; பொய்வேஷதாரிக ளாகுமவர்களை யடுத்தால் அப்பொய்க்குரிய அறுவகை விகாரகுணங்களேயுண்டாய், தான் ஜெந்மஜெந்மாந்தரங்களில் சாதாரணமாய்ச் செய்திருக்கும் புண்ணியங்களும்நீங்கிரௌரவாதி நரகமே பிராப்தமாகும். பொய்தாஸர்கள் காலக்ஷேபம் செய்யுமிடத்தில் மூதேவி பிரஸந்நமா யிருப்பாள். அவர்கள் செய்யும் பிரசங்கம் அவ்விடத்திலிருக்கும் ஜெநங்கள் யாவருக்கும் ஒற்றுமையில்

லாமல் வேற்றுமையாகவே அவ்வவர்களுடைய புத்தி போனபடிக் கெல்லாம் கலவரப்பட்டுத் தோன்றுவிக்கும். இப்படிப்பட்ட பொய் பக்தர்களா யிருப்பார்களாகில் அங்கிருந்த சபையோர் தங்களுக்குத் தீபங்கள் நின்றுவிட்டமை தெரிந்திருக்கும். இன்னின்ன ஸ்திரீகள் வந்திருக்கிறார்க ளென்றுந் தெரியும். மங்களார்த்தி சீக்கிரமாக முடிந்துவிட்டால் தினுசு தினுசான பிரஸாதங்கள் கிடைக்குமென்று எண்ணமும் உண்டாகும். அப்பேர்ப்பட்ட பொய் பக்தரல்ல நமது துக்காராம் ஸ்வாமிகள் என்று கிரந்தகர்த்தா சொன்னவற்றை ஸாது ஜெனங்கள் கேட்டு ஆநந்தபரவச மடைந்து, துக்காராம் ஸ்வாமிகளுடைய மற்ற சரித்திரத்தைக் கேட்பிக்கப் பிரார்த்தித்தமையாலே சொல்லத் தொடங்கினார்.

ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகள் முன் சொன்னபடி விதேக நிலையினரா யிருந்து பஜனை செய்து முடித்து மங்களார்த்தி நடத்தி, சருவலோக சரண்ணியனை நமஸ்காரங்கள் செய்து எதிரில் நின்றவுடன் இவருடைய தேகத்திலிருந்த சோதி சொரூபம் லயித்து விட்டது. உடனே இருளானது ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியவிடாமல் சூழ்ந்துகொண்டது. இதைக் கண்ட யாவரும் ஆச்சரியப் பட்டு, தீவர்த்திக்கு நெய்விடாம லிருந்ததால் எரியவில்லை; நெய் குறைவில்லா திருக்கச் செய்தும் விடாம லொழிந்தார்க ளானபடியால் இருள் கொண்டது. இதுபரியந்த மிருந்த பிரகாசமானது சுவாமிகளுடைய திருமேனியில் எந்த பாகத்திலிருந்து உண்டாயிற்றென்று சங்கை கொண்டார்கள். அவ்விஷயத்தில் கிரந்தகர்த்தா தெளிய வோதுவதாவது—

பரமகாருணியரான ஸ்வாமி-துக்காராம், விதேகராய் பிரணவ சொரூபரா யிருத்தலைப்பற்றி ஸ்ரீமந்நாராயணன் இடைவிடாமல் இவருடைய இதயத்தில் குடியிருப்பதாலும், அந்த மகாத்துமியத்தால் பஞ்சகிருத்தியங்களுக்கு உரியவராயிருப்பதாலும் இந்தப் பிரகாசந் தனக்குத் தானே யுண்டாகி யொளிரும். அண்ட சராசரங்களைத் தனது பஞ்ச தொழில்களால் நடத்தியும் நடத்தாமலும் காரியங் கொள்ளும் ஆதிமூர்த்திக்கு உபமாநம் என்ன நியமித்து உரைக்கக் கூடும்? என்றுரைத்துப் பின்னையுஞ் சொல்லத் தொடங்கினார்.

அநந்தரம், மங்களார்த்தி யானபிறகு ஸ்வாமிகள் உட்கார்ந்து கொண்டிருக்கையில், லோஹோகாம்வாசிகளில் சிலர் வந்து சேவித்துக்கொள்ளும்போது அவ்வெல்லாருடைய கண்களுக்கும் இவருட் கார்ந்திருந்த அவ்விருப்பானது எவ்வாறிருந்த தெனில்: பரமபதத்தின்கண் பரமாத்தும சொரூபனாகும் ஸ்ரீமந் நாராயணன், பணமுடி

களாயிரமும் நிழற்றி ஆதிசேஷன் தானேயாயிருந்த சிங்காசநத்தில் வீற்றிருந்த திருக்கோலம்போ லிருந்தது. சுவாமிகளுடைய மான்மியங்களுக்கு மயங்கி ஜெநங்கள் இரவும் பகலும் அவருடைய மேன்மைதங்கிய கீர்த்தி குணநன்மைகளைப் புகழ்ந்து தொழுது, தங்கள் தங்கள் மாளிகைகளில் திநநித்தம் ஸ்ரீபாண்டுரங்கனை ஆராதித்து, கீர்த்தனை முதலானவற்றால் ஏத்துதல் செய்து வருவதெவ்வாறிருந்ததென்னில் : வடமதுரையில் இராஜ மாளிகையில் தேவகீ தேவியாருடைய திருவயிற்றில்நின்றுஉதித்து ஸ்ரீகண்ணபிரான், கோகுலத்தில் நந்தகோப னணிசிறுவனாய் யசோதைபிராட்டியார் மருங்கில் வளர்ந்து, கோபகுல சுந்தரிகளோடு திருவிளையாடல்களை நடாத்திவரும்போது தேவர்களும் இருடிகளும் யோகிகளு மங்கடைந்து, அவ்வுந்தி மலரோனைச் சேவிக்குமாறு வருவதும் சேவிப்பதும் பூசனை செய்வதும் போலிருந்தது. இத்தகைய அருமையான கோலாகலங்களைக் கண்ட அந்நாட்டா ரனைவரும் அடங்காக் களிப்படைந்து தங்களுள் தாங்களே மகிழ்வுகொண்டிருந்தார்கள். துக்காராமரைச் சேவிக்கும்பொருட்டு அவரிடத்திற்குவந்த அநேக தபசிகளையும் அவ்வூரார் சேவித்து அவர்களிடத்திலிருந்தும் ஆசீர்வாதங்களைப்பெற்றவர்களாயினார்கள். துக்காராம்ஸ்வாமிகள் வீற்றிருந்த அச்சமயத்தில் அவருடைய திருமேனியிலிருந்து பளபளாகாரமான தேஜசும், முகத்தில் பூரண சந்திரனையொத்த குளிர்ச்சியு முண்டாயிருந்தன. அவைகளை அவ்வூரார் கண்டு வியப்படைந்து, இவர் வைகுந்தபதியோ! அல்லது மன்மதனோ! அல்லது கைலையங்கிரி யண்ணலோ! இந்திரனோ! மற்றியாரோ! இக்கோலங்கொண்டு எழுந்தருளி யிருக்கவேண்டு மல்லது இவர் நாட்டு மானிடரல்ல; இவருடைய திருமேனி காந்தியும், திருவதநத்தின் குளிர்ச்சியும் உற்றுநோக்கும்போது சூரிய சந்திரர்களுக்கு ஒப்பாயிருக்கின்றன; வாசாமகோசரமான இவருடைய மொழிகளோ அமுதவாறு பெருக்கெடுத்து ஓடுவதுபோலிருக்கின்றன; இவரை என்றும் இவ்விடத்திலேயே வசித்துக்கொண்டு இருக்கும்படிச் செய்யவேண்டும்; தேவுகாமுக்கு எழுந்தருள விடலாகாது என்று எண்ணி யிருந்தார்கள்.

இப்படியிருக்க, கீழ்ச்சொன்ன கோலங்களுடனே வீற்றிருந்த வேதவேத்தியனது மெய்யடியாராகிய விமலமூர்த்தி துக்காராம்ஸ்வாமிகள் அங்கிருந்த தமது சிஷியர்களில் யாவரிடமும் பேசாமல் மௌநமாயிருந்து, பிறருக்குத் தெரிவியாமலேயே லோஹோகாமை விட்டுப்பிரயாணப்பட்டுதேவூகாமுக்குவந்துகொண்டிருக்கும்போது, வழியில் கண்டு சேவித்து, எழுந்தருளுகிறீர்களென்று கேட்கு

மவர்களுக்கெல்லாம், வைகுண்டம் போகிறேனென்று சொல்லிக் கொண்டேபோய் தேவூகாய்சேர்ந்து, அங்கே திருச்சந்நிதிக்குள் புகுந்து சேவாக்கிரமத்தின்படி விடோபாவைக்கண்டு தீர்க்க நமஸ்காரங்கள்செய்து நின்று, ஹரிஹரி! எனதாண்டவனே! என்னிதயத்தில் தோன்றி விளங்குவதுபோல் என்னெதிரிலுந் தோன்றி விளங்கும் உன்னுடைய திவ்வியமங்கள விக்கிரகத்தைக்கண்டு தெரிசிக்கலாயினேன்; கோபால! கோவிந்தா! வேறொரெண்ணமும் என்னுள்ளத்திலில்லை என்றானந்தங் கொண்டவராய், மநந்ததும்பி, ஜகதீசா!என்மநமானது இருபக்ஷங்களையும் நாடியது; அதனாலுனக்கடியானென்று எனக்குள் நானெண்ணிக்கொள்ள ஐயம் வந்துற்றது; என்னுடைய மநமே அதற்கு ஸாக்ஷிபூதமாகின்றது; மகத்துவமென்னும் சங்கிலிகளால் காலில் பூட்டுண்டேன்; ஜநங்களிடத்தில் அதிகமமதை யெனக்கு உண்டாயிற்று; அதிலிருந்து என்னை விடுவிக்க வேண்டும் அச்சுதா! ஜெநங்கள் நானாவித பக்குவாந்நங்களையெல்லாஞ் செய்து என்னைப் புசிக்கச்செய்கின்றார்கள், தயாபரா! ஷட்ரசங்களோடுகூடிய அவ்வந்நங்களே சுகமென்றெண்ணுகிறது இச்சரீரம்; இதை நீயறிவாய்; அவ்வந்ந விசேஷங்களை நிரம்ப யானுண்டுகொண்டிருந்ததனால் எனக்கு அவகுண மூர்ச்சிதப்பட்டு, சோம்பலும் நித்திரையுமதிகரித்து, தேகசௌக்கியம் அதிகமாய்ப் பருத்தலாயிற்று; இனிச் சகிக்ககில்லேன்; உன்னுடைய மெய்யடியார்கள் மீதிலாணை; என்னை வைகுந்தத்திற் சேர்ப்பித்தருளல்வேண்டும் என்றிவ்வாறெல்லாம் அதிதுக்கரூபமாகப் பிரார்த்தித்த பிரார்த்தனைகளைச் செவியாக் கேட்டருளின ஸ்ரீமணாளன் புன்முறுவல்செய்து, குழந்தாய்! உன்னுடைய மநோபாவத்தின்படி அதனைப் பூரணஞ்செய்து ரக்ஷிப்பேன்; உன்னுடைய சரீரத்தின்மீதுயமனுடையநாட்டமானதுநாடவிடாமல் செய்வேன்; பயமுறாதேகண்டாய்! என்றுரைக்கலும், துக்காராம் ஸ்வாமிகள் மிகுதியுங்களிகூர்ந்து, ஆநந்தஅருவி கண்களினின்றொழுக நமஸ்கரித்து, முன்போல் தம்முடைய காரியங்களைக் குறைவற நடாத்திக் கொண்டிருந்தனர்.

சிலகாலங் கழிந்தபிறகு துக்காராம்ஸ்வாமிகள் ஆளிந்திக்கெழுந்தருளி, அங்கே ஞானேசுவரர் திருசசந்நிதியிற்புகுந்து, சபாமண்டபத்தில் சற்பாவத்தினாலே சுவாமியைநோக்கி தண்டம்ஸமர்ப்பித்து, ஸந்நிதாநத்தை வலம் வரும்போது ஆங்கே ஆஜாநவிருக்ஷமொன்றுண்டு; அதின்கீழ்ச்சிந்தியிருந்த நொய்களைத்தின்றுகொண்டிருந்த பக்ஷிகள் யாவும் இந்த தாஸரைக்கண்டமாத்திரத்தில்தானே குப்பெனப் பறந்து மரத்தில்தங்கிற்று. ஜீவன்முத்தர் இதையறிந்து,

தேகத்தில் மயிர்கூச்சிடப் பெற்று, என்னிடத்தில் ஜீவபேத மிருப்பதால்தான் இந்தப் பறவைகள் என்னைக்கண்டு பறந்தோடிற்று! ஹரி ஹரீ! பண்டரீநாதா! அடியேன் அபேதவானு யிருப்பேனேயாகில் ஒருக்காலுமவை பறந்திடா. பறவைகளே அடியேனை பாவபரனென்றெண்ணி எனக்கு அஞ்சியோடினதால் அவைகளே ஸாக்ஷியாகின்றன, நானென்னும்பற்று என்னைவிட்டு நீங்கவில்லையென்பதற்கு இது வேஸாக்ஷி. அகங்காரமென்னைவிட்டு எப்போது நீங்கவில்லையோ அப்போதேயான் இரக்ஷகத்துக்கு உரியவனல்லனென்பது தன் கடையே விளங்குகிறது. இவைகளை யோசியாமல்யான், ஜடவைரிகளைஜெயித்துவிட்டேன் என்றும், வைணவனுய்விட்டேன் என்றும் எண்ணிய எண்ணங்க ளெல்லாம் வீண்; சரீரத்தைச் சவத்துக்குச் சமமாயெண்ணி, அதனை வைராக்கியமென்னும் எரிமுட்டையடுக்கி, பிரமக்கியாநமாகிற தீயை மூட்டித் தகநஞ்செய்தும், சமுசார சங்கல்ப மதனைப் பிற்புறமாயொதுக்கியும், சரீரமாகிறகடத்தைவிடோபாவின் திருவடிக்கீ முடைத்தும், பிரகிருதி வாசனை நிச்சேஷமாய் ஜீவனைவிட்டு நீங்கச்செய்தும், குல - ரூப - நாமங்களைத் திலதர்ப்பணம் பண்ணியும், இந்தச் சரீரம் யாருடையதோ அவருக் கொப்பித்தும், ஆயுள் அளவுகுன்றுமல் பாண்டுரங்கனுடைய திருவருளால்தனக்குத்தானு யிரக்ஷிக்கப்பட்டும், தேகமானது அவியாத்தீபமாகியும்விளங்குவது விருதாவே யாய்விட்டது; என்னுடைய அநுபவக் குற்றங்கள் எனக்கே நன்குவிளங்கிற்று; இதுவரையிலும் என்னுடைய நாவினுல் வருணித்துக்கொண்டு வந்ததெல்லாம் பயனில்லை யாயிற்று. என்று பலபல் வியாகூலங்கொண்டமநத்தராய், பிறகு தமக்குள்தாமேதெளிவடைந்து, ஏகாக்கிர சித்தங்கொண்டு பாண்டுரங்க மூர்த்தியை நினைத்து, தீநதயாளா! திருவின் மணுளா! திவ்வியகுண சீலா! வேணுகாநலோலா! தூய்குணப் பிரகாசா! திரிமூர்த்தி சொரூபா! வந்தநம்; அநாதநாதா! ஆபற்பாந்தவா! ஹரிகோபாலா! கிருஷ்ணுமல ரூபா! வந்தனம்; தேவகி புத்திரா! தேவர்கள் மித்திரா! பாவமில்லாப் பரனே! வந்தநம்; ஆலிலைவாசா! அழகியாள் நேசா! ஆதிவேங்கடேசா! ஐயனே ஜெகதீசா! வந்தனம்; விட்டலா! வந்தநம் என்று துதித்து, தமக்குள் தாமே என்ன யோசிக்கின்ருரென்ருல்;—

ஒரு பிறவிக்குருடன் தன்வினையை நினைந்து ஈசுவரனைத் தியாநித்துக்கொண்டிருக்க, அவனைக் கண்ணுள்ள ஒருவன் கண்டு மநவிரக்கங்கொண்டு, அவ்வந்தகனைக் கூடவழைத்துக்கொண்டு நாடெங்குந் திரிந்து, ஆங்காங்குண்டான அதிசயங்களைப் புகன்று வந்ததில் அந்தகன் மகிழ்வடைந்து, கண்ணறையால் கண்ட காட்சிகளைக்கண்

கொண்டு காணுவிடினும் அவ்வெல்லாவற்றையுங் கண்டதுபோலவே தெளிவுடன் சந்தோஷிக்கிறுன்; அவனைக் கண்ணுள்ளவன் விட்டு நீங்கினவனுயின் முன்கண்ட அநுபவங்களாலேயே திருப்தியிருமல் மறுபடியும் கலங்குவான். அதுபோல், அறுவகைவிகாரங்களால்பிணைப்புண்டிருந்த என்னை விடோபா அடிமைகொண்டு, பஞ்சகிருத்தியங்களுந் தந்து, உலகம்யாவும்மதிக்கவைத்தும்பாவாபாவமென்னும் வலையில் இப்போது என்னைச்சிக்கவைத்தார்; இதை யென்னுடைய அநுபவஸித்தமா யுணர்ந்தேன்; என்னுல் நடாத்திவந்த அபூருவகாட்சிகள்யாவும் அந்தகன்கண்ட காட்சிகளைப்போலாயிற்று; இந்தப்பக்ஷிகளை யானென்னசெய்தேன்; என்னைகண்டு ஏனேடிற்று? இந்தப் பக்ஷிகள்யாவும், இந்தஎன்தேகத்தைத் தாவமென்றெண்ணி என்மீது சஞ்சரிக்குமாகில் அப்போதுதான் யான் பாவாபாவம் அற்றவனென்றெண்ணுவேன்; அதுவரையிலும்இந்த இடத்தைவிட்டுப்பெயரேன் என்று எண்ணந் திடமாய்எண்ணி, பகவந்நாமத்தைத் துதிக்கும்தடஸ்தரா யிமைகொட்டாமல் சங்கீர்த்தநம்பண்ணிக்கொண்டிருக்க, அவருடைய நிச்சயக்கியாநந்தெரிந்த நாதநாதன், பக்தர்களுடைய மநக்குறையாற்றுவான் துஜஸ்தம்பம் நாட்டிக்கொண்டிருப்பவனுகையாலேயும், அக்கருத்தையே ஸ்ரீமகாபாகவதத்தில் ஓதியிருக்கையாலேயும் ஆவலிநாயகராகிய துக்காராம்ஸ்வாமிகளுடைய ஆர்த்தியைநிறைவேற்றவேண்டுமேன்று திருவுள்ளம்பற்றி, அந்தப்பக்ஷிகளுக்குள் பூரணவியாபகஞ்செய்து, அவர் தந்திருமேனியிலெங்கும்பறவைகளையுட்கார்ந்து சஞ்சரிக்கும்படிச் செய்தருளினுன். அவ்விசேஷத்தைப் பெற்ற தாஸர் தம்முடைய தேகத்தை யசைக்கிப்பார்த்தார்; பக்ஷிகள் அசைவின்றித் தங்கியிருந்தன. அஃதெவ்வாறிருந்ததென்றுல்—ஒரு விருக்ஷத்தின்மீது பறவைகள் பலவீற்றிருந்து காற்றடித்தாலும் அதற்குச் சலியாமல் சத்தித்துக்கொண்டு அதின் கிளைகளிலேயே தங்கியிருப்பதுபோலும், புஷ்பவநத்தில் அடுக்கடுக்காய்ப் புஷ்பங்கள் பிணைத்துக்கொன்டிருப்பனபோலுமிருந்தது. பட்சிகள் சற்றுமஞ்சாமல் தம்மதேகத்தில் தங்கியிருப்பதைக்கண்ட தாஸர் பிரமாநந்தபராய் எண்பதுகோடி சங்கல்பங்களும்ஒருமையடைந்து, ஹரிஹரீ! பண்டரீநாதா! பரமதயாளா! கருணையங்கடலே! கார்நிறத்தண்ணலே! ருக்குமணீகாந்தா! என்று ஏகாக்கிரசித்தராய் ஆநந்தித்து, நிர்த்தநஞ்செய்துகொண்டே யோசிக்கலாயினர்;—பரந்தாமா! பக்தபரிபாலா! தாயானவள் பக்தனது துயரங்களை நீக்கி ஆதரிப்பதுபோல் அடியேனுடைய பாவாபாவங்களை விலக்கி, பக்ஷியினங்களை என்தேகத்தின்மீது சலநமுருமல் சஞ்சரிக்கச் செய்தனை; இவ்வதிசயமான

நற்காரியம் உன்னாலல்லால் யாவரால் செய்விக்கமுடியும்; சருவகுணாலயனே! சத்தியமூர்த்தியே! சான்றோர்பராவும் ஜெகதந்தர்ப்பூர்த்தியே! சபரி எச்சில்கனியுண் டசதிரா! சத்தியசந்தநா! சங்கு சக்கர கதா கோதண்டபாணியே! சரணம் சரணம்; சவ்வியசாசியின் உயிர்த்துணைவா! சரணம் சரணம் என்று பின்னும் இருகைகளையிஞ் சிரமிசைகூப்பிநின்று, பிரமாநந்தபரிதராய், கியாநேசுவரசுவாமிகளுக்கும் பிரேமையுடன் நமஸ்காரங்களைச் சமர்ப்பித்து, களிப்படைந்த மநத்தரா யிருந்தருளினர்.

இங்கிவ்வாறிருக்க, லோஹோகாமில் அநேகாயிரம் ஜெநங்கள் நடுவிலிருந்து நீங்காமல் பஜனை செய்துகொண்டிருந்த ஸ்வாமிகள், அவர்களில் ஒருவரிடத்திலுஞ் சொல்லாமல் நீங்கிவிட்டமைக்காக ஸ்வாமிகளோடு பின் பாடல் பாடும் பத்தர்களில் பதினான்குபேர், ஸ்வாமிபக்கல் அதிக வாஞ்சை வைத்துப் பிரியாமலிருந்தவர்களாகையால், கன்றானது தாயை விட்டுப் பிரிந்தால் எப்படி கதரிக்கொண்டே தேடுமோ அப்படியே பிரிவாற்றகில்லாமல் பற்பலவாறாய்க் கதறிக்கொண்டே மூலை முடுக்கு காடு வநங்களில் எங்குமோடிப்பார்த்தும், ஆலயங்களிலும், வேதமோதும் விப்ரதர்களிடங்களிலுந் தேடியும், தீர்த்தக்கரைகளைச் சோதித்தும் அங்கெல்லாமவரைக் காணப்பெறாமல், வழிபோக்கர்களாலே, அலங்காவதி வழியில்தாஸர்போய்க்கொண்டிருப்பதாகக் கேள்விபட்டு, அந்தப் பதினான்குபேரும் பிரயாணப்பட்டு ஆளிந்திநோககிச்சென்று, ஞாநேசுவரஸ்வாமி சந்நிதாநத்தை வலம் வரும்போது, பிராகாரத்தில் ஆஜாநு விருக்ஷத்தின் கீழ் பட்சிகள் தேகத்தின்மீது வீற்றிருக்கப்பெற்று மகிழ்வடைந்துகொண் டிருக்கக்கண்டு அந்தப் பக்தர்களனைவரும் ஆச்சரியமுற்று, ஆசாரியருக்கு நமஸ்காரங்கள்செய்து எதிரில் நின்றுகொண்டு, நமது தாதாவாகிய இவர்மீது பட்சிகள் சஞ்சரிக்கக் கண்ட நம்து பாக்கியமே பாக்கியம்! என்று உவந்த வுள்ளத்தராய் யோசித்துச் சந்தோஷமீதூற அருகில் வரும்போது விதேகர் திருமேனியில் சஞ்சரித்துக்கொண்டிருந்த பறவைகளெல்லாம் பறந்துவிட்டன. இவர்கள் யாவரும் அப் புண்ணிய க்ஷேத்திரமாகிய அலங்காபுரியில் ஞாநதேவு சுவாமிகள் ஸந்நிதி வாயலில் துக்காதேவர் பின்னாலிருந்துகொண்டு, வீணை-தம்புரு-மத்தளம்-தாளம் முதலிய வாத்தியங்களை யிசைத்துக்கொண்டு பஜனை பாடத் தொடங்கினார்கள். அந்த நாமஸ்மரணையின் பெருமைக்குத்தேவர்கள் முதல் ஸ்தாவரங்களீறாயுள்ள எல்லா சராசரங்களும் மங்கிக்கிடந்ததின் பெருமைசொல்ல என்னால் கூடாதென்றால் எவ்வாறு இருந்திருக்க வேண்டுமோ யூகித்துக் கொள்ள

வேண்டியது. அலங்காபுரியிலிருந்த ஜெனங்கள் ஆண் பெண் குழந்தைக ளடங்கலும், தேஹூகாமிலிருந்து துக்காராம்ஸ்வாமிகள் தமது சிஷியகோஷ்டிகளோடுவந்து சந்நிதானத்தில் காலக்ஷேபஞ் செய்து கொண்டிருக்கிருரென்று கேள்விப்பட்டு, தங்கள் தங்கள்கிருஷியாதி கிருத்தி காரியங்களைவிட்டுச் சந்நிதானத்துக்குவந்து, பஜனைசெய்து கொண்டிருந்த ஸ்வாமிகளது திருவடிகளில் வீழ்ந்து சேவித்து, அவர்களுங் கோஷ்டியாருடன்கலந்து கைகளைத் தட்டிக்கொண்டு ஹரிசங்கீர்த்தநஞ் செய்துவந்தார்கள். அந்தச்சமயம் அந்நாடு பரமபதமாகவும், துக்காராம்ஸ்வாமிகள் பரமபதநாதனைகவும், கோஷ்டியாரனைவரும் நித்திய முத்தர்களாகவுங் காணுமவர்களுக்குத் கண் காட்சியாகக் காணநின்றன. இவ்வாறு காண்பவர்களுக்குத் தோன்றிய பெருமிதையாலே ஒவ்வொருதராணியும் பிரமாநந்த மடைந்து தாஸரைக் கொண்டாடத் தொடங்கிற்று. அந்தச் சமயத்தில் மெய்யடியார் ஒரு அபங்கத்தைப் பாடியருளினர். அதின் கருத்தாவது—

சுவாமீ பண்டரீநாதா! அடியேன் இத்தேகத்துடனிருக்குமளவும் உனது திருநாமத்தை யுச்சரித்துக்கொண்டு வருவேன்; உச்சரியாமல் பிரகிருதி சம்பந்தமான காமாந்தகாரத்தில் அழுந்துவனேயாகில் ஆத்துமத்தைத் திருடின பாபத்திலும், கொலைசெய்த பாபத்திலும் போகக்கடவேன். சிவமூர்த்தியானவர் ஆலகாலவிஷத்தை யுண்டு தன்தேகம் வாதையுறுங்கால இராமநாமத்தைப் பஜித்துத் தன் சிரமைகளை நீங்கப் பெற்றனர். நாரதமாமுநி இராமநாமத்தை ஆதாரமான வுணவாக வைத்துக்கொண்டு புவநத்திரயங்களிலுஞ் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றார். அகஸ்தியர், மார்க்கண்டேயர், புஜண்டர், உத்தாநபாதர் சுபுத்திரராகிய துருவர்,பிரகலாதர், விபீஷணர், அம்மரீஷர், ருக்மாங்கதர், மற்றும் சப்தருஷிகள், முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரதுருடிகள்,கெருட - காந்தருவ - சித்த - வித்தியாதர கிந்நர - கிம்புருட பந்நகாதியர், நவகோடு சித்தர்கள், அஷ்டவசுக்கள், நவப்பிரஜாபதிகள் முதலிய அநேகாயிரவரும் அந்த இராமநாத்தை மெய்மையான பக்தியும், சத்திய சீலமான புத்தியுங்கொண்டு பஜித்து வருவதால்தான் சாலோக - சாமீப - சாரூப - சாயுஜ்ஜியங்களாகிற பதங்களையடைந்து, முத்தர்களாயும், விதேகராயும் மோக்ஷநிலையில் இனிவாழ்ந்து வருகிறார்கள். இவ்விதமான பெரிவர்களுண்டென்று உலகத்தின்கண் வசிக்கும் மாந்தர்களுக்குத் தெரியவரும். இப்பேர்ப்பட்ட பேராநந்த சுகத்தைவிட்டு, விஷய சுகம் விரும்பி, பொன்னிலமாதராசையிற் சிக்கி, அருமையாய்ச் சம்பாதித்த மானிடதேகத்தைக்

கிருமிதேகத்தோடு ஒப்பதாயாக்கி, முடிவுவரையிலும் சுதந்திரமாக நம்பிருந்த பெண்டு பிள்ளை பண்ட பதார்த்தங்களைவிட்டு, பாவா பாவமென்னும் பாசத்திற் பிணைப்புண்டு, காலனுடைய அடியார் களுக்காளாய் நரகவேதனையிற்பட்டுப் புரண்டுழைதையும் திறன், இராம நாமத்தைப் பஜிப்பதற்கு மறநியைத் தருவது இயல்பு. ஸ்ரீராமதார கத்தை வேதபுருடன் உச்சரித்துக்கொண்டு வருகின்றான். இராம நாமத்தை இடைவிடாது பஜித்துக்கொண்டு வருவதே புருஷார்த்த மன்றிவேறு புருஷார்த்தங்கிடையாது; மோக்ஷஸாதநத்துக்குரியதாக ஆன்மாக்களுக்குத் தந்தை நற்றாய் தாரந் தனையர் பெருஞ்செல்வஞ் சுற்ற மற்றுமெல்லாம் அத்தாரகமேயாகாநிற்கும். இராமநாமத்தைப் பஜிப்பவரிடம் நமனணுகான். அஷ்டலக்ஷ்மிகளும் அந்நாமோச் சாரண பரனிடம் பொருந்தியிருந்து, முடிவில் வைகுந்தநாதன் தன் னருகில் அவனுக்கிடந்தந்தருளிக்காப்பாற்றுவான். இராமநாமத்தை நிஜபக்தியுடன் பஜிக்குமடியார்கள் எவ்வெவைகளை விரும்புகின்றார் களோ அவ்வவைகள் சபலமாய்க் கைகூடும். இம்மை மறுமைப் பயன்களுங் கைகூடும். ஆகையால் இராமநாமத்தை பஜியுங்கோள் என்னுங் கருத்திசைத்துச்சொல்லி, அங்குள்ளவர்களோடு ஸ்வாமி கள் தாமுங் கைகளைத்தட்டிக்கொண்டு,

ஹரிவிட்டலா பாண்டு ரங்கா சரணம்
ஆதிமூ லப்பொரு ளானவா சரணம்
ஐவரைக் காத்த வமலா சரணம்
ஐவர் காதலே யாண்டவா சரணம்
பேய்ச்சி யுயிருண் பித்தா சரணம்
ஆய்ச்சி நெய்பா லருந்தினுய் சரணம்
அண்ட பிண்டத்துக் காதியே சரணம்
எண்டிசை யுந்நிறை யீசா சரணம்
அடியார்க் கருணிறை யன்பா சரணம்
செடியார் வல்வினை தீர்ப்பவா சரணம்
அழகுறு துளப வலங்கலாய் சரணம்
எழிலரி யாய்ப்பா ரிடந்தவா சரணம்
கமல வல்லிதன் கணவா சரணம்
இமையவர்க் கருடரு மிறைவா சரணம்
இருவினை தவிர்க்கு மெழிலே சரணம்
கருமத் துழலெனைக் காத்தருள் வாயே.

என்றிவ்வாறு ஆறுமையுடன் துதித்து, ஆநந்தபாவச மேலீட் டால் குணலைக் கூத்தாடத் தலைப்பட்டார். அப்போது, ஞாநதேவு

ஸ்வாமிகள் பண்டு லோகோபகாரமாகப் பாடிவைத்திருந்த ஹரி பாடம் என்னும் கீர்த்தனைகள் துக்காராம் ஸ்வாமிகளுக்குக்கியாபகம் வர அதுமுதல் அந்தக் கீர்த்தனைகளைப் பாடித் துதித்துக்கொண்டிருக்குங்காலத்தில், தேவாதியர், வைகுண்டநாதனே இவ்வாளிந்தியில் வந்து தங்கிக் கீர்த்தனைகளைப் பாடுவதாக நினைத்து, ஆநந்தம் அதிகரிக்கப்பெற்றவர்களாய் புஷ்பமாரி பொழிந்து, துக்காராம் செய்த பாக்கியம் நாமெல்லாருஞ் செய்யாமற்போனோமென்று தங்களைத் தாங்களே வெறுத்துக்கொண்டு, சத்துவகுணம் பிரசுரர்களாயிருந்தார்கள். ஸ்வாமிகளும், அவ்விரா மூன்றுஜாமங் கழிந்தபிறகு மங்களார்த்தி செய்து, கியாநதேவு சுவாமிகளுக்கு நமஸ்காரங்கள் செய்து, நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு, துவாதசி பாரணை தீர்ந்தபிறகு கியாநேசுவார் உத்தரவு பெற்றுக்கொண்டு அங்கிருந்தும் பிரயாணமாகி தேஹூகாமுக்கு வந்துசேர்ந்து முன்போல் பகவத்காரியங்களி லிருந்தனர்.

இங்கிவ்வாறிருக்க, சிஞ்சவடீ என்னும் க்ஷேத்திரத்திலிருக்கும் சிந்தாமணிதேவன் என்னும் பிராமணன், துக்காராம் ஸ்வாமிகளுடைய திருமேனியில் பறவை யினங்கள் அச்சமில்லாமல் சஞ்சரித்துக்கொண்டிருந்த சங்கியைக் கேள்வியுற்று, அதனைப்பரிசோதிப்பான் எண்ணி, தன்னுடைய சிஷியர்களில் ஒருபிராமணனை ஸ்வாமிகளைக் கையோடழைத்துக்கொண்டு வரும்படி யனுப்ப, அந்தப் பிராமணனும் தேஹூகாமுக்குவந்து, ஸ்வாமிகள் காலக்ஷேபத்திலிருக்கக்கண்டு நமஸ்கரித்துநின்று, தானும் அக்கோஷ்டியாருடன்கலந்து, தான்வந்த காரியத்தை மறந்தவனாய், மனமாதிகளொன்றப் பெற்று, மூன்றுநாள் வரையிலும் சொக்கியிருந்தான். அப்படி மூன்றுநாள் வரையிலும் சிஷியன் வரக்காணமையால் சிந்தாமணிதேவன் தானே தன்னந்தனியனாய்ப் பிரயாணப்பட்டு வந்துகொண்டிருக்கையில் துக்காராம்ஸ்வாமிகள்பிராமணனுடைய வரவை யறிந்து எதிர்நோக்கிப்போக, மார்க்கத்தில் இருவரும் சந்தித்து, ஒருவருக்கொருவர் வந்தந வழிபாடுகள் செய்துகொண்டு ஒரு விருக்ஷத்தின்கீழ் உட்கார்ந்துகொண்டார்கள். அப்போது சிந்தாமணிதேவர் துக்காதேவரைநோக்கி, சுவாமி! ஒரு கொல்லையில் தாணு புருஷ ரூபத்தையேற்படுத்திவைக்க, அதின்பேரில் பக்ஷிகளுட்காரு மேல் காற்றால் அத்தாணு அசையுமாகில் பக்ஷிகள் பயந்தோடிப் போவதை நாம் காணுகின்றோம். அப்படியிருக்க, பஞ்சபௌதிகத்தாலுண்டான தங்கள் தேகத்தின்மீது பக்ஷிகள் சஞ்சரித்துக்கொண்டிருந்தனவாகக் கேள்விப்பட்டு, மநமானது அதிசங்கைகொண்டு

அதனை விலக்கிக்கொள்ள விடைகொண்டேன். ஆதலால் அடியேனை ரக்ஷித்தருளவேண்டுமென்று பிரார்த்திக்கவும், அவருடைய மனோ வார்த்தியை யறிந்த ஸ்வாமிதுக்காராம் தம்முடைய திருமேனியைக் கத்திக்கொண்டு கீரிக்காட்ட,உள்ளேவெண்பஞ்சடைந்திருப்பதாய்ச் சிந்தாமணிதாஸருக்குத் தோன்றப்பட்டு, மநம் திகிலடைந்து, சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து திருவடிகளைப் பிடித்துக்கொண்டு, ஸ்வாமின்! உமது மகிமையறியாமல் இக்கேள்விகேட்டேன்; மன்னித்தருளவேண்டும்; தங்களுடைய திருமேனி இந்தஊன்கண்ணுக்கு மாமிச மேனியாய்க் காணவருகிறதன்றி வாஸ்தவாகாரத்தாலே அதுமாமிசச் சரீரமல்ல; தாங்கள் தான்பராபரவஸ்து;என்னைப்போன்றபாமரர்களை யீடேற்றும்பொருட்டு இவ்வுலகின்கண் திருவவதாரஞ் செய்து,திருவிளையாடல்கள் அநந்தமாடி வருகின்றீர். ஸ்ரீ கண்ணபிரானனவர், பாலப்பிராயத்தில் அசோதா தேவியானவர்கையுங் காலும் நிமிர்த்துக் கடாரநீர் பையவாடிப் பசுஞ்சிறுமஞ்சளால் ஐயன் நாவழிக்க அவ்வாயிலிருந்து வையகமேழுங் காட்டி யருளினதுபோன்றே அடியேனுக் கின்று காட்சி தந்தருளினீர். யானின்று கண்ட இக்காட்சி உலகினில் யார்காணப் பாக்கியஞ்செய்தார்? அடியேனுக்குத் திருவுள்ளமுகந்து இவ்வருமையான காட்சி தந்தருளினதுபோன்றே இன்னொரு அடியேனுடைய பிரார்த்தனையையுந் தலைக்கட்டி யருளல் வேண்டும். அந்தப் பிரார்த்தனையாவது—அடியேனுடைய குடிசைக்குப் பொன்னடி சார்த்தியருளல் வேண்டுமென்பதே. அப்படியே எழுந்தருளவேண்டும் என்று பலபலவாறு வேண்ட, ஸ்வாமிகளும் திருவுள்ளமிரங்கி அவரோடு பிரயாணமாகிப்போய், சிஞ்சவடியில் ஏற்பட்டிருக்கும் மடத்தையடைந்தார்கள்.

விதேகராகிய துக்காராம் ஸ்வாமிகள் தங்களூருக்கு எழுந்தருளினரென்று அங்குள்ள பிராமணர்களெல்லாரும் வந்து ஸேவித்து, கிருதார்த்தர்கள் ஆயினோமென்று சந்துஷ்டராய், பிராமண சமாராதநஞ்செய்வித்து, அன்றிராத்திரி காலக்ஷேபம்நடக்கச்செய்து ஆநந்தபரிதர்களாய்த் தாங்களும் விட்டல நாமத்தை பஜித்துக்கொண்டிருந்து, நான்குஜாமமானவாறே மங்களார்த்தி செய்து, பிரஸாதங்களை விநியோகப்படுத்தி, முடிந்தபிறகு காருண்ணியசிந்துவாகிற துக்காராம் ஸ்வாமிகள் திரும்பவுந் தேஹுகாமுக்கு எழுந்தருளி,சந்நிதாநஞ் சென்று, பகவானுக்குத் தீர்க்க நமஸ்காரங்களியற்றி,ததேகத்தியாந பாராயணராய்க் கீர்த்தநங்களைப் பாடிக்கொண்டிருக்க, அவ்வூர்ஜெநங்கள் ஸ்வாமி யெழுந்தருளிசந்நிதானத்தில்கீர்த்தனைகளைப்பாடிபஜனை செய்துகொண்டிருக்கிறாரென்று கேள்வியுற்று, கூட்டங்கூட்டமாய்க்

கோயிலுக்குட்சென்று, தங்கள் தங்கள் இயற்கைகளை மறந்தவர்களாய், ஆநந்தபாஷ்பம் பெருக அசைவற்று, பாண்டுரங்கா! பண்டரீநாதா! புருஷோத்தமா! என்று துதிகளைச் செய்துகொண்டிருந்தார்கள்.

மெய்யடியாரும், ஸருவேசுவரனுடைய திருவவதார ரூபங்களை உள்ளத்தில் தரிக்கவிட்டுத் துதித்துக்கொண்டு வரும்போது, தமக்கு ஸ்வாமியென்றுந் தாமென்னும் வேறுபாடான தோற்றமில்லாமல், தம்முடைய திருவுடம்பு விட்டலருடையதாகத்தேகப்பிரமரூபமென்னக் காண நின்றது. அதாவது—தானெனனுமதற்று,பாண்டுரங்கனாகத் திகழ்ந்தாரென்றபடி. இப்படியிருந்தும் ஆண்டானடிமை நியாயத்தால், பக்தி யோகத்தை வெளிபுறுத் திஸ்தாபிக்கும் பொருட்டு ஒரேசொரூபத்தில் பக்தனென்றும், தேவனென்றும் இருவகுப்பாய் விளங்கியது. இந்தப்பக்தியோகத்தால் சாலோகம் - சாமீபம் - சாரூபம் - சாயுஜ்ஜியம் என்னும் நான்கு பதங்களுக்குமேலாகிய பிரமாநந்தமென்னும் பதத்தைப் பெறலாம். நான்கு பதப்பிரயோஜநங்களுக்கு மேலானது பக்தியோகபதமென்று ஸ்ரீமத் பாகவதத்தில் உத்தவருக்குஸ்ரீபரந்தாமன் போதித்திருக்கின்றான். அதின்படியே, ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகளாகஅவ்வுத்தமரேயவதரித்து, ஸ்ரீஹரிகீர்த்தனைகளைச் செய்து, ஜெநநமரணாதி அவஸ்தைகளைப் போக்கி, காயத்தைப் பிரமரூபமாக்கி, பக்தியோகமே மேன்மையதென்று ஜீவர்களுக்கறிவித்து, பஞ்சகிருத்தியங்களையும் நடாத்தி யருளினார்.

சருவலோகநாயகனாகிய ஸ்ரீமந்நாராயணன், தனது அபாரமான கருணையிற்சிறுபாகம் அடியேன்மீது வரவிட்டருளி, தன்னுடைய குணநிஷ்டையில் மிகுந்த பரமமூர்த்தியாகிய ஸ்ரீமத்துக்காராம் ஸ்வாமிகள் வைகுண்ட திவ்வியநகரத்துக்கு எழுந்தருளும்படியான கட்டமாகிற பதினேழாவது அத்தியாயத்தை யடியேன் மூலமாகக் கேட்போர் செவிக்கினிய செஞ்சொல்லாக விளங்குவான் வெளிபுறுத்துமாறு அவனுடைய செஞ்சரணைச் சரணடைகுதும்.

பதினறுமத்தியாயம் முற்றும்.

ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீ பாண்டுரங்கபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமத்

துக்காராம் சுவாமிகள் சரித்திரம்.

பதினேழாமத்தியாயம்.

காப்பு.

உலகமதிற்சராசரத்தி னுள்ளுறைவான்றன்னை
ஒப்பிலுருவோடருவா யொளிருவான்றன்னை
பலனுறமெய்யடியர்தமைப் பாலிப்பான்றன்னை
பக்திதந்தருளளிக்கும் பராபரன்றன்னை
ஞாலநலமிலாதகுணக் குன்றாவான்றன்னை
குவலயமெலாந்துதிக்குங் கோபாலன்றன்னை
நலமுறவேயென்னுளத்தி னண்ணினான்றன்னை
நான்றொழுவனருளி னன்மைபெறுமாறே.

ஸ்தோத்திரங்கள்.

ஸ்ரீமத் பரமபதநாதனுடைய திருவடியிலுதித்து, ஆகாயத்தினின்று பெருக்கெடுத்துவராநிற்குங்கங்கா தீர்த்தத்தைவற்றவைத்து பூமிமுழுவதுஞ் சுத்திசெய்து, அந்தத் தீர்த்தத்துக்கு மாறாகஅமுதத்தை நிரப்பி, உலகத்தின்கண்எழுவகைத்தோற்றத்திலும்எண்பதினான்குலக்ஷ பேதங்களாயிலகு ஜீவராசிகளுக்கு அருந்துவான் ஆதாரஞ் செய்தாலுஞ் செய்யலாம். பகவானுடையவும் பாகவதர்களுடையவும் மகிமைகளை முடிவுறக் காணுவதரிது, பூமியின் கண்ணுள்ள



பெருமாள்
துக்கா
தேவர்கள் புஷ்பமாரி பொழிதல்
துக்கா
துக்காயாமபதத்தில் இருந்து வஸ்திரமும் பிரமணபோ னம்
தானமும், இந்தி யனி
கரையில்நின்று
அனுப்பியது
விடோபா
தானயா கோஷ்டிகள்.
(நாராயணதேவு.) குழந்தை. அதன்பக்கம் ஸ்திரிகள்.

திருணவஸ்துக்களைக் கணக்கிட்டாலு மிடலாம். ஸ்ரீஹரியின் குண நன்மைகளை யெண்ண வேதங்களாலு மாகா. சமுத்திரத்தில் பிடிப்பின்றி நீஞ்சி யக்கரை சேர்ந்தாலுஞ் சேரலாம். க்ஷிராப்தி வாசனுகிய லக்ஷ்மீபதியினுடைய கீர்த்தியை வருணிக்க முடியாது. வாயுவை மூட்டையாகக் கட்டினுலுங் கட்டலாம். வாமந மூர்த்தியினுடைய திருவடித் தாமரையை யுள்ளத்தி விருத்தி யலையுமநத்தை யகத்தடக்கமுடியாது. வநத்திலிருக்கும் விருக்ஷத்தினிலைகளை யெண்ணினுலு மெண்ணலாம். வைகுண்டபதியின் லீலாமிர்தங்களை யென்னுவால் எண்ணலாகாது. பக்தவற்சலா! உனது கீர்த்தி யளவிடப்படாது. வித்துவான்கள் தங்கள் தங்களுள்ளங்களுக்குத் தெளிவாயிருந்தவரையிலும் ஸ்மரித்திருக்கின்றுர்கள். ஆதிசேஷனும் உன்னுடையபிரபாவத்தை யநந்தவிதங்களாகத்துதித்திருக்கின்றுர். அவருக்கும் உன்னுடைய பிரபாவங்களரிதென்று பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றேன். அவ்வாதிசேஷன் உன்னுடைய குணங்களுக்கு முடிவில்லையென்றெண்ணி முடிவறுநற்குணங்களையுடைய உன்னையே சதா தம்முடைய திருமேனியின்மீது ஆரோகணித்து வைத்துக் கொண்டிருக்கின்றுர். நான்குவேதம், ஆறுசாஸ்திரம்,பதினெண்புராணம் உன்னுடைய பிரபாவங்களிற்சிலவறியும்; அவையும்முடிவையறிவிக்கக் காண்கிலேன். உலகி லுயிர்கள் சாஸ்திரங்கள் கூறுமவற்றிற் சில கற்று, தங்கள் சம்மதாநுசாரந் துதித்து வாழ்கிறுர்கள். எல்லா மதங்களுக்கும் ஆதாரனுகவும் அல்லாதவனுகவும் இருக்கின்றனை. அப்படிப்பட்ட வுன்னை ஆதாரமாகப் பற்றியவர்களில் பேதையேனுமொருவனுய், எனது மூடமதியால் துதிக்கலாயினேன். யான் சுத்த மூடனென்பது உனக்கு நன்றுகத்தெரியும். இப்படி மூடத்தநத்தால் அடியேன் நின்னை யேத்தாநின்றுலும் அவ்வடியேனுடைய வேத்துதலை யங்கீகரித்தருளல் வேண்டுமென்று பணிகின்றேன். நீ ஆய்க்குடிக்கொழுந்தா யவதரித் திருக்கையில், உன்னுடைய திருவிளையாடல்களுக்கு நிறமாமாறு வநத்தின் உதிர் புஷ்பங்களையும் இலைகளையுந் தொடுத்து மாலையாக்கி உன் திருக்கழுத்தில் கோபபாலர்களிட, அம்மாலையை இரத்திநமாலையாகப்பாவித்து, அதனைஸமர்ப்பித்த இடைப்பிள்ளைகள்மீது கருணைசுறந்து காத்தருளினதுபோல்,அடியேனனது தாஸராகிய ஸ்ரீமத்துக்காராம் ஸ்வாமிகளுடைய பிரபாவங்களை முற்றுறவறிந்து தெரிவிக்கக்கூடிய புத்தியில்லாவிடினும், அல்ப மதியினுலுண்டாகும் அக்கேள்வியி னளவாயாவது தெரிவித்து ஆநந்தமுறலாமென்றுஉன்னுடையசாரணரவிந்தத்தைச்சாரணமடைந்தேன். அதனை யங்கீகரித்தருளல்வேண்டும், சிறுவர்களுடைய மழலைச் சொற்களைக்

கேட்டுத் தாய்தந்தைகள் மநம்பூரிப்பதுபோய் அடியேனுடைய குழறுபாடுகளைக் கேட்டு மகிழ்வடைந்தருளுவது உனக்குக் கடனாகும். இப்பக்தசரிதமானது உனக்கின்பப்படுமாகில் மற்ற கேட்குமவர்களுக்கும், படிக்குமவர்களுக்கும் இன்பமுறும். ஆதலால், திருக்கண்களின் கடைநோக்கால் நோக்கியருளல் வேண்டும் தேவர்பிரானே! ஸ்ரீமத்துக்காராமஸ்வாமிகளுக்கு, உனதருளென்னுஞ் சத்தியைப்பிரஸாதித்து, ஜநந மரணமாகுங் காட்டை வேருடன் வெட்டுவித்து, அவர்தம்மைப் படிகமாக்கி, உனக்குச்சமாநமான யோக்கியதையைத் தந்தருளி, தந்தேகத்தைப் பிரணவாகாரமாகச் செய்தனை; நீயங்ஙன் செய்தது எற்றுக்கெனில்:— இவ்வுலகத்தில் ஆத்துமாக்கள் சுத்த ஆக்கியாநப் பிராப்பியர்களாய் வசித்துவாழ, அவர்களைச்சீர்ப்படுத்தி, உன்பாலன்பு மீறுவித்து, தன்னடியாக மோக்ஷ சாம்ராஜ்ஜியத்தில் சேர்ப்பித்தற்கென்றே தெற்றெனப் புலப்பட்டது. ஒப்புயர்வில்லாவொரு தனி முதலே! என்றின்னனவாகப் பல துதிகள் துதித்து, நூலினைச் சொல்லத் தொடங்குகின்றார்.

கீழிற் சொன்னபடி, ஸ்ரீமத்துக்காராம் ஸ்வாமிகளைப் பரீக்ஷிக்குமாறு சிந்தாமணி தாஸர் தேஹூகாமுக்கு வந்து, தடத்தில் ஸ்வாமிகளைச் சந்தித்து வணங்கி, அவ்விடத்தில்தானே யுட்கார்ந்து சந்தேகங்களை ஸ்வாமியால் தெளிவடைந்து தனதூருக் கழைத்துக்கொண்டு போ யுபசரித்தனர். அந்தச் சமயத்தில் தானே மற்றொரு சந்தேகத்தையும் ஸ்வாமிகளிடத்தி லிருந்து தெளியப் பிரார்த்தித்தார். அதாவது—

சுவாமின்! எனதாசாரிய மூர்த்தியே! தேவர் பாஞ்ச பௌதிகமான சரீரத்தைப் படைத்திருந்தும் அப்பஞ்சபூதாமிசமயமான காரியமொன்றுந் தேவரிடத்திருக்கக் காண்கிலன்; அவை லயமாயிருக்குமெனினும் திருஷ்டிக்கு திருசியமாகா நின்றன; இவற்றின் தொகுதியிவ்வாறென அடியேன் புந்திக் கெட்டிலது; இவ் விசேஷங்களை யடியேனுக்குத் தோற்றுமாறு கிருபை செய்தருளல் வேண்டும் என்னையாண்டானே! என்று பிரார்த்திக்க பிரபந்நாக்கிர கண்ணியரும் திருவுள்ள மிரங்கி யருளி, யான், எழுவகைத் தோற்றத்தில் எண்பதினான்குலக்ஷ ஜீவபேதங்களிலுங் கீழ்மை பட்டவன்; அணுவுக்குஞ் சிறுமை பட்டவன்; இப்படி அதியல்பனேனும் என்னுடைய ஸ்திதி யெவ்வளவினதென்று விசாரிக்கப்புகின் ஆகாயத்திற்கு மேலிட்டிருக்கின்றேன்; பஞ்சபூதமயமான சரீரத்தையும், பவப்பிராந்தியையும் ஆகாரமாகவிழுங்கியிருக்கின்றேன்; திருசியம் - திருஷ்டா - தரிசநம் ஆகுமிம்மூன்று டிகளையும் நிவர்த்தித்து, பரமாத்துமஜோ

தியே இக்கடத்தில் பிரகாசித்துக்கொண்டிருப்பதன்றி வேறன்று; இருக்கிறதுதா னெதுக்கெனில் உபகாரத்துக்கு ஓர் சத்தரூபமாயிருக்கின்றேனித்தனை என்றுறைத்தருளினார். இவ்விசேஷ அர்த்தங்களைக்கேட்ட சிந்தாமணி தேவர், மெய் புளகிக்கப்பெற்று, இவர் மானிடவரல்ல; தேவதேவனாகிய ஸ்ரீமந்நாராயணனே இவ்வுருவுடன் ஆவிர்ப்பவித்தருளினான் என்று நிச்சயித்துக்கொண்டவராய், நான் பூருவம் அநந்த கற்பகாலந் தவஞ் செய்திருந்ததின் புண்ணிய விசேஷங்கள் திரண்டு இந்த ஜெந்மத்தில்முடிபோடப்பட்டிருந்தமையால் இந்தப் பரமாத்தும சொரூபருடைய திருவடிகளைக் தரிசிக்கநேரிட்டது; நான்செய்த பாக்கியமே பாக்கியம்! என்று பிரமாநந்த பரவசமடைந்து, அன்றுமுதல் பக்தியுத்தராய் இனிது வாழலாயினார்.

இது நிற்க, ஸ்ரீ வைகுண்டத்தில் சாயுஜ்ஜிய பதவியிலிருக்கும் ஜீவன் முக்தர்கள் முன்னிலையில் பகவானனவர் சொல்லத்தொடங்குவதாவது—உத்தவன் என்னருகிலில்லாதது எனக்குத்திருப்தியாகவில்லை. மிருத்தியுலோகத்து ஜனோத்தாரணார்த்தம்யானேயனுப்பினேன். அவன் எனது ஸகுணத்தின்பேரில் பிரியம் வைத்து,ஸகல லோகவாசிகளையும் ஹரிகீர்த்தனைகளைச்செய்யஸ்தாபித் திருக்கிறான். என்னுடைய நாமப்பிரபாவத்தாலே கலிபுருடனுங் காலனும் துக்காராமருடைய ஆக்கினையிலிருக்கின்றார்கள். அவரை வரவழைக்க உங்களில் யாவர் வல்லவர்? அணுவளவும் காலனுடையசக்தி அவனிடத்திற்செல்லாது. அவனுடையயெண்ணமும் மிருத்தியு லோகத்திலேயே ஆத்துமாக்களுக்குப் பக்திமார்க்கம் போதித்துக் கடைத்தேற்றுவிக்கவேணு மென்பதேதவிர இங்குவரக்கிடையாது. அவனையெவ்விதமாக இவ்விடத்திற்கு வரவழைக்கலாம்? என்று சொல்லலும், முக்தர்களெழுந்து, ஸ்வாமியினுடைய திருவடிகளில் வீழ்ந்து சேவித்து நின்று, ஸ்வாமி-தேவதேவா! துக்காராமருடைய மனது எந்த ஜெநக் கூட்டத்தார்மேல் தங்கியிருக்கின்றதோ அந்தக் கூட்டத்தாரால் தானே வெறுப்படையும்படியாய் ஏதாவதொரு தந்திரஞ் செய்தால் அவரிப் பரந்திவியை நாடுவர்; ஆதலால் தேவரே யோருபாயத்தை யோசிக்கக் கடவது என்று பிரார்த்திக்கக் கண்டு ஜெகதீசன் அவ்வுரைக் கிசைந்தருளினார்.

இப்பூலோகத்தில், லோஹோகாம் என்னுங்கிராமத்திலிருக்கும் பிரம - க்ஷத்திரிய - வைசிய - சூத்திரர்களென்னும் நாற்பாற் குலத்திலுமுதித்த ஸ்திரீ புருஷர்களனைவரும் துக்காராம் ஸ்வாமிகளிடத்தில் கீர்த்தந பிரசங்கங்களைக் கேட்டு, தங்கள் தங்கள் தேகஸ்திதிகளை மறந்து வாழுமவர்களை பகவானறிந்து, இவர்கள் இகசுகம் - பர

சுகமென்னும் இரண்டையும் வெறுத்தவர்க ளாகின்றார்கள்; இவர்களுக்கு இம்மைச் சுகத்தில் துன்பமுண்டாமாறு செய்தால்தான் மறுமை யின்பத்தி லிச்சை பிறக்கும்; இவர்க ளனைவரையும் இச்சமயந்தான் நம்முடைய ஸ்தாநத்துக்கு அழைத்துக்கொள்ள வேண்டியது என்று திருவுள்ளத்தில் யோசனை கொண்டிருக்கையில், இங்கு லோஹோரா கிராமவாசிகள் சிலர் தேஹூகாமுக்கு வந்து, ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகளைச் சேவித்து, பல்வகைப் பிரார்த்தனைகளைச் செய்து, அவரைத் தங்கள் கிராமத்துக்கு அழைத்துக்கொண்டு போய், ஒரு மாதகால பரியந்தம் யதாரீதியாகக் காலக்ஷேபத்தி லீடுபடுத்தி, தாங்களும் ஆநந்த பரிதர்களாய் ஜகந்நாதனுடைய திருக்கலியாண குணங்களால் ஆநந்தமேற் றிருந்தார்கள்.

அந்தத் தருணத்தில் பகவானுடைய சங்கல்பத்தாலே வேற்றரசன் படையெடுத்துக் கொண்டு வந்து, இந்த லோஹோராகாமில் புகுந்து, கிராமவாசிகளுடைய சொத்துகள் யாவற்றையுங் கொள்ளையடித்துக்கொண்டு போய்விட்டான், அப்படி அந்தக் கிராமவாசிகளுடைய சொத்துக்களெல்லாங் கொள்ளைபோயும் அவர்கள், துக்காராம் ஸ்வாமிகளுடைய தத்துவ போதநத்தால் மநோநிச்சயம் பெற்றிருப்பவர்களாதலால், தங்களுடைய சொத்துக்கள் போனமைக்குத் துயர் கொள்ளாமல் வெறுப்படைந்தவர்க ளாகவே யிருந்தார்கள். அவர்களில், பிரபஞ்ச வாழ்க்கையிலும் பரமார்த்தத்திலும் மநம் பற்றியிருந்த சிலர், இனி யெவ்வாறு ஜீவநஞ் செய்யலாமென்று விசநமுற அவர்களைப் பார்த்து தாஸர், அன்னிய தேசத்தரசன் படையெடுத்துக்கொண்டு வந்து கொள்ளையாடிப் போனதைக் குறித்து விசனப்பட வேண்டாம். தேவாக்கினையால் நடக்க வேண்டியவை நடந்தே தீரும்; அது விஷயத்தில் விசநமுறுவதில் பயனில்லை; நாம் நம்மதென்று அபிமாநித்திருக்குந் தேகமே நம்மதல்ல; புறம்பாயிருக்கும் தந - கநக - வஸ்து - வாகநாதிக ளெப்படி நம்மதாகும்? நீங்கினவற்றைக்குறித்துச் சஞ்சலப் படவேண்டாம்; நம்மைவிட்டு நீங்கினவையெல்லாம் பகவானிடமடையும். அஃதெவ்வாறெனில்—நமக்கு நம்முடைய பிராரத்துவத்தின்படி ஆதியில் தநதான்னியங்களையளித்தவன் கடவுளே என்றெண்ணி, அவைகளைஸத்விஷயத்தில்விநியோகப் படுத்திக்கொண்டு வரவேண்டியது; அப்படிச்செய்யாமல் உலோபத்தால் பத்திரப்படுத்திக்கொண்டு வருவதால் அவை எவனளித்தானோ அந்தப் பகவானையே சேரும்; கொடுத்தவன்றானே என்ன காரியத்துக்காகக் கொடுத்தனனோ அக்காரியம் நடவாவிட்டால் அவைகளை வரவழைத்துக்கொள்ளுகிறான், அதற்குதான் சகஜ சேவை யென்று

பெயர். அக்கினி பயம், சோர பயம், இராஜ பயம், இவற்றால் படைத்த தந தான்னியாதி சொத்துகள் நீங்குமாகில் நாராயணனுடைய கட்டளை யென்றே நினைக்க வேண்டியது. பிராணி, தன்னுடைய சுத்தமான எண்ணத்தால் தன்னுடைய சங்கல்பங்கள் யாவற்றையும் பகவானுக்கு அர்ப்பிதப் படுத்துவதே அவனுக்குப் பிரீதி. பொருள் செலவு செய்து அவனைத் தொழுதாலும், தநகநக வாகநாதிகள் அவனுக்களித்தாலும், அவற்றால் அவனுக்கு ஒருபோதும் இஷ்டம் பிறவாது. சுத்த சங்கல்பஞ் ஞானமுடையவனாய் பகவானை யாராதித்து வருவானேல் அவன்மீதுதான் பகவானுக்குப் பிரிய முண்டாவது என்று போதித்து, உடனே பகவந்நாமத்தை ஸ்மரணை பண்ணத் தொடங்கி, ஹரிஹரீ-பாண்டுரங்க நாதா! இனி இந்த பூலோகத்தில் என்னை வைக்க வேண்டியதில்லை; வைப்பீராகில் உம்முடைய நிஜபக்தர்கள்மீது ஆணை யிருக்கிறது என்றுரைத்து, தேஹூகாமுக்குத் திரும்பி வந்துவிட்டனர்.

லோஹோ கிராமவாசிகள் தங்களுடைய சொத்துகள் கொள்ளை போனபிறகுகேவலம்நிராசையைப்பற்றி, அஸ்திரமானசம்பத்துகள் நீங்கினாலும் நீங்கட்டும் ஸ்திரமான கீர்த்தநாநந்தங்கிடைத்தால் அதுவே போதுமானதென் றெண்ணி தேஹூகாமுக்கு வந்துவிட்டார்கள். தேஹூகாமுக்கு அக்கம் பக்கங்களிலிருக்கும் கிராமங்களில் வசிக்குமவர்களும், தூரதேசங்களில் வசிக்குமவர்களுங் கூட தேஹூகாமுக்கே வந்து, திநதிநம் துக்காராம் ஸ்வாமிகளுடைய திவ்வியதரமான கீர்த்தநாரூப காலக்ஷேபத்தில் ஈடுபட்டுக்கொண்டு, ஆநந்த பரிதர்களாயிருந்தார்கள். அந்தத்தருணமதில், சந்த ஜெநங்களாய், தம்புரு-மிருதங்கம் - தாளம் வீணை முதலியவற்றின் சுரங்களுக்கு இனிமையாக ஸ்வாமிகளுக்குப் பின்பாடல் பாடும் பதினான்கு பிரியசிஷியர்களும், ஸ்வாமிகள் கீர்த்தனைக் காரம்பித்து இன்ன கீர்த்தனை இனிய கீர்த்தனை யென்றில்லாமல் தமதுள்ளத்தில் தோன்றியபடி யெல்லாம் பாடிக்கொண்டுவர, அவை யாவும் விசேஷ அர்த்தங்களும், நல்லிசைகளுந் தங்கினவையாகி யிருந்தமையால் அவற்றை, மற்றுமங்கு வந்திருந்த பல வித்துவான்களோடு எழுதிக் கொண்டார்கள்.

இங்கிப்படி நடந்தேறி யிருக்க, வைகுண்டத்தில் வைகுண்டநாதனான பரவாசுதேவன் ஸ்ரீதேவியைப் பார்த்து, நான் பூலோகத்திற்கு போய், துக்காவை யழைத்துக்கொண்டு வரவேண்டுமென்று சொல்ல, அந்த ஜகந்மாதாவும் தமது திருப்பவளச் செய்ய வாயைத் திறந்து, நமது தூதர்களிடம் விமாநத்தைக் கொடுத்தனுப்பி, துக்கோபாவைத் தன் திவ்விய தேகத்துடன் அழைத்துக்கொண்டு வரும்

படி கட்டளை செய்யும் என்றருள, பகவான் சொல்லலுற்றார் — அக் கோபாவை திவ்விய தேகத்துடன் கொண்டுவருவது சாமானியத்து வம்; அவனுடைய பிரபாவத்திற்கு அது கூடாது; அவனுடைய தூலதேகத்துடனே தானே அவனை இட்டுக்கொண்டுவர எனக்கு மிகுதியு மிஷ்டம். ஏனெனில், அவனுடைய பூருவ விருத்தாந்தஞ் சொல்லக்கேள்:—நான் கிருஷ்ணனாயவதரித்தபோது இவன் உத்தவ பக்தனாக அவதரித்திருந்தான். அப்போது சகுண ரூபமாக என்னை யாராதித்துக்கொண்டு சதா என்னுடன் கூடவேயிருந்து, நான் பரந் தாமத்துக்கு மீளவு மெழுந்தருளியபோது என்னைப் பிரியகில்லாமல் என்னுடன் கூடவே வரவேண்டுமென்று ஆவல் கொண்டான். அப் போதுயானவனுக்கு பாகவததரும சந்தேகங்களைவிளங்கச்சொல்லி, ஸ்ரீ பதரிகாச்சிரமத்துக்கு அனுப்பினேன். பிறகு கலி புருஷனு டைய வீறுபாட்டால் உலகத்தில் பக்தி நிஷ்டைகள் குறைந்து, யக் கிய - தியாக - தவங்களும், பாகவத தருமங்களும் குறைந்து, துஷ் கிருத்தியங்கள் மேலிட்டு, தான்தோன்றி மதநிஷ்டர்களாய், பகவத் பக்திலேசமு மில்லாமலிருக்கக் கண்டு அவ்வுத்தவனுக்கு, உலகத்தில் மநுஷியனா யவதரித்து, கீர்த்தனைகளாலே உலகத்தை வாழ்வித்து, நஷ்டமான பக்தி நிஷ்டை, யக்கிய-தியாக-தான-தவங்கள், பாகவத தருமம் முதலியவற்றை விருத்தியாக்கி வரக்கடவதென்று திவ்வி யாஞ்ஞையிட, அவனும் பயந்தவனாய் மீளவுங் கர்ப்பவாசம் பண்ண மாட்டானென்று வெருவ, அப்போது யான் இவனை அயோநி சம்பந் தனாக முத்துச்சிப்பியில் உதிக்கச் செய்து பீமாநதி தீரத்திலிருத்தி னேன். அந்தத்தருணத்தில் தாமாசெட்டி என்னுந் தையக்காரனும், அவன் மனைவியும், என்னைக்குறித்து மதலை வேண்டுமென்று அநந்த நாளாய்பண்டரிபுரத்தில்தியாநித்துக்கொண்டிருக்க, அவர்களுடைய சொப்பநத்தில் நான் தோன்றி, பீமாநதிக்கரையில், முத்துச்சிப்பி யிலிருந்து ஒரு புதல்வன் உங்களுக்குக்கிடைப்பான்; அவ்விடத்திற் குப் போங்களென்று ஆஞ்ஞாபிக்க, அவர்களவ்வாறே விடியோ ரையெழுந்து நதிக்குப்போய்நீராட்டமாடிக்கொண்டிருக்கையில் ஒரு முத்துச்சிப்பியுடன் குழந்தை மிதக்கக்கண்டு, மிகுஅவாவுடன் அக் குழந்தையை யெடுத்துக்கொண்டுவந்து தன் மனைவியின் கையில் கொடுக்க, அந்தம்மாளுங் குழந்தையை யேந்திக்கொண்டு உபலாலிக் கத்தொடங்கியதே முலைகளிலிருந்து பால் சோர்ந்து பாயக்கண்டு சந்தோஷராய் குழந்தைக்கு ஊட்டிவளர்க்க,பன்னிரண்டாநாள் நாம தேவு என்று நாமகரணஞ் செய்து நானே கூப்பிட, அதுவே நிரூபக மான பெயராய்க்கொண்டு நாளொருமேனியும் பொழுதொருவண்

16047

ணமுமாக வளர்ந்துகொண் டிருக்கையில், ஏழாவது வயதில் அவன் பிரத்தியக்ஷத்தில் எனக்குச்சாதமூட்டினான். பண்டரீபுரத்தில்யான் புண்டரீகரென்னும் பக்தருக்காகச் சந்நிதிகொண்டிருக்க, அதையறியாத கருமப் பிரஷ்டர்கள் சிலர் பாஷாண மூர்த்தி யென்று வழங்கி வந்தார்கள். அவர்களுடைய அவ்வழங்குப்பாடு, நாமதேவு ஏழாவது வயதில் எனக்கூட்டிய அந்நத்தால் நீங்கிற்று. இவ்விதமாக நாமதேவால், நமக்கு அநந்த சம்மாநங்கள் நடந்துகொண்டிருந்தன. ஒரு சமயத்தில் ஞாநதேவர் என் முன்னின்று, நாமதேவை யாத்திரையழைத்துக்கொண்டு போகிறேன், உத்தரவு தரவேண்டு மென்று கேட்க, யானும் மநது கலங்கிச் சற்றுநேர மௌநமாயிருந்து, பிறகு விதியில்லாமல் அனுப்பி வைத்தேன். இருவரும் பிரயாணப்பட்டு, அஸ்திநாபுரியை யடைந்து, கீர்த்தனைகளால் பாடிக்கொண் டிருக்கையில், அங்குள்ள அவிந்தர்கள் தடுத்து, கோவினை யறுத்து எதிரில் வைத்து, இதை எழுப்பித்தரவேண்டுமென்று போராட, இவர்களும் அந்தப் பசுவை மூன்றாவதுநாள் எழுப்பிக் கொடுத்து, அவர்களையும், அவ்வவிந்தர்களுடைய அரசனையும் அடிமைகளாக்கிக் கொண்டு அவர்களுக்கு வைஷ்ணவ சிந்நங்களை யணிவித்து, துர்க்குணங்களைப் போக்கடித்து சாதுக்களாக்கி வைத்தார்கள்.

10919

இது வன்றியில், மாறுவாடி தேசத்திலும் அவ்வாறே ஸ்ரீ ஹரி கீர்த்தனைகளைப்பாடிபக்தியையேஸ்தாபித்துக்கொண்டு வரும்போது, ஒரு வெளிப் பிரதேசத்தில் நாமதேவுக்குத் தாகவிடாய் தோன்ற, அதை யறிந்த கியாஞோபா நமக்கெதிரில் கூபமொன்று தோன்றுகிறது; பக்ஷிரூபங் கொண்டு நான் போய் ஜலம் மொண்டுவருகிறேன் என்ன, அது நாமதேவுக்குச் சம்மதமில்லாமல் என்னை நோக்கித் துதிக்க, நான் நான்கு மைல் ஆழமுள்ள கிணற்றின் நீர் பொங்கி வழியச் செய்தேன்; அந்நீரின் பெருக்கை யிருவருமறிந்து சந்தோஷித்தவர்களாய், அதில் சந்தியாவந்தநாதி நித்திய கருமங்களை முடித்து, தாகவிடாய்த் தீர்த்துக்கொண்டு, ஆநந்தபரவசர்களா யங்கிருந்தே கீர்த்தநங்களைப் பாடி யென்னை ஸ்துதித்து, அந்நாட்டாரெல்லாருக்கும் என்னுடைய பெருமைகளையும், குணாநுபவங்களையும் சந்மார்க்கத்தையும் போதித்துக் கிருதார்த்தர்களாகச் செய்தார்கள்.

பிறகு அந்தக் கேணி யென்றென்றைக்கும் பெருக்கெடுத்த வண்ணமே, பசுபக்ஷியாதிகளுக்குங்கூட உபயோகமாய்க் கொண்டு வரும்படி பூரணகடாக்ஷம்பண்ணி, அங்கிருந்தும் ஆவடிதேசத்திற்கு வந்து, சிவராத்திரி திநம் நாதநாதீசுவரன் சந்நிதானத்துக்கெதிரில் நின்று பஜனை காலக்ஷேபங்களைச் செய்துகொண்டிருந்தார்கள்.

அதைக் கண்ட அவ்வூரார் பெருபெருத்த கும்புகூடி அவ்விருவரை யுஞ் சூழ்ந்துகொண்டார்கள். ஆலயத்திற்குள் பிராமணர் முதலான வர்கள் போவதற்கும், அபிஷேக சாமான் முதலிட்டவை கொண்டு போவதற்கும் இடமில்லாமலிருந்தது. அப்போது சில பிராமணர்கள் முனைந்து, வைஷ்ணவர்களாகிய உங்களுக்கு இந்தச் சிவாலயத்தில் என்ன காரியம்? தடத்தை ஏன் மறைத்துக்கொண்டீர்கள்? போங்க ளென்று, தாமதகுணப் பிரசுரர்களாய்க் கோபாவேசமாகச் சொன் ஞர்கள். அதைக் கேட்ட இருவரும் சிவாலயத்துக்கு மேற்புறத்திற் சென்று பஜிக்கலாயினர்கள். நாகநாதேசுரரும் தம் பரிவாரங்களுட னும் ஆலயத்துடனும் இவர்கள் நின்றவிடத்திற்குச் சரியாய்த் திரும் பிக்கொண்டனர். அதை யறிந்த எல்லாரும் பயமும் ஆச்சரியமு மடைந்து, மற்ற அவ்வூராருடனே அவர்களைச் சேவித்து, அன்று முதல் ஹரிநாம சங்கிர்த்தந பாராயணர்களாய், பேற்றுக் குரியவர் களா யினிது வாழ்ந்தார்கள். இருவரும் அநேக தேசங்களிற் சென்று பலகோடி ஆன்மாக்களைத் திருத்துப்பாடு செய்து, பக்தி யோகங் களைப் போதித்து, தன் ரூபமாக வாழச் செய்து, தங்கள் நாடுவந்து சேர்ந்தார்கள்.

ஒருக்கால் நாமதேவின் தாயார், தன்னுடைய சமுசார துக்கங் களை யென்னிடம் முறையிட, நான் நாமதேவு இல்லாத வேளையில், ஒரு பொதி நிறைந்த மோராக்களை தரும தேவதை வசமாக அவன் மனைவி ராஜாபாய்க்குக் கொடுப்பித்தேன். இந்தச் சங்கதியை நாம னறிந்து, பையுடன் இழுத்துக்கொண்டு வீதிக்கு வந்து போமவர் வருமவர்களுக் கெல்லாம் சூரையாகத் தானமளித்துவிட்டான். கியா னேபாவுடன் யாத்திரைக்குப் போகாமுன் நாமதேவு காலக்ஷேபஞ் செய்துகொண்டிருக்கையில் அச்சபையிலுள்ள சாதுக்களறிய, வால் மீகர் ஸ்ரீமத்ராமாயணத்தைச் சதகோடிகவிகளாகச் செய்தார்; நான் சதகோடி அபங்கங்களாகச் செய்வேன் என்று உறுதிகூறி, அவ் வாறே அந்தந்த தேச பாஷைகளிலே அபங்கங்களைப் பாடிக்கொண்டு வந்தான். அவன் செய்த கவிகள் மனுஷியர்களால் கணக்கிட்டு கோடி தொண்ணூற்று நான்கு முடியா. நானே கணக்கிட்டுப் பார்த் ததில் தொண்ணூற்றிஞன்கு லக்ஷங் கணக்ககப்பட்டது. இவ்வள வும் என்னைக்குறித்துக் கஷ்டப்பட்டவனையான் வைகுண்டத்துக்குக் கொண்டுவரவில்லை. எற்றுக்கெனில், சதகோடி அபங்கங்களைசெய்வே னென்று பிரதிஜ்ஞை செய்ததில் ஐந்துகோடி ஐம்பத்தொரு லக்ஷம் பாக்கி யிருந்தபடியால், அவனை மறுபடியும் மிருத்தியு லோகத்தில் துக்காராமனக அவதரிக்கச் செய்து, அவனல் அக்குறை பூரண

மாக்குவித்தேன். பக்தி யோகரூபமான நாமசங்கீர்த்தநத்தாலே அவனுடைய காயமானது பிரமசொரூபமுடையதாயிற்று. உலகத்திலெங்கும் பக்தியோகத்தை ஸ்தாபித்து, யாவருமாநந்த பிரம ரசாயநத்தை யுண்ணும்படிச் செய்து வைத்தான். இவனுக்குக் காலனுடைய சத்தே கிடையாது. ஆதற்பற்றி, ஜகத்பிரசித்தமாக இவனை தேகத்துடன் தானே கொண்டுவரவேண்டியது என்று, நித்திய சூரிகள் முன்பாகப் பிராட்டியாரிடஞ் சொல்லியதை, அங்குள்ள முத்தர்கள்கேட்டு மகிழ்வுடன் பகவானைத்துதித்து, ஜெயவிஜயீபவ! என்று மங்களங்கள் பாடினார்கள்.

உடனே சந்தஜந சமூகங்களுடன் லட்சுமீதேவி சமேதனாய் பகவான், பங்குனிமாதம் சுக்கிலபக்ஷம் ஏகாதசியினன்று தேஹூகாமில் ஆவிர்ப்பவித்து, துக்காராமரைக்கண்டு ஆலிங்கநம்செய்து நீ வைகுந்தநன்னகரில் இல்லாமையைப்பற்றி அந்நகர் சூனியப்பிரதேசம்போலிருக்கிறது; அங்கு யான் தங்கக்கூடவில்லை; ஆகையால் உன்னை யழைத்துக்கொண்டு போகவந்தேன் என்று பிரஸாதிக்க, தாஸரும் தீர்க்கமாய் நமஸ்கரித்து, அசைவறநின்றுக்கொண்டிருந்தார்.

ஜெகந்மாதாவாகிய ஸ்ரீதேவி தேவர்பிரானை நோக்கி, "பூருவம் கியாநதேவர் சமாதியடையுந் தருணத்தில், வைகுண்டபுரத்திலுண்டாயிருக்கும் நம்முடைய யெல்லா ஐசுவரியங்களையுங் கொண்டுவந்து, பாகவத சமூகங்களுடன் மூன்றுநாள்வரையிலும் ஆநந்தம் நிறம்பிய உற்சவங் கண்டருளச்செய்தோம் எப்படியோ அப்படியே இந்த இந்திராயணீ தீரத்திலும்வைகுந்தத்தைப்போலேநகரொன்றையுண்டாக்கி, சமஸ்தமான பாகவதர்களுடனும் இத்துக்காராமுக்குக்கைங்கரிய நடத்திவைக்கவேண்டும்" என்றுசொல்ல, சருவநாதனும் பிராட்டியினுடைய இன்சொல்லுக்கிசைந்து, தன்னுடைய சங்கல்பமாத்திரத்தால் விசுவகருமாவை வரச்செய்து, இந்திராணிக்கரையில் மாறு வைகுண்டமொன்றுண்டாக்குவித்து, அதில் அதிக ஐசுவரியங்களும்மூர்த்திகரமாக அமையவைதத அற்புதத்தை, தேவர்களுமிருடிகளும், கெருட காந்தருவ சித்தவித்தியாதரார்களும், மற்றுளோரும் எல்லாருந் தரிசிக்க ஆவல்கொண்டுவந்து சேவித்து அதிசயித்தார்கள். முக்தர்களாகிய பரமாமிசந் தங்கிய சந்தஜெநங்களும், பகவந்நாம சங்கீர்த்தனையில்சொக்கி, ஆநந்தங்கொண்டவர்களாயினார்கள். பிரமாமிசங்கொண்ட யோகிகளாவாரும், தங்கள் தங்கள் சுநிஷ்டைகளை மறந்து பகவத் தெரிசனையில் மநமூன்றினவர்களாய், சாக்ஷாத் நிர்க்குணப்பிரமத்தைச் சகுணப்பிரமமாகப் பிரத்தியக்ஷ காக்ஷியாய்

எல்லாருந் தெரிசிக்கும்படிப் பண்ணின துக்காராம் ஸ்வாமிகளுக்கு மங்களங்களுண்டாகுக என வாழ்த்தினார்கள்.

இப்படி சருவ ஆடம்பரங்களும் நடவாநிற்க, சருவேசுவரன் துக்காவை, உத்தவர், அக்குரூரர், அம்ரீஷர், சித்தர்கள், ஸநகாதி நால்வர், தும்புரு, நாரதர், சுகயோகிந்திரர் முதலிட்டாருடன் ஒரு கோவையாக்கிப் பூசனை செய்யவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி னவனாய், அர்க்கியபாத்தியாதி யாசமநங்களைச் சமர்ப்பித்து, சந்தநக் காப்பிட்டு, சொர்க்கவாசிகளுங் கிட்டவரிய திவ்வியதரமான புஷ்பமாலைகளைச் சார்த்தி, தூபதீபாராதநங்கள்செய்து, ஆராதித்து, இந்திராதிகளும் ஆசைப்படத்தக்கதிவ்வியாந்நமாகிறபரமாமிர்தத்தைப் பெரிய பிராட்டியாரே தமது மலர்போன்ற திருக்கைகளால் வடித்துச் சமர்ப்பிக்கத் தான் ஜலம் புரோக்ஷித்து, இன்றுதான் நான் தன்னியனானேன் என்று மநமகிழ்ந்து, பந்தி நடுவில் துக்காராமரை யுட்காரவைத்து, தேவாமிர்தமாகிற அந்நத்தைப் பரிமாறி ஜெநங்களோடு துக்காவையும் உண்ணச் செய்து தாம்பூலம் வழங்கி அருந்துவித்தான். இவ்வைபவங்களுக்காகச் சுரர்கள்தேவநாதங்களையிசைத்துப் புஷ்பமாரி பெய்வித்தார்களாய்க்கொண்டு, ஸ்ரீபரந்தாமன் லக்ஷ்மீசமேதரா யிவ்விடத்திற்கு தாமே வந்து பக்தர்களுடைய சேவை செய்தார். இப்பூலோகத்தார் தன்னியர்கள்! தன்னியர்கள்!! என்று கொண்டாடி வாழ்த்தினார்கள்.

இவ்விதமாக ஏகாதசிமுதல் ஐந்துநாள் வரையிலும் திவ்வியமான மகோற்சவம் நடந்தேறி வந்தது. இந்தக்காட்சி ஸ்ரீமத்துக்காராம் ஸ்வாமிக்கல்லால் பிறருக்குத் தோன்றப்படவில்லை. ஏனெனில்—அவ்வன்பருக்கு அன்பர்களாக இருந்த ஜெநங்கள், துக்காராமரைப்போன்றே பஜனைகளைச் செய்து தங்கள் தங்கள் தேகங்களை மறந்தவர்களானாலும், ஜெகந்மோகநாகாரனாகிய ஸ்ரீமந்நாராயணன் திரோபாவ குணத்தை அவர்களிடம்செலுத்தியிருந்தமையினாலஇக் காட்சிகள் அன்னோர்க்குத் தோன்றிற்றிலது. துக்காராமரை யண்டினதாற் பலனேதென்னில்; ஸ்ரீ வைகுண்டநாதனுடைய திருவடி பெருவதருமை. அநந்தகோடி ஜெந்மங்களை எடுத்து, அநேகமாயிரம் ஆசாரியர்களை யடுத்து, யோகாயோகங்களைச்செய்து, விரதங்கள் யாத்திரைகள் நடத்தினாலும் வைகுந்தத்தின் மார்க்கம் இன்னதெனக் காணுவதே துல்லபம்; நெருப்பாற்றில் மயிரினால் பாலங் கட்டி தன் வழியாகச் செல்லுவது மிகுதியுங் கஷ்டம். அதனால் ஸ்ரீமத்துக்காராம் ஸ்வாமிகள் திருவவதாரம் பண்ணி, அந்நெருப்பாற்றை யன்பென்னும் ஜலத்தாலவித்து, மயிராகிய பாலத்துக்கு

நிராசையைக் கடைக்காலாக்கி, கீர்த்தனாரூபமான பக்தியை பாலமாகச் சமைத்து, சாந்தி - சத்தியம் - அறிவு - அடக்கம் என்னும் பலகைகளை மேல்போர்த்து, பரமபதநாட்டிற்குப் போகவர பாட்டையுண்டாக்கிவைக்கப் பெற்றதே அவரை யடுத்ததின் பயன். அதன் மேல் அவர்களுடைய இஷ்டகாமியங்களைவையோ அவைகளின்படி காத்தருள ஸ்ரீமந்நாராயணன் துஜஸ்தம்பமாகிற விருதுகொடியை நாட்டியிருக்கின்றான். எண்குணங்களிலொன்றையேனும் பெறவேண்டுமாயின், அநந்த கற்பகாலந் தவமியற்றி ஸ்ரீ ஹரியின் கிருபையைப் பெற்று அதன்மேல் வரவேண்டும். அவ்வொன்றாகும் சத்துவகுணம் உற்பவிக்கப்பெற்றவர்கள், எழுவகைத்தோற்றத்தில் எதிலுதித்தாலும் அக்குணநலமே முதன்மையாய் நின்று காட்டும். அஃதெவ்வாறெனில்,—சத்துவகுணங் கிடைக்கபெற்ற பிராணி, காருண்ணியதரன் - சாந்தம் - விவேகி என்று வழங்கப்படும். இந்த நாய்மெத்தவும் ஸாது; இந்த மாடு மெத்தவும் உத்தமமானது, பாய்ச்சல் கிடையாது; இப்பூனை மற்றவைகளைப்போல் திருட்டுத்தனமில்லாமல் நாமிட்டதைப் புசித்துக்கொண்டிருக்கிறது; இம்மரத்தின் கனிஉருசியுடையதாகவும் ஆரோக்கியந் தரத்தக்கதாகவுமிருக்கிறது; இவ்வகையான மற்றொரு மரத்தின் கனி எரிப்புடையதாகவும், துர்நாற்றமுடையதாகவும் இருக்கின்றது என்றுவழங்குவது நாமே கண்டிருக்கிறோம். இவ்வாறு எண்பதினான்கு லக்ஷபேதங்களிலுதிப்பினும் எண்குணங்களிற் கம்மிபட்டோருதிப்பினும் சம்மான நீதிகளைப் பெற்று, முடிவில் அநந்தஜெந்ம புண்ணியவசத்தால் எண்குணரூபிகளாவர்களாகில் அவர்களுடைய மான்மியத்தை ஆதிசேடனாலுஞ் சொல்லிமுடியாது. இத்தகைய அற்புத விலாசத்தை யுடையவராய் ஸ்ரீமத்துக்காராம் ஸ்வாமிகள் விளங்கியிருந்தனர்.

ஸ்ரீ துக்காராம் ஸ்வாமிகள் ஜெகதாசாரியராக விளங்கியதால் வெளிநாடுகளில் இருந்தெல்லாம் ஜெநங்கள் அநந்தம்பேர் வந்திருந்தவர்கள் விஷ்ணுதாஸரைச்சேவித்து, ஸ்ரீவைகுண்டநாதன், இப்பூமியின்கண் பக்தியோகத்தை ஸ்தாபிக்க ஸ்ரீ துக்காவென்னும் பெயர் பெற்றுத் திருவவதரித்தருளினன். இந்தத்தேவூகாமும் இந்திராயணீ நதியும் வைகுந்தத்தினுஞ் சிறந்து விளங்காநின்றன. பகவத்பக்தர்கள் எந்தவிடத்தில் வசிக்கின்றார்களோ அந்தவிடத்தில் பகவான்பூரணவாசம் பண்ணுகையாலே அவருடைய திருவடிகளில் சகலதீர்த்தங்களும்உண்டாயிருக்கின்றன! வைணவபக்தர்கள் எங்கும்வர்த்தித்தாலும் அங்கெல்லாம் அணிமாதி சித்திகளும், அஷ்டலக்ஷ்மிவிலாசமும் உண்டாயிருக்கும் என்றின்னனவாகப் பல ஆநந்த ரூபமான

துதிகளால் பரமாத்துமாவையும், பக்தர்தலைவரையுந் துதித்துக்கீர்த்தனைகளைப்பாடி ரமித்துக்கொண் டிருந்தார்கள்.

இங்கிருக்க, பங்குனிமாதம் - கிருஷ்ணபக்ஷம் - பிரதமையின் இராத்திரி ஸ்ரீ துக்காராமரைவைகுந்தத்துஎழில்கொள் சோதியாகிய ஸ்ரீமந்நாராயணன் நோக்கி, எனது வாய்மையை நீ யங்கீகரிக்க வேண்டும்; அதாவது - இன்றிரவு நீ கீர்த்தநாநந்த மிகுதியுங் கொண்டு சம்பிரமமாகநடாத்தி, சூரியோதயமானவுடனே என்னுடன்கூட வைகுந்தத்தேறவாரும் என்றாக்கியாபித்து, அவரைத்தழுவி முத்தமிட்டு, உன்னுடைய கீர்த்திகளை வருணிக்குமவர்களையும், சிரவணஞ் செய்யுமவர்களையும் என்னுடைய பதத்திற்கொண்டு சேர்ப்பேன்; முன்புள்ள அநேகபாகவதர்களும், இப்போதுண்டானவர்களும் என்னுடைய கட்டளைக் குகந்தவர்களல்ல; நீர்மாத்திரங் கட்டளைக்குகந்தவராய் அதிகாரஸ்தாநமேறி யிருக்கின்றீர். அஃதெவ்வாறெனில், உடல் - பொருள் - ஆவிகளை எனக்கே தத்தஞ்செய்து, காம - குரோத-லோப -மோக - மத்-மச்சரங்களைக் காராக்கிருகத்தி விட்டடைத்து, மநோசஞ்சலத்தைப் பாழாக்கி, ஆன்மலப் பிராப்தியாகிற பிறமசொரூபமடைந்தும் சுவாமி என்றும்பக்தனென்றும உண்டாயிருக்கும் நியாயமதைக் கைவிடாமல் ,இராப்பகல் முற்று மென்னையே நினைந்து பஜனைசெய்துவந்தனை; நான்பிறப்பில் பல்பிறவி பிறக்குந்தோறும் நீயும் பிறியாமல் கூடவே பிறந்து என்னையே ஸ்மரித்துக்கொண்டு வந்தனை ; ஆதலால் உன்னைப் பிரம மித்துருவென்று பாவித்துக் கொண்டிருக்கிறேன் ; உன்னுபகாரத்துக்குப் பதிலுபகாரம் நடத்த என் சிருஷ்டியிலொன்றுமில்லை; ஆயினும் மகாசித்திகள் அநந்தமுண்டு; அவைகளிற் சிறந்தது அணிமாசித்தி; அதைப் பூருவத்தில் நீ தள்ளி யிருக்கின்றனை ; சாலோக - சாமீப - சாரூப - சாயுஜ்ஜியங்களாகிற நால்வகைப் பதங்களையும் நீக்கிவிட்டிருக்கின்றனை; அநேக பாகவதர்கள் கண்டுநம்மை விரும்பியடுத்தார்கள்; இனியு மநேகம்பேர் அடுத்து ஸ்மரிக்கப் போகின்றார்கள் ; உம்மைப்போல் நிராசையும் - அன்பும் - அடக்கமும், அவர்களிலொருவருக்கும் உண்டாகமாட்டாது; அதற்காக நானுறுதிமொழி யுரைப்பேன் ; அதனாலிந்தச் சமயம் வேறொரு மேன்மை நடத்த விரகின்மையால் நாளை சூரியோதயத்திற்கு உன்னைத்தேகத்துடன்வைகுண்டமழைத்துச் செல்கின்றேன் என்றுரைத்தருள, துக்காராமரும் ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து மிகுவிநயராய் நின்று விண்ணப்பஞ்செய்வதாவது—என்னையாண்டிட்ட தன்மையானே! என்னை வைகுந்தத்துக்கு வருவாயென் றழைக்கின்றீர் ; வைகுந்தமென்பது

ஏகதேசநியாயம்; சருவதேசநியாயமல்ல; வைகுந்தமென்பது பண்டரீபுரமென்றே அநேகசந்தஜெநங்கள் இசைத்திருக்கின்றார்கள். தாங்கள் துலவாயிருக்குமிடத்திற்கு அடியேனை யேன் கொண்டுபோகின்றீர்? அது தூரப்பிரதேசங்களுக்குத் தூரமாயிருப்பதால் அடியேனவ்விடத்திற்கு வரமாட்டேன் என்று விண்ணப்பஞ்செய்ய, ஜகந்நாதன் கேட்டு, நானழைக்குமிடத்திற்கு வருவாயாகில் உன்னுடைய கீர்த்தி பிரபலிக்கும்; என்னுடைய ஐசுவரியம் க்ஷீராப்தியாகையால் அதையும் நீயறியச்செய்வேன்; நானெவ்வாறு விசுவவியாபகனாய் நின்றனனோ அவ்வாறே நீயுமாகுவாய்; நிரந்தரம் நீயிவ்விடமேயிருப்பாயாகில் மானிடர்களுடைய சிரத்தையுன்மீது இவ்வண்ணமேயிராது; மாறிப்போகும்; ஆகையாலுன்னுடைய அடத்தை விட்டொழி; என்னுடன்வா; பக்தர்தலைவா! நானழைக்குமிடம், ஆநந்தத்திற்கு ஆநந்தமாயிருக்குமது என்று பிரஸாதித்தருளினதற்கு ஒப்பிக்கொண்டு, ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகள் உடனே கீர்த்தனைகளைப் பாடத்தொடங்கி, தாளம் - வீணை - மிருதங்கம் முதலியவற்றின் சுரநாதங்களோடு நல்லிசை கீர்த்தனைகளைப்பாடி, ஜெயஜெயவென்றிசைக்க, சமஸ்தஜெநங்களும் கரதாளங்களையிட்டு ஆநந்தங் கொண்டார்கள்.

இச்சமயத்தில் உண்டாகிய பகவந்நாமத்தின் பேரொலியாகாயமளாவியது; அச்சமயம் கீர்த்தனைகளைக்கேட்டுக்கொண்டிருந்த பல்லாயிரம் பக்தஜெநங்களுடைய உள்ளங்களெல்லாம் ஒருமையடைந்து, ஆநந்தக் கண்ணீர்த் ததும்ப தேகம்புளகிக்க, மயிர்கூர்ச்செறியப் பரவசர்களாகி, மெழுகினாலியற்றிய பாவை யுருகிப் பஞ்சலோக விக்கிரமாகப் பிரகாசிப்பதுபோல ஸ்ரீ துக்காராம் ஸ்வாமிகளுடைய ராமநாம சங்கீர்த்தநமதின் சிரவணத்தால் தங்களுடைய தேகப்பற்றுகள் அத்தனையும் நீங்கி நாதப்பிரம ரசமே மூர்த்தீகரிக்கப்பெற்றவர்களாயினார்கள்.

இப்படி கோஷ்டியிலிருக்குமவர்களெல்லாரும் பரமாநந்தத்திலாழ்ந்திருந்த தருணத்தில் ஸ்ரீமத்துக்காராம் ஸ்வாமிகள் காலக்ஷேப ரூபவியாக்கியாநமாய்ச் சொல்லத் தொடங்கினதாவது—ஸ்ரீ ஹரி கீர்த்தநாமான்மியத்தின் பிரமாணம் அறிவிப்பேன்; அந்தக் கீர்த்தநா மகத்துவத்தால் தேகம் பிரமசொரூபமாகின்றது; கீர்த்தனையின் பாக்கியத்தால் கிளரொளிமூர்த்தியாகியகேசவனேருணஸ்தனாகின்றான்; தபோநிதிகளுடைய அபிமானங்களையுங்கீர்த்தனைகள் கண்டிருக்கின்றன; யெக்கிய தாநாதிகளை யுடையவர்களுங் கேட்கும்படிச் செய்கின்றன; தீர்த்தயாத்திரை செய்யுமவர்களுக்கும் பிரத்தியக்ஷ பலனுண்டாக அக்கீர்த்தனைகளே செய்துவைக்கின்றன; சொர்க்காநு

பவங்களை யிச்சித்திருப்பவர்களும் இக்கீர்த்தநாரசங்களைக் கொள்ளு வார்களாகில் தங்களிச்சையாகிற அல்பரசங்களை மறந்து வெகுசீக்கி ரத்திலேதானே பிரமாநந்தத்தை யநுபவிக்கச்செய்து ஆநந்த முண் டாக்கிவைக்கும்;பிரமஞ்ஞாநிகளுக்கும் எனது கீர்த்தனைகள் தம்மில் இன்பமுண்டாக்கிவைக்கும்; ஜீவன் முத்தர்களுக்கும் எனது கீர்த் தனைகளில் ஆநந்தமேலீடாகக்காட்டும்; இகலோக பரலோகங்களில் உள்ளவர்களும், இக்கீர்த்தநாபலத்தால்தன்னியராளுேமென்று ஆநந் தங் கொள்ளுவார்; ஸ்ரீஹரிகீர்த்தனையின் வலிவு எத்தகையதெனில் ஜீவனுடைய படைகள் எண்பதுகோடி; விவேகனென்னும் புரு ஷன் - அண்ட - பிண்ட சராசரமும் அளாவிய வுருவினன்;ஜீவப்படை கள் - விவேகனை யணுவுக்கு மணுவாக்கித் தங்களுக்குக் கீழ்ப்படிய வைத்து, ஒருபெரிய மலையானது எழும்பி சிறியதோர் எறும்பின் கீழ்ப்படுவதுபோல விவேகியை யடக்கிக் கற்பாந்த காலத்திலும் விடாமல் யதாசுதராய் விளங்கி,ஆத்துமாநுபவப் பிரத்தியக்ஷமில்லா மல் தவமுடையோரென்றும், யோகீசுவரர்களென்றும்,ஞாநிகளென் றும், அத்துவிதர்களென்றும், சித்தப் புருடர்களென்றும், வேத பாரங்கதர்களென்றும், சரியை - கிரியை - யோகவான்களென்றும்: இன்னும் பற்பல அநுஷ்டாந ஆசிரமங்களுடையவர்களென்றும் ஜீவ புருஷன் புகன்று தனக்கு நிகரில்லாமல்,முடிவில் காலபாசத்துக்ககப் பட்டு, ஜநநமரணங்களிற் சிக்கியுழல்வது சுபாவம்; அப்பேர்ப்பட்ட பெருமலை போன்ற ஜீவபுருடனைப் பேர்த்தெடுத்து,அணுரூபமாய்ந் தன்னிலொடுங்கிக்கிடக்கும் விவெகனைக் கண்டு பிடித்து, ஊக்கமுண் டாக்கிப் பரமபதமடைவிக்குந் திறனுடையது. அதுபிறிதொன்றுக் கும் ஸாத்தியமானதன்று. மேலும், பக்திக்கு வித்தாகிய நமதுகீர் த்தனைகள்—ஜீவனாகிறமலையை விகல்பரூபமாயொன்றுஞ்செய்யாமல் அதின்வசமாகவே யிருந்து, அக்கிரி யடிவாரத்தில் ஒரு ஆள் நுழை ந்து போகவரத் தகுந்த சுரங்கஞ்செய்துமுன்சென்று,மத்தியிலிருக் கும் பரமாணு ரூபியாகிய விவேகனையிட்டுக்கொண்டு சுரங்கத்தின் வழியாகக் கிரியைத்தாண்டி, சாலோக - சாரூப சாயுஜ்ஜியங்களு க்கு உந்நதமானதோர் நிலத்தில் சென்று சஞ்சரித்து, அங்கெழுந்த ருளி யிருக்கும் பரவாசுதேவனையும், அங்கிருந்துள்ள நித்திய முக் தர்களையும் சேவித்து, அவர்களால் நல்லவனென்று ஆசீர்வதிக்கப் பெற்று, காயத்தைப் பிரமரூபமாக்கவுஞ் செய்யும். அணுவினுக்கும் அணுவாயடங்கி யிருந்த விவேகனும் யதார்தியாக அண்டபிண்ட சராசரங்களெல்லாவற்றினுங்காட்டி லுருவின னுவான். ஆகையால், ஸ்ரீஹரி கீர்த்தனையாலல்லது மற்றெந்த மூலத்தாலும் ஹரி யிரக்கங்

கொள்ளமாட்டான். வேறு வகையான அநுஷ்டானங்களில் எது கொண்டாலும் மநமொற்றுமை பெருது. ஸ்ரீஹரிநாம சங்கீர்த்தனே யாரம்பிக்கும்போதே மநமாநது பஞ்சேந்திரியங்களில் செல்லாமல், சாமவேத சுரத்தில் ஒன்றிநின்று ஸ்ரீஹரியின் திருவடியைத் தியாநிக்கவிடும். பண்டு, இராக்ஷஸத் தலைவனுகிய இராவணன் கயிலையங் கிரிக் கடவுளாகிய கங்காளமூர்த்தியைத் தரிசிக்குமாறு அநேகாயிரம் ஆண்டுகளாகத் தவங்கள் அநேக விதங்களாகச் செய்தும் அவர் தரிசனே கிடைக்கப் பெருமல் பரிதவித்துக் கொண்டிருக்க, அவன்பால் மநமிரங்கி நாரதமாமுனிவர் பிரத்தியக்ஷமாய்த் தோன்றி, சாமவேத சுரத்தின்படி கீர்த்தநாரூபமாகத் துதிப்பாயாகில் உன் எண்ணங் கைகூடும் என்றுரைத்தேக, இராவணனும் அவராக்கினேயின்படியே கீர்த்தனேகளால் துதிக்க ஆரம்பித்தபோது சசிதரமூர்த்தி அந்த க்ஷணமே சேவைதந்து, அவன் கோரிக்கையையுந் தலேக்கட்டியருளினர். இன்னமநந்தங்கோடி பாகவதர்களும் கீர்த்தனேயால் துதித்து மோக்ஷ வீடடைந்தார்கள். குருடருக்கு வழிநடக்க ஊன்றுகோல் எப்படியாதாரமோ அப்படியே பரமபதநாட்டிற்குச் செல்ல இக்கீர்த்தனேகள் ஆதாரமாகும். பக்தியோக தாரணமாகிற இக்கீர்த்தனேகள் க்ஷீராப்திசயநனேத் தரிசிக்குமாறு செய்யும் அவித்தியா சம்பந்தமாகிற பிறவிமலே, விவேகனேக் கிட்டுவிக்குமதான கீர்த்தனேயாகிற வஜ்ஜிராயுதத்தால் பொடிபட்டு உரு மாய்ந்துபோகும் என்று சொல்லியருள, அவற்றைக் கேட்ட தேவர்கள் சுவர்க்காதி போகங்களில் வெறுப்புற்று, துக்கா இசைக்குங் கீர்த்தனேகளேச் சிரவணுநந்தமாகக் கேட்டுப் பரவச மடைந்தவர்களாய், இவர் பெற்றதொரு நிகரில் சுகத்துக்கு நாமென்று பாத்திரர்க ளாவோமென்று அவாவுற்று, இன்று நாள் நாம் தன்னியராமேனும்! என்று குனலைக் கூத்தாடினர்கள். சித்தர்களும் யோகிகளும் அவ்வாறே யானார்கள். திரிமூர்த்தி சொரூபராகிய தத்தாத்திரேயரும், தமது ஜீவன்முத்த சொரூபத்தைத் தவிர்த்து இவருடைய கீர்த்தனேக்கு ஆநந்தமடைந்தார். தபோநிதிகளுக்கெல்லாந் தலேவராகிய திரியம்பகரும், இந்தக் கீர்த்தனேகளேக் கேட்டுப் பரவசமடைந்தனர்.

இந்திரனும், தனதாசாரியராகிய பிரகஸ்பதி பகவானேத் தொழுது, ஸ்வாமின்! சுவர்க்காதி போகங்களே விரும்பி அநந்த ஜெங்மங்கள் யாகாதிகளேச் செய்து, இத் துச்சபோகங்களே யநுபவித்து வருவது எனக்கு மெத்தவும் லஜ்ஜையும் வெறுப்புமா யிருக்கிறது; இனி யிச்சுகத்தை விரும்பேன்; இதோ பூலோகத்தில் துக்காராம் ஸ்வாமிகள் கீர்த்தனேகளால் தமது காயத்தைப் பிரம ரூபமாக்கிக்கொண்டு

பேற்றுக்கு இலக்காக்கிவிட்டார். நானும் அவரைப்போன்றே பூலோகத்தின்கண் மானிடனாய்ப் பிறந்து, கீர்த்தனங்களால் பகவந்நாமத்தை ஸ்மரித்து, காயத்தைப் பிரமார்ப்பிதம் செய்துகொள்ள மநமுடையவனா யிருக்கின்றேன் என்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டான். ஸநகாதி நால்வரும் துக்காராம் பெற்ற பேறலரும் பாக்கியத்துக்கு வியந்து வாழ்த்தினார்கள். இவ்விதமாக எல்லாருங் கொண்டாடும்படியாக இரவு நான்குஜாம பரியந்தம் பக்திரூபமான கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டிருந்து, சூரியோதய சமயத்தில் திருவாராதந முடித்து, பிறகு, விட்டலநாம பாராயணம் எல்லாக் கோஷ்டியாருடன் கைகளைத் தட்டிக்கொண்டு செய்து முடித்தனர்.

அந்தச் சமயத்தில், பரமதயாபர மூர்த்தியாகிய ஸ்ரீமந்நாராயணன் துக்காதேவரைப் பார்த்து, வைகுந்தத்துக்கு வர தயவுசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்து, புஷ்ப விமாநத்தையுந் தருவித்து, இதின்பேரில் ஆரோகணிக்கலா மென்றுரைக்க, தாஸரும், சருவபூதநாதனைத் தொழுதுநின்று, அருகிலிருந்தவர்களில் ஒருவரை யழைத்து, நான் வைகுந்தஞ் செல்கிறேனென்று சொல்லி தனதுநாயகியை அழைத்துவரக் கட்டளையிட, அவருமோடோடியுஞ் சென்று, ஆவலி ஜீஜாபாயம்மாளுக்கு வந்தநங்க ளியற்றி, அம்மணீ! பரமதயாநிதியாகிற ஸ்வாமி துக்காராம் பரமபதத்துக்கு எழுந்தருளுகிறாராம்; தேவரையழைத்துக்கொண்டுவரக்கட்டளையிட்டிருக்கின்றார்; ஆதலால் எழுந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, அவ்வம்மையும், போபோ பைத்தியக்காரா! அவரெப்போதும், நான் பரமபதம் போகிறேன்! நான் பரமபதம் போகிறேன்!! என்று சொல்லிக்கொள்ளுவது வழக்கம்; அதுபோன்றே இன்றைய திநமுஞ் சொல்லியனுப்பினார் என்று அவனைப் போகவிடுக்க, அவனும் மறுபடியும் ஸ்வாமிகளிடம் வந்து, ஆவலிமாது உரைத்தவற்றைச் சொல்லக்கேட்ட முக்தசொரூபியாகிய துக்காராம் ஸ்வாமிகள், அவருக்கின்னும் பிரபஞ்சத்தின் ஆசை தீரவில்லை யென்றெண்ணி, பக்த ஜெநங்களை நோக்கி, நான் மறுபடியும் வரமாட்டேன்; யாவத்கிருகாச்சிரமதருமிகளும் ஸ்ரீபாண்டுரங்கமூர்த்தியை இடைவிடாமல் பஜியுங்கோள்; பெரியவர்க ளனைவருக்கும் எனது வந்தநங்களை யறிவியுங்கோள்; தேனிற்பட்ட ஈயானது அம்மதுவையுண்டும் அதையே மேலுமேலும் விரும்பி மடிவதுபோல் இந்தமாயாசம்பந்தமானமிருத்தியுலோகத்திற்கு யான் இனிவாரேன்; இப்போதுயானுரைத்த இதங்களின்பேரில்மநம்வையுங்கோளென்று எல்லாருங் கேட்கச்சொல்லி, தேவூகாமில் விசுவம்பர மூர்த்தியினால் சந்நிதி கொண்டெழுந்தருளியிருக்கும் பாண்டுரங்க மூர்த்தியின்

திருவடிகளிலும், ருக்குமணீ தேவியின் திருவடிகளிலும் வீழ்ந்து சேவித்துக்கொண்டு, அங்குநின்றும் பிரயாணப்பட்டு வெளியேவந்தவுடனே பக்த ஜெநங்கள் யாவரும், ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகளுடைய அவ்வுதாசின வாக்கியங்களுக்காகக் கண்ணுங் கண்ணீருமாய்க் கலங்கி துக்காக்கிராந்தர்களா யிருந்தார்கள்.

அப்படி துக்கசாகரத்திற் படிந்தவர்களா யிருந்தும் அவர்களிற் சிலர் யோசிப்பதாவது—தேகத்துடன் வைகுந்தஞ்செல்வது நாமிதுவரையிலுங் கேட்டறியோம்; கிரந்தத்திலும் பார்த்தறியோம்; எப்பேர்ப்பட்ட அணிமாதி ஸித்திகளைப் பெற்றவர்களும் ஸ்தூல தேகத்தை யிவ்விடத்திலேயே விட்டுவிட்டு, சூட்சும தேகத்தைப் பெற்றுச் செல்லுகின்றார்கள். இவர் ஸ்தூல தேகத்துடன் செல்வேனென்பது சங்கையா யிருக்கிறது; இது நிச்சயமா யெண்ணப்படவில்லை; நாமெல்லாரும் இவரைவிட்டுப் பிரியாமல் பாதித்துக்கொண்டிருப்பதனுல், இதென்ன செள்ளையா யிருக்கிறதென்றெண்ணி இமாலயத்துக்கோ,பதரிகாச்சிரமத்துக்கோ போய்விட எண்ணங்கொண்டு இவ்வகை சொல்லுகிருர் என்றும், மற்றுஞ்சிலர், நமது ஸ்வாமி ஜகதாசாரியர் இந்நாட்டை விட்டுச் செல்லுவாராகில் அஷ்ட லக்ஷ்மிகளும் இந்நாட்டைத் துறந்து ஓடினது போலாய்விடும்; இவருக்கு வெகு பிரியராகிய இராமேசுவர பட்டரிடம் நாமெல்லாருமறிவித்து, ஸ்வாமிகளைப் போகவிடாதிருக்கச் செய்யவேண்டுமென்றும் நினைத்துக்கொண்டார்கள்.

இவ்வாருகப் பலரும் பல வார்த்தைகளை யாடிக்கொண்டிருக்க, ஸ்ரீமத்துக்காராம்ஸ்வாமிகள் வெளியே புறப்பட்டு இந்திராயணி நதீ தீரஞ்சேர்ந்து, கோபாலபுறமடைந்து, தாம் தம்மதேகத்தைப் பிரமரூபமாக்கியதைப் பற்றி இருபத்தேழு அபங்கங்களாகச் செய்து உகந்தவர்களுக்கு உபகரித் தருளினுர். அவை இதின் மூலக்கிரந்தமாகிற மஹாராஷ்டிரத்தில் விளங்கப் பார்த்துக்கொள்வது. அவ்வேழபங்கங்களில் ஒன்றின் கருத்தாவது—

நான் இறவாமைக்கு முன் இறந்திருக்கின்றேன்; என் மநதில் எவ்வகை யிச்சை யுதித்ததோ அவ்வகையே நடத்தினேன்; என்ஸ்திதியினுலுண்டாகு மாச்சரியம் நீங்குவதன்று; வருகின்றதேது? மகாபிரளயத்தில்பிரமாதிகளையெல்லாம்விழுங்கிய சோபகசக்திஎன்னிடமணுகவில்லை; அதனுல் எனக்கு மாணமேது? நமக்கு மாணமேதுவெனில்—பகவந் நாமத்தை மறந்திருப்பதே மரணமாகும்; நிஜபாகவதர்கள் எவ்விடம் வசிப்பார்களோ அவ்விடம்யாமுமிருப்போம்; இந்நிலை பெறவேண்டுமானுல், தேகேந்திரியப் பிரபஞ்சங்களைக் கியாநாக்

கிநியினல் தகித்து, மறுபடியுந் தேகசம்பந்தபரர்களுடன் சேராமல், விட்டிற்பூச்சியானது தீபத்தைபுணவாயெண்ணி அதில் வீழ்ந்துமறுபடியும் மீளாமல் மடிந்தேபோவதுபோல் ஆக்குவிக்கும்படியான தேகேந்திரியப்பிரபஞ்சங்களில் மறுபடியும்பேக்ஷை வைக்காமல் பகவத்பக்தியிலேயே மநம்வைக்கவேண்டும், அப்பேர்ப்பட்டவர்களுக்குத்தான் இந்தஸ்திதிவரும்; இப்போது பகவதாக்கினையை யநுஸரித்து நீங்களனைவரும்உத்தரவு தருவீர்களாகில் நான்சுவாமியுடன்வைகுந்தஞ் செல்கின்றேன்; நீங்கள் யாவரும் என்மீது கிருபைவைக்க வேண்டியது; சுவாமி வெகுநேரமா யென்னுடைய வரவுக் கெதிர் பார்த்துக்கொண்டிருக்கின்றார்; நீங்கள் உத்தரவுதர ஆலசியஞ் செய்கின்றீர்கள்; அப்படிச் செய்யலாகாது! என்றுரைத்துக்கொண்டிருக்கும்போதே ஜநங்களுடைய திருஷ்டிக்கு அதிருசிய மாய்விட்டனர்.

இப்படி யுண்டாவதற்கு காரணமேதெனில்—ஸ்ரீமத்துக்காராம் ஸ்வாமிகளுடைய காயம் முன்னமே பிரமரூபமாயேயிருந்தும் தோற்றமாத்திரம் யாவருக்கும் மானிடரூபமாகத் தோற்றிக்கொண்டிருந்தது; இப்போது அவ்வேஷத்தை மாற்றி யாவருக்குங் கோடிசூரியப் பிரகாசமாகத் தோன்றினமையாலும், புஷ்பவிமாநத்தின் சோபையாலும், இவ்விடமிருந்த மனுஷியர்களுக்கு,தங்கள் ஊன்கண்களால் தெரிசிக்க முடியாமல் போயிற்று, அவர்களுக்குத்தெரிசனையாகாமற் போகவே தங்கள் தங்கள் கண்களை மூடிக்கொண்டு தத்தேகத் தியாநபரர்களா யிருந்தனர்கள்.

இவ்விதமாகத் துக்காராம் ஸ்வாமிகள் விமாநாரூடராய் பரமபதத்துக்கு எழுந்தருளா நிற்கையில், ஸ்ரீதேவியாரோடு ஸ்ரீமந்நாராயணனும், உமாதேவியாரோடு சிவபெருமானும், வாணியோடு பிரமாவும், தும்புரு நாரதர்கள் சுகாநங்களிசைக்க, கந்தருவர் பாட, அப்சரஸ்திரீகள் நடநஞ்செய்யக் கூடவே யெழுந்தருளினர்கள். தங்கள் வாகனாரூடர்களாக ஸநகாதியர் நால்வரும், சித்தசாத்தியர்களும், யக்ஷகிந்நரர்களும், கபிலமாமுநி தொடக்கமானவர்களும், முக்தர்களும் ஆசிகள்வழங்கி, இத்துக்காராம் ஸ்வாமிகள் பாண்டுரங்கனைப் பஜிக்க பஜிக்க, பஞ்ச பூதங்களாலமைந்த தேகத்தையும் நிஷேதிக்காமல், சுத்த சைதன்னிய மூர்த்தியாய் விட்டார் என்று அதிகமாக ஆச்சரியப்பட்டார்கள்.

கண்களை மூடிக்கொண்டிருந்து துக்காராம் ஸ்வாமிகளையே தியாநித்துக் கொண்டிருந்த பக்தர்களனைவருங் கண்களைத்திறந்து ஸ்வாமிகளெழுந்தருளுகிற ஆகாயவெளியைப் பார்க்கும்போது,அவர்களிற் சற்புருஷர்களா யிருந்தவர்களுடைய கண்களுக்கு ஸ்வாமிகள்

ஆரோகணித்திருந்த அப்புஷ்ப விமாநம் வெகுதூலவு தூரத்திற் செல்லுவதாகத் தோன்றக்கண்டு, தும்புருநாரதர் இசைக்கும் வீணையொலியும், அப்ஸரஸ்திரீகளது நடநவொலியும், தேவவாத்தியவொலியுங் கேட்கநூதலினமையால் வெகுதுக்க மடைந்தவர்களாய், ஜகதாசாரிய ஸ்வாமிகளாகிற ஸ்ரீமத்துக்காதேவரை இனியெப்போது காணப்போகிறோமென்று சோகித்து, கையிலிருந்த மதிப்பில்லாஇரத்திநத்தை யிழந்து விட்டவன் எவ்வாறு பரிதபிப்பனோ அவ்வாறே பரிதாபங்கொண்டு விசநசாகரத்திலழுந்தி யிருந்தனர்கள். இவ்விருத்தாந்தங்கள் யாவையும் கேள்விப்பட்ட ஜீஜாபாயம்மாள், அலறி அடியற்ற பனையைப்போல்பூமியில்சாய்ந்து மூர்ச்சையடைந்தனள்.குமாரதேவர் சாத்திரத்தில், "விரிவாய ஞானமதை யுணர்ந்தாலு மடந்தை பதி விலங்கநிற்ற-லரிதாய தகைமையினு லேங்கியேபதைபதைத்திட்டவனை நோக்கித் - தரியாது கதறியே வினைதனையே நொந்து தான் றளர்ந்து ஏங்கித் - தெரியாது மறைவிடந் தனின்மிகவு முருகியே தேம்பி வீழ்ந்தாள்" என்கிறபடியே, ஆவலியானவள் சோர்வுற்றதை அருகிலிருந்தவர்களால் தேற்றத்தேறி, என்னையாண்டிட்டகோவே! என்னை யிந்நரகக் குழியில் விட்டுவிட்டு நீர்மாத்திரம் பரமபதம்செல்லத்துணிந்தீரா! ஏழையாகிய என்னைப் பரிதவிக்கவிடப் பரந்தாமனுக்கு மநமிசைந்ததா யானென்ன குற்றஞ்செய்தேன்! இந்தப் பாவியேனை வர ஆள்விடுத்தும் பரிகாசமென்று எண்ணிக்கெட்டேன்; பிராப்தியில்லா பாவியாளானேன்! என்னையடிமைகொண்ட சுவாமி இப்படி ஸ்தூலதேகத்துடன் பரமபதநாட்டிற்குச்செல்லுவதுதெரிந்திருக்குமாகில் அவருடைய திருவடிகளை விடாமல் பற்றிக்கொண்டு தொடர்ந்தே யிருப்பேன்! இதுமிகு அற்புதமா யிருக்கிறது. வநங்களிலும் மலைகளிலும் வெளிகளிலும் சஞ்சரித்துக்கொண்டிருந்தசமயங்களிலெல்லாம். மழை, வெய்யில், கானலென்றும் பாராமல் ஓடித்திரிந்து சேவித்து, ஆந்நத்தை யூட்டிய பிறகுதான் யான்பொசிப்பேன். லோஹோ கிராமவாசிகள் இட்டுக்கொண்டு போனபின் கெடுமதியுண்டாகியவ்வாறு செய்ய விட்டுவிட்டேன். இனியுமது வரவைக் கண்டு, எவ்வாறாட்டுவேன்? பூரணசந்திரன்போன்ற திருமுகமண்டலம்அமைந்திருக்கப்பெற்ற என்னழகா! அடியாள்! என்ன குரூரவார்த்தைகள் உரைத்திருந்தாலும் யானென்ன தீங்குகள் செய்திருந்தாலும்மன்னித்து. அடியானுடைய நேரில்நின்று இன்னமொருதடவை காட்சியளித்துப் பிறகு வைகுந்த நன்னாட்டுக்கு எழுந்தருளலாம்; இனியுமது திருவுருவை எந்த ஜென்மத்திற் கண்டுகளிப்பேன்? எனது தந்தையென்னுடைய தெசையில்எனக்குநல்லரவன்கிடைக்க

வேண்டுமென்று முப்பத்திரண்டு தருமங்களையுஞ்செய்து, என்னை க்ஷேத்திர யாத்திரையுஞ் செய்வித்து, விநாயகமூர்த்தி, அரசமரம், நாகபாசம், இவற்றைத் திநதிநந்தொழுவித்து, சூரியநமஸ்காரஞ் செய்வித்து, பெரியவர்கள் வசிக்குமிடத்திற்கு என்னை யழைத்துக் கொண்டுபோய் அவர்கள் பாதபூசை செய்வித்து, அவர்கள் ஆசீர்வாதங்கள் பெறுவித்து,இப்படியெல்லாம்படாதபாடுபட்டு எனது பருவ காலத்தில், ஸ்ரீமந்நாராயணனுக்குச் சமாநமான இந்தத் துக்காராம் தேவருக்கென்னை மணம்புணர்வித்தார்கள்; யானும் அத்தவப்பயனால் நல்ல நாயகர் கிடைத்தாரென்று இன்பமுற்றிருந்தேன்; இப்போது; அவ்வளவு தவங்கள் செய்துபெற்ற நாயகரத்திநத்தை யிழந்தேன்; இனியெவ்விதமாகஎன தழகரைச்சேவிப்பேன்? இப்படிமுடியுமென்று முன்னமேயறியாத பாவியானேன்; வைகுந்தத்துக்கு நடக்கக் கூடுமானாலும் நடந்து சேவிக்கப் பெறுவேன். அதில்லையே;நிறைமங்கிலியாயிருந்தேகலாமென்று எண்ணியிருந்தேனே; இலட்சுமிதேவியைப் போல் புண்ணியம்பெறாமல் அமங்கிலியெனப் பெயர்கொண்டேனே! எனதருமை மணாளனைத் தொழுவதற்கொருகுறியும் இங்கில்லையே! சாதாரணமான சாமானியர்கள்இறந்தாலும்அவர்களுடையவஸ்திரங்களுக்குக் காவிதோய்த்து வைத்துக்கொண்டு அவற்றையாவது, அவர்கள் பெண்டு பிள்ளைகள் அவர்களுக்குப் பதிலாக வைத்துக் கொண்டு பூஜித்துக் களிப்படைகிறார்கள். அவர்களுக்குச் செய்யும் மரியாதைகளைப் பார்க்கிலும் அவைகளுக்கு அதிகமரியாதைகள் செய்கிறார்கள். இவரோ உலகத்தை வாழ்விப்பதற்காகத் திருவவதாரஞ்செய்து,பஞ்சகிருத்தியங்களிலும்வல்லவராய்நடாத்தி,உலகத்திலுள்ள பாமரர்களுக்கெல்லாம் பக்தியோகத்தைப் பலபடியாலும் போதித்து, பகவற்பக்தியுண்டாக்கிக் கிருதார்த்தர்களாகச்செய்த புண்ணியமூர்த்தி யாகையால், இவர் அவ்விசேஷங்களொன்றாவது பெறுவதற்காகத் தம்பெண்டாட்டி பிள்ளைகளுக்கு ஒருவஸ்திரங்கூட வைத்தவரல்ல; ஸ்ரீமந்நாராயணனுக்குச்சொந்தமான பிள்ளையாயிருந்தும் அழுக்குபடிந்த பொந்தையைக் கட்டிக்கொண்டு, ஏழையைப் போலவும், கல்வி யில்லாதவரைப்போலவும், நீதிதெரியாதவரைப் போலவு மிருந்து காலங்கழித்து, யாவராலும் முன்னும் பின்னும் அடையப்பட்டிராதபடி தேகத்தோடு முக்தியடைந்தனர். இதைப் பற்றி சூரியசந்திரர்களுள்ளளவும்எனக்குக்கௌரவமுண்டாயிற்று; மலையடைந்தநார்மணமடைந்ததுபோலஎன்னுடையமன்னவரால் இப்பூமண்டலத்தில் மதிக்கப்பெற்றேன்; மன்மதனுக்குச் சமானமாகிய மணாளனைச் சேர்ந்தேன்; மதிவல்லவரை யான்மருவியும் முடி

வில் என்னையழைத்துவரக் கட்டளையிட்டபோது மதிமயக்கால் அவரைச்சென்று சேவிக்கப் பிராப்தியற்றேன்; என்னுடைய ஊழ்வினையின்பயன் அவ்வாறு மதிமோசமுண்டாக்கியது; இதனால் எல்லாராலும் பாபியென்றுநினைக்கப் பெயர்பெற்றேன்; இனி யென்னசெய்வேன்; எவ்வாறு தரித்திருப்பேன்? என்று கடுரோதநத்துடன் சோதித்துக்கொண் டிருக்கையில், தனது பிள்ளைகளும், பெண்களும், சுற்றத்தவரும், ஊரிலுள்ள பிரம - க்ஷத்திரிய - வைசிய-சூத்திரர்களாகிற நாற்பாற்குலத்து ஆண்பெண் குழந்தைகளடங்கலும், அன்னியர்களாகிற அவிந்தர்களுங் கூட்டங் கூட்டமாய்க்கூடி, தாங்களும் வாழ்விழந்தமைக்குக் கனத்த அழுகையோடு பிரலாபித்து இந்திராயணி தீரத்தருகில் கோபாலபுரஞ்சேர்ந்து, அங்கும் அந்தத்துயர் மேலிட்டால் அழுததொரு முறைமையைச்சொல்ல சக்கியமல்ல. ஜீஜாபாயம்மாளுக்கு எவ்வளவு விசநமுண்டாயிற்றோ அவ்வளவு விசநமே மற்றஜெநங்களுக்கும் உண்டாயிருந்தது. அவர்களெல்லாருங் கூட ஆகாயத்தையண்ணாந்து பார்த்தபடியேயிருந்து புலம்பலுற்றார்கள். அந்தச் சமயத்தில் அவர்களால் கொள்ளப்பட்டிருந்த கொடுந்துயர் எவ்வண்ணமிருந்ததெனில்:— ஸ்ரீ கண்ணபிரான் கோகுலத்தைவிட்டு மதுரைக்கு எழுந்தருளும்போது கோகுலத்திலிருந்த சமஸ்தகோபநாய்ச்சிமாரும், கோபாலர்களும் கோவிந்தனைக்குறித்து எவ்வண்ணம் விசநமுற்றார்களோ அவ்வண்ணமாக இருந்தது.

அந்தச்சமயத்தில் ஆகாயத்திலிருந்து ஒரு அற்புதவாக்குண்டாயிற்று. அவ்வாக்கென்ன வென்றால்;—"ஹரிபுண்டரீகவரதா! ஹரிவிட்டலா! சாலிவாகந சகாப்தம் (கூருஎக) க்குச் செல்லா நிற்கும் விரோதிஞூ பங்குனிமீ' கிருஷ்ணபக்ஷம் - துவிதியை - சோமவாரம் சூரியோதயாதிநாழிகை (ச) க்கு ஜெகத்குரு ஸ்ரீமத்துக்காராம் ஸ்வாமிகள் என்னும் விஷ்ணுபக்தர் வைகுந்தத்துக்கெழுந்தருளினார்! இதையாவரும் அறிந்துக்கொள்ளுங்கள்" என்றுண்டாயிற்று. அதனைக்கேட்ட எல்லாரும் ஆநந்தபரவசர்களாய்க்கொண்டு, ஒவ்வொருவரும் எழுதி வைத்துக்கொண்டு, மாசமாசம் அந்நாளில் பூசிக்கவும், வருஷாப்திக உற்சவங்கொண்டாடவும் நேமித்துக்கொண்டார்கள்.

அநந்தரம், சுவாமியினுடைய பிரிவில் மநம் தாளப்பெறாமல் கோபாலபுரத்திற்கூடி அடங்காத் துயரில் ஆழ்ந்துகிடந்த பிரஜைகளனைவரும், ஸ்வாமிகள்வைகுந்தத்துக்கெழுந்தருளின அந்நன்னாளில் பூஜாதிரவியங்களை யபரிமிதமாக வரவழைத்து, ஸ்ரீமத்துக்காராம் ஸ்வாமிக ளாரோகணித்துஎழுந்தருளினபுஷ்பகவிமாநமேகிய திசை

யைநோக்கி ஆராதித்து, அவ்வருமைத் திருவாளருடைய திருநாமத்தால் அளவிருந்த சொர்னதாநங்கள் செய்து, கூட்டங்கூட்டமாய் நின்று பஜனைகளைச்செய்து கொண்டாடி, விட்டலநாம சங்கீர்த்தநங்களைப் பெருமிடற்றுடன் செய்து எல்லாருக்கும் புஷ்பமாலைகளைச் சார்த்தி, விநியோகங்களைப் பகிர்ந்து, குதூகலங்கொண்டவர்களாய்க் கதம்ப கஸ்தூரிகளை யிரைத்து ஆநந்தம் அதிகரிக்கப்பெற்றார்கள்

அந்தச்சமயத்தில் ஸ்ரீமத் ஸ்வாமி - துக்காராமருக்குச் சிஷியராகிய கெங்காஜி மவாளி என்பவர், சுவாமி பரமபதத்துக்கு எழுந்தருளும்போது சாதித்தருளின அபங்கங்களைப்பாடத்தொடங்கினார். அதைக்கேட்ட ஜீஜாபாயம்மாள், ஐயோ! எனது காருண்ணியமூர்த்தி பரமபதம் எழுந்தருளுவது அடியாளுக்குத் தெரிந்திருந்தால் அவர்திருவடிகளை விடாமல் பற்றிக்கொண்டு கூடவே போயிருப்பேன்; எனது பாழான துர்ப்பாக்கியத்துக்கு என்னென்பேன் என்று மறுபடியுமூர்ச்சித்து பூமியில்வீழ்ந்து, சற்றுநேரம் அருகிலிருந்தவர்கள் செய்த சித்தியோபசாரத்தால் தெளிவுற்றெழுந்து, எனது சத்துவமூர்த்தியை இனி யெந்த ஜெந்மத்திற்காணப்போகிறேன்? அவரெத்தனையோ இறந்துபோனஜீவர்களை மறுபடியும்உயிர்ப்பித்திருக்கிறார் இவருடையதேகம்இங்கிருக்குமாகில், என்னுடைய தாயாகிய ருக்மணீ தேவியின் கடாக்ஷத்தால் மறுபடியும்உயிர்பெறச் செய்குவேன்; நானிப்படிச் செய்வேனென்று வைகுந்தநாதனுக்குத் தெரிந்துதான் அவரை ஸ்தூலதேகத்துடனே தானே யழைத்துக் கொண்டுபோயினன். இனியெவ்வகையில் அவரைக்காணும் பிராப்தியுடையவளாவேன்? ஆயினும், இனியுஞ் சும்மாயிராமல் தகுந்த முயற்சிகளைச்செய்து, எனது அருமைநாயகரை யடைந்து, அங்குமவருடைய ஸ்ரீ பாதபூசை செய்துகொண்டே யிருக்கப்பெறுவேனல்லது முன்போலே மாறமாட்டேன். இதரமான பதங்களைப் கினவிலும் எண்ணமாட்டேன் என்று தம்முடைய நாயகரை யெண்ணியெண்ணித் துக்கித்துக் கொண்டே யிருந்தார்.

ஸ்வாமியுடைய கோஷ்டியில், என்றுந் துக்காராம் தேவரைவிட்டு நீங்கப்பெறாமல் கூடவே வர்த்தித்துக்கொண் டிருந்தவர்கள் பதினான்குபேர், அவர்களில் முக்கியர் ராமேசுவரபட்டர். அவர் தமதாசாரியர் பிரிந்ததைக்காக விசநப்பட்டு, என்னைக்கொண்டே யென் கருவங்களை நீக்கி, ஈஷணத்திரைய சம்பந்தங்களைப்போக்கி, பக்திபாவத்தின்இனிமைகளை யறிவித்துக்கரைமாஞ் சேர்த்தருளின கருணையங்குன்றே! உமது திருவுருவத்தை யினியெந்த ஜெந்மத்தில் காணப்பெறுவேன்? என்று சோகமுற்றார்.

ஸ்வாமியுடைய தம்பியாகிய கானயா என்பவர், தமக்கு அண்ணரும், ஆசாரியருமாய் விளங்கிய தயாநிதியை யெண்ணியெண்ணிப் புலம்பி, பரப்பிரமமே யோருருவாகத்தடித்து துக்கா என்னும்பெயராலேவந்து என்னுடலத்துடன் பொருந்தவளர்ந்து, என்னையும் பிரியமா யெடுத்தணைத்துச் சிற்றுண்டிகளூட்டி வளர்த்து, எனக்குத் தாய்தந்தை குரு தெய்வமாய் முன்னின்று கல்வி கற்பித்துக்கொடுத்து, நல்லபுத்திகளைப் போதித்து, வதுவையுநடத்துவித்து, கடைசியில் என்னைத் தன்னந்தனியே விட்டுவிட்டுப்போனதும் நியாயமாமா! என்னையும் அழைத்துக்கொண்டு போனால் உமது புகழுக்குக் குறைவாமோ! பரமபதமளிக்க நான்வல்லவனல்ல என்பீரேல், வழியில்போகிற கோண்டோபா என்பவருக்கு இகபரபோகங்களையளித்தீரே அதற்குமாத்திரம் வலிமையுண்டாயிற்றே? உம்மைக்கடித்த நாய்க்கும் பரமபதமளித்தீர்; அடியேன் உமது பாததூளியை, விவாககாலமு மற்ற சமயங்களிலுஞ் சிரசாகக்கொண்டவனை அவமாகக் கைவிட்டுச் சென்றீர்;உமது பெருமையை வருணிக்க தேவர்களே மயங்குகையில் அல்பனுகிய யானெவ்வளவு? இவ்வண்ட பிண்டங்கள் அனைவற்றினது ஸ்வரூபங்களையும் எனக்குக் காட்டவென்றாலும் உம்மால் காட்டக்கூடுமே! அப்பேர்ப்பட்ட பரமசக்தியாகிய தேவர், தேவரல்லால் தஞ்சமற்றறியா நாயேனைத் திக்கில்லாதவனுயாக்கிவைத் தேகினது நியாயமோ? எனதருமைத்துணையே! எத்தனையோ அருமையான தவங்கள் செய்து உம்முடன்பிறப்பாகப் பிறந்தும் உம்முடன்கூட வருவதற்கு மாத்திரம் பாவியாய்விட்டேன். அதற்கேற்ற தவமும் செய்தவனல்ல; அதனால் தனியே யென்னைப் பரிதவிக்கவிட்டு நீர்மாத்திரம்பரலோகப்பிராப்தரானீர் என்றுபலபலவிதங்களாகக் கன்றுபோல்கதறி பரிதவிக்கும்போது அவருக்கோர்வகை ஜாக்கிரதா சொப்பனம்போலுண்டாகி, அதில், "சதாசாரியரை நினைந்து பஜிப்பாய்" என்று தோன்றக்கண்டு எழுந்து உடனே துக்காராம் ஸ்வாமிகளைப்போலே தாமும் துக்காராமின்மீது அபங்கங்களைப் பாடத்தொடங்கினர்.

இப்படி ஸ்வாமிகளுடைய திருத்தம்பியாருக்கும் ஸ்வாமிகளுடைய திவ்ய கருணைபால் தம்மைப்போன்ற அபங்கங்களைப் பாடத்திறனுண்டானமை யெல்லாருங்கண்டு, துக்காராம் ஸ்வாமிகளுடைய சுலபகுணங்களைக் கொண்டாடி, மறுபடியும் அவரைவிட்டுப் பிரிந்த கிலேசமீறி, அவர்களெல்லாரும், இன்னொருமுறை ஸ்வாமிகளைச் சேவிக்கப்பெறுமல் இவ்விடத்தைப்புடைபெயருவதில்லை; பிராணன் நீங்கினும் இவ்விடமே நீங்கிவிடட்டும், என்று ஒரே வைராக்கியஞ்

கொண்டு, ஆகாயத்தை யண்ணாந்து பார்த்தவண்ணமேயிருந்து பஜித்துக்கொண்டு வந்தார்கள். இப்படி மூன்றுநாள் அந்த ஆகார நித்திரைகளில்லாமல் பஜனைசெய்து, துக்காராம் ஸ்வாமிகளையே ஸ்துதித்துக்கொண்டு வராநிற்கையில், நாலாவது நாள் பஞ்சமியின் பிராதக்காலத்தில் இவர்களுக்குத் திருப்தி யுண்டாக ஸ்வாமிகள் திருக்கைகளிலிருந்த தாளமும், உடுத்திருந்தவஸ்திரமும், ஊர்த்துவ மார்க்கத்திலிருந்து அவர்களிடத்திற்கு எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கிறபோதே வந்துசேர்ந்தன. அதைக்கண்ட அக்கோஷ்டியார் அவைகளுக்கு வந்தந வழிபாடுகள் செய்து, நமதாசாரியர் ஸ்ரீவைகுந்தம்போய்ச் சேர்ந்தார்; மறுபடியும் வரேனென்று தெரிவிக்கும் பொருட்டு இவ்வடையாளங்களை யநுக்கிரகித்தார் என்று திடப்படுத்திக்கொண்டு, அந்தத்தாளத்தையும் வஸ்திரத்தையுஞ் சிரசின்மீது எழுந்தருள்வித்துக்கொண்டு இந்திராயணியில் நீராடி, ஸ்வாமி ஸந்நிதானம் பஜனையுடனேவந்து சேர்ந்து, ஸ்வாமி விடோபாவுக்கு வந்தந வழிபாடுகள் செய்து, துக்காராம் ஸ்வாமிகள் வைகுந்தஞ் சென்றமையை யறிவித்து, அங்கு நின்றும் பிரயாணப்பட்ட காலத்தில், துக்காதேவருடைய சகோதரராகிய காஞேபாவும், கடுஸ் என்னுந் தேசஸ்தராகிய கெங்காஜிமவாளியும், லோஹோகிராமத்துப் பிராமணராகிய கோண்டோபாவும், வாணியராகிய சந்தாஜி ஜெகநாடாவும் இராமேசுவர பட்டரைநோக்கி, ஸ்ரீமத்துக்காராம் ஸ்வாமிகளுடைய புண்ணிய தினக்கிரியை யெவ்வாறு நடத்தவேண்டுமோ அதனைச் சாத்திர விதியின்படி சாதித்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க; இராமேசுவரபட்டரும் அவர்களைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினார்—நமது ஸ்வாமிகள் கருமக்கிரியைகளுக்கு முடிவாயிருக்குமவர்; பாஞ்சபௌதிக தேகமென்பது அவருக்கில்லை; சுத்த பரப்பிரமமே அந்தச் சாயையாய்க்கொண்டு ஸ்ரீவைகுந்தம் எழுந்தருளினவருக்கு சாஸ்திரோக்தமானகிரியாதிகள் ஒன்றுமில்லை; இகலோகத்திற்கோரடையாளமாக பஞ்சமிதிதியில் திருத்தாளமும் திருவஸ்திரமும் வந்தபடியால் அந்தப்பஞ்சமிதிநம் ஸ்வாமிகளுடைய ஆக்கினைநாளென்றெண்ணி, இன்றையதிநமே ஸ்ரீகுரு ஆராதனை செய்யவேண்டும்; ஸமஸ்த பாகவதர்களுஞ் சேர்ந்து பகவத்கீர்த்தனை செய்து பாகவத அர்ப்பிதஞ் செய்யவேண்டியது; இதரமான உத்தரக்கிரியாதிகள் நடத்தலாகாது என்று சொல்ல; அம்மொழிகளை கோஷ்டியார் எல்லோருங்கேட்டு, மிகுசந்தோஷ மேற்றவர்களாய், அன்றையதிநமே ஸமஸ்தபாகவதர்களுக்கும் அறிவித்து, வேண்டியசாமான்களைச்சேகரித்து, அடிசிற் சமைக்கவிட்டு, திருவாராதனங் கண்டருளப்பண்ணி,

பிரம - க்ஷத்திரிய - வைசிய-சூத்திரவர்ண பாகவதர்களுக்கெல்லாம் பரிபூரணமாக அறுசுவையோடு பிரஸாதமிட்டுத் திருப்தரானபிறகு சந்தன புஷ்ப தாம்பூலங்களைச் சமர்ப்பித்து, எல்லாரும் ஆநந்தபரிதர்களாயிருந்து பஜித்து, அவ்வாறே சஷ்டி சப்தமிகளிலுஞ் செய்து, ஹரிகதையும், பிராமண சந்தர்ப்பணமும் நடத்தி திருப்தர்களாயினார்கள்.

இந்தத் துக்காராம்ஸ்வாமிகள், பங்குனி-கிருஷ்ணபக்ஷம்-துவிதியையினன்று பரமபதத்துக்கு எழுந்தருளின சங்கதி தேசதேசங்களிலுள்ளவர்களெல்லாரும் கேள்விப்பட்டு, அன்றைய திநமுதல் சப்தமிவரையிலும் குருவாராதநம், பிராமண சந்தர்ப்பணம், பஜனை காலக்ஷேப முதலியவற்றை அவ்வவர்கள் ஆங்காங்கு நடத்தினார்கள்.

துக்காராம்சுவாமிகள் எழுந்தருளினபிறகு, பஞ்சமியில்வைகுந்தத்திலிருந்து தமது கைத்தாளங்களும் உடுத்தியிருந்த வஸ்திரமும் ஆகாய மார்க்கமாகவந்து பாகவதகோஷ்டியிற் சேர்ந்தன வென்றும், அவைகளை ஸ்வாமிகளுடைய திருமாளிகையில் வைத்து ஆராதித்துக்கொண் டிருக்கிறார்களென்றும் கேள்விப்பட்டு, இராஜ ராஜாக்களெல்லாரும்வந்து ஸேவித்து அநேகமரியாதைகளை நடத்தினார்கள். அநேகதேசங்களிலிருந்து குடிகளும் வர்த்தகர்களும், தநிகர்களும், மலைகளிலுங் குகைகளிலும் தவஞ்செய்துகொண் டிருக்கும் இருடிகளும் வேதியர்களும், ஏழையெளியர்களும், கண் கால் கை முதலியவை யில்லாதவர்களும், தங்கள் தங்கள் சுதேசங்களை விட்டுப் பிரயாணப்பட்டு இராமநாமத்தை பஜித்துக்கொண்டு, கூட்டம் கூட்டமாக தேவுகாமுக்குவந்து சேர்ந்து, அங்கு வீடுகளிருப்புக்குக் கிடைக்காமல், வநங்களிலும், வெளிகளிலும் இறங்கியிருந்து,ஸேவை கிடைப்பதுந் துல்லபமாய், ஜெநநெருக்கதிகமானமையால் நாலு நாள் எட்டுநாள் பத்துநாளிருபதுநாள் காத்திருந்து, ஆசாரியருடைய குறிகளாகப் பரமபதத்திலிருந்து வரப்பெற்ற தாளம் வஸ்திரமாமிவற்றைச் சேவித்து, தங்கள் தங்கள் சக்திகளுக்கு இயன்றமட்டிலும்தாநதருமங்கள் செய்வதும்,அந்நசத்திரங்களை யுண்டாக்கி அந்நமளிப்பதும், தண்ணீர்ப்பந்தல்கள் அமைத்துக் கஞ்சிமுதலியவைகளை யூற்றுவதுமாய்ச்செய்து, இரவும்பகலும் ஒய்வொழிச்சலில்லாமல் கூட்டங்கூட்டமாய் பஜனைபண்ணிக்கொண் டிருந்து, அதில் திருப்திகொண்டவர்களாய் அவ்வவர்கள் இருப்பிடங்களுக்குச்சென்றார்கள். பலதேசஸ்தர்களுந் தங்கள் தங்கள் குழந்தைகளுக்குத் துக்காராம் என்னும் பெயர்களையிட்டு வழங்கிக்கொண்டு வந்தார்கள். நோயாளிகளுந் தங்கள் நோய்பாதை மிகுக்கும்போது அந்நாமத்தை

யே யுச்சரித்துத் தணியப்பெறுவார்கள். இப்படியாக எல்லாக் குலஸ்தர்களும், எல்லாமதஸ்தர்களும் துக்காராம் ஸ்வாமிகளையே துதித்து, அந்தந்தநாடு நகரங்களில் பக்தி யோகத்தைத் தலைக்கட்டுவிக்கின்ற ஹரிநாம சங்கீர்த்தநங்களையே பாடிக்கொண்டு காலங் கடத்தினார்கள். அவர்களில் சிலர் அந்நாதி போஜ்ஜியங்களை விலக்கிக் கனிகளை யுதராக்கினியின் வாதைக்காகவுண்டு, சருகுகளைப் புசித்தும்,பாலமுதுண்டும், பிறருடன் சகவசிக்காமல் வீடுகளிலும் வநங்களிலும், ஸ்வாமிகள் உபகரித்துப்போன கீர்த்தனைகளையும் அபங்கங்களையும் பாடிப் பகல்காலங்களைக் கழித்து, இராவானவாறே ஸ்வாமிகளைப் போலவேசந்நிதிசேர்ந்து, விடோபாவைச்சேவித்து, நித்திரைசோம்பல்களை விலக்கி, விடியற்காலம் வரையிலும்பஜனைகாலக்ஷேபங்களைச் செய்து போகுவார்கள். நித்திரைக்குச் சுகந்தேடி படுக்கார்கள். துக்காராம் ஸ்வாமிகள் திறத்தில் மெய்ப்பக்தியாளர்களுடையசொப்பநங்களில்துக்காராம்தோன்றி அவ்வவர்கள் இஷ்டகாமியங்களையநுக்கிரகிப்பார். இவ்வைபவங்களை தேவர்க்கல்லால் சொல்லமுடியாது

இங்ஙனிருக்க, ஜீஜாபாயம்மாளுக்கு முன் மஹாதேவ னென்றும், விடோபா என்றும் இரண்டு புத்திரர்களிருந்தார்கள். அவர்களல்லாமல் ஸ்வாமிகள் திருநாட்டுக் கெழுந்தருளும்போது பூரணகற்பமா யிருந்து ஒரு ஆண்குழந்தையைப் பிரசவிக்க அக்குழந்தைக்கு 'நாராயணபாவா' என்று நாமகருணஞ்செய்து, அக்குழந்தை பூரணசந்திரன்போன்ற முகமுடையதாய் சத்துவாமிசம் பெற்றிருந்தமையால், அது சத்துவமூர்த்தியே யாகுமென்று உபலாலித்துக் கொண்டாடினார்கள்.

சதாராவில் அரசுரிமைநடாத்திப்போரும்சிவாஜிமகாராஜா— தமதாசாரிய மூர்த்தியாகிய துக்காராம்ஸ்வாமிகள் பரமபதமடைந்தாரென்றுகேள்விப்பட்டுமூர்ச்சைகொண்டவராய் பூமியில்சாய, இராஜஸ்திரீகளெல்லாரும் பயங்கொண்டு தாங்களும் விசனமடைந்தவர்களாய், அரசனைத்தேற்றி, ஸ்வாமியினுடைய கைத்தாளத்தையும். வஸ்த்தரத்தையுஞ் சேவிக்க, மந்திரி — சேனைகளுடனே புறப்பட்டு தேவுகாமுக்கு வந்துசேர்ந்து, ஆசாரிய கைங்கரியத்திலழிந்து அதுவே தாரகமென்றெண்ணியிருந்த இராமேசுவரபட்டர் முதலான பதினல்வரைச் சேவித்து, ஜீஜாபாயம்மாளையுந் தரிசித்து, அவ்வம்மையின்வியாக்கூலங்களைத் தேற்றி, நாராயணன் என்கிறபிள்ளையைநோக்குங்கால் தமதாசாரிருடைய ரூபமே இக்குழந்தைக்கு இருக்கக்கண்டு, இக்குழந்தைக்கு முடிவணக்கஞ்செய்து, நாராயணன் என்னும் அச்சுவியின்பேரால் நான்கு முல்லைநில நாடுகளைத் தத்தஞ்

செய்து கொடுத்தார். இராஜ ஸ்திரீகளும் ஜீஜாபாயம்மாளைத் சேவித்து, அரசன் முதலிய யாவருடனும் அவ்வூரின் பாண்டுரங்கநாதன் சந்நிதானத்துக்குச் சென்று, சுவாமியைத்தரிசித்து, சிலநாளவ்விடமிருந்து, அநேகதிரவியங்களைச்செலவிட்டு ஸந்நிதானத் திருப்பணிகளை யுந்நதமாக நடத்திவைத்து, பாகவதர்க ளிடத்திலிருந்து உத்தரவு பெற்றுக்கொண்டு தம்மதேசம்போய் சேர்ந்துவிட்டார்.

குழந்தை நாராயணபாவா என்பவன், நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்துவருந்தோறும், கூடவே நிராசை-தவம் - பொருமை - கிருபை - சந்தோஷம் - வாய்மை - அறிவு அடக்கம் என்னும் எண்குணங்களும், சாமோபாயங்களும், வளர்ந்துகொண்டே வந்தன. எல்லாருக்கும் மணமுள்ளவோர் புஷ்பம்போல் விளங்கிக்கொண்டிருந்து, தக்கதோர் பருவகாலத்தில் சுற்றத்தவரிவிருந்தொரு சற்குணமுள்ளபெண்ணை மணம்புணர்ந்து, தாயாகிய ஜீஜாகளிப்படையவும், அண்ணன்மாராகிய இருவரும்புகழவும், சிறிய தகப்பனுர் முதலான சுற்றத்தார் முதலனைவருங் கொண்டாடவும் வாழ்ந்துவருங்காலத்தில், இவருக்குத் தந்தைபோன்ற சத்துவமும் நிராசைமுதலியனவுமேலிட்டு, தமது தந்தை யியற்றிய அபங்கங்களை யுங்கீர்த்தனைகளையும்,மற்றகிரந்தங்களையுமென்றும்பார்த்துவந்ததால் பக்தி யதிகரித்து, இவ்வுலகத்தின்மீதில் வெறுப்புண்டாகி, சிவாஜி மகாராஜா அளித்த நாலுகிராமங்களையும், தனக்குச் சுதந்திரப்பட்டிருந்த தநகநகவாகநாதிகளையும் பிராமணருக்குத் தாநமளித்துவிட்டு, தம்தந்தை நடத்தியபடியே பஜனைகாலக்ஷேபங்களை நடாத்தி ஜநங்களுக்குச் சற்போதனைசெய்துவர; உலகத்தில், துக்காராம் ஸ்வாமிகளுடைய குமாரரும் தந்தையைப்போன்றே நிராசை முதலானவற்றைப் பெற்று, ஜெநங்களுக்குப் பக்தியோக மார்க்கங்களைப் போதித்துக்கொண்டு வருகிறுரென்று பிரஸ்த்தியுண்டாயிருந்தது. இவருடைய தமயன்மார்களாகிய மஹாதேவனும், விடோபாவும் தம்பியின் அபிப்பிராயத்துக்கு ஒற்றுமையாய் நடந்துவந்தார்கள்.

இதுநிற்க, ஸ்ரீமத்துக்காராம் ஸ்வாமிகளுடைய திருவடிகளில் பிரியம்செலுத்திக் கொண்டுவந்த பாகவதர்களது சொப்பநங்களில் துக்காதேவர் எழுந்தருளி காட்சிதந்துகொண்டிருந்தமை லோகப்பிரசித்தம். இப்படியிருக்க, சுதும்பர் என்னுமொரு கிராமத்தில் கபாசேட் என்னும் இலிங்கதாரியுண்டு; அவர்துக்காராம் ஸ்வாமிகள் பேரில் வெகுபிரியங்கொண்டிருந்தவர். இவர் பிரபஞ்சவிவகாரங்களை நீக்கி சேவைசெய்துகொண்டிருக்கும்போது, ஸ்வாமி யொருநாளடைவிலே தனியே யிருக்கக்கண்டு தீர்க்க நமஸ்காரஞ்செய்து,

ஸ்வாமீ! அடியேனது நிரியாண தசையில் தேவரெங்கெழுந்தருளி யிருந்தாலும் அடியேனுக்குப் பொன்னடி ஸேவை தந்தருளவேண்டும் என்று பிரார்த்திக்க, ஸ்வாமிகளும் அவ்வாறே யாகுகவென்று ஆசீர்வதித்திருந்தனர். கபாசேட்டும் அவ்வாய்மையை நிஜமென்று உறுதியாயெண்ணிக்கொண் டிருந்தார். பிறகு ஸ்வாமி திருமேனியுடனே வைகுந்த மடைந்தாரென்று ஜநங்கள்வசநிப்பதையும், அவ்வெல்லாருங் கொண்டாடுவதையும், வியாகூலிப்பதையுங் கேட்டு லிங்கதாரியாகிய கபாசேட் உள்ளங்கலங்கப் பெற்றவராய், யாவரிடத்திலும், ஸ்ரீமத்துக்காராம்ஸ்வாமிகள் தம்முடையநிரியாணசமயத்தில் காட்சிதருவதாக வாக்களித்தமையை யெல்லார்க்கும் விளங்கவுரைத்துக்கொண் டிருந்தார். சிலநாள் சென்றபிறகு, தம்முடையதேகம் மிகுதியும் மெலிவடைந்தது. அந்தக்காலத்தில் ஆசாரியமூர்த்தியின் சகோதரராகிய கானோபாவையும், குமாரர் நாராயணபாவாவையும், மற்றுமிருந்தபாகவதர்களையும், லோஹோகாமி லிருக்கும்பெரியோர்களையும், ஆளிந்தியிலிருக்கும்பாகவதர்களையும், மற்றப்பிரதேசங்களிலிருக்கும்பாகவதர்களையும்வரவழைத்து, பிராமணசமாராதநம்நடப்பித்து, பஜனை காலக்ஷேபத்தையும் சம்பிரமமாக நடக்கச்செய்த, தாம் ஸ்ரீமத்துக்காராம் ஸ்வாமிகளை தியாநித்து, எனதாண்டவா! எனக்குத் திருப்பவளச்சோதி வாக்களித்தபடியே, யான் தேகமிரு மெலிவடைந்து நிரியாணத்துக்குச் சமீபித்தவனா யிருக்கும் இத்தருணத்தில் தேவர்திருவடித்தாமரைகளைச் சேவிக்கத்தந்துகாத்தருளல் வேண்டும் குணவாரிதியே! என்றுஸ்துதி புரிந்துகொண் டிருக்கையில், கருணையங்கடலாகிய ஸ்ரீமத்துக்காராம் ஸ்வாமிகள் ஆகாயமார்க்கமாய் வந்துநின்று சேவைதர, கபாசேட்சுவாமிகளைக்கண்களாரத்தரிசித்து, தீர்க்கமாய்ப் பூமியின்மீது வீழ்ந்து சேவித்துப் பல வாழ்த்துகள் வாழ்த்தி தூபதீப நைவேத்தியங்களால் நிவேதித்து, ஆநந்தம் நிரம்பப்பெற்று கீர்த்தனைபாடியேத்துவதை யங்குள்ள பகவத் கோஷ்டியார்கண்டு தங்களுக்குத் திவ்வியமூர்த்தியின் திருவுருகாண்கில்லாமல் துளபமாலை ஒருஆளுயரத்தில்நிற்க தரித்திருக்கும் ரூபமாக யாவருடைய கண்களுக்கும் தோற்றமாய் ஆச்சரியமடைந்து யாவரும் பூமியில்வீழ்ந்து சேவித்துக் கைகளைக்கட்டிக்கொண்டு நின்று ஸ்ரீமத்துக்காராம் சுவாமிகளுக்கு ஜேஜே என்று பாடி நிர்த்தநஞ்செய்து கொண்டிருக்க, இந்த லிங்கதாரியாகிய கபாசேட் மெய்புளகா முன்னீட்டால் ஆநந்தமடைந்து இருகைகளையுஞ் சிரமேற் கூப்பித்தொழுதுகொண்டேநிற்க, ஆகாயத்தில் புஷ்பக

விமானம் வந்து இவருடைய ஸ்தூல தேகத்தைக் கிடத்திவிட்டு சூட்சும தேகத்துடன் கொண்டுபோய்விட்டது.

அந்தச் சமயத்தில், இங்கிருந்த சந்த ஜெநங்களனைவரும் கைகளைக் கொட்டிக்கொண்டு ஜேஜே விட்டலா! என்று பாடி ஆநந்தக்கூத்தாடினார்கள். அதன்பின் சாதுக்களனைவரும், ஒருவரையொருவர் பார்த்துச் சொல்லிக்கொள்ளுவதாவது, பகவான் ஸ்ரீராமகிருஷ்ணாதி அவதாரங்களைச் செய்தனரென்று புராணங்களுரைக்கின்றன; அவர் மெய்பக்தியாளர்க்குங் காட்சியாகின்றார்; அதுபோலவே ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகளுந் தம்மடியார்களுக்குக் காட்சியளிக்கின்றார்; சருவேசுரனுக்கவை லீலைகளாக எப்படியிருக்கின்றனவோ, அப்படியே யிவருக்கும் லீலைகளாகக் காணுகின்றன; பாவிகஜெநங்களுக்கு இப்போதும் காட்சி யளித்துக்கொண்டு வருகின்றார் என்று வார்த்தை யாடிக்கொண்டு, தாங்களும் பாவிகமுடைய பக்தர்களாய், நல்லதோரின்ப வீட்டுக்கு உரியவர்களாயினார்கள்.

ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகள் இன்னுந் தம்மை நினைப்பவர்களுக்குக் காட்சி தந்து வருகின்றார் என்பதற்குச் சாட்சியாக பிம்பளநேரி என்னுங் கிராமத்தில் நீளோபா என்னுமொரு சாது, பயிணாபா யென்னுமொரு ஸ்திரீ, இவர்களுக்குச் சொர்ப்பநத்தில் கருணாசீலர் சாக்ஷாத்காரமாக எழுந்தருளி காட்சி தந்ததையும், நீளோபாவுக்கு அபயப் பிரதாநந் தந்ததையும் எழுதப்பட்டிருக்கும் அநந்தங் கிரந்தங்களாகும். அவற்றைக் கண்டு தெளியுமந முடையோர்கள் சுவாமிகளுடைய மற்ற பிரபாவங்களையுங்கண்டு தெளிந்து கிருதார்த்தர்களாகக் கடவர்கள்.

உலகத்தை யுத்தரிப்பித் தருளுமாறு ஜெகதாசாரியராய்த் திருவவதாரம் பண்ணியருளின ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகளுடைய இந்தச் சரிதந்தன்னைப் பாமரர்கள் நெஞ்சில் தரிக்கவைப்பார்களேல், தங்கள் பாமரத்துவங்கள் அகன்று, தலையிட்டு இறப்புப் பிறப்புகளில் தள்ளுண்ணச் செய்யுங் கருமங்களற நீங்கி, பவசாகரத்தைக் கடக்கச் செய்து, பரமபதத்துக்குப் பாத்திரர்களாக்கிவைக்கும். இந்தக் கிரந்தம் பூரண சந்திரோதயம்போல் அனைவருடைய உள்ளங்களுக்கும் பக்தியை சாதநமாக்குவித்துக் கரையேற்றும்.

முடிவுரை.

இத்தகைய திவ்ய சரிதையை ஸ்ரீவேங்கடேச நாராயணரும் ஸ்ரீமத் துக்காராம் தேவரும் எனதுள்ள மமர்ந்து மஹாராஷ்டிர

பாஷையிலிருந்து செந்தமிழா லெழுதியதனால், சந்தசனுள் யாவரும் குற்றங் குறியாது உள்ளமுவந்து ஆதியிலிந்த மந்த மதியினனுக்கு முனிசாமி யென்று நாமந்தந்து காத்து வருவதுபோல், இப்போது மெனக்கு தாசத்துவமுண்டாக ஆசிர்வதிப்பீர்களாகில் ஸ்ரீலக்ஷ்மீ ரமணனாகிய வேங்கடேசப் பெருமானது திருவுளப் பாங்குக்குத் தாசனென இலகாவேன். ஆயின், தங்கள் திருவடித்துகளினது மான்மியமியம்ப எவ்வெவர்க்கு மியலா. இப்பேதையேனுக்கு அகப் பற்று, புறப்பற்று உண்டென மதித்து புறம்பு செய்யாமல் காத் தருளத் தங்கள் திருப்பாத கமலங்களுக்கு வந்தநம் வந்தநம் !!

ஜேஜே வேங்கடேசரமணா !
ஜேஜே புண்டரீகவரதா !

பதினேழாமத்தியாயம் முற்றும்.

ஸ்ரீமத் துக்காராம்ஸ்வாமிகள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமத் துக்காராம் ஸ்வாமிகள் சரித்திரம்
சம்பூரணமாகப் பெற்றது.

சுபமஸ்து.